# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்]. 1943-ம்௵ ஜனவரி௴ 30௳ [ந. 131

பிரஸங்கம் CXXXI.

## ட்ரிபோலி கைப்பற்றப்பட்டது.

ஸர் ஜேம்ஸ் கிரிக்.

லண்டன் ஜனவரி 23.

நேசநாடுகள் ட்ரிபோலியைக் கைப்பற்றியதாக இன்று நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இத்தேசம் பிடிபட்டதிலிருந்து இதாலியின் ஆபிரிக்க சாம்ராஜ்யம் அடியோடு அழிந்துவிட்டது என்றே சொல்லலாம்.

இதற்கு முன் ருஷ்யர்களுக்கும், பிரிடிஷாருக்கும் பல கஷ்டங்களும், தோல்விகளும் நேர்ந்தன. இப்பொழுது அவ்விருவர்களுக்கும் நிலைமை மிகவும் அனுகூலமாக மாறிவிட்டது. காட்டுமிருண்டிகளான அச்சு நாட்டினரை அடியோடு அழிப்பதற்கு அவர்கள் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுவார்கள்.

சென்ற சில மாதங்களாக ருஷ்யாவில் செஞ்சேனை நாம் புகழத்தக்க விதமாக மகத்தான வெற்றிகளை அடைந்துவருகிறது. அதே மாதிரியாக நமது சைனியத்தைக் குறித்து வியப்பும், திருப்தியும் அடைவதற்கு இப்பொழுது விசேஷ காரணம் இருக்கிறது.

இதாலியின் ஆபிரிக்க சாம்ராஜ்யம் குலைந்ததற்கு நமது ராணுவம்தான் காரண பூதமாக இருக்கிறது. அதில் இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, தெற்கு ஆபிரிக்கா முதலிய இடங்களிலிருந்து வந்த வீரர்களும் பிரிடிஷ் கிழக்கு ஆபிரிக்கா, மேற்கு ஆபிரிக்கா முதலிய இடங்களிலுள்ள பொதுமக்களும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

சமீப காலத்தில் தான் அமெரிக்க விமானப்படையும், ஸப்ளைகளும் வந்து உதவின. இருந்தபோதிலும் நமது படைகள்தான் பெரும்பாலும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றன.

இதாலிக்குச் சொந்தமான ஆபிரிக்க சாம்ராஜ்யம் பிரிடிஷ் தீவுகளைப்போல் 12½ மடங்கு விஸ்தீர்ணமுள்ளது. இப்பொழுது அதில் ஒரு சிறு பாகங்கூட இதாலிக்குச் சொந்தமாக இல்லை.

சுமார் மூன்று மாதங்களுக்குமுன் ஜெனரல் அலெக்ஸாண்டர் எல் அலமீன் போரில் வெற்றி அடைந்தார். இந்தப் போரில் ரோமலின் கவசம்பூண்ட ஜெர்மன் சைனியத்தின் பெரும் பகுதி அழிக்கப்பட்டுவிட்டது. இத்துடன் அவனுக்குட்பட்ட 6 இதாலியப் பகுதிகளில் ஐந்து பகுதிகளும் நாசமாக்கப்பட்டன.

உடனே அத்தளகர்த்தர் கொஞ்சமும் இளைப்பாராமல் தனது 8-வது படையை பின் வாங்கும் எதிரியைத் துரத்தும்படி அனுப்பினர். 80 நாட்களில் 8-வது படையினர் சுமார் 1,400 மைல்கள் முன்னேறியிருக்கின்றனர்.

அது முன்னேறுவதில் எதிர்ப்பு இல்லாமலில்லை. எப்பொழுதும் சண்டை நடந்துகொண்டுதான் இருந்தது. இரண்டு தடவைகளில் எல் அகீலாவிலும், பூரட்டிலும் ரோமல் தங்கியிருந்து தற்காப்புப் போர் நடத்தினன்.

பொதுவாக, முன்னேறுவது சுலபமான காரியமல்ல. அங்கு இருப்புப்பாதை கிடையாது. ஒரு நல்ல ரஸ்தாதான் இருந்தது. அதிலும் எதிரி பலவித இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தான். இவ்வளவு எல்லாம் இருந்தும், 8-ம் படை தினம் சராசரி $17\frac{1}{2}$ மைல் வீதம் முன்னேறிற்று. எல் அகீலாவிலும், பூரட்டிலும் 8-ம்படை எதிரியுடன் சண்டை செய்ததில் தாமதிக்க வேண்டியதாயிற்று. அந்த அவகாசத்தைத் தள்ளி கணக்கிட்டால் அது தினம் 30 மைல் வீதம் முன்னேறி இருக்கிறது.

நமது துருப்புகள் தண்ணீர், பெட்ரோல் உள்பட எல்லாவற்றையும் கொண்டு சென்றன. முன்னேற்றத்தின் கடைசித் தருணத்தில் போர் முன்னணிக்கு 30 லக்ஷம் காலன் பெட்ரோலையும், 8,000 டன் வெடி மருந்தும் ஸப்ளை செய்தது.

பிரிடிஷ் கப்பற்படையும், பாம்பர் விமானப் படையும் போர் முனைக்கு ஸப்ளைகள் கொண்டுசேர்த்தன. ராணுவம் முன்னேறிச் சென்று இடங்களைக் கைப்பற்றி, விமானமிறங்கும் இடங்கள் பலவற்றைத் தயாரித்தது. அங்கிருந்து நமது விமானப் படை பின்வாங்கிச் செல்லும் எதிரிகளைத் தாக்குவதற்கு முடிந்தது. இதற்கிடையே நமது துருப்புகளை ஏற்றிச் செல்லும் லாரிகள் முன்னேறிச் சென்றன.

## இணையற்ற ராணுவ நடவடிக்கைகள்.

தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பதற்குக்கூட மனுஷ உதவி இல்லாத பாலைவனத்தைத் தாண்டி இவ்வளவு பெரும் படை அதிக தூரத்தில் முன்னேறிச் சென்றது ராணுவ நடவடிக்கைகளில் இணையற்றதாகும்.

வட ஆபிரிக்காவிலுள்ள விமானமிறங்கும் இடங்களிலிருந்தும், சல்லடைக் கண்களாக துளைக்கப்பட்ட மால்டாவிலிருந்தும் நமது விமானங்கள் அச்சு நாட்டு போக்குவரத்து ரஸ்தாக்களை அழித்தன. ஸிஸிலிக்கும் டூனிஸுக்கும் இடையேயுள்ள சமுத்திரத்திலும், இதாலியின் கடற்கரையோரத்திலும் ரோமலுக்குத் தேவையான ஸப்ளைகள், உதவிப் படைகள் முதலியவைகளை ஏற்றிச் செல்லும் அச்சு நாட்டு கப்பல்களை நமது கப்பற் படை மூழ்கடித்தது.

8-வது சைனியத்திற்கு ஏற்கனவே குறிக்கப்பட்டிருந்த வேலையை அது செய்து முடித்திருக்கிறது. எகிப்தின் மீது படை எடுக்கப்படுமோ என்றிருந்த பயமும் நீங்கிற்று. இதாலி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்ததாக ஆபிரிக்காவில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு துளிபாகமும் இப்பொழுது கைப்பற்றியாகிவிட்டது.

1940-ம் வருஷத்தில் அச்சாம்ராஜ்யத்தில் 5 லக்ஷத்திற்கு மேலேயே இதாலியத் துருப்புகள் இருந்தன. பிற்பட்டு முஸோலினி இன்னும் 8 இதாலியப் பகுதிகளையும், ஹிட்லர் ஐந்து ஜெர்மன் பகுதிகளையும் லிபியாவிற்கு அனுப்பினார்கள்.

இதாலியைச் சேர்ந்தது என்று சொல்லப்படும் நாடுகளிலிருக்கும் யாவரும் சிலமணி நேரத்திற்குள் நிராயுதபாணிகளாகச் செய்யப்படுவார்கள்.

இப்பொழுது போர்முனைகள் பல ஏற்பட்டுவிட்டன. ஜய கோஷம் நிறைந்த ஜெனரல் அலெக்ஸாண்டரின் துருப்புகள் புதிய எதிரிகளுடன் சண்டை செய்ய மேற்கு திசையை நோக்கிச் செல்லுகின்றன.

144705
3L
V2:1:94:19 (3n) M.N35



# இதாலிய சாம்ராஜ்யத்தின் முடிவு—வருத்தப்படத்தக்கதல்ல.

(டெய்லி டெலிகிராப் பத்திரிகையிலிருந்து).

ஜனவரி 25.

ட்ரிபோலி வீழ்ந்தவுடன் முஸோலினியின் ஆபிரிக்க சாம்ராஜ்யம் முடிவு அடைந்துவிட்டது. பலவிதமான குற்றச் செய்கைகளைச் செய்து அவன் அச் சாம்ராஜ்யத்தை அபிவிருத்தியடையச் செய்தான். அதனால் அதன் முடிவு வருந்தத்தக்கதல்ல.

இச்சாம்ராஜ்யம் அழிந்ததைப்பற்றி முஸோலினி சிந்தித்துப்பார்த்தால் அவனுடைய குற்றச் செய்கைகள்தான் அதற்குக் காரணமென்று அவனுக்குத் தெரியவரும். முந்தி ரோமன் சக்ரவர்த்தி ஸீஸருக்கு நேர்ந்தது மாதிரி இவனுக்கும் அதேகதி ஏற்பட்டுவிட்டது. ஆனால் இவன் மட்டில் கொலை செய்யப்படவில்லை. நாகரீகமுள்ள உலகத்தாரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவும் அவர்களின் அவமதிப்பையும் பொருட்படுத்தாமலும் அபிஸீனியாவை பலாத்காரமாகக் கைப்பற்றியதுதான் அவனை இவ்வுலக யுத்தத்தில் ஈடுபடுத்திற்று. அபிஸீனியா படையெடுப்பை மற்ற நேசநாடுகள் சேர்ந்த சங்கம் கடுமையாக ஆக்ஷேபித்ததில் அவன் கோபங்கொண்டு அதற்கு எதிராக இவ்யுத்தத்தில் சேர்ந்துகொண்டான். தன்னைப்போல் மற்ற கொள்ளைக் கூட்டத்தாருடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துகொண்டு தான் கைப்பற்றிய நாடுகளைப் பலப்படுத்தாமல் போனால் அவைகளை இழக்கும்படி நேரிடுமென்று அவனுக்கு நன்முகத் தெரியும்.

அதற்காக தன்னால் முடிந்ததைப் பிரயத்தனப்பட்டுப்பார்த்தான். ஜெர்மனியுடன் சேர்ந்து அதற்காக இதாலியை ஜெர்மானியரின் கீழ் அவமானத்திற்கு உட்படுத்தியது கொஞ்சநஞ்சமல்ல. இதாலியை ஜெர்மானியர் அநேகமாக ஆக்கிரமித்துக் கொண்டார்கள். வட ஆபிரிக்காவில் இதாலியர்களின் எஜமானர்களான ஜெர்மானியரைத் தப்பி போவதற்கு இதாலியத் துருப்புகளை நடுவில்விட்டு திண்டாடச்செய்யும்படி தூண்டப்பட்டான். இம்மாதிரி பல அவமானங்களை அவனுக்கு இதுவரை ஜெர்மனி செய்திருக்கிறது.

அவன் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விட்டன. இதாலி எவ்வளவோ பிரயத்தனம் செய்தும், அதிகப்பணம் செலவு செய்தும், சம்பாதித்த குடியேற்ற நாடுகளில் இப்பொழுது ஒரு சிறு பாகம்கூட அதற்குச் சொந்தமில்லை. அந் நாடுகளிடம் அது மிருகத்தன்மையாக நடந்துகொண்டது என்ற பதிப்புதான் நிலைத்திருக்கிறது.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 23—1—43-லிருந்து 29—1—43-வரை.

**ருஷ்யா.**—செவ்வாய்க்கிழமை வெளிவந்த ருஷ்ய விசேஷ அறிக்கையில் ஸ்டாலின்கிராட் பிரதேசத்தில் அடைபட்டுள்ள ஜெர்மன் சைனியம் பூரா அழிக்கப்பட்டுவருவதாகக் கண்டிருக்கிறது. ஜனவரி 10ௗ ஆரம்பிக்கப்பட்ட இந்த ருஷ்யத் தாக்குதல் முதல் 40,000 ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும், சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். 28,000 பேர் கைதி செய்யப்பட்டனர். 1,297 டாங்கிகளும் 2,978 பீரங்கிகளும், 523 விமானங்களும் கைப்பற்றப்பட்டன. இன்னும் 12,000 பேர் கொண்ட சிறிய படைதான் பாக்கியிருக்கிறது. அதுவும் சில தினங்களுக்குள் அழிக்கப்படும்.

இவ்வாரத்தில் ருஷ்யப்படைகள் கீழ்கண்ட இடங்களை பிடித்தன. ஜனவரி 19ௗ (வாரனேஷ் முனை) வெலுயிகி, (வட காகஸஸ்), பெட்ரோவ்ஸ்கி (தென் காகஸஸ்) கமன்ஸ்க், டில்ஹே. ஜனவரி 21ௗ ஸ்டாவ்ரோபோல் அல்லது ஓரோஷிலாவ்ஸ்க், ஜனவரி 22ௗ (தெற்குப்போர்முனை) ஸால்ஸக். ஜனவரி 23 (காகஸஸ்

முனை) அர்மாவிர், (மத்தியப் போர்முனை) ஒலோகோனேவ்கா, ஜனவரி 24 (கார்கவ் இருப்புப்பாதை) ஸ்டார்பெல்ஸ்க். ஜனவரி 26ல பெலயா, கிளினு. ஜனவரி 19ல மனியிச், டானெட்ஸ் என்ற இரு நதிகளும் கடக்கப்பட்டு ஜனவரி 25ல வ்ாரனேஷ் பூராவும் பிடிபட்டது.

இவ்விதமாக ருஷ்ய மாரிகாலத் தாக்குதல் வெற்றிகரமாகப் பயனடைந்து வருகிறது. ரோஸ்டவ்வை நோக்கியும் ருஷ்யப்படை வந்துகொண்டிருக்கிறது. ரோஸ்டவ்—ஒரோஷிலாவ்கிராட்—குபியான்ஸ்க்—கார்கவ்—பயிலோகோரா—கர்ஸ்க் முதலிய இடங்களை ஆதாரமாகக்கொண்ட ஜெர்மன் அணிகளையும் ருஷ்யப்படை அணுகிவருகிறது.

**ட்ரிபோலிடானியா.**—ட்ரிபோலியைப்பிடித்த பிறகுதான் அந்நகரில் நேசதேசத் தாக்குதல் இல்லாமலிருந்தது. அதற்குப்பிறகு ஒரு எதிரி விமானம்கூட அந்தப் பக்கம்வரவில்லை. அராபியரும் இதாலியரும்கொண்ட அதன் ஜனத்தொகை 1,00,000 பேர்கள் பிரிடிஷாரின் வருகையை வரவேற்றினார்கள். இப்போது அது நேசதளமாக மாறிவிட்டது.

ஜனவரி 26ல பிரசுரிக்கப்பட்ட சாஸனத்தின் மூலம் ட்ரிபோலிடானியாவில் பிரிடிஷ் ராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இது திடமாயும் நியாயமானதாயும் இருக்கும்.–பாஸிஸ்ட் கக்ஷியினர் கைதி செய்யப்படுவார்கள். அவர்களால நிராகரிக்கப்பட்ட நியாய ஸ்தலங்கள் மறுபடி வேலை துவங்கும். உணவு ஸப்ளைக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும்.

இவ்வாரத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்: ஜனவரி 19ல ஹோம்ஸ்டர்ஷுனு; ஜனவரி 21ல காஸ்டல்பெனிடோ; ஜனவரி 22ல காஸ்டல்வெர்டா; ஜனவரி 23ல ட்ரிபோலி, இவைகள் பிடிபட்டன. ஜனவரி 24ல மெடினியும் ஸாராவும் விமான மூலம் தாக்கப்பட்டது. ஜனவரி 25ல ஜுயுா பிடிபட்டது. இது ட்ரிபோலிக்கு மேற்கே 30 மைல் தூரத்தில் இருக்கிறது. அதற்கு 40 மைல் தூரத்திலுள்ள ஜாயூரா தாக்கப்பட்டது.

அச்சுப்படைகளைத் துரத்திக்கொண்டு 8-ம் படை மீண்டும் மேற்கு நோக்கி செல்லுகின்றன. இனி டுனிஸியாதான் பாக்கி இருக்கிறது.

கிழக்கு ஸஹாராவில் ஒட்டகப்படை டோஹுக், எல்பகரன், ஸாட்லஸ், எல்பெர்கா முதலியவைகளைப் பிடித்தது.

லா கிலர்ச் என்பவரின் கீழிருக்கும் போரிடும் பிரெஞ்சுப்படை ட்ரிபோலிக்கு 100 மைல் தெற்கிலுள்ள மிஸ்ட்டா, டிஜபல்மெபோன்ஸா இரண்டையும் பிடித்தனர்.

**டுனிஸியா.**—பவ் அரடாகாபிலட் என்ற இடத்தில் நிலைத்திருக்க எதிரி கொஞ்சம் முயன்றான். பிறகு பான்டுபோன்ஸ் என்ற இடத்திற்கு 7 மைல் தென்மேற்கில் சென்றான். இப்படிச்செய்து அந்த இடத்திலிருக்கும் நேசப்படைகளை விரட்டி, பின்வாங்கி ஓடும் ஜெர்மன் ஆபிரிக்கப்படைக்கு இடவசதி கொடுப்பதே நோக்கம். காபிலாட்டிற்கும், கெய்ர்வானுக்கும் இடையில் ஆறு நாள் கடும் சண்டை செய்த பிறகு ஜெர்மன் டாங்கிப்படை திருப்பியடிக்கப்பட்டது. பான் அரடா, ரோபா, கௌஸல்ஷியா, முதலியவைகளைப் பிடிக்க எதிரி செய்த முயற்சிகள் திருப்பியடிக்கப்பட்டன.

**ஸாலமன்ஸ்.**—அமெரிக்க தரைப்படைக்குப் பதிலாக கப்பற்படை வந்திருக்கிறது. கூடல்கனுருக்கு மேற்கில் ஜப்பானிய நிலைகளை அமெரிக்கப்படை தாக்கி 6 முக்கிய இடங்களைப் பிடித்து கொகும்பாணு, ரிகடாகுடா, மூண்டா, கஹிலி, பல்லாலா, கொலும்பன்கரா முதலியவைகளைத் தாக்கின.

**நியூ கினி.**—ஸனுனந்தாவைப் பிடித்தபிறகு நேசதேசப்படைகள் பாபுவா கடற்கரையோரமாக ஜிருவாவிற்கு முன்னேறின. ரபால், லே, ஸாலாமூவா, விவாக் முதலிய பாக்கியுள்ள ஜப்பானிய நிலைகள் கடுமையாகத் தாக்கப்பட்டன.



**சைனு.**—மெமங்—லுங் பிரதேசத்தில் சண்டை நடைபெறுகிறது. டபிச் மலையில் 24 நாட்கள் சண்டை நடந்த பிறகு ஜப்பானியர் துரத்தப்பட்டனர். வட ஷான்டங் மாகாணத்தில் சாங்சியூவை சீனர்கள் பிடித்தனர். செகோ, ஹஸியாகோ இரண்டும் திரும்பப் பிடிக்கப்பட்டன.

**பர்மா.**—நேசதேச விமானங்கள் கீழ்கண்டவைகளைத் தாக்கின. ஜனவரி 19ல (அக்யாப் தீவில்) இன்டாலி, (ரெங்கூனுக்கும் மாண்டலேக்கும் இடையில்) தாழி (Thali); ஜனவரி 20ல டாங்கூ மாக்வே பிரதேசம், ஷிவிபோ, ஹிஹோ, மியிஸ்யான்; ஜனவரி 21ல அக்யாப் ராதிடாங்கிற்கு இடையில் பல இடங்கள்; ஜனவரி 23ல ஹிஹோ, ரங்கூன், ஷாடுஜப்; ஜனவரி 25ல நாபா (Nabha); 26ல ஷாடுஜப்; மெஜா, நாபா, மாண்டலே, சிந்துவின் நதியில் போக்குவரத்து, அரக்கான் கரை முதலியன.

இதைத்தவிர ஜனவரி 22ல நேசதேச விமானப்படை மாயு தீபகற்பத்தில் டான்பக்கைத் தாக்கின.

சில ஜப்பானிய விமானங்கள் அரக்கானில் சில நேசதேச விமானங்களைத் தாக்கின. சேதம் மிகக்குறைவு.

**இந்தியா.**—ஜனவரி 23ல சில் எதிரி விமானங்கள் கிழக்கு வங்காளத்தில் குண்டு போட்டன. 23ல சிட்டகாங் பிரதேசத்தில் எதிரி விமானங்கள் தாக்க வந்தபோது இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

**பலவகைப்பட்டவை.**—பிரிடனின் தினசரி யுத்தச்செலவு 14,000,000 பவுன். இவ்வருஷச் செலவு 4,900 மிலியன் பவுன் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை காமன்ஸ் சபையில் கிங்ஸ்லிவுட் தெரிவிக்கும்போது பிரிடிஷ் பொருள் நிலை திருப்திகரமாக இருப்பதால் நேசதேசங்களின் பலம் அபிவிருத்தியடைவதற்கு சாதகமான அம்சம் என்றார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

இரவில்.—ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் (Berlin). (22 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

போக்கு வரத்து.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland).

**வட ஆபிரிக்கா (North Africa).**

விரோதித் துருப்புகளின் சேர்க்கை.—பின்வாங்கும் படைகள்-ஸிலிடன் (Zliten), மிஸுராடா (Misurata) இவ்விரண்டுக்கும் இடையேயுள்ள கடற்கரை ரஸ்தா.

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).

வண்டிகள்.—ஸ்வாக்ஸ் (Sfax)—ட்ரிபோலி (Tripoli) ரஸ்தாவில்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போரரங்கம் எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸப்ளைக் கிடங்குகள்.—நியூ கினியிலுள்ள லே (Lae), கப்பல்துறைப் பிரதேசங்கள் (Madang), பின்ஸ்ச்சேபன் (Finschhafen).

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul,) நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), கிளௌஸெஸ்டர் (Gloucester) முனை.

விரோதிப் போக்குவரத்து.—அட்மிராலிடி (Admiralty) தீவுகள்.

ஜப்பானிய லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) தீவு.

**18—1—43.** (திங்கட்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—ரயில்வே லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (North France).

(ஒரு நேசநாட்டு விமானம் திரும்பி வரவில்லை).

இரவில்.—சாமான் ரயில் வண்டிகள், வட பிரான்ஸ் (Northern France).

விரோதியின் காவல் கப்பல்கள்.—டச்சுக் கடற்கரைக்கருகாமையில்.

சுரங்க வெடிகள் பாவுவது.—விரோதியின் கடற்கரையோரமாக.

**வட ஆபிரிக்கா (North Africa).**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான தளம்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito) துறைமுகம்.

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).
பின்வாங்கும் எதிரிப் படைகள்.-ட்ரிபோலி (Tripoli)க்கு மேற்கே; டூனிஸ் (Tunis) போக்குவரத்து.
மின்சார உற்பத்திசாலைகள்.—ஒரு சிறு கப்பல்-போர்டோ எம் பி டோ ளி ல் (Porto Empe Docle).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விரோதியின் கட்டடங்கள்.—நியூ கினியி லுள்ள லே (Lae).
விமானக்கூடம்.—பி ன் ஸ் ச் சே ப ன் (Finschhafen), நியூகினியிலுள்ள மூபோ (Mubo), மாடாங் (Madang)கிலுள்ள விமானக்கூடம். நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
ஒரு கப்பல்.—பிஸ்மார்க் (Bismark)குக் கருகாமையில்.
விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள மெய்க்டிலா (Meiktila).
கிராமங்கள்.—மாயூ (Mayu) நதிப் பிரதேசத்தில்.

**19—1—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதியின் கடற்கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம், கப்பல்.-ட்ரிபோலி (Tripoli), ஸூஸ் (Sousse).
விமான தளம்.—காஸ்டெல்பெனிடோ (Castel Benito).
2 எதிரி ஸப்ளைக் கப்பல்கள்.-டூனிஸியாவுக் (Tunisia)கருகாமையில்.
விமானக்கூடம்.—பிஸர்டா (Bizerta).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக்கூடம்.—நியூ கினியிலுள்ள ஸலமூவா (Salamaua), நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
ஸப்ளைக் கிடங்குகள்.—நியூ கினியிலுள்ள லே (Lae), மேராக் ((Merauke).
லக்ஷியங்கள்.—கேய் (Kai) தீவுகள்.
கட்டடங்கள்.—டிமோரிலுள்ள பாக்வா (Baucau).
கிராமங்கள்.—ஆக்யாப் (Akyab)தீவில், [illegible] (Rathedaung)

**20—1—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—இருப்புப் பாதைகள், மற்ற லக்ஷியங்கள்–வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
தொழிற்சாலை.—ஹாலந்திலுள்ள ஹெங்கிரோ (Hengero).

வட ஆபிரிக்கா (North Africa).
மத்தியதரைக்கடல். (Mediterranean).

விரோதித் துருப்புகள், போக்குவரத்து.—ட்ரிபோலி (Tripoli), அதற்கு மேற்கேயுள்ள இடங்கள்.
ரயில்வே லக்ஷியங்கள்.—ஸிஸிலி (Sicily).
விமானக்கூடம்.—ஸிஸிலியிலுள்ள பாண்டிலேரியா (Pantelleria)—
ரஸ்தா.—கேப்ஸு (Gabes)க்கும், ட்ரிபோலிடேனியா (Tripolitania) எல்லைக்கும் இடையே செல்லும் ரஸ்தா.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளைக் கிடங்கு.—நியூ கினியிலுள்ள லே (Lae).
கப்பல்துறை பிரதேசம்.—பின்ஸ்ச்சேபன் (Finschhafen).
விமானக் கூடங்கள்.—க்ளௌஸெஸ்டர் (Gloucester)முனை; நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
விமானக் கூடங்கள்,—பர்மாவிலுள்ள டாங்கூ (Toungoo), ஷ்வீபோ (Shwebo), ஹீஹோ (Heho).
ரயில்வண்டிகள்.—மாக்வி (Magwe) பிரதேசம். ரயில்வே ஜங்ஷன்.-பர்மாவிலுள்ள மிங்கியான் (Myingyan).

**21—1—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—விமான தளங்கள்—பிரான்ஸிலுள்ள கேயன் (Caen), ட்ரிக்விலி (Tricqueville).
கப்பல் துறைகள்.—பிரான்ஸிலுள்ள செர்பர்க் (Cherbourg), ப்ளூஷிங் (Flushing).
இரவில்.—தொழிற்சாலைகள்—ஜெர்மனியிலுள்ள ரூர் (Ruhr)பிரதேசம்.

வட ஆபிரிக்கா (North Africa).
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானக்கூடம்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito).
விரோதியின் வண்டிகள்.—பாண்டிபோன் (Pont Du Fahs)பிரதேசம்.



விமானமிறங்குமிடம்.—டூனிஸியாவிலுள்ள பென்கார்டேன் (Ben-Gardane).
கப்பல்கள்.—டூனிஸியா (Tunisia), கடற்கரைக்கருகாமையில்.
விமானக்கூடம்.—பிஸர்டா (Bizerta).
ரயில்வே போக்குவரத்து.—எதிரி வரிசைகளுக்குப் பின்புறம்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).
விமானக்கூடம்.—லே (Lae), ஸலாமூவா (Salamaua).
விரோதி லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung)க்கும் அக்யாபுக்(Akyab)கும் இடையேயுள்ளவை.
கிராமங்கள்.—அக்யாப் (Akyab)தீவில்.

**2—1—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).—(7 அச்சு நாட்டு விமானங்களும், 10 நேசநாட்டு விமானங்களும் நஷ்டம்).

பகலில்.—எண்ணெய் கிடங்குகள்—ஹாலந்திலுள்ள டெர்னியூஸென் (Terneuzen). பெல்ஜியத்திலுள்ள கென்ட் (Ghent).
விரோதியின் விமானத் தளங்கள்.—மாபெர்டஸ் (Maupertus), அபிவில்லி (Abbeville), ஸெண்ட் ஓமர் (St. Omer).

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல்கள்—லிபியாவிலுள்ள ஸூயாரா (Zuara).
பின்வாங்கும் எதிரியின் சைனியப் பகுதிகள்.-ட்ரிபோலி (Tripoli)க்கு மேற்கே.
துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).
துறைமுகம்.—கேப்ஸ் (Gabes).
டூனிஸியாவிலுள்ள ஸ்வாக்ஸ்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

கப்பற்படை தளம்.-அம்பாயினு(Amboina).

துறைமுகம், விமானக்கூடம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
கடைசியாயுள்ள எதிரியின் கப்பல்.—ஸனனந்தா (Sananda) முனையில்.
ஸப்ளைக் கிடங்குகள்.—நியூ கினியிலுள்ள லே (Lae).
லக்ஷியங்கள்.— பர்மாவிலுள்ள ப்ரோம் (Prome) ஜில்லாவில்.
நதியில் செல்லும் கப்பல்கள்.—ஐராவதி நதி (Irrawady).
கப்பல்கள்.—அரக்கான் (Arakan) கடற்கரையோரத்தில்.

**23—1—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe) —(3 நேச நாட்டு விமானங்கள் திரும்பவில்லை).

இரவில்.—நீர்மூழ்கி தளம்—பிரான்ஸிலுள்ள லோரியன்ட் (Lorient).
ராணுவ லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany)யில்.

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி விமானமிறங்குமிடங்கள்.— டூனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், விமானக்கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தானங்கள்.—ரெகாடா (Rekata) விரிகுடா.
ஜப்பானியரின் கட்டடங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).
காஹிலி (Kahili), ஷார்ட்லாந்திலுள்ள பலாலி (Balale) தீவுகள்.
விமானக்கூடம்.—லே (Lea), ஸலாமூவா (Salamaua).
துறைமுகம், விமானக்கூடம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
ஜப்பானியரின் விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள ஷ்வீபோ (Shwebo).
கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள கங்கா (Gangau).
கப்பல்கள்.—அரக்கான் (Arakan) கடற்கரைக்கருகாமையில்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**—1—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லாக்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து.

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—டொப்ருக் (Tobruk) (அச்சு நாட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியிலுள்ள மில்னே (Milne) விரிகுடா பிரதேசம்.

விமானச் சண்டைகள்.—அம்பாயினு தீவு (Amboina) (1 ஜப்பானிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது).

**19—1—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

நேச நாடுகளின் முன்னணிப் பிரதேசங்கள் லிபியப் போர்முனை.

**ருஷ்யா (Russia).**

சுற்றிவளைக்கப்பட்ட ஜேர்மன் துருப்புகளுக்கு வரும் ஸப்ளைகள் ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

இந்தியாவிலுள்ள கல்கத்தா (Calcutta) வில் (2 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**— 1—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகலில்.—லண்டன் (London) பிரதேசம் (1 பள்ளிக்கூடம் தாக்கப்பட்டு, சிறு குழந்தைகள் அநேகம் காயப்பட்டன.)

வெயிட் தீவு (Isle of weight).

**வட ஆபிரிக்கா (North Africa).**

எஞ்சியிருக்கும் அச்சுநாட்டுத் துருப்புகள் பின்வாங்குவதற்கான சாதனங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு நேசதேச சிறு கப்பல்.-ஆஸ்திரேலியா (Australia) வுக்கருகாமையில்.

மில்னே (Milney) விரிகுடா.

**21—1—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலீஷ் கால்வாய் (அச்சுநாட்டு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது).

**வட ஆபிரிக்கா (North Africa).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானதளம்.-கூடால்கனுர் (Gudalcanar)

**22—1—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு பட்டணம்.—இங்கிலாந்தின் தென் மேற்குக் கடற்கரை வடகிழக்கு இங்கிலாந்து (England) அங்குமிங்கும் சில இடங்கள்.

**ருஷ்யா (Russia).**

முன்னேறிச்செல்லும் ருஷ்யத் துருப்புகள்.-ருஷ்யப்போர் முனையில் எல்லாப் பகுதிகளிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

சிட்டகாங் (Chittagong) பிரதேசம்.

**23—1—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

அங்குமிங்கும் சில இடங்கள்.—வடகிழக்கு இங்கிலாந்து (England).

இரண்டு இடங்கள்.—தென்மேற்கு இங்கிலாந்து (England).

**வட ஆபிரிக்கா (North Africa).**

நேசநாடுகளின் தளம்.—அல்ஜீரியா (Algeria) விலுள்ள போன் (Bone).

**தூரக்கிழக்கு (Far East).**

சிட்டகாங் (Chittagong) பிரதேசம் (இந்தியா).

**24—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடவடிக்கையைப்பற்றி ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள்.—வெவ்வேறு போர் அரங்கங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான தளம்.—கூடால்கனுர் (Gudacanar).

# யுத்தக் குறிப்புகள்.

**டிரிபோலி வீழ்ச்சி.** பல மாதங்களாகவே ருஷ்யர்கள் தங்களுடைய பராக்கிரமத்தைக் காண்பித்து வெற்றியடைந்து வருகின்றனர். தற்சமயத்தில் அப்பங்கை பிரிடிஷ் சாம்ராஜ்யத்தினர், மேற்கொண்டு வெற்றியடைந்து வருகின்றனர். பிரிடிஷ் யுத்த மந்திரியின் மொழியின்படி 'இந்தியர், ஆஸ்திரேலியர், நியூஸீலாந்தினர், தென் ஆபிரிக்கக்காரர்கள் பிரிடிஷ், கிழக்கு ஆபிரிக்கக்காரர்கள், மேற்கு ஆபிரிக்கக்காரர்கள் யாவரும் அடைந்த பெரும் வெற்றியாகும்'.



டிரிபோலியின் வீழ்ச்சியினுல் இதாலியின் சாம்ராஜ்யத்தில் ஒரு முக்கிய பட்டணம் வீழ்ந்ததோடு இதாலிய சாம்ராஜ்யமே போய்விட்டது. இதைத்தான் 1940 கிருஸ்துமஸ்ஸின்போதே சாதிப்பதாக மிஸ்டர் சர்ச்சில் சொன்னுர்.

அதோடு ஜெனரல் மான்ட் காமரி ஆரம்பித்த சண்டையின் முதல் கட்டம் முடிந்தது. அதாவது எல்அலமீனில் ரோமல் எகிப்தைத் தாக்க சேமித்து வைத்திருந்த படைகளை அக்டோபர் 23உ மான்ட் காமரி தாக்கினுர். அது முதல் பிரிடிஷ் 8-ம் படையின் தைரியத்தால் 1,400 மைல் தூரம் கடந்து எதிரி துரத்தியடிக்கப்பட்டான். இவ்வளவு தூரமும் சாதாரணமாக நடந்துவர முடியாது. இருப்புப்பாதை இல்லை. எதிரியின் சூழ்ச்சிகள் நிறைந்த ஒரே மார்க்கத்தில் தண்ணீர் முதற்கொண்டு கூடவே எடுத்துக்கொண்டு தினம் 30 மைல் வீதம் மான்ட் காமரி முன்னேறினுர்.

இதற்குச் சாதகமாக 'பிரிடிஷ் கப்பற்படை, விமானப்படை, ஸப்ளைகளைக் கொண்டுவந்தன. தரைப்படை முன்னேறி பிரதேசத்தை ஸ்வாதீனப்படுத்தியது. விமானப்படை ஓடும் எதிரியைத் தாக்கியது.

டிரிபோலியை 60 மைல் தூரத்திலிருந்து 8-ம் படை மூன்று பிரிவுகளாகத் தாக்கின. நகரைக் காப்பதைக்காட்டிலும் தன் படையில் யாவரையும் காப்பதே ரோமலின் நோக்கமாகிவிட்டது. 8-ம் படையின் எதிராக ஒரு சிறிய பான்ஸர் படையை எதிரி அனுப்பினுன். ஆனுல் பிரிடிஷ் படைகள் நகரின் தென் முனையில் முன்னேறி அதிவேகத்துடன் வந்ததாலும் இதை ரோமல் எதிர் பார்க்காததாலும் ரோமல் மேற்கு நோக்கி ஓட்டம் பிடித்தான். பிரிடிஷ் படை ஜெபல் உச்சியிலிருந்து நகரினுள் புகுந்தன. மான்ட் காமரியும் பட்டணம் தன் வசமாவதைக் கண்டார்.

இவ்விதமாகப் பாலைவனச் சண்டை முடிந்தது. இதாலிக்குச் சொந்தமாயிருந்த இந்தப் பிரதேசத்தில் இனி ஒருவரும் ஆயுதம் தரிக்க முடியாது.

இனிமேல் டிரிபோலி நேசதேசக் கப்பல் தளமாயும், விமானதளமாயும் ஆகிவிடும். மால்டாவிற்கு உதவியனுப்ப முடியும். பிரிடிஷ் கப்பற்படையின் காரியம் சுலபமாக்கப்பட்டது.

இந்த வெற்றியில் பிரிடிஷ் கடற்படையின்தொண்டு அதிகமானதே. வட ஆபிரிக்கப் போர் பூராவும் அவைகள் ஈடுபட்டிருக்கின்றன. உலகின் பல பிரதேசங்களிலிருந்து சாமான்கள் அங்கே கொண்டுபோகப்பட்டன. எல் அலமீன் போருக்கு முன்னுடியே அலெக்ஸாண்டிரியாவிலிருந்த கப்பற்படை ஸொல்லும், பார்டியா, டொப்ருக், டெர்னு, பெங்காஸி, டிரிபோலி ஒவ்வொரு இடத்திலும் வந்து சேர்ந்தது. சுரங்க வெடிகளை அகற்ற சுரங்க வாரிக் கப்பல்களும், சிறு காரியங்களுக்குக் காவற்படகுகளும், எண்ணெய், தண்ணீர் முதலியவைகளைக் கொண்டுவரும் கப்பல்களும் உதவி புரிந்தன. ஸப்ளைகளைத் தவிர, க்ருயிஸர்கள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள், முதலியவைகளும் ஈடுபட்டன. அச்சுநாட்டு ஸப்ளைக் கப்பல்கள் பிரிடிஷ் நீர்மூழ்கிகளால் அமுக்கப்பட்டன.

அடுத்தபடி மாரத் வரிசைதானிருக்கிறது. இது டுனிஸியாவிற்குள் 60 மைல் இருக்கிறது. இது பிரெஞ்சுக்காரர்களால் கட்டப்பட்டது. இதை இதாலியர் 1940-ல் கொஞ்சம் அழித்தனர். ஆனுல் பின்வாங்கி ஓட நேர்ந்தால் பின் பாது காப்பாக இருக்க ஜெர்மானியர் பலப்படுத்தியிருக்கின்றனர்.

டிரிபோலியைப் பிடித்தால் சில சாதனங்கள் ஏற்பட்டிருந்தும் பாக்கி செய்யவேண்டியது இன்னும் அதிகம் இருக்கிறது.

வட ஆபிரிக்காவை விட்டே அச்சுநாட்டினர் இன்னும் துரத்தப்படவில்லை. எல் அலமீனுக்குப் பிறகே ரோமல் சண்டை செய்யவில்லை. 2,00,000 பேர்களையும், ஆயுதங்களையும் எடுத்து டுனிஸியாவிற்குள் புகுந்திருக்கிறுன். வான் ஆர்மீன் என்பவனேடு சேர்ந்து கொண்டான். இனி கடுமையான சண்டை நேரலாம். எதிரிக்கு இருபக்கங்களிலும் நேசநாட்டுப்படை இருப்பதால் அவனுக்குத் தொந்தரவுதான்.

டிரிபோலி வீழ்ச்சியின் எதிரொலி இதாலியில் ஏற்கனவே காணப்படுகிறது. ராய்டர் நிருபர் எழுதுவதாவது 'டிரிபோலியின் வீழ்ச்சியினால் இதாலிய அரசாங்கம் சின்னாபின்னமாகக் கிடக்கிறது. பாஸிஸ்டு கக்ஷியின் பின்பக்கத்தில் ஜெனரல்களும், உத்தியோகஸ்தர்களும், தந்திரிகளும், தொழிலாளிகளும் ஒருவரையொருவர் கவனித்து வருகின்றனர். இதாலிய மன்னரும் அவனுடைய குடும்பமும் முஸோலினியின் திட்டத்திற்கு இணங்கும்படி செய்யப்பட்டனர்.

வி வி வி வி வி வி வி

**முக்கிய சந்திப்பு.** கஸப்ளாங்காவில் ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் சந்தித்துப் பேசியதின் பூரா விவரங்களும் கிடைத்திருக்கின்றன. 'எதிரியைச் சரண் அடையும்படி' செய்வதற்கான யோசனைகள் இதில் தீர்மானிக்கப்பட்டதால் இப்பெயரே அந்தச் சந்திப்புக்கு இடப்பட்டிருக்கிறது. பி. பி. ஸி.யில் திடீரென செவ்வாய்க்கிழமை இரவில் ஒலிபரப்பப்பட்டது. சுமார் 10 நாட்கள் வரை இந்த இரு தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கின்றனர். இந்த யுத்தம் ஆரம்பித்து இவர்கள் கூடிப்பேசியது இது நான்காம் தடவையாகும். ஸ்டாலினும் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் வரமுடியவில்லை. இந்த பேச்சு வார்த்தைகளின் சாராம்சம் அப்போதைக்கப்போது அவருக்கும் சயாங் கை ஷேக்குக்கும் அனுப்பப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் ஜிரோவும் டிகாலும் பிரசன்னமாக இருந்தனராகையால் அவர்களுக்குள் பரஸ்பரம் ஒற்றுமை ஏற்பட்டது. இருவர்களும் ஒரு அறிக்கையையும் வெளியிட்டிருக்கின்றனர்.

'நாம் இருவரும் கண்டு பேசிவிட்டோம். பிரான்ஸை விடுவிப்பது என்ற இந்த லக்ஷியத்தை நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டோம். எதிரியைத் தோற்கடித்து மனித வர்க்கத்தின் ஸ்வதந்திர லக்ஷியங்களும் காக்கப்படும். இதற்காக நேசதேசங்களுடன் பிரெஞ்சு சைனியங்களும் தோளோடுதோள் கூட்டி நின்று சண்டைசெய்யவேண்டும்.'

இவ்விதமாக அந்தச் சந்திப்பில் பல முக்கிய விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன. அதாவது எதிரியைத் தோற்கடிப்பதுதான். முன்பு அமெரிக்கப் புரட்சி யுத்தத்தின்போது ஜெனரலாக இருந்த உலிஸிஸ் ஸிம்ஸன் என்பவர் (ஜெனரலின் குறுக்கிய பெயர் U. S.). 'ஒரு காரணமும் சொல்லாமல் எதிரி சரண் அடையும் வரை சண்டைசெய்ய வேண்டும்' என்றார். அதேமாதிரி தற்போதும் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கும் ஜனாதிபதிக்கும் அதிகமான சிநேகபந்தம் இருப்பதால் இந்த யுத்தத்தை ஜெயிப்பதற்கு இந்த இரு நாடுகளும் அதிகமாக ஒத்துழைக்குமென்றும் இருவருக்கும் ஒருவித மனஸ்தாபமும் ஏற்படாதென்றும் சர்ச்சில் சொன்னார். மேலும் இந்த வட ஆபிரிக்கப் போர் ஹிட்லரின் யோசனைகளை எல்லாம் பலிக்காமல் செய்ததென்றும் இந்தப்போரை முன்னிருந்து நடத்தும் ஜனாதிபதிக்கு தான் உதவியாக இருந்துவருவது ஒரு கௌரவமென்றும் சொன்னார்.

இவ்வளவு அவசர நிலைமையில் முக்கிய சந்தர்ப்பங்களில் விருந்து முதலியவைகளும் நடந்தன. மொராக்கோ ஸுல்தானுக்கு விருந்து அளிக்கப்பட்டது. லாய்டியிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் பார்வையிடப்பட்டன. மெஹ்டியா முதலிய இடங்களும் பார்வையிடப்பட்டன. இந்த இடத்தில்தான் அமெரிக்கப் படைகள் இறங்கியபோது, பிரெஞ்சுப்படைகள் எதிர்க்காமல் சண்டையை நிறுத்தின.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா.** ஸ்டாலின்கிராடில் அடைபட்டுள்ள ஜெர்மன் சைனியம் பூராவும் அழிக்கப்படும்: ஜெர்மன் ராணுவ வியாக்யானக்காரர்களும், செய்தி ஸ்தாபனங்களும் அவர்கள் நாட்டிற்கு ஏற்பட்டு வரும் தோல்வியை வெளிப்படுத்தி வருகின்றனர். திங்கட்கிழமையன்று ஜெர்மன் ரேடியோவில் 'ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட்டினுள் வடக்கிலும், தெற்கிலும் உட்புகுந்த பிறகு நிலைமை மோசமாகிவிட்டது. ஜெர்மன் படைகள் சூழ்ந்து கொள்ளப்பட்டன' என்றும் சொல்லப்பட்டது. ஜெர்மன்



ராணுவ வியாக்யானக்காரரான ஜெனரல் டிட்மார் 'ஜெர்மன் படைகள் ஒன்று எதிர்த்து நிற்கலாம் அல்லது அழியவேண்டியதுதான். ஆனால் பின்வாங்க முடியாது' என்றான்.

ஜெர்மன் செய்தி மீண்டும் கூறுவதாவது: 'ஜெர்மானியர் ருஷ்யப் போர் முனையை குறுக்கிக்கொண்டு புதிதாகத்தற்காப்பு அணியைத் தயாரித்துவருகின்றனராம்'. மாரிகாலச் சண்டை தினமும் கடுமையாகிவருவதே இதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது. இந்தக் கடும் போரில் ஈடுபட்டிருக்கும் ருஷ்யப்படைகள் ஜெர்மானியரைவிட அதிக மனித சக்தியும் சாமான்களும் கொண்டிருக்கின்றன. ஆகவேதான் ஸ்டாலின் சந்தோஷமாக அறிவிக்கிறார்: 'ஜெர்மானியரை அழிக்கவும் நமது நாட்டை விட்டுத்துரத்தவும் முன்னேறுங்கள்' என்கிறார்.

ஸ்டாலின் இவ்விதம் நினைப்பது பொருத்தமானதுதான். இரண்டுமாத காலத்திற்குள் 600 மைல் நீளமுள்ள போர்முனையில் ஆரம்பிக்கப்பட்ட ருஷ்ய மாரிகாலத்தாக்குதல் 200 மைல் முன்னேறி எதிரியை வால்கா, டான் முதலிய நதிகளுக்கு அப்பாலும், கருங்கடலுக்கு அருகில் கால்மக் என்ற இடத்திலிருந்தும் துரத்தின. 102 எதிரி டிவிஷன்கள் அழிக்கப்பட்டன. 2,00,000 பேர் கைதி செய்யப்பட்டனர். 13,000 பீரங்கிகள் கைப்பற்றப்பட்டன. லெனின்கிராட்டிற்கு உதவியனுப்பியதும் மனிச் (Manych) டானெட்ஸைக் கடந்ததும் முக்கிய சம்பவங்களேயாகும். இவைகளெல்லாம் எதிரியின் தளர்ச்சியைக் காண்பிக்கின்றன. ஹிட்லர் காகஸஸ், ரோஸ்டவ், கார்கவ், கர்ஸ்க் முதலிய இடங்களிலெல்லாம் தாக்கப்படுகிறான். இந்த இடங்களிலிருந்துகொண்டு மாரிகாலச் சண்டைகளைச் செய்யலாமென்று ஹிட்லர் நினைத்தான். அது முடியாமல் பின்வாங்கவே, அவனுடைய சகாக்களான ருமேனியர்கள், ஹங்கேரியர், இதாலியர் முதலியோரும் கலவரப்பட்டு சண்டையில் பலியாக விரும்பவில்லை. முடிந்த வரை சண்டை செய்து உடனேயே எதிரி வசமடைகின்றனர். 1939, 40, 41, 42 முதலிய வருஷங்களில் ஹிட்லர் கூறிய இருமாப்பு மொழிகளுக்குப் பதிலாக தற்சமயம் கோயபல்ஸ் தனது நாட்டு மக்கள் 30 வருஷச் சண்டைக்குத் தயாராக இருக்கவேண்டுமென்கிறான். இப்போது அங்கே என்ன பயமென்னவென்றால் ஜெர்மானியர் செய்த அட்டூழியங்களுக்கு ருஷ்யர்கள் பழிவாங்குவார்களோ என்றுதான். அந்த பயத்தைப் போக்கடிக்க கோயபல்ஸ் மீண்டும் யுத்தத்திற்குத் தயாராக வேண்டுமென்கிறான்.

வி வி வி வி வி வி வி

**டுனிஸியா.** டுனிஸியாவில் சற்று ஓய்வு காணப்படுகிறது. யுத்தரங்கம் வட ஆபிரிக்கா, லிபியா, ருஷ்யா, பர்மா, தென் பஸிபிக் எங்கிருந்தாலும் இந்தக் காலத்திய சண்டையே இம்மாதிரிதான். திடீரென்று வெற்றியுடன் முன்னேற்றம் ஏற்பட்ட பிறகு இம்மாதிரி ஓய்வும் தானிருக்கும். முன்னேற்றமும் வெற்றிகளும் தொடர்ச்சியாக இருக்காது. ஆகவே ஒரு தடவை ஏற்பட்டால் அதிலிருந்து சண்டையே ஓய்ந்துவிட்டதாக நினைக்க முடியாது. அந்த சமயத்தில் தான் புதிய பலம் பெற்று சீர்திருத்தம் செய்துகொள்வது, போக்குவரத்துகளை அபிவிருத்தி செய்வது, ஸப்ளைகளைப் பெறுவது, யந்திரங்களைப் பழுதுபார்ப்பது முதலியவை செய்யப்படும். நவீன யுத்தத்தில் தூரதேசத்திற்குக் கூடிய சீக்கிரம் செல்ல முடிந்தாலும் ராணுவங்களுக்குத் தடையும் ஏற்படும்.

டுனிஸிய நிலைமை இவ்விதமாகத்தானிருக்கிறது. எதிரி நீர்மூழ்கி இடைஞ்சலைத் தாண்டி நேசத் துருப்புகளும் ஸப்ளைகளும் அல்ஜியர்ஸ், கஸபிளாங்கா முதலியஇடங்களில் இறங்கியதால் அங்கிருந்து வெகுதொலை எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. பிரெஞ்சு ஆபிரிக்கக்காரர்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிப்பார்களே தவிர யுத்த சாமான்களை ஸப்ளை செய்ய அவர்களால் முடியாது. ஏனென்றால் ரஸ்தாக்கள் நெடுந்தூரமானவை. அவையும் மேடுபள்ளங்களைக் கடந்து, சுற்றிச் சுற்றிக் கொண்டு செல்லுகின்றன. இருக்கும் விமான தளங்கள் எதிரி கையில் இருக்கின்றன. ஆகவே புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன.

டுனிஸியாவில் உள்ள தளங்களைக்கொண்டு ஸப்ளைகளைக் கொண்டுவர அச்சு நாடுகள் செய்யும் பிரயத்தனங்கள் வீணாகின்றன. பிரிடிஷ் விமானப்படையும். இந்தியக் கடற்படையும் அவைகளைத் தாக்குகின்றன. இருந்தாலும், கண் மூடித்தனமாக ஹிட்லர் மத்தியதரைக்கடலாதிக்கத்தைத் திரும்பிப் பிடிக்க முற்படுகிறான். வட ஆபிரிக்காவிலிருந்து அவர்களை விரட்டவே நேசநாடுகள் பிரயத்தனப்படுகின்றன. அதற்காக தனது படைகளைப் பலப்படுத்திக்கொண்டுமிருக்கின்றன. இதனால் தான் ஓய்வு காணப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டு ஒப்பந்தம்.** ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இம்மூன்று நாடுகளும் சேர்ந்து மூவரசு பொருளாதார ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாக ஜனவரி 20ல கையெழுத்தானதை மறுநாள் அச்சுநாட்டு ரேடியோக்களில் ஆடம்பரமாக ஒலிபரப்பப்பட்டது. அச்சு நாட்டு தைரியம் குன்றிவருவதைத் தேறுதல் செய்யவே இம்மாதிரி செய்யப்படுகிறது. இந்த யுத்தம் நடக்கும்வரையில் அதில் சேர்ந்த நாடுகளுக்குள் கூடுமான வரை பொருளாதார மாற்றம் செய்துகொள்ளப்படும். அதற்குப் பிற்பட்டு அளவு கடந்து உதவி செய்துகொள்ளப்படுமாம். இதைப்பார்த்தால் ஜெர்மனி, இதாலி இரண்டிற்கும் ஜப்பானுடன் தொடர்பு இருக்கிறமாதிரி காணப்படுகிறது. அதோடு நேசநாட்டுத் தோல்வியும் ஏற்படுமென்று அவர்கள் எதிர்பார்ப்பதாகவும் காணப்படுகிறது. இவ்வித உறவைப்பற்றி ஜெர்மன் ரேடியோவில் சொல்லப்பட்டதாவது:— 'இது யுத்த முயற்சியை அதிகப்படுத்துகிறது. இதில் கையொப்பமிட்ட நாடுகள் தூர தூரமாக இருந்தால் ஒருவித பாதகமும் இல்லை. முக்கியமான சாமான்களை மாற்றிக்கொள்ள வசதி ஏற்பட்டிருக்கிறது. இதாலிய விமானங்கள் ஜப்பான்வரை செல்லுகின்றன. ஜப்பானியக் கப்பல்கள் அட்லாண்டிக் வரையில் வருவதால் நேருக்கு நேரே மாற்றிக்கொள்ள முடியும்.' இவ்வளவையும் நாம் வீண் பிரசாரம் என்றுதான் சொல்லவேண்டும். தான் ஆக்கிரமித்த இடங்களில் கிடைக்கும் சாமான்களை ஜப்பானுக்குக் கொண்டுபோகவே போதிய கப்பல் வசதி இல்லாதபோது இதாலிக்கும் ஜெர்மனிக்கும் சாமான்களை அனுப்புவதாகச் சொல்லுவதை நாம் நம்பவேண்டுமாம். ஏதோ ஒரு இதாலிய விமானம் ஜப்பானுக்குப் பறந்து சென்றதைக் கொண்டு போக்குவரத்தே ஏற்படுத்திவிடலாமென்று அவர்கள் நினைப்பது சுத்தத் தவறு, இதாலிக்கு மத்தியதரைக்கடலிலேயே போக்குவரத்து செய்துகொள்ள முடியாமல் ஜெர்மனியிடம் உணவைப் பெற்றுவரும் போது இதாலி ஜப்பானுக்கு எவ்விதம் அனுப்பமுடியுமோ தெரியவில்லை. மேலும் ஜெர்மன் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளுக்கும், ஜப்பானுடைய கொள்கைகளுக்கும் அதிக வித்யாசம் இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**சில்லி (Chile).** ஜனவரி 20ல சில்லி அச்சு நாட்டு உறவை ரத்து செய்ததால் நேசநாட்டுக் கக்ஷி இன்னும் பலமடைந்தது. அச்சுநாட்டு நடவடிக்கை ஒரு குற்றமுமறியாத நாடுகளுக்கும் தீங்கிழைத்து வருவதெனத் தெரிகிறது. சில்லி இவ்விதம் நடந்து கொண்டதை பொதுஜனங்கள் ஆமோதித்து பஹிரங்கமாகக் கொண்டாடினார்களாம். ஆனால் சில்லி பத்திரிகையான லா நேஷன் (La Nation) 'வெறும் ஆர்ப்பாட்டங்கள் கூடாது' என்று எச்சரிக்கை கூறியதாம். அதாவது காரியாம்சையில் காட்ட வேண்டுமென்று கருத்து. கார்டல் ஹல் சொன்னதாவது: 'சில்லி நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டதால் அமெரிக்காவிற்கு இன்னும் பத்திரம் அதிகரித்தது. நேசநாடுகளின் லாப நஷ்டங்களில் தானும் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுவதாகவும் அறிவித்திருக்கிறது.'

ஆகவே அர்ஜன்டைனாவைத் தவிர தென் அமெரிக்க நாடுகள் பூராவும் நேசக்கக்ஷியில் சேர்ந்து கொண்டன. இவைகளில் 11 நேசநாடுகளுடன் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டும் 7 அச்சுநாட்டு உறவை ரத்து செய்துமிருக்கின்றன.

அர்ஜன்டைனாவில் ஜெர்மன் ஜனத்தொகை அதிகம் இருந்தாலும் ஜெர்மன் கப்பல் இலாகாக்காரர்கள் ஐந்தாம்படைத் தொழிலில் ஈடுபட்டதற்காகக் கண்டித்திருக்கிறது.



**உணவுப் பிரச்னை.** உணவு சாமான்களின் விலை உயர ஆரம்பித்தது முதல் தேசீய யுத்த முன்னணியைச் சேர்ந்தவர்களும், பொறுப்புவாய்ந்த மற்றவர்களும் இப்பிரச்னையை கவனிக்கவேண்டும். என்று இந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் ராதா கமல முகர்ஜி சமீபத்தில் சொன்னபோது யுத்தங்களை யுத்த அரங்கங்களில் மட்டும் ஜயித்தால் போதாது. ஆனால் வயல்களிலும் ஜயிக்கவேண்டுமென்று ஞாபகப்படுத்தியிருக்கிறார். அதோடு சந்தைகளிலும், கடைத் தெருவுகளிலும், மளிகைக் கடைகளிலும் வெற்றிபெற வேண்டுமென்று சேர்த்துக்கொள்ளுவது நலம். யுத்தத்தின் ஜெயாபஜயங்களை உணவு நிலைமையைகொண்டு தீர்மானித்துவிடலாம். இதைக் கொண்டு ஒரு நாட்டிற்கு வெற்றி கிடைக்கும் கிடைக்காது என்று சொல்லி விடலாம்.

உணவு ஸப்ளைகளைக் கட்டுப்படுத்துவது விலையை அதிகமாக்காமல் செய்வது என்று பலர் பலவிதமான அபிப்பிராயத்தைச் சொல்லி வருகின்றனர். அதில் சில நல்ல யோசனைகளும் சிலவை குழப்பமான யோசனைகளும் தானிருக்கின்றன. இவைகளைப்பற்றி நாம் விசாரிக்கப்போவதில்லை. ஆனால் இந்தியா மந்திரி, வைஸிராய் முதலியோர் உணவு நிலைமையைப்பற்றி சொல்லியிருப்பதிலிருந்து நாம் திருப்திகொள்ளலாம். பர்மாவை இழந்ததால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுபடுத்தவும், ஆங்கிலேய—அமெரிக்கப்படைகள் இந்தியாவிற்கு வந்ததால் ஏற்பட்ட புதிய தேவையை ஈடுபடுத்தவும் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. பஞ்சப்படி கொடுப்பது, போக்குவரத்தில் எவைகளை முதலில் கவனிக்கவேண்டுமென்று கவனிப்பதும், மாகாணங்களுக்குள் பரஸ்பரம் சாமான்களை அனுப்பிக்கொள்ளுவது ஏற்றுமதியை நிறுத்தி, இறக்குமதியை அபிவிருத்தி செய்வது முதலியவைகளை கவனிப்பது முதலியன. இவைகளை காரியாம்சையில் செய்து காண்பிக்க கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். இதோடு கட்டிப்போட்டு வைக்கிறவர்களையும் அதிக லாபம் சம்பாதிப்பவர்களையும் அடக்கவேண்டும். இல்லாவிட்டால் ருசி கண்ட பூனையைப் போல் ஏழைகளின் சம்பாத்யத்தைப் பறித்துவிடுவார்கள்.

இப்படிச் செய்கிறவர்களை யாவரும் நிந்தனையாகப் பேசுகிறார்கள். ஆனால் அறுவடை காலம் நெருங்கிவருவதால் தானியங்கள் ஏராளமாகக் கிடைக்கும். கட்டிப்போடுகிறவன் அவனிஷ்டப்படி செய்யவும்,லாபம் சம்பாதிப்பவன் அவன் இஷ்டப்படி செய்யவும் விடக்கூடாது. ஆகவே தீவ்ர முயற்சிகளால் இவைகளைத் தடுக்கவேண்டும். உள்நாட்டில் இந்த நிலையை சமாளிக்க ரகசியமாகக் கிட்டங்கிகளைப் பரிசோதனையிட்டு நிலைமையைச் சமாளிக்கவேண்டும். இதனால்தான் இந்திய ஸர்க்காரின் உணவு இலாகா மந்திரி சமீபத்தில் சொன்னதை யாவரும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. அதாவது அதிகமாகக் கட்டிப்போட்டு சேமிக்கிறவர்கள் இடத்திலிருந்து பண்டங்களை விலை கொடுக்காமலேயே பறிமுதல் செய்வது ஒரு தகுந்த தண்டனையாகும்.

---

## யுத்த நிலைமை.

(மேன்மை தங்கிய சென்னை கவர்னரின் விமர்சனம்—ஜனவரி 21).

1942-ம் வருஷ யுத்தத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. நிலைமை அதிக கஷ்டமாகயிருந்தது. ஏராளமான சேதமும் ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவருகிறது. நேசநாடுகளின் பலத்தில் யாவரும் நம்பிக்கை வைத்திருந்த போதிலும் சென்ற வருஷத்தில் இந்தியாவின் மீது கிழக்குப் பக்கத்தில் ஜப்பானியரும், மேற்குப் பக்கத்தில் ஜெர்மானியரும் படையெடுப்பார்கள் என்ற பயம் பொதுமக்களுக்கு இருந்து வந்தது.

இவ்வருஷ ஆரம்பத்தில் யுத்தத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருவதை ஜனங்கள் உணர்ந்து வருகிறார்கள்.

அதனால் இந்தியாவின் மீது ஜப்பானியர் படையெடுப்பது மிக துர்லபம் என்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால் சென்ற ஏப்ரல், மே மாதங்களில்,

இந்தியாவைப் படையெடுக்கும் விஷயத்தில் ஜப்பானுக்கு நல்ல நிலைமை ஏற்பட்டிருந்தது. அத்தருணத்தை இழந்ததால், இப்பொழுது அவர்கள் படையெடுப்புக்கு முயற்சிப்பார்களென்று சொல்லமுடியாது.

யுத்த காலத்தில் ஜோஸியம் சொல்வது சரியல்ல. ஆனால் நடக்கும் சந்தர்ப்பங்களைப் பார்த்தால் இந்தியாவின் மீது படையெடுப்பு ஏற்படுவதற்கான ஹேஷ்யங்கள் மிகக்குறைவாக இருக்கின்றன.

இதனால் கல்கத்தா மீது குண்டுகள் போடப்பட்டது போல் இந்தியாவிலுள்ள மற்ற நகரங்களிலும் விமானப்படையெடுப்பு ஏற்படாது என்று சொல்வதற்கில்லை. மதராஸ், ஸிலோன், மற்ற கடற்கரையோரமாயுள்ள நகரங்களிலுள்ள மக்களுக்கு சஞ்சல மேற்படுத்த ஜப்பானியர்கள் குண்டுகளைப் போடலாம். ஆனால் அது படையெடுப்பு ஆகமாட்டாது. விஸ்தாரமான பல இடங்களில் பரவலாக ஜப்பான் தன் படைகளை நிறுத்தியிருக்கின்றன. சென்ற வருஷத்திலிருந்து ஜப்பானுக்குப் பல போர்முனைகளில் தோல்வியும், சேதமும் ஏற்பட்டு வருகின்றன. இதிலிருந்து ஜப்பானியர் அவ்விதமான படையெடுப்புக்குத் துணிவார்களாவென்பது சந்தேகமான விஷயம். பர்மாவில் நேசநாடுகளின் படையெடுப்பு ஆரம்பித்திருக்கிறது. இது இன்னும் விஸ்தரிக்கும். ஜப்பான் ஜெர்மனியைப்போல் யுத்தம் சீக்கிரத்தில் முடியுமென்று எதிர்பார்த்தது. ஆனால் யுத்தம் ஆரம்பித்த பிறகு எங்கு, எப்பொழுது முடியுமென்று சொல்லமுடியாது.

ருஷ்யர்கள் பலமாக முன்னேறி வருகிறார்கள். ஜெர்மானியரை வெகு தீரத்துடனும், தைரியமாகவும் எதிர்த்து நிற்கின்றனர். சென்ற சில வாரங்களில் ஜெர்மனிக்கு பல பெரிய தோல்விகள் ஏற்பட்டன. இவைகள் யுத்த முடிவிற்கு ஆரம்பம் என்று சொல்லலாம். மேலும் நாம் எதிர் பார்த்ததைக் காட்டிலும் யுத்தம் அதி சீக்கிரத்தில் முடிவடையலாம்.

வட ஆபிரிக்காவில் நேசநாடுகள் அதிகம் முன்னேறியிருக்கிறார்கள். டிரிபோலியைக் கைப்பற்றியிருக்கிறார்கள். டேனிஸுக்கருகாமையிலும் அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள். அதனால் இதாலிய சாம்ராஜ்யம் இப்பொழுது அநேகமாக அடியோடு அழிந்துவிட்டதென்றே சொல்லலாம்.

வட ஆபிரிக்காவிலிருந்து எதிரிகளை விரட்டிய பிறகு நாம் ஜெர்மனி, இதாலி இவ்விரு நாடுகளின் மீது பெரிய தாக்குதலுக்கு ஏற்பாடு செய்வோம். அத்தாக்குதலை ஆரம்பிக்க ஒவ்வொரு நேசநாடும் அதிக ஆவலாக இருக்கிறது.

ஆகையால் இத்தகைய வெற்றிகளினால் நாம் இறுமாப்பு அடையக்கூடாது. இன்னும் போர் அதிகக் கடுமையாக நடக்கும். முடிவான வெற்றியடைவதற்கு முன் ஏராளமாக ஆள் சேதமும், பொருள் சேதமும் ஏற்படலாம்.

### உணவுப் பிரச்னை.

இன்று இந்தியாவில் உணவு நெருக்கடி பற்றியே எங்கும் கவலை. இது திருப்திகரமாகயில்லை. ஆனால் இப்பிரச்னை சீக்கிரத்திலேயே அபிவிருத்தியடையும். இம்மாகாணத்தில் மற்ற எல்லாவற்றையும்விட இவ்வுணவுப் பிரச்னையில் நானும், மற்ற ஸர்க்கார் மெம்பர்களும் தீவிர சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனால் இந்நிலைமை வெகு சீக்கிரத்தில் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

கொள்ளை லாபமடிப்பது, உணவுப்பொருள்களைச் சேமித்துவைப்பது முதலியவைகளே யுத்த காலத்தில் பெரிய இடையூறுகளை விளைவிக்கின்றன. இம்மாதிரி ஏராளமாக எங்கும் நடைபெறுகிறது. இவ்வித கெடுதல்களைத் தடுப்பதற்குப்பொதுமக்கள் ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டும்.

இந்த தேசத்தில் தற்போது உணவுப் பொருள்களை ஒரு சிலர் ஏராளமாகச் சேமித்து வைத்து, அதிக லாபம் சம்பாதிக்க எத்தனிக்கின்றனர். இவ்விதமான கெடுதல்களை நிவர்த்திக்க பொதுமக்கள், சர்க்கார் அதிகாரிகளுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேணுமாய் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



## மறுபடி குழப்பம் உண்டாகும்.

(அப்ஸர்வர் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

அச்சுநாடுகள் அடைந்த வெற்றியின், அளவை உலகில் அவர்களால் விளைவிக்கப்பட்டிருக்கும் தீங்குகளிலிருந்தே அறிந்துகொண்டு விடலாம். ஆனால் நேசநாடுகளான நமக்கோ இரண்டு விதமான சிரமம் இருக்கிறது. அவை ஏற்பட்டிருக்கும் தீங்கை அகற்றுவதும், நன்மையை விருத்திசெய்வதும்தான். எதிரிகள் முக்கியமாக நம்மளில் சிலரைக்கொன்று மீதமிருப்போருக்குள் பரஸ்பரம் வெறுப்பை உண்டாக்க எண்ணுகிறார்கள். உடனே அவர்கள் லக்ஷியம் கைகூடிவிட்டதாக நினைக்கப்படுகிறது.

அச்சுநாடுகள் உலகில் இருக்கும் நன்மைகளை வெறுத்து, நாகரீகத்தை அழிக்கப்பார்ப்பதால் சண்டை மூலமாகத்தான் அவர்களது லக்ஷியங்களைச் சாதிக்க முடியும். ஆனால் நாம் அப்படி விரும்பவில்லை. போராங்கத்தில் சிறிது வெற்றி கிடைத்தால் அவர்களுக்குப் போதுமானது. பலரைக்கொன்றாலே அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடும். போராங்கத்தில் நமக்கு வெற்றி கிடைக்கவேண்டுமென்பதுதான். ஆனால் அதோடு மட்டில் போதாது.

தற்போது நடந்துவரும் உலக யுத்தத்தில் யார் வெற்றி பெறுவார்களோ அவர்களே வருங்கால உலகில் ஆதிக்கம் பெற முடியும். காட்டுமிராண்டிகளான நம் எதிரிகள் ஜயித்தால் வரும் காலத்தில் அவர்களுக்கு அதிக சிரமமான பிரச்னைகளே ஏற்படாது. ஏனென்றால், கேவலம் சரீர பலத்தைக்கொண்டு, அக்கறையில்லாத சில ரகசிய முறைகளைப் பின்பற்றுவான். அவைகளின் பயனாக உலகம் மறுபடி கலவர நிலைமையில் மூழ்கும். அதிகார ஆசை, கொள்ளையிடும் எண்ணம் முதலியவை தாமச குணத்தின் தன்மைகளாகும். அதிகாரமும் இருந்து, கொள்ளையிட சந்தர்ப்பமுமிருந்தால் அவர்களின் கபடச் செய்கைகளுக்கு முடிவேயிராது. ஆகவே அவர்களுடைய ராஜ்யமும், அதிகாரமும் பூர்ணமாக வியாபிக்கப்பட்டால்தான் ஒரு முடிவு ஏற்படும்.

## ஜெர்மனி பின்வாங்குகிறது.

(Liet Gen. ஸர் டக்லஸ் பிரௌன்ரிக்).

இப் புதுவருஷ ஆரம்ப முதல் ஜெர்மனி தற்காப்புப் போர் நடத்திக்கொண்டு சில இடங்களில் பின்வாங்கிக்கொண்டிருக்கிறது. தெற்குப் பாகத்தில் ருஷ்யர்கள் பிரமாதமான வெற்றி யடைந்து ஏராளமான கைதிகளையும் பொருள்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

சென்ற கோடைகாலத்தில் ருஷ்யர் பின் வாங்கிய போது ஜெர்மன் சைனியத்தை கிழக்கு நோக்கி நடத்திச் சென்ற வான்பாக், ருஷ்யக் கைதிகளைப் பிடிக்க முடியவில்லை. ருஷ்யப் பிரதேசத்தைக் கைப்பற்றியதைப் பற்றியே ஜெர்மானியர் தற்புகழ்சி கொண்டனர். ஆனால் தற்சமயம் ருஷ்யர்கள் முன்னேறும் போது ஆயிரக்கணக்கில் ஜெர்மானியரைக் கைதிசெய்து யுத்தப்பொருள்களையும் சேகரித்து வருகின்றனர். இது தான் ருஷ்யர் பின் வாங்கியதற்கும், ஜெர்மானியர் பின் வாங்குவதற்குமுள்ள வித்யாசம்.

## ஸ்பெயின்.

டிஸம்பர் முதல்வாரத்தில் ஜெனரல் பிராங்கோ பேசுகையில் ஸ்பெயினில் மன்னர் அரசாக்ஷி முறை ஏற்படக்கூடுமென்று அறிவித்தான். கார்டிஸ் (Cortes) கக்ஷியைச் சிர்படுத்தி மார்சா கிராண்டிரா (Marcha Grandera) என்ற தேசிய கீதத்தை வழங்குவதைப் பார்த்தால் ஜெனரல் பிராங்கோவும் ஸ்பெயின் தேசத்தினரும் சேர்ந்து தேசத்தை ஒருங்குபடுத்த நினைத்திருக்கிற விஷயம் தெரிய வருகிறது. இவ்விஷயம் நாஸிகளுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லையென்ற விஷயம் அங்காராவிலிருந்து கிடைத்த அஸோஸியேடட் பிரஸ் நிருபர் மூலம் தெரியவருகிறது. ஸ்பெயினையும் தங்களுக்கு வசப்பட்டதாகச் செய்துகொள்ள ஜெர்மானியர் பலாத்காரம் செய்து வருகின்றனர். ஸ்பெயினில் கேடிஸ், கார்ட-

ஜீனு துறைமுகங்களிலிருந்து மத்தியதரைக்கடல் பக்கத்திலும், அட்லாண்டிக் பக்கத்திலும் கவனித்துக்கொள்ளலாம். மாஹன் (Mahon) என்ற பாதுகாப்புள்ள துறைமுகம் ஜிப்ரால்டரிலிருந்து டூலோன், மார்ஸெயல்ஸுக்குப் போகும் மார்க்கத்திற்கு அருகில் இருக்கிறது. மேலும் மால்டாவிற்குச் செல்லும் மார்க்கத்திற்கும் அருகில் இருக்கிறது. ஸியூடா (Ceuta) என்ற துறைமுகம் ஸ்பானிய மொராக்கோவில் இருக்கிறது. இதுவும் ஜிப்ரால்டருக்கு 12-மைல் தூரத்தில்தானிருக்கிறது. அட்லாண்டிக்கில் பெரோல் (Ferol) என்ற தளமும் ஸ்பெயினுக்குச் சொந்தமானது. இதுவும் மத்தியதரைக்கடலுக்குச் செல்லும் பிரிடிஷ் மார்க்கத்திற்கு அருகில் இருக்கிறது. மேலும் மத்திய அட்லாண்டிக்கில் பல வியாபார மார்க்கங்கள் சந்திக்குமிடத்தில் கனரி (Canary) தீவுகள் இருக்கின்றன. இவையும் ஸ்பெயினுக்குச் சொந்தமானவையே. ஆகவே ஸேனியாவில் அச்சுநாடுகளுக்குப் பாதகமாக இருந்துவரும் இந்நிலையில் ஸ்பெயினுக்குச் சொந்தமான இந்த இடங்களில் சிலவைகளை ஜெர்மனி வசப்படுத்த முயற்சித்தால் அது நாம் எதிர்பார்த்தபடி நடப்பதாகத்தானிருக்கும்.

---

## சைனுவிற்கு இது நெருக்கடியான வருஷமாகும்.

(சைனு நாஷனல் ஹெரால்டு பத்திரிகை).

1942-ல் சைனு, ஜப்பானியச் சைனியங்களின் நிலைமைகளில் அதிகமான மாறுதல்களைக் காணோம். அதன் முடிவில் பெரும்படியான சண்டைகளும் நடைபெறவில்லை. இருந்தாலும் ஜப்பானியர்களாக பெரும் இலக்குகளைக் கைப்பற்றாத போயினும் சீனர்களின் யுத்த சக்தி அதிகமாகியே வருகிறது. பர்மா ரஸ்தா திறக்கப்படாமல் ஸ்வதந்திர சைனு நாலாபக்கங்களிலும் முற்றுகையிடப்பட்டாலும் இந்த யுத்த சக்தி குறையவில்லை. சீன யுத்தப் பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் சீன—அமெரிக்க விமானப்படை விமானாதிக்கத்தை ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றிவிட்டது. 1942-ன் முடிவில் ஆரம்பிக்கப்பட்ட பர்மா யுத்தத்தின் வெற்றியால் சீன நிலைமை இன்னும் அபிவிருத்தியடைந்து எதிர்பார்த்தபடி ஆசியாவில் முன்னேற்றப் போரைத் துவக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஸர் வில்லியம் பெவரிட்ஜ்.

(அப்ஸெர்வர் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

“ சமூகத் தொண்டுகள் ” என்ற பெயருடன் பிரசுரிக்கப்படும் ரிபோர்ட்டுக்கு ஆசிரியரான பெவரிட்ஜ் ஒரு போர் வீரன். வாழ்க்கையில் ஏற்படக்கூடிய அசிரத்தை, அதர்மம் முதலியவைகளைத் தடுப்பதற்காகவே மனிதன் பிறந்திருக்கிறான் என்பது இவர் அபிப்பிராயம். அரசாங்கத்தில் இவருக்கு அவ்வளவு செல்வாக்கில்லை. ஏனென்றால் தற்சமயத்தில் இவருக்கு படைத்தலைமையோ, ஸர்க்கார் இலாகா தலைமையோ இல்லை. அதோடு இவர் அதிகம் படித்தவர். ஆனால் கேவலம் அறிவு சம்பாதிப்பதற்காக மட்டில் படிக்காமல் அறிவைச் சாதனமாகக் கொண்டு பல விஷயங்களைச் சாதிக்க வேண்டுமென்று நினைத்தவர்.

இவர் எப்போதும் அனுபவத்தைக்கொண்டு வருங்காலத்தை அமைக்கக் கூடியவர். முன்பு தான் செய்த செயல்களையும்பற்றி வீண் பேச்சு பேசமாட்டார். வருங்காலத்திற்கு வேண்டிய திட்டங்களையே அமைத்து வருவார்.

இவருக்குத் தற்சமயத்தில் வயது 63. நரைத்த மயிரும், சிவந்த கன்னங்களும் உள்ளவர். அதிக சுறுசுறுப்புள்ளவர். சீர்திருத்த சங்கத்திற்கு அடிக்கடி போய்வருவார். இவருடைய நடவடிக்கையைப் பார்த்தால் ஒரு வாலிபனை போல் காணப்படுவார். இவருடைய தகப்பனார் ஸ்காத்லாந்தைச் சேர்ந்தவர். அவர் இந்தியாவில் நீதிபதியாக இருந்தார். பெவரிட்ஜும் இந்தியாவில் தான் பிறந்தார். இவர் சமூக சீர்திருத்த விசாரணை செய்துகொண்டு பெட்ரோல் வியாபாரிகளுடனும் அடிக்கடி பழகி வந்தார். 1909—1911 வருஷத்தில் மிஸ்டர்



சர்ச்சில் லேபர் எக்ஸ்சேஞ் முதலியவற்றை ஏற்படுத்தவும் வேலையில்லாதவர்களுக்கு இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தவும் இவரைக் கலந்துகொண்டார்.

சமீபத்தில் பெட்ரோல் கட்டுப்பாட்டைப் பற்றி இவர் செய்த திட்டத்தில், அதிகமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஆனால் சென்ற யுத்தத்தில் இவர் உண்டாக்கின உணவு கட்டுப்பாடு மிகவும் வெற்றிகரமாக நடந்தேறியது. 1919—37 வரை லண்டன் பொருளாதாரப் பள்ளிக்கூடத்திற்கு இவர் டைரக்டராக இருந்தார். இவருக்கு ஆக்ஸ்போர்டில் மாஸ்டர் ஆப் யுனிவர்ஸிடி காலேஜ் என்ற ஹோதாவில் இருந்து வருகிறார். எப்பொழுதும் அதிக ஊக்கம் கொண்டிருப்பதால் ஒரு விஷயத்திலும் சோர்வடைவது இல்லை. எப்பொழுதும் தன்னிஷ்டப்படியே காரியங்களைச் செய்ய விரும்புவார், தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட காரியத்தை எப்படியாவது முடித்தே விடுவார். ஆனால் அரசாங்கத்தார் முடிவு செய்யவேண்டியதாக ஏதாவது இருந்தால் அதனால் தான் தாமதமோ வியவகாரமோ, மறுதளிப்பதோ ஏற்படும். இவர் சம்பந்தப்பட்டவரையில் ஒரு தாமதமும் ஏற்படாது, உதாரணமாக பெட்ரோல் கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்ளலாம். இது முதலில் 1909-ல் ஏற்படுத்தப்பட்டது ஆனால் பெவரிட்ஜ் திட்டப்படி தான் நடந்தேறியிருக்கிறது. அரசாங்கத்தார் ஒரு வேலையில் அமர்த்தும்வரையில் தானாகவே ஒரு விஷயத்தை மேற்கொண்டு அதில் ஈடுபட்டிருப்பார்.

இவரை லார்டு கீன்ஸ் என்பவருக்கு ஒப்பிடலாம். அவர் பொருளாதாரப் பிரச்னைகளில் ஈடுபட்டு அதிகக் கியாதிபெற்றவர். கீன்ஸ் என்பவர் எப்போதும் அனுமானப் பிரமாணத்தை ஆதாரமாககொண்டு காரணத்திலிருந்து காரியத்தை யூகிப்பார். பெவரிட்ஜ் என்பவரோ காரியங்களிலிருந்து காரணங்களை அனுமானிக்கிறவர். உதாரணமாக சமூகப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்யும்போது கிழக்கு லண்டனில் வறுமையை ஆராய்ச்சி செய்து அதற்குக் காரணமாக “ வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் பிரச்னை ” என்ற தலையங்கத்தில் ஒரு புஸ்தகம் எழுதினார். பிறகு வறுமைப்பிணியை நீக்க லேபர் எக்ஸ்சேஞ் முதலியவைகளைப் பரிகாரமாகக் குறிப்பிட்டார். அவருடைய சாமர்த்தியத்திற்குத் தகுந்த விதமே சரீரம் அமைந்திருக்கிறது. நேராயும், பின்புறம் பருமனாயுமுள்ள அவருடைய தலையைப்பார்த்தால் விஷயங்களைக் கிரஹிக்கக்கூடியவர் என்று தெரிந்துகொள்ளலாம். விசாலமான நெத்தியைப் பார்த்தால் திடீரென்று ஒரு சொற்பொழிவைச் செய்யக்கூடியவர் என்று சொல்லலாம். இந்த சாமர்த்தியம் அதிகம் படித்தவர்களுக்குத்தானிருக்கும். இதில் மிஸ்டர் சர்ச்சில் கூட இவருக்கு அடுத்தபடிதான். பூனைக் கண்களும், வீரனுக்குள்ள மோவாயும் இவரை இயற்கைத் தலைவன் என்று குறிக்கலாம். அதாவது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தானே பெரிய தீர்மானங்களைச் செய்து அதன்படி நடக்கக்கூடியவர். இவரிடத்தில் ஏதாவது குறைகூற வேண்டுமென்று தோன்றினால் ஒரு குறை சொல்லலாம். அதாவது தன்னுடன் கூட வேலை செய்துகொண்டிருப்பவரைப் பற்றிய அபிப்பிராயங்களை வெளியிட்டு விடுவார். ஒரு அரசியல் நிபுணனுக்கு வேண்டியதான கபட சாமர்த்தியம் இவருக்குக் கிடையாது.

ஆபீஸ் வேலையில்லாத சமயத்தில் அதிக தயாள குணமும், உற்சாகமும் பொருந்தியவாராகக் காணப்படுவார். ஆனால் வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பார். தன்னுடைய முயற்சியை வேலைக்காரர்கள் அசிரத்தையாகயிருந்தோ தாமதமாகயிருந்தோ தடை செய்தால் அவர்களைச் சிக்ஷிப்பார். ஒன்றரை வருஷங்களுக்கு முன்பு, நிபுணர்கள் அடங்கிய கமிட்டிக்குச் சேர்மனாக இருக்கும்படி மிஸ்டர் பெவின் இவரை நியமனம் செய்தார். அதே சமயத்தில் இன்ஷூரன்ஸ் அது சம்பந்தமான சிப்பந்திகளை ஒரு விசாரணை செய்யவேண்டுமென்று இவரை கிரீன்வுட் கேட்டுக்கொண்டார். அந்த சமயத்தில் இந்த இரண்டு உத்தியோகங்களும் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆனால் சாதாரணமாக 60 வயதான பிறகே பொதுவாக யாவருக்கும் விஷயங்களில் அசிரத்தை ஏற்படுவது சகஜம் தான். ஆனால் தேசத்திற்குத் தொண்டு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும் தாமே முன் வந்து தனது நுண்ணறிவின் சாமர்த்தியத்தைப் பயன்படுத்திவருகிறார்.

# விமான பலம்.

(லண்டன் டைம்ஸ் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

மகாயுத்தத்தில் புதிதாக எவ்வளவோ ஆயுதங்கள் உபயோகப்படுகின்றன. மூலப்பொருள்கள் இருந்து ஆயுதமும் புதியமாதிரியாக இருந்தால் அவைகள் வெகு சீக்கிரமாக அபிவிருத்தியடையும். விமான உற்பத்தியிலும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. விமானத்தைத் தனிப்பட்ட முறையில் பார்த்தாலும், அல்லது தரைப்படை, கப்பற்படை இவைகளுடன் நெருங்கி வேலைசெய்வதைப் பார்த்தாலும், இதன் சக்தி அதிகமாகப் பெருகிவருவதோடு இதன் அலுவல்களும் வெகுதுரிதமாவும், படிப்படியாகவும் அதிகரித்திருக்கின்றன. தாக்குதல் செய்யக்கூடிய தூரம், வேகம், உயிரப் பறப்பது. அதன் ஆயுதங்கள் இவைகள் எல்லாவற்றிலும் விசேஷமான முன்னேற்ற மடைந்திருக்கிறது. தந்திரத்திலும், சூழ்ச்சியிலும் இது புதிய வேலைகளைச் செய்யத்தயாராக இருக்கிறது. இன்னும், இந்த ஆயுதத்தைக்கொண்டு செய்ய சாத்தியமென்று கருதப்படும் வேலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை நடைமுறைக்கு இன்னும் வரவில்லை. இந்த அபிவிருத்திகளைப்பற்றி நிபுணர்கள் திட்டம் போட்டு வருகிறார்கள். இம்மாதிரி நிபுணர்கள் எந்தக்கக்ஷிக்கு இருக்கிறார்களோ அந்தக்கக்ஷிக்கு அவர்கள் ஒரு பெரிய ஆஸ்தி. ஆனால் அவர்களுக்கு உதவியாக அவர்கள் நினைக்கிறபடி வேலைசெய்யக்கூடிய யந்திர வேலைக்காரர்களும், அவற்றைப் பொதுவாக உபயோகத்திற்குக் கொண்டுவர சாமர்த்தியம் வாய்ந்தவர்களும் தேவையாக இருக்கும். யுத்தத்திற்குத் தேவையானவை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. சிரேஷ்டமான யுத்தப் பொருள்களையெல்லாம் கொடுத்தாலும் அவை போதாது. மூலப்பொருள்கள் எவ்வளவு இருந்தும் அவை பூர்த்தியாக இருக்கமாட்டா. நூதனமாக ஒரு விஷயம் கண்டுபிடிக்கப்பட்டால் அடுத்த நிமிஷத்தில் வேறு விதமான அபிவிருத்திக்கு இடமேற்படுகிறது. அவ்விதம் அதைச் சாதிக்கப் பிரயத்தனப்படுவதில், மற்றொரு பக்கத்தில் நமக்குத் தேவையான பொருள்களைக் குறைக்க வேண்டியிருக்கும். ஆகையினால் விமான அபிவிருத்தியும் அளவு கடந்து இருக்க முடியாது. இதற்கு ஒரு காரணமுண்டு. விமானப் படை பலம் மட்டில் இருந்து அதைக்கொண்டு மட்டில் சண்டையில் வெற்றியடைய முடியாது. ஏனென்றால் இது மட்டிலும் தனிப்பட்டு நின்று சண்டையை நடத்த முடியாது. மேலும் இந்த ஆயுதத்தை நிலைநிறுத்துவதற்கு தேவையான மற்ற ஆயுதங்களும் வேண்டும். அவற்றையும் அபிவிருத்தியடையச் செய்வதற்கு வேண்டிய பொருள்களைத் தேடவேண்டும்.

இனி தனிப்பட நின்று நடத்திய தாக்குதல்களைப்பற்றிக் கூறுவோம். நேசதேச விமானப்படை தனிமையில் எதிரி நாடுகளில் பாம்பர் விமானங்களைக் கொண்டு வெற்றிகரமாகத் தாக்கியிருக்கிறது. இம்மாதிரி வெடிகுண்டுத் தாக்குதல்கள் பலவிதங்களில் ஏற்படலாம். உதாரணமாக பிரிட்டனின் அதிக துரிதமாகவும், அதிக தூரம் செல்லக்கூடியதுமான லங்காஸ்டர் விமானங்கள் அதிகத் தாழப் பறந்து திடீரென்று குண்டுகளை வீசுகின்றன. ஆனால் "பறக்கும் கோட்டை" "லிபரேட்டர்" போன்ற அமெரிக்க விமானங்கள் அதிக உயரத்திலிருந்து எதிரி லக்ஷியங்களின் மீது நேராகக் குறிபார்த்து குண்டுகளை வீசுகின்றன. அதனால் ஒவ்வொரு முறையிலும் தனித்தனி முக்கியமான அம்சம் ஒன்று இருக்கிறது தெரியவரும். இவ்விதம் நேசநாடுகளின் பைடர் விமானங்கள் கொடுக்கும் தொந்தரவுகளை நிவர்த்திக்க எதிரியும் பல நூதனமான முறைகளைக் கண்டு பிடித்து வருகிறான். உதாரணமாக அதிக உயரம் பறக்கக்கூடிய விமானம் ஒன்றை எதிரி புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறான்.

சமீபத்தில் எதிரி தயாரித்த யூங்கர்ஸ் (Junkers) 86 என்ற பாம்பர் விமானம் ஆகாயத்தில் 40,000 அடி உயரமாகப் பறந்து செல்ல சக்திவாய்ந்திருக்கிறது. அவன் ஒரு நூதனமான முறையைக் கையாளுகிறான். ராணுவ லக்ஷியங்களல்லாத மற்ற இடங்களில் குண்டுகளை வீசிவிட்டு திடீரென்று ஓடிவிடுகிறான். அதனால் பொதுமக்களுக்கு சேதம் ஏற்படுகிறது. இது மிகவும் கொடுமையான முறை. இதைத்தடுப்பதற்கு புதிய எதிர்ப்புகளை நாம் தயாரித்தாகவேண்டும்.



இராக்காலத் தாக்குதலில், வெடிகுண்டுகளின் பருமனையும், சக்தியையும் அதிகரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரியான அபிவிருத்தி எரி குண்டுகளிலும் காணலாம். அவைகளின் மூலம் சேதம் அதிகமாக ஏற்படுகிறது. இப்பொழுது ஜெர்மனி மீது இராக்காலங்களில் வெடி குண்டுகள் போடுவது நமக்கு அவசியமாக இருக்கிறது. ஆனால் வெடிகுண்டுகளை வீசுவதால் மட்டில் எதிரியைப் பூராவாகத் தோற்கடிக்க முடியாது. வெடிகுண்டு தாக்குதலுக்கு அடுத்தாற்போலவோ அல்லது பிற்பட்டோ பயன் தரும்விதமாக மற்றொருவிதமான ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தை ஜப்பானியர் நன்குணர்ந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் பஸிபிக் போரில் பல வெற்றிகளையடைந்தனர். இன்னும் முக்கியமாக வெடிகுண்டு வீச்சுக்குப் பிறகு இதர ராணுவ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாவிட்டால் ஜனங்களின் உணர்ச்சியும் பாதிக்கும்படி நேரிடும். விமான எதிர்ப்பிலிருந்த பீதியும் அவர்களுக்கு நீங்கிவிடும். ஆகையால் எவ்வளவு கஷ்டங்கள் நேரிட்டாலும் விடாமல் விமான எதிர்ப்புகளை நடத்தியாக வேண்டும். அனுகூலமான சந்தர்ப்பங்களில் இம்முறையை அதிகரிக்கச் செய்யவும் வேண்டும். இப்பொழுது நேசநாடுகளின் விமான பலம் பெருகிவருகிறது. ஆகையால் அவ்வகள் பயன் தரும்விதமாக அதை உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

தரைப்படையுடன் ஒத்துழைக்க பைடர், பாம்பர் விமானங்கள் அதிக உபயோகமுள்ளதாக இருக்கின்றன. சிற்சில சமயங்களில் பாய்ச்சல் பாம்பர் விமானங்களைக் கொண்டு தாக்குதல் பயனற்றதாக இருக்கிறது. ஏனென்றால் அவைகளை உபயோகிக்கும் சக்திக்கு சரியானபடி விமான ஆதிக்கம் இருக்க வேண்டும். விசேஷமாக டாங்கிகளைத் தகர்க்கும் விமானங்கள் இப்பொழுது ருஷ்யர்கள் கையாண்டு வருகிறார்கள். அவைகளைக்கொண்டு டாங்கிகளைப் பூராவாக அழிக்க முடியும் என்று சொல்வதற்கு முடியாமல் போனாலும், அப்பைடர் விமானங்களில் அமைக்கப்பட்டுள்ள நல்ல சக்திவாய்ந்த பீரங்கிகளைக்கொண்டு கவசம் பூண்ட பலமான வண்டிகளை நிச்சயமாக சேதம் விளைவிக்க முடியும்.

அடுத்தபடியாக சமுத்திரத்தில் நடக்கும் சண்டையை எடுத்துக்கொள்வோம். அதில் பாய்ச்சல் பாம்பர் விமானங்கள் அதிக உபயோகமாக இருக்கின்றன. ஏனென்றால் அவைகள் டார்பிடோ விமானங்களுடன் சேர்ந்து எதிரி கப்பல்களுக்குச் சேதத்தை விளைவிக்கின்றன. இம்மாதிரி விமானங்களின் சக்தி அதிகரித்து வருவதால், அவ்விமானங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைத் தயாரிப்பது அவசியமாகயிருக்கிறது. இவ்விஷயம் பஸிபிக் போரில் நிதர்சனமாகத் தெரிந்துவிட்டது. அதே மாதிரியாகவே கடற்கரையோரங்களிலுள்ள விமான தளங்களிலிருந்து பைடர் விமானங்கள் சமுத்திரத்தில் வரும் எதிரியின் கப்பற்படையையும், சாமான் கப்பல்களையும் தாக்கி அழித்து வருகின்றன. இம்மாதிரி முறையைக் கையாளுவதும் அவசியமாகயிருக்கிறது.

விமானப் பகுதியால் மற்றொரு உபயோகமும் உண்டு. அதன் உதவியைக் கொண்டு பல வெவ்வேறு நடவடிக்கைகளை நடத்தலாம் என்று காட்டுகிறது. ஆனால் பல விமானங்கள் ஒன்று சேர்ந்து தனிமையில் படையெடுப்பை நடத்த முடியாது. அப்படி ஏற்பட்டாலும், அதில் முடிவான வெற்றி கிடைக்குமென்றும் நம்ப இடமில்லை. யுத்தத்தில் பொதுவாக விமானங்கள் தனியாக போர் நடத்தியதே கிடையாது. இருந்தாலும் எதிரிக்கு விமானபலம் அதிகம் இருந்ததினால் தான் அதிதுரிதமாகத் துருப்புகளை கிரீட்டில் இறக்கி பலமாகப் போர் செய்ய முடிந்தது. கிரீட்டில் நமக்குத் தோல்வியும் ஏற்பட்டது. விமானங்கள் ஏற்றிச் செல்லும் துருப்புகள் செய்யும் தாக்குதல் பலவிதமான சிங்களையுள்ளது. இதுவே முக்கியமான படையெடுப்பாகும். ஆனால் சாதாரணமாக தரைப்படைப் பகுதி ஒன்று செய்யும் நடவடிக்கை பிரஸ்தாபத்திற்கு வருவதேயில்லை. இதை பிறர் அறிந்து கொள்வதில்லை. பல லக்ஷக்கணக்கான துருப்புகளையும், குடைப்படையினரையும், விமான மூலம் ஏற்றிச் சென்று யுத்தத்தை நடத்தலாம், என்று சொல்லுகிறவர்களுக்கு, அதற்கு எவ்வளவு விமானங்கள் தேவையாகயிருக்கும் என்ற அபிப்பிராயம் கிடையாது. அம்மாதிரி துருப்புகளை ஏற்றிச் செல்வதாய் இருந்தால் ஆங்காங்கு விமானங்களை வைத்துக்கொண்டு அஞ்சல் மூலமாகத்தான் கொண்டு செல்ல முடியும். அப்படியிருப்பதில் பாதுகாப்புக்கு எவ்வளவோ பங்கம்வரும். ஆகையால் துருப்புகளை ஏராளமாக ஏற்றிச் சென்று பெரியதாக்கு

தல்களை விமானப்படையின் உதவியைக் கொண்டு மட்டில் நடத்துவது சாத்தியமில்லை என்று தெரிகிறது. விசேஷ சந்தர்ப்பங்களில் அம்மாதிரி படையெடுப்பை நடத்தலாம். இம்மாதிரி இவ்யுத்தத்தில் எதிரி கிரீட்டை தாக்கிய பொழுது விமானங்கள் வந்தமாதிரி வேறு எப்பொழுதும் இம்மாதிரி படையெடுப்பு நேரவில்லை. ஆனால் பல சிறு காரியங்களைச் சாதிப்பதற்கு மட்டில் விமானப்படை உபயோகமாக இருக்கிறது. எதிரிக்குத் தொந்தரவை விளைவிப்பது, வெடி மருந்து கிடங்கு தண்ணீர் குழாய்கள், பாலங்கள் முதலியவைகளைப் போன்ற குறிப்பிட்ட லக்ஷியங்களைத் தாக்கி அழிப்பது இவைபோன்ற சிறிய படையெடுப்புகளை விமானப்படையைக்கொண்டு நடத்த முடியும்.

முடிவாகக் கூறுவதனால் மேலே சொல்லிய தாக்குதல் நடவடிக்கைகளுக்கு விமானப்படைப் பகுதியை உபயோகிப்பதைக் காட்டிலும் அதற்கு மேலான வேலை ஒன்று உண்டு. ஆதியில் சாமான் தூக்கிச் செல்லவேண்டிய நோக்கத்துடன் விமானங்கள் உபயோகத்திலிருந்தன. இந்த விஷயம்தான் சமீப காலத்தில் வரவர அதிகரித்துவரும் பிராதான்யம் பெற்றுவிட்டது. ஏனெனில் மற்ற வேலைகளெல்லாம் காட்டிலும் அவசரமாகச் செய்யக்கூடிய வேலைக்கு தகுதியானது. குறைவான துருப்புகளை துரிதமாகக் கொண்டுசெல்ல இது உபயோகமாகும். கெட்டுப்போன ஆயுதங்களுக்குப் பதிலாக வேண்டிய பொருள்களை துரிதமாகக் கொண்டுவர உபயோகமாக இருக்கும். பெட்ரோல் ஸப்ளையில் தடங்கல் ஏற்பட்டுவிட்டால் முற்றிலும் அழிந்து போகக்கூடிய நிலைமை ஏற்படாமல் தவிர்க்கக்கூடும். பாலைவனப் பிரதேசமாக இருந்தால் தண்ணீர் கொண்டு செல்ல உபயோகப்படுத்தலாம். இவற்றைக் காட்டிலும் பெரிய விமானங்கள் இன்னும் அதிகம்கனங்கொண்ட ஸப்ளைகளை அதிக தூரமான பிரதேசங்களுக்குக் கொண்டுசெல்ல உபயோகிக்கலாம். ஆனால் சண்டை நடக்கும் பிரதேசங்களுக்கு அப்பாலேயே அவைகளை வைத்திருக்கவேண்டும். அப்படி வைத்திருக்காமல் போய் இந்தப் பெரிய விமானங்கள் சேதமானால் நஷ்டம் தாங்கமுடியாததாக ஆகிவிடும். சிகிச்சை காரியத்தைக் கவனித்தால் விமானம் ஒரு வரப்பிரசாதி. காயமடைந்தவர்களை நவீன யுத்த களத்தின் கொடுமைகளிலிருந்து அவஸ்தைப் படாமல் காப்பாற்றக்கூடும். இருந்தபோதிலும் பாதுகாப்பு உள்ள சந்தர்ப்பத்தில்தான் இதை உபயோகப்படுத்தலாம். இம்மாதிரியாக எல்லா துறைகளிலும் அது முக்கியத்வம் பெற்றிருக்கிறது. இந்த விமான ஆயுதம் ராணுவத் துறையில் அதிகரித்துவரும் மதிப்பைப் பெற்றிருக்கிறது. மற்ற ஆயுதங்களைக் காட்டிலும் இதுவே மேலானதாக இருக்குமென்று தெரிகிறது. இதற்கு முன் நேர்ந்த எந்த யுத்தத்திலும் இம்மாதிரி ஏற்படவேயில்லை. உற்பத்தி செய்வதில் முந்திக்கொண்டவர்கள் மற்றவர்களைப் போருக்கிழுத்து தந்திரமாக நடந்து கொண்டு ஏமாற்றிவிட்டார்கள். மேலும் யுத்த தளவாடங்கள் தயாரிப்பதில் பின் தங்கியிருந்து கடைசியில் உற்பத்தி செய்த வல்லரசுகளையும் ஏமாற்றக் கூடியதாக இருந்தது. முடிவாக அவர்களைக் காட்டிலும் அதிகமாக தயாரித்தால் தான் நம்மால் சமாளிக்கமுடியும். பிந்தி உற்பத்தி செய்த விமானங்களை அடியோடு அழித்துவிட முடியாது. இருந்தபோதிலும் வெற்றி பெறும் விதமாக திட்டம் போடவேண்டியதே நமது முதல் நோக்கமாக இருக்கவேண்டும். அதற்கு ஜெர்மானியர் செய்த ஏற்பாட்டுப்படி தரைப்படை, விமானப்படை, கடற்படையிலுள்ள நிபுணர்கள் ஒன்றுசேர்ந்து இதை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

## சில்லரை நாணயங்கள்.

(ஜனவரி 22-ல் வெளிவந்த அறிக்கை).

சில்லரை நாணயங்களைத் தயாரிப்பதற்கான உலோகங்களின் கிரயம் பேட்டா பேட்டியில் உயர்ந்துவிட்டதால், நாணயங்களை உருக்கி விற்பதில் அதிக லாபம் ஏற்படும் என்று பொதுமக்கள் அபிப்பிராயப்படுவதாக இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

தங்கள் சுயநலத்தைக் கருதி அதிக லாபத்திற்குச் சில்லரை நாணயங்களை விற்க நோக்கங் கொண்டிருக்கிறவர்கள் தான் பொதுமக்களை இம்மாதிரி அபிப்பிராயங் கொள்ளச் செய்திருக்கிறார்கள். அம்மாதிரி தோற்றங்கொள்ள யாதொரு காரணமும் இல்லை. நிக்கல் நாணயங்கள், நிக்கலும், பித்தளையும் சேர்ந்த கலப்பு நாணயங்கள் இவைகளிலுள்ள உலோகத்தின் கிரயம் அந்தந்த நாணயங்களின் பொருமானத்தைக் காட்டிலும் மிகக் குறைவாக இருக்கிறது. வேறுவிதமாக உயர்ந்த விலையில் விற்க சந்தர்ப்பமே கிடையாது.



வெங்கல நாணயங்கள் இந்தியாவில் பல இடங்களில் உபயோகத்திலில்லை. அவை உபயோகத்திலிருக்கும் பெரிய இடங்களில் உலோகத்தின் கிரயம் மட்டில் நாணயங்களின் பொருமானத்தைக் காட்டிலும் மிகக் குறைவாகத் தான் இருக்கிறது. ஆனால் சிற்சில இடங்களில் பேட்டா பேட்டியில் உலோகத்தின் விலை அநேக மடங்கு கூடுதலான போதிலும் நாணயத்தின் பொருமானத்திற்குச்சமமாக இருக்கிறதே தவிர அதிகப்படுகிறது இல்லை.

இப்போது சில்லரை நாணயங்கள் குறைவாக இருக்கிறது. அந்த நாணயங்களை உருக்குவதினால் மட்டில் அம்மாதிரி குறைவு ஏற்படவில்லை. ஒரு காலத்தில் செப்பு நாணயங்களை உருக்கி விற்பதில் பேட்டா பேட்டியில் உலோகத்தின் விலை கூடுதலான லாபத்தைக் கொடுக்குமென்ற நம்பிக்கை கொண்டு செப்பு நாணயங்களை ஏராளமாகச் சேமித்து வைத்திருப்பதுதான் அக்குறைவுக்குக் காரணம்.

### புதிய நாணயங்களின் தயாரிப்பு.

இம்மாதிரி சில்லரை நாணயங்களை ஒருவரும் சேமித்து வைக்காமல் தடுக்கும் பொருட்டு புதுமாதிரியான நாணயங்களைத் தயாரிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இனி வரும் காலணா நாணயத்தில் 75 குந்து மணிக்குப் பதிலாக 30 குந்து மணி இடை உலோகம் தான் இருக்கும். அதனால் பேட்டா பேட்டியில் உலோகத்தின் விலை உயர்த்தப்பட்ட போதிலும், அது நாணயத்தின பொருமானத்தைக் காட்டிலும் மிகக் குறைவாக இருக்கும்.

புதிய காசு வட்ட வடிவமாக இருக்கும். அதன் குறுக்களவு ·84 அங்குலம். மத்தியில் ·37 அங்குலம். குறுக்களவுள்ள ஒரு வட்டமான துவாரம் போடப்பட்டிருக்கும். ஒரு புறத்தில் திராக்ஷைக் கொடியும், மறுபக்கத்தில் சக்ரவர்த்தியின் முடியும் இருக்கும். ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும், உருதுவிலும் "இந்தியா" என்ற எழுத்துக்களும், நாணயத்தின் பொருமதியும், வருஷமும் இருக்கும்.

பிப்ரவரி மாத ஆரம்ப முதல் இம்மாதிரி புது நாணயங்கள் பொதுமக்கள் உபயோகத்திற்கு வெளிவரும்.

### இடை குறைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டணா, ஒரு அணா, அரை அணா, காலணா நாணயங்கள் 1943-ம் ௵ ஜனவரி 23-ம் தேதியிலிருந்து முறையே 90, 60, 45, 30, குந்துமணி (Troy) இடை வீதம் இந்திய நாணய சட்டப்படித் தயாரிக்கப்படும். பொதுவாக நிறையில் 40-ல் ஒரு பங்கு தான் வேன், அல்லது குறைவு இருக்கும்.

---

## 'டைபூன்' என்ற பிரிடனின் புதிய பைடர் விமானம்.

நீண்ட காலமாக மர்மமாக இருந்த பிரிடனின் 'டைபூன்' பைடர் விமானம் இப்பொழுது வெளிவந்திருக்கிறது.

டையப் படையெடுப்பு நேர்ந்த சென்ற ஆகஸ்டு மாதம் முதற்கொண்டு படையெடுப்பில் இவ்விமானங்கள் ஈடுபட்டிருந்ததாக இப்பொழுது வெளியாகி இருக்கிறது. பிரக்யாதி பெற்ற ஹரிகேன் விமானத்தைத் தாயாரித்த ஹாக்கர்ஸ் கம்பெனியார்தான் இதையும் தயாரித்தது.

அதன் யந்திரம் 24 ஸிலிண்டர் உள்ளது. ஆகையால் அது மணிக்கு 400 மைல் வேகம் செல்லும். இதன் அமைப்பைக் கண்டு பிடித்தவர் ஸிட்னிகாம் (Sidney Camm). அவர்தான் ஹரிகேன் விமான அமைப்பையும் கண்டுபிடித்தவர்.

சண்டைக்கு வேண்டிய யுத்தப்பொருள்களின் பூரண சுமையையும் தூக்கிக் கொண்டு அவ்விமானம் ஆகாசவாணம் போல் செங்குத்தாக வெகு உயரம் கிளம்புகிறதென்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

## ‘வி’ டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரு. 1—4—0; ஷீப்ஸ்கின் ரு. 1—8—0;
மொராக்கோ ரு. 2—0—0.

லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.

கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 131. (2-வது பிரிவு)

| | | | |
|---|---|---|---|
| 30- 1-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 |
| 31- 1-43 | குடுமியாமலை ... | ,, | 7.00 |
| | பரம்பூர் ... | ,, | 7.30 |
| 1- 2-43 | வெங்களூர் ... | ,, | 7.00 |
| ,, | கோனுபட்டு ... | ,, | 7.30 |
| 2- 2-43 | நச்சாந்துபட்டி ... | ,, | 7.00 |
| ,, | விராச்சிலை ... | ,, | 7.30 |
| 3- 2-43 | C.S.M. பள்ளிக்கூடம். | காலை | 10.00 |
| ,, | ராணி பெண்பாடசாலை | ,, | 10.15 |
| 3- 2-43 | காலேஜ் A இங்கிலீஷ் | காலை | 10.15 |
| ,, | காலேஜ் B தமிழ் ... | ,, | 10.15 |
| ,, | கொடும்பாளூர் ... | மாலை | 7.00 |
| ,, | விராலிமலை ... | ,, | 7.30 |
| 4- 2-43 | களமாவூர் ... | ,, | 7.00 |
| ,, | நல்லூர் ... | ,, | 7.30 |
| 5- 2-43 | பனையப்பட்டி ... | ,, | 7.00 |
| ,, | ராங்கியம் ... | ,, | 7.30 |

### பிரஸங்கம் 132. (3-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 6- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 |
| 7- 2-43 | ஆலங்குடி ... | ,, | 7.00 |
| ,, | ராசியமங்கலம் ... | ,, | 7.30 |
| 8- 2-43 | அன்னவாசல் ... | ,, | 7.00 |
| ,, | கீழக்குறிச்சி ... | ,, | 7.30 |
| 9- 2-43 | குழிபிரை ... | ,, | 7.00 |
| ,, | செவலூர் ... | ,, | 7.30 |
| 10- 2-43 | C. S. M, பள்ளிக் கூடம். | காலை | 10.00 |
| ,, | ராணி பெண்பாடசாலை. | ,, | 10.15 |
| 10- 2-43 | காலேஜ் A ஆங்கிலம் | காலை | 10.15 |
| ,, | காலேஜ் B தமிழ் ... | ,, | 10.15 |
| ,, | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 7.00 |
| ,, | ராயவரம் ... | ,, | 7.30 |
| 11- 2-43 | மழையூர் ... | ,, | 7.00 |
| ,, | கரம்பக்குடி ... | ,, | 7.30 |
| 12- 2-43 | வாராப்பூர் மாணிக்கம் ... | ,, | 7.00 |
| ,, | எம்பல் ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 30— 1—43 | திருமயம். |
| 31— 1—43 | விராச்சிலை. |
| 1— 2—43 | முள்ளங்குறிச்சி. |
| 2— 2—43 | கோனுபட்டு. |
| 3— 2—43 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 4— 2—43 | ஆலங்குடி. |
| 5— 2—43 | புதுக்கோட்டை. |
| 6— 2—43 | வெட்டன்விடுதி. |
| 7— 2—43 | எம்பல். |
| 8— 2—43 | கொன்னையூர். |
| 9— 2—43 | ராமச்சந்திரபுரம். |
| 10— 2—43 | ராயவரம். |
| 11— 2—43 | குழிபிரை. |
| 12— 2—43 | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—2-2-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ஞு பிப்ரவரி மீ 6 உ [ந. 132

பிரஸங்கம் CXXXII.

# ருஷ்யர்களின் மகத்தான திட்டம் 1918 & 1943.

(டெய்லி ஹெரால்டு பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

விஸ்தாரமான கிழக்குப் போர்முனையில் சுமார் 6 வெவ்வேறு பகுதிகளில் ருஷ்யர்கள் இப்பொழுது மகத்தான திட்டம் போட்டுக்கொண்டு யுத்தத்தை வெற்றிகரமாக நடத்திவருகிறார்கள்.

1943-ம் வருஷம் முடிவதற்குள் ருஷ்யப் படையெடுப்பில் ஹிட்லருக்கு அழிவேற்படும் என்பதில் சந்தேகமேயில்லை. 1918-ம் ஆண்டில் நேசதேசத்தார் கையாண்ட திட்டமும், இப்பொழுது ருஷ்யர் கையாண்டுவரும் திட்டமும் அநேகமாக ஒரே மாதிரியாக இருக்கிறது. சரித்திரத்தில் நடந்த சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன என்பது தெரியவரும்.

1918-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு இருந்த அனுகூலமான நிலையைப்போலவே இந்த வருஷம் வசந்த காலத்திலும் முக்கிய போர்முனையான ருஷ்யாவில் எதிரிக்கு ஏராளமான படைகள் இருந்தன. ஆனால் அவைகள் யாவும் ஒரு சில மாதங்களுக்குமேல் நிலைத்திருக்கமுடியாது என்று சொல்லலாம். இப்பொழுது அவைகளைக்காட்டிலும் அதிகமான படை பலம் ருஷ்யாவிற்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் எதிரியின் எதிர்ப்பை முறியடித்து அவனையும் சமாதானத்திற்கு வரும்படி தூண்டவும்கூடும். 1918-ம் வருஷத்தில் நேசதேசத்தினர் யாவரும் ஒன்று சேர்ந்ததுபோல் இப்பொழுதும் அவர்களின் பலம் பெருகிவருகிறது. தாத்காலிகமாக பலக்குறைவு ஏற்பட்டிருப்பதை கொஞ்ச அவகாசத்திற்கு சமாளிக்க முடிந்தால், பிற்பட்டு எல்லாம் ருஷ்யாவிற்கு அனுகூலமாகவே முடியும். ஆனால் ஜெர்மானியர் அதிவேகத்துடன் துரிதமாக ருஷ்யர்களை அடியோடு அழிப்பதற்கு எத்தனிக்கிறார்கள். ஆனால் ருஷ்யர்களோ காலதாமதம் ஏற்படுத்த தற்காப்பு முறையில் இருந்துகொண்டு ஜெர்மனியின் பலம் குறைய ஆரம்பித்தவுடன் முன்னேறித் தாக்கத் தயாராக இருக்கிறார்கள்.

1942-ம் வருஷத்திலும் 1918-ம் வருஷத்தில் ஜெர்மானியர் கையாண்ட திட்டமே கையாளப்பட்டது. அதாவது ஒரே பிரம்மாண்டமான எதிர்ப்பில் எல்லாவித சாதனங்களையும் உபயோகித்து ருஷ்யரின் தற்காப்பு நிலையை அடியோடு அழிப்பதற்கு எதிரி முயற்சித்தான். ருஷ்யரின் தற்காப்பு வரிசைகளைப் பிளந்துகொண்டு மகத்தான தோல்வியை விளைவிக்கமுடிந்தால், எதிரிக்கு இருந்த மேன்மையான பலம் வெகுவாய் குறைந்துபோய்க்கொண்டிருந்தாலும்கூட எதிரி வெற்றியடையக்கூடும்.

## மாறிய நிலை.

இவ்விரண்டு வருஷங்களிலும் என்ன நடந்தது என்று நமக்குத் தெரியும். 1918-ம் வருஷம் நடந்த யுத்தத்தில் முதல் ஸாம் (Somme) என்ற நதிக்கரையிலும், பிற்பட்டு ஏய்னி (Aisne), மார்னே நதிக்கரைகளிலும் நடந்த சண்டைகளில் ஜெர்மானியருக்கு அநேகமாக வெற்றிகிடைத்துவிடும்போல் காணப்பட்டது. இறுதியில் நிலைமை மாறும்படியாயிற்று. அவர்கள் செய்த பல சண்டைகளில் அவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டு, பலமும் குறைந்துபோய் விட்டது. இதற்கு நேசநாடுகள் அதிக பலம் பெற்று முன்னேறித்தாக்க ஆரம்பித்ததுதான்.

அதேபோலவே ருஷ்யாவில் இப்பொழுதுள்ள நிலைமையும் மாறிவிட்டது. 1942-ல் ஸ்டாலின்கிராட்டிலும் காகஸஸ் பிரதேசத்திலும் ஜெர்மானியர் தீரமாக அதிவேகத்துடனும், ஆக்ரோஷத்துடனும் முன்னேறினார்கள். ருஷ்யர்களின் வரிசைகள் பிளவுபட்டுப்போய்விடுமோ என்ற பயமும் இருந்தது. அதில் முடிவான வெற்றி கிடைக்கும்படி எதிர்பார்த்தது பயன்படவில்லை. முடிவில் ருஷ்ய பலம் அதிகரித்ததினால் அவர்கள் பின்வாங்கி ஓடிவந்ததில் களைப்புற்று நிற்கின்றனர். பலம் யாவும் போய்விட்டது. இப்பொழுது எதிரியின் பலத்தைக் காட்டிலும் நேசநாடுகளின் பலம் அதிகரித்துவருகிறது. வெவ்வேறு இடங்களில் எதிரியின் பலஹீனமான ஸ்தானங்களில் போர் நடந்துவருகிறது.

## மார்ஷல் போக் (Foch) கின் திட்டம்.

1918-ல் மார்ஷல் போக் சிற்சிறு சண்டைகளாகப் பலவற்றை நடத்தி எதிரியின் பலக்குறைவான இடங்களை ஒன்றன்பின் ஒன்றாக பிடித்து வந்தார். ஒவ்வொரு முனையிலும் தற்காப்பு செய்துகொண்டு அதை எதிரிகள் திருப்பிப் பிடிக்க முயற்சிக்கமுடியாமல் வைத்துக்கொள்வார். மற்றொரு பாகத்தில் சண்டை துவங்கும். அந்த இடத்திலிருந்து எதிரி ஓடவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும். இல்லாமல் போனால் அதன் துருப்புகள் வரும் பாதை அடைக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிடும். இம்மாதிரியான முறையைத்தான் இப்பொழுது ருஷ்யர்கள் கையாண்டு வருகிறார்கள்.

எதிரியின் படை பலத்தைக்காட்டிலும் அதிகமாகப் பெருகிவரும் பலத்தையுடைய கக்ஷிக்குத்தான் இம்முறை அன்வயிக்கும். ஆகையால் 1918-ம் வருஷத்தில் நேர்ந்த பலனை 1943-ம் வருஷத்திலும் எதிர்பார்க்கலாம். 1918-ம் வருஷத்தில் இரண்டு பலமான வல்லரசுகளுக்கும் இறுதியான யுத்தம் நடைபெற்றதுபோல 1943-ம் வருஷத்திலும் ஏற்படலாம். அப்பொழுது வெற்றி ஏற்பட்டதுபோல் இப்பொழுதும் ஏற்படலாம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

### 30—1—43-லிருந்து 5—2—43-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட் யுத்தம் முடிந்துவிட்டது. ஜெர்மன் சேனாதிபதியான தளகர்த்தர் பாலஸ் கைதியாகிவிட்டார். பிப்ரவரி 3-ம் தேதி பெர்லின் ஒலிபரப்பில் குறிப்பிடப்பட்ட பிரசுரத்தில் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

ஜெர்மன் படை நன்றாய் சுற்றிவளைக்கப்பட்டபோதிலும் எதிரி சைனியங்களை அநேக வாரங்கள் எதிர்த்து நின்றது. முற்றுகை தளர்ச்சியடையவில்லை. பகீரதப் பிரயத்தனம் செய்தும், ஏராளமான நஷ்டமடைந்தும் ஜெர்மன் விமானங்கள் ஆகாய மார்க்கமாக உணவுப் பொருள்களை, அடைபட்டிருக்கும் படைக்கு அனுப்பக்கூடவில்லை. உதவி அனுப்புவது மேல் மேலும் அசாத்தியமாகி விட்டது. கடைசியில் அனுப்ப முடியாமலே போய்விட்டது.



இந்த வாரத்தில் ருஷ்யத் தாக்குதலினால் கீழ்க்கண்ட பிரதேசங்கள் பிடிக்கப்பட்டன.

கிராஸ்னடாருக்குத் தெற்கேயுள்ள காரியாச்சி; எகார்லிக், கார்கனையா, குலகேவிசி, கிராப்ட்கின், டிகாரெட்ஸ், மெய்காப்—இவைகள் காகஸஸ் பிரதேசத்தில்; டான் நதிப் பிரதேசத்தில் பலயாக்ளினு; வாரனேஷ் முனையில் கார்ஷெக் நாயி, கார்காவுக்குச் சமீபத்திலுள்ள குபியான்ஸ்க்; கர்ஸக்குக்கு வடக்கே ஸோலோடுகினோவும், வாஸியும்.

இவ்விதமாகப் பிரதேசங்களைப் பிடிப்பதைவிட போக்குவரவு சாதனங்களைத் துண்டித்துவிடுவது என்ற புதிய ருஷ்ய தந்திரம் எல்லா போர்முனைகளிலும் பயனளித்துவருகிறது. ஸ்டாலின்கிராட், வாரனேஷ் பிரதேசங்களிலிருந்து எதிரி விரட்டப்பட்டுவிட்டான். வெலிகியுலூகி, ரிஷெவ் பிரதேசங்களிலும் ருஷ்யப்படை முன்னேறி வருகிறது. லெனின்கிராட் போர்முனையில் ஜெர்மன் எதிர்ப்பு வலுக்குறைந்துவருகிறது. காகஸஸில் மகத்தான தாக்குதல் உபயோகமற்றதாக முடிந்ததும், எதிரி டாமன் தீபகற்பத்துக்குப் பின்வாங்கி கெர்ச் ஜலசந்தி வழியாக ஓடப்பார்க்கிறான். இங்கும் ருஷ்யர்கள் குறைவளையைப் பிடிக்கிறார்கள். ருஷ்யச் சேனையின் இரு பாகங்களில் ஒன்று, ராஸ்டாவுக்கு சமீபத்திலும், மற்றொன்று கருங்கடலிலுள்ள நோவோராஸிஸ்க்குச் சமீபத்திலும் நெருங்கிவருகிறது. ராஸ்டாவை அண்டிய யுத்தம் ஒரு முனையில் ஆரம்பமாகி விட்டது. ருஷ்யாவின் கருங்கடலிலுள்ள கடற்படை கடற்கரையிலுள்ள ஜெர்மன் தளங்களைத் தகர்க்க ஆரம்பித்துவிட்டது.

**டிரிபோலிடானியா.**—ஜனவரி 25-ம் தேதி ஸானியாவைப் பிடித்துவிட்டு 8-ம் படையானது 27-ம் தேதியன்று கடற்கரையிலுள்ள ஸபாரதா பிரதேசத்திலுள்ள எதிரியை எதிர்த்தது. அதன் முன்னணிப் படைகள் 29-ம் தேதியன்று டூனிஸியா எல்லையைக் கடந்தன. வழியிலுள்ள ஸில்டன் நகரத்தைப் பிடித்துவிட்டு பிப்ரவரி 3-ம் தேதியன்று மாடமாடா பிரதேசத்திலுள்ள மாரெட் அரணை 8-ம் படை அடைந்துவிட்டது.

கிழக்கு ஸபாராவில் பிரெஞ்சுத் துருப்புகளும் சுவேச்சை பிரெஞ்சுப் படையும் ஜனவரி 21-ம் தேதி பார்ஸினை ஆக்கிரமித்து லிபியாவின் தெற்கு மூலையிலுள்ள காடாமெஸ்ஸு-க்கு முன்னேறின.

**டூனிஸியா.**—டெபெஸ்ஸாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் முன்னேற ஆரம்பித்துவிட்டன. மாரெட் அரணுக்குப்பின் முன்னேறிவரும் துருப்புகள் காப்ஸாவுக்கும் ஸ்பாக்ஸு-க்கும் 74 மைல் வடமேற்கேயுள்ள மாகெனாஸியையும் மாகெனாஸிக்கு 25 மைல் மேற்கேயுள்ள ஸென்ட்டையும் பிடித்துவிட்டன. தென் டூனிஸியாவில் பைட் என்னுமிடத்தில் நேசநாட்டுத் துருப்புகள் எதிரியைத் தாக்கின. மத்திய டூனிஸியாவில் எதிரி பாண்ட் டு பாஸ்க்கு தென்மேற்கே கொஞ்சம் முன்னேறினான். வட டூனிஸியாவில் நமது ரோந்து கோஷ்டிகள் நடமாடினார்கள்.

**ஸாலமன்ஸ்.**—ஆகாயத்திலும் தரையிலும் ஐக்கிய நாடுகளும் ஜப்பானியரும் குடால்கனார் பிரதேசத்தில் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இரு தரப்பாருக்கும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பிப்ரவரி 1-ம் தேதியன்று அமெரிக்கப் படைகள் போனஸி நதியைக்கடந்து முன்னேறுகின்றன. தரையில் எதிரியின் எதிர்ப்பு குலைந்துவிட்டது. அமெரிக்கக் கடற்படை காரியதரிசி நாக்ஸ் என்பவர் இன்னும் ஒரு மாதத்திற்குள் எதிரியின் எதிர்ப்பு கூடல்கனாரில் முற்றிலும் போய்விடுமென்று அபிப்பிராயப்படுகிறார்.

**நியூ கினியா.**—ஸனாநந்தாவின் வீழ்ச்சிக்குப் பிறகு பாபுவாவின் கரையிலுள்ள கின்வா பிடிபட்டு விட்டது போல், கிரிஸ்டர் கிக் நதிகளைத் தாண்ட முயன்ற ஜப்பானியர் பிரயத்தனம் பலிக்கவில்லை; வாவாக், மாடாங், பின்ஷாபன் ,லே இவைகளைப் பிடித்த பிறகு ஜப்பானியர்கள் நியூ கினியாவின் வடக்குக் கரையிலுள்ள அநேக இடங்களைப் பிடித்து விட்டதாகவும் அவைகளில் வலுவான விமான தளங்களையும் கடல் தளங்களையும் ஏற்பாடு செய்வதாகவும் தெரிகிறது.

வசநு.—சினு பர்மா எல்லைப்புறத்தில் மாங்க் பாங்க்குக்கு அருகில் பலமான சண்டை நடந்தது. யூனன் மகாணத்தின் தென் மேற்கில் ஜப்பானியர்கள் நாங்வீ நதியைக் கடக்க முயன்றபொழுது துரத்தியடிக்கப்பட்டார்கள். கிழக்கு ஹோனனில் ஸியாயி, மன்சாங்க் பிரதேசத்தில் ஜப்பானியரின் தாக்குதல் சமாளிக்கப்பட்டது.

பர்மா.—அஸ்ஸாம் முனையில் பிரிடிஷ் இந்தியா ரோந்துவேலை செய்பவர்கள் டாமு பிரதேசத்தில் நடமாடினார்கள். சின் துருப்புகளுக்கும் ஜப்பானியத் துருப்புகளுக்கும் ஒரு சண்டை நடைபெற்றது. மாயு தீபகற்பத்தில் டாம்பிக் என்னுமிடத்தில் கடும்போர் நடந்தது.

பிரிடிஷ் விமானப்படை.—கீழ்க்கண்ட இடங்களைத் தாக்கியது. ஜனவரி 24, ரெங்கூன்; ஜனவரி 25, நாபா; ஜனவரி 26, மாண்டலே, ஷாடுஸூப், மாஸா, டாங்கூ, சின்ட்வின் நதியிலும் அரகான்கரையிலுமுள்ள போக்குவரத்துகள்; ஜனவரி 28, மாயூ, ஆகியாய் பிரதேசங்கள் ஆகியாப் தீவு, அரகான் கடற்கரை; பிப்ரவரி 2, ராதிடாங், ஆகியாய் தீவு.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்கவெடி பாவுவது—விரோதி சமுத்திரக்கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல்கள்.—லிபியாவிலுள்ள ஸூயாரா (Zuara) துறைமுகம்.

விமானமிறங்குமிடம்—பென்கார்டீன் (Bengardine).

கப்பல் துறைகள்.—டூனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta).

இருப்புப்பாதைகள், கட்டடங்கள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக்கூடங்கள்.—லே (Lae), நியு கினியிலுள்ள ஸலாமுவா (Salamaua), நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா.

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), டிமோரிலுள்ள டில்லி (Dilli).

விமானதளம்.—கிளௌஸெஸ்டர் (Gloucester) முனை.

ஒரு கப்பல்.—ஸாலமன் (Solomons) கடலில்.

பர்மாவிலுள்ள ஷ்வீபோ (Shwebo) விமானக்கூடம்.

கிராமங்கள்.—ஆக்கியாப் (Akyab) தீவில்.

கப்பல்கள்.—அரக்கான் (Arakan) கடற்கரைக்கருகாமையில்.

கப்பல் துறைகள், கப்பல்கள்.—ரெங்கூன் (Rangoon).

**25—1—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பல் துறைகள், எஞ்ஜினாய் கிடங்கு.—பிளஷிங் (Flushing) (ஒரு நேச நாட்டு விமானம் திரும்பி வரவில்லை).

வட ஆபிரிக்கா (North Africa).
மத்தியதரைக்கடல் (Mediterranean).

துறைமுகம்.—ஸூயாரா (Zuara).

இருப்புப்பாதைகள்.—தெற்கு டூனிஸியாவில் ஸ்வாக்ஸ் (Sfax).

ஸப்ளை போக்குவரத்து.—டூனிஸியா (Tunisia).

ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

வேக் தீவு.—(Wake) (2 ஜப்பானிய விமானங்கள் சேதமாயின).

விமானக்கூடம்.—லே (Lae), நியூ கினியிலுள்ள பின்ஸ்சேவன் (Finschhafen).

துறைமுகம்.—ஸாலமூவா (Salamaua).

கப்பல்கள் துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).



விமானக்கூடம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

மோட்டார் போக்குவரத்து.—பர்மாவிலுள்ள டாங்கூப்—பாடாங் (Taungup—Padaung) ரஸ்தா.

விமானக்கூடம்.—பர்மாவிலுள்ள ஷ்வீபோ (Shwebo).

கப்பல்கள்.—அரக்கான் (Arakan) கடற்கரை.

ஹிஹோ (HEHO), விமானக்கூடம் (Burma).

**26—1—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (Northern France), பெல்ஜியம் (Belgium).

இரவில்.—நீர்மூழ்கி தளம் பிரான்ஸிலுள்ள லோரியண்ட் (Lorient) (2 நேச நாட்டு விமானங்கள் திரும்பி வரவில்லை).

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

இருப்புப்பாதை.—டூனிஸியாவிலுள்ள ஜெப்னு (Jefna).

விமானக்கூடங்கள்.—டூனிஸியா (Tunisia), ஸூயாரா (Zuara).

துறைமுகங்கள், விமானக்கூடங்கள்.—இதாலி (Italy), ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானதளம்.—ஷார்ட்லாந்திலுள்ள பலாலி (Ballale) தீவு.

விமானக் கூடங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua).

இருப்புப் பாதைகள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

ஒரு பாலம்.—பர்மாவிலுள்ள ஷாட்விஸூப் (Shadwzup).

போக்குவரத்து.—பர்மாவிலுள்ள மேஸா (Meza).

ரயில்வே ஜங்ஷன்.—பர்மாவிலுள்ள நாபா (Naba).

**27—1—43.** (புதன்கிழமை.

ஐரோப்பா (Europe).—(6 விமானங்கள் திரும்பவில்லை).

பகலில்.—கப்பல் துறைகள்—கோபன்ஹேகன் (Copenhagen).

ரயில்வே லக்ஷியங்கள்.—பிரிடானி (Brittany).

கப்பல்கள்.—டச்சுக் கடற்கரைக்கருகாமையில்.

இரவில்.—தொழிற்சாலைகள்.—ரைன்லாந்து (Rhineland), டூஸல்டார்ப் உள்பட.

ரயில் போக்குவரத்து.—தெற்கு இதாலியில் (Italy).

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—பிஸர்ட்டா (Bizerta).

துறைமுகம், ரயில் வண்டிகள் தங்குமிடம்.—ஸ்வாக்ஸ் (Sfax).

பான்ட் போஸ்.—(Pont Du Fahs) பிரதேசம்.

ரயில்வே போக்குவரத்து.—ஸிஸிலியில் (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானக்கூடம்.—காஸ்மாடா (Gasmata).

விமானக் கூடங்கள்.—லே (Lae), நியூ கினியிலுள்ள பின்ஸ்சேபன் (Finschhafen).

கட்டடங்கள்.—பான் (Faan), ரோமால் (Roemaal).

ஒரு கப்பல்.—டோபோ (Dobo)வுக்கருகாமையில்.

விரோதி ஸ்தானங்கள்.—மூபோ (Mubo).

ஜப்பான் ஆக்கிரமித்த மாகிசாங்.—(Magyichaung).

கியிட்டாபியின் (Kyettawbyin).

ஆக்யாப் (Akyab) தீவு.

**28—1—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரக்கரையோரங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல். (Mediterranean).

விமானத்தளம்.—டூனிஸ் (Tunis).

கப்பல்துறைப் பிரதேசம்.—பிஸர்ட்டா (Bizerta).

ஸிஸிலியிலிருந்து டூனிஸியா வரையிலும் செல்லும் துணைக்கப்பல்கள், பான்ட் போஸ் (Pont Du Fahs).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—நியூ பிரிடனிலுள்ள விரிகுடா.

விமானக்கூடம்.—லே (Lea), நியூகினியிலுள்ள பின்ஸ்சேபன் (Finschhafen).

துறைமுகம்.—மூபோ (Mubo).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம் ராதிடாங் (Rathedaung).

**29—1—43.** (வெள்ளிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**—(4 நேச நாட்டு விமானங்கள் திரும்பவில்லை).

பகலில்.—ரயில்வே வாராவதி மோர்லேக்ஸ் (Morlaix) பிரான்ஸ்.

லக்ஷியங்கள்.— இஞ்முடின் (Ijmudin) (ஹாலந்து).

விரிதுடா, ரயில் வண்டிகள்.–வட பிரான்ஸ் (Northern France), பெல்ஜியம் (Belgium).

ஒரு ஸப்ளைக் கப்பல்.—நார்வே கடற்கரைக் கருகாமையில் (Norway).

இரவில்.—நீர்மூழ்கித் தளம்—லோரியன்ட் (Lorient).—(4 நேசநாட்டு விமானங்கள் திரும்பிவரவில்லை).

**வட ஆபிரிக்கா (North Africa),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான தளங்கள்.—டூனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta).

லக்ஷியங்கள்.— டூனிஸியாவிலுள்ள கேப்ஸு (Gabes)க்கு வடபாகம்.

விமானக்கூடம்.–ஸிஸிலியிலுள்ள மெஸீனு (Messina), ஒஸெல்டியா (Ousseltia) பள்ளத்தாக்கு.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப்போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானத் தளங்கள்.—க்ளௌஸெஸ்டர் முனை, நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா.

மூபோ (Mubo) பிரதேசம்—(நியூகினி).

விமானக்கூடங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua).

விமானக்கூடம்.—ஷ்வீபோ (Shwebo)—(பர்மா).

கிராமங்கள்.—அக்யாப் பிரதேசம்.

**30—1—43.** (சனிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**—(5 நேசநாட்டு விமானங்கள் திரும்பவில்லை).

பகலில்.—பெர்லின் (Berlin)—(இரண்டு தடவை தாக்கப்பட்டது).

எம்டன் (Emden) துறைமுகம்.

இரவில்.—கப்பல் துறைகள்—ஹாம்பர்க்–(ஜெர்மனி).

மற்ற லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany).

விமானச் சண்டைகள்.—பிஸ்கே விரிகுடா (Biscay).

**வட ஆபிரிக்கா (North Africa).**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல் துறைகள்.—பெர்ரிபில்லி (Ferryville) இருப்புப்பாதை.

ரஸ்தாக்களிலுள்ள லக்ஷியங்கள்.—கேப்ஸ் (Gabes)க்கருகாமையில்.

துறைமுகம்.—பிஸர்ட்டா (Bizerta), ரயில், ரஸ்தா போக்குவரத்துகள், டூனிஸியா (Tunisia), ஸிஸிலி (Sicily).

விமானக்கூடம்.–டூனிஸியாவிலுள்ள மெடினைன் (Medenine).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

மூபோ பிரதேசம்.—(நியூ கினி).

விமானக்கூடம், துறைமுகம்.—ராபால் (Rabaul).

ஒரு கப்பல்.—விரிகுடா.

விமானக்கூடம்.—லே (Lae) (நியூ கினி).

ஸப்ளைக் கிடங்கு.—நியூ பிரிடனிலுள்ள ஸலாமுவா (Salamaua), யெக்யானபின் (Yegyanabin), (Kadinbaik), அக்யாப் தீவு (Akyab).

வேவு பார்த்தல்.–மாயூ தீபகற்பம் (Mayu).

கிராமங்கள்.—அக்யாப் பிரதேசம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**25—1—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரை பிரதேசம்.—தென்கிழக்கு இங்கிலாந்து.

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமானச் சண்டை.—பெங்கார்டேன் (1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான தளம்.—கூடால்கனர் (Gudal-

**26—1—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகலில்.—இங்கிலாந்தின் தென்கிழக்கு, தென் மேற்கு பாகத்தில் (1 எதிரி விமானம் சேதமாயிற்று).

**ருஷ்யா (Russia).**

ருஷ்யச் சைனியங்கள்.—முன்னணி வரிசைகளுக்குப் பின்புறம்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானக்கூடம்.–மில்னே குடா (Milnebay) (சேதமில்லை).

விமானக்கூடம்.—மோர்ஸ்பி துறைமுகம்



**27—1—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

நேசதேச விமானதளம்.—ஆல்ஜியர்ஸ் (Algiers).

**தூரக்கிழக்கு (Far East).**

விமானக்கூடம்.—மில்னே (Milne) விரிகுடா.

**28—1—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரை.—பிரிடனிலுள்ள கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமானச் சண்டை.—லிபியாவிலுள்ள ஸுவியாரா (Zuara).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு கப்பல்.—வெஸ்ஸெல் (Wessel) தீவு.

விமானக்கூடம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம் (1 ஜப்பானிய விமானம் சுடப்பட்டது).

**29—1—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனின் (Britian) தென்கிழக்குக் கடற்கரை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

அல்ஜீரியாவிலுள்ள போன் (Bone).

**ருஷ்யா (Russia).**

விமானப் பாதுகாப்பு.—தரையிலுள்ள விமானங்கள் வோரனேஷ் (Voronez) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானதளம்.–கூடால்கனர் (Gudalcanar).

**30—1—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

ஸிடிபௌ இஸிப் (Sidi Bou Izid) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேசக் கப்பல்.—கூடால்கனருக்கருகாமையில்.

**31—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எங்கும் பிரிடனில் (Britain), விமானப் படையெடுப்பு நேரவில்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமானச் சண்டைகள்.—டூனிஸியா (Tunisia).

**தூரக்கிழக்கு (Far East).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

## யுத்தக் குறிப்புகள்.

**பீதி பிடித்த வருஷ விழா.** ஜனவரிமீ 30-ம் தேதி சென்ற சனிக்கிழமையன்று ஹிட்லர் ஆதிக்கத்திற்கு வந்த 10-ம் வருஷ விழா நடைபெற்றது. வழக்கம்போல் தன்னுடைய கக்ஷிக்குத் தானே நேரில் சொற்பொழிவு நடத்துவதை விட்டுவிட்டு ஹிட்லர் தலைகாட்டாமல் ஒரு பிரகடனம் அனுப்பிவைத்தான். இதற்குக் காரணம், பொய்யுரைக்கும் கோயபல்ஸ் வழக்கம்போல் சொல்லுகிறபடி, யுத்த அவசியத்தை முன்னிட்டு கிழக்கு அரங்கத்தில் தலைமை காரியாலயத்தில் ஹிட்லர் தங்கிவிட்டானும். ஆனாலும், ஜெர்மனியில் ஏமாற்றமடைந்த ஜனங்களையும் ஹிட்லரின் ஆதிக்கத்தில் நம்பிக்கையிழந்த அவனுடைய சகாக்களையும் நேரில் காண ஹிட்லர் பயப்பட்டானென்று நினைக்கக்கூடியதாயிருக்கிறது. ஹிட்லருக்குப் பதிலாக பிரசங்கம் செய்ய ஏற்பாடாகியிருந்த தளபதி கோயரிங் கொண்டாட்டம் ஆரம்பிக்க வேண்டிய தருணத்தில் விமானப் பாதுகாப்பு ஒளிக்குள் ஒளிந்திருந்தான். அச்சமயம் பிரிடிஷ் விமானங்கள் அப்பொழுதுதான் பகலில் பெர்லினைத் தாக்க முதன்முதலாக ஆரம்பித்தன. நாஸிக் கக்ஷிக்கு அன்று பிற்பகலில் ஸ்போர்ட் பாலஸ்டில் கோயபல்ஸ் பேச ஆரம்பித்தபொழுதும் பிரிடிஷ் விமானப்படை மறுபடியும் தாக்கியது. குதூஹலமாயிருக்கும் சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாதபடி ஹிட்லரின் பிரகடனமும் அங்கு நடந்த சொற்பொழிவுகளும் பீதியும் அச்சமும் நிறைந்திருந்தன. ஹிட்லரின் பிரகடனம் கிழக்கேயிருந்து வரக்கூடிய அபாயத்தை அறிவித்தது. ஜெர்மன் துருப்புகளை விரட்டிவரும் ருஷ்யப் படையின் பலத்தைக் குறிப்பிட்டது. யுத்தமானது வெற்றி, தோல்வி என்ற முறையைவிட்டு மிஞ்சியவர்கள், அழிந்தவர்கள் என்ற முறைக்கு வந்துவிட்டதென்று ஹிட்லர் அறிவித்தான். கோயரிங் சொன்னதாவது—" ஒருபொழுதும் ருஷ்யாவை

எதிர்க்காதீர்கள் என்று நிபுணர்கள் சொன்னார்கள்." ஆனால் ஹிட்லர் கேட்கவில்லை. ருஷ்யாவைத் தாக்கினான். அதன் விளைவு நன்கு விளங்குகிறது. கோயரிங் சொன்ன பிரகாரம் இதுவரையில் ஜெர்மனிக்கு அனுகூலமாகயிருந்த தெய்வம் அவர்களை இப்பொழுது கைவிட்டு விட்டதென்பது வியக்தமானது.

ஆகிலும் தன்னுடைய சொற்பொழிவில் ஹிட்லரை, அவதார புருஷன் என்றும், ராஜீய, ராணுவ நிபுணரென்றும், ஆழ்ந்த புத்தியுள்ளவனென்றும், விசாலமான மனப்பான்மையுள்ளவனென்றும் கோயரிங் ஸ்தோத்திரம் செய்தான். இவை வாஸ்தவமாகச் சொல்லப்படவில்லை என்றே நினைக்கலாம். சொற்பொழிவின் மற்றொரு பகுதியில் ருஷ்யருடைய வலிமையைச் சரியானபடி மதிக்காததால் ஹிட்லர் மகத்தான தவறுதல் செய்தானென்றும் அவன் சொன்னான். பின்லாந்தில் நடந்த யுத்தத்திற்குக் குறைந்த முஸ்தீப்புகளோடு கூடிய ராணுவத்தை அனுப்பி ருஷ்யா ஹிட்லரை ஏமாற்றிவிட்டது. அவதார புருஷன் ஏமாற்றப்பட்டுவிட்டான். நெபோலியன் தோல்வியுற்ற யுத்தரங்கத்தில் ஜெர்மனியை ஹிட்லர் மாட்டிவிட்டான். கோயரிங்கின் பிரசங்கமும் கபடமான பேச்சுத்தான். ஜெர்மன் யுத்த தந்திரம் பலிக்காமல் போனதற்குத் தான் காரணமில்லையென்றும் ஹிட்லர்தான் பொறுப்பாளியென்றும் காட்ட அறிவிப்பதுபோல் அவன் கபடமாகப் பேசினான்.

வி வி வி வி வி வி வி

**கொடுங்கோல் ஆட்சி.** கொடுங்கோல் மன்னர்களுக்கும் கொடுங்கோல் ஆட்சிக்கும் முடிவு இதுதான். சுற்றிலும் பீதியும் அவநம்பிக்கையும், சொந்த நாட்டில் ஏமாற்றமும், அந்நிய நாடுகளில் அழிவும்தான் கதி. ஜெர்மனியின் அரசாங்கத்திற்குத் தலைமை வகிக்க 10 வருஷத்திற்குமுன் ஹிட்லர் முன்வந்தபொழுதே ஜெர்மனிக்கு துர்தசை ஆரம்பித்துவிட்டது. கொடுமையும், இரக்கமின்மையும், கொடுங்கோலும் ஆரம்பமாயின. ஜாதி உயர்வுப் பயித்தியம் பிடித்தது. யூதர்களைத் தொந்தரவு செய்வது விளையாட்டாயிற்று. போல்ஷிவிஸத்தை எதிர்ப்பது என்ற பாட்டு எங்கும் நிறைந்திருக்கிறது. வெர்ஸெயல்ஸ் உடன்படிக்கை ஒரு யுத்தப் பாட்டாயிருந்தது. ஜெர்மனியில் ஜெர்மன் ரகசியப் போலீஸ் அமுலும் கைதிகள் கொட்டாரமும், அந்நிய நாடுகளைத் தாக்கி உலக ஆதிபத்யம் அடைவதும் கையாளப்பட்டன. ஐரோப்பாவின் சகித்வமும் முட்டாள்தனமும் ஹிட்லருக்கு அதிக சந்தர்ப்பத்தை அளித்தது. ஹிட்லர் பாச்சா 10 வருஷங்கள் பலித்தது. கொடுங்கோலைவிட்டு கொடுமைக்கு ஆரம்பித்த பிறகு ஹிட்லரின் அழிவு வந்துவிட்டது. ருஷ்யாவிலும் ஆபிரிக்கப் பாலைவனங்களிலும் ஹிட்லருக்குத் தோல்வி ஆரம்பித்துவிட்டது. காப்டன் ஆலிவர் லிட்டில்டன் உரைப்பதுபோல் ஹிட்லரைச் சுற்றிலும் எஃகு வளையம் மூன்று அரங்கங்களில் நெருங்கிவருகிறது. அதாவது கிழக்கே ருஷ்யப் படையும், மத்தியக் கிழக்கில் தளகர்த்தர் அலெக்ஸாண்டருடைய படையும், வட ஆபிரிக்காவில் தளகர்த்தர் ஈஸன்ஹோவருடைய படையும் வளைக்கின்றன. இதை வின, ஜிப்ரால்டரிலிருந்து மர்மான்ஸ்க் வரையில் பிரிடிஷ் கடற்படை கடல் முற்றுகை செய்துவருவதுடன் பிரிடிஷ் விமானப் படை ஹிட்லர் ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் பல இடங்களை இடைவிடாது தாக்கிவருகிறது.

வி வி வி வி வி வி வி

**மகத்தான ஏற்பாடுகள்.** ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும் தோல்விகளை நிவர்த்திக்க மகத்தான ஏற்பாடுகள் ஜெர்மனியில் செய்யப்படுகின்றன. செய்வதாகவும் யோசனையிலிருக்கிறது. சேனையைவிட்டு ஓடுகிறவர்களைத் தூக்கிலிடுவதாகவும் யுத்த அரங்கத்தில் சரண் அடைந்தவர்களைக் கொலைக்கு உள்ளாக்கிவிடுவதாகவும் ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. டால்ரெக் பத்திரிகையில், உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் சிலவை ஒரு குடும்பத்தின் வாழ்க்கையையும் பாதிக்கக்கூடுமென்று கோயபல்ஸ் பிரசுரித்திருக்கிறான். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆபத்தை நிவர்த்திக்க எஃகுக் கோட்டைதான் முடியும்.



பெர்லினிலிருந்து கிடைத்த செய்தியிலிருந்து சில்லறை அலுவல்கள் செய்வதற்கும் போர்முனையிலுள்ளவர்களுக்கு ஒத்தாசை செய்வதற்கும் 15 வயது முதலுள்ள எல்லாப் பையன்களையும் சேர்க்கும்படி கட்டாயம் உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். பூரா ஆள் சேமிப்பு உத்தேசத்துடன் பெர்லினிலுள்ள சிற்றுண்டிசாலைகள் மூடப்பட்டு அவைகளிலுள்ள வேலையாட்களை ஆயுத உற்பத்தி சாலைகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஜெர்மனியில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் ஐந்தில் ஒரு பாகம் பிரசுரிக்கப்படமாட்டா. ஏஜெண்டுகளும், வியாபாரிகளும் தங்கள் வாடிக்கைக்காரர்களைப்போய் பார்க்கக்கூடாது. கூட்டுறவு கம்பெனிகளின் மீட்டிங்குகள் நடைபெறக்கூடாது. யுத்தத்துக்கு லாயக்கில்லாத எல்லா தொழில் ஸ்தாபனங்களும் மூடப்பட்டுவிடும்.

வி வி வி வி வி வி வி

**சமாதான யோசனையா?** கூடிய சீக்கிரம் சமாதானம் செய்துகொள்ள ஹிட்லர் ஏற்பாடு ஆரம்பிப்பானென்றும் தன்னுடைய சகாக்களான இதாலியையும் ஜப்பானையும் கைவிட்டுவிட்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் முயலுவானென்றும் தோன்றுகிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கஸாபிளாங்கா மீட்டிங்கை நிபந்தனையற்ற சரணாகதி மஹாநாடு என்று முன் கூடி கூறியதற்கு இது ஒரு காரணமாகும். சமாதான விஷயமாய் நேச நாடுகளின் மனப்பான்மையை அறிய ஜெர்மன் ஏஜெண்டுகள் முயலுகிறார்கள் என்ற வதந்திகளைக்கேட்டு ஜப்பானியர்கள் அச்சமடைவதற்கும் ஹிட்லரின் சமாதான முயற்சிதான் காரணம். நியூஸ் கிரானிகிள் பத்திரிகையில் இதற்காகத்தான் ரூஸ்வெல்ட்—சர்ச்சில் மீட்டிங் நடந்தபொழுது அச்சு நாடுகளின் பிரதிநிதியாக ஜெனரல் பிராங்கோ கஸாபிளாங்காவுக்கு வந்திருந்தானென்று வதந்தி உலாவுகிறதென்றும் வெளியிடப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**முஸோலினியின் கிலி.** முஸோலினிக்கும் கிலிபிடித்து விட்டது. கஸாபிளாங்காவில் இருந்தபொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு எட்டிய வதந்திகளில் ஒன்று எம்மானுவல் அரசர் இதாலியின் சரணாகதியை ஏற்பாடு செய்ய வந்திருக்கிறானென்று கிடைத்தது. முஸோலினி பிரசங்கம் செய்யும் சமயத்தில் பிரிடிஷ் விமானப்படை தாக்கக்கூடாதென்ற எண்ணத்துடன் பாஸிட் யுவர்களுக்கு பிப்ரவரி முதல் தேதியன்று மத்திய இதாலியின் ஒரு பிரதேசத்தில் சொற்பொழிவு அவன் நிகழ்த்தினான். லிபியாவை நேசநாடுகள் ஆக்கிரமித்ததைக் கேட்டு இதாலிய மக்கள் அமைதியுடன் இருந்தார்களென்றும் ஆயுதம் கைபிடிக்க வலுவுள்ளவரையில் இதாலியர்கள் படியப்போவதில்லையென்றும் அவன் கூறினான். ரோம் தேசத்தில் பிறந்தவனென்று மார் தட்டிக்கொள்ளும் ஒருவன் இம்மாதிரி சொல்லுவது கேவலமானது.

முஸோலினி வியாதியஸ்தர்களையும் 63 வயதுக்கு மேற்பட்டவர்களையும் தவிர மற்றெல்லோரையும் திரட்ட ஆரம்பித்துவிட்டான். டிராமாக் கொட்டகைகளையும் சிற்றுண்டிசாலைகளையும் மூட ஆரம்பித்தாகிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**நடுநிலைமை நாடுகள்.** ஐரோப்பாவில் பாக்கியுள்ள நடுநிலைமை நாடுகள் நேசநாடுகளோடாவது அல்லது அச்சு நாடுகளோடாவது சேர்ந்துகொள்ள வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. ஸ்பெயின் தேசம் கானரி, பாலியாரிக் தீவுகளைப்பற்றியும் தன் தாய் நாட்டைப்பற்றியும் தீர்மானிக்க வேண்டும். துருக்கியானது டார்டனல்லைப் பற்றியும், ஸ்வீடன் ஜெர்மனியுடன் சேருவதா அல்லது ருஷ்யாவுடன் சேருவதா என்பதையும் நிர்ணயிக்கவேண்டும்.

**ஹிட்லர் ராஜிநாமாச் செய்வாரா?** சில நாட்களாக வெர்மாட்டின் தலைமையை விட்டுப்போட்டு ஹிட்லர் போய்விடப் போவதாக வதந்திகள் உலாவுகின்றன. அப்படி அவன் செய்தால் தோல்வியை அவன் ஒப்புக்கொண்டதாகவும் அவனுடைய ஆதிக்கத்திற்கு அழிவு ஏற்பட ஆரம்பித்ததாகவும் ஆகும்.

வி வி வி வி வி வி வி

**கஸாபிளாங்காவின் முக்யத்வம்.** புது உலகத்திலுள்ள ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பழைய உலகத்திற்கு இதுவரையில்லாமல் சரித்திரத்திலேயே முதன் முதலாக வந்த காரணத்திலிருந்து ஹிட்லரின் முடிவை அறிவிக்கிறதென்று நினைக்கவேண்டியிருக்கிறது. கஸாபிளாங்கா மீட்டிங்குக்குப் பிறகு இது நிச்சயம் என்று சொல்லலாம். ஸைப்ரஸிலுள்ள நிகோஷியாவிலிருந்து மிஸ்டர் சர்ச்சில் கர்ஜனை செய்வதாவது :—'உலக சரித்திரத்திலேயே இல்லாத வண்ணம், சங்கியையிலும், தளவாட உற்பத்தியிலும், ஐச்வர்ய பலத்திலும், லக்ஷியத்திலும், சகோதரபாவத்திலும் சோர்வடையாத தீர்மானத்திலும் நேசநாடுகள் வலுவாக ஒன்று பட்டுவிட்டார்களென்று நான் நிச்சயமாய்க் கூறுகிறேன். அவர்கள் வலிமை அடைந்துவிட்டார்கள். மேல்மேலும் வலுவடைந்து உலகத்தை நாசமாக்கி அழித்து வரும் தேசங்களை நிபந்தனையில்லாத சரணாகதி அடையும்படி செய்துவிடுவோம்'.

வி வி வி வி வி வி வி

**அடானா,** கஸாபிளாங்கா மகா நாட்டின் தொடர்பாக அடானாவில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. கஸாபிளாங்காவில் விமானம் ஏறி, கெய்ரோவில் தங்கிய பிறகு சர்ச்சில் ஜனவரி 30, 31 தேதிகளில் துருக்கிக்குச் சென்று துருக்கி அரசாங்கத்தாரால் வரவேற்கப்பட்டு பிறகு அடானாவில் ஜனாதிபதி இனோனுவுடனும் மற்ற பரிவாரங்களுடனும் சம்பாஷித்தார். ஒரு முக்கியமான ஒப்பந்தமும் ஏற்பட்டது. துருக்கியின் தற்காப்பு முறைகளை பலப்படுத்த பிரிடனும் ஐக்கிய நாடுகளும் பொருளாதார முறையில் எவ்வாறு உதவக்கூடுமென்றும் முடிவும் செய்யப்பட்டது. யுத்தத்துக்குப் பின் ஏற்படக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றியும் சம்பாஷணை நடந்தது.

அநேக முறைகளில் அடானா மகாநாடு முக்கியமானது. முதலாவதாக கிரீஸ் வீழ்த்தப்பட்டு மத்தியக் கிழக்குக்கு ஆபத்து ஏற்பட்டபொழுதும், ஜெர்மனியின் மகோன்னத தசையிலும் துருக்கி நடுநிலைமை வகித்ததென்பதை பிரிடன் நன்கு மதித்ததென்பது. இரண்டாவது, அச்சு நாடுகளின் தொந்தரவில்லாமல் மத்திய தரைக்கடல் பிரதேசம் ஆகிவிட்டதால் அடிப்பக்கிலிருந்து எதிரியைத் தாக்க சௌகரியம் ஏற்பட்டுவிட்டது. ருஷ்யா—துருக்கி சம்பந்தங்கள் அபிவிருத்தியடைந்துவிட்டன. துருக்கியின் தற்காப்பை பலப்படுத்த ஒத்தாசை வேண்டுமென்ற சமயம் கிட்டிவிட்டது. காகஸஸ், எகிப்து இந்த யுத்தங்களில் தோல்வியுற்ற ஹிட்லர் துருக்கி வழியாகச் சென்று பாரஸீகத்திலுள்ள எண்ணெய் பிரதேசங்களைப் பிடிக்க முயற்சிக்கக் கூடும். யுத்தத்துக்குப் பிறகு பால்கன் நாடுகளை புனருத்தாரணம் செய்யும் விஷயத்திலும் துருக்கி விசேஷப் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டி வரும்.

வி வி வி வி வி வி வி

**வட ஆபிரிக்கா நிகழ்சிகள்.** வட ஆபிரிக்காவில் கஸாபிளாங்காவில் கிராடுக்கும் டிகாலுக்கும் நடந்த சம்பாஷணையில் அவர்களிடையேயுள்ள ராஜீய சிக்கல்கள் தீர்ந்துவிட்டன என்று நாம் நினைந்த பிரகாரம் இருக்கவில்லை. ராணுவ ஏற்பாடு சம்பந்தமாக ஒற்றுமை ஏற்பட்டபோதிலும் ராஜீய விஷயத்தில் ஒரு மத்திய சர்க்கார் வேண்டுமென்றும், ஜனநாயக ஆக்ஷிவேண்டுமென்றும், விஷி சார்பாகயிருப்பவர்களைத் தொலைக்க வேண்டுமென்று டிகால் ஒருபக்கம் சொல்ல, விஷி ஸர்க்காரின் கொள்கைகள் ஊறின கிராட் நடவடிக்கைகள் நடத்த சிரமம் ஏற்படுமென்று நினைக்கிறான்.



டிகாலிடமுள்ள துருப்புகளின் சங்கியை 15,000 அல்லது 20,000 இருக்குமென்று மதித்து அதை தன்னுடைய 3,00,000 பேர்களோடு சேர்த்துக் கொள்ள கிராட் மறுக்கிறான். டிகால் தன்னுடைய சேனை 1 லக்ஷம் கொண்டதென்கிறான். ஆகையால் சிக்கல் நீடித்து வருகிறது. அவர்களிருவரும் சந்தித்துப் பேசினார்களென்பது பாராட்டத்தக்கது. ஆகிலும் முதல் சந்திப்பிலிருந்து அதிகம் எதிர்பார்ப்பதற்கில்லை. யந்திரப்பயிற்சி, ராணுவம், அர்த்த சம்பந்தம் இவைகளைப் பற்றி இவர்களிடையே உள்ள அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ள பொதுவான கமிட்டிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்பது கவனிக்கத்தக்கது. ஜெனரல் கிராடும் டிகாலும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டால்தான் ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்களுக்கு குத்தகைக் கடன் முறைகளில் மிகுதியான ஒத்தாசை செய்வதாக நேசநாடுகள் சொல்லியிருப்பதும் முக்கியமானது.

வி வி வி வி வி வி வி

**ரூஸ்வெல்ட்-வார்காஸ் சந்திப்பு.** சர்ச்சில் விமான ஏறி கிழக்கே சென்று கெயிரோவில் தங்கி, ஜனாதிபதி இனோனுவைப் பார்க்கச்சென்றபொழுது, ஜனாதிபதி ரூஸ்வெல்ட் லைபீரியா சென்று அங்கிருந்து பிரஸீலின் கிழக்குக்கரையிலுள்ள நேடாலில் பிரஸீல் ஜனாதிபதியான வார்காஸைக்கண்டார். அவரும் பிரஸீலுடன் ஒத்துழைப்பு விஷயமாக ஒரு முடிவு செய்துகொண்டார். இரு ஜனாதிபதிகளுமாகச் சேர்ந்து ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்தைப் பத்திரம் செய்யவும், ஆபிரிக்காவின் மேற்குக்கரையையும் டாக்காரையும் மறுபடியும், எக்காரணத்தை முன்னிட்டும் முற்றுகை போடக்கூடிய வசதியுள்ளதும், அமெரிக்க நாடுகள் பேரில் படையெடுப்புக்குச் சாதகமானதுமான தளமாகவோ உபயோகப்படுத்தாத வண்ணம் சாச்வதமான ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும் அவர்கள் யோசித்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யாவின் நிலைமை.** ஹிட்லரின் துருப்புகள் உதைபட்டு சென்ற கோடையிலிருந்த தளங்களுக்குப் பின்வாங்குகின்றனவென்று சொல்லலாம். போர்முனையைச் சீர்படுத்தி புதிய யுத்தமுனை ஏற்படுத்துவது என்று ஜெர்மனி சொல்வது இதுதான். டானட்ஸ் நதிப் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளை ருஷ்யர்கள் பாதி வளைத்து விட்டார்கள். ருஷ்யரின் பீரங்கி சப்தங்கள் ராஸ்டாவில் ஒலிக்கின்றன. டான், டானட்ஸ் நதிகளை ருஷ்யர் கடந்து விட்டார்கள். ஹிட்லருக்குக் யூபாவிலிருந்து கிடைக்கும் விளைபொருள்கள் போய்விட்டன. மெய்காப் விழுந்து விட்டதால் ருஷ்யாவின் மண்ணெண்ணெய் போய்விட்டது. டிக்ரெவெட்ஸ்க் பிடிபட்டபொழுது காகஸிலுள்ள ஜெர்மனியின் பிடிப்பு அகன்று விட்டது.

வி வி வி வி வி வி வி

**மாரத் பிரதேசம்.** மாரத் அரண் வந்த பிறகு ரோமல் என்ன செய்வானென்று யோசிக்க வேண்டியிருக்கிறது. இங்கே நின்று எதிர்ப்பானா, வரப்போகும் வாரங்களில் டூனிஸ், பிஸர்ட்டா பிரதேசங்களில் நடப்பவைகளை யொட்டி இவை நடக்கும். மாரத் பிரதேசத்தில் வலுவான கோட்டைகளும், தற்காப்பு ஸ்தலங்களும், ராணுவ ஸ்தலங்களும் கேப்ஸுக்குத் தெற்கேயுள்ள கடற்கரையிலிருந்து மாரத் நகர் வழியாக உள்நாட்டுக்குள் 30 மைல் வரையிருக்கின்றன. லிபியாவிலிருந்து டூனிஸியாவைப் படையெடுக்கும் சேனை இதன் வழியாகத்தான் செல்ல வேண்டும். இந்த அரணுக்குப் பிறகு மெடினைன் என்ற விமான தளமிருக்கிறது. இங்கே வான் ஆர்னிம் என்னும் சேனாபதி 75,000 பேர்களடங்கிய ஒரு சேனையை வைத்துக் கொண்டிருக்கிறான். இத்துடன் ரோமலின் 50,000 படையும் சேரக் கூடும். டிரிபோலிடானியாவிலிருந்து டூனிஸ் வரையிலுள்ள கடற்கரை சமவெளியானது வான் ஆர்னிம் வசமிருக்கிறது. நேசதேசத் துருப்புகள் மேற்கேயுள்ள மலைப் பிரதேசத்திலிருக்கின்றன. இரு சேனைகளுக்கும் மத்தியிலுள்ள பள்ளத்தாக்குகள் இதுவரை ஜெர்மானியர் வசமிருக்கின்றன. சமீபத்தில் பின்வாங்கும்

ரோமலின் மார்க்கத்திலுள்ள பிரெஞ்சுத் துருப்புகளை பாண்ட் டு பாஸுக்கும் கேர்வானுக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்திலிருந்து அப்புறப்படுத்த ஜெர்மானியர்கள் முயற்சித்தது பலிக்கவில்லை. பின்வாங்கும் ரோமலின் படைகளுக்குப் புதிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கப் படைகள் மாரத் அரணுக்கு வடமேற்கே 75 மைலிலுள்ளதும் கடற்கரையிலுள்ள ஸ்பாக்ஸுக்கு 50 மைலிலும் உள்ள மாகனஸிக்கு முன்னேறிவிட்டன. இரு அச்சுப்படைகளும் ஒன்றுகூட வேண்டுமானால் நேசத்துருப்புகள் கடற்கரையை அடையாமல் எப்பாடுபட்டும் செய்யவேண்டும். ஹிட்லரின் யோசனையிலிருப்பது இப்பொழுது இந்தப் பிரச்னைதான். நேசநாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் எட்டாம் படையும் ஒண்ணுவது படையும் சேர்ந்து ரொம்பவும் கஷ்டப்பட்டு சண்டைசெய்ய வேண்டும். ஸ்தல ஸந்நிவேசம் சாதகமாயில்லை. இன்னும் ஒரு மாசத்திற்கு அதிக மழை பெய்வதால் யுத்தம் தடைபடும்.

வி வி வி வி வி வி வி

**பர்மா யுத்தம்.** பர்மாவில் போர் தொடுத்திருக்கும் பிரிடிஷ், இந்தியப் படைகளுடன் இந்தியக் கடற்படை ஒத்து வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டதென்பது பெருமை பாராட்டத்தக்கது. கடற்கரையின் ஆதிக்கம் சத்ருவிடமில்லை என்பது வெளியாகிறது. ஒரு சமயம் ஜப்பானியத் துருப்புகளை ஏற்றிச்செல்லும் ஒரு படகை இந்தியக் கடற்படையைச் சேர்ந்த ஒரு கப்பல் மூழ்கடித்துவிட்டது. ஜப்பானிய எதிர்ப்பு தென் பஸிபிக்கிலிருப்பதுபோல் சளைக்காமலும், உபயோகமற்றதாயும் விட்டுவிடுமுன் ஒவ்வொரு சின்ன இடங்களில் எதிர்ப்பதுமாக மாறிவிட்டது. பர்மாவில் பெரிய தாக்குதலை ஆரம்பிக்க வங்காள விரிகுடாவில் ஆதிக்கம் அவசியமென்றாலும் ஓரங்களில் எதிரியை வதைப்பது என்பது விசேஷம்தான். இந்த யுத்தத்தின் திருப்திகரமான பாகம் யாதெனில் நமது விமானப்படையின் மேன்மைதான். அது சத்துருவின் விமான நிலயங்களையும் கப்பல் கட்டும் நிலயங்களையும் இருப்புப் பாதைகளையும் தண்ணீர் மார்க்கங்களையும் தகர்த்து வருகின்றது. இதற்குப் பதிலாக ஜப்பானியர் செய்துவரும் பதில் தாக்குதல்கள் அற்பமானவை.

வி வி வி வி வி வி வி

**சேமிப்பைத் தடுக்க புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் செய்திருக்கும் நடவடிக்கைகள்.** போனவார பத்திரிகையில் இந்நாட்டின் உணவுப் பொருள் பிரச்னையின் சிரமங்களைப்பற்றி சர்ச்சை செய்திருந்தது. இதை நிவர்த்திக்க மத்திய அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டிருக்கும் ஏற்பாடுகள், அதாவது ஏற்றுமதி, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவது, வெகு நாட்களுக்குப் பிறகு உபயோகமுள்ளதென்று கருதினாலும், ஆங்காங்குள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுமானால், உடன் காலத்திலேயே அதிகமாக சேமித்துவைப்பவர்களையும், அதிக லாபம் சம்பாதிப்பவர்களையும் அடக்கி ஆளுவது அவசியமென்றும் சொல்லப்பட்டது. ஆகையால் ரகசியமான கிட்டங்கிகள் இருக்குமிடத்தையும், அதிக லாபம் சம்பாதிப்பவர்களையும் கண்டுபிடிக்கத் தீவ்ரமான ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொன்னோம். இவ்விஷயத்தில் பொதுப்படையான அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் 1942-ம் வருஷம், ஆகஸ்டு மாதம் முதல்கொண்டே செய்யப்பட்டுவரும் ஏற்பாடுகளின் உபயோகத்தையும், உள்நாட்டு அனுபவத்தையும் அனுசரித்துத்தான் எழுதியிருக்கிறோம்.

இதுவிஷயமாக புதுக்கோட்டை ஸமஸ்தானம் முற்போக்காகவே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஒரு ரெகுலேஷன்படி உணவுப் பொருள்கள், ஊறுகாய் சாமான்கள், எண்ணெய் சாமான்கள், பின்னும் முக்கியமான பொருள்கள் அதிகமாகச் சேமித்து வைப்பது குற்றமாகச் செய்யப்பட்டு, அதற்கு அபராதமும், காவல் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கின்றனர். "அதிகம்" என்பது வியாபாரிகள் சம்பந்தப்பட்ட மட்டில் மூன்று மாத விற்பனைக்குத்



தேவையான அளவுக்கு மேல் கட்டி வைப்பதென்றும், மற்றவர்கள் சம்பந்தமாக குடும்ப உபயோகத்திற்கு ஒரு வருஷத்திற்கு வேண்டியதற்கு மேல் சேமித்தல் என்றும் பொருள்படும். வேறுமென்று சாமான்களை விற்காதவர்களும், விற்க மறுக்கிற வியாபாரிகளும், சரியான விலைக்கு விற்காதவர்களும் இந்த வகுப்பில் சேர்ந்தவர்கள். சேமித்து வைப்பவர்களைப்போல் தண்டனைக்கு உள்ளாவார்கள். ஸமஸ்தான அதிகார வர்க்கத்தாரின் சிலருக்கு, சந்தேகமுள்ள சேமிப்பு ஸ்தலங்களுக்குள் புகுறவும், அவைகளை உடைக்கவும், அங்கிருக்கும் பொருள்களைக் கைப்பற்றி பகிரங்கமாய் ஏலம்போட்டு, அதன் வருமானத்தை ஸ்வான்தாரிடம் ஒப்புவிக்கவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான நடவடிக்கைகள் உணவுப்பொருள் கஷ்டங்களை நிவர்த்திக்குமென்று நம்புகிறோம்.

---

# வானத்தில் ஒளி வீசுகிறது.

---

(மிஸ்டர் சர்ச்சில்).

கெய்ரோ, பிப்ரவரி 2.

இனிமேல் வருங்காலத்தில் ஐரோப்பா பக்கத்தில் படையெடுப்பு பயமில்லாமல் எகிப்து விடுவிக்கப்பட்டது.

இதற்குமுன் நடந்த சந்திப்பில் கெய்ரோ பாதுகாக்கப்படுமென்றும், எகிப்துக்கு எதிரிகளின் பயமுறுத்தல்கள் நேராமல் செய்யப்படுமென்றும், இந்த நாட்டிற்கும் பிரிடனுக்கும் தொண்டுதொட்டு இருந்து வரும் உடன்படிக்கைகளை பிரிடன் காக்குமென்றும் இம்மாபெரும் நகரில் வசிப்போருக்கு தீங்குகளேற்படாமல் பிரிடன் வெற்றிகரமாக முயற்சிக்குமென்றும் சொன்னேன்.

எகிப்து, லிபியா முதலிய இடங்களிலிருந்து ஓடுமிடங்களுக்கெல்லாம் ரோமலின் படைகளை பிரிடிஷ் 8-ம்படை விரட்டிச் செல்லும்.

இதற்கிடையில் வடக்கிலிருந்து ஒருக்கால் எதிரி தாக்குவதற்கான நிலைமை இருந்ததில் வெற்றி சின்னத்தோடு கூடியிருக்கும் ருஷ்யப் படைகள் நிலைமையை மாற்றிவிட்டன. படையெடுப்பு பயமில்லாமல் செய்துவிட்டன. பெர்ஸியா, இராக் முதலிய இடங்களில் ஜெனரல் ஸர் ஹென்ரி மெயிட்லாண்டு வில்ஸன் என்பவரின் கீழ் பிரிடிஷ் 10-வது படை அமைக்கப்பட்டது. ஒருக்கால் எதிரி இந்தப் பக்கம் திரும்புவானோ என்று எதிர் பார்த்தே அதைத் தடுக்க இப்படை தயாரிக்கப்பட்டது.

ஆனால் இவ்வித பயங்களெல்லாம் ஏற்படாமல் பெரிய வீரனான ஸ்டாலின் தலைமையில் போரிட்டு வரும் ருஷ்யப்படை செய்துவிட்டன. ஆகவே இப் பேற்பட்ட தலைவனின் புகழ் ருஷ்யச் சரித்திரத்திலேயே ஸ்தாயியாகி பெரும்.

அடுத்து வரும் சில மாதங்களிலோ, சில வாரங்களிலோ பெரிய சண்டைகள் நேரலாமென்று நாம் அவசியம் எதிர்பார்க்கவேண்டும். ஆனால் அவைகளின் முடிவு மாத்திரம் எனக்கு நிச்சயம் தெரியும். அதாவது நேசநாடுகளுக்குத்தான் வெற்றியேற்படுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கெய்ரோவிலிருந்து ஜயபேரிகையுடன் முன்னேறிச் செல்லும் பிரிடிஷ், படை ஆபிரிக்காவிலிருந்து ஒவ்வொரு இதாலியரையும், ஜெர்மானியரையும் துரத்திவிட்டு இவ்வித வெற்றியைப் பெரும்.

# நாவை அடக்கவேண்டும்.

## பொய் வதந்திகளுக்குச் செவிகொடாதீர்கள்.

### 29—1—43-ல் புதுக்கோட்டை மகா-ா-ா-மகாராஜா அவர்கள் கல்லூரி விழா தினத்தன்று ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அட்மினிஸ்ட்ரேட்டர் அவர்கள் விடுத்த செய்தி.

சீமாட்டிகளே, சீமான்களே!

உங்களுடைய விருப்பத்தின்படி உங்களுக்கு ஒரு செய்தி அனுப்ப நான் முன் வந்திருக்கிறேன்.

2. இதற்குமுன் இம்மாதிரியான பல விழாக்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. ஆகையால் இக்கொண்டாட்டத்தின் உபயோகத்தையும், நோக்கங்களையும்பற்றி நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. ஏனென்றால் அவைகள் யாவும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம்தான் என்பதில் சந்தேகமில்லை.

3. இந்த சந்தர்ப்பத்தில் இங்கு குழுமியிருக்கும் இளைஞர்களுக்கு சில புத்திமதிகளைச் சொல்ல விரும்புகிறேன். அவைகள் தற்சமயத்தில், அதாவது, இந்த யுத்த காலத்தில் பயன்தரக்கூடியவிதமாக இருக்கும். முதன் முதலாக நீங்கள் யாவரும் நாவடக்கத்துடன் இருக்கவேண்டும். அப்பொழுது நிதானத்துடன் நடந்துகொள்ளும் சக்தி உங்களுக்கு ஏற்படும். அதிலிருந்து பிறரையும் சரிவர நடந்துகொள்ளும்படி செய்ய சக்தி உங்களுக்கு ஏற்படும். ஆதாரமற்ற பொய் வதந்திகளைக் கேட்காதீர்கள். அவைகளைப் பரவச்செய்யாதீர்கள். ஒருவருக்கொருவர் வதந்திகளைப்பற்றி பேசிக்கொள்வதில் நமக்குக் கெடுதல் ஏற்படாது என்று நமக்கு முதலெடுப்பில் தோன்றலாம். அவை தேசத்திற்கே பெருத்த அனர்த்தத்தை விளைவிக்கும். தேசத்தின் நன்மைக்காக சேவை புரிவதே உங்களது முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டும்.

4. இவ்விழா வெற்றிகரமாக நடைபெறுவதற்கு நான் பிரார்த்திக்கிறேன்.

---

## மாறுமுகம்.

"சிநேகிதன் என்று வேஷம் போடுகிறவனுடன் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும்" என்ற தலையங்கத்துடன் ஒரு நோட்டீஸ் எங்கும் காணப்படுகிறது. இதில் சிரிப்பு முகத்துடன் ஒரு கோரமான ஜப்பானியனின் முகம் வரையப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்து சிலர் பிரசாரத்திற்காக வரையப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். உண்மையில் அது பிரசாரத்திற்காக வரையப்படாததால் அவர்கள் சொல்லுவதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. பிரசாரம் என்ற பதத்திற்கு ஒரு உண்மையான ஸ்டேட்மெண்டையோ அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்துவதுஎன்றுதான் பொருள். தண்ணீர் குழாயில் அழுக்கு ஜலம், சுத்த ஜலம் எதை ஊற்றினாலும் கொள்ளுவதைப்போல பொய் பிரசாரம், உண்மைப் பிரசாரம் என்று இருவகையாகவும் ஏற்படும். நாம் முன்னால் குறிப்பிட்ட நோட்டீஸை உண்மைப் பிரசாரத்திற்கு திருஷ்டாந்தமாயும், ஜப்பான் "பொது க்ஷேமப் பிராந்தியம்" என்று சொல்லிவருவதைப் பொய் பிரசாரத்திற்குத் திருஷ்டாந்தமாயும் வைத்துக்கொள்ளலாம். சமீபத்தில் ரெங்கூனிலிருந்து செய்யப்பட்ட ஒலிபரப்பை கவனிப்போம். "பர்மாவிற்கு ஸ்வதந்திரமளிப்பதாக டோஜோ



மூலமாக ஜப்பான் அறிவித்திருக்கிறது. ஆனால் பொது க்ஷேம பிராந்தியத்திற்குள் பர்மா சேர்ந்துகொள்ளவேண்டும். இது வீண் உறுதி மொழியல்ல. இந்த விஷயம் உலகம் பூராவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது". பிரிடிஷ், நேசப்படைகள் பர்மாவை விட்டு விலகியதும் பர்மாவிற்கு ஸ்வதந்திரம் அளிப்பதாக ஜப்பானியப் படைகள் பர்மாவினுள் புகுமுன் சொன்னார்கள். ஆனால் இந்த உறுதி கபடத்துடன் கொடுக்கப்பட்டதேயாகும். ஏனென்றால் பர்மாவைப் பிடித்ததும் நவம்பர் 27ல் ஜப்பான் தனது உட்கருத்தை வெளிப்படுத்திவிட்டது. இப்போது அவர்கள் சொல்லுவதே வேறு. "பர்மா ஸ்வதந்திரம் அடையும். ஆனால் தங்களுடைய நாடு எப்படி அரசாளப்படும் என்ற கேள்வியை பர்மியர்களே கேட்டுக் கொள்ளவேண்டும்".

அதாவது தங்களுடைய நாட்டை நன்றாகப் பாதுகாத்துக்கொண்ட பிறகு ஸ்வதந்திரம் பெற முடியும். எதிரியிடமிருந்து மாத்திரம் பாதுகாத்துக்கொண்டால் மட்டில் போதாது. யுத்தத்தில் எதிரிமுன் தோன்றி முதலில் அவனைத் தாக்கவேண்டும். அதற்காகப் போதுமான மனிதர்களும் ஆயுதங்களும் தேவை. பர்மிய ஜனத்தொகையோ மிகக்கொஞ்சமானது. இதற்காக சிறுவர்கள் முதற்கொண்டே சண்டையில் ஈடுபடவேண்டும். ஆகவே சைனியத்தில் சேர பர்மியர்கள் ஆசைப்படாவிட்டால் பர்மா ஸ்வதந்திரம் பெறலாயக்கில்லை"! என்று டோஜோ சொல்லுகிறான். இதிலிருந்து கிடைப்பது யாதெனில் ஜப்பானுடைய நன்மைக்காகப் புரியப்படும் சண்டைகளில் பர்மியர்கள் சேரவேண்டுமென்பதே. இது பிரசாரமில்லையா. ஜப்பானியச் சைனியத்தின் 70-வது வருஷக்கொண்டாட்டத்தின்போது டோஜோ சொன்னதை கவனிப்போம். 'நாம் யாவரும் நமது சக்ரவர்த்தியின் சிப்பாய்களாவோம். அகில ஆசியாவைப் பிடித்து யாவரையும் சைனியத்தில் சேர்க்கவேண்டும்'. யாவரையும் சைனியத்தில் சேர்ப்பது எதற்கென்றால் ஜப்பானுடைய நன்மையை உத்தேசித்துப் புரியப்படும் சண்டைகளில் ஈடுபடத்தான். இப்படித்தான் ஜப்பானுடைய பிரசாரம் இருந்துவருகிறது. சிநேகிதன் என்று சொல்லிக்கொண்டு வினையைச்செய்துவருகிறது. இவ்விஷயத்தை நாம் அறிந்துகொண்டு எதிரிப் பிரசாரத்திற்கு உட்படாமலிருந்துவிடுவோம்.

---

## ஐரோப்பிய வீரர்களின் அந்நிய நாட்டுவாசம்.

(ஜார்ஜ் ரோபஸ்).

சரித்திரத்திலேயே முதல் தடவையாக, அங்கீகாரம் பெற்ற 8 நேசநாடுகள் தங்களுடைய தலைமை காரியாலயத்தை இங்கிலாந்தில் வைத்திருக்கின்றன. இவை போலந்து, நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், ஸெகோஸ்லாவாகியா, லக்ஸம்பர்க், யூகோஸ்லாவியா, கிரீஸ் முதலியன.

இந்த யுத்தத்தில் ஒரு விசேஷ சம்பவம் யாதெனில் இந்த நாடுகள் எதிரி வசமானாலும், அவைகளின் வீரர்கள் போர் செய்து வருவதுதான். நேசநாட்டு யுத்த முயற்சிக்கு இவர்கள் செய்துவரும் உதவி மிக அதிகம். இந்த யுத்தம் முடிந்த பிறகுதான் அந்த உதவியின் முக்கியத்வம் பூர்ணமாக அறியப்படும்.

இந்த 8 நாடுகளும் சேர்ந்து 3,00,000 பேர்களை சண்டைக்குத் திரட்டியனுப்பியிருக்கின்றன. இவ்வளவில் போலந்துதான் முதலில் படையெடுக்கப்பட்ட நாடாகும். இருந்தாலும் ருஷ்யா, இரான், எகிப்து, இங்கிலாந்து முதலிய இடங்களில் 1,50,000 பேர் போரில் கலந்து வருகின்றனர். இந்தப்படை நேசநாட்டுப்படைகளுக்குள் ஐந்தாவதாகப் பெரிய படையாகும்.

### போரிடும் படைகள்.

எதிரி ஆக்கிரமித்த ஐரோப்பாவிலிருந்து கிரீஸ், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, யூகோஸ்லாவியா முதலிய நாடுகளிலிருந்து ரெக்ரூட்டுகள் சிறு படகுகளில் ஏராளமாக வெளியேறி அந்தந்த படைகளுடன் சேர்ந்துகொள்ளுகிறார்கள். டிகாலின் கீழுள்ள போரிடும் பிரெஞ்சுப் படை ஒரு தனிப்பட்ட அரசாங்கமாகக் கருதப்படாத போயினும் மத்தியக் கிழக்கில் ஈடுபட்டன. எதியோ

பியப் போரில் பிரெஞ்சு ஸாபிபடையும், அன்னியர் படையும், சாம்ராஜ்யப் படையும் மத்திய ஆபிரிக்காவில் 1,000 மைல் முன்னேறி முஸோலினியின் கிழக்கு நாடுகளைப் பிடித்தன.

பிரிடிஷ் விமானப்படையில் 10,000 போலந்தினரும், 1,000 ஸெக்கர்களும், 800 கிரேக்கர்களும் சேர்ந்திருக்கின்றன. போலந்து கோஸ்குயிஸ்கோ விமானப் படை பகல்காலத்தாக்குதலில் மற்ற பிரிடிஷ் விமானப்படைகளைப்போல் பல நாடுகளைப் பிடித்துவந்தது. இதேவிதமாக போலிஷ், ஸெக்கர் முதலியோர் டியப் கமாண்டோ தாக்குதலின்போது இங்கிலீஷ் கால்வாயில் உதவி செய்து வந்தனர்.

ஒரு சண்டைக் கப்பல் பல க்ரூயிஸர்கள், நாசகாரிகள், கார்வெட்டி சிறு கப்பல்கள், சுரங்கவாரிகள் முதலியவைகளில் 110 கொண்ட நார்வே, பிரெஞ்சுக் கடற்படையும் சண்டை செய்துவருகிறது. டச்சுக்கிழக்கிந்தியத் தீவிலிருந்து தப்பிவந்த டச்சுக் கப்பல்களும், பல போலந்து நாசகாரிகளும் ஈடுபட்டிருக்கின்றன.

### யுத்தத்திற்குப்பின்புள்ள திட்டங்கள்.

இவ்விதமாக நாட்டை இழந்த அரசாங்கங்களுக்கு ஐரோப்பாவில் சொந்தமான இடமொன்றுமில்லாதபோயினும் பிடித்த இடங்களைப் வசப்படுத்தமுடியாதபடி அச்சு நாட்டினரைத் தடுத்து வருகின்றனர். போலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா, ஹாலந்து முதலிய இடங்களில் அச்சுநாட்டுக்குட்பட்டதாக ஒரு ஆட்சியை அமைக்க விடாதபடிக்கும் செய்துவருகின்றனர். நார்வேயில் குவிஸ்லிங் ஆட்சி ஏற்பட்டிருந்தாலும் ஹாகான் மன்னருக்குத்தான் ஜனங்கள் விஸ்வாசத்தைக் காண்பிக்கின்றனர். இதை வெளிப்படையாகத் தெரிவித்தும் வந்திருக்கின்றனர்.

யுத்தத்திற்குப் பின்னர் ஐரோப்பாவை எப்படி அமைப்பதென்பதைப்பற்றி இந்த நாடுகள் கலந்து யோசித்தும் வருகின்றன.

## கடலாதிக்கத்தின் பெருமை.

70 சத விகிதம் கடல் பரப்புள்ள உலகத்தில், கடலாதிக்கம் என்றால் உலக ஆதிக்கம்தான். 6 சிறு கண்டங்களுக்கு இடையே நாலு பெரிய சமுத்திரங்கள் இருக்கின்றன. பனி உறைந்த கரைகளுள்ள அண்டார்டிகாவிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் வடக்கே பனியுறைந்த கிரீன்லாந்து கரைவரையிலும், சமுத்திரம் வியாபித்திருக்கிறது. இடையிடையே மாலுமிகள் தங்குவதற்குப் பத்திரமான துறைமுகங்கள் இருக்கின்றன. வழிதப்பி வந்த கடற்பிரயாணிகள் அகப்பட்டுக்கொண்டு இறந்து போகும்படியாக சமுத்திரத்திற்கு அடியில் பல குன்றுகள், பாறைகள் இருக்கின்றன. கண்டங்களில் எல்லாவற்றிற்கும் மிகப் பெரிதானது ஆசியா கண்டம். அது 1,70,00,000 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுள்ளது. அதற்கு வடபக்கத்தில் 55,00,000 சதுரமைல் பரப்புள்ள ஆர்டிக்சமுத்திரம் கீழ்பாகத்தில் 6,40,00,000 சதுர மைல் பரப்புள்ள பஸிபிக் சமுத்திரமும், தெற்குப் பக்கத்தில் 2,83,00,000 சதுர மைல்கள் பரப்புள்ள இந்துமகா சமுத்திரமும், இருக்கின்றன. ஆதிக்கமும், செல்வமும் நிறைந்த ஐரோப்பாவே 38,00,000 சதுர மைல்கள்தான் விஸ்தீர்ணமுள்ளது. இந்து மகா சமுத்திரத்திற்குள் ஐரோப்பாக் கண்டத்தைப்போல் 7 கண்டங்களும் பஸிபிக்கில் 16 கண்டங்களும் அடங்கும். வட அமெரிக்காவும், தென் அமெரிக்காவும் சேர்ந்து 1,50,00,000 சதுர மைல்கள் விஸ்தீர்ணம். அது 3,15,00,000 சதுர மைல்கள் பரப்புள்ள அட்லாண்டிக் சமுத்திரத்திற்குப் பாதிக்குக் குறைவாக இருக்கிறது. பெரிய கண்டமான ஆபிரிக்கா 1,15,00,000 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுள்ளது. இம்மாதிரி ஐந்து கண்டங்கள் தாராளமாக பஸிபிக் மகா சமுத்திரத்திற்குள் அடங்கும். அண்டார்டிகா 30,00,000 சதுர மைல்களும், ஆஸ்திரேலியா 35,00,000 சதுர மைல்களும் விஸ்தீர்ணமுள்ளவை. சந்திரமண்டலத்திலிருந்து பார்த்தால் பிரம்மாண்டமான சமுத்திரத்தின் மத்தியில் இவை இரண்டும் சிறு தீவுகளாகத் தோன்றும்.



பண்டை காலத்தில் கடல் யுத்த தந்திரத்தில் அனுபவத்தினால் அதிக தேர்ச்சி பெற்றவர்கள் அநேகர் உண்டு. இருந்தபோதிலும் கடலாதிக்கத்தைக் கொண்டுள்ள கொள்கையை அமெரிக்கக் கப்பற்படை தளகர்த்தர் மாஹன் என்பவர் தெளிவாகக் காட்டியிருக்கிறார். 1890-ம் வருஷத்தில், “1660 முதல் 1783-வரு வருஷம் வரை தேச சரித்திரத்தில் கடலாதிக்கத்தின் தன்மை” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அதில் முக்கியமாக இங்கிலீஷ் அட்மிரல் நெல்ஸனைப்பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கற்றுக்கொடுத்த முறைகளில் முக்கியமாக வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கும், கடலாதிக்கத்திற்கும் பரஸ்பர பாந்தவ்யம் இருக்கிறதென்றும், வியாபாரம்தான் யுத்தத்தில் வெற்றியைக்கொடுக்குமென்றும் கண்டிருந்தார். அவர் காலத்தில் பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் நெருங்கிய சிநேகிதம் இருக்கவேண்டுமென்பதை அவர் வற்புறுத்திவந்தார். பிரிடனும் அமெரிக்காவும் ஒன்று சேர்ந்து கடலாதிக்கம் பெற்றால் உலகத்தில் சமாதானம் நிச்சயமாகக் கிடைக்குமென்றும் நம்பியிருந்தார். அவர் ஜெர்மனி தோற்றுவிடுமென்றும், ஜெர்மன் கப்பற்படை சரணடையுமென்றும் கூறி 1914-ம் ஞு டிஸம்பர் மீ 1-ம் தேதியில் இறந்துவிட்டார்.

மாஹன் பிரசுரித்த முறையை பெரும்பாலும் மறுதளிக்க முடியாது. தேச சரித்திரத்தில் 5,000 வருஷங்களில் நடந்தவைகளைப் பார்த்தால் அவர் சொல்வது உண்மையென்று ருசுவாகிறது. சமமான பலம் கொண்ட தரைப்படையும், கடற்படையும் ஒன்றுக்கொன்று சண்டைசெய்தால் சில சந்தர்ப்பங்களில் கடற்படை நிச்சயமாக வெற்றியடையும். அதற்கு வேண்டிய நிபந்தனைகள் பின்வருமாறு. கப்பற்படை ஆதரவன்னியில் தனிப்பட்டு இருக்கும் தரைப்படை தாக்காமலிருக்கும்படியான தளங்கள் கப்பற்படைக்கு இருக்கவேண்டும். இரண்டாவதாக கடற்படை வியாபாரக் கப்பல்களின் ஆதரவின்பேரில் இருக்கவேண்டும். மூன்றாவதாக கடற்படை பலத்தைக் கொண்டு அதிகமாகத் தரைச்சண்டையில் ஈடுபடக் கூடாது.

நல்ல பத்திரமான தளங்கள் கப்பற்படைக்கு இல்லாததினால் டைர் (Tyre), எகிப்து இவைகளில் நடந்த சண்டைகளில் தோல்வி ஏற்பட்டது. ஸ்பார்டாவுக்கு எதிராக ஏதென்ஸ் நடத்திய சண்டையிலும், ரோமுக்கு எதிராக கார்த்தேஜ் நடத்திய சண்டையிலும், போதுமான கப்பற்படை பலம் வைத்துக்கொள்ள முடியவில்லை. தரைச்சண்டையை அதிகமாக நடத்தியதால் அவை தோற்றுவிட்டன. பொதுவாக கப்பற்படையின் பலம் குன்றியபொழுதும், அதிகபலமுள்ள மற்றொரு கப்பற்படையுடன் சண்டையிட நேரிட்டபொழுதும்தான் கப்பற்படை தோல்வியடையுமே தவிர வேறுவிதமாக கடலாதிக்கம் குறைய இடமில்லை.

இப்பொழுது உலகத்தில் 3 பெரிய கடலாதிக்கமுள்ள நாடுகள் இருக்கின்றன. அவை பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, ஜப்பான். மற்ற தேசங்களிலுள்ள கப்பற்படை தரைப்படைக்கு உதவியாகவுள்ள சொற்பபலம்தான்.

நல்ல கப்பற்படை தளங்களைப் பாதுகாப்பதற்கு பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு உதவி பலம் இல்லாதது ஒரு கஷ்டம். ஆனால் இப்பொழுது கப்பற்படை உதவியில்லாத ஐரோப்பாவிலுள்ள எந்த நாடும் ஆகாயத்திலிருந்து ஒரு தீவைத் தாக்கக்கூடும். ஆகையால் மேற்கு ஐரோப்பாவில் தற்காப்பிற்காக கிரேட் பிரிடன் மேன்மையான விமானபலத்தை வைத்துக்கொள்ளவேண்டும் என்பது தெரிகிறது. 1940-ம் ஞு சரத்காலத்தில் பிரிடன்பேரில் நடந்த விமானத் தாக்குதலில் கப்பற்படை பலத்தின் உதவியால் அது எதிரியை முறியடிக்க முடிந்தது. நல்ல கப்பற்படை தளங்கள் எல்லாக்கடல்களிலும் இருப்பதால் அதிகமான சாதகம் பிரிடனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த தளங்கள் சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளின் போக்குவரத்தைப் பாதுகாக்கும் கப்பற்படைக்கு பந்தோபஸ்தளிக்கவும், பிரிட்ன் தளங்களிலிருந்து வெகுதூரத்திற்கப்பால் எதிரியின் கப்பற்படையைத் தாக்குவதற்கும் அனுகூலமாயிருக்கின்றன. பிரிடனுக்கு 2,10,00,000 டன்கள் நிறையுள்ள கப்பல்கள் இருக்கின்றன. 1939-ம் ஞுத்தில் உலகத்திலுள்ள வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கையில் அது 30 சத விகிதம். ஆகையால் மற்ற வல்லரசுகளைக்காட்டிலும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு அதிகமான வியாபாரக்கப்பல்கள் இருக்கின்றன.

இயற்கையாகவே யுனைடெட் ஸ்டேட்ஸ் சப்பற்படை பலமுள்ள வல்லரசு அல்ல. வியாபாரத்திற்குத் தேவையான கப்பற்படை பலம் அமெரிக்காவுக்கு உண்டு. அமெரிக்கா பெரிய நாடாக இருந்தபோதிலும் 1939-ல் பிரிடனிடமிருந்த வியாபாரத்திற்குக் காபந்தாக இருந்தக் கப்பற்படைக்குப் பாதி அளவுதான் இருந்தது. ஆனால் மற்ற வல்லரசுகளைக்காட்டிலும் அமெரிக்கா செல்வம் நிறைந்த நாடாக இருப்பதாலும், கடலாதிக்கத்தின் பெருமை அதற்கு தெரியுமாதலாலும், சம்பளம் கொடுத்து ஒரு கப்பற்படையைப் பரிபாலித்து வருகிறது. அதன் அமைப்பும், போர்செய்யும் திறமையும் மற்ற எல்லா வல்லரசுகளின் கப்பற்படைகளைக் காட்டிலும் மேலானதாக இருக்கின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸ் சப்பற்படை பிரிடிஷ் கப்பற்படையைப்போல் காத்திரமுள்ளதாக இருக்கிறது. ஆனால் கனமான பிரிடனைக்காட்டிலும் அதிகமாக இருக்கிறது. ஜப்பான் இந்த இரண்டு வல்லரசுகளுக்கும் கீழ்பட்டது. மேற்கு பஸிபிக்கில் மட்டில் மேன்மையான ஆதிக்கம் பெற்றிருக்கிறது. பிரிடனைக் காட்டிலும் ஜப்பான் அதிகப் பாதுகாப்புடன் இருக்கும் நிலைமையில் இருக்கிறது. இருந்தாலும் அதிகச் செலவு நேரிடக்கூடிய விதமாக சீனாவுடன் தரைச்சண்டையில் ஈடுபட்டதுதான் பெருத்த தவறுதலாகும். ஜப்பான் ஒரு ஏழ்மையான நாடு. அதன் பொருளாதாரங்களும் மிகக் குறைவு. அதன் கடலாதிக்கத்திற்கு உதவியாக வியாபாரக் கப்பல்களையும், வர்த்தகத்தையும் அதிகரிக்கச் செய்திருந்தால்தான் சரியாக இருந்திருக்கும். ஆனால் திறமையற்ற ராணுவ நிபுணர்கள் அதிகச்செலவு நேரிடக்கூடிய விதமாக ஜப்பானை சீனச்சண்டையில் ஈடுபடுத்திவிட்டார்கள். ஆனால் அதன் கப்பற்படை பலத்தையும், விமானப்படை பலத்தையும் அபிவிருத்திசெய்து பிரிடிஷ் அமெரிக்க சாம்ராஜ்யங்களின்பேரில் வெற்றியடையலாம் என்ற நம்பிக்கை அதற்கு இல்லாமலிருக்கிறது. கொஞ்சகாலம்வரை தூரக்கிழக்கு சமுத்திரங்களில் ஜப்பானுக்கு ஆதிக்கம் இருக்கலாம். ஆனால் ஜப்பானின் கப்பற்படையைக் காட்டிலும் அமைப்பிலும், சண்டை செய்யும் திறமையிலும் யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படை இழிவாக இருந்தால்தான் ஜப்பான் எண்ணம் பலிதமாகும். மிட்வே தீவிலும், பவளக்கடலிலும், ஸாலமான் தீவுகளிலும் நடந்த சண்டைகளில் ஜப்பான் கொண்டிருந்த நம்பிக்கை வீண் மனோ ராஜ்யம் என்று ருஜுவாகிவிட்டது. ஆகையால் வருங்காலத்தில் ஜப்பானின் அழிவு நிச்சயமென்று தீர்மானிக்கலாம்.

பிரிடனுக்கும், யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் வருங்காலத்தில் வெற்றிகிடைக்குமென்று தெரிகிறது. ஐரோப்பாவில் நெருக்கடியாயிருந்த ஒரு வருஷத்தில் ஜெர்மனியின் தரைப்படையையும், விமானப்படையையும் ருஷ்யாவின் பெரிய தரைப்படை குறிக்கிட்டு அவைகளை முறியடித்தது. ஐரோப்பாவில் திடீரென்று இரண்டாவது போர்முனை ஏற்படுத்துவது சாவதானமில்லை என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார். வட ஆபிரிக்காவில் ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் ஒன்று சேர்ந்து தலையிட்டார்கள். இவற்றைப் பார்க்க அவர்கள் சப்பற்படை பலத்தின் முக்கியத்வத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகையால் யுனைடெட் ஸ்டேட்ஸிலும், பிரிடனிலும் நிர்மாணிக்கும் அபரிமிதமான சக்தியைப்பார்க்க, கூடிய சீக்கிரத்தில் கப்பற்படை அபிவிருத்தியடையும் என்று தெரிகிறது.

இயற்கையாகவே கப்பற்படையை வைத்துக்கொள்ளமுடியாத நாடுகள் அமெரிக்க—ஆங்கில சிநேகத்தால் தங்களுக்கு ஏற்படும் பயன்கள் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும் இதர நாடுகளை ஜெர்மனி அரசாளுவதா அல்லதுபிரிடனா, யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாளுவதா என்ற பிரச்னை ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. தேசசரித்திரத்தைப்பார்த்தாலேயே கடலாதிக்கத்தின் பெருமை நன்கு விளங்கும். ஒரு நாட்டிற்கு அதிகமான ராணுவ பலமிருந்தால் அது மற்ற நாடுகளை ஆக்கிரமிக்க முற்படும். அதுபோல் கப்பற்படை பலம் அதிகமாக இருந்தால் அதனால் பலவித அனுகூலங்கள் அந்நாட்டிற்கு ஏற்படும். ஏனென்றால் வியாபாரத்திற்குக் கடலாதிக்கம் மிகவும் முக்கியமானது. மேலும் வியாபாரத்திற்குக் கப்பற்படையின் உதவி இன்றியமையாதது. கப்பற்படை பலத்துக்கும், ராணுவத்திற்குமுள்ள வித்தியாசத்தைக் கவனிப்போம். ஒரு மாலுமி அதிகமாக சண்டைக்கு விரும்புவதில்லை. யுத்தத்திற்காக போர்வீரனுக்



கும், கப்பற்படைக்காக மாலுமிக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. அவனுடைய நோக்கம் கடலில் பிரயாணஞ் செய்வதற்கே ஒழிய சண்டை செய்வதற்கில்லை. ஆகையால் கப்பற்படையைச் சேர்ந்த மாலுமிக்கும், வியாபாரக்கப்பல் மாலுமிக்கும் தன்கடமையைச் செய்ய போரை விரும்பமாட்டான். மேலும் மாலுமி அயல் நாட்டுத் துறைமுகங்களைப் பார்க்கிறான். தன் சௌகரியத்திற்கும் ஜீவனத்திற்கும் அயல் நாட்டிலுள்ள சிநேகிதர்களை நம்பியிருக்கிறான். வெள்ளாண்மையில் ஈடுபட்டிருக்கும் குடியானவனின் குறுகிய நோக்கமும் அவனுக்கில்லை. தேச சரித்திரத்திலிருந்து நூற்றுக்கணக்கான உதாரணங்களை எடுத்துச்சொல்வது அதிக ஆயாசத்தைக் கொடுக்கும். இங்கு ஒரு உதாரணத்தைமட்டில் குறிப்பிடுவோம். 1811-ம் வருஷத்தில் பிரிடன் அடிமை வியாபாரத்தை அடியோடு ஒழித்துவிட்டது. நெபோலியனுடன் கடுமையான போர் நடந்து கொண்டிருக்கும் பொழுது அநேக முறைகளை அனுசரித்து கடைசியாக 1833-ம் ஆண்டில் சாம்ராஜ்யம் பூராவிலும் அடிமை வியாபாரம் நின்றுவிட்டது. யுனைடெட் ஸ்டேட்ஸ் பெரிய வல்லரசாக இருந்த போதிலும், சுமார் 30 வருஷம் கிரமித்து நியூ இங்கிலாந்திற்கும் தென் நாடுகளுக்கும் போர்நடந்த பிறகுதான், 1863-ல் அது இம்முறையை எடுத்துக்கொண்டது.

எப்பொழுதும் கப்பற்படை பலம் சமாதானத்தையும் பரஸ்பரம் அனுகூலமுள்ள வியாபாரத்தையே விரும்பும். பொருள் வாங்குபவர்களை அடிமைப்படுத்தியோ அல்லது ஏமாற்றியோ நடத்துவதில் லாபமில்லை. பொருளாதார நிலைமை கடுமையாக இருந்தால் கப்பற்படை பலம் சமாதான வழிகளில் பிரவர்த்திக்கச் செய்யும். ஆனால் ராணுவ பலம் பரபரப்பை உண்டாக்கி அவமதிப்பைக் கொடுக்கும்.

இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் சமாதானத்தையும், ஸ்வதந்திரத்தையும் விரும்பும். யாவரும் கப்பற்படை பலமே வெற்றிபெறவேண்டுமென்று கருத வேண்டும்.

---

## ஜெர்மன், பிரிடிஷ் தந்திரங்கள்.

(*"19-வது நூற்றாண்டும், அதற்குப் பிற்பட்டும்"* என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

யுத்தத்தை நடத்துவதில் ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனி வழியுண்டு. குறிப்பிட்டு யுத்தத்தைந் நடத்த தயார் செய்துகொள்ளாத போனாலும்கூட, ஜெர்மானியர் எப்பொழுதும் தாக்குவதிலேயே நோக்கங்கொண்டிருப்பார்கள். அதனால் அவர்களை முன்னேறித் தாக்கும் நாட்டினர் என்று சொல்வதால் அவர்களைப் பற்றி தூஷிப்பதல்ல. ஜெர்மனியின் சன்னிவேசத்தைப் பார்த்தாலேயே அது முதலெடுப்பில் எதிரியைத் தாக்குவதற்கு ஆரம்பித்து, எதிரி முறியடிக்கப்படும் வரையில் முன்னேறியே தாக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்நாட்டிற்கு வெற்றி வரும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, ஒரு எதிரி நாட்டுடனாவது அல்லது பல எதிரி நாடுகளுடனாவது அது போர் துவக்கினால், உடனே அப்போரில் வெற்றியடைய ஜெர்மனி முயற்சிக்க வேண்டும். இல்லாவிடில் அப்போர் உலக யுத்தமாக மாறி விட்டால் அதில் அது வெற்றியடைவது சிரம சாத்தியமாய்விடும். அடுத்தபடியாக உள்நாட்டு யுத்தம் உலக யுத்தமாக மாறுவதைத் தடுப்பதற்கு அதற்கு முடியாமல் போனால், உடனே அந்நாடு சுற்றி வளைக்கப்படும். அவ்வித நிலைமையிலிருந்து அது சமாளித்தாக வேண்டும். சமாளிக்க முடியாத போனால் அதற்குத் தோல்வி ஏற்பட்டு விடும். சாதாரணமாக அது சுற்றி வளைக்கப்படும் என்ற பயம் ஜெர்மானியருக்கு இருக்கிறது. அம்மாதிரி ஏற்படுவதற்கு சம்பாவிதமேயில்லை என்று சிலர் அபிப்பிராயப்படலாம். உண்மையில் பயம் ஏற்பட்டிருக்கிறது. அது ஐரோப்பா கண்டத்தின் மத்தியிலிருப்பதால் தன்னைப் பிறநாடுகள் சுற்றி வளைக்காமல் இருக்கும்படி சமாதான முறையினாலோ அல்லது யுத்தத்தினாலோ எப்பொழுதும் முயற்சிக்க வேண்டும்.

ஜெர்மானியர் எப்பொழுதும் தாக்கும் முறையையே கையாளவேண்டும். அந்தத் தாக்குதல் அரசியல் விஷயமாக ஏற்பட்டாலும் அல்லது ராணுவ சம்பந்த

மாக ஏற்பட்டாலும் அதை முதலெடுப்பில் கையாளவேண்டும். ஆகையால்தான் முன்னெச்சரிக்கையாகவே திட்டம் போட்டுக்கொண்டு அது யுத்தத்தை நடத்தும். இறுதியான வெற்றியடைவதற்கு அது முதலெடுப்பில் தாக்கும் சக்தியைப் பொருத்திருக்கிறது. ஆனால் அவர்கள் தற்காப்பு முறையில் இருப்பார்களானால் வெற்றியடைவதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இழக்கவேண்டி நேரிடும். ஏனென்றால் அது சுற்றி வளைக்கப்பட்டு, பொருளாதார முற்றுகையும் போடப்படும். அதற்கு இரு பக்கங்களிலும் சண்டை செய்யும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும். இவைதான் ஜெர்மனியைத் தோல்வியடையச் செய்வதற்கு முக்கியமான விஷயங்கள்.

அவர்களின் ஆரம்பத் தாக்குதலில் தோல்வியடைந்தால் அவர்கள் முன்னேறித் தாக்குதல் முறையை விட்டுவிட்டு தற்காப்பு செய்துகொள்ள இறங்க வேண்டும். அவ்வித நிலையில் பிறநாடுகளுக்கு பல நிபந்தனைகளுடன் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. அவ்விதம் சமாதானமும் ஏற்படாது. அவர்களின் ராணுவ பலத்திற்குப் பங்கம் வாராமல் ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி தான் நேரிடும். இதை விடு அவர்களின் எதிரிகளுக்கு நஷ்டமேற்படுவதாலும், யுத்தக் களைப்பினாலும், உள்நாட்டுக் குழப்பத்தினாலும் சமாதானம் செய்துகொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்படும் வரை யுத்தத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆகையால் எவ்விதத்திலும் வெற்றியடையாமல் போனாலும், வெற்றிகரமாக சமாதானம் செய்துகொள்ள முயற்சிப்பார்கள். இது அவர்களுக்குச் சரியான வழி. வேறு வழி கிடையாது.

ஆனால் இங்கிலிஷ்காரர்கள் வேறு விதமான வழியைக் கையாள வேண்டும். அவர்களுக்கு அந்நிய நாடுகளில் வியாபாரப் போக்குவரத்து அதிகம் இருக்கிறது. அவர்களின் சாம்ராஜ்யம் அதிக விஸ்தாரமாகவும், பரவலாகவும் இருக்கிறது. கிரேட் பிரிடன் தீவுகள் எளிதில் தாக்கப்படும் நிலைமையில் இருக்கிறது. ஆகையால் அவர்கள் முதலெடுப்பில் தற்காப்பு முறையைத்தான் கையாள வேண்டும். ஜெர்மனிக்கு ஏற்படும் இரண்டு போர்முனைகளில் ஏதேனும் ஒன்றில் முழு பலத்துடன் எதிரியைத் தாக்குவதற்கு முடியும். ஆனால் இங்கிலாந்தில் பல போர்முனைகள் ஏற்படுமாதலால், குறிப்பிட்ட ஒரு போர்முனையில் பலமாகப் போர் செய்ய சாத்தியமில்லை. அதனால் முக்கியமாக அவர்கள் முதலெடுப்பில் தற்காப்பு செய்து கொள்ள முற்படவேண்டும். பிற்பட்டு கூடிய சீக்கிரம் சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது முன்னேறித் தாக்க முயற்சிக்க வேண்டும். அதாவது எதிரி அகப்பட்டிருக்கும்பொழுதுதான் அவர்கள் தற்காப்பு நிலையிலிருந்து தாக்குதல் முறைக்கு வரவேண்டிய சந்தர்ப்பம். ஆகையால் இவர்களின் யுத்த முறை ஜெர்மானிய முறைக்கு நேர் விரோதம். அதுதான் இவர்களுக்குச் சரியான முறை.

இரண்டு போர்முனைகளில் மட்டில் ஒரு நாடு தாக்கப்படுவதாய் இருந்தால் அத்தேசத்தினர் ஏதேனும் ஒரு போர்முனையில் முன்னேறித்தாக்க வேண்டும். யுத்த திட்டத்தையும் முன்னதாகவே தீர்மானித்துக்கொண்டு யுத்தத்தில் இறங்க வேண்டும். அதனால்தான் அதன் ஆரம்பத் தாக்குதல் சுலபமாக இருக்கிறது. ஆனால் பல போர்முனைகளிலும் தாக்கும்படியான நிலைமை ஒரு நாட்டிற்கு ஏற்பட்டால், அது தற்காப்பு முறையால்தான் சமாளிக்க முடியும். பல திட்டங்களை அது போட்டாக வேண்டுமே ஒழிய ஒரு திட்டத்தை மட்டில் கையாள முடியாது.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும்பொழுது, எதிரியின் ஆரம்பத் தாக்குதல் தோல்வியடைய நேரிட்டால் அவனுடைய திட்டம் முறியடிக்கப்படும். பிற்பட்டு அதைச் சமாளிக்க பல திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் போடவேண்டி வரும். முடிவில் ஒருவித திட்டமே இல்லாமல் போட்ட எதிரிகள் தற்காப்பு நிலையில் இறங்கி, முக்கிய எல்லைப் புறங்களை மட்டில் பாதுகாக்க முயற்சிப்பான்.

அதனால் ஜெர்மனிக்கு ஆரம்பத்தில் சுலபமாயிருந்து முடிவில் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும். நேசதேசத்தார்களுக்கு ஆரம்பத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டு முடிவில் சுலபமாக ஆகிவிடக்கூடும். அதாவது ஜெர்மனி ஆரம்பத்தில் முக்கியமான ராணுவ திட்டத்தைக் கையாளும். முடிவில் அதுவுமில்லாமல் போய் விடும். ஆனால் கிரேட் பிரிடனும், அதன் நேசநாடுகளும் ஆரம்பத்தில் திட்டமே



இல்லாமல் யுத்தத்தைத் துவக்கி முடிவில் ஒரு தீர்மான திட்டத்துடன் யுத்தத்தை முடிக்கக்கூடும்.

ஆகையால் இங்கிலிஷ்காரர்கள் கையாளும் முறையைக்கொண்டு ஜெர்மானியர் யுத்தம் செய்ய முடியாது. அதேமாதிரியாகவே ஜெர்மன் முறை இங்கிலாந்திற்குத் தகுதியாக இராது. ஒவ்வொரு முறையிலும் குணதோஷங்கள் உண்டு. ஆரம்ப திட்டம் முறியடிக்கப்பட்டால், அதற்குப் பிற்பட்டுப் போடப்படும் திட்டங்களும் பாழானால் தற்காப்பு நிலையைத்தான் ஜெர்மனி கையாளவேண்டியிருக்கும். ஆனால் ஆரம்பத்தில் ஏற்பட்ட தற்காப்பு நிலையிலேயே இருந்தாலும் வெற்றி கிடைக்காது. அம்முறையால் எதிரியை வெற்றிகரமாகத் தடுப்பதற்கு முடிந்தால், அவன் எவ்வளவு பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்தாலும் எவ்வளவு விஸ்தாரமான போர்முனைகளில் ஈடுபடவேண்டி கஷ்டமிருந்தாலும், அவனைச் சுற்றி வளைப்பதற்கான திட்டத்தைப் போட்டு முடிவான வெற்றியடைய முயற்சிக்க வேண்டும்.

ஜெர்மானியர் குறிப்பிட்ட திட்டத்திலிருந்து தற்காப்பு முறையில் இறங்கும் பொழுதும், இங்கிலிஷ்காரர்கள் தற்காப்பிலிருந்து முடிவான திட்டம் போட்டு யுத்தம் செய்யும்பொழுதும் ஏதேனும் ஒரு இடத்தில் இவ்விரண்டு முறைகளும் சந்திக்கக்கூடும். அந்த சமயத்தில்தான் யுத்தத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்படும். இப்பொழுது அவ்வித நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

---

## மத்தியதரைக்கடல் யுத்தரங்கம்.

("19-வது நூற்றாண்டும், அதற்குப் பிற்பட்டும்" என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

நேசதேசத்தார் மத்தியதரைக்கடலில் ஆதிக்கம் பெற்றால் தென் கிழக்கு ஐரோப்பாவைத் தாக்குவதற்கு எளிதாக இருக்கும். ஏஜியன், ஏடிரியாடிக் கடலில் ஏராளமான தீவுகள் இருக்கின்றன. மத்தியதரைக்கடலின் நீண்ட கிழக்குக் கரையோரமும் மத்திய பாகமும் மலைப்பாங்கான பிரதேசங்கள். அவைகள் தற்காப்புக்கு அனுகூலமாக இருக்காது. படையெடுப்புக்குச் சாதகமாக இருக்கும் ஜுகோஸ்லாவியாவுக்குச் சொந்தமான பிரதேசங்கள் மலைப்பாங்காக இருப்பதால் ஜெர்மனியும், இதாலியும் சேர்ந்து பலமாக எதிர்த்தும் அவைகளைக் கைப்பற்ற முடியவில்லை. ஆகையால் மத்தியதரைக்கடல் பிரதேசத்திலுள்ள, ஸெர்பியர், குரோட் ஜாதியினர் ஸ்லோவன் ஜாதியினர், இன்னும் அங்குள்ள ஸ்வதந்திரக் குடிகள் யாவரும் இப்பொழுது சேர்ந்துகொண்டு எதிரியின் 30 படைப் பகுதிகளை வெற்றிகரமாகத் தாக்கி வருகின்றன. ஏஜியன் கடலிலிருந்து ஜெர்மன் எல்லைப்புறம் வரையிலுமுள்ள பிரதேசங்களில் இருப்பவர்கள் ஜெர்மானியரை வெறுக்கிறார்கள், தங்கள் படைகளைப் பலப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு எதிராகப் போர் செய்யவும் தயாராக இருக்கிறார்கள்.

மேற்கு ஐரோப்பாவில் நேசதேசத்தார் படையெடுத்தால் ருஷ்யாவிலிருந்தும், தென் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் ஜெர்மானியர் பின்வாங்க நேரிடும். ஆனால் ஜெர்மனி மேற்குப் பக்கத்தில் நல்ல பலமான தற்காப்பு செய்து கொண்டிருக்கிறது. அப்பிரதேசத்தின் இயற்கை நிலையும் பாதுகாப்புக்கு அனுகூலமாக இருக்கிறது. அதனால் அப்பாகத்தைத் தாக்குவது அவ்வளவு சாவதானமில்லை. அப்படி தாக்குதல் ஏற்பட்டாலும் சென்ற யுத்தத்தில் ஸாம் நதியிலும், பாஸ் செண்டேல் (Pass Chendale) என்ற இடத்திலும் நேர்ந்த தோல்விகளும் நஷ்டமும் போல் நேசதேசத்தார்களுக்கு இங்கும் ஏற்படக்கூடும். ஆனால் தென் கிழக்குப் பாகத்தில் ஜெர்மனி பொருளாதாரத்திலும், மற்ற விஷயங்களிலும் பலமில்லாமல் இருக்கிறது. ஆகையால் நேசதேசத்தார்கள் தென் கிழக்கு ஐரோப்பாவில் நிலைத்துக் கொள்ள முடியுமானால், ஜெர்மனிக்குத் தோல்வி ஏற்பட்டு விடும் என்பது நிச்சயம், இந்த முயற்சியில் நமக்கு அதிக நஷ்டம் நேரிடாது.

நேசதேசத்தார் மேற்கு ஜெர்மனி எல்லைப்புறத்தை அடைந்தாலும் அல்லது ரைன் பிரதேசம் எங்கும் வசப்படுத்திக்கொண்டாலும் கிழக்கு, தென் கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மானியர் ஆதிக்கம் பெற்றிருந்தார்களானால் அங்குள்ள மூலப் பொருள்களைக் கொண்டு நீண்ட காலம் போர் செய்வதற்கு அவர்களால் முடியும். அவ்விதம் போர் செய்வதால் நேசதேசத்தார்களுக்கு நேரக்கூடிய நஷ்டத்தையும் உள்நாட்டு இயக்கத்தினால் சமாதானம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடக்கூடும். முக்கியமாக கிரேட் பிரிடனை அம்மாதிரி நிலைமைக்குக் கொண்டுவர எதிரிகள் முயற்சிப்பார்கள். ஆனால் இப்பொழுது நேசதேசத்தார் ஜெர்மனியின் தென் கிழக்கு எல்லைப் புறத்தையடைவதற்குள் ஜெர்மானியருக்குச் சமாதானத்தை நாடும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மேற்கு ஐரோப்பாவை வசப்படுத்திக் கொள்ளாமலே ஜெர்மனி சமாளிக்கக் கூடும். ஆனால் கிழக்கு தென் கிழக்கு ஐரோப்பா, இப்பிரதேசங்கள் அதன் வசமில்லாமல் போனால் யுத்தத்தைநீடித்து நடத்த முடியாது. ஆகையால் கெய்ரோவிலிருந்து பெர்லின் பக்கமாக முன்னேறிச் சென்றால் தான் வெற்றி கிடைக்கும்.

## ஜப்பானின் பரிதாப நிலை:

### முடியில்லாப் பெட்டியைப்போல் இருக்கிறது.

ஜப்பான் இதுவரை பிடித்த இடங்களின் வெற்றிகளைப் பார்த்தால் ஒரு பெட்டிக்கு ஒப்பிடலாம். ஒரு பக்கம் பர்மா, மலேயா, முன்புறம் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள். மற்றொரு பக்கம் பிலிப்பைன்ஸ் தீவுகள். இப்படி இருக்கும் நிலையில் இப்பெட்டிக்கு மூடி போலிருக்கும் சைனாவைத் தோற்கடிக்காத வரையில் ஜப்பான் பிடித்த இடங்களுக்குப் பத்திரம் இல்லை. அதோடு பெட்டியின் இரண்டு ஓரங்களைப்போல் இருக்கும் இந்தியா ஒரு புறமும், ஆஸ்திரேலியா ஒரு பக்கமும் ஜப்பானுக்கு இடைஞ்சலைச் செய்து வருவதால் ஜப்பான் பிடித்த இடங்கள் எந்த நிலையிலும் சின்னாபின்னமாகிவிடச் சந்தர்ப்பமிருக்கிறது.

ஆக்கிரமண ஆசை கொண்ட இதர நாடுகள் ஒரு மூச்சில் சண்டை செய்து பிறகு சற்று ஓய்ந்துவிடுகின்றன, ஜப்பானோ அவ்விதம் இருக்க விரும்பவில்லை. ஆஸ்திரேலியாவை வியாபித்துக்கொள்ளும் நோக்கத்துடன் பவளக்கடலில் மார்ஸ்பி துறைமுகத்தைக் கைப்பற்றி அங்கிருந்து ஆஸ்திரேலியா மீது படையெடுக்க சண்டை செய்கிறது ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் அமெரிக்க உதவியைத் தடுக்கும் நோக்கத்துடன் மிட்வே, ஸாலமன்ஸ் முதலிய இடங்களில் முன்னேறப் பார்க்கிறது. ஆனால் இந்த முயற்சிகளெல்லாம் கடல்களூர் போரால் தடையுற்றன. இந்தியா, ஸிலோன் இந்த நாடுகளைப் படையெடுக்கவும் நினைத்தது. ஆனால் பர்மாவில் நேசதேசப் படைகள் தீவ்ரமாக எதிர்த்து நின்றதால் ஜப்பானிய எண்ணம் தடைபட்டதோடு மாரிகாலமும் தொடங்கிவிட்டது. அதனால் தரை மூலம் இந்தியாவிற்கு வரமுடியவில்லை. ஸிலோன் பக்கமாக வந்தபோது நேசதேசக் கடல்விமானப் படைகள் எதிர்த்து நின்றதைப் பார்த்து, கொண்டு வந்திருக்கிற படைகள் போதாதென்றும் இன்னும் அதிகப் படைகள் கொண்டு வந்தால்தான் முழுத்தாக்குதலைச் செய்யமுடியுமென்றும் நினைத்துத் திரும்பி விட்டது. ஆகவே இந்தியாவைத் தாக்குவதா, ஆஸ்திரேலியாவைத் தாக்குவதா என்ற யோசனையில் ஆஸ்திரேலியா பக்கம் திரும்பிற்று. அதன் முயற்சியும் பலிக்கவில்லை.

இவ்விதமாக ஜப்பான் தோல்வியுற்ற சமயங்களில் பல சண்டைக் கப்பல்களையும், ஆள் பலத்தையும், இவைகளையெல்லாம்விட அதிக முக்கியமான விமானங்களையும் வியாபாரக் கப்பல்களையும் இழந்தது. ஜப்பானுக்கு ஆள் பலம் குறைந்ததால் கூட அவ்வளவு பாதகம் இல்லை. சண்டைக் கப்பல்களையும் வியாபாரக் கப்பல்களையும், இழந்ததால் அதற்கு அதிக பாதகமேற்படும். அதுமாதிரித் தான் விமான நஷ்டமும், அதை அதிகம் பாதிக்கும். இதற்குக் காரணம் யாதெனில்



உற்பத்தி சக்தி குறைவு. ஒரு நாட்டின் உற்பத்தி சக்தியை பல விதத்தில் நிர்த்தாரணம் செய்யலாம். எஃகு ஸப்ளை, யந்திரங்கள், இஞ்ஜினியர்கள் இவர்களின் உதவி, மனித சக்தி முதலியவைகள்தான். இவைகளில் ஜப்பானுக்கு மனித சக்தியைத் தவிர மற்ற அம்சங்களில் நேசநாடுகளைவிட அதிகக் குறைவு தான். நாள் ஆக ஆக இக்குறைவு இன்னும் அதிகமாகும். ஆக்கிரமண நாடுகள், தங்களுக்கு நிலைமை சாதகமாக இருக்கும்போது திடீரென்று சண்டையைத் துவக்கி விடுவார்கள். ஒரு குறிப்பிட்ட சமயத்திற்குள் சண்டை முடியாத போனாலும் சரி, அல்லது தாக்கப்படும் நாடுகளின் பலம் அதிகமாக இருந்தாலும் சரி, தலை கீழவிழ வேண்டியதுதான். ஏனென்றால் அவர்களின் எதிரிகள் பல மடைந்து விடுவார்கள்.

ஜப்பான் முற்சொல்லிய நிலைமையை ஏற்கனவேயே அடைந்துவிட்டது. ஆறு மாத காலத்தில் தனது திட்டப்படி சண்டைகளைச் செய்துவிட்டது. ஏனென்றால் அந்த சமயத்தில் யுத்த நிலைமை இப்படியும், அப்படியுமாக இருந்தது. இப்போதோவெனில் நிலைமை நேசதேசங்களுக்குச் சாதகமாக இருந்துவருவதுடன் ஜப்பானும் யுத்த தந்திரத்திலும், பொருளாதாரத்திலும் தொழிற்சாலை முதலியவைகளில் தற்காப்பு நிலையில் இருந்து வருகிறது. ஆனால் இதிலிருந்து அது முன்னேற்றப் போரையே செய்யாது என்று சொல்லுவதற்கில்லை. முக்கியமாக விமானங்களையும், கப்பல்களையும் சேகரித்து ஆக்கிரமித்த நாடுகளை நேசநாடுகள் தாக்கினால் தற்காப்பு செய்துகொள்ளவே நினைத்திருக்கலாம்.

## துருக்கி.

### சில விவரங்கள்.

1. 1939 அக்டோபர் 19 தேதி ஆங்கிலேய-பிரெஞ்சு-துருக்கி நாடுகளுக்குள் பரஸ்பரம் உதவிக்கொள்ளுவதென உடன்படிக்கை ஏற்பட்டது.

2. 1941 ஜூன் 18 தேதி ஜெர்மன்-துருக்கி அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. (இதனால் நேசநாடுகளுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கு ஒருவித இடைஞ்சல்களுமன்னியில், முன்ஜாக்ரதையாக ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாகத் துருக்கி அறிவித்தது).

3. 1941 ஆகஸ்டு 10 தேதி ஆங்கிலேய-ருஷ்ய சாஸனம் ஏற்பட்டு துருக்கியை வேறு யாராவது தாக்கினால் பிரிடனும் ருஷ்யாவும் துருக்கிக்கு உதவி செய்வது என்று சொல்லப்பட்டது.

4. இந்த யுத்தம் துவக்கியதுமுதல் துருக்கியின் சைனியம் பூராவாகப் பலப்படுத்தப்பட்டு நாடும் நன்றாகப் பாதுகாக்கப்பட்டது. சமீப வருஷங்களில தேசத்தின் பாதுகாப்பிற்காக அதிகப்பொருள் செலவழிக்கப்பட்டது.

5. 1918-ல் தோல்வியடைந்த போதிலும், துருக்கிய சேனை கமால் அடாடர்க் தலைமையில் புத்துயிர் பெற்றது. வெகுகாலம் துருக்கிக்கு போதுமான முஸ்தீப்புகள் இலலை. நேசநாடுகள் அவைகளை இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். இவைகள் சிலாக்யமானவை யென்றே சொல்லலாம். எவ்வகையிலும் அவைகள் பெல்ஜியத் துருப்புகளிடமிருப்பதைவிட சிலாக்யமானவை.

## ஸ்வதந்திர ஐரோப்பா.

போலந்தில் 28 வயதுக்குள்ள ஆணும், 25 வயதுக்குள்ள ஸ்திரீயும் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது என்ற புதிய உத்தரவு பிறந்திருக்கிறது. இது போலந்தில் ஜனத்தொகை அதிகரிக்காமல் குறைப்பதற்காக ஜெர்மானியரின் திட்டத்தில் முதல் படியாகும். இந்த உத்தரவு ரீச்சுடன் இணைக்கப்பட்ட போலந்தின் மூன்று மேற்கு மாகாணங்களுக்கும் அன்வயிக்கும். இந்த உத்தரவுடன் 25 வயதுக்குட்பட்டு விபசாரத்தினால் பிறந்த குழந்தையை உடனே அரசாங்க ஸ்தாபனத்தில் விட்டுவிடவேண்டுமென்றும் ஒரு உத்தரவு இருக்கிறது. தாயாருக்கும் சிறைவாச தண்டனையுண்டு.

## 'வி' டயரி-1943.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0;
மொராக்கோ ரூ. 2—0—0.
லாபம் யுத்தநிதிக்குச் சேர்க்கப்படும்.
கீழ்கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 132. (3-வது பிரிவு.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | 10- 2-43 | காலேஜ் A ஆங்கிலம் | காலை 10.15 |
| 7- 2-43 | ஆலங்குடி ... | ,, 7.00 | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, 10.15 |
| ,, | ராசியமங்கலம் ... | ,, 7.30 | ,, | ராமச்சந்திரபுரம் ... | மாலை 7.00 |
| 8- 2-43 | அன்னவாசல் ... | ,, 7.00 | ,, | ராயவரம் ... | ,, 7.30 |
| ,, | கீழக்குறிச்சி ... | ,, 7.30 | 11- 2-43 | மழையூர் ... | ,, 7.00 |
| 9- 2-43 | குழிபிரை ... | ,, 7.00 | ,, | கரம்பக்குடி ... | ,, 7.30 |
| ,, | செவலூர் ... | ,, 7.30 | 12- 2-43 | வாளரமாணிக்கம் ... | ,, 7.00 |
| 10- 2-43 | C. S. M. பள்ளிக்கூடம். | காலை 10.00 | | | |
| ,, | ராணி பெண்பாடசாலை. | ,, 10.15 | ,, | எம்பல் ... | ,, 7.30 |

### பிரஸங்கம் 133. (4-வது பிரிவு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | 17- 2-43 | காலேஜ் A இங்கிலீஷ் | காலை 10.15 |
| 14- 2-43 | கீரப்பழனி ... | ,, 7.00 | ,, | காலேஜ் B தமிழ்... | ,, 10.15 |
| ,, | ஆவூர் ... | ,, 7.30 | ,, | கார்த்தாமலை ... | மாலை 7.00 |
| 15- 2-43 | காரையூர் ... | ,, 7.00 | ,, | உப்பிலியக்குடி ... | ,, 7.30 |
| ,, | இடையாத்தூர் ... | ,, 7.30 | 18- 2-43 | அண்டக்குளம் ... | ,, 7.00 |
| 16- 2-43 | வடவாளம் ... | ,, 7.00 | ,, | கிள்ளனூர் ... | ,, 7.30 |
| ,, | செம்மட்டிவிடுதி ... | ,, 7.30 | 19- 2-43 | கொன்னையூர் ... | ,, 7.00 |
| 17- 2-43 | C.S.M.பள்ளிக்கூடம். | காலை 10.00 | ,, | மேலவேகுப்பட்டி. | ,, 7.30 |
| ,, | ராணி பெண்பாடசாலை | ,, 10.15 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 6— 2—43 | வெட்டம்விடுதி. | 13— 2—43 | பொன்னமராவதி. |
| 7— 2—43 | எம்பல். | 14— 2—43 | கொடும்பாளூர். |
| 8— 2—43 | கொன்னையூர். | 15— 2—43 | கீரனூர். |
| 9— 2—43 | ராமச்சந்திரபுரம். | 16— 2—43 | குடுமியாமலை. |
| 10— 2—43 | ராயவரம். | 17— 2—43 | கரம்பக்குடி. |
| 11— 2—43 | குழிபிரை. | 18— 2—43 | கீழாநிலை. |
| 12— 2—43 | பாப்பாபட்டி. | 19— 2—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—8-2-43.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம்௵ பிப்ரவரி௴ 13௳ [ந. 133

பிரஸங்கம் CXXXIII.

## கடற்படை—வெற்றியின் கடைச்சாவி.

சென்ற நவம்பர் மாதம் பிரெஞ்சு வட ஆபிரிக்காவுக்கு ஒரு படையை அனுப்பியது புத்திசாலித்தனமென்று சொன்னாலும் மேற்கு ஐரோப்பாவில் மகத்தான முன்னேறித் தாக்குதல் செய்வதைப்போல பலனுள்ளது என்று சொல்ல முடியாது. ஆகிலும் இந்தக் குறைவான படையெடுப்புக்கு 500 சாமான் கப்பல்களும், 350 யுத்தக் கப்பல்களும், துருப்புகள் இறக்குவதற்குத் தேவையாயிருந்தது. போர் ஆரம்பித்து 2 மாதத்தில் 971 சாமான் கப்பல்கள், அவைகள் 7,60,000-டன்கள் எடைமான முள்ளவைகள், பிரிடிஷ் கடற்படையின் உதவியோடு மத்தியதரைக்கடலின் மேற்கு பாகத்திலுள்ள துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்தியக் கிழக்குப் பிரதேசத்திலுள்ள நமது துருப்புகளுக்கு ஆபிரிக்காவிலுள்ள நன்நம்பிக்கை முனையைச் சுற்றிப்போகும் மார்க்கமாக ஸப்ளைகள் 30,00,000-டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மூலம் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. இந்த உதவியில்லாமல் எட்டாம்படை இப்பொழுது ஸிரெனைகாவிலும் டிரிபோலிடானியாவிலுமிருக்க முடியாது.

### வெகு தூரம் சென்றிருக்கின்றன.

இந்த இரண்டு உதாரணங்களிலிருந்து கடல்தாண்டி படையெடுப்புச் செய்வதற்கு பெரிய சாமான் கப்பல்கள் படையொன்று அவசியமென்று ஏற்படுகிறது. ஸப்ளை செய்யும் நிலயத்திற்கும் போர்முனைக்குமுள்ள தூரம் அதிகரிக்க அதிகரிக்க, போதுமான சாமான்கள் கொண்டுபோக அதிகமான கப்பல்கள் வேண்டும். ஸப்ளை தளங்களான வட அமெரிக்காவிற்கும் பிரிடனுக்கும் போர்முனைகளுக்குமுள்ள தூரத்தைக் கவனியுங்கள்.

அமெரிக்காவிலிருந்து:—

| | | | |
|---|---|---|---|
| லண்டன் ... | 4,000 | மைல்கள். | சராசரி: 10,300 மைல்கள். |
| மாஸ்கோ (பாஸ்ரா வழியாக.) | 14,000 | ,, | |
| சுங்கிங் ... | 13,000 | ,, | |
| கல்கத்தா ... | 12,000 | ,, | |
| ஸிட்னீ ... | 7,000 | ,, | |
| கெயிரோ ... | 12,000 | ,, | |

பிரிடனிலிருந்து :—

| | | | |
|---|---|---|---|
| மாஸ்கோ (ஆர்க்டிக் வழி). | 4000 | மைல்கள். | சராசரி 10,600 மைல்கள். |
| சுங்கிங் | ... 13,000 | ,, | |
| கல்கத்தா | ... 12,000 | ,, | |
| ஸிட்னி | ... 12,000 | ,, | |
| கெய்ரோ | ... 12,000 | ,, | |

துணைக்காவல் கப்பல்கள் 10,000 மைல்கள் செல்லுவதற்கு ஏறக்குறைய 6 வாரங்கள் பிடிக்கும். சாமான்களை இறக்கிவிட்டுத் திரும்ப தங்கள் சொந்தத் துறைமுகத்துக்கு வருவதற்கு இதைவிட இரட்டிப்பு வாரங்கள் ஆகும். ஒவ்வொரு கப்பலிலும் 5,000-டன்கள் எடைமானமுள்ள சாமான்களை அனுப்பலாமென்று வைத்துக்கொண்டு இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு 10,00,000-டன்கள் எடைமானமுள்ள சாமான்களை கைவசமுள்ள 100 கப்பல்களில் ஏற்றி அனுப்பினால் அந்த 100 கப்பல்களும் குறைந்த பக்ஷம் ஆறு மாதங்களுக்கு வேறு விதமான ஒரு அலுவலையும் செய்ய உபயோகப்படாது. இவைகளை 200 கப்பல்களில் அனுப்பினால் 3 மாதத்தில் இந்த வேலை முடிந்துவிடும். இது சாதாரணமான விஷயமாகத் தோன்றலாம். ஆனால் இந்த எடைமானம், காலஹரணம், என்ற விஷயங்களை யுத்த காலத்தில் எளிதில் மறந்து விடுகிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான சாமான்களைக் கொண்டுபோகப் போதுமான கப்பல்களிருப்பதுதான் வெற்றிக்கு அறிகுறியானது. 1942-ம் ௵ ஜுலை ௴ 20-ம் தேதி ஜப்பானிய ஒலிபரப்பாளர் சொன்ன விஷயமும் இதுதான். "இந்த யுத்தமானது கப்பற்படை பலத்தைப் பொறுத்திருக்கிறதென்று சொல்லுவது மிகையல்ல. போக்குவரவு வசதிகளை எந்தக்கக்ஷி இழந்துவிடுமோ அது இறுதியில் தோல்வியடைந்துவிடுமென்று" அவர் சொன்னார்.

எதிரிகள் எல்லாவிதமா பலத்தையும் திரட்டுமுன் தன்னிடமுள்ள முஸ்தீப்புகளைக்கொண்டு சீக்கிரமாக பூர்ண வெற்றி பெறவேண்டிய அவசியத்தை ஜெர்மனி நன்றாய் அறிந்திருக்கிறது. இதை உத்தேசித்துத்தான் 1940-ல் இதாலியை யுத்தத்தில் ஜெர்மனி சேர்த்து விட்டது. 1941-ல் சண்டைபோடாத அமெரிக்காவின் சகாயத்தோடு பிரிடன் தன்னை வலுப்படுத்திக் கொள்ளுவதற்கு முன் ருஷ்யாவைத் தாக்கிவிடவேண்டுமென்று ஜெர்மனி ஏற்பாடு செய்தது. ருஷ்ய பலம் ஹிட்லரின் மதிப்புக்கு அதிகமாக இருந்தது. ஹிட்லர் நினைக்காதபடி அமெரிக்காவின் உதவி அட்லாண்டிக் சமுத்திர மார்க்கமாக அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. ஜப்பான் யுத்தம் துவக்கியபொழுது ஐரோப்பியப் போர்முனையிலிருந்து அமெரிக்காவின் உதவி வேறுபக்கம் மாறிவிடுமென்று எதிர்பார்த்தோம். ருஷ்யா இன்னும் விழவில்லை. பிரிடிஷ்-அமெரிக்க நாடுகள் முன்னேறித் தாக்கும் காலம் கிட்டிவிட்டது. ஜெர்மனிக்குப் பூர்ணமான வெற்றி ஏற்படும் என்ற தோற்றம் குன்றிவிட்டது. பெர்லினில் இதைப்பற்றி எண்ணமே இல்லை. 1943-ல் ஹிட்லர் தன்னுடைய சக்தி பூராவையும் யூ படகு யுத்தத்தில் பிரயோகிக்கப் போகிறானென்பது நிச்சயம். நேசநாட்டாரின் கப்பல்களைத் துரிதமாக மூழ்கடித்து ஐரோப்பாவில் ஏற்படக்கூடிய தாக்குதலை ஒத்திவைக்கும்படி செய்ய ஹிட்லர் முயர்சிப்பான். இதை நிரந்தரமாய் ஒத்திவைக்க முடிந்துவிட்டால் சமாதானம் ஏற்படுத்த முயற்சிக்க அவனுக்கு வசதியேற்படும். ஹிட்லரின் சமாதானப் பேச்சை நாம் அங்கீகாரம் செய்யமாட்டோமென்றாலும் அவன் சமாதானப்பேச்சு ஆரம்பிக்கமாட்டானென்று சொல்லுவதற்கில்லை.

## யூ படகு எதிர்ப்பு.

கடற்படை இலாகா முதல் மந்திரி மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் சொல்லுகிறபடி ஜெர்மன் யூ படகுகள் கூட்டம் கூட்டமாக ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அமைக்கப்பட்டு வேலைசெய்து வருகின்றன. பெர்லினில் ஒலிபரப்பில் சொல்லுகிறபடி யூ எண்ணெய்க் கப்பல்கள் மூலம் யூ படகுகள் சமுத்திரத்திலேயே சீர்திருத்தப்படுகின்றன. அவைகளுக்கு ஸப்ளைகளும் கொடுக்கப்படுகின்றன. பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் கடல் இலாகா வியாக்ஞானர் சொல்லுகிறபடி யூ படகுகள் சமுத்திரத்தில் மணிக்கு 20 நாட்ஸ்கள் வீதம் சென்று அடிப்பதற்கு வசதியான ஸ்தலங்களை அடைகின்றன. ராய்டரின் கடல் இலாகா நிருபர் சொல்லு



கிறபடி யூ படகுப்படையின் மூன்றில் ஒரு பாகம், அதாவது 150 யூ படகுகள், அட்லாண்டிக் சமுத்திரம், மத்தியதரைக்கடல், வடக்கு சமுத்திரம் இவைகளில் நடமாடிக்கொண்டிருக்கின்றன. மாதம் 15 அல்லது 20 வீதம் யூ படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. சமீபத்தில் லோரியான் தளத்தை பிரிடிஷ் விமானப்படை வெடிகுண்டுகளால் தாக்கியதைப்பற்றி பிரிடிஷ் ஸர்க்கார் வையர்லெஸ் நிலயம் வெளியிடும்பொழுது லோரியான் துறைமுகமானது பிரான்ஸில் முக்கியமான யூ படகு தளமென்றும் இதிலிருக்கும் பெரிய ஒர்க்ஷாப்புகளில் யூ படகுகளின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யக்கூடுமென்றும் இங்கே 40 யூ படகுகள் தங்குவதற்கு லாயக்கான ஸிமெண்டினால் கட்டப்பட்ட இரண்டு பெரிய நிலயங்களிருக்கின்றதென்றும், பத்து யூ படகுகள் நிற்கக்கூடிய மற்றொரு தளம் கட்டப்பட்டுவருகிறதென்றும் சொல்லிற்று. அமெரிக்காவின் யுத்தக் காரியதரிசி மிஸ்டர் ஸ்டிம்ஸன் சொல்லுகிறபடி யூ படகுகளால் ஏற்பட்ட நஷ்டங்களைத் தவிர, யுத்தப்போக்கைப் பொதுப்படையாக கவனித்தால் நமக்கு ஜயப்ரதமாகவேயிருக்கிறது. மேலே சொல்லிய வியாக்யானங்களிலிருந்து ஜெர்மனியானது யுத்தத்தில் ஒரு சங்கட நிலைமையை உண்டாக்கிவிட்டு பூராவான தோல்வியை யூ படகுகளின் மூலம் தவிர்க்க ஹிட்லர் முயற்சிக்கிறானென்றும் முடிவுக்கு வரலாம்.

பிரிடனிலிருந்து விமானப்படையின் ரோந்துகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் விமான இலாகா மந்திரி, ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர் அபிப்பிராயப்படி 300 மைல்களுக்குள்ளாக ஒரு யூ படகும் சமுத்திரத்தின் மேல் தலை காட்டவில்லை. கடற்கரையிலுள்ள விமானப்படை 12,50,000 மைல்கள் அதாவது 8,000-மணி நேரம்—ரோந்து செய்து சென்ற நவம்பர் மாதம் பிரெஞ்சு ஆபிரிக்காவுக்குச் சென்ற படைகளைக் கொண்டுபோகும் துணைக்கப்பல்களைக் காப்பாற்றியிருக்கிறது. சாமான் கப்பலிலிருந்து கிளம்பிய பைடர் விமானங்கள் ஜெர்மனியின் பாக் உல்ப், குரியர் விமானங்களிலிருந்து ஏற்படும் பயத்தை நிவாரணம் செய்திருக்கின்றன. சமுத்திரத்தின் பரப்பில் கப்பல்களினின்றும் உண்டான தொந்தரவுகளை பிரிடிஷ் கடற்படை நீக்கிவிட்டது. (1942-ல் நேசநாட்டாரின் சாமான் கப்பல்களின் நஷ்டத்திற்கு 80-சதவிகிதம் நீர்மூழ்கிகள்தான் காரணமென்று ஜெர்மனியில் சொல்லப்பட்டது.) நேசநாடுகளின் விமானப்படையின் ரோந்துகளால் யூ படகுகள் வெகுதூரம் துரத்தப்பட்டுவிட்டன. இது காரணமாக நேசநாட்டுக் கடற்படைக்கு அதிகப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. பிரிடனும், ஐக்கிய அமெரிக்காவும் கப்பல் கட்டும் நிலயங்களில் நீர்மூழ்கிகளை நிர்மூலமாக்க, நாசகாரிகளும், கார்வெட்டிகளும், சிறிய கப்பல்களும் கட்டும் வேலையில் பலமாக ஈடுபட்டிருக்கின்றன.

## கப்பல் கட்டுதல்.

சென்ற வருஷம் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் சாமான் கப்பல்கள் கட்டுவது மிகவும் அதிகரித்திருக்கிறது. 1941-ம் ௵ ஸெப்டம்பர் மாதத்தில் 86,185 டன்கள் எடைமானமுள்ள 9 கப்பல்களையும், 1942-ம் ௵ ஸெப்டம்பர் மாதத்தில் 10,09,800 டன்கள் எடைமானமுள்ள 93 கப்பல்களையும், அமெரிக்கா கட்டிற்று. 1942-ம் ௵ மார்ச்சு மாதத்தில் அமெரிக்கா தினசரி ஒரு கப்பல் கட்டிற்று. 9 மாதத்திற்குப் பிறகு தினசரி 4 கப்பல்கள் வீதம் கட்டிற்று. 1943-ம் ௵ மே ௴ தினசரி 5-வீதம் கட்டக்கூடும். அதாவது ஒரு வருஷத்தில் 1,825 புதிய கப்பல்கள்—1942-ம் வருஷத்தில் நேசநாடுகளைச் சேர்ந்த 1,450 கப்பல்களை மூழ்கடித்ததாகத்தான் ஜெர்மனி சொல்லுகிறது. ஒரு வருஷத்திற்கு முன்னாலிருந்ததைவிட 5-மடங்கு வேகமாகப் புதுக்கப்பல்களை அமெரிக்கா கட்டிவருகிறது. யூ படகுகளின் நடமாட்டம் அதிகரித்தபோதிலும் நேசக் கக்ஷியின் கப்பல் சேதம் சென்ற வருஷம் இருந்ததைவிட 5-மடங்கு அதிகரிக்கவில்லை. பெர்லின் ஒலிபரப்பில் கப்பல் நஷ்டம் இரண்டு அல்லது மூன்று மடங்காகத்தான் அதிகரித்திருக்கிறதென்று சொல்லப்பட்டது. நேசநாடுகள் மூழ்கடிப்பதைவிட மிஞ்சக்கூடியவகையில், கப்பல்களைக் கட்டிவிடக்கூடுமென்பதில் சந்தேகமேயில்லை. லண்டனிலும், வாஷிங்டனிலுமுள்ள பத்திரிகைகளின் தலையங்கம் எழுதுகிறவர்களின் மனதில் ஏற்பட்டிருக்கும் கவலையெல்லாம் யூ படகுகள் எவ்வளவு

மூழ்கடித்தாலும் நேசநாட்டின் சாமான் கப்பற்படை அழிந்துவிடாது என்றாலும் சாமான்களை ஏற்றிச்செல்லக்கூடிய கப்பல்களின் வசதிகள் விசேஷமாக பாதிக்கப்படுமென்று எண்ணுவதுதான்.

நியூ யார்க்கில் வெளியாகும் ஹெரால்ட்டிரிப்யூன் பத்திரிகை சொல்லுகிறபடி "தற்பொழுது சத்ருவின் நீர்மூழ்கிகளின் தொந்தரவை நாம் சமாளித்து வருகிறோம். எதிரியை முறியடிக்கவேண்டிய யுத்தத்தை நாம் இன்னும் ஆரம்பிக்கவில்லை."

நாம் இப்பொழுது தற்காப்பு முறையிலிருக்கிறோம். நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புகளை—ருஷ்யாவுக்கு உதவி, வட ஆபிரிக்கா மத்தியக் கிழக்கு, இந்தியா, சைனா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களுக்கு ஸப்ளை அனுப்புதல்—நிறைவேற்றக்கூடிய முறையில் யூ படகுகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திவிட்டோம். சமீபத்தில் வட ஆபிரிக்கா யுத்தத்தின் தேவைகளால் இந்தியாவிலுள்ள படைகளின் ஸப்ளைகள் பாதிக்கப்படவில்லையென்று பீல்ட் மார்ஷல் வேவல் சொன்னார். நாம் எதிரியின் தாக்குதலைச் சமாளித்து வருகிறோமென்பதற்கு இது அறிகுறி. யூ படகுகளின் நடமாட்டத்தை இன்னும் அதிகமாக அடக்கி புதிய பிரதேசங்களில் போர் தொடுப்பதற்கு வேண்டிய அளவு முஸ்தீப்புகளை அனுப்ப அதிக கப்பல்களை நாம் வைத்திருக்கவேண்டுமென்று நினைக்கிறோம். நாம் அம்மாதிரி கப்பல்களை கூடிய சீக்கிரம் சேர்த்துக்கொண்டு பூர்ணமான வெற்றியடையக் கூடாதென்று ஹிட்லர் கவலைப்படுகிறான். இதுதான் தற்கால நிலைமையின் அம்சம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 6—2—43-லிருந்து 12—2—43-வரை.

**ருஷ்யாவில்** எங்கே பார்த்தாலும் குதூஹலமாயிருக்கிறது. ருஷ்யத் தளகர்த்தர்கள் யுத்த தந்திரத்தாலும், ருஷ்ய வீரர்கள் கடும்போர் செய்ததாலும் ஜெர்மானியரை அடித்துத் துரத்தியதில் தேசமெங்கும் பெருமையாயிருக்கிறது.

இந்த வாரத்தில் அநேக ஸ்தலங்கள் பிடிபட்டுவிட்டன:—அஸாவ் கடற்கரையில், காயா, எயிஸ்க்; டிகோரட்ஸ்க்கினருகில், காமஸ்காயா; வாரனேஷ் போர்முனையில் கூபியான்ஸ்க், ஷிக்ரி, கூர்ஸ்க்; யூக்ரேன் தீரத்தில், பாடாயாஸ், லிஸிசான்ஸ்க், பார்வென்கோவோ, பலாகிளாயா, க்ராமஸ்காயா; கார்காவின் அருகில் பாடேன், கொரோஷா, பயில்கொராட். 80-நாட்களுக்குள்ளாக 1,000-மைல் பரவியிருந்த யுத்தகளம் 400-மைலுக்கு சுருங்கிவிட்டது. குபான் மாகாணம் கைப்பற்றப்பட்டுவிட்டது. இங்கே, ஜெர்மன் சைனியங்கள் இரண்டு பாகங்களாகப் பிளக்கப்பட்டு, ஒரு பாகம் கெர்ச் ஜலசந்தியிலும், மற்றொன்று டான் நதிக்கரையையடுத்தும் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கருங்கடலின் கரையிலிருக்கும் நோவோரோஸிஸ்க் நகரத்துக்குக் கப்பற்படை உதவியைக் கொண்டு ருஷ்யர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். யூக்ரேன் பிடிபட்டுக்கொண்டுவருகிறது. கடைசியாய்க் கிடைத்திருக்கும் சமாசாரத்தின்படி ருஷ்யத் துருப்புகள் ராஸ்டாவ் நகரத்தை இப்பொழுது தாக்கிக்கொண்டிருக்கின்றன. அதற்கு கிழக்கேயுள்ள ஒரு கிராமமும் பிடிக்கப்பட்டுவிட்டது. கூட்டம் கூட்டமாக ஜெர்மானியர்கள் ராஸ்டாவைவிட்டு வெளியேறுவதாயும் தெரிகிறது. பார்த்தால் சண்டைபோடாமலே நகரம் காலி செய்யப்பட்டுவிடலாமென்று தோன்றுகிறது.

**டிரிபோலிடானியாவிலிருந்து** எதிரிகள் பூராவாக விரட்டப்பட்டுவிட்டார்கள். கடைசியாகத் தாக்கப்பட்டவிடம் கடற்கரையோரமாகவுள்ள சதுப்பு நிலம். இங்கே பீரங்கிகளைக்கொண்டும் காலாட்படைகளைக்கொண்டும் விரட்டப்பட்டார்கள். இவர்களை ஆபிரிக்கக் கண்டத்திலிருந்தே விரட்டிவிட நமது



சைனியங்களுக்குப் பீரங்கிகளும், மோட்டார் வாகனங்களும் சேகரிக்கப்படுகின்றன. எதிரிக்குச் சாமான்கள் கொண்டுவரும் கப்பல்கள் விமானங்களாலும், கப்பற்படையாலும் தாக்கப்படுகின்றன.

**டூனிஸியா.**—இங்கே கேபிஸை நோக்கிச்சென்ற அமெரிக்கப் படையொன்று தடுக்கப்பட்டது. வட டூனிஸியாவிலுள்ள ஒரு சிறு மலைக்குன்றாகிய ஜெபல் மான்ஸோரை எதிரி தன்வசமாக்கிக்கொண்டான். ஆனால், நம்முடைய படைகள் சிதைபடாமல் அதன் பக்கத்திலேயே நிலைத்து நிற்கின்றன. பிசான்-ஆஸல்ஷியா பிராந்தியத்தில் துருப்புக்கள் கைகலந்துகொண்டிருக்கின்றன. கெபிர் நதிக்கரையிலுள்ள ஒரு முக்கியமான மலைச்சிகரத்தை பிரெஞ்சுத் துருப்புகள் கைப்பற்றிவிட்டன.

**ஸாலமன்ஸ்.**—இந்தவார ஆரம்பத்தில் அமெரிக்கத் துருப்புகள் கூடால்கனாலில் டிடியைப் பிடித்துக்கொண்டு உஹஸானி நதியைநோக்கி முன்னேறின. கடைசியாய்க்கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து ஜப்பானியர் கூடால்கனால் தீவையே காலி செய்துவிட்டதாகத் தெரிகிறது. இப்பொழுது அங்கே சண்டை நின்றுவிட்டது. முடிவுச் சண்டையில் 4,000—6,000 ஜப்பானியர்கள் விரட்டப்பட்டு சரணமடையாவிட்டால் உயிர்விடவேண்டிய ஸ்திதிக்குள்ளாகிறார்களாம்.

ஜப்பானுக்கு இது தென்மேற்கு பஸிபிக்கில் இரண்டாவது தோல்வியாகும். முதல் தோல்வி நியூகினியில்.

**நியூகினி.**—வாண்டுமி—மூபோ பிரதேசத்தில் சண்டை நடந்துகொண்டிருக்கிறது. வா என்னும் விமானநிலயத்தைத் தாக்கியபோது ஜப்பானியர் 41-விமானங்களை இழந்தார்கள். 7 இரவுகளில் இடைவிடாது ரபால் தாக்கப்பட்டது. மூபோ வா பிரதேசத்தில் சில்லரைச் சண்டை நடக்கிறது. தூலாக்கடலில் 1,000-டன் நிறையுள்ள ஜப்பானியச் சாமான் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

**சீனு.**—சீனு-பர்மா எல்லையில் சண்டை மறுபடியும் கிளம்பியிருக்கிறது. ஷான்டங், ஹோனன், கியான்ஸு முதலியவிடங்களில் ஜப்பானியப்படைகளும், மூன்று தாய்நாட்டுப் படைகளும் குழுமியிருக்கின்றன. யூனன்-பர்மா எல்லையில் டாமாங்லங் பிராந்தியத்தில் நடக்கும் கடும் போரில் பிப்ரவரி 1-ம் தேதியன்று சீனத் துருப்புகள் ஜப்பானியரைத் திருப்பி விரட்டிவிட்டன. கிழக்கு குவான்டங்கில் சின்ஹா என்னுமிடத்திலும், ஷான்டங் மாகாணத்தில் செங்யூவிலிருந்து ஜப்பானியர்கள் விரட்டப்பட்டார்கள். எதிரி விமானங்கள் குவைலினைத்தாக்கின.

**பர்மா.**—குட்காய், வாங்லிங், கென்டங் முதலான இடங்களுக்குச் சமீபத்தில் ரெயில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஜப்பானியத் துருப்புகள் அமெரிக்க விமானங்களால் தாக்கப்பட்டன. பிப்ரவரி 8-ம் தேதி கலடின் நதிக்கருகேயுள்ள பவுக்டாவ்கியி என்னும் ராணுவ ஸ்தலத்தை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. பர்மாவின் மற்ற சில இடங்களிலும், அரகான்கரையிலும் நமது துருப்புகள் தாக்கின. அதே தினத்தில் ஜப்பானிய விமானங்கள் அரக்கான் எல்லையிலுள்ள ஒரு இடத்தைத் தாக்கின. ஆனால், சேதம் மட்டு.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**31—1—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

இரவில்.—சுரங்க வேடிகள் போடுதல்—விரோதி நாடுகளுக்குச் சுற்றியுள்ள கடற் பிரதேசங்கள்.

**வட ஆபிரிக்கா (North Africa),**

**மத்தியதரைக்கடல். (Mediterranean).**

கப்பற் துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta).

விமான நிலயம்.—கேப்ஸ் (Gabes).

ராணுவ இலக்குகள்.—டூனிஸ் (Tunis).

துறைமுகம்.—ஸிஸிலியி (Sicily) லுள்ள மெஸ்ஸினு (Messina).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை பூராவும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியம்.—கிரிஸ்டல் அருவி (Crystal creek).
விமான தளம்.—டிமோரிலுள்ள கோபாங் (Koepang).
முண்டா (Munda).
ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) தீவு.

**1—2—43.** (திங்கட்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

இரவில்.—விரோதிக் கப்பல்கள்—டச்சு (Dutch) பெல்ஜியம் (Belgium) கடற்கரைகள்.

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விரோதிக் கப்பல்கள்.—டுனிஸியா (Tunisia) வின் கடற்கரையோரம்.
கப்பற் துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta).
துணைக்காவலுடன் கூடிய வியாபாரக் கப்பல்கள்—ஸிஸிலி (Sicily)க் கருகாமையில்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை பூராவும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), கேப் கிளொஸ்டர் (Cape Gloucester).
விமான நிலயம், பட்டணம்.—நியூகினியிலுள்ள பின்ஸ்சேபன் (Finschhafen), நியூகினியிலுள்ள முபோ (Mubo) பிரதேசம்.
கப்பற் துறை.—ரங்கூன் (Rangoon).
அந்தமான் தீவுகள் (Andamans) அக்யாப் (Akyab) தீவு.

**2—2—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ப்ரூஜெஸ் (Bruges).
அபிவில்லி (Abbeville) (2 விரோதி விமானங்கள் சேதமாயின).
இரவில்.—தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne).

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல்கள்.—கேப்ஸ் (Gabes) பிரதேசம்.
இருப்புப் பாதைகள்.—ஸ்பாக்ஸ் (Sfax) பிரதேசம்.
ஒரு எண்ணெய்க் கப்பல் தெற்கு இதாலி (Italy)-க்குச் சமீபத்தில்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை பூராவும்.

**தூரக்கிழக்கு (Far East).**

வனகனுவ் (Vanakanau) விமான நிலயம்—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul).
மோட்டார் படகுகள்.—ஓபென் பே Open Bay).
படகுகள்.—லோலாபா (Lolabau) தீவுக் கருகில், காஸ்மாடா (Gasmata).
கப்பற் துறைகள், சாமான் குவியல்கள்—காய் தீவு (Kai Island), காகினுப் (Kaukenau), பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung), மற்றும் 3 கிராமங்கள்.
அக்யாப் (Akyab) தீவு.

**3—2—43.** (புதன்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—இலக்குகள்—அபிவில்லி (Abbeville).
விமான நிலயம்.—ஓமார் (Omar).
இரவில்.—கடற்படைதளம், யூ படகுகள் கட்டுமிடம்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல்கள்.—டுனிஸியாவிற் கருகாமையில்.
விமானநிலயம்—கேப்ஸ் (Gabes).
கப்பற் துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta).
விரோதிக் கப்பல்கள்—மெஸ்ஸினா (Messina) துறைமுகத்தில்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை பூராவும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul) லாகுநாய் (Lakunai), ரபோபோ (Rapopo) காஸ்மாடா (Gasmata).
விமானங்கள் இறங்குமிடம்.—கேப் கிளொஸ்டர் (Cape Gloucester).
சைனியங்கள் இருக்குமிடம்.—ஆரு (Aru) தீவு, ஸாலமுவா (Sulamaua) பூயின் (Buin), ராதிடாங் (Rathedaung) ஆக்யாப் (Akyab) பிரதேசத்திலுள்ள கிராமங்கள்.

**4—2—43.** (வியாழக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—இலக்குகள்-வடமேற்கு ஜெர்மனி. (பல விரோதி விமானங்கள் நாசம். 5 பிரிடிஷ் விமானங்கள் நஷ்டம்).
இரவில்.—ஸப்மரைன் தளம்—லோரியான்ட் (Lorient).
ராணுவ இலக்குகள்—ரூர் (Ruhr) பிரதேசம்.
யுத்த தளவாடங்கள்—இதாலியிலுள்ள டூரின் (Turin).
இதாலியக் கடற்படை நிலயம்—ஸ்பீஸியா (Spechia).



**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல்கள்—டுனிஸியாவிற்கருகாமையில்.
கப்பற் துறைகள்—பிஸர்ட்டா (Bizerta).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை பூராவும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ரபால் (Rabaul) பிரதேசம்.
விமான நிலயங்கள்—நியூபிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), கேப் கிளொஸ்டர் (Cape Gloucester).
விமான நிலயம்—நியூ கினியிலுள்ள லே (Lae).
மூபோவா (Mubowau) பிரதேசம், டெனிம்பர் தீவுகளிலிருக்கும் பல விரோதி விமான நிலயங்கள்.
கப்பற் துறைகள்—ரங்கூன் (Rangoon).
விரோதித் துருப்புகள்—ராதிடாங் (Rathedaung)..
விமான நிலயம்—பர்மாவிலுள்ள மாக்வே (Magwe).
ரயில் பாலம்—பர்மாவிலுள்ள மிட்னி (Myitgne).

**—2—43** (வெள்ளிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—விரோதிக் கப்பல்கள்—டச்சுக் கடற்கரை.
சாமான் ஏற்றும் ரயில் வண்டிகள், ரயில் இன்ஜின்கள்—ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France).
இரவில்.—சுரங்க வெடிபோடுதல்-விரோதி கடற்பிராந்தியங்களில்.

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

(52 விரோதி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள பாலர்மோ (Palermo).
ரயில் வண்டிகள்—ஸிஸிலி (Sicily).
விமான நிலயம்—டுனிஸ் (Tunis).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை பூராவும்

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியம்—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
விமான நிலயங்கள்.—லே (Lae), ஸாலமுவா (Salamaua).
கப்பல் துறைகள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
காஸ்மர்டா (Gasmata).
ரயில் பாலம்.—பர்மாவிலுள்ள மிட்னி (Myitgne).
போக்குவரத்து.—ரங்கூனுக்கும் மாண்டலேயிக்கும் இடையே.
இருப்புப்பாதைகள்.—வட பர்மாவிலுள்ள மெஸா (Meza) முதலிய பல இடங்கள்.

**6—2—43.** (சனிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—ரயில் பாதைகள், போக்குவரத்து சாதனங்கள்—வட பிரான்ஸ் (France).
பெல்ஜியம் (Belgium).
கப்பல்கள்.—பிரெஞ்சுக் கடற்கரை.
இரவில்.—ராணுவ இலக்குகள்—ரைன்லாந்து (Rhineland).
கடற்கண்ணி போடுதல்.—விரோதியின் நாடுகளைச் சுற்றியுள்ள கடற்பிராந்தியங்கள்.

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல் துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta).
ரயில் வண்டிகள்.—ஸிஸிலி (Sicily).
வேவு பார்த்தல்.—டுனிஸியா போர்முனை.

**ருஷ்யா (Russia).** (30—1—43-லிருந்து 6—2—43 வரை விரோதிக்கு நஷ்டம்—149 விமானங்கள், நேசநாடுகளுக்கு 93 விமானங்கள்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை பூராவும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள வா (Wau) (26 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; மற்றும் 15 விமானங்கள் சேதமாயின).
விமான நிலயங்கள்.—ஸாலமன்ஸ் தீவிலுள்ள பூகா (Buka), பூயின் (Buin).
நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul) பிரதேசம்.
ஒரு சிறிய கப்பல்.—ஓபன் பே (Open Bay).
விமான நிலயங்கள்.—லே (Lae).
முபோ (Mubo) பிரதேசம்.
ஒரு சிறிய கப்பல்.—நியூ கினியிலுள்ள பின்ஸ்சேபனுக் (Finschhafen) கருகாமையில்.
ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் தீவுகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.
ராதிடாங் (Rathedaung) பிரதேசம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**1—2—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனின் ஒரு இடத்திலும் விமானத் தாக்குதலே இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமான நிலயம்.—போன் (Bone).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனூர் (Gudalcanar).

**2—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடவடிக்கைகளைப்பற்றி தகவல் ஒன்றுமில்லை.

**ருஷ்யா (Russia).**

டொனெட்ஸ் (Donetz) பிரதேசத்திலிருக்கும் ஜெர்மன் ராணுவத்திற்கு உதவியாக.

**தூரக்கிழக்கு (Far East).**

நேச நாட்டுச் சைனியம்.—மூபோ (Mubo).

**—2—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் வட கிழக்குக் கடற்கரை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

நேச சைனியம்.—தென் டுனிஸியா (Tunisia).

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**—2—43** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரை ஜில்லாக்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England).

ஒரு இடம்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia).

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமானச் சண்டைகள்.—டுனிஸியப்போர் முனைகள்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டை.—ஒய்டு (Wide) வளைகுடா (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**5—2—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடவடிக்கைகளைப்பற்றி தகவல் இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

முன்னணியிலிருக்கும் நேச சைனியம்;—டுனிஸியாவிலுள்ள பல போர் முனைகள்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸாலமன்ஸிலுள்ள கூடால்கனூர் விமான நிலயம்.

நேச சைனியம்.—பர்மாவிலுள்ள பாயுநதி பிரதேசம்.

**6—2—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமானத் தாக்குதலே இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa),**

ஜெபல் மான்ஸூர்.—(Dzebel Mansour) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—கூடால்கனூர் (Gudal-canar)

**7—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

பிரிடிஷ் 8-ம் சைனியத்தின் முன்னணித் துருப்புகள்.

**ருஷ்யா (Russia).**

ருஷ்யச் சைனியங்கள்.-ருஷ்யாவின் தெற்குப் போர்முனை.

**தூரக்கிழக்கு (Far East).**

ஆஸ்திரேலியா (Australia) விலுள்ள டார்வின் (Darwin) துறைமுகம். (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

---

## யுத்தக் குறிப்புகள்.

**இங்கிலாந்தில் பறபறப்பு.** காஸபிளாங்கா, அடானு, கெய்ரோ மகாநாட்டுகளுக்குப் பின் இங்கிலாந்தில் பறபறப்பும் புதிய நடவடிக்கைகளும் உண்டாகியிருக்கின்றன. ஜனவரி 30-ம் தேதி பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து மிஸ்டர், காலின் வில்ஸ் என்பவர் ஒலிபரப்பியதாவது :—இங்கிலாந்தில் இப்பொழுது நடமாட்டமும் நடவடிக்கைகளும் அதிகமாகியிருக்கின்றன. யுத்த வண்டிகளில் ஏறிக்கொண்டு தெருக்களிலும் நாட்டுப் புறங்களிலுள்ள தெருக்களிலும் சுற்றிக்கொண்டிருக்கும் துருப்புகள் எந்த நிமிஷத்



திலும் ஊரைவிட்டகன்று எங்கேயாவது ஒரு யுத்தகளத்தில் தலைகாட்டக் கூடும். ஆகாயத்தில் பலதினுசு பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள் வட்டமிட்டுக்கொண்டும் எதிரி நாடுகளைத் தாக்க புறப்பட்டுக்கொண்டும் அல்லது எதிரி விமானங்களை நாசமாக்கிய பிறகு திரும்பி வந்துகொண்டுமிருக்கின்றன.

சில இடங்களில் 'நாம் ஜெர்மன் விமான தளங்களுக்கு வெகு சமீபத்திலிருக்கிறோம்' என்று கூக்குறலும் கேட்கிறது. ஜெர்மானியர்கள் யுத்தத்தை ஜயிக்கக்கடைசியாகப் பிரயத்தனம் செய்வதற்காகவோ அல்லது தோல்வியடைந்து வருவதற்காக கடூரமாக பதிலுக்குப் பதிலாகவோ பிரிடனை மறுபடியும் விமானங்களால் தாக்கு வார்களென்ற எண்ணமும் கிளம்பியிருக்கிறது.

பார்லிமெண்டு சபையிலும் பறபறப்பு ஏற்பட்டிருக்கிறது. மந்திரிகள், காரியதரிசிகள், குமாஸ்தாக்கள், இன்னும் மற்ற தூதர்களும் சிப்பாய்கள் போல் பார்லிமெண்டு சபைக் கட்டடத்திலிருந்து வெளியேறி உலகத்தின் பல பாகங்களில் எதிர் பாராத வண்ணம் காணக்கூடும். அவர்கள் அங்கு செல்லுவதற்குக் காரணம் ராஜீய முறையில் பதில் மரியாதை செய்வதற்கில்லை. தஸ்தாவேஜிகளை ஏற்படுத்துவதற்கில்லை. ஆனால் முக்கியமான சில நிகழ்ச்சிகளை ஆரம்பம் செய்துவிடத்தான்.

சர்ச்சில் பிரபு அவர்கள் ஒரு விசேஷமான தத்வமாக ஆகிவிட்டார்கள். அவருடைய ரூபமானது கண் முன்னால் நிற்பதைவிட்டு திடீரென்று மறைந்து விடுகிறது. பிறகு அவர் விமான தளத்திலோ, ரயில்வே ப்ளாட்பாரத்திலோ அல்லது பார்லிமெண்டு சபை கட்டடத்திலோ, உலாவி வருவதாக மறுபடியும் ஜனங்களுக்குத் திடீரென்று தகவல் கிடைக்கிறது. அவர் எங்கேயோ போயிருந்தார், ஏதோ ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பிவிட்டார். அவர் கால்வரம்பினாலும் தேச வரம்பினாலும், அல்லது மரியாதை வரம்பினாலும், முன் பழக்க வழக்கங்களாலும் பாதிக்கப்பட்டவரல்ல. ராஜீய விஷயங்களில் நிதான நோக்கமுள்ளவராகயிருந்த போதிலும் ராஜ தந்திரத்தில் ரொம்பவும் விசால புத்தியுள்ளவர். வேகமாகச்சென்று நேராடி விஷயங்களைக் கவனிப்பதிலும் அதிக ஞாந்தார்.

இவ்விதமாக சர்ச்சில் விசித்ர மனிதனாக ஆகிவிட்டார். அதி வேகமாகச் செல்லுகிறவர், அதைவிட வேகமாக நிகழ்ச்சிகளைச் செய்வதை ஆதரிக்கிறவர். லண்டனிலிருந்து விமானத்தில் கஸாபிளாங்காவுக்கும் அங்கிருந்து கெய்ரோ அடானு, ஸைப்ரஸுக்குச் சென்று, திரும்பி கெய்ரோக்கு வந்து டிரிபோலிக்குச் சென்று வெற்றியுடன் வந்திருக்கும் சாம்ராஜ்யத் துருப்புகளைப் பாராட்டியும் அல்ஜியர்ஸுக்குச் சென்று அங்கே வித்தியாசங்களைச் சமரசப்படுத்தி, திருத்தியமைத்துவிட்டுப் பிறகு லண்டனுக்குத் திரும்பினார். அகமகிழ்ச்சியுடனும், ஆனால் வெய்யிலால் வாடிப்போன முகமும் காரியம் நிறைவேறியதில் விசேஷமாக திருப்தியடைந்தவர் போலும் அவர் காணப்பட்டார்.

யுத்த மத்தியில் சமாதான கால நடவடிக்கைகளையும் அவர் மறக்கவில்லை. வட ஆபிரிக்காவில் மகாநாடு நடக்கும் மத்தியில் அவகாசம் ஏற்பட்ட பொழுது மாரகாஷ் என்னும் இடத்திற்குச் சென்று உரைபனி மூடியிருக்கும் அட்லாஸ் மலையையும் பிரதேசத்தின் அழகான தோற்றத்தையும் கவனித்தார்.

வி வி வி வி வி வி வி

**வட ஆபிரிக்காவில் மாறுதல்கள்.** சர்ச்சில் செய்த நடவடிக்கைகளில் சில வெளியாகின்றன. பூராப்பிரயோஜனமும் நாளடைவில்தான் தெரியும். வட ஆபிரிக்காவில் சேனைக்கு உணவு சேகரிக்கும் இலாகா உயர்தர நிர்வாகிக்குப்பதிலாக சமஷ்டி அரசாங்கம் ஏற்பாடாகி ஜெனரல் கிராடு ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு துருப்புகளுக்கு ராணுவ தளகர்த்தராக நியமிக்கப்பட்டுவிட்டார். கிராட்டின் கொள்கையாதெனில் எல்லாப்போர்முனைகளிலும் யுத்தத்தைத் துவக்குங்கள், எல்லா பலத்தையும் திரட்டுங்கள்—பிறகு ராஜீய சிக்கல்களை நிவர்த்திசெய்து கொள்ளலாம் என்பதுதான். ஐரோப்பாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள யுத்த ரங்கங்களில் அமெரிக்கப்படைகளின் தலைவர் ஒருவராயிருந்ததுபோக இப்பொழுது இருவகையாக, அதாவது ஐரோப்பியப் போர்முனையென்றும் வட ஆபிரிக்கப் போர்முனையென்றும் ஜெனரல்கள்

ஆண்ட்ரூஸூம், ஈசன் ஹோவரும் அந்த இடங்களில் தலைமைவகிக்கும்படிக்கும் ஏற்பாடாகியிருக்கிறது. ஈசன ஹோவர் டூனிஸியாவில் பிரிடிஷ் முதல் சேனையுள்பட எல்லா சேனைகளுக்கும் தலைமைவகிப்பார்.

வி வி வி வி வி வி வி

**சர்ச்சிலின் ஜோஸியம்.** ராணுவ நிர்வாகத்தில் மாறுதல்கள் செய்வதற்கு மட்டும் சர்ச்சில் ஆபிரிக்காவுக்குச் செல்லவில்லை. டிரிபோலியில் எட்டாம் படைக்கு சர்ச்சில் பிரசங்கம் செய்தபொழுது அவர் சொன்னதாவது "யுத்தத்தின் போக்கை நீங்கள் விசேஷமாக மாற்றிவிட்டீர்கள். நான் கஸாபிளாங்காவில் சாம்ராஜ்யத் துருப்புகளின் தலைவருடனும் அமெரிக்காவின் ஜனாதிபதியுடனும் பேசியபொழுது எட்டாம் படை டிரிபோலிக்கு வந்த தகவல்கேட்டு எங்கள் விவாதங்கள் விசேஷ மாறுதல்களடைந்தன. வருங்காலத்தில் திருப்திகரமான நடவடிக்கைகளுக்கு வழி ஏற்பட்டது.

"வருங்காலத்தில் நாம் மிகவும் சிரமப்படவேண்டும். 1,400 மைல் தூரம் எகிப்திலிருந்தும் டிரிபோலிடானுவிலிருந்தும் நிற்காமல் பின்வாங்கிய ரோமல் டூனிஸியாவைக் காப்பாற்ற வந்திருப்பதாகக்காட்ட முயற்சிக்கிறான். டூனிஸியா கடற்கரையோரமெல்லாம் ஏராளமான ஜெர்மன் துருப்புகளும் இதாலியத் துருப்புகளும் முன்போல முஸ்தீப்புகளுடனில்லாத போனாலும் மேல் மேலும் வலுவடைந்து வருகின்றன. டூனிஸியாவுக்கு மற்றொரு பாகத்தில் உங்களுடைய படையும் முதல் படையும் அமெரிக்கத் துருப்புகளும், பிரெஞ்சுத் துருப்புகளும் சேர்ந்து மகத்தான முயற்சிசெய்து பிஸர்ட்டாவுக்கும், டூனிஸுக்கும் 30, அல்லது 40 மைல்களுக்குச் சமீபம் வந்துவிட்டன.

"உங்களுடைய வெற்றிகள் இதோடு முடியப்போவதில்லை. வெவ்வேறு பக்கங்களிலிருந்து முன்னேறும் துருப்புகளின் உதவியால் ஆபிரிக்காவிலிருந்து ஒவ்வொரு ஜெர்மானியரையும் ஒவ்வொரு இதாலியரையும் விரட்டியோ அல்லது நாசம் செய்துவிடுவோமென்று நம்பிக்கையிருக்கிறது."

வி வி வி வி வி வி வி

**அடானுக் கூட்டத்தின் விளைவுகள்.** துருக்கிக்குச் சர்ச்சில் சென்றதிலிருந்து ஜெர்மனியில் குழப்பம் உண்டாகியிருக்கிறது. யுத்தம் செய்துகொண்டிருக்கும் ஜெர்மனியில் விசேஷ பறபறப்பு ஏற்பட்டிருக்கிறது. துருக்கியிலிருக்கும் ஜெர்மன் தூதராகிய வான்பேபன் நிகழ்ச்சிகளைப்பற்றி அறிவிக்குமாறு பெர்லினுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**ஸைப்ரஸுக்கு விஜயம் செய்ததின் முக்கியத்வம்.** இதன் முக்கியத்வம் "தீரமான கிரீஸ்" என்று சர்ச்சில் சொல்லுவதிலிருந்தும் நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகைகளில் பகிரங்கமாய் எழுதியிருக்கும் வியாக்யானத்திலிருந்தும் வெளியாகிறது. "மத்தியதரைக்கடலில் ஆறுமாதமாக நடந்த யுத்தங்களின் விளைவு சர்ச்சில் ஸைப்ரஸுக்கு வந்ததிலிருந்து நன்கு விளங்கும். அச்சுநாடுகள் வசமிருக்கும் தீவுகளெல்லாம் தங்கள் தற்காப்பைப்பலப் படுத்திவருகின்றன. நேசநாடுகள் வசமிருக்கும் தீவுகளெல்லாம் எதிர்ப்பதற்காக பலமுனைகளைத் தயார் செய்துவருகின்றன. ஸைப்ரஸில் வலுவானமுஸ்தீப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. அச்சுநாடுகளின் விமானபலம் குறைந்துவருகிறது. மத்தியதரைக்கடலிலுள்ள நேசநாட்டுத் தீவுகள் மூழ்கடிக்க முடியாத விமானம் தாங்கிக்கப்பல்கள். இவைகளிலிருந்து தென் ஐரோப்பாவை நமது விமானங்கள் தாக்கக்கூடும்.

வி வி வி வி வி வி வி

**மற்றொரு ஸெடான் போர்.** ஸ்டாலின்கிராடு வீழ்ச்சியானது ஜெர்மானியருக்கு மற்றொரு ஸெடான், டானென்பர்க் யுத்தம்போல் ஆகிவிட்டது. ஹிட்லர் அதிகாரம் வகிக்க ஆரம்பித்த 10-ம் ஆண்டு விழா அன்று ஸ்டாலின்கிராட்டில் ஜெர்மானியர்கள் பூராவாக சரணடைந்ததும் பீல்ட் மார்ஷெல் என்ற பட்டம் பெற்றதினத்தன்று பாலஸ் கைதியானதும்



விசேஷமானவை. ஸ்டாலின்கிராட்டில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டங்களின் விவரங்கள் ருஷ்யர்கள் சொல்லுவதுபோல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜெர்மனியின் கியாதிபெற்ற 6-ம் படை அழிந்துவிட்டதென்பது நிச்சயம். ஸ்டாலின்கிராட்டிலிருந்து 20 டிவிஷன் கொண்ட ருஷ்யத்துருப்புகள் டானெட்ஸ் நதி பிரதேசத்திலும் காகஸஸிலும் பின்வாங்கும் ஜெர்மன் துருப்புகளுக்கு இடையூறுசெய்ய விடுவிக்கப்பட்டதென்பதும் நிச்சயம்.

ஜனவரி 25-ம் தேதி திங்கட்கிழமையானது கரிநாளென்று ஜெர்மானியர் சொன்னது தவறல்ல. ஸ்டாலின்கிராட்டின் வீழ்ச்சியைப்பற்றி ஜெர்மனி பூராவும் 3 நாட்களுக்கு ஒப்பாரி வைக்கவேண்டுமென்று கோயபல்ஸ் உத்தரவு போட்டதும், அவன் உத்தரவுப்படி பிப்ரவரி 4-ம் தேதியன்று ஜெர்மன் ஒலிபரப்பு நிலயங்கள் இடைவிடாது அனுதாப கோஷ்டிகள் வரிசை வரிசையாகச் செல்லுவதை அறிவித்ததும் சகஜம்தான். ட்யூஷே ஆல்ஜிமெயின் ஸிட்டங் என்னும் பத்திரிகையில் "வெங்கலம் போன்ற திடமனது வேண்டுமென்று" எழுதியிருக்கிறது. ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பாரிஸ் வெயர்லெஸ் நிலயம் உறைக்கிறது. "ருஷ்யாவின் சமவெளிகளிலும் போலந்தின் காட்டு சதுப்பு நிலங்களிலும், ஜெர்மனியின் மைதானங்களிலும், பிரான்ஸின் வயல்களிலும், தேவையானால் ஸ்பெயின் ஆலிவ் தோட்டங்களிலும் ருஷ்யத் துருப்புகளை ஜெர்மானியர்கள் எதிர்ப்பார்கள்" என்றது.

வி வி வி வி வி வி வி

**கடுமையான உத்தரவுகள்.** பூராவாக ஆள் சேமிப்பதற்காக, பொது ஜனங்களுக்குத் தேவையில்லாத எல்லாத் தொழில் முறைகளும் நிறுத்தப்படும் என்று கோயபல்ஸ் உத்தரவிட்டிருக்கிறார். எல்லாச் சாப்பாட்டு இடங்களும், தங்குமிடங்களும், ஹோட்டல்களும், உல்லாச சாலைகளும், இரவில் கூடும் சங்கங்களும், குடியல் ஸ்தலங்களும் மூடப்பட்டுவிட்டன. பாங்கிகளும், இன்ஷ்யூர் செய்யும் ஸ்தாபனங்களும் குறைக்கப்படும்.

வி வி வி வி வி வி வி

**திடுக்கிடல்.** ஸ்டாலின்கிராட் வீழ்ச்சியைக்கேட்டு ஜெர்மானியர்கள் திடுக்கிட்டார்கள். பிரிடிஷ் மஸ்கிடோ வெடி விமானங்கள் முதல் முதலில் பெர்லினைப் பகலில் தாக்கியதும் காஸபிளாங்காவில் நிபந்தனையற்ற சரணாகதி மகாநாடு நடைபெற்றதும் திகிலை அதிகப்படுத்தின. நாஜிகள் துக்கித்துக்கொண்டு கொண்டாடின 10-ம் வருஷத்தினத்தன்று பிரிடிஷ் மஸ்கிடோ வெடி விமானங்கள் பெர்லினைத் தாக்கிய பொழுது பெர்லின் ரேடியோவில் ஏற்பட்ட குழப்பத்தைப்பற்றி பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் வெளியிட்டதாவது "உறுக்கமான சங்கீதம் 10 நிமிஷம் வாசித்த பிறகு மார்ஷல் கோயரிங் பேசுவதாக வெளியிடப்பட்டது. இது சொல்லி முடியும்முன் திடீரென்று பேச்சு அடங்கிற்று. ஜனங்கள் குழப்பமாகக் கூச்சல் போட ஆரம்பித்தார்கள். பிறகு நிகழ்ச்சிகள் ஸ்டுடியோவிற்கு மாற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஒரு மணி நேரம்வரை வீரம் பெருகிய கிராமபோன் பிளேட்டுகள் வைக்கப்பட்டன. நடுவில் நான்கு தடவைகள் கோயரிங் பிரசங்கம் தாமதிக்கப்பட்டுவிட்டதென்றும் கூடியசீக்கிரம் அவர் பேசுவார் என்றும், ஒருவர் வெளியிட்டார். இந்திய மணிப்படி 5-30 மணிக்கு ஐந்து நிமிஷங்கள் முன்னால் மறுபடியும் கோயரிங் பிரசங்கம் செய்யப்போவதாக வெளியிடப்பட்டது. தாமதத்திற்குக் காரணம் வெளியிடாமலே பிரசங்கம் தொடரப்பட்டு 1½ மணி நேரம் நடைபெற்றது. வழக்கம்போல் நடுவில் கரகோஷங்கள் ஏற்படவில்லை. இதிலிருந்து ஸ்டுடியோவின் பத்திரமான அறையிலிருந்து பிரசங்கம் செய்யப்பட்டதென்று தெரியவருகிறது."

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளின் புளுகுகள்.** ஜெர்மனிக்கு ஏற்பட்ட தோல்வியை மறைப்பதற்கு வழக்கம்போல் ஜெர்மனி பொய் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டது. ஸ்டாலின்கிராட் வீழ்ச்சிக்குக் காரணம் ஒரு மனிதனுடைய பிடிவாதம் என்பதை மறந்து தெர்மாபோலியில் நடந்த யுத்தம் போல் ஜெர்மன் படையை மூன்று மடங்குக்கு சமமான 80 டிவிஷன்கள்கொண்ட

ருஷ்யப்படைகள் எதிர்த்தன என்று சொல்லப்படுகிறது. ஆபிரிக்காவில் ஏற்பட்ட தோல்வியை மறைக்க ரோமல் மேற்கு முகமாய் துருப்புகளைக்கொண்டு போனானென்றும் டிரிபோலியை சாமர்த்தியமாய்க் காலிசெய்துவிட்டானென்றும் ஸிஸிலியிலிருக்கும் படைகளைப் பலப்படுத்த லிபியாவை தியாகம் செய்தானென்றும் சொல்லப்படுகிறது. ரோமல் ஏராளமான படைகளையும் முஸ்தீப்புகளையும் ஓடும் சமயத்தில் விட்டுப்போட்டு அழிந்ததுபோக பாக்கிப்படைகளுடன் வந்தானென்பதையும் ஸிஸிலியிலுள்ள நேசத்துருப்புகளுக்கு ஒத்தாசையாக மாண்ட் காமரி பெருவாரியான துருப்புகளையும் நல்ல முஸ்தீப்புகளையும் கொண்டு வந்திருக்கிறானென்பதையும் மறந்து விட்டார்கள்போலும். அச்சுப் புரளிகள் அல்லது பிரட்டாகச் சொல்லுதல் இத்துடன் நிற்கவில்லை. கஸாபிளாங்காவுக்கு ஸ்டாலினும், சியாங்கை ஷேக்கும் வித்தியாசங்களை முன்னிட்டுத்தான் வரவில்லை என்றும் ராணுவ அவசியத்தால வரவில்லையென்பது பொய்யென்றும், கஸாபிளாங்காவில் நடந்த விவாதங்கள் வெறும் பேச்சுகளென்றும் சர்ச்சில் துருக்கிக்குச் சென்று துருக்கியில் விரோதப்பான்மை உண்டாக்க வீண் பிரயத்தனம் செய்தாரென்றும் சொல்லிற்று. போதுமான உதவி தனக்கு வந்துசேரவில்லை என்று கிராட் புகார் சொல்லுகிறாரும். ஆனால் வாஸ்தவமாக நேசநாடுகள் அவனுக்கு அனுப்பிய உதவிகளுக்காக கிராட் வந்தனம் செலுத்தியிருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**விமானத் தாக்குதல்கள்.** தற்காப்பு முறையில் சிறந்த ஏற்பாடு எதிர்ப்பு யுத்தம் என்ற முறைப்படி வில்ஹெல்ம்ஷேவன், டஸ்ஸல்டார்ப், லோரியான்ட், எம்டன், ஹாம்பர்க், கொலோன் முதலிய துறைகளிலுள்ள யூ படகுகளை சென்ற வாரம் பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. கப்பல்களுக்குத் துணையாக வரும் விமானங்கள் கப்பல்களைப் பத்திரமாகக் கொண்டுபோய் பாதுகாப்பது மட்டுமல்ல, யூ படகுகளையும் கண்டுபிடித்து வேட்டையாடி அழித்து வருகின்றன. பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்காவின் 8-வது விமானப்படையும் யூ படகுகள் கட்டுமிடங்களையே தாக்கி நஷ்டம் விளைவித்திருக்கின்றன. ஜனவரி 25-ம் தேதியன்றுதான் முதல் முதலாக அமெரிக்க விமானங்கள் ஜெர்மனியிலுள்ள கப்பல் நிலையமான வில்ஹெல்ம்ஷேவனைத்தாக்கின. அன்று இரவு பிரிடிஷ் விமானப்படை தாக்கிய டஸ்ஸல்டார்ப்பானது ஸ்டால்வெர்க் நீகர் எஃகு உருக்கும் கம்பெனியிருக்குமிடம். இதை பீனிக்ஸ் தொழிற்சாலை என்றும் சொல்லுவது. லோரியான் என்பது அட்லாண்டிக் மகா சமுத்திரத்தை நோக்கியிருக்கும் பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள யூ படகு தளம். எம்டன் என்னுமிடம் கப்பல் தளமாகயிருப்பதோடு டீஸல் எஞ்ஜின்களையும், மின்சாரம் திரட்டும் கருவிகளையும் இன்னும் இதர மின்சார முஸ்தீப்புகளையும் தயார் செய்து யூ படகுகள் கட்டப்படும் தொழிற்சாலையாகிய நார்ட்ஸீ வெர்க்குக்கு அனுப்புகிறது. ஹாம்பர்க் என்பது கப்பல் தளம். இதில் ப்ளாம், வாஸ் கப்பல் கட்டும் தொழில்சாலைகளுமிருக்கின்றன. கலோனில் யூ படகுகளை ஓட்டும் ஹம்போல்ட் டீஸல் எஞ்ஜின் தொழிற்சாலையிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**யுத்த டக்னிஷியன்கள் பயிற்சி.** யுத்தம் நிமித்தமாய் இந்தியத் தொழில் முறைக்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் குறைவாயிருந்தபோதிலும் அநேகர்கள் நன்றாய்ப் பயிர்ச்சியளிக்கப்பட்டு வருகிறார்கள். இங்கிலாந்தில் பெவின் ஏற்பாட்டின்படி அநேகர் தேர்ச்சிபெற்று வருவதோடு இந்தியாவிலும் தேசீயத் தொழிலாளர் சங்கமானது இந்தியாவில் அநேக முக்கியமான இடங்களில் யுவர்களைக்குப் பயிற்சியளிப்பதற்காக அகில இந்திய சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தோடு ஒத்து வேலை செய்து வருகிறது. இது சம்பந்தமாக ஸர்க்கார் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் மதராஸைப்பற்றி விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற நவம்பர் மீ முடிவில் 392 இடங்களில் 34,455 நபர்கள் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். இதில் பெரும்பாலோர் மதராஸ் மாகாணத்திலிருந்து அனுப்பப்பட்டவர்கள். இன்னும் 11,007 மாணவர்கள் தயாரிக்கப்படவேண்டும்.



**[பு]துக்கோட்டை ஸமஸ்தானத்திய யுத்த டெக்னிஷியர்கள் பயிற்சி ஏற்பாடு.** புதுக்கோட்டையில் ஸமஸ்தான மராமத்து இலாகா ஒர்க்ஷாப்பிலும் மாட்சிதங்கிய மகாராஜா அவர்கள் கல்லூரியிலும் 1-8-42 முதல் டெக்னிஷியர்கள் பயிற்சி [பள்]ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு பிட்டர்களாகவும், எலெக்டிரிக் வேலை செய்[ப]வர்களாகவும், கருமான்களாகவும், தச்சுவேலைக்காரர்களாகவும், தையல்வேலைக்[கா]ரர்களாகவும் ஒவ்வொன்றிலும் 50, 30, 20, 20, 15 பேர்கள் பயிற்சி பெற்று[வ]ருகிறார்கள். மத்திய அரசாங்கத்தார் முஸ்தீப்புகள் தயாரிக்க முதலெடுப்பில் [மூ]லதனம் கொடுத்திருக்கிறார்கள். உபாத்தியாயர்களையும் நியமித்திருக்கிறார்கள். [தொழிற்சா]ங்களூரிலிருக்கும் மாகாண இன்ஸ்பெக்டர் இதற்கு ஆலோசகர். ராணுவ [அ]திகாரிகளோடு தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நான்கு மாத காலம் [நன்]றாய்ப் பயிற்சிபெற்ற பிறகு மாணவர்களை வெளியூரிலிருக்கும் பரீக்ஷகர் ஒருவர் [ப]ரிசீலனை செய்து, தேறினவர்களைத் தேவைக்குத் தகுந்தபடி ராணுவ பலத்திலோ [அ]ல்லது சிவில் தொழிற்சாலைகளிலோ அமர்த்துகிறார்கள். அப்படி தேர்ச்சி [பெ]ற்றவர்களில் ஒரு பகுதி லாகூர், கத்ரி, ஜப்பல்பூர் முதலிய இடங்களிலுள்ள [ரா]ணுவ பலத்தில் வேலை செய்யச் சென்றுவிட்டார்கள். இந்தியக் கப்பற்படையின் [டெ]க்னிகல் ரெக்ரூடிங் அதிகாரி இந்தியக் கப்பற்படைக்கு சில நபர்களைச் சேர்த்[தி]ருக்கிறார். மின்சார சம்பந்தமாக, கம்பிகள் அமைத்தல், மோட்டார்கள், [மி]ன்சாரம் உற்பத்திசெய்யும் எஞ்ஜின்களை ஓட்டுதல், மீட்டர்களை உபயோகித்தல், [வி]ளக்குகள் போடுதல் முதலியவையும் உறுக்கு வேலை, சேர்ப்பு வேலை, தச்சு [வே]லை, தையல் வேலை, கூடாரம் தயார் செய்யும் வேலைகளும் கற்றுக்கொடுக்கப்[ப]டுகின்றன.

பயிற்சியாளர்களின் சுகாதாரத்தையும் விளையாட்டு முதலியவைகளையும் கவனிக்க வெல்பேர் ஆபீஸர் என்று ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஹோட்ட[லு]ம், ஆடைகளும், சிகிச்சை வசதிகளும் இனமாகவும் ஏற்பாடாகியிருக்கின்றன. மெட்ரிகுலேஷன் பரிக்ஷை செய்யாதவர்களுக்கு ரூ 24-ம், பாஸ் செய்தவர்களுக்கு ரூ 29-ம் சம்பளம் வழங்கப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**சிறிய நாணயங்கள்.** சென்ற வாரம் புதுக்கோட்டை ஈ-தர்பார் அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு பிரசுரத்தில் சிறிய நாணயங்களின் குறைவும், உணவுப் பொருள்களின் குறைவும், ஜனங்கள் அதிகமாகச் சேமித்து வைத்திருப்பதால்தான் ஏற்படுகிறதென்று வெளியிட்டார்கள். சென்ற மகாயுத்தத்தில் 4 வருஷத்தில் அரை ரூபாய் நீங்கலாக 5 கோடி ரூபாய் பொருமானமுள்ள சில்லரை நாணயங்கள் செலவாகியிருக்கிறது. இந்த யுத்தம் ஆரம்பித்ததுமுதல் $2\frac{1}{2}$ வருஷத்தில் 8 கோடி ரூபாய் பொருமானமுள்ள சில்லரையும் 1942-ம் வரு ஏப்ரல் மீ முதல் ஸெப்டம்பர் முடிய 6 மாதத்தில் ரூ $3\frac{1}{4}$ கோடி பொருமான சில்லரையும் செலவாகியிருக்கிறது. ஏராளமான துருப்புகள் வந்திருப்பதும் பொருளாதார ஏற்பாடுகளின் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதும் ஒருபுறமிருந்தாலும் சில்லரை நாணயங்களின் தேவை ரொம்பவும் அதிகரித்திருக்கிறது. அதிகச் சேமிப்புதான் இதற்குக் காரணம். சேமித்து வைத்து பிறகு லாபகரமாக விற்கலாமென்பது, அல்லது அவைகளை உருக்கி உலோகமாகச் செய்து விடலாமென்ற எண்ணம்தான் சேமிப்புக்குக் காரணம்.

பிரசுரத்தில் கண்டபடி இதை நிவர்த்திக்க இருவகைப்பட்ட நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன.

இந்திய ஸர்க்காருடைய தங்க சாலைகள் அதிவேகமாகப் புது சில்லரை நாணயங்களை அச்சிடுகின்றன. யுத்தத்துக்கு முன் இருந்த ஏராளமான நாணயங்களும் யுத்தம் துவக்கி 3 வருஷத்தில் முத்திரையிடப்பட்ட 1,800 மிலியன் நாணயங்களும் விர, - மாதம் ஒன்றுக்கு 70 மிலியன் வீதம் முத்திரை யிடப்படுகின்றது. யுத்தத்துக்கு முன் மாதம் ஒன்றுக்கு 16 மிலியன் வீதம்தான் முத்திரையிடப்பட்டது.

நமது ஸமஸ்தானத்திலும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. சிறிய நாணயங்களின் சரியான மதிப்புக்கு மேல் அவைகளை விற்பனை செய்வதும், ஒருவருடைய தேவைக்கு மேலான நாணயங்களை வைத்துக் கொள்

ளுவதும் சட்டப்படி அபராதமும், அல்லது காவல் தண்டனையும் அல்லது இரண்டும் விதிக்கக் கூடிய குற்றங்களாகும். குற்றவாளிகளை சீக்கிரம் பரிசீலனை செய்து சிக்ஷிப்பதற்காக ஷை குற்றங்கள் சட்டத்தின் ஸம்மெரி முறைப் படி பரிசீலனை செய்யப்படும். குற்றவாளிகளைப்பற்றித் தகவல் கொடுக்கிறவர்களுக்குப் பரிசு வழங்கப்படுமென்று ஸர்க்காரவர்கள் பிரசுரித்திருக்கிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட இந்தியா கவர்ன்மெண்டாரின் துண்டுப்பிரசுரத்தை இந்தப் பதிப்பில் வெளியிட்டிருக்கிறோம். அதில் சொல்லியிருப்பது போல் எந்த இடங்களில் சேமித்திருப்பவர்களைக் கண்டு பிடித்து சிக்ஷைக்கு உட்படுத்தியிருக்கிறார்களோ அந்த இடங்களில், சிறிய நாணயங்கள் தாராளமாக சிலாவணிக்கு வந்துவிட்டன என்று தெறிவிக்கப்பட்டிருக்கிறது. பொது ஜனங்களுக்கு அதாவது வியாபாரிகளுக்கு ஒரு எச்சரிக்கையும், கொள்முதல் செய்யும் ஜனங்களுக்கு ஜாக்ரதையாய் இருக்கவும் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம். இந்த விஷயத்தில் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலுள்ள யுத்தத்துக்குப் பாடுபடும் ஒவ்வொருவரும், தேசிய யுத்த முன்னணி மெம்பர்களும், லீடர்களும், ஸப்லீடர்களும், நகரத்திலும் கிராமங்களிலும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். நாணயங்கள் சேமித்து வைக்கக்கூடாது என்று புத்திமதி கூறுவதும், எச்சரிப்பதும், தடுப்பதும், சேமித்திருக்கும் நாணயங்களைச் சிலாவணிக்கு வரும்படிவெளிப்படுத்துவதும், தீராத பக்ஷம் குற்றவாளிகளைச் சிக்ஷைக்குக் கொண்டு வரும்படி செய்வதும் இவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள்: இந்தக் கெடுதலானது ஒரு சிறிய தொந்தரவு ஆனாலும், தினசரி வியாபாரங்களிலும் தொழில் முறைகளிலும் கஷ்டம் விளைவிக்கக்கூடியது.

---

# உள்நாட்டு அரணும், வெளிநாட்டு அரணும்.

## இரண்டாம் போர்முனை.

### (லண்டன் டைம்ஸ் பத்திரிகை).

யுத்த தந்திரத்தில் உள்நாட்டு அரண்கள் அல்லது வெளிநாட்டு அரண்கள் யுக்தமா என்ற விஷயத்தைவிட சர்ச்சைக்கு லாயக்கான விஷயம் வேறொன்றுமில்லை. மத்தியிலிருக்கும் ஒரு தேசமானது சுற்றியுள்ள நாடுகளைத் தனித்தனியே தோற்கடிப்பதற்கும் அந்த நாடுகளெல்லாம் ஒன்றுகூடி மத்தியிலிருக்கும் தேசத்தைத் தாக்கி வெற்றிகரமாக அதை அழித்துவிடுவதற்கும் உள்ள வசதிகள் இடுக்கண்கள் இவைகளைப் பற்றித்தான். இந்த விவாதம் அதமபக்ஷமான உதாரணம். மத்தியப்பிரதேசத்திலுள்ள ஒரு தேசமானது விலாப்பக்கத்திலுள்ள இருநாடுகளோடு யுத்தம் செய்வதுதான். எது சௌகரியமான ஏற்பாடு என்ற பிரச்னைக்குச் சரியான அல்லது பொதுப்படையான விடை கூறமுடியாது. ஏனெனில் இந்த விடையானது சன்னிவேசங்களையும், சண்டைபோடும் கக்ஷிக்காரர்களின் பலாபலத்தையும், விசேஷமாக மத்தியிலிருக்கும் வல்லரசு நாட்டிற்கு இருக்கும் போக்குவரத்து சாதனங்களையும் பொருத்திருக்கிறது. யுத்த ஆரம்பத்தில் நல்ல தேர்ச்சிபெற்ற அதிகாரிகளுள்ள சேனையும் நல்ல போக்குவரத்து மார்க்கங்களுமுள்ள நாட்டுக்கு உள்நாட்டு அரண்கள் ரொம்பவும் லாபகரமாயிருக்கும். ஆகிலும் வெளிப்பக்கத்திலிருக்கும் எதிராளிகளைத் துர்ப்பலமாகச் செய்யாத பக்ஷத்தில் நிலைமை மாறி இரு பக்கங்களிலும் தீவ்ரமான தாக்குதல்கள் ஏற்பட்டு நிச்சயம் மத்தியிலுள்ள நாட்டிற்கு அழிவு ஏற்பட்டுவிடும்.

சென்ற யுத்தத்தில் நல்ல இருப்புப்பாதைகளின் வசதிகளைக்கொண்டு ஜெர்மானியர்கள் கிழக்கேயும் மேற்கேயும் யுத்தத்தை நடத்த முடிந்தது. ருஷ்யாவைத் தாற்காட்டிக்கொண்டு பிரான்ஸை நசுக்க முயற்சி செய்யப்பட்டது. அது வீணாகவே 1915-ல் மேற்குப்பக்கத்தில் தற்காப்பு முறையை கைக்கொண்டு ருஷ்யாவைப் பலமாகத் தாக்க ஆரம்பித்தார்கள். அங்கும் பாச்சா பலிக்கவில்லை. மறுபடியும் மேற்கு முனைக்கு ஜெர்மனி திரும்பிற்று. வெர்டன் யுத்தத்தில் எதிர்க்கப்பட்டு ஸோம் என்னுமிடத்தில் ஜெர்மன் சேனையின்



பலம் குன்றியது. பிறகு ருஷ்யாவை மறுபடியும் தாக்கி சமாதானம் செய்து கொள்ளும்படி ஜெர்மனி முயன்றது. அதாவது வெளிப்பக்கத்திலுள்ள ஒரு எதிரியின் பலம் போய்விட்டது. ஜெர்மனியின் அபிப்பிராயப்படி கொஞ்சம் தாமதத்தின்பேரில் இது ஏற்பட்டது. ருஷ்யா ஏராளமான தியாகம் செய்ததினால் அதன் பலம் அழிந்து விட்டது. அதே சமயம் ஜெர்மனியின் அழிவுக்கும் அஸ்திவாரம் போடப்பட்டது. 1918-ம் வருஷம் மார்ச்சுமீ முதல் ஜூலை மாதம் வரையில் ஜெர்மானியர்கள் மேற்குப்பக்கத்தில் நடத்திய தீவ்ரமான போரில் நேசநாட்டுத் துருப்புகள் அமெரிக்காவின் உதவி கொண்டு அபாயம் நேரிடாதபடி வெற்றிகரமாகத் தடுத்து வந்தன. அவர்கள் முன்னேறித் தாக்கும் சமயம் வந்தபொழுது யுத்தம் சீக்கிரம் முடிந்தது. அதேமாதிரி இந்த யுத்தத்திலும் ஜெர்மனியானது ஒரு பக்கத்தில் அடித்துவிட்டு மற்றொரு பக்கத்திற்குச் சென்றதில் சில வெற்றிகளும் கிடைத்திருக்கின்றன. முதலில் போலந்தை ஒழித்தது. பிறகு மேற்கே திரும்பி பிரான்ஸைப் பிடித்தது. பிரிடனுக்காக நடந்த யுத்தத்தில் ஜெர்மனியின் வேகம் தடைபட்டது. பிறகு பிரிடனைத் தாக்குவதற்குமுன், விரோதம் காட்ட உத்தேசித்திருக்கும் வல்லரசுகளில் ருஷ்யா ஒன்றென்று மதித்து அதைத் தாக்க ஜெர்மனி தீர்மானித்தது. இது ஜெர்மனிக்குச் சாத்யமாகத் தோன்றிற்று. ஏனெனில் ஐரோப்பா கண்டத்தில் பிரிடனுக்கு யாதொரு பிடிப்புமில்லாமல் ஜெர்மனி செய்துவிட்டதென்று நினைத்துவிட்டது. மேற்கேயிருந்து ஏற்படப்போகும் விமானத் தாக்குதலை ஜெர்மனி மனதார ஏற்றுக்கொண்டது. அப்பொழுதே பதிலுக்குப்பதில் செய்யாத போனாலும் ருஷ்யாவைத் தொலைத்துவிட்டு, எதிரியின் விமான எதிர்ப்பு விளைவுகள் அதிகமாகுமுன் கணக்குகளைச் சரிக்கட்டிவிடலாமென்று ஜெர்மனி நினைத்தது.

யாருடைய அதிகாரமாயிருந்தாலும், ஜெர்மன் தலைவர்கள் உள்நாட்டு அரண்களின் பிரயோசனத்தை நன்கு அறிந்து லாபகரமாகவே அவைகளை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகிலும் மத்தியத்திலுள்ள ஒரு தேசத்தை இரு விலாப்பக்கங்களிலிருந்தும் ஏககாலத்தில் மகத்தான எதிர்த்தாக்குதல் செய்வது, அதாவது இரண்டாவது போர்முனை, ஏற்படுகிறதின் சங்கடத்தையும் ஜெர்மானியர்கள் நன்றாய் அறிந்தவர்கள். இம்மாதிரியான ஒரு விபத்திலிருந்து தப்பிக்க வேண்டிய முறைகளை பலத்தினாலும் தந்திரத்தினாலும் சாதித்துக்கொள்ள அவர்கள் விசேஷ முயற்சி செய்திருக்கிறார்கள். சாம்ராஜ்யத்தைவிட நாஸிகளுக்கு இது முக்கியமான விஷயம். ஜெர்மன் தேசத்தார்கள் ரொம்பவும் தூண்டப்பட்டு அதிக ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். ஆகையால் எதிர்ப்பு ஏற்பட்டால் ஜெர்மனியில் அதிக அதிர்ச்சி உண்டாகும். ஐரோப்பாவில் ஜெர்மன் ஆதிக்கம் விஸ்தாரமாகயிருப்பதிலிருந்து சில கெடுதல்கள் சம்பவிக்கக்கூடும். மெஷின் துப்பாக்கிகளாலும், சனியன்களாலும், தடிக்கம்புகளாலும், இவைகளைவிட கொடூரமான உணவுக்குறைவினாலும் அடக்கியாளப்பட்ட நாடுகளெல்லாம் கொடுங்கோல் அரசர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் உக்ரமாயும் தயையுமில்லாத எதிரிகளாகவே ஆகிவிடுவார்கள். ருஷ்யா ஒப்பிடமுடியாத விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டதாலும் சகித்வத்தினாலும் சென்ற வருஷம் ஹிட்லரின் திட்டங்களை வெற்றிகரமாகக் கவிழ்த்துவிட்டது. இந்த வருஷம் அதேமாதிரி செய்துவிடுமென்றும் எதிர்பார்க்கலாம். அதற்கு வேண்டிய உதவிகள் நேசநாடுகளிடமிருந்து துணைக்காவல் கப்பல்கள் மூலமாயும் விமானத் தாக்குதல்கள் மூலமாயும் கிடைத்துவருகின்றன. ஆகிலும் ருஷ்யா தன்னந்தனியே நின்று ஜெர்மனியைத் தோற்கடிக்க முடியாது. பூர்ணமான வெற்றி பெறுவதற்கு பலமாகத் தாக்க வேண்டுமானால் நேசநாட்டு, அமெரிக்கத் தரைப்படைகளும் யுத்தம் செய்ய வேண்டும். அதாவது இப்பொழுதுள்ள யுத்த அரங்கங்களை அதிகப்படுத்த வேண்டும். தீராத பக்ஷம் இப்பொழுதுள்ள போர்முனைகளில் மகத்தான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

சென்ற கோடைகாலத்தில் 1942-ம் வருஷ யுத்தத்தில் ருஷ்யாவின் பலம் குலைந்துவிடுமென்றும் போர்முனைகளில் இப்பொழுது காணப்படும் நவீன யுத்த முஸ்தீப்புக்களோடும் கூடிய ஏராளமான துருப்புகளும் இல்லாமல் போய்விடும் என்றும் தோன்றிற்று. இந்த அபாயம் ருஷ்யாவின் முயற்சியாலும் திட சித்தத்தினாலும் இப்பொழுது தவிர்க்கப்பட்டு விட்டது. யுத்த முடிவில் ருஷ்யா நிலை

நிற்பது என்பது ருஷ்யாவின் சிநேகிதர்களான நேசநாடுகள் எவ்வளவு பொறுப்பு ஏற்றுக்கொண்டு ருஷ்யாவின் சங்கடத்தைக் குறைக்க சீக்கிரம் ஏற்பாடு செய்கிறார்களோ அதைப் பொருத்திருக்கிறது. இரண்டாம் போர்முனை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை சில சமயம் சமயோசிதமற்றதும், பீதியானதும், கெடுதல் செய்யக் கூடியதுமான அபிப்பிராயமாயிருக்கலாம். ஆகிலும் இதற்கு அடிப்படையாக இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஜெர்மனியைப் புதிய போர்முனைகளுக்குத் திரும்பும்படி செய்து ஜெர்மனியைச் சுற்றிலுமுள்ள நாடுகளின் மூஸ்தீப்புகளை உபயோகப்படும்படி செய்வதும் ஒன்று. ருஷ்யா இப்பொழுது வகித்துவரும் பளுவின் ஒரு பாகத்தை மற்ற நேசநாடுகளும் பகிர்ந்து கொள்ளுவது இரண்டாவது. வியாபார ஸ்தலங்களில் உட்கார்ந்துகொண்டு ஸ்தல சன்னிவேசத்தையும் காலப்போக்கையும் பற்றிப் பேசுவது வீண் பேச்சு. நேசநாடுகளின் தலைவர்களும் மந்திரி சபையாரும் இதன் உபயோகத்தை நன்கு மதிக்காவிட்டால் கடைசியில் தோல்விதான் ஏற்பட்டுவிடும். தோல்வியானது அசட்டு தைரியத்தினாலும் அல்லது பயங்கொள்ளித்தனத்தாலும் ஏற்படலாம். ஆனாலும் யுத்த தந்திரத்தை ஒட்டுக்கு விட்டு நிர்ணயிக்கக்கூடாது. இதற்கு ஆதாரமான காரிய காரணங்களை பொதுஜனங்களுக்கு வெளியிடுவது சாவதானமல்ல.

ஆகையால் இவ்விஷயத்தில் பொதுப்படையாகப் பேசுவதுதான் இயல்பு. இந்த விஷயத்தை மனதில் ஊன்றிப் பார்த்து பரிசீலனை செய்து முயற்சி செய்தால் பிரயோஜனம் ஏற்படும். பொதுஜனங்கள் யுத்தத்துக்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்கமுடியுமே அல்லாது அதை உபயோகிக்கும் யோசனையைச் சொல்லமுடியாது. இதற்கு ராணுவ நிபுணர்களின் யோசனைவேண்டும். பொது மக்களுக்குத் தோன்றுவதைவிட வேறு விதமாக நேசநாடுகளின் எதிர்ப்பு யுத்தங்கள் நடக்கக்கூடும். இப்பொழுது திரண்டுவரும் வலுவான சேனைகளை ஒன்று சேர்த்து உபயோகப்படுத்துவது என்பது மிகவும் சிரம சாத்யமான காரியமாகும். இது கிரமப்பட்டு வேலை செய்துவரும் கடற்படையையும் குறைவு அடைந்து வரும் கடற்படையையும் உபயோகிக்கும் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. மற்றொரு முறையையும் நாம் கையாண்டு வருகிறோம். விமானங்களால் எதிரியைத் தாக்குவதும், தளவாட ஒத்தாசையும், எதிரியின் மேற்குப் போர்முனையின் தற்காப்புகளை அதிகமாகத் தகர்ப்பதும் தீவிரமாக மேல்மேலும் நடத்தப்படவேண்டும். ஆகிலும் யுத்தத்தில் வெற்றி பெறவேண்டுமானால் ஜெர்மனியை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட போர்முனைகளில் யுத்தம் செய்யும்படி செய்வதோடு 1918-ம் வருஷத்தில் நடத்தியதுபோல் பிரிடிஷ், அமெரிக்கப்படைகள் தரைச்சண்டையில் ஜெர்மன் துருப்புகளை முறியடிக்கவேண்டும்.

---

## ராஸ்டாவ்—காகஸஸுக்குத் திறவுகோல்.

(நியூஸ் க்ரானிகள் பத்திரிகை பிரசுரம்).

---

காகஸஸுக்குப் போவதற்கு திறவு கோல் போன்ற ராஸ்டாவ் நகரம் 1941-ஆம் நவம்பர் 23-ம் தேதியன்று ஜெர்மானியர் வசமாயிற்று.

நவம்பர் 29-ம் தேதி டிமோஷெங்கோவின் துருப்புகள் டானட்ஸ் நதியிலிருந்து தெற்கே சென்று அந்த நகரத்தைத் திரும்பப் பிடித்து விட்டன. இதற்கு முதல் நாளே டான் காஸ்ஸாக்ஸ் ராஸ்டாவின் சுற்றுப் புறங்களை தெற்கேயிருந்து அடைந்துவிட்டான். வான்கிளீஸ்ட்டின் துருப்புகளைத் துரத்தியடித்து டாகன்ராக்குக்கு அனுப்பி டானட்ஸ் நதிப்பிரதேசம் எதிரிகளிடமிருந்து மீட்கப்பட்டது.

1942-ம் ஆம் ஜுலை 24-ம் தேதி ராஸ்டாவ் மறுபடியும் ஜெர்மானியர் வசமாயிற்று. இரண்டு அல்லது மூன்று நாட்கள் எதிர்ப்புக்குள்ளாகவே இந்த முக்கியமான பிரதேசம் மூன்று தடவை கைமாறியதென்பது கவனார்கமுள்ளது. லிபியாவிலுள்ள பெங்காஸி போல் ராஸ்டாவும் கைமாறி மாறி வருகிறதோ!



1941-ம் ஆம் நவம்பர் மீ ராஸ்டாவிலுள்ள சொல்ப துருப்புகளை ஜெர்மன் துருப்புகளால் வளைக்கப்படவிருந்து தப்பிப் பின் வாங்கும்படி செய்து ஜெர்மானியர்கள் ராஸ்டாவைக் கைப்பற்றினர்கள். சென்ற ஜுலை மாதத்தில் ராஸ்டாவுக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள டானட்ஸ் நதியின் பிரதேசத்தில் ருஷ்யர்கள் வெற்றிகரமாக எதிர்த்து நிற்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. சென்ற இலையுதிர் காலத்தில் ஜெர்மானியர்கள் செய்தது போல், இப்பொழுது எதிரிகள் ராஸ்ஸோஷுக்குத் தெற்கேயுள்ள மாஸ்கோ-ராஸ்டாவ் ரயில் மார்க்கமாக காண்டமிராங்கா, மில்லெரோவா, காமென்ஸ்க் ஸ்தானங்களுக்கு வேகமாக முன்னேறிய பொழுது ருஷ்யப் படைகள் சுற்றிவளைக்கப்படும் அபாயத்திலிருந்ததால் பின்வாங்கின.

இந்த வருஷம் ஜெர்மானியர் சென்ற மார்க்கமாகிய காமென்ஸ்க் பிரதேசம் வழியாகவும் டானட்ஸ், டான் இவ்விரண்டும் சங்கமமாகுமிடத்திலிருந்து வடக்கே 7 மைலிலிருந்தும் ராஸ்டாவுக்குத் தென் பக்கத்திலிருந்தும் ருஷ்யத் தாக்குதல்கள் ஆரம்பித்து விட்டன. ருஷ்யத் துருப்புகள் மாஸ்கோ ராஸ்டாவ் ரயில் பாதையில் ராஸ்டாவுக்கு 35 மைல் வடக்கேயுள்ள கிரான்ஸிஸுலின் என்னுமிடத்திலிருந்து மேற்கேயும் கிழமேலோடும் ரயில்வேக்குத் தெற்கே 15 மைல் தூரத்திலும் தாக்கி வருகிறார்கள்.

இந்தப் பிராந்தியங்கள் ருஷ்யர் வசமாகிவிட்டால் ஜெர்மானியருக்கு மேற்கேயிருந்து டாகன்ராக் வழியாகச் செல்லும் இருப்புப் பாதை ஒன்று தானிருக்கிறது.

ராஸ்டாவுக்குத் தெற்கே வடகாஸஸில் ஜெர்மானியர் நிலைமை சென்ற கோடை காலத்தில் டானட்ஸ் நதிப்பிரதேசத்திலிருந்து பின் வாங்கிய ருஷ்யரின் நிலைமை மாதிரியாக இருக்கிறது.

ராஸ்டாவானது நன்றாய் பாதுகாக்கப்பட்டது. சீசாக்கழுத்து போன்று குறுகலானது. இதை ருஷ்யர்கள் வடக்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் தான் தாக்க வேண்டும். டான நதிப்பிரதேசம் மேற்குப் பக்கத்தில் ராஸ்டாவுக்குப் பலமாயிருக்கிறது. கிழக்கே டான் நதிக்கு இரு பக்கத்திலும் ஸால் ஜங்ஷன் வரைக்கும் 4 முதல் 8 மைல் அகலமுள்ள இரண்டு சதுப்பு சமவெளிகளிருக்கின்றன. டான் நதியை யொட்டி அதற்குத் தெற்கே ஒரு ரஸ்தாவு மில்லை. ஸால்ஸ்கிலிருந்தும் டிகா ரெட்ஸ்கிலிருந்தும் புறப்படும் இருப்புப் பாதைகள் ராஸ்டாவுக்குத் தெற்கேயுள்ள மார்க்கத்துள் வந்து சேருகின்றன.

1941-ம் ஆம் நவம்பர் மீ டிமோஷன்கோ வெற்றிகரமாகக் கையாண்ட யுத்த முறைகளே இப்பொழுதும் கையாளப்படுமென்று எண்ணுகிறோம்.

---

## ஆங்கில—துருக்கி ஒப்பந்தம்.

(உலுஸ் என்னும் பத்திரிகையில் F. R. அட்டே எழுதியது).

(அட்டே என்பவர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் துருக்கி பத்திரிகைக்காரர்கள் தூது கோஷ்டியின் தலைவர்).

ஆங்கிலோ துருக்கி நட்பு ஒப்பந்தமேற்பட்ட மூன்றாவது வருஷாந்திர தினத்தன்று துருக்கியிலும் பிரிட்டனிலுமுள்ள பத்திராதிபர்களும் ஒலிபரப்பு நிலயங்களும் விசேஷமாகக் கொண்டாடின. இந்த நட்பு ஏற்பட்டு மூன்று வருஷம் பூர்த்தியானதை நோக்கினால் இதன் அடிப்படையான குணங்கள் புலப்படும். இந்த நட்பை

யுத்தத்தின் கொடுமைகளை விஸ்தரிக்கவும், அபிவிருத்தி செய்யவும் இரு நாடுகளும் உபயோகிக்கவில்லை. மேன் மேலும் ஜனங்களும் நாடுகளும் கஷ்டப்படாமலும் அழிக்கப்படாமலும் இருப்பதற்காக உபயோகப்படுத்த ஏற்பட்ட ஒப்பந்தம். துருக்கி இந்த யுத்தத்தில் கலந்துகொள்ளுவது நலமா அல்லது தனித்திருப்பது நலமா என்று ஆராய்ச்சி செய்பவன் ஒருவனும் பிரிடனிலாவது துருக்கியிலாவது இருக்கமாட்டானென்பது நிச்சயம்.

பிரிடனும் துருக்கியும் ஒப்பந்தம் செய்துகொண்ட பொழுது சமாதானத்தை நிலைநாட்டுவது தான் அவர்களுடைய அந்நிய நாட்டுக்கொள்கை. துருக்கியில் ஜனாதிபதியாயிருந்த இருவர்களும் லாஸேன் ஒப்பந்தம் முதல் ஒவ்வொருவரும் தங்கள் சொற்பொழிவுகளில் பின்வருமாறு வற்புறுத்தியிருக்கிறார்கள். தங்கள் நாட்டின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றவும் தொழில் முறைகளையும் பொருளாதார நிலையையும் அபிவிருத்தி செய்து நாட்டின் க்ஷேமத்தைக் கோருவதும் தான் தங்களுடைய நோக்கம் என்று சொல்லியிருக்கிறார்கள். புதிய துருக்கி உண்டானது முதல் 1939 ஸெப்டம்பர் வரையில் நம்முடைய உள்நாடு அயல் நாட்டுக் கொள்கைகளில் பரஸ்பர ஒப்பந்தத்தால் சமாதானத்தை அடையவும் யுத்தத்தைத் தவிர்க்கவும்தான் ஏற்பாடுகள் நிறுவப்பட்டு வந்தன. பிரிடிஷ் அரசாங்கத்தாரும் கபடமாகவோ வெளிப்படையாகவோ நம்மை அணுகி பிரதேச ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ளும்படிக்கும் வற்புறுத்தவில்லை.

### ராணுவ ராஜீய எச்சரிக்கைகள்.

தற்காப்பு நிலையிலிப்பதிலிருந்து பிறர் தாக்குதல் ஏற்படாதென்று சொல்ல முடியாது. ராணுவ சம்பந்தமாகவும் ராஜீய சம்பந்தமாகவுமுள்ள பாதுகாப்புகளை ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம். பொதுவான ஆபத்துக்குள்படக்கூடியதும் அக்கரையுள்ளதுமான சமீபத்திலுள்ள நாடுகளுடன் சமாதான வாக்குறுதி செய்து கொள்ளவேண்டியது முக்கியம். இரண்டாவது உலக யுத்தத்தை நாம் வரவேற்கவில்லை. அதனால் நமக்கு ஒரு லாபமும் கிட்டப் போவதில்லை. இதில் நாம் தலையிடுவதாகவும் எண்ணமில்லை. அப்படித் தலையிடுவதில் நமக்கு லாபம் ஏற்படுமென்றும் நாம் நினைக்கவில்லை. பிரிடனுடன் துருக்கி ஒப்பந்தம் செய்து கொண்டதின் காரணமாக துருக்கியை யுத்தத்தில் இழுத்து விட்டுவிட்டார்கள் என்று சொல்லுகிறவர்களெல்லாம் துருக்கிக்கு தேசங்களை அடையவேண்டுமென்கிற ஆசை கிடையாதென்று சொல்வதைச் சந்தேகிக்கிறவர்களும் துருக்கி யுத்தத்தில் சிக்கிக்கொண்டால் யுத்தத்தை சமீப, மத்தியக் கிழக்கு நாடுகளிலுள்ள பிரிடிஷ் பிராந்தியங்களுக்கு பிரிடன் உடனே பரவச்செய்துவிடுமென்று தப்பெண்ணம் கொண்டவர்களும் தான்.

பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் துருக்கிக்குமுள்ள சம்பந்தங்கள் அநேக மாறுதல்களடைந்தன. சில சமயங்களில் பிரிடிஷ் சாம்ராஜ்யம் துருக்கியப் படைகளோடு சேர்ந்து போர் புரிந்தது. துருக்கி ராஜ்யம் சிதைபடாமல் காப்பாற்ற வேண்டிய அவசியம் பிரிடனுக்கு ஏற்பட்டதுதான் இதற்குக் காரணம். சில சமயங்களில் இதற்கு நேர் எதிரியாக நடைபெற்றது. துருக்கி தேசத்தைச் சேர்ந்த திரேஸ், அனடோலியா பிரதேசங்களில் மட்டும் ஸ்வதந்திர, தேசீய, வலிமை பொருந்திய துருக்கி ராஜ்யம் நிறுவப்பட்ட பொழுது, துருக்கியிடமிருந்து ஒருவிதமும் பயப்பட வேண்டியதில்லை என்ற பயம் பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கு அகன்றபொழுது இரு தேசங்களுக்குள்ளிருக்கும் நட்பையும் நம்பிக்கையையும் கலைத்து விடவோ, குறைவு படுத்தவோ அவசிய மேற்படவில்லை. மேலும், சுயேச்சையும் ஸ்வதந்திரமும் உள்ள துருக்கி ராஜ்யம் உலக அமைப்புக்கு அவசியமென்று கருதுகிறதும் அதன் உரிமைகளைக் குறைக்க எண்ணங்கொள்ளாததுமான ஒரு நாட்டுடன் துருக்கிக்கு நட்பை வைத்துக்கொள்வது தான் இயல்பு.



துருக்கியர்கள் வாக்கு உண்மையும் அந்தரங்க சுத்தியும் உள்ளவர்கள். எங்கள் புராதனமான சரித்திரத்தை கவனித்தால் கௌரவப்புத்தியுள்ளவர்களென்றும் தொன்று தொட்டு ஒழுக்க முறைகளில் கம்பீரமான யோசனையுமுள்ளவர்களென்று தெரியவரும். எங்களை நம்பியவர்கள் அது தவறு என்று எப்பொழுதும் எண்ணுவதற்கில்லை. துருக்கியின் பகிரங்கத் தனத்தையும் நல்லொழுக்கத்தையும் நன்கு மதித்து அதோடு நட்பு ஏற்படுத்தி வாக்குறுதி செய்திருக்கும் எந்த நாட்டின் நல்லெண்ணத்தையும் துருக்கி சந்தேகிக்கவில்லை.

ஆங்கிலேய துருக்கி ஒப்பந்தம் ஏற்பட்டு நான்காவது வருஷம் ஆரம்பமாகிறது. இவ்வருஷத்திலும் ஒப்பந்தம் திருப்திகரமாகவேயிருக்குமென்று எண்ணுகிறோம்.

---

## ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகள்.

பாரிஸ் பிராந்தியத்திலிருந்து சில நாட்களுக்குமுன் தப்பி ஓடின, பொது உடமைக் கக்ஷியைச் சேர்ந்த எம். பெர்னண்டு கெர்னியர் என்பவர் பிரான்ஸின் நிலைமையைப்பற்றியும் நாஸிகளையும் நாஸிகளுடன் ஒத்துழைக்கும் பிரெஞ்சுக்காரர்கள் மீதும் அந்நாட்டில் உண்டாகியிருக்கும் துவேஷத்தைப்பற்றியும் அழகாக ஒரு விமர்சனம் செய்தார். பிரான்ஸின் கக்ஷிகளைப்பற்றி ஒருவரும் கவலைப்படவில்லையென்றும் கொரே ஸ்வபாவமுள்ள எதிரியை நாட்டிலிருந்து விரட்டியடிப்பதுதான் முக்கிய நோக்கமென்றும் அவர் சொன்னார். இதற்கு அடிப்படையாயுள்ளது வட ஆபிரிக்காவில் சண்டை செய்யும் பிரெஞ்சுத் துருப்புகள்தான். 1,00,000 ஜனங்கள் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டார்கள். 40,000, 50,000 பேர்கள் ஜெயிலிலடைபட்டிருக்கிறார்கள். ஆகிலும் பிரெஞ்சு தைரியமும் வீரமும் பழங்கதையில்லையென்று ருஜூசெய்ய அவர்கள் பிரயத்தனம் செய்து வருகிறார்கள், எம். கெர்னியர் லண்டனுக்கு வந்த காரணம் டிகாலுக்கு பிரெஞ்சு பொது உடமைக் கக்ஷியின் பூர்ணமான ஆதரவைக் கொடுப்பதாகத் தெரிவிக்கத்தான்.

லவால் ஒரு பலாஞ் ஆபிரிக்கா என்ற படையைத் திரட்டி ஐரோப்பாவிலும் அதற்கு வெளியேயும் சண்டைசெய்ய ஏற்பாடு செய்து ஜெர்மன் ஆள் சேமிப்புத் தலைவரான ஸாக்கெல் என்பவரை பிரான்ஸிலிருந்து ஜெர்மனிக்கு புத்திசாலியான தொழிலாளிகளைச் சீக்கிரம் எடுத்துப்போகும்படி வற்புறுத்தும்பொழுது பிரெஞ்சு தேசாபிமானிகள் ஜெர்மனியுடன் ஒத்துழைக்கும் விஷி ஸர்க்காரைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்று ஸ்பஷ்டமாயத் தெரிவிக்கிறார்கள். பாரிஸில் 500 பேர்களையும், லையான்ஸில் 100 பேர்களையும் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்காக கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது. லையான்ஸில் முனிஸிபல் சபையார் நாட்டின் நிலைமையை சமாளிக்க முடியாமலும், மெம்பர்கள் தங்கள் அலுவல்களைச் செய்யத் தவறிவிட்டபடியாலும் நகரம் பூராவும் முற்றுகை செய்யப்பட்டிருக்கிறது.

### பால்கன் நாடுகளும் ஜெர்மனியும்.

பால்கன் நாடுகளில் நாஸி அதிகாரத்துக்குட்பட்ட நாடுகளை கவனித்தாலே இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்கு ஏற்படக்கூடிய லாபத்தை நன்கு அளவிடலாம். ருமேனியாவிலுள்ள இரும்பு கார்டு கக்ஷியும், தேசியக் குடியானவர்கள் கக்ஷியும் தங்களுக்குள்ளிருந்த வித்தியாசங்களை விட்டுவிட்டு ஒன்றுசேர்ந்து ருஷ்யாவிலிருக்கும் ருமேனியப்படைகளை உடனே திரும்பி அழைத்துவிட வேண்டுமென்று கேட்கிறார்கள். நாடெங்கும் ஜெர்மனிக்கு எதிரிடையான குழப்பம் இருந்து வருகிறது. ருமேனிய சேனையை ஹங்கேரியிடமிருந்து டிரான்ஸில்வேனியாவைக்

கைப்பற்றுவதற்கு உபயோகப்படுத்த வேண்டுமேயல்லாது நீஸ்டர் நதியைச் சுற்றியுள்ள டிரான்ட் நீஸ்ட்ரியா என்னும் பிரதேசத்தைப் பிடிக்க உபயோகப்படுத்தக்கூடாதென்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். ருஷ்யாவுக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிகளைக்கண்டு, ஜெர்மனி, ருமேனியாவுக்கு டிரான்ட் நீஸ்ட்ரியாவைப் பிடித்துக்கொடுக்க சக்தியுள்ளதாவென்றும் சந்தேகிக்கிறார்கள். நாஸிகளை ஆதரிக்கவேண்டுமென்ற தன் கொள்கையை ஆக்ஷேபித்ததற்காக அன்டோனெஸ்கு ஆயிரக்கணக்கான ருமேனியர்களைக் கைது செய்திருக்கிறான். ஜெர்மன் ரகசியப் போலிஸின் ஒத்தாசையுடன் நாட்டில் ஜெர்மனிக்கு எதிராக உண்டாயிருக்கும் கிளர்ச்சியை அடக்கப் பாதுகாப்புப்படை ஒன்று அவன் தயார் செய்திருக்கிறான்.

ருஷ்ய முனையில் ஜெர்மன் சேனை அழிக்கப்பட்டதிலிருந்து நாஸி சார்பாக இருக்கும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு ஹங்கேரியிலும் கிளம்பிவிட்டது. 73 பேர்களின் பேரில் அதிகாரத்தை அடையப் பிரியப்பட்டார்களென்று குற்றம்சாட்டி அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இங்கே ருஷ்யாவுடன் சண்டை போடக்கூடாதென்று சொல்லும் பொதுமக்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் படிந்துவிடுமோவென்று பயந்து அரசாங்கத்தின் பேரில் ஜெர்மன் ரகசிய போலீஸார் அவதூறு சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். நாஸி ஆரோகிராஸ் என்னும் கக்ஷியை மறுபடியும் உண்டுபண்ணி ஹார்தியின் ஆக்ஷிக்கு ஒத்தாசை அளிக்கவோ அல்லது அதை கட்டாயப்படுத்தவோ தயாராகிவருகிறது. பல்கேரியா அரசரான போரிஸ் மன்னர் ஜெர்மனியின் வேண்டுகோளுக்குக் கிணங்க ருஷ்யப் போர்முனைக்கு 2,50,000 கொண்ட சேனையை அனுப்புவதாக ஒப்புக்கொண்டுவிட்டாரென்ற வதந்தி உண்மையானால், ஹிட்லரின் பரிதாப நிலையை நன்கு மதிக்கலாம். இதுவரையில் ருஷ்யாவுடன் சமாதானமாயிருப்பதும் ருஷ்யா பேரில் அனுதாபப்படுவதுமான நாடாகிய பல்கேரியாவை ஒரு சேனையை அனுப்பும்படி ஹிட்லர் வேண்டினானென்பதிலிருந்து ஹிட்லருக்கு எவ்வளவு சங்கடமான நிலை ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது தெரிகிறது. ருஷ்யாவுடன் போர்புரிய தன்நாட்டு மக்களை அனுப்புமுன் போரிஸ் மன்னர் தீர்க்காலோசனை செய்துதான் ஆகவேண்டும்.

---

## ஜெர்மனியின் இருப்புப்பாதைகள்.

1942-43, மாரிகாலத்தில் பிரிடிஷ் விமானப்படை ஹிட்லருடைய போக்குவரவு சாதனங்களை அழிப்பதைத்தான் முக்கிய லக்ஷியமாகக்கொண்டிருக்கிறது. ருஷ்யாவில் ஒரு போக்குவரத்து மார்க்கமும், ஒரு ரயில்வண்டித் தொடரின் நடமாட்டமுமிருந்தால் போதுமென்று ஹிட்லர் சொல்லிவந்த நாட்களுண்டென்று அவனே சொல்லுகிறான். மேற்கு ஐரோப்பாவில் நேசநாடுகள் படையெடுத்தால் 3,500-க்குக் குறையாத ரயில்வே எஞ்ஜின்கள் தேவையாயிருக்குமென்று வான் ருண்ஸ்டெட் மதிப்புப்போடுகிறான்.

பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, வடமேற்கு ஜெர்மனி, இவைகளிலுள்ள இருப்புப்பாதைகளைச் சமீபகாலத்தில் இடைவிடாது நம்முடைய பாம்பர் கம்மாண்டும், பைடர் கம்மாண்டும் வெடி விமானங்களும் வேட்டையாடி வருவதற்குக் காரணம் நமக்கு வெளிப்படையானது. சென்ற 9 மாதங்களில் பிரிடிஷ் விமானப்படையின் ஒரு பகுதி 400-க்கு மேலான ரயில்வே எஞ்ஜின்களை நாசம் செய்திருக்கிறது. 6 வாரத்திற்குள்ளாக ஒரு பகுதியானது 60 எஞ்ஜின்களை நாசமாக்கியோ அல்லது உபயோகமில்லாமலோ செய்துவிட்டது. 1942-ம் ௵ நவம்பர் ௴ பைடர் விமானங்கள் பிரான்ஸிலும் டென்மார்க்கிலுமுள்ள ரயில் வண்டிகளையும் ரயில் வண்டிகள் நிற்குமிடங்களையும் வெற்றிகரமாக 80 தடவை தாக்கியிருக்கின்றன. இந்தத் தாக்குதல் டிஸம்பர், ஜனவரி மாதங்களிலும் தொடர்ந்து ஏற்பட்டது. விமான மந்திரி இலாகா பிரசுரங்களில் ஒவ்வொரு நாளும் இந்த லக்ஷியங்களைப்பற்றி விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறது. இருப்புப்பாதைகளில்



லாமல் உள்நாட்டு நதிகள் மூலம் செய்யப்பட்ட போக்குவரத்துக்களையும் அதே சமயத்தில் நமது விமானங்கள் தாக்கியிருக்கின்றன.

1940-ம் ௵ மே ௴ ஐரோப்பாவின் மேற்குப் பக்கத்திற்கு ஜெர்மானியர் வந்தது முதல் ஐரோப்பாமீது பிரிடிஷ் விமானத்தாக்குதல் மேல்மேலும் அதிகரித்து வந்திருக்கிறது. நமது பிரிடிஷ் விமானங்களின் நஷ்டக்கணக்குகளைப் பார்த்தால் இது நன்றாய் புலப்படும். 1941-ம் ௵ முடிய இந்த முன்னேறித் தாக்குதலால் ஏற்பட்ட விமான நஷ்டம் மொத்தம் 1,875 விமானங்கள். அவைகளில் 1,242 வெடி விமானங்கள், 633 சண்டை போடும் விமானங்கள். 1942-ல் மொத்தம் 1,930 விமானங்கள்—1,337 வெடி விமானங்கள், 593 சண்டை விமானங்கள். ஆகையால் யுத்தம் ஆரம்பித்த பிறகு முதல் 28 மாதங்களைவிட 1942-ம் வருஷத்தில் ஐரோப்பா மீது எதிர்ப்புத் தாக்குதல் செய்வதில் பிரிடிஷ் விமானப்படை அதிகப்பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறது.

---

## இருதரப்பிலும் கடன் குத்தகை ஏற்பாடு.

அமெரிக்காவின் கடன் குத்தகை இலாகா நிர்வாகியாகிய மிஸ்டர் எட்வர்ட் ஸ்டெட்டினியஸ் என்பவர் 1941 மார்ச்சு முதல் 1942 டிஸம்பர் முடிய கடன் குத்தகை ஏற்பாட்டின் விவரங்களைப்பற்றி ஜனாதிபதிக்கு ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறார். இந்தச் சட்டம் பணம் கடன் கொடுப்பதுமட்டுமில்லை. தேசத்தின் தற்காப்புக்காக ஏற்பட்டதென்று அவர் சொல்லுகிறார். இவ்விதம் செய்தால்தான் அமெரிக்க நாடுகள் உள்பட எல்லா ஐக்கிய நாடுகளும் வெற்றிக்கு வேண்டிய தேவையான யுத்த தளவாடங்களை அடையமுடியும். ஐக்கிய நாடுகள் ஒவ்வொன்றும் பரஸ்பர சம்பந்தமுள்ளவை. அமெரிக்கா மற்ற நாடுகளிலிருந்து முக்கியமான தாதுப்பொருள்களைப் பெறவேண்டியிருக்கிறது. ஆகிலும் ஐக்கிய நாடுகள் ஒரு பெரிய ஆயுத தொழிற்சாலைகள் மட்டுமில்லாமல் ஐரோப்பாவில் உணவுப்பொருள்களில்லாமல் கஷ்டப்படும் நாடுகளுக்குத் தேவையான ஒத்தாசை செய்ய தானியக் களஞ்சியமாகவுமிருக்கவேண்டும். மிஸ்டர் ஸ்டெட்டினியஸ் அபிப்பிராயப்படி அடிப்படையான தந்திரமென்னவென்றால் நம்முடைய பொருளாதார சக்தி, மனுஷ்ய பலம் இவைகளை ஒன்றுகூட்டி கூடிய சீக்கிரத்தில் சத்ருவை பலமாகத் தாக்க ஏற்பாடுசெய்வதுதான்

நேசநாடுகளுக்கு அமெரிக்கா உதவுவதுபோல், அமெரிக்காவுக்கும் ஏராளமான உதவிகிடைத்திருக்கிறது. வட ஆபிரிக்கா யுத்தத்தில்மட்டிலும் பிரிடனிலிருந்து துருப்புகளைக்கொண்டு போய்ச்சேர்ப்பதற்கு மூன்றில் இரண்டுபங்கு சண்டைக்கப்பல்களும் சாமான் கப்பல்களும் பெற்றிருக்கிறது. அமெரிக்க விமானப்படைக்குப் பிரிடனிலிருந்து 160 ஸ்பிட்பையர் விமானங்களும் 130 வேவுபார்க்கும் படகுகளும், டாங்கிகளை உடைக்க லாயக்குள்ள 50,000 சுரங்க வெடிகளும் கைத்துப்பாக்கிகளும் வந்திருக்கின்றன. ருஷ்யாவுக்கும் 2,600 டாங்கிகளையும், 2,000 விமானங்களையும் பிரிடன் கடன் குத்தகை திட்டப்படி அனுப்பியிருக்கிறது. கடன் குத்தகை திட்டத்தில் சேர்ந்த நாடுகளெல்லாம் அவைகளுக்கு அமெரிக்கா அனுப்பியிருக்கும் தளவாடங்களுக்கு அதிகமானவைகளைக் கொடுக்கவேண்டியதற்காக ஏற்கனவே பொருள் கொடுத்துவிட்டன என்றும் மிஸ்டர் ஸ்டெட்டினியஸ் சொல்லுகிறார்.

---

## போலி இதாலிய சாம்ராஜ்யத்தின் முடிவு.

முஸோலினியின் சாம்ராஜ்யத்தில் பாக்கியிருந்த ட்ரிபோலியும் விழுந்துவிட்டது. கொழுத்த சரீரமுள்ள முஸோலினி ஒரு புதிய ரோமன் சாம்ராஜ்யத்தை அமைக்க மனோராஜ்யம் செய்தான். இது பெரிய கனவாக ஆகிவிட்டது.

அழகான மாளிகைகள், தன்னுடைய சிலைகளுள்ளதும் வெற்றிக்குறி குறியான அநேக ஆர்ச்சுகளுள்ள ஸ்தலங்களையும் அமைக்க உத்தேசித்தான். எல்லாம் ப்ராஸ்பெரோவின் சந்தோஷமான ஊர்வலம் போல் கனவுபோல் மறைந்துவிட்டன. கொஞ்சம் மட்டும் பாக்கியிருக்கிறது. அதாவது, சீர்கெட்ட, ஐஸ்வரியமற்ற, ஏமாற்றமடைந்த ஜனங்கள் மட்டும் பாக்கி.

ஆகிலும் அந்த சாம்ராஜ்யம் இருந்தவரையிலும் வெகு அழகாயிருந்தது. அது போலியாக இருந்த வரையில் நிலையாகத்தானிருந்தது. வீண்புகல் பேசும் அயோக்யத்தனமுள்ளவும் அரைப் படிப்பாளியும் பழிக்குப்பழி வாங்கும் ஸ்வபாவமுள்ளதுமான முஸோலினிக்கு நல்ல பிரதி பிரயோஜனம்தான். வாழ்நாளில் ஏமாற்றமடைந்தவன், சக்ரவர்த்தியாகக் கொஞ்சநாள் நடித்தவன். ஹிட்லர் ஆக்ஞையை இப்பொழுது நிறைவேற்றிவருகிறான். ஒரு சமயம் இந்தப் போலி சீசர் சொன்னதாவது, "பலாத்காரமானது சரியான முறையதான்.' சமாதானத்தையும் தாகு பேசுவதையும்விட உயர்வானது". 1943-ம் வருஷம் பலாத்காரத்தினாலும் துரோகத்தினாலும் உண்டாகிய தன்னுடைய போலி சாம்ராஜ்யம் ஒழிந்துவிடுமென்று அவன் நினைக்கவேயில்லை.

---

## "மஸ்கிடோ" வெடி விமானங்கள்.

பாம்பர் கமாண்டைச் சேர்ந்த இரண்டு எஞ்சின்கள் உள்ள உலகத்திலேயே அதிக வேகமுள்ள "மஸ்கிடோ" வெடி விமானங்கள் பொது ஜனங்களின் மனதைக் கவருகின்றன. அவைகள் முதல் முதலில் ஆஸ்லோவிலுள்ள கெஸ்டாபோத் தலைமை காரியாலயத்தைத் தாக்கின. ஹிட்லர் பதவிக்குவந்த பத்தாம் வருஷக் கொண்டாட்டத்தினத்தன்று (அதாவது சனிக்கிழமை) அவைகள் பெர்லின் நகரத்தை விசேஷமாகத் தாக்கின.

அழகான கோடுகளிட்ட மஸ்கிடோ விமானம் மரத்தினால் செய்யப்பட்டிருப்பது கவனார்கமுள்ளது. இதில் இருவர்தான் செல்லக்கூடும். இது ரோல்ஸ் ராய்ஸ் எஞ்சின்கள் உள்ளது. இதில் மூன்று பிரிவுள்ள யந்திரசக்தியால் ஓட்டப்பட்ட ப்ரொபெல்லரிருக்கிறது. இதன் அடிப்பாகமும் வால்பாகமும் மடக்கிக்கொள்ளக்கூடியவை. இதில் ஏராளமான வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடும். இதில் நான்கு 20 மில்லிமிடர் துவாரமுள்ள பீரங்கிகளும் 303 துவாரமுள்ள நான்கு சிறிய பீரங்கிகளும் உண்டு. இதற்கு அதிக வேகமாய்ச் செல்லக்கூடிய சக்தியுண்டு. வெகுதூரமும் செல்லக்கூடும். கீழே பாய்ந்து வெடிகுண்டு வீசுவதில் குறி தப்பாமலடிக்கக்கூடும். மஸ்கிடோ விமானங்கள் உபயோகத்திலிருக்கும் எல்லா விமானங்களையும்விட வலுவுள்ளவையாகையால் ஜெர்மனியின் வபையரான உற்பத்தி ஸ்தானங்களைப் பகலில் இடைவிடாது தகர்ப்பதை இவை சூசிப்பிக்கின்றன.

---

## ஒரு வித்யாசம்.

நாகரீகமுள்ள ஜாதிக்கும் நாகரீகமற்ற ஜாதிக்குமுள்ள வித்யாசத்தை அறியவேண்டுமானால் மற்ற ஜனங்களையும், மற்ற ஜாதியார்களையும் சீனர்களும் ஜப்பானியர்களும் நடத்தும் மாதிரியைக் கவனித்தாலே தெரியவரும். சீனர்கள் தங்களுடைய பழக்கவழக்கங்களை மற்றவர்கள் கட்டாயமன்னியில் கற்றுக்கொண்டால் போதுமென்று நினைத்தார்கள். தங்களுடைய நாகரீகத்தின் அழகையும் பிராசீனமான தன்மையையும் நன்கு அறிந்தவர்கள். இதர நாடுகள்



தங்களைப்போல் நடக்கப் பிரியப்படுவார்களென்று அவர்கள் எண்ணினார்கள். ஆகிலும் தங்கள் நாகரீகத்தை அயல்நாட்டில் பரவச்செய்வதற்குப் பிறநாடுகளை ஆக்கிரமிக்கவும் யுத்த முறையைக் கையாளவும் முயற்சிக்கவில்லை. அப்படியிருந்தும் அவர்களுடைய குணம் மாறுதலடையவில்லை. தங்கள் ராஜ்யத்தைக் காப்பாற்றுவதில் யுத்தம் செய்ய பிரியப்படுபவர்களென்றும் திறமையுடன் சண்டைசெய்து வெற்றிபெறவும் சக்தியுள்ளவர்களென்றும் ருஜுப்பித்துவிட்டார்கள். ஆகிலும் முக்கியமாக சமாதானமுறையில் தேசத்தை திருத்தி அமைப்பதிலும் நவீன முறையில் விவசாயம், கல்வி, தொழில்முறை இவைகளை ஏற்படுத்தவேண்டியதிலும் ரொம்பவும் அக்கரையுள்ளவர்கள். இந்த யுத்தம் துவங்குமுன் ஜப்பானியர்களைப்போலாவது, ஜெர்மானியர்களைப்போலாவது ஆயுதங்களைச் சேமிப்பதில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. மேநாட்டு தேசங்களிலுள்ள, விஞ்ஞான சாஸ்திரம், சிகிச்சை சாஸ்திரம், கல்வியின் பெருமை இவைகளின் படிப்பினையைக் கொண்டு தங்கள் ஜனங்களின் வாழ்க்கையை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்று கவனம் செலுத்தினார்கள். ஜப்பானியர்களோவென்றால் புதிய உலக அமைப்பு என்று சொல்லப்படும் ஏற்பாட்டை கிழக்கு ஆசியா முழுவதும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்போவதாக பறை சாற்றிவருகிறார்கள். அவர்களை எதிர்த்து நிற்கமுடியாத ஒவ்வொரு நாட்டிலும் சாம்ராஜ்ய ஆளுகையின் பிரயோஜனங்களைச் சுமத்தியிருக்கிறார்கள். அவர்கள் ஆக்ஞையை எதிர்ப்பது பெரிய குற்றமாகும். அவர்களுடைய ஸமக்ஷேம ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளெல்லாம் ஜப்பானியரிடமிருந்து கொடுமையும் கொள்ளையடிப்பதையும் தவிர வேறு கிட்டாதென்று அறிகிறார்கள். அதிகமான பலாத்காரத்தை உபயோகிக்கும்பொழுது புத்தி விசாலத்துக்கு பிரயோஜனம் ஏற்படாது. ஆனால், பலாத்காரத்தின் பிரயோஜனம் உபயோகமற்றது. ஜப்பானிய சாம்ராஜ்யம் இருந்ததென்று சொல்லும் நாளில் சீன நாகரீகம் நன்றாய் விளங்கி நிற்கும்.

---

## சைனு போர்முனை.

தெற்கு ஷான் நாடுகளிலிருக்கும் கெங்டங் பிரதேசத்திலிருந்து யூனான் மாகாணத்திற்குள் ஜப்பானியர்கள் முன்னேறியதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. தென்மேற்கு யூனானிலுள்ள ப்யூர் வழியாக கன்மிங்குக்கு முன்னேறலாம். இந்த மார்க்கம் அதிக வசதியில்லாத போதிலும் லங்ளிங் வழியாகச் செல்லும் பர்மா ரஸ்தாவிலும் கன்லாங் வழியாக நிறவ உத்தேசித்திருக்கும் மண் ரஸ்தாவிலும் ஜப்பான் முன்னேறுவதைத் தடுக்க வைக்கப்பட்டிருக்கும் துருப்புகளை வேறு பக்கம் திருப்பிவிட உபயோகமாயிருக்கும். இந்த முன்னேற்றத்திற்கு காரணம் தாய்நாட்டார் தங்கள் ஆதிக்கத்தை தெற்கு யூனானில் விஸ்தாரம் செய்வதற்கும் தாய் நாட்டுத் துருப்புக்களை வேறு இடங்களில் சண்டை செய்யும்படி செய்து உள்நாட்டில் விஷமம் செய்யாமல் தடுப்பதற்கு ஜப்பான் செய்திருக்கும் ஏற்பாடாகவுமிருக்கலாம். பின் சொன்ன காரணம்தான் சம்பாவிதமானது. எல்லா சந்தர்ப்பங்களையும் நோக்கினால் இந்த எதிர்ப்பு யுத்தமானது தாய்நாட்டுத் துருப்புகள் மட்டும்தான் செய்து வருகிறதென்று தெரியவருகிறது. ஸால்வீன் நதிப் போர்முனையில் விசேஷமான சம்பவம் ஒன்றும் நடைபெறவில்லை.

---

## பர்மா.

பர்மாவின் நிலைமையைச் சீர்திருத்தம் செய்வதற்காக ஜப்பானியர்கள் யாதொரு மூலதனத்தையும் உபயோகிக்கப் போகிறார்களென்பதற்கு ஹேஷ்யமொன்றுமில்லை. சீர்திருத்தம் செய்வதென்றால் ஏராளமான பொருள் செலவாகு

மென்று தாழ்மையாக ரெங்கூன் ஒலிபரப்புகளில் சமீபத்தில் வெளியிடப்பட்டது. பர்மாவானது ஜப்பான் பிடித்த நாடுகளுக்குள் வெகுதூரத்திலுள்ளது. துர்தசையிலிருக்கிறது. ஜப்பானியர் வசமிருக்கும் சொல்ப ஐஸ்வரியம், நிர்வாகிகள், யந்திர வேலைக்காரர்கள் முதலியவைகளை ஜப்பானுக்குச் சமீபத்திலுள்ள நாடுகளில் அது உபயோகப்படுத்துவது சகஜம்தான்.

பர்மாவில் ஜப்பான் செய்யும் திட்டங்களெல்லாம் படையெடுப்பினால் நேர்ந்த நஷ்டங்களை ஈடுசெய்வதற்கல்ல. பர்மாவிலிருந்து தாய்நாட்டுக்குச் சௌகரியமாய்ப் போக்குவரவிற்கு லாயக்கான ஒரு ரஸ்தாவை அமைக்கத்தான். பர்மாவை ஜப்பான் படையெடுத்தபொழுது இந்த ரஸ்தா இருக்கவில்லை. ஆனால் அவர்கள் உபயோகித்த பாதைகள், ஜப்பானின் கடலாதிக்கம் குலைந்துபோனால், போக்குவரத்துக்கு லாயக்கில்லாமல் போய்விடும்.

## பயித்தியத்தின் வாதம்.

பயித்தியத்தின் வாதத்திற்கு நார்வேயிலுள்ள குஸ்லிங் அரசாங்கம் செய்திருப்பதே உதாரணமாகும். ஸ்டாக்ஹோமிலிருந்து வெளிவந்த செய்தி பிரகாரம் பயித்தியங்களை அடைத்து வைத்திருக்கும் ஸ்தாபனங்களுக்குக் கொடுபட்டு வரும் தொகைகளை அந்த அரசாங்கம் நிறுத்திவிட்டது. பயித்தியம் பிடித்த ஒரு நிர்வாகம் மற்றொரு பயித்தியம் பிடித்த ஸ்தாபனத்தை நிலைக்கவிடாது. நாஸி ஸர்க்காரிடம் எல்லா விதமான நடவடிக்கைகளுக்குமிடமுண்டு. நாஸிகளின் முறைப்படி எல்லாரையும் ஒரு பெரிய மூட்டைப் பூச்சிக் கழகமாக ஏற்பாடு செய்வதென்பதால் இந்த அல்ப விஷயத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை.

## துருப்புகளுக்கு வசதிகள்.

துருப்புகள் மதராஸுக்கு ஒன்பது மாதத்துக்குமுன் வந்தது முதல் அவைகளுக்கு வசதிகள் யேற்படுத்துவது முக்கிய பிரச்னையாகிவிட்டது சமுத்திரத்திற்கு அப்பாலுள்ளவர்களுக்குச் சாமான்களை கப்பல் மூலம் அனுப்பதைவிட சமீபத்திலுள்ளவர்களுக்கு என்ன உதவிகள் செய்வதென்று ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பிரச்னை மதராஸ் நகரத்தில் மட்டுமல்ல. இந்த மாகாணம் பூராவும் கிளம்பியிருக்கிறது. துருப்புகள் முகாம் செய்யுமிடங்களில் அவர்களுக்குச் சாமான் ஸப்ளை செய்ய ஸ்தாபனங்கள் தேவை. ரஜாவில் சிப்பாய்கள் சென்றால் அவர்களுக்கு உணவு வசதியளிக்கவேண்டும். குளிர் மிகுந்தமலைப் பிரதேசங்களுக்குச் சிப்பாய்கள் வரும்பொழுது உஷ்ணமான ஆடைகள் வேண்டும். இந்தியாவில் இவ்வளவு குளிர் இருக்குமென்று அவர்கள் எதிர் பார்க்கவில்லை. இப்பேற்பட்ட காரியங்களுக்கெல்லாம் பொதுஜனங்களின் ஒத்தாசை அவசியம். நாம் ஒத்தாசை செய்துவருகிறோம். ஒவ்வொரு இடத்திலும் தனிப்பட்டவர்கள் தங்களாலியன்றதைச் செய்துவருகிறார்கள். ஒவ்வொரு சிறிய சங்கமும் தன்னுடைய சொல்ப ஐச்வர்யத்தைக்கொண்டு தனிப்பட்ட முறையில் வேலை செய்தால் அதிலிருந்து பிரயத்னங்களில் பெரும் பாகம் பிரயோஜனமற்றதாக ஆகிவிடுமாகையால் இவைகளை ஒன்று படுத்த ஐக்கிய யுத்த தர்ம நிலயம் ஏற்பட்டிருக்கிறது.

முதலாவதாக சாமான்கள் சேமிப்பு இலாகா ஏற்பட்டிருக்கிறது. சென்ற மேயீ பிரிடிஷ் விமானப்படையின் ஒரு பகுதிக்கு சாமான்கள் வாங்குவதற்காகப் பரீக்ஷார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் ஒவ்வொரு சாமானுக்கும்



200 சதவிகிதம் லாபம் வைத்து விற்காத ஒரு கண்ட்ராக்டரும் கிடைக்கவில்லையென்று புகார் செய்து வந்தார்கள். அவர்கள் தாங்களே சாமான்கள் வாங்க ஆரம்பித்தார்கள். நாங்கள் ஸப்ளை செய்தோம். அதன் பிறகு ஒன்றன்பின் ஒன்றாக அநேக பகுதிகள் இந்த ஏற்பாட்டில் சேர்ந்துவிட்டன. இப்பொழுது நாம் எதிர்பாராத வண்ணம் பெரிய ஸ்தாபனமாக ஆகிவிட்டது. ஒவ்வொரு வாரமும் 6,00,000 சுருட்டுகளும், 23 பெட்டி ஸோப்புகளும் வாங்குகிறோம். எங்களிடமிருக்கும் சாமான்களின் வர்க்கங்களும் அதிகரித்துவிட்டன. சுருட்டுகளும், ஸோப்புகளும் தவிர, க்ஷவர ப்ளேடுகளும், தையல் சாமான்களும், ஜோடு நாடாக்களும். பிரிக்லி ஹீட் பௌடரும், இனிப்பு தின் பண்டங்களும், எழுத உபயோகப்படும் சாமான்களும், ஷர்ட்டுகளும், அங்கிகளும், கால் சட்டைகளும், கைக்குட்டைகளும் இன்னும் இதர சாமான்களும் சேமிக்கப்படுகின்றன. தென் இந்திய ஐக்கிய தோட்டக்காரச்சங்கம் மாதமொருமுறை தேயிலை ஸப்ளை செய்து வருகிறது. எங்களை வேண்டிக்கொள்ளும் எல்லா காண்டீன்களுக்கும், தங்களுடைய சௌகரியத்துக்காக நடைபெறுவதற்கும், அவர்களுக்காகப் பொதுஜனங்கள் நடத்தும் காண்டீன்களுக்கும் தேயிலை இனாமாகக் கொடுக்கப்படுகிறது. ஒரு வகுப்பு மார்க்கெட்டில் தானாகவே சாமான்கள் வாங்குவதைவிட இம்மாதிரியான ஒரு மத்திய ஸப்ளை நிலயத்தில் சேருவது நலம். நாம் மொத்தமாக சகாயமான விலைக்கு வாங்கி லாபமில்லாமல் வாங்கின விலைக்கே விற்கக்கூடும். எங்களிடம் வேலை செய்பவர்களெல்லாம் சம்பளமில்லாமல் வேலை செய்கிறவர்கள். இதரச் செலவுகளை மதராஸ் அரசாங்கம் பொறுத்துக்கொள்ளுகிறது. மதராஸ் மாகாணத்தில் துருப்புகளிருக்கும் எந்த இடத்திலும் துருப்புகளின் நன்மைக்காக வேலை செய்துவரும் ஒவ்வொரு காண்டீனும், கவர்ன்மெண்ட் ஹவுஸிலுள்ள ஐக்கிய யுத்த தர்ம நிலயத்திற்கு அவர்கள் என்ன செய்து வருகிறார்களென்றும் எவ்விதமான உதவி தேவையென்றும் தெரிவித்துக்கொள்ளலாம்.

துருப்புகளில்லாத சில இடங்களில் காண்டீன் சேவையும், மற்ற வசதிகளும் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆகிலும் இந்த வசதிகளுக்கு உதவி செய்ய அவர்கள் முன்வரலாம். இந்தத் துருப்புகள் சமீப காலத்தில் சொந்த நாட்டை விட்டுக் கோடை கால ஆரம்பத்தில் இந்தியாவுக்கு வந்தவர்கள். முகாம்களில் இருப்பதற்கு அசௌகரியமான சமயம். ரொம்பவும் கஷ்டப்பட்டவர்கள். இவர்களுடைய வசதிகளுக்காக கவர்னரின் யுத்த நிதியின் ஒரு பாகமாகிய துருப்புகளுக்கு வசதியளிப்பதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட நிதியிலிருந்து பொருளுதவப்படுகிறது. இந்த நாட்களில் அதிகத் தொகையை ஒருவரும் கொடுக்க முடியாது. ஆகிலும் இந்த நிதிக்கு ஆதரவு அவசியம் வேண்டும். ஒரு இடத்தில் வாரம் ஒரு அணா கொடுப்பது என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஸ்தாபனங்கள் தான் தேவை. சிலர் அணாவுக்கு மேலேயும் கொடுக்கலாம். துருப்புகளில்லாத இடங்களிலுள்ள ஜனங்கள் செய்யக்கூடியது இது தான். இவர்கள் ஒரு காண்டீன் ஏற்பாடு செய்ய முடியாது. ஆகிலும் அவைகளை நடத்துபவர்களுக்குப் பண உதவியும் சாமான்கள் ஸப்ளையும் செய்ய முன்வரலாம். ஒரே தடவையாக நன்கொடையளிப்பது நலம் தான். ஆகிலும் கிருதியாக ஒவ்வொரு வாரமும் மாதமும் கொடுத்து வருவதும் இன்னும் விசேஷம்.

## பிரேஸ் விளம்பரம்.

(இந்தியா கவர்ன்மெண்டுடையது).

இப்பொழுது சிறிய நாணயங்களில் குறைவு ஏற்பட்டதற்கு சிலர்கள் தங்களுக்குத் தேவையான அளவுக்கு மேல் சேமித்துவைத்துப் பின்னால் லாபகரமாக விற்றுவிடலாமென்று நினைத்ததுதான் காரணமென்பது நிச்சயம். அப்படி சேமிக்கிறவர்களைக்கண்டு பிடித்து சிக்ஷைக்குள்ளாக்கிய பிறகு அவர்களிருக்கும்

பிராந்தியங்களில் சில்லரை நாணயங்கள் ஏராளமாகச் செலாவணிக்கு வந்துவிட்டதிலிருந்து இந்த அபிப்பிராயத்திற்கு ஆதரவு ஏற்படுகிறது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் ரூல் 90 (2) படி ஒருவர் தனக்கோ அல்லது தான் செய்யும் தொழிலுக்கோ எவ்வளவு தேவையோ அதற்குமேல் சேமித்து வைப்பவரும் நாணயங்களையோ நோட்டுகளையோ அவைகளின் உண்மையான மதிப்புக்குமேல் அதிக விலைக்கு விற்பனை செய்கிறவர்களும் குற்றம் செய்தவர் ஆவதர்கள். இந்தியா கெஜெட்டில் இன்று வெளியிடப்படும் பிரசுரங்கள் மூலம் இந்தக் குற்றங்களுக்கும் மற்றும் சில குற்றங்களுக்கும் சீக்கிரமாக சிக்ஷை விதிப்பதற்காக சீக்கிரமான விசாரணை மூலம் அவைகள் பரிசீலனை செய்யப்படும்.

2. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் ஒத்தாசை செய்வதற்காகக் குற்றவாளிகளைத் தெரிவித்து தண்டிப்பதில் உதவிபுரிந்தவர்களுக்கு விசேஷ பரிசுகள் அளிக்கப்படும்.

---

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 133. (4-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 17- 2-43 | காலேஜ் A இங்கிலீஷ் | காலை | 10.15 |
| 14- 2-43 | நீர்ப்பழனி ... | ,, | 7.00 | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, | 10.15 |
| ,, | ஆலூர் ... | ,, | 7.30 | ,, | நார்த்தாமலை ... | மாலை | 7.00 |
| 15- 2-43 | காரையூர் ... | ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி ... | ,, | 7.30 |
| ,, | இடையாத்தூர் ... | ,, | 7.30 | 18- 2-43 | அண்டக்குளம் ... | ,, | 7.00 |
| 16- 2-43 | வடவாளம் ... | ,, | 7.00 | ,, | இன்னனூர் ... | ,, | 7.30 |
| ,, | செம்மட்டிவிடுதி ... | ,, | 7.30 | 19- 2-43 | கொன்னையூர் ... | ,, | 7.00 |
| 17- 2-43 | C.S.M. பள்ளிக்கூடம். | காலை | 10.00 | ,, | மேலவேகுப்பட்டி. | ,, | 7.30 |
| ,, | ராணி பெண்பாடசாலை | ,, | 10.15 | | | | |

### பிரஸங்கம் 134. (5-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 24- 2-43 | ராணி பெண்பாடசாலை | காலை | 10.15 |
| 21- 2-43 | திருவரங்குளம் ... | ,, | 7.00 | ,, | காலேஜ் A ஆங்கிலம் | ,, | 10.15 |
| ,, | வம்பன் ... | ,, | 7.30 | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, | 10.15 |
| 22- 2-43 | திருமயம் ... | ,, | 7.00 | ,, | பொ. புதுப்பட்டி ... | மாலை | 7.00 |
| ,, | மேலூர் ... | ,, | 7.30 | ,, | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |
| 23- 2-43 | பள்ளிவாசல் ... | ,, | 7.00 | 25- 2-43 | வெள்ளனூர் ... | ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் ... | ,, | 7.30 | ,, | செம்பாட்டூர் ... | ,, | 7.30 |
| 24- 2-43 | C. S. M. பள்ளிக்கூடம். | காலை | 10.00 | 26- 2-43 | புலியூர் ... | ,, | 7.00 |
| | | | | ,, | கண்ணங்குடி ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 13— 2—43 | பொன்னமராவதி. | 20— 2—43 | திருமயம். |
| 14— 2—43 | கொடும்பாளூர். | 21— 2—43 | விராச்சிலை. |
| 15— 2—43 | கீரனூர். | 22— 2—43 | விராலிமலை. |
| 16— 2—43 | குடுமியாமலை. | 23— 2—43 | வடகாடு. |
| 17— 2—43 | காரம்பக்குடி. | 24— 2—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 18— 2—43 | கீழாநிலை. | 25— 2—43 | ஆலங்குடி. |
| 19— 2—43 | புதுக்கோட்டை. | 26— 2—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—15-2-43.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ பிப்ரவரி ௴ 20௳ [ந. 134


பிரஸங்கம் CXXXIV.

## வெற்றிதான் பிரசாரத்துக்கு உபபலம்.

"யுத்தத்தின் வெற்றிகரமான முடிவைப்பற்றி நான் ஒருபொழுதும் சந்தேகித்ததில்லை. முன்பு இருந்ததைவிட இப்பொழுது இருக்கும் நிலைமை திருப்திகரமாகவேயிருக்கிறது."

19—2—43-ம் தேதி புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் மெம்பர்களுக்கு தேசிய யுத்த முன்னணி உறுதிமொழி அட்டைகளும் அடையாளங்களும் வழங்கப்பட்டபொழுது புதுக்கோட்டை ஸமஸ்தான நிர்வாகியான ஸர் அலெக்ஸாண்டர்-டாட்டன்ஹாம் C.I.E. செய்த பிரசங்கம்.

தேசிய யுத்த முன்னணி மெம்பர்களாகிய கனவான்களே,

ஶ்ரீ-தர்பார் அவர்களின் சார்பாக நான் உங்களுக்கு அளித்த தேசிய யுத்த முன்னணி உறுதிமொழி அட்டைகளையும் அடையாளங்களையும் நீங்கள் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டீர்களென்று நினைக்கிறேன். தேசிய யுத்த முன்னணிக்காகப் பாடுபடும் உங்களுடைய யுத்த முயற்சிக்கு இவைகள் அதிக உத்சாகத்தை மூட்டுமென்றும் நம்புகிறேன்.

முன்னிருந்ததைவிட இப்பொழுது உங்களுடைய வேலைகளை நீங்கள் சுலபமாகச் செய்யக்கூடும். பல தடவைகளில் வெற்றியானது பிரசாரத்துக்கு உபபலமென்று நான் வற்புறுத்தியிருக்கிறேன். தேசிய யுத்த முன்னணியின் ஒரு கிளை ஸ்தாபனத்தில் நான் சில மாதங்களுக்குமுன் பிரசங்கம் செய்தேன். எனக்கு இருமல் ஏற்பட்டு, அதன் மூலமாய் நான் ஓய்வு எடுத்துக்கொள்ளநேரிட்டது. கடைசியாக நான் பேசியபொழுது, இந்த யுத்தத்தின் மத்தியில் ஏற்படும் வெற்றிகளையும் தோல்விகளையும் (பெரும்பாலும் தோல்விகள்) நாம் மதிக்கக்கூடாதென்று உத்ஸாகப்படுத்துவதும் நீண்ட நோக்கத்துடன் யுத்தத்தை கவனிக்க வேண்டுமென்றும், எகிப்துபோன்ற நஷ்டங்கள் அப்பொழுது மகத்தான நஷ்டமென்று கருதப்பட்டாலும் இவைகள் அற்பமான சம்பவங்கள் என்று மதித்துப் பொருட்படுத்தக்கூடாதென்றும், நேசநாடுகளின் மகத்தான மனித பலமும் ஆயுதங்கள் பலமும் எதிரியை இறுதியில் முறியடித்துவிடப்போகிறது என்ற நம்பிக்கையும் ஜனங்களிடம் உண்டுபண்ணுவதும் கொஞ்ச காலம் வரை சிரமசாத்யமான காரியங்களென்று எண்ணினேன். அப்பொழுது முன்னேறித் தாக்கும்

யுத்தத்தை எதிரிகள்தான் கடைபிடித்திருந்தார்கள். இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. ருஷ்யப் போர்முனையிலும் ஆபிரிக்கப் போர்முனையிலும் மகத்தான வெற்றிகள் ஏற்பட்டுவிட்டன. எதிரி எல்லாப் போர்முனைகளிலும் தற்காப்பு யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டான். ஆகிலும் வரப்போகும் காலத்தில் பலமான சண்டைகளும், பிற்போக்குகளும், ஏமாற்றங்களும் ஏற்படக்கூடும். ஹிட்லரோ, அல்லது கோயபல்ஸோ "சதா காலமும் வெற்றிகளை எதிர்பார்க்க முடியாது" என்று சொல்லியிருக்கிறான். அச்சு வல்லரசுகளை நாம் இறுதியில் முறியடித்துவிடுவோமென்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நமக்குத் தெளிவாகப் புலப்படுகின்றன. நாம் எப்பொழுதும் கவலையுடன் கவனித்துவந்த யூ படகுகளின் தொந்தரவும், சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னபிரகாரம், இப்பொழுது குறைந்து வருகிறதென்றும் சொல்லலாம். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நமது தொழிலாளிகள் விசேஷமாகவும் விடா முயற்சியுடனும் வேலை செய்துவருவதின் பயனாக சில மாதங்களுக்கு முன் இருந்ததைவிட இப்பொழுது நமது கடற்படை பலம் அதிகரித்திருக்கிறது.

ஆகையால் நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் யாதெனில், கோழை மனது உள்ளவர்களை உத்சாகப்படுத்துவதோடு, சிலரை அதிகமாக நன்னம்பிக்கை அடையக்கூடாதென்று சொல்லவும் வேண்டும். இதை நாம் தடுக்காவிட்டால் ஏமாற்றமேற்படக்கூடும். அதிலிருந்து அதிகமான அவநம்பிக்கையும் ஏற்பட்டுவிடும்.

யுத்தத்தின் வெற்றிகரமான முடிவைப்பற்றி நான் ஒருபொழுதும் சந்தேகித்ததில்லை. முன்பு இருந்ததைவிட இப்பொழுது நிலைமை திருப்திகரமாகவேயிருக்கிறது.

ஈ-தர்பார் அவர்கள் சார்பாகவும், ஸமஸ்தானப் பிரஜைகளின் சார்பாகவும், தேசிய யுத்த முன்னணி இயக்கத்திற்காக உத்சாகத்துடனும் சோர்வடையாமலும் யாதொரு பிரயோஜனமும் எதிர்பாராமல் உழைத்துவரும் உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நமது ஸமஸ்தானத்தின் யுத்த முயற்சியானது, நாகரீகத்துக்கும், ஜனங்களின்மேலுள்ள அன்புக்கும் அவர்களுக்குள்ள ஆர்வத்தினாலும், பற்றுதலினாலும் உத்சாகமேற்பட்டு, சம்பளம் பெருமலிருக்கும் மெம்பர்களால் பூராவும் நடைபெற்றுவருகிறது என்பதில் நானும், ஸமஸ்தானத்திலுள்ள ஒவ்வொருவரும் பெருமை பாராட்டுகிறோம்.

---

# யுத்த நிலைமை.

## மிஸ்டர் சர்ச்சிலின் விமர்சனம்.

*Feb. 11, 1943.*

### முக்கிய நோக்கம்.

விரோதியைக் கடலிலும், நிலத்திலும், ஆகாயத்திலும் பெருவாரியான முறையில் கூடிய சீக்கிரம் எதிர்க்கவேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் கஸாபிளாங்காவில் கூடி ஆலோசித்தோம். சத்துருவை மேலும் மேலும் நெருக்க வேண்டும் என்ற பெரிய நோக்கத்திலீடுப்பட்டு அதன் முக்கியத்தை நன்கு உணர்ந்து சாதாரண விசாரணைகளைத் தள்ளிவைத்தோம். வெண் கடலிலிருந்து கருங்கடல் வரையிலிலுள்ள ருஷ்யப் போர்முனையில் விரோதியை எதிர்த்து ரத்தம் சிந்தும்படி செய்வது போலவே இதரவிடங்களிலும் எதிரியைச் சாத்தியமான வழிகளிலெல்லாம் எதிர்த்து ரத்தத்தைச் சிந்தும்படி நாம் செய்யவேண்டும். இது பார்வைக்குச் சுலபமாகத் தோன்றலாம். ஆனால், இதனைக் காரியத்தில் நிறைவேற்றுவது சுலபமல்ல. ஏனெனில் இதை நிறைவேற்றுவதற்கு மிகவும் சக்தி வாய்ந்த படைகளை அனுப்பவேண்டும். சத்துருவால் பாதுகாக்கப்பட்ட கரைகளில் மிக தைரியத்துடன் இறங்கி உடனே நமது காரியத்தைத் துவக்குவற்கு ஸப்ளைகளையும் போக்குவரத்து சாதனங்களையும் சேகரிக்கவேண்டும்.



### சப்மரீன்களின் மீது போர்.

ஜெர்மன் சப்மரீன்களால் ஏற்படும் அபாயத்தை மிகைப்படுத்திக் கூறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பிரிடிஷ் அமெரிக்க கவர்ன்மெண்டுகள் சப்மரீன்களை வெல்லுவதற்கே தங்களது பிளான்களைத் தயாரிக்கும் விஷயத்தில் முன்பாத்தியதை அளித்திருக்கின்றன. கடலில் நமக்கு மிகக் கடுமையான நஷ்டமேற்பட்டிருக்கிறது. அது நம்மைத் தடைபடுத்தி நமது போர் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துகிறது. கப்பல் நஷ்டத்தினால் நாம் முழுபலத்துடன் போரில் இறங்கமுடியவில்லை. இதனால் யுத்தம் நீடிக்கிறது. சப்மரீன்களை அழிக்கும் வேலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நாம் நிலைமையை நன்கு சமாளிக்கிறோம். சென்ற 6 மாதங்களில் ஆங்கிலோ, அமெரிக்க, கனடிய கப்பல் கட்டும் ஸ்தாபனங்கள் நேசதேசத்தினருக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டத்தைவிட $12\frac{1}{2}$ லக்ஷம் டன் அதிக எடையுள்ள கப்பல்களைப் புதிதாகக் கட்டியிருக்கின்றன. அதாவது 6 மாதங்களுக்கு முன்யிருந்ததைவிட தற்போது நமது கடற்படையின் கூட்டு பலம் $12\frac{1}{2}$ லக்ஷம் டன்னால் அதிகரித்திருக்கிறது. சென்ற இரண்டு மாதங்களில் ஏற்பட்ட நமது நஷ்டம் மிகக் குறைவானது. சென்ற ஒரு வருஷ காலத்தில் இவ்வளவு குறைவான சேதமேற்பட்டதில்லை. பிரிடிஷ் கடற்படையின் பாதுகாப்புடன் 30 லக்ஷம் பேர் போனதில் 1,348 பேர் தான் கொல்லப்பட்டோ அன்றி மூழ்கியோபோயினர். இதில் காணாமல் போனவர்களது தொகையும் சேர்ந்திருக்கிறது.

மூழ்கும் சப்மரீன்களின் விகிதம் மேன் மேலும் அதிகரித்து வருகிறது. 1942 ஜனவரி முதல் அக்டோபர் வரை சப்மரீன் சேதவிகிதம் அதிகமாக இருந்தது. ஆனால் நவம்பருக்குப் பிறகு இன்று வரையுள்ள 3 மாத காலத்தில் இச்சேத விகிதம் மற்றும் அரை மடங்கு அதிகமாகியிருக்கிறது. இதே சமயத்தில் சப்மரீன்களது நாச சக்தியும் வெகுவாகக் குறைந்துவிட்டது. யுத்தத்தின் முதல் வருஷத்தில் சப்மரீன்கள் சாரசரி 19 கப்பல்களையும், 2-வது வருஷத்தில் சாரசரி 12 கப்பல்களையும், 3-வது வருஷத்தில் $7\frac{1}{2}$ கப்பல்களையும், மூழ்கடித்திருக்கின்றன.

### உணவுப்பொருள் நிலைமை.

பிரிடன் தனது ரிசர்வ் உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் எடுத்து உபயோகித்து வருகிறது என்பது உண்மை தான். ஆபிரிக்கா, ஆசியா, பஸிபிக் இவற்றில் நடக்கும் போர் நடவடிக்கைகளுக்காகவும், இந்தியாவுக்கும் பாரஸீகத்திற்கும் இதர மத்தியக் கிழக்குப்பிரதேச நாடுகளுக்கும் ஸப்ளைகளை அனுப்புவதற்காகவும் ருஷ்யாவுக்குக் கப்பல் கூட்டங்களை அனுப்புவதற்காகவும் கைவசமுள்ள ரிசர்வ் உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் எடுத்து உபயோகித்து வருகிறோம் என்பதில் ஐயமில்லை. தற்காலம் புதிய கப்பல்களைக் கட்ட தீவிர முயற்சி நடைபெறுகிறது. இதுவும் சப்மரீன் எதிர்ப்பும் நீடித்தால் 1943 வருஷக் கடைசியில் கப்பல் நிலைமை திட்டமாக நன்றாக இருக்கும். 1944-ம் வருஷக் கடைசி வரை போர் நடப்பதாக வைத்துக்கொண்டால் அப்போது நேசதேசக் கப்பல் நிலைமை இன்னும் அதிகச் சிறப்பாக இருக்கும் நமது கப்பல் பலம் குன்றாமல் அதிகரித்து வருவதை அறிந்தால் ஹிட்லருக்கு ஏமாற்றம் ஏற்படும்.

ருஷ்யாவுக்கு ஏற்பட்டுள்ள பாரத்தை எவ்வளவு அதிகமாக நீக்க முடியுமென்பதும் எவ்வளவு துரிதமாக யுத்தத்தை முடிக்க முடியுமென்பதும் நமது நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு மேல் புதிதாக எவ்வளவு அதிகமாக நாம் கப்பல்களைக் கட்டுகிறோம் என்பதைப் பொருத்தே இருக்கின்றன.

### கஸாபிளாங்கா சம்பாஷணை.

மிஸ்டர் ரூஸ்வெல்ட், யுத்த மந்திரி சபையின் ஏஜெண்ட் என்ற ஹோதாவில் எனது பூரண அங்கீகாரத்துடன் நமது விரோதிகளெல்லாம் நிபந்தனையற்ற முறையில் சரணாகதியடைய வேண்டும் என்பதே கஸாபிளாங்கா மகாநாட்டின் லக்ஷியமாக இருக்கவேண்டுமென்று முடிவுசெய்தார். எதிரிகள் நிபந்தனையற்ற முறையில் சரணாகதியடைய வேண்டுமென்று உறுதியாக வற்புறுத்துவதால்

ஜனங்களை நாம் தவருகவும் குரூரமாகவும் நடத்தி நமது வெற்றியை களங்கப்படுத்திக்கொள்வோம் என்ற அர்த்தமேற்படாது. ஆனால் தயாதாக்ஷிண்யமின்றி கண்டிப்பான முறையில் நியாயம் வழங்கவேண்டும். நாஸி அல்லது பாஸிஸ்டு சக்தியோ ஜப்பானிலுள்ள யுத்தத்திற்குச் சதிசெய்யும் ஸ்தாபனமோ அணுவளவும் எஞ்சி நிற்காதபடி செய்வோம்.

### பூர்ணமான போர்த் திட்டம்.

தற்போது நாம் பூரணமான போர்த் திட்டம் தயாரித்திருக்கிறோம். இதில் படைகளை ஒதுக்குவது, யார் இவற்றைத் தலைமை வகித்து நடத்துவது, எந்தெந்த இடத்திற்கு எவ்வளவு முக்கியமளிப்பது என்பதை நிர்ணயித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை அடுத்த 9 மாதங்களில் நமது சக்திக்கியன்றவரை நிறைவேற்றப்போகிறோம். 9 மாதத்திற்கு முன்பு மீண்டும் கூடியோசிக்க முயலுவோம்.

### முதலாவது சத்துரு.

ஜப்பானைத் தோற்கடிக்கும் முன்பு ஜெர்மன் சக்தியைக்குலைத்து அதனைத் தோற்கடிப்பதற்கே முன் பாத்தியதை அளிக்கவேண்டுமென்று ஒரு வருஷத்திற்கு முன்பு செய்த முடிவை பின்பற்றுவதென பிரிடிஷ் அமெரிக்கப் படைத் தலைவர்களும் ஏகமனதாக ஒப்புக்கொண்டனர். ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டபின் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் எல்லா சக்திகளும் படைகளும் தூரக்கிழக்குப் பிரதேசத்திற்குத் துரிதமாகச் சென்று ஜப்பான் நிபந்தனையற்ற முறையில் சரணுகதியடையும் வரை யுனைடெட் ஸ்டேட்ஸுடன் சேர்ந்து கடும்போர் நடத்துமென்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

### பர்மா ரோடு.

தற்சமயம் இந்தியாவிலேயே பிரிடன் ஜப்பானுக்கு எதிரான முயற்சிகளைச் செய்கிறது. ஆசியாவில் நாம் செய்யும் யுத்த முயற்சி எல்லாம் பர்மாவில் சீனருக்கு உதவி அளிப்பதற்காக பர்மா ரோடை திறக்கச்செய்யும் முயற்சி மூலமாகவே இருக்கிறது.

### ருஷ்யா.

நான் ருஷ்ய ராணுவங்களின் எல்லையற்ற செய்கைகளை கவனிக்கும் பொழுது, பெருவாரியான முறையில் துரிதமாகவும் ஊக்கத்துடனும் பிரிடிஷ் அமெரிக்க சேனைகள் எதிரியைத் தாக்குவதற்கு இயன்ற முயற்சியெல்லாம் செய்யப்படுகின்றன, செய்யப்போகப்படுகின்றன என்பதை நான் மனசாட்சிக்குப் பொதுவாகத் தைரியமாக கூறுகிறேன். இப்படிச் செய்யவேண்டுமென்று நானும் ரூஸ்வெல்ட்டும் ராணுவ ஆலோசகர்களுக்கும், நிபுணர்களுக்கும் அவசரமாக உத்தரவிட்டோம். அவர்களது திட்டங்களை அங்கீகரிக்கையில் தாக்குதல்களை அதிகமாகவும், வெகு துரிதமாகவும் செய்யும்படியும் அவர்களைக் கேட்டுக்கொண்டோம். இதற்காக அமெரிக்காவிலும், பிரிடனிலும் தீவிரமாக முயற்சி செய்யப்படுகிறது.

### துருக்கி.

துருக்கியைத் தொல்லையில் மாட்டுவது நமது முறையின் நோக்கமல்ல. துருக்கியின் கேடு, பிரிடனின் கேடும் நேசநாடுகளின் கேடுமாகும். இதுவரை துருக்கி எவரும் தன் மீது படையெடுக்காமல் உறுதியாக தடுத்துவந்திருக்கிறது. இதன் மூலம் அது நமக்குக் கஷ்டமான காலத்தில் அரிய சேவை செய்திருக்கிறது. அதாவது துருக்கி வழியாக பாரசீகம் இராக் இவற்றிற்கு யுத்தம் பரவாமலும் அபடான் எண்ணெய்க் கிணறுக்கு அபாய மேற்படாமலும் தடுத்திருக்கிறது. இந்த எண்ணெய் கிணறுகள் கிழக்குப் போருக்கு மிக்க முக்கியமானது.

துருக்கியின் படைகள் நூதன ஆயுத வசதிகளுடனிருப்பது நேசநாடுகளுக்கும் முக்கியமாக பிரிடனுக்கும், அத்யாவசியமாகும். துருக்கியின் போக்குவரத்து சாதனங்கள் எவ்வளவு ஆயுத சாதனங்களை ஏற்றிச்செல்லமுடியுமோ அவ்வளவு ஆயுத சாதனங்களை அதற்கு நாமும் அமெரிக்காவும் ஸப்ளை செய்யக்கூடிய நிலையிலிருக்கிறோம். துருக்கியத் துருப்புகள் அவற்றை உபயோகிக்கப் பயிற்சி பெறுவதைவிட அதிக துரிதமாக ஆயுத ஸப்ளை செய்யப்படும்.



### எகிப்து.

எல் அலமீன் போரினால் எகிப்து விடுதலையடைந்தது. பிரிடன் தனது வாக்கைக் காப்பாற்றி நைல் நதி தீரத்திலுள்ள செழிப்பான நிலயங்கள் படையெடுப்புக் கொடுமைக்குள்ளாகாதவாறு தடுத்திருக்கின்றர் என்ற அபிப்பிராயம் எகிப்து எங்கும் காணப்படுகிறது. டிரிபோலி நகரம் தான் பிரிடிஷ் படைகளால் ஜெர்மானியர் வசமிருந்து விடுவிக்கப்பட்ட முதலாவது இதாலிய நகரமாதலால் இதாலிய மக்களிடை விசேஷ உற்சாகமிருப்பது இயற்கையே யாகும்.

### ஹிட்லர் உத்தரவின் விளைவு.

வட ஆபிரிக்காவில் படையை இறக்கியதால் யுத்தப்போக்கு மாறியது. அதனால் நாங்கள் மேற்கில் முன்னேறித் தாக்க இயன்றிருக்கிறது. ஆகையால் இந்த நடவடிக்கை ராணுவ முறைப்படி சரி என்று ஸ்டாலின் அபிப்பிராயப்பட்டதுபோல் பொதுவாக நிர்ணயிக்கப்படும்.

டுனிஸியாவுக்கு கடல் மார்க்கமாக அச்சுநாட்டினர் கொண்டுவருகிறவற்றில் கால் பாகம் அல்லது மூன்றில் ஒருபாகத்தை இழந்துவருகின்றனர். உதவிப்படைகளை அனுப்புவதில் அவர்களைவிட நமக்கு அதிக சக்தியிருக்கிறது. பாலைவனத்தில் நமது சேனை ரோமலைத் துரத்திக்கொண்டேபோவது ஜெர்மானியர்களுக்கு ஒரு துர்சகுனமாகத் தோன்றுகிறது. இவ்வாறு துரத்திச்செல்வது நமது காரியம் ஜயமாவதற்கு ஒரு முக்கிய காரணம். டுனிஸியாவின் நுனியைப் பாதுகாக்க எல்லாத்தியாகங்களையும் செய்யத்தயாராக இருப்பதிலிருந்து அவர்கள் எவ்வளவு அபாய நிலைமையிலிறங்கியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. இது எல்லாவற்றிற்கும் காரணம் ஹிட்லர் போட்ட உத்தரவுதான் என்பதைத் தெரிவிக்காமலிருக்கமுடியாது. முன்பு இதேபோல்வழி ஸ்டாலின்கிராட்டின் மேல் எதிர்த்ததால், சரித்திரத்திலேயே மிகப்பெரிய விபத்தை ஜெர்மானியர்களுக்கே ஏற்பட்டது.

ரோமல் படையைச் சேர்த்து டுனிஸியா முனையில் $2\frac{1}{2}$ லக்ஷம் அச்சுப் படைகளிருக்கும். நேசநாட்டினர் கஷ்டங்களைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. பெரும் போராட்டங்களை நடத்தவேண்டியிருக்கும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 13—2—43-லிருந்து 19—2—43-வரை.

ருஷ்யா.—இந்த வாரத்தில் ருஷ்யா கீழ்க்கண்ட பிரதேசங்களைப் பிடித்தது. 10-ம் தேதியன்று வால்சான்ஸ்க்; செகுயேவ்; 11-ம் தேதியன்று லாஸோவயா; 12-ம் தேதியன்று கிராஸ்னடார்; கிராஸ்நவாமியஸ்க்; 13-ம் தேதி நோவா செர்க்காஸ்க், லிக்காயா, ஸ்வெரெவோ நோவா ஷக்தி; ஸோலோகெவ்; 14-ம் தேதி ராஸ்டாவ்; வொராஷிலாகிராட்; கிராஸ்னி; ஸாலின்; 16-ம் தேதி கார்காவ் கிராஸ்னடார் கூபான் மாகாணத்தின் முக்கியமான நகரம், மற்ற இடங்களெல்லாம் யூக்ரேனிலிருக்கின்றன. கார்காவ் யூக்ரேனுக்குத் தலை நகரம். இப்பொழுது ருஷ்யத் துருப்புகள் ஆஸவ் கடலிலுள்ள டாகன்ராக்கை நோக்கியும், வடக்கே ஸ்டாலினோ, ஓரல் இவைகளை நோக்கியும் முன்னேறுகின்றன. வேகமாகப் பின்னேறும்பொழுது ஜெர்மானியர்கள் ஏராளமான லாரிகளையும், மோட்டார்கார்களையும், விமானங்களையும் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். ருஷ்யத் துருப்புகளைப் பின்பற்றி, ருஷ்யாவின் பொதுஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவருகிறார்கள். வரப்போகும் வசந்தகாலத்தில் யூக்ரேனை சாகுபடி செய்வதற்காக ஆயிரக்கணக்கான சாகுபடி யந்திரங்கள்கொண்டு வரப்படுகின்றன. ருஷ்யாவுக்கு ஏற்பட்ட வெற்றிகள் ஸ்டாலின்கிராட்டிலிருந்து 375-மைல்கள் வரையில் ஜெர்மானியர்களைத் துரத்திவிட்டன. பிடிபட்ட இடங்களைப் பார்க்கும்பொழுது, சென்ற 1942-ம் வருஷ மாரிகாலத்தில் ஜெர்மானியர்கள்

இருந்த பிரதேசங்களுக்கு அதாவது, பிரியான்ஸ், ஓரலிலிருந்து குர்ஸ்க், பீல் கொராட், கார்கவ், வொராஷிலாகிராட் வழியாக ரஸ்டாவுக்குச் செல்லும் கோட்டுக்குப் பின்பக்கம் விரட்டியடிக்கப்பட்டுவிட்டார்கள் என்று தெரியவரும். இந்தக் கோட்டை ருஷ்யர்கள் தாண்டிவிட்டார்கள். ருஷ்யரின் தாக்குதல் மூலமாக அவர்கள் சென்ற வருஷம் ஜெர்மானியர்களின் தாக்குதல்கள் மூலமாக இழந்த எல்லா இடங்களையும் திரும்பப் பிடித்துவிட்டார்கள். சில இடங்களில் இன்னும் அதிகமான இடங்களையும் பிடித்திருக்கிறார்கள். காகஸஸில் ஜெர்மானியர்கள் பிடித்த இடங்களில் கொஞ்சமட்டும் இன்னும் ஜெர்மானியர் வசமிருக்கிறது. சென்ற கோடைகாலத்தில் ஜெர்மானியர் முன்னேறின வேகத்தைப்போல இந்த மாரிகாலத்தில் ருஷ்யரின் முன்னேற்றம் அதிவேகமானது. ராணுவ முறையில் இது அர்ப்புதமானது.

**டூனிஸியா.**—துரத்தியடிக்கப்பட்டுப் பின்வாங்கிய ரோமலின் துருப்புகள் டூனிஸியாவின் தென்பகுதிக்குச்சென்று மாரத் அரணை அடைந்துவிட்டன. ஐயமடைந்தவரும் எட்டாம்படையின் முன்னேற்ற வேகம் ரஸ்தாவிலுள்ள ஒவ்வொரு மைலும் ஜெர்மன் சுரங்க வெடிகளாலும் இதர ஏற்பாடுகளாலும் விஸ்தாரமாக நாசமாக்கப்பட்டுவிட்டதால் கொஞ்சம் குறைந்துவிட்டபோதிலும் 8-ம் படையானது எதிரியைத் துறத்திக்கொண்டே டூனிஸியாவுக்குள் 20-மைலிலுள்ள பென்கொர்டேன் என்னுமிடத்தைப் பிடித்துவிட்டது.

பிப்ரவரியீ 15-ம் தேதி பெயிடு பிரதேசத்துக்கு மேற்கே எதிரி திடீரென்று தாக்குதல் செய்து அமெரிக்காவின் படைகளை 20 மைல்கள் ஸ்பீடா என்னுமிடத்திற்குத் துறத்தியடித்து, ஸ்பாக்ஸாக்கும், ஸித்தி பௌசித்துக்கும் செல்லும் இருப்புப்பாதையில் உள்நாட்டில் 110 மைல்கள் தூரத்திலுள்ள கப்ஸாவையும் ஆக்கிரமித்துவிட்டான். அமெரிக்கப்படைகளும் பெயிடு—ஸ்பீடா ரஸ்தாவுக்கு வடக்கேயுள்ள ஒரு உன்னதமான பிரதேசத்தை ஆக்கிரமித்துவிட்டன. கப்ஸாவுக்குத் தெற்கே கெபிலி என்னுமிடத்தில் எதிரியின் பலம் அதிகமாகயிருக்கிறது. அமெரிக்கப்படைகள் டாஸீயர் என்னுமிடத்திலிருக்கிறார்கள். கெபிலியானது ஷாட் ஓகெரிட்டன் தென்கிழக்கு ஓரத்திலிருக்கிறது. டாஸீயர் என்பது ஷாட் ஓகெரிட்டின் வடக்குக் கோடியிலிருக்கிறது.

**சைனு.**—பர்மா யூனன் எல்லைச் சரகங்களில் ஜப்பானியர்கள் மறுபடியும் போர்புரிய ஆரம்பித்துவிட்டார்கள். டாமன்லங்க் பகுதியில் கோரமான யுத்தம் நடக்கிறது. மாக்ஸங்க் என்னுமிடத்தைத் தாக்கிய ஜப்பானியப்படையின் ஒரு பகுதி விரட்டியடிக்கப்பட்டது. மாங்க்பேயிலிருந்து முன்னேறும் படைகளை நாம் எதிர்த்துப் போராடுகிறோம். க்வாங்டங்கிலுள்ள மேற்கு ஸன்ஊயில் ஒரு ஜப்பானியப்படை இறங்கியிருக்கிறது. வட ஸாம்ஷினிலுள்ள ஹூபா என்னுமிடத்தில் மற்றொரு ஜப்பானியப்படை வளைக்கப்பட்டிருக்கிறது. சீனர்கள் ஹாசிங்யாவையும் மாபாங்கையும் திரும்பப் பிடித்துவிட்டார்கள்.

ஜப்பானியர் கீழே சொல்லப்படும் இடங்களில் விமானத்தாக்குதல்கள் செய்தார்கள்.

பிப்ரவரி 10 தெற்கு ஆன்ஹ்வீயிலுள்ள ஹூவேசௌ, ஷென்ஸி, டெயிபிங்கிலுள்ள ஷென்ஸி, ஹூபேஹ்ஸியிலுள்ள லங்லிங்க். பிப்ரவரி 11 லுன்ஹை, சுங்கைரிஸ், லிஞ்சோ, குவைலின்—இவைகள் க்வாங்ஸி மாகாணத்தில், லங்க்லிங். பிப்ரவரி 12 குவாங்க்ஸீயிலுள்ள கன்ஸங்கு, ஹூபேஹ்ஸியிலுள்ள லூகாசிங், குவெய்லின்.

**பர்மா.**—வடக்கு, மேற்கு பர்மாவில் ஜப்பானியர்களை குரில்லாச் சண்டை மூலம் தாக்குவது நடைபெற்று வருகிறது. சின்மலை பிரதேசங்களில் சின் படைகளோடு ஜப்பானியர் யுத்தம் செய்ததில் பின்வாங்க வேண்டியதாக நேரிட்டது. வடபர்மாவில் காசினியிலிருக்கும் துருப்புகள் ஜப்பானியத் துருப்புகளேற்றிவரும் வண்டிகளை மறைமுகமாக இருந்து ஒழித்துவிட்டார்கள். பிப்ரவரி 12-ம் தேதியன்று அமெரிக்க 10-வது விமானப்படை மெயிட்ஜை பாலத்தையும் ரெங்கூனிலுள்ள இருப்புப்பாதை தளங்களையும் தாக்கி வருஷாந்தரக் கொண்டாட்டம் நடத்தியது. பிப்ரவரி 18-ம் தேதி டான்பெயிக், ராதிடாங் சமீபத்தில்



ஜப்பானியர்கள் செய்த பதில் தாக்குதல் எதிரிக்கு பெரும் நஷ்டத்தோடு விரட்டியடிக்கப்பட்டது. ஜப்பானியர்களுக்கு ஸப்ளைகள் ஐராவதி நதிமூலமாயும் அதன் கிளையான சிண்டுவின்நதி மூலமாகவும் வருகின்றன. நதிகள் அதிக ஆழமில்லாததால் 50 அடி வரையில் படகுகளில் ஏற்றி மோட்டார் படகுகளால் இழுக்கப்படுகின்றன. பிரிடிஷ் விமானப்படை எதிரிகளுக்கு ஸப்ளைகள் போகாதபடி, தடுப்பதற்காக இந்தப் படகுகளின் பேரில் மெஷின் பீரங்கிப்பிரயோகம் செய்து வருகிறது.

இந்த வாரம் பிரிடிஷ் விமானப்படை கீழ்க்கண்ட இடங்களைத் தாக்கியது.

பிப்ரவரி 10, மேயோ; பிப்ரவரி 11, மாயூ தீபகற்பத்தில் இரண்டு கிராமங்கள்; காலடான் நதி; பிப்ரவரி 12, சிண்ட்வின் நதியின் அடிப்பாகம்; பிப்ரவரி 13, காலசாங்க், யக்யாவின், ராதிடாங். பிப்ரவரி 14, ஷ்வீபோ; பிப்ரவரி 15, ஹேஹோ.

**ஸாலமன்ஸ் யுத்தம்.**—உத்தியோக முறையில் விளம்பரம் செய்தபடி, ஜனவரி 29-க்கும் பிப்ரவரி 4-க்கும் இடையில் கப்பல் சண்டைகளில் ஜப்பானுக்கு ஏற்பட்ட கஷ்டம் பின்வருமாறு. மூழ்கியதும் பழுதுபட்டதுமாக 15 கப்பல்கள். இவைகளில் 2 நாசகாரிகள் மூழ்கின. 4 கப்பல்கள் அநேகமாக மூழ்கியிருக்கலாம், 6 கப்பல்கள்கள் பழுதாக்கப்பட்டன.

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா பிரதேசத்தையும் கோலம்பங்காராவையும் நமது வெடிவிமானங்கள் தாக்கின.

**நியூ கினியா.**—வா பிரதேசத்திலிருந்து மூபோப் பிரதேசத்திற்கு ஜப்பானியர்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கம்ஸி, ஓபி முனைகளில் நேசநாடுகளின் ரோந்துப்படை மும்முரமாக நடமாட்டம் செய்தது. ரபால் இடைவிடாது தாக்கப்படுகிறது.

**சில்லரை விஷயங்கள்.**—1. ராஜினாமாச் செய்த குவாவாம் ஸுல்டானேக்குப் பதிலாக ஆலிஸொகேலி பாரஸீகப் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2. பின்லாந்தில் டாக்டர் ரிஸ்டோரிஸ்டி ஜனாதிபதியாக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**—(7 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

இரவில்.—பிரான்ஸில் லோரியானி (Lorient)லுள்ள ஸப்மரீன் தளம்.

ராணுவ தொழிற்சாலைகள்.—மேற்கு ஜெர்மனியிலுள்ள ரூர் (Ruhr), இதாலியிலுள்ள நேபிள்ஸ (Naples).

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

சத்துருவின் வண்டிகள்.—பென் கார்டனுக்கு (Ben Gardan) மேற்கு.

விமான நிலயம்—டூனிஸ் (Tunis).

ரயில் போக்குவரத்துகள்.—ஸிஸிலி (Sicily).

வியாபாரக் கப்பல் ஒன்று.—ஸிஸிலிக்கு அருகில்.

விமான நிலயங்களும், கட்டடங்களும்.—ஸார்டினியாத் தீவிலுள்ள காக்லியாரி (Cagliari).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முற்றிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்—நியூ கினியிலுள்ள லே (Lae).

ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்ட டவுன்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள காகேனுவா (Kaukenua)வும், டிமிகா (Timika)வும். ஸெலிபிஸ் தீவிலுள்ள போடன் (Boetan)னும், வாங்கி (Wangi)யும்.

ஜப்பானியத் துருப்புகள்.—கிழக்கு பர்மாவிலுள்ள குட்காவுக்கு (Kutka) அருகில்.

**8—2—43.** (திங்கட்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

இரவில்.—சுரங்க வேடிகள் பாவுவது.—*விரோதியின் கடற்கரையோரமாக.*

**வட ஆபிரிக்கா (North Africa),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.—*காபெஸ்* (Gabes)—(18 *சத்துரு விமானங்கள் சுடப்பட்டன; 5 நேச தேச விமானங்கள் திரும்பிவரவில்லை*).

சத்துருவின் வண்டிகள்.—*பென் கார்டனு* (Ben Gardan)*க்கு அருகில்.*

*ஸிஸிலியிலுள்ள மெஸினு* (Messiana).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முற்றிலும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

துறைமுகம்.—*ஆரு தீவிலுள்ள டோபோ* (Dobo).

*டச்சு நியூ கினியில் பாபோ* (Babo)*வில் உள்ள கப்பல் துறைமுகப் பிரதேசம்.*

விமான நிலயம்.—*பூயின்* (Buin), *நியூ பிரிபிரிடனிலுள்ள காஸ்மாடா* (Gasmata).

*நியூ கினியில் பின்ச்சாபன்* (Finschhafen).

ரயில் தளங்கள், கட்டடங்கள்.—*பர்மாவில் ரங்கூன்* (Rangoon).

**—2—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

இரவில்.—சுரங்க வேடிகள் பாவுதல்.—*சத்துருவின் கடலோரத்தில.*

**வட ஆபிரிக்கா (North Africa),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

சத்துருவின் விமான நிலயம்.—*கைர்வான்* (Kairwan).

நகரங்கள்.—*கலாப்ரோ* (Calabro).

*ஐயோனியன் கடற்கரைப் பிரதேசம்.*

விமான நிலயங்கள்.—*கிரீட் தீவில் ஹொராக்ளியான்* (Heraklion), *காஸ்டெல்லி* (Kastelli).

கப்பல்கள்.—*தெற்கு ஸிஸிலி* (Sicily), *பாலெர்மோ* (Palermo) *துறைமுகம்.*

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

நகரம்.—*நியூ கினியில் மொராக்* (Merauke).

விமானம் தங்குமிடம்.—*நியூ கினியிலுள்ள லே* (Lae).

விமான நிலயம்.—*ஸெலிபிஸ் தீவிலுள்ள ஸெனுரா* (Cenara).

கிராமங்கள்.—*பர்மாவில் அக்யாப்*(Akyab) *பிரதேசத்தில்.*

**10—2—43.** (புதன்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—ரயில்வே தளங்கள்—*பிரான்ஸிலுள்ள கேயன்* (Caen).

இரவில்.—*இதாலியிலுள்ள டூரின்*(Turin).

**வட ஆபிரிக்கா (North Africa),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல் துறைமுகங்கள்.—*பிஸெர்ட்டா* (Bizerta).

ரயில்வே —*தென் டூனிஸியா, ஸிஸிலி.*

ஒரு கடல் விமானம் —*ஸிஸிலிக்குத் தென் கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. (நாசமாக்கப்பட்டது).*

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*கிழக்கு அரங்கம் முழுவதிலும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

*காய்* (Kai) *தீவுகளிலுள்ள டோயில்* (Toeal), *நியூ பிரிடனிலுள்ள உபிலி* (Ubili), *நியூ கினியிலுள்ள லே* (Lae)*யில் உள்ள* விமானம் தங்குமிடம்.

*அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா*(Kiska).

*பர்மாவில் மியிங்கியான் என்ற இடத்தில் ஒரு ஜப்பானிய பீரங்கி.*

பர்மாவில் யுத்த தளங்களும் ஆக்யாப் (Akyab) *பிரதேசமும்.*

ராதிடாங் (Rathedaung) *பர்மாவிலுள்ள* ஏற்ஹோ *விமானம் நிலயமும்.*

*ஐரோப்பா* (Europe), (*இரண்டு நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை*).

**11—2—43.** (வியாழக்கிழமை).

பகல்.—ரயில்வே தளங்கள்—*பிரான்ஸில் ரோஸன்டேல்* (Rusendael).

ஒரு தொழிற்சாலை.—*பிரான்ஸில் கேயன்* (Caen).

இரவில்.—(*3 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்*).

கப்பல் தளங்கள், ஸப்மரீன் தளங்கள்.—*வில்ஹெம்ஷாவன்* (Willhelmshaven).

**வட ஆபிரிக்கா (North Africa).**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

சத்துருவின் சைனியங்கள்.—*ஸெனெட்* (Sened)*க்கு அருகில்.*

ரயில்வே.—*டூனிஸியா* (Tunisia).

கப்பல்.—*ஸிஸிலிக்கு அருகில்.*

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—*நியூ கினியில் லே* (Lae).

*நியூ ஜியார்ஜியாவிலுள்ள முண்டா* (Munda).



கிராமங்கள்.—(Mayu) *தீபகற்பத்தின் தென்பகுதியில்.*

ரயில் வண்டிகள், சத்துருவின் போக்குவரத்து சாதனங்களும்.—*பர்மாவில்.*

**2—2—43.** (வெள்ளிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலில்.—ரயில் வண்டிகள், படகுகள், யந்திரப் படகுகள், மற்றவண்டிகள்.—*மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பிரான்ஸ்.*

துருப்புகள், அவர்களின் தங்குமிடங்களும்.—*பிரான்ஸ், பெல்ஜியம்.*

இரவில்.—சத்துருவின் கடற்கரையோரமாக சுரங்க வேடிகள் பாவுதல்.

**வட ஆபிரிக்கா (North Africa),**
**மத்தியதரைக்கடல். (Mediterranean).**

சத்துரு வண்டிகள்.—*பென் கார்டனுக்கு* (Ben Gardan) *மேற்கே.*

சத்துருவின் முன்னேறித்தாக்குமிடங்கள்.—*டூனிஸியாவில்.*

கப்பல்கள்.—*டூனிஸியாவின் கரையோரத்தில்.*

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

*நியூ ஜியார்ஜியாவில் முண்டா* (Munda).

சத்துரு இடங்கள்.—*கொலொம்பங்காரா* (Kolombangara) *தீவில்.*

பாலம்.—*பர்மாவில் மிட்னி* (Myitgne).

கப்பல் தளங்கள்.—*ரெங்கூன்* (Rangoon).

காலா சுவாங் (Kalachaung), *யெக்யிம்பின்* (Yegyanbin).

ரயில்வே இலக்குகள்.—*பர்மாவில் மாண்டலே* (Mandalay).

**3—2—43.** (சனிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—கப்பல்கள், தளங்களும்.—*புலாயின்* (Boulogne), *ஸெயின்ட்மாலோ* (St. Malo).

இரும்பு தொழிற்சாலைகள்.—*பெல்ஜியம், ஹாலந்திலுள்ள இஜ்முய்டன்* (Ij Muiden).

துறைமுகம்.—*இதாலியில் நேபிள்ஸ்* (Naples).

விமான நிலயம்.—*இதாலியில் கொட்ரோனி* (Cotrone).

இரவு.—ஜெர்மானிய ஸப்மரீன் தளம்—*லோரியான்* (Lorient).

**வட ஆபிரிக்கா (North Africa),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல் தளங்கள்.—*டூனிஸ்* (Tunis). *பிஸெர்ட்டா* (Bizerta).

விமான நிலயம்—*டூனிஸ்* (Tunis).

விமானச் சண்டை.-*டூனிஸி* (Tunisia)*யாவில் (6 அச்சு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).*

துறைமுகம்.—*ஸிஸிலியில் பாலெர்மோ* (Palermo).

**ருஷ்யா (Russia).**— (6—2—43-*லிருந்து* 13—2—43 *முடிய அந்த வாரத்தில் சத்துரு நஷ்டம்* 243 *விமானங்கள்; ருஷ்யாவின் நஷ்டம்;* 101 *விமானங்கள்*).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

*நியூகினியில்* மோபோ (Mobo).

விமான நிலயம்.—*நியூ கினியில் லே* (Lae).

*நியூ கினியிலுள்ள* மாடாங் (Madang), *பின்ஸ்சாபன்* (Finschhafen).

*நியூ பிரிடனில் உள்ள ரபால்* (Rabaul) துறைமுகம்.

*டிமோரிலுள்ள பிலோரே* (Fuiloro).

கடல் இடங்களும், கப்பல்களும்.—*ஷார்ட்லாண்ட்* (Shortlands) *தீவு.*

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-*பர்மாவிலுள்ள லோனகின்* (Lonkin).

ரயில்வே வியாபாரச் சரக்குகள்.—*மத்திய பர்மாவில்.*

சாமான்களேற்றும் வண்டிகள்.—*பர்மாவில் பாக்கன்* (Paukkan).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**—2—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

*ஒரு தகவலும் கிடைக்கவில்லை.*

**வட ஆபிரிக்கா (North Africa),**

*டூனிஸியாவில் முன்னேறும் நேசதேசத் துருப்புகள்.*

**தூரக்கிழக்கு (Far East).**

*கூடல்கனல்*(Guadalcanar)*உள்ள விமான நிலயம்.*

**9—2—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

*லண்டன் (ஒரே ஒரு அபாய எச்சரிக்கை மட்டும்) ஹோம்கவுண்டிஸ்*(Homecounties)

**வட ஆபிரிக்கா (North Africa).**

*ட்ரிபோலி* (Tripoli).

**தூரக்கிழக்கு (Far East).**

*ஆஸ்திரேலியாவுக்கருகில் ஒரு சிறிய கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.*

**10—2—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகல்.—இங்கிலாந்தின் தென்கரை (3 விரோதி விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன.

**வட ஆபிரிக்கா (North Africa).**

விமானச் சண்டைகள்.—நேசதேச முன்னணித் துருப்புகள் இருக்கும் இடங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

வைசுனுவில் ஹூவேசோ (Hweichow) வும் லுங்லிங் (Lungling).

**11—2—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு இடத்திலும் விமானத்தாக்குதல் கிடையாது.

**வட ஆபிரிக்கா (North Africa).**

டுனிஸியாவில் நேசதேச முன்னணித் துருப்புகள்.

**ருஷ்யா (Russia).**

டானெட்ஸ (Donetz) அரங்கத்தில் முறியடிக்கப்பட்ட ஜெர்மன் துருப்புகளின் பின்வாங்குதலைப் பாதுகாத்தல்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூகினியில் பூனு (Buna).

**2—2—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa),**

அல்ஜீரியா (Algeria) கரையோரத்தில் விமானச் சண்டை (ஒரு சத்துரு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது).

**தூரக்கிழக்கு (Far East).**

ராதிடாங் (Rathedaung) பிரதேசம் (ஒரு சத்துரு விமானம் சுட்டுவீழ்த்தப் பட்டது).

**13—2—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தென்கிழக்குக்கரை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

டுனிஸியாவில் எட்டாவது சேனையின் முன்னணி சைனியங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

மோபோ (Mobo)வில் நேசதேச சைன்யங்கள்.

**14—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

ஔச்செல்ஷியா (Ousseltia)வில் நேசதேச சைனியங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியில் மெராக் (Merauke) (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டது).

---

# யுத்தக் குறிப்புகள்.

**ராஸ்டாவ், கார்கவ் விழ்ந்தது.** ராஸ்டாவ் 14-ம் தேதியன்றும் கார்கவ் 16-ம் தேதியன்றும் வீழ்ந்துவிட்டன. நாலாவது தடவை ராஸ்டாவ் கைமாறிவிட்டது. முதலில் 1941-ம்வருஷம் நவம்பர்மீ 23உ ஜெர்மானியர்கள் அதைப்பிடித்தார்கள். 6 நாட்களுக்குப் பிறகு அதை ருஷ்யர்கள் திரும்பப் பிடித்தார்கள். எட்டு மாதங்களுக்குப் பிறகு கோடைகாலத்தில் மறுபடியும் ராஸ்டாவ் ஜெர்மானியர் வசமாயிற்று. மறுபடியும் இப்பொழுது ருஷ்யப் படைகள் அதை வெற்றிகரமாகத் திருப்பிப்பிடித்துவிட்டன. சென்ற வருஷம் ராஸ்டாவானது ஜெர்மானியர்களுக்குக் காகஸஸுக்குப் போவதற்கு வாயிலாக இருந்தது. இப்பொழுது யூக்ரேனுக்குச் செல்லுவதற்கு ருஷ்யாவுக்குப் பாதையாக மாறிவிட்டது. ஜெர்மனியின் துயரம் இத்துடன் முடியப்போவதில்லை. அஸாவ் கடலுக்குக் கதவுபோன்ற நோவாரோஸிஸ்க், லெனின்கிராட்—ஷலெஸல்பர்க் முனைகளிலிருந்தும் ஜெர்மானியர்கள் காலிசெய்துகொண்டு பின்வாங்குகிறார்கள். துர்தசையானது ஹிட்லரை குறவளையில் பிடித்துவிட்டது. டாக்டர் டௌஷின் ஜோஸ்யம் பலிக்க ஆரம்பித்துவிட்டது. பிப்ரவரி 13-ம் தேதி அன்று நேசநாடுகளின் வெற்றிக்காக முன்னறிவுடன் டௌஷ் ஜனங்களுக்கு விக்ஞாபனம் செய்தபொழுது சொன்னதாவது:—

"ஜெர்மனி ஏற்பாடு செய்துவரும் இடங்களுக்குத் தெற்கு திசையிலுள்ள ஜெர்மன் படைகள் இன்னும் சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ பின் வாங்கிவிடும். இந்த ஏற்பாடானது தாக்காலிகமாக நிபர் நதிப் பிரதேசத்திலும்,



கியவ் முன்னும், கடைசியாக ட்வீனாவிலும் பிரிப்பட் சதுப்பு நிலங்களிலும், நீஸ்டர் நதிப்பிரதேசத்திலும் நடைபெறக்கூடும். தன்னுடைய அபிப்பிராயத்தைப் பின்லாந்திலுள்ளவர்களுக்கும், ருமேனியர்களுக்கும், ஹங்கேரியாவிலுள்ளவர்களுக்கும் ஹிட்லர் தெரிவித்துவிட்டான். அநேகமாக இந்த இடங்களில்தான் ஜெர்மனியின் இறுதியான தோல்விகள் ஏற்படக்கூடும். இம்மாதிரி திடுக்கிடக்கூடிய விளைவுகளுக்குக் காரணம் ஸ்பஷ்டமானது. தலைமை வகிப்பதென்பது ஒருவிதமான 6-வது உணர்ச்சியென்று சொல்லலாம். எப்பொழுது அடிப்பது, எப்பொழுது பின்வாங்குகிறது, எது முன்னதாகச் செய்யவேண்டிய காரியம் எது தாமதமாகச் செய்யவேண்டிய நடவடிக்கை என்று சொல்லக்கூடிய உணர்ச்சியும் இதுதான். சென்ற யுத்தத்தில் இந்த மனப்பான்மை மார்ஷல் பாக்கிடம் தானிருந்தது. இந்த யுத்தத்தில் இந்த குணங்கள் ஸ்டாலினிடம் நிரம்பியிருக்கின்றன. இந்தத் தந்திரம்தான் கைவிட்டுப்போகும்போலிருந்த ஸ்டாலின்கிராட் ருஷ்யா வசம் திரும்ப வந்ததற்கும் ஜெர்மன் துருப்புகள் வளைக்கப்பட்டிருப்பதற்கும் காரணம். கியாதிபெற்ற தளகர்த்தர்கள் காலடிவைக்கப் பயந்த ருஷ்யாவில் முரட்டுத்தனமாக முன்னேறியது ஹிட்லர் செய்த பெரிய தவறுதல். இருப்பது அல்லது இறப்பது என்ற நாஸியக்கொள்கையின் முறைப்படிக்கும், நிலைமையைச் சரியாக மதித்துப்பார்க்காமல் ஆடம்பரமான முறையிலும், ருஷ்யாவில் ஹிட்லர் யுத்தத்தை நடத்த ஆரம்பித்தான். ஜெர்மனியின் சரித்திரத்திலேயே இவ்விதமான ஜெர்மானியப்படை ஒருபொழுதும் வளைக்கப்படவில்லை. இதற்குக் காரணம் இதற்கு ஸேநாநாயகர்கள் இவ்வளவு மோசமாக இதுவரையில் யுத்தம் நடத்தியதில்லை. ஸ்டாலின்கிராட்டில், அதாவது அபாயகரமான நீண்டபக்கங்களுள்ள ஒரு கோணத்தின் குறுகிய முனையில், சேனைகளைக் குவித்து வைப்பது என்பது பிசகென்று சாதாரண மனிதனும் அறிவான். ஒத்திகைக்காக ஏற்படும் ஒரு நிகழ்ச்சியில் ஒரு சிறிய ராணுவ அதிகாரி இம்மாதிரியான தவறுதல் செய்தால் அவனுடைய வாழ்நாள் உடன்காலத்திலேயே சீர்கெட்டுவிடும்.

ராணுவ சாஸ்திரத்திலும், முறைகளிலும் முற்றிலும் பயிற்சிபெறாத ஹிட்லர் ரூர் பிரதேசத்தையும், ஆஸ்திரியாவையும் கைப்பற்ற அவன் செய்த தந்திரங்களையே போர்க்களத்திலும் உபயோகப்படுத்தினான். இதுவரையில் மேல்மேலும் வெற்றிகள் கிடைத்ததிலிருந்து ஜெர்மானியர்களை ஒருவரும் தோற்கடிக்கமுடியாது என்ற எண்ணம் தோன்றிவிட்டது. இந்தத் தற்குறியின் பிரயத்னம் ஸ்டாலின்கிராட்டை ஜெர்மனி அணுகியபொழுது முறிபட்டுவிட்டது. தன்னுடைய (6)ம் படை ருஷ்யப்படைகளை இனிமேல் எதிர்த்து நிற்கமுடியாது என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்தபொழுதும் கூட யுத்தத்தை நடத்தும்படி அவன் உத்தரவிட்டான். இதுவும் இருப்பதா அல்லது இறப்பதா என்ற கொள்கைப்படி செய்யப்பட்ட உத்தரவு. மெய்காப்பிலும் ராஸ்டாவிலும் இதே தவறுதல் செய்திருக்கிறான். கார்காவும், லெனின்கிராடும் இதே கதிக்குத்தான் வரும்போல்தோன்றுகிறது. ஹிட்லரின் துணிச்சலுக்குச் சரியான பிரதிப் பிரயோஜனம் கிடைத்துவிட்டது. ஜாலவித்தையின் மாயம் வெளிப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி வி வி

**இரண்டு முக்கியமான சொற்பொழிவுகள்.** செவ்வாய்கிழமை யன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் பிரசங்கம் செய்ததின் தொடர்ச்சியாக வெள்ளிக்கிழமை யன்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் எல்லா தேசங்களுக்கும் ஒலிபரப்பினார். இருவரும் கஸாபிளாங்கா மகாநாட்டைப்பற்றித்தான் பேசினார்கள். அந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வியாக்யானம் செய்வதுபோல் இருவரும் பேசினார்கள்.

மகாநாட்டின் முதல் நோக்கமானது யுத்தத்தின் அடிப்படையான கொள்கையைப்பற்றி, அதாவது எதிரிகளின் பூராவான நிபந்தனையற்ற சரணாகதி, ஜனங்களுக்கு ஞாபகமூட்டிற்று. எதிரிகளுக்குக் கொஞ்சமேனும் இடம் கொடுத்தால் நாம் இப்பொழுது செய்துவரும் மகத்தான முயற்சிகள் வீணாகப் போவதுடன், அனாவசியமாக மனித வர்க்கத்தின் அழிவும் சில வருஷங்களுக்குள்ளாகவே மற்றொரு யுத்தத்திற்கு அஸ்திவாரமும் போட்டதாக ஆகிவிடும்.

தயவுகாட்டுவதென்பது முட்டாள்தனம். பிரபுக்கள் சபையில் ஸெல்போர்ன் பிரபு திடமாகவும் அழுத்தமாகவும் இந்த நிச்சயத்தைப்பற்றி சென்றவாரம் பின்வருமாறு கூறினார். "இம்மாதிரியான அக்கிரமங்கள் செய்து வருகிறவர்களுக்கு நரகம்தான் பிராப்த்தி. சென்ற மகா யுத்தத்திற்குப்பிறகு ஏற்பட்ட விளைவுகள் மறுபடியும் சம்பவிக்கக்கூடாது". இதைப்பற்றி மிஸ்ட்டர் சர்ச்சில் பேசும்பொழுது "நமக்கு ஏற்படும் வெற்றியானது யாதொரு தீங்கும் கொடுமையுமற்றதாக இருக்கவேண்டும்" என்று சொன்னார். இதையே சித்தாந்தம் செய்து ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னதாவது "அமெரிக்காவானது இந்த உலகம் பூராவும் ஒரே சகோதரபாவமென்று நினைத்து ஸ்வதந்திரத்துக்காகச் சண்டை போடுகிறது". இது காரணமாகத்தான் அமெரிக்காவிலிருந்து வெகு தூரத்தில் துவங்கிய யுத்தம் ஒவ்வொரு நாட்டிற்கும் பரவிவிட்டதென்றும் உலகத்தின் பொதுஜன சமூகத்தின் வாழ்க்கைக்கும், ஸ்வதந்திரத்துக்கும் ஆபத்து உண்டாகிவிட்டதென்றும் அவர் கூறினார்.

இரண்டாவதாக, கஸாபிளாங்கா மகாநாட்டிற்கு ஸ்டாலினும், சியாங் கே ஷேக்கும் வராதபோனாலும் அந்த மகாநாடு எல்லாரையும் ஒருமைப்படுத்தி ஒத்துழைக்கும்படி செய்த மகாநாடு என்று சொல்லலாம். ஐக்கிய தேசத்தார்கள்—இப்பொழுது 31 தேசங்கள் சேர்ந்துவிட்டன—இப்பொழுது ஒன்றுபட்ட ஏற்பாட்டைச் செய்துவிட்டார்கள். கெயிரோ, அடானா, சுங்கிங், கல்கத்தா இவைகளில் நடந்த மகாநாடுகளெல்லாம் கஸாபிளாங்காவின் தொடர்ச்சியாகவும், ஆபிரிக்காவின் வடமேற்கு மூலையில் முதலில் தீர்மானிக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கும் நடைபெற்றவைகள். இதே காரணமாக ஜெனரல் மாக்கார்தரும், பீல்ட் மார்ஷல் வேவல் அவர்களும் சந்தித்துப் பேசுவார்கள். இதன் பயனாகத்தான் வட ஆபிரிக்காவிலுள்ள ராணுவப்படைகளின் தலைமையானது ஜெனரல் ஈசன்ஹவரின்கீழ் மாற்றப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, கஸாபிளாங்காவில் எந்த எதிரியை முதலில் முறியடிப்பதென்ற விஷயம் தீர்மானிக்கப்பட்டது. ஜெர்மனி முதலாவது எதிரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. முதலில் ஜெர்மனியைத் தோற்கடித்து அதன் வலிமையையும் சின்னாபின்னம் செய்துவிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. தூரக்கிழக்கில் இப்பொழுது பிரிடன் செய்யப்போவதெல்லாம் பர்மா ரஸ்தாவைத் திறந்துவிடுவது. ஜெர்மானியர்களை முறியடித்தபிறகு சாம்ராஜ்ய பலமும், அமெரிக்காவின் பலமும் ஒன்று சேர்ந்து ஜப்பானைத்தாக்கி ஜப்பானையும் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்படி செய்துவிடுகிறது.

நான்காவதாக, ஐரோப்பாவில் முன்னேறித்தாக்கவேண்டிய கிரமங்களைப் பற்றியும் முடிவு செய்யப்பட்டது. அவை வரிசையாக பின்வருமாறு: ருஷ்யாவுக்கு எல்லாவிதமான ஒத்தாசைகளும் அனுப்புதல்; யூ படகுகளின் சேஷ்டைகளை நிவர்த்திசெய்வது; டுனிஸியப் போர்முனையிலிருந்து ஜெர்மனியைத் துரத்தியடிப்பது; இவையெல்லாம் ஐரோப்பாவில் ஆங்கிலேய அமெரிக்க நாடுகள் துவக்க உத்தேசித்திடும் இரண்டாம் போர்முனைக்கு முன்போக்கான ஏற்பாடுகள்.

சர்ச்சில் சொன்ன பிரகாரம் சுயநலத்தையும் நன்றியறிவையும் பாராட்ட வேண்டுமானால் ஜனங்களிடமுள்ள எல்லாவற்றையும் கொடுத்து எல்லா விதமான ஒத்தாசைகளையும் நாம் ருஷ்யாவுக்குச் செய்யவேண்டும். ருஷ்யாவுக்கு வேண்டிய தளவாடங்கள் அனுப்பினால் மட்டும் போதாது. ருஷ்யாவுக்கு ஏற்பட்டிருக்கும் பளுவைக் குறைப்பதற்காக ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனையையும் ஏற்படுத்தவேண்டும். இதற்காக அண்ட்லாண்டிக் சமுத்திரத்தின் இருகரையிலுமுள்ள பிரிடனிலும், அமெரிக்காவிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவென்று சர்ச்சில் சொன்னார். ருஷ்யப் படைகள் ஆச்சரியப்படும்படியாக பலமாக அடித்துக்கொண்டிருக்கின்றன. மேற்கேயும் அதே விதமாக நாமும் தாக்க வேண்டும். எதிரியை அநேக பக்கங்களிலிருந்து ரொம்பவும் வலுவாகத் தாக்க வேண்டும். அப்படி அடிப்பதின் மூலம் எந்தப்பக்கம் திரும்புவதென்று எதிராளிக்குத் தெரியாமல் திண்டாடச்செய்துவிடவேண்டும் என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிரசங்கம் செய்தார்.



யூ படகுகளை அழிக்க ஆரம்பித்துவிட்டோம். இதுவரையில் அவைகளின் தொந்தரவை சமாளித்து வந்திருக்கிறோம். அவைகளை இன்னும் அடியோடு ஒழித்துவிடவில்லை. சென்ற 6 மாதங்களுக்குள் மூழ்கியவைகளுக்கு அதிகமாகவே கப்பல்களைக் கட்டியிருக்கிறோம். 6 மாதங்களுக்குமுன் இருந்ததைவிட இப்பொழுது பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படையானது $1\frac{1}{4}$ மிலியன் டன்கள் எடைமானமதிகமுள்ளதாயிருக்கிறது. 1942-ம் ௵ ஜனவரி முதற்கொண்டும் விசேஷமாக 1942-ம் ௵ நவம்பர் ௴ ஆரம்பத்திலிருந்தும் யூ படகுகளின் நாசமானது கிரமமாக அதிகரித்துக்கொண்டும் யூ படகுகளின் சேஷ்டைகளால் மூழ்கடிக்கப்படும் கப்பல்களின் சங்கியை கிரமமாகக் குறைந்தும் வருகிறது.

டுனிஸியாப் பகுதியில், ஜெர்மனி ஏராளமான முஸ்திப்புகளைச் சேமித்து, ஜெர்மனியைப் படையெடுத்துத் தாக்க உத்தேசித்திருக்கும் ஐக்கிய தேசங்களின் துருப்புகளை இந்த இடத்திலேயே தடுத்துவிட வீண் பிரயத்னம் செய்து வருகிறான். இந்த மூர்க்கமான முயற்சியிலும், மத்தியதரைக்கடலில் குறுகிய மார்க்கங்கள் மூலமாக ரோமலுக்கும் வான் ஆர்னிமுக்கும் கொண்டு வரப்படும் முஸ்திப்புகள் ஒன்றுக்குக் கால் பாகம் அல்லது மூன்றில் ஒருபாகமாக ஒவ்வொரு நாளும் அமுக்கப்பட்டு வருகிறது. இதே சமயத்தில் எட்டாம் படையின் ஒரு பகுதி பின்பக்கத்திலிருந்து பயமுறுத்தி வருகிறது. அப்படியிருந்தும் இதாலியர்களை முன் விட்டுக்கொண்டு ஜெர்மானியர்கள் ஆபிரிக்காவுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஸ்டாலின்கிராட்டில் ஏற்பட்ட தோல்விக்கும், ராஸ்டாவின் வீழ்ச்சிக்கும் கார்க்காவை இழப்பதற்கும், காரண பூதமான மேதாவி ஹிட்லரின் ஏற்பாடு இம்மாத்திரம்தான். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லுகிறபடி வட ஆபிரிக்காவிலுள்ள எதிரி எட்டாம் படையாலும் லெக்ஸர்க்கின் தலைமைக்குட்பட்ட பிரெஞ்சுப் படைகளின் உதவியோடும் மேற்குப் பக்கத்தில் பிரிடன், அமெரிக்கா இவைகளின் ஒன்றுபட்ட சேனைகளாலும் பலமாகத் தாக்கப்படுவானென்றும் தெரிகிறது.

ஸாலமன்ஸ் யுத்தமும், பாபுவா யுத்தமும் வெற்றிகரமாக முடிந்துவிட்டன. விஸ்தாரமான பிரதேசங்கள் பிடிபட்டதுமட்டுமல்லாமல் இந்த யுத்தங்கள் நேச நாடுகளின் துருப்புகள், மாலுமிகள், விமானிகள் இவர்களின் மேன்மையையும் ருஜூப்பித்துவிட்டது. இத்துடன் நிறுத்திவிடுவதாக உத்தேசமில்லை. ஜனாதிபதி சொல்லுகிறபடி பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள தீவுகளை ஒவ்வொன்றாகப் பிடித்துவிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறுவதாக உத்தேசமில்லை. எதிரியைச் சீனாவிலிருந்து அப்புறப்படுத்தவும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சைனாவில் செய்வதோடு ஜப்பானையும் விமானங்களால் தாக்கவும் முயற்சிகள் செய்யப்படும். "டோகியோவுக்குச் செல்ல பல மார்க்கங்கள் உள. அவை எல்லாவற்றையும் நாம் ஆராய்ச்சி செய்வோம்" என்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளின் பிரசாரம்.** ருஷ்யர்களின் பலமான தாக்குதல்களினின்றும் ஜெர்மானியர்கள் பின்வாங்கி துடித்துக் கொண்டிருக்கும்பொழுதும், ஜெர்மன் ராணுவ வியாக்யானி ஜெனரல் டீட்மார், 6-ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் ஸ்டாலின்கிராட்டில் ஏற்பட்ட தோல்வியின் பலனை இப்பொழுது ஜெர்மனி அனுபவித்து வருகின்றதென்றும், முதல் தடவையாக ஒரு ஜெர்மன் சேனை பூராவும் அழிந்து விட்டதென்றும் ஒப்புக்கொள்ளும்பொழுதும் கோயபல்ஸ் மழ மழப்பாகப் பேசி "ருஷ்யச் சேனைகள் விசேஷமான ஒரு வெற்றியையும் அடையவில்லையென்றும் அவர்களுடைய லாபங்கள் சொற்பமென்றும் அதிகச் சிரமத்தின் பேரில் வெற்றி கிடைத்ததென்றும் மழுப்புகிறான். ஜெர்மானியர்கள் இரண்டு வருஷம் சண்டைபோட்டுப், பிடித்துக் காப்பாற்ற முயன்ற ஸ்டாலின்கிராட், ராஸ்டாவ், கார்கவ் ருஷ்யர் வசமாகிவிட்டன. இவைதான் சொல்பமாம். குயுக்தி புத்தியுள்ள கோயபெல்ஸ் வேறு விதமாகவும் பேச ஆரம்பித்து விட்டான். ஸ்டாலின்கிராட், ராஸ்டாவ், கார்கவ் முதலிய இடங்களின் வீழ்சியால் ஏற்பட்ட துக்கத்தைப் போக்கிக்கொள்ள போல்ஷிவிஸத்தின் மேல் அவன் தொடுத்த சிலுவை யுத்தத்தைக் கூச்சலிட்டும் கோபத்தைக் காட்டியும் 'புனருத்தாரணம் செய்யப் பார்க்கிறான். அவன் அபிப்பிராயப்படி

இவைகள் அபஜயங்கள் அல்ல. போல்ஷிவிஸத்தை எதிர்க்க உலகத்தைக் கூட்ட ஜெர்மானியர் செய்யும் வேண்டுகோளென்கிறான். உலகத்தை போல்ஷிவிஸத்திலிருந்து காப்பாற்ற ஜெர்மனி உத்தேசித்திருக்கிறதாம். கூடுமானால் தலைவர்களையும் பிரிட்டனையும் காப்பாற்றி விடுமாம்.

ஹாஹா பிரபு அவருடைய வாராந்திர வியாக்யானத்தில் மாண்ட் காமரியின் முன்னேற்றம் அதிக தூரமுள்ளதென்றும் ஆகிலும் வியர்த்தமென்றும் சொல்லுகிறான். தன்னுடைய இதாலிய சகோதரனை முஸோலினியுடன் ஜெய பேரிகையுடன் அலெக்ஸாண்டிரியாவுக்குள் நுழையும் கௌரவம் தனக்கு வரவேண்டுமென்று அலெக்ஸாண்டிரியாவுக்குச் சமீபத்தில் உட்கார்ந்திருந்த ரோமல் 1,500 மைல்கள் துரத்தியடிக்கப்பட்டு மாரத் அரணுக்குப்பின் ஓடிவிட்டானென்பதை ஹாஹா பிரபு ஒப்புக்கொண்டானென்பது கவனார்கமான விஷயம். டொப்ருக், பெங்காஸி, டிரிபோலி இவைகளின் வீழ்ச்சி மூலம் மத்தியதரைக்கடலில் போக்குவரத்துக்கு சாதகம் ஏற்பட்டதை ஏன் அவர் மறந்துவிட்டார். ஹாஹா பிரபுவின் பலமான புளுகின் பிரயோஜனம் ரோமல் அவஸ்தைப்படுவதைப் பார்த்தால் வெளியாகும். ஹாஹா பிரபு ஜெர்மனியில் ஏதோ ஒரு இடத்தில் பூமிக்குள்ளிருக்கும் ஒலிபரப்பு நிலயத்தில் பத்திரமாக இருந்துகொண்டு பேசுகிறார். ரோமலுக்கு ஒரு பக்கத்தில் மாண்ட் காமரியின் 8-ம் படையினின்றும், மற்றொரு பக்கத்தில் பிரிடிஷ்-அமெரிக்கப் படைகளினின்றும் பயமுண்டாகியிருக்கிறது. சுடு சட்டியிலிருந்து அடுப்பில் விழுவது போல ஒவ்வொரு நிமிஷமும் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொள்ளுவான்போல ரோமல் இருந்து வருகிறான்.

வி வி வி வி வி வி வி

**வாக்ஸ்லிஷ்டா.** போலந்திலுள்ளவர்களும், ஜெர்மன் ஜாதியைச் சேர்ந்தவர்களென்று ஹிட்லர் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறான். சரித்திரத்தின் மாறுபாட்டினால் அவர்கள் ஜெர்மானியர்களுடைய நடவடிக்கைகளுக்குப் புறம்பான போலிஷ் பழக்கவழக்கங்களை அனுஷ்டித்து வருகிறார்கள் என்கிறான். இப்பொழுதுதான் ஹிட்லர் தெய்வம் இந்த ஜீவவர்க்கத்தின் நிர்ணயத்தைக் கண்டுபிடித்துவிட்டது. ஜெர்மன் வாக்ஸ்லிஸ்டேயில் போலிஷ் ஜனங்களைச் சேர்ந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்கிறான். அதில் சேர்ந்தால் ஜெர்மன் தேசத்தார்களென்று சொல்லிக்கொள்ளவும் அதின் லாபங்களை அனுபவிக்கவும் வசதியுண்டென்றும் சொல்லுகிறான். போல்ஷிவிஸத்தை எதிர்த்துச் சண்டைபோட ஜெர்மன் படையிலும் சேர்ந்து கொள்ளும்படி அவர்களை ஹிட்லர் வேண்டுகிறான். இந்த வேண்டுகோளின் ரகசியம் யுத்தத்துக்கு ஆள் சேர்ப்பதுதான். வார்ஸாவின் வீழ்ச்சிக்குப் பிறகு ஹிட்லருடைய ரக்ஷணை என்பது என்னவென்று போலிஷ் ஜனங்களுக்கு நன்றாய்த் தெரியும். யுத்தம் செய்வதற்கும், ஜெர்மனியைப் பாதுகாப்பதற்கும் மனித பலம் தேவை. ஆகையால் போலந்திலுள்ளவர்களைச் சேனையில் சேர்த்துவிடவேண்டும். இதற்காகத்தான் ஜெர்மானியர்களோடு சேருங்கள் என்று ஆசை வார்த்தை சொல்லுகிறான்.

வி வி வி வி வி வி வி

**இதாலிய விஷயங்கள்.** இதாலிய மந்திரிகளின் உத்தியோகக்கால அளவு நிச்சயமாக இல்லை, தன்னுடைய மகளான எட்டாவை மணந்திருக்கும் அயல்நாட்டு மந்திரியான சியானேப் பிரபுவை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகச் சொல்லும் விஷயம் ஆச்சரியமானது. அயல்நாட்டு மந்திரி பதவிக்கு சியானேவுக்கு உள்ள அருகதை முஸோலினிக்கு மருமகனாக இருந்தது தான் போலும். ஹிட்லருக்கு இவனிடம் வெறுப்பு உண்டென்பது தெரிந்த விஷயம். மருமகனை வேலையிலிருந்து நீக்கியது, முஸோலினியாக யிருந்த போதிலும் ஹிட்லரின் தூண்டுதலால்தான் இது ஏற்பட்டதென்று ஊகிக்கலாம்.

இதற்கு ராஜீய அவசியமுண்டென்று சொல்லலாம். சமீபத்தில் ஏற்பட்ட ராணுவத் தோல்விகளுக்கு ஜவாப்தாரி ஒருவர் அவசியம். மருமகனை விட வேறு சரியான பேர்வழி இல்லை என்று முஸோலினி நினைத்தான். சாம்ராஜ்யம்



போனதற்குச் சரியான பதில் தியாகம் இது தான். சியானேவை விலக்கிய பிறகு மந்திரிகளின் 6 ஸ்தானத்தை முஸோலினியே ஏற்றுக் கொண்டதிலிருந்து இந்த சர்வாதிகாரிக்கு அதிகப் பொறுப்பு ஏற்பட்டதென்று ஊகிக்கலாம். இதை மற்றவர்களிடம் ஒப்புவிக்க அவனுக்குத் தைரியமில்லை. இப்பொழுது முஸோலினி, டூசே, அழிந்து போன சாம்ராஜ்யத்தின் போலி ஸீஸர், அரசாங்கத் தலைவர்; உள்நாட்டு மந்திரி, அயல் நாட்டு மந்திரி, விமான இலாகா மந்திரி, யுத்த மந்திரி, கடற்படை மந்திரியாகி விட்டார். உள்நாட்டு மந்திரியாக பிரிடிஷ், அமெரிக்க விமானப் படைகளின் தாக்குதல்களைத் தவிர்க்கவேண்டியிருக்கிறது. குறைந்துவரும் ஜனங்களின் மனப்பான்மையையும் திருத்தியமைக்கவேண்டியிருக்கிறது. கடற்படை மந்திரியாக கடற்படையை பத்திரமான இடத்தில் ஒளித்து வைக்க வேண்டும். யுத்த மந்திரியாக ஹிட்லருக்கு யுத்தத்தில் பலிகொடுப்பதாக ஆள்களைச் சேமிக்க வேண்டியிருக்கும். வட ஆபிரிக்காவிலிருந்தும், ருஷ்யாவிலிருந்தும் போர்முனைகளிலிருந்து எதிராளிகள் முன்னேறுவதைவிட அதிக வேகமாக இதாலியத் துருப்புகளை பின்வாங்கும்படி செய்யவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**கூடல்கனர் யுத்தம்.** தெற்கு பஸிபிக் சமுத்திரத்தில் கூடல்கனர் தீவு போனது ஜப்பானுக்கு இரண்டாவது பெரிய தோல்வி. டோக்கியோவில் இதை ஒருவாறு ஒப்புக் கொண்டாலும், வடக்கே கேந்திர ஸ்தானங்களை ஏற்படுத்துவதற்குப் போதுமான காலஹரணம் செய்வதுதான் முக்கிய நோக்கமென்றும் இதை முடித்துக்கொண்டு ஜப்பானியப் படை பின்வாங்கி விட்டதென்றும் இவ்விஷயத்தைக் குறைத்துக் கூறுகிறது. சமாதானம் எதுவாயிருந்தாலும் சரி, நாம் நஷ்டமடைந்த தீவுகளின் மத்தியிலுள்ள இந்தத் தீவு முக்கியத்வம் வாய்ந்தது. இதை ஜப்பானியர்கள் பிடித்துக்கொண்டு நியூ ஹெப்ரிடீஸுக்கும் அதைத் தாண்டியிருக்கும் நியூஸீலாந்துக்கும், போவதற்கு உபயோகப்படுவதற்கும ஜப்பானைத் தாக்குவதற்கு ஆஸ்திரேலியாவை ஒரு தளமாக அமெரிக்கா உபயோகபடுத்துவதை இதை கைவசப்படுத்தியதின் மூலம் தடுப்பதற்கும் உபயோகிப்பதாக ஜப்பான் உத்தேசம் செய்திருந்தது. கூடல்கனரில் 6 மாதங்களாக யுத்தம் நடைபெற்றதிலிருந்தே இதன் முக்கியத்வம் வெளியாகிறது. இதில் சென்ற வருஷம் ஜனவரி மாதக் கடைசியில் ஜப்பானியர்கள் ஒரு ஸ்தலத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஆகிலும் நேசநாடுகளின் எதிர்ப்பு யுத்தம் ஆகஸ்டு மாதத்தில்தான் ஆரம்பமாயிற்று. அப்பொழுதுதான் அமெரிக்காதேசம் தரை வழியாகவும், கடல் மார்க்கமாயும், விமானம் மூலமாயும் படையெடுத்தது. அமெரிக்கக் கடற்படை முதல் முதலில் ஹெண்டர்ஸன் விமானதளத்தைப் பிடித்தது. அதற்குப் பிறகு அக்டோபர் மாதத்தில் அநேக வாரங்கள் கோரமான யுத்தம் நடந்தது. ஜப்பான், இராக்காலங்களில் துருப்புகளையும், நாசகாரிகள் மூலம் தகரப் பெட்டிகளில் உணவுப் பொருள்களை மிதக்கவிட்டும், பாரசூட் மூலம் உணவப் பொருள்களை அனுப்பியும் தன் பலத்தை விருத்திசெய்து வந்தது. ஒரு சமயம் விமான தளத்தின் ஓரங்களுக்கு அமெரிக்கப் படைகளைத் துறத்தியும் விட்டது. ஆகிலும் விமான தளம் ஜப்பானியர் வசமாகவில்லை. இப்பொழுது யாது காரணம் பற்றியோ, தெற்கு பஸிபிக்கில் விமான ஆதிக்கத்துக்கும், கடலாதிக்கத்துக்கும் அவசியமான இந்த விமான தளத்தையும், தீவையும் தாக்குவதை விட்டுப் போட்டு ஜப்பான் போய் விட்டது. கூடால்கனரைக் காலி செய்தது ஜப்பானின் மூஞ்சியில் கரி பூசியது போல் ஆகிவிட்டது. முக்கியமான தீவு ஒன்றை ஜப்பான் இழந்துவிட்டது. இதிலிருந்து ஜப்பானுக்குக் கப்பற்பலமும், விமான பலமும், குறைந்து விட்டதென்றே சொல்லலாம். பாபுவா முதலில், விழுந்தது. பிறகு கூடால்கனரின் வீழ்ச்சி. ரபாலும் பிடிபட்டுவிடுமென்று நாம் எதிர் பார்க்கிறோம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியப் புளுகுகள்.** ஜப்பானியரின் புளுகுகள் ஜெர்மானியர்களுடையதைவிட ஒரு பங்கு அதிகமாகயிருக்கின்றன. ஜெர்மன் பயங்காளிகள் உறத்துச் சொல்லும் பித்தல்களுக்கு மேலே ஜப்பானியர்கள் மழமழப்பாயும் ஆபாசமாகவும், கபடமாகவும் புளுகுகிறார்கள். டோஜோ இந்த வருஷம் பர்மாவுக்கு ஸ்வதந்திரம் அளித்து

விடுவதாக சொல்லிவிட்டானென்று ஜப்பானில் ஒலிபரப்பப்படுகிறது. வாஸ்தவத்தில் அவ்விதமான ஒரு வாக்குறுதியை டோஜோ செய்யவே இல்லை. அவ்விதம் ஸ்வதந்திரமளிக்க டோஜோ என்ன அருகதையுள்ளவனென்று புலப்படவில்லை. இவன் பர்மாவைக் கொள்ளையடித்தவன். பிரிடன் இவனைக் பின்பக்கம் தாக்குகிறது. பர்மாவுக்குவரும் கடல் மார்க்கங்களெல்லாம் இந்தியாவின் நீண்ட கடற்கரையினுல் வியாபிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் அந்தமான் தீவுகளை நேசநாட்டு வெடிவிமானங்கள் கடுமையாகத் தாக்குகின்றன. அக்யாபிலும் ரெங்கூனிலும் இதே மாதிரியாகத்தான் தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது கடல்மார்க்கம் சாவதானமில்லாததால் தரை மார்க்கமாக உள்ள போக்குவரவு சாதனங்கள் மூலமாக உபபலம் கொண்டுவருவதற்கு ஸயாமிலுள்ள வேலைக்காரர்களைக்கொண்டு ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பர்மாவுக்கு ஸ்வதந்திரம் கொடுப்பதாக வாக்குறுதி செய்வதற்குமுன் பர்மா ஜப்பானியரின் ஸ்வாதீனமாகவேண்டும். ஜப்பான் இப்பொழுது அப்படிச் சொல்லுவது அகாலத்தில் உறைப்பதாகும். பர்மாவில் ஜப்பானியர்கள் இதுவரையில் ஒரு மூலதனத்தையும் உபயோகித்து சீர்திருத்தம் செய்யாததிலிருந்து இது வாஸ்தவமல்லவென்று ஜப்பானியர்களுக்கும் தெரியும். பர்மாவின் ஸ்வதந்திரப் படையென்று சொன்னதின் அர்த்தம் இப்பொழுது வெளியாகிவிட்டது. அதற்கு இப்பொழுது பர்மாவின் தற்காப்புப்படையென்று புதிய நாமமிடப்பட்டிருக்கிறது. 1942-ம்வருஷம் மார்ச்சுமீ 23-ம் தேதியன்று வெளிவந்த ஜப்பானிய அமுல் பிரகாரம் பர்மாவுக்குள் போகும் ஜப்பானியர்கள் யாதொருவிதமான வரிகளும் கட்டணங்களும் கொடுக்கவேண்டியதில்லை. 15 வருஷங்கள் வரையில் ஜப்பானியச் சாமான்களுக்கு சுங்கவரி கிடையாது. பர்மாவில் யுத்தத்தில் உயிரிழந்த ஒவ்வொரு சிப்பாயிக்கும் மூவாயிரம் ரூபாய் இனும் கொடுக்கப்படும். பெர்லின் ரேடியோவில் பிப்ரவரி 1-ம் தேதியன்று டோக்கியோவில் பர்மாவுக்கு ஸ்வதந்திரம் அளிப்பதாகக் கட்டுக்கதையாகச் சொன்னதின் காரணம் அறிவிக்கப்பட்டது. பெர்லின் சொல்லுகிறபடி ஜப்பானியரின் உட்கருத்தைப்பற்றி பிரிடன், அமெரிக்கா இரு நாடுகளும் செய்யும் பிரசாரத்தை மாற்றிவிடவேண்டுமென்ற யோஜனையுடன்தான் இந்த வாக்குறுதி விளம்பரம் செய்யப்பட்டது. பர்மாவில் ஜப்பானியரின் நிலைமை மோசமாகவும் பலமாகவுமில்லாததை உத்தேசித்து தன்னுடைய பொறுப்பை உதறிவிட ஜப்பான் உத்தேசிக்கிறது. பர்மா தன்னுடைய நாட்டைக் காப்பாற்றத் தானே யுத்தம் செய்யவேண்டுமென்று இப்பொழுது ஜப்பான் சொல்லுகிறது. அது தன்னுடைய ஸ்வதந்திரத்தையே காப்பாற்றிக்கொள்ள முடியாததுபோல் தோன்றுகிறது.

வி வி வி வி வி வி வி

**பர்மா யுத்தம்.** பர்மாவின் அரக்கான் கடற்கரைப் பிரதேசத்தில் குழிகளில் மறைந்துகொண்டு எதிரி யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டான். இவ்விடங்களில் எதிரி விடாமுயற்சியுடனும் அசைக்க முடியாமலுமிருந்தவன், நம்முடைய பலத்தைத் தாங்கமுடியாமல் சமீபத்திலுள்ள காடுகளுக்கும் நதிப்பிரதேசங்களுக்கும் ஓடுவதும் பிறகு சமயம் வாய்த்தபொழுது திரும்பிவந்து போர் தொடுக்கிறதுமாக யுத்தம் செய்கிறன்.

மகத்தான முன்னேறித்தாக்குதல் செய்ய ஏற்பாடாகிவருகிறது. இது விஷயமாக ஜெனரல் மாக்கார்தரும் பீல்ட் மார்ஷல் வேவலும் இந்தியாவில் சந்தித்துப் பேச்வார்கள், ஆகிலும் கடல் மார்க்கமாக பர்மாவைப்படையெடுப்பது என்கிற திட்டம் இப்பொழுது இல்லை—அதாவது பருவகாலம் முடியும் வரையில், ஸெப்டம்பர் அக்டோபர் மாதங்கள் வரையில் இல்லையென்றே சொல்லலாம்.

வி வி வி வி வி வி வி

**இந்திய சர்வகலாசாலைகளில் விமானிகளின் பயிற்சி.** இந்திய சர்வகலாசாலைகளில் விமானிகள் பயிற்சியும் ஒரு படிப்பின் பாகமாகக் கூடிய சீக்கிரம் ஏற்பாடு செய்யப்படுமென்று அறிகிறோம். அலிகாரில் இது அமுலுக்கு வந்துவிட்டது. மதராஸ் மாகாணமும் இதை பின்பற்றும். விசேஷமாகத் தங்கள் வீடுவாசல்களைக் காப்பாற்றவேண்டு



மானல் இந்திய யுவர்கள் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் யுத்தம் செய்யக்கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்பொழுது இந்தச் சீர்திருத்தம் அவசியமேயாகும்.

சென்ற சனிக்கிழமை தினம் அலி காரில் விமானப்படையின் வைஸ் மார்ஷல் A. C. காலியர் இந்தப் படிப்பின் ஆரம்ப விழா அன்று சொன்னபடி இந்திய ராணுவத்தைப்போல் இந்திய விமானப்படையை இந்திய பொதுஜனங்கள் மதித்துப்பார்க்கவில்லை. தாய்தகப்பனர்களும் மற்றவர்களும் இதில் அபாயம் அதிகமிருக்கிறதென்று தெரிந்தோ தெரியாமலோ சொல்லுகிறார்கள். இந்தப் பயிற்சியில் யுவர்களுக்கு நல்ல வாழ்க்கையேற்படுமென்பதையும் இவர்கள் செய்யும் வேலையின் மேன்மையையும் அவர்கள் புறக்கணித்துவிடுகிறார்கள்.

வைஸ் மார்ஷல் மேலும் சொன்னதாவது. "விமானிகள் பயிற்சியில் சேர்ந்துகொண்டால் ஒரு பையன் அநேக தொழில் முறைகளைக் கற்றுக் கொள்ளுகிறன். ஸர்க்கார் செலவில் அவனுக்கு ஆகாரமும், இடவசதியும் உடைகளும் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் மின்சார நிபுணர்களாகவும், என்ஜின், விமானக்கூடு அமைப்பாளர்களாகவும், ஆயுதம் உபயோகப்படுத்த சக்தியுள்ளவர்களாகவும், வார்ப்பு வேலை செய்கிறவர்களாகவும், ரேடியோ ரிபேர் செய்கிறவர்களாகவும், ஆயுதம் செய்கிறவர்களாகவும், போட்டோ எடுக்கிறவர்களாகவும், வெயர்லெஸ் ஆபரேடர்களாகவும், புரோபெல்லர் செய்கிறவர்களாகவும் தயாரிக்கப்படுகிறார்கள். இவர்கள் பிரிடிஷ் விமானிகளின் பயிர்ச்சிக்கு ஸாம்யத்தை அடைந்துவிடுவார்கள். போர்டு ஆப் டிரேட் சங்கம் இவர்களை அங்கீகாரம் செய்கிறது.

பின்வரப்போகும் உலகில் இவ்வகைப்பட்ட தொழில் முறைகளின் உபயோகத்தைப்பற்றிச் சிலாகிக்கவேண்டிய அவசியமில்லை. அவையெல்லாவற்றிற்கும் ஸமாதான வாழ்க்கையிலும் உபயோகமுண்டு. சர்வகலாசாலையின் பட்டத்திற்கு ஸமானமான மதிப்பும் உத்தியோக முறையில் இவைகளுக்கும் கிடைக்கும்.

வி வி வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் விறகு விலை கட்டுப்பாடு.** ஸமஸ்தானத்தின் ஸர்க்கார் டிபோவில் விறகு விலையைக் கட்டுப்படுத்த புதுக்கோட்டை ரா-தர்பார் அவர்கள் பிரசுரித்துள்ள பிரெஸ் கம்யூனிக்கேயை இப்புத்தகத்தின் மற்றொரு பகுதியில் அச்சிட்டிருக்கிறோம். இதன் நோக்கங்கள் இருவகைப்படும். யுத்தத்துக்கு முன்னிருந்த விலைப்படி ஏழை மக்கள் விறகு வாங்கிக்கொள்ளுவதும், லாபம் சம்பாதிக்க எண்ணமுள்ள வியாபாரிகளை ஏற்றுமதி செய்யாமல் தடுப்பதும் இதன் முக்கிய நோக்கங்கள். கொஞ்சமாக விறகு வாங்குகிறவர்களுக்கு ஒரு விலையும், விறகு வாங்கி வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்கிறவர்களுக்கு அதிகமான விலையும் நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது.

---

# ஜனதிபதி ரூஸ்வெல்டின் பிரசங்கம்.

பிப்ரவரி 13.

## ஜனதிபதியின் சுற்றுப்பிரயாணம்.

அமெரிக்காவின் தொழிற்சாலைகளின் உற்பத்திகளும் அமெரிக்க முகாம்களில் அளிக்கப்படும் பயிற்சிகளும் எதிரிகளுக்குப் பிரதிகூலமாக உபயோகிக்கப்படும் யுத்தரங்கங்களில் ஒரு இடத்திற்கு கடல் தாண்டி நான் சென்றிருந்தேன். நம்முடைய துருப்புகளை யுத்த களத்தில் கண்டேன். அவர்களிடமிருக்கும் சிலாக்கியமான முஸ்தீப்புகளைப் பார்வையிட்டேன். அவர்களுடன் சம்பாஷித்தேன். சிறித்து விளையாடினேன். அவர்களுடன் விருந்துண்டேன். டிரினிடாட்டிலும், நேடாலிலும், ப்ரெஸீலிலும், லைபீரியாவிலும், கொலம்பியாவிலும் துருப்புகளிருக்கின்றன. இந்த இடங்களிலெல்லாம் சண்டை நடக்கவில்லை. ஆகிலும் அபாய

கரமான, முக்கியமானச் சிரமமான அலுவல்களிருக்கின்றன. நமது துருப்புகளுடைய சகித்வத்துக்கும் உத்ஸாகத்துக்கும் இவ்விடங்களில் அதிகச் சிரமமேற்படுகிறது.

### அமெரிக்காவின் சிறப்பான துருப்புகள்.

துருப்புகளுக்கு ஏற்பட்ட சிரமங்களை அவர்கள் தீரமாகச் சகித்து வருகிறார்கள். வட ஆபிரிக்காவில் நம்முடைய ஆண் மக்களையும், ஸ்திரீகளையும் பார்த்தேன். இங்கே யுத்தம் நடக்கிறது. இந்த யுத்தம் முடிவடையுமுன் அநேகர் உயிர் துறக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும். தங்கள் நாட்டினர் எதிரிகளின் வலிமையை அழிப்பதற்கும், வாஸ்தமான, சாச்வதமான சமாதானம் உலகில் உண்டாக்குவதற்கும் வருங்காலத்தில் உலகம் க்ஷேமமாயிருப்பதற்கும் நாம் சண்டைபோடுகிறோமென்றும் அவர்களறிவார்கள். நாம் அவர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், பெருமைக்கும் அவர்கள் சரியான பாத்திரம் தான். இது அமெரிக்கக் கடற்படைக்கும் பொருந்தும். கடற்படை இல்லாத போனால் அந்நிய நாட்டில் போய் ஒரு அமெரிக்கப் படையெடுப்பு சேனை பத்திரமாய் இறங்கியிருக்க முடியாது.

சாமான் கப்பல்களில் வேலை செய்பவர்களுக்கும் இந்தப் பாராட்டு அன்வயிக்கும். இவர்களில்லாத போனால் யுத்த தளவாடங்களும், ஸப்ளைகளும் துருப்புகளுக்குக் கொண்டுபோக முடியாது. அமெரிக்காவும், நேசநாடுகளும் யுத்தத்தை நடத்த முடியாது.

துருப்புகளையோ, மாலுமிகளையோ, அனுதாபத்துடனும் மகிழ்ச்சியுடனும், இவர்களைப் பெருமையுடன் பாராட்டவேண்டுமென்ற பொறுப்புடனும் பார்க்காத ஒரு அமெரிக்கனும் இல்லை. என்னுடைய பிரயாணத்தின் ரகசியத்தினால் நான் சென்ற இடங்களிலெல்லாம் நமது ராணுவப்படைகள் என்னைக்கண்டு வியப்படைந்தன. இது அவர்களுடைய முகவிந்யாசத்தினின்றும் தெளிவாயிற்று. போர் நடக்கும் மற்ற பிராந்தியங்களுக்கும் அதாவது கப்பல் தளங்களுக்கும், பஸிபிக்கிலுள்ள தீவுகளுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும், அலாஸ்கா தீவுகளுக்கும், அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளுக்கும், ஐஸ்லாந்துக்கும், பிரிடனுக்கும், மத்திய ஆபிரிக்காவுக்கும், மத்தியக்கிழக்குக்கும், இந்தியா, பர்மா, சைனா இவைகளுக்கும் சென்று நம்முடைய துருப்புகளைப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆவலுண்டாகிறது. எதிராளிகளின் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிவரும் பிடிக்கியை வலுப்படுத்துவதற்காக அவர்கள் செய்து வரும் மகத்தான சேவைகளை அவர்களுடைய அரசாங்கமும் தேசமக்களும் பாராட்டுகிறதென்று அவர்களிடம் நேர்முகமாகவே சொல்லவும் விரும்புகிறேன்.

### அவன் எதற்காகச் சண்டை போடுகிறான்.

ஒவ்வொரு பட்டாளத்திலும் ஒவ்வொரு கப்பலிலிருக்கும் வேலையாள்களும் அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்தவனாகயிருப்பான். அத்துடன் ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு மதஸ்தனும் ஒவ்வொரு ராஜீயக்கக்ஷியைச் சேர்ந்தவனுமிருப்பான். அவர்கள் எதற்காப் போர் புரிகிறார்களென்று அவர்களைக் கேட்டால் ஒவ்வொருவனும் என்னுடைய தேசத்திற்காகச் சண்டைசெய்கிறேனென்று சொல்லுவான்.

இதனுடைய அர்த்தமென்னவென்று அவனை வினவினால் வெளிப்படையாத வேறுபாடாகத் தோன்றும். அநேக முகாந்திரங்களை அவர்கள் சொல்லுவார்கள். ஒருவன் பேச்சுரிமைக்கும் தனிஷ்டப்படி படிக்கவும் கேட்கவும் என்பான். மற்றொருவன் நாஸிகளின் ஸ்வஸ்திக்கா கொடியானது எல்ம் தெருவிலுள்ள பாப்டிஸ்ட் மாதாக்கோவிலின் மேல் ஒருபொழுதும் பறக்க விடக்கூடாதென்பதற்காக என்பான். பின்னும் ஒருவன் தொழில் உரிமைக்கும் தனக்கும் தன் சுற்றத்தாருக்கும தினசரி மூன்றுவேளை போஜனம் கிடைப்பதற்கும் என்பான். பின்னும் ஒருவன் தன் குழந்தைகளும் பேரப்பிள்ளைகளும் ஐரோப்பாவுக்கும், ஆபிரிக்காவுக்கும், ஆசியாவுக்கும் சென்று மறுபடியும் இம்மாதிரியான யுத்தத்தில் ஈடுபடக்கூடாதென்பதற்காக இந்த யுத்தத்தில் சண்டைபோடுகிறேனென்பான்.



### இவர்கள் ஸ்வதந்திரத்துக்காகப் போராடுகிறார்கள்.

இந்த எல்லா மறுமொழிகளையும் சேர்த்துப்பார்த்தால் ஸ்வதந்திரத்துக்காகத்தான் ஒவ்வொரு அமெரிக்கனும் யுத்தம் செய்கிறானென்று தெரியவரும். இப்பொழுதும் வருங்காலத்திலும் அமெரிக்கப் பிரஜைகளின் ஸ்வதந்திரம் இதர நாட்டிலுள்ளவர்களுடைய ஸ்வதந்திரத்தையே அதிகம் தழுவியிருக்கும். ஏனெனில் உலகம் பூராவும் இப்பொழுது ஒரே சகோதரபாவமுள்ளது.

இது காரணத்தினால்தான் இந்த யுத்தமானது நம் நாட்டிலிருந்து வெகு தூர தேசங்களில் ஆரம்பமாகி, இப்பொழுது எல்லா கண்டங்களுக்கும் சமுத்திரங்களிலுள்ள தீவுகளுக்கும் பரவி ஜனசமூகத்திற்கும் ஜனங்களின் உரிமைகளுக்கும் தீங்கு இழைக்கக்கூடிய நிலைமைக்குப்பரவி விட்டது.

வருங்காலத்தில் ஏற்படப்போகும் சமாதானமானது எல்லா உலகமும் சகோதரபாவமுள்ளது என்றும் ஜனசமூகத்திற்கு நியாயம் விளைக்கவும் ஏற்படாவிட்டால் மனித வர்க்கத்திற்கே அபாயம் விளைவிக்கக்கூடிய மற்றொரு மகாயுத்தத்திற்கு இப்பொழுதே அஸ்திவாரம் போட்டதாக முடிந்துவிடும்.

### கஸாபிளாங்கா முடிவுகள்.

அட்லாண்டிக் சாஸனத்தின்படி ஒவ்வொரு தேசத்திற்கும் அளிக்கப்பட்ட ஸ்வதந்திரப்படி ஏராளமான கொலைகளைச் செய்ய ஒரு அரசாங்கத்துக்கும் அனுமதியில்லை. அல்லது தன்னுடைய நாட்டுமக்களையும் உலகத்திலுள்ள மற்ற ஜனங்களையும் அடிமையாக்கவும் அது உரிமை அளிக்கவில்லை. இந்தப் பூர்ணமான யுத்தம், உலகம் பூராவும் ஜனங்களின் தியாகம் எல்லாம் க்விஸ்லிங், லவால் போன்ற துரோகிகளை இவ்வுலகில் ஒரு இடத்திலும் அதிகாரம் வகிக்காதபடி துரத்திவிடவேண்டிய நோக்கத்துடன்தான் செய்யப்படுகிறதென்று உலகம் அறியவேண்டும்.

கஸாபிளாங்காவின் முடிவுகளும், திட்டங்களும் யுத்தப் போர்முனைகளெல்லாவற்றிற்கும், எல்லாக் கண்டங்களுக்கும், எல்லா சமுத்திரங்களுக்கும் சேருவப்பட்டிக்கின்றன. இந்த வருஷம் முடியும்முன், வெறு பேச்சோடுமட்டும் இல்லாமல் செய்கையிலும், கஸாபிளாங்கா மகாநாடு நடந்ததின் பயனாக மகத்தான காரியங்கள் நடைபெற்றன என்று உலகம் அறியப்போகிறது. ஜெர்மனிக்கும், இதாலிக்கும், ஜப்பானுக்கும் இந்த சம்பவங்கள் திகில் உண்டாக்கும்.

### தெற்கு பஸிபிக்.

தெற்கு பஸிபிக்கில் நெடுநாளாக நடந்த சண்டை முடிவடைந்துவிட்டது. நமக்கு விசேஷ லாபங்கள் கிடைத்திருக்கின்றன. ஸாலமன் தீவுகளிலும் நியூ கினியிலும் சென்ற கோடை காலத்தில் யுத்தம் ஆரம்பமாயிற்று. நம்முடைய விமானப் படையின் மேன்மையையும், யுத்தம் செய்வதில் நம்முடைய துருப்புகள், மாலுமிகள் இவர்களுடைய திறமையையும் இந்த யுத்தங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. தென் மேற்கு பஸிபிக் பிரதேசத்திலுள்ள அமெரிக்க ராணுவப் படைக்கு ஆஸ்திரேலியாவிலிருந்தும் ந்யூஸீலாந்திலிருந்தும் பிரிடனிலிருந்தும் பலமான உதவி கிடைத்து வருகிறது.

பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள ஒவ்வொரு தீவாகப் பிடித்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி நாம் ஜப்பானியரை முறியடிக்கப் போவதில்லை.

சீனாவிலிருந்து ஜப்பானியரைத் துரத்தியடிக்க மகத்தான ஏற்பாடுகள் செய்யப்படும். சீனாவிலுள்ள ஜப்பானியர் பேரிலும் ஜப்பான் பேரிலும் விமான நடவடிக்கைகளும் பலமாக ஆரம்பிக்கப்படும்.

கஸாபிளாங்கா மகாநாட்டின் முடிவுகளை ஒட்டி சர்ச்சிலும் சியாங்கே ஷேக்குடன் ஜெனரல் அர்னால்டு கூடிப்பேசி எதிர்ப்பு யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தீர்மானித்துவிட்டார். டோக்கியோவைத் தாக்கப் பல ரஸ்தாக்களிருக்கின்றன. அவை எல்லாவற்றையும் நாம் உபயோகப்படுத்துவோம்.

### ஜப்பான்.

அச்சுக்கூட்டாளிகளில் ஜப்பான் முதலில் முறியடிக்கபபட வேண்டுமானல் அதற்கு முன்னுக ஜெர்மனியை நசுக்குவதற்கு ஐக்கிய நாடுகளின் பூராப்பிரயத்னங்களும் ஐச்வர்யங்களும் உபயோகப்படுத்தப்படும். மேலும் உலகம் பூராவும் பூர்ணமான வெற்றி நமக்குக் கிடைக்கும் வரையில் யுத்தத்தை நடத்துவதில் நேச தேசங்களெல்லாம் ஒன்றுபட்டுவிட்டன என்பதில் ஜெர்மனியும், ஜப்பானும் சந்தேகிக்க வேண்டியதில்லை.

### எல்லாம் இனிது முடியும்.

1863-ம் வருஷத்தில் லிங்கன் கூறியதாவது "நண்பர்களே, நாம் சரித்திரத்திலிருந்து தப்ப முடியாது. காங்கிரஸிலுள்ள நம்மையும் இந்த நிர்வாகத்தையும் வருங்காலத்தில் ஜனங்கள் ஞாபகம் வைத்துக் கொள்வார்கள். ஒருவனுடைய முக்கியத்வமோ அல்லது முக்கிய மில்லாமையோ மற்றொருவரை பாதிக்கப்போவதில்லை. நாம் செய்யும் காரியங்களும் அனுபவிக்கும் கஷ்டங்களும்தான் நமக்குக் கௌரவத்தையும் அகௌரவத்தையும் கொடுக்கக்கூடும்".

80 வருஷங்களுக்கு முன் லிங்கன் கூறிய விஷயங்களுக்குப் பிறகு இப்பொழுது காக்காவிலிருந்து கம்மிங் வரையிலும், மத்தியதரைக்கடலிருந்து பவளக் கடல் வரையிலும், பெர்லினிலிருந்து டோக்கியோ வரையிலும் யுத்தம் மும்மரமாக நடை பெற்றுவருகிறது.

இப்பொழுதும் நாம் சரித்திரத்திலிருந்து தப்ப முடியாது. ஈசன் கிருபையால் எல்லாம் இனிது முடியுமென்று நான் நம்புகிறேன். 20-ம் நூற்றுண்டின் மத்தியில் நல்லெண்ணமுள்ளவர்கள் தீர்க்காலோசனை செய்து, தளவாடங்களை உற்பத்தி செய்து, அவிவேகத்தையும், கொடூரத்தையும், அடிமைத்தனத்தையும், யுத்தத்தையும் அழித்துவிட யுத்தம் செய்தார்களென்று சரித்திரத்தில் எழுதுவதற்கு லாயக்கான காரியங்கள் நடைபெற்றனவென்று நமது தலைமுறையில் சொல்லுவார்கள்.

---

## செம்படை—நாஸிகளின் கிலி.

மூன்றும்தரப்படைகளைக்கொண்டு பின்லாந்தை ருஷ்யா தாக்கி அவனை ஏமாற்றிவிட்டதைக்குறித்து ஹிட்லர் அவதூறு சொல்லுகிறுன். ரொம்பவும் ஏமாற்றப்பட்டு விட்டோமென்று ஹிட்லர் தூக்கிக்கிறுன். இதில் கொஞ்சம் கூட உண்மையில்லை. விஷயம் அறிந்தவர்கள் ருஷ்யாவைத் தாக்கக் கூடாதென்று எச்சரித்தார்கள். அதை மீறி அவசரமாக ருஷ்யாவுடன் யுத்தத்தைத் துவக்கி விட்டான். அகாதமான படுகுழியில் சேனைகளைத் தள்ளிவிட்டு இப்பொழுது தன்னுடைய முட்டாள்தனத்தைக் குறித்து பச்சாத்தாபப்படுகிறுன்.

ஹிட்லரின் தவறுதல் கொஞ்சமேனும் மீளமுடியாத வண்ணம் ஜெர்மனியைப் பாதாளத்தில் வீழ்த்திவிட்டது. கஸாபிளாங்காவில் ஏற்பட்ட "நிபந்தனையற்ற சரணுகதி" முடிவை ஜெர்மனி யேற்கவேண்டிய கட்டம் வந்துவிடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாஸிகளின் தீவ்ர எதிர்ப்பைத் தாங்கியதும் தங்கள் தேசத்திற்கும் தலைவரான ஸ்டாலினுக்கும் அவர்களுக்குள்ள ராஜ விச்வாஸத்தினுலும் அன்பினுலும் அநேக கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாது ஜெர்மனியைத் துறத்திவரும் ருஷ்ய மக்களின் குணுதியசங்களைத் தெரிந்துகொள்ளவது முக்கியமானது.

எல்லா ருஷ்ய ஜனங்களைப்போலவே செம்படையிலுள்ள ஒவ்வொருவனும் நல்ல ஸ்வபாவமுள்ளவன், கபடமில்லாதவன், புத்தி சாலித்தனம் வாய்ந்தவன். அவன் சுலபமாக சிநேகிதர்கள் சம்பாதித்துவிடுவான். ஒருவனிடம் அவன் அனபு வைத்தால் அவனுக்கு வேண்டிய அளவு ஒத்தாசை செய்வான். அதாவது அவனிடமுள்ள கடைசி ரொட்டித்துண்டையும் மேஜோடுகளையும் கூடக்கொடுத்துவிடுவான்.



அவனுக்குச் சீக்கிரமாகக் கோபம் வந்துவிடாது. ஆனால் கோபம் வந்துவிட்டால் அதற்குத் தங்கு தடை கிடையாது. இப்பொழுது அவனுடைய பூரா ஆவேசமும் நாஸிகள் பேரில் கிளம்பிவிட்டது. ஆகிலும் ஜெர்மானியர்கள் ருஷ்யர்களுக்கு இழைத்த கொடுமைகளுக்காகப் பதிலுக்குப் பதில் செய்யவோ அல்லது ஜெர்மன் கலைகளையோ அழித்துவிடவோ அவனுக்கு எண்ணமில்லை.

அவர்கள் வேண்டுவதெல்லாம் பாஸிஸமும், அதன் தலைவரும் அழியவேண்டுமென்று செம்படையினர் அறிவிக்கிறார்கள். நாஸிகள் போலவே ஜெர்மன் மக்களும் பாஸிஸத்தை எதிர்த்துப்போராடும் ருஷ்யர்களைத் தடுக்க முயன்றால் அவர்களும் கஷ்டப்படவேண்டியது தான்.

18 மாதங்கள் நடைபெற்ற யுத்தத்தில் ருஷ்யர்கள் யுத்த முறைகளைப்பற்றி அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டுவிட்டார்கள். விசேஷமாக ஒவ்வொருவருடைய ஸ்வயமுயற்சியும் நன்னம்பிக்கையும் அதிகரித்திருக்கிறது. யுத்த ஆரம்பத்திலிருந்து எதிராளிக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியபடி கால ஹரணம் ஏற்படக்கூடிய யுத்த முறையையும் ஜெர்மனியின் எதிர்ப்புக் குலைந்தபொழுது பூராவான முன்னேறித் தாக்குதலைச் செய்வதும் தான் ருஷ்யாவின் யுத்த தந்திரம்.

மாரிகாலத்தில் முன்னேறித் தாக்குவதற்கு தேர்ச்சி பெற்ற-மில்லியன்கள் கணக்கான துருப்புகள் ருஷ்யாவில் வால்காவிற்குக் கிழக்கே வைக்கப்பட்டிருக்கின்றன. வட ருஷ்யாவில் செம்படை சென்ற வசந்த காலத்திலிருந்ததைவிட அதிக வலுவுள்ளதாக இருக்கிறது. இங்கே ஜெர்மானியர்கள் ஒரு இடத்தையும் தாக்கவில்லை. ருஷ்யப் படைகளும் ஸ்டாலின்கிராட்டில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் மார்ஷல் டிமோஷெங்கோவுக்கு உதவி அனுப்ப ஒன்றும் செய்யவில்லை.

தொழிற்சாலைகளின் பலம் யுத்த ஆரம்பத்திலிருந்தது போல் அவ்வளவு வலுவாகயில்லை. தொழிற்சாலையிலுள்ள யந்திரங்களின் ஏராளமான அழிவும் டான்நதிப் பிரதேசத்திலும் மற்ற இடங்களிலும் இரும்பு, நிலக்கரி போன்ற தாதுப் பொருள்களின் நஷ்டமும், மனித பலத்தில் விசேஷக் குலறவு ஏற்பட்டுவிட்டதும் தான் இதற்குக்காரணம். ஜெர்மனியோடு ஒப்பிட்டால் $1\frac{1}{2}$ வருஷத்திற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது ருஷ்ய பலம் அதிகரித்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் யூரல்ஸ்மலைப் பிரதேசத்திலோ அல்லது ஸைபீரியாவிலோ ஒரு புதிய தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டதாக ருஷ்யாவிலுள்ள பத்திரிகைகள் வெளியிடுகின்றன. ரயில்வண்டித் தொடர்களில் தொழிலாளர்களும் டெக்னிஷியன்களும் ஏராளமாக ஏறிச்செல்லுகிறார்கள்.

ருஷ்யாவின் வியவசாய நிலைமை மோசமாகயிருந்தாலும், மேலும் கெடுதலாக மாறக்கூடிய போதிலும், மாரிகாலத்தில் ருஷ்ய அரசாங்கத்தார் விவசாய முறைகளில் சாஸ்திரத்தையும் சமுதாய முறையையும் ஸமஸ்தான பாரம் திட்டங்களையும் 'அமுலுக்குக்கொண்டுவராதபக்ஷத்தில் நிலைமை மோசமாக மாறியிருக்கும். ருஷ்யாவின் ஸமஸ்தானத்திய பாரத்தின் உற்பத்திகள் கவர்ன்மெண்டு அமுலுக்கு வந்த பின் 50 முதல் 100 சத விகிதம் அதிகரித்துவிட்டன. ஜெர்மானியர்கள் யூக்ரேனையும், க்யூபான் தீபகற்பத்தையும் ஆக்கிரமித்ததின் மூலம் அவ்விடமுள்ள விளைவுகள் குறைந்துவிட்டன.

மூல பலமில்லாத போனுல் திடமானதும் தீரமுமுள்ள சேனையும் பின் வாங்கவேண்டியது தான். சென்ற 18 மாதங்களாக ஜெர்மானியரின் மகத்தான தாக்குதல்களை ருஷ்யா தேக்கிவிட்டதற்கு ருஷ்யாவின் பூரா பொருளாதாரங்களும் பொது ஜனங்களின் தேவையைவிட ராணுவத் தேவைகளுக்கு உபயோகப் படுத்தப்பட்டது தான் காரணம்.

ருஷ்யாவின் யுத்த முயற்சிகளும் அபரிமிதமானவை. அநேக ஷாப்புகள் மூடப்பட்டுவிட்டன. பாக்கியிருக்கும் கடைகளில் சாமான்களேயில்லை. அதிகமாகச் சாமான்கள் வைத்திருப்பதும் வியாபாரம் அதிகமாகச் செய்யும் கடைகள் எல்லாம் புத்தகசாலைகள். இவைகளிலும் பழைய புத்தகங்கள்தானிருக்கின்றன. ஒரு வருஷத்தில் பொதுமக்களில் 1,000 பேர்களில் பத்துக்குக் குறைவாகத்தான் புதிய துணிமணிகளை வாங்குகிறார்கள்.

எவ்வளவு சிரமஸாத்யமான வேலையையும் மனிதர்களுக்குப் பதிலாக ஸ்திரீகள் செய்துவருகிறார்கள். தொழிற்சாலைகளிலும், வயல்களிலும், மற்ற இதர ஸ்தாபனங்களிலும் மனிதர்களுக்குப் பதிலாக ஸ்திரீகள் வேலைசெய்து வருகிறார்கள். இது விஷயமாக பிரிடனில் விசேஷமான திட்டம் போட்டுத்தான் இது நடைபெற்றது. ருஷ்ய ஸ்திரீகள் கார்களும் ரயில்வே இஞ்சின்களும் ஓட்டுகிறார்கள். பாதுகாப்பு அரண்களைத் தோண்டுகிறார்கள். இருப்புப்பாதைகள் போடுகிறார்கள். ரஸ்தாக்களும், பாலங்களும் அமைக்கிறார்கள். தெருக்களைச் சுத்தி செய்கிறார்கள். மரம் வெட்டுகிறார்கள். வெடிமருந்துகளும் ஆயுதங்களும் செய்கிறார்கள். நிலம் உழும் மோட்டார்களை ஓட்டுகிறார்கள். அறுவடை செய்கிறார்கள். ராணுவத்திலும், கடற்படையிலும், விமானப்படையிலும் நூற்றுக் கணக்கான வேலைகளில் அமர்ந்திருக்கிறார்கள். அதிக வேலை செய்வதினால் இவர்கள் திடமாயும் தேகவலிமை பொருந்தியவர்களாகவுமிருக்கிறார்கள்.

பொது ஜனங்களுக்குக் கிடைக்கும் ஆகார வசதிகள் ஜனங்களின் சௌகரியத்திற்கு வேண்டிய அளவுக்குமட்டில் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த மாரிகாலத்தில் நிலைமை இன்னும் கேவலமாகிவிடும். அடுத்த வசந்த காலத்தில் யுத்த வேலைகளில் அமர்ந்திராத ருஷ்யர்கள் கஷ்டப்படவேண்டி வரும். தேசத்திலுள்ள போக்குவரத்து சாதனங்களெல்லாம் அநேகம் போர் முனைகளிலிருக்கும் துருப்புகளுக்குச் சாமான்கள் கொண்டுபோவதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்தும், பிரிடனிலிருந்தும் இறக்குமதிகளுக்கு பொதுமக்களின் உணவுப்பொருள்களைவிட முக்யத்வம் ஏற்பட்டிருக்கிறது. யுத்த தளவாடங்களுக்கு அடுத்தபடியாகத்தான் உணவுப்பொருள்கள் கவனிக்கப்படுகின்றன. கப்பல்கள் குறைவு ஏற்பட்டபொழுது கோதுமையையா, ஆயுதங்களையா வருத்துகிறதென்ற பிரச்னை ஸ்டாலினுக்கு ஏற்பட்டது. அவன் ஆயுதங்களை இறக்குமதி செய்வதென்று முடிவு செய்தான்.

---

## ஸ்டாலின்.

(ரால்ப்-பார்கர் எழுதியது).

ஜோஸப் ஸ்டாலினை முதல் முதலாகக் கண்டு பேசியவர்களுக்கெல்லாம் உடன் காலத்திலேயே நல்ல அபிப்பிராயம் ஏற்படுகிறது. அதாவது அடக்கமும் டம்பமில்லாமையும் தன்னுடைய சக்தியை அடக்கியாளக்கூடிய சக்தியுள்ளவன் என்றும் அபிப்பிராயமுண்டாகுகிறது. அவனுடைய குறிப்பான பேச்சுகளிலிருந்து அவன் ரொம்பவும் ஜாக்ரதையாய் மதித்துப் பேசுகிறவனென்று தோன்றுகிறது. ஆகிலும் கடுமையாகப் பேசுவதிலிருந்து சந்தோஷமான முறையில் பேசும்பொழுது அவனுடைய மனோல்லாசம் வெளியாகுகிறது.

அநேக வருஷங்களாக அநேக விதமான ஜனங்கள் ஸ்டாலினின் குணத்தைப் பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்களைக்கேட்டு, சில குணங்கள் நிரந்தரமாக அவனிடமிருக்கின்றன என்று சொல்லலாம். சாதாரண மனிதனுடைய குணங்களை அறிந்துகொள்ளுவதும் அவனுக்கு யுத்தத்தை நடத்தும் முறையிலுள்ள புத்திசாலித்தனமும் முக்கியமானவை. இவை இரண்டும் சேர்ந்து ஸ்டாலினை ருஷ்யாவின் யுத்தத் தலைவராகச் செய்துவிட்டன.

உலகத்தின் 6-ல் ஒரு பங்குள்ள பிரதேசத்திலுள்ள தளகர்த்தர்களுடனும், தொழிற்சாலை டைரக்டர்களுடனும், டெக்னிகல் நிபுணர்களுடனும் டெலிபோன் மூலமும், ஒலிபரப்பு மூலமும் நடைபெற்ற சம்பாஷணைகளை இரவில் வெகு நேரம் வரையில் உட்கார்ந்து ஸ்டாலின் குறித்த துண்டுக் கடிதங்களை அவனுடைய காரியதரிசிகள் இட்டுக்கொண்டு போகும்பொழுதுங்கூட, இந்த ஸ்டாலின் தான் ஆண்வரும் பொதுஜனங்களின் நலத்தைப்பற்றியும் யோசிக்கத் தவறுகிறதில்லை.

ஜார்ஜியாவிலுள்ள செக்கிலியனுக்கும் காகஸிலுள்ள மலைவாசியான ஸ்திரீக்கும் பிறந்த ஸ்டாலின் தன்னுடைய சாமான்யமான உற்பத்தியை மறக்க



வில்லை. ருஷ்யாவில் மிகையாகவும், அபரிமிதமாகவும் செய்யப்படும் ஸ்தோத்திரங்களெல்லாம் அவனுக்குப் பிரியப்படுகிறதில்லை. ஆகிலும் ஆதி காலத்திலிருந்த பழக்கங்களைவிட்டு சற்று முன்னேற்றமடைந்திருக்கும் ஜனங்களின் அந்தரங்கமான விசுவாஸத்துக்கும் ரொம்பவும் நாகரீகமடைந்தவர்களின் வாய் ஸ்தோத்திரத்திற்குமுள்ள வித்தியாசங்களை நன்றாய் ஸ்டாலின் கண்டுபிடிப்பான். அவன் கடுமையாகவும் அல்லது அலக்ஷியமாகவுமிருந்திருப்பானாகில் வட ஸைபீரியாவிலுள்ள நெநெட்ஸ் ஜாதியாரையும் காஸ்பியன் கடல் கரையிலுள்ள கால்முக் ஜாதியாரையும் ஆளுவதில் அவனுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கும்.

ஸெர்கி இலூஷின் கியாதிபெற்ற ஸ்டார்ம்விக் விமானங்களைக்கட்ட திட்டம் போட்டபொழுது, திட்டத்தின் விவரங்களை நன்றாய் அறிந்துகொள்ளும் வரையில் இதர அலுவல்களை ஸ்டாலின் ஒத்திவைத்துவிட்டான். விமானம் கட்டும் அவகாசத்தை விசேஷமாகக் குறைக்கக்கூடிய ஒரு முக்கியமான யோசனையையும் அவன் கூறினான். மாஸ்கோவில் நீர்ப்பாசன ஏற்பாட்டை இஞ்ஜினியர்கள் நடத்தியபொழுதும் ஸ்டாலின் தேசப் படங்களையும், திட்டங்களையும், கிரந்தங்களையும் ஆராய்ச்சிசெய்து நுட்பமான ஒரு யோசனை சொன்னான். இதன் மூலமாக ருஷ்யாவுக்கு மிலியன்கள் கணக்கான ரூபிள்கள் லாபம் கிடைத்தது.

சமாதான காலத்தில் ருஷ்யாவில் ஏற்பட்ட மகத்தான பிரச்னைகளை நன்றாய் தேர்ச்சிபெற்ற புத்தியுடனும் விசாலமான நோக்கத்துடனும் கவனித்துவந்தது தான் ஸ்டாலினிடம் பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படக் காரணம். இவைகளும் அவனுடைய அமைதியான குணமும்தான் யுத்த காலத்திலும் ஸ்டாலினிடம் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கைக்குக் காரணங்கள்.

காரிய காரணங்களுக்காக நிறுவப்பட்ட திட்டங்களுள்ள ஒரு தேசத்தில் திட்டங்களின் பொறுப்பை ஒருவன்தான் இறுதியில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பொறுப்பு ஸ்டாலினுக்கு ஏற்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் சாச்வதமாயுள்ள ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று ஸ்டாலின் எண்ணுவதால், ஒவ்வொரு திட்டத்தையும் விஷயம் தெரிந்த நிபுணர்கள் கவனிக்கவேண்டுமென்று ஸ்டாலின் நினைக்கிறான். ஸ்டாலினுடைய கெடுதலான திட்டத்தினால் காரியம் குதாவடையாகிவிட்டதென்று ஒருவரும் குறைகூறமுடியாது. ஆனாலும் அயல்நாட்டார் ஆச்சரியப்படத் தக்கபடி ஸ்டாலினின் நிர்வாகத்தைப் பொதுஜனங்கள் தாராளமாகச் சர்ச்சை செய்துவருகிறார்கள்.

ஸ்டாலின் ஒரு யுத்த வீரர். 15 வயது முதல் அவன் காகஸஸில் மார்க்ஸ் கக்ஷியைச் சேர்ந்த வகுப்பாளர்களுடன் சேர்ந்தது முதல் அவன் யுத்தம் செய்து வந்தான். 48 வருஷங்களுக்குப் பிறகும் எதிராளிகளை அடிக்க ஏற்கனவே கற்றுக் கொண்ட முறைகளை இப்பொழுதும் கையாளுகிறான்.

ஸ்டாலின் வாழ்நாட்களில் ருஷ்யா தேசம் அபாய நிலையிலிருந்தது. அதை விடுவிக்க வலுவாகவும் பயங்கரமாகவும் சண்டைகளும் செய்திருக்கிறான். இப்பொழுது அதிக பருமனில்லாத சரீரமும் நிதானமுள்ள பேச்சுமுள்ள ஸ்டாலின் சிவப்புக் கொடிகளின் மத்தியில் அமைக்கப்பட்ட லெனினுடைய உருவப் படத்தைத் தவிர வேறு அலங்காரம் செய்யப்படாத வெள்ளையடித்த அறையில் ஒரு மேஜையின்முன் உட்கார்ந்து மந்திராலோசனை செய்துகொண்டு ருஷ்யாவின் செழிப்பான பிரதேசங்களில் நடமாடிக்கொண்டிருக்கும் பாஸிஸ்ட் கக்ஷியின் பலமான துருப்புகளின் தாக்குதலினின்றும் ருஷ்யாவுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயகரமான நிலையை எப்படி சமாளிப்பதென்றும் யோசனை செய்துவருகிறான். ருஷ்யாவின் வல்லரசையும் ருஷ்ய தேசத்தையும் பாதுகாப்பதில் ஸ்டாலினுடைய ஏற்பாடு என்ன என்று பார்ப்போம். அவன் தந்திரங்களெல்லாம் வெகு நாட்களுக்குமுன் நிறுவப்பட்டன. 25 வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட கலவரங்களுக்குப் பிறகு அவ்வப்பொழுது ஏற்படும் அயல்நாட்டு உள்நாட்டு நிலைமைகளுக்குத் தக்கவாறு தந்திரங்களும் மாறுபாடு அடைந்திருக்கின்றன. ஆகிலும் யுத்தத்துக்கு முக்கியமான நான்கு அம்சங்கள் மட்டும் மாறுதலடையவில்லை.

அவைகள் தேச மக்கள், செம்படை, தொழிற்சாலைகள் அமைப்பு, கல்வி இலாகா சம்பந்தப்பட்ட கொள்கைகள். இவைகள் ஒவ்வொன்றிலும் ஸ்டாலினின் புத்திசாலித்தனம் வெளிப்படுகிறது.

யுத்தத்தில் ஸ்டாலினுடைய யுத்த தந்திரங்களின் சில அம்சங்கள் சரித்திரம் எழுதக்கூடியவையாக ஆகிவிட்டன. சென்ற கோடைகாலத்தில் சண்டை செய்து கொண்டே ருஷ்யச் சேனை பின்வாங்கத் தீர்மானித்ததும், ஸ்தலங்களை எரித்து விட்டுப்போனதும், மாஸ்கோ முன்னால் எதிர்த்து நின்றதும், மாரிகாலத்தில முன்னேறித் தாக்கியதும் எல்லாம் ஸ்டாலினுடைய புத்திகூர்மையை விளக்கு கின்றன. இம்மாதிரியான காலஹரணம்தான் ருஷ்யாவின் தொழிற்சாலைகளைக் கிழக்கு நோக்கிக்கொண்டு போகிறதற்கும், சமயசஞ்சீவியாக ஸைபீரியாவிலிருந்து துருப்புகளை மாஸ்கோவுக்குக் கொண்டுவருவதற்கும் ஹேதுவாயிருந்தது. "எந்தக் காரியமும் நாம் நினைப்பதுபோல் முடிவுபெறுவதில்லை" என்று ஸ்டாலின் அடிக்கடி சொல்லுவது வழக்கம். ஆகிலும் அவனுடைய முக்கியமான திட்டங்கள் வெற்றிபெற்றன.

யுத்தம் துவங்கியதுமுதல் ஸ்டாலின் அபூர்வமாகத்தான் பொதுஜனங்களின் மத்தியில் தோன்றினன். ஆகிலும் செம்படைகளிருக்கும் போர்முனைக்கு வருவதுண்டு. தங்கள் நாட்டைப் பாதுகார்க்கும் தலைவர் எப்படி வேலை செய்கிறர், எங்கே வேலை செய்கிறர், சேனைத் தலைவர்களை அடிக்கடி சந்தித்துப் பேசுகிறார் என்ற விஷயங்களெல்லாம் ஜனங்களுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் ஆஸ்தைப்படவில்லை.

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஸ்டாலின் போட்டோப் படத்தைக் கவனித்தால் ஸ்டாலினுக்கு யுத்தச்ரமத்தினல் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரியவரும். அவனுடைய முகம் வாடியிருக்கிறது. தலைமயிர் வெண்மையாக மாற ஆரம்பித்துவிட்டது. ஆகிலும் அவனைச் சமீபத்தில் பார்த்தவர்கள், அவனுடைய சொல்வன்மையும், அகமகிழ்ச்சியும் சாந்த குணமும் முன்போல் தானிருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். சமீப காலத்தில் ருஷ்யாவிலுள்ள ஸ்கிட்டில்ஸ் என்னும் விளையாட்டில் பங்கெடுத்துக்கொள்ள ஸ்டாலினுக்கு அவகாசமிருந்ததா என்று சந்தேகிக்க இடமிருந்தாலும் நவீன கிரந்தங்களைப் படிப்பதில் ருசியானது அவனுக்குக் குறைவுபடவேயில்லை. அநேக நாடகங்களைப் படித்திருக்கிறன். அநேக வாலிப கிரந்தக் கர்த்தாக்களுக்குப் பிரசங்கமும் செய்திருக்கிறன்.

தேசியத் தலைவர்களில் ஸ்டாலினைப்போல ஒருவருக்கும் வருங்காலத்திய ஏற்பாடுகள் அவ்வளவு கவலை கொடுக்கவில்லை. அவன் ஒருவனுடைய தீர்மானத்தையொட்டி இனிமேல் ஜனிக்கக்கூடிய மக்களின் வாழ்நாட்கள் அமைக்கப்படவேண்டுமென்பதை ஸ்டாலின் நன்றாய் உணர்ந்திருக்கிறன். ஐக்கிய நாடுகளின் அதிருஷ்டவசம், ஸ்டாலின் தன்னை யுத்த வீரனென்றே சொல்லிக்கொண்டிருக்கிறன். ஜனங்களின் ரக்ஷகனுகவும் தற்காப்பு சபையின் அக்கிராசனராகவும் ராணுவப் படைக்கு தலைமை நிர்வாகியாகவுமுள்ள ஸ்டாலின் சமாதான காலத்திலுள்ள பாதி ராணுவ உடையை தரித்துவருகிறனென்பதில் விசேஷமிருக்கிறது.

---

## மாரெத் அரண்.

(ஜெனரல் அலெக்ஸாண்டர் மத்தியக் கிழக்கு, பிப்ரவரி 10).

மாரெத் அரண்—பாலைவனத்திற்குள் 40 மைல் தூரம்தான் பரவியிருக்கிறது. முன்காலத்தில் குதிரைகளின் போக்குவரத்தை நிறுத்துவதற்காக ஏற்பட்டதால் அது சௌகரியமான இடம் அல்ல.

மோட்டார் படைகள், நம்வசம் இருப்பதனல் பார்ச்வத்தைத் திருப்பிவிட முடியும். நேசதேசப்படைகள் அதிக மழையினல் விரைவில் முன்னேற முடியவில்லை. மோட்டார்களின் உதவியால் யுத்தம் செய்யும் முறையில், மழைகாலம் தாக்குகிறவனுக்குப் பாதகமாக இருக்கிறது.



நமது சத்துரு டூனிஸியாவில் வெகுகாலம் இருந்தாகவேண்டும். ஆனல் அவனுக்கு வேண்டிய ஸப்ளைகள் கடல் வழியாக கிடைக்கும் வரையில்தான் அங்கு இருக்கலாம். ஏனெனில் அவனுக்கு ஆகாரம், வெடிமருந்துகள், மற்ற சாமான்கள் அநேக டன்கள் கணக்காக வரவேண்டும்.

பிரிடிஷ் விமானப்படைகள் தங்கள் முழுத்திறமையையும் காட்டி அடிக்கும் நிலைமைக்கு வரவில்லை. ஆனல் நம்முடைய விமானங்கள் டூனிஸியாவுக்குள் மேன்மேலும் சென்று அதிகமான விமான தளங்களைப்பெற்றால், நம்முடைய குண்டுவீசும் விமானங்கள் பகற்பொழுதில் தாக்குவதற்கு அவைகளுக்குத் துணையாக விமானங்கள் அனுப்பலாம்.

1. இப்பொழுது தனித்தனியாக இருக்கும் மூன்று சேனைகள். எட்டாவது சேனை, 2. முதலாவது சேனை, 3. பைாலிய இராக் சேனை. இவைகள் மூன்றும் சேர்ந்து மத்தியக்கிழக்கில் வெகுசீக்கிரத்தில் சண்டை செய்யும். மத்தியதரைக் கடல் திறக்கப்பட்டால், சேனையை வேறு இடத்தில் உபயோகப்படுமாறு செய்யலாம்.

வெவ்வேறு இடங்களில் அலுவல்கள் இருப்பதால், ஜெர்மனி ஸ்பெயினுக்குள்ளோ அல்லது துருக்கிக்குள்ளோ துருப்புகள் அனுப்பமுடியாது.

ருஷ்யாவின்மீது படையெத்ததானது ஜெர்மானியர்களையே பேராபத்தான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. ஜெர்மன் படைகள் காகஸஸிலிருந்து பின்வாங்கியதிலிருந்து, மத்தியக் கிழக்கில் நமக்கிருந்த கஷ்டங்கள் இப்பொழுது நீங்கிவிட்டன. பெர்ஸியாவுக்கு இருந்த படையெடுப்பு பயமும் இப்பொழுது நீங்கிவிட்டது.

ஆபிரிக்கா கண்டத்திலிருந்து அச்சுநாட்டுப் படைகளை துரத்துவது சுலபமான காரியமல்ல. ஆனல் நமக்குச் சாதகமாகவே காரியங்கள் நடக்கின்றன. நமது சத்துரு தனக்கு வேண்டிய ஸப்ளைகளை அதிகரித்துக்கொள்ள பிரும்மப்பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறன். ஆனல் ஸப்ளைகளை இறக்கும்படி அவன் கையில் இருக்கும் துறைமுகங்கள் மிகக்குறைவு. இதுவரையில் எதிரி நிலயங்களின்மீது, தாக்குதலை ஆரம்பிப்பதைத் தடுத்துவந்து நமக்கு பாதகமாயிருந்த மழைகாலம் சீக்கிரத்தில் முடிவடையும்.

மாரெத் அரண் பலமுள்ளதுதான். அதனல் என்ன? நாங்கள் சிறிதும் தைரியம் இழக்கமாட்டோம். நாங்கள் எங்கள் குண்டுவீசும் விமானங்களுக்குத் தளங்கள் ஏற்படுத்த எங்கள் விமான நிலயங்களை ரோமல் பின்வாங்கிக்கொண்டு செல்லும்பொழுதே அந்த பிரதேசத்தில் ஏற்படுத்துவோம். எட்டாவது சேனை மத்தியக்கிழக்கில் தன்னுடைய காரியத்தை முடித்தவுடன், அது புதிய நடவடிக்கைகளைத் துவக்கும்.

---

## ஸாப்பர்ஸ்களுக்குப் பாராட்டு.

(எட்டாம் படையுடனிருக்கும் நியூஸ் கிரானிகிள் நிருபர் எழுதியது).

ஒரு சுரங்கவெடி இருக்குமிடத்தின் பேரில் ஒரு ஸாப்பர் சென்றுவிட்டான். ஆகாயத்தில் கரும் புகை பரவியிருக்கிறது. கொஞ்ச தூரத்திலிருந்த டாங்கானது கரிமுட்டாய் ஆகி தந்திக்கம்பிகள் உயரம் கிளம்பி 50 அடிக்கு அப்பால் கிடக்கின்றது.

ஸாப்பருக்கு உயிர் இருக்கிறது. சாரணப்படையினர் இவனுக்கு ஏதாவது உதவி செய்யக்கூடும். சிதைப்பட்ட இந்த ஸாப்பர் ஒரு உண்மையான யுத்த வீரனென்றும் மோட்டார்கார்களுக்கும் டாங்கிகளுக்கும் எதிரியை விரட்டிச் செல்லும் எட்டாம் படைக்கும் மார்க்கத்தை சுத்தி செய்தவர்களில் இவன் ஒருவனென்றும் சாரணர்கள் அறிவார்கள்.

பிரிடிஷ் என்ஜினியர்களைப்பற்றி ஒருவரும் அறிந்திருக்கமாட்டார்கள். ஏனென்றால் மார்க்கத்தைத் தயாரிக்கும் வேலையை இவர்கள் முன்னாடியே செய்து விட்டார்கள். பிறகு தான் டாங்கிகளும் துப்பாக்கி தாங்கிய யுத்த வீரர்களும் முன்னேறுவார்கள்.

இவ்விடத்தில் 60 அடி அகலமும், 20 அடி ஆழமுமுள்ள ஒரு குழியிருக்கிறது. ஆகிலும் ஸாப்பர்கள் ஒரு புதிய ரஸ்தாவை அமைக்கிறார்கள். மற்றவர்கள் முன்னாடிச் சென்று இந்தப் பிளவுப்பட்ட ரஸ்தாவில் ஒரு பாதை ஏற்படுத்தி விட்டார்கள்.

இவர்கள் வேலையைசெய்வதைப் பார்த்தால் இது சுலபமானதென்று தோன்றலாம். கடற்கரையின் சமவெளியில் போய்ச் சேரும் ரஸ்தாவையும் தாண்டி இவர்கள் செல்லுகிறார்கள். தோட்டக்காரர்கள் முளை கிளம்பி வரும் விதைகளைக் கவனிப்பதுபோல் தலைகள் குனிந்தபடியே செல்லுகிறார்கள். ஒரு சமயம் ஒரு சாமானைக் கவனித்துப் பார்த்து நின்றுவிடுகிறார்கள். இது ஒரு சுரங்கவெடியாக இருக்கலாம். இவர்கள் குனிந்து பார்த்து, தங்கள் கைகளால் பூமியைத் தோண்டிப் பார்த்த பிறகு புறப்படுகிறார்கள்.

சாதாரணமானதாகத் தோன்றும். எதைத் தொட்டாலும், ஒரு அடி முன் வைத்தாலும் கீழே இருக்கும் சுரங்கவெடிமேல் கால் வைக்கவேண்டும். இது வெடித்து ஒருவனை ஆகாயம் அளவில் தூக்கி எறிந்துவிடும். நன்றாயுள்ள ஒரு ரஸ்தாவில் கொஞ்ச தூரம் ஒரு மோட்டார் சென்றவுடன் ஒரு பயங்கரமான வெடி சப்தம் கிளம்பி காரிலிருப்பவரை மயக்கம் போடும்படி செய்து சின்னாபின்னமும் செய்துவிடும். சதாகாலமும் இதைப்பற்றித் தான் ஸாப்பர்கள் நினைக்கிறார்கள்.

ஒரு ஆம்புலன்ஸ் மோட்டாரில் ஒரு டாக்டர் ஸாப்பர் இருக்குமிடத்திற்கு விரைவாக வந்து ஸாப்பரைக் கொண்டுபோகிறார். இவன் சொஸ்தமடைய வேண்டுமென்று நாம் பிரார்த்திக்கிறோம்.

---

# புதிய ஜிப்ரால்டர்.

---

ஜிப்ரால்டர் மலையில் சென்ற இரண்டு வருஷமாகத் தயாரித்த பெரிய சுரங்கக்கோட்டையின் விவரங்கள் ஒலிபரப்பில் சொல்லப்பட்டது.

ஜிப்ரால்டரில் சமவெளியான பிரதேசமே கிடையாது. பாறைக்கு மேற்குப் பக்கத்தில் நகரமிருக்கிறது. கட்டடங்கள் நெருக்கமாயும் சுற்றிலும் மலைகள் உன்னதமாகவும் இருக்கின்றன. செங்குத்தான பாறைகளில் ஒரு புறத்திலும் கோட்டைகள் கட்ட வசதியில்லை. விசேஷமாகத் தாக்குதல்களிலிருந்து ஒளிந்து கொள்ள ஒளிகளும் கட்டமுடியாது. பிரான்ஸின் வீழ்க்காட்டுக்கு முன்னால் நம்பிக்கை பலமாக இருந்தபொழுது ஜிப்ரால்டரைத் தாக்குவார்களென்று ஒருவரும் எண்ணவில்லை. டன்கர்க் நிகழ்ச்சிகள் நேர்ந்தபிறகு நாம் உஷாராகி சென்ற இரண்டு வருஷங்களாக நடத்திய ஒரு பெரிய வேலையைத் துவக்கினோம். ஜிப்ரால்டரை ஆகாயத்திலிருந்து வெடி விமானங்களால் தாக்கினாலும் சமுத்திரத்திலிருந்து குண்டுகளால் அடித்தாலும், ஜிப்ரால்டரிலுள்ள விமான தளங்கள் அழிக்கப்பட்டாலும் படையெடுக்கும் சேனைகள் தெருக்கள் வழியாகச் சென்றாலும், பின்னும் ஜிப்ரால்டர் மலையைப் பிடித்துத்தான் ஆகவேண்டும். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுரங்கக் கோட்டையில் ஒவ்வொரு சிப்பாயும், மாலுமியும், விமானியும் பத்திரமாயிருந்து வரலாம். மலைமேலிருக்கும் எதிரிக்கு மட்டும் தொந்தரவு செய்துகொண்டும் அபாயம் உண்டுபண்ணிக்கொண்டு இருக்க



நவீன முற்றுகை நிபுணர்கள்—இதில் சிலர் கனடாவைச் சேர்ந்தவர்கள்—இந்த சுரங்கத்தில் நவீனமான எல்லா சாதனங்களையும் அமைத்திருக்கிறார்கள். $2\frac{1}{2}$ மைல் நீளமுள்ள ஜிப்ரால்டரில் இந்தப் புதிய நகரத்தில் நடமாட்டம் அதிகமாயிருக்கிறது. சிலசமயம் தரை மட்டத்துக்கு ஆயிரம் அடிக்குக் கீழே பெரிய பீரங்கிகள் சுட்டுப் பழகுவதும்கூட மேலே கேட்கிறதில்லை. வெளிச்சம், காற்று, மின்சாரம் இவைகளுக்காக ஒரு மின்சார சாலையிருக்கிறது. இதில் சிப்பாய்கள் வேலை செய்கிறார்கள். மின்சார அடுப்புகளும் கசாய் நறுக்கும் கருவிகளுமுள்ள சமையல் அறைகளும் வசதியான நூற்றுக்கணக்கான கூண்டுகளோடு கூடிய சிப்பாய்களுக்கும் சாலைகளும், எவ்விதமான பீரங்கியும் பழுது பார்க்கக்கூடிய ஓர்க்ஷாப்புகளும் இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. நீர்வீழ்ச்சிகளுள்ளதும், விஷவாயுவிலிருந்து காப்பாற்றிக்கொள்ள லாயக்கான ஸ்தலங்களும், முதல் உதவி நிலயங்களும், உள்ள ஏ. ஆர். பி. போஸ்டுகளும், ரொட்டிக்கிடங்குகளும், புத்தகசாலைகளும், ஸினிமாக்களும், உணவுப்பொருள்கள், வெடிமருந்துகள் உள்ள ஸ்டோட்சுகளுமிருக்கின்றன. பாறைக்குள் ராணுவ ஆஸ்பத்திரியுமிருக்கிறது. தகவல்கள் அறிந்துகொள்ளுவதற்காக தலைமை காரியாலயமும் இங்கு இருக்கிறது.

ஜிப்ரால்டரிலுள்ள யுத்த வீரர்களுக்கு இரண்டு வருஷ பிரயத்னம் ரக்ஷணை மட்டும் செய்யவில்லை. பாறையிலுள்ள எல்லா விமானம் சுடும் பீரங்கிகளும் நொருங்கிவிட்டாலும் அச்சுநாட்டு விமானங்கள் சுலபமாக அங்கே பறந்துசெல்ல முடியாது. படையெடுத்துவரும் கடற்படை ஜிப்ரால்டர் பாழாக்கிவிட்டதென்று நினைக்கலாம். ஆகிலும் கண்டுபிடிக்க முடியாத இடத்திலிருந்து குண்டுவீசும் பீரங்கிகளுக்கு முன்னால் இது பின்வாங்க நேரிடும். புதிய ஜிப்ரால்டருக்கு மூளை போன்ற பிரதேசமானது. மறை பொருளாகயிருக்கிறது. ஆகிலும் ஒரு மனிதனைக்கூட வெளியிலனுப்பாமல் எவ்விதமான எதிர்ப்பையும் தடுத்து விடும்.

---

## பிரஸ் கம்யூனிகே.

---

### R. C. A-1-13365 of 41, dated 10—2—43.

### விறகு—ஸர்க்கார் டிப்போவில்—விற்பனை விலை.

சமீப காலம் வரை டவுன் ஸர்க்கார் டிப்போவில் விறகு டன் 1-க்கு சவுக்கை ரூ. 9-வீதமும், காட்டு விறகு ரூ. 6 வீதமும் விற்கப்பட்டு வந்தது.

2. அக்கம் பக்கத்து ஜில்லாக்களில் விறகு இந்த விலைக்கு இரண்டு பங்கு வீதம் விற்கப்பட்டு வந்ததாகவும், அது காரணமாக ஸமஸ்தானத்திலிருந்து ஏராளமாக விறகு ஏற்றுமதி செய்யப்பட்டு வெளியூர் வர்த்தகர்கள் பெரும் லாபம் அடைந்து வந்ததாகவும், ஸ-ர்க்கார் அவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

3. இப்படி ஏற்றுமதி செய்யப்படுவதைக் கட்டுப்பாடு செய்வதற்காக சவுக்கை ரூ. 12 வீதமும், காட்டு விறகுக்கு ரூ. 10 வீதமும் விறகு டன்னின் விலையை உயர்த்தினார்கள்.

4. மேலும் யோசனை செய்ததில், சொற்ப அளவில் வாங்குபவர்களுக்கு விறகு மலிவாகக் கிடைக்கவும், அதே காலத்தில் ஏற்றுமதியைத் தடுத்துவரவும் இயலும் பொருட்டு மாதம் 1-க்கு $\frac{1}{4}$-டன்னுக்கு மேற்படாமல் வாங்குபவர்களுக்கு சவுக்கை டன் ரூ. 9 வீதமும், காட்டு விறகு டன் ரூ. 6 வீதமும், பழைய விலைப்படியே விற்பதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

5. அதிகப்படியாக வாங்குபவர்களுக்கு சவுக்கை டன் ரூ 12-வீதமும், காட்டு விறகு டன் ரூ 10-வீதமும் கூடின விலை விதிக்கப்படும். சமயோஜிதமாகச் செய்யப்பட்ட இவ்வுத்தரவு ஏற்குமென்று நம்பப்படுகிறது. இது பரீக்ஷார்த்தமாக அமுலிலிருந்து வரும்.

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 134. (5-வது பிரிவு.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... மாலை | 6.00 | | 24- 2-43 | ராணி பெண்பாட்சாலை காலை | 10.15 |
| 21- 2-43 | திருவரங்குளம் ... ,, | 7.00 | | ,, | காலேஜ் A ஆங்கிலம் ,, | 10.15 |
| ,, | வம்பன் ... ,, | 7.30 | | ,, | காலேஜ் B தமிழ் ... ,, | 10.15 |
| 22- 2-43 | திருமயம் ... ,, | 7.00 | | ,, | பொ. புதுப்பட்டி ... மாலை | 7.00 |
| ,, | மேலூர் ... ,, | 7.30 | | ,, | வேந்தம்பட்டி ... ,, | 7.30 |
| 23- 2-43 | பள்ளிவாசல் ... ,, | 7.00 | | 25- 2-43 | வெள்ளனூர் ... ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் ... ,, | 7.30 | | ,, | செம்பாட்டூர் ... ,, | 7.30 |
| 24- 2-43 | C. S. M. பள்ளிக் கூடம். காலை | 10.00 | | 26- 2-43 | புலியூர் ... ,, | 7.00 |
| | | | | ,, | கண்ணங்குடி ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 135 (6-வது பிரிவு)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27- 2-43 | முனிஸிபல் ஆபீஸ்... மாலை | 6.00 | | 3- 3-43 | C.S.M. பள்ளிக்கூடம், காலை | 10.00 |
| 28- 2-43 | மலம்பட்டி ... ,, | 7.00 | | ,, | ராணி பெண்பாடசாலை ,, | 10.15 |
| ,, | பேராம்பூர் ... ,, | 7.30 | | ,, | காலேஜ் A இங்கிலீஷ் ,, | 10.15 |
| 1- 3-43 | கீழாநிலை புதுப்பட்டி ,, | 7.00 | | ,, | காலேஜ் B தமிழ் ... ,, | 10.15 |
| ,, | கீழாநிலைக்கோட்டை ,, | 7.30 | | ,, | புல்வயல் ... மாலை | 7.00 |
| 2- 3-43 | மலைக்குடிப்பட்டி ... ,, | 7.00 | | ,, | வயலோகம் ... ,, | 7.30 |
| ,, | தலையானூர் ... ,, | 7.30 | | | | |

*4, 5—3—43 மஹாசிவராத்திரி விடுமுறைநாட்கள்.*

**யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.**

| | | | |
|---|---|---|---|
| 20— 2—43 | திருமயம். | 27— 2—43 | வெட்டும்விடுதி. |
| 21— 2—43 | விராச்சிலை. | 28— 2—43 | தீத்தான்விடுதி. |
| 22— 2—43 | விராலிமலை. | 1— 3—43 | அரிமளம். |
| 23— 2—43 | வடகாடு. | 2— 3—43 | பேராம்பூர். |
| 24— 2—43 | கீழாநிலை புதுப்பட்டி. | 3— 3—43 | ராயவரம். |
| 25— 2—43 | ஆலங்குடி. | 4— 3—43 | குழிபிறை. |
| 26— 2—43 | புதுக்கோட்டை. | 5— 3—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2.000—23-2-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம்௵ பிப்ரவரி௴ 27௳ [ந. 135

பிரஸங்கம் CXXXV.

## செம்படை.

### ஸ்டாலின்கிராட்டுக்கு கௌரவக் கத்தி.

#### மாட்சிமை தங்கிய மன்னர்பிரானின் பாராட்டு.

நமக்குப் பொதுவான விரோதிகளை முறியடித்த சரித்திரத்தில் மிகவும் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கும் செம்படையின் தீரத்தையும் திறமையையும் நானும் என் பிரஜைகளும் ஸோவியத் பிரஜைகளுடன் சேர்ந்து பாராட்டுகிறேன். ஸ்டாலின்கிராட், காகஸஸ் எதிர்ப்பே, யுத்தப்போக்கை மாற்றி, நாகரீகம், ஸ்வதந்திரம் ஆகியவற்றின் எதிரிகளை ஒழிக்கும் வழியைக் காண்பித்தது. நானும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள மக்களும் காட்டும் மதிப்புக்கு உரியதான கௌரவக் கத்தி ஒன்றைத் தயாரிக்கும்படி ஆக்ஞாபித்திருக்கிறேன். அதை ஸ்டாலின்கிராட் நகருக்கு அளிக்கவிரும்புகிறேன். எதிரிகளுடைய தாக்குதலை இத்தீரம் சமாளித்து நின்றதை வருங்காலத்தினருக்கு இப்பரிசு எடுத்துக்காட்ட வேண்டுமென்பதே என்கருத்து. தவிரவும் பிரிடிஷ் மக்கள் மட்டுமின்றி நாகரீக உலகம் பூராவுமே கொண்ட மதிப்புக்கு இது சான்றாக விளங்கும்.

### செம்படைக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் செய்த புகழுரை.

ருஷ்யப்போர்முனையில் நமக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளைக் கண்டு ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் குதூகலப்படுகிறார்கள். வெற்றிக் குறிகள் தோன்றி விட்டன என்றும் அவர்கள் வெளியிடுகிறார்கள். அற்புதமான நடவடிக்கைகள் நடக்கக்கூடுமென்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் நம்முடைய மத்தியில் ஜோஷுவா போன்ற ஒருவர் இல்லையென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

#### உறுதியும், நம்பிக்கையும்.

யுத்த பேரி முழங்கிய பொழுதும் ஜனங்கள் ஆரவாரம் செய்யும் பொழுதும் பட்டணங்கள் நாசமாவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடையக் கூடாது. நமக்கு மனவுறுதியும் நம்பிக்கையுமிருந்தால் மட்டும் போதாது. மற்றொரு முக்கியமான விஷயம் தேவையென்று வாஷிங்டன் பிரபு சொல்லி அதையும் அனுஷ்டித்தார். நமது நாட்டின் ஆதி புருஷர் செய்தது போல் நாமும் நமது வாழ்நாளைச் சரியாக உபயோகப்படுத்தவும், நம்முடைய எண்ணங்களைச் சரியான முறையில் செலுத்தவும், நம்முடைய நாவை அடக்கவும் நாம் முயல வேண்டும். எதிரி பலவந்த

மாகப் பின்வாங்க நேரிட்டதினின்றும், அவன் மனிதர்கள், ஸப்ளைகள், பிரதேசங்கள், முக்கியமாக துருப்புகளின் மனப்பான்மை, எல்லாவற்றையும் இழந்து விட்டான். இவைகளை வெற்றிகரமாகச் செய்திருக்கும் ருஷ்யப்படையின் சாமர்த்தியத்திற்குக் காரணம், சேனைத்தலைவர்களின் புத்திகூர்மையும், சிறந்த அமைப்பும், போதுமான பயிர்ச்சியும், இவைகளைவிட விசேஷமாக, எவ்வளவு கஷ்டநஷ்டங்களையும் பொருட்படுத்தாது தியாகம் செய்து எதிரியை முறியடித்து விட வேண்டுமென்ற ஊக்கமும் தான்.

செம்படைக்குக் காரணபூதமானவும், செம்படையின் உதவிக்கு மனித பலம், ஸ்திரீபலம், ஸப்ளைகள் முதலியவைகளைக் கொடுத்து வரும் ருஷ்ய ஜனங்களையும் நான் பாராட்டுகிறேன். ருஷ்ய மக்களும் யுத்த முயற்சிகளில் பூராவாக ஈடுபட்டிருக்கிறார்கள். சாத்யமான வரையில் தியாகமும் செய்து வருகிறார்கள். செம்படையும் ருஷ்ய ஜனங்களும் ஹிட்லரின் படைகளின் இறுதி அபஜெயங்களுக்கு அஸ்திவாரம் போட்டு விட்டார்கள். அம்மாதிரி செய்தவர்களுக்கு ஐக்கிய நாடுகளிலுள்ள நம்முடைய சாச்வதமான புகழுரை உரித்ததாகும்.

# செம்படைக்குப் புகழுரை.

### மிஸ்டர் ஆந்தோனி ஈடன் பேசியது.

ஸ்டாலின்கிராட் போரில் செம்படையினர் இழைத்த மகத்தான தீங்கைப் போல ஜெர்மனியின் கௌரவமான சரித்திரத்தில் ஒருபொழுதும் ஏற்பட்டதில்லை. ஹிட்லரின் தந்திரங்களும், ஒத்திகைகளும், தீரமும் பங்கப்பட்டுவிட்டன.

சமீபத்தில் திருப்திகரமான தகவல் கிடைத்திருக்கிறது. ஜெர்மன் துருப்புகளில் முதல் தரமான படைகளில் $2\frac{1}{2}$ லக்ஷம் நபர்களின் நாசத்திற்கு ஹிட்லர் தான் காரணமென்று செம்படையினர் ஜெர்மானியர்களுக்குக் காட்டிவிட்டார்கள்.

மூன்று மாதங்களுக்குள் சென்ற கோடைகாலத்தில் ஜெர்மானியர்கள் கைப்பற்றிய நாடுகளையும் இன்னும் சிலவற்றையும் ருஷ்யர்கள் பிடித்துவிட்டார்கள். அதோடு நிற்காமல் ஜெர்மன் படைகளை முறியடிக்க முடியுமென்றும், ஒரே குழப்பத்துடன் பின் வாங்கும் படியும் செய்யக்கூடுமென்றும் செம்படையினர் ஜெர்மன் மக்களுக்கு புகட்டிவிட்டார்கள்.

ரோமலுக்கும் இந்தப் பாடத்தை நமது எட்டாம்படை கற்பித்தது என்பதில் நாம் பெருமை பாராட்டுகிறோம். நெபோலியனைப் போலவே ஹிட்லரின் பெரிய சேனைகளும், தேசாபிமானமும், கடுமையான கஷ்டங்களையும் சகிக்கச் சக்தியுள்ளதும், விசாலமான பிரதேசங்களுள்ளதுமான ருஷ்யாவின் ஜனங்களோடு யுத்தம் செய்வதில் மகத்தான அபாயம் இருக்கிறதென்று தெரிந்து கொண்டுவிட்டன.

### நிபுணனின் யுத்த தந்திரம்.

இந்த வருஷக் கொண்டாட்டத் தினத்தன்று செம்படையைச் சேர்ந்த ஒவ்வொரு இலாகாவுக்கும், ஸ்டாலினின் தலைமையில் அமைந்திருக்கும் அதிகார வர்க்கத்தாருக்கும், அவர்களுடைய யுத்த தந்திரத்துக்கும், இவைகளை இனிது செயவித்த போர்முனையிலுள்ள தளகர்த்தர்களுக்கும், துருப்புகளுக்குத் தலைமை வகித்த சிறிய உத்தியோகஸ்தர்களின் தீரத்திற்கும் புத்திசாலித்தனத்திற்கும், கஷ்டங்களில் அதிகாரம் வகிக்காத ஆபீஸர்களுடையவும் மனிதர்களுடையவும் சகித்வத்திற்கும், பிறகு முன்னேறித்தாக்குவதில் அவர்கள் காண்பித்திருக்கும் ஆர்வத்திற்கும், ருஷ்யாவின் விமானப்படையிலுள்ள தீரர்களுக்கும், போக்குவரத்து சாதனங்கள், ஸப்ளைகள் இவைகளால் ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்தி செய்வதில் ஈடுபட்ட மற்றெல்லோருக்கும் நம்முடைய புகழுரையைத் தெரிவிக்கிறோம்.



ருஷ்யாவின் குரங்குச் சண்டைப் படைகளின் தீரத்தையும் நாம் புகழுகிறோம்.

எல்லாக் காலங்களிலும் எல்லா சமுத்திரங்களிலும், வடக்கே உள்ள சமுத்திர மார்க்கமாக ருஷ்யாவுக்கு யுத்த தளவாடங்களும் ஸப்ளைகளும் கொண்டு போக தைரியத்துடன் வேலை செய்த பிரிடிஷ் கப்பற்படைக்கும் சாமான் கப்பல்கள் படைக்கும் நமது பாராட்டைத் தெரிவிக்கிறோம்.

ருஷ்ய ஜனங்களின் மனோ தைரியமானது டங்கர்க் சம்பவத்திற்குப் பிறகு பிரிடனிலுள்ள ஜனங்கள் ஒருபொழுதும் பணியமாட்டோமென்று சொல்லுவதை எதிரி நிராகரிக்க முயன்றபொழுது அவர்களின் மனோநிலை எப்படியிருந்ததோ அது போலிருக்கிறதென்று நாம் மதிக்கிறோம்.

### ருஷ்யாவின் பூச்சாண்டி.

கோயபல்ஸ் இதுவரையில் நேசநாடுகளுக்குள் பரஸ்பர விரோதத்தை உண்டுபண்ணவும் போல்ஷிவிஷத்தை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனிருப்பதாகவும் சொல்ல முயன்றான்.

இந்தப் பூச்சாண்டியின் ஸ்வரூபம் நமக்குப் புலப்பட்டு விட்டது. ஆஸ்திரியா பிடிபட்ட பொழுதும், செகோஸ்லாவாகியா ஆக்கிரமிக்கப்பட்ட பொழுதும், போலந்தை வெருட்டிய பொழுதும் இவன் ஐரோப்பாவை பயமுறுத்தினான். இப்பொழுது போல்ஷிவிஷத்தை அழிக்கவேணும் என்ற பூதம் கிளம்பிவிட்டது. இத்துடன் மற்றொரு பிசாசும் சேர்ந்து விட்டது. ஹிட்லர் ஒருவர் தான் ஐரோப்பிய நாகரீகத்தைக் காப்பாற்றக்கூடியவனென்று சொல்லப்படுகிறது. 1943-ல் இந்த புருஷனின் தோற்றத்தையே காணோம்.

நாகரீக ரக்ஷகர் ஹிட்லராம். என்ன அநியாயம். இந்தக் கோரமான யுத்தத்துக்குக் காரணபூதர். வார்ஸா, ராட்டர்டாம், பெல்கிரேட், கவெண்ட்ரி, முதலிய நகரங்களையும் ருஷ்யாவிலுள்ள அநேகநகரங்களையும் பாழாக்கியவன். ஐரோப்பா பூராவும் ஜெர்மன் ஸர்வாதிகாரியின் கீழ் அடிமைகளாகப் பாடுபடவேண்டுமென்ற ஹெரன்வோக் கொள்கையைக் கடைப் பிடித்தவன். தன்னுடைய சொந்த நாட்டிலேயே சட்ட முறையிலுள்ள ஆளுகையை ரத்து செய்தவன். இவன் தானா உலக ரக்ஷகன்.

ஜனசமூகத்தை இவன் காப்பாற்றுவதற்கு ஒரேஒரு மார்க்கம் தானிருக்கிறது. அவன் உண்டு பண்ணின கொடிய நாஸிக்கக்ஷியை அழித்து விட்டு ஜெர்மனிக்கும் உலகத்துக்கும், கெட்ட செய்கைகளுக்கும், கெட்ட எண்ணங்களுக்கும் ஞாபகார்த்தமான ஒரு ரூபமாக மாறி இனிமேல் இம்மாதிரியான ஒரு புருஷன் இந்த உலகத்திலேயே ஜனிக்கக்கூடாது என்று ஜனங்கள் நினைக்கும் படியாக ஹிட்லர் நடந்து கொள்ள வேண்டும்.

சென்ற மே மாதத்தில் நமது நாட்டில் லண்டனில் ஆங்கிலோ-ருஷ்ய நட்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. யுத்தத்தில் அச்சு நாடுகளை அடியோடு அழித்துவிடவேண்டுமென்று முயற்சி செய்வதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். சமாதான காலத்திலும் ஒத்துழைக்கவேண்டியதற்காக நிறுவப்பட்டிருக்கும் கொள்கைகளிலும் நாம் ஒருமைப்பட்டிருக்கிறோம்.

இன்றும் நாம் செம்படைகளுக்கு வந்தனம் தெரிவிக்கிறோம். இவர்களுக்கு முன் அலெக்ஸாண்டர் நெவ்ஸ்கியின் நாளில் டேன் வீரர்களோடும் ஸ்வீடனின் அரசரான பன்னிரண்டாவது சார்ல்ஸின் சேனைகளோடும் நெபோலியன் என்ற பிரெஞ்சு தளகர்த்தரின் மகத்தான சேனைகளோடும் ருஷ்யர்கள் சண்டை செய்து வெற்றிபெற்றிருக்கிறார்கள். செம்படை அவர்களுடைய சரியான வாரிசுகள் தான். அவர்களில் உயிரிழந்தவர்களின் தீரத்தைப் பாராட்டுகிறோம், அவர்களைப் பற்றியும் துக்கிக்கிறோம். நேசநாடுகளும் ருஷ்யாவும் சேர்ந்து பூர்ணமான வெற்றி பெறவேண்டுமென்றும் நாம் வேண்டுகிறோம்.

# வார யுத்தச் செய்திகள்.

## 20—2—43-லிருந்து 26—2—43-வரை.

ருஷ்யா.— இந்த வாரத்தில் ருஷ்யப்படைகள் கீழ்கண்ட இடங்களைக் கைப்பற்றின: பிப்ரவரி 19, கர்காவுக்கு மேற்கே லூபாடின், மெராபா, குர்ஸ்க் மாகாணத்தில் ஒபோயான்; பிப்ரவரி 20, பாவ்லோகிராட், கிராஸ்னோகிராட்; பிப்ரவரி 21, டானெட்ஸ் நதிப் பிரதேசத்தில் போகாவோ முதல் அண்ட்ராட்ஸிட் வரையில்; பிப்ரவரி 23, யூக்ரேன் பிரதேசத்தில் ஸுமி, அக்தியார்க்கா, லெபெடின், குர்ஸ்க் பிரதேசத்தில் மாலோ ஆர்க்கேஞ்சல்ஸ்க்.

ருஷ்யாவின் தற்போதைய லக்ஷியங்கள், ஓரல், ஸுமி, போல்டாவா, ஸ்டாலினோ, நீப்ரோபெட்ரோவ்ஸ்க், நோவோராஸிஸ்க் முதலிய இடங்கள். இவைகளில் ஸுமி பிடிபட்டுவிட்டது. ஸ்டாலினோவைச் சுற்றிக்கொண்டு விட்டார்கள். நீப்ரோபெட்ரோவ்ஸ்க்கை ஜெர்மானியர்கள் விட்டுவிட்டுப் போய்விடுவார்களென்று புலப்படுகிறது. டானெட்ஸ், ஓரல் பிரதேசங்களில் கடும் போர் நடைபெற்று வருகிறது. நோவோராஸிஸ்க்கை நோக்கி ருஷ்யப் படைகள் நெருங்கிவருகின்றன.

டுனிஸியா.—ரோமலின் ஆபிரிக்கப்படைகள் மாரத் அரணுக்குள் புகுந்துவிட்டன. அவனைப் பின்பற்றிவரும் மாண்ட்காமரியின் துருப்புகள் அரணுக்கு வடபகுதியிலுள்ள மெடினைன் என்னுமிடத்தையும் தென்பகுதியிலுள்ள டாடா ஹூவின் என்னுமிடத்தையும் பிடித்துவிட்டன. ஜெர்பாத் தீவும் பிடிபட்டுவிட்டது.

இதே சமயத்தில் அமெரிக்காவின் 5-ம்படை பூராவாகத் தயாராக இல்லாத பொழுது எதிரி முன்னேறித்தாக்க ஆரம்பித்து தெற்கு டுனிஸியாவிலுள்ள தெலாட்டா என்னுமிடத்திலுள்ள விமான தளத்தை அமெரிக்கர்கள் காலி செய்து விடும்படி செய்து விட்டான். கப்ஸா, பெரியானு, காஸ்ஸரினு, ஸ்பீடா என்னும் நகரங்களையும் கைப்பற்றிவிட்டு வெளவிக்குப்போகும் இருப்புப்பாதையைக் கைவசம் செய்துகொண்டான். இதன் மூலம் கடற்கரையின் நடமாட்டப் பிரதேசத்தை விஸ்தாரப்படுத்திவிட்டான். கெயிர்வானுக்கு மேற்கேயுள்ள நேசதேசத்தாரின் பாதுகாப்பு அரணுடைய மேற்கு முனையாகிய பிச்சானையும் எதிரி ஆக்கிரமித்துவிட்டான். இவை காரணமாக ஓஸால்டியா பள்ளத்தாக்கிலிருந்த நேசநாட்டு முன்னணிப்படைகள் பின்வாங்கிவிட்டன.

காஸ்ஸரைன் கணவாயிலிருந்து முன்னேறி கப்ஸாவிலிருந்து டுனிஸுக்குப் போகும் இருப்புப்பாதைக்குப் பின்புறமுள்ள மலைகளையும், தாலாவையும் பிடிக்க ஜெர்மானியர் செய்த முயற்சி தடைபட்டது.

ராபாவுக்குக் கிழக்கில் பாண்டு டு பாவை நோக்கிச்செல்ல ஜெர்மானியர் செய்த முன்னேற்றமும் முறியடிக்கப்பட்டது.

பிப்ரவரி 20 தேதி முதல் எட்டாம்படையும் வட ஆபிரிக்கப்படைகளுடன் ஒன்றுபட்டுவிட்டது. வட ஆபிரிக்காவிலுள்ள தரைப்படைகளுக்கு சேனாபதியாக ஜெனரல் அலெக்ஸாண்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வட பஸிபிக் போர்முனை.—ஆட்டுத்தீவிலுள்ள ஹால்ட்ஸ் வளைகுடாவிலும் சிகாகோத் துறைமுகத்திலுமுள்ள ஜப்பானிய கேந்திரஸ்தானங்களையும் கிஸ்காவையும் நமது வெடிவிமானங்கள் தாக்கின. மேற்கு அலூஷியன் தீவுகளில் நடமாடிக்கொண்டிருக்கும் அமெரிக்கக் கடற்படை ஒரு ஜப்பானிய சாமான் கப்பலை மூழ்கடித்துவிட்டது.

தென்மேற்கு பஸிபிக்.—நேசதேசத்தின் விமானப்படை கீழ்கண்ட இடங்களை தாக்கின. ஷார்ட்லாண்டு தீவுகளையும் பாலி, போகன்வில்ஸாவையும் காஹாலி பூயின், பெயிஸி, டீலா, வீலா முதலிய இடங்கள் இவை யெல்லாம் கோலம்பாவ காத்தீவிலிருக்கின்றன. நியூ ஜார்ஜியாவில் முண்டா என்னுமிடம், ரபால், கிளஸ்டர்முனை, லே, முபோ, கோபாங்கி, காஸ்மாடா.



சைனா.—ஹூபே, கியாங்ஸி, கிவாங், ஹான்ஸி மாகாணங்கள், யாங்கட்ஸ் நதிப்பள்ளத்தாக்கு இவைகளில் ஜப்பான் மகத்தான முன்னேறித்தாக்குதல் செய்வதாகத் தெரிகிறது. க்வாண்டங் மாகாணத்திலுள்ள லீஞ்சௌ தீபகற்பத்தில் ஜப்பானியர்கள் கொஞ்சம் முன்னேறினார்கள். பிரெஞ்சுக்காரர்கள் கொடுத்த குவாங்சோவான் என்னுமிடத்தில் ஜப்பானியப்படைகள் 17-ம்தேதி இறங்கின. ஆயினும் ஸாமஹாயி என்னுமிடத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள். இந்த இரண்டு இடங்களும் குவாங்டங் மாகாணத்திலிருக்கின்றன. பயோஷானுக்கும் மாமியான் கணவாய்க்கும் செல்லுவதற்காக ஸால்வீன் நதியை ஜப்பானியர் கடக்க முயன்ற பொழுது விரட்டப்பட்டார்கள். வடகியாங்ஸியில் நாஞ்சாங்குக்கு வடமேற்கேயும் மாமிங்குவான், மிங்குவாங்கு பிரதேசங்களிலும் கடும் போர் நடைபெறுகிறது.

பர்மா.—பர்மாவின் கீழ்க்கண்ட பிரதேசங்களை நமது வெடி விமானங்கள் தாக்கின.

பிப்ரவரி 16—வட பர்மாவிலுள்ள ஹூபங் (கின்ஸுப்), ஸோப்ஸுப் (அமெரிக்காவின் 10-வது விமானப்படை).

பிப்ரவரி 17—ஆக்யாப் தீவில் யக்யான்பின், டான்பெச், ஹீஹோ, மான்க்ஸ்வா (பிரிடிஷ் விமானப்படை).

பிப்ரவரி 18.—மத்திய பர்மாவில் வாடங்க், மெயிங்க்வான் (அமெரிக்க விமானப் படை).

பிப்ரவரி 19.—ஹியூபின்கர (அமெரிக்க விமானப்படை). டாங்கோ, ஆக்யாப் தீவு (பிரிடிஷ் விமானப்படை).

பிப்ரவரி 20.—மாண்டலேயிலுள்ள டப்பரின் துறைமுகம். மேஸா (பிரிடிஷ் விமானப்படை).

பிப்ரவரி 23.—சண்டை விமானங்களின் உதவி கொண்ட ஒரு சிறிய எதிரி விமானப்படை அஸ்ஸாமிலுள்ள அமெரிக்க விமான தளத்தை அதிக உயரத்திலிருந்து தாக்கின. அதிக சேதம் ஏற்படவில்லை. சொற்ப ஆள் சேதம்.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**14—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

(4 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—ரயில்வே தொழிற்சாலைகளும், யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகளும்.—டூர் (Tour).

ரயில்வே இலக்குகளும், நாசமாக்கப்பட்ட நீராவி யந்திரங்களும்.—வடக்கு பிரான்ஸ்(France), ஹாலந்து(Holland).

இரவு.—(11 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

கொலோன் (Cologne),(ஜெர்மனி), மிலான் (Milan), நேபிள்ஸ் (Naples) (இதாலி).

### டுனிஸியாவும் (Tunisia), மத்தியதரைக்கடலும் (Mediterranean).

வண்டிகளும், டாங்கிகளின் கூட்டங்களும்.—மாக்னஸி (Meknassy)யும், ஸெனெட் (Sened)டும்.

சத்துரு துருப்புகள்.—பெயிட் (Faid)க்கு வடக்கில்.

விமானச் சண்டைகள்.—யுத்தப்பிரதேசங்களில்.

### ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும், பூமியிலிருக்கும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

சத்துரு தளம்.—நியூ பிரிடனில் ரபால் (Rabaul).

விமான நிலையம்.—ஸாலமன் தீவுகளிலுள்ள பூயின் (Buin).

விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள மடாங்(Madang), லே(Lae), நியூ பிரிடனிலுள்ள உபிலி (Ubili).

விமான நிலயம்.—பர்மாவில் ஹீஹோ (Heho), ஷிவிபோ (Shwebo).

அக்யாப் (Akyab) தீவும், ஆக்கிரமிக்கப்பட்ட பர்மாவின் மற்றபாகங்களும்.

**15—2—43.** (திங்கட்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல் — கப்பல்களும் துறைமுகங்களும்— டன்கர்க் (Dunkirk).
இரவு.—சுரங்கவேடிகள் பாவுவது—சத்துருவின் கடற்கரையோரத்தில்.

### டுனிஸியா (Tunisia),
### மத்தியதரைக்கடல் (Mediterranean).

(3 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).
துறைமுகங்கள்.—பிஸெர்ட்டா (Bizerta).
விமான நிலயம்.—கெர்வானு (Kairwan)க் கருகில்.
விமானச் சண்டைகள்.—யுத்த அரங்கத்தில் (11 சத்துரு விமானங்கள் சுடப்பட்டன).
துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ (Palermo).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), அலூஷியன்களில் (Aleutians), ஆரு (Aru) தீவிலுள்ள டோபோ (Dobo) துறைமுகம்.
சமுத்திரக்கரைகளில் அமைக்கப்பட்ட ஸ்தாபனங்கள்.—டச்சு இந்திய தீவுகளிலுள்ள அம்பாய்னு (Amboina).
பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung).

**16—2—43.** (செவ்வாய்க்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—ஸப்மரின் தளம்—பிரான்ஸிலுள்ள ஸெயின்ட் நாஸேர் (St. Nazaire).
விமானத் தாக்குதல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), பிரான்ஸ் (France) (6 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).
இரவு.—சத்துருவின் ஸப்மரின் தளம்—பிரான்ஸில் லோரியான் (Lorient).
போக்குவரத்துகளும், போக்குவரத்து சாதனங்களும்—பிரான்ஸ்.

### டுனிஸியா (Tunisia),
### மத்தியதரைக்கடல் (Mediterranean).

சத்துருவின் வண்டிகள்.—டுனிஸியாவில் பென்கார்டனு (Bengardan)க்கு மேற்கில்.
சத்துருவின் பீரங்கி வைத்திருக்கும் இடங்களும், வண்டிகளும்.—சத்துருவின் ஸ்தானங்களுக்குப் பின்னால்.
சத்துருவின் எண்ணெய்க் கப்பல்.—ஸிஸிலி வாய்க்கால் வாயில்.
ரயில்வே இலக்குகள்.—தெற்கு இதாலி (Italy)யிலும், ஸிஸிலி (Sicily)யிலும்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும்—ருஷ்ய அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

நியூஜார்ஜியாவில் முண்டா (Munda).
கோலம்பங்காரா (Kolombangara)த்தீவு.
விமான நிலயம்.—நியூகினியிலுள்ள லே (Lae).
கப்பல்கள்.—நியூகினியிலுள்ள ஸலாமூவா (Salamaua) டிமோரி (Timor)லுள்ள டில்லி (Dili).
பர்மாவில் யெக்யாம்பியின் (Yegyanbyin).
விமான நிலயங்கள்.—பர்மாவிலுள்ள ஹிஹோ (Heho)வும் மோனிவா (Monywa).
சத்துருவின் தலைமைக் காரியாலயம்.—பர்மாவில் சோப்சுப் (Nsopzup).

**17—2—43.** (புதன்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகலில்.—(2 நேசதேச விமானங்கள் வரவில்லை.)
டங்கர்க் (Dunkirk) area.
சத்துருவின் போக்குவரத்து சாதனங்கள்.—பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும்.
ரயில்வேகள் கூடும் இடம்.—பிரான்ஸில் டோர்ஸ் (Tours).
ரயில்வே நீராவி யந்திரங்களும், மின்சார சக்தியை உண்டாக்கும் தொழிற்சாலை.—பிரான்ஸில் நார்மண்டி தேசத்தில் ஆபே (Aube.)
இரவில்.—பெல்ஜியம், ஜெர்மனி முதலிய தேசங்களில் அநேக இடங்களில்.
இரவில்.—சத்துருவின் சிறிய கப்பல்கள்.—பிரான்ஸ் கடற்கரைக்கப்பால்.

### டுனிஸியா (Tunisia),
### மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பற்கட்டும் துறைமுகங்கள்.—பிஸெர்ட்டா (Bizerta).
விமான நிலயம்—டுனிஸில் (Tunis).
சத்துரு விமான நிலயங்கள்.—ஸார்டீனியா (Sardinia)வில்.
துறைமுகம்.—கிரீட் தீவில்—ஹெராக்லியான் (Heraklion).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், பூமியிலிருக்கும் விமானங்கள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.



### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனில் காஸ்மாடா (Gasmata).
நியூ கினியில் லே (Lae)யும், ஸாலமூவா (Salamaua)வும்.
நியூ பிரிடனிலுள்ள உபிலி (Ubili)யும், பாபோ (Babo)வும்.
ஜப்பானியத் துருப்புகள்.—மூபோ (Mubo) வுக்கருகில்.
இரட்டைப் பாய்மரக் கப்பல்.—க்ளாஸ்டர் (Gloucester) முனைக்கப்பால்.
போக்குவரத்துக்கு உபயோகப்படும் வண்டிகள்.—பர்மாவில் யாடாங் (Ywataung).
ஜப்பானிய தலைமைக் காரியாலயம்.—மைங்க்வான் (Maingkwan).
சத்துருத் துருப்புகள்.—டாரோ (Taro) வுக்கு வடக்கில்.
பர்மாவில்.— ஐராவதியில் மெசாலிகன் (Mezalican).

**18—2—43.** (வியாழக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—கப்பல் கட்டும் துறைமுகங்கள்—ஹாலந்தில் உள்ள டென்ஹெல்டெர் (Denhelder)—(ஒரு நேசதேச விமானம் திரும்பிவரவில்லை).
இரவில்.—(7 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).
கப்பல் தளம்—ஜர்மனியில் வில்ஹெம்ஷாவன் (Wilhelmshaven).
இருப்புப் பாதைகள், கால்வாய் இலக்குகள்.—பிரான்ஸ், பெல்ஜியம்.
கப்பல்கள்.— சத்துருவின் கடற்கரைக் கருகில்.

### வட ஆபிரிக்கா (North Africa),
### மத்தியதரைக்கடல் (Mediterranean).

மோட்டார் வண்டிகள்.—ஸௌஸி (Sousse)க்கும், ஸ்பாக்ஸ் (Sfax)க்கும் மத்தியில்.
பூமியில் இலக்குகள்—பெரியானு (Feriana) பிரதேசத்தில்.
ரயில்வே இலக்குகள்.—தெற்கு இதாலி (Italy)யில்.
கப்பல்கள்.—ஸிஸிலிக்கப்பால்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முற்றிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

நியூ ஜியார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
கொலொம்பங்காரத் தீவுகளில் டிலா (Dila).
நேசதேச தலைமைக் காரியாலயம்.—தென்மேற்கு பஸிபிக்கில்.
விமான நிலயங்கள்.—நியூ கினியில் லே (Lae).
நியூ பிரிடனில் ரபால் (Rabaul).
ரயில் பாதைகள்.—பர்மாவில் மெசா (Meza)வுக்கு மேற்கில்.
விமான நிலயம்.—பர்மாவில் டோங்கூ (Toungoo).
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.
ரயில்வே சாமான் வண்டிகள்.—வடக்கு பர்மா.

**19—2—43.** (வெள்ளிக்கிழமை).

### ஐரோப்பா (Europe)—(14 நேச தேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

பகலில்.— இதாலியில் நேபிள்ஸு (Naples)ம், கொட்ரோனியும் (Cotrone).
இரவில்.— கப்பல்தளம்— ஜெர்மனியில் வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).

### டுனிஸியா (Tunisia),
### மத்தியதரைக்கடல் (Mediterranean).

சத்துருவின் போக்குவரத்து சாதனங்கள்.—ஸௌஸ் (Sousse)க்கும், ஸ்பாக்ஸ் (Sfax)க்கும் மத்தியில்.
ஸிஸிலியில் சில லக்ஷியங்கள்.
விமான நிலயங்கள்—ஹெராக்லியான் (Heraklion) கிரீடில் காஸ்டெல்லிபெடியாடா (Pediada).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

பூயின் (Buin). ஸாலமன் தீவுகளில்.
விமான நிலயங்கள்.—காஹாலி (Kahali) பாலன்ஸ் (Balance).
நியூ கினியிலுள்ள லே (Lae) பிரதேசம்.
பர்மாவில் மாயூ (Mayu) தீபகற்பத்தில் ஸின்பெயிக் (Sinbaik).
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.
ஆறுகளில் போகும் படகுகள்.—பர்மாவில் கலடான் (Kaladan) ஆற்றின் பிரதேசத்தில்.

**20—2—43.** (சனிக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்க வேடிகள் பாவுவது—சத்துருவின் கடற்கரைப் பிரதேசத்தில்.

### டுனிஸியா (Tunisia),
### மத்தியதரைக்கடல் (Mediterranean).

சத்துருவின் சேனைகள்.—காஸரைன் (Kasserine), கணவாய்க்கு அருகில்.

கப்பல் கட்டும் துறைமுகங்கள்.—பிஸெர்ட்டா (Bizerta).
போக்குவரத்து சாதனங்கள்.—சத்துருவின் சேனைகளுக்குப் பின்னால்.
ரயில்வே இலக்குகள்.—ஸிஸிலி.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரையிலிருக்கும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன் தீவுகளில் பூயினும் (Buin), பேய்ஸி (Faisi)யும்.

விமான நிலயங்கள்.—நியூ கினியில் லே (Lae)யும்.
நியூகினியில் ஸாலமூவா (Salamaua), கொலம்பங்காரா (Kolambangara)வில் டிலா (Dila).
சத்துருவால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள்.—பர்மாவில் மாயு (Mayu) தீபகற்பத்தில்.
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசத்தில்.
ஆறுகளில் போகும் படகுகள்.—சின்டுவின் (Chindwin), கலடான் (Kaladan) ஆறுகளில்.
போக்குவரத்து சாதனங்கள்.—பர்மா (Burma).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**15—2—43.** (திங்கட்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

### வட ஆபிரிக்கா (North Africa).

பேங்காஸி (Benghazi)யிலுள்ள துறைமுகம் (ஒரு சேதமும் இல்லை).

### தூரக்கிழக்கு (Far East).

பிரிடிஷ் துருப்புகள் முன்னேறித் தாக்கும் இடங்கள்.—ராதிடாங் (Rathedaung) பிரதேசத்தில்.

**16—2—43.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

### வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியாவில் நேசதேசத் துருப்புகள் முன்னேறித் தாக்கும் இடங்கள்.

### தூரக்கிழக்கு (Far East).

கூடல்கனருக்கு (Guadalcanar) அப்பால் ஒரு கப்பல்.

**17—2—43.** (புதன்கிழமை).

### பிரிடன் (Britain).

பிரிடனின் தென்கிழக்குக் கரை: விமான நடவடிக்கைகள் சிறிது நேரந்தான் நீடித்திருந்தது.

### வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியாவில் ஔசெல்ஷியா (Ousseltia) பள்ளத்தாக்கு.

### தூரக்கிழக்கு (Far East).

மோபோ (Mubo) பிரதேசத்தில் தரையிலிருக்கும் துருப்புகளுக்கு உதவி அளிக்கும் சண்டை விமானங்கள்.

**18—2—43** (வியாழக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

### வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜீரியா (Algeria) பிரதேசம்.

### தூரக்கிழக்கு (Far East).

மூபோ (Mubo) பிரதேசத்தில் சண்டை செய்யும் இடங்கள், விமானச் சண்டைகள்.

**19—2—43.** (வெள்ளிக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

### வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியாவில் பிச்சன் (Pichon).

### தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியில் மோபோ (Mubo) பிரதேசத்தில விமானச் சண்டைகள்.

**20—2—43.** (சனிக்கிழமை).

### பிரிடன் (Britain).

வடகிழக்கு ஸ்காத்லாந்தின் கடற்கரையிலிருக்கும் ஜில்லாக்கள்.

### வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியாவில் ஸிபீட்லா (Sibeitla).

**21—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானத்தாக்குதல் இல்லை.

### வட ஆபிரிக்கா (North Africa).

காஸரைன் (Kasserine) கணவாயிலும் அதைச்சுற்றியிருக்கிற நேசதேச சைனியங்கள்.

### தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.



# யுத்தக் குறிப்புகள்.

**செம்படை தினம்.** சென்ற ஞாயிறன்று ருஷ்யா இருபத்தி ஐந்தாவது வருஷ விழாவைக் கொண்டாடிய பொழுது ஐக்கிய தேசத்தார்களும் அதில் கலந்து கொண்டு செம்படையின் தீரத்திற்கும் வெற்றிகளுக்கும் புகழுரைகள் கூறின. ஸ்டாலின்கிராட் பட்டணத்தின் தீரத்தைப் பாராட்டுவதற்காக கௌரவக் கத்தி ஒன்றை வழங்கப்போவதாக நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் சொல்லியிருக்கிறார். செம்படை தினக் கொண்டாட்ட தினத்தன்று லண்டன் நகரில் நடைபெற்ற வைபவங்கள் கற்பனையாகவும் சமயோஜிதமாகவுமிருந்தன. ஸ்டாலின்கிராட் கொண்டாட்டக் காட்சியில் மந்திரிகளும், ராஜதந்திரிகளும், தொழிலாளிகளும், ஸ்திரீகளும் குதூஹலமாகக் கலந்து நின்றார்கள். உற்சவங்கள் மத்தியில் வாசிக்கப்படும் கீதங்கள் வாசிக்கப்பட்ட பிறகு ஸ்டாலின்கிராட்டின் ஞாபகார்த்தமாக அங்கு தீரமாகச் சண்டை போட்ட செம்படையைச் சேர்ந்த ஒரு சிப்பாயின் உருவம் கையில் துப்பாக்கியுடன் நிறுத்தப்பட்டது. ஒரு நிமிஷம் நிச்சப்தமாகயிருந்தது. பிறகு துருப்புகள் ஆயுதங்களைத் தூக்கி மரியாதை செய்தன. பிறகு இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு பாட்டு வாசிக்கப்பட்டது. பிறகு செம்படையின் கொடியானது பறக்க விடப்பட்டது. மறுபடியும் ஒரு படக்காட்சி நடைபெற்றது. அதில் ஸ்வீடிஷ்ட்யூடன், பிரெஞ்சு, ஜெர்மன் படைகளை ருஷ்யப்படைகள் முறியடித்த சம்பவங்களைப்பற்றிய சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. கடைசியாக, மாஸ்கோவிலும் ஸ்டாலின்கிராட்டிலும் ஏற்பட்ட வெற்றிகளைக் கொண்டாடுவதற்காக, மறைய ஆரம்பித்து வரும் ஜெர்மன் கொடியின் பேரில் ரத்தச் சிகப்பு உள்ள ஒரு வெளிச்சத்தை அடித்து, செம்படை விழா முடிந்தது.

வி வி வி வி வி வி வி

**செம்படை.** சென்ற ஞாயிறன்று செம்படையின் 25-ம் வருஷ விழாதான் கொண்டாடப்பட்டதென்பதிலிருந்து, செம்படை சமீபகாலத்தில் தான் தயாரிக்கப்பட்டதென்று சொல்லலாம். ருஷ்யாவின் சீர்திருத்த ஏற்பாட்டில் இதை ஒன்றாக லெனின் கருதவில்லை. துருப்புகளையே வைத்துக்கொள்ளக்கூடாதென்று நினைத்த லெனினும் தன்னுடைய ஆட்சிக்கு உள்நாட்டில் உண்டாகக்கூடிய எதிர்ப்பை அடக்குவதற்கு ருஷ்யாவிலிருந்த பழைய சேனையைக் காப்பாற்றி வந்தான். அவனுக்குபின் வந்த ஸ்டாலின், சேனையின் பிரயோஜனத்தை உணர்ந்து, 1923-ம் வருஷத்தில் அதை யுத்த முறையில் சீர்திருத்தியமைத்து ஹிட்லரின் அறிவுக்குப் புலப்படும்பொழுதே ஜெர்மானிய என்ஜினியர்களையும், யந்திரவேலை செய்பவர்களையும் வேலைக்கு அமர்த்தி சேனையை இப்பொழுதுள்ள நிலைமைக்கு அமைத்தான்.

செம்படையின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ருஷ்யாவின் சேனைத்தலைவர்கள் மாரிகாலத்தில் ஏற்பட்ட வெற்றிகளை விட அதிக வெற்றிகளைப் பெறுவதற்கு கோடைகாலத்தில் எவ்விதம் முன்னேறித்தாக்க வேண்டுமென்ற திட்டங்களைத் தயாரித்து வருகிறார்கள். இந்தக் கோடைக்காலத்திற்குப் பிறகு எதிரியின் ஒரு சிப்பாய்கூட ருஷ்யாவில் தங்கும்படி விடக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறான். இதற்காக உள்நாட்டில், அதாவது ஸைபீரியாவிலும், யூரல்ஸ் மலைகளிலும், நவீன யுத்த முஸ்தீப்புகளோடு கூடிய 30 லக்ஷம் துருப்புகள் தயாராகி வருகின்றன. கூடிய சீக்கிரம் அவைகள் முடிவான தாக்குதலை ஆரம்பிக்கும். ருஷ்ய தேசத்தில் பறக்கும் ஜெர்மன் கொடிகளெல்லாம் அகற்றப்பட்டு விடும்.

வி வி வி வி வி வி வி

**செம்படையின் வெற்றிகள்.** வருங்காலத்தில் ஏற்படக்கூடியவைகளை நாம் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. உலகத்தின் புகழுரையைப் பெறுவதற்கு செம்படை போதுமான வெற்றிகளை ஏற்கனவே பெற்று விட்டது. நமது மன்னர்பிரான் சொல்லுவது போல் சரித்திரத்தில்

புதிய கதைகளை செம்படை எழுதிவிட்டது. மாரிகாலத்தில் மூன்று மாதங்களுக்குள்ளாகவே சென்ற கோடையில் இழந்த பிரதேசங்களையெல்லாம் ஜெர்மானியரிடமிருந்து செம்படை திரும்பப் பிடித்து விட்டது. தேசங்களின் லாபத்தை விட ஜனங்களின் மனப்பான்மையையும் அது மாற்றி விட்டது. எகிப்திலும், லிபியாவிலும் நமது 8-ம் படை செய்தது போல் ஜெர்மன் படைகளைத் தோற்கடிக்க முடியாது என்ற கட்டுக்கதையைப் பகிரங்கப்படுத்தியும் அதனுடைய தலைவனின் திட்டங்கள் தவறாது என்ற தப்பெண்ணத்தையும் செம்படை மாற்றி விட்டது. இவை விஞ, உலகத்தின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவர்களில் செம்படை ஊக்கமான முயற்சியும் எடுத்துக் கொண்டு விட்டது. உலக சமாதானத்திற்கும் செம்படை உதவியிருக்கிறது. ஜெர்மானியரின் பான்ஸர் துருப்புகளின் ஆயுதம், மின்னல் வேகம் இவைகளோடுகூடிய தாக்குதல்களை நிவர்த்திக்கப் புதிய யுத்த தந்திரத்தையும் செம்படை ஏற்பாடு செய்துவிட்டது.

வி வி வி வி வி வி வி

**வெற்றிக்குக் காரணங்கள்.** வெற்றிக்குக் காரணங்கள் என்ன. எதிர்பாராத செய்கைகள் ஏற்படுமென்று நினைப்பது தவறு. வெற்றிகளுக்கு ஸ்டாலினுடைய தீர்க்காலோசனையும், தீர்மானமும், விடாமுயற்சியும், வலிமையும் ருஷ்ய ஜனங்களின் தேசாபிமானமும் தான் காரணங்கள். நாஸித் துருப்புகளைப்போல செம்படையினர் யந்திரங்கள் போல நடப்பவர்களல்ல. அதில் புத்திசாலிகளும், ஆழ்ந்த தேசாபிமானிகளும், திடசித்தமுள்ளவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**நாஸி எதிரொலிகள்.** ஹிட்லருக்கும் அவன் பரிவாரங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் கலக்கத்திலிருந்து செம்படையின் வெற்றிகளின் அளவை மதித்துவிடலாம். பெர்லினிலுள்ள ஸ்போர்ட்ஸ் பாலாஸ்டிலிருந்து கோயபல்ஸ் பேசிய பொழுது ஜெர்மன் தேசத்தின் முடிவை ஸ்டாலின்கிராட் தோல்வி எச்சரிக்கிறதென்றும், அதிலிருந்து ஏற்படக்கூடிய கஷ்டங்களை நாம் எதிர்பார்க்க வேண்டுமென்றும், இதன் விளைவுகள் ரொம்பவும் கோரமானவையென்றும் இப்பொழுது ராணுவத்திற்கு சோதனை காலமென்றும் மகத்தான பயமுண்டாகியிருக்கிறதென்றும் அறிவித்தான்.

வி வி வி வி வி வி வி

**ஆக்கிரமிப்பு நாடுகளில் கலவரம்.** பல்கேரியாவில் பெரிய கலவரம் ஏற்பட்டிருக்கிறது. ருமேனியாவில் குழப்பம் போலிருக்கிறது.

ஜெர்மனியிலிருக்கும் யுத்தக் கைதிகளும் அயல்நாட்டு வேலைக்காரர்களும் கலகம் செய்து விடுவார்களோயென்று பயந்து ஜெர்மானியரைச் சேர்ந்த எல்லாக் குடியானவர்களும் ஆயுதபாணிகளாக இருக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லரின் ராஜீய தந்திரங்கள்.** பயத்தினாலும், நேசநாடுகளுக்குள் பிளவு உண்டு பண்ணவேண்டுமென்ற எண்ணத்தினாலும் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கிறான். அவன் பிரசாரம் இருவகைப்படும். ஒன்று ருஷ்யாவின் வெற்றிகள் ஜனநாயகத்திற்கு அபாயம் விளைவிக்கக்கூடியதென்று அமெரிக்காவுக்கும் பிரிடனுக்கும் அறிவிக்கிறது. மற்றொன்று, ருஷ்யாவும், ஜெர்மனியும் ஒருவரை ஒருவர் மாய்த்துக் கொண்டால் மேல் நாட்டின் ஏகாதிபத்தியம் ஓங்கிவிடுமென்று ருஷ்யாவுக்கு அறிவிக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஐரோப்பாவில் கோட்டைகள்.** ஜெர்மனியின் பீதி ருஷ்யாவோடு மட்டும் நின்று விடவில்லை. நேசநாடுகளின் ஐரோப்பிய படையெப்பு பயம் அதிகரித்து வருகிறது. கஸாபிளாங்கா மகாநாட்டிற்குப் பிறகு அது நிச்சயமாகிவிட்டது. சில நாட்களுக்குமுன் ஜெர்மனியிலுள்ள



ரேடியோ வியாக்யானி, நாம் இப்பொழுது ருஷ்யப் போர்முனையைவிட முக்கியமான விஷயங்களைக் கவனிக்கவேண்டும் என்று சொன்னான். இதையே மயூச்னர் ந்யூஸ்டே நாக்ரிச்டன் என்ற ஜெர்மன் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அரவடக்கிலோ, மத்தியதரைக்கடல் பிரதேசத்திலோ, பால்கன் நாடுகளிலோ, நாம் யுத்தத்தை நடத்த வேண்டிய காலம் சமீபித்து வருகிறது என்று வெளியிடப்பட்டிருக்கிறது. நேசநாடுகளின் முன்னேறித் தாக்குதல் எப்பொழுது எந்த இடங்களில் ஏற்படும் என்று ஜெர்மனிக்குத் தெரியாததால் அதன் பீதி அதிகரித்திருக்கிறது. ஐரோப்பா பூராவும் அரண்களால் சூழப்பட்டிருக்கிறதென்று ஹிட்லர் சொல்லுகிறான். அவனுடைய பிரசாரம் செய்பவர்கள் ஐரோப்பாவின் அரண்களைப் பிளக்க முடியாது என்று மார் தட்டுகிறார்கள். இது பழங்கதையாக ஆகிவிட்டது. மூன்று வருஷங்களுக்கு முன் மகத்தான தற்காப்பு அரணென்று நினைத்த மாஜினோ அரண் விழுந்து விட்டதென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். 1942-ம்வருஷ பூராவும் ஜெர்மன் என்ஜினியர்கள் நார்வே கடற்கரையிலும், ஹாலந்திலும் டென்மார்க்கிலும் பிரான்ஸிலும் பிரிடனிலிருந்து தாக்குதல் ஏற்படக்கூடுமென்று நினைத்து சிறிய தற்காப்பு ஸ்தலங்கள் கட்டினார்கள். ஜூலை 15-ம் தேதியன்று பெல்ஜியத்தில் தற்காப்பு பிரதேசத்தை கடற்கரையிலிருந்து (6) மைல்கள் வரையில் விஸ்தாரம் செய்துவிட்டார்கள். ஜூலை 29-ம் தேதியன்று, 1938, 1939-ம் வருஷங்களில் ஸீக்பிரெட் அரணைக்கட்டி முடித்தது போல வடபிரெஞ்சு தேசத்திலும் அரண்களை வேகமாகக் கட்டி முடித்து விட்டோமென்று பெர்லின் ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. ஜூலை 31-ம் தேதியன்று அட்லாண்டிக் கடற்கரையில் ஒரு மகத்தான கோட்டை கட்டி முடிந்து விட்டதென்று ஜெர்மன் பத்திரிகையான டிரான்ஸ் ஓஷியானு பத்திரிகை வெளியிட்டது.

வி வி வி வி வி வி வி

**கோட்டைகளுள்ள ஜெர்மனி.** புதிய அபாயங்கள் ஏற்பட ஏற்பட ஹிட்லரின் நம்பிக்கைகள் பாழாகிவிடுகின்றன. அரண்களுள்ள ஐரோப்பா கடற்கரை போதாது என்று நினைத்து ஹிட்லர் அதற்குப் பின்னால் இரண்டாவது வரிசை அரண்கள் கட்ட ஆரம்பித்து விட்டான். இவைகள் ஜெர்மனியைச் சுற்றியுள்ள அரண்கள் என்று சொல்லுகிறான். இந்த அரண் போலந்திலுள்ள விஸ்டுளா என்னும் நதியின் கரையை யொட்டி 500 மைல்கள் பரவியிருக்கிறது. மாஜினோ அரணையும் திருத்தியமைத்து அதன் பீரங்கிகளை மேற்கு முகமாகத் திருப்பி வைத்திருக்கிறான். மற்றொரு தற்காப்பு அரண் ம்யூஸ், மொஸல் நதிகளை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதாலிக்கும் ஜெர்மனிக்கும் போகும் ப்ரென்னர் கணவாயில் புதிய அரண்கள் கட்டப்படுகின்றன.

ஜெர்மனியின் தற்காப்புகள் இத்துடன் முடிவு பெறவில்லை. வட ஆபிரிக்காவை பிரிடிஷ் அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்ததிலிருந்து நிலைமை மாறி விட்டது. தெற்கு ஐரோப்பாவுக்குக் கிழக்கேயிருந்தும், மேற்கேயிருந்தும் அபாயம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் மத்தியதரைக்கடலின் வடக்குக் கரையில் ஸ்பெயின் எல்லைச்சரகத்திலிருந்து துருக்கி எல்லை வரையிலும் புதிய அரண்கள் அமைக்கப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**பால்கன் நாடுகள்.** ஸ்டாலின்கிராட் வீழ்ச்சிக்கும் கஸாபிளாங்கா மகாநாட்டிற்கும் பின்பு பால்கன் நாடுகளில் ஏற்பட்ட எதிரொலிகளிலிருந்து தென்கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மானியரின் யுத்த நிலைமை மோசமாகிவிட்டது. பெர்னர் டாக்வாக்ட் என்னும் ஸ்விஸ் பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறது. "செஞ்சேனையின் முன்னேற்றம் ஹங்கேரி, ருமேனியா, ஸ்லோவேகியா, பல்கேரியா, தென்கிழக்கு ஐரோப்பா, பூராவுக்கும் அபாயகரமானது. கிரீஸ் தேசமும் யூகோஸ்லாவியாவும் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்ற யுத்தம் செய்தன. பால்கன் நாடுகளின் அரசாங்கத்தார் ஜெர்மனியின் வெற்றி நிச்சயமென்றும், அதிலிருந்து அவர்களுக்குப் பிரதேசங்களின் லாபம் கிட்டிவிடுமென்றும் அதன் மூலம் ஜெர்மனியின் பாதுகாப்பின் கீழ் தங்களுடைய தேசத்தைப் பலப்படுத்திக் கொள்ளலாமென்றும் நினைத்தன."

இவையெல்லாம் கதையாக ஆகிவிட்டன. ஜெர்மனியின் வெற்றியின் நம்பிக்கை மறைந்துவிட்டது. இப்பொழுது அவர்கள் செய்யப்போவதெல்லாம் ஐக்கிய தேசங்களோடு சமயம் வரும்பொழுதுதான் சமாதானம் செய்யப்போவதுதான்.

ஜெர்மனியின் நிலைமையும் கஷ்டமாகிவருகிறது. கொள்ளைக்கூட்டக்காரன் தன்னுடைய ஆட்களுக்குப் பங்கு கொடுக்காததுபோல் ஆகிவிட்டது. போதாததிற்கு ஜெர்மனி துர்பலமாகி வரும்பொழுது பரிவாரங்களிடமிருந்து வேண்டுவது ஜாஸ்தியாகிவிட்டது. அதிக துருப்புகள், அதிக உணவுப் பொருள்கள், அதிக எண்ணெய் எல்லாம் தேவை என்கிறது. இம்மாதிரி தினசரி வரும் வெருட்டல்கள் ஒரு பக்கமிருக்க மற்றொரு பக்கத்தில் உபயோகப்படாத ஒரு முயற்சியில் தங்களுடைய மனித பலத்தையும் பொருள்களையும் வீணாக உபயோகப்படுத்துகிறார்களென்ற எண்ணம் ஏற்பட்ட பொதுமக்களின் கோபத்துக்கு அந்த அரசாங்கம் உட்படவேண்டியிருக்கிறது. இதுதான் பால்கன் நாடுகளின் தற்போதைய நிலைமை. ருஷ்யாவைத் தாக்குவதற்குமுன் இவைகளைப் பிடித்து அந்தப்பக்கத்தைப்பத்திரப்படுத்திவிட்டதாக ஹிட்லர் நினைத்தான். இப்பொழுது நார்வே, கீழ்நாடுகள், மேற்கு அல்லது தெற்கு பிரான்ஸ், இதாலி, இவைகளைவிட இவ்விடத்தில் நேசநாடுகளின் தாக்குதல் ஏற்படுமென்று ஹிட்லர் நினைக்கிறான். நேசநாடுகள் எங்கே தாக்குதல் செய்யப்போகிறார்களென்பது கஸாபிளாங்காவின் ரகசியமான முடிவு. இந்த பயத்துடன் எட்டிரியாடிக் கடற்கரையையும் ஈஜியன் சமுத்திரக்கரையும் தற்காப்பு செய்ய ஹிட்லர் அரண்கள்கட்டி வருகிறான்.

வி வி வி வி வி வி வி

**டூனிஸியாவில் போர்.** மத்திய டூனிஸியாவில் நேசநாடுகளுக்கு இந்த வாரம் ஏற்பட்ட முன்னேற்றத் தடை நிவர்த்தியாகி விட்டதென்று இன்று தகவல் கிடைத்திருக்கிறது. இது ஒரு சிறிய சம்பவம் என்று ஜெர்மானியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அச்சுநாடுகளின் வெற்றிக்குக் காரணங்கள் இவைதான். பிஸர்ட்டாவிலிருந்து மாரெட் அரண்வரையிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தைப் பாதுகாத்துக்கொண்டு டூனிஸியாவின் கோடியில் வான் ஆர்ணிமிடமிருந்த அச்சுப்படைகள் மாரெத் அரணுக்குள் பின்வாங்கிவரும் ரோமலின் படைகளுடன் ஒன்றுசேர முயன்றன. அப்படிச் செய்யாவிடில் ரோமலின் படைகள் கடற்கரையிலே நாசமாகிவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருந்தது. அமெரிக்க 5-வது சேனை வான் ஆர்ணிமும், ரோமலும் சேராதபடி தடுக்க கடற்கரையிலுள்ள ஸ்பாக்ஸை நோக்கி முன்னேறி வந்தது. அமெரிக்கப் படைகள் கடற்கரையிலிருந்து 60 மைல்களுக்கு அப்பாலுள்ள மெகனஸியை அடைந்து மாரத் அரணுக்கு வந்துகொண்டிருக்கும் மாண்ட் காமரியுடன் சேர முன்னேறிவந்தன. அமெரிக்கப்படையின் முயற்சி கொஞ்சம் அகாலத்திலேயேற்பட்டதாயிற்று. வெகுதூரம் முன்னேறிய சிரமத்தினாலும் அதிக மழையினாலும் தன்னுடைய பலத்தை ஒழுங்குப்படுத்தவும் தன்னுடைய ஸ்தானங்களைப் பலப்படுத்தவும் மாண்ட் காமரிக்கு அவகாசம் தேவையாயிருந்தது. ஜெரியாட் ஏறிக்கரையிலுள்ள டாஸியோருக்கும் ஸுஸாவுக்குமிடையில் அமெரிக்கத் துருப்புகள் பரவியிருந்ததாலும் டெபெஸ்ஸாவிலுள்ள தங்கள் தளத்துக்குப் போகும் போக்குவரவுகள் நிர்மானுஷ்யமான பிரதேசத்தின் வழியாகச் செல்லவேண்டியிருந்தாலும் அமெரிக்கப் படைகளின் நிலையும் பலஹீனமாகத்தானிருந்தது. அச்சுநாடுகள் இந்த சமயத்தில் தாக்கினார்கள். தெற்கு கெயிர்வானிலிருந்து டாஸியூர்க்குச் செல்லும் இருப்புப்பாதை பூராவும் கப்ஸா, ஷெபீட்லா, கான்ஸெரினு, பெரியானு என்ற ஊர்களுள்பட அச்சுப்படைகள் வசமாகிவிட்டன. கடற்கரை சமவெளி எதிரி வசமிருக்கிறது. அமெரிக்காவின் 5-ம் படையும், பிரிடிஷ் 8-ம் படையும் சேர்ந்துவிடக்கூடியசௌகரியம் குறைந்து விட்டது. (இன்று காஸரைன் கணவாயிலிருந்து ஜெர்மானியர் துரத்தியடிக்கப்பட்டார்களென்று தகவல் கிடைத்திருக்கிறது—பத்திராதிபவர்).

பிரிடிஷ் 8-ம் படையானது ஜாக்ரதையுடன் முன்னேறி பென்கார்டினு, மெடினைன், பௌம், டாடாகியோனைன் முதலிய இடங்களைப் பிடித்துவிட்டது. மாரத் அரணையும் அடைந்து விட்டது. 8-ம் படை மாரத் அரணை அணுக, அணுக



வான் ஆர்ணிம் தன்னுடைய தாக்குதல்களை ஆரம்பித்து மத்திய டூனிஸியாவிலுள்ள அமெரிக்கப் படைகளைத் தாக்க முயலுகிறான். மாரெத் அரண் எவ்வளவு தூரம் எதிரிக்கு உபயோகப்படும் என்பது புலப்படவில்லை.

வட டூனிஸியாவில் வான் ஆர்ணிமிடத்தில் 1 லக்ஷம் துருப்புகளிருக்கின்றவென்றும், டிரிபோலிடானியாவிலிருந்து வந்த துருப்புகள் உள்பட ரோமலிடம் 60,000 ஜெர்மானியர்களும், 70,000 இதாலியர்களுமிருக்கிறார்களென்றும் சொல்லலாம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானின் ஆதிக்கம்.** 17-ம் தேதியன்று மாடம் சியாங்கைஷேக் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தபொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் அவர் மனைவியும் அவளை வரவேற்றார்கள். மறுநாள் அவள் ஐக்கிய நாடுகளின் மகாசபையில் ஒரு பிரசங்கம் செய்தாள். தான் ஆக்கிரமித்த நாடுகளின் எல்லா ஐச்வரியங்களையும் உபயோகப்படுத்தி ஜப்பான் அதிக வலுவடைந்து வருகிறதென்று அவள் ஐக்கிய நாடுகளுக்கு எச்சரிக்கை செய்தாள். இப்பொழுது அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும் வெளியிட்டாள். சைனாவுக்கு இப்பொழுது மனிதபலம் தேவையில்லை, ஆயுத பலம் தேவையென்று வற்புறுத்தினாள். பதிலளிக்கையில் சாத்தியமானவரையில் துரிதமாக தளவாடங்களை அனுப்புவோமென்றும் கூடிய சீக்கிரத்தில் ஜப்பானைத் தாக்குவதற்கு சைனாவை ஒரு தளமாக அமைத்துவிடுவோமென்றும் ஜனாதிபதி உறுதிகூறுகிறார்.

அது விஷயமாக ஏற்கனவே கஸாபிளாங்கா மகாநாட்டில் ஜப்பானை இறுதியில் முறியடித்து விடுவதற்கு வேண்டிய புதிய ஏற்பாடுகளைத் தீர்மானம் செய்தாகி விட்டது. அடுத்த படியாக ஜெனராலிஸிமோ சியாங்கை ஷேக், ஜெனரல் ஹேன்ரி H. ஆர்னால்ட், பில்ட்மார்ஷல், ஸர் ஜான்டில் ஆகிய மூன்றுபேர்களும் சுங்கிங்கில் கூடிப் பேசினார்கள். இதைப்பற்றி நியூயார்க்கில் வெளிவரும் ஹெரால்ட் ட்ரிப்யூன் பத்திரிகை வியாக்யானம் பின்வருமாறு எழுதியிருக்கிறது.

"சுங்கிங் மகாநாட்டைப்பற்றிய விபரங்கள் சொல்பமாகயிருப்பினும், மகத்தான யுத்த தந்திரத்தின் ஒரு பாகமாக இங்கேயும் உருவான ஒரு நடவடிக்கை செய்ய முடிவு செய்யபப்பட்டதென்பது நிச்சயம். உலகத்திலுள்ள ஜனத்தொகையில் பாதி பாகமுள்ள தூரக்கிழக்கு நாடுகளின் முக்கியத்தையும் சைனாவிலிருந்தும் ஜப்பானைத் தாக்குவது என்ற யோசனையையும் இந்த மகாநாடு ஏற்றுக்கொண்டது என்பது சிறந்த விஷயம். பிரபல வியாக்யானியான கடற்தளபதி ஹாரி E. யார்னெட் சொல்லுகிறார். "டோக்கியோவையும், பெர்லினையும் ஒரே நாளில் நாம் வெடி விமானங்களால் தாக்குவோம். துஷ்டர்களை எதிர்ப்பதில் இந்த யுத்தத்தில் இரண்டாம் போர்முனை மட்டும் ஏற்படப்போவதில்லை. அநேக முதல்தரமானப் போர்முனைகள் ஏற்படப்போகின்றன."

வி வி வி வி வி வி வி

**வெடி குண்டுகளின் பிரமாணம்.** நேசநாடுகளின் விமானங்கள் கிழக்குப் போர்முனையிலும் மேற்குப் போர்முனையிலும் வீசியிருக்கும் வெடி குண்டுகளின் அளவை ஒப்பிட்டுப் பார்ப்போம். மேற்கில் லோரியானிலும், கொலோனிலும், எஸ்ஸென், பிரெமன், ஹாம்பர்க் முதலிய இடங்களில் போடப்பட்ட வெடி குண்டுகள் 1,000 டன்கள் எடைமானமுள்ளவையென்று வைத்துக்கொண்டால ரெங்கூனிலும், ராபாலிலும் போடப்பட்ட குண்டுகள் 50 டன்கள்கள் எடையானமுள்ளவைதான். இதிலிருந்து மேற்குப் போர்முனையில் அதிக கனமுள்ள வெடி குண்டுகளை உபயோகிக்கவேண்டுமென்றும் கிழக்குப் போர்முனையில் கனமான வெடி குண்டுகள் உபயோகிக்கப்படவில்லையென்றும் பொருள்படாது. இது சந்நிவேசத்தைப் பொருத்ததாகும். வெடி குண்டுகள் மூன்று வகைப்படும். (1) நாசமாக்கக்கூடியவை. (2) எரிவெடிகள். (3) துண்டாக்கக்கூடியவைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்திற்கும் உபயோகப்படக்கூடியவை. உதாரணமாக, சமுத்திரத்திலுள்ள ஒரு கப்பலின் பேரில்

1,000 பவுண்டு எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் போடுவது பிரயோஜனமற்றது. ஒரு குறைச்சல் கனமுள்ள வெடி குண்டை உபயோகித்தால் போதும். எண்ணெய்க் கிணறுகள் உள்ள லக்ஷியங்கள் பேரில் நாசமாக்கும் வெடி குண்டுகளும் எரிவெடிகளும் உபயோகப்படுத்தப்படவேண்டும். ஒன்று எண்ணெய்க் கிணறைப் பிளப்பதற்கும் மற்றொன்று நெருப்பு உண்டாக்குவதற்கும் உபயோகப்படும். தொழிற்சாலைகளின் பேரிலும் இவ்விரண்டையும் உபயோகிக்கவேண்டும். மேற்கேயிருக்கும் லக்ஷியங்கள், பலமான தற்காப்புகளுள்ள ஸ்தலங்களாகவும், விஸ்தாரமான தொழிற்சாலைகளும், கப்பல்கட்டும் நிலயங்களும் உள்ளதாக இருப்பதால் இவ்விடங்களில் அதிக பளுவுள்ள வெடிகுண்டுகளை உபயோகிக்க வேண்டும். கிழக்குப் போர்முனையில் லக்ஷியங்கள் சிறியவையாயும் ½ டன் எடைமானமுள்ள வெடி குண்டுகளுக்கு மேல் உபயோகப்படுத்த லாயக்கில்லாதவைகளாகவுமிருக்கின்றன. ஆகையால்தான் கிழக்குப் போர்முனையில் நமது விமானங்கள் குறைந்த எடைகளுள்ள வெடிகுண்டுகளைப் போடுகின்றன. ஆகிலும் இவைகள் உபயோகமுள்ளவைகள். தேவைக்கும் போதுமானவைகள்.

வி வி வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த முறைகள்.** புதுக்கோட்டை நிர்வாகம் நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரானின் துருப்புகளின் அலுவல்களைத் தடுப்பதற்கும் எதிரிக்கு சௌகரியமேற்படக்கூடிய காரியங்களைச் செய்வதற்கும் பிரயத்தனம் செய்பவர்களைப் பரிசீலனை செய்து சிக்ஷிப்பதற்காக ஒரு சட்டத்தைப் பிரசுரித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ-தர்பார் அவர்களின் உத்திரவன்னியில் சணல்பைகளையும் எள்ளுப்புண்ணாக்கையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று மற்றொரு உத்தரவும் பிறப்பித்திருக்கிறார்கள்.

திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு ஜில்லாக்களிலிருந்து புதுக்கோட்டை ஸமஸ்தானத்துக்கு வியாபாரத்திற்காக நெல்லோ, அல்லது அரிசியோ அனுமதிச்சீட்டன்னியில் கொண்டுவரக்கூடாதென்று உணவுப் பொருள்கள் இறக்குமதி கட்டுப்பாடு உத்தரவும் பிறப்பித்திருக்கிறார்கள். அனுமதிச்சீட்டு பெற்றவர் தான்யங்கள் கிடைத்தவுடன், அவைகளின் விலைவாசி, தரம், அளவு முதலியவற்றை ஸர்க்காருக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஸ்ரீ-தர்பார் அவர்கள் உத்தரவுப்படி குறிப்பிட்ட காலங்களிலும் பிரதேசங்களிலும் தான்யங்களை விற்பனை செயயவேண்டும். அரிசி மூட்டை ஒன்றுக்கு அணா 4-க்கு மேல் லாபமும் நெல் மூட்டை ஒன்றுக்கு இரண்டணாவுக்கு மேல் லாபமும் வைத்து அவன் விற்கக் கூடாது.

---

## 20 வருஷ செங்கோலும் ஜெர்மனியும்.

(அப்ஸெர்வர் பேபர்).

### ஐரோப்பிய படிப்பாளர் எழுதியது.

இதாலியர்களுக்கு வெற்றி எனபது அடிமைத்தனத்தைக் கொடுக்கும். அவர்களுடைய கௌரவம் போய்விட்டது. சாம்ராஜ்யமும் அழிந்துவிட்டது. இவர்களுக்கு என்ன லாபம் கிடைக்கப்போகிறது. அடிமைத்தனத்தைவிட வேறு ஒன்றுமில்லை.

இதுதான் இதாலியர்களுக்கு ஏற்பட்ட அனுபவம். இவர்கள்தான், இப்பொழுது ஹிட்லரின் அடிமைத்தனத்தின் கீழ் அகப்பட்டவர்களில் இதாலியை முதலாவது அடிமையாகச் செய்துவிட்ட ஒரு நிர்வாகத்தின் 20-ம் வருஷ விழாவைக் கொண்டாடியிருக்கிறார்கள். முஸோலினி ஹிட்லரைவிட வயது முதிர்ந்தவனாகயிருக்கலாம். அநியாய மார்க்கத்திலுள்ள ஹிம்லருக்கு உபாத்யாயராகயிருக்கலாம். ஆகிலும் முஸோலினியைப்போல பாடம் கற்பித்த ஒரு



உபாத்தியாயரும் இவ்வளவு அவமதிப்படைந்து தான் செலுத்திய அதிகாரத்தை இழந்து அதைப் பிறர்கையில் ஒப்புவிக்கும் பாக்கியம் பெறவில்லை. 20 வருஷங்களுக்குமுன் முஸோலினி இதாலியில் அதிகாரத்திற்கு வந்தான். முஸோலினியே இது விஷயத்தில் வியப்படைந்தான். கவித்வம், ராஜீய அழிவு, கொள்ளையடித்தல் பொய்பேசுதல், தற்புகழ், ஆடம்பரம் இவைகள் போன்ற அபிருசிகளுக்கும் எண்ணங்களுக்கும் ஆஸ்பதமான டி. அன்னூஸியோ என்பவன். பொதுஜன மத்தியில் முஸோலினியைவிட அதிக கீர்த்திபெற்றவன். பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களில்கூட இன்னும அநேக பிரமுகர்களிருந்தார்கள்.

### அகாலத்தில் அதிகாரப் பொறுப்பு.

அவனுடைய பிரயத்தனத்தில் முஸோலினிக்கு அதிக நம்பிக்கையில்லை. அயோஸ்டா பிரபுவின் தலைமையில் தளகர்த்தர்களெல்லாம் ஒரு வலுவான அரசாங்கம் ஏற்பாடு செய்யத் தருணம் கிட்டிவிட்டதென்று முடிவு செய்த பொழுது, முஸோலினி ஜாக்கிரதையாக மிலானிலிருந்து ரோமுக்குப் புறப்பட்டு எல்லைப் பிராந்தியத்தில் நின்றுகொண்டான். தனக்கு வெறறி நிச்சயமென்ற பொழுதுதான் அவன் ரோமுக்கு வர ஆரம்பித்தான்.

1922-ம் ௵ அக்டோபர் ௴ 28-ம் ௳ அவனுக்கு வெற்றி ஏற்படக்கூடிய ஹேஷ்யம் கிடைத்தது. தான் மறுதளித்தால் ராஜ்யத்தைத் துறக்கவேண்டிவருமென்று தெரிந்தும் இதாலியின் மன்னர் "முற்றுகைக்குள்ளான ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது" என்று பொருள்படும் படியான தஸ்தாவேஜியில் கையெழுத்திட மறுத்துவிட்டான். ஆகிலும் மூன்று வருஷங்கள் வரையில் முஸோலினியின் அதிகாரம் நிலைகொள்ளவில்லை. பிறகு தீரமும், மதிப்பும் வாய்ந்த எதிர் கக்ஷியின் தலைவரான மாட்டியோடி என்பவர் கொலையுண்டபொழுது, நாகரீகமுள்ள உலகம் நடுநடுங்கிவிட்டது. பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களின் ஆட்சிக்கு அடியோடு ஹானியேற்பட்டுவிட்டது.

இதிலிருந்து முஸோலினி தப்பிவிட்டான். ஏனென்றால் அவனுடைய விரோதிகள் லாடின் ஜாதியாருக்குள்ள குணப்பிரகாரம், செய்கைகளைப்போல பேசுவதும் அனுகூலம்தான் என்று எண்ணிவிட்டார்கள். முஸோலினி எல்லா காலங்களிலும் யதேச்சாதிகாரிகள் அனுஷ்டித்த முறைகளையே உபயோகித்து தன்னுடைய நிலைமையை ஸ்தாபித்துக் கொண்டான். எதிர்ப்பு சங்கங்களைப் பகிஷ்காரம் செய்வது, தன்னுடைய ரக்ஷககோஷ்டியாரைத் தயையன்னியில் நடக்கும்படி செய்தல், பிரபலமானவர்களை அழித்தல், தன்னுடைய ரக்ஷக கோஷ்டியாரை அடிக்கடி மாற்றுதல் இவைபோன்ற முறைகளை முஸோலினி கையாண்டு மேன்மைக்கு வந்தான்.

### ஜெர்மன் ஆட்சிக்குட்பட்ட மாகாணம்.

முஸோலினியின் ஆட்சிக்கு முடிவு, வந்துவிட்டது. முஸோலினியின் ஆட்சியின் முடிவு, இதாலியை ஜெர்மனியின் ஆளுகைக்குள்ளாக்கி விட்டதுதான். ஜெர்மனியை இதாலியர்கள் ஒருபொழுதும் நேசித்ததில்லை. இதாலியை அடிமையாக்கியதன் மூலம் முஸோலினி உலகிலுள்ள நாகரீகம் படைத்தவர்களின் வெறுப்புக்குப் பாத்திரமாகிவிட்டான். ஜெர்மானியர்களின் ஆர்வத்தை ஹிட்லர் சம்பாதித்திருப்பதுபோல இதாலிய மக்களின் அன்பை முஸோலினி அடையமுடியவில்லை. உள்நாட்டில் நேர்முகமாக எதிர்த்துப் போராடுவது இதாலியில் சாத்யமில்லை. ஆகிலும் சதாகாலமும் தங்களுடைய பரிகாச பாஷைகளால் தஙகளுடைய மனோநிலையை இதாலிய மக்கள் நன்றாய் வெளியிட்டியிருக்கிறார்கள். இப்பொழுது கஷ்டங்கள் அதிகமாகி விட்டதால் பரிகாசப் பேச்சுகளை விட்டு கலவரம்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதாலியப் படைகள் இந்த யுத்தத்தில் முழுமனதுடன் கலந்துகொள்ளவில்லை. நூறு ஆயிரக்கணக்கான இதாலியத் துருபபுகள் சரண் புகுந்ததற்கு, துருப்புக்களின் தீரம் குறைவுபட்டது காரணமல்ல. உத்சாகக் குறைவு ஏற்பட்டதுதான் காரணம். புத்திசாலித்தனமுள்ள ஜனங்கள் எதிராளிகளின் பலத்தைப்பரிகாசம் செய்யவோ, குறைத்துக் கூறவோ செய்யமாட்டார்கள். இதாலியத் துருப்புகளைப் பார்த்து பரிகசிப்பது சரியல்ல. அப்படிப் பரிகாசம் செய்யவேண்டுமானால் அதற்கு முஸோலினிதான் சரியான பேர்வழி. இதாலியிலு

ள்ள ஜனங்கள் யுத்தத்தை வெறுக்கிறார்களென்றும் கூடுமானால் யுத்தத்திலிருந்து வெளியேற சந்தர்ப்பம் வாய்த்தால் அதை உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்கும் தயாராகயிருக்கிறார்களென்றும் நினைக்க ஹேஷ்யங்களிருக்கின்றன. ஆனால் ஹிம்லர் தன்னால் முடிந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறான். இதாலியில் கலகம் நேரிடாதபடி ரொம்பவும் கவனத்துடன் கவனித்து வருகிறான். ஆகிலும் அயல் நாடுகளில் வசித்துவரும் மிலியன்கள் கணக்கான இதாலியர்களை ஹிம்லர் அடக்கியாள முடியாது. மாண்டிவிடியோவில் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் அயல் நாட்டிலுள்ள இதாலியர்கள் இதற்குமுன் அயல்நாட்டுக் காரியதரிசியாக இருந்த ஸ்பார்ஸா பிரபு ஒரு தேசிய சபையை ஏற்படுத்தினாரென்றும், ஸ்பெயினில் பாஸிஸ்டு கக்ஷிக்கு எதிராகச் சண்டைசெய்த படைகளுக்குத் தலைமை வகித்த கர்னல் பாக்கியார்டி, நேச நாட்டினருக்கு உதவியாக ஒரு இதாலியப் படையைத் திரட்டினானென்றும் அவர்கள் பேரில் குற்றம் சாட்டினார்கள். சில மாதங்களுக்கு முன்பு ஸ்பார்ஸா பிரபு சொன்னதாவது: 'நேசநாடுகளின் ராஜ்ய தந்திரிகள்'. இதாலி சம்பந்தமாக சரியானபடி யுத்த தந்திரங்களைக் கையாளவில்லை. அவர்கள் அம்முறைகளை அனுஷ்டித்தால் சில மாதங்களுக்குள்ளாகவே பாஸிஸம் அழிந்துபோய்விடும்.

அமெரிக்க நாடுகளின் அரசாங்கத்தார் இதையொட்டி கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டார்கள். ஸமஸ்தான உதவி காரியதரிசியான மிஸ்ட்டர் டீன் ஆசிஸன் முஸோலினியையும் அவனைச் சேர்ந்த கொள்ளைக் கூட்டத்தார்களையும் துறத்திவிடும்படி இதாலியர்களுக்கு விண்ணப்பம் செய்தான். அயல் நாட்டிலுள்ள சத்ருவைச் சேர்ந்தவர்களின் ஜாபிதாவிலிருந்து அமெரிக்காவிலுள்ள 60,000 இதாலியர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள்.

### குற்றவாளிகளும், பேதைகளும்.

இங்கேயும், எங்கேயும் ஐக்கிய தேசங்களின் ஒன்றுபட்ட யுத்ததந்திரம் அவசியம். முன் போக்கான கொள்கையென்பது விமானங்களிலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசுவதோடும் வெடி குண்டுகளைப் போடுவதோடும் பிறகு ஓய்ந்து விடுவதோடும் நின்றுவிடக்கூடாது. முஸோலினிக்கும் ஏமாற்றமடைந்த ஜனங்களுக்குமிடையே உள்ள வித்யாசங்களைப் பலப்படுத்தவும் வேண்டும். எல்லா அச்சுநாடுகள் பேரிலும் நாம் யுத்தத்தை இடை விடாது நடத்த தீர்மானித்திருக்கிறோமென்றாலும் யுத்தத்தில் குற்றம் செய்தவர்களை ஐக்கிய தேசத்தார்கள் மன்னிக்கப் போவதில்லையென்றும் ஆகிலும் யுத்தத்தில் ஏமாற்றமடைந்தவர்களை சிக்ஷைக்கு உள்படுத்தப் போவதில்லையென்றும் இதாலிய மக்கள் அறியும்படி அவர்களுக்கு வற்புறுத்தவேண்டும். ஏமாற்றமடைந்தவர்கள் அவர்களுக்கு ஜெர்மனியின் வெற்றியிலிருந்து கிடைக்கக் கூடியதைவிட ஸ்வதந்திரத்துக்காகப் பாடுபடும் தேசங்களிடமிருந்து வருங்காலத்தில் அதிக க்ஷேமமடையலாமென்றும் அறிந்துகொள்ளவேண்டும். இம்மாதிரியான தீர்மானத்தைப் பிரகடனம் செய்வதன் மூலமாக 20 வருஷங்களாக முஸோலினியின் ஆக்ஷியை நம்பியதும் இப்பொழுது அதைச் சந்தேகத்துடன் மதிக்கும் ஜனங்களிடையே முஸோலினிக்குள்ள பாக்கி ஆதிக்கத்தையும் பலஹீனப்படுத்தி விடலாம். இதற்கு மாறுபாடாக இதாலிக்கு நேரக்கூடிய துர்தசையின் அம்சங்களையும் விவரித்துச் சொல்லி, அடிக்கடி போதிக்கவேண்டும், சில சமயங்களில் திரும்பத் திரும்பச் சொல்லுவது தொந்தரவாகயிருந்தாலும், பிரசார முறையில் இதுதான் முக்கியமான நடவடிக்கை. "இதாலியர்களே, ஜெர்மானியரோடு சேர்ந்து உங்களுக்குக் கிடைக்கும் வெற்றியானது உங்களுக்கு அடிமைத்தனம் இழைக்கும். உங்களுக்கு அடிமைத்தனத்தைத் தவிர வேறு ஒரு லாபமும் கிட்டாது."

---

## அச்சுநாடுகளின் கஷ்டங்கள்.

(இந்தியன் ந்யூஸ் லெட்டர், பிப்ரவரி 13, 1943).

நம்முடைய குறைவுகளையும் தோஷங்களையும்பற்றி நமக்கு நன்றாய்த் தெரியும். இதே காரணத்தினால்தான் அச்சுநாடுகளும் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாகி



இருக்கிறார்களென்றும் தங்களுடைய கூட்டாளிகளின் சகாயத்தினாலும் கஷ்டங்களை நிவாரணம் செய்ய முடியவில்லையென்றும் நாம் நினைக்கக்கூடவில்லை. பிரசார முறையில் சொல்லப்படாத மூலங்களிலிருந்து அச்சுநாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப் பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். அம்மாதிரியான இரண்டு தகவல்களை இங்கு விவரிப்போம்.

கிடே பார்கஸ் போஸ்டன் என்ற ஸ்வீடிஷ் பத்திரிகையில் "ஜெர்மனி தன்னுடைய பூரா யுத்த முயற்சிகளையும் செய்துவிட்டது. தொழிற்சாலைகளில் 12 மணிக்கு ஒருமுறை மாறிமாறி வேலைசெய்துவரும் ஜனங்களிடமிருந்தும், யுத்த முயற்சியில் 10 மிலியன் ஜனங்கள் ஈடுபட்டிருக்கும்படி செய்ய 6 மிலியன் அயல்நாட்டு ஜனங்களையும் ஏராளமான யுத்தக் கைதிகளையும் உபயோகித்து வரும் பொழுது ஜனங்களிடமிருந்து இன்னும் அதிகமான முயற்சிகளை எதிர்பார்ப்பது இயலாத காரியம்" என்றும் தனக்கு ஸ்வாதீனமான தேசங்களிலிருந்து இனிமேல் அதிக ஒத்தாசை கிடைக்காது என்று தெரிந்துவிட்டதால் ஸ்வீடிஷ் தொழிலாளிகளையும் அமர்த்திக்கொள்ள ஜெர்மனி முயற்சி செய்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஜப்பான் சம்பந்தப்பட்டமட்டில் அதன் கடற்படை பிரச்னைதான் அதற்கு முக்கியமானது. டோகியோ ரேடியோமூலம் கீழ்கண்ட தகவல் கிடைத்திருக்கிறது. இரும்புக் குறைவு ஏற்பட்டுவிட்டதால், ஐரோப்பாவிலிருப்பதைவிட ஜப்பானுக்குத்தான் இதன் சிரமம் ஏற்பட்டிருக்கிறது, மரக் கப்பல்களையும், பாய்மரக்கப்பலையும் நல்ல காற்று வீசும்பொழுது சமுத்திரத்தில் சாமான்கள் அனுப்ப லாயக்கான சிறிய படகுகளையும் கட்ட ஜப்பான் ஏற்பாடு செய்து வருகிறது. இதற்குப்பின் ஜெர்மன் ரேடியோவில் யுத்த தளவாடங்களை அனுப்ப ஜப்பானியர்கள் மூங்கில்களால் அமைக்கப்பட்ட படகுகளைக் கட்டுகிறார்களென்று சொல்லப்பட்டது. டோக்கியோவிலிருந்து தெற்கு நாடுகளில் ஏராளமாகத் தயாரிக்கப்பட்டுவரும் மரக்கப்பல்களின் உற்பத்தியைப்பற்றி ஒரு கதை வெளியிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய போடோப் படங்கள் எல்லா ஜப்பானியப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. தெற்குப் பாகத்தில்தான் ஜப்பானின் முக்கியமான கப்பல் கட்டும் தொழிற்சாலைகளிருக்கின்றன.

### இதாலியின் சங்கடம்.

இதாலியின் சிரமத்தைப்பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறோம். சமீப காலத்தில் இதாலியின் முக்கியமான உற்பத்தி ஸ்தாபனங்களை நமது விமானங்கள் பலமாகத் தாக்குவதிலிருந்து இந்தச் சங்கடம் அதிகரித்துவிட்டது. டூரின் பிரதேசத்தை இரண்டு தடவை பலமாகத் தாக்கியபிறகு பிரிடிஷ் விமானப்படையின் வேவுபார்க்கும் பகுதியார்கள் எடுத்திருக்கும் போட்டோப் படங்களை நன்றாய் பரிசீலனை செய்து லண்டனில் வெளியிட்டிருக்கும் அறிக்கைகளிலிருந்து டூரின் நகரம், இதுவரையிலும் ஒரு நகரத்துக்கும் ஏற்படாதபடி, வெடிவிமானங்களால் தாக்கப்பட்டு அதன் தொழிற்சாலைகளில் முக்கியமானவைகள் நாசமாக்கப்பட்டதென்று வெளியாகுகிறது. முக்கியமான லக்ஷியங்களுள்பட சுமார் 70 தொழிற்சாலைகள் அதிகச் சேதமடைந்திருக்கின்றன. சில தொழிற்சாலைகளின் மேன்கூரையும் ஒர்க்ஷாப்புகளும் நெருப்புப் பிடித்துக்கொண்டன. மற்றவைகள் பூராவாக அழிந்துவிட்டன. பியாட் தொழில்சாலையின் 10 கிளைகள் ஜாஸ்தியாகச் சேதம் அடைந்துவிட்டன. தளவாடங்கள், போக்குவரத்து, யந்திர தொழிற்சாலைகள், இவைகளுக்கு விளைந்த சேதம் ரொம்பவும் அதிகம். விமானத் தாக்குதல்களை நிவர்த்திப்பதற்காக பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் தேசத்திலும், தொழிற்சாலைகளுக்கும், முக்கியமான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஜனங்களுக்கும் ஏற்படும் சேதங்களைச் சரிப்படுத்துவது மிகவும் சிரமமான காரியம். டூரினிலுள்ள முக்கியமான தொழிற்சாலைகளிலிருந்து வரப்போகும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் உற்பத்தி கொஞ்சம்கூட எதிர்பார்க்க முடியாது. ஸோஸா விஸ்கோஸா ஆர்ட்டிபிஷியல் டெக்ஸ்-டைல் தொழிற்சாலையின் இரண்டு பாகங்களும் சிறிது பழுதாக்கப்பட்டன. இவைகளில் ஒன்று டோரினோ லெவாராடி' என்பது. இது இதாலியின் நெசவுத் தொழிற்சாலைகளில் ஒரு

முக்கியமான பாகம். இரண்டாவது பிரதான எஞ்சினியரிங் தொழிற்சாலையாகிய டோரினோ மெக்கானிக்கோ, ஸோயா விஸ் கோஸா என்னும் தொழிற்சாலை இதாலியில் உற்பத்தி செய்யப்படும் சணல்நாரையும் போலி பட்டுக்களையும் விசேஷமாக உண்டுபண்ணுகிறது. இரண்டு யந்திரசாலைகளும் சேதப்பட்டுவிட்டதால் ஜெர்மனிக்குக் கிடைத்துவந்த ஸப்ளைகள் பெரும்பாலும் குறைந்துவிடும். மேலும் டுரினிலுள்ள கார்ஸோகாஸில், பிடார்டோவிலுள்ள ஆப்பிஸைன் பெர்ரோவியாரிஸ் என்னும் தொழிற்சாலை அதிக சேதமுற்றது. பீட்மாண்ட்ஸி, லிகூரியன் இருப்புப்பாதைகளில் உபயோகப்படுத்திவந்த மின்சார எஞ்சின்களைப் பழுதுபார்க்க ஏற்பட்டிருந்த தொழிற்சாலைகள் இரண்டில் இது ஒன்று. மேலே சொல்லிய மின்சார இருப்புப்பாதையை எளிதில் நாசம் செய்துவிடலாம். பிரிக்ஸோல் ஸ்டேஷனில் ஒரு கொட்டகையிலிருந்த 20 ரயில்வே எஞ்சின்கள் நாசமடைந்துவிட்டன. ஜினுவாவில் ரிவரோலோ என்னுமிடத்திலிருந்த தொழிற்சாலையில் ரிபேர் செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் ஏராளமாக சேமிக்கப்பட்டிருக்கின்றன.

---

## ஜெர்மனியின் அதிகாரத்திற்குட்பட்ட சில நாடுகளின் மனோ நிலை.

(டைம்ஸ் பத்திரிகை).

ருஷ்யச் சமவெளிகளிலும், வட ஆபிரிக்காவிலும், துருக்கியிலும், ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி ஜெர்மனிக்குப்படிந்து நடக்கும் தேசங்களின் அரசாங்கங்களை மனங்கலங்கச் செய்திருக்கிறது. ஆனால் அந்த தேசங்களில் ஜெர்மனியால் கஷ்டப்படுத்தப்பட்ட ஜனங்களின் மனதைத் தைரியப்படுத்துகிறது.

இம்மாதிரி நிலைமை டான்யூப் நதிக்கரையிலுள்ளவும், பால்கன் தீபகற்பத்திலுள்ளவுமான தேசத்துரோகிகளை வைத்துக்கொண்டு நடக்கும் அரசாங்கங்களுக்கு கலக்கத்தை அளித்திருக்கிறது. பல வழிகளில் ஒவ்வொரு தேசமும் இந்த நிலைமையை அடைந்திருக்கிறது.

மார்ஷல் அன்டோனெஸ்கு துருக்கிக்கு செல்ல விரும்பினார். ருஷ்யாவுக்கு பல்கேரியத் துருப்புகள் அனுப்பும்படி தூண்டினதாகச் சொல்லப்பட்ட பல்கேரிய போதுக்காரியாலயத்தின் தலைமையிலிருந்த மேஜர் ஜெனரல் லுகாட்ச் கொலை செய்யப்பட்டார். இவைகளைப் பற்றிய வதந்திகள் எவ்வாறாயினும், பல்கேரிய, ஹங்கேரிய அரசாங்கங்கள் தங்களுக்கு உதவி செய்ய நேசதேசங்களை நாடுகிறார் என்றுபுலப்படுகிறது. ருஷ்யாவுக்கு ஒரு சேனை அனுப்பாமல் இருந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.

ஆனால் ஒவ்வொரு ஜெர்மனிக்குக் கீழ்படிந்த தேசமும் தனது ராஜீய விரோதிகளை மிகவும் பாடுபடுத்துவதாகத் தெரியவருகிறது பல்கேரிய அரசாங்கம் யூதர்களையும், ஆக்கிரமிக்கப்பட்ட ஈஜியன் கடற்கரையிலுள்ள கிரேக்கர்களையும் மிகவும் மிருகத் தன்மையுடனும் இழிவாகவும் நடத்திக்கொண்டு வருகிறது.

ஆனால் க்ரோஷியா ஜெர்மனியால் ராஜத் துரோகிகளைக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம். அங்கு சர்வாதிகாரியாக இருக்கிற ஜெர்மன் உள்ளாளாக இருக்கிற பாவெலிட்ச் கூட, அநேக க்ரோட் தேசத்து மக்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற்ற க்ரோட் குடியானவர்களின் கட்சியை சமாதானப் படுத்துவதற்கு முயலுகிறார்.

பல்கேரியாவிலும், ருமேனியாவிலும் ஏற்கனவேயே அவர்களுடன் ஒத்துழைத்துக்கொண்டிருக்கும் அரசாங்கம் திடீரென்று ஒத்துழைக்க மறுத்துவிட்டால், அதற்கு பதிலாக வேறு சில தேசத் துரோகிகளைக்கொண்டு அரசாங்கங்கள் அமைக்க ஜெர்மானியர்கள் திட்டம் போட்டு வைத்திருக்கிறார்கள்.



மாஸிடோனிய—பல்கார் ஜாதியைச் சேர்ந்த ஹைலோவ், ருமேனிய தேசத்து ஹோரியாஸிமா, க்ரோட் தேசத்து யூஜியன் கவாடெர்னிக் முதலிய தேசத்துரோகிகளுக்கு ஒரு முக்கியமான தன்மையில் மாத்திரம் அதிக ஒற்றுமை இருக்கிறது. அதாவது சிறிது சாக்கையும் வைத்துக்கொண்டு ராஜீய காரணங்களால் அநேக மக்களைக் கொலை செய்வதற்கு அஞ்சுவதில்லை. அவர்கள் மறைவாக இருப்பதின் நோக்கம், மற்ற சில தேசத்துரோகிகளில் சிலர் தங்கள் கொள்கையைமாற்ற ஆரம்பிக்க அவர்கள் அப்படி செய்வதின் பலன்களை யோசித்தே செய்யவேண்டும் (அதாவது அப்படி செய்தால், உடனே அவர்கள் கொலை செய்யப்படுவார்கள்).

---

## ஸப்மரீன்களை வேட்டையாடுவதில் 'ரேடியோ—லொகேஷன்' என்ற கருவியின் உபயோகம்.

"முதன் முதலாக 'ரேடியோ—லொகேஷன்' என்ற கருவி எவ்வாறு சமுத்திரங்களில் உபயோகமாயிருக்கின்றன என்பதின் உட்புறமான கதை தெரிய வருகிறது" என்று டெய்லி ஹெரால்டு பத்திரிக்கையின் கடற் படை நிருபர் எழுதுகிறார்.

மிகவும் சக்தி வாய்ந்த தூரதர்சி கண்ணாடிகளின் உதவியால் கண்டுபிடிக்கக் கூடிய தூரத்திற்கும் அதிக தூரத்திலிருக்கும் சத்துருவின் கப்பல்களையும் சமுத்திர மட்டத்தின் மேலிருக்கும் ஸப்மரீன்களையும் கண்டுபிடிக்கக் கூடிய சாதனங்கள் நமது யுத்தக் கப்பல்களில் இருக்கின்றன.

பிப்ரவரி 11-ல் மிஸ்டர் சர்ச்சில் ஸப்மரீன்களைப் பற்றி நமக்கு திருப்திகரமான சமாசாரத்தைத் தெரிவிக்க முடிந்ததற்கு முக்கிய காரணம் 'ரேடியோ—லொகேஷனின் உபயோகம்தான்.

இந்தப் புதிய அபிவிருத்திகள் இதுவரையில் வெளியிடப்படாமல் இருந்தன. நமது யுத்தக் கப்பல்களுக்கும் ஸப்மரீன்களை எதிர்க்கும் விமானங்களுக்கும் ரேடியோ சாதனம் அமைப்பதற்கு அநேக பாகங்களை புருஷர்கள், ஸ்திரீகள் இராப் பகலாய் தொழிற்சாலைகளில் வேலை செய்து உண்டாக்குகிறார்கள். அவர்களாலும் ரசாயன சாலைகளில் வேலை செய்யும் விஞ்ஞான நிபுணர்களாலும் இந்த அபிவிருத்திகள் ஏற்பட்டன. அட்லாண்டிக்கில் ஜல மட்டத்தில் மேல் வந்து அநேக ஸப்மரீன்கள் தங்களுடைய மின்சார சக்தி கொடுக்கும் பாட்டரிகளைச் சரிபபடுத்திக்கொண்டு நடு இரவில் தாங்கள் பத்திரமாக இருக்கிறோம் என்று நினைக்கும் சமயத்தில், திடீரென்று சத்துரு பார்க்குமுன்பு, நம்முடைய யுத்தக் கப்பல்களால் தாக்கப்படுகின்றன.

பெரிய யுத்தக் கப்பல்களிலும் மற்ற ஸப்மரீன்களை எதிர்க்கும் விமானங்களிலுமுள்ள பீரங்கியால் ஸப்மரீன்கள் நாசமாக்கப்படுவதற்கு 'ரேடியோ—லொகேஷன்' தான் மிக சக்தி வாய்ந்த கருவி.

மத்தியதரைக்கடலில் இதாலிய யுத்தக் கப்பல்களின் மீது அவைகள் எதிர்பாராமல் இருக்கும்பொழுது திடீரென்று பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் பாய்வதற்கு அந்தக் கருவி உதவி செய்திருக்கிறது. நமது கப்பல் படை அநேக சத்துரு விமானங்களைச் சுடுவதற்கும் உதவி செய்திருக்கிறது.

பிரிடனிலும், கானடாவிலும், யுனைடெட் ஸ்டேட்ஸிலும் ஸப்மரீன்களைத் தாக்கக் கூடிய யுத்தக் கப்பல்களைக் கட்டும் வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. பிரிடனிலேயே 200 யுத்தக் கப்பல்களுக்கு மேலிருக்கின்றன. அவைகள் இந்த 'ரேடியோ—லொகேஷன்' கருவியை அமைத்துக் கொண்டிருக்கலாம்.

# யூபடகுகளின் தாக்குதல்களின் விளைவு குறைவு.

## வசந்த காலம் நெருக்கடியான கட்டம்.

(லண்டனிலிருந்து கந்தி மூலம்).

விசேஷமான ஒரு வியாசத்தில் A. J. மாக்வின்னி என்பவர் சென்ற வருஷத்திலிருந்ததை விட, கடல் தாண்டி நாம் செய்துவரும் நடவடிக்கைகளையும் விஞ, நேசநாடுகளின் கடற்படை பலம் விருத்தியடைந்திருக்கிறதென்று எழுதியிருக்கிருர். ஐக்கிய நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடம் யாதெனில், அச்சு நாடுகள் அறியக் கூடாது என்ற முறையில் கப்பல் நஷ்ட விபரங்களை நாம் வெளியிடாவிட்டால் நம்முடைய ஜனங்கள் கடல் யுத்தத்தைப்பற்றி வேறுபாடான அபிப்பிராயங்களைக் கொண்டுவிடக் கூடுமென்பது.

விஷயங்களை வெளிப்படுத்த வேண்டுமென்றும், எதிரி பிரசாரத்திலிருந்து ஏற்படும் குணதோஷங்களை மறைக்கக் கூடாதென்றும் நேசநாடுகள் கருதிவிட்டபடியால் பிரிடனும், அமெரிக்காவும் தங்களுக்கு நிலத்திலும் ஆகாயத்திலும் ஏற்பட்ட வெற்றிகளைப் பற்றிச் சொல்லும்பொழுது யூ படகுகளின் தொந்தரவுயிருக்கிறதென்றும் தகவல்கள் வெளியிடுகிருர்கள். அட்லாண்டிக் சமுத்திரத்தின் இருகரைகளிலுள்ள அதிகாரிகள் எச்சரிக்கை செய்திருப்பதிலிருந்து, நேசநாடுகளின் கப்பல்களின் நஷ்டக் கணக்குகள் அதிகரித்திருக்கிறதென்றும் அதனுல் அடிக்கடி எச்சரிப்புகள் அவசியமென்றும் தோன்றுகிறது.

இது உண்மையல்ல. உண்மையாதெனில் யூ படகுகளின் தாக்குதல்களிலிருந்து அவைகளுக்குக் கிடைக்கும் லாபங்கள் சமீபகாலத்தில் குறைந்து விட்டன. நீர்மூழ்கிகளை எதிர்க்கும் முறைகளுக்கு வசந்த காலந்தான் பரிசோதனை காலம். கடற்படையின் சரித்திரப் போக்கை கவனித்தால் சென்ற யுத்தத்திலும், இந்த யுத்தத்திலும் பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் யூ படகுகளின் நடமாட்டம் அதிகரிக்குமென்று தெரியவருகிறது. வரப்போகும் சில மாதங்களில் ஐக்கிய நாடுகளின் கப்பல்கள் கடுமையாகத் தாக்கப்படும். ஆகையால் பிரிடன், அமெரிக்காவிலுள்ள முக்கியஸ்தர்களெல்லாம் ஜனங்களுக்கு யூ படகுகளினுறும் ஏற்படக் கூடிய அபாயத்தை அறிவிப்பது நலமென்றும இவ்வருஷத்தில் மழமழப்பாக சமாசாரங்களை வெளியிடுவது சாவதானமில்லையென்றும் சொல்லுகிருர்கள்.

தற்போதிருக்கும் நிலைமையிலிருந்து பினவண்ட விஷயங்களும் புலப்படுகின்றன என்று மாக்வினனி சொல்லுகிருர். (1) பிரிடனிலும், கனடாவிலும், அமெரிக்காவிலும் அதிவேகமாகப் போகக் கூடிய கப்பல்கள் ஏராளமாகக் கட்டப்படுகின்றன. ஆகிலும் சமுத்திரத்தின் பேரில் மணிக்கு 18 அல்லது மேற்பட்ட நாட்ஸ்கள் வேகம் செல்லக் கூடிய யூ படகுகளிடமிருந்து வேகத்தால் மட்டும் ஒரு கப்பலைக் காப்பற்றிவிட முடியாது. (2) யூ படகு தொந்தரவை ஒழிக்க நாசகாரிகள், கார் வெட்டிகள், நீர்மூழ்கிகளைத் தாக்கும விமானப்படை இவைகளின் துணைக்காவல் தேவையாகயிருக்கும். சமுத்திரத்திலும், ஆகாயத்திலும் சரியான பாதுகாப்புகளுடன் சென்ற கப்பல்கள் பத்திரமாக அக்கரை சேர்ந்தனவென்பதற்கு அத்தாக்ஷியாக, வட ஆபிரிக்காவுக்குச் சென்ற நேசநாடுகளின் பெரிய கடற்படையைச் சொல்லலாம்.

(3) பிரிடனும் அமெரிக்காவும அதிக வேகமாகச் செல்லக் கூடிய வெடி விமானங்களைத் தயார் செய்துவருகிருர்கள். ஆகிலும் நீர்மூழ்கிகளை எதிர்க்கும் வேலையில் மெதுவாகச் செல்லும் விமானங்களும் அதிகபயனை எடுத்துக்கொண்டிருக்கின்றன. யூ படகுகளுக்கும் இடங்களைத் தாண்ட வேகமாகச் செல்லும் விமானங்களை அமைத்துவிடக்கூடும். மெதுவாகச் செல்லும் விமானங்கள் சுலபமாகத் திருத்தியமைக்க லாயக்குள்ளவை. நாசகாரிகள் வரும் வரையில் அவை யூ படகுகளைத் தேக்கிவிடலாம்.

இப்பொழுது உபயோகத்திலிருக்கும் யூபடகுகளின் சங்கியை 500 என்று சொல்லலாம். ஒரு நாளைக்கு ஒன்று வீதம் புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது.



ரிடிஷ் உணவுப் பொருள் மந்திரி சொல்லுகிறபடி பிரிடனின் களஞ்சியங்கள் ப்பொழுது முன்னிருந்ததைவிட அதிகமாகப் பூர்ணமாயிருக்கின்றன. யூ படகுளின் சேஷ்டைகளிலிருந்து பிரிடன உணவுப் பொருள்களுக்காக கஷ்டப்படப்பாவதில்லை. கஸாபிளாங்காவில் ஏற்பட்ட முடிவுகள் பிரகாரம் 1943-ம் ருஷத்தில் ஏற்படப்பொகும் நேசநாடுகளின் மகத்தான முன்னேற்றப் போரை த்திவைக்கும்படி செய்வது தான் எதிரியின் நோக்கம். இந்த எதிர்ப்பு யுத்தம் ப்பல்கள் மூலம் தான் ஏற்படவேண்டும். சரித்திரத்திலேயே மகத்தான எதிர்ப்பு ற்படப்போகும் சமயத்தில் உபயோகப்படுத்தக்கூடிய கப்பல்களின் ங்கியையைக் கூடுமான வரையில் குறைப்பதற்காக யூ படகுகள் விசேஷ முயற்சிகளைச் செய்துவருகின்றன.

பிரிடனிலுள்ள உணவு வசதிகள் ஜாஸ்தியாகயிருந்த போதிலும், ஜனங்கள் ணவுப் பொருள்களைக் குறைத்து உபயோகிக்கத் தயார் செய்துகொண்டிருக்ருர்கள். உலகத்தின் பலபாகங்களிலிருந்தும் பிரிடனுக்கு உணவுப் பொருள் ள் கொண்டுவருவதைவிட யுத்த முயற்சிகளுக்காகக் கப்பல்கள் உபயோகப்பட்டு ருகின்றனவென்று அவர்கள் அறிகிருர்கள். சமுத்திர மார்க்கமாக ஆரம்பமாகி ர்வகித்துவரும் நேசநாடுகளின் முன்னேற்றத்தில் சிரமங்களிருந்த போதிலும் ரு வருஷத்திற்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது நேசநாடுகளின் கடல் டை பலம் நன்ருயிருக்கிறதென்றே சொல்லலாம். யூ படகுகளை விமானங்களால் தாக்கும் ஏற்பாடுகளில் விசேஷ முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் மட்டும் 1942—43-ம் வருஷத்தில் (1) மிலியன் ரயில்வே சாமான் வண்டிகளில் ஏற்றிச் செல்லக் கூடிய சாமான்கள் கொண்டு போக லாயக்கான கப்பல்கள் கட்டி முடிந்துவிடும்.

# பிரிடிஷ் அமெரிக்க ஏகோபித்த ஏற்பாடு.

## அமெரிக்க உதவியின் முக்கிய அம்சங்கள்.

லண்டன் பிப்ரவரி 12.

மிஸ்ட்டர் சர்ச்சில் செய்த பிரசங்கத்தின் புள்ளி விவரங்களும், வாதங்களும் முக்கியமாக ஒரு அம்சத்தை விளக்கிக் காட்டுகின்றன. பிரதம மந்திரியின் யுத்த விமர்சனத்தைப்பற்றி வியாக்யானம் எழுதும்பொழுது டெயிலி ஹெரால்ட் பத்திரிகையில் இது ஆங்கிலோ-அமெரிக்க நட்பையும் ஒத்துழைப்பையும் குறித்துக் காட்டுகிறதென்று கூறப்படுகிறது.

ஜெர்மானியர்களை நிபந்தனையற்ற சரணகதி செய்யும்படி செய்துவிட்டு, ஜப்பானுடன் யுத்தத்தைத் தொடர்ச்சியாக நடத்துவதுதான் பிரிடனுடைய வாக்குறுதியென்று ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்று மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுகிருர்.

இந்த ஒப்பந்தம் அனுவசியமென்று மிஸ்ட்டர் ரூஸ்வெல்ட் நினைக்கிருர். பிரிடன உறுதிமொழி கூறியபோத பேருமென்று அவர் நினைக்கிருர். நாமும் அமெரிக்காவின் வாக்குறுதியை நம்புகிறோம்.

கடுநிலைமைச் சட்டம ஏததானது நமககுத தெரியும. 1941-ம் வருஷ மார்ச்சு மீ குத்தகைக்கடன் சட்டம் அமுலுக்கு வந்தது. அமெரிக்கா அப்பொழுது யுத்தத்தில் புகுறவில்லை. ஆகிலும் பழுதபட்ட பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் அமெரிக்க கப்பல் கட்டும் தொழிற்சாலைகளில் பழுதுபார்க்கப்பட்டன. அவைகளின் மாலுமிகள் அமெரிக்கத் துறைமுகங்களில் வரவேற்கப்பட்டு பாராட்டப் பட்டார்கள்.

நேசநாடுகளின் கப்பல்கள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டன. பிரிடனுக்கு யுத்த தளவாடங்கள் லைபோ செய்ய அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகள் மும்முரமாகவே வேலைசெய்ய ஆரம்பித்தன. அமெரிக்க விமானங்களின் லைன்கள் கொஞ்சம் கொஞ்சமாக அட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்துசெல்ல ஆரம்பித்தன. ஈகிள் பகுதியைச் சேர்ந்த விமானிகள் சண்டை

போட ஆரம்பித்தார்கள். அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லாமலிருந்தது. ஒப்பந்தத்துக்கு மேலான பலமான சம்பந்தங்கள் நம்மிருவருக்குமிருந்தது.

தூரக்கிழக்கிலும், ஆபிரிக்காவிலும், ஏழு சமுத்திரங்களிலும், பிரிடன், அமெரிக்கா இவைகளின் துருப்புகளும், மாலுமிகளும், விமானிகளும் ஒன்றாக நின்று யுத்தம் செய்துவருகிறார்கள். ஒரே சேனாதிபதியின் அமுலையும் ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். இப்பொழுது மிகவும் முக்கியமாக உள்ள டுனிஸியாப் போர்முனையில் ஈசன்ஹவர் தலைமை வகிக்கிறார். இங்கே யுத்தம் ஆரம்பித்த பொழுது ராணுவ முறையிலும், ராஜீய முறையிலும் ஏற்பட்ட கஷ்டங்களையும் பொருட்படுத்தாது தன்னுடைய திறமையை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். தரை, கடல், ஆகாயம் இவ்விலாகா அதிகாரிகளான அலெக்ஸாண்டர், மாண்ட்காமெரி, கன்னிங்காம், டெட்டர் ஆகிய நால்வரும் நமது ஒப்பற்ற எட்டாம் படையும் ஈசன்ஹவரின் உத்தரவை நிறைவேற்றுவார்கள்.

இவ்வளவு மகத்தான அளவில் ஏகோபித்த யுத்தமுயற்சி சரித்திரத்தில் இதுவரையில் நடைபெற்றதில்லை. பிரிடனுக்கும் அமெரிக்காவுக்குமுள்ள வசதிகள் போல மற்றொரு தேசத்திற்கு வசதிகளும் சரித்திரத்தில் இருந்ததில்லை.

## அஸ்ஸாம், பர்மா எல்லையில், 'குரங்குச் சண்டை.

### சண்டைபோடும், வேவுபார்க்கும் ரோந்துப் படைகள்.

சென்ற மே மாதத்தில் பர்மா வழியாகவந்த ஜப்பானியரின் முன்னேற்றம் அஸ்ஸாம், பர்மா எல்லையில் தடைபட்டது. இந்தப் பிரதேசத்தில் முக்கியமான சம்பவங்கள் நேரிடாவிட்டாலும் சில்லரைச் சண்டைகள் நடைபெற்று வருகின்றன. குரங்குச்சண்டை இடைவிடாது நடைபெற்று வருகிறது. இந்த எல்லைச்சரகம் நிர்மானுஷ்யமாயும், மலைப்பிரதேசமாயும், அடர்ந்த காடுகள் உள்ளதாயும் சிற்சில பாதைகளுள்ளதாயுமிருக்கிறது. இதில் வசிப்பவர்கள் மலையிலிருக்கும் ஜாதியார்கள். வேட்டையாடியும் பிராசீன முறையில் விவசாயம் செய்தும் ஜீவனம் செய்கிறவர்கள். இவர்கள் இப்பொழுது வில்லுகளையும், அம்புகளையும் உபயோகிக்கிறார்கள். ஜப்பானியர்கள் பேரில் சண்டை தொடுத்து அம்புகளை அவர்கள் பேரில் வர்ஷிக்கிறார்கள்.

இவர்களைத்தவிர அவ்விடமிருக்கும் பிரிடிஷ் இந்தியத் துருப்புகள் குரங்குச் சண்டை செய்துவருகிறது. ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் தேசங்களில் நுழைந்து, எதிரிகளைத் துறத்தியும, ராணுவ நிலயங்களை நாசம் செய்தும், உபயோகமுள்ள தகவல்களைத் தெரிந்துகொண்டும் அவர்கள் திரும்புகிறார்கள். இந்தக் குரங்குப் படைகள் வரிசை, வரிசையாக மறைபொருளாக அமைக்கப்பட்டு எதிரியின் நாடுகளில் வெகுநாட்கள் வேலை செய்துவருகின்றன. மறைவு ஸ்தலங்களிலிருந்து யுத்தம் செய்யும் படைகளும், வேவுபார்க்கும் படைகளும் வெளியேறுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு ஆபீஸரும், 6-துருப்புகளும் தானாகவே சுடக்கூடிய துப்பாக்கிகளுள்ள புஸ்தீப்புடனும இரண்டு அல்லது மூன்று கோவேறுகழுதைகள் சுமந்து செல்லக்கூடிய ஸப்ளைகளுடனும் செல்லுகிறார்கள். சில சமயங்களில் அதிக நபர்கள்கொண்ட படைகளும் லேசான பீரங்கிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் கழுதைக்கூட்டத்துடனும் புறப்பட்டுப் போகிறார்கள்.

### ஒரு ரோந்துப்படையின் முயற்சி.

ஒரு சிறிய கிராமத்திலிருந்து ஒரு ரோந்து கோஷ்டி சமீபத்தில் புறப்பட்டது. அநேக நாட்கள்வரையில் செல்லமுடியாத, கரடுமுரடான சரளை நிரம்பிய பாதைகளுள்ள அடர்த்தியான குன்றுகளுள்ள பிரதேசங்கள் வழியாகச் செல்லவேண்டியதாயிற்று. மார்க்கத்தில் கொசுக்களின் உபத்திரவமும மற்ற விஷ ஜந்துக்களின் தொந்தரவும் ஏற்பட்டது. பதுங்கியிருந்து எதிரிகள் தாக்குவார்களென்ற பயமும் நிறம்பியிருந்தது. கடைசியாக ஒரு பாறையின் உச்சியை



அடைந்து அங்கே இளைப்பாறுவதென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அவர்களில் மூன்றுபேர்கள் மலேரியா ஜுரத்திலகப்பட்டுக்கொண்டு சமாளித்துக் கொண்டவர்கள். கொஞ்சகாலம் வரையில் அவர்களால் நடந்துசெல்ல முடியவில்லை.

இந்தப்பாறையிலிருந்து 25-மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஒரு கிராமத்தில் ஜப்பானியரின் நடவடிக்கைகளைப்பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ளுவதற்காக ஒரு ஆபீஸரும், இரண்டு துருப்புகளும் புறப்பட்டார்கள். அவர்கள் ஒரு நதியைக் கடக்கவேண்டியிருந்தது. பர்மாவின் இயற்கைப்படி அங்குள்ள சிறிய ஓடைகளெல்லாம் பெரிய நதிகளாகத் திடீரென்று மாறி, சப்தத்தோடு அதிவேகமாகச்செல்லும் நதியாகவுமாகிவிடும். ஆகையால், அதைத்தாண்டுவது எதிர்பாராதவண்ணம் சிரமசாத்யமான காரியமாகிவிட்டது. முதலில் ஒருவன் ஒரு கயிறறைச் சகாயமாகக்கொண்டு வெள்ளப்பெருக்குள்ள நதியில் நீந்தி அக்கரைப்போய்ச் சேர்ந்தான். பிறகு ஆள்களை ஏற்றிச் செல்லக்கூடிய ஒரு கழுதை செல்லுவதற்கு லாயக்கான ஒரு கம்பிப் பாலம் தயாரிக்கப்பட்டது. இவையெல்லாம் முடிந்து அவர்கள் அந்த கிராமத்திற்குச் சாவதானமாகச்சென்ற பொழுது, அந்தக் கிராமத்தை ஜப்பானியர்கள் சில மணிகளுக்குமுன் காலிசெய்து விட்டுப் போய்விட்டதாகவும் கிராமத்திலிருந்த எல்லா உணவுப்பொருள்களையும் கொள்ளையிட்டுக்கொண்டும் அவர்களுடைய கால் நடைகளை அழித்துவிட்டும் வீட்டிலுள்ள பண்டங்களைச் சூரையிட்டுவிட்டும் சென்றுவிட்டார்களென்று அவர்கள் அறிந்தார்கள்.

### நல்ல அதிர்ஷ்டம்.

எதிரிகளின் செய்கைகளின் கோரத்தைப் பார்த்துவிட்டு இந்தக் கோஷ்டியார் மற்றவர்களிருந்த பாறையை அடைந்து, மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு மற்றொரு கிராமத்துக்குப் புறப்பட்டார்கள். இங்கே ரோந்துப்படையிலிருந்தவர்களைவிட அதிகமான ஜப்பானியர்கள், அதாவது 100-பேர்கள் இருந்தார்கள். சிலர் ஜப்பானியர்களைக் கைதுசெய்து கொண்டுவந்து அவர்களை விசாரணை செய்தார்கள். மூன்று வாரங்களுக்குப் பிறகு இந்த ரோந்துப்படை இந்திய எல்லையைக் கடந்து திரும்பிவந்து உபயோகமுள்ள சில தகவல்களைத் தெரிவித்தது.

குரங்குச் சண்டை தந்திரத்தைக்கண்டு ஜப்பானியர்கள் நடுநடுங்குகிறார்கள். மேலும் ரோந்துப்படைகள் கொண்டுவரும் சரியான, ஸவிஸ்தாரமான தகவல்கள் பர்மா மீது விமானப் படையெடுப்பின் வெற்றிகரமான தாக்குதல்களுக்கு உபயோகமுள்ளதாகயிருக்கின்றன. ஐக்கிய தேசத்தாரின் விமானப் படைகள் ரோந்துப் படைகளின் தகவல்கள் மூலம், எதிராளியின், சிலாக்கியமானதும் ரகசியமாயுமுள்ள ராணுவ ஸ்தலங்களையும் தாக்கிவிடுகின்றன.

## பாலைவனத்தில் உபயோகப்படுத்தக்கூடிய ஒரு டாங்கி பாலைவனத்தில் யுத்தம் முடிந்த பிறகு வருகிறது.

### ஜெர்மனியின் "மார்க்-6". டாங்கி இனி பிரயோஜனப்படாது.

(டெய்லி டெலிகிராப் பத்திரிகை).

P. Z. K. W. "மார்க் 6". "டைகர்" ஜெர்மன் டாங்கிகள் புதிதாக டுனிஸியா யுத்த அரங்கத்தில் காணப்படுகின்றன. அவைகளில் இரண்டு நாசமாக்கப்பட்டது. இதனால் அந்த பூதம் எவ்வகையானது, அது எதற்காக அமைக்கப்பட்டது என்பதைப்பற்றி வதந்திகள் கிளம்பியிருக்கின்றன.

வாஸ்தவமாக அது பாலைவனத்தில் திறந்த வெளியில் சண்டை செய்வதற்கு இயற்றப்பட்ட ஒரு டாங்கி. அதைக் குண்டுகளால் தாக்கி உடைப்பதற்கு முடியாதபடி அதனுடைய ஊடுருவமுடியாத முன்பக்கந்தான் வெகு தூரத்திலிருந்து தெரிகிறது. 88 மில்லிமீடர் துப்பாக்கிகளால் அதற்கு வெகுதூரம் குண்டு

வீசும் சக்தி இருக்கிறது. ஆகையால் விரோதி டாங்கிகள் அருகில் அணுக முடியாது.

அதிர்ஷ்ட வசமாக, இப்பொழுது பாலைவன யுத்தம் முடிந்துவிட்டது. ஆகையால் இந்த டாங்கி தாமதப்பட்டு வந்திருக்கிறது. தற்பொழுது யுத்தம் நடக்கும் டுனிஸியாவில் குன்றுகளும், பள்ளங்களும், தோட்டங்களும் இருக்கின்றன. ஆகையால் அங்கு சண்டைசெய்வது மேற்கு ஐரோப்பாவில் சண்டை செய்வதுபோல்தான் இந்த டாங்கியின் தேவை அங்கு அவசியமில்லை.

## இந்த வாரத்திய ருசிகரமான விஷயங்கள்.

இந்த வாரத்திய ருசிகரமான நிகழ்ச்சியில் ஜெனரல் டோஜோவும், ஜப்பானிய சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களைக் கூட்டும் சங்கமும் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றன.

ஜெனரல் டோஜோ சொல்லுகிறார்:—"வருங்காலத்தில் 100-மிலியன்கள் ஜனத்தொகையில்லாத ஒரு தேசமும் நிலைத்திருக்க முடியாது."

சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களைக்கூட்டும் சங்கம் பக்குவம் செய்யப்படாத ரப்பரின் பெருக்கையும் கடற்படையின் குறையையும் நிவர்த்திக்க ஒரு குயுத்தியான ஏற்பாட்டின் மூலம் தன்னுடைய புத்திசாலித்தனத்தை வெளியிட்டிருக்கிறது. "ஏற்பாட்டின்படி தெற்கு நாடுகளிலிருந்து ஜப்பானுக்கு முக்கியமான சாமான்களைக் கொண்டுவருவதற்கு க்ரூட் ரப்பரிலிருந்து படகுகள் கட்ட வேண்டியதென்றும், ஜப்பானுக்குப் படகுகள் வந்தவுடன் படகுகளைச் சின்னாபின்னம் செய்து ரப்பரைத் தாதுப்பொருளாக உபயோகித்துவிடவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

## 19—2—43-ம் தேதியன்று தேசீய யுத்த முன்னணி நிலயம் மெம்பர்களுக்கு தேசீய யுத்த முன்னணி உறுதிமொழிகளும், அடையாளங்களும் வழங்கப்பட்டபொழுது, சீப் ஆர்கனைசர், மிஸ்ட்டர் டி. என். கோவிந்தராஜுலு நாயுடு, B. A., B. L., பேசியது.

அக்கிராசனர் அவர்களே, சகோதரர்களே,

ஸமஸ்தான நிர்வாகி அவர்கள், நிலய ஆபீஸைப் பார்வையிடவும் மெம்பர்களுக்கு தேசீய யுத்த முன்னணி அடையாளங்களும், உறுதிமொழி அட்டைகளும் வழங்கக் களிகூர்ந்து ஒப்புக்கொண்டு வந்திருக்கும் தருவாயில் மேற்சொல்லிய அடையாளத்தினுடையவும், உறுதிமொழியினுடையவும் விசேஷத்தைப்பற்றி சீப் ஆர்கனைசர் என்ற ஹோதாவில் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முக்கியமான மூன்று அம்சங்கள் தேவை. இந்தியாவில் அநேக பிராந்தியங்களில் தேசீய யுத்த முன்னணி இயக்கத்திலீடுபட்ட பெரியோர்களின் அபிப்பிராயப்படி, "தேசீயம்", "யுத்தம்", "முன்னணி" என்ற மூன்று பதங்களையொட்டித்தான் இதன் முக்கியத்வம் அமைந்திருக்கிறது. முதலாவதாக, இந்த இயக்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் உண்மையான தேசாபிமானியாகயிருக்கவேண்டும். இரண்டாவதாக, யுத்தத்தில் நாம் வெற்றி பெறுவது மெத்த அவசியமென்று உணரவேண்டும். "முன்னணி" என்ற பதத்திற்குப் பொருத்தமாக நாம் முற்போக்கான நோக்கத்துடனிருக்கவேண்டும்.

"உண்மையான தேசாபிமானி" என்று சொல்லுவது என்னபிப்பிராயப்படி ஒவ்வொரு மெம்பரும், இந்தியாவின் க்ஷேமத்தையே மனதிலிருத்தியிருக்க வேண்டுமென்பது. இந்த யுத்தத்தில் பிரிடன் வெற்றி பெற்றால்தான் நமக்கு சமாதானமும், செல்வப் பெருக்குமுண்டாகும். அரசர்களும், குடியானவர்



களும், தொழிலாளிகளும், தலைவர்களும் எல்லோருமாக ஒரே மனதுடன் எதிராளிகள்பேரில் யுத்தம் செய்யவும், யுத்தம் வெற்றிகரமாக முடிவடையும் வரையில், வேறு விஷயங்களைப்பற்றி சிந்தனை செய்யாமலிருக்க முயலவேண்டும். ராஜீய விஷயமாக சிலருக்கு மனஸ்தாபங்களிருக்கலாம். இவைகளை யுத்தம் வெற்றிகரமாக முடிந்தபிறகு சிநேகபாவத்துடன் விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாம். இந்தியாவில் தேசீய அரசாங்கம் ஏற்படுத்துவதற்கு தேசீய யுத்த முன்னணி அவசியமாகும். ஸமஸ்தானப் பிரஜைகள், விசேஷமாக நமது புதுக்கோட்டை வாஸிகள், ராஜ விசுவாசிகள். நம்முடைய சம்பிரதாயங்களை அபிமானிக்கிறவர்கள். யுத்த முயற்சிகளில் பிரிடிஷ் இந்தியாவுடன் ஒத்துழைக்க எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

இது "யுத்த" முன்னணி. தேசீய யுத்த முன்னணியிலுள்ள ஒவ்வொருவரும் ஐக்கிய தேசத்தார்கள் எப்பாடுபட்டும், இந்த யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமென்று அந்தரங்கமாக உணரவேண்டும். இந்த நோக்கம் சித்திபெறுவதற்காகத் தன்னாலியன்றவரையில் பாடுபடவேண்டும். அச்சு நாடுகள் இந்த யுத்தத்தில் ஜயமடைந்தால், இந்தியாவின் கதி என்ன ஆகுமென்று நினைக்கும் பொழுது என் உள்ளம் நடுங்குகிறது. இது முக்கியமாக மூன்று அம்சங்களைப் பாதிக்கக்கூடும். அதாவது ராஜீயம், பொருளாதாரம், மத விஷயம். ராஜீய முறையில் அச்சு நாடுகளின் வெற்றி என்பது 70 வருஷகாலமாக இந்தியாவில் ராஜீய விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டதுபோல் ஆகிவிடும். ஜப்பான் வெற்றி பெற்றால், மற்ற தேசங்களின் உரிமைகளை அன்புடனும், மதிப்புடனும் கவனிக்குமென்றும் இந்தியர்களை ராஜ்ய பாரம் வகிக்கும்படியாகவும் அனுமதித்துவிடுமென்றும் யாராவது நம்பக்கூடுமா? பொருளாதார முறையில் ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில், ஜப்பானின் நடவடிக்கைகளைப்பற்றிய விருத்தாந்தங்களை நாம் கேட்டிருக்கிறோம். ஜப்பான் ஒரு சிறிய தேசம். அதன் ஜனத்தொகை மிகுதியானது. இந்தியாவில் குடியேறி இங்குள்ள சில்லரை வியாபாரிகளையும், விவசாயிகளையும் விரட்டிவிடவும் அவர்கள் தயாராகயிருக்கிறார்கள். மதக்கொள்கைகளிலும், இந்தியாவின் பழக்க வழக்கங்களுக்கும், அச்சு நாட்டாரின் முறைகளுக்கும் அநேக வித்தியாசங்களிருக்கின்றன. அச்சு நாடுகள் வெற்றியடைவதின் பயனை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். அம்மாதிரியான பயங்கரமான நிலையை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

"முன்னணி" என்னும் பதம் ராணுவம் சம்பந்தப்பட்டவரையில் போர்முனை என்று பொருள்பட்டாலும் முற்போக்கு என்பதையும் குறிக்கிறது. நமது நாட்டில் புதிய உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. தேசீய உணர்ச்சியானது பொது மக்களின் ஜீவன முறையை அபிவிருத்தி செய்வதற்காக உலகத்தின் பொருளாதாரப் பெருக்கை உண்டுபண்ண வேண்டுமென்ற வேகத்துடன் புத்துயிர் பெற்றிருக்கிறது. இவை எல்லாவற்றையும் அடைய நாம் முயற்சி செய்யவேண்டும். இந்தியாவின் மத்திய ஆர்கனைசர் மிஸ்ட்டர் P. J. கிரிப்பித்ஸ் சொல்லுகிறபடி "வெற்றி பெற்றால் ஸ்வதந்திரம் கிடைத்துவிடும்" என்ற பழமொழியை நாம் கடைப்பிடிக்கவேண்டும்.

தேசீய யுத்த முன்னணி என்பதின் தாத்பரியங்களைச் சொல்லிவிட்டேன். இந்த உறுதிமொழியும், அடையாளமும் மேற்சொல்லிய விஷயங்களைச் சுட்டிக் காட்டக்கூடியவை.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் தேசீய யுத்த முன்னணியின் வேலைகளைப் பற்றிச் சொல்லவிரும்புகிறேன். புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய யுத்த அறிக்கை நிலயமானது 1940-ம் வருஷம் ஜுலைமீ த்தில் ஆரம்பமாயிற்று. 1942-ம் வருஷம் மேமீ த்தில், தேசீய யுத்த முன்னணி நிலயம் என்று புதுப்பெயரிடப்பட்டது. இதற்குப் பிறகு யுத்தப் பிரசாரம் ஆர்கனைசர்கள் நியமனம் மூலமாக அதிகரிக்கப்பட்டது. அவர்களும் ஸமஸ்தானத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, ஆங்காங்கிலுள்ளவர்களை ஸப்-ஆர்கனைசர்களாகவும், ஸப்-லீடர்களாகவும் நியமித்து, தேசீய யுத்த முன்னணி இயக்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறார்கள். இது எனக்கு சந்தோஷமளிக்கிறது. யுத்த முன்னணியின் மற்றொரு

வேலையானது, ஸமஸ்தானத்தில் முக்கியமான வெவ்வேறு இடங்களில் 10 கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியிருப்பது. இவைகள் பிரிடிஷ் இந்தியாவில் சில ஜில்லாக்களில் இருக்கும் வாசகசாலைகளுக்கு ஒப்பிடக்கூடியவை. பிரசங்கங்களும், படக்காக்ஷிகளும் கூடிய பிரசாரமானது இங்கு குழுமியிருக்கும் மெம்பர்களால், சம்பளமன்னியில் உத்ஸாகத்துடன் எப்பொழுதும்போல் மும்முரமாக நடைபெற்றுவருகிறது. இந்த நிலயத்தினால் பிரசுரிக்கப்படும் வாராந்திரப் பத்திரிகைப் பிரபல்யத்தை அடைந்துவருகிறது. எப்பொழுதும்போல் அதன் உயர்வை நிலைநாட்டி வருகிறது.

ஸமஸ்தான நிர்வாகி அவர்களும், உதவி நிர்வாகி அவர்களும், இந்நிலயத்திலும், ஆர்கனைசர்கள் அலுவல்களிலும் அதிகக் கவனம் செலுத்திவருகிறார்கள். தேசீய யுத்த முன்னணியென்று நாமகரணம் செய்யப்பட்ட பிறகு பற்பல இடங்களுக்கு விஜயம் செய்து, பார்வையிட்டு ஆணித்தரமான பிரசங்கங்களையும் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய வந்தனம் உரித்ததாகும்.

மெம்பர்களுக்கு அடையாளங்களையும், உறுதிமொழி அட்டைகளையும் வழங்கவேணுமாயும், அவர்களுக்குச் சிறியதொரு பிரசங்கம் செய்யவேணுமாயும் நான் நிர்வாகி அவர்களை இப்பொழுது கேட்டுக்கொள்ளுகிறேன்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 135. (6-வது பிரிவு)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27-2-43 | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை 6.00 | | 3-3-43 | C.S.M. பள்ளிக்கூடம். | காலை 10.00 |
| 28-2-43 | மலம்பட்டி ... | ,, 7.00 | | ,, | ராணி பெண்பாடசாலை | ,, 10.15 |
| ,, | பேராம்பூர் ... | ,, 7.30 | | ,, | காலேஜ் A இங்கிலீஷ் | ,, 10.15 |
| 1-3-43 | கீழாநிலை புதப்பட்டி | ,, 7.00 | | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, 10.15 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ,, 7.30 | | ,, | புல்வயல் ... | மாலை 7.00 |
| 2-3-43 | மலைக்குடிப்பட்டி ... | ,, 7.00 | | ,, | வயலோகம் ... | ,, 7.30 |
| ,, | [illegible] ... | ,, 7.30 | | | | |

4, 5-3-43 மஹாசிவராத்திரி விடுமுறைநாட்கள்.

### பிரஸங்கம் 136. (1-வது பிரிவு.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6-3-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | | 10-3-43 | ராணி பெண்பாடசாலை | காலை 10.15 |
| 7-3-43 | பூவரசகுடி ... | ,, 7.00 | | ,, | காலேஜ் A ஆங்கிலம் | ,, 10.15 |
| ,, | வேங்கடகுளம் ... | ,, 7.30 | | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, 10.15 |
| 8-3-43 | பெருங்களூர் ... | ,, 7.00 | | ,, | மிரட்டுநிலை ... | மாலை 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை... | ,, 7.30 | | ,, | அரிமளம் ... | ,, 7.30 |
| 9-3-43 | கீரனூர் ... | ,, 7.00 | | 11-3-43 | புக்குடி ... | ,, 7.00 |
| ,, | [illegible] ... | ,, 7.30 | | ,, | சத்தியமங்கலம் ... | ,, 7.30 |
| 10-3-43 | C. S. M. பள்ளிக்கூடம். | காலை 10.00 | | 12-3-43 | உடையாளிப்பட்டி | ,, 7.00 |
| | | | | ,, | கிள்ளுக்கோட்டை ... | ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 27—2—43 | வெட்டன்விடுதி. | 6—3—43 | திருமயம். |
| 28—2—43 | [illegible] | 7—3—43 | மருதன்கோன்விடுதி. |
| 1—3—43 | அரிமளம். | 8—3—43 | முள்ளங்குறிச்சி. |
| 2—3—43 | பேராம்பூர். | 9—3—43 | கோனாபட்டு. |
| 3—3—43 | ராயவரம். | 10—3—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 4—3—43 | குழிபிறை. | 11—3—43 | ஆலங்குடி. |
| 5—3—43 | புதுக்கோட்டை. | 12—3—43 | காரம்பக்குடி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—1-3-43.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் மார்ச்சு மீ 6உ [ந. 136

பிரஸங்கம் CXXXVI.

## அகில இந்தியா செஞ்சிலுவை.

### மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபுவின் சீமாட்டியின் வேண்டுகோள்.

இதுவரையிலில்லாதபடி அதிகமாக நீங்கள் பிரயாசைப்படவேண்டுமென்று இன்று நான் வேண்டுகிறேன். இந்த வாரத்தில் ஏராளமாகப் பொருளுதவி செய்து இதை இனிது முடியும்படி நீங்கள் செய்யவேண்டும்.

ஏராளமான பணத்தை செஞ்சிலுவைச் சங்கம் எவ்வகையில் செலவிடுகிறதென்று நீங்கள் கேட்கலாம். சுருக்கமாகச் சொல்லும் அளவில் இதன் நோக்கங்கள் இருவகைப்படும். ஒன்று நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், காயம்பட்டவர்களுக்கும், சொஸ்தமடைந்து வருகிறவர்களும் உதவி செய்வது. இரண்டு. இந்திய யுத்தக் கைதிகளுக்கு வசதிகளனுப்புவது. 1943-ம் வருஷத்தில் யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்காக ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் அமைப்பதற்காக 84 லக்ஷம் ரூபாய்கள் செலவு திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்திய யுத்தக் கைதிகளுக்குப் பார்ஸல்கள் அனுப்புவதற்காக சுமாராக 70 லக்ஷம் ரூபாய்கள் தேவையாயிருக்கும்.

லண்டனிலுள்ள இந்திய வசதிகள் அனுப்பும் சங்கத்தார் நமக்காக உணவுப் பொருள்களை பார்ஸல் செய்து அனுப்புகிறார்கள். இதற்கு நாம் பணமுதவி செய்கிறோம். ஒவ்வொன்றும் 10 பவுண்டு எடையுள்ள 20,000 பார்ஸல்கள் ஒவ்வொரு வாரமும் அனுப்பப்படுகின்றன. இதை விட செஞ்சிலுவை தபால், தந்தி உதவிப் படைக்கும் காணாமற்போனவர்களைத்தேடும் ஊழியர்களுக்கும் பொருளுதவி அவசியம்.

பொதுஜனங்கள் பொருளுதவி செய்யாவிட்டால் செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சிகளைக் குறைத்துவிடவேண்டிவரும். இந்திய மக்கள் இவ்விதம் நடைபெறவிட மாட்டார்களென்று நம்புகிறேன். இவ்விதம் நடைபெறும்படி நீங்களும் செய்யக்கூடாது. சென்ற மாதத்தில் நான் சுற்றுப்பிரயாணம் செய்தது போல் நீங்களும் கல்கத்தாவிலும், அஸ்ஸாமிலும், பம்பாயிலுமுள்ள, இந்திய, பிரிடிஷ் ராணுவ வைத்தியசாலைகளைப் பார்வையிட்டால், அங்கே நோய்வாய்ப்பட்டிருக்கும் ஜனங்களுக்கு உங்களுடைய அன்பும், ஆதரவும் எவ்வளவு தேவையென்று நீங்கள் அறிந்துகொள்ளலாம். என்னுடையவும், உங்களுடையவும் அன்புக்குரிய அநேகர்கள் யுத்தக் கைதிகளாகயிருக்கிறார்கள். நீங்கள் அனுப்பும் பார்ஸல்களை அவர்கள் எவ்வளவு ஆஸ்தையுடன் பெற்றுக்கொள்ளுவார்களென்று சற்றுயோசித்துப் பாருங்கள். பார்ஸல்களிலுள்ள சாமான்களைவிட அதன் வரவை

அவர்கள் விசேஷமாகப் பாராட்டுகிறார்கள். தங்களுடைய ஜன்ம பூமியிலுள்ள சுற்றத்தார்கள் தங்களை மறந்துவிடவில்லையென்று அவர்கள் நினைக்கிறார்கள். தங்கள் குடும்பத்தைப்பற்றியும் தங்கள் தேசத்தில் அவர்கள் சந்தோஷமாக கழித்த வாழ் நாட்களை பற்றியும் அவர்களுக்கு ஞாபகம் வருகிறது. முள்ளுக்கம்பி களால் அடைக்கப்பட்ட ஸ்தலத்திலுள்ளிருந்துகொண்டு, மனுஷ்யத்தைத் தவிர மற்றெல்லா வெளிப்படையான ஸ்வதந்திரங்களுமிழந்தவர்களுக்கு இந்தப் பார்ஸல்கள் ஆறுதலளிக்கின்றன.

இப்பொழுது உலகம் பூராவும் யுத்தம் பரவி, அச்சு நாட்டினரின் படையெடுப்பின் பயனாக கொடுமையும், பீதியும், கஷ்டமும், உணவுப்பஞ்சமும் நிரம்பியிருக்கும் இந்நாளில், சச்சரவுகளுக்கும், கஷ்டங்களுக்கும் இடையில் சிதைபடாமலும் அழிக்க முடியாதபடியும் செஞ்சிலுவைச் சங்கம் வேலை செய்துவருகிறதென்பது பாராட்டத்தக்கது.

இந்தியாவில் இந்திய செஞ்சிலுவையைச் சேர்ந்த ஜாயிண்டு யுத்த சங்கமும் ஸெயிண்ட் ஜான் ஆம்புலென்ஸ் சங்கமும், யுத்தத்தின் பலபாகங்களிலிருக்கும் இந்தியப்படைகளில் காயம்பட்டவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், வியாதி குணமடைந்து வருகிறவர்களுக்கும் சௌகரியங்களும், ஸப்ளைகளும் அனுப்பியிருக்கின்றன. ஐரோப்பாவிலும் தூரக்கிழக்கிலுமுள்ள இந்திய யுத்தக் கைதிகளுக்கு, உணவுப் பொருள்களும், ஆடைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. 1942-ம் வருஷம் 60 லக்ஷம் ரூபாய்கள் செலவாகியிருக்கின்றது. நான் முன்னமே சொன்ன பிரகாரம் 1943-ம் வருஷத்தில், படை பலத்தின் அதிகரிப்பினாலும் சாமான்களின் விலை வாசி ஜாஸ்தியாகயிருப்பதினாலும் 150 லக்ஷம் ரூபாய் தேவையாகயிருக்குமென்று நினைக்கிறேன்.

இரவு பகலாக, ஆகாரமில்லாமலும் தூக்கமில்லாமலும், நிர்மானுஷ்யமான காடுகளிலும், ஆபத்துக்குள்ளான சமுத்திரங்களிலும், பொட்டலான பாலைவனங்களிலும், புயல் காற்றுகள் மத்தியிலும், படையெடுப்பினின்றும் நமக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைத் தடுப்பதற்காகப் பிரயாசைப்பட்டுவரும் ராணுவப்படை, கடற்படை, விமானப்படையினருக்கு நம்முடைய செய்நன்றியை இன்று தெரிவிக்க வேண்டுமென்று நான் உங்களைவேண்டிக்கொள்ளுகிறேன். நம்முடைய படைகள் வெற்றிகரமாகத் திரும்பவேண்டுமானால் அவர்களுக்கு எவ்வளவு சகிப்புத் தன்மையும், தைரியமும், மனோபலமும் வேண்டுமென்பதையும் யோசித்துப் பாருங்கள். அவர்கள் நமக்காகச் செய்துவரும் அரிய சேவைக்கு நாம் செய்யும் சொல்ப கைங்கரியமும், தியாகமும் ஒப்பிடவே முடியாது.

இப்பொழுது தாராளமாக நன்கொடையளியுங்கள். யுத்தம் முடியும் வரையில் சொற்பம் சொற்பமாக பொருளுதவி செய்யுங்கள். அதன் மூலம் நிதியை விருத்தி செய்து இந்தியச் செஞ்சிலுவை சங்கமும் ஸெயிண்ட் ஜான் உதவிச் சங்கமும் மனித வர்க்கத்துக்காகச் செய்துவரும் அரிய சேவையை இடைவிடாது நடத்தும்படி வசதி ஏற்படுத்துங்கள்.

## வார யுத்தச் செய்திகள்.

### 27—2—43-லிருந்து 5—3—43-வரை.

**ருஷ்யா.**—பனி சீக்கிரமாக உருக ஆரம்பித்ததிலிருந்தும் சென்ற மூன்று மாதங்களில் கிடைத்த பிரதேசங்களைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தினாலும் தெற்குப் போர் முனையில் ருஷ்யாவின் முன்னேற்ற வேகம் தணிந்துவிட்டது. ஜேர்மானியர்களின் எதிர்ப்பு வலுவடைந்து விட்டது. தெற்குப் போர்முனையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) வடக்கு யூக்ரேன் பிரதேசம். இங்கே நீபர் நதிப் பிரதேசத்தை அடைவதற்காக கார்காவுக்கும் குர்ஸ்க்குக்கும் மேற்கே ருஷ்யர்கள் முன்னேறுகிறார்கள். (2) டானெட்ஸ் நதிப்பிரதேசம். இங்கே டானெட்ஸ் நதியின் தொழிற்சாலைகளுள்ள பிரதேசத்தில் நான்கு கோணமாக



உள்ள இருப்புப்பாதைகளுள்ள பிரதேசமாகிய டான்பாஸ்ஸின் வடமேற்கு மூலையிலுள்ள கிராமடான்ஸ்காயாவில் ஜெர்மானியர்கள் அடிக்கடி எதிர்த்தாக்குதல் செய்கிறார்கள். (3) ராஸ்டாவுக்கு மேற்கேயுள்ள பிரதேசம். இங்கே டாகன்ராக்கில் மீயஸ் நதிப் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் எதிர்த்து நிற்க ஆரம்பித்துவிட்டார்கள்.

மத்தியப் போர்முனையில் இல்மென் ஏரிக்குக் கிழக்கேயும் ரிஷெவுக்கு வடமேற்கேயுமுள்ள டெமியான்ஸ்க்கை ஜெனரல் டிமோஷென்கோ தாக்கிக் கைப்பற்றி அதன் மூலம் 900 சதுர மைல்களிலிருந்து ஜெர்மானியர்களை விரட்டி விட்டான். இப்பொழுது ரிஷெவும் விழுந்துவிட்டதென்ற தகவல் கிடைத்திருக்கிறது. இது மிகவும் வலுவானகோட்டை. 1941-ம் வருஷம் கோடைகாலம் முதல் ஜெர்மானியர் வசமிருந்தது. போர்முனையைக் குறுக்குவதற்கும் திட்டப்படிக்கும் ரிஷெவைக் காலி செய்து விட்டோமென்று ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள். ருஷ்யர்கள் சொல்லுகிறபடி அவர்கள் ஊருக்குப் பின்புறம் சென்று அதைச் சுற்றி வளைத்துக்கொண்டார்களென்று தெரியவருகிறது.

செம்படை குர்ஸ்க்குக்கு மேற்கேயுள்ள லிகாவையும் டிமிட்ரி—லுகாவ்ஸ்க்கையும் கைப்பற்றிவிட்டது.

**டூனிஸியா.**—ரோமல் அகலக்கால் வைத்து அவமானம் அடைந்து விட்டான். பிப்ரவரி 27-ம் தேதியன்று கஸ்ஸாரினுவை விட்டும், 28-ம் தேதி பெரியானுவை விட்டும் மார்ச்சு 1-ம் தேதி ஸ்பீட்லாவை விட்டும் துரத்தியடிக்கப்பட்டு பெயிடு கணவாய்க்குத் திரும்பி வந்துவிட்டான்.

பிப்ரவரி 26-ம் தேதி வடபாகத்திலிருந்த அமைதிபோய், ஜாபல்மன்சூர், பௌ அராடா, மாட்ஜப் எல்பாப் ஊர்களுள்ள 50 மைல்கள் பிராந்தியத்தில் எதிரிகளால் புதுத்தாக்குதல்கள் செய்யப்பட்டன. அவைகள் இடைவிடாது நடைபெறுகின்றன. அவைகளை நமது படைகள் விரட்டியடித்து விட்டன. 8-ம் படை புதிய முன்னேறித்தாக்குதல் ஆரம்பித்து மாரத் அரணை அநேக இடங்களில், ஊடுருவி விட்டது. 8-ம் படையின் முன்போக்கு ரோந்துப் படைகள் ஸ்பீட்லாவைப் பிடித்து விட்டு சப்ஸாவுக்கு முன்னேறிவரும் அமெரிக்க வேவு பார்க்கும் படைகளுடன் சேர்ந்துவிட்டன.

**வட பஸிபிக்.**—அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா இரண்டு தடவை வெடி விமானங்களால் தாக்கப்பட்டது.

**தென்மேற்குப் பஸிபிக்.**—இங்கே இந்த வாரத்தில் முக்கியமான சம்பவம் நடைபெற்றது. பிஸமார்க் கடல் யுத்தத்தில் ஒரு ஜப்பானிய துணைக்காவல் படை பூராவும் மூழ்கடிக்கப்பட்டது. ஜப்பானியர்கள் நியூ பிரிடனுக்கும் நியூகினியாவுக்கும் மத்தியிலுள்ள 30 மைல் அகலமுள்ள "தற்கொலை வெளி" என்று சொல்லக்கூடிய ஜலசந்தி வழியாக நியூ கினியாவுக்கு உதவிகள் கொண்டுபோனார்கள். துணைக்காவல் படையில் 10 யுத்தக் கப்பல்களும், 12 சாமான் கப்பல்களுமிருந்தன. நேசதேச வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் தாக்கி எல்லாவற்றையும் மூழ்கடித்து விட்டன.

ஜப்பானிய தளங்கள் இவ்வாரமும் ஜப்பானுக்கு 55 விமானங்களும் 15,000 ஆட்களும் சேதமாக்கப்பட்டன. முக்கியமான லக்ஷியங்கள்:—எஸ்பிரிடு ஸாண்டோ தீவுகள், சாயிஸியூ தீவுகள், ரீகாடா விரிகுடா, வில்லா மண்டா, மூபோ, கொலம்பாங்கா தீவுகள், ஹார்ட்லாந்து பிரதேசம்.

**சீனு.**—லீக்கௌ திபகற்பத்தில் ஸாங்கி என்னும் நகரத்தை சீனத் துருப்புகள் பிடித்துவிட்டன. ஹூபே, குவாங்டங், யொங்லி மாகாணங்களிலிருந்து ஜப்பானியர் பின் வாங்குகிறார்கள். மேற்கு யூனானிலிருக்கும் சீனத் துருப்புகள் லிஷுயிலிருந்தும் செங்காங்கிலிருந்தும் ஜப்பானியர்கள் முன்னேறுவதைத் தடுத்து வருகிறார்கள். லிஷுயி என்பது பர்மா ரஸ்தாவுக்கு வடக்கே ஸால்வின் நதியின் மேற்குக் கரையிலிருக்கிறது. செங்காங் என்பது பர்மா ரஸ்தாவுக்குத் தெற்கேயுள்ளது.

செகியாங் மாகாணத்திலுள்ள விமான தளமாகிய கின்வாவின் வெளி பாகங்களை சீனப் படைகள் தாக்கின.

**பர்மா.**—பிப்ரவரி 21, 22, தேதிகளில் பிரிடிஷ் சண்டை போடும் ரோந்துப் படைகள், அக்யாப்புக்கு தென் கிழக்கில் 60 மைல்களுக்கப்பாலுள்ள மெயிபான் என்ற ஜப்பானியர் வசமிருந்த கிராமத்தை வெற்றிகரமாகத் தாக்கினார்கள். இந்தப் படைகள் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்களின் மூலம் இறங்கி 5 மணிகள் நேரம் அந்த ஊரில் இருந்தார்கள். எதிரியின் கட்டடங்களெல்லாம் தீக்கிரையாயின. நதியில் செல்லக்கூடிய 100 அடி நீளமுள்ள நீராவிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. சாமான்கள் இறக்கக்கூடிய கட்டடம் தூளாக்கப்பட்டது. காரியத்தை முடித்துக்கொண்டு அருப்புகள் பத்திரமாகத் திரும்பின. இவர்களைப் பின்பற்றி அநேக இந்தியர்களும் வந்துவிட்டார்கள். ஜப்பானியர்களின் அக்கிரமத்தைச் சகிக்காமல் அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்.

**விமானத் தாக்குதல்.**—கீழ்கண்ட இடங்களில் நடைபெற்றது.

பிப்ரவரி 21.—ரெங்கூன்.

பிப்ரவரி 23.—மியாங்பீ, பாங்க்ட்யா. அரகான் கடற்கரையிலுள்ள ராம்ரீத் தீவு, அக்யாப், பொன்னு க்யூன், புரோம், மிட்கியானு, கோக்டீக் கால்வாய்.

பிப்ரவரி 24.—பின்கா.

பிப்ரவரி 24.—ராதிடாங்குக்கு அருகிலுள்ள தவஷி என்ற கிராமம். காலடான் நதியிலுள்ள போக்கு வரவு சாதனங்கள்.

பிப்ரவரி 25.—ஹாகாவின பள்ளத்தாக்கு, மியிட்ஜிங் பாலம், மியோ ஹாங், மியித்தா பள்ளத்தாக்கு.

பிப்ரவரி 27.—ரெங்கூன், வெயிங்க்மா.

**இந்தியா.**—பிப்ரவரி 25-ம் தேதியன்று அநேக ஜப்பானிய வெடி விமானங்கள் அஸ்ஸாமிலுள்ள அமெரிக்க விமான தளத்தைத் தாக்கின. சில குண்டுகள் விமான தளத்தில் விழுந்தன. சேதம் ஒன்றுமில்லை. எதிரியின் 46 விமானங்களில் 9 மட்டும் திரும்பிப்போயிற்று. பாக்கி நஷ்டமாகிவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

ப்ரெ.—துறைமுகம்—ஜெர்மனியிலுள்ள ப்ரெமன் (Bremen).

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விரோதி டாங்கிகள், வண்டிகள்.—ஸ்பீபா (Siila)விற்குத் தெற்கில்.

ரயில் வண்டிகள் நிற்குமிடம்.—காப்ஸா (Gafsa).

துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily)க்குத் தெற்கில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—பூயின் பிரதேசத்திலுள்ள காகிலா (Kahila)வும், பல்லாலி (Ballale)யும்.

ஜப்பானிய யுத்த ஸாதனங்கள்.—மூபோ (Mubo) பிரதேசம்.

கப்பல்கள்.—அம்பாய்னு (Amboina).

ரஸ்தா சந்திப்பு.—பர்மாவிலுள்ள டவுங்கூப் (Toungup).

பர்மாவிலுள்ள புரோம், ஸின்பேக் (Sinbaik).

டப்ரின்கோட்டை (Fort Dufferin).

மியின்சான் (Myingyan).



**22—2—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—சுரங்கவெடி பாவுதல்-விரோதி நாட்டிக்கருகாமையிலுள்ள சமுத்திரங்கள்.

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—டுனிஸியா (Tunisia)விற்கு சமீபத்தில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—காகிலி (Kahili), பல்லாலி (Ballale), மலஹாங் (Malahang).

கிராமங்கள்.—மூபோ (Mubo), லே (Lae) பிரதேசங்கள்.

விமான நிலயம், துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata).

விரோதி இலக்குகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab), பாக்டவாகில் (Pauktawagyl).

மிங்கலடான் விமான நிலயம்.—ரங்கூன் (Rangon).

கிஸ்கா (Kiska), முண்டா (Munda), வில்லா (Vila).

**23—2—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

தகவல் இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

பின் வாங்கும் விரோதிச் சைனியங்கள்.—மத்திய டுனிஸியா (Tunisia).

மோட்டார் வண்டிகள்.—யுத்தப் பிராந்தியங்களில்.

ரஸ்தாக்கள்.—யுத்த அரங்கத்தில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள், கடற்கரை முஸ்தீப்புகள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

விமான நிலயம்.—க்ளாஸ்டர் (Gloucester) முனை.

விரோதி ஆக்கிரமித்திருக்கும் இடங்கள்.—லே (Lae), மூபோ (Mubo) பிரதேசங்கள்.

டிமாரிலுள்ள கோபாங் (Koepang), விலா (Vila), முண்டா (Munda).

ஜப்பானியக் கிராமங்கள்.—பர்மாவிலுள்ள ம்யாயுங்பே (Myaungbwe), பாக்ட்வா (Pauktawa).

ஒரு சிறிய கப்பல்.—ராம்ரீ தீவுக்குச் சமீபத்தில்; பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

போன்னுக்யூன் (Ponnagyun) புரோம் (Prome).

**24—2—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—கடற்படை தளம்.—வில்ஹெல்ம்ஷாவன் ((Wilhelmshaven) வடமேற்கு ஜெர்மனி.

கடற்படை தளங்கள்.—நேபிள்ஸ் (Naples), கொட்ரோணி (Cotrone).

**வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விரோதி மோட்டார் வண்டிகள், சைனியங்கள், போக்குவரத்து சாதனங்கள்.—டுனிஸியா (Tunisia).

விமான நிலயம்.—டுனிஸ (Tunis), ஸ்பீட்லா (Sbeitla), காப்ஸா (Gafsa), காபெஸ் (Gabes), மாரத் அரண் (Mareth Line).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—லே (Lae) ஸாலமுவா (Salamaua), ரபால் (Rabaul).

ரயில்வே ஜங்ஷன்.—தாழி (Thazi), ராதிடாங்குக்குச் சமீபத்தில்.

ஒரு கிராமம், படகுகள்.—கலாடான் (Kaladan) நதி. (9 நேசதேச விமானங்கள் சேதம்).

**25—2—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவில்.—ஜெர்மனியிலுள்ள நூரம்பர்க் (Nuremberg).

வடமேற்கு ஜெர்மனி, சுரங்கவெடி பாவுதல்.—விரோதி ஜலப்பிராந்தியங்கள்.

**வட ஆபிரிக்கா (North Africa). மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விரோதி போக்குவரத்துகள், மோட்டார் வண்டிகள்.—டுனிஸியா (Tunisia).

கப்பற்துறைகள்.—பிஸர்ட்டா (Bizerta).

ரயில் பாதைகள்.—காபெஸ் (Gabes).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலிருந்தும் விமானங்கள்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

விலா (Vila), காஹிலி (Kahili), பெய்ஸி (Faisi), இரண்டும் ஷார்ட்லண்ட்ஸ் (Shortlands) தீவிலுள்ளவை.

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabual).

தாழி (Thazi). ரயில்வே ஸ்டேஷன், பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung), அக்யாப் (Akyab). பர்மாவிலுள்ள மிட்னி (Myitgne) பாலம்.

இருப்புப் பாதைகள்.—மிட்டா (Myittha) பள்ளத்தாக்கு.

**26—2—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பற்துறைகள், வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), டங்கர்க் (Dunkirk).

விரோதிக் கப்பல்கள்.—பிரெஞ்சுக் கடற்கரைக்கப்பால்.

இரவில்.—ஸ்பானைர் தளம்—கொலோன் (Cologne).

வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில் வண்டிகள்.—டோஸியர் (Tozeur), காபெஸ் (Gabes), மாரத் அரண் (Mareth line).

விமான நிலயங்கள்.—விரோதிச் சைனியத் தளத்துப் பின்னால்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலிருந்தும் விமானங்கள்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம், துறைமுகம்.—வீவாக் (Wewak), பவல்முனை (Powell Point), நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

பர்மாவில் மாலு (Malu)விலிருந்து ராம்ரீ (Ramree)தீவு வரையில் பல இடங்கள்.

பல கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

**27—2—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பற்துறைகள், கப்பல்கள்—டங்கர்க் (Dunkirk).

விமான நிலயம்.—மாபர்டா (Mauperta).

கப்பற்துறை.—ப்ரெஸ்ட் (Brest).

விமான நிலயம்.—பெல்ஜியம் (Belgium).

இரவில்.—வடமேற்கு ஜெர்மனி.

சுரங்கவெடி பாவுதல்.—விரோதி ஜல பிராந்தியங்கள்.

வட ஆபிரிக்கா (North Africa).

மத்தியதரைக்கடல். (Mediterranean).

மோட்டார் வண்டிகள்.—யுத்தப் பிரதேசம் மாரத் அரண் (Mareth line).

கப்பற் துறைகள்.—பிஸர்டா (Bizerta).

ரயில் வண்டிகள், இருப்புப் பாதைகள்.—தெற்கு ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

(20—2—43உ முதல் 27—2—43உ முடிய ஒரு வாரத்தில் ருஷ்யர்களுக்கு 87 விமானங்களும், ஜெர்மானியர்களுக்கு 168 விமானங்களும் சேதம்).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lae), ஸலாமுவா (Salamaua).

கப்பற்துறை கப்பல்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), பர்மாவிலுள்ள மயோஹுங் (Myoheung), ராதிடாங் (Rathedaung).

ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் விமான நிலயங்கள்.—மத்திய பர்மா (Burma).

[illegible] விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—2—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் தாக்குதலே இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

[illegible] தலா (Thala).

ருஷ்யா (Russia).

[illegible] முன்னணிப்படை.—டொனெட்ஸ் (Donetz) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள புனு (Buna).

மில்னி (Milne) விரிகுடா பிரதேசம்.

**23—2—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

முன்னணிப்படைகள்.—வட டுனிஸியாவில் பிரிடிஷ் 1-வது சைனியம்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**24—2—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

விமான நடவடிக்கையே இல்லை.



வட ஆபிரிக்கா (North Africa).

நேசதேச தளம்.—ஆல்ஜியர்ஸ் (Algiers).

தூரக்கிழக்கு (Far East).

பூனு (Buna) பிரதேசம்.

**25—2—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத் தாக்குதலே இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

ட்ரிபோலி (Tripoli).

ருஷ்யா (Russia).

கிராஸ்னோ ஆர்மேஸ்க் (Krasnoarmaysk).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு விமான நிலயம்.—இந்தியாவில் அஸ்ஸாம் (Assam).

**26—2—43.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

தகவல் இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

முன்னணிப் பிரதேசங்கள்.—டுனிஸியாவிலுள்ள பிரிடிஷ் 8-வது சேனை.

ருஷ்யா (Russia).

கிரமடாஸ்காயா (Kramataskaya).

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன் தீவிலுள்ள குடல்கனால் (Guadalcanar)லுள்ள ஒரு விமான நிலயம்.

**27—2—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

தென் கிழக்குக் கடற்கரை.—பிரிடன் (Britain).

வட ஆபிரிக்கா (North Africa).

ட்ரிபோலி (Tripoli).

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசத் துருப்புகள்.—ராதிடாங் (Rathedaung) பிரதேசம்.

**28—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

முன்னணித் துருப்புகள்.—வட டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—டொனெட்ஸ் (Donetz) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

தகவல் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**செஞ்சிலுவைக்காக வேண்டுகோள்.** இந்தப் பதிப்பின் ஒரு பகுதியில் அகில இந்தியா செஞ்சிலுவை வார ஆரம்ப விழாவன்று, அதாவது, சென்ற ஞாயிற்றுக்கிழமை, வின்லித்கோ சீமாட்டி செய்த ஒலிபரப்பைப் பிரசுரித்திருக்கிறோம். அந்த சீமாட்டி சொன்ன பிரகாரம் பொது ஜனங்கள் இப்பொழுது பொருளுதவி செய்யாவிட்டால் செஞ்சிலுவை சங்கத்தார்கள் ஜனசமூகத்திற்காகச் செய்யும் அரிய வேலைகள் குறைவுபட்டுவிடக்கூடும். இந்த சமயத்தில் எல்லோரும் நன்கொடையளிக்கவேண்டும் என்ற விண்ணப்பத்தில் நாங்களும் கலந்து கொள்ளுகிறோம். 'இந்தியாவிலுள்ள ஜனங்கள் நிராதரவு செய்யமாட்டார்கள். அப்படி செய்யவும்கூடாது' என்று அந்த சீமாட்டி சொல்லியிருக்கிறாள். 1942-ம் வருஷத்தில் இந்த அரிய சேவைக்காக 60 லக்ஷம் ரூபாய்கள் செலவிடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது யுத்த தளவாடங்களின் அதிகரிப்பினாலும், சாமான்களின் விலைவாசி ஜாஸ்தியாகிவிட்டபடியாலும் 1943-ம் வருஷத்தில் 150 லக்ஷம் ரூபாய்கள் தேவையாயிருக்கும். யுத்த ஆரம்பத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கம் தன்னுடைய நிதியிலிருந்து செலவு செய்து வந்தது. இதேமாதிரி செலவிட்டால் மூலதனம் அழிந்துவிடும். சுகாதார, வெல்பேர் இயக்கங்கள் நின்று போய்விடும். இந்திய செஞ்சிலுவை சங்கத்தாருக்குள்ள ஐச்வர்யங்களை எல்லாம் திரட்டினாலும் 1943-ம் வருஷத்தில் தேவையான பாதிச்செலவுக்கு ஒப்பனைடக்க முடியாதென்று தோன்றுகிறது.

ஐக்கிய தேசத்தார்களின் செஞ்சிலுவை சங்கத்தாரோடு கலந்து கொள்ளாமல் இந்திய செஞ்சிலுவை சங்கம் தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்து வருகிறது. இந்தியாவிலும், இராக்கிலும், இரானிலுமுள்ள பிரிடிஷ், இந்தியப் படைகளில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், சொஸ்தமடைந்து வருபவர்களுக்கும் சேவை செய்து வருகிறது. ஆபிரிக்காவிலும், டைனிலும், மத்தியக் கிழக்கிலும், சிலோனிலும், இந்தியப்படைகளுக்கு மட்டும் செஞ்

சிஜுவை உபயோகப்படுகிறது. சிகித்சை செய்யும் வசதிகளை ராணுவ இலாகாக்களே ஏற்பாடு செய்துவிடுகின்றன. காயமடைந்த சிப்பாயின் காயங்களை ஆற்றுவதென்றால் காயத்தைச் சரிப்படுத்தினால் மட்டும் போதாது. அவனுக்குத் தேவையான வசதிகளும் அளிக்கப்படவேண்டும். இந்த வேலையில்தான் செஞ்சிலுவை சங்கம் ஈடுபட்டிருக்கிறது. இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்துவரும் வசதிகளாவன. அசக்தர்களமாந்துகொள்ள நாற்காலிகள், புஸ்தகங்கள், சங்கீதம், கடுதாஸி சீட்டுகள், ஆகார வசதிகள், விளையாட்டுகள். செஞ்சிலுவைச் சங்கங்கள் அயல் நாட்டிலுள்ள யுத்தக் கைதிகளின் சிரமங்களையும் நிவர்த்தி செய்ய பிரயத்தனம் செய்து வருகிறது. தேசங்களுக்குள் ஏற்பட்ட சட்டப் பிரகாரம் யுத்தக் கைதிகளுக்கு கைது செய்தவர்கள்தான் ஆகார வசதியும் ஸ்தல வசதியும் செய்யவேண்டுமென்றிருந்த போதிலும் கைதிகளுக்கு சில வசதிகளை இங்கிருந்து அனுப்பி அவர்களைச் சந்தோஷமாக ஜீவிக்கும்படி செஞ்சிலுவை செய்து வருகிறார்கள். அவைகளில் உணவுப் பொருள்கள், ஆடைகள் அலங்காரத்திரவியங்கள் சிலவை. அவர்களுக்கு அனுப்பும் சாமான்களின் மதிப்பைவிட அவைகளை அடையும் லாபம்தான் கைதிகளுக்கு சந்தோஷமளிக்கின்றது. தங்கள் தேசம், குடும்பம் இவைகளை ஞாபகப்படுத்துகிறது. அத்துடன் காடுகளிலும், வயல்களிலும், வெள்ளப்பெருக்கிலும், ஆகாயத்திலும் நமது படைகள் செய்துவரும் அரிய வேலைகளுக்கு இந்திய மக்களின் நன்றி பாராட்டையும் இந்த பார்ஸல்கள் விளக்கிக் காட்டுகின்றன.

வின்லித்கோ சீமாட்டி தெரிவித்த பிரகாரம் செஞ்சிலுவை சங்கம் மகத்தான யுத்தத்திலும் கஷ்ட நிஷ்டூரங்களிலும், அழிவுபடாமலும் அழிக்க முடியாத படிக்கும் நிலைநின்று சேவை புரியும்.

இந்த நிதிக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்வதென்பது தேசாபிமானம், மனித வர்க்கத்தின் பேரில் தயை, சேவை ஆகியவைகளை வெளிப்படுத்தும்.

வி வி வி வி வி வி வி

**யுத்த வரவு செலவு திட்டம்.** யுத்தம் ஆரம்பித்தது முதல், முதல் தடவையாக இந்திய மத்திய அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் செலவு அதிகமாகிவிட்டது. இந்த வருஷம் 94·66 கோடி ரூபாய்கள் அதிகச் செலவாயிருக்கின்றது. அடுத்த வருஷம் 1943–44ல் 60·29 கோடி ரூபாய்கள் கைப்பொறுப்பு வருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதை ஈடுசெய்ய புகையிலைக்கும், தாவர நெய்க்கும் லாப வரி விதிப்பதென்றும் பாக்கி மூன்றில் இரண்டு பாகத்தை கடன் வாங்கியும் சரிக்கட்டிவிடுகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதிகச் செலவுக்குக் காரணங்கள் வெளிப்படையானவை. ராணுவ முறையில் மட்டுமில்லாமல் பொருளாதார முறையிலும் யுத்தம் இந்தியாவை அணுகிவிட்டது. பொருளாதார நிலைமையும் உலகத்தின் பொருளாதார நிலைமையை ஒத்து இருக்கிறது. யுத்தம் ஆரம்பித்து இரண்டு வருஷங்கள் வரையில் இந்தியாவின் பொருளாதார நிலைமை சௌகரியமாகவே இருந்துவந்தது. சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள வியாபார ஸ்தலங்கள் நமக்கு இல்லாமல் போய்விட்டாலும் அநேகப் புதிய இடங்கள் ஏற்பட்டுவிட்டன. இந்தியாவின் அயல்நாட்டுக் கடன் கொடுபட்டுவிடப்பட்டது. உத்தியோக வசதிகள் அபிவிருத்தியடைந்தன. வருமானம் அதிகரித்தது. விவசாய மகசூல் ஜாஸ்தியாகிற்று. குடியானவர்களின் ஐச்வர்யமும் அதிகமாயிற்று.

ஆகிலும் சென்ற 12 மாதங்களில் இந்தியாவின் பொருளாதார நிலைமைக்கு ஊறுவிளையேற்பட்டுவிட்டது. பர்மாவையும் மலேயா நாட்டையும் நாமிழந்ததிலிருந்து நமக்கு உணவுப்பொருள்கள் வசதி குறைந்து விட்டது. போக்குவரவு சாதனங்களுக்கு நெருக்கடியும் நமது உற்பத்திகளுக்குச் சங்கடமும் ஏற்பட்டிருக்கிறது. சிலோனிலுள்ள ஜனங்களைப் போஷிக்கவேண்டிய பொறுப்பும் நமக்கு ஏற்பட்டு விட்டது. இதே சமயத்தில் உள்நாட்டுக் கலகங்களும், போக்குவரவுக் கஷ்டங்களும், லாபம் சம்பாதிக்க ஆசைப்படுகிறவர்களின் பேராசையும்



முட்டாள்தனமும் சேர்ந்து தேவைக்குமேல் சாமான்களைச் சேமித்து வைப்பதும் நமது கஷ்டங்களை அதிகப்படுத்திவிட்டன.

இந்தப் பொருளாதாரக் கஷ்டம் இந்தியாவுக்குமட்டும்தான் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்வது மிகையாகும். மற்ற நாடுகளும் இம்மாதிரிதான் கஷ்டப்படுகின்றன. யுத்தம் ஆரம்பித்து இரண்டு வருஷங்கள் வரையில் நமக்கு இந்தச் சிரமம் ஏற்படவில்லையென்பதை நினைத்து சந்தோஷம் கொண்டு இப்பொழுது உலகத்திற்கே யேற்பட்டிருக்கும் சிரமங்களை நாமும் பகிர்ந்து கொள்ளவேண்டும். பிப்ரவரி மாதம் 27-ம் தேதி இந்திய மத்திய ஸர்க்காரின் பட்ஜெட் சொற்பொழிவில் திரவ்யாதிகாரியாகிய ஸர் ஜெரிமி ரெயிஸ்மான் சொன்னதாவது. ‘நாமும் ஸர்வ உலகத்தாரோடும் கலந்து கொள்ளவேண்டும். சண்டையில் ஈடுபட்டிருக்கும் மற்ற நாடுகளுடன் நம்முடைய பொருளாதார நிலையை ஒப்பிட்டுப்பார்த்தால், நமக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நாம் தவிர்த்துவிடலாம். ஆனால் இது விஷயத்தில் அலக்ஷிய புத்திகூடாது. நம்முடைய பிரச்னைகள் ரொம்பவும் மோசமாகயில்லையென்றும், அநேக பாகங்களில் யுத்தத்தில் கலந்துகொண்டிருக்கும் இதர தேசத்தார்களைவிட அதிக சுலபமானதென்றும் நாம் கருதவேண்டும். ஆகிலும் அவர் ஒரு எச்சரிக்கை செய்தார். மேலே சொல்லியதிலிருந்து நம்முடைய பிரச்னைகளைத் தள்ளிவிடுவதோ, அல்லது காலாகாலத்தில் ஜாக்ரதையாக நடந்து கொள்ளாததால் நிலைமையை அதிக மோசமாக மாறும்படி செய்வதோ சாவதானமில்லை.’

இந்த விஷயங்களில் வீண் பேச்சுப் பேசுவதையும் மிகையாக உரைப்பதையும் நான் கண்டிக்கிறேன். இவர்கள்தான் பீதியை விலைக்கு வாங்குகிறவர்கள். இந்தக் கலவரங்கள் அபலாபம் சம்பாதிக்கிறவர்களுக்கும் அதிக வியாபாரம் செய்கிறவர்களுக்கும் பயனளிக்கும். இந்நாளில் ஒவ்வொருவருடைய செலவுகளைச் சிக்கனம் செய்வதும் அத்யாவசியம். அநாவசிய செலவு செய்வது விலைவாசிகளின் உயர்வை உண்டுபண்ணும். அத்துடன் யுத்த காரியங்களுக்காக தேவையான சாமான்களைச் சேமித்து வைப்பதற்கு இடைஞ்சல்களை உண்டாக்கும்.

தனிப்பட்டவர்கள் அதிகமாகச் சேமித்துவைப்பதைவிட யுத்த முயற்சிகளுக்கு உபயோகப்படக்கூடியதும் யுத்த காலத்தில் அபாயங்களுக்கு உட்படாமல் தடுப்பதற்கும் சாதகமானதுமான கவர்ன்மெண்டு கடன் பத்திரங்களை பொது ஜனங்கள் வாங்கலாம். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா நாடுகளிலும் இம்முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதில் அநேக சௌகரியங்கள் இருக்கின்றன. யுத்தத்தை நன்றாய் நடத்திவருவதற்கு அரசாங்கத்தாருக்கு ஏராளமான பொருள் அகப்படக்கூடும். சேமித்து வைக்கவேண்டுமென்ற எண்ணம் அகன்றுவிடும். யுத்தத்துக்குப் பிறகு நம்முடைய பொருள் நமக்குத் திரும்பி வந்துவிடும். இந்த நெருக்கடியில் அரசாங்கத்தார் செய்யக்கூடியது, கடன் வாங்க வேண்டியதுதான். பொதுஜனங்கள் சிக்கனம் செய்து பணத்தை மீதம் பிடித்து கவர்ன்மெண்ட் கடன் பத்திரங்களை வாங்கும் முறைகளை அனுஷ்டிக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**வியாபாரிகளல்லாத சேமிப்பாளர்கள்.** பிப்ரவரி 22-ம் தேதி மத்திய சட்டசபையில் பேசும்பொழுது உணவுப்பொருள் இலாகா அடிஷனல் காரியதரிசி மேஜர் ஜெனரல் உட் சொன்னதாவது. பொது ஜனங்கள் லாபம் சம்பாதிக்கிறவர்களைவிடக் கெட்டவர்கள். ஏனெனில் அவன் பீதியடைந்து சாமான்களைச் சேகரிக்க ஆரம்பிக்கும் பொழுது சில்லறை வியாபாரிகள் விலை வாசிகளை இஷ்டப்படி மாற்ற ஆரம்பித்து விடுகிறார்கள். சாமான் வாங்குகிறவனுடைய பீதியையும் அவஸ்தைகளையும் கண்டு யோக்கியப்பொறுப்பில்லாத வியாபாரிகள் தங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்ததென்று நினைத்து விடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட பொது ஜனங்கள் அநேக மாதங்களுக்கு வேண்டிய சாமான்களைச் சேமித்து வைத்திருப்பதும்தான் இப்பொழுது நமது தேசத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்குக் காரணமாகும். இந்த அம்சத்தை கவனிக்கிறவர்களுமில்லை. இதைப்பற்றிப் பேசுகிறவர்களும்

இல்லை. ஜனசமூகத்தின் க்ஷேமத்திற்கு மாருன இந்தக் காரியத்தைச் செய்கிறவர்கள் செல்வப் பெருக்கினுல் தாங்கள் வாங்கும் சாமான்களுக்கு அதிகவிலை கொடுத்து வாங்கக்கூடும். ஏராளமாகச் சேமித்து வைப்பதற்குச் செயலில்லாதவர்களின் கதி என்ன. அன்ருடம் தங்கள் சொல்ப ஊதியத்தைக்கொண்டு தங்கள் வாழ்நாளைக் கழித்து வரும் ஜனங்களின் கதி என்ன. ஏழை மக்களின் கதி என்ன. சாமான்கள் வாங்கிச் சாப்பிடுகிறவன்தான் கலவரத்தை உண்டு பண்ணுகிறவனென்றும் அவனேதான் இந்த பீதியை நிவர்த்திக்கக்கூடியவனென்றும் அவனுக்குப் புகட்டவேண்டும். ஏழை மக்களின் கஷ்டங்களுக்கு இவன்தான் ஜவாப்தாரியென்றும் சுட்டிக்காட்டவேண்டும். வாஸ்தவம்தான். மேற்சொல்லிய தெளிவான அபிப்பிராயத்திலிருந்து பொதுஜனங்களின் மனப்பான்மை மாறி அவர்கள் ஒழுங்கான முறையில் நடப்பார்களென்று நினைக்கிறேன்.

வி வி வி வி வி வி வி

**ஐரோப்பாவில் வெறி பிடித்தவன்.** நாஜிக்கக்ஷி ஏற்படுத்தப்பட்ட தினக்கொண்டாட்ட தினமாகிய பிப்ரவரி 24-ம் தேதியன்று ஒலிபரப்பப்பட்ட ஹிட்லரின் பிரகடனத்தில் புதிய விஷயம் ஒன்றுமில்லை. ஆயினும் ஹிட்லரின் மனோநிலையை அது வெளிக்காட்டுகிறது என்பதினுல் அதைப் பற்றிச்சொல்ல வேண்டியிருக்கிறது. மூன்று வாரங்களுக்குள் மூன்ருவது தடவையாக பொது ஜனங்களின் மத்தியில் ஹிட்லர் தலை காட்டவில்லை. ஒலி பரப்பும் கருவி முன்னின்றும் பேசவரவில்லை. கிழக்குப் போர்முனையில் யுத்த அவசியத்தினுல் தங்கிவிட்டானென்று சொல்லும் சமாதானம் பொருத்தமில்லை. ஹிட்லர் ரொம்பவும் வெட்கப்படுகிருனென்றும் ஜெர்மனியின் பொதுஜனங்களின் ஆக்ரோஷத்தை எதிர்க்க நடுங்குகிருனென்றும் சொல்லலாம். ஸ்டாலின் க்ராட், ராஸ்டாவ், கார்காவ், ரிஷெவ் முதலிய இடங்களின் வீழ்ச்சிகளிலிருந்து ஹிட்லரிடமிருந்த நம்பிக்கை ஜனங்களுக்குப் போய்விட்டது. இவ்விடங்களில் நடைபெற்ற அழிவுகளுக்கு ஹிட்லர் யாதொரு முகாந்தரமும் இனிமேல் சொல்லமுடியாது. ஹிட்லரின் வாழ் நாட்கள் இது வரையில் கவலை மிகுந்திருந்தது. இனி மேலும் பாழாகத்தான் ஆகிவிடும். ஜெர்மனியில் ஜனங்கள் கபடமாக எதிர்க்க ஆரம்பித்துவிடுவார்களென்று ஹிட்லர் பயப்படுகிருன். ஆக்கிரமிப்பு நாடுகளிலும் ஹிட்லரின் அதிகாரத்திற்குட்பட்ட நாடுகளிலுமுள்ள மனித பலத்தைச் செலவழிக்கவேண்டுமென்று மிருக பயமுறுத்துகிருன்.

யூதர்களையும் பணக்காரர்களையும் வாயில்வந்தபடியெல்லாம் தூஷணை செய்கிருன். அவன் செய்கைகளை நோக்கும்கால், இவன் கிலி பிடித்தவனென்றும், புத்தி மாறுபாடு அடைந்தவனென்றும், இவன் சொல்லுகிறபடியே மத விஷயமான வெறிபிடித்தவனென்றும் தோன்றுகிறது. ஜெர்மானியர்களுக்கு ஹிட்லர் அனுப்பிய பிரகடனத்தில் "இந்த மத வெறியை நீங்கள் என்னிடம் கற்றுக் கொண்டீர்கள். இன்றைக்கும் என்னிடம் இந்த மத வெறி குடிகொண்டிருக்கிறது. நான் உயிருடனிருக்கும் வரையில் இது என்னைவிட்டு அகலாதென்றும் நீங்கள் நம்புங்கள்" என்று சொல்லியிருக்கிருன்.

ஹிட்லரின் நிலைமை மோசமாகயிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**போல்ஷிவிக் பூச்சாண்டி.** ஹிட்லரின் மனதில் போல்ஷிவிஸத்தின் ஓங்குதலினின்றும் அதிக பயமேற்பட்டுவிட்டது. சதாகாலமும் இதே தியானம்தான். போல்ஷிவிக் பிசாசு ஹிட்லருக்கு பீதியும், அதிருப்தியையும் ஏற்படுத்திவிடும். மற்றவர்கள் அதைக்கண்டு மோசம்போகமாட்டார்கள். போல்ஷிவிஸத்தை எதிர்த்து சிலுவை யுத்தம் நடத்துகிறேனென்று ஹிட்லர் சொல்லுவது பாசாங்குத்தனம். உலகம் அறியும் படியாக ருஷ்யர்கள் பழுத்த தேசாபிமானிகளென்றும், மேனுட்டு ஜனநாயகத்தை நம்புகிறவர்களில் முதன்மையானவர்களென்றும் காண்பித்துவிட்டார்கள். ருஷ்யாவுக்கு நமது மன்னர்பிரான் கௌரவக் கத்தி வழங்கப்போகிருர். ஸ்டாலின் இதைப் பெற்றுக்கொள்ளுவார். போல்ஷிவிக் ருஷ்யாவும் போல்ஷிவிஸமில்லாத நாடுகளும் ஒன்றுபட்டு ஜனசமூகத்தின் ஸ்வதந்திரத்திற்கு எதிரியான



ஜெர்மனியை முறியடிப்பதற்காக ஒத்துழைத்துவரும் உலக ஐக்யபத்தியத்தின் அறிகுறிதான் வெற்றி கத்திப் பரிசு.

பிப்ரவரி 21-ம் தேதியன்று போல்ஷிவிக் பூச்சாண்டி பிரசாரத்தைப்பற்றிப் பின்வருமாறு மிஸ்டர் ஆந்தோனி ஈடன் பேசியிருக்கிருர்.

ஐரோப்பாவை பயமுறுத்துவதற்காக இந்தப் பூச்சாண்டியை ஹிட்லர் உபயோகித்தான். ஆஸ்திரியா பிடிக்கப்பட்டது. ஜெக்கோஸ்லாவாகியா கைவசமாயிற்று. போலந்து ஆபத்துக்குள்ளாக்கப்பட்டது. ஐரோப்பிய நாகரிகத்தை காப்பாற்றுகிறவன் ஹிட்லர் என்று சொல்லுவது ஆச்சரியகரமாகயிருக்கிறது. வார்ஸா, ராட்டர்டாம், பெல்கிரேட், காவன்ட்ரி, ருஷ்யாவில் அநேக நகரங்கள், இவையெல்லாவற்றையும் நாசமாக்கியவன் ஹிட்லர் என்று நினையுங்கள். ஜெர்மன் அதிகாரிகளின் கீழ் ஐரோப்பாவிலுள்ள எல்லோரும் அடிமையாக வேலை செய்யவேண்டுமென்ற கொள்கையை அமுலுக்குக் கொண்டுவர ஹிட்லர் உத்தேசித்திருக்கிருன் என்பதில் ஐயமில்லை.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் ஜாலவித்தை.** யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து ருஷ்யாவில் இறந்தவர்கள், காயம்பட்டவர்கள், கைது செய்யப்பட்டவர்களின் சங்கியை 18,200,000 என்று ஜெர்மானியர் கொடுக்கும் கணக்கு கல்பிதமாகவும் கோயபல்ஸின் புளுகின் கோரத்தை விளக்குவதாகவுமிருக்கிறது. மேற் சொன்னபிரகாரம் ருஷ்யாவுக்கு நஷ்டமேற்பட்டிருக்குமாஞல் ருஷ்யாவுக்குச் சமீபத்தில் கிடைத்த வெற்றிகள் கிடைத்திருக்கமாட்டா. வேறுமென்று மிகையாகச் சொல்லுவதுடன், இந்தக் கணக்கில் அடிமை வேலைக்காக ஜெர்மனிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் ருஷ்யர்கள், லாட்வியர்கள், எஸ்டோனியர்கள், லித்வேனிர்கள், முதலியவர்களையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும், ருஷ்ய நகரங்களிலும், கிராமங்களிலும் உயிரிழந்த லக்ஷக்கணக்கான பொது மக்கள்—மனிதர்கள், ஸ்திரீகள் குழந்தைகளையும் நஷ்டக்கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் படுகொலைகளுக்கு கார்கவ்வில் சமீபத்தில் நடைபெற்றது நிதர்சனமான உதாரணமாகும்.

வி வி வி வி வி வி வி

**கார்கவ்வின் கோரம்.** பிப்ரவரி 27-ம் தேதி ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிருர் :—

"புதிய உலக அமைப்பு ஏற்பாட்டை கார்கவ்வில் நிறைவேற்றும் முறையில் ஹிட்லர் நூற்றுக்கணக்கான ருஷ்யர்களைக் கொலை செய்து முக்கியமான தெருவில் ஒரு மைல் தூரம் கட்டடங்களிலுள்ள மாடிகளிலிருந்து தொங்க விட்டிருக்கிருன். முக்கியமான 100 வீடுகள் தீக்கிரையாயின. நகரத்தைக் காலி செய்யுமுன் ஜெர்மன் துருப்புகள் தெருக்கள் வழியாகச் சென்று அங்கிருந்த பலசாலிகளைச் சுட்டுவிட்டார்கள். 1,500 யூதர்களின் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. குறைந்த பக்ஷம் 110,000 ஆண்களும், பெண்களும், ஜெர்மனியில் கூலிவேலை செய்வதற்காகக் கொண்டுபோகப்பட்டார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஐரோப்பாவில் ஜெர்மனியின் கொடுமை.** ராய்ட்டர் கொடுத்த தகவலுடன் அதே சமயம் நேசநாட்டாரின் அந்நிய நாட்டு அறிக்கை சங்கத்தார் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஒன்பது தேசங்களில் ஜெர்மானியர் செய்திருக்கும் கொலைகளின் புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிருர்கள். இவை பின்வருமாறு :—

போலந்து 25,00,000. பெல்ஜியம் 1,482. ஜெகோஸ்லாவாகியா 2,463 (இதில் நிர்மூலமாக்கப்பட்ட லிடிஸ், லெஸாகி என்னுமிடங்களையும், நாட்டைவிட்டு வெளியேற்றின 1,00,000 பேர்களையும் சேர்க்கவில்லை. பிரான்ஸ், காவலில் வைக்கப்பட்டிருக்கும் 1,41,000 பேர்களைத் தவிர 24,000. கிரீஸ், கிரீட் 18,0000. லக்ஸம்பர்க் 29. ஹாலந்து காவலில் வைக்கப்பட்ட 8,000 பேர்களைத்தவிர 200. நார்வே காவலில் வைக்கப்பட்ட 7,000 பேர்களைத்தவிர 140. யூகோஸ்லாவியா காவலிலிருக்கும் 46,000 பேர்களைத் தவிர 7,44,000.

**டாக்டர் கோயபல்ஸின் மணி சப்தம்.** யூ படகுகளின் சேஷ்டைகளைப் பற்றி விசேஷமாகப் பிரசாரம் செய்யும் பொருட்டு டாக்டர் கோயபல்ஸ் ஆங்கிலத்தில் தினசரி செய்திகளை பிரகடனம் செய்யும் பொழுது ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிறான். அதாவது சென்ற 24 மணிக்குள் யூ படகுகள் மூழ்கடித்திருக்கும் நேசநாட்டாரின் ஒவ்வொரு கப்பலுக்கும் ஒரு மணி அடிப்பதென்று ஏற்பாடு செய்திருக்கிறான். பிப்ரவரி 1-ம் தேதி முதல் பிப்ரவரி 23 தேதி முடிய 12 தடவை இம்மாதிரி மணி அடித்திருக்கிறான். 116 மணிகள் அடித்திருப்பதாகவும் 32 யுத்தக் கப்பல்களும் 84 சாமான் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதாகவும் வெளியிட்டிருக்கிறான்.

பிப்ரவரி 2-ம் தேதியன்று 6 தடவை மணி அடிக்கப்பட்டது. ஒரு பிரிடிஷ் நீர்மூழ்கியும், 2 அமெரிக்க யுத்தக் கப்பல்களும், 3 அமெரிக்க நாசகாரிகளும் மூழ்கிவிட்டனவென்று வெளியிடப்பட்டது. பிரிடிஷ் நீர்மூழ்கி நஷ்டமாகிவிட்டதென்பது வாஸ்தவம். ஆனால் அமெரிக்காவுக்கு ஒரு க்ரூயிஸரும் ஒரு நாசகாரியும்தான் நஷ்டம். அவைகளும் ஜெர்மன் யூ படகுகளால் ஏற்படவில்லை. ஜப்பானிய நடவடிக்கையினின்றும் ஏற்பட்டவை.

பிப்ரவரி 11-ம் தேதி 20 தடவைகள் மணி அடிக்கப்பட்டன. அன்று யூ படகுகள் ஒரு கப்பலையும் மூழ்கடிக்கவில்லை.

வி வி வி வி வி வி வி

**யூ படகுகளுக்குப் பரிகாரம்.** யூ படகுகளை ஒழிப்பதற்காக அமெரிக்காவிலும் பிரிடனிலும், கனடாவிலும், மும்முரமாக புதிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. இந்த நாடுகள் இதில் பூராவாக ஈடுபட்டிருக்கின்றன. ஏராளமான கப்பல்களும் கட்டப்படுகின்றன. பிப்ரவரியில் அமெரிக்கா 138 கப்பல்களைக் கட்டிவிட்டது. மே மாதம் முதல் தினம் 5 கப்பல்கள் கட்டுவதாகச் சொல்லுகிறது. அமெரிக்கக் கடல் இலாகா தலைவர் ரியர் தளபதியான மெரிலான்ட் சொல்லுவதாவது: ஒரு வருஷத்தில் 2.00,00,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை அதாவது 1,600 முதல், 1,800 கப்பல்கள் வரையில் கட்டி முடிக்க திட்டம் போடப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ருஷ்ய யுத்தம்** ஜெர்மனியின் தீவிரமான எதிர்ப்பு இருந்த போதிலும் ருஷ்யர்கள் சாவதானமாக முன்னேறி வருகிறார்கள். தெற்குப் போர்முனையில் பனி உருக ஆரம்பித்ததிலிருந்து ஜெர்மானியர்களுக்குச் சாதகம் ஏற்பட்டு டானட்ஸ் நதி பிரதேசத்தில் ருஷ்யாவின் வேகத்தை அது தடுத்துவருகிறது. வடக்குப் பக்கத்தில் பனி உருக ஆரம்பிக்கவில்லை. ருஷ்யர்கள் நீப்ரோபெட்ரோவ்ஸ்க், கிவ், இவைகளை நோக்கி முன்னேறக்கூடும். கார்கவ்வுக்கு வடக்கே ஓரலை நோக்கி ருஷ்யர்கள் விரைந்து செல்லுகிறார்கள். ரிஷெவ் விழுந்துவிட்டது.

வி வி வி வி வி வி வி

**ரோமலின் வீண் பிரயத்தனம்.** அச்சுப்படைகளுக்கு ரோமல் தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறான். இந்த வாரத்தில், அவனுடைய வழக்கப்படி, எட்டாம்படை தயாராகவில்லாத நிலைமையிலும் கப்ஸாவுக்கும், கெயிர்வானுக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தை அமெரிக்கப் படைகள் பலப்படுத்திக்கொள்ளாமலும் இருந்த சமயம் நேசநாட்டாரை திடீரென்று ரோமல் தாக்கினான். ஸ்பீட்லா, கெஸ்ஸரின், பெரியானா முதலிய இடங்களைக் கைப்பற்றினான். குன்றுகளிலிருந்த தாலாவையும் டெபேஸாவையும் தாக்க முன்னேறினான். இது பலிக்கவில்லை. ஜெனரல் ஆண்டர்ஸன் திருப்பித் தாக்கி எல்லா இடங்களையும் பிடித்துவிட்டான்.

மான்ட் கமெரியின் 8-ம் படை மாரத் அரணுக்கு முன்னால் அமைக்கப்பட்டு முன்னேறித் தாக்கும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.



**துவாங்சௌ விரிகுடா.** இது லிஞ்சௌ தீபகற்பத்திற்குக் கிழக்கே உள்ளது. இதில் தாங்கை, நாஞ்சௌ என்னுமிரண்டு தீவுகளிருக்கின்றன. இவை சைனாவைச் சேர்ந்தவை. சென்ற இரண்டுவாரங்கள் வரை பிரெஞ்சுக்காரர் வசமிருந்தன. பிப்ரவரி 23-ம் தேதி இதை ஜப்பானியர் கைப்பற்றினார்கள். இந்த மார்க்கமாக சுங்கிங்குக்கு ஸப்ளைகள் போவதாகச் சொல்லப்பட்டது. அதே சமயத்தில் விஷி ஸர்க்கார் இந்த பிரதேசத்தை நாங்கிங் அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டதாகவும் அந்த நாட்டில் அயல் நாட்டாருக்கிருந்த உரிமைகளையும் அது விட்டுவிட்டதாகவும் சொல்லப்பட்டது. விஷி ஸர்க்கார் நாங்கிங் அரசாங்கத்தையே ஒப்புக்கொள்ளவில்லை என்பது ஒரு விஷயம். இந்தோ-சைனாவைப்பற்றி பிரஸ்தாபிக்காதது இரண்டாவது ஆச்சரியம். மூன்றாவது, இந்த தேசத்தின் நன்கொடைக்காக நாங்கிங் அரசாங்கம் விஷி ஸர்க்காருக்கு வந்தனம் செலுத்தவில்லை. ஜப்பானுக்கு நன்றிசெலுத்துகிறது. ஜப்பானியர்கள் இந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றிவிட்டார்களென்பது சம்பவத்திற்குப் பிறகுதான் விஷிக்குத் தெரியவந்தது. அவமானத்தை மறைப்பதற்காக விஷி ஸர்க்கார் அதை ஆமோதனம் செய்திருக்கிறது.

---

# ஜப்பானியர்கள் கபடஸ்தர்கள், பொய்யர்கள்.

(மிஸ்டர் ஹண்ட்ராஜ் M. பர்வானி).

மிஸ்டர் ஹண்ட் ராஜ் M. பர்வானி என்பவர் ஸிந்து மாகாணத்தின் பிரபல காங்கிரஸ் வாதி. கிழக்கு ஆசியாவில் ஜப்பானியர் கையில் அகப்பட்டு தப்பி ஓடி இந்தியாவுக்குச் சமீபத்தில் திரும்பியவர்.

ஹாங்காங்கிலும், மற்ற இடங்களிலும் ஜப்பானியர் ஆக்ஷிக்குட்பட்டிருந்த படியால் ஜப்பானுக்குட்பட்ட ஜனங்களை, விசேஷமாக, இந்தியர்களை, ஜப்பான் எப்படி நடத்துகிறது என்பதை கண்ணூறப் பார்த்தவர். அவர் அறிந்தவைகளை இந்தியர்கள் கேட்டால் அவர்களுக்கு உண்மை வெளிப்படுமென்று அவர் நினைக்கிறார்.

மிஸ்டர் பர்வானி இரண்டு நாட்களுக்கு முந்தித்தான் கராச்சிக்கு வந்து சேர்ந்தார். அஸ்ஸோஸியேடட் பத்திராதிபரிடம் ஜப்பானியர்கள் ஹாங்காங்கைத் தாக்கியதற்குமுன் 1941-ம் வருஷத்தில் அவர் அங்கு சென்றதாக அறிவித்தார். ஹாங்காங் சரண் புகுந்தபொழுது அவர் அங்கு இருந்தவர். அவர் தூரக்கிழக்குக்குப் போகும்முன் கோட்ரி முனிஸிபாலிடியில் உப அக்ராசனராகவும், ஸிந்து மாகாண காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் மெம்பராகவும், மாகாண காங்கிரஸ் பார்லிமெண்டரி சபையின் அங்கத்தினராகவுமிருந்தவர்.

ஆசியா கண்டத்திலுள்ள ஜாதியார்களோடு சிநேகபாவமுள்ளதென்றும், இந்தியா பேரிலும், இந்தியர்கள் பேரிலும் நல்ல எண்ணமுள்ளதென்றும், பிரிடிஷ் ஆக்ஷியிலிருந்து இந்தியாவை விடுதலை செய்ய ஆவலுள்ளதென்றும், இந்தியாவை அடையவேண்டுமென்ற ஆசையும் கெட்ட எண்ணமும் கிடையாதென்றும் உலகத்தாருக்கு ஜப்பான் பறையடித்து வருகிறது. இந்தியாவிலுள்ள சிலர் ஜப்பானின் பிரசாரத்தை நம்பிவிடுகிறார்கள். இது சம்பாவிதம் தான். தங்கள் சேதத்தை அயல் நாட்டாரின் அமுலிலிருந்து விடுவிக்கவேண்டுமென்ற ஆசையுடன் இந்தியாவிலுள்ள வாலிபர்கள் கிழக்கு ஆசியாவிலுள்ள ஜனங்களைக் காப்பாற்றக் கூடியவன் ஜப்பான்தான் என்று நம்புகிறார்கள்.

சென்ற வருஷம் ஹாங்காங்கிலும், கிழக்கு ஆசியாவில் மற்ற இடங்களிலும் ஜப்பானியர் வசமான இந்தியர்களை ஜப்பான் எவ்விதம் நடத்துகிறது என்பதைக் கண்ணூற்றுப்பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் வாய்ந்தது. அந்த நாடுகளிலுள்ள இதர ஜாதியார்களை ஜப்பான் நடத்தும் முறைகளையும் நான் கவனித்தேன். ஆகையால் என்னுடைய சொந்த அனுபவத்தையும், கடுமையான கஷ்ட நிஷ்டூரங்களையும், இதர சம்பவங்களையும் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

பஸிபிக் யுத்தம் ஆரம்பித்த பிறகு கிழக்கு ஆசியாவிலுள்ள ஜாதியார்கள் ஜப்பானிடம் அதிக வெறுப்படைந்திருக்கிறார்கள். அநேக வருஷங்களாக இந்தியாவில் தேசீய நிகழ்ச்சிகளில் நெருங்கிக் கலந்து கொண்டவரும் கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பானியர்களின் நடவடிக்கைகளில் அனுபவம் வாய்ந்த வருமான நான் இந்தியாவைப்பற்றி ஜப்பானியர் சொல்லும் வார்த்தைகளெல்லாம் கபடமானதென்றும், பொய்யென்றும் இந்தியாவை ஏமாற்றிவிட உத்தேசம்தானென்றும் சொல்லுகிறேன்.

### நிலைமை அதிக மோசமாகிவிடும்.

இப்பொழுது நமது நாட்டின் நிலைமை நன்றாக இல்லை. ஆகையால் எஜமான்களை மாற்றுவது என்ற ஆசையானது விசனிக்கத்தக்கது. பிரிட்டனுடைய ஆட்சியானது நமக்குத் திருப்திகரமாகயில்லையாகிலும் ஜப்பானாவது ஜெர்மனியாவது வெற்றியடைந்தால் இந்தியாவின் நிலைமை இதைவிட 100 மடங்கு மோசமாகிவிடும். காங்கிரஸ் வாதியாக நான் இருந்திருப்பதினால், ஜப்பானுடைய கெட்ட எண்ணங்களையும் இந்தியாவைத்தன் வசமாக்கிக்கொள்ளவேண்டுமென்ற ஜப்பானின் துராசையையும் இந்திய மக்களுக்கு அறிவிக்கவேண்டியது என்னுடைய கடமையாகும். உலக சமாதானத்திலும், உலகத்தின் புதிய அமைப்பிலும் இந்தியாவுக்கும் பொறுப்புண்டு. உலகத்தின் சுயேச்சைக்காக யுத்தம் செய்பவர்களுக்குத் தன்னால் முடிந்த தியாகத்தைச் செய்வதன் மூலம் இந்தியாவின் அக்கரையை அது நன்றாய் விளக்கிக்காட்டலாம். இந்த மகத்தான யுத்தத்தை நம்முடைய தேசீய மனப்பான்மையுடன் கவனிக்கக்கூடாது. இந்தியாவின் ஸ்வதந்திரமும் பெருமையும் உலக ஸ்வதந்திரத்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஐக்கிய தேசத்தார்கள் வெற்றிபெற்றால் தான் இந்தியாவுக்கு ஸ்வதந்திரம் கிடைக்கும். வருங்காலத்தில் உலகத்தைத் திருத்தியமைக்கும் ஏற்பாட்டிலும் இந்தியா கௌரவமான பங்கு எடுத்துக்கொள்ள அதற்கு வசதியும் ஏற்படும்.

---

# ஜெர்மன் படை எங்கே நிலை நிற்கும்.

---

## ஜெர்மனி பின்வாங்குவதின் நோக்கமென்ன.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை).

ருஷ்யாவுடன் எந்த இடத்தில் நிலைநின்று போர்புரிவது என்று ஹிட்லர் யோசித்திருக்கிறானென்பதை அறியும்படியான குறிப்பிட்ட ஹேஷ்யங்கள் ஒன்றுமில்லை. ஜெர்மானியர்கள் பின்வாங்கும் யுத்த தந்திரத்துக்கு அடிப்படையாக இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ருமேனியாவில் போலஸ்டி என்றுமிடத்திலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களுக்கு முன்னால், அதாவது தெற்குப் பக்கத்தில் மிகுந்த வலுவான முன்னணிதளமிருக்கும்படியான ஒரு அரணை ஜெர்மனி அமைக்கவேண்டும்.

இரண்டாவது, இப்பொழுது ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்திருக்கும் இடங்களைவிட குறுகலான போர்முனையை ஏற்படுத்தி படைகளைச் சிக்கனமாக உபயோகப்படுத்துவதற்கு வசதியுள்ளதாகவும் செய்துகொள்ளவேண்டும்.

முதலாவது சாதகம் சம்பந்தப்பட்ட மட்டில் ருஷ்யப் போர்முனையில் நவீன யந்திர சாதனங்களோடு பலமான சண்டை செய்வதற்கும் டுனிஸியா யுத்தத்தைச் சரிவர நடத்துவதற்கும் குறைந்தபக்ஷம் ஒரு வருஷத்திற்கு 11 மிலியன் டன்கள் எடைமானமுள்ள எண்ணெய் ஜெர்மனிக்கு வேண்டியிருக்கும்.

இதில், ருமேனியாவிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களிலிருந்து (6) மிலியன் டன்களும் ஜெர்மனியில் தயாரிக்கும் கலப்பு எண்ணெயில் 4 மிலியன் டன்களும் பாக்கி ஒரு மிலியன் டன் எண்ணெய்க்குப் பதிலாக கரிவாயுவை உபயோகிப்பதென்றும் ஜெர்மனி புள்ளி விபரம் போட்டிருக்கிறது.



ஆகையால் காகஸியாவில் எண்ணெய்ப் பிரதேசங்களை அடைந்துவிடுகிறதென்ற எண்ணம் ஹிட்லருக்குப் பலிக்காமல் போய்விடவே, தன்னால் கூடிய வரையில் போல்ஸ்டிக்கு சமீபத்திலே ருஷ்ய வெடிவிமான தளங்கள் ஏற்படுவது சாவதானமில்லையென்று ஹிட்லர் நினைக்கிறான். இந்த முடிவிலிருந்து ஜெர்மானியர்கள் கிரிமியா தீபகற்பத்தில் சண்டைபோட உத்தேசித்திருக்கிறார்களா என்ற பிரச்னை எழும்பியிருக்கிறது.

கிரிமியாவில் நின்று யுத்தம் செய்வதானால் மெரிடோபாவிலிருந்து ஸாபொரோஷி வரையிலுள்ள பிராந்தியத்தை ஜெர்மனி தற்காப்பு செய்யவேண்டும். இந்தப் பிராந்தியம் கிரிமியாவுக்கும் கிரிமியாவிலிருந்து வெளியே போகும் இருப்புப்பாதையை மட்டும் ரக்ஷிக்கக்கூடும். ஸாபொரோஷியிலிருந்து இந்த ஸ்தலம் கிவுக்கு முன்னாலுள்ள நீபர் நதிக்கரை வழியாக, பிரிபட் சதுப்பு நிலங்களுக்குச் சென்று அங்கிருந்து மின்ஸ்க், ரீகா முதலிய இடங்களிலும் பரவக்கூடும்.

பிரிபட் சதுப்பு நிலங்களுள்ள போர்முனையிலுள்ள துருப்புகளை சிக்கனம் செய்யவேண்டுமானால் மேலே சொன்னபிரகாரம் குறுகிய யுத்தரங்கத்தில் ஜெர்மனி போர் தொடுக்கவேண்டும்.

நீப்ரோபெட்ரோவ்ஸ்க்குக் கருகிலுள்ள நீபர் நதி பிரதேசத்தை நோக்கி ருஷ்யப்படைகள் முன்னேறுவதால் இந்தப் பிரதேசத்திற்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் குறுகிய போர்முனையில் ஜெர்மானியர்கள் சமாளித்து நிற்க முடியாவிட்டால், ஒடெஸ்ஸாவிலிருந்து கீவ், ரீகாவரைக்குமுள்ள மற்றொரு குறுகியப் போர்முனைக்குச் சென்று யுத்தம் செய்யவேண்டும்.

இந்தப் பிரதேசத்துக்குப் பின்வாங்குவதென்றால் கிரிமியாவை ஜெர்மனி காலிசெய்து விடவேண்டும் அல்லது அதைத்தாண்டி விட்டுச் செல்லவேண்டும். மேலும், போலஸ்டிக்கு 300 மைல்களுக்குள்ளாக ருஷ்ய விமான தளங்கள் ஏற்படும்படியாகவும் செய்யவேண்டிவரும்.

ஆகையால் சாத்தியமான வரையில் கிரிமியாவுக்கு முன்னாலுள்ள மெலிடோபால் போர்முனையில் நின்று ஜெர்மானியர்கள் யுத்தம் செய்வார்களென்பது நிச்சயம்.

ஜெர்மானியர்கள் பின்வாங்கிச்சென்று நிலைத்து நிற்கவேண்டிய பிரதேசத்தையும் நிர்த்தாரணம் செய்துவிட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இம்மாதிரியான முன்ஜாக்கிரதை ஏற்பாடுகளை வெற்றிகள் ஏற்படும் பொழுதும் ஜெர்மானியர்கள் அலக்ஷியம் செய்யாமல் செய்ததுண்டு. 1914-ம் வருஷத்தில் மார்ன் நதி பிரதேசத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் பொழுதும் எயின் நதிப் பிரதேசத்தில் ஜெர்மானியர் அரண் கட்டியிருந்தார்களென்பது கவனிக்கமுள்ளது.

---

# நெருக்கடியான சமயம்.

1940-ம் வருஷத்தில் பிரிட்டனுக்கு நெருக்கடியான சமயம் ஏற்பட்டது. ஜெர்மன் ரேடியோவில் திருப்பித் திருப்பிச் சொன்ன பிரகாரம், நமது மன்னரும், பிரதம மந்திரியும், தங்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு கனடாவுக்கு ஓடிவிடவில்லை. அதற்குப் பிறகு அநேகம் தடவை தேசமக்களுக்குச் சஞ்சலப்படக்கூடிய அநேக தகவல்களை மிஸ்டர் சர்ச்சில் விடுத்திருக்கிறார்.

1943-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு நெருக்கடியான சமயம் வந்து விட்டது. ஜனவரி 30-ம் தேதியன்று ஜெர்மன் மக்களுக்கு ஹிட்லர் நேர்முகமாகப் பிரசங்கம் செய்யவேண்டியவர், அப்படிச் செய்யவில்லை. அவர் பிரியான்ஸ்கில் ராணுவ தேசப்படத்தை கவனித்து வந்தாலும் சரி, அல்லது பெர்கஸகார்டனில் தன் மாளிகையில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட தோல்விகளைப் பற்றி துக்கித்துக் கொண்டிருந்தாலும் சரி இவைகள் கவனிக்கமில்லை. ஜோதிமயமான விளக்குகளின் பிரகா

சத்தில் உரக்க சப்தம் செய்யவும் மார்தட்டிக் கொள்ளவும் பிரியப்படும் இந்த வீண்பெருமை பாராட்டும் ஹிட்லர் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்திலிருந்து கரையேற உத்ஸாக மேற்படக்கூடிய சொற்களைக் கேட்க ஆவல் கொண்டிருந்த ஜனங்களின் மத்தியில் வராமல் மௌனம் சாதித்துவிட்டான்.

இது 3 வாரங்களுக்கு முன் ஸ்டாலின்கிராடின் நெருக்கடி ஆரம்பமாகியிருந்த பொழுது. அதற்குப்பிறகு செம்படை ராஸ்டாவ் குர்ஸ்க், கார்காவ் முதலிய இடங்கள் வழியாக இரண்டு மாரிகாலங்களிலும் ஒரு கோடைகாலத்திலும் ஜெர்மானியர்கள் மட்டும் நடமாடின போர்முனைகளுக்கு முன்னேறி விட்டார்கள். ஜெர்மனியின் பாதி அளவிற்கு மேலான ருஷ்யப் பிரதேசத்தை செம்படை திரும்பிப் பிடித்துவிட்டது.

நாட்கள் செல்லச்செல்ல பிரிடிஷ் அமெரிக்கப் படைகளின் ஐரோப்பியப் படையெடுப்பு தருணம் சமீபித்து வருகிறது. ஜெர்மன் மக்கள் இந்த நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இம்மாதிரியான அஸமாதானமான சம்பவத்திலிருந்து ஜெர்மானியர்களின் மனோபாவத்தை மாற்றுவதற்காக, ஜெர்மன் டாங்கிகளைப் பற்றி சிலாகிப்பதைவிட இரண்டு மடங்கு ஜெர்மன் யூ படகுகளைப் பற்றி எழுதவேண்டுமென்று டாக்டர் கோயபல்ஸ் தன்னுடைய உத்தியோகஸ்தர்களுக்கு எச்சரித்திருக்கிறான். அவர்கள் எழுதவேண்டிய விஷயம் யாதெனில் "பிரிடிஷ் அமெரிக்கக் கப்பல்களை ஜெர்மன் யூ படகுகள் ஏராளமாக மூழ்கடிக்கின்றன. அதனால் மேற்கே அவர்கள் நடத்துவதாக விளம்பரம் செய்திருக்கும் படையெடுப்பு நடைபெறமுடியாது. இரண்டு போர்முனைகளில் சண்டை போடவேண்டிய கஷ்டம் ஜெர்மனிக்கு ஏற்படாது".

ஹிட்லர் கோஷ்டியில் சேராத விருத்தாப்பியமுள்ள ஜெர்மானியர்களுக்கு 1917-ம் வருஷம் ஜனவரி மாதம் கெய்ஸர் மன்னரின் கடற்படை காரியதரிசியான கடற்தளபதி கெப்பெல் சொன்னமொழிகள் இப்பொழுது ஞாபகத்திற்கு வரலாம். அமெரிக்காவின் காலாட்படைகள் பயிற்சியடைவதற்கு முன்னாகவே எதிரியின் கடற்படையை நாம் ஏராளமானபடி அழித்துவிடுவோம். அதனால் அமெரிக்காவின் துருப்புகளை ஐரோப்பாவுக்குக் கொண்டுவர கப்பல்களே இல்லாமல் போய்விடுமென்று அவர் சொன்னார்.

இந்த பிகையுரைக்குப் பிறகு 22 மாதங்களுக்குப் பின், நேசநாடுகளின் ஆக்ஞைக்குட்பட்டு ஸ்காபாப்ளோ என்னுமிடத்தில் ஜெர்மன் கடற்படை பூராவும் சரணடைந்தது. 1943-ல் ஒரு அமெரிக்கக் கப்பல்கட்டுவதற்குத் தேவையான காலத்தை விட 1917-ல் ஒரு கப்பல் கட்டுவதற்கு மூன்று மடங்கு நேரம் பிடித்தது. சமாதான உடன்படிக்கைக்குப் பிறகுதான் சென்ற யுத்தத்தில் அமெரிக்காவின் அவசரமாகக் கப்பற்கட்டும் திட்டம் அமுலுக்கு வந்தது. 1943-ம் வருஷம் மே மாதத்தில் அமெரிக்காவிலுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் மும்முரமாக வேலைசெய்து ஒரு நாளைக்கு ஐந்து கப்பல்களைக் கட்டி முடித்துவிடும். சென்ற ஆறுமாதங்களில் அமெரிக்கா ஒரு நாளைக்குச் சராசரி மூன்று கப்பல்கள் வீதம் கட்டிய பொழுதும் கூட அப்பொழுது நஷ்டமடைந்த நேசநாடுகளின் கப்பல்களை ஈடுசெய்யப்போதுமானதாகயிருந்தது. அந்த ஆறு மாதங்களில் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் கட்டப்பட்ட கப்பல்கள் $1\frac{1}{4}$ மிலியன் டன்கள் எடைமானம் உள்ளவை. ஐக்கிய தேசங்களின் கடல் பலத்தின் அபிவிருத்தியை இவை குறிக்கின்றன.

யூ படகுகளின் தொந்தரவு பயங்கரமாகத்தானிருக்கிறது. மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறார். "நமது கப்பல்கள் நஷ்டமடைந்தால் யுத்தம் நீடித்து நடைபெறும்". இன்னும் யூ படகுகளின் விஷமங்களிருந்த போதிலும் ஐக்கிய தேசத்தார்கள் தாக்குதல் ஏற்படுத்திக்கொண்ட திட்டத்தை ஊக்கத்துடனும் தைரியத்துடனும் நடத்திவருகிறார்கள். நேசநாட்டினரின் படைகள் இடைவிடாது சண்டை செய்து, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் இவைகளின் கொடுங்கோல் அதிகாரிகள், ஒன்றன்பின் ஒன்றாகவோ அல்லது, ஏகோபித்தோ, "போதும், போதும், நிறுத்திக்கொள்ளுங்கள்" என்று சொல்லும் வரையிலும் எதிரிகளைத் தாக்கும்.



# ஜெர்மன் விமானப்படையின் வலுக்குலைந்தது.

சென்ற நான்கு மாதங்களில் வட ஆபிரிக்கா யுத்தத்தில் ஜெர்மனிக்கு 2,000 விமானங்கள் நஷ்டமாகியிருக்கின்றன. இங்கே நேசநாடுகளின் முன்னேற்ற பயத்தினால் ஜெர்மன் சண்டை விமானங்களில் 20 சத விகிதம் டுனிஸியப் போர் முனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பிப்ரவரி 17-ம் தேதியன்று பிரிடிஷ் ஒலி பரப்பு நிலயத்திலிருந்து பாட்ரிக் லாஸி என்பவர் பின்வருமாறு வியாக்யானம் செய்தார். "ருஷ்யாவில் இருக்கும் ஜெர்மன் விமானப்படையைச் சேர்ந்த வெடி விமானங்கள், சண்டை போடும் விமானங்கள், துருப்பு ஏற்றிச்செல்லும் விமானங்களின் அளவு ஜெர்மன் விமான பலத்தின் பாதி பாகத்துக்குக் குறைவாகத்தான் இருக்கிறதென்று சொல்லலாம்."

கிழக்குப் போர்முனையில் பின்வாங்கும் ஜெர்மன் துருப்புகளைக் காப்பாற்றுவதற்கு ஏராளமான விமானங்கள் தேவையென்றாலும், பிரிடனிலிருக்கும் தளங்களிலிருந்து ஜெர்மனியைத் தாக்கும் நேசதேச விமானங்களை எதிர்ப்பதற்கு ஜெர்மனியிலும் ஏராளமான விமானங்களை கோயரிங் வைத்திருக்கிறான். அவைகள் சண்டை போடவேண்டியிருக்கின்றன. நஷ்டமும் ஏற்படுகிறது. இதன் மூலம் படை பலமும் குறைவுபடுகிறது. 1941-ம் வருஷம் ஜூன் மாதத்திலிருந்து மேற்குப் பக்கத்திலுள்ள அபாயம் அதிகரித்து வருகிறது. ஆரம்பத்திலேயே ஜெர்மன் விமானப்படை பலம் குறைந்து விடுமென்று கோயரிங் நினைத்து, வட பிரான்ஸில் தாக்கும் பிரிடிஷ் விமானங்களை எதிர்க்க வேண்டாமென்று ஜெர்மன சண்டை விமானங்களுக்கு உத்தரவிட்டிருந்தான். ருஷ்யப் போரில் 6 மாதம் வரையில் மேற்குப் பக்கத்தில் ஜெர்மன் விமான நஷ்டம் 90 சத விகிதம் குறைவுபட்டது.

சமீப காலத்தில் மற்றொரு சம்பவம் நேரிட்டுவிட்டது. பட்டப்பகலிலேயே அமெரிக்காவின் 4 என்ஜின்களுள்ள வெடி விமானங்கள் ஜெர்மனி மீதும், ஜெர்மன் ஆக்கிரமிப்பு நாடுகள் மீதும் வட்டாரமிட்டு வருகின்றன. இவைகள் சிறந்த லக்ஷியங்கள். இதை கோயரிங் அலக்ஷியம் செய்ய முடியாது. மறுபடியும் சண்டை விமானங்களை அனுப்பி, மேற்குப் பக்கத்தில் ஏராளமான விமான நஷ்டங்கள் ஏற்படுகின்றன. 1942-ம் வருஷம் அக்டோபர் 9-ம் தேதியன்று லிலியில் 53 சண்டை விமானங்களும், டிஸம்பர் 12-ம் தேதியன்று ரூவனில் 25-ம், டிஸம்பர் 20-ம் தேதியன்று ராமலி—சூர்—சீயன் பிரதேசத்தில் 44-ம், 1943-ம் வருஷம் ஜனவரி 27-ம் தேதியன்று வில்ஹெல்ம்ஷாவனில் 22-ம், பிப்ரவரி 4-ம் தேதியன்று வடமேற்கு ஜெர்மனில் 25-ம், ஜெர்மனிக்கு நஷ்டமாயின. 1941-ம் வருஷம் கடைசி மூன்று மாதங்களில் மேற்குப் போர்முனையில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டங்களைவிட இப்பொழுது அமெரிக்க விமானப்படையின் ஐந்து தாக்குதல்களினின்றும் அதிக விமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

---

# வட ஆபிரிக்காவில் வெற்றிக்கு பிரேஸிலிலுள்ள விமான தளங்களின் உதவி.

(மிஸ்டர் J. ஆலென் கூகன்).

ரொம்ப முக்கியமானதும் உலகத்தில் இதுவரையில் அறிந்திராததும் பிரேஸிலிலுள்ளதுமான நேடால் விமான தளத்திலிருந்து ஏற்பட்ட விமானத் தாக்குதல்தான் எகிப்திலிருந்தும், லிபியாவிலிருந்தும் அச்சுப் படைகளை பிரிடிஷ் எட்டாம்படை துரத்தியடித்ததற்குச் சாதகமாயிருந்தது.

உலகத்திலேயே கடல் தாண்டியுள்ள இந்த முக்கியமான விமான தளத்தை அமெரிக்கர்கள் சென்ற ஜூன் மாதத்திலிருந்து பலப்படுத்திவருகிறார்கள். அமெரிக்காவின் விமான மூலம் போக்குவரத்து செய்யும் படை இந்த முக்கியமான தளத்திலிருந்து வேகமாயும் நுட்பமாயும் மகத்தான நடவடிக்கைகள் செய்து வருகிறது. போர்முனைகளுக்கு அமெரிக்காவில் செய்யப்பட்ட யுத்த விமானங்களும், யுத்த சேவையில் அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டி ஈடுபட்டிருக்கும் நேசதேச முன்னணிப் படைகளுக்குத் துரிதமாக சாமான்கள் கொண்டு போவதற்கு விமானங்களும் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன.

இந்த தளத்திலுள்ள ராணுவப் படையுடன் அமெரிக்கக் கடற்படையும் பிரெஸீலியாவின் விமானப் படையும் ஒத்துழைத்து கடற்கரைப் பிரதேசத்தை எதிரிகள் கடல் மார்க்கமாகவோ, ஆகாய மார்க்கமாகவோ, தாக்காமல் பாதுகாத்து வருகின்றன.

இந்த தளம் ஒரு ராணுவ வழி நடை ரஸ்தா. இங்கு எல்லா நேரங்களிலும் ராணுவப் படையைச் சேர்ந்தவர்களும் ஐக்கிய தேசத்தார்களின் உத்தியோகஸ்தர்களும் ஜெர்மனி, ஜப்பான், இதாலி இந்த மூன்று நாடுகளையும் முறியடிக்க வேண்டிய வேலையில் ஈடுபட்டு நடமாடுகிறார்கள்.

பறக்கும் கோட்டை, லிபரேடர்கள், மிச்செல்ஸ், மாராடர், வென் சூராஸ், போஸ்டன், ஹட்ஸன்ஸ், மேரிலாண்டு, முதலிய விமானங்களும், பொது ஜனங்களறியாத இதர விமானங்களும், இங்கிருந்து ஆபிரிக்காவுக்கு அடிக்கடி புறப்படுகின்றன. இவ்விடத்திலுள்ள விமானங்களின் சங்கியை ராணுவ ரகசியம். ஆகிலும் இவைகள் ஆயிரக்கணக்கானவைகளென்று எதிரிக்குக் கூடத் தெரிய வரும்.

இந்த தளமானது கெட்டியாக செய்யப்பட்ட மணலின் பேரில் நிலக்கீலினால் அமைக்கப்பட்ட ரஸ்தாக்களுள்ளது. கனமான மழை பெய்தாலும் தரை ஜலத்தை உறிஞ்சிவிடும். ஒரு பக்கத்தில் மத்திய ஆபீஸ் கட்டடமும், கட்டடத்தில் ஒரு கண்ட்ரோல் கோபுரமுமிருக்கின்றன. தளத்தில் மற்றொரு பக்கத்தில் கடற்படை இலாகாவின் காரியாலயமிருக்கிறது இன்னொரு பக்கத்தில் பிரெஸீலின் விமானத் தலைமை காரியாலயமிருக்கிறது.

---

## சண்டைபோட ஆவல்: ஆனால் பயங்காளித்தனம்.

---

### ருஷ்யாவைப்பற்றி ஜப்பானின் மனோநிலை.

(மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையிலிருந்து எழுதியது).

ஜப்பானின் 100 டிவிஷன் துருப்புகளில் தென்மேற்கு பஸிபிக் பிரதேசத்தில் 25 டிவிஷன்களிருக்கின்றன. ருஷ்ய எல்லையிலும் அல்லது கொரியா தீபகற்பத்திலும் 33-ம், சைனாவில் முதல்தரமில்லாத 32 டிவிஷன்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை வேறு விதமாகச் சொன்னால் எல்லைச் சரகத்திலுள்ள ருஷ்யாவின் துருப்புகளோடு சண்டை செய்ய 33 டிவிஷன்கள் அவசியமென்றும், அதிக முஸ்தீப்புகளில்லாத போனாலும் சியாங்கை ஷேக்கின் துருப்புகள் ஜப்பானின் 32 டிவிஷன்களை எதிர்க்கின்றனவென்றும் சொல்லலாம். ஜப்பானின் விமான உற்பத்தி ஸ்வல்பம். அதன் விமானப் படையின் பலம் குன்றிவருகிறது. 5 டிவிஷனிருந்த படைகள் நாலுக்குக் குறைவுபட்டுவிட்டன. அதிலும் கால் பாகம் மஞ்சூரியாவிலும் அரைக்கால் பாகம் சீனாவிலும் வைக்கப்பட்டிருக்கிறது. இவைகளிலிருந்து ஜப்பானுக்கு 3 அம்சங்களில் பலஹீன மேற்பட்டிருக்கிறது என்று ஊகிக்கலாம். சாமான் கப்பற்படை—தென்மேற்கு பஸிபிக்கில் இதற்கு ஏராளமான நஷ்டமேற்பட்டிருக்கிறது. விமானப்படை, சீனாவில் ஜப்பானின் நிலைமை. சைனாவில் ஐக்கிய தேசத்தார்கள் ஜப்பானைப் பலமாக நெருக்க ஆரம்பித்தால், ருஷ்யா எல்லைச் சரகத்திலுள்ள துருப்புகளை ஜப்பான் இங்கு கொண்டு வரவேண்டும். 1341-ம் வருஷம் இம்மாதிரியான நிலையிலிருந்த பொழுது தான் ஹிட்லர் ருஷ்யாவைத் தாக்க ஆரம்பித்தான். இதன் விளைவு ஜப்பானியருக்குத் திருப்திகரமாக இல்லை. ஆகிலும் எல்லைச் சரகத்தை ஜப்பான் காலி செய்துவிட முடியாது. ஜப்பானுக்குச் சங்கடமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

---

## பர்மா ரஸ்தாவைத் திறப்பதின்மூலம் ஜப்பானை முறியடிப்பது.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

பிப்ரவரி மாதம் 11-ம் தேதி யன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் பிரசங்கம் செய்தபொழுது ஜப்பானை இறுதியில் முறியடிக்கவேண்டிய யுத்தம் தொடங்குமுன் ஹிட்லரைத் தோற்கடிப்பதும் ஜெர்மன் வலிமையைக் குலைத்து



விடுவதும் அவசியமென்று ஒரு வருஷத்துக்குமுன் செய்த தீர்மானத்தையே பிரிடிஷ், அமெரிக்க யுத்த தந்திரிகளும், தலைவர்களும் ஏகோபித்து ஆதரித்தார்களென்று சொன்னார்.

ஜெனரல் மாக்ஆர்தரின் தலைமையில் அமெரிக்க, ஆஸ்திரேலியப்படைகள் பெற்றிருக்கும் வெற்றிகள் திருப்திகரமாகயிருக்கின்றன. சமீபத்திலுள்ள நாடுகளின்பேரில் துரோகமாகப் படையெடுப்பு யுத்தம் ஆரம்பித்ததால் ஜப்பானுக்கு விசேஷ சௌகரியங்கள் கிடைத்தன. ஜப்பானின் எதிரிகளிடமுள்ள படை பலத்தில் ஒரு சிறிய பாகத்தைமட்டும் எதிரிகள் இந்த தூரக்கிழக்கு யுத்தத்தில் உபயோகப்படுத்துகிறார்களென்று ஜப்பான் ஒப்புக்கொள்ளுகிறது. ஆகிலும், அதற்குக் கிடைத்த வெற்றிகளை அதிகப்படுத்திக்கொள்ள ஜப்பானுக்கு முடியவில்லை.

ஜப்பானியரின் ராணுவ வெற்றிகளின் பெருமையைக் குறைத்துக் கூறுவதாக என்னுடைய உத்தேசமில்லை. ஏராளமான சௌகரியங்களிருந்த காலத்தில் ஆஸ்திரேலியாவையும், இந்தியாவையும் ஜப்பான் படையெடுக்க முடியாமல் போய்விட்டபொழுது இப்பொழுது படையெடுப்பு பயம் கிடையாது என்று சொல்லலாம்.

மேலும் முன்னேறுவதை நிறுத்திவிட்டு கைப்பற்றிய சில பிரதேசங்களிலிருந்து ஜப்பானியர்கள் வெளியேற ஆரம்பித்துவிட்டார்கள். பாபுவாவைக் காலிசெய்துவிட்டார்கள். அதிக நஷ்டத்துடன் கூடல்கனார் தீவையும் காலி செய்துவிட்டதாக ஜப்பானியர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அமெரிக்காவின் மதிப்புப்படி ஜப்பானியருக்கு 50,000 மனிதர்களும், 71 கப்பல்களும், 1,000 விமானங்களும் நஷ்டமாகிவிட்டன.

தோல்விகளை ஜப்பானியர்கள் ஒப்புக்கொள்ளுவதற்குக் காரணங்கள் என்ன? மனித பல நஷ்டத்தை ஜப்பானியர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். ஜப்பானுக்கு மனிதபலம் ஏராளமாகயிருக்கிறது. இறப்பதற்கும் அவர்கள் துணிந்தவர்கள். ஜப்பானியர்கள் பின்வாங்கியதிலிருந்து அதற்கு பொருளாதாரக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பது நிச்சயம். கப்பல் நஷ்டங்களையும், விமான நஷ்டங்களையும் ஈடுசெய்வதற்கு ஜப்பானுக்குச் செயல் இல்லை. பர்த்தியாகக் கட்டிமுடிக்கும் அளவுக்குமேல் அதிகமாகக் கப்பல்களையும் விமானங்களையும் இழந்து படைபலத்தைக் குறைத்துக்கொண்டுவரவும் ஜப்பானுக்குச் சக்தி போதாது. தன்னால் காப்பாற்ற முடியாத முன்னணிப் பிரதேசங்களை ஜப்பான் இழந்துவிடவேண்டியிருக்கிறது. ஆகையால் தெற்கு நோக்கிப் பாய்வதற்கு சாதகமான பாய்ச்சல் ஸ்தலங்களையும் கைவிடவேண்டியதாயிருக்கிறது.

மற்றொரு காரணமுண்டு. ஜப்பானுக்கு சைனா சதாகாலமும் தொந்தரவு செய்துவருகிறது. சைனாவை துர்பலமாகச் செய்யவேண்டுமானால் அதற்கு நேசதேசத்தார்களிடமிருந்து ஸப்ளைகள் போகமுடியாதபடி தடுத்துவிட வேண்டும். ஆகையால் பர்மா ரஸ்தாவை மறுபடியும் திறந்துவிடாதபடி ஜப்பான் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த ரஸ்தாவைத் திறந்துவிடுவது என்று மிஸ்டர் சர்ச்சில் உறுதி கொண்டிருக்கிறார். ஆசியா யுத்த முனையில் நம்முடைய முயற்சியானது பர்மாவிலிருந்து ஜப்பானியரை அப்புறப்படுத்தவும், பர்மா ரஸ்தாவைத் திறந்து விடுவதன் மூலம் சைனாவுக்குக் கூடுமானவரையில் ஒத்தாசை செய்யவும் நிறுவப்பட்டிருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார். மிஸ்டர் சர்ச்சிலைப் போலவே ஜெனரல் டோஜோவும் யுத்த நிலைமையை மதித்திருக்கிறான் என்று நினைப்பது சகஜம். தெற்கே ஆதிக்கத்தை விஸ்தரிப்பதைவிட ஜப்பானின் வருங்கால க்ஷேமத்திற்கு பர்மா ரஸ்தா அதிகமுக்கியமென்று டோஜோ நினைக்கிறான். ஒரு பக்கத்தில் தற்காப்புச்செய்துகொண்டு மற்றொரு பக்கத்தில் பலத்தை உபயோகிக்க டோஜோ முயற்சிக்கிறான்.

ஜப்பானில் நம்பிக்கையுள்ள தலைவர்களும்கூட ஆரம்பகாலத்தில் ஜப்பானுக்குக் கிடைத்த வெற்றிகளைக்கண்டு வியப்புற்றார்கள். ஆனால் யுத்த தந்திரமுறையில், யுத்தத்தை இடைவிடாது நடத்தவேண்டுமென்ற எதிராளிகளின் மனப்பான்மையை அகற்றும் வரையில், வெற்றிகள் தொந்தரவையளித்தன. எதிராளிகளின் ஊக்கத்தை அழித்துவருவது மட்டும் ஜப்பானுக்குக்

கைகூடவில்லை. ஜப்பானுக்குச் சீக்கிரமாக முதலில் வெற்றிகிடைத்ததற்கு துரோகம் காரணமானதால், மேல்மேலும் வெற்றிகள் பெறவேண்டுமென்ற ஆசை ஜப்பானுக்கு அதிகரித்தது. ஆகிலும் ஜப்பானின் முன்னேறும் வேகம் இந்த நாடுகளுக்கு பரவாதபடி, ஐக்கிய தேசத்தாரின் வலிமையானது செய்து விட்டது. இப்பொழுது ஜப்பானுடைய முன்னணி தளங்களில் ஒன்று நேச நாட்டார்களால் பிடிக்கப்பட்டுவிட்டது. மற்ற இடங்களைக் கைப்பற்றுவதற்கு இது அடிப்படையானது. அடுத்தபடியாக ரபால் பிடிக்கப்படலாம். ஜப்பான் கைப்பற்றிய நாடுகளை ஜப்பான் செய்ததுபோல ஒன்றன்பின் ஒன்றாய் திரும்பப் பிடிப்பதாக நேசநாடுகள் உத்தேசிக்கிறார்களென்று நினைக்க இடமில்லை. மிஸ்டர் சர்ச்சிலின் அபிப்பிராயப்படி பர்மா ரஸ்தாவைத் திறந்துவிடுவதின் மூலமாகத்தான் தூரக்கிழக்கு நாடுகளைக் கைப்பற்றவேண்டுமென்று பொருள்படுகிறது. சைனாவுக்குப் பூர்ணமான ஒத்தாசைசெய்து அது வெற்றிபெற்றால், ஜப்பானுக்குச் செல்லுவதற்கு சமுத்திர மார்க்கத்தைவிட தரைமார்க்கமாக குறுக்குவழி ஏற்பட்டுவிடும்.

இவையெல்லாம் கற்பனையாகச் சொல்லுவது. அடிப்படையான விஷயம் யாதெனில ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு ஏராளமான வெற்றிகள் கிடைத்து வந்தபொழுதும், தூரக்கிழக்கில் ஜப்பானியர்கள் தங்களுடைய லாபங்களை அதிகப்படுத்திக்கொள்ளமுடியவில்லை. தரையிலும், சமுத்திரத்திலும், ஆகாயத்திலும் எதிரிகளோடு நடந்த சண்டைகளிலும் ஜப்பானியர்கள் வெற்றிபெற முடியவில்லை. இப்பொழுது ஐரோப்பாவில் ஐக்கிய தேசத்தார்கள் ஜெர்மானியர்களை எதிர்த்து ஏராளமான வெற்றிகள் பெற்றுவரும்பொழுது தூரக்கிழக்குப் போர்முனையில் ஐக்கிய நாடுகள் வைத்திருக்கும் சொற்பத் துருப்புகளிடம் தாங்கள் பிடித்த சில இடங்களை ஜப்பானியர்கள் ஒப்புவிக்கும்படி நேர்ந்துவிட்டது. ஜெர்மானியர்களின் பராக்கிரமத்தை முறியடிப்பதுதான் முக்கியமானதென்றும் தூரக்கிழக்குப் போர்முனையை அடுத்தபடியாகத்தான் கருதவேண்டுமென்றும் கஸாபிளாங்கா மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டதால் தூரக்கிழக்குப்போர்முனையில் நேசநாடுகள் அதிகத்துருப்புகளை வைத்திருக்கவில்லை.

ஆகையால் தூரக்கிழக்கிலும், மேற்குப் போர் முனையிலும் ஒரேகாலத்தில் ஐக்கிய தேசத்தார்கள் வெற்றிபெற வேண்டுமென்று நினைப்பது சம்பாவிதமில்லை.

---

## ஜப்பானும், ஸியாமும்.

(தூரக்கிழக்கு நியூஸ் லெட்டர், பிப்ரவரி 11).

ஜப்பானியர்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் ஸியாமில் மட்டும் ஜப்பானியரின் கொடுமைகள் அதிகமாக உபயோகப்படுத்தப்படவில்லை. ஸியாம் ஜப்பானுடன் ராஜதந்திர சம்பந்தங்களை உள்ளபடி நடத்தி வருகிறது. ஜப்பானியத் துருப்புகளை ஆதரிக்க வேண்டிய ஒரு அவசியம் அதற்கு ஏற்பட்டிருந்த போதிலும் ராஜ தந்திரங்கள் மூலமாக ஜப்பானுடன் நடவடிக்கைகள் நடத்தி வருகிறது. பூராவாக ஆக்கிரமணம் செய்யப்பட்ட நாடுகளைப் போல் இல்லாமல் ஸியாம் ஸ்வதந்திரம் என்னும் விளையாட்டை நடத்தி வருகிறது. இப்பொழுது இருக்கும் நிலைமையில் பிரசார முறையில் ஜப்பான் ஸியாமைப் பூராவாக உபயோகித்து விடும். தங்களுடைய நேசநாட்டின் பூர்ணமான ஒத்துழைப்புயிருக்கிறதென்று ஜப்பானியர்கள் நேர்த்தியாகச் சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்து விட்டதென்று அவர்கள் சந்தோஷிக்கிறார்கள். துர்ப்பலமாக யிருப்பதினால், தானாகவே ஸியாம் அச்ச நாடுகளுடனும் விசேஷமாக ஜப்பானுடனும் சேர்ந்து கொண்டு விட்டதென்று சொல்லப்படும் வார்த்தைகளைக்கேட்டு அஜாக்ரதையுள்ளவர்கள் ஏமாந்து விடலாம். இப்பொழுது இருக்கும் நிலைமையில் ஜப்பானுக்குத் தேவையானவைகளை ஸியாமிலிருந்து பெற்று விடலாமென்றும் ஸியாமுடைய ஸ்வதந்திரத்தையும் அவர்கள் மதிக்கிறார்களென்று என்னுவதற்கும் மார்க்கமிருக்கிறதென்றும் ஜப்பான் நினைத்து இந்தப் பாசாங்குப் பேச்சுகளை ஆதரித்துவருகிறது. நிலைமை மாறுதலடைந்தால் ஸியாம் சம்பந்தப்பட்ட ஜப்பானின் நடவடிக்கைகளை அது மாற்றிக் கொண்டு விடும். ராஜ தந்திரிகள் ஒருவரை ஒருவர் பாராட்டுவதும் பிரதம மந்திரிகளுக்குள் ஆசி கூறக்கூடிய கடிதப் போக்குவரத்துகள் நடப்பதும்



ராஜ தந்திர வகையிலுள்ள மற்ற ஆடம்பரங்களும் உடன் காலத்திலேயே நின்று விடும். பாங்காக்கிலுள்ள ஜப்பானியத் தூதருக்குப் பதிலாக ராணுவ கவர்னர் ஜெனரல் நியமிக்கப்படுவார். ஸியாமின் பாக்கியுள்ள ஸ்வதந்திர முறைகளும் அகன்று போய் விடும்.

ஜப்பானுடைய எண்ணங்களுக்கு மாறுபாடான அபிப்பிராயங்கள் ஏற்பட்டால் ஸியாம் அவைகளை கவனிக்கிறதில்லை. நடுநிலைமை நாடாகயிருந்து ராஜ்ய தந்திரங்களை நன்றாய் கற்றுக் கொண்ட ஸியாம் எப்பொழுதும் போல் புத்திசாலித் தனமுள்ள மத்யஸ்தம் செய்யக்கூடிய வகையில் ஜப்பானியர்களின் கொள்ளைகளைத் தடுப்பதற்கு சில ஒப்பந்தங்களையும் ஏற்பாடு செய்திருக்கிறது. ஜப்பானுக்கும் ஸியாமில் பூரா ஆதிக்கத்தையும் கையாளப் பிரியம் இல்லை. ஆகையால் சில்லரை விஷயங்களில் ஸியாமின் அரசாங்கத்தாரின் நோக்கத்துக்கு ஜப்பான் இடங் கொடுத்து வருகிறது.

ஜப்பானின் உற்சாகமான போக்குகளில் ஸியாம் பங்கு எடுத்துக் கொள்ளுகிறதில்லை. இது இவ்விரண்டு நாடுகளுக்குமுள்ள சம்பந்தங்களைப் பற்றிய நடவடிக்கைகளில் தான். சில சமயங்களில் ஜப்பான் துவக்கிய விஷயத்தில் ஸியாம் தலையிடுகிறதேயில்லை. சமீபத்தில் மகத்தான வெள்ளப் பெருக்கினால் சேதங்கள் ஏற்பட்ட பொழுது கஷ்டமடைந்த ஜனங்களுக்கு ஜப்பான் பேருதவி செய்ததென்று விஸ்தாரமாகப் பறைசாற்றிற்று. ஸியாமிலுள்ளவர்கள் இதைப் பற்றி கவனம் செலுத்தவேயில்லை.

அவர்கள் உதவியை பெற்றுக்கொண்டார்களே தவிர அதைப்பற்றி பிரமாதமாக வியாக்யானம் செய்ய வில்லை. கல்வி சம்பந்தத்திலும் ஸியாமுடன் ஜப்பானியர்கள் ஒப்பந்தம் செய்து விட்டார்களென்றும் சென்ற டிசம்பர் மாதத்தில் ஸியாமுக்கும் ஜப்பானுக்குமுள்ள கல்வி சம்பந்தமான ஒப்பந்தம் ஊர்ஜிதமாகி விட்டதென்றும் ஜப்பானியர்கள் விளம்பரம் செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான வீண் பீத்தல்களை ஸியாம் அரசாங்கத்தார் பொருட்படுத்துகிறதே கிடையாது.

செய்திகளின் மதிப்பைப்பற்றி ஜப்பானுக்கும் ஸியாமுக்குமுள்ள கொள்கைகளின் வித்யாசத்திற்குச் சரியான உதாரணமாக, பிரிடன் பேரிலும், ஐக்கிய நாடுகள் பேரிலும் ஸியாம் போர் தொடுத்த வருஷ விழாக் கொண்டாட்டத்தை அவ்விருவர்களும் மதித்ததைப் பார்க்கலாம். ஜப்பானுக்கு பிரசாரத்துக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் வாய்த்தது என்ற எண்ணமும் தன்னுடைய எண்ணமும் நிறைவேறிய ஒரு சம்பவத்தின் கொண்டாட்டமென்றும் தோன்றிற்று. ஸியாமுக்கும் ஜப்பானுக்குமுள்ள சம்பந்தங்களின் அபிவிருத்தியைத் தினந்தோறும் வெளியிட்டால் அவர்களுக்குள்ள நட்பு அதிகரிக்குமென்ற தப்பு அபிப்பிராயம் கொண்டு எல்லா பாஷைகளிலும் எல்லா ரேடியோ நிலயங்களிலிருந்தும் அயல் நாட்டிலும் உள் நாட்டிலும் பிரசாரம் செய்ய ஜப்பான் பிரயாசை செய்தது. இதற்கு மாறாக, அந்தச் சந்தர்ப்பத்தில் ஸியாமின் மந்திரியான மார்ஷல் பீபல், மாகாணங்களிலுள்ள ராணுவ ஸ்தாபனங்களைப் பார்வையிடச் சென்றிருந்தார். உத்தியோக முறையில் அன்று பிரசுரம் வெளியிடாததற்கு தலைநகரிலிருந்து அவர் வெளியே சென்றிருந்தது காரணம் என்று விளங்கும்படியாகத் தன்னுடைய சுற்றுப் பிராயணத்தை வருஷ விழா தினத்தன்று ஏற்பாடு செய்துவிட்டார். ஜனவரி 28-ம் தேதியன்று மந்திரி சபையில் ஜெனரல் டோஜா செய்த பிரசங்கத்தை ஸியாமிலுள்ளவர்கள் கொஞ்சமேனும் மதிக்க வில்லை. டோஜா ஸியாமைப் பற்றிப் பேசியதெல்லாம் ஸ்தோத்திரம் என்றே சொல்லலாம்.

இவைகளிலிருந்து நாம் ஒன்று முடிவு செய்யக்கூடும். ஸியாமிய அரசாங்கத்தார் ஜப்பானிய வேண்டுகோளுக்கும் நாட்டிலுள்ள பொதுஜன அபிப்பிராயத்துக்கும் மத்தியில் தந்திரமாக நடந்து கொள்ள வேண்டும். ஐரோப்பாவில் நாஸி நிர்வாகத்துட்பட்ட நாடுகளில் இருக்கும் ஜனங்களின் மனக்கொதிப்பைவிட ஸியாமல் மனக்கசப்பு கொஞ்சம் குறைவாகயிருக்கிறதென்றும் ஜப்பானின் புதிய உலக அமைப்பு ஏற்பாட்டை ஸியாம் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளவில்லையென்றும் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டு தன்னுடைய பூர்ணமான தேசிய ஸ்வதந்திரத்தை அடையும் நாளை ஆவலுடன் ஸியாம் எதிர்பார்த்து வருகிறதென்றும் சொல்லலாம்.

# மத்தியக்கிழக்கு, ஸப்ளை செய்யும் ஸ்தாபனம்.

(பி. பி. ஸி. ஒலிபரப்பு).

இந்தப்பெரிய யுத்தத்தின் மத்தியில் நாங்கள் எகிப்தில் சணல் பைகள் செய்வதிலும், பாலஸ்தீனத்தில் உணவு பங்கீடு செய்வதிலும், மத்தியக் கிழக்கில் பயிரை அழிக்கும் வெட்டுப் பூச்சிகளை நாசம் செய்வதிலும் ஏன் கவனம் செலுத்துகிறோம் என்பதை இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத்தியக் கிழக்குப் பகுதியானது ஒரு ராணுவ முக்கியத்வம் வாய்ந்த பிரதேசமாயிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். மத்தியக் கிழக்கு என்பது கிழக்கு மத்தியதரைக்கடற்கரையிலுள்ள பிரதேசங்கள் ஸிரியா, பாலஸ்தீனம், எகிப்து. தெற்கே, ஏடன், அபிஸீனியா. கிழக்கே, இராக், பெர்ஸியா முதலிய தேசங்கள் கொண்டது.

1941-ம் வருஷம் ஆரம்பத்தில் இந்த தேசங்கள் சாதாரண காலத்தில் ஸப்ளைகள் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து எவ்வளவு தூரத்திலிருந்ததோ அதைப்போல் மூன்று மடங்கு தூரத்தில் இருந்தது. ஏன்? ஐரோப்பா யுத்தத்தினால் வெளி தேசங்களிலிருந்து சம்பந்தம் இல்லாமலிருந்தது. மத்தியதரைக் கடலில் சாதாரணமாக வியாபாரக் கப்பல்கள் போகமுடியாமலிருந்தது. பிரிடனிலிருந்தும் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்தும் கொண்டுவரப்பட்ட சாமான்கள் ஆபிரிக்காவில் நன்னம்பிக்கை முனையைச்சுற்றி வெகு நீளமான கடற்பாதை வழியாய் வரவேண்டியிருந்தது. அதாவது உலகத்தைச்சுற்றி பாதிதூரம் செல்லவேண்டியிருந்தது. இந்த மாதிரி பெரிய கப்பல் பிரயாணத்தில் அதிகக் கப்பல்கள் வேண்டியிருக்கும் என்பது உங்களுக்கு நன்கு விளங்கும். ஒரு கப்பல் கொண்டுபோகக்கூடிய சாமான்கள் பிரயாணத்தின் நீளத்தையும் பொருத்திருக்கிறது.

ஆகையால் ஸப்ளைகள் உற்பத்தியாகும் பிரதேசங்களிலிருந்து 12,000 அல்லது 13,000 மைல்களுக்கு அப்பால் ஒரு மிகப்பெரிய பிரதேசத்திற்கு, கப்பல் வசதிகள் இல்லாமல் ஸப்ளைகள் அனுப்புவது எவ்வளவு கடினமான விஷயம்! இந்த பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் யுத்தப் போக்குவரத்து விஷயங்களை கவனிக்க ஒரு மந்திரி நிலயம் ஏற்படுத்தப்பட்டது. அதன்வேலை மத்தியக் கிழக்குக்கு ஸப்ளைசெய்யும் வேலைக்குத் திட்டம் ஏற்படுத்துவது. ஏன் பிரிடிஷ் மக்களான நாங்கள் இந்தப் பிரதேசத்திற்கு எல்லா முக்கிய விளைபொருள்கள் ஸப்ளை செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்? அந்தப் பிரதேசத்தில் உள்ள எல்லா தேசங்களும், எங்களுக்கு ஒத்தாசை செய்வதால் நேசதேசங்களும் அவர்களுக்கு உதவி செய்யக் கடமைபட்டிருக்கிறோம். இந்தப்பகுதியில் சேனைகளையும் வைத்திருக்கிறோம். அங்குள்ள ஜனங்களுக்கு ஆகாரங்கள் ஸப்ளைகள் தேவையாயிருக்கின்றன. அதை நாங்கள் அனுப்புகிறோம். நமது சத்துரு அவர்களின் அயலான் தேசங்களிலுள்ள எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு அந்த ஜனங்களை பட்டினி கிடக்கும்படி செய்கிறார்கள். ஆனால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை.

ஆகையால் வெவ்வேறு விதமான பல தேசங்களுக்கு நாங்கள் அவைகளுக்குள்ள தேவைகளை அறிந்து ஸப்ளைகள் அனுப்பு திட்டம் போடுகிறோம். முதலில் எல்லா திட்டங்களும் லண்டனில் போடப்பட்டன. ஆனால் வெகுசீக்கிரமாக காரியம் நன்கு நடைபெற எந்த இடத்துக்கு ஸப்ளைகள் செல்லவேண்டுமோ அந்த இடத்திலேயே திட்டம் போடுவதற்கு ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தோம். ஆகையால் அதை ஏற்படுத்தி அதற்கு மத்தியக் கிழக்கு ஸப்ளை செய்யும் ஸ்தாபனம் என்ற ஒரு சாதாரணமான ஆனால் பொருத்தமான பெயரிட்டோம்.

அது கெய்ரோவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இரண்டு முக்கிய வேலைகள். முதலாவது அந்த இடங்களை எவ்வளவு தங்களுக்குள்ளே ஸப்ளைகளை உற்பத்தி செய்து உபயோகிக்கமுடியுமோ அவ்வாறு செய்வது; இரண்டாவது வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்கள் அங்குள்ள ஜனங்களுக்கு அவசியமான சரியான சாமான்கள்தானா என்பதை சரிபார்ப்பது; கப்பல் போக்குவரத்துக்குச் சௌகரியமான இடங்களிலிருந்து சாமான்களைத் தருவிப்பதுதான்



முக்கியமாக கவனிக்கவேண்டியது. எது சாமான்களை உபயோகப்படுத்தும் இடமோ அந்த இடத்துக்கு அருகில் இருக்கும் உற்பத்தி ஸ்தலம்தான் சௌகரியமாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது எப்பொழுதும் சரியாக இருக்காது. ஒரு சிறிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து லாரி மோட்டார்களும், எஃகு வேறு ஏதாவது ஒரு உற்பத்தி ஸ்தலத்திலிருந்து கொண்டுவர வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். எஃகு கனமுள்ளது, ஆனால் இடத்தை அடைக்காது. ஆனால் லாரிகள் இடத்தை அடைக்கக்கூடியவை. ஆனால் அவைகளுக்கு கனம் அதிகமில்லை. எப்படியும் லாரிகள் கப்பலில் வந்தாக வேண்டும். ஆகையால் யுனைடெட் ஸ்டேட்ஸ் 12,000 மைல் தூரத்திலிருந்தாலும் அந்த கப்பலிலே எஃகையும் போட்டுக்கொண்டுவரலாம். 1,000 மைலில் உள்ள ஒரு அருகிலுள்ள உற்பத்தி ஸ்தலத்திலிருந்து கொண்டுவர, மற்றொரு கப்பலைத் தனியாக அனுப்பவேண்டியிருக்கும். இது ஒரு சிறிய உதாரணம். இதைவிட எவ்வளவோ சிக்கலான விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இது நாம் எப்பொழுதும் ஒரு திட்டப்படி காரியம் செவ்வையாக நடத்த முடியாது என்பதைக் காண்பிக்கிறது.

## விவசாய திட்டம்.

நமது முக்கிய நோக்கம் ஒரு பிரதேசத்தில் எவ்வளவு அதிகம் சாகுபடி அல்லது உற்பத்தி செய்யமுடியுமோ அவ்வளவு சாகுபடி அல்லது உற்பத்தி செய்வது. அதாவது முன் பஞ்சு உற்பத்தி செய்தால் அந்த இடத்தில் கோதுமை பார்லி முதலிய சாப்பாட்டுக்கு வேண்டிய தானியங்கள் பயிரிடுவது ஒரு நாட்டின் விவசாய முறையை மாற்றுவதென்பது கடினமான விஷயம். அதுவும் சாகுபடி செய்வார்கள் மிக எளிய குடியானவர்களாக இருக்கும் தேசத்தில் இது மிகக் கடினம். இதுமாதிரியான ஒரு தேசம் எகிப்து. அங்கு ஒரு குடியானவன் ஒரு ஏக்கராவுக்கு குறைந்த இடம்தான் சாகுபடி செய்துகொண்டிருக்கிறான். இப்பொழுது யுத்தத்திற்குமுன் பஞ்சு எவ்வளவு உற்பத்தியானதோ அதில் மூன்றில் ஒரு பங்குதான் இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகிறது. தானியங்கள் அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகிறது. இது ஒரு பெரிய காரியம் என்பதை சொல்லவேண்டிய அவசியமில்லை.

தானியங்கள் உற்பத்தி செய்வது மாத்திரம்போதாது. அதை நன்கு பாது காக்கவேண்டும். அந்தப் பிரதேசத்தில் வெட்டுப் பூச்சி தானிய உற்பத்திக்கு ஒரு சத்துரு. அவைகள் பெரிய தேசங்களில் உள்ள தானியங்களை அழிக்கிறது. அதனால் ஜனங்கள் பட்டினிகிடக்கவேண்டியிருக்கிறது. அவைகள் ஒரு இடத்தில் உற்பத்தியாகி பல இடங்களில் சென்று அழிகின்றன. அவை கோடை காலத்தில் வடமேற்கு இந்தியாவில் உற்பத்தியாகின்றன. மழை காலத்தில் பெர்ஸியாவுக்குச் செல்லுகின்றன. அங்கிருந்து அராபியா, எகிப்து, கீழ் ஆபிரிக்கா முதலிய இடங்களுக்குச் செல்லுகின்றன. ஆகையால் இவைகளின் உபத்திரவத்தை அழிக்க ஒரு வழிதேடும் வேலையை அந்த ஸப்ளை ஸ்தானத்தின் ஒரு பகுதி கவனிக்கிறது. அதாவது அவைகள் எந்தெந்த தேசங்களில் காணப்படுகின்றனவோ எங்கு செல்லுகின்றனவோ அந்த தேசங்களில் அவைகளை பரவவொட்டாமல் அழிப்பது ஆகாய விமானங்களிலிருந்து விஷ மருந்தை தெளிப்பது அல்லது பூச்சிக் கூட்டங்களை குழிக்குள் தள்ளி அவைகளை எரிப்பது, இந்த வேலையில் நிபுணர்கள் ருஷ்யாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும், பர்ஸியாவிலிருந்தும், அராபியாவிலிருந்தும், வந்து ஒற்றுமையாக உழைக்கிறார்கள். இந்த ஸ்தாபனத்தில் தற்கால ஸயன்ஸில் வெகு உயர்ந்த நிலையை அடைந்ததற்கு இது ஒரு உதாரணம்.

இந்த எல்லா வேலைகளின் நோக்கம் ஒவ்வொரு தேசத்தின் உற்பத்தியை அதிகப்படுத்துவது. ஆனால் ஸப்ளைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தில் அந்த பிரதேசங்கள் எல்லாவற்றையும் ஒரு பகுதியாகக் கருதவேண்டும். ஆகையால் அந்தப் பகுதியிலுள்ள தேசங்களுக்குள் ஒன்றுக்கொன்று விளைபொருள்களை மாற்றிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது இதுவரையில் வியாபாரம் செய்த மார்க்கங்களை அதற்குத் தகுந்தாற்போல் மாற்றுவது. இதுவும் சுலபமான காரியமில்லை. சில இடங்களில்போய் இன்ஸ்பெக்டர் சரக்குகள் சேகரிப்பை விசாரித்துக்கொண்டுவருவது மிகவும் கஷ்டமான காரியம். அவருக்கு சமயோஜித

புத்தியும் சீக்கிரமாக காரியம் செய்யும் திறமையும் விஷயத்தை நன்ருகக் கிரகிக்கக்கூடிய சக்தியும் இருக்கவேண்டும். இவ்வளவு கஷ்டங்கள் இருந்த போதிலும், மத்தியக் கிழக்கு ஸப்ளை செய்யும் ஸ்தாபனம் தன் கீழுள்ள எல்லா தேசங்களின் உற்பத்திகளையும் அவைகளுக்கு அவசியமாக வேண்டிய பொருள்கள் எவ்வளவு என்பதையும் நிர்ணயிக்கிறது.

### இறக்குமதி.

இந்தக் காரியங்களெல்லாம் ஆனபின்பு, வெளியிலிருந்து எவ்வளவு பொருள்களைக் கொண்டுவர வேண்டும் என்று ஒரு அடக்கமான விவரத்தை முன்னமேயே ஏற்படுத்துகிறது. ஏனென்ருல், சரக்குகளை முன்னமேயே தருவிக்க ஏற்பாடு செய்தால்தான், பல மாதங்களுக்குப்பிறகு அவைகள் வந்துசேரும். ஒரு வருஷகாலமாக, இந்தப் பிரதேசத்தில் சரக்குகள் கணக்கில்லாமல் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதற்குக் காரணம் 1941-ம் வருஷத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அது எங்கள் ஸ்தாபனத்தையும், கப்பல் வசதிகளையும் எவ்வளவோ, சிரமங்களுக்கு உள்ளாக்கியது. தானிய வகைகளைப் பெற்று அதை அந்தப் பிரதேசத்திற்கு கொண்டுபோவது மாத்திரமல்ல. ஜனங்கள் நம்பிக்கை இழந்தனர். ஆகையால் ஜனங்கள் ஆகார வகைகளை மறைத்துவைத்து சேகரிக்க ஆரம்பித்தனர். ஒரு இடத்தில் கோதுமை கிடைக்காமல் இருந்தது; அந்த தேசத்தில் கிடைக்கும், 'காண்டு' என்ற பழங்களை ஏற்றுமதி செய்ய இயலவில்லை. ஆகையால் அங்கு உள்ள ஜனங்கள் அந்தப் பழங்களிலிருந்து செய்த ஒரு வகையான ரொட்டியை சாப்பிட வேண்டியிருந்தது.

இதிலிருந்து ஒரு பெரிய பிரச்னை கிளம்பியது. அதாவது அவசியமில்லாத சாமான்களை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்துவது. அவசியமான சாமான்களைச் சமமாகப் பிரித்துக் கொடுப்பது. பாலஸ்தீனத்தில் பங்கிடு செய்ய முடியும். ஆனால் அதே விதமாக நாடோடி ஜனங்களுக்கு (உதாரணமாக போடன் அராபியாவில்) பங்கிடு செய்வது சிரமமான காரியம். ஆகையால் ஒவ்வொரு காரியத்தையும் அவற்றின் யோக்யதாம்சங்களின்படி தீர்மானிக்கவேண்டும்.

### யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரதிநிதி.

யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து இங்கிலாந்தில் இருக்கும் அந்த தேசத்தின் ராஜ தூதரின் சகோதரர் மிஸ்டர் ப்ரெடரிக் வினன்ட் என்பவர் இந்த ஸ்தாபனத்துக்குப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டிருக்கிருர். இதனுல் எங்களுக்கு உதவியாக இருக்கிறது தைரியம் அளித்திருக்கிறது. இந்த ஸ்தாபனத்தில் அமெரிக்க ராணுவத்திற்கு ஜெனரல் மாக்ஸ்வெல் பிரதிநிதியாக இருக்கிருர். சாமான்கள் அநேகமாக யுனைடெட் ஸ்டேஸ்ஸிலிருந்து வருவதால் அந்த தேசத்தின் பிரதிநிதி ஒருவர் இருந்து இந்த வேலையில் உதவியளிப்பது மிகவும் பொருத்தமாகும்.

இது ஆரம்பித்த பிறகு யுத்த மந்திரி சபையிலிருந்து மந்திரி ஒருவர் மத்தியக் கிழக்கில் இருக்கிருர். முதலில் ஆலிவர் லிட்டில்டன் இருந்தார். இப்பொழுது R. G. கேஸி இருக்கிருர். அந்த இடத்திலிருந்து நாள் தோறும் இது விஷயமான திட்டங்களை வகுத்து புத்திமதியளிப்பது உபகாரமாக இருக்கிறது.

இந்த ஸ்தாபனம் பொதுஜனங்களுக்கு மாத்திரம் உதவியளிக்கிறது என்று எண்ணக்கூடாது. ராணுவத்திற்கு வேண்டிய ஸப்ளைகளையும் முக்கியமாக உணவுப் பொருள்களையும் பற்றி திட்டம்போட்டு அனுப்புகிறது. ஸ்தாபனத்தில் ராணுவ அதிகாரிகளும் சாதாரண உத்தியோகஸ்தர்களும் இருக்கிருர்கள். இந்த ஸ்தாபனம் பண்டங்களை வாங்குவது, விற்பது முதலியவைகளை கவனிக்கிறதில்லை. இவைகளைச் செய்வதற்கு வேறு ஸ்தாபனங்கள் முக்கியமாக 'யுனைடெட் கிங்டம் கம்மர்ஷியல் கார்ப்பரேஷன்' முதலியவை இருக்கின்றன.

### ஸ்தாபனத்தின் முக்கியம்.

இவ்விதமாயில் இந்தப் பெரிய காரியாலயத்தின் வேலையைச் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியாக வேலை செய்தால் உலகத்தின் ஒரு பெரிய பகுதியின் ஜனங்கள் க்ஷேமமாக இருப்பார்கள். நமக்கு ஜயம் வெகு சீக்கிரமாக



கிடைப்பதை துரிதப்படுத்தும். இந்த தேசங்களும், நேசதேசங்களும் ஒருவரையொருவர் உதவிசெய்து கொண்டிருக்கிருர்கள்.

இந்தப் பிரதேசங்களில் உள்ள ஜனங்கள் இந்த ஸ்தாபனத்தின் உதவி இல்லாமல் இந்தக் கஷ்டமான நிலைமையில் முக்கியமான பொருள்களை அடைய முடியாது. இந்த ஸ்தாபனம் அவர்களின் தேவைகளை அறிந்துகொண்டு அவைகளை ஸப்ளை செய்கிறது.

ஏதோ காலங்களின் போக்கால் எங்களுடைய உதவியை நாடும் 8 கோடி மக்களுக்கு நாங்கள் எங்கள் கடமையைச் செய்வதற்கு இந்த ஸ்தாபனம் ஒரு உதவியாகயிருக்கிறது. நமது சத்ருரு 'எங்கு சென்ருலும் அழிப்பதும், அகப்படுவதைப் பிடுங்குவதும் வெறுப்பை உண்டாக்குகிருர்கள். அவற்றிலிருந்து சேனையிலுள்ளோர்களைக் காப்பாற்றி அவர்கள் பயமில்லாமல் வேலை செய்யும்படி செய்ய இந்த ஸ்தாபனம் உதவியளித்திருக்கிறது.

---

## பாரஸீக—இராக் சேனை.

(டைம்ஸ்).

நமது எட்டாவது சேனை டிரிபோலியை நெருங்கிக் கொண்டிருப்பதால் மத்தியக்கிழக்கின் மேற்குப் பாதியின்மேல் நமது கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த சமயத்தில் இந்தப் பெரிய யுத்த அரங்கத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு திறமைவாய்ந்த பிரிடிஷ் சேனை இருந்துகொண்டிருப்பதை மறந்து போகக்கூடும்.

போன ஆகஸ்டு மாதம் நிலைமை கடுமையாக இருக்கபொழுது ஏற்படுத்தப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பலப்படுத்தப்பட்டு ஜெனரல் ஸர் ஹென்ரி மெயிட்லண்டு வில்சன் தலைமையின்கீழ் பாரஸீக—இராக் சேனை என்ற பெயருடன் (சுருக்கமாக பா. இ. சேனை) இருந்துவருகிறது. அந்தக் காலத்தில் ரோமலின் சேனை எகிப்தை மிரட்டிக்கொண்டு அலமீன் அரணை தாக்கிக் கொண்டிருந்தது. ஆகையால் ஜெனரல் ஆசின்லெக்கின் சேனைக்கு உதவியாக பாலஸ்தீனத்திலிருந்த பத்தாவது சேனையிலிருந்தும் ஸிரியாவிலிருந்த ஒன்பதாவது சேனையிலிருந்தும் அவைகளில் அநேக பகுதிகளையும் யுத்த தளவாடங்களையும் அனுப்பவேண்டியது அவசியமாயிருந்தது. அதே சமயத்தில் காகஸஸின் வழியாக ஜெர்மானியர்கள் தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்ததால், பாரஸீகத்தின் தென்பகுதியிலுள்ள முக்கிய எண்ணெய்க் கிணறுகளுக்கு ஒரு பெரிய அபாயம் ஏற்பட்டிருந்தது. இதை எதிர்க்கும் பொருட்டும், மத்தியக்கிழக்கு சேனுதிபதிக்கு இரண்டு தனியாக அரங்கங்களைக் கவனிக்கவேண்டிய அவசியத்தை நிவர்த்திக்கும் பொருட்டும், பா. இ. சேனை ஒரு தனி தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டது.

### இரண்டு காரியங்கள்.

பா. இ. சேனையின் காரியாலயத்தின் தலைமையிலிருக்கும் மேஜர் ஜெனரல் பெயில்லன் எழுதியிருக்கும் பிரகாரம் அந்தக் காலத்திலிருந்து பா. இ. சேனை மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது என்று தெரிகிறது. பலப்படுத்தப்பட்ட பத்தாவது சேனையைத் தவிர, இப்பொழுது மிகவும் சக்திவாய்ந்த பெரிய போலந்துப் படையொன்று இருக்கிறது. இந்தச் சேனைகளின் கூட்டங்களினுலும் அவைகளை நிறுவகிப்பதினுலும் ஏற்பட்ட பல சிக்கல்களை வெகு திருப்திகரமாகச் சமாளித்திருக்கின்றனர்.

பா. இ. படைக்கு இரண்டு வேலைகள் இருக்கின்றன. முதலாவது, பாரஸீக எண்ணெய்க் கிணறுகளை நில விமானத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் முறையைப் பலப்படுத்துவது. இரண்டாவது, ருஷ்யாவுக்கு உதவியளிப்பதற்கு பாதைகளை அதிகமாக உபயோகப்படுத்துவது.

காகஸஸிலிருக்கும் ஜெர்மானியத் துருப்புகளினுல் பாரஸீகத்துக்கு அபாயம் ஏற்பட்டிருந்த காலத்தில், மிகக்குறைவான சௌகரியங்களைக்கொண்டு முக்கியமாக வேண்டிய போக்குவரத்து சாதனங்களை ஏற்படுத்துவதையும், சேனையைப் பலப்படுத்துவதையும் முதலில் முக்கியமாக கவனிக்கவேண்டியிருந்தது. அதாவது பாதைகள், கப்பல் துறைமுகங்கள், ரயில் பாதைகள், கிடங்குகள் முதலியவைகள் விரிவாக்கப்பட்டு கட்டப்பட்டன.

ஜெர்மானியர்களின் வேகம் குறைந்தது. ஆகையால் அவர்கள் 'பாகு'வை அடைவதற்குள் ஜெனரல் வில்சனுக்கு தன்னுடைய சேனையைப் பலப்படுத்த அதிக அவகாசம் கிடைத்தது. இப்பொழுது ஜெர்மானியர்கள் காகஸஸில் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பா. இ. சேனையில் அதிக பலமுடையதாக ஆகிவிட்டது. ருஷ்யாவுக்கு உதவி அனுப்புவதற்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது.

### நீண்ட காலத்திற்குப் போடப்பட்ட திட்டம்.

ஜெனரல் பைல்லன் சொன்னதாவது:—"அபாரமான ருஷ்ய வெற்றிகள் சத்துருவினிடமிருந்து நெருங்கிய பயத்தை வெகு மாதங்களுக்குப் பிறகுத் தள்ளிப் போட்டுவிட்டது".

முதலில் ஒரு தற்கால ஏற்பாடு அவசியமாய் தோன்றினாலும், சிறிது சாவகாசம் கிடைத்ததால் ஒரு பெரிய நீண்ட காலத்திற்கு பரிபூரணமான திட்டத்தைப்போட நம்மால் இயன்றது.

"இராக் தேச ஜனங்களுக்கும் நமக்கும் ஒற்றுமை அதிகமாகவே இருந்து வருகிறது. இப்பொழுது அவர்கள் நமது சத்துருவின்மேல் போர் தொடர்ந்து விட்டனர். ஒரு சிறிய ஆனால் மிக சாமர்த்தியமான இராக் சேனைக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. அந்த சேனை இராக் தேசத்து மலைகள் குன்றுகள் இவைகளில் போர் நடவடிக்கைகளை நடத்த சாமர்த்தியமுள்ளதாக ஆகிவருகிறது.

"பா. இ. சேனை ஒரு முதல்தரமான சேனையாக இருக்கிறது. இதைக் கொண்டு தற்பொழுது நாம் பாரஸீகத்தையும், இராக்கையும் பாதுகாக்க முடியும், சிறிது காலத்திற்கெல்லாம் அவைகளை வேறு இடத்தில் சண்டைசெய்ய அனுப்பலாம்".

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 136. (1-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6- 3-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 10- 3-43 | ராணி பெண்பாட்சாலை | காலை | 10.15 |
| 7- 3-43 | பூவரசகுடி ... | ,, | 7.00 | ,, | காலேஜ் B தமிழ் ... | ,, | 10.15 |
| ,, | வேங்கடகுளம் ... | ,, | 7.30 | ,, | மிரட்டுநிலை ... | மாலை | 7.00 |
| 8- 3-43 | பெருங்களூர் ... | ,, | 7.00 | ,, | அரிமளம் ... | ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை... | ,, | 7.30 | 11- 3-43 | பூங்குடி ... | ,, | 7.00 |
| 9- 3-43 | கீரனூர் ... | ,, | 7.00 | ,, | சத்தியமங்கலம் ... | ,, | 7.30 |
| ,, | நாஞ்சூர் ... | ,, | 7.30 | 12- 3-43 | உடையாளிப்பட்டி | ,, | 7.00 |
| 10-3-43 | C.S.M. பள்ளிக்கூடம். | காலை | 10.00 | ,, | கிள்ளுகோட்டை ... | ,, | 7.30 |

### பிரஸங்கம் 136. (2-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13- 3-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 17- 3-43 | கொடும்பாளூர் ... | மாலை | 7.00 |
| 14- 3-43 | குடுமியாமலை ... | ,, | 7.00 | ,, | விராலிமலை ... | ,, | 7.30 |
| | பாம்பூர் ... | ,, | 7.30 | 18- 3-43 | களமாவூர் ... | ,, | 7.00 |
| 15- 3-43 | வெங்களூர் ... | ,, | 7.00 | ,, | கல்லூர் ... | ,, | 7.30 |
| ,, | கோனுபட்டு ... | ,, | 7.30 | 19- 3-43 | பனையப்பட்டி ... | ,, | 7.00 |
| 16- 3-43 | கச்சாரந்தபட்டி ... | ,, | 7.00 | ,, | ராங்கியம் ... | ,, | 7.30 |
| ,, | விராச்சிலை ... | ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 6— 3—43 | திருமயம். | 13— 3—43 | பொன்னமராவதி. |
| 7— 3—43 | மருதன்கோன்விடுதி. | 14— 3—43 | எம்பல். |
| 8— 3—43 | முள்ளங்குறிச்சி. | 15— 3—43 | கொன்னையூர். |
| 9— 3—43 | சோனுபட்டு. | 16— 3—43 | ராமச்சந்திரபுரம். |
| 10— 3—43 | கீழாநிலை புதுப்பட்டி. | 17— 3—43 | காரம்பக்குடி. |
| 11— 3—43 | ஆலங்குடி. | 18— 3—43 | கீழாநிலை. |
| 12— 3—43 | பாப்பாபட்டி. | 19— 3—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—9-3-43.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருடம் மார்ச்சுமீ 13உ [நெ. 137

பிரஸங்கம் CXXXVII.

## நாஸி கட்டுக் கதைகளுக்கு விநாசம்.

(ஸாமுவல் கிராப்டன்).

ஜெர்மன் துருப்புகளையும் ஜெர்மன் கொள்கைகளையும் நாம் அழிக்க முயலுகிறோமென்று ஜெர்மானியர்கள் சதாகாலமும் ஞாபகத்திலிருத்தி வைக்கவேண்டும். உதாரணமாக ஜெர்மானியர்கள் யூதர்களைத் துலைத்து விட்டார்கள். ஆனால் ஜெர்மனிக்கு ஏற்படக்கூடிய தொந்தரவுகளை அகற்றிவிட முடியவில்லை. யூதர்களைத் தொலைக்கவேண்டுமென்று சொல்லும் மனப்பான்மையின் அசட்டுத்தனம் இப்பொழுது பரிசீலனைக்குள்ளாகியிருக்கிறது. நாஸிகளின் கொள்கைகளின் திட்டப்படி ஜெர்மானியர்களின் கத்திகளில் யூதர்களின் இரத்தம் தோய்ந்திருக்கிறது. அதன் பயனென்ன. நாஸிக்கொள்கை பிரகாரம் ஸ்டாலின் கிராட் பிடிபட்டிருக்கவேண்டும். மேற்படி நகரத்தைப் பிடிப்பதற்கு தடங்கல்செய்ய ஜெர்மனியில் யூதர்களே இல்லாதபொழுது அது ஏன் பிடிபடவில்லை. ஜெர்மனியின் தலைவர்களின் யோசனை என்னகதியாயிற்று.

பிரான்ஸ் தோல்வியுற்றபொழுது அதன் வீழ்ச்சிக்கு, ஜன சமூகத்திற்காக நிறுவப்பட்ட சட்டதிட்டங்களும், வாரத்தில் 44-மணிகள் மட்டும் வேலைசெய்வதும், பிரெஞ்சு ஜனங்கள் யுத்த ஆடைகளை அணிந்து பயிற்சி பெறுமல் வெளியில் இளம் மாதர்களுடன் பொழுது போக்கியதும்தான் காரணம் என்று ஆயிரக்கணக்கான தடவை பிரசங்கம் செய்யப்பட்டது. ஆனால் ஜெர்மனியின் கஷ்டங்களுக்குக் காரணம் யாதென்று யாராகிலும் சொல்லுவார்களாவென்று அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

வாரத்தில் 44-மணி வேலைசெய்யும் திட்டம் ஜெர்மனியில் இல்லை. அல்லது இளம் பெண்களுடன்கூடி விளையாடுவதும் காரணமில்லை. ஏனென்றால் வெளியில் குதூஹலத்திற்குப் பதிலாகக் கொலைகள் நடைபெற்று வருகின்றன. கபடமன்னியில் வேலைசெய்யும் தொழிலாளிகளின் தலைவர்களும் அநியாயமாக பணம் சம்பாதிக்கிறவர்களும் காரணமில்லை. ஜெர்மனியில் தொழிலாளிகள் தலைவர்களே இல்லை. ஆனால் என்ன காரணமென்று யோசிப்போம்.

நாஸி கட்டுக்கதை யாதெனில், 1918-ல் ஜெர்மன் படைகள் பின்வாங்குவதற்குக் காரணம் தாராளமான மனப்பான்மையும் ஜனநாயகமும் ஜெர்மனியில் பரவ ஆரம்பித்து தேசத்தைப் பாழாக்கிவிட்டது என்பது. இப்பொழுது உள்நாட்டில் மேலே சொல்லிய நிலைமை ஏற்படாதபடி தீவ்ர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அப்படியிருந்தும் ஜெர்மன் துருப்புகள் மறுபடியும் பின்வாங்குவது ஏன்? இது சம்பாவிதமில்லையே. தங்கள் ஜாதியைக் கலப்பன்னி

யில் பரிசுத்தம்செய்து கொண்டபிறகு, தேசஸ்தார்களும், தேசமும் ஒருவகைப்பட்டதென்ற நம்பிக்கை உண்டானபிறகும், ஜெர்மனியில் ஒரே பார்லிமெண்டு, ஒருவகைப்பட்ட ஜனங்கள், ஒரே ஹிட்லர் இருக்கும்படி செய்துவிட்ட பிறகும் ஜெர்மானியர்கள் போர்முனையில் ஏன் பின்வாங்குகிறார்கள். ஜெர்மன் பத்திரிக்கைகாரர்களில் ஒருவர்கூட, ஜனநாயகக் கொள்கைகளுள்ளவராகவும், கார்ல்மார்க்ஸ்க் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் யூதர்களாகவுமில்லை. ஜெர்மனியில் யாராவது பேசத்தொடங்கினால் உடனே முஞ்சியில் அடிவிழுந்துவிடும். இப்படியிருந்தும் 1918-ம் வருஷத்தில் செய்ததைவிட அதிவேகமாக ஜெர்மானியர்கள் இப்பொழுது பின் ஓடுகிறார்கள். ஜெர்மன் ஸ்திரீகள் கிருஹகிருத்யம் செய்து வருகிறார்கள். ராஜீய விஷயங்களில் ஈடுபடவில்லை. அப்படியிருந்தும் யுத்தப் போக்கில் ஒரு மாறுபாடும் இல்லையே. இது ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது.

20 வருஷங்களாக ஐரோப்பாவின் ராஜீயக் கொள்கைகளுக்கு எதிரிடையாக பகுத்தறிவற்ற முரட்டுத்தனமான ஏற்பாடுகளின் அசந்தர்ப்பங்களெல்லாம் இப்பொழுது வெளிப்படுகின்றன. யூதர்கள் அழிக்கப்பட்டு வருகிறார்கள். ஜெர்மனிக்கு ஏற்படப்போகும் தோல்விக்கு இனிமேல் எந்த யூதர்களை வதைக்கக் கூடும்.

இவ்விதமான முட்டாள்தனமான கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களே இவைகள் தப்பெண்ணங்கள் என்று நமக்குக் காண்பித்த ஜெர்மானியர்களுக்கு வரும்காலத்தில் நன்றிசெலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சம்பந்தமில்லாத காரணங்களைச்சொல்லி அதை நம்பி மோசம்போன ஜெர்மானியர்களுக்கும் நமது வந்தனம் உரித்தாகும்.

## வார யுத்தச் செய்திகள்.

### 6—3—43-லிருந்து 12—3—43-வரை.

**ருஷ்யா.**—ஸோவியத் யுத்த தந்திரம் எல்லாக்காலங்களுக்கும், அதாவது பனி உருகும் காலம், பனி பெய்யும் காலமென்று நிறுவப்பட்டிருக்கின்றது. தெற்குப் போர்முனையில் பனி உருக ஆரம்பித்ததிலிருந்து முன்னேற்ற வேகம் தடைப்பட்டுவிட்டாலும் ருஷ்யாவின் முன்னேற்றம் மத்திய முனையில் துடரப்பட்டு இருக்கிறது. இங்கே இன்னும் பனிபெய்கிறது. தரை கெட்டியாகயிருக்கிறது. மத்தியப் போர் முனையில் மாஸ்கோவுக்குப் போவதற்கு முன் போக்கான ஸ்தலமாயும் முக்கோணவடிவமுள்ளதான ரிஷேவ், கிஸாஸ்ட்க், வியாஸ்மா ஆகிய இடங்களை ஜெர்மானியர்களிடமிருந்து கைப்பற்றுவதுதான் ருஷ்யாவின் முதல் திட்டம். அவைகளில் முதல் இரண்டு நகரங்களும் பிடிபட்டுவிட்டன. அவைகளை கைப்பற்றிய விபரம் பின்வருமாறு. தெற்குப் போர்முனையிலிருந்து மத்திய அரங்கத்திற்கு அனுப்பப்பட்ட மார்ஷெல் டிமோஷெங்கோ திடீரென்று ஸ்டாயாருஸாவுக்கும், கோல்முக்கும் மத்தியில் இல்மென் ஏரிக்குத் தெற்கேயுள்ள டெமியான்ஸ்க் என்னும் ஸ்தலத்தைத் தாக்கினான். எதிரிகள் திரும்பித் தாக்குமுன் மறுபடியும் தாக்கி அவன் ரிஷேவைப் பிடித்து விட்டான். வியாஸ்மாவை நோக்கி மறுபடியும் முன்னேறி ஒலெனினோ, கொர்ட்டாவினோ, கிஸாட்ஸ் (மார்ச்சு 5-ம் தேதி) சிகாவ்கா (மார்ச்சு 8) முதலிய இடங்களைக் கைப்பற்றினான். மூன்றுவது அரணை வியாஸ்மாவும் விழுந்துவிட்டது. ஜெர்மனியின் மத்திய தளமாகிய ஸ்மாலன்ஸ்க் ஆபத்துக்குள்ளாகிவிட்டது.

மாஸ்கோவுக்குத் தெற்கில் ஓரல் பிரதேசத்தை சுற்றிவளைத்துக்கொள்ளுவதற்காக பிரியான்ஸ்க்குக்கும் குர்ஸ்க்குக்கும் மத்தியில் மற்றொரு ருஷ்ய எதிர்ப்பு ஆரம்பிக்கப்படுகிறது. முதல் படியாக பிரியான்ஸுக்குத் தெற்கே 70 மைல்கள் தூரத்திலுள்ள செவ்ஸ்க் என்னும் இடம் பிடிபட்டுவிட்டது.

தெற்கே பிதோவ்ஸ்ன ஸ்திதியால் கார்கவ்வுக்கு மேற்கே ருஷ்யாவின் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது. ரஸ்தாக்களின் நிலைமை மோசமாகயிருக்கிறது.



டான்பாஸ் நதி பிரதேசத்தில் ஜெர்மன் முன்னேற்ற வேகத்தின் பயனாக கிராஸ்னோகிராட், லாஸோவாயா, பாவலோகிராட், கிராஸ்நோவார், மெயிஸ்க், கிரமடார்ஸ்காயா, பெரவான்கோவா, ஸ்லாவியான்ஸ்க், லிஸிசான்ஸ்க் முதலிய இடங்களை ருஷ்யர்கள் காலிசெய்து விட்டார்கள்.

காகஸஸ் யுத்தம் அநேகமாக முடிவடைந்துவிட்டது. கொர்ச் ஜலசந்தியிலுள்ள ஒரு சிறிய தளத்தைத் தவிர மற்றெல்லா பிரதேசத்தையும் எதிரிகளிடமிருந்து ருஷ்யர்கள் திரும்பிப் பிடித்துவிட்டாகள்.

**டுனிஸியா.**—ரோமலின் யுத்த தந்திரம் வெளியாகிவிட்டது. முடிந்த வரையில் எதிரிகளை முன்போக்காகத் தாக்கவேண்டுமென்ற முறையைக் கையாளுகிறான். குறைந்த படை பலத்துடன் பலஹீனத்தைச் சரிப்படுத்துவதற்காக, வேகமாக நடமாடுவதும், வடக்கு, மத்தியம், தெற்குப் போர்முனையில் திடீரென்று பலமாகத் தாக்குவதுமாக விளையாடுகிறான்.

முதல் பிரயத்தனமாக மத்தியப் போர்முனையிலுள்ள டெபெஸ்ஸா என்னும் நேசநாட்டுத் தளத்தை அவன் தாக்கினான். அங்கே, பெரியானா, கஸ்ஸெரைன், ஸ்பீட்லா முதலிய இடங்களிலிருந்து சென்ற வாரத்தில் துரத்தப்பட்டு இந்த வாரத்தில் ஸித்தி பௌஸித், பிச்சன் (மார்ச்சு 5) முதலிய இடங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்டு விட்டான்.

தெற்கு முனையில் நேசதேசத் துருப்புகள் மிடிஸ், ரெப்தா, ராடியேட், டாஸியூர் முதலிய இடங்களிலிருந்துகொண்டு ரோமலைச்சுற்றி வளையத்தை அமைக்கிறார்கள். மாண்ட் காமரியின் படையின் தெற்கு விலாப்பக்கத்தில் ரோமல் செய்த இரண்டு தாக்குதல்களும் வீணாகப்போய்விட்டன. மாட்மாடகுன்றுகளுக்குக் கிழக்கேயுள்ள ஜபால் செயிக்ரா குன்றைக் கைப்பற்ற வேண்டுமென்பதுதான் ரோமலின் தாக்குதலுக்கு லக்ஷியம். அதையும் அடையமுடியவில்லை. 52 பீரங்கிகள் நஷ்டத்துடன் மாரத் அரணுக்குப்பின்னால் துரத்தியடிக்கப்பட்டுவிட்டான்.

வடக்குப் போர்முனையில் ஸெட்ஜெனேன் என்னும் ஊரைப்பிடித்தபிறகு ரோமலின் முன்னேற்றம் நின்றுபோய்விட்டது.

**பஸிபிக் யுத்தம்.**—முக்கியமாக விமானத் தாக்குதல்கள்தான் ஏற்பட்டன, கீழ்க்கண்ட ஸ்தலங்கள் தாக்குண்டன. வட பஸிபிக் சமுத்திரத்தில் அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா, தென் மேற்கு பஸிபிக்கில், முண்டா, பூயின், காகிலி, பல்லாலி, விரு, துலாகித்தீவு, கெயெடா, ஒரோ குடாக்கடல், விகா, வா, ரெகடா குடாகடல்.

**சைனா யுத்தம்.**—எல்லாப் போர்முனைகளிலும் ஜப்பானிய முன்னேற்றம் தடைப்பட்டது. சில பிராந்தியங்களில் அநேக இடங்கள் திரும்பிப் பிடிக்கப்பட்டன. மத்திய சைனாவில் நாஞ்சாங்குக்குச் சமீபத்தில் ஜப்பானியர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். கிழக்குச் சைனாவில் ஜப்பானியர்கள் சுற்றிவளைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. யூனான் பகுதியில் ஜப்பானியர்களின் முன்னேற்றம் தடுக்கப்பட்டது.

கடைசியாக வந்த செய்திகளிலிருந்து யாங்டீஸ் நதியின் வடகரையிலிருந்த ஜப்பானியப் படைகள் ஷாஷி என்னுமிடத்தில் நதியைக்கடந்து, மிடாஸு, யோடோப்யூ, டௌஹூடி, டியோஹூஸான்கௌ முதலிய இடங்களைப் பிடித்துவிட்டது.

**பர்மா.**—கீழ்க்கண்ட இடங்களில் விமானத்தாக்குதல்கள் ஏற்பட்டது.

மார்ச்சு 3. ரெங்கூன் பிரதேசமும் அதிலுள்ள பாகண்டாங்க் பாலம், ஆத்லோன்கப்பல் கட்டும் தளம், மாக்வாகன் ரெயில்வே எஞ்ஜின் தொழிற்சாலைகளும், மெயிமியோ, ஸெக்பி, கியாக்படாங்.

மார்ச்சு 4. ஆகியாப், ராதிடாங், கமால், புவாடங்க்.

மார்ச்சு 6. ரெங்கூன், மோல்மீன், மிடிங்கா பாலம்.

மார்ச்சு 8. மோனிவா, மீஞசான்.

மார்ச்சு 9. காமெயிங்க், மானிவெட், வாஸாட், டிங்க்பேர், புரோம், கான்ஸாக் பிராந்தியம்.

சென்ற சில நாட்களில் ராதிடாங்குக்கு சமீபத்திலுள்ள கான்சாக்குக்கும் ஸெக்டாங்பின்னுக்கும் மத்தியிலுள்ள காட்டுப் பிரதேசம் வழியாக எதிரிகள் கொஞ்சம் முன்னேறியிருக்கிறார்கள். பிரிடிஷ் விமானப்படை எதிரிகளை வெற்றிகரமாக இங்கே தாக்கியிருக்கிறது.

பலவகைப்பட்டவை.—இனோனு துருக்கி பிரஸிடெண்டாக ஏகமனதாய் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**28—2—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—விரோதி விமான நிலயங்கள்—மாபெர்டியஸ் (France).

தொழிற்சாலைகள்.—ஹென்கெலோ (Holland), பிஜாக்குக் கருகாமையில் (Belgium).

இரவு.—ஸப்மரீன் தளம்—ஸெண்ட் நெஸேர் (St. Nazaire), மேற்கு ஜெர்மனி.

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

(2 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

லக்ஷியங்கள்.—மெட்டியூர் (Mateur).

விமானங்கள் இறங்குமிடங்கள்.—காபெஸ் (Gabes) பிரதேசம்.

கப்பல் துறைகளும், கிட்டங்கிகளும்.—ஸார்டீனியாவிலுள்ள காகிலியாரி (Cagliari).

இருப்புப்பாதை.—ஸ்பாக்ஸுக்கும் (Sfax) சௌஸேக்கும் மத்தியில்.

கப்பல்துறை.—பிஸெர்ட்டா (Bizerta).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), நியூஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda) பிரதேசம்.

ஜப்பானியக் கப்பல்கள்.—பூயின் (Buin).

விமான நிலயங்கள்.—சோர்ட்லெண்ட்ஸ் தீவிலுள்ள காஹிலி (Kahili), பலாலி (Ballale), கொலம்பங்காராத்தீவிலுள்ள விலா (Vila).

பாலம்.—பர்மாவிலுள்ள டியாங்ஷூப் (Tiangzup).

கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள சொப்ஷூப் (Nsopzup).

**1—3—43.** (திங்கட்கிழமை).

### ஐரோப்பா (Europe).

இரவு.—(19 நேசதேச விமானம் காணப்படவில்லை).

பெர்லின் (Berlin).

சுரங்கவெடி வைத்தல்.—விரோதி ஜலப்பிராந்தியங்களில், நேபிள்ஸ் (Naples).

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே பாலம்.—லாஹென்சா (Lahencha).

கப்பல் துறை.—பிஸெர்ட்டா (Bizerta).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள (Sicily), பெலெர்மோ (Palermo), காமிஸோ (Comiso).

கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—அலெக்ஸாபென் (Alexshaffen).

துறைமுகம்.—வெயின் காபோ (Wain-Gapoe).

விமான நிலயங்கள்.—ஸலாமூவா (Salamaua) நியூஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

இருப்புப்பாதை முடிவு.—லாஷியோ (Lashio).

துருப்புகள் இருக்குமிடங்கள், சிறிய தோணிகள், போக்குவரத்து சாதனங்கள்.—வடக்கு பர்மா (North Burma).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்



**2—3—43.** (செவ்வாய்க்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—இருப்புப் பாதையும் இதர லக்ஷியங்களும்.—வடக்கு பிரான்ஸ் (Northern France), பெல்ஜியம் (Belgium).

இரவு.—சுரங்க வெடி வைத்தல்.—விரோதி ஜலப்பிராந்தியங்களில்.

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western-Germany).

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

துறைமுகங்கள்.—டூனிஸ் (Tunis); லகோலெட் (Lagoulette);

மாரேத் அரண், விரோதிவிமானங்கள் இறங்குமிடம்.—காபெஸ் (Gabes) பிரதேசம்.

போக்குவரத்து வண்டிகள் ஸ்பாக்ஸ் (Sfax) பிரதேசம்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பான் துணைப் படையோடு கூடிய சாமான் கப்பல்கள்.—ஹூவான் (Huon) குடா (ஜப்பானின் 22 கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. 55 ஜப்பான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விமான நிலயங்கள்.—லே (Lae) வடக்கு ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda); பர்மாவிலுள்ள கோக்டிக் (Gokteik).

பாலம்.—மாண்டலேக்கும் (Mandalay), லாஷியாவுக்கும் (Lashio) மத்தியில்,

மித்கினு (Myitkyina); ஸொப்ஷூப் (Nsopzop) பிரதேசம்;

படகுகள் சிறிய கப்பல்கள்.—மாண்டலேக்கருகிலுள்ள, ஐராவதி நதி (Irrawaddy).

பர்மாவிலுள்ள மாங்டா (Maungdaw) பிரதேசம்.

**3—3—43.** (புதன்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—மாலிப்டீனம் (Molybdenium).

சுரங்கங்கள்.—நாபென் (Knaben)

எதிரிக் கப்பல்களும், இதர லக்ஷியங்களும்.—வடக்குப் பிரான்ஸ் (Northern France), ஹாலந்து (Holland).

இரவு.—கப்பற்படை தளம்.—ஹாம்பர்க் (Hambrug) (10 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமானதளம்.—ஹாலந்து (Holland).

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி போக்குவரத்துசாதனங்கள்.—வடக்கு டூனிஸியா (North Tunisia).

விமானங்கள் இறங்குமிடம்.—காபெஸ் (Gabes) பிரதேசம்.

விரோதி கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily) வும் டூனிஸியா (Tunisia) வுக்கும் மத்தியில்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள காஹிலி (Kahili), பலாலி (Ballale), விலா (Vila), நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

ஜப்பான் ஸ்டீமர் கப்பல்கள்.—மாயு (Mayu) நதியில்.

தரை ரயில்வே போக்குவரத்துக்கள்.—பர்மாவிலுள்ள ஸெஜிலுக்கும் (Segyl) கியாக் படாங் (Kyaukpadaung) கிற்கும் மத்தியிலுள்ள பிரதேசம்.

கப்பல்துறை.—ரங்கூன் பிரதேசம்.

**4—3—43.** (வியாழக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகலில்.—(14 எதிரி விமானங்களும், 5 நேசதேச விமானங்களும் நாசமாயின).

யுத்த சாமான்கள் சைனியங்கள் ஏற்றுமிடம்.—ஜெர்மனியிலுள்ள ஹாம் (Hamm).

கப்பல் தொழிற்சாலைகள்.—ராட்டர்டாம் (Rotterdam).

ரயில்வே ஸ்தலங்கள்.—லெமான்ஸுக்கும் (Lemans), வெலென்ஷியன்ஷியஸ்ஸிற்கும் (Valenciennes) அருகில்.

இரவில்.—சுரங்கவெடி வைத்தல்—விரோதி ஜலப்பிராந்தியங்களில்.

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western-Germany).

துறைமுகம்.—நேபிள்ஸ் (Naples).

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி போக்குவரத்து.—டுனிஸியன் (Tunisia) தெற்கு யுத்த அரங்கம்.

இலக்குகள்.—ஜெடிடா (Djedida).

விமானச் சண்டைகள்.—வடக்கு டுனிஸிய யுத்த அரங்கம் முழுவதும் (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia)

விமானச் சண்டைகளும், தரையிலிருந்தும் விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—லேயி (Lae ஸாலமூவா (Salamaua) நியூ ஜார்ஜியாவில் உள்ள முண்டா (Munda) ஷார்ட்லெண்ட்ஸிலுள்ள புயின் (Buin).

காஹிலி (Kahili) பலாலி (Ballale).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்; பர்மாவிலுள்ள ராதிடங் (Rathedung).

5—3—43. (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—E-படகுகள் டச்சு கடற்கரைக்குச் சமீபத்தில் (2 E-படகுகள் மூழ்கடிக்கப்பட்டன).

இரவில்.—சுரங்கவெடி வைத்தல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி போக்குவரத்து சாதனங்கள்.—யுத்தம் நடக்கும் பிராந்தியங்களிலெல்லாம்.

கப்பல்கள்.—டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலிருந்தும் விமானங்கள்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda); ஸாலமன்ஸிலுள்ள புயின் (Buin);

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.

வேவு பார்த்தல்.—அரக்கான் (Arakan) பிரதேசம், காதா (Kitha) ஜில்லா.

ரயில் வண்டிகள் நிற்குமிடம்.—பர்மாவில் உள்ள தாழி (Thazi).

6—3—43 (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—கப்பல்துறைகள்.—பிரெஸ்ட் (Brest) (5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.

ஸப்மரீன் தளம்.—லோரியான் (Lorient).

இரவு.—இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).

வட ஆபிரிக்கா (North Africa),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி போக்குவரத்துகள், டுனிஸியாவில் (Tunisia) யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமானமிறங்குமிடங்கள்.—காபெஸ் (Gabes) பிரதேசம்.

இருப்புப்பாதை.—ஸௌஸாக்கும் (Sousse), ஸ்பாக்ஸிற்கும் (Sfax) மத்தியில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ பிரிடனிலுள்ள (New Britain) க்ளாஸ்டர் முனை (Gloucester).

துறைமுகம்.—நியூ பிரிடனி (New Britain) லுள்ள, ரபால் (Rabaul), காஸ்மாடா (Gasmata) நியூ ஜார்ஜியாவிலுள்ள விரு (Viru), துளகி (Tulagi) தீவு.

கப்பல் துறை.—மோள்மீன் (Moulmein) கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

படகுகள்.—கலடான் (Kaladan) நதிப் பிரதேசம்.

## நேசதேச விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

1—3—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

இங்கிலீஷ் கால்வாய் (English Channel) (2 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

வட ஆபிரிக்கா (North Africa).

டிரிபோலி (Tripoli).

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—டானெட்ஸ் (Donetz) யுத்த அரங்கம்.



2—3—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

இங்கிலாந்தின் தென்கிழக்குக் கரை.

வட ஆபிரிக்கா (North Africa).

நேசதேச சைனியங்கள்.—வடக்கு டுனிஸியா (North Tunisia).

ருஷ்யா (Russia).

கிரேமடாஸ்காயா.—(Kramataskaya).

தூரக்கிழக்கு (Far East).

சிட்டாகாங் (Chettagong) பிரதேசம்.

3—3—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன்.—(London) பிரதேசம், தேம்ஸ் முகத்துவாரம், சிற்சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா.

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜீரியாவிலுள்ள (Algeria), அல்ஜியர்ஸ் (Algiers).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.-கூடல்கனார் (Guadalcanar).

4—3—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

விமான நடவடிக்கை ஒன்றுமில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

எட்டாம்படை முன்னேறித் தாக்கும் இடங்கள்.—டுனிஸியா (Tunisia).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—சிட்டகாங் (Chittagong), பிரதேசம், (குண்டுகள் போடப்படவில்லை).

5—3—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானத்தாக்குதல் இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

எட்டாம்படை முன்னேறித்தாக்கும் இடங்கள்.—டுனிஸியா (Tunisia).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.-ஸாலமன்ஸிலுள்ள கூடல்கனார் (Guadalcanar).

6—3—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

லிஸ்சியான்ஸ்க் (Lischiansk).

7—3—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம்.-அபாய அறிவிப்பு மட்டிலும் இருந்தது ஹோம் கௌண்டீஸ் (Home Counties).

வட ஆபிரிக்கா (North Africa).

துறைமுகம்.—டிரிபோலி (Tripoli).

ருஷ்யா (Russia).

மத்திய ருஷ்ய யுத்த அரங்கத்தில் முன்னேறும் ருஷ்யச் சைனியங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ருஷ்யப் போர்முனை.** கிழக்குப் போர்முனையில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட தோல்விகளைக் குறைத்துப் பேச ஜெர்மனி செய்யும் பிரயத்னங்கள் பரிகசிக்கத்தக்கவைகள். தெற்கு முனையில் பனி உறுக ஆரம்பித்ததிலிருந்து ருஷ்யர்கள் சேற்றில் மாட்டிக்கொண்டுவிட்டார்களென்று பெர்லினில் ஒலிபரப்பப்படுகிறது. ருஷ்யாவின் வெற்றிகளை ஜெர்மானியர்கள் மறந்துவிடும்படி செய்வதற்கு இது ஒரு உபாயம். இதைப்பற்றி சிலநாட்களுக்கு முன் ருஷ்யாவின் ஜெனரல் ஸயிடெவ் என்ன சொல்லியிருக்கிறான் என்று கவனிப்போம். வரப்போகும் உறை பனியையும், பனி உறுகிவிடுவதையும் மதித்துத்தான் ருஷ்யாவின் மாரிகால யுத்த ஏற்பாடுகள் நிறுவப்பட்டன. கிழக்குப்போர் முனையில் எல்லா இடங்களிலும் ஜெர்மானியர்கள் பலஹீனமாகத்தானிருக்கிறார்கள். ருஷ்யர்கள் ஒரு இடத்தில் ஊடுறுவதை ஜெர்மனி தடுத்தால் ருஷ்யர்கள் மற்றொரு இடத்தில் படை வரிசையைப் பிளந்துவிடுகிறார்கள். டெமியான்ஸ்க்குப் பிடிபட்டதும் இல்மென் ஏரிக்குத் தெற்கே ருஷ்யாவின் முன்னேற்றமும்

இதற்கு அறிகுறிகள். டானட்ஸ் பிரதேசத்தில் சேற்றிலும், கூபான் தீபகற்பத்தில் சதுப்பு நிலத்திலும், மத்திய முனையில் உறைபனியிலும் சண்டை நடைபெறுகிறது. மத்திய முனையில் பனி உருகும் பொழுது தெற்குப்போர்முனை காய்ந்துவிடும். ஹிட்லருக்கு ஒருபொழுதும் ஓய்வு ஏற்படாது. தெற்கே பனி உருக ஆரம்பித்து விட்ட போதிலும் மத்திய முனையில் ருஷ்யர்கள் ரிஷெவைப் பிடித்ததற்கு அது இடையூருக இல்லை என்று நன்ருய் வெளியாகுகிறது.

வாப்பன் எஸ். எஸ். என்னும் ராணுவத்திலிருந்து 2 டிவிஷன்களை ருஷ்யாவுக்கு ஹிட்லர் அனுப்பியதிலிருந்து ருஷ்யாவில் ஜெர்மனியின் வலிமை குறைந்து விட்டதென்பதற்கு அத்தாக்ஷி ஏற்படுகிறது, எஸ். எஸ். படை யென்பது நாஸிக்கக்ஷியின் சொந்தப்படை. கடைசி தற்காப்புப்படையாக அதை வைக்கப் பட்டிருந்தது.

வி வி வி வி வி வி வி

**டுனிஸியப் போர்முனை.** வடக்கு, மத்தி, தெற்குப் போர்முனைகளிலெல்லாம் ஜெர்மன் முன்னேற்றம் குலைந்துவிட்டது. மத்தியிலுள்ள நேச நாடுகளின் படைகள் தெற்கே போய்க் கொண்டிருக்கின்றன. வடபகுதியில் நேசநாடுகள் தாக்கிக்கொண்டு இருக்கிருர்கள். தெற்குப்பகுதியில் ரோமல் மாரத் அரணுக்கு விரட்டியடிக்கப்பட்டான். டைம்ஸ் பத்திரிகைக்காரர் தெளிவாய்ச் சொல்லுவது போல் எதிரிகளின் தந்திரப்படி, மனிதபலக்குறைவை ஈடுசெய்ய, வேகமாசப்பாய்வதும், எதிர்த்துவரும் எதிரியை ஒவ்வொரு பகுதியிலும் மின்னல் வேகத்துடன் தாக்குவதும்தான் ஜெர்மானியர்களால் அநுஷ்டிக்கப்படுகின்றன. முதலில் மத்திப்போர்முனையில் ரோமல் தாக்கினன். படைப் பலக்குறைவினுல் துறத்திபடிக்கப்பட்டான். பிறகு வடக்கே தாக்குதல் ஏற்பட்டது. கடைசியாக தெற்கே தாக்குதல் ஏற்பட்டு அதுவும் பிரயோஜனப்படவில்லை. நேசநாடுகளின் வெற்றியை ரோமல் ஒத்தி வைக்கலாமே அல்லாது அதைத்தவிர்க்க முடியாது.

வி வி வி வி வி வி வி

**நற்கோலே.** சென்ற வாரம் வாரச்செய்திகளில் சொன்னது போல், ஜப்பான் தென்மேற்கு பஸிபிக் யுத்தத்தில் நன்ருய்த் தோல்வியுற்றது. இது பவழக்கடலிலல்ல, பிஸ்மார்க் கடலில். அதாவது குறிப்பிட்டுச் சொன்னுல் நியூகினியாவுக்கும் நியூ பிரிடனுக்கும் மத்தியிலுள்ள குறுகலான கடல், பிரதேசம் 40 மைல்களுக்குமேல் அகலமில்லை. ஒரு இடத்தில் 10 மைல் அகலம்தான். இதற்கு விதிடாஸ் ஜலசந்தி என்று பெயர். இதற்கு "நற்கோலே வெளி" என்றும் சொல்லுவதுண்டு. இவ்விடத்தில் நேசதேசத்தாரின் 136 விமானங்கள் 226 டன்கள் எடைமானமுள்ள வெடி குண்டுகளைப்போட்டன. 133 குண்டுகள் லக்ஷியங்களை அடித்தன. 10 யுத்தக் கப்பல்களும், 12 சாமான் கப்பல்களும் 15,000 மனிதர்களும் ஜப்பானுக்கு நஷ்டமாயின. இவ்விடத்தில் ஜப்பானுக்கு 150 விமானங்கள் நாசமாயின. இம்மாதிரி தணிவுக்கு ஜப்பானுக்கு முக்கிய காரணங்களிருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் நேச நாட்டாரின் பலம் அதிகரித்து வருவதால் அதை சரிக்கட்ட லாலாமூவா, லே, பின்ஷேவன் முதலிய இடங்களிலுள்ள படைகளை பலப்படுத்த கப்பல்கள் அனுப்பவேண்டியதாயிருந்தது.

வி வி வி வி வி வி வி

**யூ படகுகள்.** அச்சு நாடுகள் யூ படகுகளின் சேஷ்டைகளைப் பற்றி ஒலிபரப்புகளில் சிலாகித்துப் பேசி அபாண்டமான தகவல்களை வெளியிடுகிருர்கள். ரோம் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து ஆங்கிலத்தில் "ஐக்கிய நாட்டார்களுக்கு பிப்ரவரி மாதத்தில் ஏராளமான கப்பல் நஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டது" என்று ஒலிபரப்பப்பட்டது. இதைப்போன்ற அபாண்டமான பொய் கிடையவே கிடையாது. காமன்ஸ் சபையில் மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர்



பேசியபொழுது "பிப்ரவரி மாதத்தில் அதிக நஷ்டமில்லையென்றும், ஜெர்மானியர் யூ படகுகள கட்டும் கணக்கும் நேசநாடுகள் யூ படகுகளை அழிக்கும் கணக்கும் அதிக வித்தியாசம் காட்டவில்லையென்றும் சொன்னுர். எதிராளிக்கும் அதிகக் கப்பல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் எதிரியின் 5 மிலியன் எடைமானமுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 3 மிலியன் டன்கள் எடைமானமுள்ளவைகள் பழுதாக்கப்பட்டன. சென்ற வருஷம் மூன்று மாதங்களில் ஏற்பட்ட கப்பல் நஷ்டத்தைவிட குறைவாகத்தான் இவ்வருஷம் சென்ற மூன்று மாதங்களில் நேச நாட்டாருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பிரிடன் கப்பல் கட்டும் வேலைகளில் முக்கியமாக துணைக்காவல் கப்பல்களைத் தயாரிப்பதில் அதிக சிரத்தை காட்டிவருகிறது. உலகத்திலேயே சிறிய சண்டைக் கப்பலென்று சொல்லக்கூடிய 'ஸீ பையர்" என்ற கப்பல்களை ஏராளமாகக் கட்டிவருகிறது.

யூ படகுகளின் தொந்தரவுகளைத் தடுப்பதற்கு அமெரிக்காவும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. 200 வகைத் துணைக் கப்பல்கள் கட்டப்படுகின்றன. அமெரிக்கக் கடற்படை இலாகாவிலிருந்து வெளிவந்த விவரப்படி இந்தப் புதிய துணைக் கப்பலென்பது 1,300 டன்கள் எடைமானமுள்ள நாசகாரி. அதிலிருக்கும் பீரங்கிகள் வலுவானவை. எதிரியின் நீர்மூழ்கியின் குண்டு வீச்சை பங்கம் செயதுவிடக்கூடியவை. இதில் விமானம் சுடும் பீரங்கிகளும், நீர்மூழ்கிகளைத் தாக்குவதற்கான வெடிகளும், மீன் வெடிகளும் வைக்கப் பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் விமானப் படையின் ஒரு பகுதியான யூ படகு எதிர்ப்புப் படையின் தலைமை காரியாலயத்திலிருந்து மார்ச்சு மாதம் 8-ம் தேதி வெளியிட்ட தகவல் திருப்திகரமானது. "நீர்மூழ்கிகளின் அட்டூழியம் முடிந்துவிடுமென்று தோன்றுகிறது. அச்சு நாடுகளுக்கு ஏராளமான நீர் மூழ்கிகளிருக்கின்றன. அட்லாண்டிக் சமுத்திரத்தில் 1,000,000 சதுர மைல்கள் பிராந்தியத்தில் ஸெப்டம்பர் 9-ம் தேதி முதல் நீர்மூழ்கிகளால் ஒரு கப்பலும் மூழ்கடிக்கப்படவில்லை. அட்லாண்டிக் சமுத்திரத்தில் இதற்கு முன் முதலாவது பாம்பர் கம்மாண்டு தற்காப்பு செய்துவந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**விமானத் தாக்குதல்—பிரிடன், ஜெர்மனி.** பெர்லினை பிரிடிஷ் இரவு விமானப்படை 56 தடவையும், பகல் விமானப்படை 2 தடவையும் ருஷ்யாவின் இரவு விமானப்படை 12 தடவையும் ஆக 70 தடவை தாக்கியிருக்கிருர்கள். இவைகளில் சென்ற திங்கட்கிழமை இரவு பிரிடிஷ் விமானப்படை தாக்கியது ரொம்பவும் பலமானது. ஒரு முகமானது. இதில் ஈடுபட்ட விமானங்கள் நான்கு எஞ்ஜின்களுள்ளவை. இவைகளில் 8,000 பவுண்டு எடையுள்ள வெடிகுண்டும் 4,000 பவுண்டு எடையுள்ள வெடிகுண்டுகளும் வைக்கப்பட்டிருந்தன. பத்து ஆயிரக்கணக்கான எரிவெடிகள் சரமாரியாக வர்ஷிக்கப்பட்டன. விமானத் தாக்குதல் அரை மணி நடை பெற்ற போதிலும் 100 பெரிய அக்னி ஜ்வாலைகள் கிளம்பின. பெர்லின் நாஸிகளின் அரசாங்கத் தலைமை காரியாலயம் மட்டுமல்ல, முக்கியமான ரயில்வே ஸ்தலம். பெரிய தொழிற்சாலைகளுள்ளது.

மார்ச்சு 3-ம் தேதியன்று மற்றொரு பெரிய நகரம் தாக்கப்பட்டது. ஹாம்பர்க் என்னும் நகரத்தில் 20 மைல்கள் வியாபித்திருக்கும் கப்பற் துறைகளும் 110 மீட்டர்களுள்ள கப்பல் கட்டும் தளங்களுமிருக்கின்றன. அதன் ஜனத்தொகை 1,700,000. இது வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. இதற்கு முன் வில்ஹெல்ம்ஷேவனும், நியூரம்பர்க்கும், லோரியானும், ஸெயிண்ட் நாஸேரும் தாக்கப்பட்டன. இதிலிருந்து ஜெர்மன் நகரங்களை வரிசையாகத் தாக்கும் ஏற்பாடு நடைபெற்று வருகிறது என்று சொல்லலாம். நேச நாட்டாரின் விமானப்படைக்கு ஆதிக்கம் நன்ருய் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இனிமேல் திட்டப்படி பகலில் அமெரிக்க விமானத் தாக்குதலும், இரவில் பிரிடிஷ் விமானத் தாக்குதலும் இடைவிடாது நடைபெறக்கூடும். தாக்கப்படும் பிரதேசமும்

அதிகமாகும். கால அளவும் அதிகரிக்கப்படும். இதற்குத் தகுந்தபடி எதிரிகளின் தற்காப்பும் அதிகரிக்கும். பெர்லினை சமீபத்தில் நமது விமானங்கள் தாக்கியபொழுது பாதுகாப்பு ஸ்தலத்திலிருந்து ஒரு விமானி 15 நிமிஷங்களுக்கு பிறகு பெர்லினிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள் போதிய அளவு தற்காப்பு செய்யக்கூடவில்லையென்று சொன்னான். சென்ற மே மாதம் 1,000 விமானங்களால் தாக்கப்பட்டதும் அதிலிருந்து 2,50,000 ஜனங்கள் வெளியேறியதும், அதிலுள்ள 300 தொழிற்சாலைகளும் நாசமடைந்ததும், பிறகு ஒன்பது மாதங்களாக மறுபடியும் நிர்மாணிக்கப்பட்டதுமான கொலோன் என்னும் நகரம் பிப்ரவரி 14-ம் தேதியன்று மறுபடியும் நமது விமானங்களால் தகர்க்கப்பட்டது.

ஆகையால் நோயரிங் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், எவ்விடத்தில் ஜெர்மனி தற்காப்புச் செய்து கொள்ளுவது—அதாவது வடக்கிலே, தெற்கிலா, மேற்கிலா, அல்லது மத்திய பாகத்திலா என்றும் ஜெர்மனியிலுள்ள தலைநகரத்தையும் தொழிற்சாலைகளையும் பாதுகாக்காமல் யூ படகு தளங்களைப் பலப்படுத்துவதா அல்லது இதற்கு மாறாகச் செய்வதாவென்றும் அவன் யோசிக்கவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் தற்காப்புச் செய்யவேண்டுமென்றால் தற்காப்பு முறைகளை விரிவாகச் செய்யவேண்டும். கைவசமிருக்கும் தற்காப்புகளை சிதறவைத்து எல்லா இடங்களையும் பலஹீனமாகச் செய்யவேண்டும். பெர்லினுடைய தற்காப்புகளின் பலஹீனம் சமீபத்தில் வெளியாகிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் பதில் தாக்குதல்.** மார்ச்ச 3-ம் தேதி லண்டனில் ஜெர்மனி செய்த பதில் தாக்குதல் பேஷஜமானது, பிரயோஜனமற்றது. பெர்லின் நகரம் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும்பொழுது 30, 40 ஜெர்மன் விமானங்கள் லண்டன் பிரதேசத்துக்குச் சென்று இரண்டு தடவை தாக்கின. இரண்டாவது தாக்குதலில் லண்டனுக்கு சில விமானங்கள் வந்தன. ஒரு இடத்திலும் சேதம் அதிகமில்லை. விமானம் சுடும் பீரங்கிகள் பலமாக எதிர்த்தன. எதிரிகளின் மூன்று வெடி விமானங்கள் நாசமடைந்தன.

வி வி வி வி வி வி வி

## இந்திய விஷயங்கள்.

**1. தென் இந்தியாவின் விமான தற்காப்புகள்.** மார்ச்ச 6-ம் தேதியன்று பெங்களூரில் எஞ்ஜினியர்கள் கூட்டத்தில் தென் இந்தியாவில் முடிவடைந்திருக்கும் விமானத் தற்காப்பு [illegible] விமானப்படை கம்மோடார் P. H. மாக்வர்த் பின்கண்ட விவரங்களை வெளியிட்டார். படையெடுப்பு ஏற்பட்டால் தற்காப்புகள் மூலம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவும், எதிரியை பலமாகத் தாக்கவும் தென் இந்தியாவில் தற்காப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தென் இந்தியா பூராவும் ஏராளமான விமான தளங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த தளங்களில் விமானங்கள் மிகுதியாக [illegible] காரணத்தைக்கொண்டு தற்காப்பு ஏற்பாடுகள் இன்னும் [illegible] பொதுஜனங்கள் [illegible] நவீன [illegible] விமான தளங்கள் அமைக்கப்பட்டு அதில் லைட்டுகளும் தரைப் [illegible] அவசியத்துக்கு ஏற்றபடி [illegible] தென் இந்திய விமானப்படைகள் இந்த விமான [illegible] அவர்கள் கடமைப்பட்டுள்ள [illegible] இந்தியர்கள் சிறந்த [illegible] அநேகர் பட்டங்களும் பெற்றிருக்கிறார்கள்.

படையெடுப்பு பலம் குறைந்துவிட்டபோதிலும், எதிர்பாராமல் தாக்குதல் [illegible] முன் ஜாக்கிரதையுடனிருக்கவேண்டுமென்றும் அவர் சொன்னார்.



**2. நல்லுரை.** சமீபத்தில் நடந்த கலவரங்களில் இந்திய அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி மத்திய சட்ட சபையில் சர்ச்சை செய்தபொழுது குறை கூறுபவர்களுக்கு பதிலுரைக்கையில் மார்ச்சுமீ 8-ம் தேதியன்று ஸர் ரெஜினல்ட் மாக்ஸ்வெல் பின்வருமாறு கூறினார். சட்ட பூர்வமாக அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் மூலமாக குற்றவாளிகளுடன் நிரபராதிகளும் கஷ்டப்படவேண்டியதாயிற்று என்றால் இதற்கு அரசாங்கத்தார் ஜவாப்தாரியாக மாட்டார்கள். கலவரம் செய்தவர்கள் தான் பொறுப்பாளிகள். சில சந்தர்ப்பங்களில் நிர்வாகிகள் அடக்குமுறையைக் கையாளவேண்டியதுதான் அவர்கள் கடமை, குற்றங்களை அடக்கவேண்டும். பலாத்காரத்தை பலாத்காரமுறையில் தான் ஒழிக்கவேண்டும்.

இந்தியாவின் க்ஷேமத்திற்கும் நேசதேசத்தாரின் அக்கரைக்கும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தார், யுத்த முயற்சிகளுக்குத் தடை ஏற்படக்கூடிய நடவடிக்கைகளைக் கண்டிக்கவேண்டியது அவசியமேயாகும். நாட்டில் யுத்தத் தற்காப்பு முறைகளை பாதிக்கூடியதும் அல்லது நாட்டின் சீர்கேட்டை விளைவிக்கக்கூடியதுமான குற்றங்களைச் செய்துவிட்டு அவைகளைக் குறைத்துக் கூறுவதற்காக ராஜிய விஷயமான கொள்கைகளையும் மற்ற காரணங்களையும் வற்புறுத்த முடியாது.

வி வி வி வி வி வி வி

**3. இந்தியாவின் யுத்த வரவு செலவு திட்டம்.** மத்திய சட்டசபையில் சென்ற வாரத்தில் வரவு செலவு திட்டத்தில் அதிகச்செலவு கணக்கு கொடுக்கப்பட்டதென்று சிலர் புகார் செய்கிறார்கள். அதிகப்பணம் முக்கியமான செலவிற்காக உபயோகப்படுத்தப்பட்டதென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். இந்தியாவுக்கு ஆங்கில நாணயங்கள் மூலமாக பிரிடிஷார் பணம் கொடுத்து இந்தியாவின் க்ஷேமத்தை அவர்கள் கோருகிறார்களென்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஸ்டெர்லிங் மூலமாக இந்தியாவுக்கு யுத்தக் கடனில்லாமல் போய்விட்டது. இந்தியாவில் பிரிடிஷ் மூலதனம் போடப்பட்டு அதன் மூலம் 60 வருஷ காலமாக கடனாளியாக இருந்த இந்தியா தேசம் அதனுடைய கடனை வாபஸ் செய்து விட்டது. இந்த நடவடிக்கையானது பர்மா யுத்தத்தில் இந்தியர்கள் உபயோகித்த ஒவ்வொரு இந்திய சாமானுக்கும் பிரிடன் பொருள் கொடுத்து வாங்கியதன் மூலம் நடைபெற்றது. இதன் மூலம் இந்தியாவின் கடன் அற்றுப்போய் வருங்காலத்துக்கும் பொருள் சேர்க்கப்பட்டுவிட்டது. இந்தியாவுக்கு யுத்த ஆரம்பமுதல் 607 மிலியன் பவுன் ஸ்டெர்லிங் லாபம் கிடைத்திருக்கிறது. சாம்ராஜ்ய நாடுகள் இந்தியாவில் கொள்ளையடிக்கிறார்களென்று சொல்லுகிறவர்கள் இந்த லாபத்தை கவனித்து ஆலோசனை செய்து பாருங்கள்.

வி வி வி வி வி வி வி

**4. அமெரிக்காவின் குத்தகைக் கடன் ஏற்பாட்டின்படி இந்தியாவுக்கு உள்ள லாபங்கள்.** மார்ச்சு 5-ம் தேதியன்று அமெரிக்க யுத்த அறிக்கை நிலயம் ஆபீஸில் வெளியிட்ட விசேஷ ரிபோர்ட்டிலிருந்து குத்தகைக் கடன் ஏற்பாடு ஆரம்பித்த 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் 1943-ம் வருஷம் ஜனவரி 1-ம் தேதிவரையில் இந்தியாவுக்கு 295, 501, 494 டாலர்கள் பொருமானமுள்ள சாமான்கள் அனுப்பப்பட்டிருக்கிறன என்று வெளியாகுகிறது. இந்தியத் துறைமுகங்கள், இருப்புப் பாதைகள், விமான தளங்கள், சுரங்கங்கள் விருத்திசெய்யப்பட்டன. யந்திர சாதனங்களும், தாதுப்பொருள்களும், எஃகும், மின்னல் விளக்கு முதல் ரயில்வே எஞ்ஜின்களுள்பட எல்லா சாமான்களும் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன.

சைனாவுக்கு சாமான்கள் அனுப்பும் தளமாகவும் இந்தியா உபயோகப்படுகிறது.

இந்தியாவில் அமெரிக்கப்படைக்கு வேண்டிய உடுப்புகளை 300 யந்திரசாலைகள் தயாரித்தன. இந்தியாவிலிருந்து வெடி மருந்துகளும், உணவுப் பொருள்களும் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தியத் துறைமுகங்களிலிருக்கும் அமெரிக்கக் கப்பல்களுக்கு கரியும், ஸப்ளைகளும் இந்தியாவில் கொடுக்கப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**10-வது அமெரிக்க தரை விமானப் படை.** இந்தியாவின் தற்காப்பிலும் பிப்ரவரி மாதத்தில் பர்மாவைத் திருப்பிப் பிடித்ததிலும் அமெரிக்கா எடுத்துக் கொண்ட பங்கைப் பற்றி மார்ச்சு 7-ம் தேதியன்று புதிய டில்லியில் ஜெனரல் கிளேடன் பிஸ்ஸெல் ஒரு விமர்சனம் செய்தார். வரும் மழை காலத்தில் யுத்தத்தை விடாது நடத்த ஏற்பாடுகள் முடிந்துவிட்டன என்று அவர் சொன்னார். பிப்ரவரி மாதத்தில் அமெரிக்கப்படை 490 தடவை முன்னேறியிருப்பதாகவும் 50 தடவை வேவு பார்த்து படங்கள் எடுத்தும் எதிரியின் முஸ்தீப்புகளுள்ள ஸ்தலங்களில் 400 டன்கள் எடையானமுள்ள குண்டுகளையும் பொழிந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. பிப்ரவரி 23, 25 தேதிகளில் அஸ்ஸாமில் ஜப்பானியர்களின் விமானத் தாக்குதல்களைத் தடுத்தும் இருக்கிறது. முதல் நிகழ்ச்சியில் 28 ஜப்பானிய விமானங்கள் நஷ்டமாகின, அல்லது பழுது செய்யப்பட்டன. இரண்டாவது சம்பவத்தில் எதிரி வேகமாக ஓடிவிட்டதால் அதன் பலன்கள் புலப்படவில்லை. அஸ்ஸாமில் ஜப்பானியர்கள் விமானத் தாக்குதல்கள் செய்ததிலிருந்தும் அமெரிக்க விமானிகளுக்கு ஆவேசமும் உத்ஸாகமும் ஏற்பட்டிருக்கிறது. சென்ற மாதத்தில் அமெரிக்க விமானப்படை பர்மாவில் முக்கியமாக ரெங்கூன் பிரதேசத்தையும் போக்குவரவு மார்க்கங்களையும், ரயில்வே தளவாடங்களையும் முக்கியமான பாலங்களையும் இடைவிடாது தாக்கியிருக்கின்றன. பிப்ரவரி மாதத்தில் ஜப்பானிய விமானங்கள் அமெரிக்காவின் டாஸ்க்படையுடன் சண்டை போட மு[illegible]மல் மறைந்து சென்றனவென்பது கவனிக்கத் தகுந்தது.

வி வி வி வி வி வி வி

**அரக்கான் போர்முனை.** மழை பெய்யுமுன் தங்கள் ஸ்தானங்களை பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இருதரப்பாரும் முயற்சி செய்து வருகிறார்கள். வரப்போகும் 6 வாரங்களில் 200 அங்குலம் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு விடும். மலேரியா ஜுரத்தினால் இருதரப்பாருக்கும் ஏராளமான நஷ்டம் ஏற்படுகிறது. மழை பெய்தால் நஷ்டம் மேலும் அதிகமாகும். தண்ணீர் பெருகிய ரஸ்தாக்கள் மூலமாக சாமான்களைக் கொண்டு போவதும் மிகவும் கஷ்டமாயிருக்கும்.

வி வி வி வி வி வி வி

**பர்மாவின் ஸ்திதி.** மழை காலம் சமீபித்து விட்டதால் பர்மாவை படையெடுப்பதும் பர்மா ரஸ்தாவைத் திறப்பதும் தாமதப்படுமென்றும் தெரிய வருகிறது.

வி வி வி வி வி வி வி

**சைனாவின் நிலைமை.** சைனா செய்து வரும் யுத்தமானது உலக யுத்தத்தின் ஒரு பாகமென்றாலும் ரோன்போர்ன் பிரபு சொல்லுகிறபடி, பர்மா ரஸ்தாவை இழந்ததிலிருந்து சைனாவுக்கு சாமான்கள் அதாவது யுத்த முஸ்தீப்புகள் அனுப்புவது குறைந்துவிட்டது. 1,000 விமானங்களைக் கொண்டு இதைச் சாதித்துவிடலாமென்று சுலபமாய்ச் சொல்லி விடலாம். ஆனால் இவ்வளவு விமானங்கள் இருக்கின்றனவா என்பது தான் சந்தேகம். சைனாவுக்கு அனுப்புவதற்காக ஸப்ளைகள் இந்தியாவில் தயார் செய்யப்படுகின்றன. போக்குவரவு சாதனத்துக்குத் தகுந்தபடி அவைகள் அனுப்பப்படும். தரை மார்க்கமாகச் செல்ல புதிய ரஸ்தாக்களமைப்பதற்கும்



ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தெற்கு பஸிபிக்கில் நேசநாடுகள் செய்த விமானத்தாக்குதலின் மூலம் சைனாவில் ஜப்பானியர்களின் தாக்குதலின் வலிமைக் குறைக்கப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**பிரிட்டனில் துருப்புகள் வாரம்.** இது பிப்ரவரி 28-ம் தேதி துவக்கப்பட்டது. பிரிட்டிஷ் விமானப்படை பிரிட்டனையும் உலகத்தையும் ஒரு மகத்தான ஆபத்திலிருந்து விடுவித்ததால் அதைப்பற்றி அடிக்கடி ஸ்தோத்திரம் செய்துவருகிறார்கள். நேசநாட்டினரின் பூரா யுத்த தந்திரத்திற்கும் காரணபூதமான கடலாதிக்கத்தை வெற்றிகரமாகக் காப்பாற்றி வரும் பிரிட்டிஷ் கடற்படைக்கும் புகழுரை கூறப்படுகிறது. நமது துருப்புகளைப் பற்றி அவ்வளவு அதிகமாகப் புகழுரை கூறுவதில்லை. ஆகையால் துருப்புகளைப் பற்றிக் கொண்டாட ஒரு வாரத்தை ஏற்படுத்தியிருப்பது மெச்சத்தக்கது. இங்கிலாந்து பிரெஞ்சுக்காரர்களும் ஆஸ்திரேலியர்களும் நிர்மூலமாகும் வரையில் சண்டை போடுமென்று கோயபல்ஸ் ஜோஷணம் செய்ததை பிரிட்டிஷ் ராணுவம் பரிகசித்துவிட்டது. கோயபல்ஸின் கேலிப்பேச்சுக்கு, எல்அலமீன் யுத்தமும், ரோமலை 2,000 மைல்கள் துரத்தியதும், இதாலிய சாம்ராஜ்யத்தின் அழிவும் சரியான பதிலளிக்கும்.

எட்டாம்படை ஒன்றுதான் பிரிட்டிஷ் ராணுவமென்று நினைக்கவேண்டாம். ஸர் ஜேம்ஸ் கிரிக் சொன்ன பிரகாரம், 8-ம்படை மட்டும்தான் தனிப்பட்ட புகழ் பெற்றதென்பதில்லை. என்று காட்ட உலகம் பூராவும் அநேக ராணுவப் படைகள் இருக்கின்றன. அவையெல்லாம் 8-ம் படையைப்போல் மட்டுமில்லாமல் செம்படையைப்போலும் யுத்தம் செய்யத் தீர்மானம் செய்திருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**வெற்றிக்காக விமானப்படை வாரம்.** இது மார்ச்சு 6-ம் தேதியன்று துவக்கப்பட்டது. இதன் நோக்கம் 132,000,000 பவுன்கள் விமான உற்பத்திக்காகச் சேமிப்பது. மார்ச்சு 9-ம் தேதி முடிய இதற்குக் கிடைத்த தொகை 80,000,000 பவுன்கள்.

---

## எல்லா ஜெர்மானியர்களோடும் யுத்தம்.

### ஆட்சி செய்கிறவர்களையும் பொது ஜனங்களையும் வேறுபடுத்த முடியாது.

(ஸாமுவல் கிராப்டன்).

ஜெர்மானியர்களோடு நாம் யுத்தம் செய்கிறோமா அல்லது அவர்களின் நிர்வாகிகளுடனா என்று சிலர் என்னைக் கேட்டார்கள். இதற்கு விடை நம்மை எதிர்க்கும் எல்லாருடனும் நாம் சண்டை போடுகிறோம் என்பது.

ஹிட்லர் நம்மோடு போர் தொடுத்திருக்கிறான். பீரங்கி வெடி குண்டுகளைச் செய்யும் ஜெர்மன் தொழிலாளிகளும் நம்முடைய எதிரிதான். மெஷின் பீரங்கிக்கு உபயோகிக்கும் தோட்டாப் பைகளை தோட்டாக்களால் நிரப்பும் ஜெர்மன் சிறு பெண்களும் நம்முடன் யுத்தம் செய்கிறவர்களாவார்கள். ஆகையால் பாகுபாடுகள் செய்வதற்கு இடமில்லை. நாம் எல்லா ஜெர்மானியர்களோடும் யுத்தம் செய்கிறோம். ஆகிலும் ஜெர்மன் பொது ஜனங்களுக்கும் ஜெர்மன் எஜமானர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாராட்டவேண்டாமா? இதைச் செய்யவேண்டியதுதான். ஜெர்மன் மக்களும் இதேமாதிரி பீரங்கிகளுக்கு வெடி குண்டுகள் தயாரிப்பதையும் மெஷின் பீரங்கிகளுக்குத் தோட்டாக்களை நிரப்புவதையும் விட்டுவிட்டால் நாமும் வேறுபாடு செய்யலாம். அவர்கள் உள் நாட்டில் கலவர மூலமாய்த்தான் இதைச் செய்யமுடியும். இப்படி ஏற்பட்டாலொழிய வேறு வழியில் அவர்களைப் பிரித்துச்சொல்ல முடியாது.

யுத்தம் முடிவடையும் வரையில் ஒருவன் யுத்த முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் அந்த ஜெர்மன் தொழிலாளியையும் நாம் அன்புடன் நடத்துவோமென்று இப்பொழுது சொன்னால், யுத்தம் முடியும் வரையில் அந்தத் தொழிலாளி இடைவிடாது பீரங்கி வெடிகளைச் செய்வதில் அவனுக்கு உற்சாகம் மூட்டியது போல் ஆகிவிடும். ஹிட்லரை வெறுப்புடன் நோக்கிக்கொண்டு வெடி குண்டுகள் செய்கிறவனுக்கும் ஹிட்லரை அன்புடன் ஆதரித்து யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஒருவனுக்கும் வித்தியாசமுண்டா? இந்த வித்தியாசம் நீரில் எழுதின கோடுபோல் ஆகும். வெடி குண்டுகள் தயாரிப்பவனுக்கும் அந்த வெடி குண்டுகளைத் தன்னுடைய எஜமான்களின் தலைமேல் போடுகிறவனுக்கும் தான் வித்யாசம் ஏற்படுத்தலாம்.

"உங்கள் ஸ்திதியை அறிந்துவிட்டோம். நாங்கள் அனுதாபப்படுகிறோம், எங்களைக்கொல்லுவதற்கு வேண்டிய முயற்சிகளை நீங்கள் செய்தாலும், நீங்கள் அதை மனதாரச் செய்யவில்லை" என்று ஜெர்மன் மக்களிடம் நாம் அறிவித்தால், அது ஜெர்மனியில் ஏற்படக்கூடிய உள்நாட்டுக் கலகத்துக்கு இடைஞ்சல் செய்தது போலாகும். ஜெர்மனியின் நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு ஜெர்மானியருக்குமுள்ள பொறுப்பை இந்தப் பேச்சு அகற்றிவிடும். ஜெர்மனியின் அக்கிரமத்தினால் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களிலிருந்து ஜெர்மானியப் பொதுமக்கள் விடுவிக்கப்படுகிறார்கள். சரித்திரத்திலேயே அவனை இளைஞனாகச் செய்துவிடுகிறது. அவன் விளைவித்த அட்டூழியங்களுக்கு அவன் ஜவாப்தாரியாக ஆகாமல் செய்துவிடுகிறது.

ஜெர்மானியர்களை நாம் நேசிப்பதா அல்லது வெறுப்பதா என்ற கேள்விக்கு ஒரே ஒரு மறுமொழிதானுண்டு. அவர்கள் நம்முடைய அன்பிற்குப் பாத்திரர்களானால் நாம் அவர்களை அன்புடன் நடத்துவோம். அவர்கள் எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் பொருட்படுத்தாது, அவர்கள் சக்தியற்றவர்களென்று நாம் நினைப்பது நியாயத் தன்மையல்ல. ஆனால் மன உணர்ச்சிதான். இதிலிருந்து அவர்கள் எதிர்க்கவே செய்யாமலிருப்பதற்கு அனுமதிச் சீட்டு கொடுத்தது போலாகும்.

12 போலந்து ஜனங்களைக் கொலைக்கள அறையில் தள்ளி அவர்களைக் கொலை செய்யும்படி உத்தரவிட்டால் ஒரு எளிய ஜெர்மன் சிறுவன் என்ன செய்யக்கூடும். அவன் தற்கொலை செய்துகொள்ளுவானா. அவசியமானால் செய்துகொள்ளவேண்டும். அதற்குமுன் ஒரு ஆபீஸரையும் அவன் கொன்றுவிடவேண்டும். அநேக விதமான கொடுமைகளைச் செய்துவிட்டு ஜெர்மன் மக்கள் நிரபராதிகளாகயிருக்க முடியாது.

நம்முடன் போராடுவதில் ஆயுதங்களைக் கீழேபோடும் வரையில் ஜெர்மன் பொது மக்களும் நம்முடைய விரோதிகள். ஒரு விசேஷமான வெள்ளிக்கிழமை தினம் அவர்கள் அம்மாதிரிச் செய்யவேண்டிய அவசியமில்லை. உள்நாட்டுக் கலவரமென்பது பரிஷ்காரமாகச் செய்யப்படவேண்டும். ஏற்பாடில்லாமலோ அல்லது சில இடங்களிலோ கலகம் செய்வது மிகவும் மோசமானது. ஆனால் யுத்தம் முடியும்வரை இந்த ஏற்பாட்டை ஒத்திவைக்கலாமென்றாவது, காலஹரணம் செய்யாமல் புத்திசாலித்தனத்துடனும் ஜனநாயக முறைகளை நன்கு அறிந்தும் இப்பொழுதே கலகம் செய்தாலும், அதை ஒத்தி வைத்தாலும் பலாபலன்கள் ஒன்றாகத்தானிருக்கக்கூடுமென்றாவது ஜெர்மன் மக்கள் நினைக்கும்படி நாம் செய்யக்கூடாது. கலவரம் செய்யவேண்டுமென்ற மனப்பான்மை குறைவுபடும்படியாக நாம் ஏன் ஜெர்மன் ஜனங்களின் மனஊக்கத்தைத் தளர்ச்சி செய்யவேண்டும். ஜெர்மானியர்கள் ஒருவருக்கு மட்டும் ஒரு பிரச்னைகளுமில்லை, ஒரு நோக்கமுமில்லை என்று நாம் ஏன் கருதவேண்டும்.

நாம் ஜெர்மானியர்களுக்குச் சொல்லவேண்டியது யாதெனில் "உங்களுக்குள் யாதொரு வித்தியாசமுமில்லை. நீங்கள்தான் வேறுபடுத்திக்கொள்ளவேண்டும். உங்கள் அந்தரங்கத்தில் உங்கள் எண்ணம் வேறு என்பதை நாங்கள் பாராட்டப் போவதில்லை. சுயேச்சைக்காக, நீங்கள் பாடுபடுகிறீர்களா இல்லையா என்பதைத்



தான் நாம் கவனிப்போம், பிரான்ஸ் சம்பந்தப்பட்ட மட்டில் நாங்களாக வேறுபாடுகள் செய்யவில்லை. பிரெஞ்சு ஜனங்களே டிகாலி பிரெஞ்சுக்காரர்களென்றும் விஷி பிரெஞ்சுக்காரர்களென்றும் பிரிந்திருக்கிறார்கள். விஷி பிரெஞ்சுக்காரர்களைவிட ஹிட்லருக்குட்பட்ட ஜெர்மானியர்களிடமிருந்து நாங்கள் அதிகம் எதிர்பார்க்கமுடியுமா. ஒவ்வொரு பிரெஞ்சுக் குடியானவனும் செய்யும் காரியங்களைப்போல ஜெர்மானியர்கள் மனதாரச் செய்யும், கோரமான செய்கைகளுக்கு அவர்களை மன்னிக்க முடியுமா. ஜனநாயகத்தில் எனக்குப் பூர்ண நம்பிக்கையிருப்பதினால், பொறுப்பற்ற ஜனங்கள் இவ்வுலகிலிருப்பார்களென்று நான் நம்பவில்லை. ஹிட்லரின் கொள்கை இதற்கு மாறானது. ஆகிலும் அதில் ஏராளமான மனப்பான்மைப் பேச்சும் கலந்திருக்கிறது.

## மயக்கம் தெளிந்த மனிதத்வேஷிகளுள்ள நாடு.

**W. A. சின்கிளேர் ஒலிபரப்பியது.**

சமீபத்தில் ஜெர்மனி உள்நாட்டில் செய்துவரும் பிரசாரத்தில் தனிப்பட்ட த்வனி ஒன்று ஒலிக்கிறது. 10 வாரங்களுக்குமுன் இந்த மாறுதல் ஏற்பட்டுவருகிறதென்று நான் சந்தேகித்தேன். அது முதல் மாறுதல் நிரந்தரமாகயிருந்து வருகிறது. நாஸிகளின் உள்நாட்டுப் பிரசாரம் பூராவிலும் இது வெளிப்படையாகயிருக்கிறது. சாதாரணமான உலக நடையில் ஜெர்மன் மக்களுக்கு நாஸி நிர்வாகம் இப்பொழுது பிரசாரம் செய்துவருகிறது. 1940-ம் வருஷத்தில் மனோராஜ்யமாக உயர்ந்த நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட பிரசாரத்திற்கும் இதற்கும் வித்தியாசமிருக்கிறது. சென்ற சில மாதங்களில் பிரசார மந்திரி உட்பட எல்லா நாஸி பிரசாரகர்களும் தங்களுடைய உள்நாட்டுப் பிரசார பிரசங்கங்களில் ஜெர்மானியர்கள் யாதொரு எண்ணத்தைக்கொண்டும் உயர்தர கொள்கைகளுக்கும் சண்டைபோடவில்லையென்றும், லோக ஐச்வர்யங்களை அடைவதற்குத்தான் சண்டை போடுகிறோமென்றும் இவைகளை அடைவதனால் மற்றவர்களிடமிருந்து கொள்ளையடிப்பதுதான் சாவதானமென்றும் சொல்லிவருகிறார்கள்.

ம்யூனிச்சில் கோயபெல்ஸ் பின்வருமாறு பேசியிருக்கிறான்:—"நாம் உயர்ந்த நோக்கங்களுக்காகச் சண்டை போடவில்லை. இரும்பு, எண்ணெய், கோதுமை போன்ற முக்கிய சாமான்கள் நமக்குத் தேவை" என்று சொன்னான். தற்சமயம் நாஸி உள்நாட்டுப் பிரசாரகர்கள் செய்யும் பிரசாரங்களின் தொனியையும், தோரணையையும், தத்துவத்தையும் கவனித்தால் புத்தி தெளிவு அடைந்த மனிதத்வேஷி ஒருவன் மற்றொருவனுக்கு அறிவு புகட்டுவதுபோல் தோன்றுகிறது. இந்தப் பிரசாரகர்கள் "நீங்கள் சண்டையை நிறுத்தக்கூடாது, சண்டையை நிறுத்தினால் நீங்கள் பட்டினி கிடக்க வேண்டிவரும். நீங்கள் ஆரோக்கியத்துடனும் நல்ல போஜனத்துடனுமிருக்க வேண்டியதுதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பிரச்னையென்றும், உயர்தரமான நோக்கங்களெல்லாம் பேதமையென்றும்" ஜெர்மன் ஜனங்களுக்குச் சொல்லுகிறார்கள். இந்த மனப்பான்மை கவனார்ஹமுள்ளது.

### ஹிட்லரின் அபிப்பிராயம்.

ஜெர்மன் உள்நாட்டுப் பிரசாரத்தில் இந்த மாறுதல் ஏற்பட்டபொழுது எனக்கு ஆச்சரியமாகயிருந்தது. ஹிட்லரின் பிரசாரக் கொள்கைகள் இவைகளுக்கு எதிர் முறையானவைகள் என்று நீங்கள் அறிவீர்கள். மெயின்காம்ப் புஸ்தகத்தில் ஜெர்மன் ஜனங்கள் ஜீவித்திருக்கவேண்டுமானால், ஜெர்மானியர்கள் உயர்வான நோக்கங்களுக்காகச் சண்டைபோடுகிறோமென்று அவர்கள் நம்பவேண்டுமென்று ஹிட்லர் எழுதியிருக்கிறான். மேலும், சென்ற யுத்தத்தில் இந்த நம்பிக்கையை ஜெர்மானியர்கள் இழந்தபொழுது ஜெர்மனி வீழ்ந்துவிட்டதென்றும் ஹிட்லர் சொல்லியிருக்கிறான். அவன் சொன்னதாவது "உயர்வான நோக்கங்களுக்காக ஜெர்மனி சண்டை போடுகிறதென்று ஜெர்மன் மக்கள் நம்பியிருந்த

வரையில் ஜெர்மனி தீரமாக நின்றது. தங்களுடைய ஜீவனத்திற்காகச் சண்டை செய்யவேண்டுமென்று உத்தரவிடப்பட்டபொழுது ஜெர்மானியர்கள் தோல்வியுற்றார்கள்." 1918-ம் வருஷத்திலிருந்த ஜெர்மன் ராஜதந்திரிகள், ஜெர்மன் மக்களிடம் "நீங்கள் உங்கள் தினசரி ஆகாரத்திற்குத்தான் யுத்தம் செய்கிறீர்கள் என்று" சொன்னது தவறானது என்றும் அவன் எழுதியிருக்கிறான். அவன் சொன்னதாவது "ஒருவன் தன்னுடைய லாபத்திற்காகச் சண்டை போடத் துவங்கினால் தானிறக்காமலிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து விடுகிறான். ஏனெனில் அவனிறந்தால் யுத்தமூலமாக அவனுக்குக் கிடைக்கும் லாபத்தை அவன் அடையமுடியாது என்ற விஷயங்களை ராஜதந்திரிகள் அறியவில்லை". இது 1924-ம் வருஷத்தில் ஹிட்லர் எழுதியது.

ஹிட்லரின் பிரசார முறைகளுக்கு மாறாக உலக நடையில் பிரசாரத்தை கோயபெல்ஸ் தானகச் செய்து வருகிறானென்று நான் முதலில் ஆச்சரியப்பட்டேன். ஆனால் நாஸிகள் ஆட்சிக்குட்பட்ட ஜெர்மனியில் இம்மாதிரி தனிப்பட்ட காரியங்கள் நடைபெறமாட்டா. உலக நடையில் பிரசாரம் செய்தது ஒரு வாரம் மட்டில் நடைபெற்றிருந்தால் இது டாக்டர் கோயபெல்ஸின் சொந்த அபிப்பிராயம் என்று நினைக்கலாம். பிரசார முறையில் முற்றிலும் மாறுதல்களும் பிரசாரம் நீடித்து அதேமாதிரி நடைபெறுவதும் ஹிட்லரின் சம்மதமில்லாமல் நடைபெறமாட்டாது. பிரசாரம் செய்ய ஆரம்பித்து அநேக வாரங்கள் கழிந்துவிட்டபடியால் ஹிட்லரும் கோயபெல்ஸும் கலந்துகொண்டு ஜெர்மன் மக்களை உத்ஸாகப்படுத்துவதற்கு உலக நடையைப்பற்றி அறிவூட்டுவதுதான் தகுந்த பிரசாரம் என்று முடிவுசெய்துவிட்டார்களென்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

இந்தப் பிரசாரம் கொஞ்சகாலம் பயனளித்தது. யுத்தத்துக்கு முன் ஜெர்மனியிலிருக்கும்பொழுது நானறிந்த நாஸி யுவர்களும் 1940—41-ம் வருஷங்களில் நாம் கைதி செய்திருக்கும் சிப்பாய்களும் விமானிகளும் வெறிபிடித்தவர்களென்று நினைக்கிறேன். ஹிட்லரின் உத்தேசப்படி ஜெர்மனியில் உணர்ச்சியேற்பட்டுவிட்டது. ஆகிலும் துரதிருஷ்டவசமாக உணர்ச்சி அத்துடன் நிற்கவில்லை. மனித இயல்பு விவேகமற்றதல்ல. அமைத்த களிமண் உருவம்போல அது நிலையாக நிற்பதல்ல. தானாக அது மாறுதல்களடைந்துவிடும். சென்ற பத்து வருடங்களாக ஜெர்மன் மக்களை நாஸிக் கக்ஷிக்காரர்கள் செய்திருப்பதுபோல் பிள்ளைகளையும், பெண்களையும், மனிதர்களையும், ஸ்திரீகளையும் அம்முறையில் தயாரித்தால், அவர்கள் ஆத்திரமுள்ளவர்களாகவும், ஊக்கமுள்ளவர்களாகவும், அந்த தேசவெறிபிடித்தவர்களாகவும் ஆகிவிடுவார்களென்பதில் சந்தேகமில்லை. அதேமாதிரி அவர்கள் நின்றுவிடுவதில்லை. இந்த நிலைமை மாறிவிடுகிறது. சரித்திரப் பிரயோஜனமின்மை அவர்களுக்குப் புலப்பட்டு விடுகிறது. பரிபூரணவிதமான நிலையுமில்லாமல் அவர்களுக்கு மயக்கம் தெளிவுபெறுகிறது. உலக நடையிலுள்ள சில அம்சங்கள் மட்டும்தான் அவர்கள் முன்னிற்கின்றது. இதுதான் இப்பொழுது நாஸி ஜெர்மனியில் நடைபெற்றுவருகிறது. ஒலிபரப்புகளில் செய்யப்படும் பிரசாரங்களும், பத்திரிகைகளும் ஜெர்மனிக்குச் சென்றிருந்த நடுநிலைமை வகிக்கும் பிரயாணிகளின் அபிப்பிராயங்களும், இதர ஆதாரங்களும் என்னுடைய அபிப்பிராயத்தை வர்ஜிதம் செய்கின்றன.

---

# பிரிட்டனுடைய கடற்படை எப்பொழுதும் ஜாக்ரதையாகயிருக்கிறது.

## கடல் பலத்துக்கு மூலைக்கல்.

(லிவர்பூல் டெயிலி போஸ்ட்டு பத்திரிகை).

---

பிரிட்டனின் கடற்பலத்துக்கு மூலைக்கல் போன்றது கடற்தளபதி ஸர் ஜான் டோவியின் கடற்படை. இந்தக் கடற்படையில் யுத்தக்கப்பல்களும், விமானம்



தாங்கிகளும், க்ரூயிஸர்களும், நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும், சுரங்கவாரிக் கப்பல்களுமிருக்கின்றன. ஆரக்னி தீவுகளில் ஸ்காபாப்ளோ என்னுமிடத்தில் இது வைக்கப்பட்டிருந்தாலும் கடற்படை பூராவும் அங்கே யிருப்பதில்லை. அது வடசமுத்திரத்தில் முக்கியமான வேலை செய்து வருகிறது.

நமது கடற்படை பலத்தின் முக்கியமான அம்சங்களைப் பற்றி ஒருவித தகவலும் நமக்குக் கிடைப்பதில்லை. கடற்தளபதியின் பெயர் கூட ஒருவருக்கும் தெரியாது. கப்பல்களையும் பொதுஜனங்கள் பார்க்கக்கூடவில்லை. அவைகளைப் பற்றிய தகவல்கள் அபூர்வமாகத் தான் வெளியிடப்படுகின்றன. இவைகளின் வலிமையின் உதவியால் அட்லாண்டிக் சமுத்திரம், ஆர்க்டிக் சமுத்திரம், மேற்கு மத்தியதரைக்கடல் பிரதேசங்களில் நடக்கும் கடல் யுத்தமும் அல்லது கடல், விமான யுத்தமும் வெற்றிகரமாக முடிவடைகின்றன.

அட்லாண்டிக் சமுத்திரத்திலும் நன்னம்பிக்கை முனையைச் சுற்றியும் போகும் சாமான் கப்பல்களுக்கும், முற்றுகை போட்டு வரும் படைகளுக்கும், வட சமுத்திரத்தில் ரோந்து செய்கிற படைக்கும், எதிரியிருக்கும் சமுத்திரத்தில் வெடிகுண்டு பாவுதல், வெடிகுண்டுகளை வாறுதல் இவைகளைச் செய்யும் கப்பல்களுக்கும் நமது கடற்படை துணையாகச் செல்லுகிறது. வட ஆபிரிக்காவுக்குத் துருப்புகளை ஏற்றிச் சென்ற கப்பல்களுக்கு துணையாக கடற்படை சென்றது. துருப்புகள் கரையிலிறங்கும்பொழுது இதாலியக் கடற்படையினின்றும் அபாயம் ஏற்படாமலும் காப்பாற்றின. ருஷ்யாவுக்கு ஆர்க்டிக் கடல் மூலமாகச் செல்லும் உதவிக் கப்பல்களுக்குத் துணையளிக்க கடற்தளபதியின் பலம் பொருந்திய கடற்படை எப்பொழுதும் தயாராகயிருக்கிறது.

சுமாராக 3 வருஷங்கள் வரையில் ஜெர்மன் கப்பல்கள் நார்வேயின் குன்றுகளுக்கிடையேயுள்ள பள்ளத்தாக்குகளில் பதுங்கிக்கொண்டிருந்தன. அதாவது 40,000 டன்கள் எடைமானமுள்ள, பிஸ்மார்க், டிர்பிட்ஸ்; வலுவான கவசம் பூண்ட அட்மிரல் ஷீர், லட்ஸௌ, சண்டை க்ரூயிஸர்கள் ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸ்னா, மூன்று எட்டு அங்குல பீரங்கிகளுள்ள ஹிப்பர் வகுப்பைச் சேர்ந்த க்ரூயிஸர்கள், அநேக 6 அங்குல பீரங்கிகளுள்ள க்ரூயிஸர்கள் இவைகளுடன் நாசகாரிகளும் துணைக்காவல் சிறிய கப்பல்களுமிருந்தன.

ஒரே ஒரு தடவைதான் அவைகளில் நான்கு கப்பல்கள் அட்லாண்டிக் சமுத்திரத்தில் வெளிப்பட்டன. பிஸ்மார்க், ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்னா, பிரின்ஸ் யூஜன். பிஸ்மார்க் திரும்பிப் போகவில்லை. ஷார்ன்ஹார்ஸ்டும், நீஸ்நாவும் ப்ரெஸ்ட் என்னும் துறைமுகத்தில் ஒன்பது மாதங்கள் அடைபட்டுக்கிடந்து தப்பியோடின. ஓடும்பொழுது ஏற்பட்ட சேதங்களைப் பழுது பார்க்க மறுபடியும் ஒன்பது மாதங்களாகின.

ஜெர்மானியக் கப்பல்கள் டிராண்ட்ஹீமிலும், நார்விக்கிலும், டிராம்ஸோவிலும், பெர்கனிலும் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறதற்குக் காரணம் என்ன. நல்ல காரணங்களுமிருக்கின்றன. ஐக்கிய தேசத்தார்கள் கண்டுபிடிக்கும் வரையில் டாகாரையும் கஸாபிளாங்காவையும் கைப்பற்றி விடவேண்டும் என்று ஹிட்லர் வெகுநாளாக திட்டம் போட்டிருந்தான். நார்வேயின் தளங்களிலிருந்து படை பலத்துடன் ரகசியமாக அவ்விடங்களுக்குப் போவது என்று தயார் செய்து வைத்திருந்தான். ஆனால் நம்முடைய கடற்படையின் முற்றுகை பலமாக இருந்தது. ஜிப்ரால்டரும், ஹிட்லரின் லக்ஷியம்தான். அதுவும் முற்றுகை ஸ்தலத்துக்கு அப்பாலிருக்கிறது.

சென்ற மாரிகாலம் முதல் ருஷ்யாவிடமிருந்து ஹிட்லருக்கு அதிக பயம் ஏற்பட்டிருக்கிறது. பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் முக்கியமான உதவிகளைக் கொண்டு போகும் மார்க்கங்களில் தன்னுடைய கப்பல்களை ஹிட்லர் வைத்திருக்கிறான். அவனுடைய கடற்படை நமது சாமான் கப்பல்களை ரகசியமாக வழிமறித்துத் தாக்கியிருந்தால், நமது துணைக்காவல் கப்பல்களையும் சாமான்

கப்பல்களையும் இரண்டு மணிகளுக்குள்ளாகவே அழித்திருக்கக்கூடும். ஆனால் தளபதி டோவியின் பலமான கப்பல்கள் எப்பொழுதும் ஜாக்ரதையாகவேயிருக்கின்றன.

அட்லாண்டிக் கடல் யுத்தம் என்று சொல்லக்கூடிய முக்கியமான போரில் அநேக மாதங்களில் யூ படகு கூட்டம் நாசம் செய்வதைவிட ஒரு வாரத்தில் ஹிட்லர் வகுப்பைச் சேர்ந்த இரண்டு க்ரூயிஸர்கள் அதிகக் கப்பல்களை மூழ்கடித்துவிடக்கூடும், ஆனால் அந்த க்ரூயிஸர்கள் அந்த சமுத்திரத்துக்குச் செல்ல வேண்டும். நம்முடைய சாமான் கப்பல்களையும், நமது கடற்படையைச் சேர்ந்த யுத்தக் கப்பல்களின் எதிர்ப்பை நிவர்த்தி செய்துகொண்டு தாக்கவேண்டும்.

---

## டுனிஸியாவின் நிலைமை சந்தோஷகரமாயிருக்கிறது.

### ஜெர்மன் சைனியங்களின் தாக்குதலின் பலன்கள்.

ஆபிரிக்காவின் நிலைமை சிறிது நாட்களுக்குமுன் இருந்ததைவிட மிகவும் சந்தோஷகரமாயிருக்கிறது. வடக்கு டுனிஸியாவிலுள்ள போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்திய எதிரியின் தாக்குதல்கள் எல்லாம் முறியடிக்கப்பட்டன.

ஜெர்மன் சைனியங்கள் தங்களுக்கு நிச்சயம் ஜயம் கிடைக்கும் என்று அதிகாலசப்பட்டு, தங்களுக்கு ஆரம்பத்தில் கிடைத்த சிறிய வெற்றியை பெரிதாக எண்ணி போரிட ஆரம்பித்தனர். ஆனால் காஸரின், ஸ்பெய்ட்லா ஆகிய இடங்களின் மேல் படையெடுத்துச் சென்றது முடிவில் ஜெர்மானியருக்கு அதிகமான நஷ்டத்தையே கொடுத்தது.

ஜெர்மன் சைனியங்கள் விரட்டப்பட்டபொழுது தப்பிய பலர், எதிர்பார்த்ததற்கு மேல் அதிகமாக டுனிஸியாவில் வந்து தங்கியிருக்கின்றனர். இருந்தாலும் பலமற்றவர்களாகவே இருக்கின்றனர். பலமற்ற இந்த ஜெர்மன் சைனியங்கள், ஒரு பக்கம் எட்டாம் படையினராலும் மற்றொரு பக்கம் அமெரிக்கச் சைனியம் நிறைந்த ஒன்றும் படையினராலும் தாக்கப்படுகின்றனர். வியர்த்தமாய் பிரயத்தனப்பட்டு ஜெர்மன் சைனியங்கள் முற்றிலும் விரட்டப்படுவதற்குள் சில தாக்குதல்களை செய்திருக்கின்றனர். திடீரெனத் தாக்கினதால், காஸரின், ஸ்பெய்ட்லா ஆகிய இடங்களைப் பிடித்துக்கொண்டனர். ஆனால் மற்றொரு முறை அவர்கள் அம்மாதிரி செய்யமுடியாது. ஏனெனில் நம் சைனியங்கள் ஜாக்கிரதையாய்விட்டன. ஜெர்மன் சைனியங்கள் தரை மார்க்கமாய் சுலபமாய் வந்தாலும், நம் விமானத் தாக்குதல்களால் நசுக்கப்பட்டனர். ஒவ்வொரு அச்சைனியங்கள் நசுக்கப்படுகின்றன.

---

## ரபாலை ஆக்கிரமித்த பிறகு ஜப்பானுக்கு ஏற்பட்ட அதிக நஷ்டம்.

(நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை.)

பஸிபிக் சமுத்திரத்தில் ஜப்பான் கைப்பற்றிய நூற்றுக்கணக்கான நாடுகளில் நியூபிரிட்டனிலுள்ள ரபால் என்னும் பெரிய தளமானது அதிக நஷ்டத்துடன் பிடிபட்டது. ரபால் முக்கியமான ஒரு நகரமல்ல. சமாதான காலத்தில் தலைநகரமாக உபயோகிப்பதற்கு எரிமலைகளின் வெடிப்புகள் ஏற்படுவதால் லாயக்கில்லாதது. ஆனால் அதிலிருக்கும் துறைமுகம் ஜப்பானுக்கு கேந்திரஸ்தானமாக ஆகிவிட்டது. இந்த துறைமுகத்தில்தான் ஜப்பானியர்கள் அதிக நஷ்டமடைந்தார்கள். 3,08,600 டன்கள் எடைமானமுள்ள 46 கப்பல்கள் இந்தத் துறைமுகத்தில் மூழ்கிக்கிடக்கின்றன. இன்னும் 12 கப்பல்கள் மூழ்கிவிட்டன. 26 கப்பல்கள் பழுதாக்கப்பட்டு உபயோகமில்லாமல் கிடக்கின்றன. இம்மாதிரியான நஷ்டம் டொப்ருக் துறைமுகத்திலும், பெங்காஸியிலும்கூட ஏற்படவில்லை.



ரபாலை நமது வெடி விமானங்கள் 100 தடவைகளுக்கு மேல்தாக்கியிருக்கின்றன. ஆஸ்திரேலிய, அமெரிக்க வெடி விமானங்கள், ஒவ்வொரு இரவும் சென்று ஒவ்வொரு தடவையும் 50 டன்கள் எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் போடுகின்றன. அங்கே உண்டாகும் அக்னி ஜ்வாலை 150 மைல்களுக்கு அப்பாலும் புலப்படுகின்றது. கடற்கரையில் வைக்கப்பட்டிருக்கும் தற்காப்புகளுக்கு நாசமும், 150 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டும், 84 கப்பல்கள் நாசமடைந்தும் இருப்பதினின்றும் ரபாலில் ஜப்பானுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

---

## ஸம க்ஷேம ஏற்பாடு.

### ஜப்பான் எல்லோரையும் நாசமாக்கிவிடும்.

ஒரு நாட்டை ஜப்பான் ஆக்கிரமித்தால் அங்கே என்ன சம்பவிக்கிறது. என்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன, ஜனங்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்.

எதிரி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலிருந்து ரொம்பவும் பரிசிரமப்பட்டு தெரிந்துகொண்ட அநேக தகவல்களை ஆதாரமாகக்கொண்டு, துப்பறியும் ஒரு ஆபீஸர் நமக்கு ஒரு விருத்தாந்தம் அனுப்பியிருக்கிறார்.

ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் ஏற்கனவே நிறுவப்பட்ட திட்டப்படி ஜப்பானியத் துருப்புகள் நடந்துகொள்ளுகின்றன.

ஆக்கிரமிப்பு நடந்த சில நாட்கள் வரையில் அக்ரமங்கள் அதிகம். இந்த நாட்களில் ஜப்பானியத் துருப்புகளுக்கு யாதொரு தங்கு தடையும்கிடையாது. இதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது வெற்றிக்கறிகுறியாக துருப்புகளுக்கு இம்மாதிரியான யதேச்சாகமனம் வெகுமதியாக அளிக்கப்படுகிறது. இரண்டாவது, பொது ஜனங்களின் மனதில் பீதி உண்டாக்குவதற்கு ஹேதுவாயிருக்கிறது.

இதற்குப்பிறகு ஏற்பாடாக அடக்குமுறையும், சொத்து பறிமுதலும் சில காலம் செய்யப்படுகிறது. ஜப்பானுடைய உபயோகத்துக்காக அங்கேயிருக்கும் ஐச்வர்யங்கள் எல்லாவற்றையும் கொள்ளையடிப்பதுதான் இதன் பொருள்.

இந்தக் கொள்ளையடிப்பதில் தயை முதலியவைகளைக் காட்டுவதே கிடையாது. யுத்த கால சட்ட வரம்புகளையும் ஜப்பானியப் படைகள் முற்றிலும் மீறிவிடுவார்கள்.

இவைகளினின்றும் வியாபாரக் குறைவும், ஜீவனச் செலவு அதிகரிப்பும், தொழிலில்லாமையும், ஏழ்மைத்தனமும், உணவுப் பஞ்சமும் உண்டாகின்றன.

---

## கூடால்கனலில் நவீன ராபின்ஸன் குருஸோ.

### ஜப்பானியர்களுக்குச் சாரணனாகயிருந்தான்.

---

### பிரிடிஷ் கமிஷன் அதிகாரியின் தீரம்.

(டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை).

ஸாலமன்ஸ் தீவுகளுக்கு அரசன் என்று சொல்லக்கூடியவும் ஜப்பானியர்களின் நடவடிக்கைகளை கவனிக்கச் சாரணனாகயிருந்ததுமான டிக்குரோப்பன் ஹார்டனுடைய விசித்திரமான கதை வெளியாகியிருக்கிறது. கூடால்கனலின் கமிஷனரான 27 வயதுள்ள ஹார்டன் அந்தத் தீவைத் திரும்பிப்பிடிப்பதில் விசேஷப்பங்கு எடுத்துக்கொண்டான்.

ஜப்பானியர் அங்கே வந்தபொழுது, அவன் காட்டுக்குள் செல்லும்பொழுது உணவுப்பொருள்களோடு ஒலிபரப்பும் கருவியையும் எடுத்துச் சென்றான். ஒரு

நாள் இரவு ஆஸ்திரேலியாவில் ஒரு பிரதேசத்தில் மெதுவான தொனியில் ஹார்டனிடமிருந்து தகவல்கள் வந்தன. கிருஸ்துமஸ் வந்தனோபசாரம் அறிவிப்பது போல சாவதானமாக, கூடால்கனுரில் என்ன நடைபெற்றுவருகிறதென்று விஸ்தாரமாக ஹார்டன் வெளியிட்டான்.

ஹார்டனின் தகவல் ரொம்பவும் முக்கியமானவை. ஏனென்றால் பவழக்கடல் சண்டைக்குப் பிறகு ஜப்பானியர்கள் இந்தத் தீவைக் கைப்பற்றியபின் ஒரு தகவலும் வெளிவிடுவதில்லை.

அன்று முதல் ஒவ்வொரு இரவும் ஹார்டன் ஒலிபரப்பி வந்தான். பகலில் அவன் ஒரு மலையின் உச்சிக்கு மறைந்து சென்று அங்கிருந்து ஜப்பானியர்களிருக்கும் முகாம்களை உற்றுப்பார்ப்பான். இரவில் தன்னுடைய தலைமை காரியாலயத்திற்கு ஒலிபரப்பு மூலம் தகவல்கள் கொடுப்பான்.

அநேகம் தடவை ஜப்பானியர்கள் வசம் அகப்படுவதிலிருந்து தப்பிவிட்டான். நேசநாட்டாருக்கு அவன் இரண்டு மாதங்களாகக் கொடுத்துவந்த தகவல்களைப் பற்றி ஜப்பானியர்களுக்குத் தகவலே கிடையாது. அவனுடைய தகவல்களின் பேரில் ஜப்பானிய முகாம்கள், கோட்டைகள், ஹெண்டர்ஸன் விமானதளமென்று சொல்லக்கூடிய முக்கியமான விமான தளம் இவைகளைக் காட்டக்கூடிய தேசபடம் வரையப்பட்டது. அமெரிக்கக் கடற்படையினர் கூடால்கனுரிலிறங்கும்பொழுது, ஹண்டர்ஸன் விமான தளம் அறுகுறையாகக் கட்டப்பட்டிருந்தது. அமெரிக்கர்கள் அங்கே இறங்கிய உடன் ஹார்டன் காட்டிலிருந்து மேனிகருத்துப் பெரிய தாடியுடன் வெளிவந்தான்.

10 போலீஸ்காரர்களுடனும், 10 விடுதலையடைந்த கைதிகளுடனும் காட்டிலுள்ள பத்திரமான சோலைகளிலிருந்து அவன் அமுல் நடத்திவந்தான். அவர்கள் ஜாக்கிரதையாக உணவுப்பொருள்களைப் பங்கிட்டுச் சாப்பிட்டுவந்தார்கள். இருப்பு அற்றுவிட்டதும் காட்டிலகப்படும் சாமான்களை உட்கொண்டார்கள். அமெரிக்க மாலுமிகளைப் பார்த்து "உங்களைக் கண்டு நான் ஆனந்தம் அடைந்தேன்" என்று ஹார்டன் சொன்னார். அவர்களும் ஹார்டனுடைய சட்டைகள் கிழிந்திருந்தாலும், ஜோடுகள் போய்விட்டாலும், அவனுடைய அதிகாரக் குறியான தோள்குறிகளை அவன் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்ததற்கு ஆச்சரியப்பட்டார்கள்.

---

## ட்ரிபோலியினின்றும் இதாலியர் வெளியேறியதில் துருக்கி மகிழ்கிறது.

சுமார் 25 வருஷங்களுக்குமுன் ட்ரிபோலி துருக்கியைச் சேர்ந்திருந்தது. 1911-ம் வருஷத்தில் இதாலியர்கள் ட்ரிபோலி துறைமுகத்தைப் பிடித்துக் கொண்டு, கடற்கரை ஓரமாய் மற்றைய இடங்களைக் கைப்பற்ற ஆரம்பித்தனர். துருக்கி பால்கனுடன் யுத்தத்தை எதிர் பார்த்திருந்ததினுல் ட்ரிபோலியை இழந்துவிட்டது. ஆனால் துருக்கி ட்ரிபோலியை இழந்ததை மறந்துவிடவில்லை. இத்தேசத்தில் இன்றைக்கும் நூற்றுக்கணக்கான, ட்ரிபோலியிலிருந்த துருக்கியர்களும், அவர்கள் சந்ததியார்களும் அடைக்கலம் புகுந்திருக்கின்றனர். சென்ற ட்ரிபோலிடானியா போரில் சண்டை செய்த போர்வீரர்கள் எல்லாம் அநேகமாய் இன்றைக்கும் உயிருடன் இருக்கின்றனர். இதாலியர்கள் ட்ரிபோலியையும் இழந்தபின், வட ஆபிரிக்காவில் அவர்களுக்கு எதும் இடமில்லாமல் விரட்டப்பட்டனர் என்ற செய்தியானது, துருக்கியருக்கு ஆறுதலாய் இருக்கிறது.

ட்ரிபோலியிலிருந்து இதாலியர் வெளியேறியபின், துருக்கிக்குப் பல சௌகரியங்கள் ஏற்பட்டன. முதலாவதாக, பிரான்ஸின் வீழ்ச்சிக்குப்பின் தடுமாறிக் கிடந்த சம நிலை சீர்படுத்தப்பட்டது.



இரண்டாவதாக, மத்தியதரைக்கடல் கீழ் பிராந்தியத்தில் 100 க்கு 70 வீதம் பயம் குறைந்தது. ஸூயஸ் கால்வாயின் மூலம் முற்றிலும் பயமில்லாமல் உணவுப் பொருள்களும் தளவாடங்களும் செல்லுகின்றன. ஜெர்மன் சைனியங்கள் எவ்வளவு வேகமாய் வந்தனவோ அதனிலும் அதிகமான வேகத்துடன் திரும்பி ஓட்டம் பிடித்தனவாகையால், ஸைப்ரஸ், ஸிரியா முதலிய இடங்களுக்கு உள்ள பயம் நீங்கி, துருக்கியின் தற்காப்பு அதிகமாயிற்று.

எகிப்துக்கு ஜெர்மானியரிடமிருந்து நேரிட்ட பயமும், துருக்கியின் பின்புறமுள்ள பர்ஸியா தேசத்தின் எல்லைக்கும் இருந்த பயமும் ஆக இந்த இரண்டு பயங்களும் துருக்கிக்கு விலகிவிட்டன. மேற்கூறிய பயங்களால் துருக்கி தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டிய அவசியமிருந்ததால், அதற்காக வேண்டிய எத்தனங்களை மிகவும் துரிதமாய் செய்தது. காலமோ குறுகிய காலமாய் இருந்தது, இப்பொழுது, பயம் நீங்கிவிட்டதால் ஸூயஸ் கால்வாயின் வழியாய் ஸப்ளைகள். அதிவேகமாயும், மிகுதியான அளவிலும் வருகின்றன.

துருக்கி, கையாளுகின்ற பொதுநிலைமைக் கொள்கையின் பலன்களை அனுபவிக்க ஆரம்பிக்கிறது. துருக்கியின் சம்பவங்களை முக்கியமாய் கவனித்து வருபவர்களில் ஒருவர் இப்பொழுது பயம் நீங்கிவிட்டதால் சிறிது அமைதி இருக்கிறது என்றும் அவ்வாறு பயம் நீங்கினும் ஓய்வு எடுத்துக்கொள்ள இது சமயமில்லை என்றும் கூறுகிறார்.

---

# உணவுப் பொருள்களை அதிகப்படுத்த ஆராய்ச்சி.

## நல்ல விதைகளை உபயோகப்படுத்த உதவிகள்.

### இந்திய விவசாய ஆராய்ச்சி சபையின் ரிபோர்ட்டு.

1941—42-ம் வருஷத்தில் இந்தியாவின் உணவுப்பொருள்களை அதிகப்படுத்த வேண்டியதற்காக அநேக திட்டங்கள் போடப்பட்டு பொருளும் கொடுக்கப்பட்டது. இதைப் பூர்த்தி செய்த இந்திய விவசாய ஆராய்ச்சி சபையின் வருஷாந்திர ரிபோர்ட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள் ஒரிஸா போன்ற மாகாணங்களில் உள்நாட்டு நெல் ரகங்களை விட 10 அல்லது 20 சதவிகிதம் அதிக மேன்பலனைக் கொடுக்கக்கூடிய சிறந்த விதைகளை அதிகமாக உபயோகிப்பதற்கும் பரவச் செய்வதற்கும் பொருள் கொடுக்கப்பட்டது. 1944-ம் வருஷத்திற்குள்ளாக இந்த புது தினுசான விதைகளைக் கொண்டு 15 லக்ஷம் ஏக்கரா நிலங்கள் சாகுபடி செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்டிப்போட்டு வைத்திருக்கும் தான்யங்களுக்குச் சேதம் வராதபடி தான்யங்களுக்கு ஏற்படும் நோயைப்பற்றி ஒரு துண்டுப் பிரசுரம் அச்சிடப்பட்டது. சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சி ஸ்தாபனத்திலும், மதராஸ், பஞ்சாப், மத்திய மாகாணங்கள், பீஹார், ஹைதராபாத் முதலிய இடங்களிலும் தொத்து நோய்களைப் பற்றியும், ஏழை மக்களின் ஆகாரப்பொருளான சோளத்துக்கும் ஏற்படும் நோயைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நவதான்யங்களைப் பற்றியும், சாமை தான்யங்களைப் பற்றியும் பலபாகங்களில் ஆராய்ச்சி செய்யவும் இந்தியா சங்கம் ஏற்பாடு செய்தது.

பழவகைகளைப்பத்திரம் படுத்தும் விஷயமாகவும் ஆராய்ச்சி செய்து எலுமிச்சம்பழரசமும், பார்லியும் சேர்ந்த ஒரு ரசாயனமும், ஆரெஞ்சுப் பழத் தோலிலிருந்து தித்திப்புக் கலந்த ஒரு உணவுப் பொருளும், மாம்பழ ரசங்களின்

பக்குவமும் கண்டுபிடிக்கப்பட்டன. பலுசிஸ்தானத்திலுள்ள பழங்களை டப்பிகளில் அடைத்து காப்பாற்றுவதற்காக ஏற்பட்ட ரசாயன சாலையில் பழங்களை பத்திரப்படுத்தும் வேலை அதிகரித்துவிட்டது. சீமை பாதாம் பழத்தையும், கோவைப்பழம் போன்ற ஒருவகைப் பழங்களையும், டொமடோஸ் பழங்களையும் காயவைத்துப் பாடம் செய்வதற்கு புதிய முறைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

கிராமங்களிலும் அநேக ஏற்பாடுகள் ஆரம்பமாகியிருக்கின்றன. அதன்படி கிராமத்திலுள்ள குடியானவர்களெல்லாம் நூதன முறையில் விவசாயம் செய்ய வேணுமாய்க் கோரப்படுகிறார்கள்.

சர்க்கரை தயாரிக்கும் விஷயமாயுள்ள சாம்ராஜ்ய ஸ்தாபனம், கரும்பிலிருந்து மெழுகும், தித்திப்பான பானகமும் வெற்றிகரமாக தயாரிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். பானகம் நமது படைகளுக்குத் தேவை. கரும்புமெழுகு தோல்களுக்கும், சாமான்களுக்கும் மெருகு போட உபயோகிக்க இறக்குமதி செய்யப்படும் மெழுகுக்குப் பர்த்தியாக உபயோகப்படும்.

சாம்ராஜ்ய கால்நடை ஆராய்ச்சி சங்கத்திலும் பம்பாயிலும் தோல்களுக்கு உண்ணி மூலமாகவும் ரீங்காரம் செய்யும் ஈக்களாலும் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்க முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. டெர்ரின் கிழங்குகளை உபயோகித்து வந்தால் பக்ஷிகள் அணுகாது என்று கண்டு பிடித்ததால் பஞ்சாப் மாகாணத்தில் பக்ஷிகளை விரட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய மத்திய சங்கம் பொருளுதவி சாங்கிஷன் செய்திருக்கிறது. மலேயாவும் ஜாவாவும் விழுந்த பிறகு டெர்ரிஸ் கிழங்குகளின் இறக்குமதி போய் விட்டது. இந்தியாவில் கசிவான இடங்களில் டெர்ரிஸ் கிழங்கை உற்பத்தி செய்யும் முறைகளையும் யோசித்து வருகிறார்கள்.

நகரங்களிலும், பட்டணங்களிலும் பால் ஸப்ளையை அதிகப்படுத்த மத்திய சங்கத்தார் பால் உற்பத்தி, அவைகளை வேறு இடங்களுக்குக் கொண்டு போவது, அவைகளை ஒழுங்கு செய்வது முதலிய பிரச்னைகளைக் கவனித்து வருகிறார்கள். மாகாண சர்க்காரும் ஸமஸ்தான நிர்வாகங்களும் கலப்பு நெய் உபயோகப்படுத்தாதபடி செய்ய வேண்டுமென்றும் மத்திய சங்கத்தார் வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். தாவர நெய்யை ஒழுங்குபடுத்துவதற்கும் முறைகள் நிறுவப்படுகின்றன.

மீன்களை டப்பாக்களில் அடைத்து குளிர்ந்த இடங்களில் வைத்து காப்பாற்றிவைப்பதோடு இதர முறைகளையும் கண்டுபிடித்து வருகிறார்கள். தேன் அதிகமாக உற்பத்தி செய்வதற்கும் ஏற்பாடாகி வருகின்றது. ஐக்கிய மாகாணத்தில் ஜியாலி கோட்டில் தேனீக்களை வளர்க்கும் ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் மத்திய சங்கமும் இஸாத் நகரில் ஒரு கிளை ஸ்தாபனமும் ஏற்படுத்த பொருள் சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

சுத்தமான வெண்மையான கம்பளிகள் தயாரிப்பதற்காக மதராஸ், பம்பாய், பஞ்சாப், பீகார், மைசூர், காஷ்மீர், பலுசிஸ்தானம் முதலிய இடங்களில் ஆட்டு மந்தைகளை விருத்தி செய்வதற்காக பண்ணைகள் ஏற்படுத்த பொருளுதவி செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பண்ணைகளிலுள்ள ரசாயன சாலைகளில் ஆட்டு ரோமங்களைப் பரிசீலனை செய்து, நீளம், கனம், பளபளப்பு முதலியவைகளைக் கண்டுபிடிக்கிறார்கள். அதை ஆதாரமாகக் கொண்டு மந்தைகளை விருத்தி செய்வதற்கு ஆடுகள் பொறுக்கி எடுக்கப்படுகின்றன. இந்தப் பண்ணைகளிலுள்ள ஆட்டு ரோமங்கள் ஒவ்வொரு ஆட்டுக்கும் 2 முதல் 6 பவுண்டு வரையில் அதிகரித்திருக்கிறது. கிராமங்களிலுள்ள ஆட்டு ரோமம் 0.5 முதல் 1.5 பவுண்டு நிறைதானுள்ளது.



மதராஸிலும், வங்காளத்திலும், ஐக்கிய மாகாணங்களிலும், பீகாரிலும், பஞ்சாபிலும் சாம்ராஜ்ய கால் நடை ஆராய்ச்சி சங்கத்திலும் பிராணிகளின் நல்ல ஆகாரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு உபயோகமுள்ள தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதன்படி கிராமங்களிலுள்ள கால் நடைகளுக்கு குறைந்த முறையில் நல்ல ஆகாரத்தைக் கொடுக்க வசதிகளேற்படும்.

மத்திய சங்கத்தைச் சேர்ந்த கால்நடை விசாரிப்பு உத்தியோகஸ்தர்கள், கால்நடைகளுக்கு இந்தியாவில் ஏற்படும் வியாதிகளையும் தொத்து நோய்களையும் பரிசீலனை செய்து வருகிறார்கள். அநேக மாகாணங்களிலும் ஸமஸ்தானங்களிலும் அநேக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு கோழி முதலிய பறவைகளுக்கு ஏற்படும் வியாதிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் அவைகளையும் முட்டைகளையும் தொத்து வியாதிகளுக்குட் படமால் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

---

## தேசத்தின் பெருமைக்குச் சாதகங்கள்.

(ஸிந்து சட்டசபை அக்கிராசனர் ஹானரரி சையது மீரான் முகம்மது ஷா பேசியது).

குணமுள்ள லேகியம்போல், வரும் காலத்தில் இந்தியாவின் மனித பலத்தை இந்தியத் துருப்புகள்தான் வலுப்படுத்தும்.

சாதாரணமாக கிராமங்களில் ஏழைகளாக வசித்துவரக்கூடிய ஒரு மில்லியன் ஜனங்கள் இப்பொழுது தினசரி அளிக்கப்பட்ட பயிற்சியாலும் நல்ல உணவினாலும் சுகாதார வசதிகளாலும் வலுவான துருப்புகளாக மாறிவிட்டார்கள். இவர்கள் இந்தியாவின் மனித சமூகத்தில் வல்லமை பொருந்தியவர்களாக ஆகிவிடுவார்கள்.

இந்த மனிதர்களுக்கு நன்றாய் பரிசீலனை செய்யப்பட்ட பயிர்ச்சி முறைகள் கற்பிக்கப்படுகின்றன. நிபுணர்களான உபாத்தியாயர்கள் இவர்களுக்குத் தினந்தோறும் தேகாப்பியாசங்களைச் செய்துவைக்கிறார்கள். இவர்களுக்கு அளிக்கப்படும் ஆகாரம் ஏராளமானது, புஷ்டியுள்ளது. இவர்களின் சுகாதாரம் ஜாக்கிரதையுடன் கவனிக்கப்பட்டுவருகிறது. துப்பாக்கிச் சண்டையும், வெகுதூரம் நடந்து செல்லுவதும், போலிச்சண்டைகளும், கடுமையான ஒத்திகைகளும் இவர்களுடைய சரீரங்களை லாகவமாகவும், பிரயாசைக்கு லாயக்குள்ளதாகவும் செய்துவிடுகின்றன. பின்னும் உருது பாஷையிலும், ஆங்கிலத்திலும் வாசிப்பதும் எழுதுவதும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. உலக விஷயங்களைப்பற்றி உபந்யாசங்களும் இவர்களுக்குச் செய்யப்படுகிறது. இவைகள்மூலம் புத்தி விசாலமும் ஏற்படுகிறது.

நம்முடைய மனிதர்களுக்கு அளிக்கப்படும் பயிர்ச்சியின் பயனாக இந்தியாவின் வருங்கால நிலைமை நன்றாக மாறிவிடும். இதே காரணத்தினால் தான் நம்முடைய ஆண்பிள்ளைகள் சேனையில் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறேன். யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமென்பதுதான் ரொம்பவும் முக்கியமான காரணம். வெற்றிபெறாமல் நம்முடைய வருங்கால ஏற்பாடுகளை நிறுவமுடியாது.

வெற்றிக்குறிகள் தோன்றிவிட்டன. ஆகிலும் இன்னும் நாம் கஷ்டப்பட வேண்டும். நம்முடைய தீவிரமான முயற்சிகளால் வெற்றிகிடைக்கும் நாளை துரிதப்படுத்தவேண்டும். நமக்கு வெற்றி கிடைத்தால் இந்தியாவின் பெருமைக்கும் முன்னேற்றத்திற்கும் காரண பூதமான அநேக சௌகரியங்கள்

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 137. (2-வது பிரிவு)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13- 3-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | | 17- 3-43 | கொடும்பாளூர் | ... மாலை | 7.00 |
| 14- 3-43 | குடுமியாமலை | ... ,, | 7.00 | | ,, | விராலிமலை | ... ,, | 7.30 |
| | பாம்பூர் | ... ,, | 7.30 | | 18- 3-43 | களமாவூர் | ... ,, | 7.00 |
| 15- 3-43 | வெங்களூர் | ... ,, | 7.00 | | ,, | நல்லூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனபட்டு | ... ,, | 7.30 | | 19- 3-43 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| 16- 3-43 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 | | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 | | | | | |

### பிரஸங்கம் 138. (3-வது பிரிவு.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20- 3-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | | 24- 3-43 | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| 21- 3-43 | ஆலங்குடி | ... ,, | 7.00 | | ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | | 25- 3-43 | மழையூர் | ... ,, | 7.00 |
| 22- 3-43 | அன்னவாசல் | ... ,, | 7.00 | | ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| ,, | கிழக்குறிச்சி | ... ,, | 7.30 | | 26- 3-43 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 23- 3-43 | குழிபிறை | ... ,, | 7.00 | | ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 | | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 13— 3—43 | பொன்னமராவதி. | 20— 3—43 | வெட்டம்விடுதி. |
| 14— 3—43 | ஏம்பல். | 21— 3—43 | கொடும்பாளூர். |
| 15— 3—43 | கொன்னையூர். | 22— 3—43 | கீரனூர். |
| 16— 3—43 | ராமச்சந்திரபுரம். | 23— 3—43 | குடுமியாமலை. |
| 17— 3—43 | கரம்பக்குடி. | 24— 3—43 | ராயவரம். |
| 18— 3—43 | கீழாநிலை. | 25— 3—43 | குழிபிறை. |
| 19— 3—43 | புதுக்கோட்டை. | 26— 3—43 | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—16-3-43.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ மார்ச்சு ௴ 20௳ [ந. 138


பிரஸங்கம் CXXXVIII.

## ரோமலின் யுத்த தந்திரம் சிறந்ததுதான்; ஆனால் பயன்படவில்லை.

*(லண்டன் டைம்ஸ் பத்திரிகை—மார்ச்சு 8, 1943).*

டுனிஸியாவின் யுத்தம், காலப்போக்கை ஒட்டித்தானிருக்கிறது. அச்சுநாடுகள் ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவின் கடற்கரையில் எந்த இடத்திலும் நேச நாட்டுத்துருப்புகள் இறங்கக்கூடும் என்ற பயத்துடன்கூடிய ஒரு நிலைமையை நன்கு மதித்து அதை ஒத்திவைப்பதற்காகத்தான் ரோமலும் வான் ஆர்னிமும் சண்டை செய்து வருகிறார்கள். இவர்களை எதிர்த்து நிற்கும் துருப்புகள் இவர்களைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமானவைகள். எதிரிக்கு ஒரு நாளைக்கு 1,000 பேர்கள் வீதம் விமான மூலம் உபபலம் வந்து சேர்ந்தாலும் யுத்தம் பாதிக்கப்படமாட்டாது.

இம்மாதிரியாக குறைச்சலான படைபலமுள்ள ஒரு தளகர்த்தர் பலபாகங்களிலும் சுற்றி வளைக்கப்பட்டு பயந்திருக்கும் தருணத்தில் படை பலக்குறைவை ஈடுசெய்ய, தன்னை எதிர்க்கும் எதிரிகளை வரிசைக் கிரமமாய் வேகமாகத் தாக்கித் தன்னுடைய படையின் நடமாட்டங்களை அதிகப்படுத்துவது என்ற யுத்த முறையானது ராணுவ சரித்திரத்தில் அநேகம் தடவைகளில் கையாளப்பட்டு வந்திருக்கிறது. இந்த தந்திரத்தில் ஒரு சிரமம் ஏற்படக்கூடும். அதாவது ஒரு இடத்தில் பலமான முஸ்தீப்புகளைக்கொண்டு தாக்க ஆரம்பித்தால் அதே சமயத்தில் மற்றொரு பக்கத்தில் எதிராளி முன்னேறி துரத்தியடிக்க முடியாதபடி ஊன்றிக் கொண்டு விடுவானென்ற பயம் இருந்து கொண்டேயிருக்கும். 1914-ம் வருஷத்தில் இதேமாதிரி புத்திசாலித்தனமான ஏற்பாட்டை ஆரம்பித்து கடைசியில் பயன்படவில்லையென்று தெரிந்துகொண்டவன் நெபோலியன் என்ற ஒரு வீரன். இப்பொழுது ரோமல் கையாளும் யுத்த தந்திரங்களும் சிறந்தவைகள்தான். ஆகிலும் யுத்த சந்நிவேசத்தின் நிலைமையை யோசிக்குமளவில், இவனுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை ரோமல் போக்கிக்கொள்ள இயலாது என்பதற்கு ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன. அவன் மத்திய அரங்கத்தில் ஒரு பலமான தாக்குதல் செய்தான். ஆனால் அது அதிகபலமானதல்ல என்று இப்பொழுது வெளியாகிவிட்டது. இந்தப் போர்முனையில் நேசப்படைகள் தாங்கள் ஏற்கனவேயிருந்த ஸ்தானங்களுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். அவர்களுக்கு

விசேஷ ஆள் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகிலும் எதிரிக்கும் சொற்பச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டம் எதிரியை பாதிக்கக்கூடியது. எதிரியின் திட்டங்கள் தாக்காலிகமாக இதுரு பலிக்கவில்லை. ஆகிலும் டூனிஸியாவில் போக்குவரத்து மார்க்கங்களிலுள்ள கிழக்கு சமவெளியில் ரோமலின் ஆதிக்கம் குறைவுபடவில்லை. கெயிர்வானுக்குப் போகும் ரஸ்தாவிலுள்ள பிச்சானைக் கைப்பற்றியும், பெயிடு கணவாய்க்கு முன்னேறுவதும், கப்ஸாவிலிருந்து சோட் ஜெரிட் என்னும் சமுத்திரக்கரைக்கும் மாரத் அரணுக்குப் பின்பக்கத்தில் ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைகள் முன்னேறுவதும் எல்லாம் சேர்ந்து எதிரியை சமுத்திரத்திற்கும் பெரிய படைக்கும் மத்தியில் இறுத்தி நசுக்கிவிடப் போகிறது என்ற பயம் மேலும் மேலும் அதிகரித்திருக்கிறது. ஆகையால் ரோமலின் எதிர்ப்பின் விளைவுகளை அவன் விபரீதமாக மதித்துவிட்டான் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இந்த எதிர்ப்பில் அவனுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவனுடைய நிலைமை கொஞ்சம்கூட மாறுதலடையவில்லை. காலஹரணம் ஏற்பட்டது என்று வைத்துக்கொண்டாலும் அது அபரிமிதமானதல்ல.

டூனிஸியாவின் வடக்குக் கோடிபோர் முனையில் வான் ஆர்னிமும் கடுமையாக எதிர்த்து சில பிராந்தியங்களைப் பிடித்திருக்கிறான். ஆகிலும் சமீபத்தில் நேசநாட்டார் பிரசுரித்த வெளியீடுகளில் எதிரியின் முன்னேற்ற வேகம் தணிந்துவிட்டதென்றும், பிரிடிஷ் முதல்படை முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டதென்றும், ஆகிலும் முன்னேயிருந்த ஸ்தானங்களிலிருந்து அநேக மைல்களுக்கு அப்பால் யுத்தம் ஆரம்பித்து முன்னேற வேண்டியிருப்பதால் சில பிற்போக்குகளும் ஏற்படக்கூடுமென்றும் சொலலப்படுகிறது. முக்கியமான ரஸ்தாக்கள் எதிரியின் ரக்ஷணையிலிருந்து வருகின்றன. இங்கேயும் எதிரிக்கு ஏராளமான நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கேந்திரஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற முயற்சி பலிக்கவில்லை. இந்த நஷ்டங்களும் நாளடைவில் எதிரியின் பலத்தைப் பாதிக்கக்கூடும்.

மத்தியப் போர் முனையில் முதலெடுப்பில் பலமாகயிருந்து பிறகு குறைந்து வரும் ரோமலின் எதிர்ப்புக்குக் காரணம் யாதெனில் ஜெனரல் மாண்ட் காமரியின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு தகுந்த சமயத்தில் தயாராக இருக்க வேண்டுமென்பது ரோமலின் அபிப்பிராயம். தெற்குப் போர்முனையில் வேகமாகத் தாக்குவதற்காக மேற்குத்திக்கில் முன்னேறுவதை நிறுத்திவிடுவது என்ற யோசனையை சரியான தருணத்தில் ரோமல் செய்தானென்பது. இம்மாதிரியான யுத்த அரங்கத்தில் தளகர்த்தருக்கு இருக்கவேண்டிய நுட்பமான புத்திகூர்மையை விளக்கிக்காட்டுகிறது. இந்த புத்திசாலித்தனம் இந்தப் பிரதேசத்திற்கு வெளியே நிற்கும் சேனாதிபதிகளிடம் அதிகமாக பிரதிபலிக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் உள்புறமிருந்து ஏற்படக்கூடிய எதிரிகள் தாக்குதல்களைச் சமாளிக்கவும் துருப்புகள் இருக்கும் வெவ்வேறு ஸ்தலங்களுக்கிடையே உள்ள போக்குவரவு சாதனங்களின் கிரமத்துடன் எதிர்த் தாக்குதல் ஏற்பாடுகளை நிறுவவும் அவர்கள் சக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நேசநாட்டாரின் திட்டங்களைக் கலைத்துவிடவும் அதன் மூலம் அவைகள் நடைபெறாதபடி தாத்காலிகமாக ஒத்திவைத்து விட்டுவிடலாமென்ற நம்பிக்கையுடன் தான் ரோமல் முதலில் தாக்க ஆரம்பித்தான். இந்த யுத்த தந்திரத்தைத்தான் எல் அலமீன் யுத்தத்தில் அவன் கையாண்டான். ஆகிலும் அந்த இடத்தில் அவனுக்கு ஜயம் கிடைக்கவில்லை. அவன் நன்றாய் தோல்வியடைந்தான். ஏராளமான டாங்கிகளுடனும் துருப்புகளுடனும் ரோமல் இருமுறை தாக்கினான். இவ்விரண்டு எதிர்ப்பையும் நமது படைகள் வெற்றிகரமாக சமாளித்துவிட்டன. நமது லேசான படைகள் பின்வாங்கியதென்று சொல்லுவதும் முக்கியமான படைகளின் தற்காப்புக் குலையவில்லையென்று சொல்லுவதும் பொருத்தமேயாகும். எதிரிக்கு 50 டாங்கிகள் நாசமாகின என்று சொல்லுவதிலிருந்து ரோமலின் கவசம் பூண்ட படைகள், மறுபடியும் நம்முடைய டாங்கிகளை எதிர்க்கும் பீரங்கிப் படைகளோடு யுத்தம் செய்ததென்றும் தோல்வியுற்றதென்றும் சொல்லலாம். நமது எட்டாம் படையிடம் டாங்கிகளை எதிர்க்கும் பீரங்கிகள் ஏராளமாக யிருக்கின்றன.



ரோமல் இம்மாதிரியான எதிர்ப்பு யுத்தம் நடத்திவந்தால் எல் அலமீனில் ஏற்பட்ட கஷ்டங்களிலிருந்து இன்னும் கரையேறாத அவனுடைய துருப்புகளுக்கு மறுபடியும் நஷ்டம் ஏற்படக்கூடும். ஆள் சேதத்தைக் குறைவு செய்து வந்தாலும், யுத்தம் மேல்மேலும் கடுமையாக நடைபெற்றால் அதிக நஷ்டங்கள் தான் அவனுக்கு ஏற்படக்கூடும். ஆகிலும், தெற்குப் போர்முனையில் முடிவான யுத்தத்தை நடத்துவதற்கு ரோமலிடம் சக்தியில்லையென்றாலும், மாரத் அரண்களைப்பிளந்து குறுகலான மார்க்கங்கள் மூலமாக 8-ம்படை முன்னேறுவதைக் கண்ணுறப்பார்ப்பதையும் அவன் சகிக்கமாட்டான். மாரத் அரண் கணவாய் வழியாக 8-ம் படைவந்துவிட்டால், தெற்குப்பக்கத்திலுள்ள தன்னுடைய படைவரிசைகளை ரோமல் தெற்கு பக்கம் பூராவுக்கும் விஸ்தாரம் செய்யவேண்டி வரும். அவனுக்கு மேற்குப்பக்கத்தில், ஏற்பாட்டின் குறைவினால் சமீபத்தில் சில தோல்விகள் பெற்ற நேசதேசப்படைகளுக்கு தங்கள் படை வரிசைகளைக் குறுக்கிக் கொள்ள சந்தர்ப்பம் யேற்படும். ஆகையால் மேற்குப் போர்முனையில் முன்னேற்றத்தை நிறுத்தியதுபோல் படைகளை சிக்கனமான முறையில் உபயோகிப்பது தான் ரோமலின் தற்போதிய பிரச்னை. மாரத் அரணின் தற்காப்புக்கு வேண்டிய பலம் குறைவுபடாமல், மாரத் அரணுக்குமுன் நின்று காலதாமதம் செய்வதற்காகத் தாக்குவதற்கு எவ்வளவு பலத்தை உபயோகிக்கிறதென்று ரோமல் நிச்சயம் செய்யவேண்டும். எந்நிலைமையிலும் எதிரியின் தந்திரங்களையும் தங்கள் வலிமையையும் நன்றாய் அறிந்ததும், இம்மாதிரியான யுத்தப் போக்கில் பயிற்சிபெற்ற நிபுணர்களுமான, எட்டாம் படையானது ரோமலின் யுத்த தந்திரங்களைக்கண்டு சஞ்சலம் அடைந்துவிடாது. அவர்களும் கால தாமதம் ஏற்படவேண்டுமென்றுதான் சண்டை செய்து வருகிறோமென்றும் அறிவார்கள். வடஆபிரிக்காவுக்கு வெகுதூரத்திலுள்ள நேசநாட்டாரின் அக்கறைகளுக்கு கால நீடிப்புத்தான் அத்யாவசியம். நமக்கு வெற்றி நிச்சயமாகக் கிடைத்துவிடுமென்றாலும், வெற்றி சீக்கிரம் கிடைக்கவேண்டியதற்கு ஏராளமான பிரயத்தனங்களையும் நாம் செய்யவேண்டும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 13—3—43-லிருந்து 19—3—43-வரை.

**ருஷ்யா.**—ஜெர்மானியர்களின் தீவிரமான தாக்குதல்களுக்குப் பிறகு ருஷ்யர்கள கார்காவை காலி செய்துவிட்டனர். இது பெரிய நஷ்டம். கார்காவ் என்பது முக்கியமான ரெயில்வே ஜங்ஷன். தொழிற்சாலைகளுள்ள பிரதேசம், இதிலிருந்து எதிரிக்கும் அதிக சௌகரியம் ஏற்படாது. ஒரு மாதத்திற்கு முந்தி எதிரி வெளியேறியபொழுது இதே நகரத்தை அழித்துவிட்டும் பாழாக்கிவிட்டும் எதிரி சென்றிருக்கிறான்.

ஜெர்மனியின் வலுவான தளமாகிய ஸ்மாலென்ஸ்கை நோக்கி மூன்று பிரிவாக ருஷ்யர்கள் முன்னேறி வளைத்து வருகிறார்கள். ஒரு பிரிவு வியாஸ்மாவிலிருந்து ஸ்மாலென்ஸுக்குப் போகும் இருப்புப் பாதை வழியாகவும், மற்ற இரண்டும் கோம், நிகிடின்காவை நோக்கியும் செல்லுகின்றன. கோமும் பேயிலியும் பிடிபட்டுவிட்டன. நீபர் நதியின் அடிப்பாகத்திலும் வியாஸ்மா நதியையும் ருஷ்யர்கள் கடந்துவிட்டார்கள். இல்மென் ஏரிக்குத் தெற்கேயும் ருஷ்யர்கள் முன்னேறுகிறார்கள். தெற்கே குபான் பிரதேசத்தில் டாமன் பாலமுனையையும் கருங்கடல் கரையிலுள்ள ஜெர்மன் கோட்டைகளையும் ருஷ்யர்கள் வலுவாகத் தாக்குகிறார்கள்.

**டூனிஸியா.**—அதிக மழை பெய்வதால் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது. நீருண்ட மேகங்கள் சஞ்சரிப்பதால் தரையிலும் சமுத்திரத்திலும் நேசதேச விமானப்படை நடமாட முடியவில்லை. அதிகமழை பெய்வதால் தரை சதுசதுப்பாக இருக்கின்றது. நமது ரோந்துப்படைகள் மட்டும் நடமாடுகின்றன. எட்டாம் படையிருக்கும் பிரதேசத்தில் மட்டும் விமான நட

வடிக்கை நடைபெறுகிறது. ரோமலின் படை அமைப்புகள் தினசரி தகர்க்கப்படுகின்றன. நேசதேச விமானங்கள் வட ஆபிரிக்காவுக்கு ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. புதிய விமான தளங்கள் நிர்மாணம் செய்யப்படுகின்றன.

இந்த வார ஆரம்பத்தில் நேசதேசப் படைகள் தென் டுனிஸியாவில் மெட்லாவூல் பிரதேசத்தைப் பிடித்தன. ஸார் பிலெனுக்கு சமீபத்தில் எதிரிக்கு அதிக நஷ்டம் விளைவித்து எதிரிகள் தாக்குதல்களை சமாளித்துவிட்டன. வட பாகத்தில் 12-ம் தேதியன்று டெமாராவுக்கு சமீபத்தில் எதிரி மூன்று தடவை முன்னேறித் தாக்கினான். பயன்படவில்லை. 14-ம் தேதியன்று பௌ அராடாவுக்கு வடக்கே மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தில் பீரங்கிப் போர் நடைபெற்றது.

**பஸிபிக் சமுத்திரம்.**—மார்ச்சு 10-ம் தேதி, 22 ஜப்பானிய விமானங்கள் டூடால்கனாலைத் தாக்கின. ஒரு வெடி விமானமும் 3 சண்டை விமானங்களும் நஷ்டமாகித் திரும்பி வந்துவிட்டன. தென்மேற்கு டச்சு நியூ கினியாவிலிருக்கும் டோபோவுக்குப் போய்க்கொண்டிருந்த மூன்று ஜப்பானிய துருப்புக் கப்பல்கள் தாக்கப்பட்டன. வெடி குண்டுகள் நேராடி கப்பல்களில் விழுந்தன. இந்த வாரத்தில் 50 எதிரி விமானங்கள் குடால்கனூர் நகரத்தையும் துறைமுகத்தையும் தாக்கின. சொல்பச் சேதம் ஏற்பட்டது. ஆள் சேதம் சொல்பம்.

ஒரு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் 37 நிமிஷங்கள் கடுமையாக யுத்தம் செய்து பஸிபிக் சமுத்திர மத்தியில் ஒரு ஜப்பானிய நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பலை துளைத்து மூழ்கடித்தது. மார்ச்சு 13-ம் தேதியன்று நியூ ஜார்ஜியா தீவுகளுள் ஒன்றான ரெண்டோவோ தீவுக்கருகில் ஒரு ஜப்பானியக் கப்பல் அடிபட்டு மூழ்கிவிட்டது.

இந்த வாரத்தில் நேசதேச விமானங்கள் கீழ்கண்ட இடங்களை வெடி குண்டுகளால் தாக்கின. கிஸ்கா, காஹிலி, போகன் வில்லா, முண்டா, விலா, கோலம்பாங்காரா, ரபால், ஒரோ குடாக்கடல், பாலாலி, பூகா பூபிலி, ஹாஷின்ஸ் முனை, வேவாக்.

15 நாட்களில் தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியர்களுக்கு 114,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் நஷ்டமாகியிருக்கின்றன. அதாவது ஜப்பான் ஒரு வருஷத்தில் கட்டிமுடிக்கக் கூடிய கப்பல்களில் 15 சத விகிதத்துக்கு மேல் நஷ்டமென்று கணக்கிடப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு வடமேற்கில் அதாவது டச்சுக் கிழக்குத் தீவுகள் பிரதேசத்தில் ஆம்பன் டுபோ என்னும் இடத்தில் ஜப்பானியர்கள் துருப்புக் கப்பல்களையும் சாமான் கப்பல்களையும் அதிகமாகச் சேமிப்பதாக நமது வேவு பார்க்கும் விமானிகள் அறிந்தார்கள். இங்கு புதிய விமான தளங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தரைப் படைகளும் குவிக்கப்படுகின்றன.

**சைனா.**—பர்மா எல்லையில் ஸாலமீன் நதி ஓரமாக வடக்கே முன்னேறிய வரும் ஜப்பானியப் படைகளை சீனத் துருப்புகள் துரத்தியடித்துவிட்டன. எதிரி முன்னிருந்த தளமாகிய டெங்க்சங்குக்குத் திரும்பி வந்துவிட்டான். மிங்க்வான் மறுபடியும் பிடிக்கப்பட்டது. மத்திய சைனாவில் கோரமாக யுத்தம் செய்து சீனர்கள் வெற்றி பெற்றார்கள். தெற்கு ஹூபாங் பகுதியில் யாங்ட்ஸி நதியைத் தாண்டி ஹாங்கொளவுக்கும் இச்சாங்குக்கும் மத்தியிலுள்ள நதிப் போக்குவரத்துகளைப் பாதுகாப்பதற்கு எதிரி படைகள் எட்டுப் பகுதிகளாக அனுப்பப்பட்டன. அவைகள் துரத்தியடிக்கப்பட்டன. சமீபத்தில் கிடைத்த தகவலிலிருந்து 20,000 துருப்புகள் பின் வாங்குகிறதென்றும் சீனர்கள் நதி போக்குவரவு சாதனங்களைத் தாக்குவதற்கு வசதியான ஸ்தானங்களை அடைந்துவிட்டார்களென்றும் தெரியவருகிறது. வடமேற்கு ஹூனானில் பயம் நீங்கிவிட்டது.

**பர்மா.**-பர்மாவை வெடி விமானங்கள் இரவில் தாக்கும் முறைகள் அதிகரித்துவிட்டன. மார்ச்சு 13-ம் தேதியன்று ஆகியாப்பும் டான் பேயிக் பிரதேசமும் இரவில் தாக்கப்பட்டன. அதே சமயம் பாசுண்டாங்க் இருப்புப்பாதை பாலத்தை



பெரிய வெடி விமானம் தாக்கியபொழுது எதிரி விமானங்கள் எதிர்த்தன. அவைகளில் இரண்டு நாசமாயின. மார்ச்சு 14-ம் தேதியன்று அமெரிக்க 10-ம் விமானப்படை கோரடீக் கால்வாயை பலமாகத் தாக்கின. வாரக் கடைசியில் ராதிடாங் பிரதேசத்தில் பலமான போர் ஆரம்பமாகியிருக்கிறது.

**சில்லரை விஷயங்கள்.**—மார்ச்சு 5-ம் தேதியன்று பிரிடிஷ் விமானப்படை எஸ்ஸெனைத் தாக்கி 1,000 டன்கள் எடையுள்ள வெடி குண்டுகளைப் போட்டன. கிரப்ஸ் தொழிற்சாலையின் பேரில் அநேக குண்டுகள் விழுந்தன.

2. மார்ச்சு 9-ம் தேதி மூனிச் பலமாகத் தாக்கப்பட்டது. 500 டன்கள் எடைமானத்திற்கு மேற்பட்ட வெடி குண்டுகளும் எரி வெடிகளும் போடப்பட்டன. விமானங்கள் 700 மைல்கள் பறந்து சென்று லக்ஷியங்களைத் தாக்கின.

3. மார்ச்சு 13-ம் தேதி பிரிடிஷ் அயல் நாட்டு மந்திரி மிஸ்டர் அந்தோனி ஈடன் அமெரிக்காவுக்கு வந்தார். அங்கே அமெரிக்கா செய்து வரும் யுத்த முயற்சிகளை நேரில் பார்ப்பார். பிறகு தன் அபிப்பிராயங்களையும் வெளியிடுவார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—3—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—ஜலப் பிராந்தியங்களில்.

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ஜாக்கிரதையான துணைக்காவலோடுகூடிய கப்பல்கள்.—சிஸிலியன் கால்வாய் (Sicilian Channel). (4 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன-அல்லது கொளுத்தப்பட்டன. 5 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

துறைமுகம்.—ஸௌஸி (Sousse). தெற்கு டுனிஸியாவில் திரும்பி ஓடும் எதிரி சைனியங்கள்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியாவிலுள்ள கூடகஸால் (Guadagasal), ஸாடில் (Saddle), ஆமு (Amu).

ஜப்பானிய யுத்த சாதனங்கள்.—ஷார்ட்லண்டிலுள்ள காஹிலி (Kahili), பல்லாலி (Ballale), கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila).

கோக்திக்பாலம்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay)க்கும் லாஷியோ (Lashio)விற்கும், மத்தியில்.

**8—3—43.** (திங்கட்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தளங்களும் U. படகுகள் ஸப்ளை செய்யும் ஸ்தலங்களும்—பிரான்ஸிலுள்ள ரோவென் (Rouen) ரென்னிஸ் (Rennes). (30 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.)

ரயில்வே லக்ஷியங்கள்.-ஜெர்மனியிலுள்ள லிங்கன் (Lingen); பிரான்ஸிலுள்ள அவ்லநாய் (Aulonoye), டெர்க்னையர் (Tergnier).

இரவு.-தொழிற்சாலைகள் நிறைந்த ஸ்தலங்கள்—தெற்கு ஜெர்மனியிலுள்ள நூரம்பர்க் (Nuremburg).

லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. 1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது.)

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

கட்டடங்கள்.—செட்ஜனானி (Sedjenane).

எதிரி போக்குவரத்து வண்டிகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

திரும்பி ஓடும் விரோதி டாங்கிகளும் போக்குவரத்து வண்டிகளும்.—மாரெத் அரண் (Mareth line).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—லே (Lae) ஸாலமூவா (Salamaua).

துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul) அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

பீரங்கிகள்.—பர்மாவிலுள்ள மிதிங்னி (Myitingne) பாலம்.

ரஸ்தாவிலுள்ள யுத்த சாதனங்கள்.—பர்மாவிலுள்ள முனிவா (Monywa).

தொழிற்சாலைகள்—பர்மாவிலுள்ள மிஙயான் (Myingyan).

**—3—43.** (செவ்வாய்க்கிழமை).

பகல்.—விமான தாக்கல்கள்—வடக்கு பிரான்ஸ் (Northern France).

ரயில்வே ஸ்தலம்.—லெமான்ஸ் (Lemans). (1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

தொழிற்சாலைகள்.—ஜெர்மனியிலுள்ள மியுனிச் (Munich).

லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி.

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானத் தாக்கல்கள்.—மத்திய டேனிஸியாவிலும், தெற்கு டேனிஸியாவிலும் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ரயில்வே.—சௌஸி (Sousse)க்கும் ஸ்பாக்ஸு (Sfax)க்கும் மத்தியில்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—காஸ்மாடா (Gasmata), நியூ கினியாவிலுள்ள வா பிரதேசம், ஷார்ட்லெண்டிலுள்ள காஹிலி (Kahili), பல்லாலி (Ballale), ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda), விலா (Vila).

பாலம்.—பர்மாவிலுள்ள மொகாங் (Mogaung).

விரோதி விமானமிறங்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள கமாயங் (Kamaing), மெனிவெட் (Manywet).

கட்டடங்கள்.—வாஸட் (Wasat) டிங்பார் (Tingpair).

கனஸாக் (Kanzauk) பிரதேசம்.—பர்மாவிலுள்ள ராதிடாங்கிற்கு (Rathedaung) அருகில்; புரோம் (Prome).

**10—3—43.** (புதன்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தாக்குதல்கள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவில்.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி விமான நிலயம்.—எல் அலுயினா (El Alouina); காப்ஸா (Gafsa).

விரோதி போக்குவரத்து வண்டிகள்.—தெற்கு டேனிஸியா; மாரத் அரண் (Mareth Line).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

காஹிலி (Kahili); ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda), விலா (Vila) அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

விமான நிலயங்கள்.—மிங்கலடான் (Mingaladon).

கோக்திக் பாலம்.—மாண்டலே (Mandalay)க்கும் லாஷியோ (Lashio) விற்கும் மத்தியில்.

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

**11—3—43.** (வியாழக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

இரவு.—(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

தொழிற்சாலைகள்.—ஜெர்மனியிலுள்ள ஸ்டட் கார்ட் (Stutt Gart).

வேவு பார்த்தல்.—ஹாலந்து (Holland) ஜெர்மனி (Germany).

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

மோட்டார் படகுகள்.—ஸிஸிலி (Sicily), மாரத் அரண் (Mareth Line).

விரோதி விமான நிலயங்கள்.—டேனிஸ் (Tunis); காப்ஸா (Gafsa).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம், துறைமுகம்.—நியு பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), ஷார்ட்லெண்ட்ஸிலுள்ள காஹிலி (Kahili), பெல்லாலி (Bellale); ஸாலமன்ஸிலுள்ள விலா (Vila), முண்டா (Munda)



எதிரி சைனியங்கள்.—பர்மாவிலுள்ள டான் பெய்க் (Donbaik).

நதிப் போக்குவரத்து சாதனங்கள்.—வடக்கு பர்மா (Northen Burma).

எண்ணெய்க் கிணறுகள்.—பர்மாவிலுள்ள எனாங் யாட் (Yenangyat).

**12—3—43.** (வெள்ளிக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகலில்.—ரயில்வே தளங்கள்.—ரோவென் (Rouen).

பெரிய தொழிற்சாலை.—லிஜ் (Liege).

இரவு.—ஜெர்மனியின் யுத்த தளவாடங்கள் நிறைந்த இடம்.—ஜெர்மனியிலுள்ள எஸ்ஸென் (Essen).

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பற்துறைகள் இருப்புப்பாதைகள்.—சௌஸி (Sousse).

இலக்குகள்.—என்பிலாடவில்லி (Enfiadaville).

கப்பல் துறைகள்—டேனிஸ் (Tunis); செட்ஜனானி (Sedjenane) பிரதேசம்.

கப்பல்கள், துறைமுகம்—பாலெர்மோ (Palermo).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda); ஷார்ட்லெண்ட்ஸிலுள்ள காஹிலி (Kahili), பலாலி (Ballale).

கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila).

கப்பல் துறைகள் கப்பல்கள்—பர்மாவிலுள்ள ரங்கூன் (Rangoon), ராதிடங் (Rathedaung) பிரதேசம்.

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) ஜில்லா.

**13—3—43.** (சனிக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—சைனியதளம், நீராவி யந்திரங்கள்—அமீன்ஸ் (Amiens).

இருப்புப்பாதை தளம் அபிவில்லி (Abbeville), பாய்க்ஸ (Poix).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### வட ஆபிரிக்கா (North Africa), மத்தியதரைக்கடல் (Mediterranean).

படையோடுகூடிய போக்குவரத்து வண்டிகள்.—டேனிஸியா (Tunisia) வில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

மாரேத்அரண் (Mareth Line).

கப்பல் துறைகள்.—பிஸெர்ட்டா (Bizerta).

கப்பல்கள்.—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian Channel).

### ருஷ்யா (Russia).

6—3—43 முதல் 13—3—43 தேதியோடு முடிந்த வாரத்தின் விமான நஷ்டங்கள் ருஷ்யா 110, ஜெர்மனி 260.

விமானச் சண்டைகளும், தரைமேலுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஷார்ட்லெண்ட்ஸிலுள்ள காஹிலி (Kahili), பலாலி (Ballale), கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila), நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

விமான நிலயங்கள்.—லே (Lae), ஸாலமூவா (Salamaua).

கோக்திக் பாலம்—பர்மாவிலுள்ள மண்டலேக்கும் (Mandalay), லாஷியோவிற்கும் (Lashio) மத்தியில்.

கப்பல் துறை பிரதேசம்—மோன்மீன் (Moulmein), அக்யாப் (Akyab) பிரதேசம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**8—3—43.** (திங்கட்கிழமை.

### பிரிடன் (Britain.)

இங்கிலாந்தின் தென் பகுதி. தென் கிழக்கு பகுதியில் சில இடங்கள்—ஹோம் கௌண்டீஸ் (Home Counties) (3 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

### வட ஆபிரிக்கா (North Africa),

விமானச் சண்டைகள்.—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian Channel) (1 எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

தூரக்கிழக்கு.—டார்வின் துறைமுகம் (Port-Darwin).

**9—3—43.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

பிரிடனில் ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

### வட ஆபிரிக்கா (North Africa).

விமானச் சண்டைகள்.—டேனிஸியாவில் யுத்தம் நடக்கும் இடங்கள் (17 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டது).

### ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—கார்கோவிற்கு (Kharkov) மேற்கில்.

**10—3—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரைப் பிரதேசங்கள்.—கிழக்கு இங்கிலாந்து, தெற்கு இங்கிலாந்து.

டுனிஸியா முன்னேறித்தாக்கும் 8-ம் படை.—தெற்கு டுனிஸியா.

**ருஷ்யா (Russia).**

கார்கோவ் (Kharkov).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—கூடல்கனுர் (Guadal-canar).

**11—3—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தென் கிழக்கு கரையில் 2 இடங்கள்.

**வட ஆபிரிக்கா (North Africa).**

டிரிபோலி (Tripoli).

**ருஷ்யா (Russia).**

கார்கோவ் (Kharkov).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**12—3—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டனைச்சுற்றியுள்ள பிரதேசம்.—இங்கிலாந்தின் தென் மேற்குக் கரையில் ஒரு இடம். (13 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**ருஷ்யா (Russia).**

கார்கோவ் (Kharkov).

**13—3—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தென் மேற்குக் கரையில் ஒரு இடம் (4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

டுனிஸியா (Tunisia)—முன்னேறித் தாக்கும் எட்டாம்படை.

**ருஷ்யா (Russia).**

கார்கோவ் (Kharkov).

**14—3—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனில் ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

**டுனிஸியா (Tunisia).**

பிரிடிஷ் ஒன்றாம்படை.—டுனிஸியாவிலுள்ள செட்ஜனெ (Sedjenane)க்கு மேற்கே.

**ருஷ்யா (Russia).**

கார்கோவ் (Kharkov).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—கூடல்கனுர் (Guadal-canar).

# யுத்தக் குறிப்புகள்.

**தேசீய யுத்த முன்னணி.** பொதுஜனங்களுக்கும் யுத்த சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் தேசீய யுத்த முன்னணியின் அம்சங்களையும் நோக்கங்களையும் விளக்கிக்காட்டக்கூடிய சுருக்கமான ஒரு குறிப்பைப் பிரசுரிக்கிறோம்.

தேசீய யுத்த முன்னணி என்பது யாதென்று மறுபடியும் விளக்கிக் காட்ட வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. யுத்த முன்னணிக்கு யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆகிலும் காலக்கிரமத்தில் மாறுதல்கள் ஏற்படுவதுதான் இதற்குக் காரணம். ஆறு மாதங்களுக்கு முன் யுத்தத்தின் வருங்காலப் போக்கை பற்றி அநேகர் கவலைப்பட்டார்கள். இந்தியாவின் கதியைப்பற்றியும் சந்தேகமடைந்தார்கள். அப்பொழுது வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை தேசீய யுத்த முன்னணி புகட்டிற்று. தோல்வி மனப்பான்மையை வெறுக்கவும் முயன்றது. இன்று தோல்வி மனப்பான்மையானது அடியோடு அழிந்துவிட்டது. நம்முடைய பேச்சுத் திறமையினால் அழிந்து விடவில்லை. ருஷ்யாவிலும், லிபியாவிலும், நியூகினியாவிலும் இந்தியாவின் கிழக்கு எல்லைச் சாகங்களிலுமுள்ள நமது துருப்புகளின் தீரச்செய்கைகளால் அது ஏற்பட்டது. அவர்கள் செய்த சேவைகளுக்காக தேசீய யுத்த முன்னணி பெருமை பாராட்டவில்லை. ஆகிலும் யுத்தத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டபொழுது யுத்தப் போக்கு மாறிவிடும் என்று தேசீய யுத்த முன்னணி நிலயம் யோசனை கூறிற்று என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.



தேசீய யுத்த முன்னணி, பிரசாரகர்கள் கோஷ்டியில்லை. இதில் கலந்து கொண்டவர்களெல்லாம் இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த பொதுமக்கள். இந்தியாவின் வருங்கால க்ஷேமத்திற்காகப் பாடுபடுகிறவர்கள். தங்களுடைய க்ஷேமங்களெல்லாம் இந்தியாவின் வருங்கால கதியைப் பொருத்திருக்கிறதென்று அறிந்தவர்கள். இந்தியா முன்னேற்றமடைய வேண்டுமென்றும், தனக்கு வேண்டியவற்றை தானே சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்றும், அதிக ஒற்றுமையுடனிருக்க வேண்டுமென்றும், விரும்புகிற ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்த யுத்த முன்னணியின் அங்கத்தினராவார்கள்.

தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் வேண்டிய உணவுப் பொருள்களை உபயோகித்துக்கொண்டு, தன்னுடைய நண்பனுக்கு பாக்கியை விற்பனை செய்து நாட்டில் உணவுப்பொருள்களின் பஞ்சத்தை நிவர்த்திக்கிறவனுமான விவசாயியும் யுத்த முன்னணி மெம்பர்தான். தினந்தோறும் தன் வேலையைச் செய்கிறவனும் யுத்த காலத்தில் ஏற்பட்ட சிரமங்களைப் பொறுமையுடனும், தைரியத்துடனும் சகிக்கும் தொழிற்சாலை வேலைக்காரனும் தேசீய யுத்த முன்னணி மெம்பர்தான்.

குறைவுபட்டிருக்கும் உணவுப் பொருள்களையும், காகிதத்தையும், மின்சாரத்தையும் சிக்கனமான முறையில் உபயோகித்து வரும் ஒவ்வொரு குடும்பஸ்தனும் தேசீய யுத்த முன்னணி மெம்பராவர்.

சுருக்கமாகச் சொன்னால், தன்னுடைய குடும்பத்தின் க்ஷேமத்தையும் சுகாதாரத்தையும் கவனித்த பிறகு, யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சிகளில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு மனிதனும் தேசீய யுத்த முன்னணி மெம்பராவார்.

தேசீய யுத்த முன்னணி இயக்கமானது அதில் சேர்ந்து கொண்டவர்களுக்கும் அவர்களின் சார்பிலும் அறிவூட்டுகிறது. அதன் மெம்பர்களுக்குப் புத்திமதிகளைப் புகட்டுகிறது. மற்றவர்களுக்கும் புத்திமதிகளை உரைக்கிறது. இதன் நோக்கங்களின்படி காரியாம்சையில் நடத்திக் காண்பிக்கும் வெவ்வேறு அலுவல்களிலுள்ள நூற்றுக்கணக்கான ஜனங்களிடையே ஒன்றுபட்ட மனப்பான்மையை உண்டுபண்ணுகிறது. இந்த இயக்கமானது இந்தியாவின் தேசமக்களின் ராஜீய யுத்த முன்னணி இல்லை. இந்த தேசீய யுத்த முன்னணியில் தங்கள் அலுவல்களைச் செய்வதில் உண்மையான தேசாபிமான முள்ள அநேக இந்திய மக்கள் தங்கள் தேசத்தின் வருங்கால க்ஷேமத்தைச் சரியானபடி அமைப்பதற்காக ஒவ்வொரு நாளும் பாடுபடுகிறார்கள். இதன் மூலமாக உலகத்தில் இந்தியா க்ஷேமத்தை அடையவும் உலகில் இந்தியா கௌரவமான ஸ்தானம் வகிக்கவேண்டுமென்றும் முயற்சி செய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் வீழ்ச்சி நிச்சயம்.** "நாம் யுத்தத்தின் முடிவான நிலையை அடைந்து விட்டோம். ஜெர்மனியின் வீழ்ச்சி சீக்கிரம் ஏற்பட்டுவிடும்.

"நான்கு வருஷங்கள் நடைபெற்ற யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனி வீழ்ச்சியடையும் நிலையை அடைந்துவிட்டது. இதுவரையில் ஐரோப்பாவில் கர்ஜனை செய்த ஹிட்லரின் குறல் மௌனமாகிவிட்டது. ஜெர்மனியில் செத்தவர்களுக்குச் சடங்குகள் செய்ய வாசிக்கப்படும் கீதங்களும் ஜெர்மன் தேசமே நிலை நிற்பது கஷ்டமென்ற பேச்சுகளும் பலமாகக் கேட்கின்றன. பிரிடன் உள்பட எல்லா ஐக்கிய தேசத்தார்களும் இறுதி வெற்றிக்காக உலகத்தின் எல்லாப் போர்முனைகளிலும் தயாராக யிருக்கிறார்கள்."

மேற்கண்டபடி லண்டனிலிருந்து 13-ம் தேதியன்று டாக்டர் பௌஷ் பேசியிருக்கிறார். உலகத்தின் மற்றொரு பாகத்திலிருந்து, அதாவது அமெரிக்காவிலுள்ள வாஷிங்டனிலிருந்து, ஜெர்மனியின் அழிவைப்பற்றி ஈடனும் பின்வருமாறு பேசியிருக்கிறார்.

“ இந்தக் கோரமான கொடுமைகளுக்குக் காரணமான் ஜெர்மனியின் முடிவு ஆரம்பித்துவிட்டது. எதிரி பிடித்த நாடுகளிலிருந்து அவனைத் துரத்தியடிக்கும் வரையிலும் குற்றவாளிகள் தகுந்தபடி சிக்ஷிக்கப்படுகிறவரையிலும் பிரிடன் யுத்தத்தை நடத்தியே தீரும்.”

இதுதான் ஜெர்மனியின் பயங்கரமான முடிவு. பிரிடிஷ் வெடி விமானங்களின் அக்னி ஜ்வாலையாலும் வெடி விமானங்களாலும் ஏற்படக்கூடிய விளைவு இதுதான். பெர்கஸ்காடனிலுள்ள பயித்தியக்காரனை ஹிட்லர், பாஸ்டு என்பவன் செய்தது போல் தன்னுடைய சகாயத்திற்கு கோபத்தையும், குரோதத்தையும் வேண்டிக் கொண்டான். அந்த துர் தேவதைகளெல்லாம் அவனுக்குப் பயித்தியம் பிடிக்கும் படியாகவும், சித்தம் கலங்கும்படியாகவும் செய்துவிட்டன. வதந்திகள் உலாவுவது உண்மையானால் ஹிட்லர் இந்த உலகத்தில் வீணுகப் போய்விட்டான். பத்தி ஸ்வாதீனமில்லாமலும் சரீரபலம் குறைந்தும் போய்விட்டான். எப்பொழுதும் அவனுக்கு நல்லொழுக்கமே கிடையாது. அச்சு நாட்டார்களின் கக்ஷிகளில் இம்மாதிரியான அநேகர்களிருக்கிறார்கள். பெருத்த சரீரமுள்ளவனுகயிருக்கும் முஸோலினி இதாலிய பொதுஜன சமூகத்திலிருந்து மறைய ஆரம்பித்துவிட்டான். சக்தியற்றவனும், புத்தியில்லாதவனுமான டோஜோவுக்குத் தலை கிறு கிறுப்பு ஏற்பட்டு ஜப்பான் மந்திரி சபைக் கூட்டத்தை அவன் அடிக்கடி ஒத்திவைத்து விடுகிறான். ரகசியமான தகவல்களைக் கவனித்தால் சில நாட்களுக்கு முன் மார்ஷல் பிடேனுக்கு பார்சவாயுவு நோய் ஏற்பட்டதென்றும் அவன் தேக நிலை அபாயகரமாயிருக்கிறதென்றும், இறந்துவிடுவானென்றும் தோன்றுகிறது.

அச்சு நாட்டாரின் கோஷ்டியின்கதி இம்மாதிரியாக யிருக்கிறது.

இந்த யுத்தக் குற்றவாளிகளின் தேக சௌக்கியத்தைப்பற்றியும், சித்த ஸ்வாதீனத்தைப் பற்றியும் நிச்சயமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஒன்று நிச்சயமாகத் தெரியவருகிறது. சென்ற சில வாரங்களுக்குள்ளாக நாலாவது தடவை ஹிட்லர் பொது ஜனங்களிடையே சொற்பொழிவு நிகழ்த்த வரவில்லையென்பது நிச்சயம். அதாவது யுத்த வீரர்களைப் புகழ்ந்து கொண்டாடும் தினத்தன்று சொற்பொழிவு நடைபெறவில்லை. மார்ச்சு 16-ம் தேதிக்குமுன் நடைபெற வேண்டிய கொண்டாட்டமும் ஒத்திவைக்கப்பட்டது.

ஜெர்மனிக்கு ஏற்பட்ட தோல்விகளைப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பதிலும் சமாதானம் பேசி முடித்துவிடலாமென்ற நம்பிக்கை யிருக்கிறதென்றும் சொல்லுவதிலும் கோயபல்ஸ் ஈடுபட்டிருக்கிறான்.

அசமாதானத்தினால், முணுமுணுப்புச் செய்கிறவர்களை அடக்கியாளுவதில் ஜெர்மன் ரகசியப் போலீஸ் படை முயற்சி செய்து வருகிறது. ஜெர்மனியிலும் அயல்நாடுகளிலும் நாஸிக்கக்ஷியின் அதிகாரம் குறைவுபட்டு வருகிறதென்பதற்கு அத்தாக்ஷி இருந்து வருகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன் ஹங்கேரியிலும் ருமேனியாவிலுமிருந்த ஜெர்மானியர்களெல்லாம் நாஸிக் கொள்கைகளில் அதிகப் பற்றுள்ளவர்களாகயிருந்தார்கள். ஹங்கேரியிலுள்ளவர்களில் 700 பேர்கள், ஜெர்மன் படையில் சேரவேண்டுமென்று உத்தரவிடப்பட்டபொழுது ஜெர்மன் தேசியக் கக்ஷியிலிருந்து அநேகர்கள் ராஜீனாமாச் செய்துவிட்டார்கள். மேலும், ஜெர்மன் சேனையில் சேர்ந்தவர்கள் அன்னிய நாட்டாராகக் கருதப்படுவாரென்றும் தேசஸ்தனுடைய உரிமைகளை இழந்துவிடுவார்களென்றும் ஹங்கேரிய பிரதம மந்திரி சொல்லியிருக்கிறான்.

ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் மனக்கசப்பு அதிகரித்திருக்கிறது. பெர்லின் தெருக்களை மறைத்துக் காண்பிக்க மேல் மேலும் ஏற்பாடுகள் செய்வதிலிருந்து பிரிடிஷ் விமானப்படையின் குண்டு வீச்சுகள் அதிகரித்துவிட்டதென்றும் ஜெர்மனியின் அதோகதி கூடிய சீக்கிரம் வந்துவிடுமென்றும் ஞாபகப்படுத்தப்படுகிறது. நாஸிக் கக்ஷியாரைக் குறித்து ஜனங்களுக்கு வெறுப்பு அதிகரித்திருக்கிறது. நாஸிக் கொள்கைகளிலிருந்து ஜெர்மனியை விடுவிப்பதற்கு ராணுவ அரசாங்கம் ஜெர்மனியில் ஏற்படவேண்டுமென்ற எண்ணமும் கிளம்பிவிட்டது. இது சம்பந்தமாக மார்ஷல் வான்ரண்ட் ஸ்டெட்டின் பெயர்தான் பிரஸ்தாபிக்கப்



படுகிறது. மற்றொருவர் வான் பேபன். அவன் சமாதானத்தைப் பேசி முடிப்பதற்கு லாயக்குள்ளவனென்று கருதப்படுகிறது. கோயரிங்கும் தலைவனாக ஆகலாம். ஆனால் ரோமலை எல்லோரும் வெறுக்கிறார்கள். நாஸிக்கொள்கைகளின் உருவமென்றே அவனை மதிக்கிறார்கள்.

**கடைசி பிரயத்தனம்.** பிரான்ஸிலுள்ள 18 வயது முதல் 40 வயது வரையிலுள்ள வலிமையுள்ள மனிதர்களெல்லாம் ஊரை விட்டகலவேண்டுமென்று ஹிட்லர் உத்தரவிட்டிருக்கிறான். நேசநாட்டுத் துருப்புகள் பிரான்ஸில் இறங்கிவிட்டார்களானால் பிரெஞ்சு ஜனங்கள் நேசநாடுகளுடன் சேர்ந்துவிடுவார்களோ என்ற பயம் ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது காரணமாக தெருக்களிலும் சிற்றுண்டிசாலைகளிலும், சினிமாக்களிலும், வீடுகளிலும் உள்ள 18 முதல் 40 வயது வரையிலுமுள்ள ஆட்களையெல்லாம் ஜெர்மனிக்குக் கொண்டு போகிறார்கள். மேற்குப் பக்கத்தில் யுத்தம் ஆரம்பிக்கும்பொழுது பிரான்ஸ் பலஹீனமாக யிருக்கவேண்டுமென்று ஹிட்லர் ஏற்பாடு செய்திருக்கிறான். ஸ்திரீகளும், குழந்தைகளும், விருத்தர்களும் மட்டும் தான் அங்கிருப்பார்கள்.

ஆனாலும் ஹிட்லரின் பிரயத்தனம் பலிக்காது. அவனுக்கு எதிராக ஜனங்களின் எதிர்ப்பும் கொரில்லாப்படைகளின் செய்கைகளும் நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் பிரெஞ்சு கொரில்லாப் படைகள் சிறு சிறு பகுதிகளாகப் பகல் காலத்தில் தங்கள் அலுவல்களைக் கவனிப்பதும் இராக் காலத்தில் ரகசிய வேலை செய்வதுமாக இருந்துவந்தார்கள். இப்பொழுது ஜெர்மானியர்கள் கட்டாய முறையில் தொழிலாளர்களைச் சேர்ப்பதிலிருந்து ஒரு புதிய கொரில்லாப் படை உண்டாகிவிட்டது. இம்மாதிரி வேலை செய்யப் பிரியப்படாத கோஷ்டியில் ஆயிரக்கணக்கானவர்களிருந்துவருகிறார்கள். மார்ச்சு 11-ம் தேதியன்று இந்தப் படையின் நடவடிக்கைகளைப் பற்றிப் பின் கண்ட ரிபோர்ட் வெளியிடப்பட்டது.

1942-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 20-ம் தேதிமுதல் 1943-ம் வருஷம் ஜனவரி 20-ம்தேதி வரையில் பிரான்ஸில் கொரில்லாப் படைகள் 300 தடவை நிகழ்ச்சிகள் செய்திருக்கின்றன. இந்த கால அளவில் கொரில்லாப் படைகள் 282 ஜெர்மன் ஆபீஸர்களைக் கொன்றுவிட்டார்கள். 14 ரயில் வண்டிகளை முற்றிலுமோ அல்லது அரைகுறையாகவோ நாசம் செய்துவிட்டார்கள். 91 ரயில்வே எஞ்ஜின்களையும், 436 வண்டித் தொடர்களையும் நாசம் செய்துவிட்டார்கள். நான்கு பாலங்கள் தகர்க்கப்பட்டன. 12 பெரிய இடங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. 10 தொழிலாளர்களின் கட்டடங்கள் நாசமாக்கப்பட்டன.

தன்னுடைய பிரெஞ்சு தேசத்தாருக்கு ஜெனரல் டிகால் பின்கண்ட செய்தியை விடுத்திருக்கிறான். “சென்ற அநேக வாரங்களாக ஜெர்மன் தொழிற்சாலைகளில் வேலைசெய்ய பிரெஞ்சுத் தொழிலாளர்களைச் சேமிக்க எதிரி பலாத்காரத்தை உபயோகித்ததுமட்டுமல்லாமல், ஏராளமான ஜனங்களையும் பிரான்ஸிலிருந்து அப்புறப்படுத்துகிறான். இதின் மூலமாகப் பிரான்ஸிலுள்ள ஜனங்களில் வலிமை பொருந்தியவர்களைக் குறைத்துவிடவேண்டுமென்பதும், அவர்களை பிரான்ஸின் ஜனங்களோடு யுத்தம்புரியச் செய்வதென்பதும் ஹிட்லரின் நோக்கம்.

தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒழுங்கு முறைகளுக்கு இந்தத் திட்டங்கள் முரண்பட்டவைகள். இவைகள் மனித வர்க்கத்தின் உரிமைக்கும் மனிதனுடைய கௌரவத்துக்கும் ஹானியேற்படக்கூடியவைகள்.

ஆகையால் பிரெஞ்சு தேசியக் கமிட்டியாகிய நாங்கள், விஷிப் போலி அரசாங்கத்தின் சம்மதத்தின்பேரில் செய்யப்படும் நடவடிக்கைகளும், ஆள் சேமிப்பு முறைகளும் நடைபெறாது தடை செய்யவும், ரகசியமாகக் கெடுதல்கள் செய்யவும் பிரெஞ்சு மக்களை வேண்டிக்கொள்ளுகிறோம். ஜெர்மன் வேண்டுகோளுக்கு இணங்காதவர்களுக்கும் நீங்கள் உதவி செய்துவரவேண்டும்.

வீரம்பொருந்திய நீங்கள் ஒரு பெரிய கலகம் செய்தால் உங்கள் விடுதலைக்காக அதே காலத்தில் நாங்களும் பெரிய யுத்தத்தை ஆரம்பித்துவிடுவோம்.

**ஸ்டாண்ட்லியின் பேச்சு.** மாஸ்கோவிலிருக்கும் அமெரிக்க ஸ்தானிகரான கடற்தளபதி ஸ்டாண்ட்லி, அமெரிக்காவின் கடன் குத்தகைத் திட்டப்படி ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்ட உதவியை ருஷ்யாவின் பத்திரிகைகள் மதிக்கவில்லையென்றும், உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் யுத்தத்தை ருஷ்யர்கள் தன்னந்தனியாக நடத்திவருகிறோமென்றும் பொருள்படும்படியாக ருஷ்ய அதிகார வர்க்கத்தார் நடந்துகொள்ளுகிறார்களென்றும் புகார் செய்தார். இது நமது யுத்தப்போக்கில் பிளவை உண்டுபண்ணுகிறது. ஒற்றுமை அதிகமாக இருக்கவேண்டிய சமயத்தில் இது சொல்லப்பட்டது வியசனிக்கத்தக்கது. இந்த விஷயத்தை வெளியிட்டிருக்கவே கூடாதென்று நான் நினைக்கிறேன். எப்படி இருந்தாலும் இந்த விஷமப் பேச்சு நிராகரிக்கப்பட்டு விட்டது. அமெரிக்கா இதை ஒப்புக்கொள்ளவில்லை. மிஸ்டர் வெண்டல் வில்கி இதைப்பற்றி ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டார்.

"பட்டவர்த்தனமாகவும், முன்பின் யோசனையன்னியில் வெளியிடும் பேச்சுக்களெல்லாம் உலக நடைக்கு லாயக்கில்லாதவை. இவைகள் கெடுதலைத்தான் விளைவிக்கும். இப்பொழுதாவது அல்லது வருங்காலத்திலோ ருஷ்யாவுடன் சண்டை செய்யவேண்டுமென்று ஒரு அமெரிக்கனும் விரும்பவில்லை. ருஷ்யாவுக்கு நாம் தளவாடங்கள் அனுப்புகிறோமென்றும், மற்ற போர் முனைகளிலும் போர் புரிகிறோமென்றும் ஒவ்வொரு ருஷ்யரும் அறிந்திருக்கிறார்கள்".

ருஷ்யாவிலும், அமெரிக்காவிலும் அநேக பிரமுகர்கள் ஸ்டாண்ட்லியின் அபிப்பிராயத்தைக் கண்டனம் செய்திருக்கிறார்கள். அமெரிக்காவின் கடன் குத்தகைத் திட்ட நிர்வாகியான மிஸ்ட்டர் ஸ்ட்டினியஸ் சென்ற மூன்று மாதங்களில் மட்டும் 456½ மிலியன் பவுன்கள் பெருமானமுள்ள சாமான்கள் ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டனவென்று சுட்டிக் காட்டியிருக்கிறார். அமெரிக்காவிலுள்ள ருஷ்ய ஸ்தானிகரான M. லிட்வினேவ் அமெரிக்காவிலிருந்து ருஷ்யாவுக்கு ஏராளமான உதவி போயிருக்கிறதென்று நன்றி கூறியிருக்கிறார். இந்த உதவின் அளவை ருஷ்ய மக்கள் நன்றாய் அறிவார்களென்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஸப்ளைகள் ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டன என்பதற்கு நிதர்சனமாக வியாஸ்மாவிலும், ரிஷெவ்விலும் நடந்த சண்டைகளில் பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் அனுப்பப்பட்ட டாங்கிகளும், சண்டை விமானங்களும் உபயோகிக்கப்பட்டு வெற்றிகள் கிடைத்தனவென்பது கவனிக்கத்தக்கது.

நேசக் கக்ஷிக்காரர்களுக்குள் சச்சரவு உண்டாகிவிட்டது என்பதற்கு ஸ்டாண்ட்லி சொன்னது அத்தாக்ஷியென்று விளம்பரம் செய்ய டாக்டர் கோயபல்ஸ் கைதீட்டிக்கொண்டிருக்கிறான். ஆனால் இந்த வித்தியாசங்கள் புருஷன், பெண்டாட்டி சண்டைகள்போல பலமாகக் காணப்பட்டாலும், கடைசியில் அவர்களிடையேயிருக்கும் நட்பைப் பலப்படுத்துவதும்போலாகும். வேறு விதமாகச் சொன்னால் இவைகள் உள்ளேயிருக்கும் நீராவியை வெளிப்படுத்திவிட்டு, பிறகு மூடிக்கொள்ளக்கூடிய இடுக்கண்கள். தப்பான அபிப்பிராயங்கள் வெளிப்படையாகத்தானிருக்கின்றன. நாஸிக் கக்ஷியை வெறுப்பதில் ஒருமுகமான மனப்பான்மையும் சுயேச்சை அடையவேண்டிய தாகமும் நேசநாட்டார்களிடம் அதிகமாகத்தான் குடிகொண்டிருக்கின்றன.

இவ்வளவு ஆர்ப்பாட்டத்திற்குப் பிறகும், ஸ்டாண்ட்லி சம்பந்தமான நிகழ்ச்சியிலிருந்து உலகத்தில் மறுபடியும் கலகம் ஏற்படுவதற்கு அறிகுறிகள் தோன்றுகின்றதை அது சூசனை செய்கிறதென்று நினைக்கலாம். சீக்கிரமாக வெற்றி பெறுவதற்கும் வருங்காலத்தில் சாச்வதமான உலக அமைதி ஏற்படுத்துவதற்கும் இப்பொழுதே இந்த சம்பவத்தைப் பரிசீலனை செய்யவேண்டும். 19-வது நூற்றாண்டில் ராஜதந்திர முறையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளான வல்லரசுகளின் சமத்வமும், தேசங்கள் தனிப்பட்ட நாடுகளாகயிருப்பதும், ஹேக்கில் ஏற்பட்ட திட்டங்களும் எல்லாம் அமுலிலிருந்தகாலம் உண்டு. ஆயுதம்பூண்ட கொள்ளைக்காரர்களிடமிருந்து உலகத்தை ரக்ஷிப்பதற்கு ஒரு புதிய சர்வதேச ஏற்பாடு இப்பொழுதே நடைபெறவேண்டும். சிறிய தேசங்களும் நிலைபெற்றுத் தானிருக்கவேண்டும். பெரிய வல்லரசுகளான நான்கு தேசங்களும் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது, ஜனாதிபதி



ரூஸ்வெல்ட்டு அழகாகச் சொன்னபடி நல்ல சகோதரபாவமானது பேச்சோடு மட்டுமில்லாமல், காரியாம்சையிலும் ஒவ்வொரு தேசத்திலும் பரவும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும். பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா மூன்றும் சேர்ந்து வேலை செய்யவேண்டும். மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு பிரிட்டன் ஜவாப்தாரியாவதுபோல் கிழக்கு ஐரோப்பாவுக்கு ருஷ்யா முக்கியமான வல்லரசு. பஸிபிக் சமுத்திர பிராந்தியத்திற்கும், உலக க்ஷேமத்திற்கும் பிரிட்டனும், அமெரிக்காவும் பொறுப்பாளிகள். பிரிட்டன் பாதுகாக்கவேண்டிய ஸ்தலம் ரைன்நதி வரையிலுள்ளது என்றால், ஓடர் நதிவரையிலுள்ள பிரதேசத்தை ருஷ்யாதான் காப்பாற்றவேண்டும். பெரிய வல்லரசுகளுக்குள் பிரிட்டனுக்கு ஏற்பட்டிருக்கும் விசேஷப் பங்கு ரொம்பவும் பளுவானது. சமீபத்தில் மிஸ்ட்டர் ஹெர்பர்ட் மாரிஸன் சொன்னபிரகாரம் பிரிட்டன் அமெரிக்காவினுடையவும், ருஷ்யாவினுடையவும் நட்பை அதிகரித்து பலப்படுத்தவேண்டுமென்று சொல்லுகிறோம். டைம்ஸ் பத்திரிகையில் ஐரோப்பாவில் சென்ற சில வருஷங்களில் நடைபெற்ற சம்பவங்களின் படிப்பினை இதுதானென்று எழுதப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் விமானப்படையின் தீரம். சில முக்கியமான குறிப்புகள்.** மார்ச்சு மீ 11-ம் தேதியன்று விமானப்படையைப் பற்றி கணக்குகள் விவரம் சொல்லும்பொழுது ஸர் ஆர்ச்சிபால்ட் ஸின்கிளேர் கீழ்கண்ட ஸ்வாரஸ்யமான தகவல்களை வெளியிட்டார். அந்தக் கணக்குகளிலிருந்து அச்சுநாடுகளின் வலுவை அழிப்பதில் பிரிடிஷ் விமானங்கள் எவ்வளவு பங்கு எடுத்துக்கொண்டன என்பது ஸ்பஷ்டமாய்த் தெரிய வருகிறது. பிரிடிஷ் விமானப்படைகள் விளைவித்த நஷ்டக் கணக்குகள்.

(1) **அச்சு நாட்டுக்கப்பல்கள்.**—சென்ற இரண்டு வருஷங்களில் 12,50,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மூழ்கிவிட்டன, அல்லது பழுதாக்கப்பட்டன.

(2) **அச்சு நாடுகளின் விமானப்படை.**—எல் அலமீன் யுத்தம் நடந்த 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் 22-தேதி முதல் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் முடிய 1,477 விமானங்கள் நஷ்டமாகின, அல்லது எதிரி வசமாயின.

(3) **ஜெர்மன் தொழிற்சாலைகள்.**—2,000 யந்திரசாலைகளும் தொழிற்சாலைகளும் நாசமாக்கப்பட்டன. ரூர் பிரதேசத்திலும் ஸார் பிரதேசத்திலுமுள்ள எஃகு தொழிற்சாலைகளில் ஜெர்மானியர்களுக்கு 12,50,000 டன்கள் எடைமானமுள்ள எஃகு நஷ்டமாகிவிட்டது. எஸ்ஸெனில் 450 ஏக்கராவும், வில்ஹெல்ம்ஷேவனில் 118 ஏக்கராவும், ராஸ்டாக்கில் 130 ஏக்கரா கொண்ட பிரதேசமும் நாசமாக்கப்பட்டன.

(4) **சுரங்கக் கண்ணிகள்.**—1941-ம் வருஷம் சுரங்க வெடிகள் போட்டதைப் போல் 9 மடங்கு அதிகமாக 1942-ம் வருஷத்தில் எதிரியின் சமுத்திரக் கரையோரங்களில் சுரங்க வெடிகள் பாவப்பட்டன.

(5) **துணைக்காவல் படை.**—சென்ற வருஷம் 50,000 தடவை தாக்குதல் செய்யப்பட்டன.

(6) இதை விர ஆக்கிரமிப்பு ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் எதிரியின் எண்ணெய் சேமிப்பு ஸ்தலங்களையும் ரெயில்வே எஞ்சின்களையும் ஏராளமாக நமது விமானங்கள் நாசம் செய்திருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**யூ எண்ணெய்க் கப்பல்.** பிரிடிஷ் விமானப்படையினால் தகர்க்கப்படும் தளங்களுக்கு வராமலேயே கடலிலேயே யூ படகுகளுக்குத் தேவையான எண்ணெய் ஸப்ளை செய்வதற்காக புது ரகமான யூ எண்ணெய் கப்பல்களைக் கட்டிவிட்டதாக ஜெர்மானியர்கள் பீத்திக்கொள்ளுகிறார்கள். ஆகிலும் சமுத்திரத்தில் செல்லும் யூ படகுகளை நமது விமானப்படை தாக்கக்கூடுமென்பதையும் பலமான ரிபேர்களைப் பழுது பார்ப்பதற்கு கப்பல் தளங்களுக்கு யூ படகுகள் வரவேண்டுமென்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்.

**யூ படகு தொந்தரவு.** காமன்ஸ் சபையில் மார்ச்சு 10-ம் தேதியன்று எழும்பிய கேள்விக்குப் பதிலுரைக்கும் பொழுது கடற்படை இலாகாவின் திரவ்ய காரியதரிசியான மிஸ்டர் ஜார்ஜ் ஹால் என்பவர், யூ படகுகளின் சங்கியை அதிகரித்த போதிலும், அவைகளுக்கு அதிக நஷ்டமேற்பட்டிருக்கிறதென்றும், அவைகளைத் தாக்கும் ஏற்பாடுகளும் அதிகரித்துவிட்டதென்றும் வெளியிட்டார். விமானப்படையுடன் கடற்படை பாதுகாக்கும் விமானப்படையும் அதிகரித்து வருகிறது. மீன் வெடிகள் போடும் வெடி விமானங்களும், புது மாதிரியான பருந்துப்பாய்ச்சல் வெடி விமானங்களும், ஸீ பையர் விமானங்களும், பார்ராகுடா விமானங்களும் ஏராளமான யூ படகுகளை மூழ்கடிக்கின்றன. வேகமாகச் செல்லக்கூடிய கப்பல்களும், ஏராளமாகக் கட்டப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**கடன் குத்தகை ஏற்பாடு.** கடன் குத்தகை ஏற்பாடு இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலே சொல்லிய திட்டம் ஏற்பட்ட இரண்டாவது வருஷக் கொண்டாட்ட தினத்தன்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பின்வருமாறு சொன்னார். "கடன் குத்தகை ஏற்பாடு அச்சுநாடுகளின் இறுதி தோல்விக்கு ஒத்தாசையாயிருக்கும்." இது வீண் பேச்சல்ல. கடன் குத்தகை ஏற்பாட்டின் விளைவாக யுத்தப் போக்கானது நேச நாடுகளின் தற்காப்பு முறையிலிருந்து முன்னேறித் தாக்கும் நிலைக்கு வந்துவிட்டது. இங்கிலாந்துக்குப் படையெடுப்பு பயம் ஏற்பட்டதை குத்தகைக் கடன் திட்டம் நிவர்த்தி செய்திருக்கிறது. இப்பொழுது அச்சுநாடுகள் எவ்விடத்தில் அடுத்தபடி தாக்குவார்களென்ற கேள்வியில்லை. நேசநாடுகள் எங்கு யுத்தம் ஆரம்பிப்பார்களென்பதுதான் முக்கிய பிரச்னை. யுத்த முயற்சிகளுக்காக நிறுவப்பட்ட இந்த திட்டமானது உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் அமைதி நிலவுவதற்கும் வருங்காலத்திய க்ஷேமத்திற்கும் உபயோகமுள்ளதாக இருக்கும். உலகத்திலுள்ள எல்லா தேசங்களின் ஒற்றுமைக்கும் இது காரணமாயிருக்கும். ஹாலிபாக்ஸ் சொன்னபடி குத்தகைக்கடன் திட்டமானது யுத்தத்தின் வெற்றிக்கும் சமாதான ஏற்பாடுகளுக்கும் அவசியமாகும்.

வி வி வி வி வி வி வி

**டுனீஷியப் போர்.** டுனீஷியாவில் நேசநாட்டாரின் வளையமானது கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வருகிறது. நேசநாடுகளின் கடல் முற்றுகையையும் மீறி சில உபபலங்கள் ஜெர்மனிக்கு வந்துகொண்டிருக்கின்றன என்பது வாஸ்தவம். ஆகிலும் வெற்றிகரமாக ஜெர்மனி எதிர்த்து நின்றுவிட முடியாது. நேசநாடுகள் எதிர்ப்பு யுத்தத்தை ஆரம்பித்து விட்டதால் ஜெர்மானியர்கள் தற்காப்பு முறைகளைக் கைக்கொள்ளுகிறார்கள். எல்லாப் பக்கங்களிலும் நேசநாடுகளால் சூழப்பட்டு இருப்பதால் பலஹீனமான இடங்களில் ஜெர்மனி தாக்க ஆரம்பித்து காலதாமதம் செய்ய பிரயத்தனப்படுகிறது. சென்ற மூன்று வாரங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து இது பலிக்கவில்லையென்று தெரியவருகிறது. ஜெனரல் ஈசன்ஹவர் சொல்லுகிறபடி நேசநாட்டாரின் முற்றுகையைப் பிளக்க ஜெர்மனி செய்த முதல் பிரயத்னம் பலிக்கவில்லை. மற்ற இரண்டு தடவைகளிலும் அது முறியடிக்கப்பட்டது. ஜெனரல் மாண்ட்காமரி சொல்லுகிறார். "யுத்த நிலைமையை மாற்றுவதற்கு ஜெர்மனிக்கு இயலாது. பொது ஜனங்களுக்கு நம்முடைய தயாரிப்புகள் மெதுவாக நடைபெறுகின்றன என்று தோன்றலாம். அதே காரணத்தினால்தான் நம்முடைய தாக்குதல் வலுவாகவும் வெற்றி அளிக்கக்கூடியதாகவுமிருக்கும்.

"டன்கர்க் நிகழ்ச்சிகளைப்பற்றி எனக்கு நேரில் அனுபவம். அதே காரணத்தினால்தான் ஜெர்மனியை சரியான முறையில் தாக்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறேன். நான் எப்பொழுதும் அரைகுறையாகச் செய்வதில்லை. ஆகையால்தான் ஏற்பாடுகள் பூர்ணமாகவும் சாவதானமாகவும் நடைபெற வேண்டும்."



# கடன் குத்தகை திட்டங்களைப் பற்றிய கட்டுரைகள்.

**ஜனாதிபதி ரூஸ்வெல்ட்:—**

இரண்டு வருஷங்களுக்குமுன் கடன் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த யுத்தம் ஒரே ஒரு போர்முனையுடன் வெகு சீக்கிரத்தில் முடிவடைந்துவிடுமென்றும் நாம் அனுப்பக்கூடிய உதவிகள் அல்பமாயும் அகாலத்திலும் வரக்கூடியதாயிருக்குமென்றும் ஹிட்லர் ஜெர்மானியர்களிடம் கூறினான். ஜப்பானின் ராணுவ அதிகாரிகளும் இந்த அபிப்பிராயத்தையே ஜனங்களுக்குப் புகட்டினார்கள்.

அவர்கள் செய்த வாக்குறுதிகளெல்லாம் காலத்தின் போக்கினால் பொய்யாக்கப்பட்டுவிட்டன. நான் சொன்ன பேச்சுக்களெல்லாம் கால அளவில் உண்மையாகிவிட்டன. இன்று நாம் குத்தகைக் கடன் சட்டம் நிறைவேற்றிய இரண்டாவது வருஷத்தைக் கொண்டாடும்பொழுது ஐக்கிய தேசத்தார்கள் முன்னேறி யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டதைக் காண்கிறோம்.

இரண்டு வருஷங்களுக்குமுன் அச்சு நாடுகள் அடுத்தபடி எங்கு சண்டை துவக்குவார்களென்ற பிரச்னை ஏற்பட்டிருந்தது. இப்பொழுது நேசதேசத்தார்கள் அடுத்தபடி எங்கு தாக்குவார்களென்ற கேள்வி பிறந்திருக்கிறது.

நாம் எந்த இடத்தில் தாக்குவோமென்பதை நாம் தாக்கிய பிறகுதான் எதிரி அறியக்கூடும். யுத்தம் மும்முரமாக நடக்கும்பொழுது, குத்தகைக்கடன் திட்டங்கள் மூலமாக நியாயமானதும் சாச்வதமுமான உலக அமைதிக்குத் தேவையான உலக ஐகமத்யம் ஏற்பாடாகிவருகிறது.

**கடன், குத்தகை இலாகா நிர்வாகியான மிஸ்டர் ஸ்டெட்டினியஸ்:—**

மார்ச்சு 1-ம் தேதியுடன் முடிவடையும் மூன்று மாதங்களில் கடன் குத்தகை திட்டப்படி அமெரிக்காவிலிருந்து ருஷ்யாவுக்கு 456,500,000 பவுன்கள் பெறுமானமுள்ள சாமான்களின் உதவி அனுப்பப்பட்டிருக்கிறது. இது ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, சைனா, இந்தியா முதலிய இடங்களுக்கெல்லாம் அனுப்பியதைவிட 120 மிலியன் பவுன்கள் அதிகமானது. பிரிடனுக்கு அனுப்பப்பட்ட சாமான்களின் மதிப்புக்குப் பாதி பாகமிருக்கும்.

அமெரிக்கா மற்ற நாடுகளுக்கு கடன்குத்தகை திட்டப்படி அனுப்பிய சாமான்களின் மதிப்பின் புள்ளி விபரங்கள் பின்வருமாறு:—

பிரிடன்.—1,107,500,000 பவுன்கள்.
ருஷ்யா.—456,500,000 பவுன்கள்.
மத்தியக் கிழக்கு தேசம், ஆபிரிக்கா.—393,250,000 பவுன்கள்.
ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, சைனா, இந்தியா 336,000,000 பவுன்கள்.
மற்ற பிரதேசங்கள்.—114,705,000 பவுன்கள்.

தங்கள் தேசத்திலேயே நின்று அக்கிரமமாக/ஆக்கிரமணம் செய்யும் எதிரிகளை தீரத்துடன் எதிர்த்தும், யுத்தத்தின் பளுவை இவ்வளவுகாலம் வகித்து நிற்கும் சீனாவுக்கும், பிரிடனுக்கும், ருஷ்யாவுக்கும் அமெரிக்க தேசம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இப்பொழுது அமெரிக்காவின் பூரா வலிமையையும் எதிரிகள்பேரில் நாம் பிரயோகிக்கிறோம்.

கடன் குத்தகை ஏற்பாட்டினால் தேசங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் ஒத்துழைப்பு பாத்தவ்யம் உலக சரித்திரத்திலேயே முக்கியசம்பவமாகும். இதற்கு முன்னிருந்ததைவிட இன்று ஸ்வதந்திரத்தை ஆதரித்துவரும் நாடுகளுக்குள் மனப்பான்மையிலும் காரியாம்சையிலும் அதிக ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது.

அமெரிக்காவில் சைனாவுக்குப் போகக்கூடிய விமானப்போக்குவரவு சாதனங்களை விருத்தி செய்யவும் புதிய ரஸ்தாக்களைப் போடவும் பழையவைகளை விருத்தி செய்யவும், எதிரிகள் கைப்பற்றிக்கொண்ட மார்க்கங்களை திருப்பிப் பிடிப்பதற்கு திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பர்மாவுக்கும், சைனாவுக்கும், இந்தியாவுக்கும் அனுப்பத் தேவையான ஸப்ளைகளை இந்தியாவில் சேமித்துவைக்கப்படுகின்றது.

1943-ம் வருஷம் பிப்ரவரி மீ முடிய இந்தியாவுக்கு குத்தகைக் கடன் திட்டப்படி அனுப்பப்பட்ட 595 மிலியன் பவுன்கள் பொருமானமுள்ள சாமான்களில் ஐந்தில் ஒரு பாகம் யந்தரங்களும், ஆயுதங்களும், தாதுப்பொருள்களும் அடங்கி உள்ளன. ஜப்பானை எதிர்த்துத் தாக்குவதற்கான யுத்தத்தில் இந்தியா விசேஷப் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டியதற்காக இந்தியாவிலுள்ள இயற்கைப் பொருள்களும், தொழிற்சாலைகளும், ஆயுத சாலைகளும், போக்குவரத்துகளும் விருத்தி செய்யப்படுகின்றன.

*அமெரிக்காவிலுள்ள ருஷ்ய அயல்நாட்டு ஸ்தானிகர் M. லிட்வினவ் :—*

ருஷ்யாவுக்குத் தேவையான ஸப்ளைகளின் பெரும் பாகம் ருஷ்யாவிலேயே தயாரிக்கப்பட்டனவென்றாலும், கடன் குத்தகை திட்டம் மூலமாகவும் ருஷ்யாவுக்கு மிகுதியான உதவி கிடைத்திருக்கிறது. ஆகையால் இந்த உதவியை மதித்து ருஷ்யா தேசம் பூராவும் கொண்டாடுகிறது.

ஆனால் எந்தப் போர்முனையில் அமெரிக்காவிலிருந்து வந்த ஸப்ளைகளில் எவ்வளவு உபயோகப்படுத்தப்பட்டனவென்று சொல்ல என்னிடம் புள்ளி விவரங்களில்லை. அப்பேற்பட்ட கணக்குகளும் கிடைப்பது அரிது. ஆகிலும் ஒன்றுமட்டும் நிச்சயமாய்ச் சொல்லுவேன். அமெரிக்காவிலிருந்து ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்ட தளவாடங்கள் செம்படையின் தற்காப்பு யுத்தத்துக்கும் எதிர்ப்பு யுத்தத்துக்கும் உபயோகிக்கப்பட்டன. விசேஷமாக அமெரிக்காவின் ஏராகேஸ்ரா விமானங்கள் விசேஷ ஒத்தாசை செய்திருக்கின்றன.

*அமெரிக்காவிலிருக்கும் பிரிடிஷ் ஸ்தானிகர் ஹாலிபாக்ஸ் பிரபு :—*

கடன் குத்தகை திட்டமானது, பிரிடனுக்கு ஜெர்மனியிடமிருந்து படை யெடுப்புப் பயம் ஏற்பட்டபொழுது நிறைவேற்றப்பட்டது. வரப்போகும் நிகழ்ச்சிகளைச் சூசிப்பித்தது. அதாவது அநேக நேசதேசத்தார்கள் ஒன்றுபட்டு தங்களுடைய பூரா பலத்தையும் யுத்தத்தில் உபயோகப்படுத்தப்படும் காலத்தை முன்கூட்டிக்காண்பித்தது. இந்தத்திட்டம் ஒரு யுத்தகால ஏற்பாடு. அதன் நோக்கங்களும், அதில் அடங்கியுள்ள மனப்பான்மையும் எந்நாளிலும் மதிப்புக்கு லாயக்குள்ளவை. யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கும் யுத்தத்திற்குப் பின் சமாதான முறையில் உலகத்தைத் திருத்தியமைப்பதற்கும் இந்தத் திட்டம் உபயோகமுள்ளதாக இருக்கும்.

*வாஷிங்டனிலிருக்கும் சைனாவின் அயல் நாட்டு மந்திரி டாக்டர் T. V. ஸுங் :—*

கடன் குத்தகை திட்டத்தின் மூலமாக "எல்லோரும் பரஸ்பர ஒத்தாசை செய்துகொள்ளவேண்டுமென்பது ஏற்படுகிறது. என்னுடைய சொந்த நாட்டில் நான்கு மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு நான் திரும்பிவந்தேன். 5 வருஷங்கள் யுத்தம் நடைபெற்ற பிறகு சைனாவின் பொருளாதார நிலைமை கெடுதியடைந்துவிட்டது. ஆகிலும் பொதுமக்களும் ராணுவமும் இறுதியில் வெற்றி கிடைத்துவிடுமென்று இன்னும் நம்பிக்கையுடனிருக்கிறார்கள்.

கஷ்ட நிஷ்டூரங்கள் மத்தியிலும் சீனர்கள் தங்கள் சந்தோஷத்தை வெளிக்காட்டுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் வந்துவிட்டால் அவர்கள் ஜப்பானியர்களைச் சைனாவைவிட்டு கண்டிப்பாய் துரத்திவிடுவார்கள்.

அமெரிக்காவிலிருந்து சைனாவுக்கு அனுப்பப்பட்டிருக்கும் உதவிகளைக்கண்டு சீனர்கள் திருப்தியடைந்திருக்கிறார்களென்று நான் சொன்னால் அது மிகையாகாது.

அமெரிக்காவின் அயல்நாட்டு சம்பந்தக்கமிட்டிக்கு சென்ற வாரத்தில் மிஸ்ட்டர் ஸ்ட்டினியஸ் சொன்னபிரகாரம் சைனாவின் அவசியத்துக்குப் போதுமான உதவிகள் இன்னும் போய்ச்சேரவில்லையென்று நானும் சொல்லுகிறேன்.



## விமானப்போக்குவரவை விருத்திசெய்யவேண்டும்.

சமாதான கால முறைகளைக்கொண்டு நோக்கினால் இந்தியாவிலிருந்து சைனாவுக்குப் போகும் விமான மார்க்கம், சிரமசாத்தியமானதுதான். ஆகிலும் ஆர்டிக் சமுத்திரத்திலுள்ள மர்மான்ஸ்க்குக்குச் சாமான்கள் அனுப்பப்படும் மார்க்கங்களை பரிபாலித்துவரும் சிரமங்களில் இந்த சின மார்க்கத்தில் ஏற்படும் சிரமம் யதாம்சமாகத்தானிருக்கும். தரை மார்க்கங்களும், கடல் மார்க்கங்களும் மறுபடியும் உண்டாகும் வரையில் இந்த விமான மார்க்கத்தை ஏற்பாடுசெய்ய வேண்டியது அவசியம்.

என்னுடைய சுற்றுப்பிரயாணத்தில் நான் அறிந்தவைகளில் முக்கியமானவைகள் பின்வருமாறு:—எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவைகளை சீனப் படைகள் சகிக்கக்கூடும். முக்கியமான தளவாடங்கள் கிடைத்துவிட்டால் அவர்களுக்குத் திருப்பித்தாக்க வசதியேற்படும். ஸப்ளைகள் அனுப்பத்தான்வேண்டுமென்ற ஊக்கமேற்பட்டால் விமானங்கள் மூலமாய் சாமான்களைச் சைனாவுக்கு அனுப்பிவிடலாம்.

ஆகையால் கடன் குத்தகை ஏற்பாடென்பது சீனாவிலுள்ள தரைப்படைகளுக்கு ஸப்ளைகள் அனுப்ப விமானப்படையை அதிகரிப்பது ஒன்று. சண்டைபோடும் விமானப் படைக்குத் தேவையான வசதிகளை அளிக்கவும் சாமான்கள் கொண்டுபோகவும் அதிகமான விமானப்படையைத் தயாரிப்பதும் இரண்டாவது.

---

## சர்வதமான சமானத்துக்குவேண்டிய முறைகள்.

(ஸைமன் பிரபு பேசியது).

லண்டன், மார்ச்சு 10.

பிரதமமந்திரி ஸ்டாலின் சொல்லுவதுபோல், பிரிடிஷ் அரசாங்கத்தாரின் சார்பாக நானும் சொல்லுகிறேன். முதலில் ஹிட்லரைச் சேர்ந்த தேசங்களை நாம் அழித்துவிடவேண்டும். இரண்டாவதாக, கோயபல்ஸ் ஜெர்மன் மக்களிடம் புகட்டுவதுபோல், ஜெர்மன் பொதுமக்கள் எல்லோரையும் நாம் அழித்துவிடமாட்டோம் என்று சொல்லவேண்டும்.

பிரிடிஷ் அரசாங்கத்தாரின் சார்பாக கோயபல்ஸ் சொல்லுவது முற்றிலும் தவறென்று இச்சமயம் நான் மறுக்கிறேன். ஐரோப்பாவில் ஜெர்மனி தனிப்பட்ட அரசாங்கமாக இருக்காது என்றும் நாம் சொல்லவில்லை. ஆகிலும் நாஜி அரசாக்ஷியை ஜெர்மன் மக்கள் எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்களோ அவ்வளவு தூரம் ஜெர்மன் மக்கள் பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

ஹிட்லரின் நிர்வாகத்தை அகற்றினால்தான் ஜெர்மன் பொதுமக்களின் கஷ்டங்கள் குறைவுபடும். ஹிட்லர் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக எல்லா ஸ்வதந்திர புருஷர்களும் மேல்மேலும் யுத்தம் செய்யவேண்டும்.

போல்ஷிவிஸம் என்ற கோரமான பேயைப் புதை குழியிலிருந்து கிளப்பி உலகத்தை பயமுறுத்த ஜெர்மன் பிரசாரர்கள் மறுபடியும் முயன்று வருகிறார்கள். இது சம்பந்தமாக பிரிடிஷ் அரசாங்கத்தாரின் மனோநிலையை நாம் வெளியிட்டுவிட்டோம்.

ருஷ்யர்கள் நினைப்பது போல, உலக சமாதான ஏற்பாடு நிறுவுவதற்கு முன் நாஸிகளின் ஆக்ஷி ஒழிய வேண்டுமென்றும், இந்தக் கொடூரச் செய்கைகளுக்கு காரண பூதர்களான குற்றவாளிகளையும் தகுந்தபடி சிக்ஷிக்கவேண்டுமென்றும் நாங்களும் நினைக்கிறோம். எங்கள் அரசாங்கத்தின் யோசனைகள் பின்வருமாறு: ஜெர்மனியை மறுபடியும் முஸ்தீப்பு தயார்செய்துகொண்டு அமைதியாகயிருக்கும் நாடுகளை ஆக்கிரமிக்காமலிருக்கும்படியான நிலையில் செய்துவிட்டு அவர்களை

நிராயுதபாணிகளாகச் செய்துவிடவேண்டும். பொருளாதார சீர்கேடு ஏற்பட்டால் ஜெர்மனிக்கு அக்கம்பக்கத்திலுள்ள நாடுகளிலும் உலகத்திலும் ஜெர்மனி விஷமம் செய்ய ஆரம்பிக்கும். ஆகையால் பொருளாதார நிலைமையை விருத்திசெய்ய வேண்டும்.

**குற்றவாளிகளுக்குத் தண்டனை.**

இந்த யுத்தத்தில் நாஸிக் கக்ஷிக்காரர்களாலும் அவர்களுடைய பரிவாரங்களாலும் தோஷமற்ற, தற்காப்பில்லாத ஜனங்களுக்கு இழைத்த, கொடுமைகளுக்கும், வயது கிரமமன்னியில் ஆண்களையும், பெண்களையும் ஹிம்சித்தவர்களுக்கும், ஜெர்மன் ரகசியப் போலீஸாரின் அட்டகாசங்களுக்கும், யூதர்கள் ஜாதியாரை நிர்மூலமாக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணம் கொண்டவர்களுக்கும் தகுந்த முறையில் சிக்ஷை விதிக்கவேண்டியதற்கு வேண்டிய தீவிரமான ஏற்பாடுகளைச் செய்துவிடுவோம்.

மேலே சொல்லிய அட்டூழியங்களெல்லாம் ஜெர்மனிக்குக் கெட்ட பெயரை உண்டுபண்ணிவிட்டன. இப்பேர்ப்பட்ட ஜெர்மானியர்கள் தங்களுக்கு ஞாயம் வழங்கவேண்டுமென்று கேட்கிறார்கள்.

ஆகிலும் உலகம் முழுவதும் அறிய நாங்கள் பறைச்சாற்றுகிறோம். பிரிடிஷ் மக்களாகிய நாங்கள் ஒருபொழுதும் ஜெர்மன் பொதுமக்கள் எல்லோரையும் கொலைசெய்து பழிக்குப்பழி வாங்கப்போவதில்லை. நாங்கள் நியாயமான முறைகளையேதான் கையாளப்போகிறோம்.

---

# போலஸ்டி எண்ணெய் பிரதேசம்—ஜெர்மனியின் உயிர்நிலை.

## தெற்கு ருஷ்யாவுக்கு அதிகப்படை பலம் அனுப்புவதின் காரணம்.

(லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் பரௌன்ரிக்).

டுனிஸியாவில் சொல்ப பிற்போக்குக்குப் பிறகு நிலைமை நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டது. ஆகிலும் தெற்கு ருஷ்யாவில் முன்னேற்ற வேகம் குறைந்து வருவதைக் காண்கிறோம். இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது நாம் எதிர்பாராதபடி பனிஉருக ஆரம்பித்துவிட்டதால் ஹிட்லருக்கு சாதகம் ஏற்பட்டுவிட்டது. ஆகிலும் இது நீடித்து நிற்காது. இரண்டாவது டானட்ஸ் நதிப்பிரதேசத்தில் அதிகமான படைகளைக் குவிப்பதற்காக ஹிட்லர் ஆட்களைச் சேமித்து விட்டான்.

இந்தப் புதிய படைகளை நார்வேயிலிருந்தும், பால்கன் நாடுகளிலிருந்தும், பிரான்ஸிலிருந்தும், நெதர்லாந்திலிருந்தும் திரட்டினானா என்பது தெரியவில்லை. அல்லது ருஷ்யப் போர்முனையின் இதர யுத்த முனைகளிலிருந்து கொண்டுவந்தானா என்பதும் விளங்கவில்லை. இரண்டாவதாகச் சொன்ன ஹேஷ்யம் சம்பாவிதம் இல்லை என்பதற்கு இரண்டுகாரணங்கள் உண்டு. ஜெர்மானியர் வசமுள்ள போக்குவரவு சாதனங்கள் சொற்பமானவை. இரண்டாவதாக, எல்லாப் போர்முனைகளிலுமுள்ள ஜெர்மானியத் துருப்புகளை ருஷ்யர்கள் திறமையுடன் நாசம் செய்து விட்டார்கள். கருங்கடலிருந்து வெண்கடல் வரையிலுள்ள போர்முனை பூராவையும் ருஷ்யர்கள் பலமாகத் தாக்குகிறார்கள். சாமர்த்தியமாகவும் ஒவ்வொரு இடமாகவும் ருஷ்யர்கள் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். அடுத்தபடியாக எந்த இடத்தில் ருஷ்யர்கள் அடிப்பார்களென்று ஜெர்மானியர்களுக்குப் புலப்படுகிறதில்லை.

**வாஸ்தவமான காரணம்.**

தெற்குப் போர்முனையில் பனி உருகி தனக்கு சீக்கிரம் சௌகரியம் ஏற்படுமென்று நினைக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் தான் சேமித்த துருப்புகளையெல்லாம் தெற்கு யுத்த அரங்கத்துக்கு ஹிட்லர் அனுப்பியதின் காரணத்தை ஆராச்சி செய்வோம். இந்தப் பிரதேசத்தில் வலிமையுடனிருந்தால்தான் டானட்ஸ் நதிப்பிரதேசத்திலும் காகஸஸிலுமுள்ள பாக்கி ஜெர்மன் படைகள், பீல்ட் மார்ஷெல் பாலஸைப்போல் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்புவதற்கு வசதி ஏற்படுமென்று ஹிட்லர் நினைத்தானென்று சொல்லுவது சரியான முகாந்திரம். ஆகிலும் இதைவிட முக்கியமான காரணமுண்டு. 1942-ம் வருஷத்தில் ஜெர்மன் யுத்த தந்திரம் வீணாய்ப்போனதற்கு ஹிட்லர் அளவுக்கு மிஞ்சின லக்ஷியங்களை அடைய ஆசைப்பட்டதுதான் காரணம். ஸ்டாலின்கிராட்டின் வீழ்ச்சிக்கு முன்னதாக காகஸஸில் முன்னேறியது ஒரு பெரிய தவறு. இதிலிருந்து ஜெர்மானியர்கள் மீளவில்லை. ஆனால் இந்தப் பாச்சலுக்கும் ஒரு காரணம் உண்டு. ஹிட்லருக்கு எண்ணெய் தேவை. 2½ வருஷங்களாக தன்னிடமிருந்த இருப்பிலிருந்தும் ருமேனியாவிலுள்ள போலஸ்டி எண்ணெய்ப் பிரதேசங்களிலிருந்த எண்ணெயையும் ஹிட்லர் செலவு செய்துவந்தான். மெயிகாப் ஜெர்மானியர் வசமிருந்தபொழுது ஒரு காலன் எண்ணெய்கூட ஜெர்மனிக்குக் கிடைக்கவில்லை. எண்ணெய் மினு முனுப்புப் பூச்சி ஜெர்மானியர்களை காகஸஸுக்கு இழுத்துக் கொண்டுபோய்விட்டது. டான் நதிப்பிரதேசத்தில் தோல்விக்கும் காரணமாயிருந்தது.



**ஜெர்மனிக்குக் கிடைக்கும் எண்ணெயில் பாதிபாகம் போலஸ்டியில் உற்பத்தியாகுகிறது.**

ஹிட்லருக்குப் போலஸ்டி எண்ணெய்க் கிணறுகளின் முக்கியத்வம் முன்னிருந்ததைவிட இப்பொழுது அதிகரித்திருக்கிறது. ஆகையால் அவைகளையும் அவைகளுக்குப் போகக்கூடிய மார்க்கங்களையும் கடைசிவரையில் ஹிட்லர் அவசியம் காப்பாற்ற வேண்டும். ஹிட்லர் செலவிடும் எண்ணெயில் பாதிபாகம் போலஸ்டியிலிருந்து கிடைக்கிறது. ஆகையால் எண்ணெய் உற்பத்தியில் 50 சதவிகிதம் குறைவு ஏற்பட்டால் யுத்தத்தை ஹிட்லர் நீடித்து நடத்த முடியாது. ஜெர்மன் ராணுவத்துக்கும் விமானப் படைக்கும் போலஸ்டி ரத்தக் குழாய் போன்றது. ஆகையால்தான், ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கிவிட்டாலும் சரி, பின்வாங்க உத்தேசித்தாலும் சரி, எந்நிலைமையிலும் கருங்கடலின் வடக்குக் கடற்கரையை அங்குல அங்குலமாக ஹிட்லர் காப்பாற்ற வேண்டியது அவசியம். ஹிட்லரின் கவசத்தில் போலஸ்டி என்பது ஒரு பாகம்; ஜெர்மனியிலில்லாமல் ருமேனியாவில் செய்யப்பட்ட ஒரு கவசம்.

---

# இதாலியத் துருப்புகள் இனிமேல் காவு கொடுக்கப்படமாட்டா.

## ருஷ்யாவிலிருந்து இதாலியர்கள் வெளியேறியதிலிருந்து ஜெர்மனிக்கு விளைந்த பலன்கள்.

(நியூஸ் கிரானிகிள் பத்திரிகையில் வெர்னன் பார்ட்லட் எழுதியது).

ருஷ்யாவிலிருந்து இதாலியப் படைகளை வாபஸ் பெற்றதைப் பற்றிய காரணங்கள் பலவிதமாக காணப்படுகின்றன. இவைகளில் ஒன்றுதான் முக்கியகாரணம். அதாவது அச்சு நாடுகளுக்கு அடி வயிறுபோன்ற தெற்கு ஐரோப்பாவைத் தற்காப்பு செய்வதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. பிரிடனிலுள்ள ஜனங்கள் ருஷ்யாவுக்கு தினசரி ஏற்படும் புதிய வெற்றிகளைப்பற்றி மகிழ்ச்சியடைகிறார்களே ஒழிய ருஷ்யாவின் ஐச்வர்யங்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்களைப் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. பனி உருக ஆரம்பித்து ருஷ்ய முன்னேற்றம் குறைவுபடாத போனாலும், சேனைகளுக்குப் புதிய முஸ்தீப்புகள் தயாரித்துக் கொள்ள வேண்டியிருப்பதால் ருஷ்யரின் முன்னேற்ற வேகம் தணிந்து விடும்.

ரிஷெவ், வெலிகிலூகி, குர்ஸ்க், கார்காவ் போன்ற கேந்திர ஸ்தானங்களை இழந்து விட்டாலும், வரும் மூன்று மாதங்களில் ஆக்கிரமிப்பு ஐரோப்பாவுக்கு, கிழக்கேயிருந்து வருவதை விட தெற்குப்பக்கத்திலிருந்துதான் மகத்தான அபாயம் ஏற்படக்கூடுமென்று ஹிட்லர் முடிவு செய்து விட்டான்.

ஹிட்லருடன் ஒற்றுமையாயிருந்ததின் பயனாக இதாலியின் சாம்ராஜ்யம் போய்விட்டதால், இதாலியர்கள் ருஷ்யப்போர்முனையில் உத்ஸாகத்துடன் யுத்தம் செய்வார்களென்று எதிர்பார்ப்பதற்கில்லை. தங்களுடைய தாய்நாட்டைக் காப்பதற்கான ஏற்பாடுகளில் தான் அவர்கள் அதிக ஊக்கமுள்ளவர்களாகயிருக்கக்கூடும். இதாலியர்கள் ஊருக்குத்திரும்பி வந்ததிலிருந்து ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் சச்சரவு ஏற்பட்டு ஹிட்லரின் உத்தரவுக்குக் கீழ்படிய முஸோலினி மறுத்து விட்டானென்று சொல்லக்கூடாது. ஆனால் பிரெஞ்சு யுத்தக் கைதிகளைக் கிழக்குப் போர் முனையில் உபயோகித்தது போல இதாலியப்படைகளை உபயோகிக்க இனிமேல் ஜெர்மானியர்களுக்கு இயலாதென்பது கவனிக்கத்தக்கது. ஜெர்மனியில் வேலை செய்வதற்காக • வாலண்டியர்கள் தேவையென்று சொன்னால் அநேகர்கள் ஊருக்குத் திரும்பிவிடுவோர்களென்றும் இல்லாவிட்டால் அயல் நாடுகளிலேயே தங்கிவிடவேண்டி வருமென்று சொல்லும் வாதங்கள் பிரயோஜனமற்றவை.

இம்மாதிரியான துருப்புகள் இனிமேல் அதிகமாகத் தேவையாயிருக்கும். ஜெர்மனியில் அனாவசியமான தொழிற்சாலைகளை மூடிவிடவேண்டுமென்று போடப்படும் அவசரச் சட்டங்களெல்லாம் ராணுவத்திற்கோ அல்லது தொழிற்சாலைகளுக்கோ தேவையான நபர்களைத் தேர்ந்தெடுக்க உதவாது. ஆகையால் தேவையான அளவு ராணுவத்தை பலப்படுத்தவும் ருஷ்யாவில் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்யவும் ஒன்பது அல்லது பத்து மிலியன் ஜனங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வேளியேறவேண்டும். இந்த நடவடிக்கைக்கு பிரிடிஷ் விமானப்படை தாக்குதலிலிருந்து குந்தகம் ஏற்படுகிறது. சென்ற வருஷம் மூடப்பட்ட உணவு உற்பத்திசாலைகளெல்லாம், விமானத் தாக்குதல்களுக்குட்பட்ட ஜனங்களின் தேவைகளை உத்தேசித்து சென்ற மாதத்தில் மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்து விட்டன. இதாலியத் தொழிலாளிகளின் சேவைக்குப் பதிலாக இதாலிக்கு திரும்பிக்கொடுக்க ஜெர்மானியர்களிடம் அதிகப்பொருள்களில்லை. நிலக்கரி ரொம்பவும் குறைவு பட்டுவிட்டது. இதாலியருக்கு வேண்டிய கரிப் பொருள்கள் ஜெர்மனியிலிருந்து தான் வர வேண்டும். ஆகையால் இதாலியத் துருப்புகள் தங்கள் ஊருக்குத் திரும்பி வந்து விட்டால் அவர்களுக்கு இரண்டு எண்ணங்கள் தோன்றக்கூடும். ஜெர்மனிக்காக அதிக தியாகம் செய்வதற்கு இஷ்டமில்லாதது ஒன்று. யுத்தத்திலிருந்து வேளியேறவேண்டுமென்பது மற்றொன்று.

## இதாலியர் சண்டையை நிறுத்தாதிருக்கவேண்டியது ஹிட்லரின் முடிவு.

### ரிப்பன்டிராப் இதாலி சென்றதின் தாத்பர்யம்.

(டையிலி மையில்).

ஹிட்லரும், முஸோலினியும் சந்தித்ததாக ஒரு வதந்தி உண்டாகியிருக்கிறது. அது எவ்வளவுதூரம் உண்மையென்பது தெரியவில்லை. இப்போதிருக்கும் நிலைமையில் ஹிட்லர் தன் கவனத்தை, தன் கூட்டாளியான முஸோலினியின் விஷயங்களில் செலுத்தவேண்டியிருக்கிறான்.

இதாலி சண்டை செய்யாமல் ஒடுங்கினால் ஹிட்லரின் பாடு அதோகதிதான். இதாலியர்கள் எவ்விதத்திலும் தொடர்ந்து சண்டையிட வேண்டுமென்று ஜெர்மானியர் விரும்புகின்றனர்.

இவ்விஷயம் ரிப்பன்டிராப்-முஸோலினி இவர்களின் சந்திப்பைப்பற்றி பரவச்செய்த பிரசாரங்களினின்றும் நன்கு வெளியாகிறது.



ருஷ்யாவிலிருந்து திரும்பிவந்த இதாலிய சைனியங்களிடம் முஸோலினி ஒருநாள் பேசிய பேச்சே மற்றொரு சாக்ஷியாயிருக்கிறது. தங்களை எதிர்த்த இதாலிய சைனியங்களை நிர்மூலப்படுத்தியிருக்கிறதாக ஒவ்வொரு சமயமும் ருஷ்யர்கள் சொல்லுகிறார்கள். எல்லாத் துருப்புகளும் இதாலிக்குத் திரும்பி வந்துவிட்டன என்று கூறி உண்மையை ஜனங்களினின்றும் முஸோலினி மறைக்க நினைத்திருக்கலாம். அவர்களுக்குப் பதிலாக வேறு சைனியங்களை ருஷ்யாவிற்கு அனுப்புவதுபற்றி முஸோலினி ஒன்றும் சொல்லவில்லை. இவ்வாறு செய்தது, இதாலியரின் இழந்த தைரியத்தை மீளவும் தூண்டுவதற்கேயாகும்.

இதாலியர்கள் பொதுவுடமைக் கொள்கைபற்றி பயப்படுத்தப்பட்டிருந்தாலும், தாங்கள் ஆபிரிக்காவில் தோற்றுப்போய் நசுக்கபட்டதிலிருந்து ருஷ்யாவுடன் போரிடத்தயாராயில்லை.

அடுத்தாற்போல் ருஷ்யாவிலிருந்த இதாலியத் துருப்புகளை முஸோலினி கொண்டுவந்திருக்க முடிந்தால், அது தன் தேசத்தின்மேல் ஏற்படவிருக்கும் படையெடுப்பினின்றும் காத்துக்கொள்ளவேயாகும். ஆபிரிக்க யுத்தத்தில் விரட்டப்பட்டதினின்றும், நேச நாட்டு சைனியங்களால் அவர்களுக்கு அபாயம் ஏற்படுமோ என்ற பயத்தால் அன்றாடம் இதாலியர்கள் எச்சரிக்கப்படுகின்றனர். இதாலியர்கள் எல்லாம் ருஷ்யாவிற்கு அனுப்பப்படாமல் இதாலியிலேயே இருக்கின்றனர் என்றால், இதாலியர்கள் தைரியப்படுவார்கள் என்று முஸோலினி நினைக்கிறான்.

ஹிட்லரிடம், இதாலியைப்பாதுகாக்க சைனியங்கள் இல்லாததால், தன்னால் முடியாது என்ற நோக்கத்தோடு இதாலியத் துருப்புகளை இதாலிக்கு திருப்பிக் கொண்டுவர ஒத்துக்கொண்டிருக்கிறான்.

## தொழிற்சாலைகளிலிருந்து விமானத்தளங்களுக்கு போக்குவரவு வசதிகள்.

### பிரிடனுடைய போக்குவரவு விமானப்படைப் பகுதி.

(டெயிலி மெயில் பத்திரிகை).

மேற்கு ஐரோப்பாவில் நமது ராணுவத்துக்கு உதவிபுரியும் விமானப் படைக்கு உப பலமாக யுத்த ஆரம்பம் முதல் சாமான் ஏற்றிச் செல்லும் விமானப் படையின் உதவியாளர்கள் மகத்தான போக்குவரவு விமானங்களைத் தயாரித்திருக்கிறார்கள்.

மேலே சொல்லிய போக்குவரத்து உதவிப்படையென்பது விமான உற்பத்தி மந்திரி இலாகாவின் ஒரு கிளை ஸ்தாபனம். தொழிற்சாலைகளிலிருந்து பிரிடிஷ் விமான நிலயங்களுக்கு புதிய விமானங்களைக் கொண்டுபோகும் வேலைக்காரர்களை எடுத்துப் போகிறதற்குத்தான் இந்த விமான ஸர்வீஸ் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் படையில் நான்கு பேர்கள் உட்காரக்கூடிய விமானங்கள் அநேகமிருக்கின்றன. இவைகளைத் தவிர 1939-ல் வேவு பார்ப்பதில் முதல்தரமாயிருந்த வெடி விமானங்களான இரண்டு எஞ்ஜின்களுள்ள ஆவ்ரோ ஆன்ஸன் என்னும் விமானங்கள் திருத்தியமைக்கப்பட்டவைகள் அநேகமிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் பிரிடனிலிருந்து நார்வேக்கு ராணுவப்படையின் ஒரு பகுதி செல்லக்கூடும். சென்ற யுத்தத்தில் பாரிஸ் நகரத்திலிருந்து மேற்குப் போர்முனைக்குச் சென்ற மோட்டார் படைக்குச் சமானயாக இந்த உதவி விமானப்படையைச் சொல்லலாம்.

இந்தப் போக்குவரத்து விமானப்படையில் உலகத்தின் பலபாகங்களிலிருந்து ஆண்களும் பெண்களும் விமானிகளாக அமர்ந்திருக்கிறார்கள். இளம் பிராயமுள்ளவர்களெல்லாம் சிறு பெண்கள். இவர்களில் மூவர்கள் பிரிடனுடைய கனமான ஹாலிபாக்ஸ் போன்ற வெடி விமானங்களை ஓட்டியிருக்கிறார்கள்.

மனிதர்களில் அநேகர் வயது முதிர்ந்தவர்கள். பிரிடிஷ் சண்டை விமானங்களை ஓட்ட சக்தியற்றவர்கள். இந்த விமானிகளெல்லாம் டைபூன் வகுப்பு முதல் நான்கு எஞ்ஜின்கள் உள்ள லங்காஸ்டர் விமானங்கள் போன்ற 100 வகைப்பட்ட விமானங்களை ஓட்டுகிறார்கள். இந்த உதவிப்படை ஏற்பட்டது முதல் சுமார் 1,00,000 விமானங்கள் மூலம் மனிதர்களை விமானதளங்களுக்குக் கொண்டு போயிருக்கின்றன.

---

# ஜெர்மன் நகரங்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றன.

## ஜெர்மன் தற்காப்புகளின் பலக்குறைவு.

(மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகையில் வெளிவந்தது).

மேற்குப் போர்முனையில், ஜெர்மனியிடமுள்ள இராக்காலத்தில் தற்காப்புக்கு வேண்டிய சண்டை விமானங்களைவிட நமது வெடி விமானங்கள் பலம் அதிகமாயிருக்கும் ஒரு கட்டம் இப்பொழுது நமக்கு ஏற்பட்டுவிட்டது.

ஜெர்மன் விமானப் படையில் சண்டைபோடும் விமானங்களுக்குச் சமீப காலத்தில் அதிகச் சிரமம் ஏற்பட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. எதிரியின் பலமான தற்காப்புகள் நாசமாகும்படியாக நாம் பலமான, ஒன்றுபட்ட வெடிவிமானத் தாக்குதல் செய்வது ஒரு காரணம். மற்றொன்று கிழக்கு ஜெர்மனியிலுள்ள இலக்குகளை ருஷ்ய விமானப்படை பலமாகத் தாக்கக்கூடுமென்ற ஹேஷ்யம். இந்த இரண்டு காரணங்களாலும் ஜெர்மனி வசமுள்ள சண்டைபோடும் விமானப்படையை எதிரி விஸ்தாரமான பிரதேசங்களில் பறப்பிவைத்திருக்கிறான்.

மேற்குப் பகுதியில் இந்த விமானப்படைக்கு லெப்டினண்டு ஜெனரல் காம்பூபர் தலைவர். பிரிடிஷ் விமானப்படையின் வெடி விமானங்களின் தாக்குதலை சமாளிக்க, கொலோன், போர்டொ, ஹாம்பர்க், பிரெஸ்ட் முதலிய இடங்களில் சென்ற வருஷம் அவன் தொடர்ச்சியான தற்காப்புகளைச் செய்தான். அவனுடைய திட்டப்படி இரவு சண்டை விமானப்படையில் முதல் தரமான படையொன்று பெர்லினைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்தது. இந்த விமானப்படைகள் அதிவேகமாகச் செல்லக்கூடியவை. பிரிடிஷ் விமானப்படையின் பலமான தாக்குதல் ஏற்படும்பொழுது ஜெர்மன் விமானப்படை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லத்தயாராக விருந்தது.

சமீப காலத்தில் பெர்லினில் ஏற்பட்ட தாக்குதலினின்றும் இந்த ஜெர்மானிய தற்காப்பு உபயோகமற்றதென்று வெளியாகிவிட்டது. வாஸ்தவமாக காம்பூபரிடமும் தேவையான சண்டை விமானங்களில்லை என்பது வெளியாகுகிறது.

கிழக்கு ஜெர்மனியில் வான் டோரிங் தலைமையில் ஒரு சண்டை விமானப் படை வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலும் மேற்கு முனையிலிருப்பதுபோல் தான் விமானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கேயும் ஜங்கர் 88, ஹிங்கல் 111 வகுப்பைச் சேர்ந்த விமானங்கள் இருக்கின்றன. சமீபத்தில் தயாராகியிருக்கும் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய விமானப்படைகளைச் சேர்ந்த இரவு வெடி விமானங்களை எதிர்ப்பதற்கு ஜெர்மனியிடம் இப்பொழுது இருக்கும் தற்காப்பு விமானங்களைவிட உயர்வான விமானங்களிருக்க வேண்டும். ஏனென்றால் ஜெர்மானியர்கள் வெடி விமானங்களை இரவு சண்டை விமானங்களாகத்திருத்தி அமைத்திருப்பதால் அவைகள் பலஹீனமாகயிருக்கின்றன.



# மத்தியதரைக்கடலில் எதிரிக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்கள்.

## பிரிடிஷ் கடற்படை, விமானப் படைகளின் அட்டகாசம்.

பிரிடிஷ் கடற்படையும், விமானப் படையும் மத்தியதரைக்கடலில் ஏராளமான எதிரிக் கப்பல்களை மூழ்கடித்துவிட்டன. பிப்ரவரி மாதத்தில் நாள் தவறாமல் சிறியதோ அல்லது பெரியதோ ஒரு ஸப்ளைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது அல்லது நன்றாய் பழுதாக்கப்பட்டு பிறகு மூழ்கிவிட்டது. கைதி செய்யப்பட்ட ஜெர்மன் யூ படகுகளின் மாலுமிகள் மத்தியதரைக்கடலில் மூன்று நாள் ரோந்து செய்வதைவிட அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் ஒரு மாதம் ரோந்து செய்வது நலம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஏனென்றால் மத்தியதரைக்கடலில் குறுகலான பிராந்தியங்களில் எதிரி யூ படகுகளைக் கூட்டமாக அமைத்து உபயோகிக்க முடியாது. அப்படிச் செய்தாலும் நமது விமானப்படை விமானங்களிலிருந்து எளிதில் யூ படகுகளைக் கண்டுபிடித்துவிடும்.

பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று இதாலியிலிருந்து ஒரு கார்வெட்டிக் கப்பலும் மீன் வெடிகளுள்ள படகு ஒன்றும் நஷ்டமாயின என்று பிரசாரம் செய்யப்பட்டது. அதே தினத்தில் நமது கடற்படை இலாகாவிலிருந்து வெளிவந்த அறிக்கையிலிருந்து டுனிஸியாவுக்குக் கிழக்கே நடமாடிக்கொண்டிருந்த நமது நீர்மூழ்கி கப்பல் எதிரியின் நீர் மூழ்கி எதிர்ப்புக் கப்பல் ஒன்றை மூழ்கடித்துவிட்டதென்று தெரியவருகிறது.

பிப்ரவரி 4-ம் தேதியன்று நமது நீர்மூழ்கிகள் எதிரியின் 8 சிறிய ஸப்ளை கப்பல்களையும் இரண்டு பெரிய துருப்புக் கப்பல்களையும் மூழ்கடித்தன. டுனிஸியாவுக்குச் சமீபத்தில் பிரிடிஷ் விமானத் தாக்குதல்களிலிருந்தும் எதிரிக்கு நான்கு சிறிய கப்பல்கள் நஷ்டமாயின. பிப்ரவரி 7-ம் தேதியன்று ஒரு சிறிய எண்ணெய்க் கப்பலும், இரண்டு நடுத்தரமான கப்பல்களும், ஒரு சிறிய ஸப்ளைக் கப்பலும், ஒரு சிறிய கப்பலும் டுனிஸியாவுக்குக் கிழக்கேயும் இதாலிக்குத் தென் கிழக்கிலுமுள்ள பிராந்தியத்தில் மூழ்கிவிட்டன. அன்றைய தினத்திலேயே ஒரு நீர் மூழ்கி திரும்பிவர வேண்டிய காலம் கடந்துவிட்டதென்றும் ஆகையால் அது நஷ்டமாகிவிட்டதென்று கருதப்படவேண்டுமென்றும் ஒரு இதாலிய அறிக்கை வெளியிடப்பட்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு டிர்ரெனியன் கடலில் பீரங்கிக் குண்டுகளால் அடிபட்டு இரண்டு சிறிய பாய்மரக் கப்பல்கள் மூழ்கிவிட்டன. பிப்ரவரி 17-ம் தேதியன்று மத்தியதரைக்கடலில் நெதர்லந்தைச் சேர்ந்த டால்பின் என்ற நீர் மூழ்கி எதிரியின் யூ படகு ஒன்றை நாசம் செய்துவிட்டது. ஸிஸிலிக்கு மேற்குப் பக்கத்தில் ஒரு ஸப்ளை கொண்டுவரும் கப்பல் மூழ்கிவிட்டது. ஹாமமட் வளைகுடாவில் மூன்று சிறிய ஸப்ளைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்த மற்றொரு ஸப்ளைக் கப்பலும் நாசமாக்கப்பட்டது.

பிறகு பிப்ரவரி 24-ம் தேதி வரையில், அதாவது ஒரு வாரத்தில், ஸப்ளைக் கப்பல்கள், எண்ணெய் கப்பல்கள், மின்சார சக்தியால் ஓடும் சிறிய அல்லது பெரிய மோட்டார் படகுகள் எல்லாம் ஏராளமாக மூழ்கடிக்கப்பட்டன. எதிரிகளிடமுள்ள பாக்கி கப்பல்களையும் நமது படைகள் வேட்டையாடி பாக்கியன்னியில் நாசம் செய்துவிட்டன.

வடக்கு சமுத்திரத்திலும் பிரஞ்சு கடற்கரைக்குச் சமீபத்திலும் விசேஷமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ப்ரீஸியன் தீவுகளுக்குச் சமீபத்தில் ஒரு யூ படகும் மற்றொரு கப்பலும் பிப்ரவரி 16-ம் தேதி மூழ்கடிக்கப்பட்டது. 18-ம் தேதியன்று இங்கிலீஷ் கால்வாயில் ஒரு கப்பல் நாசமாயிற்று. பிப்ரவரி 19-ம் தேதியன்று வடக்குக் கடலில் ஒரு ஈ படகு மூழ்கிவிட்டது.

## ஜப்பானுக்கும் கடற்படை நிலைமையில் கஷ்டம்.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை).

பிஸ்மார்க் கடலில் ஜப்பானியத் துணைக்காவல் கப்பற்படையின் நாசத்திலிருந்து எதிரியின் யுத்த தந்திரங்களுக்கு விசேஷ மாறுதல்கள் ஏற்படக்கூடும். இதற்கு ஆதாரமாக இரண்டு காரணங்களுண்டு. முதலாவது, ஏராளமான கப்பல்களின் நஷ்டத்திலிருந்து ஜப்பானியர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வடக்கிலும் மேற்கிலுமுள்ள தீவுகளில் மகத்தான தாக்குதல்களை நடத்தத் துணியமாட்டார்கள். இரண்டாவது, தன்னுடைய ஆக்கிரமிப்பு நாடுகளை முக்கியமாக தென்மேற்கு பஸிபிக்கிலுள்ளவைகளை விட்டுப்போட்டு தன்னுடைய கடல் மார்க்கங்களை ஜப்பான் குறுக்கிக் கொள்ளலாம்.

இந்துமகா சமுத்திரத்துக்கும் பவளக்கடலுக்கும் போவதற்குக் கடக்க வேண்டிய தூரத்தையும் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்ட கப்பல்கள் நஷ்டங்களையும் சேர்த்துக் கவனித்தால் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும் ஒரு பெரிய பிரச்னையை கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. அதாவது ஜப்பான் பிடித்த நாடுகளிலுள்ள முக்கிய ஸ்தானங்களுக்கு ஸப்ளைகள் அனுப்புவதா அல்லது ஜப்பானுக்கு வேண்டிய ஸப்ளைகளைக் கொண்டுவருவதா என்ற கேள்விகள்தான்.

பஸிபிக்கில் துருப்புகளை ஏற்றிச் செல்லுவதற்கும் சாமான்கள் கொண்டு போவதற்கும் ஜப்பானியர் சராசரி 6,000 முதல் 8,000 டன்கள் வரையில் எடைமானமுள்ள கப்பல்களை உபயோகித்தார்கள். யுத்த ஆரம்பத்தில் ஜப்பானிய சாமான் கப்பற்படையில் 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட எடைமானமுள்ள 442 கப்பல்களிருந்தன. நேசநாட்டார்கள் உத்தியோக முறையில் வெளியிட்ட பிரசுரங்களிலிருந்து இது வரையில் ஜப்பானுக்கு துருப்புகள் ஏற்றிச் செல்லும் கப்பல்களும், எண்ணெய்க் கப்பல்களும், ஸப்ளைக் கப்பல்களுமாக 229 கப்பல்கள் நஷ்டமாயின என்று தெரிய வருகிறது. இந்த நஷ்டங்கள் ஜப்பானியர் எதிர்ப்பு யுத்தம் செய்தபொழுதும் போக்குவரவு மார்க்கங்களிலும் ஏற்பட்டவைகள். மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள் 6,000 அல்லது அதற்கு மேற்பட்ட டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்கள் என்று சொல்லலாம்.

பிஸ்மார்க் கடலில் ஜப்பானியக் கடற்படை பூராவும் நாசமாக்கப்பட்டபொழுது ஜெனரல் மாக் ஆர்தரின் தலைமை காரியாலயத்திலிருந்து, இந்தக் கப்பற்படையில் மொத்தம் 90,000 டன்கள் எடைமானமுள்ள 12 சாமான் கப்பல்கள். அதாவது சராசரி ஒரு கப்பலின் எடைமானம் 7,500 டன்கள் இருந்தனவென்று வெளியிடப்பட்டது. நமக்குத் தெரிந்த மட்டிலும் 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட எடைமானமுள்ள கப்பல்களுள்ள கடற்படையில் 50 சதவிகிதம் நாசமாகி விட்டதென்று சொல்லலாம். 3,000 மைல்கள் உள்ள அநேகப் போக்குவரத்து மார்க்கங்களுள்ள சமுத்திரத்தில் இந்த நஷ்டங்களை ஈடு செய்துகொண்டு ஜப்பான் மீளமுடியாது. அதிலும் ஜப்பான் அவ்வளவு ஏராளமான தொழிற்சாலைகளுள்ள தேசமாயுமில்லை.

ஆகிலும் ஜப்பானுக்கு கப்பல் வசதிகள் ஏற்பட வேறு மார்க்கங்களிருக்கின்றன வென்பது வாஸ்தவம். ஆனால் இந்தக் கப்பல்கள் கடற்கரையோரமாகத்தான் செல்லக்கூடும். 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்திற்குப் பிறகு ஜப்பான் கைவசப்படுத்திய பெரிய கப்பல்களும், ஜப்பான் கட்டி முடித்த கப்பல்களும் சொல்பம்தான். மதிக்கத்தக்கவையல்ல. ஏனென்றால் நாம் மேலே சொல்லிய நஷ்டக்கணக்குகளில் சுரங்க வெடிகளாலும், ரோந்துக்காகச் சென்று திரும்ப தளங்களுக்குவராத நீர்மூழ்கிகளாலும், விமானங்களாலும் ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களை நாம் சேர்த்துக்கொள்ளவில்லை. ஜப்பான் யுத்தத்தில் கலந்து கொள்ளுவதற்குமுன் அதற்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களும் கணக்கிடப்படவில்லை. யுத்த ஆரம்பத்தில் ஜப்பானியத் துறைமுகங்களில் ஒளிந்துகொண்ட ஜெர்மன் கப்பல்களெல்லாம் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சாமான்கள் ஏற்றிச்செல்ல உபயோகப்படுவதால் ஜப்பானியரின் அமுலுக்கு உட்படமாட்டா. ஜப்பானியர்கள் வசமிருக்கும் இதாலியக் கப்பல்களும் சொல்பமானவை.



ஜப்பானிய சாமான் கப்பற்படை கட்டும் ஏற்பாடுகளும் குறைச்சல்தான். ஏனென்றால் பெரிய கப்பல் கட்டும் தொழிற்சாலைகளில் ஜப்பானின் பெரிய கப்பல் நஷ்டங்களை ஈடுசெய்ய சண்டைக் கப்பல் கட்டுவதும் பழுதாக்கப்பட்ட கப்பல்களை சீர்படுத்தும் வேலைகளும்தான் செய்யக்கூடும்.

---

## "பிரெஞ்சுக்காரர்கள் இறந்துபோன பிரிடிஷாருக்கு மரியாதை செய்கிறார்கள்".

### மாங்கோனி கிராமத்திலிருந்து வந்த கடிதம்.

(டெயிலிமெயில் பத்திரிகை).

இதாலிக்குப் போகும் வெடி விமானங்களின் மார்க்கதிலுள்ள மாங்கோனி கிராமவாசிகள் பிரெஞ்சு தேசத்தின் பேரில் பறந்து சென்று உயிரிழந்த பிரிடிஷ் விமானிகளின் குடும்பத்தார்களுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் "இந்த நாட்டில் இறந்து போன உங்கள் விமானிகளுக்கு இந்நாட்டு மக்கள் அனைவரும் எங்கள் சுற்றத்தார்களுக்குரியதுபோல் கௌரவமும் அன்பும் பாராட்டுகிறோம். இவர்களுடைய சவங்களை நீங்கள் மறுபடியும் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லும் வரையில் இவர்களுடைய புதை குழிகளிருக்குமிடத்தில் தினந்தோறும் புஷ்பங்கள் போடுவதும் பிரார்த்தனையும் நடைபெற்று வருகின்றன. இதை எழுதியவர்கள் உண்மையான பிரெஞ்சு மனிதர்களும், ஸ்திரீகளும் செய்நன்றி உள்ளவர்களும்" என்று கடிதத்தில் கண்டிருந்தது.

இந்த செய்தியானது மாங்கோனியின் வாசியான ஒருவர் எழுதிய கடிதத்தில் எழுதப்பட்டு, கடிதம் பிரான்ஸை விட்டு ரகசியமாகக் கொண்டுவரப்பட்டு, லண்டனிலுள்ள ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்களின் தலைமை காரியாலயத்தில் கொடுக்கப்பட்டது.

அதில் கண்ட விஷயங்கள் :—" இரவு 8.50 மணிக்கு ஆகாயம் பூராவும் விமானங்கள் நடமாடும் சப்தம் கேட்டது. ஸோஹான்ஸுக்கு வடக்கே ஒரு பெரிய ஜ்வாலை காணப்பட்டது. மாங்கோனி என்னுமிடத்தில் ஒரு வெடி விமானம் விழுந்து விட்டதென்று தெரியவந்தது. இதைக் கண்ணுற்றவர்களெல்லாம் துக்கித்தார்கள். அது ஒரு பிரிடிஷ் வெடிவிமானம். அதிலிருந்த 10 பேர்களில் 9 பேர்கள் இறந்துவிட்டார்கள். ஒருவன் வெளியே குதித்தான். மறுநாள் பூராவும் மாங்கோனில் இந்த கோரமான சம்பவத்தைப் பற்றித்தான் பேச்சுகள் நடைபெற்றன. அந்த கிராம வாசிகள் கலக்கமடைந்தார்கள். இறந்த வீரர்களுக்குச் சடங்குகள் பகல் 4.30-மணிக்கு ஏற்பாடாகியிருந்தது. அங்கே வைக்கப்பட்டிருந்த ராணுவம் இறந்தவர்களுக்கு ராணுவ மரியாதைகள் செய்தது. பிறகு 2,000 ஜனங்கள் மாலைகளுடன் சென்றார்கள். மாலைகளில் கீழ்க்கண்ட பதிவுரை எழுதப்பட்டிருந்தது." நம்மை விடுதலை செய்யப் போகிறவர்களுக்கும், உலகத்தின் சுயேச்சையைப் பாதுகாக்கிறவர்களுக்கும் நமக்காக உயிர்துறந்த வீரர்களுக்கும் நீங்கள் வெகு தூரத்திலிருக்கிறவர்கள் ஆகிலும் உங்களை எங்கள் மனதில் இறுத்தியிருக்கிறோம்.

" தேக்குமரத்தினால் செய்யப்பட்ட பெரிய சவப்பெட்டிகள் பேரில் புஷ்பமாரி பெய்தது. வெடி விமானப்படையின் காப்டனுடைய பெட்டியானது இரவு பூராவும் வேலை செய்து லோகன்ஸைச் சேர்ந்த சிறுமி தயாரித்த பெரிய பிரிடிஷ் கொடியினால் மூடப்பட்டது. கிராமப் பாதிரியார் கடைசிப் பிரார்த்தனையை ஜபித்து இறந்து போன வீரர்களுக்கு உருக்கமான முறையில் கடைசி வந்தனோபசாரம் சமர்ப்பித்தார்.

"அதன் பிறகு மறக்கக்கூடாத ஒரு சம்பவம் நடைபெற்றது. கிராமத்திலுள்ள சிறுபெண்கள் 'இங்கிலீஷ் தேசிய கீதத்தை' பாடிக்கொண்டு மெதுவாகவும் அழகாகவும் வந்தார்கள். பிறகு பிரெஞ்சு தேசிய கீதம் பாடப்பட்டது. இதில் அங்கிருந்த ஜனங்களெல்லோரும் கலந்துகொண்டார்கள்." இந்தக் கடிதத்தை சுயேச்சை பிரெஞ்சு தலைமை காரியாலயத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். யுத்த சம்பந்தமான முக்கியமான தஸ்தாவேஜிகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

## சிறிய அதிகாரிக்கு விருந்து. இஞ்ஜினியருக்குப் பாராட்டு இல்லை.

தென்இந்தியாவில் ஏராளமான ரஸ்தாக்கள் அமைக்கப்படுவதிலிருந்து யுத்தமானது இந்திய கிராமங்களிலும் பரவிவிட்டதென்று சொல்லலாம். இது வரையில் கிராமங்களுக்குச்சமீபத்தில் நல்ல ரஸ்தாக்களில்லாத இடங்களிலெல்லாம் வெளியூர்களுக்குச்செல்ல வசதியுள்ள நல்ல ரஸ்தாக்கள் போடப்படுகின்றன. கிராமவாசிகள் இதைப் பாராட்டுகிறார்கள்.

இந்தப் பிராந்தியங்களில் நியாதிபெற்ற ஒரு சிறிய அதிகாரி ரஸ்தா அமைக்கும் கோஷ்டியுடன் ஒரு இடம் விட்டு மற்றொரு பிரதேசத்துக்குப் பிரயாணப்பட்டபொழுது அவர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது. கேக்குகளும், லெமெனேடுகளும், மாலைகளும் வழங்கப்பட்டன. கடைசியில் ஊர்வலமும் நடைபெற்றது.

கிராமவாசிகள் அதிகாரிகள் முன்கையில் போட்டிருக்கும் பட்டைக்கோடுகளைக் கணக்கிட்டு அவர்களை கௌரவப்படுத்துவதும், தோள்வளையில் போட்டிருக்கும் யோக்யதாவில்லையை கவனிக்கிறதுமில்லையாகையால், ரஸ்தா அமைப்புக்கு திட்டம் போட்ட பெரிய உத்தியோகஸ்தர் நன்கு மதிக்கப்படவில்லை.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 138. (3-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20- 3-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 24- 3-43 | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| 21- 3-43 | ஆலங்குடி | ... ,, | 7.00 | ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | 25- 3-43 | மழையூர் | ... ,, | 7.00 |
| 22- 3-43 | அன்னவாசல் | ... ,, | 7.00 | ,, | காம்பக்குடி | ... ,, | 7.30 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 | 26- 3-43 | வாளாமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 23- 3-43 | குழிபிறை | ... ,, | 7.00 | ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 139. (4-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 27- 3-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 31- 3-43 | நார்த்தாமலை | ... ,, | 7.00 |
| 28- 3-43 | கீரப்பழனி | ... ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 | 1- 4-43 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| 29- 3-43 | காரையூர் | ... ,, | 7.00 | ,, | இன்னாளூர் | ... ,, | 7.30 |
| ,, | இடையாத்தூர் | ... ,, | 7.30 | 2- 4-43 | கொன்னையூர் | ... ,, | 7.00 |
| 30- 3-43 | வடவாளம் | ... ,, | 7.00 | ,, | மேலவேகுப்பட்டி. | ,, | 7.30 |
| ,, | செம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 20— 3—34 | வெட்டன்விடுதி. | 27— 3—43 | திருமயம். |
| 21— 3—43 | கொடும்பாளூர். | 28— 3—43 | விராச்சிலை. |
| 22— 3—43 | கீனூர். | 29— 3—43 | விராலிமலை. |
| 23— 3—43 | குடுமியாமலை. | 30— 3—43 | வடகாடு. |
| 24— 3—43 | ராயவரம். | 31— 3—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 25— 3—43 | குழிபிறை. | 1— 4—43 | ஆலங்குடி. |
| 26— 3—43 | பாப்பாபட்டி. | 2— 4—43 | புதுக்கோட்டை. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—23-3-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் மார்ச்சு மீ 27உ [ந. 139

பிரஸங்கம் CXXXIX.

## ஐக்கிய தேசங்களின் நிரந்தர சங்கம் ஏற்படவேண்டும்.

(அமெரிக்க பிரபல நிருபர் ரேமாண்டு கிளாப்பர்).

யுத்தத்துக்குப்பின் நடைபெறவேண்டிய திட்டங்களை ஆலோசிப்பதற்காக அமெரிக்காவில் மகாநாடு ஏற்படுத்தி அதற்கு எல்லா நேசதேசத்தார்களும் அழைக்கப்படவேண்டும். மகாநாட்டில் வருங்கால நிலைமையைப்பற்றி அச்சிடப்பட்ட பத்திரிகை போட்டால்மட்டும் போதாது. தொடர்ச்சியாக வேலை செய்யக்கூடிய ஒரு சபையை நிர்மாணித்து வருங்காலத்திய தேவைகளைப் பரிசீலனை செய்யும்படியும் செய்யவேண்டும். வருங்காலத்திய பிரச்னைகளைப்பற்றி திட்டங்கள் அநேகமிருக்கின்றன. அதைச் செய்து முடிப்பதற்கு ஊக்கமுள்ள அங்கத்தினர்களுள்ள ஒரு சபைதான் அதற்கு அவசியம். அப்பேர்ப்பட்ட சங்கமில்லாத போனால் உத்க்ருஷ்டமான ஏற்பாடுகளையும் மூட்டைகட்டிப் போடவேண்டியதுதான்.

சமாதான காலத்தில் எவ்வகைப்பட்ட சங்கம் ஏற்படுத்துவது என்பதை நிர்ணயிக்க ஏற்படுத்தப்பட்ட கோஷ்டியார்கள் என்ன செய்யக்கூடும் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி தெளிவான முடிவு செய்திருக்கிறார்கள். இந்தக் கோஷ்டியார் அமெரிக்காவில் பொதுஜன வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள். அநேகர்களுக்கு சர்வ தேச விஷயங்களில் விசேஷ அனுபவம் உண்டு. அந்த கோஷ்டியின் தலைவர் டாக்டர் ஜேம்ஸ் T. ஷெட்வெல் என்பவர். சர்வ தேச ரக்ஷணைப் பிரச்னைகளில் முதன்மையான பாண்டித்யம் உள்ளவர். இந்த சங்கம் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுள்ளதல்ல. ஆகிலும் அதன் ரிபோர்ட்டை அதிகாரவர்க்கத்தார்கள் நன்கு மதித்துப் பார்க்கக்கூடுமென்பது நிச்சயம்.

## மகாநாடு தொடர்ச்சியாகயிருக்கவேண்டும்.

ரிபோர்ட்டில் நேசதேசத்தார்கள் கூடிய சீக்கிரம் ஒன்றுகூடி ஆலோசனை செய்து அதன்படி இடைவிடாது நடக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மகாநாட்டில் யுத்தத்தைப்பற்றி யோசனைகள் ஒன்றும் செய்யப்படவேண்டியதில்லை. இது விஷயமாக அதுகோஷ்டியார்கள் விசேஷமான சிபார்சு செய்திருக்கிறார்கள். யுத்தத்தைச் சரிவர நடத்துவது, யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெரிய தேசங்களைப் பொருக்கும். யுத்தத்தை நடத்துவதற்கும் பெரிய வல்லரசுகளுக்குத்தான் ராணுவ முஸ்திப்புகளிருக்கின்றன. ஆகையால் ராணுவ ஏற்பாடுகளில் அவர்களுக்குத்தான் பூர்ணமான அதிகாரம் உண்டு.

ஆகிலும் யுத்த முடிவிற்குப் பிறகு ஏற்படக்கூடும் திட்டங்களும் சீர்திருத்த முறைகளும் எல்லா ஐக்கிய தேசத்தார்களின் பொறுப்பிலும் நிறைவேறவேண்டும். யுத்தமானது எல்லா முனைகளிலும் ஒரே சமயத்தில் முடிவடைந்து விடாது. சில இடங்களில் யுத்தம் நடைபெற்றுவரும். மற்ற இடங்களில் சீர்திருத்தவேலை நடைபெறவேண்டும். விடுதலை பெற்ற நாடுகளில் ஏற்படப் போகும் திட்டங்களில் ராணுவப்படைகள் தங்கள் அலுவல்களை விட்டுப் போட்டு பங்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். வட ஆபிரிக்காவில் சரியான ஏற்பாடுகளில்லாததால்தான் ஜெனரல் ஐசன்ஹவர் சிரமப்படவேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் படையெடுப்பு ஏற்பட்டால் பின்புறமிருந்து செய்ய வேண்டிய ஏற்பாடுகள் அதிகரித்துவிடும்.

## வருங்கால நிர்ணயம்.

ஐக்கிய தேசத்தார்களின் மகாநாடு ஏற்பட்டு அதில் நிரந்தரமாக ஒரு சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டால் வருங்கால திட்டத்தை நிர்ணயிப்பதற்கு சௌகரியமாகயிருக்கும். இச்சங்கமானது தேசத்தைப் புனருத்தாரணம் செய்வதிலும், மாறுதல்களை நிறுவும் கமிட்டியாக வேலை செய்யும், டாக்டர் ஷாட்வெல்லின் தலைமையில் ஏற்பட்ட கோஷ்டியின் ரிபோர்ட்டின் பிரகாரம் சர்வதேசங்களின் நன்மைக்காக யோக்கியப் பொறுப்புடனும் திறமையுடனும் நிர்வாகம் செய்தனர் என்ற கியாதியை சங்கம் பெறவேண்டும். சங்கத்தார்கள் ஜனங்களிடையே நம்பிக்கையையும் மரியாதையையும் உண்டுபண்ணவேண்டும். பொது ஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய சாதனங்களையும் சங்கம் ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் செய்தால் தேசங்களும், ஸமஸ்தானங்களும் யுத்தத்துக்குப் பிறகு இம்மாதிரியான திட்டங்களை சாச்வதமான வகையில் அமைத்துவிடும்.

மேலே சொன்னபடி உபயோகமுள்ள வகையில் நமக்கு ஒரு திட்டம் கிடைத்திருக்கிறது. இதன் பிரகாரம் பிரசுரங்கள் வெளியிடப் போவதில்லை. அதை ஒவ்வொரு தீவுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றவேண்டும். இது முடிவுபெருதபோனாலும் செய்தமட்டில் சிலாக்கியமாகவேயிருக்கும்.

இதில் காலதாமதம் செய்வதில் பிரயோஜனமில்லை. தேசங்களெல்லாம் ஏற்கனவே திட்டங்கள்போட ஆரம்பித்துவிட்டன. சிறிய தேசங்களெல்லாம் எல்லைச்சரகங்களில் தங்கள் பாத்தியங்களைக் கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு வல்லரசும், மற்றொரு வல்லரசும் சண்டையிட்டுக்கொள்ளும்படிக்கும் தூண்டிவிடுகிறார்கள். ஒன்றுபட்ட ஐக்கிய தேசத்தார்களில்லாமல் ஒவ்வொரு நாடும் தனித்திருந்தால், உலக ரக்ஷணையை ஏற்பாடுசெய்வதற்கு பேரம் செய்து எப்பாடுபட்டும் நண்பர்களைச் சேர்த்துக்கொள்ளவேணும். ஆகையால் வலுவான ஐக்கிய தேசத்தார்களின் சங்கம் ஒன்று வேலைசெய்து வந்தால் அனாவசியமான பீதிகளும் நீங்கி ஜாஸ்தியான பாத்தியங்களும் குறைவுபட்டுவிடும். ஆகையால் அப்பேற்பட்ட சங்கத்தை ஏற்படுத்துவதற்கு இதுதான் தருணம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

### 20—3—43-லிருந்து 26—3—43-வரை.

**ருஷ்யா.—**

(a) **வடக்குப்பகுதி.**—ருஷ்யர்கள் பீரங்கிகளால் பாட்ஸ்டாம் என்ற பின்லாந்து துறைமுகத்தைத் தகர்க்கிறார்கள்.

(b) **மத்தியபாகம்.**—ஜெர்மனியின் முக்கிய தளமாகிய ஸ்மாலென்ஸ்க்கை நோக்கி ருஷ்யர்கள் நான்கு பக்கங்களிலிருந்து முன்னேறுகிறார்கள். அதாவது பெயிலி, கோலம் ஸிர்காவ்ஸ்கி, வியாஸ்மாவுக்கு மேற்கே இருக்கும் இருப்புப் பாதை, வியாஸ்மாவுக்குத் தென்மேற்கு பாகங்களிலிருந்து. இவைகளில் முதல்



பகுதி பாடுரினேவையும் இரண்டாம் பகுதி யூகோர்வ்ஸ்கோவையும்; மூன்றாவது இஸ்டெஷ்கோவை, வாலினோ, சூராவோவையும், நான்காவது வாக்கோடியையும் பிடித்துவிட்டன.

சமீபத்தில் வந்த செய்திகளில் ஸ்மாலென்ஸ்க்குக் கிழக்கே 25 மைல்களில் உள்ள யாரெட்ஸெவோவுக்கு ஆபத்துண்டாகிவிட்டதென்று தெரியவருகிறது.

(c) **கார்காவ் முனை.**—ருஷ்யர்கள் பேயல்கோரோட்டைக் காலிசெய்துவிட்டனர். சுகியேவ் பிரதேசத்தில் கடும்போர் நடைபெறுகிறது. டானெட்ஸ் நதியைக் கடக்க முயன்ற எதிரியின் பிரயத்னம் வீணாகிவிட்டது. ஜெர்மன் செய்தி அறிவிப்பு நிலயத்திலிருந்து மார்ச்சு 22-ம் தேதியன்று டானெட்ஸ் போர்முனையில் படைகளைத் திருத்தியமைக்கும் அவசியத்தினால் ஜெர்மன் முன்னேற்ற வேகம் தடைபட்டுவிட்டதென்று வெளிப்பட்டுவிட்டது.

**டுனிஸியா.—**

(a) **மாரத் அரண்.**—எட்டாம்படை தாக்க ஆரம்பித்துவிட்டது. மார்ச்சு 20, 21-ம் தேதி சனிக்கிழமை இரவு மாரத் அரணில் ஸார் பிலிலிருந்து கடற்கரையை நோக்கிச்செல்ல ஆரம்பித்த தாக்குதல் நடைபெற்றுவருகிறது. பிரிடிஷ் படையைச் சேர்ந்த 30 டாங்கிகளும், 2,000 மோட்டார்களும் இதில் ஈடுபட்டிருக்கின்றன. ஜெர்மன் அறிக்கை நிலயத்திலிருந்து "இங்கே நடக்கும் சண்டை வலுவடைந்துவருவதால், இதை மகத்தான போர் என்றுதான் சொல்லவேண்டும்" என்று வெளிவந்திருக்கிறது.

(b) **தெற்குப் பகுதி.**—கப்ஸா, ஜெனட், எல் கிட்டார், டெபா ஹாம்ரான் முதலிய இடங்களைப் பிடித்துவிட்டு அமெரிக்கப் படைகள் காபிஸ்ஸாக்குப் போகும் ரஸ்தாவிலுள்ள மாகனஸிக்கு முன்னேறுகின்றன.

(c) **வடக்கு முனை.**—இங்கு ஜெர்மனியின் முழுபலமும் உபயோகப்படுகின்றது. வடகிழக்கு டுனிஸியாவிலிருந்து விரட்டப்பட்டால் பின்வாங்குவதற்காகத் தேவையான பிரதேசத்தை சம்பாதித்துக்கொள்ளுவதற்காக இங்கு ஜெர்மனி முயற்சிக்கிறது. இங்கு ஜெர்மன் முன்னேற்றவேகம் காரணமாக நேசநாட்டுத் துருப்புகள் டாமாராவிலிருந்தும் செப்ஸாவிலிருந்தும் பின்வாங்கும்படி நேரிட்டது.

[இதை எழுதிய பிறகு, வடக்கேயுள்ள செப்ஸா திரும்பிப் பிடிக்கப்பட்டதென்றும், மத்தியிலுள்ள மகனஸி விழுந்துவிட்டதென்றும், மாரத் அரணுடைய வடக்குக்கோடியில் அச்சு நாடுகளின் முக்கியமான தற்காப்புகளை பிரிடிஷ் எட்டாம் படை ஊடுருவி விட்டதென்றும், தகவல் கிடைத்திருக்கிறது. எல்ஹாம்மாவுக்கு தென்மேற்கில் 20 மைல் தூரத்தில் ரோமலின் படைகளுக்கும், பிரிடிஷ் படைகளுக்கும் கடும் போர் நடைபெறுகிறது. எட்டாம் படை மாரத் அரணைச்சுற்றிக் கொண்டு போய்விட்டதென்றும் காபஸ் கடற்கரைக்கு முன்னேறுகிறதென்றும் தோன்றுகிறது—பத்திராதிபர்.]

**பஸிபிக்கடல்.—**

(a) நியூகினித்தீவில், சிலமாதங்களுக்குமுன் நேசநாடுகள் கடற்கரைக்கு முன்னேறுவதைத் தடுப்பதற்காக மாப்போ, ஹும்பி பகுதிகளில் ஜப்பானியர்கள் துருப்புகளை இறக்கினார்கள். பூனாவிலிருந்து முன்னேறி நேசநாட்டுத் துருப்புகள் இந்த இரண்டு பகுதிகளிலுள்ள ஜப்பானியர்களை விரட்டிவிட்டார்கள்.

(b) டச்சு நியூ கினியா கடற்கரைக்குச் சமீபத்தில் மூன்று ஜப்பானிய சாமான் கப்பல்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. ஸாலமன்ஸ் தீவுகளுக்குச் சமீபத்தில் ஒரு ஜப்பானிய நாசகாரி தாக்கப்பட்டது.

(c) கிஸ்கா ஒரேநாளில் 6 தடவை விமானங்களால் தாக்குண்டது. இந்த மாதத்தில் 17 தடவை வெடிவிமானங்கள் தாக்கின.

(d) கீழ்க்கண்ட ஜப்பானிய தளங்கள் தாக்கப்பட்டன. விலா, காகிலி, பூகா, முண்டா, ஸாலாமுவா, ராபோபோ, காஸ்மாடா, கிளஸ்டர், மாடாங், பின்ஸ்ஷேபன், காபாநமாரிபி, ஸான்குயிர், லோரன்காவு, ஆராவி, ஸெரினுடா தீவு.

(e) நியூ கினியிலிருக்கும் பார்லாக் துறைமுகத்தில் மார்ச்சுமீ 20-ம் தேதியன்று ஜப்பானிய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. சாமான் அறைகள் பழுதாக்கப்பட்டன. ஆள்சேதம் ஒன்றுமில்லை.

சைனு.—

(a) பர்மா ரஸ்தாவுக்கு வடக்கேயுள்ள ஸால்வீன் நதியைக் கடக்க ஜப்பானியர்களின் பிரயத்னம் வீணாகிவிட்டபடியால் தெற்குப்பக்கத்தில் ஒரு புதிய தாக்குதலை ஜப்பானியர்கள் ஆரம்பித்துவிட்டார்கள்.

(b) யூனன் பர்மா எல்லைச்சரகத்தில் டெங்க்சங்கிலிருந்து யான் மெயிச்சியை நோக்கி வடக்குமுகமாக ஜப்பானியர்கள் முன்னேற ஆரம்பித்திருக்கிறார்கள்.

(c) ஹூபே—ஹூனன் எல்லைச்சரகத்தில் சீனப்படைகள் ஹூவாயூங் பிரதேசத்தில் புகுந்துவிட்டார்கள். சியாங்க்ஸிடாப் எதிரி வசமாகிவிட்டது.

(d) லங்க்சிங்க் பகுதியில் ஜப்பானியர்கள் பின்வாங்கும்படி நேர்ந்தது.

பர்மா.—

a) அரக்கான் போர்முனையில் மாயூ நதிக்குக் கிழக்கே எதிரியின் தாக்குதல் பலமாகயிருக்கிறது. மாயூ நதிக் கரையிலிருக்கும் ராதிடாங்குக்கு வடக்கேயுள்ள படைகள் துண்டிக்கப்படாமலிருப்பதற்காக நேசநாட்டார்கள் தங்கள் ஸ்தானங்களைத் திருத்தி அமைத்துக்கொண்டனர். ராதிடாங்குக்கு வடக்கே யுத்த நிலைமை மோசமாகயிருக்கிறது. இங்கே கடல் மார்க்கத்திலிருந்து உதவி கிடைப்பது சிரமமாயிருக்கிறது. மற்ற போர்முனைகளிலிருந்து இங்கு கப்பல்கள் உதவி வந்திருந்தால் ஆக்கியாப்பைச் சுலபமாக பிடித்திருக்கலாம். மாயூ தீபகற்பத்தையும் துண்டித்துவிடலாம். கடல் மார்க்கமாக ஒத்தாசை இல்லாததால் நேசநாடுகளின் முன்னேற்றம் மெதுவாக நடைபெற்றுவருகிறது. ஸப்ளைகள் படகுகள் மூலம் வரவேண்டியிருக்கிறது. எதிரிக்கு ஆக்கியாபிலிருந்து ரஸ்தாக்கள் மூலமும் நதிகள் மூலமும் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டிருக்கிறது.

(b) கான்ஸாக் பிராந்தியத்தில் காலடான் நதிக்கரையில் இருந்த நேசதேச முன்னணிப்படைகள் பெரிய படைவரிசைகளுடன் சேர்ந்துகொண்டன.

(c) சிண்ட்வின் நதியின் அடிவாரத்தில் இரண்டு கிராமங்கள் வெடிகுண்டுகளால் தாக்குண்டன. தீ மூட்டப்பட்டது.

(d) வடபர்மா பகுதியில் காச்சானிலிருக்கும் துருப்புகளைத் தாக்குவதை ஜப்பானியர்கள் நிறுத்திவிட்டு பின்வாங்கிவிட்டார்கள். காச்சான் துருப்புகள் எதிரியைத் தாக்க ஆரம்பித்துவிட்டன.

(e) பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் கீழ்க்கண்ட இடங்களைத் தாக்கின. மியுங்கே, மியிட்கினு, காட்ராங்கியாங், மாபோ, ஷிபோ.



## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**14—3—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள், மாபெர்டியஸ் (Maupertius) அபிவில்லி (Abbeville).

விமானத் தாக்குதல்கள்—வடக்குபிரான்ஸ் (Northern France), பெல்ஜியம் (Belgium) (2 விரோதி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இரவு.—போக்குவரத்து சாதனங்கள்—ஜெர்மனி, ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பா.

டூனிஸியா (Tunisia).

மத்தியதரைக்கடல் (Mediterranean).

மாரத் அரண்—விமானச்சண்டைகள்—அல்ஜீரியன்கரை (Algerian Coast) 2 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

எதிரிக் கப்பல்கள்—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian Channel).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்—ஸாலமன்ஸிலுள்ள புகா (Buka).

சாமான் துறை—நியூ பிரிடனிலுள்ள யுபிலி (Ubili).

ஜப்பானியப் போக்குவரத்து கப்பல்—ஹாஸ்கின்ஸ் முனை (Cape Hoskins).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

விரோதி விமான எதிர்ப்பு பீரங்கி நிலயங்கள்—கிளஸ்டர் முனை (Cape Gloucester), டிமா (Timor) ரிலுள்ள டில்லி (Dili).

எதிரி துணைக்காவலோடு கூடிய கப்பல்கள்—வீவாக் (Wewak), (3 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன).

விமான நிலயம்.—மடாங் (Madang).

கோக்திக் பாலம்—பர்மா (Burma).

கப்பல் துறைகள்.-மோல்மின் (Moulmein).

**15—3—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸிலுள்ள செய்ன்ட் பிரையுக் (Brieuc).

எதிரி கப்பல்கள்—டச்சுக்கரை.

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—விரோதி ஜலப் பிராந்தியங்களில்.

டூனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

தரைமேலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள்—மெஸ்ஸௌண்டா (Mezzouna).

2 ஸப்ளைக்கப்பல்கள்-டுனிஷியா (Tunisia).

விமான நிலயங்கள்.-ரயில்வேக்கள், காபஸ் (Gabes).

மோட்டார்படகுகள்-ஸிஸிலிக்குத் (Sicily) தெற்கே.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—நகரம் டிரிண்டு (Trind).

விமான நிலயம் பின்ஸ்சாபென் (Finschafen).

ஜப்பானியச் சைனியங்கள்—நியூ கினியாவிலுள்ள மூபோ (Mubo).

விமான நிலயங்கள்—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), கிளஸ்டர்முனை (Cape Gloucester).

எதிரிக் கப்பல்கள்.—டச்சு நியூ கினியாவிலுள்ள கெயின்மானு (Kainmana), ஆரு தீவு (Aru Island), (சில கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, பல நாசமாக்கப்பட்டன).

எதிரி பீரங்கிகள்.—பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung) பிரதேசம்.

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள டவுன்கூ (Toungoo).

ஜப்பானிய யுத்த சாமான்கள்.-அலுஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

**16—3—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—ரயில்வே தொழிற்சாலைகள்.—பாடர்போன் (Paderborn) (ஒரு நேசதேச விமானம் காணப்படவில்லை).

இரவு.—லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி.

டூனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி துணைகாவலோடுகூடிய கப்பல்.—ஸிஸிலிக்கும் (Sicily), டூனிஸியாவிற்கும் (Tunisia)விற்கும் மத்தியில்.

மாரெத்அரண் (Mareth Line).

ருஷ்யா (Russia)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி சைனியங்கள்.—காஹிலி (Kahili), பெல்லாலி (Ballale).

விமான நிலயங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள புகா (Buka), முண்டா (Munda).

கொலம்பகாராவிலுள்ள விலா (Vila).

நேச தேச தளம்.—ஸாலமுவா (Salamaua).

நியூ ஜார்ஜியா தீவிலுள்ள விறுதுறைமுகம்.

எதிரி ஸப்மெரின் தளம்.—கிஸ்கா (Kiska).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

17—3—43. (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவு.—கண்ணிவெடி பாவுதல்— எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

டுனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி கப்பல்கள்.—காப்ஸா (Gafsa)விலிருந்து திரும்பி ஓடின.

நேரிற் பார்த்தல்.—டுனிஸியாவில் யுத்தம் நடக்கும் பல இடங்களில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமேலுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள் —மக்லியூர்குடா (Mccluergulf), காய் தீவு (Kai-Islands).

சிப்பாய்கள் தங்குமிடம், தொழிற்சாலைகள்.—லாங்கோயர் (Langgoer).

விமான நிலயம்.—ரபால் (Rabaul).

பர்மாவிலுள்ள மிதிங்னி பாலம்.

இருப்புப்பாதை பாலங்கள்.— மித்கினு (Myitkyina), கட்ருங்யாங் (Kadrangyang).

18—3—43. (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—யூ படகுத்தளம்— ஜெர்மனியிலுள்ள வாகெசாக் (Vagesack)—(2 அமெரிக்க விமானங்களும், பல எதிரி விமானங்களும் தகர்த்தெறியப்பட்டன).

இரவு.— கப்பல்தளம்-நேபிள்ஸ் (Naples).

டுனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி போக்குவரத்து வண்டிகள்.—காப்ஸா (Gafsa)விலிருந்து திரும்பி ஓடின.

ரயில்வேக்கள்.—காபஸ் (Gabes).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமேலுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

டச்சு நியூ கினியாவிலுள்ள டிமிகா (Timika), டிமோரிலுள்ள (Timor), கோபேங் (Koepang) காய்தீவிலுள்ள லாங்கோர் (Langgoer), அம்பாய்னு (Amboina)-(6 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), கிளஸ்டர் முனை (Cape Gloucester), அட்மிரால்ட்டி தீவிலுள்ள லொரெங்கா (Lorengau).

நியூ அயர்லாந்திலுள்ள காவியேங் (Kavieng);

ஸாலமன்ஸிலுள்ள புகா (Buka).

நியூ கினியாவிலுள்ள மடாங் (Madang).

அலெக்ஷாபென் (Alexishaffen), ஸாலமுவா (Salamaua).

ஜப்பானியக் கப்பல்கள்.—டாலா (Tala) கடல்.

பர்மாவிலுள்ள பாஷுன்டாங் (Pazundaung).

மிதிங்னி (Myitgne) பாலம்.

ஜப்பானியச் சைனியங்கள்.–மித்கினு (Myitkyina) பிரதேசம்.

19—3—43. (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—கால நிலைமையால் ஐரோப்பாவில் ஒரு இடத்திலும் விமானத்தாக்கல் இல்லை).

டுனிஷியா (Tunisia),

வட ஆபிரிக்கா (North Africa).

விமானத் தாக்குதல்கள்.—டுனிஷியாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் எல்லாம்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸப்மரைன்—நியூ கினியாவிலுள்ள லே (Lae).

விரோதி சைனியங்கள்—நியு கினியாவிலுள்ள மூபோ (Mubo); டிமோரிலுள்ள கோபேங் (Koepang); அட்மிராலிட்டி தீவிலுள்ள லொரெஙகா (Lorengau), நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), கிளஸ்டர் முனை (Cape-Gloucester).

கட்டடங்கள்—ஆரவே (Arawe).

படகு—சர்மாடா (Sermata) தீவு, அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

கிராமங்கள்—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.



20—3—43 (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.— இருப்பு பாதை லக்ஷியம் ஜெர்மனியிலுள்ள லிர் (Leer).

ரயில்வே லக்ஷியங்கள்—பெல்ஜியம் (Belgium).

இரவு.— ரயில்வே பாலம் மோர்லே (Morlaix).

ரயில்வே லக்ஷியங்கள்—பிரான்ஸ்.

வட ஆபிரிக்கா (North Africa),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

தொழிற்சாலை.— ஸிஸிலியிலுள்ள பொஸாஸ்லே (Pozzazlo).

லக்ஷியங்கள்.— தெற்கு இதாலி.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமேலுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி பிரயிட்டர் வெண்டன் பாஸ்ச் முனை (Cape Vanden Bosch); டச்சு நியூ கினியாவுள்ள கெய்மானா (Kaimana); கெய் தீவிலுள்ள லாங் கோயர் (Langgoer); நியூ கினியாவிலுள்ள மடாங் (Madang); பின்ஸ்சாபென் (Finschafen); அம்பன் (Ambon).

எதிரி பிரயிட்டர் கஸெலி தீபகற்பம் (Gazele Peninsula); அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska); பர்மாவிலுள்ள புதி டாங்கிற்கும் (Buthidaung), ராதிடாங்கிற்கும் (Rathedaung) மத்தியுள்ள பிரதேசம்.

பர்மாவிலுள்ள மித்சான் (Myitson); பாமோ (Bhamo) டவுங்கூ, (Toungoo).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

15—3—43. (திங்கட்கிழமை.

பிரிடன் (Britain.)

இங்கிலாந்தின் தென்கிழக்குக் கரையிலும், தெற்குக் கரையிலும் (4 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

வட ஆபிரிக்கா (North Africa).

டிரிபோலி (Tripoli).

ருஷ்யா (Russia).

கார்கோவ் (Kharkov).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.–கூடல்கனர் (Guadalcanar).

16—3—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானத்தாக்குதல் இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

டமோரா (Tamera).

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—கார்கோவிற்கு (Kharkov) தென்கிழக்கு.

தூரக்கிழக்கு (Far East).

டார்வின் துறைமுகம் (Port Darwin), (2 ஜப்பானிய விமானங்களும், 2 நேசதேச விமானங்களும் காணப்படவில்லை).

17—3—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

இங்கிலாந்து தென்கிழக்கு கரை, கிழக்கு ஆங்கிலியா (East Angilia).

வட ஆபிரிக்கா (North Africa).

டமோரா (Tamera).

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்—கார்கோவிற்கு வட[கிழக்கில்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

18—3—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

முன்னேறித் தாக்கும் சைனியங்கள்.—எட்டாம் படை.

ருஷ்யா (Russia).

கார்கோவ் (Kharkov) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

டச்சு நியூ கினியாவிலுள்ள மெராக் (Merauke).

19—3—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமான நடவடிக்கை இல்லை.

டுனிஸியா (Tunisia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்—கூடல்கனர் (Guadalcanar).

20—3—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் ஒரு இடத்திலும் விமானத் தாக்குதல் இல்லை.

டுனிஸியா (Tunisia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்—வடக்கு டானெட்ஸ் (Donetz) பிரதேசம்.

21—3—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

டுனிஸியா (Tunisia).

அல்ஜீரியன் கரையில் விமானச் சண்டைகள் —ஒரு எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது.

ருஷ்யா (Russia).

பைல்கொராட் (Byelgorod).

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியாவிலுள்ள மீராக் (Merauke).

# யுத்தக் குறிப்புகள்.

**வெற்றி கிட்டிவிட்டது.** இந்த வாரத்தில் முன்பு போர்வீரர்களாக இருந்து இப்பொழுது ராஜ தந்திரிகளாக இருக்கும் மிஸ்டர் சர்ச்சிலும் பீல்டு தளபதி ஸ்மட்ஸும் நிகழ்த்தியிருக்கும் சொற்பொழிவுகளில் காணப்படும் நம்பிக்கையையும் உறுதியையும் ஜனங்களுக்கு எடுத்துரைக்கிறோம்.

மார்ச்சு 20-ம் தேதியன்று பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ் பின்வருமாறு சொன்னார். "யுத்த முனைகளில் இருந்த இருட்டு அகன்றுவிட்டது. யுத்தப் போக்கு நமக்கு வெற்றிகரமாக மாறிவருகிறது. நிர்க்கதியற்று எதிரியானவன் கடைசிப் பிரயத்னமாக எவ்வித கொடுமையான உபாயங்களையும் கையாளக்கூடும்.

"வெற்றியானது கிட்டிவிட்டது.' சரித்திரமயமான மனித சமூகத்தின் முன்னேற்றம் தடைபடாது. மனித சமூகத்தின் மேன்மை ஒருபொழுதும் அழிவுபடாது. இந்த உலகத்தில் ஸ்வதந்திர வாழ்க்கைதான் இருக்குமேயல்லாது அடிமைத்தனம் நிலைபெறாது."

மார்ச்சு 21-ம் தேதி இதை அனுசரித்து, வெகு ஜாக்கிரதையுடன் மிஸ்டர் சர்ச்சில் ஒலிபரப்பியிருக்கிறார்.

"ஜாக்ரதையாகவும், ஜோஸியம் சொல்லாமலும் பேசினால், அடுத்த வருஷத்திலோ அல்லது அதற்கு அடுத்த வருஷத்திலோ நாம் ஹிட்லரை முறியடித்துவிடுவோம். அதாவது அவனையும் அவன் கொடுமை பரிவாரங்களையும் நாசம்செய்து சாம்பலாக்கிவிடுவோம் என்று நான் சொல்வேன்."

வி வி வி வி வி வி வி

**ருஷ்யப் போர்நிலை.** இவ்வருஷம் பனி சீக்கிரமாக உருக ஆரம்பித்ததிலிருந்து இருதரப்பாரும் யுத்த தந்திரங்களைத் திருத்தியமைத்துவிட்டார்கள். எப்பொழுதும்போல தாமதித்துப் பனி உருக ஆரம்பித்திருந்தால் ருஷ்யர்கள் முன்னேற்ற யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து, அஸாவ் கடற்கரைக்கு முன்னேறி மற்றொரு ஸ்டாலின்கிராட் போன்ற நிகழ்ச்சிகளைச் செய்திருக்கக்கூடும்.

ஆனால் இது ஏற்படவில்லை. தெற்குப் பகுதியில் ஜெர்மானியர்களின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்காக படைகளின் ஒரு பாகத்தை வைத்துவிட்டு ருஷ்யர்கள் மத்தியப் போர்முனைக்கும் வடக்குப் போர்முனைகளுக்கும் சென்று யுத்தம் ஆரம்பித்துவிட்டார்கள். வேனிற் காலத்தில் மறுபடியும் தெற்குப் பகுதியில் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பமாகும்.' இப்பொழுது எதிரியை பல பாகங்களில் தாக்கி, துருப்புகளை ஒன்றுசேரவிடாமல் செய்து பலஹீனப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

வெலிகிலூகி, ரிஷெவ், வியாஸ்மா, ஸ்மாலென்ஸ்க், இவைகளுக்கிடையிலுள்ள சதுக்கத்தில் ஸ்டாராயாருஸாவிலிருந்து ஓரெல் வரையில் 700 மைல்களுள்ள போர்முனையில் செம்படை முன்னேறித் தாக்கிவருகிறது.

தெற்குப் பகுதியில் கால ஸ்திதியைக் கூடுமான வரையில் தனக்கு உபயோகப்படும்படி ஜெர்மானியர்கள் செய்துவருகிறார்கள். ஜெர்மானியர்களுக்குச் சாதகமாக இப்பகுதியில் ஏராளமான இருப்புப் பாதைகளிருக்கின்றன. படை பலத்திலும் தளவாட பலத்திலும் ஜெர்மானியர்கள் முன்னேறி கார்காவைப் பிடித்துவிட்டார்கள். டானட்ஸ் நதிப் பிரதேசத்தில் ஆதிக்கம்பெற பகீரதப் பிரயத்னம் செய்துவருகிறார்கள்.

வேனிற் காலத்தில் ஜெர்மானியர்கள் என்னசெய்யப் போகிறார்களென்பதைப் பற்றி முன் கூட்டிச் சொல்லமுடியாது. இப்பொழுது டானட்ஸ் நதிப் பிரதேசத்தையும் குபான் பாலமுனையையும் காப்பாற்றிக்கொண்டு வால்கா நதிப் பிரதேசத்திலும் காகஸஸ் மலைப்பிரதேசத்திலும் வேனிற்காலத்தில், மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்கலாமென்ற நம்பிக்கையுடன் எதிரி இருக்கிறான். ஆகிலும், ஜெர்மனியின் முன்னேற்றம் வலுவாகயிருக்குமாவென்பது சந்தேகமாகயிருக்கிறது. மாஸ்கோ,



லெனின்கிராட் போர்முனைகளில் ஜெர்மானியர்கள் பின்வாங்குகிறார்கள். கார்காவ் யுத்தத்தில் ஜெர்மனிக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் நடைபெறவேண்டிய நிகழ்ச்சிகளுக்கு ஜெர்மானியர்களிடம் அதிக ஸப்ளைகள் இருக்கமுடியாது.

வி வி வி வி வி வி – வி

**புதிய ஏற்பாடு.** கிராட் தலைமையின்கீழ் நாஸிகளை எதிர்க்கும் கக்ஷிக்கும் டிகால் தலைமையின்கீழ் விஷி அரசாங்கத்தை எதிர்க்கும் கக்ஷிக்குமுள்ள ராஜீய சம்பந்தமான வித்யாசங்கள் அகன்றுவிடக்கூடிய ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன. இது விஷயத்தில் கிராட் முன்வந்திருக்கிறான். ஞாயிறன்று ஒலிபரப்பியபொழுது, விஷி சமாதானப் பேச்சையும், ஆலஸாஸ்லோரைன் பிரதேசத்தை ஜெர்மானியர்கள் ஆக்கிரமணம் செய்ததையும் தான் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், யூதர்களையும் அராபியர்களையும் குறித்து விஷி ஸர்க்கார் செய்திருக்கும் சட்ட திட்டங்களை நிவர்த்தி செய்து விடுவதாகவும், பிரெஞ்சு மக்களுக்குத் திருப்திகரமான குடியரசு அரசாங்கத்தை மறுபடியும் நிலைநாட்டுவதாகவும் கிராட் வாக்குறுதி செய்தான். டிகாலியின் திட்டப்படி ஜனப்பிரதிநிதிகளடங்கிய மத்திய அரசாங்கம் அமைப்பது ஒன்று தான் இதில் சொல்லப்படவில்லை.

பேச்சோடுமட்டுமில்லாமல் காரியாம்சையிலும் கிராட் நடவடிக்கை எடுத்துக்கொண்டு விட்டான். அவன் ஒலிபரப்புக்குப்பின் "வட ஆபிரிக்கப் புதிய ஏற்பாடு" என்று வழங்கப்படும் புதிய திட்டத்தை அவன் ஏற்பாடு செய்து விட்டான். யூதர்களுக்குப் பாதகமான 62 சட்டங்களை ரத்து செய்துவிட்டான். விஷி அரசாங்கத்தார் அநியாயமாக கைது செய்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான தேச பக்தர்களை விடுதலை செய்துவிட்டான். நகர சபைகள் மறுபடியும் வேலைசெய்ய ஆரம்பித்து விட்டன. பழைய குடியரசு அமுலின் முறைப்படி இனிமேல் ஞாயம் வழங்கப்படும். ஞாயிறன்று ஒலிபரப்பில் செய்த பிரசங்கத்தின் முடிவில் இரண்டு கக்ஷிக்காரர்களும் ஒன்றுபடவேண்டுமென்று கிராட் வேண்டிக்கொண்டான்.

"ஒற்றுமை அவசியம். நமது தாய் நாட்டின் நிலை பயங்கரமாக இருக்கிறது. யுத்தத்தில் ஒத்துழைத்தால்தான் வெற்றி கிடைத்தபின் தாய்நாட்டை புனருத்தாரணம் செய்வதற்கு ஒற்றுமையேற்படும். நான் சம்பந்தப்பட்டமட்டில் ஒத்துழைக்கத் தயாராகயிருக்கிறேன்". இந்த வேண்டுகோளுக்கு எதிரொலி கேட்டுவிட்டது. டிகாலி கிராட்டை ஆல்ஜியர்ஸில் சந்திக்க ஒப்புக்கொண்டுவிட்டார். பிரெஞ்சு தேசீயச் சங்கம் இதர வகுப்புகளுடன் ஒத்துழைக்க சம்மதித்துவிட்டது.

வி வி வி வி வி வி வி

**பிரான்ஸில் எதிர்ப்பு இயக்கம்.** ஜெர்மனியை எதிர்க்கும் இயக்கம் பரவி வருகிறது. ஸவாய் மலையிலுள்ள காடுகளிலிருந்து ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள் கொரில்லா யுத்தம் செய்துகொண்டு ஸோம் சமவெளியை அடைந்துவிட்டார்கள். சமாதான உடன்படிக்கை ஏற்பட்டிராத பக்ஷத்தில் 1940-ம் வருஷத்திலேயே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்தி இருப்போமென்ற நம்பிக்கைதான் இவர்களின் எதிர்ப்புக்குக் காரணம். ஹாட்ஸெவாய் பிரதேசத்தில் கலவரம் அதிகரித்திருக்கிறது. பிரெஞ்சு தேசாபிமானிகள் சரணடையவேண்டுமென்று ஜெர்மானியர் இருமாப்புடன் உத்தரவிட்டிருக்கிறார்கள். விஷி, இதாலிய அரசாங்க வர்க்கத்தார்கள் தங்கள் படை பலத்தை உபயோகிக்கத் தயங்குகிறார்கள். நாடெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டு எல்லா பிராந்தியங்களுக்கும் பரவிவிடுமோவென்று அவர்கள் பயப்படுகிறார்கள். பிரான்ஸைத் தோற்கடித்து அதை இகழ்ச்சி செய்துவிடலாமென்றும் அதை நிர்மூலமாக்கி விடலாமென்றும் ஜெர்மனி உத்தேசித்திருந்தது. கிராட்டின் அபிப்பிராயப்படி 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரான்ஸ் தேசம் விழுந்ததேயொழிய பிரெஞ்சு மக்களின் மனோதிடம் குலைபடவில்லை. ஜெர்மனியும், இதாலியும் பிரெஞ்சு தேசத்தைப் பங்கு போட்டுக்கொள்ள யோசனை செய்யும் தருவாயில், வட ஆபிரிக்காவிலும், பிரெஞ்சு தாய் நாட்டிலும் பிரெஞ்சு தேசம் புத்துயிர் பெற்று

வருகிறதென்பது சந்தோஷகரமானது. வேளிஸியாவில் 50,000 பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனியை எதிர்த்துப் போர் புரிகிறார்கள். லிபியாவிலிருந்தும் ஸாட் பிரதேசத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான பிரெஞ்சுக்காரர்கள் இவர்களுடன் சேர்ந்து விட்டார்கள். பிரான்ஸில் கலவரம் ஏற்பட்டுவிட்டது.

வி வி வி வி வி வி வி

**மனித வேட்டை.** ஜெர்மனியின் ஆள் சேமிப்பு உத்தியோகஸ்தரான ஹொர்ஸாக்கல் 2,50,000 பிரெஞ்சு தொழிலாளர்களை அனுப்பவேண்டுமென்று லவாலுக்கு உத்தரவிட்டிருக்கிறார். உத்தரவுப்படி, தெருக்களில் செல்லும் யுவர்களைக்கைது செய்து வாகன்களில் ஏற்றி, ஜெர்மனிக்கு இட்டுக்கொண்டு போகிறார்கள். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தொழிலாளர்களையும் பிடித்து தங்கள் சுற்றத்தாரிடம் போய்வருகிறோமென்று சொல்லக்கூட அவகாசமன்னியில் ஜெர்மனிக்கு அவர்கள் கொண்டு போகப்படுகிறார்கள். ஜெர்மனியின் உத்தரவுப்படி பிரான்ஸில் இம்மாதிரியான முறையில் தொழிலாளர்கள் சேமிக்கப்படுகிறார்கள். இந்தவிதமான கட்டாயமிருந்த போதிலும் ஆள் சேமிப்பு ஏற்பாடுகள் நன்றாய் நடைபெறவில்லை. 40 சதவிகிதம்தான் ஜனங்கள் முன்வந்திருக்கிறார்கள். மற்றவர்கள் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியில் ஆள் சேமிப்பு.** ஜெர்மனியிலும் ஆள் சேமிப்பு தீவிரமாக ஏற்பாடாகிவருகிறது. ஸ்வீடிஷ் பத்திரிகையில் வெளியிடுவதுபோல் பெர்லின் நகரத்தில்மட்டும் 50,000 தொழிலாளர்கள் ஒர்க்ஷாப்புகளும் 50,000 சில்லரை வியாபாரக்கடைகளும் மூடப்பட்டுவிடும்.

வி வி வி வி வி வி வி

**பெர்லின் நகரத் தாக்குதல்.** மார்ச்சு (1)-ம் தேதி 'பெர்லின் நகரம் இதுவரையில் இல்லாதபடி அதிக வலுவாகத் தாக்குண்டதென்று ரிபோர்ட்டுகள் வந்திருக்கின்றன. 1,000 ஜனங்கள் மாண்டுவிட்டார்கள். ஒரு கடைத்தெருவில் மட்டும் வெடிகுண்டுகளால் 45 பெரிய பூமிவெடிப்புகள் ஏற்பட்டன. மூன்று நாட்களுக்குப் பின்னும்கூட பெரிய அக்னி ஜ்வாலைகள் எரிந்துகொண்டிருந்தன. பெர்லின் ராணுவ அதிகாரிகள் இதை ஒப்புக்கொண்டுவிட்டார்கள். மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று ஹங்கேரியாவிலுள்ள ஒலிபரப்பில் இது மிகவும் வலுவான தாக்குதல் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஜெர்மானியர்கள் இதைக் குறைவுபடுத்திச் சொல்லுகிறார்கள். ருஷ்யர்களைத் திருப்தி செய்யவும் ஸ்டாலினுடைய சிநேகத்தை சம்பாதிக்கவும்தான் இந்த விமானத் தாக்குதல் ஏற்பட்டதென்று கோயபல்ஸ் சொல்லுகிறார்.

வி வி வி வி வி வி வி

**இருவகைப் பேச்சு.** ஜனங்களிடம் கெஞ்சுவதற்கும் புழுகுவதற்கும் நயவஞ்சகமாகப் பேசுவதற்கும் கோயபல்ஸ் சாமர்த்தியமுள்ளவன். நியூரம்பர்க்கில் ஏற்பட்ட விமானத் தாக்குதலைப்பற்றி அது ரொம்பவும் கடுமையானதென்று ஒப்புக்கொண்டு கோயபல்ஸ் சொல்லுகிறான்.

"இந்த தாக்குதல்களுக்குப் பிறகு ஜனங்கள் தெருக்களில் திடீரென்று விழுந்து சாகுகிறார்கள். இந்த ஊரைவிட்டு ரெயில் வண்டிகள் போகும் பொழுது ஜனங்கள் கண்ணீர்விட்டுக்கொண்டு போகிறதை நான் கண்ணாரக் கண்டேன்.

"நம்முடைய ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் ஏற்படும் கொடுமைகளையும் கஷ்டங்களையும் எதிரி கொஞ்சமும் பாராட்டுகிறானில்லை. அவனிடம் தயையேயில்லை."

காலப்போக்கின் சுழலானது பழிக்குப்பழி வாங்குகிறது. 1940-ல் பிரிட்டனைத் தாக்கிய ஜெர்மனி இப்பொழுது திருப்பித் தாக்கப்படுகிறது. இப்பொழுதுதான் ஜெர்மனிக்குத் தன்னுடைய குற்றம் புலப்படுகிறது. மேலே சொல்லிய ஒலிபரப்பில் மேலும் சொன்னதாவது.



"பிரிடிஷ் நகரங்களை ஜெர்மன் விமானங்கள் தாக்கியபொழுதும் நாம் கஷ்டப்படும் ஜனங்களைப்பற்றி அந்தரங்கத்தில் அனுதாபப்பட்டோம். வீடுவாசல்களை இழந்த இங்கிலீஷ் ஜனங்களைப்பற்றி நாம் பரிதாபப்பட்டோம். இம்மாதிரியான யுத்த முறைகளை நாம் வெறுக்கிறோம்".

இதில் பச்சாதாபமுமில்லை, வியசனமுமில்லை. செய்த குற்றங்களுக்கு ஏற்படக்கூடிய சிக்ஷையிலிருந்து தப்பிவிட தயையை உண்டுபண்ணுவதற்காக நாஜிகள் தந்திரமாகப் பேசும் முறையென்று நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். நியூரம்பர்க்கிலுள்ள கண்காக்ஷி சாலையும், நாடக சாலையும், ஆஸ்பத்திரியும், 15-ம் நூற்றாண்டு முதல் கியாதிபெற்ற மாணட்ஹாலும் நாசமாகிவிட்டன என்று கோயபல்ஸ் ஒப்புக்கொள்ளுகிறான்.

மனித வாழ்க்கைக்கும் நாகரீகத்துக்கும் ஒத்தவகையில் செய்யப்படும் இந்த வெறிகொண்ட கோயபல்ஸின் வேண்டுகோளுக்கு டெயிலி ஹெரால்ட் பத்திரிகையில் சரியான பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

"விமானப்படையின் தீரச் செயல்களைப்பற்றி காமன்ஸ் சபையில் சமீபத்தில் ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்கிளேர் வெளியிட்ட புள்ளி விவரங்கள் திருப்திகரமானவை. திடுக்கிடக்கூடியவை. இந்த நிகழ்ச்சிகள் அவசியமில்லையென்று புத்தி ஸ்வாதீனமுள்ளவன் ஒருவனும் சொல்லமாட்டான். பொதுஜனங்களின் வாசஸ்தலங்களையும் ராணுவத்துக்கு உபயோகப்படுத்தப்படாத கட்டடங்களையும் அழிக்கும் முறைகளைப் பற்றி நாகரிகமுள்ள ஒருவனும் சந்தோஷப்பட மாட்டான். பொதுஜனங்களின் வாசஸ்தலம் மத்தியிலும், கல்வி இலாகா மத்தியிலும் ராணுவ லக்ஷியங்கள் இருந்தால் அவைகளை வெடிகுண்டுகளால் தாக்குவது நியாயம் தான். இந்தக் கோரமான பழக்கத்தை அனுஷ்டிக்கும்படி ஜெர்மனி நம்மைத் தூண்டிவிட்டுவிட்டது. ஜெர்மனி இம்முறைகளைவிட்டுவிடுவதாகத் தோன்றவில்லை. ஆகையால் நாமும் பின் வாங்கக்கூடாது. ஜெர்மனியில் கலா விசேஷங்களுள்ள அநேக நிலயங்கள் இருக்கின்றன. ஆகிலும் ஹிட்லர் உயிருடனிருக்கும் வரையில் உயர்தரமான கண்காக்ஷி ஸ்தாபனங்கள் உலகத்திற்கு பிரயோஜன மற்றவை. நாம் மகத்தான தியாகம் செய்து சுயேச்சையுள்ள மனோ விசாலத்தையடைந்து, ஹிட்லர் குந்தகம் விளைத்துள்ள நாகரீகத்தையும் கல்வியையும் புனருத்தாரணம் செய்து அபிவிருத்தி செய்யவும் நாம் முயலவேண்டும்".

வி வி வி வி வி வி வி

**இருபக்கத்தில் தாக்குதல்கள்.** நேச நாட்டாரின் புதிய விமானதந்திரப்படி ஜெர்மனியை ஒரே சமயத்தில் சமீபத்திலில்லாத இரண்டு தனிப்பட்ட இடங்களில் வெடிகுண்டுகளால் நமது விமானங்கள் தாக்குகிறார்கள். மார்ச்சுமீ 4-ம் தேதியன்று ஹாம், ராட்டர்டாம் என்று இரு இடங்கள் தாக்குண்டன. மார்ச்சு 8-ம் தேதியன்று ரென்னிஸாம், ருவனும், மார்ச்சு 9-ம் தேதியன்று ப்ரெஸ்ட்டும் லோரியனும் தாக்குண்டன. இந்த முறைப்படி எதிரியின் தற்காப்புகளைச் சேரவொட்டாமல் தடுத்து இரண்டு லக்ஷியங்களையும் பாதுகாக்க எதிரி பிரயத்தனம்செய்தால் அவனைச் சங்கடத்தில் மாட்டிவிட்டுவிடுவது சாத்தியமாகும். இந்தத் தந்திரம் வெற்றிரமாகவே பயனளித்து வருகிறது. மார்ச்சு 4-ம் தேதியன்று ராட்டர்டாம் தாக்கப்பட்ட பொழுது ஹாம் பிரதேசத்தில் ஜெர்மன் சண்டை விமானம் ஒன்று கூட காணப்படவில்லை.

வி வி வி வி வி வி வி

**யூ படகு.** மாரிகாலத்தில் வேறு ஸ்வாரஸ்யமான செய்திகளில்லாததால், ருஷ்ய முனையில் ஏற்பட்ட தோல்விகளை மறைப்பதற்காக யூபடகுகளின் அட்டகாசத்தைப்பற்றி மிகையாகக் கூறி ஜெர்மானியர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள். நேசநாடுகளின் கப்பல் நஷ்டங்களைப்பற்றி பொய்யான கணக்கு வெளியிடப்படுகின்றன. நேசநாடுகளுக்கு அச்சு நாடுகளின் யூ படகுகளிலிருந்து அபாயம் ஏற்படுகிறதென்று கருதினாலும் இதேமாதிரி ஜெர்மன் கப்பல்களுக்கும் நமது நீர்மூழ்கிகளின் நடமாட்டத்தினின்றும் நஷ்ட மேற்படலாமென்பதையும் நாம் ருஜுப்படுத்தலாம். உதாரணமாக, சென்ற மார்ச்சு 11-ம் தேதி வெளிவந்த கடற்படை

இலாகா ரிபோர்ட்டின்படி, சென்ற 10 நாட்களுக்குள் பிரிடனுடைய இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் எதிரியின் நான்கு பெரிய ஸப்ளைக் கப்பல்களையும் ஒரு எண்ணெய்க் கப்பல்களையும், ஒரு உதவிக் கப்பலையும், இரண்டு சிறிய கப்பல்களையும் மூழ்கடித்துவிட்டன. இரண்டு பெரிய கப்பல்களும் எண்ணெய்க் கப்பலும் ஸிஸிலித் தீவுக் கப்பால் மீன் வெடிகளால் மூழ்கடிக்கப்பட்டன. மற்ற இரண்டு பெரிய கப்பல்களும் வட இதாலிக் கரைக்குச் சமீபத்தில் மூழ்கி விட்டன.

மத்தியதரைக்கடலில் இவ்விதமாகத் தான் தினசரி யுத்தம் நடைபெற்று வருகிறது. எதிராளிக்குப் பாக்கியிருக்கும் கடல் மார்க்கங்களை இம்மாதிரியாகத் தான் நாம் பலமாகத் தாக்குகிறோம். இதேமாதிரியாகத் தான் ரோமலுக்கு ஸப்ளைகள் போகாமல் நாம் தடுத்து வருகிறோம்.

எதிரி பிரசாரம் செய்து வருகிறபடி யூ படகுகளினின்றும் பயம் அவ்வளவு அதிகமாகவில்லை. நேசநாடு சாமான் கப்பல்கள் துணைக்காவலுடன் பத்திரமாகக் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று ஸப்ளைகளைச் சேர்த்துவிடுகின்றன. மத்திய தரைக்கடலிலிருக்கும் கடற்படையின் தளகர்த்தரான ஸர் A. கன்னிங்காம் சொல்லுகிறதுபோல் ஆபிரிக்க யுத்தம் ஆரம்பித்த பிறகு வட ஆபிரிக்காவுக்கு 1,000 சாமான் கப்பல்கள் துணைக்காவலுடன் பத்திரமாகவந்து சேர்ந்திருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ்—அமெரிக்க மகாநாடு.** இந்த மகாநாடு வாஷிங்டனில் நடைபெற்றது. நேச நாட்டாரின் யூ படகு திட்டங்களின் பிரச்னைகளையும் முக்கியமாக இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பதற்கு சமுத்திர மார்க்கங்களில் எதிரியின் தொந்தரவு இல்லாமல் செய்யவேண்டிய முறைகளையும் அந்த மகாநாடு ஆலோசித்தது. இந்த விவாதங்களைப்பற்றி பேசும்பொழுது மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "நாம் கவலைப்படாமல் இருக்கமுடியாது. யுத்தநிலை பயங்கரமாயிருக்கிறது. பொறுப்பு வாய்ந்தவர்கள் இராப்பகலாக ஏற்பாடு செய்துவருகிறார்கள். நிலைமையை சமாளிக்க வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அவர்கள் செய்துவிடுவார்கள். யூ படகுகளை ஒழிக்கும் வேலையில்தான் பிரிடிஷ், அமெரிக்க திட்டங்களில் விசேஷமான கவனம் செலுத்தப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**பிரிடன்—துருக்கி நட்பு.** பிரிடன்—துருக்கி இரண்டு தேசங்களுக்கும் உள்ள நட்பு விருத்தியடைவதைக்கண்டு அச்சு நாடுகள் திகிலடைகின்றன. ஜெர்மனியிலுள்ள ஆஸாத் முஸ்லீம் ரேடியோவில் பிரிடிஷ்—அமெரிக்க ராஜ தந்திரங்கள் துருக்கியை யுத்தத்தில் புகுத்திவிட விடாமுயற்சி செய்து வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி எண்ணமே கிடையாது என்று மிஸ்டர் சர்ச்சில் உறுதிகூறுகிறார். ஆகிலும் இரு நாடுகளுக்குமுள்ள நட்பு விருத்தியடைவதைக் கண்டு அச்சு நாடுகள் துக்கமடைகின்றன. சென்ற புதன்கிழமையன்று (மார்ச்சு 17-ம் தேதி) துருக்கியின், பிரதம மந்திரி, M. ஸரோஜகுலு, துருக்கியின் அயல்நாட்டுக் கொள்கையை வெளியிட்டார். துருக்கி சட்டசபை இதை ஏகோபித்து ஆமோதித்தது. M. ஸரோஜகுலு சொன்னதாவது:—"பிரிடிஷார் நமக்குச் செய்திருக்கும் வாக்குறுதியை நாம் அன்புடன் வரவேற்கிறோம். தற்போதிய இடுக்கங்கள் காரணமாக நமது நட்பு ஏற்படவில்லையென்பதையும் நான் வற்புறுத்துகிறேன்.

"அடானா மகாநாட்டிற்குப்பிறகு மிஸ்டர் சர்ச்சிலின் குணாதிசயங்களை நாம் அதிகமாக அறிந்துவிட்டோம். அதிகமாக அவருடன் நட்புக்கொள்ளவும் ஆரம்பித்துவிட்டோம்.

"சிநேகமுறையில் பிரிடன் நமக்குக் கொடுத்த வாக்குறுதியை நாம் சந்தோஷமாக ஏற்கிறோமென்று நமது நண்பர்கள் அறியட்டும். லண்டனிலிருந்து வெளிவரும் அந்தரங்கமான மொழிகளெல்லாம் லண்டனுக்கு நாங்கள் விடுவிக்கும் மொழிகளின் எதிரொலியென்றும் நாங்கள் கருதுகிறோம்."



**துருக்கியின் தற்காப்பு ஏற்பாடு.** பிரிடிஷ் அரசாங்கத்தார் துருக்கியின் தற்காப்புகளை விருத்தி செய்வதில் கவனம் செலுத்திவருகிறார்கள். பிரிடிஷாரும், துருக்கியர்களும் சேர்ந்த ஒரு கோஷ்டியார்கள், போக்குவரத்துகளை விருத்தி செய்வதிலும் துருக்கிச் சேனைகளுக்கு நூதனமான ஆயுத ஸப்ளைகளை ஏற்பாடு செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். மத்தியக்கிழக்கிலுள்ள விமானப்படைத் தலைவர் ஸர் ஷோல்டோடக்ளஸ், சமீபத்தில் அங்காராவுக்கு விஜயம் செய்ததில் விசேஷமிருக்கிறது. தளவாட இரவல் திட்டப்படி சாமான்களும், விமானங்களும், நீர்மூழ்கிகளும் ஏராளமாக துருக்கிக்கு அனுப்பப்படுகின்றன. பிரிடிஷ் விமானப்படை பயிற்சியாளர்கள் துருக்கி விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**இதாலியின் யுத்த கீர்த்தி.** இஸ்டான்பூலிலிருக்கும் யேனிஸாபேப் என்ற துருக்கியப் பத்திரிகையில், துருக்கியப் பத்திரிகைகள் இதாலியை அவமதித்துப் பிரசுரித்தனவென்று இதாலியர்கள் செய்த குற்றச்சாட்டுக்குச் சரியான பதில் வெளியாகியிருக்கிறது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டு இருக்கிறது.

"உங்களை இழிவாகப் பேசவேண்டிய அவசியமே கிடையாது. உண்மையான விஷயங்களை வெளியிட்டாலே போதும். ஐரோப்பாவின் ஆதிக்கம்பெற வேண்டுமென்று கனவுகண்டு ஏமாற்றமடைந்த இதாலியர்களைப் பற்றியும், ஒரு இடத்திலும் தீரமாகச் சண்டைசெய்ய முடியாத இதாலியத் துருப்புகளைப் பற்றியும், பறந்துசெல்ல முடியாத இதாலிய விமானப்படையைப் பற்றியும், கடலில் செல்ல இயலாத இதாலியக் கடற்படையைப் பற்றியும் நாங்கள் பத்திரிகைகளில் எழுதலாம். இதாலியின் அதிகாரமுறையில் வெளியிடப்படும் பிரசுரங்களை நாங்கள் கேள்விக்குறியுடன் வெளியிடுகிறோம். அவைகள் நம்பத் தகுந்தவைகள் என்று நாங்கள் வெளியிட்டால் பத்திரிகை படிப்பவர்கள் எங்களை அழுகிப்போன முட்டைகளைக்கொண்டு தாக்கிவிடுவார்கள். இதாலியப் படைகளின் வெற்றிகளைப்பற்றி நாங்கள் எழுதவேண்டுமா. அபிஸீனியாவிலும், ஸோமாலிலாந்திலும், எரிட்ரியாவிலும், லிபியாவிலும், டிரிபோலிடானியாவிலும் நடந்த நிகழ்ச்சிகளை இதாலியர்கள் மறந்துவிட்டார்கள்போல் தோன்றுகிறது. மேலும் நேசநாடுகளிடம் 1,00,000-க்கணக்கான இதாலியர்கள் கைதிகளாக இருப்பதையும், பரிகசிக்கத்தக்க நிலைமையில் இருந்தும் நடுநிலைமை நாட்டு பத்திராதிபர்கள் நகைப்புக்கொள்ளக் கூடாமலிருக்கும் நிலைமையையும் இதாலியர்கள் மறந்துவிட்டார்கள்".

வி வி வி வி வி வி வி

**சுங்கிங்கும், நாங்கிங் அரசாங்கமும்.** இவ்விரண்டும் சீனாவில் ஒன்று ஸ்வதந்திரம் வாய்ந்ததும், மற்றொன்று ஜப்பான் ஆக்கிரமணம் செய்திருக்கும் நாடுகளில் ஒன்று என்று உங்களுக்குத் தெரியவரும். சுங்கிங்கில் மார்ஷல் சியாங்கை ஷேக் அதிகாரம் வகிக்கிறார். நாங்கிங் பொம்மை அரசாங்கத்திற்கு வான்-சிங்-வே என்பவர் பொம்மை அதிகாரி.

சைனாவிலுள்ள ஜப்பானுக்குச் சொந்தமான இடங்களை மார்ச்சு மாதம் 30-ம் தேதியன்று நாங்கிங்கிடம் ஒப்படைத்துவிடுவதாக ஜப்பான் வெளியிட்டிருக்கிறது. சில காலத்துக்குமுன் பிரெஞ்சு இதாலிய அரசாங்கங்களுக்கு சீனாவிலிருந்த அயல் நாட்டாரின் உரிமைகளை நாங்கிங அரசாங்கத்தாரிடம் விட்டுவிடும்படி அவர்களை ஜப்பான் கட்டாயப்படுத்தியதென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஆகிலும் இந்த தானங்கள் சமக்ஷேம திட்டப்படி கொடுக்கப்பட்டவையல்ல. பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும், சைனாவிலிருந்த அயல்நாட்டு உரிமைகளை அவர்கள் சைனாவிடம் நல்லெண்ணத்துடன் விட்டுவிட்டதுபோல் நடிப்பதுகூட இல்லை.

நாங்கிங்கிலிருந்தாலும் சரி, சுங்கிங்கிலிருந்தாலும் சரி, சீனர்கள் ஜப்பானியர்களை வெறுக்கிறார்கள். எதிரிக்கு ஒருபொழுதும் சீனர்கள் தலைவணங்கமாட்டார்கள். சுங்கிங்கைப்போல் நாங்கிங் நிர்வாகமும் ஜப்பானிடம் அறுவறுப்படைக்

திருக்கிறது. வித்தியாசம் யாதெனில், வாங் என்பவர் மதிமயங்கிப்போய், கொடுங்கோல் ஆட்சியைக் கபடமாகக் கவிழ்த்துவிட முயற்சிக்கிறன். சியாங் ஆண்மைத்தனமாக எதிர்த்து நின்று சண்டை போடுகிறன்.

சுங்கிங் யுத்தம் நடத்திவருவதால் நாங்கிங்குக்கு லாபம் கிடைக்கிறது. இப்பொழுதுதான் ஜப்பான் நாங்கிங்கைச் சந்தோஷப்படுத்தி அதற்கு இஷ்டமான சாதகங்களைச் செய்யவேண்டும். இதுதான் லஞ்சம் கொடுப்பது. சுங்கிங் தோல்வியுற்ருல் நாங்கிங்கும் விழுங்கப்பட்டுவிடும். ஜப்பானிடமிருந்து கைப்பற்றிக்கொள்ளும் ஆதாயங்களுக்கு நாங்கிங் அரசாங்கம் சுங்கிங்குக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வீ

**இந்தியாவின் தற்காப்பு.**

இந்தியாவின் பேரில் படையெடுப்பு ஏற்பட்டால் இந்தியா தன்னைத் தற்காப்பு செய்துகொள்ளவும் எதிரியை அடித்து அவனை முறியடிக்கவும் சக்திபெற்றுவிட்டதென்று இந்திய சேனாதிபதி மறுபடியும் வெளியிட்டிருக்கிருர். இந்தியாவின் தற்காப்பு கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் பலமடைந்திருக்கிறது. விமான நிலயங்கள் அமைப்பதிலும், போக்குவரத்து மார்க்கங்களை அதிகப்படுத்துவதிலும், விமான எதிர்ப்பு பீரங்கிகள், கடற்கரை பாதுகாப்புகள் திட்டம் செய்வதிலும், படை திரட்டி, அவைகளுக்குப் பயிற்சியளிப்பதிலும் விசேஷமாக இந்தியாவில் கவனம் செலுத்தப்படுகிறது. துருப்புகளுக்கு, ஆடைகளும் முஸ்தீப்புகளும், இடவசதிகளும், பயிற்சி வசதிகளும் விருத்தியாவதைப் பொருத்து படை பலம் அதிகரித்துவருகிறது. பயிற்சி பெறுவதுதான் கொஞ்சம் சிரமமாகயிருக்கிறது. அதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு சிப்பாய்க்கு நவீன முறையில் ஆயுதப்பயிற்சியும், யந்திரங்களின் பயிற்சியும் அளிக்கவேண்டுமானுல் குறைந்த பக்ஷம் ஆறு மாதங்கள் வேண்டும். இந்திய சேனாதிபதி ஆட்கள் தேவையென்று விடுத்திருக்கும் வேண்டுகோளை நாம் சிபார்சு செய்கிறேம். படைப்பயிற்சிக்கு இன்னும் அநேக வாலிபர்கள் தேவை. கல்வி கற்றவர்கள் விசேஷமாகத் தேவை. நம்முடைய வருங்கால நாகரீகத்திற்கு இது அவசியமான ஏற்பாடு. ஆகிலும் கொஞ்சம் சிரமமானது.

**இந்தியாவின் தற்காப்பைப்பற்றி மிஸ்டர் அடேயின் அபிப்பிராயம்.**

M. அடே என்பவர் இந்தியாவில் சமீப காலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த துருக்கிய பத்திராதிபர்களின் கோஷ்டியின் தலைவர். அவருடைய பத்திரிகையில் இந்தியாவின் தற்காப்பு முறைகளைப்பற்றி அவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிருர். அது இந்திய சேனாதிபதியின் அபிப்பிராயத்துக்கு வியாக்ஞானம் போலிருக்கிறபடியால் அதை இங்கு பிரசுரிக்கிறேம். அவர் எழுதியிருப்பதாவது :—

"மத்தியக் கிழக்கிலும் இந்தியாவிலும் பிரிடிஷாரும் அவர்களுடைய நேசநாடுகளும் எல்லா விதமான சாமான்களையும் யுத்த தளவாடங்களையும் சேமித்து வைத்திருக்கிருர்கள். இவ்விடங்களில் ஏராளமான ஆட்களைச் சேர்த்து பயிற்சியளித்து படை பலத்தையும் விருத்தி செய்திருக்கிருர்கள்.

"இந்தியாவில் நவீன முறைகளின்படி ஏற்படுத்தப்பட்ட ராணுவப் பயிற்சி சாலைகளில் நூருயிரக்கணக்கான வாலண்டியர்கள் மோட்டார் படைகளாகவும் யந்திரங்கள் ஓட்டும் படைகளாகவும் பயிற்சிபெற்று வருகிருர்கள்."

## ருஷ்யாவுக்கு பிரிடனும், அமெரிக்காவும் அனுப்பும் உதவிகள்.

(ஓாயி ஆர்க்குஸ்டெயின்).

ஸ்டாலின் வெளியிட்ட விவரப்படி இந்த மாரிகாலத்தில் ருஷ்யாவின் முன்னேறித் தாக்குதலினின்றும் ஜெர்மனிக்கு 7,000 டாங்கிகளும், 4,000 விமானங்களும், 17,000 பீரங்கிகளும் நஷ்டமாகியிருக்கின்றன. இந்த மகத்



தான நஷ்டங்களை ஏற்படுத்துவதற்கு, ருஷ்யச் சேனை எவ்வளவு யுத்த தளவாடங்களை உபயோகித்திருக்கவேண்டுமென்றும் நாம் அறிந்துகொள்ளக்கூடும்.

ருஷ்யாவின் உற்பத்திக் கணக்குகளின் விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகிலும் ஜெர்மன் முன்னேற்ற வேகத்தினுல் முக்கியமான தொழிற்சாலைகள் ருஷ்யாவுக்கு நஷ்டமானபோதிலும், ருஷ்யாவின் தளவாட உற்பத்தி அபரிமிதமாகவேயிருந்திருக்கவேண்டும். சமீபத்தில் சில விவரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளினின்றும் ருஷ்யப்படையின் முன்னேற்ற முஸ்தீப்புகளை நாம் மதித்துப் பார்க்கக்கூடும். கடற்படை இலாகா முதல் பிரபுவான மிஸ்ட்டர் அலெக்ஸாண்டரின் அபிப்பிராயப்படி பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவுக்கு 1942-ம் வருஷம் முடிய 6,000 டாங்கிகளும், 5,600 விமானங்களும், 85,000 மோட்டார்களும் அனுப்பியிருக்கிருர்கள். ஜெர்மனி நஷ்டமடைந்ததற்கு இவை இரண்டு மடங்குள்ளவைகள். விமானங்கள் மட்டும் 1,600 விமானங்கள் அதிகமாக அனுப்பப்பட்டிருக்கின்றன. இருப்புப் பாதை வசதிகளற்றுப்போனுலும் ஏராளமான மோட்டார் வண்டிகளின் ஸப்ளையின் மூலமாக ருஷ்யாவின் சேனைகள் வேகமாகச் செல்லுவதற்கு சாதகம் ஏற்பட்டது.

இந்த ஸப்ளைகள் தவிர லக்ஷக்கணக்கான யந்திரங்களும், ஆயுதங்களும், யுத்த தளவாடங்களும், உணவுப்பொருள்களும், சிறிய ஆயுதங்களும் ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. உற்பத்தி இலாகா மந்திரி லிட்டில்டன் அபிப்பிராயப்படி வாக்குறுதி செய்த 250,000 டன்கள் எடைமானமுள்ள பொருள்களில் ஜூலை வரையில் 1,90,000 டன்கள் எடைமானமுள்ள சாமான்கள் ருஷ்யாவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன. இப்பொழுது பூரா அளவும் ஸப்ளை செய்யப்பட்டுவிட்டன என்று சொல்லலாம்.

### பிரிடனுடைய பங்கு.

மேலேசொன்ன புள்ளி விவரங்களில் பிரிடனிலிருந்து 2,974 டாங்கிகளும், 3,000-க்கு மேல்பட்ட விமானங்களும் சென்றிருக்கின்றன. இவைகளை அனுப்புவதற்கு ஏராளமான கப்பல்களும் அபாயமான மார்க்கங்களில் கப்பல்களுக்குத் துணையாகச் செல்ல யுத்தக் கப்பல்களும் தேவையாயிருந்தது.

பிரிடன், அமெரிக்கா இரண்டும் அனுப்பிய சாமான்களின் வசதியுடனும், ருஷ்யாவின் சொந்த தளவாடங்கள் உதவியாலும், ருஷ்யத் துருப்புகளின் தீரத்தினுலும், ருஷ்யாவானது நாஸிக் கக்ஷியைச் சேர்ந்த ராணுவ ராக்ஷஸ சேனையை இதுவரையில் நடைபெருதவண்ணம் நன்ருய்த் தோற்கடித்துவிட்டது. இந்த ஒத்துழைப்பின் முக்கியத்வம் சாமான்களின் அளவைமட்டும் குறிப்பிடாது. ஆனுல் சாமான்கள் எந்த நாட்டிற்கு முதலில் அனுப்பப்பட்டன என்பதை விளக்கிக்காட்டிவிடும்.

வெற்றிகரமாக மாரிகாலத்தில் முன்னேறித் தாக்குதல் செய்ய ஏற்பாடுகள் நடத்துவதற்கு சாதகமாக ருஷ்யாவுக்குத் தளவாடங்கள் வந்துகொண்டிருந்தபொழுது, யுத்த முஸ்தீப்புகளின் குறைவினுல் சென்ற கோடைகாலத்தில் ஆச்சின்லக்கு அதிகாரத்துக்குட்பட்ட துருப்புகள் எகிப்து எல்லைக்குப் பின்வாங்க நேரிட்டது. யுத்த தளவாடங்களையும், முஸ்தீப்புகளையும் அனுப்புவதில், ஆபிரிக்கப் போர்முனைக்கு முதன்மையாகத் தளவாடங்கள் அனுப்பப்படவில்லையென்பது நிச்சயம். சென்ற சில நாட்களில் டூனிஸியாவின் சில போர்முனைகளில் நேசநாடுகள் பின்வாங்கியதற்கு எதிராளியின் யுத்த தளவாடங்களின் மிகுதிதான் காரணமென்றும் சொல்லலாம்.

எப்படியிருப்பினும், பிரிடனில் தளவாட உற்பத்தி ஏராளமாக அதிகரித்திருக்கிறது என்பது யாரும் அறிந்த விஷயம்.

1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்திலேயே, 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் உற்பத்தி செய்ததைவிட இரண்டு மடங்கு டாங்கிகள் பிரிடனில் உற்பத்தி செய்யப்பட்டன. 1942-ம் வருஷம் ஜூன் மாதத்தில் டாங்கிகள், மோட்டார்கள், கவசம்பூண்ட மோட்டார்கள் இவைகளின் உற்பத்தி வருஷத்திற்கு சராசரி 2,57,000-ஆக அதிகரித்தது. 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிரிடிஷ் சேனைகளிடம் 5,00,000 வண்டிகளிருந்தன. யுத்த ஆரம்பத்தில் அவர்களிடம் 45,000 வண்டிகள்தானிருந்தன.

ஆகிலும் 1942-ம் வருஷத்தின் முடிவில் வெவ்வேறு போர்முனைகளுக்குத் தேவையான எல்லா தளவாடங்களையும் ஸப்ளை செய்வதற்குப் போதுமான அளவு உற்பத்தி செய்யப்படவில்லை என்பது நிச்சயம். சாமான்கள் அனுப்புவதில் ருஷ்யாவுக்கு முதன்மையான ஸ்தானம் கொடுக்கப்பட்டது. நடப்பு வருஷத்தில் பிரிடிஷ், அமெரிக்கத் தளவாட உற்பத்தியானது போதுமான அளவுக்குமட்டுமல்லாமல் தேவைகளுக்கு உபரியாகவே அதிகரித்துவிடும். இதே சமயத்தில் ருஷ்யாவிலிருக்கும் ஜெர்மன் படைகளைத் தியாகம் செய்தகூட, ஆபிரிக்காவிலிருக்கும் ஜெர்மன் படைகளுக்கு ஹிட்லர் உதவி அனுப்பிவருகிறான். இந்த சமயத்தில் ருஷ்யப் போர்முனையைவிட ஆபிரிக்காவில் பிரிடிஷ், அமெரிக்கச்சேனைகள் செய்யும் போர்தான் ஹிட்லருக்கு முக்கியமானது. டேனிஸியாப் போரில் நேசநாடுகளின தாக்குதலைச் சமாளித்துக்கொண்டு காலதாமதம் செய்து வந்தால் படையெடுப்பு பயமுள்ள ஐரோப்பா கடற்கரைகளைத் தற்காப்புச் செய்துகொள்ள சௌகரியமேற்படுமென்று ஹிட்லர் நம்புகிறான்.

### ஐரோப்பாவில் கலகம் ஏற்படுமென்று பயம்.

பிரிடிஷ், அமெரிக்கப் படையினர் ஐரோப்பா கண்டத்தில் இறங்கிய உடனேயே ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் மேற்கு ஐரோப்பாவும், தெற்கு ஐரோப்பாவும் கலகம்செய்ய ஆரம்பித்துவிடுமென்று ஹிட்லர் அஞ்சுகிறான். ஆகையால்தான் ஆபிரிக்காவில் யுத்தத்தை நீடித்து நடத்தவேண்டுமென்று ஹிட்லர் பகீரதப் பிரயத்தனம் செய்கிறான். கடைசியாக வந்த செய்திகளிலிருந்து மார்ஸெயில்ஸிலிருந்து பிரினீஸ் மலைகள் வரையிலுள்ள லையான்ஸ் வளைகுடாவின் கரையோரங்களில் ஹிட்லர் துருப்புகளைக் குவித்துக்கொண்டிருக்கிறானென்று தெரியவருகிறது. இதன்மூலம் ஸ்பெயினுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். நான் பலதடவைகளில் சொல்லியிருக்கிறபடி ஸ்பெயின் நடுநிலைமை வகித்துவருவதுதான் ஹிட்லருக்கு லாபகரமானது.

ருஷ்யாவில் செய்ததுபோல இதர ஐரோப்பாவிலும் உள்நாட்டுப் பாதுகாப்பு ஸ்தலங்களைக் குறுக்கிக்கொள்ளவேண்டுமென்பதுதான் ஹிட்லரின் அபிப்பிராயம். அப்பொழுதுதான் அவைகளைச் சுலபமாகத் தற்காப்புச் செய்ய முடியும். ஆனால் இது குதிரை அப்புறப்படுத்தப்பட்டபிறகு கொட்டில் கதவை மூடிவைப்பதற்குச் சமமாகும்.

---

# பிலிப்பைன்ஸ் தீவுகளின் ஸ்வதந்திரம் நிறைவேறவில்லை.

(தூரக்கிழக்கு நியூஸ் லெட்டர்).

பிலிப்பைன்ஸ் திவுகள் ஸ்வதந்திரமடையும் தருவாயிலிருந்தபொழுது யுத்தம் ஆரம்பமாயிற்று. டைட்டிங்ஸ்—மாக்டப் சட்டத்தின் ஷரத்துகள் பிரகாரம் பிலிப்பைன்ஸ் திவுகள் 1935-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தானாகவே ஆட்சிபுரியும் குடியரசு நாடாகவும் பிரிடிஷ் குடியரசு நாடுகளின் அந்தஸ்துள்ளதாகவும் இருந்துவந்தது.

1946-ம் ஆண்டு ஜூலை 4-ம் தேதியன்று பூர்ணமான குடியரசு நாடாக ஆகவேண்டியது. பத்து வருஷம் வரையில் குடியரசு நாடாகயிருக்கவேண்டுமென்ற திட்டத்தை பிலிப்பியர்கள் பூர்ண ஸ்வதந்திரமடைவதற்கு பயிற்சிகாலமென்று கருதினார்கள். ஆகிலும் ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் ஜனங்களின் தேசமுன்னேற்ற முறைகளை நாசமாக்கிவிட்டு தங்களுடைய அரசாட்சியை ஸ்தாபித்துவிட்டார்கள்.

காரிகேடார் அரணும் விழுந்த பிறகு பிலிப்பைன்ஸின் நிர்வாகம் பூராவும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் வசமாகிவிட்டது. பிலிப்பைன்ஸிலுள்ள ஜப்பானியப் படைகளுக்கு தளகர்த்தராகயிருந்த ஜெனரல் ஹோம்மா அந்நாட்டில் தலைமை அதிகாரம் வகித்தார். ராணுவ அமுல்களெல்லாம் திட்டப்படி நடைபெற்றன. இராக்காலங்களில் ஜனங்கள் நடமாடக்கூடாது என்ற அமுல்களும் வெகு நாட்கள் வரையில் அனுஷ்டானத்திலிருந்தன. ஆகஸ்டு மாதத்திலும்



இரவு நடமாட உத்தரவு அமுலிலிருக்கிறதென்றும் அதை மீறியவர்கள், கடுமையாக சிக்ஷிக்கப்படுவார்களென்றும் ஞாபகப்படுத்தப்பட்டது. கடுமையான நடவடிக்கைகளிருந்தபோதிலும் ஜப்பானின் ராணுவ அரசாங்கத்தை பொது ஜனங்கள் எதிர்த்துக்கொண்டேதானிருந்தார்கள்.

பிலிப்பியர்கள் இடைவிடாது கொரில்லாச் சண்டைகள் நடத்திவருகிறார்களென்று மாதாமாதம் ரிபோர்ட்டுகள் வந்திருக்கின்றன. முக்கிய நகரங்களான ஸெபுவும் ஸாம்போங்காவும் பிரதேச எரிப்பு முறைப்படி பிலிப்பினோக்களால் நாசம் செய்யப்பட்டுவிட்டன. ஸாம்போங்காவிலுள்ள ஜனங்கள் அங்குள்ள கப்பற் தளங்கள், ஸ்டோர்கள், சாமான் வைத்திருக்கும் தளங்கள், இருப்புப்பாதை வசதிகளெல்லாம் ஜப்பான் வசமாகக்கூடாதபடி செய்துவிடத் தீர்மானித்து விட்டார்கள். ஜூலை மாதம் 19-ம் தேதி மணிலாவிலிருந்து ஆங்கிலத்தில் ஒலிபரப்பப்பட்டபொழுது பெரிய மணிலாவின் வடக்கு மாகாணங்களில் வீடுவீடாகச் சோதனை செய்தபொழுது, துப்பாக்கிகளும், அச்சுடும் யந்திரங்களும் ஒலிபெருக்கும் கருவிகளும், வெயர்லெஸ் கருவிகளும் இருப்பதாகவும் அவைகளை ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுக்குப் பாதகமாக உபயோகிப்பதாகவும் ஜப்பானியர்கள் கண்டார்கள். நவம்பர் மாதத்தில் மணிலாவிலுள்ள ஜப்பானிய ஒலிபரப்பு நிலயத்திலிருந்து அநேக பிலிப்பியர்கள் தங்களுடைய புராதனமான நாடுகளையும் குடும்பத்தையும், சுற்றத்தார்களையும் மறந்துவிட்டு அமெரிக்கப்படைகளுடன் கலந்துகொண்டுவிட்டார்களென்றும் ஒலிபரப்பப்பட்டது. ஜப்பானின் கதி எவ்வளவு மோசமாகிவிட்டதென்பது பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள ஜப்பானிய ராணுவ அரசாங்கத்தின் மந்திரியான ஷோஸோமுராடா என்பவர் "நிலைமையை பிலிப்பினோக்கள் சரியானபடி அறியவேண்டுமென்றும் ஜப்பானின் சீர்திருத்த ஏற்பாடுகளுக்கு அவர்கள் இடைஞ்சல் செய்யக்கூடாதென்றும்" பிலிப்பினோக்களுக்கு எச்சரிக்கை செய்ததிலிருந்தும் நன்றாக விளங்குகிறது.

பிலிப்பியர்களின் ஒத்தாசை தேவை என்று சொன்னது ஜப்பானின் எவ்விதமான சீர்திருத்த முறைகளுக்காக என்று பார்ப்போம். ஜப்பானின் முன்னேற்றத்துக்காக பிலிப்பைன் தீவுகளில் ஜப்பானின் அரசாங்க ஆதிக்கியமும், அங்கேயிருக்கும் பொருள்களைக் கொள்ளையடிப்பதும்தான் ஜப்பானின் சீர்திருத்த முறையாகும். ராஜீய விஷயங்கள் சம்பந்தப்பட்டமட்டில் பிலிப்பியர்களுக்கு ஸ்வதந்திரம் அளிப்போம் என்று வாக்குறுதி செய்தபோதிலும் ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளை 40 வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். முன்னிருந்த நிர்வாகத்தில் சட்டசபை அங்கத்தினர்களும் ஜனாதிபதி முதல், முனிஸிபாலிடிகளின் மேயர்கள் உள்பட்ட எல்லா அதிகாரிகளும் பொது மக்களின் வாக்குறிமையின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுள்ள சட்டசபை எடுபட்டுவிட்டது. அரசாங்க நிர்வாகத்திலுள்ள பொம்மைத் தலைவர் முதல் உத்தியோக முறையிலிருக்கும் கீழ்தர அதிகாரிகளும் ஜப்பானிய ராணுவ நிர்வாகத்தினால் நியமனம் செய்யப்படுகிறார்கள். பத்திராதிபர்களின் உரிமைகளும், பேச்சுரிமைகளும் போய்விட்டன. ஜனங்கள் கூடிப்பேசும் உரிமையும் போய்விட்டது. ஜப்பானியர்கள் ஆக்கிரமிப்பதற்குமுன் பூர்ண ஸ்வதந்திரம் எத்தருணத்திலும் கிடைக்குமென்ற நம்பிக்கை பிலிப்பியர்களிடம் குடிகொண்டு இருந்தது. இப்பொழுது காலநிர்ணயமில்லாத ஒரு சமயத்தில் பிலிப்பியர்களுக்கு ஸ்வதந்திரம் வழங்கப்படுமென்ற கூடுமான சம்பத்தகாத வாக்குறுதியைமட்டும் ஜப்பான் சொல்லிவருகிறது. அதுவும் ஜப்பானின் புதிய உலக அமைப்பு திட்டத்தில் அவர்கள் பூராவாக ஒத்துழைத்தால்தான் சுயேச்சை அளிக்கப்படுமாம்.

இதற்குமுன் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தார் தேசத்தின் பொருளாதாரங்களை, தேசத்தின் பொருளாதார, ராஜீய ஸ்வதந்திரத்துக்காக அமைக்கவேண்டியதற்கான திட்டங்களை ஏற்படுத்தி நடத்திவந்தார்கள். இப்பொழுது ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளின் ஐச்வர்யங்களை தங்களுடைய சொந்தப் பிரயோஜனங்களுக்காகத் திருத்தியமைத்து வருகிறார்கள். ஜப்பானுக்கு பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள தாதுப்பொருள்களும் ரசாயனப்பொருள்களும் தேவை. பிலிப்பைன்

ளிலிருக்கும் விவசாயப் பொருள்களையும் தனக்கு உபயோகப்படும் முறையில் உண்டுபண்ணுகிறது. பிலிப்பைன்ஸ் தீவுகளில் கரும்புதான் முக்கியமாக சாகுபடி செய்யப்பட்டு வந்தது. ஜப்பானியர்களின் திட்டப்படி சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளெல்லாம் சாராய ரசம் உண்டுபண்ணும் வேலையில் ஈடுபட வேண்டுமென்றும் கரும்பு உற்பத்திசெய்யும் பிரதேசங்களில் பருத்தி பயிரிட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. பருத்தி பயிர் செய்யும் விஸ்தீர்ணத்தை 9,112,750 ஏக்கராக்களாக அதிகரிக்க வேண்டுமென்று ஜப்பானியர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். சர்க்கரை உற்பத்தியில் பிலிப்பியர்கள் போட்டிருந்த மூலதனமும் அவர்களுக்கிருந்த கவனமும், போய்விட்டன, ஜப்பானியர் திட்டப்படி ஏற்படப்போகும் பருத்தி உற்பத்தி தொழிலில் அவர்களுக்கு ஒரு பங்குமிருக்காது. 11-ம் தேதியன்று ஜப்பானில் வெளிவந்த செய்திகளிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள பஞ்சுத்தொழிற்சாலைகளை எட்டு ஜப்பானியக் கம்பெனியார்கள் நேராடி கவனித்து வருவார்களென்று தெரியவருகிறது.

பிலிப்பைன்ஸின் தாதுப் பொருள்கள் இவ்விதமாகக் கொள்ளையடிக்கப்படும்பொழுது பிலிப்பியர்கள் உணவுப்பொருள்களின் பஞ்சத்தினால் கஷ்டப்படுகிறார்கள். ஜப்பானியர்கள் உணவுப்பொருள்கள் கட்டுப்பாடு சங்கம் ஒன்று ஏற்பாடு செய்து பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள ஜப்பானியப்படைகளின் உணவு வசதிகளை கவனித்து வருகிறார்கள். நாட்டின் பொதுஜனங்களின் தேவைகளை அச்சங்கம் கவனிப்பதில்லை. சென்ற வருஷம் மே மாதத்தில் இந்தோ-சைனாவிலிருந்து 45,000 அரிசி மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டன. இவைகள் ஜப்பானியத் துருப்புகளுக்காக சேமித்து வைக்கப்பட்டன என்று அங்கிருந்து ஓடிவந்தவர்கள் அறிவிக்கிறார்கள். ஆகையால் தினசரி ஜீவனத்துக்கு வேண்டிய பொருள்களின் குறைவினால் பொதுஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஜனங்களை மாற்றிக்கொள்ளும் கப்பலான கிரிப்ஸ் ஹோமில் பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்து திரும்பி வந்த 13 அமெரிக்கர்கள் கொடுத்த தகவலின் பேரில், ஸெப்டம்பர் 26-ம் தேதியன்று அஸோஸியேடட் பத்திரிகை நிருபர் மணிலாவைப்பற்றி விவரங்கள் கொடுத்திருக்கிறார். மணிலாவின் தலை நகரத்தில் மனக்கொதிப்பு ஏற்பட்டும், கஷ்டங்களதிகரித்தும் உணவுப்பொருள்கள் அற்றுப்போகும் நிலைமையும் காணப்படுகின்றன. ஜப்பானிய ஒலிபரப்பில் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்திருக்கிறதென்று வெளியிடுவதை நாட்டைவிட்டு வெளியேறியவர்களும் ஊர்ஜிதம் செய்கிறார்கள்.

பொருளாதார கஷ்டத்தைத் தவிர பிலிப்பியர்களுக்கு மற்றொரு அவமானமும் ஏற்பட்டிருக்கிறது. பிலிப்பியர்களுக்கு கல்வி முறையிலும், மதவிஷயத்திலும் ஸ்வதந்திரம் கிடையாதென்றும், பிலிப்பியர்கள் தனிப்பட்ட ஒரு கல்விப் பயிற்சியையும் அடையவில்லையென்றும், நாட்டில் நல்ல பழக்கங்களே ஒன்றுமில்லையென்றும் ஜப்பானியப் பிரபுக்கள் சொல்லுகிறார்கள். அரேபியா, இந்தியா முதலான நாடுகளின் செல்வாக்கினாலும், பிறகு மூன்று நூற்றாண்டுகள் ஸ்பெயினின் ஆதிக்கத்தினாலும், சென்ற 40 வருஷங்களில் அமெரிக்காவின் நிர்வாகத்தினாலும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் நாகரீக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஜப்பானியர்கள் மறந்துவிட்டார்கள். மற்ற நாடுகளின் பழக்க வழக்கங்களை மதித்துப்பார்க்க சக்தியற்ற ஜப்பானியர்கள் பிலிப்பியர்களின் நாகரீகம் அமெரிக்காவைப் பின்பற்றியிருக்கிறதென்று நினைக்கிறார்கள். ஆகையால் தான், பிலிப்பைன்ஸ் தீவுகளில் நான் ஞானசம்பந்தமான கிளர்ச்சி ஏற்படவேண்டுமென்று ஜெனரல் ஹோமோ விண்ணப்பம் செய்துகொள்ளுகிறான்.

இந்தக் கிளர்ச்சியானது பிலிப்பைன்ஸ் தீவுகளை ஜப்பானியர் மயமாக மாற்றிவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உத்தியோக முறைகளில் ஜப்பானிய பாஷைதான் உபயோகிக்கப்படுகின்றன. பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் மாணாக்கர்கள் இதையே கற்றுக்கொள்ளுகிறார்கள். புதிய முறைகளைக்கற்பிப்பதற்காக ஜப்பானிய உபாத்தியாயர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். பழைய படிப்பு முறைகள் நிராகரிக்கப்பட்டன. டோக்கியோ ஒலிபரப்பில் ஜூன் 19-ம் தேதி வெளியிட்டதுபோல் 50 பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் உயர்தர ஆசிரியர்களும் மகாநாட்டில் கூடி ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் தயாரித்திருக்கும் படிப்பு திட்டத்தை எவ்விதம் அனுஷ்டானத்துக்குக் கொண்டு



வருவது என்ற யோசனைகளை முடிவு செய்தார்கள். இந்தத் திட்டப்படி ஜப்பானிய பாஷை, சரித்திரம், நாகரீகம் இவைகளைக் கற்றுக்கொள்ளுவதில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. பள்ளிக்கூடங்களின் பெயர்களும் ஜப்பானிய வீரர்களின் நாமதேயத்தை ஒட்டி வழங்கப்படும். பிலிப்பைன்ஸிலுள்ள சிறுவர்கள், சிறுமிகள், கொண்ட சாரணர்களின் இயக்கம் கலைக்கப்பட்டது. இதற்குப்பதிலாக ஜப்பானின் ஆதிக்கத்துக்குட்பட்ட யுவர்களின் சங்கம் நிர்மாணிக்கப்பட்டது. பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஆரம்பக் கல்வி சாலைகளில் உபயோகப்படுத்துவதற்காக அச்சிடப்பட்ட பாட்டுப் புஸ்தகங்களில் ஜப்பானிய தேசீய கீதம் முதல் பாட்டாகப் போடப்பட்டிருக்கிறதென்று டோக்கியோவில் ஸெப்டம்பர் 9-ம் தேதி ஒலிபரப்பப்பட்டது.

இவைகளிலிருந்து ஜப்பானியர் ஆக்கிரமித்த நாடுகளிலெல்லாம் ஜப்பானியர்கள் ஜனங்களின் ஆதரவை இழந்துவிட்டார்களென்பதிலும் அதேமாதிரி பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் ஏற்பட்டுவிட்டது என்பதிலும் சந்தேகமில்லை. ஜப்பானியர் செய்து வரும் வெருட்டல்கள் நீடித்து நிற்க முடியாது. நவம்பர் 14-ம் தேதி டோக்கியோவிலிருந்து ஜப்பானிய பாஷையில் ஒலிபரப்பியபொழுது ஜாவா வாசிகளும் பிலிப்பியர்களும் முதலில் தங்களை வரவேற்றார்களென்றும், இப்பொழுது சிறிய குறைகள் ஏற்பட்டாலும் ஜப்பானியர்களுக்குக் கோபம் வந்துவிடுவதையும் ஜனங்களைத் தாக்குவதுமாகயிருக்கும் ஜப்பானியர்களை அவர்கள் வெறுக்கிறார்களென்றும், ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால் ஜப்பானின் அமுலை பிலிப்பியர்கள் எதிர்த்து வருகிறார்கள். அவர்களின் தேசத்தின் வீரரான ரிஸால் சொல்லுகிறபடி "கீழ்ப்படிந்து இருப்பது எப்பொழுதும் நல்ல முறையல்ல. இதன் மூலம் கொடுங்கோல் ஆட்சிவலுக்குமானால் அதை மீறித்தானாகவேண்டும்" என்ற அபிப்பிராயத்தை பிலிப்பியர்கள் அறிந்திருக்கிறார்கள்.

## யுத்த தளவாடங்களின் உற்பத்தி அதிகமாகிறது.

மூன்றரை வருஷங்களுக்கு முன்பு, இந்த யுத்தம் ஆரம்பமானபொழுது வேலையாட்களுக்கு அதிக உரிமை நாளடைவில் கிடைத்துவந்த நேசநாடுகள் யுத்தத்திற்கு தயாரில்லாமலிருந்தது. ராஜீய வாதிகளுக்குள் மனவேற்றுமையிருந்ததால் யுத்த தளவாட முயற்சியில் ஈடுபடவில்லை. தொழிலாளர்களை நசுக்கி அவர்கள் அசகங்களைப் பாழ்படுத்திய அச்சுநாடுகள் யுத்த தளவாடங்களை உற்பத்திசெய்து வைத்துக்கொண்டு தயாராயிருந்தனர். சண்டைக்கு வேண்டிய தளவாடங்களையெல்லாம் எதிரிகள் சேகரித்து வைத்திருந்தனர். ஆகையினால்தான் 2 வருஷங்களுக்குமுன்பு வரையிலும் எதிரிகள் யுத்தத்தில் வெற்றியோடிருந்தனர். வேலையாட்களை நசுக்கி அவர்களின் ஸ்வதந்திரங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டால் அதனால் பயன் ஏற்படாது என்பதை அச்சுநாட்டினர் அறிந்துகொள்ளவில்லை. அந்த நாடுகளுக்குக் கடைசியில் அழிவும் தோல்வியும் ஏற்பட்டுவிடும். ஆகவே அச்சுநாட்டினரின் யுத்த தளவாட உற்பத்தி குறைந்தும், நேசநாட்டின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்துக்கொண்டும் வருகிறது. அமெரிக்க நாட்டில் ஏற்பட்டிருக்கிற யுத்த தளவாட உற்பத்தியை சிறிது கவனிப்போம்.

1943-ம் வருஷத்தில் அமெரிக்க யுத்த தளவாட உற்பத்தி அச்சு நாடுகளான ஜெர்மனி, இதாலி, ஜப்பான் ஆகிய இத்தேசங்களின் உற்பத்தியைப்போல் 2 மடங்கு அதிகமாகவே இருக்கும். பேர்ல் துறைமுகம் 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 7ல தாக்கப்பட்டது. அதற்குப்பிறகு 1,045 கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சராசரி ஒரு நாளைக்கு 4 கப்பல்கள் வீதம் கட்டப்படுகின்றன. இவ்வாறு உற்பத்திக்கு காரணம் என்னவென்றால் அமெரிக்காவில் கணக்கற்ற வேலையாட்கள் யுத்த வேலையில் ஈடுபட்டிருப்பதேயாகும். 1940-ம் வருஷத்தில் யுத்த வேலையில் 70 லக்ஷம் அமெரிக்கர்கள் ஈடுபட்டிருந்தனர். சென்ற வருஷக் கடைசியிலோ 1,75,00,000 அமெரிக்கர்கள் வேலை செய்தனர். இந்த வருஷ முடிவில் அமெரிக்கர்களால் 2 கோடி டன் மொத்தம் நிறையுள்ள

கப்பல்கள் கட்டப்படும். இப்பொழுது அமெரிக்காவில் மாதத்திற்கு 5,000, ஆகாய விமானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதாவது மாதத்திற்கு எதிரி நாடுகளான ஜெர்மனி, இதாலி, ஜப்பான் ஆகிய நாடுகளில் செய்யப்படும் விமானங்களைவிட 1,000 விமானங்கள் அமெரிக்காவில் மட்டும், அதிகமாய் செய்யப்படுகின்றன. இவ்வருஷ முடிவில், மாதத்திற்கு 10,000 விமானங்கள் வரை அமெரிக்காவில் கட்டப்படும். யுத்த ஆரம்பத்தில் விமான பலத்தினுல்தான் ஜெர்மானியர் வெற்றியடைந்தார்கள் என்றுல், நாம் இப்பொழுது எவ்வளவு தூரம் பலம் அடைந்திருக்கிறேம் என்பது தெரிந்துகொள்ளலாம்.

அமெரிக்சர்களின் தளவாட உற்பத்தி அதிகரிப்பதைப் பார்த்து நாம் சந்தோஷப்படுகிறேம். இது எவ்வாறு இருக்கிறதென்றுல் பிறர் குழந்தைகளைப் பார்த்து அதனுல் நாம் அடையும் சந்தோஷம் போலவேயிருக்கிறது. ஆனுல் இச் சந்தோஷம் நம் குழந்தைகளைப் பார்க்கும்போது உண்டாகும் சந்தோஷத்திற்கு இணையாகாது. அதுபோல நம் இந்தியாவில் தளவாட உற்பத்தி அதிகரித்திருப்பதைப்பார்க்க நாம் சந்தோஷப்படவேண்டும். ராணுவ காரணங்களுக்காக உற்பத்திக் கணக்குகளை வெளியிடுவது சாவதானமில்லை. ஆகவே சிலவற்றையே இங்கு அறிவிக்கிறேன். இந்திய தொழிலாளர்கள் 37,000 விதமான யுத்த தளவாடங்களையும் ஸப்ளைகளையும் செய்கின்றனர். இந்தியாவில் யந்திரங்களுக்கு வேண்டிய கருவிகள் முதல் கவசங்களும் குடைகளும் செய்யப்படுகின்றன. சென்ற யுத்தத்தில் நம் இரும்பு தளவாடங்களின் உதவியால் துருப்புகளும், யுத்த தளவாடங்களும் யுத்த அரங்கங்களுக்கு ஏற்றிச்செல்லப்பட்டன. இன்றும் அவ்வாறேதான். இப்பொழுது நாம் புகழத்தக்க செயல் என்னவென்றுல் நம் நாட்டிலேயே, நம் சிநேகிதர்களான நம்நாட்டு தொழிலாளிகளால் செய்யப்பட்ட ஆயுதங்களையும் கவசங்களையும் யுத்தமுனையில் இருக்கும் துருப்புகளும், மாலுமிகளும் உபயோகப்படுத்துவதே. பலபாகங்களிலும், உள்ள ரயில்வேதொழிற்சாலைகளில் விமானத்தின் பலபாகங்களும் தளவாடங்களும், கவசம்பூண்ட வண்டிகளும், மோட்டார் கூடுகளும், கையால் எறியப்படும் குண்டுகளும், பீரங்கி வண்டிக் குழாய்களும் இன்னும் இதர தளவாடங்களும் உற்பத்தியாகின்றன.

யுத்த காலத்தில் ரப்பரின் முக்கியத்வத்தைப் பற்றி சிறிது கவனிப்போம். தற்கால சண்டைக்கப்பல் ஒன்றிற்கு, 17,000 மோட்டார் டயர்களுக்குவேண்டிய அளவு ரப்பர் வேண்டியிருக்கிறது. ஜெர்மனி தொழிற்சாலைகள்மேல் வெடிகுண்டு வீசும் பறக்கும் கோட்டையின் சக்கரத்திற்குமட்டும் 100 டன் எடையுள்ள ரப்பர்வேண்டியிருக்கிறது. இந்தியாவில் இன்று 4 லக்ஷம் மோட்டார் டயர்களும், 18,70,000 ஸைக்கிள் டயர்களும், 10,000 விமான டயர்களும் செய்யப்படுகின்றன. துணிகள், கூடாரங்கள், கார்கள், உதிரி பாகங்கள், யந்திரத்திற்கு வேண்டிய கருவிகள் இவைபோன்ற யுத்தத்திற்கு வேண்டிய அநேக சாமான்கள் அதிகமாகவே இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

யுத்த ஆரம்பமுதற்கொண்டு 4,000 கப்பல்கள் நம் கப்பல் கட்டும் தளங்களில் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. பெரிய பழுதுகளும் சீர்படுத்தப்பட்டன. இப்பொழுதும் நாம் மற்ற நாடுகளைப்போல் முன்னேறவில்லையென்றுலும், நாம் சாதித்துள்ள காரியங்களை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டியதுதான். நாம் இதுவரை சாதித்துள்ள காரியங்களும், சென்ற வருஷத்தைவிட அதிகமாய் உற்பத்தி செய்யவேண்டுமென்கிற ஊக்கத்துடனும் இருப்பது இந்தியாவில் உள்ள தொழிலாளர்களின் மேன்மைக்கு அறிகுறியாகும்.

---

## யூ படகுகளின் அறுவடை குறைந்துவிட்டது. குறைவு பலனுக்குக் காரணங்கள்.

(டெயிலி டெலகிராப் பத்திரிகை).

சென்ற மூன்று மாதங்களில் யூ படகுகளின் சேஷ்டையின் விளைவுகள் குறைவுபட்டிருப்பதற்கு காலநிலை மோசமாகயிருக்கிறதென்று ஜெர்மானியர்கள் சொல்லும் முகாந்திரம் சரியானதல்ல. காலநிலையானது யூ படகுகளை மட்டும் அல்லாமல் சாமான் கப்பல்களையும் அதன் துணைக்காவல் படைகளையும் பாதிக்கும். காலநிலை சரியாக இல்லாவிடில் ஆகாயத்திலும் சமுத்திரத்திலும் துணைக்காவல் வேலைசெய்வது குறைவுபடும். சாமான் கப்பல்கள் வேகமாகச் செல்லமுடியாது. ஜெர்மானியர்கள் சொல்லுவதை நம்பினுல் யூ படகுகளுக்கு இந்தக் கப்பல்கள் அசையாத லக்ஷியங்களாக ஆகிவிடும்.



1940, 1941-ம் வருஷங்களில் விபரீதமான காலப்போக்கைப்பற்றி யூ படகு அதிகாரிகள் ஒரு புகாரும் செய்யவில்லை. காலத்தின் கொடுமைகளைச் சமாளித்து முன்னேற அவர்களுக்கு அனுபவமும் கடலில் செல்லுவதில் பாண்டித்தியமுமிருந்தது. இப்பொழுது அதிகாரிகளும் சில்லரை உத்தியோகஸ்தர்களும் பால்டிக் கடலிலுள்ள பயிற்சி சாலைகளில் பழக்கம்பெற்று அட்லாண்டிக் மகா சமுத்திரத்திற்கு அனுப்பப்படுகிறுர்கள். இங்கே சீதோஷ்ண ஸ்திதி சரியாக இல்லை. ஜெர்மனியில் அளிக்கப்படும் பயிற்சி மூலமாக இதை அவர்கள் சமாளிக்கமுடியாது.

ருஷ்யாவில் ஏற்பட்ட தோல்விகளுக்குக் காரணம் உரைத்ததுபோல் அட்லாண்டிக் யுத்தத்தில் ஏற்பட்ட குறைகளுக்கும் ஜெர்மனி ஒரே மாதிரியான காரணம் வெளியிடுகிறது. ருஷ்யாவின் குளிர்காலம் மிகவும் கடுமையானது என்று ஹிட்லர் சொல்லுகிறுன். இப்பொழுது அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் கடும் குளிர் என்று கடற் தளபதி டோனிட்ஸ் சொல்லுகிறுன். தோல்விக்குக் காரணம் கடும் குளிர் என்று இருவரும் சொல்லுகிறுர்கள். இந்தக் குறைகூறுவது விந்தையாக இருக்கிறது. யூ படகுகளின் சேஷ்டைகளை பலஇடங்களுக்குச் சுலபமாக மாற்றிக் கொள்ளலாமென்று ஜெர்மனி சொல்லுகிறது. அட்லாண்டிக் சமுத்திரத்தில் காலநிலைமை மோசமாகயிருந்தால் யூ படகுகளை கரீபியன் கடலுக்காவது அல்லது அமைதியுள்ள மற்ற இடங்களுக்காவது டோனிட்ஸ் கொண்டுபோயிருக்கலாமே. காலத்தின் கோளாரைப்பற்றி புகார் செய்வதின் அடிப்படையான விஷயங்கள் பின்வருமாறு, (1) சென்ற இரண்டு மாதங்களில் யூ படகுகளின் பெரும்பாகம் நாசமாகிவிட்டது, (2) நேசநாட்டு சாமான் கப்பல் கூட்டங்களைத் தாக்கிய யூ படகுகளை நேசநாட்டினரின் துணைக்காவல் கப்பல்களும் விமானப்படைகளும் துரத்தியடித்துவிட்டன. (3) லோரியான், ஸெயின்டு நாஸேர், பிரெஸ்ட் முதலிய. நீர்மூழ்கி தளங்களை நமது வெடிவிமானங்கள் தாக்கியதிலிருந்து யூ படகுகளின் நடமாட்டம் குறைவுபட்டது. (4) யூ படகுத் தலைவர்களின் மாலுமித்தன்மையும் அனுபவமும் உயர்வானதில்லை. ஆகையால்தான் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஏற்படும் மாரிகால நிலைமையை அவர்கள் சமாளிக்க முடியவில்லை.

---

## அமெரிக்க ஜனுதிபதியின் வீட்டில் பத்திராதிபர்கள் மகாநாடு.

வாஷிங்டனிலுள்ள ஜனுதிபதியின் வாசஸ்தலத்திலுள்ள காரியாலய முக மண்டபத்தில் ஒவ்வொரு வாரமும் இரண்டு தடவை அமெரிக்கர்களில் அநேகர் கூடுகிறுர்கள். அயல்நாட்டு சுற்றுப்பிரயாணிகள் இந்தக் கூட்டத்தைக்கண்டு ஆச்சரியப்படுகிறுர்கள்.

நூற்றுக்குக் குறைவுபடாத, அநேக தடவைகளில் 300-க்கு மேற்பட்ட, நபர்கள்கொண்ட வாஷிங்டனிலுள்ள பத்திராதிபர்களும் ஒலிபரப்பு நிருபர்களும் ஐக்கிய நாடுகளின் ஜனுதிபதியான ப்ராங்லின் ரூஸ்வெல்ட்டைப் பேட்டிகாண வாரம் இருமுறை வருவதுண்டு.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை சாயங்காலமும், வெள்ளிக்கிழமை காலையிலும் பத்திரிகைக்காரர்கள் ஜனுதிபதியின் சொந்த அறையில் கூடி நுட்பமான முக்கியமான அநேக கேள்விகள் அவருக்கு விடுவிக்கிறுர்கள். யுத்தத்தினுலும் உள்நாட்டு பிரச்னைகளாலும் பாதிக்கப்பட்டிருக்கும் தேசநிலைமையைப்பற்றி பகிரங்கமான அநேக மறுமொழிகளையும் பெற்றுவிடுகிறுர்கள். எதிரிக்கு உதவியளிக்கக் கூடியதும், சாதகப்படும்படியானதுமான தகவல்கள் மற்றும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

ஜனாதிபதியும் பத்திரிகைக்காரர்களின் பிரதிநிதிகளும் தேசநிலையைப்பற்றி பரிசீலனை செய்து வருகிறார்கள். இந்தக் கூட்டத்திற்குப் பிறகு அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகளுக்கும் ஒலிபரப்பும் நிலயங்களுக்கும் தகவல்கள் அனுப்பப்படுகின்றன. உலகம் பூராவுக்கும் யுத்தத்தின் போக்கைப்பற்றியும் அமெரிக்காவில் ஏற்பட்டுவரும் ஸ்வாரஸ்யமான நிகழ்ச்சிகளைப்பற்றியும் தகவல்கள் அனுப்பப்படுகின்றன.

## ஒலிபரப்பாளர்கள், பத்திராதிபர்கள் மகாநாடு.

ஐக்கிய நாடுகளின் சமாசாரங்களை அறியவேண்டியதில் ஆசையுண்டாகும்படி செய்வதற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இரண்டு உபாயங்கள் செய்திருக்கிறார். முதலாவதாக, ஒலிபெருக்கும் கருவிகளையும் ரேடியோ மூலம் சமாசாரம் அறியும் சாதனங்களையும் நாடெங்கும் ஏராளமாக உபயோகப்படுத்திவருகிறார். அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒலிபெருக்கும் பெட்டியை வைத்திருக்கிறார்கள். அல்லது அயல் வீட்டிலுள்ள ரேடியோ மூலம் தகவல்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள். சமாதான காலத்தில் ரூஸ்வெல்ட் குளிர்காய்ந்துகொண்டிருக்கும்பொழுது செய்த சம்பாஷணைகளும், யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து தேசத்திற்கு ஒலிபரப்பு மூலம்செய்த பிரசங்கங்களும், தாங்கள் வாக்குக்கொடுத்து தேர்ந்தெடுத்த ஜனாதிபதியின் நிர்வாகத்தைப்பற்றிய பூராத் தகவல்களையும் அமெரிக்கப் பொது ஜனங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றன.

இரண்டாவதாக, இதற்கு முன்னிருந்த ஜனாதிபதிகளைப் போலில்லாமல், வாரம் இருமுறை பத்திரிகாசிரியர்கள் மகாநாடு கூட்டி அவர்கள் மூலமாக பொது ஜனங்களுக்கு அறிக்கைகள் வெளியிடுவது என்ற பழக்கத்தையும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கையாண்டுவருகிறார்.

பத்திரிகாசிரியர்கள், ஆண்களும்; பெண்களும், மகாநாட்டிற்கு அரை மணி முன்னதாகவே, ஜனாதிபதியின் வீட்டிலிருக்கும் காரியாலயத்தின் விஸ்தாரமான முகமண்டபத்தில் கூடிவிடுவார்கள். ஜனாதிபதி வரும் வரையில் சுவர்கள் ஓரமாகப் போடப்பட்டிருக்கும் மெத்தைகளுள்ள நாற்காலிகளிலும் கட்டில்களிலும் படுத்துக்கொண்டு நேரம் போக்குவார்கள். அல்லது கூட்டம் கூட்டமாக நின்று அன்றையச் செய்திகளைப் பற்றி அபிப்பிராயங்களை வெளியிடுவார்கள்.

மகாநாடு நடைபெறும் தருணம் சமீபித்துவிட்டது. பத்திராதிபர்கள் பத்திரிகைகள் வெளியிடவேண்டிய நேரமும் கிட்டிவிட்டது. வாஷிங்டனிலுள்ள ஆபீஸுகளிலும் மற்ற நகரங்களிலும் பத்திராதிபர்கள் தந்திகளை எதிர்பார்த்துக்கொண்டு, ஜனாதிபதியிடமிருந்துவரும் தகவல்களைப் பிரசுரிப்பதற்குத் தயாராகயிருக்கிறார்கள். முகமண்டபத்தில் நிருபர்கள் தகவல்களுக்காக துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி தயாராக இருப்பதாகத் தகவல் அறிவிக்கப்படுகிறது. பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளிக்க அவர் தயாரென்று வெளியிடப்படுகிறது. அங்கிருக்கும் உதவியாளர் ஒருவர் இருமுறை கைகளைத் தட்டி சப்தம்செய்து வழக்கம்போல் ஜனாதிபதி தயாரென்று பத்திரிகை நிருபர்களுக்கு அறிவிக்கிறான்.

நிருபர்கள் ஜனாதிபதியிருக்கும் அறைக்குள் சென்று, நின்றுகொண்டேயிருக்கிறார்கள். ஜனாதிபதியும், அவருடைய பத்திரிகை காரியதரிசி, ஸ்டீபன் யேர்லியும், மகாநாட்டு சுருக்கெழுத்தாளரும், இரண்டு மூன்று ஆபீஸர்களும் மட்டும் ஆசனங்களில் அமர்ந்திருப்பார்கள். சில சமயங்களில் மகாநாட்டுக்கு அன்னியரும் அழைக்கப்படுவதுண்டு. வின்ஸ்டன் சர்ச்சில் ஜனாதிபதியிடம் சென்றபொழுது, அமெரிக்க பத்திராதிபர்களுக்கு சர்ச்சில் அறிமுகம் செய்யப்பட்டார். அவர்கள் கரகோஷத்துடன் வரவேற்றார்கள். எல்லோரும் பார்க்கும்படியாக சர்ச்சில் நாற்காலியின்பேரில் ஏறி நின்றார்.

### மரியாதையான வரவேற்பு.

பத்திரிகை நிருபர்கள் அறைக்குள் நுழையும் பொழுது ஜனாதிபதி தன்னுடைய சுற்று நாற்காலியில் சாய்ந்துகொண்டு, ஸிகரெட் பிடியை ஒரு மூலையில் சாய்த்துவைத்துக்கொண்டு முகவாய்க்கட்டை நன்றாய் வெளிப்படும்படியாக வீற்றிருக்கிறார். கோடைகாலத்தில் உள்ளங்கியுடனிருப்பார்.



கைகளில் ஒன்றில் F. D. R. என்ற வில்லை போடப்பட்டிருக்கும். முதலில் வருகிறவர்களுடன் சிறிது தமாஷ் செய்வார். அவர்களின் பெயரைக் கூப்பிட்டும் வரவேற்பார். ஸ்திரீ நிருபர்களின் புதிய தொப்பிகளையும், கவனிப்பார். அல்லது பழைய சிநேகிதனின் சரீரம் பெருத்துவிட்டதைப்பற்றி பரிகாசம் செய்வார். எல்லா நிருபர்களும் அறைக்குள் வந்தவுடன் அங்கிருக்கும் உதவியாளர்களில் ஒருவன் எல்லோரும் வந்துவிட்டார்களென்று அறிவிப்பான். மகாநாடு ஆரம்பமாகும்.

மகாநாட்டை ஆரம்பிக்கும்பொழுது ஜனாதிபதி புதிய கொள்கைகளைப்பற்றியாவது அல்லது அரசாங்க அலுவல்களைப் பற்றியாவது தகவல்கொடுத்து விடுவார். அன்றையச் செய்திகளில் ஏற்பட்டிருக்கும் விசேஷ சம்பவங்களைப்பற்றி தன்னுடைய வியாக்யானத்தை அவர் வெளியிடுவார். அல்லது இன்றைக்கு ஒரு தகவலுமில்லையென்றும் கேள்விகள் கேட்கலாமென்றும் சொல்லிவிடுவார். கேள்விகள் வாய்மொழியாகத்தானிருக்கவேண்டும். தேசசம்பந்தமாகவும், அந்நிய நாடுகள் சம்பந்தமாகவும், உள்ள பிரச்னைகளைப்பற்றியும், உள்நாட்டில் மூலைமுடுக்குகளில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களைப்பற்றியும் கேள்விகள் எழக்கூடும்.

கேள்விகள் சரமாரியாகவும் கடுமையாகவும் வந்துகொண்டேயிருக்கும். இந்தக் கேள்விகளுக்குப் பதிலுரைப்பதற்குக் கூர்மையான புத்திசாலித்தனம் வேண்டும். ஆகிலும் ஜனாதிபதி இந்தச் சோதனையில் வெளியேறிவிடுகிறார். நுட்பமான கேள்விகளுக்கும் சாதுர்யமாய் பதிலளிப்பதில் சந்தோஷமடைகிறார். சம்பாஷணையில் ஏற்படும் பரஸ்பர விளையாட்டுப் பேச்சுகளினின்றும் தனக்கு புத்தி கூர்மை யேற்படுகிறதென்று நினைக்கிறார். மகாநாடு முடிந்தபிறகு "நான் எப்படி நடந்துகொண்டேன்" என்று ஸ்டீபன் யேர்லியையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுவார்.

## நாலுவகைப்பட்ட தகவல்கள்.

இந்த மகாநாடுகளில் ஜனாதிபதி பத்திரிகை நிருபர்களுக்கு விடுக்கும் தகவல்கள் நான்கு வகைப்படும். மூன்றாவது மனிதர் சொல்லுவதுபோல் செய்திகளின் பெரும் பாகம் அறிவிக்கப்படும். அவருடைய வியாக்கியானங்களின் சாரம்சத்தைபிரசுரிக்கலாமேயல்லாது எல்லாவற்றையும் அப்படியே பிரசுரிக்கக்கூடாது. நிருபர்கள் பின்வருமாறு எழுதலாம். "அடுத்த வாரம் சேனைக்காக அதிகப்பணம் ஒதுக்கிவைக்கவேண்டுமென்று சட்ட சபையில் பிரேரேபிப்பாரென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இன்று சொன்னார்".

சில சமயங்களில் தான் சொன்ன வாசகங்களையே உபயோகிக்கலாமென்றும் அவர் அனுமதியளித்துவிடுவார். இப்படிச் செய்வதற்காக ஜனாதிபதி காரியாலயத்திலிருந்து ஒரு பிரசாரம் வெளியிடப்படும். மூன்றாவது வகைப்பட்ட தகவல்கள் யாதெனில், ஜனாதிபதி சொன்னதாக வெளியிடாமல், பத்திரிகைகளில் உபயோகிப்பதற்காக முக்கியமான சில புள்ளிவிபரங்களை ஜனாதிபதி நிருபர்களுக்கு கொடுத்துவிடுவார். அடிக்கடி ரிகார்டுகளிலில்லாத சில ரிபோர்ட்களிலிருந்து உபயோகமுள்ள சில தகவல்கள் வெளியிடப்படும். அவைகள் ரகசியமானவைகளென்றும் பிரசுரம் செய்ய லாயக்கில்லாதவையென்றும், நிருபர்களின் கவனத்துக்காக மட்டும் வெளியிடப்பட்டதென்றும் சொல்லப்படும். இதன் மூலமாக நிருபர்கள் விஷயத்தின் போக்கை அறிந்து கொள்ளுவார்கள்.

மற்றொரு வகையிலும் ஜனாதிபதி பதில்கள் உரைப்பதுண்டு. சமயோசிதமில்லாத ஒரு கேள்விக்கு புன்னகையுடன் மிகையாகவே அவர் பதிலளித்துவிடுவார். அமெரிக்க வெடி விமானங்கள் டோக்கியோவையும் இதர ஜப்பானிய தொழிற்சாலைப் பிரதேசங்களையும் தாக்கியபொழுது ஒரு நிருபர் இந்த விமானங்கள் எந்த தளங்களிலிருந்து புறப்பட்டன என்று ஜனாதிபதியைக் கேட்டார். அதற்கு பதிலுரைக்கையில் "ஷாங்கிரிலா" என்னும் தளமென்று ஜனாதிபதி சொன்னார். ஷாங்கிரிலா என்பது ஜேம்ஸ்ஹில்டன் என்னும் கட்டுக்கதை எழுதுகிறவர் "இழந்த வானம்" என்னும் கதை புஸ்தகத்தில் நிர்மாணம் செய்திருக்கும் கனவு உலகம் என்பதை எல்லா நிருபர்களும் அறிந்திருக்கிறார்கள்.

இப்பொழுது கடைசிக் கேள்வி முடிந்துவிட்டது. சற்று நிச்சப்தமாயிருக்கிறது. நிருபர்களில் விருத்தாப்பியமுள்ள ஒருவர், தன்னுடைய சகாக்களின் சார்பாக ஜனாதிபதிக்கு வந்தனம் செலுத்துகிறார்.

இப்பொழுது உள்ளே வரும்பொழுது ஏற்பட்டதைவிட வெளியே போகும்பொழுது அதிக தள்ளுமுள்ளு யேற்படுகிறது. தந்தி மூலம் தகவல் அறிவிக்கும் நிருபர்கள் அந்தக் கட்டடத்தில் ஒருபுறமிருக்கும் பத்திரிகாசிரியர்கள் அறையிலுள்ளடெலிபோன் மூலம் தகவலனுப்ப முந்துகிறார்கள்.

பத்திரிகைச் சங்கங்களிலிருந்தும், தலைநகரிலுள்ள பத்திரிகை ஆபீஸ்களிலிருந்தும் பன்னிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிருபர்கள் ஜனாதிபதியின் மாளிகையில் சதாகாலமும் இருந்து வருகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு நாளும் காரியதரிசி யேர்லியை சந்தித்து அவரிடமிருந்து அன்றுடம் அங்கு நடைபெறும் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச வரும் ஒவ்வொருவரையும் இவர்கள் கண்டு சந்திப்பின் நோக்கமென்னவென்றும் விசாரிக்கிறார்கள்.

---

## ஜாகர்ஸ்ட்ராஸியிலிருக்கும் வைரங்கள்.

(டெய்லி எக்ஸ்பிரஸ்).

இது 29,000,000 பவுன்கள் பொருமானமுள்ள வைரங்களைப் பற்றிய கதை.

இந்த வைரங்களின் உதவியால் நடுநிலைமை வகிக்கும் நாடுகளில் பிரசாரம் நடைபெறும்படி செய்யவும் அந்த நாடுகளிலிருந்து முக்கியமான யுத்த தளவாடங்களை வாங்கி ஜெர்மனிக்கு அனுப்புவதற்கும் ஜெர்மனி உத்தேசித்திருந்தது. சென்ற பன்னிரண்டு மாதங்களில் நீர்மூழ்கிகள் மூலமாக வைரங்களை ஏராளமாக கள்ளத்தனமாகக் கொண்டுபோனாலும் ஏராளமான வைரக்கல்லுகள் பெர்லினிலுள்ள ஜெர்மன் பாங்கியில் மறைந்து கிடக்கின்றன. இவைகள் நொருங்கிப்போன கண்ணாடித்தூள்கள்போல் ஜெர்மனிக்கு ஒன்றுக்கும் உபயோகப்படவில்லை.

இதன் வரலாறு பின்வருமாறு :—

ஜெர்மனியானது ஹாலந்தையும் பெல்ஜியத்தையும் ஆக்கிரமித்தபொழுது வைர வியாபாரிகளெல்லாம் தங்களுடைய சரக்குகளை ஜெர்மன் அரசாங்கத்துக்குத் தவிர மற்றவர்களுக்கு விற்கக்கூடாதென்று உத்தரவிடப்பட்டது. இந்த விலை பொருள்களைக் கைப்பற்றினால்தான் அயல்நாடுகளில் பிரசாரம் நடத்துவதற்கும் யுத்த தளவாடங்கள் வாங்குவதற்கும் தேவையான அயல்நாட்டு நாணயங்கள் கிடைக்குமென்று ஜெர்மனி யோசித்துவிட்டது. ஜெர்மனியின் பாங்கி நோட்டுகளை ஒருவரும் மதிக்கவில்லை. நகைகள் சிலாவணியுள்ளவை. ஆகையால் ஆம்ஸ்டர்டாமிலும், ஆன்ட்வெர்ப்பிலுமுள்ள பெரிய வைர வியாபாரிகள் ஜெர்மனிக்கு வைரங்களை விற்றார்கள்.

ஜெர்மனிக்கு தென் அமெரிக்காவில்தான் நடுநிலைமை வகிக்கும் மார்க்கெட் இருந்தது. தென் அமெரிக்காவின் நாணயங்களை அடைய வேண்டுமென்றுதான் ஜெர்மனி ஆசைப்பட்டது. தென் அமெரிக்காவில்தான் ஜெர்மானியர்கள் பிரபலமான பிரசார ஏற்பாட்டைச்செய்ய நினைத்தார்கள். தென் அமெரிக்க வியாபார ஸ்தலத்தை ஜெர்மானியர்கள் இழந்து விடும்படியான ஒரு சம்பவம் நேரிட்டது. 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் தென் அமெரிக்காவுக்கு போய்க் கொண்டிருந்த லாதி விமானப் போக்கு வரத்து நின்று போயிற்று. இந்த விமானங்கள் மூலம்தான் ஜெர்மானியர்கள் விலை உயர்ந்த நகைகளைக்கொண்டு போனார்கள். விமானப் போக்குவரத்து மார்க்கமானது ரோமிலிருந்து ஆரம்பித்து ஸ்பெயின், கேப்வெர்டி தீவுகள், பிரெஸீல் வழியாகச்சென்று ஆர்ஜெண்டைனுக்குப்போயிற்று. லாதி விமானப்போக்கு வரத்து கம்பெனியார்கள் குற்றமற்ற வியாபாரிகள் இல்லை என்று அறிந்துகொண்டு பிரெஸீலிய அரசாங்கத்தார் போக்குவரத்து மார்க்கத்தை மூடிவிடும்படி உத்தரவு செய்தார்கள்.

ஆகையால் ஜெர்மானியர்கள் கள்ளத்தனமாக நகைகளைக்கொண்டுபோக ஆரம்பித்தார்கள். ஜெர்மன் ஸ்திரீகளுக்கு நாட்டைவிட்டுப் போவதற்கு அனுமதிச் சீட்டுகள் கொடுத்தனுப்பினார்கள். அந்த ஸ்திரீகள் நடுநிலைமை நாடுகளுக்குச்சென்று கழுத்தில் வைரங்கள் மாலைகள் அணிந்து கொண்டிருந்தார்கள். அவைகளை விற்பனைசெய்து விட்டபிறகுதான் அவர்கள் ஜெர்மனிக்குத் திரும்பி வரவேண்டும். ஆகிலும் நடுநிலைமை நாடுகளின் சுங்கவரி அதிகாரிகள் இந்த உபாயத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள்.



பிறகு மற்றொரு மோசமான உபாயம் கையாளப்பட்டது. நீர்மூழ்கிகள் மூலம் வைரங்கள் கபடமாகக் கொண்டு போகப்பட்டன. இம்மாதிரியான ஏற்றுமதி சிலகாலமாக நடைபெற்று வருகிறதென்று பிரிடிஷ் அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது. அது சம்பந்தமாக நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால்தான் பெர்லின் நகரத்திலுள்ள டியூசே ரீக்ஸ் பாங்கு கட்டடத்தின் தாழ்வரையில் வைரங்கள் பிரயோசனமில்லாமல் குவிந்து கிடக்கின்றன.

---

## ஸ்திரீகளுக்கு ஸ்திரீகள் வேண்டுகோள்.

### சர்வதேச ஸ்திரீகள் தினக் கொண்டாட்டத்தினத்தன்று ஜெர்மானிய ஸ்திரீகளிடம் ருஷ்ய ஸ்திரீகள் வேண்டுகோள்.

(டெய்லி வொர்க்கர்).

பாஸிஸ்ட் கொள்கையை எதிர்க்கும் ருஷ்ய ஸ்திரீகளான நாங்கள், ஜெர்மன் ஸ்திரீகளாகிய உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் :—

"ஹிட்லரைச் சேர்ந்த கொள்ளைக் கூட்டத்தினரை எதிர்த்துப் போராட நீங்களும் எழுங்கள். ஹிட்லர் கொள்கைகளை எதிர்த்துச் சண்டையிடும் ஸ்வதந்திர விருப்பமுள்ள ஜனசமூகத்தோடு சேருங்கள். நமக்கு இனிமேல் காலம் கொஞ்சம்தான் இருக்கிறது. அதனை வீணாக்கமுடியாது. ஹிட்லரையும், அவனுடைய கோஷ்டியையும் ஒழித்து நசுக்கினால்தான், ஹிட்லரினால் ஏற்படப்போகும் பேராபத்தினின்றும் ஜெர்மானியர்களைக் காப்பாற்றமுடியும். ஆகையால் ஹிட்லரையும், அவன் கொடுங்கோலாட்சியையும் ஒழிக்கப் பாடுபடுங்கள்".

இத்தகைய வேண்டுகோள் ருஷ்ய ஸ்திரீகளால் ஸர்வ தேச ஸ்திரீகள் கொண்டாட்டத் தினத்தன்று, ஜெர்மானிய ஸ்திரீகளுக்கு விடுவிக்கப்பட்டது என்று மாஸ்கோ ரேடியோ கூறுகிறது. வேண்டுகோளில் பின்கண்ட விஷயங்களும் சொல்லப்பட்டன.

"ஹிட்லர், உங்கள் புருஷர்களையும், மக்களையும், மற்றைய நாட்டினரைக் கொள்ளையடிக்கவும், அடிமைப்படுத்தவும் வேண்டிச் செய்யும் யுத்தத்தில் ஈடுபடச் செய்ததிலிருந்து நான்கு வருஷங்களாகின்றன. ஜெர்மன் பணக்காரர்களுடையவும், மிராசுதார்களுடையவும் உத்தரவின்பேரில் ஹிட்லர் எங்கள் மக்களை அடிமைப்படுத்தவும், எங்கள் தேசத்தைக் கொள்ளையடிக்கவும் விரும்புகிறான். லக்ஷக்கணக்கான உங்கள் கணவன்மார்களும், மக்களும் அந்நிய நாட்டிலே இறந்திருக்கின்றனர். பிற்கால வாழ்க்கையைச் சுகமாய் வாழலாம் என்ற பொய்யான வாக்குகளால் ஹிட்லர் உங்களை யுத்தத்தில் இழுத்துவிட்டான். யுத்தம் சீக்கிரம் முடிந்துவிடும். ஜெர்மானியருக்கே வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு உங்களில் அநேகர் ஹிட்லரை நம்பி அவன் சொற்படி நடந்தீர்கள். ஆனால் நீங்கள் எவ்வளவு வெட்கக்கேடான நிலைமையில் இருக்கிறீர்கள் என்றும், உங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இப்பொழுது அறிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறீர்கள்.

ஜெர்மானிய ஸ்திரீகளே! ருஷ்ய மக்கள் பிறர் நாட்டைக் கவர்ந்துகொள்ளும் எண்ணத்தோடு சண்டையிடவில்லை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால் எங்களுக்குப் புனிதமான ருஷ்யாவைப் படையெடுத்த எந்த எதிரியையும் அவன் சரணடையாவிட்டாலும் சரி, அல்லது நாட்டைவிட்டுத் திரும்பி ஓடாவிட்டாலும் சரி, நாங்கள் அவனை இரக்கமின்றி அழித்துவிடுவோம். ஹிட்லர் கொள்ளைக் கூட்டத்தினரும், ஜெர்மானிய பணக்காரர்களும், முதலாளிகளும் இந்தக் கொடூரமான யுத்தத்தில் உங்களை எவ்வளவு காலம் ஈடுபடுத்த அனுமதிப்பீர்கள் என்று ருஷ்ய ஸ்திரீகளாகிய நாங்கள் கேட்கிறோம். இந்த யுத்தத்தை ஆரம்பித்ததால் ஹிட்லர் பெரியதோர் குற்றத்தை உங்களுக்குச் செய்திருக்கிறான் என்பதை நீங்கள் உணரவில்லையா? எதிர்த்து சண்டையிட்டு அடிமைப்படுத்தும் மக்களுக்கு மட்டும் அல்ல; ஜெர்மானிய தேசத்திற்குமே ஹிட்லர் பெரிய விரோதியாவான்.

## ரோமல் பிடிபடாமல் தப்பிவிட்டான்.

எட்டாம் படைக்கு முன்னால் வேகமாகப் பின்வாங்கும் பொழுது ஒரு சமயம் ரோமல் பிடிபட்டுவிடுவான் போலிருந்தான். ஆனால் அவன் தன்னுடைய மேல் சட்டையை விட்டுவிட்டு அவன் தப்பி ஓடிவிட்டான்.

இந்த சம்பவத்தைப்பற்றி விவரித்தபொழுது பிரிடிஷ் டாங்கிப் படைகள் ரோமலின் தலைமை காரியாலயத்தைத் திடீரென்று தாக்கினவென்று ஒரு இந்தியப்படையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் சொன்னார்.

திடீர் தாக்குதல் ஏற்பட்டபொழுது ரோமல் நடுநடுங்கி உள்சட்டையையும் அரைச் சல்லடத்தை மட்டும் போட்டுக்கொண்டு ஓட ஆரம்பித்தான். அவனுடைய மேல் சட்டையும், கழுத்துக்குட்டையும், இதர சொந்த சாமான்களும், பல் தேய்க்கும் துடைப்பமும் நமது வசமாகின.

இன்னும் ஒரு நிமிஷம் அவன் தாமதித்திருந்தால் அவன் பிடிபட்டிருப்பான் என்று டாங்கியிலுள்ளவர்கள் சொன்னார்கள்.

---

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் **139** (4-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 27- 3-43 | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 6.00 | 31- 3-43 | நார்த்தாமலை ... | மாலை | 7.00 |
| 28- 3-43 | கீரப்பழனி ... | ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி ... | ,, | 7.30 |
| ,, | ஆதூர் ... | ,, | 7.30 | 1- 4-43 | அண்டக்குளம் ... | ,, | 7.00 |
| 29- 3-43 | காரையூர் ... | ,, | 7.00 | ,, | இள்ளனூர் ... | ,, | 7.30 |
| ,, | இடையாத்தூர் ... | ,, | 7.30 | 2- 4-43 | கொன்னையூர் ... | ,, | 7.00 |
| 30- 3-43 | வடவாளம் ... | ,, | 7.00 | ,, | மேலவேகுப்பட்டி. | ,, | 7.30 |
| ,, | செம்மட்டிவிடுதி ... | ,, | 7.30 | | | | |

பிரஸங்கம் **140.** (5-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3- 4-43 | நார்த்தாமலை ... | மாலை | 7.00 | 7- 4-43 | வலையபட்டி ... | மாலை | 7.00 |
| 4- 4-43 | ,, ... | ,, | 7.00 | ,, | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |
| 5- 4-43 | ,, ... | ,, | 7.00 | 8- 4-43 | வெள்ளனூர் ... | ,, | 7.00 |
| 6- 4-43 | பள்ளிவாசல் ... | ,, | 7.00 | ,, | செம்பாட்டூர் ... | ,, | 7.30 |
| ,, | பில்லமங்கலம் ... | ,, | 7.30 | 9- 4-43 | புலியூர் ... | ,, | 7.00 |
| | | | | ,, | கண்ணங்குடி ... | ,, | 7.30 |

**யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.**

| | | | |
|---|---|---|---|
| 27— 3—43 | திருமயம். | 3— 4—43 | நார்த்தாமலை. |
| 28— 3—43 | விராச்சிலை. | 4— 4—43 | ,, |
| 29— 3—43 | விராலிமலை. | 5— 4—43 | ,, |
| 30— 3—43 | வடகாடு. | 6— 4—43 | பேராம்பூர். |
| 31— 3—43 | கீழாநிலை புதுப்பட்டி. | 7— 4—43 | காரம்பக்குடி. |
| 1— 4—43 | ஆலங்குடி. | 8— 4—43 | கீழாநிலை. |
| 2— 4—43 | புதுக்கோட்டை. | 9— 4—43 | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—31-3-43.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஏப்ரல் மீ 3உ [நெ. 140


பிரஸங்கம் CXL.

## பிரிடிஷ் விமானப்படையின் வெள்ளி விழா.

(25-வது வருஷ விழா.—ஏப்ரல் 1, 1943).

ஏப்ரல் மாதம் 1-ம் தேதியன்று நடைபெற்ற பிரிடிஷ் விமானப்படை ஏற்பட்ட 25-வது வருஷாந்திரக் கொண்டாட்டத்திலிருந்து பிரிடிஷ் விமானப்படை முதல் உலக யுத்தம் நடைபெற்றபொழுது வலுவாக உண்டுபண்ணப்பெற்றதென்றும், பிறகு சமாதான காலத்தில், மேநாட்டாரின் ஆயுதக் குறைவு செய்தல் என்னும் ஏற்பாட்டின்படி குறைவுபட்டதென்றும், ஹிட்லர் கொடுமையின் பயனாகவும், இரண்டாவது உலக யுத்தத்தின் காரணமாகவும் இரண்டாவது தடவையாக மிகவும் அதிகமான வலிமையுள்ளதாக மறுபடியும் விருத்தியடைந்து விட்டதென்றும் வெளியாகுகிறது.

1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிரிடிஷ் விமானப்படையே கிடையாது. இதற்குப்பதிலாக 146 ஆபீஸர்களும், 1,079 இதர வேலைக்காரர்களும், 179 விமானங்களுமடங்கிய பிரிடிஷ் பறக்கும் படையும், 130 ஆபீஸர்களும், 700 ஆட்களும், 91 விமானங்களுமடங்கிய பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த விமானப் படையுமிருந்தன.

இந்த 270 விமானங்களில் 100 விமானங்கள் சண்டைக்கு லாயக்குள்ளவைகள்.

1918-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியன்று ஸ்தாபிக்கப்பட்ட பிரிடிஷ் விமானப்படை விருத்தியடைந்து 1918-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் 27,333 ஆபீஸர்களும், 2,63,837 இதர வேலைக்காரர்களும், 22,647 விமானங்களும் அடங்கியிருந்தது.

1914-ம் வருஷத்தில் சிறந்த விமானமென்பது மணிக்கு 73 மைல்கள் செல்லக்கூடியதும் ஒன்பது நிமிஷங்களில் 3,000 அடிகள் உயரச் செல்லக்கூடியதுமான 70 ரெனால்ட் B. E. என்ற விமானம் தான். அதன் கவசங்கள்— துப்பாக்கியும், சுழல் துப்பாக்கியும்தான்.

1918-ம் வருஷத்திய சிலாக்கியமான விமானம் "ஸாப்வித்ஸ்னைப்" என்பது மணிக்கு 130 மைல்கள் செல்லக்கூடியது. 12 நிமிஷங்களில் 15,000 அடிகள் உயரப் பறக்கக்கூடியது. அதில் ப்ரொபெல்லர் வழியாக ஒரு நிமிஷத்துக்கு 1,500 தடவை சுடக்கூடிய விக்கர்ஸ் யந்திர பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன.

### மாதம் 50 விமானங்கள் உற்பத்தி.

1914-ம் வருஷத்தில் விமான உற்பத்தி ஏற்பாடுகள் சிலாக்கியமாக ஏற்படவில்லை. ஆகையால் யுத்தம் ஆரம்பமாகி 12 மாதங்கள் வரையில் மாதம் ஒன்றுக்குச் சராசரி 50 விமானங்கள்தான் கட்டிமுடிந்தன. 1918-ம் வருஷத்தில் யுத்தத்தின் கடைசி 12 மாதங்களில் மாதம் ஒன்றுக்கு சராசரி 2,700 விமானங்கள் கட்டப்பட்டன. 1920-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் 25 பிரிடிஷ் விமானப்படை பகுதிகள் தானிருந்துவந்தன. அவற்றில் 12 பகுதி உள்நாட்டில் வைக்கப்பட்டிருந்தன. 8 படைகள் புதிதாக அமைக்கப்பட்டு வந்தன. எல்லா உத்தியோகஸ்தர்களையும் சேர்த்து 2,800 பேர்கள் அப்படையில் வேலைசெய்து வந்தார்கள்.

1923-ம் வருஷத்திலிருந்த 35 பிரிடிஷ் விமானப்படை பகுதியை உள்நாட்டு பாதுகாப்பிற்காக 52 பகுதிகளாக அதிகரிக்கவேண்டியதென்று முடிவு செய்யப்பட்டது. 1933-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஆயுதக்குறைவு செய்ய வேண்டியதற்காகக்கூடிய மகாநாட்டிலிருந்து ஜெர்மனி விலகிக்கொண்டது. 1934-ம் வருஷம் ஜூலை மாதத்தில் பிரிடிஷ் உள்நாட்டு பாதுகாப்பு விமானப் படையை 52-லிருந்து 75 பகுதிகளாகவும் கடற்படைக்கு உதவியாகவும் அயல் நாடுகளுக்குச் செல்லுவதற்காகவும் உபரியாக 8 பகுதிகளும் தயாரிக்கப்பட்டன.

1935-ம் வருஷத்தில் புதிய ஏற்பாடுகள் நிறுவப்பட்டன. 1937-ம் வருஷத்தில் வஸந்த காலத்திற்குள்ளாக 1,500 முதல்தரமான விமானங்கள் தயாராக வேண்டுமென்ற 1934-ம் வருஷ திட்டம் மாற்றப்பட்டது. 1936-ம் வருஷத்தில் பிரிடிஷ் விமானப்படை விருத்தியடைந்தது. உள்நாட்டுப் பாதுகாப்புக்காக 1,750 விமானங்களும் கடல் படை உதவிக்காக 217 விமானங்களும், 1938-ம் வருஷம் வசந்த காலத்திற்குள் தயாராகிவிடவேண்டுமென்றும், 1939-ம் வருஷத்திற்குள்ளாக அயல் நாடுகளுக்குச் செல்லுவதற்கு 418 விமானங்கள் தயாரிப்பதும் லக்ஷியமாயிற்று. விமானப்படை அதன் பிறகும் அதிகரித்து வந்தது. ஆகிலும் புள்ளி விவரங்கள் ரகசியமாகிவிட்டன. இரண்டு யுத்தங்களுக்கும் மத்தியில் சொல்பமாகயிருந்த பிரிடிஷ் விமானப்படையானது யந்திர சாதனங்களில் சிலாக்கியமாக இருந்தது.

(1) 1931-ம் வருஷத்தில் பிரிடிஷ் விமானப்படை ஷ்னீடர் பதக்கம் பெற்றது. இந்தப் போட்டியிலிருந்து பிரக்கியாதி பெற்ற ரோல்ஸ் ராய்ஸ் மெர்லின் இஞ்ஜின்களின் உற்பத்தி அதிகரித்தது.

(2) 1938-ம் வருஷத்தில் பிரிடிஷ் விமானப்படைக்கு அநேக பீரங்கிகளுள்ள சண்டை விமானங்களைத் தயாரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

(3) R. J. மிச்செல் நிர்மாணித்த ஸ்பிட் பையர் விமானமும், ஸிட்னி காம் உண்டுபண்ணின ஹரிகேன் விமானமும், கட்ட உத்தரவிடப்பட்டது. இவை இரண்டும் 1936-ம் வருஷம் நடமாட ஆரம்பித்தன. ரோல்ஸ்ராய்ஸ் இஞ்ஜின்களுள்ள விமானங்களும், அவைகளிலுள்ள பீரங்கிகளும், சேர்ந்து 1940-ம் வருஷம் பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் வெற்றி பெற்றன. இம்மாதிரியாக நாஸிக்காரர்களின் அக்கிரமத்திலிருந்து அநேக வருஷங்களாக நடைபெற்ற ஏற்பாடுகளின் பயனாக பிரிடனும் உலகமும் காப்பாற்றப்பட்டுவிட்டன.

### நீண்ட நோக்கத்தின் பலன்கள்.

உற்பத்தி சம்பந்தப்பட்டமட்டிலும் பிரிடிஷாரின் நீண்ட நோக்கம் வெளியாகிவிட்டது. விமான உற்பத்திக்காக மோட்டார் தொழில் முறையுள்ள வசதிகள் உபயோகப்படுத்த சிறிய தொழிற்சாலைகள் 1936-ம் வருஷத்தில் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்பொழுது இந்த ஏற்பாடு நாடெங்கும் பரவிவிட்டது. விஸ்தாரமான பிரதேசங்களில் தொழிற்சாலைகளிருப்பதால் அவைகளை எதிரிகள் விமானங்களில் சுலபமாகத் தாக்கமுடியவில்லை. விமானங்களின்



சங்கியையும், ஆபீஸர்களின் விபரங்களும் புது தினுசான விமான உற்பத்திக் கணக்குகளும் ரகசியமானவை. 1943-ம் வருஷத்தில் பிரிடிஷ் விமானப் படையின் திறமை ஒவ்வொரு நாளும் நன்றாய் வெளியாகுகிறது. 1939-ம் வருஷத்திலிருந்து அநேக வகைப்பட்ட சண்டை விமானங்கள் தயாராகியிருப்பதிலிருந்து விமானிகள் யந்திரவேலை நிபுணத்வமும் வெளியிடப்பட்டுவிட்டது. புதிய சண்டை விமானங்கள் பின்வருமாறு: டைபயன்ட், வேர்ல்விண்டு உலகத்திலே முதல்தரமான சண்டை விமானமாகிய போபைடர், உலகத்திலேயே வேகமாகச் செல்லக்கூடியதும் பகலில் சண்டை போடக்கூடியதுமான டைபூன். புதிய வெடி விமானங்கள் பின்வருமாறு. போபர்ட், உலகத்திலேயே வேகம் பொருந்தியதும் பகலில் நடமாடக் கூடியதுமான மஸ்குடோ, ஹாலிபாக்ஸ், மான்செஸ்டர், ஸ்டார்லிங், லங்காஸ்டர், (உலகத்திலேயே முதல்தரமான இரவு வெடிவிமானம்).

---

## வார யுத்தச் செய்திகள்.

### 27—3—43-லிருந்து 2—4—43-வரை.

**ருஷ்யா.**—கடுமையாக ஐந்து மாதங்கள் யுத்தம் நடைபெற்ற பிறகு ருஷ்யாவின் 1,200 மைல்கள் பிராந்தியத்திலும் அமைதி காணப்படுகிறது.

ஸ்மாலன்ஸ்க் பகுதியில் செம்படை வாபெட்ஸ் நதியை அடைந்த பிறகு டாரோகாபஸ் பிரதேசத்தை ஊடுருவிவிட்டது. 18 மாதங்களுக்கு முன் ருஷ்யர்கள் வசமிருந்த பிராந்தியத்திற்கு அவர்கள் இப்பொழுது வந்துவிட்டார்கள். பெயிலிக்குத் தெற்கேயும் வியாஸ்மாவுக்கு வடக்கேயும் ருஷ்யர்களின் முன்னேற்ற வேகம் குறைந்துவிட்டது.

கார்கோவ் முனையில் யுத்தப்போக்கு டானெட்ஸ் நதியின் போக்கை ஒட்டி நடைபெறுகிறது. சுகியெவ் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் இடைவிடாது தாக்கி வருகிறார்கள். பேயலொகிராட் முனையில் எதிரிக்குப் பின் போக்கு ஏற்பட்டது. டானெட்ஸ் நதியைக் கடக்க எதிரிகள் இது வரையில் செய்த பிரயத்தனம் வீணாகப்போய் விட்டன.

காகஸஸ் போர்முனையில் ருஷ்யத் துருப்புகள் ஸ்லாவியான்ஸ்காயாவையும் புரோடாஸ்க்கையும் கைப்பற்றிவிட்டன. நோவாராஸிஸ்க்குக்குச் சமீபத்தில் கிரிம்ஸ்காயாவில் சண்டை நடைபெறுவதாக தகவல் கிடைத்திருக்கிறது.

**டுனீஸியா.**—வார ஆரம்பத்தில் எதிரிகள் வாடி லிக்ஸான் என்னுமிடத்தை ஆக்கிரமித்தார்கள். மாரத் அரணில் இது ஒரு தற்காப்பு ஸ்தலம். இந்த லாபம் எதிரிக்கு நீடித்திருக்கவில்லை. மார்ச்சுமீ 26-ம் தேதியன்று எல்ஹாம்மாவுக்குத் தெற்கே எட்டாம்படை பலமான தாக்குதல் செய்து எதிரி மாரத் அரணைக்காலி செய்து விடும்படியாகச் செய்துவிட்டது. மாரத் அரணும், டௌஜென், மாடமாடா, எல்ஹாம்மா, கேப்ஸ் முதலிய இடங்கள் விழுந்துவிட்டன. எதிரிகள் வடக்கு நோக்கிப் பின் வாங்குகிறார்கள்.

இந்த வாரத்தில் மத்திய முனையில் பாண்டேக்கைக் கைப்பற்றிவிட்டு அமெரிக்கப்படைகள் கெயிர்வானுக்கு 18 மைல்களுக்குள் உள்ள பிரதேசத்திற்கு முன்னேறிவிட்டார்கள். வட பகுதியில் ஜெபல் அயாஸிடுக்குக் கிழக்கேயும் வடகிழக்கேயும் யுத்தம் நடைபெறுகிறது.

**பஸிபிக் யுத்தம்.**—நேச தேச வெடி விமானங்கள் அம்பாயினா நகரத்தையும் துறைமுகத்தையும் தாக்கின. இரண்டு கப்பல்களின்பேரில் வெடிகுண்டுகள் நேராக விழுந்தன.

நியூ கினியாவில் ஓரோ குடாக்கடலில் ஜப்பானிய வெடி விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. 25 விமானங்கள் நஷ்டத்துடன் ஒரு சாமான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

மார்ச்சு மாதம் 26-ம் தேதியன்று ஆட்டுத்தீவுகளுக்குச் சமீபத்தில் ஒரு அமெரிக்கக் கடல் ரோந்துப் படை ஜப்பானியக்கப்பல் கூட்டத்தை எதிர்த்தது. நடவடிக்கைகளின் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

கீழ்க்கண்ட இடங்களில் நேசதேச விமானத் தாக்குதல்கள் ஏற்பட்டன.

உபிலி, ரபால், காஸ்மாடா, லே, ஸலாமுவா, பின்ஸ்ஷேபன், மூபோ, கிஸ்கா, விலா, முண்டா, உகாலி, நாருத்தீவு, கிளாஸ்டர் முனை, பாபோரோ, கால் தீவுகள்.

**சைனு.**—ஹூபேமாகாணத்தில் கிங்மினிலுள்ள ஜப்பானிய விமானத்தை சீன விமானங்கள் தாக்கின. இதற்கு பதிலாக இச்சாங்குக்கு வட பாகத்தில் ஜப்பானியர்கள் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பித்தார்கள். யாங்டீஸ் நதிக் கரையோரமாக சண்டையை நடத்தி நதியின் தெற்குக் கரையிலுள்ள மிச்சட்டை என்னும் நகரத்தை சீனர்கள் கைப்பற்றினார்கள். கிழக்கு ஷான் ஸமஸ்தானங்களில் யுத்தம் மறுபடியும் துவங்கிவிட்டது.

பர்மாவிலுள்ள செங்கடல் பிரதேசத்தில் தெற்கு யூனனிலுள்ள சீன எல்லை சரகத்தில் ஜப்பானியர்கள் ஒரு புதிய தாக்குதல் செய்தார்கள்.

**பர்மா.—மார்ச்சு 25.** கதாவிலுள்ள ரயில்வே ஜங்ஷனையும் மாக்டிலிவிக் கருகிலுள்ள விமான தளத்தையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

அதே நாளில் வங்காளத்தின் தென்கிழக்கு பாகத்திலுள்ள விமான தளத்தை ஜப்பானிய வெடி விமானங்கள் தாக்கின. சொல்பச் சேதம் ஏற்பட்டது. உயிர்ச் சேதம் இல்லை.

**மார்ச்சு 26.**—நாஸவாவிலுள்ள ரெயில்வே ஸ்டேஷனையும், டாங்கோவிலுள்ள விமான தளத்தையும், யேதாசியிலுள்ள ஒரு ரெயில்வே எஞ்ஜினையும், மாங்டா நகரத்தையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

**மார்ச்சு 27.**—அரக்கான் போர்முனையில் காக்ஸ்பஸாரையும் நாப் நதியிலுள்ள கடற்படையையும் வெடி விமானங்களால் ஜப்பானியர்கள் தாக்க முயன்ற பொழுது 22 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. நமக்கு சேதமும் ஆள் நஷ்டமும் சொல்பமாக ஏற்பட்டன.

**மார்ச்சு 28.**—ரெங்கூனிலுள்ள மத்திய நிலயத்தையும் மிங்காலடான் விமான தளத்தையும் அமெரிக்க விமானப்படை வெடி விமானங்களால் தாக்கியது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—3—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவு.—பாலம்—மேற்கு பிரான்ஸிலுள்ள மோர்லே (Morlaix).

துறைமுகம்—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

டூனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

மாரேத் அரண்.

விமானம் இறங்குமிடம்-ஹாமா (Hamma).

எதிரி சேமிப்பு நிலயங்கள்—கேடானா (Ketana)விற்கும் மாரெத் (Mareth) திற்கும் மத்தியில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பான் நாசகாரி—ஸாலமன்ஸ் (Solomons) கடல் (இருமுறை தாக்கப்பட்டது).

நியூ பிரிடனிலுள்ள விமான நிலயம்—காஸ்மாடா (Gasmata).

ஜப்பானியக் கப்பல்—கிளஸ்டர்முனை (Cape-Gloucester), நாமரிபிமுனை (Cape-Namaripi).

விமான நிலயம்.—நியூகினியாவிலுள்ள மடாங் (Madang).



நியூ கினியாவிலுள்ள—பின்ஸ்சாபென் (Finschhafen).

ஜப்பானிய கிராமம்—கைய் (Kai) தீவு.

ஸாலமன்ஸிலுள்ள விலா (Vila), முண்டா (Munda), காஹிலி (Kahili).

ரயில்வே ஸ்டேஷன்—இந்தோ-சைனாவிலுள்ள லோகாய் (Lokay); அக்யாப் (Akyab) பிரதேசம்.

**22—3—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ஜெர்மன் கப்பல் தளம்.—வில்ஹெல்ம்ஷாவென் (Wilhelmshaven).

இலக்குகள் மாஸ்லூயி (Masluis).

லக்ஷியங்கள்.—ஹாலந்து (Holland), வடக்கு பிரான்ஸ் (Northern France).

ஸப்மெரின் தளம்.—பிரான்ஸிலுள்ள செயின்ட் நாஸேர் (St. Nazaire).

டூனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி டாங்கிகளும் கவசமணிந்த கார்களும் எல்ஹாமா (El Hamma).

ஜாரட் (Zarat).

விமான நிலயம்.-மெஸ்ஸௌந (Mezzouna)

கடற்துறை—ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ (Palermo).

துணைக்காவலோடுகூடிய சப்பல்.—ஸிஸிலிக்கும் (Sicily) டூனிஸியாவிற்கும் (Tunisia) மத்தியில். (ஒரு நாசகாரியும், பல கப்பல்களும் மூழ்கின). (8 எதிரி விமானங்களும், 11 நேசதேச விமானங்களும் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமேலுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), ஸாலமூவா (Salamaua).

ஜப்பானிய யுத்த சாதனங்கள்.—பர்மாவிலுள்ள மொகாங் (Moguang), புரோம் (Prome).

எதிரி சைனியங்கள்.—பர்மாவிலுள்ள லாங்சாங் (Laungchaung), கலாசாங் (Kala chaung).

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).

**23—3—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—செயின்டுஜோசப் நீராவி தொழிற்சாலை.—பிரான்ஸிலுள்ள நான்டிஸுக்கு (Nantes) அருகில்.

இரவு.—ரயில்வே லக்ஷியங்கள்-பிரான்ஸ் (ஜெர்மனி).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

டூனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி டாங்கிகள்.—டூனிஸியாவின் வட பாகம்.

கடல் செப்பனிடுந்துறை.—பிஸெர்ட்டா (Bizerta).

எதிரி சைனியங்கள்.—மாரெத் (Mareth) திற்கும் காபெஸி (Gabes)க்கும் மத்தியில்.

எதிரி விமான நிலயம்.-ஸௌஸிக்கு அருகில்.

எதிரிக் கப்பல்கள்—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian Channel).

ரயில்வே தொழிற்சாலைகள், யுத்த சாதனங்கள்—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata), அலியூஷன் தீவிலுள்ள கிஸ்கா (Kiska), நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.

பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung) பிரதேசம்.

**24—3—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே போக்குவரத்து சாதனங்கள்.—வடக்கு பிரான்ஸ் (ஜெர்மனி.)

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

டூனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல் கட்டும் துறைகள்.—பெர்ரிவில்லி (Ferryville); எதிரி விமான நிலயங்கள் எதிரி அரண்களில்; எதிரி வண்டிகள்.—எல்கட்டருக்கு (El Guettar) தென் கிழக்கு.

மாரத்அரண்.

எல் ஹாமா (El Hamma) எதிரி விமான நிலயம்.—ஸ்பாக்ஸ் (Sfax) அருகில்; துறைமுகம்.—ஸிஸிலியில் உள்ள மெஸ்ஸினு (Missina).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமேலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம், விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள ராபால் (Rabaul); ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda); விலா (Vila).

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள டான்கூ (Toungoo); வேவு பார்த்தல்.—கலடான் (Kaladan), மாயு (Mayu) நதிப்பிரதேசங்களில்.

**25—3—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள அபிவில்லி (Abbeville) (நேசதேச சாமான்கள் ஒன்றிற்கும் சேதம் இல்லை).

இரவு.—ரயில்வே லக்ஷியங்கள்—வடக்கு பிரான்ஸ் (Northern France), ஜெர்மனி (Germany).

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி வண்டிகள்.-எல் ஹாமா (El-Hamma) பிரதேசம்.

விமான நிலயம்.—எதிரி அரண்களுக்குப் பின்னல்.

கப்பல் கட்டும் துறைகள்.—ஸௌஸி (Sousse).

எதிரி சேமிப்பு நிலயங்கள்.—தெற்கு டூனிஸியா (Southern Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம் விமான நிலயம்.-நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul); நியூ பிரிடனிலுள்ள யுபிலி (U-Bili); நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

ஸப்ளை ஸ்தலம்.—நியூ கினியாவிலுள்ள ஸாலமுவா (Salamaua).

நகரம், கப்பல்கள்.—அம்பாயினு துறைமுகம் (Amboina harbour); நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda); ஷார்ட் லான்டிலுள்ள காஹிலி (Kahili).

ரயில்வே ஜங்ஷன்.—பர்மாவிலுள்ள காதா (Katha).

விமான நிலயம்.—மெய்க்டிலா (Meiktila).

**26—3—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.-(ஒரு எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

மின்சார நிலயம்.—செயின்ட் லோ (Saint Lo.)

இலக்குகள்.—நார்மண்டி (Normandy).

நீராவி யந்திரங்கள், கால்வாய்ப்படகுகள் மின்சார நிலயங்கள்.-வடக்கு பிரான்ஸ், பெல்ஜியம் (Belgium).

இரவு.—லக்ஷியங்கள்—ரூர் (Ruhr) துறைமுகம்.—டூயிஸ்பர்க் (Duisberg). (6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி சைனியங்கள்.—எல் ஹாமாவை (El Hamma)ச் சுற்றிலும்.

ஸப்ளைகள், விமான நிலயங்கள்.—எதிரி அரண்களுக்கு பின்னல்.

ரயில்வே ஸ்டேஷன்.-செகிரா (Cekhira).

கப்பல் கட்டும் துறைகள்.—ஸ்பாக்ஸ் (Sfax).

மக்னஸி (Maknassi) பிரதேசம்,

எதிரி போக்குவரத்து சாதனங்கள்.-காபெஸ் (Gabes) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

அலுயூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பான் கடற்கரை யுத்த சாதனங்கள்.—முண்டா (Munda).

விமான நிலயம்.— நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata); ரயில்வே ஸ்டேஷன் பர்மாவிலுள்ள முனிவா (Monywa).



விமான நிலயம்.—டான்கூ (Toungoo); ரயில்வே இஞ்ஜின்.—பர்மாவிலுள்ள யெதாஷ (Yedashe); பர்மாவிலுள்ள மாங்டா (Maungdaw)

ஜப்பானுல் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமம் மாயு (Mayu) தீபகற்பம்.

**27—3—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலை, ராணுவ லக்ஷியங்கள்—மேற்கு ஜெர்மனி.

இரவு.—ரயில்வேக்கள், கிரப்ஸ் (Krupps) தொழிற்சாலைகள், இதர லக்ஷியங்கள் பெர்லின் (Berlin).

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean.)

எதிரி டாங்கிகளும் பாதுகாக்கப்பட்ட கார்களும்—காபஸ் (Gabes) பிரதேசம்.

எதிரி சைனியங்கள்.—எல் ஹாமா (El-Hamma) பிரதேசம்.

விமான நிலயம்.—எதிரிகளுக்குப் பின்னல்.

ரயில்வே போக்குவரத்து—ஸிஸிலி.

ருஷ்யா (Russia).

விமானச், சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்—விலா (Vila).

ஸப்ளை தளங்கள்—முண்டா (Munda).

விமான நிலயங்கள்—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), ரபால் (Rabaul).

ஜப்பான் கடற்கரை யுத்த சாதனங்கள்—அலூஷனிலுள்ள கிஸ்கா (Kiska).

கிராமங்கள்—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.

ஜப்பான் சைனியங்கள்–மாயு நதி (Mayu)ப் பிரதேசம்.

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**22—3—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

அமெரிக்க பாதுகாக்கப்பட்ட கார்கள்.—மக்னுஸி (Maknassi) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

பைல்கோராட் (Byelgorod).

**23—3—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

தென்மேற்கு இங்கிலாந்து—(2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியா யுத்தம் நடக்கும் இடங்கள் 8-ம் படை மாரத் அரண்முன்பு.

ருஷ்யா (Russia).

சுயுவ் (Chuyuyev).

**24—3—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

தென்கிழக்கு (England) (2 எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டன).

வட ஆபிரிக்கா (North Africa).

டூனிஸியா யுத்த அரங்கம் முழுவதும்.

ருஷ்யா (Russia).

பைல் கிராட் வடகிழக்கு பாகம்.

**25—3—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

ஸ்காட்லாந்து (Scotland)—வடக்கு இங்கிலாந்து.—(4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டது).

வட ஆபிரிக்கா (North Africa).

அமெரிக்கச் சைனியங்கள்.-மக்னுஸி (Maknassi).

ருஷ்யா (Russia).

ருஷ்ய தளங்கள் டானெட்ஸ் பிரதேசத்தில்.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவிலுள்ள சிட்டகாங் (Chittagong) பிரதேசம்.

விமான நிலயம்.—கூடல்கனூர் (Guadalcanar).

**26—3—43.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமானத்தாக்குதல் பிரிடனில் எங்கும் இல்லை.

டூனிஸியா (Tunisia).

பிரிடிஷ் 8-ம் படை முன்னேறித் தாக்கும் இடங்கள்.

ருஷ்யா (Russia).

ருஷ்யபடை ஸ்மொலென்ஸ்க் முன்னேறும பகுதியில்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம் தெற்கு பெங்கால்.

விமானச் சண்டை.—டைக்காக்லாஸ் (Dyekeackaland) கடல் (ஒரு ஜப்பான் விமானம் சுட்டு தள்ளப்பட்டது).

**27—3—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

(ஒரு எதிரி விமானம் சுட்டுதள்ளப்பட்டது).

இங்கிலாந்தின் தென் கிழக்கு கரையில் ஒரு பாகம்.

டுனிஸியா (Tunisia).

நேசதேச ஸப்ளைகள்.—பிரிடிஷ் எட்டாம் படைக்குப் பின்.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சேனை.—ஸ்மொலென்ஸ்க் (Smolensk) நோக்கிச் செல்லுவன.

தூரக்கிழக்கு (Far East).

**28—3—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் ஒரு இடத்திலும் விமானத்தாக்குதலில்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

விமானத்தாக்குதல் இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள் சகுயுவ் பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

வேவு பார்த்தல்.—கூடல்கனர் (Guadalcanar) பிரதேசம்.

# யுத்தக் குறிப்புகள்.

**யுத்தந்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.** யுத்தமானது சமுத்திரங்களிலும் தரையிலும் நீடித்து நடக்க ஹேஷ்யங்களிருக்கும் பொழுதும், ருஷ்யாவிலும், வட ஆபிரிக்காவிலும் ஜெர்மனி முறியடிக்கப்படாமலும், பஸிபிக் சமுத்திரப் போர்முனையில் ஜப்பான் தோற்கடிக்கப்படாமலுமிருக்கும்பொழுதும் நமது தலைவர்கள் சமாதான முறைகளைப்பற்றிப் பேசுவதும் யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம் செய்யும் விஷயமாக மிஸ்டர் ஈடன் அமெரிக்காவுக்குச் சென்றதும், நோயிலிருந்து சொஸ்தமடைந்து மிஸ்டர் சர்ச்சில் நான்கு வருஷ திட்டத்தைப்பற்றி ஒலி பரப்புவதும், மனித சமூகத்தில் தேசங்களுக்குள் நல்லறிவும் சமாதானமும் ஏற்படவேண்டுமென்று மாடம் சியாங் கை ஷேக் வற்புறுத்துவதும், எல்லாம் விந்தையாகத் தோன்றும்.

ஒன்றுமட்டில் நிச்சயம். இந்த யுத்தத்தில் இறுதியில் வெற்றி நமக்குக் கிடைக்கப்போகிறது என்ற நம்பிக்கை ஊர்ஜிதமாகுகிறது. இரண்டாவதாக யுத்தத்தை இப்பொழுது வெற்றிகரமாக நடத்துவதென்பது, வரப்போகும் காலத்தில் நடைபெறவேண்டிய ஏற்பாடுகளைப்பொறுத்து இருக்கின்றது. வருங் காலத்திய பிரச்னைகளை இப்பொழுதே தெளிவான்வகையில் தீர்க்காவிட்டால் நாம் இப்பொழுது செய்துவரும் தியாகங்கள் வீணாகப் போய்விடும். மேலும் தொத்துவியாதிகள் அடிக்கடி ஏற்படுவதுபோல் யுத்தங்கள் மேல்மேலும் வரா விட்டாலும் மூன்றாவது உலக யுத்தத்திற்கு வழி தேடியது போலாகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**மிஸ்டர் ஈடனின் விஜயம்.** மிஸ்டர் ஈடன் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததின் காரணம் புலப்படவில்லை. அவர் விஷய ஆராய்ச்சிக்காகச் சென்றிருக்கிறாரென்று சொல்லப்படுகிறது. ருஷ்யாவுடன் பிரிடிஷ் அமெரிக்க உறவைப் பலப்படுத்துவது ஒரு காரணமாக யிருக்கவேண்டும். ஸர்வதேசச் சங்கத்தைவிட சிலாக்கியமான ஸர்வதேச இயக்கத்தை ஏற்படுத்துவது மற்றொன்றாகும்.

இம்மாதிரியான ஏற்பாடுகளை இப்பொழுதே நிறுவவேண்டியது அவசியம். ஒவ்வொரு தேசமும், தங்கள் பாத்யங்களைக் கொண்டாடுகின்றன. போலந்தும் ஸெகோஸ்லாவாகியாயும் இவைகளுள் முக்கியமான உதாரணங்கள். சிறிய



தேசங்களெல்லாம் தனிப்பட்ட முறையில் எல்லைச்சரகங்களை நிர்ணயிக்கவேண்டு மென்று மெதுவாகக் கூச்சலிடுகின்றன. ஆகையால் வலிமை பொருந்திய, நிரந்தரமான ஐக்கிய தேசங்களின் சங்கம் ஏற்பட்டு அதன் மூலமாக எல்லாருடைய பாத்யங்களும் நிர்ணயிக்கப்படவேண்டும்.

மேலும் யுத்தமானது எல்லா முனைகளிலும் திடீரென்று முடிவடையப் போவதில்லை. ஒரு இடத்தில் யுத்தம் நடைபெறும், மற்றொரு பிராந்தியத்தில் புனருத்தாரணவேலை நடைபெறும். விடுதலைபெற்ற நாடுகளில் சமாதான முறைகளை ஏற்படுத்த ராணுவம் சக்தியற்றது. அல்ஜீரியாவில் ராணுவ, ஸிவில் அலுவல்களைச் சேர்த்துப்பார்த்ததிலிருந்து விளைந்த சிரமங்களை ஜெனரல் ஈசன் ஹாவர் அனுபவித்திருக்கிறார். சமாதான திட்டங்களை ஐக்கிய தேசத்தார்கள்தான் நிர்மாணம் செய்யக்கூடும்.

வி வி வி வி வி வி வி

**மாடம் சியாங் கை ஷேக்கின் வேண்டுகோள்.** உலகத்தின் வருங்காலப் போக்கு தேசங்களுக்குள்ளும் தேசமக்களுக்கும் ஏற்படக் கூடிய ஒற்றுமையைப் பொருத்திருக்கிறது இதை அடைவதற்கு தேசங்களுக்குள் நல்லறிவு ஏற்படவேண்டும். இதுதான் மாடம் சியாங் கை ஷேக்கின் வேண்டுகோள். தேசங்களுடைய சரித்திரங்களும், கலைகளும், பழக்க வழக்கங்களும் வேறுபட்டிருந்தாலும், அவைகள் ஒன்றுபட்டு பரஸ்பர நல்லுணர்ச்சி யேற்பட்டு சகோதரபாவமும் விருத்தியடையவேண்டும். சர்வதேசசங்கம் ஏற்படுத்தியவர்கள் செய்ததைவிட நாம் சிலாக்கியமான திட்டங்களை ஏற்பாடு செய்யவேண்டும். அக்கிரமம் செய்கிறவர்களைக் கண்டிக்க வேண்டும். சர்வதேச சபையும், அதன் அமுலை நடத்த அதிகாரமும் இனிமேல் கனவாகயிருக்க முடியாது.

வி வி வி வி வி வி வி

**மிஸ்டர் சர்ச்சிலின் நான்கு வருஷ திட்டம்.** பிரிடிஷ் மக்களுக்காக மட்டும் மிஸ்டர் சர்ச்சில் நான்கு வருஷ திட்டத்தை ஒலிபரப்பிய போதிலும் அது மற்ற பிரதேசங்களுக்கும் அன்வயிக்கும். யுத்த சம்பந்தமான—ஆதாவது விமானங்கள், யூ படகுகள், யுத்த களத்தின் கொடுமைகள்—யோசனையை விட்டுவிட்டு வரப்போகும் உலகப் போக்கைப்பற்றியும் அதற்குத் தான்ஞலியன்ற அளவு சேவை செய்யவேண்டு மென்று நினைத்து மிஸ்டர் சர்ச்சில் சிந்தனை செய்ய ஆரம்பித்தார். முதிர்ந்த வயதும் அனுபவமும் ஏற்பட்டிருப்பதால், ஏட்டுச் சொரைக்காயாக ஒரு திட்டம் போடுவது முட்டாள்தனமென்றும் இந்தத் தலைமுறையிலுள்ளவர்கள் பின் தலைமுறைகளுக்கு உரித்ததான திட்டங்கள் ஏற்படுத்துவதெல்லாம் தாக்காலிகமாக ஏற்படவேண்டியதுதானென்றும் வருங்காலப் பொருளாதார நிலைமையினால் இவைகள் பாதிக்கப்படுமென்றும் மிஸ்டர் சர்ச்சில் சுட்டிக்காட்டினார்.

அவர் யோசனைப்படி முதலில் மூன்று பெரிய வல்லரசுகளான, பிரிடன் அமெரிக்கா, ருஷ்யா, இவைகளடங்கிய பொதுவான சங்கம் ஏற்படவேண்டும். இரண்டாவதாக அபராதிகளான ஸமஸ்தானங்களில் ஆயுதங்களின் குறைவு ஏற் படவேண்டும். பெரிய குற்றவாளிகளான அச்சுநாட்டுத்தலைவர்களைத் தகுந்தபடி சிக்ஷிக்கவேண்டும். மூன்றாவதாக ஆக்கிரமிப்பு நாடுகளைத் திரும்பிக்கொடுத்து விடவேண்டும். அந்த பிரதேசங்களில் பஞ்சம் ஏற்படாதபடி தடுத்துவிட வேண்டும். நான்காவதாக, வருங்காலத்தின் க்ஷேமத்திற்காக ஐரோப்பாவில் ஒரு ஸர்வதேச சங்கமும், ஆசியாவில் மற்றொரு சங்கமும் ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்விரண்டு சங்கங்களும் முதலில் ஐக்கிய தேசத்தார்களின் சங்கமாக மாறி இறுதியில் உலகத்திலுள்ள தேசங்களின் பொதுச்சங்கமாகவும் ஏற்படக் கூடும். இவ்விதமாக மிஸ்டர் சர்ச்சிலின் திட்டமானது காரியாம்சையிலும் பிரயோஜனமுள்ளதாகயிருக்கிறது.

பிரிட்டனுடைய உள்நாட்டுப் பிரச்னைகளைப் பற்றி மிஸ்ட்டர் சர்ச்சிலின் யோசனைகளையும், தேசிய நஷ்ட ஈடு, சுகாதாரம், கல்வி, முதலியவை சம்பந்தமாக அவர் செய்த நான்கு வருஷ திட்டங்களைப்பற்றியும் விரிவாக எழுதலாம். அதற்குப் போதிய இடவசதியில்லையென்று நினைக்கிறேன். ஆகிலும் அவருடைய ஒரு அபிப்பிராயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்னதாவது "கல்வியானது பிரபுபாவனையிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். மனிதர்களுக்கிடையே வேறுபட்ட அநேக குணங்கள் காணப்படுகின்றன. எல்லோரையும் ஒரேவகையில் அமைத்து விடமுடியாது. அம்மாதிரி செய்துவிட்டால் உலகத்தில் ருசிகரமான காரியங்கள் நடைபெற முடியாது. ஆகிலும், எல்லோருக்கும் ஒரே விதமான வசதிகள் ஏற்படுத்துவதற்கு நம்மிடம் சக்தியிருக்கிறது." இந்த அபிப்பிராயத்தில் ஸர்வதேசங்களுக்கும் சர்வ ஜனங்களுக்கும் பொதுவான கல்வி பிரச்னையின் அடிப்படையிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**சீனக்கல்வி தூதுகோஷ்டி.** சைனாவும் இதேமாதிரி ஆலோசனை செய்துவிட்டது. யுத்தம் ஆரம்பித்து ஆறு வருஷங்களுக்குப்பிறகு படிப்பாளர்களின் தூதுகோஷ்டியை இந்தியாவுக்குச் சைனா அனுப்பியிருக்கிறது. இந்த கோஷ்டியார்கள் முக்கியமான இடங்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். சைனாவும், இந்தியாவும் பரஸ்பரம் அநேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. எல்லோருக்கும் கல்வி அவசியமென்று சீனா நினைக்கிறது. வசதியுள்ள சிலர் மட்டும் கல்வி கற்று அதிகப்படிப்பில்லாத ஜனசமூகத்தில் வாழ்வதின் விளைவுகளை அகற்றவேண்டுமென்றும் சைனா ஆலோசிக்கின்றது. இந்தியாவைப் போல சைனாவும் அதன் புராதனமான கல்விக் கலையை விருத்திசெய்யவும் நவீன நாகரீகத்திற்கும் யுத்த முறைகளுக்கும் ஏற்றவாறு யந்திரப்பயிற்சியை அளிக்கவும் பிரயத்னம் செய்து வருகிறது. படிப்புக்குத்தனக்கு இருக்கும் அன்புக்கு அறிகுறியாக சீனாவிலுள்ள படிப்பு முதிர்ந்தவர்கள் நாகரீகக் குறைவாகயிருப்பதில்லை.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவிலும், யுத்தத்துக்குப்பின் சீர்திருத்தம்.** இந்தியாவிலும் சீர்திருத்த சம்பந்தமான பேச்சுகள் நடைபெறுகின்றன. மத்திய அரசாங்கத்தில் வைஸிராயின் தலைமையில் ஒரு சபை நிர்மாணம் செய்யப்பட்டு பஞ்சாபில் கியாதி பெற்றவரான கர்னல் பிரயின் ஆலோசகராகவும் அதில், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**யுத்த வீரர்கள் கொண்டாட்ட தினத்தன்று ஹிட்லரின் பிரசங்கம்.** மார்ச்சு 21-ம் தேதி மிஸ்ட்டர் சர்ச்சில் பேசியது போல் ஹிட்லரும் சொற்பொழிவு செய்தான். அதில் வருங்காலத்துக்கு ஒரு திட்டமும் சொல்லப்படவில்லை. அதற்குக் காரணம் யுத்தத்துக்குப்பின் ஜெர்மனி பிழைத்திருக்கும் என்ற நம்பிக்கை ஹிட்லருக்கு இப்பொழுது இல்லை. அட்லாண்டிக் சாஸனம் உபயோகமற்றது என்று அவன் சொல்லுகிறான். 5,42,000 ஜெர்மானியர்கள் இதுவரையில் உயிர் துறந்தார்களாம். நவம்பர் 18-ம் தேதிக்குப் பிறகு இப்பொழுது ஹிட்லர் பேசியபொழுது இந்த மனித நஷ்டம் அதிகம்தான் என்று ஒப்புக்கொண்டான். ஹிட்லர் பேசிய போதிலும் அவனுடைய பேச்சுவன்மையும் அவனுடைய சொற்பொழிவின் காம்பீர்யமும் இந்தப் பேச்சில் காணப்படவில்லை. அந்தச் சொற்பொழிவைக் கேட்டவர்கள் அது சாரமில்லையென்றும், விறுவிறுப்பற்றதென்றும் சொல்லுகிறார்கள். தண்ணீரில் மூழ்கியவனுக்கு முதல் உதவி செய்து உயிர் தப்பியவன்போல ஹிட்லர் பேசினான். "நாம் இருப்பதா, அல்லது இறப்பதா என்பதை நிர்ணயிக்கக்கூடிய இந்த மகத்தான தரை, சமுத்திரம் ஆகாயமளாவிய யுத்தத்தின் முக்கியத்வத்தைப் பற்றி நமது ஜனங்கள் சந்தேகப்பட்டால் நமக்கு வரப்போகும் கஷ்டங்களை அவர்கள் மதித்துப்பார்க்கட்டும்.



"மறுமுறை ருஷ்யாவிலுள்ள மிலியன்கள்கணக்கான ஜனங்கள் நம்மைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ருஷ்யர்களின் தாக்குதல்களிலிருந்து புயல் காற்றில் உமி பறப்பதுபோல் ஓடியிருப்பார்கள்" என்று சொன்னான்.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லரின் கிலி.** கிழக்குப் போர்முனையின் விளைவைப்பற்றி ஹிட்லர் நடுங்குகிறான். நேசநாடுகள் மேற்குப் போர்முனையில் இறங்கி முன்னேறும் பொழுதும், ருஷ்யப் படைகள் ருஷ்யப் பிரதேசத்தைவிட்டு ஜெர்மனிக்குள் புகுந்துவிடும்பொழுதும், பிரிட்டனும், பிரான்ஸும், அமெரிக்காவும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பத்திரமாக விளையாடும்பொழுதும் கடைசியாகப் பிரயத்தனம் செய்ய ஜெர்மானியர்களைத் தயார் செய்து வைக்கவேண்டுமென்றும் ஹிட்லர் ஆசைப்படுகிறான். தன்னுடைய பான்ஸர் படைகள் ருஷ்யாவில் வெண்ணைக்கட்டியைக் கத்தி சுலபமாக வெட்டுவது போல் எளிதில் ஊடுருவிடும் என்று ஹிட்லர் பேசிய காலம் போய்விட்டது.

கோயபல்ஸின் பரிதாபப் பேச்சு கவனிக்கத்தகுந்தது. "இப்பொழுது இருள் மூண்டிருக்கிறது. நாம் இருட்டில் நடமாடுகிறோம். தனிப்பட்ட நக்ஷத்திரங்கள் நமக்கு ஊக்கமளிக்கின்றன. நாம் வெகுகாலம் கஷ்டப்படவேண்டும். ஜெர்மனிக்காக உயிர்துறந்தவர்கள் பகல் வெளிச்சத்தைக் கண்டுவிட்டார்கள். நாம் அந்த வெளிச்சத்தைத் தேடுகிறோம். இறந்தவர்கள் அதை அடைந்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் நாட்களைக் கழித்துவிட்டார்கள். நமக்கு அநேக கஷ்டங்களும், சிரமங்களும் ஏற்பட்டிருக்கின்றன" என்று அவன் சொன்னான்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் நிலை.** மார்ச்சு 21-ம் தேதி செய்த பிரசங்கத்தில் ஹிட்லர் மேலும் சொன்னதாவது:—
"ஜெர்மன் மக்களுக்கு நான் மறுபடியும் ஒரு விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது. நமது உள்நாட்டிலும் ஒரு போர்முனை உண்டாகிவிட்டதென்று நான் சொல்லுகிறேன். யுத்தமுனையிலிருப்பவர்களுக்கு ஜெர்மானியர்கள் ஒத்தாசை செய்வது மட்டுமில்லாமல் ஜெர்மனிக்கு ஏற்படும் தாக்குதல்களையும் சமாளிக்கவேண்டியிருக்கிறது. யுத்த முனையிலுள்ள துருப்புகளைப்போல் உள்நாட்டிலும் தீரத்துடன் எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

இப்பொழுது நாம் ஏராளமாக ஆட்களைச் சேமிக்கவேண்டும் என்று அவன் சொல்லுகிறான். ஆனால் இந்த ஆள் சேமிப்பின் அந்தரங்கம் வேறு. வாரத்தில் 56 மணிகள் வேலை நடைபெறவேண்டும் என்று கோயரிங் போட்டிருக்கும் உத்தரவைக் கண்டு ஜனங்கள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தக் குழப்பத்தை நிவர்த்திக்க ஹிட்லர் பத்து மடங்கு அதிகமான கொடுமையை விளைவிக்கவேண்டும். இதற்காக நாட்டுப்பாதுகாப்புப்படைகளும் நகரப் பாதுகாப்புப் படைகளும் ஏற்பாடாகி இருக்கின்றன. அவர்கள் அபாயமேற்படும் பொழுது போலீஸார்களுக்கு உதவியாக வேலைசெய்யவேண்டும். ஹிட்லரின் வீண் பெருமைப் பேச்சுக்குப்பின்னால் ஜெர்மனி அதோகதியை அடைவது நிச்சயம் என்ற உணர்ச்சியும் தற்பொழுது உள்ள ஆட்சி சீக்கிரம் அழிந்துவிடுமென்ற பயமும் ஜெர்மானியர்களிடம் குடிகொண்டிருப்பதினால்தான் மேலே சொல்லிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. டோனியர்கள் புராணக் கதையின்படி, இதுதான் ஹிட்லரின் வேதம், ஜெர்மனியானது தீப்பற்றி எரிந்துவிடும்.

வி வி வி வி வி வி வி

**போல்ஷிவிக் அபாயம்.** ஹிட்லரின் அதிகாரத்திற்கு அடிப்படையான போல்ஷிவிஸத்தை அழிக்க வேண்டுமென்ற எண்ணத்தை தன் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்ளவும் ஹிட்லர் உபயோகப்படுத்த ஆரம்பித்துவிட்டான். போல்ஷிவிஸத்தினின்றும் அபாயம் ஏற்படுமென்று சொல்லி ஜெர்மனியில் நாஸிக் கக்ஷி ஏற்பாடாயிற்று. இதே

போல்ஷிவிக் அபாயத்தைச் சுட்டிக்காட்டியதால்தான் பிரெஞ்சுக்காரர்களின் மனோநிலை 1940-ம் வருஷத்தில் குன்றிவிட்டது. இந்தப் பூச்சாண்டியைக் காண்பித்துத்தான் ஹிட்லர் தன்னுடைய பரிவாரங்களைச் சேர்த்தான். அதேமாதிரி மறுபடியும் பறைசாற்றி இந்த உலகத்திலிருந்து போல்ஷிவிக் பூச்சாண்டியை அப்புறப்படுத்தியதற்கு ஐரோப்பாவும், பிரிடனும் வருங்காலத்தில் ஜெர்மனிக்கு வந்தனோபசாரம் செலுத்தும் என்று ஹிட்லர் கர்ஜிக்கிறான்.

ஆகிலும் இந்த தந்திரத்தினாலும் சமாதான புரட்சியினாலும் பிரிடன் ஏமாந்து போய்விடாது. இப்பொழுது போல்ஷிவிக் அபாயமேயில்லை என்று பிரிடனுக்குத் தெரியவரும். ஸ்டாலின் மனோநிலையை அறிந்துகொள்ளுவதற்கு பிரிடனுக்கு யேற்பட்ட சந்தர்ப்பங்கள்போல மற்றொருவருக்கும் கிடைத்ததில்லை. இரண்டு வருஷ காலங்களாக பிரிடிஷாரும் ருஷ்ய அரசாங்கமும் நட்புடன் ஒத்து வேலை செய்து வந்திருக்கிறார்கள். அதன் மூலம் பரஸ்பர நல்லறிவும் பரஸ்பர மதிப்பும் அதிகரித்திருக்கிறது. பொது உடமைக்கொள்கை எப்படியிருந்த போதிலும் ஸ்டாலினும் அவனுடைய சகாக்களும் போல்ஷிவிஸத்தை மற்ற நாடுகளில் பிரசாரம் செய்வதாகவோ அல்லது பரவச் செய்வதாகவோ அபிப்பிராயப்படவில்லை.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனை.** யுத்த வீரர்கள் தினத்தன்று ஹிட்லர் சொன்னபடி ருஷ்யப் போர்முனையில் நிலைமையை சமாளித்து விட்டோமென்று ஹிட்லர் நினைத்துவிட்டான். கார்காவைத் திரும்பப் பிடித்ததிலிருந்து டானட்ஸ் நதி பிரதேசத்தில் ஜெர்மனியின் நிலை வலுவடைந்து விட்டது. நீபர் நதியை நோக்கிச் செல்லும் ருஷ்யாவின் செம்படையின் வேகம் தடைபட்டுவிட்டது. ஆகிலும் போர்முனை பூராவிலும் நிலைமை ஜெர்மனிக்குச் சாதகமாகிவிட்டதென்று நம்பிக்கைப்படுவது தகாத காரியம். தெற்கேயும் மத்தியத்திலும், வடக்கு பாகத்திலும் கோரமான போர்கள் நடைபெறுகின்றன. ஸ்மாலன்ஸ்க் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது. மாஸ்கோவை நோக்கியிருந்த முன்னணி ஸ்தலம் அழிவுபட்டுவிட்டது. இல்மென் ஏரிக்குத் தெற்கிலும் குபான் பிரதேசத்திலும் ருஷ்யர்கள் முன்னேறுகிறார்கள். சென்ற வருஷத்தில் இருந்ததைவிட இப்பொழுது நிலைமை மாறுபாடடைந்திருக்கிறது. 1942-ல் இருந்த பிரதேசத்திலிருந்து மேற்கே 400 மைல்களுக்கு ஜெர்மானியர்கள் துறத்தப்பட்டுவிட்டார்கள். எல்லா யுத்தப்பிராந்தியங்களிலும் ஓய்வு இல்லாமலும் திருத்தி அமைத்துக்கொள்ள அவகாசம் கொடுபடாமலும் ஜெர்மானியர்கள் இடைவிடாது தாக்கப்படுகிறார்கள்.

ஒரே சமயத்தில் கார்கவ் பிரதேசத்திலும் ஸ்மாலன்ஸ்க் பிரதேசத்திலும் நடைபெற்று வரும் ருஷ்யர்களின் முக்கியமான முன்னேற்ற யுத்தத்தைப்பற்றி லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் கியாதி பெற்ற வியாக்யானியான காப்டன் லிடில்பால்ஸ் பின்கண்டவாறு ஒலிபரப்பியிருக்கிறார் :—

பெரிய யுத்தத்தில் சண்டை போடும் இருதரப்பாரும் ஒரே யுத்தமுன்னணியில் அவரவர்கள் முன்னேற்ற யுத்தம் செய்வது அபூர்வமானது. சாதாரணமான அனுபவத்திலிருந்து வெற்றிகரமாக முன்னேறித்தாக்கும் எதிரியின் பலுவைக்கண்டு தோல்வி பெற்று வரும் வல்லரசு தன்னுடைய யுத்தத்தை நிறுத்திவிடுவது சகஜம். ஆனல் ருஷ்யப் போர்முனையில் தெற்குப் பகுதியில் ஜெர்மன் முன்னேற்ற வேகம் மிகவும் வெற்றிகரமாகவும் வலுவுள்ளதாகவும் ஆகிவிட்டது. ஆகிலும் மத்தியப் போர்முனையில் ருஷ்யாவின் முன்னேற்ற வேகத்தை இந்த நிகழ்ச்சிகள் குலைந்துவிட்டதாகத் தெரியவில்லை. மேலும் மத்திய முனையில் தான் ருஷ்யாவின் முக்கியமான முன்னேற்ற வேகம் ஏற்பட்டிருந்தபோதிலும் வடக்குப் பகுதியிலும் முக்கியமாக இல்மன் ஏரிக்குத் தெற்கே செம்படை வலுவாகத் தாக்குதல் செய்து வருகிறது.

போர்முனையின் விசாலமான பரப்புத்தான் இவைகளுக்குக் காரணம். தூர தேசங்களிலுள்ள ஸ்தலங்களுக்குத் துருப்புகளைக் கொண்டுபோவது சிரமசாத்ய



மானது. மெதுவாக நடைபெறக்கூடியது. தெற்குப் பகுதியில் ருஷ்யர்களுக்குப் படைபலக் குறைவும் ஆயுத பலக்குறைவும் ஏற்பட்டதற்குக் காரணம் யுத்த முனைகளுக்கு தளவாடங்களைக் கொண்டுவருவதற்கு இயலாதுதான். ஜெர்மானியர்கள் பின்வாங்கியபொழுது நாசம் செய்துவிட்டுப்போன டான் நதியின் மத்திய பாகத்திலுள்ள 80 மைல்கள் கொண்ட இருப்புப் பாதைகளையும் 17 பாலங்களையும் நிர்மாணம் செய்வதற்கு ருஷ்யாவிற்கு ஒரு மாத காலம் ஆகிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**டுனிஸியப் போர்முனை.** எட்டாம் படை முன்னேற ஆரம்பித்து விட்டது. ஆகிலும் அது வேகமாக முன்னேறிவிடும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. இயற்கையாகவே வலுவாயிருந்த மாரத் அரண் அதிகமாக பலப்படுத்தப்பட்டிருக்கிறது. எல்அலமீனைப்போல இந்த மாரத் அரணை ஊடுருவிச் செல்லுவதற்கு 8-ம் படைக்கு அதிக நாட்கள் பிடிக்கும். டுனிஸியப் போர்முனையானது (L) எழுத்தைப் போன்றது. நேசநாட்டுத் துருப்புகள் செங்குத்தான பாகத்துக்கு வெளியேயும் மட்டமான பாகத்திற்கு வெளியேயும் ஜெர்மன் படைகளைச் சுற்றி வளைத்து நிற்கின்றன. (L) வளைவுக்கு எதிர்ப்பக்கத்தில் லா கிளாரேயின் துருப்புகளும் விலாப்பக்கத்திலும் பின்பக்கத்திலும் பிரிடிஷ் 1-ம் படையும் சூழ்ந்து நிற்கின்றன. நேசநாடுகளின் யுத்த தந்திரப்படி மத்திய பாகத்துக்கு எல்லாப்படைகளும் முன்னேறி எதிரியை நன்றாய் சுற்றி வளைத்துவிடும். முன்னேற்ற யுத்தம் ஆரம்பிக்குமுன் ஜெனரல் மாண்ட்கோமரி பின்கண்டவாறு பேசியிருக்கிறார். நேசநாடுகளின் முன்னேற்ற வேகம் தடைபடாது. மாரத் அரணில் நம்மை எதிர்த்து நிற்கும் எதிரியை எட்டாம்படை அழித்துவிடும். பிறகு சேப்ஸ் இடைவெளி வழியாக முன்னேறி வடக்கு முகமாக ஸ்பாக்ஸ், ஸௌஸி, டுனிஸ் முதலிய இடங்களை நோக்கிச் செல்லும். டுனிஸ் பிடிபடும் வரையிலும் எதிரி யுத்தத்தை நிறுத்திவிடும் வரையிலும் அல்லது எதிரி சமுத்திரத்தில் மூழ்கும் வரையிலும் யுத்தத்தை நாம் நிறுத்தப் போவதில்லை. யுத்தம் செய்து உயிர்துறக்கவேண்டுமென்று ரோமலுக்கு ஹிட்லர் உத்தரவு செய்திருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**அரக்கான் யுத்தம்.** மத்திய சட்ட சபையில் அரக்கான் யுத்தமானது இந்திய மக்களை திட்டப்படுத்துவதற்குத் தான் தொடரப்பட்டதென்றும் அதில் ராணுவ முக்யத்வம் ஒன்றுமில்லையென்றும் மனிதர்கள் மரணமடைந்ததும் சிதைப்பட்டதும் ஜனங்களிடம் உணர்ச்சி உண்டாக்குவதற்குத்தானென்றும் விஷயமாகச் சொல்லப்பட்ட பேச்சுக்கு உதவி சேனாதிபதியான ஸர் ஏ ஆலன் ஹார்ட்லி சரியான பதிலுரைத்தார். இந்தியாவில் தனக்கு ஏற்பட்ட 40 வருஷங்கள் அனுபவத்தில் இம்மாதிரியான அபாண்டமான கதையை அவர் ஒரு பொழுதும் கேட்டதில்லையென்றும் சொன்னார். அரகான் பிரதேசத்தின் பூகோள அமைப்பையும் சரித்திரத்தையும் நன்கு அறிந்தவர்கள் இம்மாதிரி அசட்டுத்தனமான புகார் செய்திருக்கவேமாட்டார்கள். அரகானில் செய்த யுத்தத்தின் போக்கு மிதமானது. இந்தியாவின் தற்காப்புக்காக நடைபெற்றது. முடிந்தவரையில் எதிரிக்கு வேலை கொடுக்கத்தான் யுத்தம் நடத்தப்பட்டது.

மார்ச்சு 2-ம் தேதியில் டைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் பர்மாவிலும், இந்திய எல்லைச் சரகங்களிலும் தெற்கு பஸிபிக் சமுத்திரத்திலும் நடைபெற்றுவரும் யுத்தப்போக்கைப்பற்றித் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

"பலமாகவும் தொடர்ச்சியாவும் எதிர்ப்பு யுத்தம் செய்வது இலாக்கியமானது. தெற்கு சமுத்திரங்களிலும் பர்மா போர்முனைகளிலும் எதிரி முன்னேறித் தாக்குவதைத் தடுப்பதற்கு இதுதான் சிறந்த முறை. இதில் வெற்றி பெற்றால் ஜப்பானுடைய விமான பலமும் கடல் பலமும் குறைந்துவிடும். ஆஸ்திரேலியாவினுடையவும், இந்தியாவினுடையவும் தளவாட உற்பத்திகளின் அபிவிருத்திக்கு சாதகம் ஏற்படும். ஜப்பான் முன்னேற ஆரம்பித்தால் மேலே சொல்லிய இடங்களின் யுத்த முயற்சிகளுக்கு பாதகமேற்பட்டுவிடும்.

மேலும் பெரிதும் சிறிதுமான அநேக தீவுகளை படை பலத்தைக்கொண்டு பாதுகாத்துவரும் வேலையில் ஈடுபட்ட ஜப்பானின் யுத்த ஏற்பாடுகளுக்கு நமது எதிர்ப்பு யுத்தம் அதிகச் சிரமத்தை உண்டுபண்ணும்.

வி வி வி வி வி வி வி

**பறக்கும் புலிகள்.** பிரிகேடியர் சென்னல்ட் என்பவர் சமீபத்தில் செய்த சொற்பொழிவிலிருந்து, சைனாவின் விமானப்படையின் மேன்மைக்கு அமெரிக்கர்கள் எவ்வளவு தூரம் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்பதை எடுத்துக்காட்ட சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது. பத்து வருஷங்களுக்குமுன் சைனாவில் முதல் தடவையாக நவீன முறையில் விமானிகள் பள்ளிக்கூடத்தை கர்னல் ஜோவிட் என்பவர் ஏற்படுத்தினார். அமெரிக்கர்கள் வந்து நிங் சைனாவிலுள்ள விமானிகள் பள்ளிக்கூடத்தை முதல்தரமாகச் செய்து சைனாவின் ஆகாய விமானப்படை பலத்துக்கு ஊக்கம் மூட்டக்கூடிய நிலயமாகவும் செய்துவிட்டார்கள்.

சைனாவின் விமானப்படையில் அமெரிக்க விமானப்படைகள் அல்லது சியாங் கை ஷேக்கின் பறக்கும் புலிகள் முக்கியமான பகுதி. அமெரிக்கப் படையை உண்டுபண்ணியவர் கிஷேர் சென்னல்ட் என்பவர்.

அமெரிக்க விமானப்படை விமானிகள் 250 பேர்கள்தான். ஒவ்வொரு மனிதனும், விமானியும் தரைப்படையைச் சேர்ந்தவனும் நல்ல தேர்ச்சி பெற்றவன். சைனாவிலும், பர்மாவிலும் இவர்கள் செய்திருக்கும் வேலைகளை கவனித்தால் இவர்களின் திறத்தின் மேன்மை நன்று விளங்கும். அமெரிக்க வாரப் பத்திரிகையில் 1942-ம் வருஷம் ஜூலை மீ 6-ம் தேதியன்று பின்கண்டவாறு வெளியிடப்பட்டிருக்கிறது. "தூரக்கிழக்கில் ஆறு மாதங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பறக்கும் புலிகளுக்கு அபரிமிதமான புகழ் கிடைத்திருக்கிறது. 50 விமானங்களிலிருந்துகொண்டு அவர்கள் ஆயிரக்கணக்கான ஜப்பானியத் துருப்புகளையும் சுமாராக 550 விமானங்களையும் அழித்துவிட்டார்கள். அமெரிக்க விமானி ஒருவர் இறந்தால் 100 ஜப்பானிய விமானிகள் உயிர் துறந்தார்கள்." 1942-ம் வருஷம் ஜூலை மாதத்தில் 4-ம் தேதியன்று அமெரிக்க விமானப்படை கலைக்கப்பட்டது. சில விமானிகள் அமெரிக்காவுக்குத் திரும்பிவந்து, அவர்களுக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட அமெரிக்க விமானப்படையின் 23-வது பகுதியில் சேர்ந்து கொண்டார்கள்.

தூரக்கிழக்கில் நேசநாடுகளின் நடவடிக்கைகள் வலுவடைவதற்கு மற்றொரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. ஜெனரல் ஸ்டில்வெல் தலைமை காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்டதில் சைனாவின் தளங்களிலிருந்து புறப்பட்டு நடவடிக்கை செய்வதில் அமெரிக்க பதினான்காவது விமானப்படைதான் ஈடுபட்டிருக்கிறதென்றும் தெரிவருகிறது.

அமெரிக்க விமானப்படைக்கு ஏற்பட்டிருக்கும் மூன்று விதமான அலுவல்கள் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை. அவையாவன: எதிரியின் முக்கியமான லக்ஷியங்களை வெடிகுண்டுகளால் தாக்குவது, சில பிராந்தியங்களில் சீனத் துருப்புகளுக்கு தரையில் உதவியளிப்பது. பர்மா ரஸ்தாவுக்குப் பதிலாக தாத்காலிகமாக விமானங்கள் மூலமாக சைனாவுக்கு ஸப்ளைகள் கொண்டுபோவதற்கு தற்காப்புச் செய்வது.

வி வி வி வி வி வி வி

**மதராஸ் யுத்த முயற்சி.** மதராஸ் மாகாண யுத்தக் கமிட்டியின் கூட்டத்தில் வெளியிட்டது போல யுத்த சேவையில் மதராஸ் மாகாணமும் ஒரு பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் யுத்த நிதித்தொகை 2,22,56,028 ரூபாய்கள். யுத்தக் கடனுக்காகவும் தற்காப்புப் பத்திரங்களிலும் ரூ 1,55,95,624 செலவிடப்பட்டிருக்கிறது. மதராஸ் மாகாணத்திலிருந்து 5 விமானப்படை பகுதிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. செஞ்சிலுவைக்கு 2 லக்ஷம் ரூபாய்களும், துருப்புகளுக்கு வசதியளிப்பதற்காக 4 லக்ஷம் ரூபாய்களும் நன்கொடையளிக்கப்பட்டன. 1,28,287 மனிதர்கள் யுத்தத்துக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.



**புதுக்கோட்டை ஸமஸ்தானமும் செஞ்சிலுவை நிதியும்.** புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலிருந்து இந்திய செஞ்சிலுவை நிதிக்குப்பின் கண்ட விவரப்படி ரூ 8,000 கொடுக்கப்பட்டிருக்கின்றது.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1943-ம்வருஷத்திய 'வி' டயரி லாபத்திலிருந்து ... | 3,500 | 0 | 0 |
| புதுக்கோட்டை யுத்த நிதியிலிருந்து ... | 1,500 | 0 | 0 |
| சமஸ்தான நிர்வாகி ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன் ஹாம், அவர்கள். | 1,000 | 0 | 0 |
| தேசிய யுத்த முன்னணி நிலயம் சீப் ஆர்கனைசர் மூலம் டிராமா வசூல். | 750 | 0 | 0 |
| மேற்படியார் 9 நகரத்தார்களிடம் வசூல் ... | 900 | 0 | 0 |
| புதுக்கோட்டை முனிஸிபாலிடி ... | 200 | 0 | 0 |
| புதுக்கோட்டை டவுன் பாங்கி ... | 150 | 0 | 0 |
| | 8,000 | 0 | 0 |

வி வி வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் விறகு கட்டுப்பாடு.** உத்தரவு அன்னியில் சவுக்கு விறகையும் மற்ற மொரும்புகளையும் சமஸ்தானத்தை விட்டு அனுமதியின்று வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று ஈ-தர்பார் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

---

## அமெரிக்காவுக்கு மிஸ்ட்டர் ஈடன் விஜயம்,

(வெர்னன் பார்ட்லெட்).

அமெரிக்காவுக்கு மிஸ்ட்டர் ஈடன் விஜயம் செய்ததிலிருந்து உடன் காலத்திலேயே ஆச்சரியகரமான முடிவுகள் ஏற்பட்டுவிடுமென்று நம்புவதற்கு இடமில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது, இம்மாதிரியான விஜயங்கள் ஐக்கிய நேசதேசத்தார்களுக்குள் பரஸ்பரம் சாதாரணமாக நடைபெறவேண்டிய மரியாதைகளென்றும் அவசரமான ஏற்பாடுகள் செய்வதற்காக மட்டும் இந்த விஜயங்கள் ஏற்படக்கூடாதென்றும் பிரிடிஷ் அரசாங்கத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள். இரண்டாவது, யுத்தத்திற்குப் பிறகு பிரிடிஷாரின் அயல் நாட்டுக் கொள்கை எப்படியிருக்கும் என்பதைக் குறித்து பிரிடிஷ் அரசாங்க சபை என்ன முடிவுக்கு வந்திருக்கிறதென்றும் மிஸ்ட்டர் ஈடனுக்குத் தெரியாது.

ஈடன் அமெரிக்காவுக்குச் சென்றது ஆராய்ச்சி செய்வதற்குத் தான். ஐரோப்பாவுக்கு ஸ்வதந்திரம் அளிக்கும் முறையை ஐரோப்பாவை புனருத்தாரணம் செய்யும் ஏற்பாடாக மாற்றவேண்டிய விஷயமாக அன்னிய நாட்டுக் காரியாலயத்தில் உபயோகமுள்ள அநேக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின. தனிப்பட்ட ஒரு தேசத்தில் தற்பொழுது இருக்கும் நிர்வாகத்திலுள்ளவர்களுடன் சமாதானம் பேசுவதா அல்லது பூரவாக மாற்றியமைக்கவேண்டியதா என்ற பிரச்னையை பிரிடிஷ் நிர்வாக சபை தான் தீர்மானம் செய்யவேண்டும்.

சில பிரதேசங்களில் தற்போதிருக்கும் நிர்வாகத்தை ஆக்ஷேபிக்கிற முக்கியஸ்தர்கள் சொல்பமாகயிருக்கிறார்கள். சில இடங்களில் ஐரோப்பா கண்டத்தில் நேசதேசத் துருப்புகள் இருக்கவேண்டிய அவசியத்தை முன்னிட்டு தற்போதிருந்துவரும் நிர்வாகத்தையும் நிர்வாகிகளையும் நேசநாட்டாரின் கடுமையான மேல் பார்வையில் வைத்துவிடுவது ஞாயமாகத்தோன்றுகிறது. இன்னும் சில இடங்களில் பாஸிஸ்டு விஷம் நன்றாய் பரவியிருப்பதால் பூரா ஆட்சியையும் திருத்தியமைத்தால் தான் அந்த நாட்டிற்கும் ஐரோப்பாவுக்கும் சமாதானம் நிலைப்பதற்கு ஹேதுவாயிருக்கும்.

இம்மாதிரியான விஷயங்களைப்பற்றித் தான் மிஸ்டர் ஈடன் கலந்து பேச வேண்டும். பாஸிஸ்ட்டு கொள்கைகளை வளர்ச்சி செய்யக்கூடிய அனுகூலங்களை அழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துவரும் ஜனாதிபதியைச் சேர்ந்தவர்களுக்கும் பொது உடமை திட்டத்தைக் கண்டு பயந்து குயிஸ்லிங்குகளோடு சமாதானமும் பேரமும் செய்யவேண்டுமென்று உத்ஸாகப்படுத்திவரும் அமெரிக்க உத்தியோக இலாகாக்களிலிருப்பவர்களுக்கும் அபிப்பிராய பேதங்களிருப்பதையும் ஈடன் காணக்கூடும்.

பிரிடிஷ் அரசாங்க சபையிலுள்ள மற்ற எல்லா மந்திரிகளையும்விட மிஸ்டர் ஈடனுக்கு ருஷ்யாவைப்பற்றி அதிகம் தெரிந்திருப்பதால் அமெரிக்காவிலுள்ள இரண்டு கக்ஷிக்காரர்களுக்குமிடையேயுள்ள வித்தியாசங்களை அவர் சரிப்படுத்தக் கூடும்.

ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் அமெரிக்காவுக்கு ஈடன் செய்த விஜயத்தின் மூலம் கவலைக்கு இடமேற்படும். ஐரோப்பியர்களில் சிலர் ருஷ்யாவைக் கண்டு பயப்படுகிறார்கள். பொது உடமை பூதத்தினின்றும் இந்த உலகத்தை ரக்ஷிக்க வந்திருக்கும் ஸெயிண்ட் ஜார்ஜ் என்று ஹிட்லரை ஸ்தோத்திரம் செய்து ஜெர்மானியர்கள் பிரசாரம் செய்த போதிலும் ஹிட்லரின் பிரயத்தனம் வீணாகப்போய்விட்டதென்று அவர்கள் அறிவார்கள். பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் அமெரிக்கப் படைகள் இறங்கியதிலிருந்து ஐரோப்பாவிலுள்ள பல ஜாதியார்களின் மனோபீஷ்டத்துக்கு எதிரிடையாக அமெரிக்க நாடுகள் திட்டங்கள் போட்டுவிடுமோவென்றும் அம்மாதிரி செய்துவிட்டு சமாதான உடன்படிக்கையின் ஷரத்துகள் நடைபெறுவதற்குத் தன்னுடைய பொறுப்பை மறுத்துவிடுமோ வென்றும் மற்ற ஐரோப்பிய நாட்டார்கள் பயப்படுகிறார்கள்.

எனவே, பூகோள அமைப்பிலும் ராஜீய முறையிலும் இரண்டு பெரிய நாடுகளுக்கும் மத்தியில் பிரிடன் நடு நிலைமை வகிப்பதால் இதற்கு முன்னிருந்ததைவிட ஐரோப்பாவில் பிரிடனுக்கு அதிகச் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது.

---

## எட்டாம்படை தாக்குவதற்குத் தயாராகுகிறது.

### ஜெர்மனியின் ஆபிரிக்கச் சைனியங்கள் நாசமாகிவிடும்.

(நியூஸ் கிரானிகிள் மார்ச்சு 14).

---

மாரெத் அரணில் இருக்கும் ரோமலின் 'தற்கொலைப்படை', நிச்சயம் ஏற்படும் என்று உணர்ந்திருக்கிற எட்டாம்படையின் தாக்குதல்களை எதிர்க்க பகல், இரவு எல்லா நேரங்களிலும் அத்தாக்குதல்களைச் சமாளிக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறது. தாக்குதலைத் தாமதிக்கச்செய்த பிரயத்தனம் வீணாய்ப்போன பிறகுதான் ரோமலின் படை எதிர்ப்புக்குத் தயாராகிறது.

அவர்களுக்கு அழிவு நிச்சயம் என்பது உணர்ந்திருக்கிறார்கள். பருவ காலத்தில் இவர்களுக்கு ஏற்படப்போகும் தோல்வியும் சேதியும் இப்பொழுதே அவர்களுக்குத் தெரியும். ஹிட்லரும், முஸோலினியும் ரோமலின் படையை கணக்கிலிருந்து நீக்கி விட்டதாகவும் அறிவார்கள்.

ஜெர்மானியர் ஆபிரிக்கச் சைனியங்களையும், எட்டாம் படையின் பழைய விரோதிகளான லேசான, ஆனால் உறுதியுள்ள ,90-ம்படையும் அலமேயின் யுத்தத்தில் நசுக்கப்பட்ட போதிருந்த மனோ தைரியம் இப்பொழுது அவர்களுக்கு இல்லாவிட்டாலும் திரும்பி ஓடும்போது குன்றுவரையிலும் சண்டை செய்துகொண்டே தான் பின் வாங்குவார்கள். இந்தச் சைனியத்தின் மனோ தைரியமும், அதே யுத்த அரங்கிலே யுத்தம் செய்யும் மற்ற ஜெர்மன் சைனியத்தைப்போலவே, மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. உணவுப் பங்கீடும் தினச்சம்பளமும் கால நிலைமைகளும் மிகவும் மோசமானதாகயிருப்பதால், சைனியங்களில் பலர் நேசநாடுகளிடம் பிடிபடத்தயாராகயிருக்கிறார்கள்.



சண்டையில் ஈடுபட்ட மீதமுள்ளவர்கள் டூனிஸியாவில் வளைக்கப்படுவார்கள். அவர்கள் தப்பிஓட நினைக்கமுடியாது. ஜெர்மானியர் தாக்குதல்களிலே வைத்த முக்கியத்வம் அதிகமானதென்றும் ஆகையால் அதைக் குறித்து அதனால் ஏற்பட்ட தோல்விகளால் அது போலவே அதிகமாக ஜெர்மானியர்களுடைய மனோ நிலையைக் குலைக்குமென்பது நிச்சயம்.

பெரிய தாக்குதலுக்கு முன்னே ஜெர்மன் பான்ஸர் கிரனேடியர் படையின் தளகர்த்தர் ஒருவர் படைகளை சுற்றிப்பார்த்து "நீங்கள் எட்டாம்படையை எதிர்த்து ஒருமுடிவான போரை நடத்தப் போகிறீர்கள், அதில் நாம் கட்டாயம் வெற்றிபெறவேண்டும்" என்று சொன்னார்.

பிரிடிஷாரின் பீரங்கிகள் ஜெர்மானியர்களைத் தாக்க ஆரம்பித்தன. அக்குண்டுகளின் பயங்கர சப்தங்களைக்கேட்டு இதாலியர்கள் பதுங்கும் பள்ளங்களில் 48 மணி நேரம் ஒளிந்துகொண்டிருந்தனர். ஏனெனில் எல் அலமீன் தாக்குதலை அவர்கள் மறக்கவில்லை. சென்ற செப்டம்பர் மாசத்திலே நடந்த இந்தத் தாக்குதல் ஒருவாரம் நடந்தது. அதன்பின் எட்டாம் படையின் சேனாதிபதி மாண்ட்காமெரி, ரோமலும் ஜெர்மன் சைனியங்களும் தோல்வியடைந்து ஓடின என்று அறிவித்தார்கள். இத்தாக்குதலிலோ 24 மணி நேரத்திலேயே ஜெர்மானியர்கள் தோல்வியடைந்து பின்னடைய ஆரம்பித்தார்கள். இவ்வாறு எட்டாம் படை தாங்கள் எதிர்பார்த்த நேரத்திற்கு முன்னேயே ஜெர்மன் சைனியங்கள் விரட்டப்பட்டது. எட்டாம் படையினிடம் நம்பிக்கை இந்த யுத்தத்தில் அதிகமாயிற்று.

டாங்கிகள், பீரங்கிகள் மனிதர்கள், இவைகளிடத்திலே ஏற்பட்ட நஷ்டங்களைவிட பத்தாம் பான்ஸர் படையின் மனோதைரியத்தினிடம் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது. அலமீன் போரிலும் எதிரிகளால் சிறிது காலமாகிலும் நம்முடன் சண்டையை முடித்து இங்கே நாம் செய்த தாக்குதல்களால் அவர்களால் திருப்பித் தாக்கவே முடியாமல் போய்விட்டது. எந்த இடத்திலும் அவர்கள் தோற்றுப்போய் உதை பட்டுக்கொண்டு, பீரங்கிகளின் குண்டுகளுக்கு இரையாகியும் அவர்களுடைய காலாட் படைகள் வெடிகுண்டுகளாலும், மெஷின்பீரங்கிகளாலும் நாசமடைந்தன. இவர்கள் வெடிகுண்டுகளாலும், பீரங்கி வெடிகளாலும் நாசமாக்கப்பட்டனர். ஒரு சமயத்திலும்கூட ரோமலின் படையானது திரும்பி தாக்கவே முடியவில்லை.

---

## 1940-ம் வருஷம் வேனிற்காலமிருந்த நிலைக்கு மாறுபாடு.

### 1943-ம் வருஷத்தில் விமானச் சண்டையின் போக்கு.

(ரேமாண்டு கிளாப்பர்).

மிகவும் ஆச்சர்யகரமாகவும் எதிர்பாராதவண்ணமாகவும் அச்சு நாட்டாரின் குலைவு ஏற்பட்டு வருகிறது.

பிஸ்மார்க்குக் கடலில் நமது விமான பலத்தினால் அழிவுபட்ட ஜப்பானியத் துணைக்காவல் கப்பல்களின் நஷ்டத்தைப்பற்றி மேஜர் ஜெனரல் ஜார்ஜ் C. கென்னி அனுப்பியிருக்கும் ரிபோர்ட் முதலில் நம்பத்தகாததாகயிருந்து பிறகு ஊர்ஜிதமாகி விட்டதிலிருந்து எந்த நிகழ்ச்சியும் சம்பவிக்கக்கூடுமென்று எதிர் பார்க்கலாம். நமது விமானப்படைகள் ஜப்பானியத் துணைக்காவல் படையிலிருந்த 22 கப்பல்களையும், 72 விமானங்களையும் அநேகமாக இன்னும் 23 விமானங்களையும் நாசமாக்கிவிட்டன. இந்த நிகழ்ச்சியில் நமக்கு நான்கு விமானங்கள்தான் நஷ்டம். ஒரு வெடி விமானத்திலும் மூன்று சண்டை விமானங்களிலுமிருந்த 12 மனிதர்கள் சேதமடைந்தார்கள். இந்த நிகழ்ச்சியின் மூலம் ஜப்பானியக் கடற்படைக்குக் குறைவுமட்டும் ஏற்படவில்லை. பூராபலமும் நமக்குச் சொல்ப நஷ்டத்துடன் அழிந்து விட்டது.

மற்றொரு போர்முனையிலும் அச்சு நாடுகளின் விமான பலம் குறைவுபட்டு வருகிறது. ருஷ்யப் போர்முனையில் ஜெர்மன் விமானங்கள் தலைகாட்டவேயில்லை. சென்ற சில நாட்களாக இங்கிலாந்தை ஜெர்மன் விமானங்கள் பழிக்குப்பழி வாங்கும் முறையில் தாக்கியதெல்லாம் ரொம்பவும் பலஹீனமாகவும் பேடிஜமாகச் செய்யப்பட்டதாகவும் காணப்படுகின்றன. டூனிஸியப் போர்முனையில் நமது விமானப்படை மேன்மையான ஸ்திதியில் இருந்து வருகிறது.

இதற்கு அமெரிக்காவில் விமான உற்பத்தி வேகமாக அதிகரித்திருப்பது தான் முக்கிய காரணம். ஒரு மாதத்தில் 5,500 விமானங்கள் கட்டப்படுகின்றன. அவைகளில் 3,500 விமானங்கள் சண்டை போடும் விமானங்கள். நேசநாட்டினர் வெற்றி பெறுவதற்கு விமான அதிகரிப்புத்தான் முதல் முதலான முக்கிய சாதகம். அச்சு நாடுகள் திடுக்கிடும்படியாகவும், பதில் சொல்ல முடியாமலும் இருக்கும் பெரிய பிரச்னை இதுதான். அமெரிக்கத் தொழிற்சாலைகள் அச்சுநாட்டினர் உற்பத்திகளைவிட அதிகமாக உற்பத்தி செய்து வருகின்றன. பாக்கியிருப்பது யுத்த முனைகளில் நின்று எதிரியை முறியடிப்பதுதான். ஏனென்றால் எதிரியை நேர்முகமாக அடித்து முறியடித்தாலொழிய அவன் தோல்வியை ஒப்புக்கொள்ள மாட்டான்.

உற்பத்தி அதிகத்தைத் தவிர விமான பலத்தில் நமக்கு வேகமாக ஏற்பட்டு வரும் ஆதிக்கத்துக்கும் மற்றும் சில சம்பவங்கள் சாதகமளிக்கின்றன. நேச நாட்டாரின் விமானங்கள், பீரங்கிகள், யுத்த சாமக்ரியைகள் இவைகளின் உயர்வு இதற்கு ஒரு முக்கிய காரணம். பிரிடிஷ் விமானிகளைப்போல அமெரிக்க விமானிகளும் விமானம் ஓட்டுவதில் புத்தி கூர்மையுள்ளவர்களென்று வெளிக்காட்டி விட்டார்கள். இயற்கையான புத்திகூர்மையும், நவீன முறையில் அளிக்கப்படும் பயிற்சியும் சேர்ந்து நமது விமானிகள் அச்சுநாட்டு விமானிகளின் திறமையைப் புறக்கணித்து விடுகிறார்கள். ஜெர்மனியுடையவும் ஜப்பானுடையவும் விமான உற்பத்தி நாம் நினைத்ததற்குக் குறைவாகவே இருந்திருக்கலாம். அல்லது உற்பத்தியின் சிரமங்களால் குறைவுபட்டிருக்கலாம். ஜெர்மனியில் எண்ணெய்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் விமான நடமாட்டம் குறைவுபட்டிருக்கிறதென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

எப்படியிருந்தபோதிலும் 1940-ம் வருஷம் கோடை காலத்தில் பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தைத் தாண்டி நாம் வெகு தூரம் சென்று விட்டோம். அப்பொழுது நேசநாடுகள் தங்கள் விமானங்களை எல்லாம் ஒன்று கூட்டி இங்கிலாந்தைத் தாக்கும் ஜெர்மன் விமானங்களை எதிர்க்கவேண்டியிருந்தது. இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. ஜெர்மானியர்கள் தங்கள் விமானப் படையை ஒன்றுகூட்டி நம்முடைய விமானத்தாக்குதல்களைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

விமானப்படை குறைவடைந்து வந்தால் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும், தோல்வி ஏற்பட்டுவிடும். நமக்குத் தோல்வி ஏற்படாது. அச்சுநாடுகளின் ஒரு விமான நஷ்டத்திற்குப் பதிலாக நமக்கு ஒன்று அல்லது இரண்டு விமானங்கள் நஷ்டமேற்பட்டாலும் நமக்குப் பாதகமில்லை. நாம் வெற்றிபெற்று விடுவோம். இம்மாதிரியாக உபரி நஷ்டமில்லாமலேயே நாம் வெற்றிபெற்று வருகிறோம்.

ஐரோப்பா பூராவிலும் 1940-ம் வருஷத்தில் எதிரிக்கு அநேக வெற்றிகள் கிடைத்ததற்கு ஜெர்மன் விமானப்படை பலந்தான் காரணமென்று எல்லோருக்கும் ஞாபகம் வரும். விமான பலம் ஒன்றைக்கொண்டுமட்டும் ஜெர்மானியர்கள் ஜயம் பெறவில்லை. ஆகிலும் விமானப்படையின் ஆதிக்கம் இருந்திராவிட்டால் ஜெர்மானியர்களுக்கு வெற்றிகள் கிடைத்திருக்கவே முடியாது. இடைவிடாது இரவுபகலாக நமது வெடி விமானங்கள் ஜெர்மனியைத் தவிடுபொடி செய்ய ஆரம்பித்துவிட்டால் 1940-ம் வருஷம் இங்கிலாந்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஜெர்மனியில் நடைபெறுமென்று நீங்கள் எதிர்பார்க்கலாம்.



# யூபடகுகள்—ஜெர்மனியின் கடைசி சாதகம்.

(ஸ்ட்ரபால்கி பிரபு).

ஹிட்லர் கடைசியாக நீர்மூழ்கிகளின் பலத்தைக்கொண்டு வெற்றிபெற்றுவிடலாமென்று நம்பியிருக்கிறானென்று அறிகுறிகள் தோன்றுகின்றன. வரும் ஆறு மாதங்களில் அநேக நூற்றாண்டுகளாக உலக சரித்திரத்திலேயே ஏற்படாத முக்கியமான சம்பவங்கள் நடைபெறக்கூடும்.

ஜெர்மனியானது நீர்மூழ்கிகளை உபயோகித்து தாக்குதல் செய்வதில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. இதை நிவர்த்திப்பதென்பது ரொம்பவும் சிரம சாத்தியமான காரியம். துணைக்காவல் கப்பல்களை விமானங்களால் தாக்குவது இப்பொழுது அதிக பயன்படவில்லை. ஏனென்றால் கப்பல்களின் தற்காப்பு பலம் விருத்தியடைந்துவிட்டது. வெகு தூரம் பறந்து செல்லக்கூடிய விமானங்களைக் கட்டுவதில் நேசநாட்டார்கள் முன்னேற்றம் அடைந்துவிட்டார்கள்.

சென்ற மகா யுத்தத்தில் எம்டன் போன்ற ஒரு க்ரூயிஸர் கப்பலும், சாமான் கப்பல் போல வேஷம் பூண்ட கொள்ளைக் கப்பலும் திறமையுடன் ஓட்டப்பட்டும் கனமான கவசமும் அணிந்தும் வெகுதூரத்திலுள்ள கடல் மார்க்கங்களில் சென்று நஷ்டம் விளைவித்தது போல், இப்பொழுது தனிப்பட்ட கொள்ளைக் கப்பல் செய்துவிட முடியாது. இம்மாதிரியான நிகழ்ச்சிகளுக்கு வேவுபார்க்கும் விமானங்கள் இடையூறாகயிருந்து வருகின்றன. சாமான் கப்பல்களும் இப்பொழுது தன்னந்தனியாகப்போகிறதில்லை.

சென்ற உலக யுத்தத்தில் சாமான் கப்பல்களுக்குத் துணையாக யுத்தக் கப்பல்கள் சிறிது தூரம் தான் சென்றன. இப்பொழுது யுத்தக் கப்பல்கள் வெகு தூரம் செல்கின்றன. நீர்மூழ்கிகள் வெகுதூரத்தில் சமுத்திர மத்தியில் நடமாடுவது தான் இதற்குக் காரணம்.

பஸிபிக் மகா சமுத்திரத்தை அபாயத்துக்குட்பட்ட ஸ்தலமாக ஜப்பான் செய்துவிட்டது. இந்துமகாசமுத்திரத்திற்கும் இந்தப் பேராபத்து எச்சமயமும் பரவக்கூடும். ஜெர்மனிக்கு பலமான கவசம் பூண்ட கொள்ளைக் கப்பல்கள் கொஞ்சம் தான். அவைகளைக்கொண்டு வியாபாரமார்க்கங்களைத் தாக்குவதென்பது முடியாத காரியம். இதாலியக் கடற்படையின் நடமாட்டம் மத்தியதரைக்கடலுடன் நின்றுவிட்டது. மேற்கு பஸிபிக் சமுத்திரத்திலும் ஜப்பானுக்கும் மற்ற யுத்த அரங்கங்களுக்கு மிடையே உள்ள கடல் மார்க்கங்களையும் ஜப்பானியக் கடற்படை பாதுகாத்து வருகிறது. பஸிபிக் சமுத்திரப் போரில் அமெரிக்க, பிரிடிஷ் கடற்படையின் பெரும் பாகம் ஈடுபட்டிருக்கிறது.

ஆகிலும் வட அட்லாண்டிக் சமுத்திரத்திலும் தெற்கு அட்லாண்டிக் சமுத்திரத்திலும் தான் ஜெர்மன் நீர்மூழ்கிகளுடன் முக்கியமான போராட்டம் நடைபெறுகிறது. நிலைமையைச் சரியானபடி தெரிந்து கொள்ள லாயக்கான புள்ளி விபரங்கள் கூட்டமாகயிருக்கின்றன. அல்லது ஒரு புறத்தாருக்கு மட்டும் தான் அறிமுகமாயிருக்கின்றன. யூபடகுகள் எவ்வளவு கட்டப்படுகின்றனவென்றும் எவ்வளவு நஷ்டமாகுகின்றனவென்றும் விவரங்கள் ஹிட்லருக்குத் தான் தெரியவரும். இந்த இரண்டு விவரங்களையும் நாம் மதித்துச் சொல்லிவிடலாம். ஆனால் இதை உத்தேசமாகத் தான் சொல்லக்கூடும். அதேவிதமாக ஐக்கிய தேசத்தார்களின் சாமான் கப்பல்கள் மூழ்குவதும், பழுதுபடுவதும் சேர்ந்த கணக்குகள் நேசநாட்டாருக்குத் தான் தெரியவரும்.

## சாமான் கப்பல்களைக் கட்டும் திட்டம்.

சாமான் கப்பல்கள் கட்டப்படும் கணக்குகளை அமெரிக்கர்கள் வெளியிடுகிறார்கள். பிரிடனிலும் கனடாவிலும், இந்தியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் கட்டப்படும் கப்பல்களின் கணக்கு விவரங்கள் வெளிவரவில்லை. மூழ்கடிக்கப்படுவதற்கு உபரியாகவே கப்பல்கள் கட்டி முடிந்து விடுகின்றன என்று மட்டும் நாம்

அறிந்து கொள்ளுகிறோம். சென்ற ஆறு மாதங்களில் நேசதேசத்தாருக்கு ஏராளமான கப்பல்கள் மிகுதியாகிவிட்டன என்றும் நினைக்கலாம். ஆகிலும் நஷ்ட ஈடு செய்ய கப்பல்கள் அநேகமிருக்கின்றனவென்றும் மூழ்கடிக்கப்படுவதற்கு உபரியாகவே ஜெர்மானியர்களும் நீர்மூழ்கிகளைக் கட்டி வருகிறார்களென்றும் நாம் அறிந்து வருகிறோம்.

சாமான் கப்பல்கள் துணைக்காவலுடன் செல்லுவது என்ற முறையானது நீர்மூழ்கிகளின் சேஷ்டைகளைத் தடுப்பதற்கு நல்ல தற்காப்புத்தான். ஆகிலும் வேகமாகச் செல்லக்கூடிய துணைப்படைகள் போதுமான அளவுவேண்டும். ஆனால் சாமான் கப்பல்கள் மெதுவாகச் செல்லுகின்றன. அவைகளின் வேகம் துணைக்காவல் கப்பலின் வேகத்தைப் பொறுத்திருக்கிறது. துணைக்காவல் கப்பல் கூட்டத்தை ஒரு நீர்மூழ்கி ஒண்டியாகத் தாக்குகிறதில்லை. தன்னுடைய கூட்டத்தாரை அழைத்துக்கொண்டு அநேகம் நீர்மூழ்கிகள் அஸ்தமமான சமயத்திலோ அல்லது இருள் மூண்ட பிரகோ தான் துணைக்காவல் கொண்ட கப்பல்களை ஒன்றுபட்டு தாக்கும். ஆனால் நீர்மூழ்கிகளை தண்ணீருக்குள்ளிருந்து வெளியேவராமல் செய்துவிட்டால், அவைகள் கப்பல்களைத் தாக்குவதற்காகத் துணைக்காவல் கப்பல்களுக்கு முன்னால் வந்து சமுத்திரமட்டத்துக்கு வெளியே வரமுடியாது. இதற்காக சமுத்திரத்தின் பரப்பிலேயே அதிகவேகமாக நீர்மூழ்கிகள் செல்ல வேண்டும். ஆகையால் நம்மிடம் வேகமாகச் செல்லக்கூடிய துணைக்கப்பல்களும் போதுமான விமானப்படையுமிருந்தால் நீர்மூழ்கிகளை வெளியே வராதபடியே செய்து அபாயத்தை நிவர்த்தி செய்துவிடலாம். நீர்மூழ்கிகள் தளங்களையும், நீர்மூழ்கிகள் கட்டப்படும் தொழிற்சாலைகளையும் தாக்குவதும், அல்லது படையெடுப்பு மூலம் இந்த தளங்களைக்கைப்பற்றுவதும் நாசமாக்குவதும் தவிர வேகமாகச் செல்லக்கூடிய துணைக்காவல் கப்பல்களையும் வெகுதூரம் செல்லக்கூடிய விமானங்களையும் சமுத்திரமார்க்கங்களில் விசாலமான பரப்புகளில் விமானங்களுக்குத் தளமாகயிருக்கக்கூடிய விமானங்கள் தாங்கிச் செல்லும் கப்பல்களையும் கட்டுவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது தான் முக்கியமான பிரச்னை.

## நீர்மூழ்கி ஓட்டிகள்.

நீர்மூழ்கிகளை ஓட்டுவதற்கு ஆள்களைத் தயார் செய்வது முக்கியமான வேலை. ஜெர்மன் கடற்படையிலிருந்து பயிற்சி பெற்ற நீர்மூழ்கி ஓட்டுகிறவர்களை அனுப்புவது என்பது லாபகரமானதல்ல. ஜெர்மன் நீர்மூழ்கிகளை ஓட்டிவரும் மாலுமிகளுக்கு அதிகப் பயிற்சியில்லையென்றும் அவர்கள் கடலில் ஏற்படக்கூடும் நோயால் வருந்துகிறார்களென்றும் நமக்குத் தெரியவரும். ஒவ்வொரு நீர்மூழ்கியிலும் குறைந்த பக்ஷம் ஒன்பது யந்திரவேலை நிபுணர்களிருக்கவேண்டும். இவர்கள் பின்வருமாறு. காப்டன், உதவிக் காப்டன். இவ்விருவரும் தேர்ச்சிபெற்ற மாலுமிகளாகவும் நீர்மூழ்கியிலிருக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடியை உபயோகிப்பதில் சாமர்த்தியம் வாய்ந்தவர்களாகவுமிருக்கவேண்டும். இந்த இரண்டு குணங்களுமிருக்கவேண்டுமானால் அதிகப் பயிற்சியிருக்கவேண்டும். தண்ணீருக்குள் நீர்மூழ்கியை ஓட்டுவதற்கு சாமர்த்தியம் வாய்ந்த இருவர்களும், இரண்டு பயிற்சி பெற்ற இஞ்சினியர்களும் மீன் வெடிகளைச் சரியானபடி உபயோகிக்கத்தகுந்த இரண்டு நிபுணர்களும் ரேடியோ லோகேஷன் யந்திரங்களையும், வெயர்லெஸ் தந்திகளையும் உபயோகப்படுத்தக்கூடிய ஒரு நிபுணனும் தேவை. நீர்மூழ்கியிலுள்ள மற்ற 50 அல்லது 60 நபர்களுக்கு அறு குறையான பயிற்சி தான் அளிக்கப்படும். ஆகிலும் மேலே சொல்லிய ஒன்பது பேர்வழிகளும் நீர்மூழ்கிக்கு அவசியமானவர்கள்.

1918-ம் வருஷத்தில் ஜெர்மன் யூபடகு யுத்தத்தில் இம்மாதிரியான உயர்தரப்பயிற்சி பெற்ற நிபுணர்களின் குறைவு ஏற்பட்டுத் தான் ஜெர்மனியின் வலிமை குலைந்தது. இந்த வருஷத்திலும் அதே மாதிரியாக நிபுணர்களின் குறைவு ஏற்படுமென்பதில் சந்தேகமேயில்லை.



# ருஷ்யாவுக்கு ஆர்க்டிக் சமுத்திரம் வழியாகத் துணைக் காவல்படை.

உலகத்திலேயே மிகவும் அபாயகரமான கடல் மார்க்கமான ஆர்க்டிக் மகா சமுத்திரம் வழியாக ருஷ்யாவுக்கு முக்கியமான யுத்த தளவாடங்கள் எடுத்துக் கொண்டுபோவதில் பிரிடிஷ் மாலுமிகள் காட்டிவரும் தைரியத்தையும் ஊக்கத்தையும் பாராட்டி லண்டனிலிருந்து ஒலிபரப்பு மூலம் கியாதிபெற்ற கடற்படை நிபுணரான லெப்டினண்ட் கமாண்டர் வுட்ராப் என்பவர் பேசியிருக்கிறார்.

1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ருஷ்யாவை ஜெர்மனி தாக்கிய பிறகு இரண்டு மாதத்திற்குள்ளாகவே யுத்த தளவாடங்களுடன் ஒரு பிரிடிஷ் துணைக் காவல் கப்பற்படை சென்றது. நமக்குக் குறுகலான மார்க்கமாகிய ஆர்க்டிக் சமுத்திர மார்க்கமானது வடபக்கத்தில் பனிக்கட்டிகளால் சூழப்பட்டும் தெற்குப் பக்கத்தில் நார்வே கடற்கரையிலிருந்து ஜெர்மன் வெடி விமானங்களால் அடிக்கடி தாக்கக்கூடிய அபாயத்துக்கும் உள்பட்டிருக்கிறது. விமான தளங்களிலிருந்து கப்பல்களிறங்குமிடங்களுக்கு அடிக்கடி ஜெர்மன் விமானங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. வேனிற் காலங்களில் அவைகள் வராமலிருக்கும்படி செய்வதற்கு இருளும் கிடையாது. பகல்போல பிரகாசமாக உள்ள ஐந்து நாட்கள் வரையில் இரவு பகலாக துணைக் காவல் கப்பலிலிருப்பவர்களும், சாமான் கப்பல்களிலிருப்பவர்களும் ஜெர்மன் வெடி விமானங்களால் இடைவிடாது தாக்கப்பட்டார்கள். இவை நடைபெறும்பொழுது கடுமையான குளிர் இருந்தது.

இந்தப் பிரயாணத்தின் பெரும் பாகத்தில் எதிரியின் வெடி விமானங்களை சமாளிக்க கப்பலிலிருக்கும் பீரங்கிகளும் துணைக் காவல் படையின் ஆயுதங்களும் தான் உபயோகப்படும். வேறுவிதமாக சண்டை போடக்கூடிய விமானங்களின் உதவியை நாம் பெறமுடியாது. இதற்கு நெடுந்தூரம்தான் காரணம். துணைக் காவல் சாமான் கப்பல்கள் ருஷ்யாவுக்கு வந்தவுடன், கப்பல்களிலிருந்து டாங்கிகளும், விமானங்களும் இறக்கப்படுகின்றன. கப்பல்கள் நங்கூரம் போட்டவுடன் சில கப்பல்கள் எண்ணெய், நிலக்கரி, விமானங்களுக்கு வேண்டிய எண்ணெய் முதலியவற்றை இறக்குகின்றன. மேலும் நிக்கல் உலோகமும் அலுமினியமும் யந்திர ஆயுதங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. வட ருஷ்யாவில் சாமான் துறைகளில் இறக்கப்படும் சாமான்களெல்லாம் யுத்தத்துக்குத் தேவையான எல்லா வகைப்பட்ட தளவாடங்கள். உதாரணமாக, ஒரு வருஷத்திற்குள் பிரிடனிலிருந்து 3,000 விமானங்களும், 4,000 டாங்கிகளும், 30,000 மோட்டார் லாரிகளும், மோட்டார் கார்களும் அனுப்பப்பட்டன. துணைக் காவல் படையுடன் சாமான்கள் அனுப்புவதில் ஒரு தடங்கலும் ஏற்படவில்லை. ருஷ்யப் போரை நடத்தும்வரையில் ஸப்ளைகள் போய்க்கொண்டேயிருக்கும்.

ருஷ்யாவுக்கு யுத்த தளவாட ஸப்ளைகளைக் கொண்டுபோகும் விஷயமாக பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த இரண்டு க்ரூயிஸர்களும், 10 நாசகாரிகளும், 6 சிறிய யுத்தக் கப்பல்களும், அநேக சாமான் கப்பல்களும் இவைகளுடன் அநேக பிரிடிஷ் மாலுமிகளும் நஷ்டமாகியிருக்கின்றன. மனம் சோர்வடையாமல் ஆர்க்டிக் சமுத்திரமாகச் செல்லும் துணைக் காவல் கப்பல்களிலுள்ள பிரிடிஷ் மாலுமிகள் எலிஸபெத் மகாராணியார் நாளிலிருந்த மாலுமிகள்போல தைரியத்துடன் கப்பல்களை ஓட்டிவருகிறார்கள்.

ருஷ்ய யுத்தம் முடிவடையும் வரையில் அவர்கள் விடாமுயற்சியுடன் தங்கள் அலுவல்களை நடத்துவார்கள். அவர்களுக்குப் பிராணஹானி ஏற்பட்டால் தான் இந்த வேலையை நிறுத்திவிடுவார்கள் என்று சொல்லி கம்மாண்டர் வுட்ராப் முடிவுசெய்தார்.

# பிரெஞ்சு கொரில்லாப் படைகளின் நடவடிக்கைகள்.

(J. B. வாரிங்).

பிரான்ஸிலும் கொரில்லா யுத்தமா? யுத்தத்திற்கு முன்னாவது அல்லது ஒரு வருஷத்திற்கு முன்னாவது கொரில்லாப் போர் பிரெஞ்சு தேசத்தில் வலுவாக நடைபெறுமென்று யாரும் நினைத்திருக்க முடியுமா. ஆகிலும்இன்று பிரெஞ்சு மக்களின் எதிர்ப்பும் வாலிபர்கள் சிறு சிறு கூட்டங்களாக எதிர்த்துப் போர் புரிவதும் சகஜமாக ஆகிவிட்டன. பால்கன் நாடுகளில் நடப்பதுபோல அவ்வளவு விரிவாக நடக்காவிட்டாலும், ஜெர்மானியர்களும் லவாலும் கவலைப்படும்படியான முறையில் கொரில்லா யுத்தம் நடைபெற்று வருகின்றது.

இந்தக் கொரில்லாப் படைகள் இருவகைப்படும். பிரான்ஸை ஜெர்மானியர் ஆக்கிரமித்தது முதல் அநேக வாலிபர்கள் கூட்டம் கூட்டமாக யுவதிகளின் ஒத்தாசையுடன் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் நகரங்களில் ஜெக்கில், ஹைட் என்னும் இருவர்களுடைய நடத்தையைப்போல் நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும் நடித்து வந்தார்கள். பகல் காலங்களில் தங்கள் அலுவல்களை நடத்துவதும், ராக்காலங்களில் எதிர்ப்பு இயக்கத்தைப் பற்றிய பத்திரிக்கைகளை எழுதி திருட்டுத்தனமாகப் பரவச்செய்வதும் அல்லது நேசநாட்டாருக்கு ஒத்தாசை செய்ய காலம் வரும்பொழுது எவ்விதமாக மற்ற கோஷ்டிகளுடன் சேர்ந்து ஒத்துழைத்து ஜெர்மனியின் பலஹீனமாக ஸ்தானங்களைத் தாக்குவது என்ற திட்டங்களைப் போடுவதற்காகக் கூட்டம் கூடுவதுமாக அவர்கள் காலம் போக்கிவந்தார்கள். இதுவரையில் ஜெர்மானியர்களின் பலஹீனமான இடங்களை அவர்கள் தாக்கவில்லை. இவ்விதம் செய்து வருவதினால் தான் கொரில்லாப் படைகள் ஊக்கத்துடனும் ஜாக்கிரதையுடனும் செய்து வரும் திட்டங்களை ஜெர்மானியர்கள் கண்டுபிடித்து விடாதபடி தடுத்து வருகிறார்கள்.

இந்த கோஷ்டிகள் பாரிஸ் நகரத்தில் முக்கியமாக வேலைசெய்து வருகின்றன. வடக்கேயிருக்கும் தொழிற்சாலைகளுள்ள நகரங்களிலும் இவர்களின் பிரதிநிதிகளிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு கியாதி பெற்றவர்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. பிரெஞ்சு உள் நாட்டுக் கலகத்தில் கலந்துகொண்ட ஜெனரல்களின் பெயர்களான, ஹாக், மாக்மேஹன், கிளபர் அல்லது போர்முனைகளின் பெயர்கள் வாமி, அயோனு என்பவைகளும் உபயோகப்படுத்தப் படுகின்றன. மற்றொரு பகுதிக்கு, 1941-ம் வருஷம் ஜெர்மானியர்களால் ராஜதுரோகி என்று சுட்டுக் கொல்லப்பட்ட கம்மாண்டெண்ட் டெஸ்டியனி டொர்விஸ்ஸின் பெயரிடப்பட்டிருக்கிறது.

எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்தது முதல் இந்த வெவ்வேறு கோஷ்டிகளும் அநேக நடவடிக்கைகளையும் முன் ஜாக்கிரதைகளையும் செய்திருக்கின்றன. யாராவது ஒருவர் அகப்பட்டுக் கொண்டால் அவருடைய செய்கைகள் தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டவை என்றும் யாதொரு இயக்கத்தின் அம்சமுமில்லையென்றும் பொருள்படும்படியாக திட்டம் செய்திருக்கிறார்கள்.

பாரிஸ் பத்திரிகைகளில் ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்ட பத்திராதிபர்கள் பரிகாசமுறையிலோ அல்லது கவலைகொண்டோ எழுதும் வியாசங்களை உற்று நோக்கினால் ஜெர்மானியர்க்ள் இந்த ரகசியமான கோஷ்டிகளைக்கண்டு எவ்வளவு பீதியடைந்திருக்கிறார்களென்று அறிந்து கொள்ளலாம். ஆகிலும் இந்த கோஷ்டிகளிருப்பதை அவர்கள் கிளைந்து பார்க்கமுடியவில்லை. உணவுப்பொருள்களும் போதை மருந்துகளும் சேமிக்கப்படுகிறதென்றும் பிரான்ஸில் நேசநாடுகள் இறங்கியவுடன் அந்நாளைக்கொண்டாட இவைகள் உபயோகப்படுத்தப்படுமென்றும் பாரிஸிலிருந்து ஒலிபரப்பில் வெளியிடப்பட்டது. இதைத்தவிர பாரிஸ் ரேடியோ நிலயத்திலிருந்து ஒருவர் பின்வருமாறு பேசினார். "சிக்ஷிக்கப் படவேண்டிய மனிதர்களின் புள்ளி விவரங்கள் எடுக்கப்படுகின்றனவென்றும் பிரான்ஸிலுள்ள விளக்கு மரங்களிலிருந்து அவர்களைத் தூக்கிலிட்டுத் தொங்கவிட எவ்வளவு நீளம் கயிர் வேண்டுமென்று அளவு எடுக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டது".



இரண்டாவதாக, பிரான்ஸ் தேசத்தை ஜெர்மானியர்கள் ஆக்கிரமணம் செய்த பிறகு ஜெர்மானியர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக முரட்டு சுபாவமுள்ள ஒரு கொரில்லாப் படை கிளம்பிவிட்டது. இந்தப் படையில் லோன் யுத்தத்தில் கலந்துகொண்டதற்கு சிக்ஷையாகவோ அல்லது முன் ஜாக்கிரதையாகவோ சேனையிலிருந்து விலக்கப்பட்ட பிரெஞ்சுத் துருப்புகளும் ஆபீஸர்களும் சேர்ந்திருக்கிறார்கள். சமீப காலத்தில் ஜெர்மனிக்குத் தொழிற்சாலைகளில் வேலை செய்ய கட்டாயச் சேமிப்பு திட்டப்படி செல்ல வேண்டுமென்று வற்புறுத்தப்படும் அநேக யுவர்கள் ஜெர்மனிக்குச் செல்லுகிறதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டு இந்த கொரில்லாப் படையில் சேர்ந்துவிட்டார்கள். முன்பு சிப்பாய்களாக இருந்தவர்கள், தங்களுடைய பழைய ஆபீஸ்களின் அமுலுக்குட்பட்டு நடந்துகொண்டு தங்கள் வசம் துப்பாக்கிகளும், மிஷின் பீரங்கிகளும் கைத்துப்பாக்கிகளும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் அநேகமாக மலைப் பிராந்தியங்களிலும் காடுகளிலும் முக்கியமாக ஜூரா, ஆல்ப்ஸ் மலைகளிலும் வசித்து வருகிறார்கள். ரெயில் தொடர்களில் செல்லும் துருப்புகளை கபடமாக நாசம் செய்வதும் ஜெர்மன் எண்ணெய்க் கிடங்குகளுக்கும், நகரங்களிலுள்ள சாமான் கிட்டங்கிகளுக்கும் நெருப்பு வைப்பதும், ஜெர்மானியர் கூட்டம் கூடுமிடங்களில் வெடிகுண்டுகளைப் போடும்படி ஏற்பாடு செய்வதும் தான் அவர்களுடைய முறைகள்.

கிரீஸிலும், ஸெர்பியாவிலும், மற்ற இடங்களிலும் இருப்பதுபோல கொஞ்ச காலத்திற்குள்ளாக பிரான்ஸிலும் ஆயுதம் பூண்ட ஒரு படை தயாராகி ஐரோப்பாவில் நேசதேசப் படைகள் இறங்கும்பொழுது தங்களாலியன்ற அளவு நேசநாட்டினருக்கு உதவி செய்யத் தயாராகயிருக்கிறார்கள்..

---

# பிரிடிஷ் விமானப்படையின் போக்குவரத்துப் பகுதி.

## சாமான் கப்பல்களின் பளு குறைவுபடுகிறது.

**(அப்ஸர்வர்).**

சில காலமாக அரசாங்கத்தினிடம் பலமாக வேண்டிக்கொண்டபடி பிரிடிஷ் விமானப்படையில் போக்குவரத்துப் பகுதியொன்று ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

எகிப்திலும் ஸிரெனைகாவிலும் நடைபெற்ற நெடுநாள் யுத்தத்திலிருந்து நமக்கு விமானப் போக்குவரத்துப் படையிருந்திருந்தால் யுத்தப்போக்கு முற்றிலும் வேறுமாதிரியாக இருந்திருக்கும் என்று தெரியவந்தது. ஒரு முறை பின்வாங்கியதற்காவது அவசியமேற்பட்டிராது. போதிய போக்குவரத்து விமானங்களிருந்திருந்தால் பின்வாங்கி ஓடும் ரோமலை ஓடிப்பிடித்து அவனுடன் போர்புரிய ஜெனரல் மாண்ட் காமரிக்கு சாதகம் ஏற்பட்டிருக்கும். பொர்ரி விமானப் படையின் ஒரு பகுதி வேலை செய்து வந்ததென்பது வாஸ்தவம். அது முக்கியமான உத்தியோகஸ்தர்களுக்கிடையே தகவல்களைக் கொண்டுபோகவும் முக்கியமான சிறிய ஸப்ளைகளை எடுத்துப்போகவும் உபயோகப்பட்டது. கெயிரோவுக்கு நமது பிரதம மந்திரி விஜயம் செய்த பிறகு விமானப் போக்குவரத்துப் படையின் மூலாதாரமாக அது மாறிவிட்டது..

இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் போக்குவரத்து விமானப்படையானது நம்முடைய துருப்புகளும் விமானங்களும் அதிகமாக நடமாட்டம் செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்தும். நமக்கு அயல்நாடுகளில் யுத்தம் நடப்பதால் இந்தப் புதிய ஏற்பாடு அவசியமாயிருக்கிறது, சாமான் கப்பல்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரமத்தை இந்த விமானப்படை சிறிது நிவர்த்தித்து, ஐரோப்பா கண்டத்தில் புதிதான யுத்த முயற்சிகளைச் செய்ய நேசநாடுகளுக்குச் சாதகமும் ஏற்படுத்தும்.

நன்றாக ஏற்பாடு செய்துவிட்டால் இந்த விமானப் போக்குவரத்துப்படை கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் கொண்டுபோகப்படும் சாமான்களைத் தவிர அதற்கும் அதற்கு உதவியாகவரும் விமானப்படைக்கும் தேவையான ஸப்ளைகளைக் கொண்டுபோகக்கூடும். இந்த விமானங்களில் விமானப்படைகளும் தரைப்படைகளும், உதவிப்படைகளும், பெட்ரோல், எண்ணெயும், உணவுப் பொருள்களும் ஏற்றிக்கொண்டுபோகலாம். இவைகள் மூலமாக அமெரிக்கர்கள் கட்டிமுடித்த விமான இஞ்ஜின்களையும், விமானங்களின் இறக்கைகளையும், வெடி குண்டுகளையும் கொண்டுபோயிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக நமது தரைப்படைகள் ஒரு இடம்விட்டு மற்றொரு இடத்திற்குச் சீக்கிரமாகச் செல்லுவதற்கும் போர்முனைகளுக்கு உதவிப்படைகளை எடுத்துக்கொண்டுபோவதற்கும் பிரயோஜனப்படும். இது ரொம்பவும் சுலபமான வேலை. குடைத் துருப்புகளையும் முக்கியமான அலுவல்களுக்காக விமானப் படைகளைக் கொண்டுபோவதும் கொஞ்சம் சிரமமான காரியம். இந்த விமானப் போக்குவரத்துப்படையானது யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப்போகும் சாம்ராஜ்ய விமானப்படைகளுக்கு மூலாதாரமாகயிருக்குமென்பது நிச்சயம்.

---

## V. S. 300 என்னும் விமானம்.

பிரிட்டனுடைய நூதனமான யூ படகு எதிர்ப்பு சாதனமான ஹெலி காப்டர் என்னும் விமானத்தைப்பற்றி எழுதும்பொழுது டெயிலி எக்ஸ்பிரஸின் விமான நிருபர் சொல்லுவதாவது. இந்த விமானத்தைப்பற்றி உத்தியோகமுறையில் ஒரு தகவலும் வெளியிடாவிட்டாலும் இது வாட்ஸிகார்ஸ்கி 300 என்ற வகையைச் சேர்ந்ததாகயிருக்கும். வாட்ஸிகார்ஸ்கி யந்திரங்கள் ஏராளமாக அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளை ஓட்டுவதில் அமெரிக்கப் படைகள் பயிற்சி பெறுகிறார்கள். இதை பறக்கும் சிறிய டாங்கி என்று சொல்லுகிறார்கள். அமெரிக்கக் கடற்படையும் யூ படகுகளைத் தாக்க இவைகளை உபயோகப்படுத்தக் கூடும்.

இந்த V. S. 300 விமானம் திடீரென்று தரையில் இறங்கும். திடீரென்று உயர செங்குத்தாகக் கிளம்பிவிடும். முன்னால் ஓடினபிறகு மேலே பறக்க வேண்டுமென்கிறதில்லை. ஒரு சிறிய சாமான் கப்பலின் மேல்தட்டிலிருந்துகூட பத்திரமாக இந்த விமானம் புறப்படக்கூடும். கடல் விமானங்களின் ரோந்து இல்லாததும், யூ படகு கூட்டங்கள் நேசதேச கப்பல்களைத்தாக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டு சஞ்சாரம் செய்துவரும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் இந்த V. S. விமானங்கள் உபயோகமுள்ளதாகயிருக்கும். V. S. 300 விமானம் கப்பல் கூட்டங்களுக்கு மேலே பறக்கக்கூடும். பின்புறமாகச் செல்லக்கூடும். பக்க வாட்டிலும் பறந்துசெல்லும். இந்த விமானத்தில் நீர்மூழ்கிகளை அடிக்கக்கூடிய வெடிகளைக் கொண்டுபோகலாம். இதைக் கண்டு பிடித்தவர் பிரக்யாதிபெற்ற ருஷ்ய அமெரிக்க விமானப்படை அமைப்பாளரான இகார் ஸிகார்ஸ்கி என்பவர். இதில் இரண்டுபேர் ஏறிப்போகலாம். இதில் இரண்டு இஞ்சின்களுள்ளது. இதில் மூன்று துடுப்புகளுள்ள புரொபெல்லர் இருக்கிறது. அதன் மூலம் விமானம் உயரக்கிளம்புகிறது. ஒன்று அல்லது இரண்டு உதவி மோட்டார்களும் இதிலிருக்கின்றன. அடியிலிருக்கும் பாகங்களை உள்புறமாக மடக்கிவிட்டு மடக்கின கால்கள் உள்ளவன்போல் செய்துவிடலாம்.

---

## டோஜோவின் பேச்சு ஜப்பானியர் மனக்கலக்கத்திற்கு பிரதி பிம்பமாயிருக்கிறது.

டோஜோ ஜப்பானிய பார்லிமெண்டில் இந்த உலக யுத்தம் இந்த வருஷத்திலேயே முடிந்துவிடவேண்டும் என்று, கூறினான். ஜப்பானிய அரசாங்கம், தாங்கள் வென்ற நாட்டினின்றும், கிடைக்கும் எல்லா மூலப்பொருள்களையும் கொண்டு ஆங்கில சாக்ஸானியர்களை நிர்மூலப்படுத்த உபயோகப்படுத்தப் போவதாக உறுதி கூறினான். அனேகாவலோடுகூடிய பெரிய கப்பல் கூட்டம பிஸ்மார்க் கடலிலே நாசமானதைப்பற்றி ஜப்பானில் ஏதும் பிரசுரிக்கப்படவில்லை. கப்பல் முற்றிலும் அழிந்துபோய்விட்டபடியால் ஜப்பானிய மந்திரிக்கு கடைசியானதோ அல்லது விபரமானதோ ஒரு தகவலோ எட்டவில்லை. விவரமான டோஜோவின் பேச்சும், அவன் கூறிய உறுதி மொழியும் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்ட இந்த திடுக்கிடும்படியான தோல்வியினால் ஏற்பட்டவையே. அத்தோல்வி ஜப்பானிய திட்டங்களை தற்காலிகமாக நிலைகுலையச் செய்திருக்கிறது.



ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் சில மாதங்களாக ஏற்படும் ஜப்பானியக் கப்பல் நஷ்டத்தைப்பற்றியும் விமான நஷ்டங்களைப்பற்றியும் கணக்குகள் வெளியிடப்படுகின்றன. சமீபத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை கவனித்தால் விமானச் சண்டை செய்வதில் ஜப்பானியர் பலம் குறைந்து இருக்கின்றனர் என்பது வெளியாகிறது. அவ்வாறு ஜப்பானியர் விமானச் சண்டைகளில் பலம் குறைந்ததற்குக் காரணம், விமானங்களின் எண்ணிக்கை குறைந்து இருப்பதினாலோ, அல்லது விமானச் சண்டையில் தேர்ச்சி பெற்றவர்களின் குறைவினாலோ ஆகிய இவ்விரண்டினுள் ஒன்றுய்த்தான் இருக்கவேண்டும். ஜப்பானியரின் முன்னேற்ற வேகத்தை தடுத்துவிட்டபோதிலும் அவர்களைத் துரத்தி அடிக்க வேண்டியது பாக்கியிருக்கிறது. இது விஷயத்தில் நேசநாடுகள் அதிகக் கவலை செலுத்தவேண்டும். நேசதேசங்கள் இந்த யுத்தத்தில் சில தவறுதல்கள் செய்திருந்தாலும் ஜப்பானியர்களும், இந்தச் சண்டையை ஆரம்பித்ததான மிகவும் மகத்தானதோர் பிசகை செய்திருக்கின்றனர். இப்பிசகை டோஜோவின் ஜம்பவார்த்தைகளால் மறைக்க முயலுகிறார். துரோகமான திடீர்த் தாக்குதலால் பிரிடிஷார், டச்சுக்காரர்கள், அமெரிக்கர்கள் ஆகிய இவர்களின்பேரில் சீக்கிரமாய் வெற்றியை அடையலாம் என்ற நம்பிக்கையோடு ஜப்பானியர் இருந்தனர். நேசதேசங்கள் சமாளித்துக்கொண்டு முன்னேறிவிடும் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. தங்களால் வெல்ல முடியாத எதிர்களிடமிருந்து வெகு காலம் தற்காப்பு யுத்தம் செய்து தங்களைக் காத்துக்கொள்ளவேண்டிய அவசியமான நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பிழையானது ஹிட்லர் திடீரென 1941-ம் வருஷத்தில் ருஷ்யாவைத் தாக்கின பிழையைப்போன்றது தான்.

---

## ஜப்பானியர்களுக்குப் பொறி.

144705

அஸ்ஸாம் காடுகளிலுள்ள ஒவ்வொரு சிப்பாயும் நவீன ராபின் ஹூட் போன்றவன். ராபின் ஹூட் நடத்திய முறைகளையெல்லாம் [illegible]களையும், மெஷின் துப்பாக்கிகளையும் உபயோகப்படுத்தி அஸ்ஸாம் காடுகளில் துருப்புகள் பயிற்சி பெறுகிறார்கள். கதவுகளின் பேரில் கண்ணிகளும், திடீர் தாக்குதல்களும், மறைமுகமான அமைப்புகளும், இவைபோன்ற எல்லா ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. இவைகளை அமைப்பதில் அதிக ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவைகள் இருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டாலும் இவைகளைக் கண்டுபிடிக்க முடியாதபடி கண்ணிகள் அமைக்கப்படுகின்றன.

இந்தக் கண்ணிகளைக் கண்டுபிடிப்பதில் எனக்கும் அதிகச் சிரமம் ஏற்பட்டதென்று ஒரு காட்டுப்பாதை வழியாக, முன்னணிப்படையின் தளபதியோடு உலாவிய ஒரு இந்தியப்படை அப்ஸர்வர் எழுதியிருக்கிறார்.

எதிர்பாராத விதமாக நான் ஒரு குழியில் விழுந்துவிட்டேன். கெட்டியான பாதையென்று நினைத்து கால்களை ஊன்றியவுடன் கால்கள் கீழே போய்விட்டன. குழி அதிக ஆழமில்லை. ஆகிலும் யுத்த முறையில் அது அதிக ஆழமாகயிருப்பதோடு அடியாகத்தில் கூர்மையுள்ள மூங்கில் சலாகைகள் ஊன்றப்பட்டிருக்கும்.

சில நிமிஷங்களுக்குப்பின் என் கால்கள் காட்டுக்கொடிகளில் மாட்டிக் கொண்டன. உடனே ஒரு குண்டு வெடித்தது.

அதே சமயத்தில் ஒரு லேசான மெஷின் பீரங்கி வைத்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும்படிக்கும் அது சமீபத்திலிருக்கிறதென்றும் முன்னணிப்படைத் தலைவர் என்னை வேண்டிக்கொண்டார். ஆனால் ஒவ்வொரு இடத்திலும் மூங்கிலும் செடிகொடிகளும் அடர்ந்த புதர்களாகயிருந்தன.

"வெளியே வாருங்கள்" என்று தலைவர் கத்தினார். உடனே காட்டின் புதர்களிலிருந்து கொடிகளாலும், இலைகளாலும் தழைப்பங்களாலும் அலங்கரிக்கப்பட்ட மனிதர்களும் காட்டுப் பயிர்களின் வர்ணங்களுக்கு ஒப்பான வர்ணமுள்ள ஆடைகளணிந்து கொண்டிருக்கும் மனிதர்களும் வெளிவந்தார்கள். ஒரு சிறிய புதரிலிருந்த ஒரு சிறிய கிளையைப்பார்த்தபொழுது அது தரை பீரங்கியின் குழாயாகயிருந்தது.

பிறகு அந்தப்படைகளை ஒரு குன்றுப்பிரதேசத்தைத் தாக்கும்படி உத்தரவிட்டார். கடைசிவரையில் வெடிகளைப் போட்டுக்கொண்டு அப்படைகள் முன்னேறி எதிரியை மறுபடியும் குன்றுகளின் சிகரத்திலின்றும் தாக்கினார்கள். ஒரு மரத்தின் அடிபாகத்தைச் சுற்றிலும் வெடிமருந்துகளைத் தோரணமாகக் கட்டிவைத்து ரஸ்தாவை அடைக்கும் ஏற்பாட்டை பின்னாலுள்ள ஒருவன் செய்துமுடித்தான். ஒரு நிமிஷத்திற்செல்லாம் அந்த மரம் ரஸ்தாவுக்குக் குறுக்கே விழுந்து விட்டது. தாத்காலிகமாகயிருந்த போதிலும் எதிரியின் மோட்டார் போக்குவரத்துக்குச் சரியான தடங்கல் செய்துவிட்டது. இதன் படிப்பினையாதெனில், இந்தக் கண்ணிகள் அமைப்பதில் தகுந்த சிரமத்தை யெடுத்துக்கொண்டு ஏற்பாடுசெய்து விட்டால் எதிரிக்கு விசேஷமான பாதகம் ஏற்படும். அதாவது எதிரி சதாகாலமும் கண்ணிகளை அகற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் தந்திர முறைகளை அடிக்கடி மாற்றிக்கொள்ள வேண்டும். இதை நான் ஒரு குடிசையில் அமர்ந்திருந்த பொழுது கண்டு பிடித்தேன். கதவின் பேரில் இருந்த ஒரு கண்ணி வெடித்து என்னுடைய சாப்பாட்டின் பேரில் மண்ணைப் போட்டுவிட்டது.

---

# யுத்தத்துக்குப்பின் ஆகாயத்திலும் ஸ்வதந்திரம்.

## சமாதான காலத்துக்கும் திட்டம் போடவேண்டும்.

(டைம்ஸ் பத்திரிகை).

பிரிடிஷ் போக்குவரத்து விமானப் படையின் தற்கால அலுவல்கள் யுத்தத்தோடு சம்பந்தப்பட்டவை. ஆகிலும் யுத்தத்திற்கு பிறகு போக்குவரவு விமானங்களை உண்டுபண்ணுவதற்கு உத்ஸாகம் மூட்டுவதன் மூலமாக பொது ஜனங்கள் விமானங்களில் செல்லுவதற்கு உபயோகமுள்ளதாகயிருக்கும். பிரிடன் நிலைபெற்றிருப்பதற்காக யுத்தம் செய்யும் பொழுதும் எதிரிகளின் படையெடுப்பைத் தடுக்க பிரிடனைப் பாதுகாத்துவரவேண்டிய பொழுதும் சண்டை விமானங்களையும் வெடிகுண்டெறியும் விமானங்களையும் உற்பத்தி செய்வதில் விசேஷமாக ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த ஏற்பாட்டின் பலன் பிரிடனுக்காக நடந்த யுத்தத்தில் வெளியாயிற்று. பிரிடிஷ் விமானங்கள் மற்றொரு ஸெடான் யுத்தம்போல் ஜெர்மன் விமானப்படையை பிரிடனிலிருந்து துரத்தியடித்தன. இப்பொழுது பிரிடிஷ் வெடி விமானப்படை ஜெர்மன் தொழிற்சாலைகளிலிருக்கும் பிரதேசங்களைப் பலமாகவும் தொடர்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் இதுவரையில்லாதபடி தாக்கிவருகின்றன.



ஆகையால் தற்போதைய காரிய காரணங்களையும் வெற்றிகளையும் கவனித்தால் போக்குவரத்து விமானங்கள் தயாரிக்கும் வேலையில் நாம் இப்பொழுது ஈடுபடுவதற்கு ஒரு முகாந்திரமும் இல்லை. அமெரிக்காவுக்கு இம்மாதிரியான சங்கடம் ஏற்படவில்லை. அமெரிக்காவிலிருந்து விமானமூலமாக ஏராளமாக சாமான்கள் வந்துகொண்டிருக்கின்றன. வேறிடங்களில் விமானப் போக்கு, வரத்து சாதனங்களை அதிகப்படுத்தினாலும் அமெரிக்காவின் நிலைமையில் ஒரு மாறுதல்களும் ஏற்படாது என்று சொல்லக்கூடும்.

அட்லாண்டிக் சாஸனத்தின்படி சமுத்திரங்களின் சுயேச்சையானது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. வெற்றியேற்பட்டால் ஆகாய ஸ்வதந்திரமும் ஏற்பட்டு விடும். அதன் மூலம் சர்வதேசங்களுக்குள்ளாக ஒற்றுமையும் உண்டாகிவிடும். சந்தர்ப்பத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவும் அதை ஊக்கத்துடன் நடத்தவும் விசாலமான நோக்கம் மட்டுமிருந்தால், யுத்தத்துக்குப்பின் ஏற்படப்போகும் ஒத்துழைப்பினால் சர்வதேசங்களும் ஒன்றுபட நடவடிக்கையெடுத்துக்கொள்ள வசதியேற்படும். விமானப்படையானது காலதேச பரிமாணங்களை புறக்கணித்து விட்டது. ஆகாயத்தில் ஸ்வதந்திரமும் சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் எல்லா பிரச்னைகளையும் ஐக்கிய நாடுகளின் சார்பாக தீர்ப்பதில் பொறுப்பெடுத்துக் கொள்ளவும் சக்திவாய்ந்த உலக நிர்வாகத்தை ஏற்படுத்துவதென்பது கனவல்ல. யுத்தத்தின் காரணமாக, மனிதபலமும் யந்திர பலமும் வலுவாகவும், சிறந்த முறையிலும் அதிகரித்துவிட்டன. விமானங்களை ஓட்டும் திறமையும் அனுபவமும் உண்டாகியிருக்கிறது. ஜனங்களுக்கு புத்தறிவு உதயமாகி விட்டது. பிரிடிஷாரின் விமானப்படைகளை அணிவகுத்து அமைக்கும் வேலைகளிலும் புத்திசாலித்தனமும் சேவையில் ஈடுபட வேண்டுமென்ற உயர்வான எண்ணமும் ஏற்பட்டிருக்கின்றன.

யுத்தத்திற்கு நாம் தயார்செய்து வருகிறோம். சமாதான காலத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் செய்யா விட்டால் வெற்றியின் பிரயோஜனமும் நமக்கு ஏற்படாது. பிரிடனுக்கு உலகம் பூராவும் போக்குவரத்து மார்க்கங்களிருப்பதால் சீக்கிரமாக ஒப்பந்தம் செய்துவிட வேண்டுமென்ற தீவ்ரமான அக்கரையுடனிருக்கிறது. ஆகையால் ஐக்கிய தேசத்தார்களில் பெரிய வல்லரசுகளுடன் ஒப்பந்தப் பேச்சை ஆரம்பிப்பதற்கு பிரிடன் முன்வரவேண்டும்.

### யுத்த சிரமங்களை இப்பொழுதுதான் ஜெர்மானியர்கள் அறிகிறார்கள்.

நாஸி பத்திரிகைகளும் ஒலிபரப்பு நிலயங்களும் ஜெர்மானியர்கள் இப்பொழுதுதான் யுத்தத்தின் சிரமங்களை அறிய ஆரம்பித்திருக்கிறார்களென்று வெளியிடுகின்றன. அநேக வருஷங்கள் யுத்தசிரமங்களை அறியாமலேயே பிறர்கள்பேரில் ஜெர்மானியர்கள் யுத்தம்செய்து வந்தார்கள். இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. மங்க்னர், நீயூன்டா, நாக்ரிக்டன், ஹோர்ஸ்ட்மைகேல், என்னும் பத்திரிகைகளில் பின்வருமாறு எழுதியிருக்கிறது. "வட ஆபிரிக்காவிலும், ரிஷெவ்விலும், ஸ்டாலின்கிராட்டிலும், கொலோனிலும், லூபெக்கிலும், ராஸ்டாவிலும் அனுபவித்த கஷ்டங்களை ஜெர்மானியர்கள் ஏதாவது ஒரு சமயம் அனுபவிக்கத்தான் வேண்டுமென்று 1939-ம் வருஷத்தில் யாரும் சொல்லியிருந்தால் ஜெர்மானியர்கள் அப்பொழுதே மனம் கலங்கியிருப்பார்கள்".

பிராங்பர்ட் ஒலிபரப்பு நிலயத்தில் பிரிடிஷ் ஏகாஸ்மைகேல் ஒலிபரப்பிய பொழுது "ஜெர்மன் நகரங்களை பிரிடிஷ் விமானங்கள் இப்பொழுது தகர்க்கிற பிரகாரம் அவைகள் நொருக்கிவிடுமென்று, சமாதான காலத்தில் யாராவது ஜோஸியம் சொல்லியிருந்தால் இம்மாதிரியான வருங்கால காக்ஷிகளைக்கண்டு நாம் நடுநடுங்கியிருப்போம்" என்று சொன்னார்.

யுத்தச் சிரமங்கள் என்ன வென்பதை ஜெர்மானியர்கள் அதிகமாத் தெளிவாக அறியும்படி செய்துவிடுவோமென்று லண்டனிலுள்ளவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 140. (5-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 3- 4-43 கார்த்தாமலை | . ,, | 7- 4-43 வலையபட்டி | ... மாலை 7.00 |
| 4- 4-43 ,, | ... ,, 7.00 | ,, வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| 5- 4-43 ,, | ... ,, 7.00 | 8- 4-43 வெள்ளனூர் | ... ,, 7.00 |
| 6- 4-43 பள்ளிவாசல் | ... ,, 7.00 | ,, செம்பாட்டூர் | ... ,, 7.30 |
| ,, பில்லமங்கலம் | ... ,, 7.30 | 9- 4-43 புலியூர் | ... ,, 7.00 |
| | | ,, கண்ணங்குடி | ... ,, 7.30 |

### பிரஸங்கம் 141. (6-வது பிரிவு)

| | | | |
|---|---|---|---|
| 10- 4-43 முனிஸிபல் ஆபீஸ்... மாலை | 6.00 | 14- 4-43 மலைக்குடிப்பட்டி ... மாலை | 7.00 |
| 11- 4-43 கீழாநிலை ... ,, | 7.00 | ,, கலையானூர் ... ,, | 7.30 |
| ,, கீழாநிலை புதுப்பட்டி ,, | 7.30 | 15- 4-43 மலம்பட்டி ... ,, | 7.00 |
| 12- 4-43 பெருமாநாடு ... ,, | 7.00 | ,, போரம்பூர் ... ,, | 7.30 |
| ,, புல்வயல் ... ,, | 7.30 | 16- 4-43 ஆலவயல் ... ,, | 7.00 |
| 13- 4-43 சடயம்பட்டி ... ,, | 7.00 | ,, அம்மன்குரிச்சி ... ,, | 7.30 |
| ,, ஒலியமங்கலம் ... ,, | 7.30 | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3—4—43 | கார்த்தாமலை. | 10—4—43 | வெட்டம்விடுதி. |
| 4—4—43 | ,, | 11—4—43 | தீத்தான்விடுதி. |
| 5—4—43 | ,, | 12—4—43 | அரிமளம். |
| 6—4—43 | போரம்பூர். | 13—4—43 | கோனாபட்டு. |
| 7—4—43 | கரம்பக்குடி. | 14—4—43 | ராயவரம். |
| 8—4—43 | கீழாநிலை. | 15—4—43 | குழிபிறை. |
| 9—4—43 | பாப்பாபட்டி. | 16—4—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—8-4-43.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ஞு ஏப்ரல் மீ 10வ [ந. 141


பிரஸங்கம் CXLI.

## ருஷ்யாவில் மாரிகால யுத்தத்தின் ஐந்தொகை.

(டைம்ஸ் பத்திரிகை).

வீம்புடன் போர் செய்யும் அருப்புகளின் சேஷ்டைக்கு ருஷ்யாவின் மாரி கால நிலைமை ஒய்வு கொடுக்காது; ஆனால் இள வசந்தகாலத்தில் பனி உருகுவதால் கொஞ்சம் தளர்வது சகஜமே. அக்டோபர் மாதத்தில் ஸ்டாலின்கிராடு முன்னணியில் ருஷ்யர்கள் பலமாக எதிர்த்துப் போராட ஆரம்பித்தது முதல் மாரி காலத்தில் என்ன பலன் பெற்றார்கள் என்பதை மதிப்பிட்டுப் பார்க்கக்கூடிய பருவ காலம் வந்துவிட்டது.

அப்போது எதிரியின் நிலைமையைப் பார்க்க அவர்களுக்கு சீக்கிரத்தில் பிரமிக்கத்தக்க வெற்றி கிடைக்குமென்று நம்ப இடமிருந்தது; கிடைத்து விட்டதாகவே சில ஜெர்மானியர்கள் நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள். ஆகவே ருஷ்யர்கள் சமாளித்து வந்ததின் மதிப்பைக் கணக்கிடும் காலத்தில், மேற்கூறியவாறு ஜெர்மானியர்களுக்குப் பலன் கிட்டாமல் அவர்கள் எண்ணம் பொய்ப்பித்துப் போனதையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

வோல்காவின் கரையில் தாம் ஊன்றிக்கொள்ளலாமென்றும் அதன் மூலம் ஸோவியத் யூனியனுக்கு வரும் சர்ப்பரா மார்க்கங்களில் (எண்ணெய்க் குழாய்களில்) மிகவும் நிலைத்ததும் அவசியமானதுமானவற்றை வெட்டிவிடலாமென்றும் எதிரி செய்த முயற்சியில் முற்றிலும் முறியடிக்கப்பட்டான். அவன் கைவசத்தில் தாத்காலிகமாகச் சிக்கிக்கொண்ட கிணறுகளிலிருந்து ஒரு பீப்பாய் எண்ணெய்கூட எடுத்துக்கொள்ளுவதற்கு அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஒருவருஷமாகச் சண்டைபோட்டும்—குபானில் காலடிவைத்ததும் வைக்காததுமாக இருப்பதை விட—காகஸஸ் படையெடுப்பு எடுத்ததற்குக் காரணமாகவுள்ள ஏராளமான எண்ணெய்க் கிடங்குகளை எட்டி அவன் கொஞ்சதூரம்கூட முன்னேறவில்லை.

வோல்காவில் போக்குவரத்துக்களைத் தடைப்படுத்துவதுடன் ஐரோப்பாவில் விறகு உற்பத்தி இடங்களில் மிகப் பெரிதான இடத்தைக் கைப்பற்றுவதும் தவிர வேறு ஒரு பெரிய நோக்கத்தையும் கொண்டு கோடைகாலப் பிரயத்தனங்கள் இரண்டும் செய்யப்பட்டன. அந்த நோக்கம் என்ன? 1943-ம் வருஷத்தில் முன்னைவிட கோரமான போர் செய்யவேண்டி வரக்கூடுமென்றும் அதற்காகத் தன்னுடைய சைனியங்களுக்கு மாரிகால விடுதிகளில் ஆரோக்கிய வாழ்வும், ஓய்வும் விடாய் ஆற்றலும் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தான். அந்த நினைப்பும் மறந்துபோகவேண்டியதாயிற்று.

ருஷ்யர்கள் திரும்பி அடித்ததில் மேற்கூறியவைகளையும் உயிர்ச்சேதம் பலவாராக விளைவித்து தேசங்களை விடுவித்த பெரும் கணக்கில் சேர்க்கவேண்டும்.

அவைகள் பெரும் வெற்றிகளே. ருஷ்யர்களும் பலமாக இடையூறுகளை அனுபவித்தார்களென்பதும் வாஸ்தவமானாலும் அவர்களால் விளைவிக்கப்பட்ட உயிர்ச்சேதம் பலவாராகவிருந்தது. எந்தக்காலத்திலும், எந்த யுத்தத்திலும் நடந்தோராத அளவில் ஸ்டாலின்கிராட்டில் 3,00,000 ஆட்கள்கொண்ட படையை ஒருவர் விடாமல் ஒழித்ததை ஜெர்மன் நஷ்டங்களின் தலைப்பில் எழுதலாம். மேலும் ருஷ்யர்களுக்குப் போலல்லாமல் ஜெர்மானியர்களுக்கு ஒவ்வொரு நஷ்டமும் பெரு நஷ்டமாகும்—ஏனென்றால் ஜெர்மானியர்கள் தங்கள் ஆட்பலம் குறைந்து க்ஷீணித்துப்போகும் தருவாயில் இருக்கிறார்கள் என்பது ஒன்று; இரண்டாவதாக வருகிற வருஷத்தில் பல முன்னணிகளில் யுத்தம் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். சென்ற வருஷம் ஜெர்மானியர்கள் முன்னேறினதைவிட பார்வையாக இவ்வருஷம் ருஷ்யர்கள் தேசபூமியை மீண்டும் கைப்பற்றி இருக்கிறார்கள். மாரிகாலத்தின் சிரமத்தைப் பாராமல் அப்படிச் செய்திருக்கிறார்களென்றால் இது மெச்சத்தக்கதே.

மிகவும் வெற்றிகரமாக நின்ற நிலைமையில் ஸோவியத் அணிவகுப்புகளின் முன்னேற்றங்கள் நீபர் நதி திரும்புகிற இடத்தை எட்டி, அதன் மூலம் அந்த நீர்த்துறையை வெட்டிவிடுவதுடன், அஸோவ் கடல் கரையில் ஜெர்மன் சேனைகளில் ஒரு குழாத்தைச் சூழவும் நேரிட்டனர்.

அது முதல் ஜெர்மானியர்கள் சமாளிக்க முயன்றனர். அந்த முயற்சியின் காரணமாக டானெட்ஸுக்கும் கடலுக்கும் இடையில் படையெடுத்து வந்த சேனைகளால் சூழப்பட்டு அமுங்கிவிடாமல் தப்பித்தனர். அப்படித் தப்பித்துக் கொள்ளுகையில் முன்னேறி நின்ற ருஷ்யப்படைகளை தங்களுக்குப்பெரும் நஷ்டம் நேரிடுவதையும் பாராமல் தள்ளடித்துவிட்டனர். இதன் மூலம் டானெட்ஸ் நதிக்கரையோரமாக டாகன்ராக்குக்குக்கு வடக்கில் ஒரு முனை வரையில் தங்களுடைய துருப்புகளை நிலைத்துக்கொண்டனர். அந்த முனையிலிருந்து நாட்டின் நேர்குறுக்காக அஸோவ் கடல்கரையில் சென்ற வருஷத்தில் நிலைத்த இடத்திற்கு அருகில் நுரிடம் வரையில் அவர்கள் ஒதுங்கி நின்றார்கள். இதைவிட மனவருத்தம் தரத்தக்கதென்னவென்றால் சமீபத்தில் விடுவிக்கப்பட்ட கார்காவ் நகரத்தை மீண்டும் ஆட்படுத்திக்கொண்டார்கள்.

சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் வெனிர்கால முன்னேற்றம் ஆரம்பித்த போது எந்த நிலைமையில் தெற்கு அணிவகுப்புகள் நின்றனவோ அதே இடத்தில் இப்போது வந்து விட்டார்கள். மே மாதத்தில் ருஷ்யர்கள் கேடு விளைவித்த பிறகு எதிரி எந்த நிலைமையில் இருந்தானோ அதைவிட கார்காவ் முன்னணியில் கொஞ்சம் மேலான நிலைமையில் இருக்கலாம். இந்த முன்னணியில் ஒரு வருஷமாகச் சண்டைசெய்து சேனைகளைப் பலிகொடுத்ததின் மூலம் ஏதோ கொஞ்சம் பூமி கிடைத்திருந்தாலும், அந்த முன்னணியில் வடபாகங்களில் ஒன்றன்பின் ஒன்றாக ருஷ்யர்கள் முன்னேறி இருப்பது அதிலும் லெனின்கிராடு முற்றுகையை ஒழித்தது மெச்சத் தக்கதே.

சென்ற வருஷம் வோல்கா பிரதேசத்தையும் காகஸஸ் பிரதேசத்தையும் கைப்பற்றுவதென்று எதிரி புறப்பட்டபோது அவன் இருந்த நிலைமையைவிட அதிக பூமியைத் தன் வசமாக்காமல் இருப்பதை, இப்போது எதிரியின் நிலைமையுடன் வைத்துப்பார்த்தால், இந்தக் காலவரையில் அவனுக்கு யுத்த தந்திரத்தில் பெரும் தோல்வி ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 3—4—43-லிருந்து 9—4—43-வரை.

**ருஷ்யா.**—பனிக்கட்டியால் மூடப்பட்ட நதிகளில் உரைபனி உடைந்து வருவதால் சண்டை போடுவது சிரமமாக இருக்கிறது. இருந்தாலும் லெனின்கிராடு, ஸ்டாரயா ரூஸா, ஸ்மாலென்ஸ்க், ஓரெல், டானெட்ஸ் ஆகிய ஐந்து தாறு நாடுகளில் முக்கியமாகவும் மற்ற இடங்களிலும் சோடை காலத்தில் போர் செய்வதற்கு



சாதகமான இடங்களைக் கைப்பற்றுவதற்காக ஆங்காங்கு சிறு யுத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. இவைகளில் சில ஸ்மாலென்ஸ்க்கில் ருஷ்யர்கள் விரட்டிக் கொண்டு வருவதும், டானெட்ஸைக் கடப்பதற்கு ஜெர்மானியர்கள் முயற்சித்து வருவதும்—இது இஸ்யூம் என்ற இடத்தில் இப்போது பலிக்காதடிக்கப்பட்டது. கியூபான் கீழ்க்கடைகளில் ஸோவியத்தார்கள் முட்டி வருவதும் ஆவன. இந்த இடங்களில் கடைசியில் சொல்லப்பட்டதில், அனஸ்தஸ்யேவஸ்காயா, பாகன்ஸ்க் என்ற இடங்களை ருஷ்யர்கள் கைப்பற்றியும், நோவோரோஸிஸ்க் என்ற இடத்தைக் அணுகியும் இருக்கிறார்கள்.

(4 மாதம் 20 நாள்) மாரிகாலப் போரின் பலனை ஸோவியத் யுத்த அறிக்கை நிலயத்தில் பின்வருமாறு கணக்கிட்டிருக்கிறார்கள்.

(380—440 மைல்) 600—700 கிலோ மீட்டர் தூரம் செஞ்சேனை முன்னேறி இருக்கிறது. 4,800 சதுர கிலோ மீட்டர் பூமியை விடுவித்து, விரோதிப் படையில் 1,490 விமானங்களையும், 4,670 டாங்கிகளையும், 15,860 துப்பாக்கிகளையும், 9,835 வெடி வைக்கும் இயந்திரங்களையும், 30,705 விசைத் துப்பாக்கிகளையும், கைப்பற்றி இருக்கிறார்கள். ஜெர்மானியருக்கு 8,50,000 பேர் இறந்தனர், 343,525 பேர் கைதி ஆனார்கள். 3,600 விமானங்களும், 4,520 டாங்கிகளும், 4,500 துப்பாக்கிகளும் தொலைந்தன.

**டுனிஸியா.**—கேப்ஸுக்கு வடக்கே எட்டாவது படை தொடர்ந்து சென்று மெடுயே, குட்ரெப், இவைகளைக் கைப்பற்றி கேப்ஸ் இடை வெளியென்று சொல்லப்படும் 'இடைக்கழி' வழியாக பின்வாங்கிச்செல்லும் விரோதிகள் தங்களைப் பாதுகாத்து நிற்பதற்கு இலாயக்கான கடைசி ஸ்தலத்தை அடைந்திருக்கிறது. கேப்ஸுக்கு மேற்கே வாடியாகாரட் என்னும் இடத்தில் ரோமல் பின் திரும்பி நிற்கிறான். ஆனால் பிரதானப்படைகள் தப்பித்துப் போகும் வரையில் அப்படி நிற்கப்போவதாகத்தான் முடியும். இந்த இடத்தில் அடி கொடுப்பதற்கு ஆயத்தமாக மாண்ட் காமரி நிற்கிறார். எட்டாவது படையின் முன்னேற்றங்கள் இப்போது கேப்ஸுக்கு 25 மைல்கள் தாண்டி நிற்பதாக அறிவிக்கப்படுகிறது.

எல் கெட்டாரிடமிருந்து கேப்ஸுக்குப் போகும் ரோட்டில், அச்சநாடுகள் தடுக்க முயன்றும் அதைச் சமாளித்துக்கொண்டு அமெரிக்கர்கள் டெறுஸஸ் பக்கமாக ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்குப் பிராந்தியத்தில் டமாரா பிரதேசம் நேசதேசங்களின் ஊவாலில் இருக்கிறது. ஸெட்ஜனனி கேப்ஸெரட் இவைகளைக் கைப்பற்றிவிட்டு முதல் படை முன்னேறிச்செல்லுகிறது.

**பஸிபிக்.**—பின்ஷேபன் என்ற இடத்திற்கப்பால் ஒரு ஜப்பானியத் துணைக் கப்பல்கூட்டம் எதிர்க்கப்பட்டு, ஒரு நாசகாரி காயம் அடைந்தது.

(2) ஒரு ஜப்பானிய நாசகாரி த்வம்சமாக்கப்பட்டு ஷார்ட்லாண்டில் அரு தீவுக்கப்பால் எரிய விடப்பட்டது.

(3) ஷார்ட்லாண்டு பிரதேசத்தில் பைசி கடல் விமானதளத்தை எதிர்த்த காலத்தில் ஏழு ஜப்பானிய விமானங்கள் தீ மூட்டப்பட்டன.

(4) டார்வினை ஜப்பானியர்கள் வீணில் தாக்கின.

(5) குடால்கனார் பிரதேசத்திற்கு வட மேற்கில் மார்ச்சுமீ 30உ நடந்த போரில் ஜப்பானியர் 30, 40 விமானங்களை இழந்தனர்.

(6) நியூ ஐயர்லாந்தில் ஸ்டெப்பெனுக்குத் தெற்கில் ஜப்பானியக் கப்பல்கள் மீது வெடி குண்டுகள் வீசப்பட்டன.

(7) ஏழு யுத்தக்கப்பல்களும், 5 வியாபாரக் கப்பல்களும், மொத்தத்தில் 26,000 டன்கள், ஏப்ரல் 2, 3, 4உகளில் காவிங்குக்கு அப்பால் அமுங்கின அல்லது சேதமாக்கப்பட்டன.

(8) இந்த வாரத்தில் அடியிற்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன:—லேஸலாமுவா, காஸ்மாடா, கிஸ்கா, விலா, காகிலி, ஹோல்டுஸ்யே, முண்டா, மூபா.

வைசு.—ஹூபெஹ்னிலுள்ள ஹ்வாஜங் என்னும் பட்டணத்தைச் சுற்றியிருந்த ஜப்பானியப் பாதுகாப்புகளைச் சைனுக்காரர்கள் ஜப்பானியரின் அணிவகுப்பின் கிழக்கு ஓரத்தில் யாங்ஸிக்குத் தெற்கில் குலைத்து விட்டனர். அந்த நதியின் தென் கரையில் பலத்த யுத்தம் நடந்து வருகிறது. கிழக்கு ஷான் ஸமஸ்தானங்களிலிருந்தும் பர்மா ரோட்டுக்குத் தெற்கிலிருந்தும் ஜப்பானியர் தாக்கி வருவதைச் சமாளித்து நிற்கிறோம். சுங்கிங் உள்பட பல முனைகளில் ஜப்பானியர் மீண்டும் எதிர்த்து வருகின்றனர். கியாங்ஸி மாகாணத்தில் அமெரிக்கர்கள் ஆகாய ஸ்தலத்தை எதிர்க்க முயன்றதில் ஜப்பானியருடைய 9 விமானங்களில் 7 சுட்டு வீழ்த்தப்பட்டன.

**மார்ச் 29.**—பர்மா மாயு தீபகற்பத்தில் ஜப்பானியர் வசமாகியிருந்த ஒரு இடத்தை ராயல் விமானப் படைகள் தாக்கினதில் காத்தா ஜில்லாவிலே 12 ஜப்பானிய எதிர்ப்பு விமானங்கள் நிறுத்தப்பட்டன. ஹீஹோ ஆகாய ஸ்தலமும் எதிர்க்கப்பட்டது.

**மார்ச் 30.**—தென் கிழக்கு வங்காளத்தில் முன்னேறி இறங்கக்கூடிய ஸ்தலத்தைத் தாக்கின. 22 ஜப்பானிய எதிர்ப்பு விமானங்களை வெடிகுண்டு வீழ்ச்சிகளையும் தாக்கினதில் 13 சேதமடைந்தன. 5 திரும்பி வர முடியவில்லை. அதே நாளில் காத்தா, ராகாங்யாங் முதலிய இடங்களில் ஜப்பானிய நிலயங்கள் மீது வெடிகுண்டு வீசப்பட்டதில் நமது கடற்படை நிலயங்களில் ஒன்று மாயூ நதியில் நான்கு ஜப்பானிய விசை உல்லாசக் கப்பல்களை அமிழ்த்தினது.

**மார்ச் 31.**—மாண்டலே, மெய்மோ, பையின்மாறு, சாத்வா, காத்த முதலிய இடங்களையும், பாமோ எண்ணெய் இயந்திர சாலைகளையும் ராயல் விமானப் படைகள் தாக்கின.

**ஏப்ரல் 1.**—புவாதாங், அலெள முதலிய இடங்களை யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானப் படை தாக்கினது.

**ஏப்ரல் 2.**—யுனைடெட் ஸ்டேட்ஸ் படைகள் தாழியையும் ராயல் விமானப் படைகள் கம்பாலாவையும் தாக்கின.

மாங்டாவைத்தாக்கி சொற்பச் சேதம் விளைவித்த மூன்று ஜப்பானிய விமானப்படைகள் நாசமாக்கப்பட்டன.

**ஏப்ரல் 3.**—மைடிங் பிரிட்ஜ் பிரதேசத்தில் ராயல் விமானப் படைகள் தாக்கின.

**ஏப்ரல் 4.**—ரங்கூனுக்குத் தெற்கில் திலாவா எண்ணெய் சுத்தம் செய்யப்படும் இடத்தை யுனைடெட் ஸ்டேட் ஆகாயப் படை தாக்கினது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும், நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**28—3—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—(அநேக அச்சுநாட்டு சண்டை செய்யும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; ஐந்து நேசதேச விமானங்கள் இழக்கப்பட்டன); ராட்டர்டாமில் (Rotterdam) உள்ள கப்பல்களும் கப்பல் கட்டும் தளங்களும்; லீச்சில் (Liege) உள்ள தொழிற்சாலை இலக்குகள்; ஹாலந்தில் ஹெங்ஜெலோ (Hengelo)வில் ஒரு இயந்திரசாலை; [illegible]த்தில் சாமான்கள் [illegible] ரயில்வே வண்டிகளும் பாலங்களும்; ரூவெனில் (Rouen) ரயில்வே தளங்கள்.

இரவு.—ஸெயின்ட் நாஸேரில் (St. Nazaire) உள்ள ஸப்மரீன் தளம்; (2 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

டுனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

கேப்ஸ் (Gabes) பிரதேசத்தில் சத்துரு போக்குவரத்துகள்; சண்டை செய்யும் இடங்களின்மேல் தாக்குவதற்காக பாய் [illegible]; ஸ்பாக்ஸ் (Sfax), ஸௌஸி (Sousse) பிரதேசங்களில் சமாசாரங்கள் கொண்டு செல்லும் சாதனங்கள்.



ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஷார்ட்லாந்து தீவுகளில் பூயின் (Buin); காஹிலி (Kahili)யிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்கள்; நியூ பிரிடனில் காஸ்மாடாவில் (Gasmata) விமான நிலயங்கள்; க்ளௌஸ்டர் (Gloucester) முனையில் உள்ள ஜப்பானிய ஸ்தாபனங்கள்; பர்மாவில் டேவாய் (Tavoy)லுள்ள துறைமுகப் பிரதேசம்; பர்மாவில் அக்யாப் (Akyab) பிரதேசத்தில் உள்ள கிராமங்கள்.

**29—3—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ராட்டர்டாமில் (Rotterdam) கப்பல் கூட்டங்கள்; ஹாலந்தில் தொழிற்சாலை இலக்குகள்; அபிவிலி (Abbeville)யில் ரயில்வே தளங்கள்.

இரவு.—பெர்லினி (Berlin)ல் ராணுவ மற்ற இலக்குகள்; போகமி (Bochum)ல் தொழிற்சாலை இலக்குகள்; ஜெர்மனியில் ரூர் (Ruhr)பிரதேசத்தில் மற்ற இடங்கள்.

டுனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

டுனிஸியாவில் சண்டை செய்யும் இடங்களிலுள்ள சத்துருவண்டிகளும், துருப்புக்கூட்டங்களும்; கேப்ஸு (Gabes)க்கு வடக்கேயுள்ள துருப்புகள்; மக்னஸி (Maknassi), பிச்சன் (Pichon); பான்டௌக் (Fondouk) பிரதேசங்களிலுள்ள துப்பாக்கிகள், டாங்கிகள், அநேக பாதைகள் சேரும் இடங்கள் லா ஸௌகானீர் (La Sauconniere); எல் மௌவா (El-Maou); ஸ்பாக்ஸ் (Sfax) இங்குள்ள விமான நிலயங்கள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள், ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியில் மடாங்கில் (Madang) உள்ள துறைமுகம்; நியூகினியில் ஸைடான் (Saidan) பிரதேசத்திலுள்ள கிராமங்கள்; லே (Lae)யிலுள்ள கடற்கரை ஸ்தாபனங்கள்; கைதீவுகளில் லாங்கோர் (Langgoer).

நியூ பிரிடனில் க்ளௌஸ்டர் முனையிலும் (Cape-Gloucester) காஸ்மாடாவிலும் (Gasmata) விமான நிலயங்கள்; அலூஷியன் தீவுகளில் கிஸ்கா (Kiska)வில் விடுதிகள்; வடக்கு பர்மாவில் சத்துரு ஸ்தாபனங்கள் பர்மாவில் உபாங் (Upang) பிரதேசம்; பர்மாவில் ஹ்புங்கினப் (Hpunginiup)பில் ஸப்ளைகள்; பர்மாவில் மாபீனி (Mabein)லும் டாங்கன் (Taunggon)னிலும் உள்ள இலக்குகள்; பர்மாவில் ஹீஹோ (Heho)வில் உள்ள விமான நிலயம்.

**30—3—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—பிரான்ஸில் பிரிடானியில் (Brittany) அநேக நீராவி யந்திரங்கள்; ஹாலந்தில் இன்தோவனி (Eindhoven)ல் பிலிப்ஸ் ரேடியோ தொழிற்சாலைகள். (நேசதேசத்துக்கு ஒரு விமான நஷ்டமும் இல்லை).

இரவு.—சத்துரு கடற்கரையோரமாக சுரங்க வெடிகள் பாவுதல்.

டுனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

மத்தியப் பகுதியிலும் கேப்ஸுக்கு வடக்கிலும் உள்ள சத்துருவின் டாங்கிகளும் வண்டிகளும்; ஸ்பாக்ஸு (Sfax)க்கருகில் ஒரு சத்துரு விமான நிலயமும், சத்துருவின் மோட்டார் போக்குவரத்தும்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானப்படைகளும், ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்.

தூரக்கிழக்கு (Far East).

கிஸ்கா (Kiska), ஹோல்ஸ் (Holtz) வளைகுடா; ஆட்டு (Attu) தீவுகளிலுள்ள ஜப்பானிய இடங்கள்.

நியூ ஜியார்ஜியாவிலுள்ள முண்டா (Munda); நியூ கினியிலுள்ள லே (Lae)யில் ஒரு விமான நிலயம்.

மாயூ நதியில ஜப்பானிய மோட்டார் படகுகள்; ராதிடாங் (Rathedaung).

**31—3—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ராட்டர்டாமில் உள்ள கப்பல் கூட்டங்களும், கப்பல் தளங்களும்.

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

(9 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

ஸ்பாக்ஸ் (Sfax)க்கு அருகில் ஒரு விமான நிலயம்; எல் கேட்டார் (El Guettar) பிரதேசத்தில் போக்குவரத்து சேனைகள்; டாங்கிகள், கவசங்கொண்ட மோட்டார்கள்.

பிஸர்ட்டா (Bizerta)வில் தளங்கள்; லாஸாகானீர் (Lasu Conneire)லும் எல்ட்ஜம் (Eldjem)மிலும் உள்ள விமான நிலயங்கள்.

போன்டோக் (Fondouk) பிரதேசத்தில் தாக்குதல்கள்; ஸார்டினியாவில் காக்லியாரியில் (Cagliari) விமான நிலயங்கள்.
ஸிஸிலிக்கால்வாயில் துணைக்கப்பல்.

**ருஷ்யா (Russia).**

தரையிலிருக்கும் விமானஙகளும், விமானச் சண்டைகளும், கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியில் மாடாங்கிற்கும் (Madang), விவாக்கிற்கும் (Wewak) நடுவில் போகும் ரஸ்தா; நியூ கினியில் லே (Lae) யில், ஸாலமுவா (Salamaua)விலும் உள்ள சத்துரு இடங்கள்; ஸாலமன்ஸ் பிரதேசத்தில் ஜப்பானிய இலக்குகள்; காஹிலியிலும் (Kahili), பூயினிலும் (Buin) உள்ள ஜப்பானிய இடங்கள்; அலூஷியன் தீவுகளில் கிஸ்காவில் ஜப்பானிய பீரங்கிகளை நிறுத்தும் மேடைகள்; பர்மாவில் பாமோ (Bhamo) எண்ணெய் ஸ்தாபனங்களும் மற்ற இலக்குகளும்; பர்மாவில் மாண்டலே (Mandalay) யில் அணி வகுக்கப்பட்ட சிப்பாய்கள் இருக்கும் தளங்கள்; புதிடாங் (Buthedaung) பிரதேசத்தில் விமானச் சண்டைகள். (ஒரு சத்துரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது); மாய்மியோவில் (Maymyo) உள்ள ரயில்வே தளங்கள்.

**1—4—43.** (வியாழக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—(5 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை); ஜெர்மனியில் டீரில் (Tier) உள்ள ரயில்வே தொழிற்சாலைகள். ஜெர்மனியில் ஏராங்கில் (Ehrang) உள்ள ரயில்வே தளங்கள்; பிரான்ஸின் மேல் தாக்குவதற்காக சுற்றுவது; பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் ரயில்வே இலக்குகள்.
இரவில்.—சத்துருவின் கடற்கரையோரமாக சுரங்கவெடிகள் பாவுதல்.

**டூனிஸியா (Tunisia),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

டூனிஸியாவில் கேப்ஸுக்கு (Gabes) வடக்கில் சத்துரு போக்குவரத்து சேனைகளும், டாங்கிகளும், கவசம் கொண்ட மோட்டார்களும்; ஸ்பாக்ஸில் (Sfax) எல்மௌவு (El-Maou) விமான நிலயம்; டூனிஸியாவில் லாபாகானேரில் (Lafauconniere) விமான நிலயம்; டூனிஸியாவில் பற்பல சண்டைப் பகுதிகளின் மேல் தாக்குவதற்காக வேகமாய் பறந்து செல்லுதல் (6 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன); ஸிஸிலியில் மெஸினாவில் (Messina) உள்ள துறைமுகம்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூகினியில் மூபோ (Mubo), பின்ஷேபன் (Finschaffen), ஸௌம்லாகி (Saumlaki) யிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்கள்; டச்சு நியூகினியின் மீது விமானச் சண்டை, (2 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன); பர்மாவில் யான்டாங்கில் (Ywantaung) ஆலனில் (Alon) உள்ள ரயில்தளங்கள்; பியின்மானு (Pyinmana), ஸாதவா (Satthwa), காதா (Katha) இங்கு உள்ள ரயில் பாலங்கள்.

**2—4—43** (வெள்ளிக்கிழமை),

**ஐரோப்பா (Europe).**

பகல்.—ஒரு தகவலும் இல்லை.
இரவு—லோரியானிலும் (Lorient), ஸெயின்ட் நாஸேரிலும் (St. Nazaire) உள்ள சத்துரு சம்பமரீன், யூ படகு தளங்கள் (இரண்டு இடங்கள் பிரான்ஸில், அட்லான்டிக் மகா சமுத்திரக் கடற்கரைகள்); சத்துருவின் கடற்கரை யோரத்தில் சுரங்க வெடிகள் பாவுவது; பெல்ஜியம்; ஹாலந்து இங்கேயுள்ள ரயில்வே இலக்குகள்.

**டூனிஸியா (Tunisia),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கேப்ஸுக்கு (Gabes) வடக்கிலுள்ள பிரதேசத்தில் சத்துரு துருப்புகளும்; கவசங் கொண்ட மோட்டார்கள், டாங்கிகளும், போக்குவரத்துகளும்; வாடி அகாரித் (Wadi Akarit)தில் போக்குவரத்துகளும், துருப்புகளும்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானப்படைகளும் ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதிலும்

**தூரக்கிழக்கு (Far East).**

நியூகினியில் அலெக்ஸிஸ்ஷேபன் (Alexischaffen), பின்ஷேபன் (Finschaffen); மூபோ (Mubo), இங்கேயுள்ள இலக்குகள்; நியூ பிரிடனில் கிளஸ்டர் முனையிலும் (Cape-Gloucester); நியூ பிரிடனில் காஸ்மாடாவிலும் (Gasmata); காவேங்கிலும் (Kavieng) உள்ள விமான நிலயங்கள், ஸ்டெப்பன் (Steffen), ஜலசந்தியில் உள்ள ஜப்பானியக் கப்பல்கள்; பர்மாவில் காண்பாலுவில் (Kanbalu) உள்ள ரயில்வே ஜங்ஷன்; பர்மாவில் மாயு (Mayu) தீபகற்பத்திலுள்ள கிராமம்; பார்மாவில் மாங்டா (Maungdaw).



**3—4—43.** (சனிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—பிரான்ஸில் அபிவில்லி (Abbeville) உள்ள விமான நிலயம்; ப்ரெஸ்டிலுள்ள துறைமுகங்கள்; வடபிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் உள்ள ரயில்வே இலக்குகள்; ஹாலந்திற்கப்பால் சத்துருவின் மீன் பிடிக்கும் கப்பல்.—(5 சத்துரு விமானங்களும், ஒரு நேசதேச விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டன).
இரவு.—ஜெர்மனியில் எஸ்ஸெனில் க்ரப்ஸ் யுத்த தளவாட உற்பத்திசாலை.

**டூனிஸியா (Tunisia),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

டூனிஸியாவின் வடபாகத்தில் மத்திய பாகத்திலுமுள்ள துறைமுகங்களின்மீது தாக்குவதற்கு பறந்து செல்லுதல்; ஸ்பாக்ஸு (Safx)க்கருகில் விமான நிலயம்; கேப்ஸு (Gabes)க்கு வடக்கே டாங்கிகளும், வண்டிகளும்.

**ருஷ்யா (Russia).**—(27—3—43யிலிருந்து 3—4—43ல் முடியும் வாரத்திற்கு ருஷ்யா விமான நஷ்டம் 73 விமானங்கள்; சத்துரு விமான நஷ்டம் 124 விமானங்கள்).
விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும் ருஷ்ய யுத்த அரங்கத்தில் பல பாகங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

பர்மாவில் யேனங்யாங்கில் (Yenangyaung) உள்ள எண்ணெய் கிணறு இருக்கும் நகரம்; பர்மாவில் சிண்டுவின் (Chindwin) நதியில் ஆரம்பத்தில் கரையோரமாக உள்ள இலக்குகள் நியூ ஐயர்லாந்தில் காவியெங் (Kauieng)க்கப்பால், ஜப்பானிய யுத்தக் கப்பல்களும், வியாபாரக் கப்பல்களும். (7 யுத்தக் கப்பல்கள், 5 கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன).
நியூ ஐயர்லாந்தில் உள்ள காவிங் (Kauieng) கிலுள்ள விமான நிலயம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**29—3—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தென் கரையிலுள்ள ஒரு நகரம்.

**டூனிஸியா (Tunisia).**

கேப்ஸ் (Gabes) பிரதேசத்தில் உள்ள அமெரிக்காவைச் சேர்ந்த இடங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியில் ஓரா (Ora) குடாக்கடல் தென் வங்காளத்திலுள்ள ஒரு விமான நிலயத்தின் மீது விமானப் படையெடுப்பு. (3 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**30—3—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு இடத்தில் விமானப் படையெடுப்பு இல்லை.

**டூனிஸியா (Tunisia).**

பான்டௌக் (Fonduk) பிரதேசத்தில் அமெரிக்க இடங்கள்.

**ருஷ்யா (Russia).**

பைலி (Byeli) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியில் ஓரா குடாக்கடல்; போபோரோ (Bobodura) வின் மீது வேவு பார்த்தல். (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது).

**31—3—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

பைலி பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸாலமன்ஸில் குவாடல்கனாலிலுள்ள விமான நிலயம். (16 ஜப்பானிய விமானங்களும், 6 நேசதேச விமானங்கள் நஷ்டம்).

**1—4—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு சத்துரு படையெடுப்பும் இல்லை.

**டூனிஸியா (Tunisia).**

எல் கேட்டார் (El Guettar) பிரதேசம்.

**ருஷ்யா (Russia).**

டானெட்ஸ் (Donetz) நதியின் கிழக்குக் கரையில் சில இடங்கள்.

**2—4—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

பைலி பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஆஸ்திரேலியாவில் டார்வின் துறைமுகம்

**3—4—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**டூனிஸியா (Tunisia).**

ஒரு விமானப் படையெடுப்புமில்லை.

**ருஷ்யா (Russia).**

டானெட்ஸ் நதியின் கீழ்கரையில் ருஷ்ய தளங்கள்.

# யுத்தக் குறிப்புகள்.

**இரட்டைக் கொண்டாட்டம்: இந்திய விமானப்படை.** ஏப்ரல்மீ 1உ இரண்டு வைபவங்கள் கூடி நடைபெற்றன. ஒன்று இந்திய விமானப்படையின் பத்தாவது பிறந்த நாள் கொண்டாட்டமும், ராயல் விமானப்படையின் விழாவும். ராயல் விமானப்படையின் சிறிய தம்பியென்று இந்திய விமானப்படைக்கு பெயர் ஏற்பட்டிருந்தாலும், இந்திய விமானப் படைக்கும், ராயல் விமானப் படைக்கும் உள்ளது உறவேயொழிய நட்பல்ல. இந்திய விமானப் படையின் கர்ப்பவாசம், பிறப்பு, வளர்ப்பு, பயிற்சியெல்லாம் ராயல் விமானப் படையிடத்தே. அதன் சரித்திரம் பத்து வருஷகால அளவானதானாலும், அதன் கதை சித்திரமானது, தீரச்செயலுள்ளது, மும்முரமானது. ஸ்கீன் கமிட்டியின் சிபார்சுகளை ஒட்டி 1933-ல் துவக்கப்பட்டு, 1932-ம் வருஷம் இந்திய சட்ட சபையால் நிறைவேற்றப்பட்ட இந்திய ஆகாயப்படை சட்டத்தினால் 1932-ல் அதற்கு முத்திரை அளிக்கப்பட்டது. கராச்சியில் 1933-ம் வருஷத்தில் ஏப்ரல்மீ 1உ கூட்டப்பட்ட நான்கு விமானங்களிலும் ஏறிச் செல்லுவதற்கு முன்வந்த ஆறு வீரர்களுக்குத்தான் என்ன கௌரவம். 1937-ம் வருஷம் எல்லைப்புறச் சேஷ்டைகளில் அந்தப்படை சுடுவதில் முதல் முதல் பயிலுவிக்கப்பட்டது. 1939 முதல் அதன் பலம் நாளடைவில் விருத்தியாகி இப்போது ராயல்பூரில் ஒரு பயிற்சிசாலையும், நவீன ஆயுதங்களும் தளவாடங்களும் உள்ளதாக அது வளர்ந்து விட்டது. இங்கிலாந்துக்குச் சென்று ராயல் விமானப்படையில் உதவியாளர்களாகவும் ஸ்டர்லிங்குகளில் ஜெர்மனி மீது படையெடுப்பதில் தலைமையாளர்களாகவும் இந்திய மாலுமிகள் வேலை பார்த்துவருகிறார்கள். இங்கே கடல் மூழ்கிகளுக்காக காவல் காப்பதும், கடற்கரைகளில் துணைகாவல்புரிந்தும், பர்மாச் சேஷ்டைகளில் கை கலந்துகொண்டும் இருந்திருக்கிறார்கள். இந்தியா ஆவலோடு ஸ்வப்பனத்தில்கூட ஆசைப்பட்டவைகளில் கைகூடியவற்றில் இந்திய ஆகாயப் படை ஒன்று; இந்திய புகியதுறையில் இந்தியர்கள் இறங்க இலாயக்குள்ளவர்கள் என்பதைக் காட்டுகிறது. ராயல் விமானப் படையைவிட இந்திய விமானப் படை எல்லா விதத்திலும் சிறியதென்றாலும், இப்போதும் எதிர் காலத்திலும் அது முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டிவரும். இப்போது இந்தியாவைப் பாதுகாத்து வருகிறது. இனி ஆசியாவில் ஒழுங்கு நிலைபெறச் செய்வதில் அதற்கு பலத்த அதிகாரமும் துணிவும் ஏற்படும்.

இந்திய தளகர்த்தரான ஸர் ஆர்ச்சிபால்டு வேவல் என்பவர் "இந்திய விமானப் படையானது இதற்கு முன்னைவிட யுத்தத்தில் பெயர் பெற சந்தர்ப்பம் வாய்க்கும். அதற்குப் பயிற்சி கிடைக்கும் காலத்தில் செலவிடப்பட்ட பொறுமைக்கு ஈடாக அது இந்த தேச ஜனங்களுக்கு ஒரு பெருமையாக இருக்குமென்று நம்புகிறேனென்று" அந்தக் கொண்டாட்ட தினத்தில் சொன்னார்.

வி வி வி வி வி வி வி

**ராயல் விமானப் படை.** இந்திய விமானப்படையை விட முதிர்ச்சி பெற்றதானாலும் ஏற்கனவே உலக விமானப் படைகளில் முன்னணியில் நிற்க வல்லதானாலும் இன்னும் வளர்ச்சிக்கு இடமுண்டு. அது கிரான்வெல் என்றவிடத்தில் பிறந்தது. ஆகாயப் படைகளில் உலகத்தில் சிறந்ததென்று சென்ற வருஷத்தில் பெயர் பெற்றது. 1918-ம் வருஷத்தில், ஜனரல் ஸ்மட்ஸ் என்பவர் அப்போது பிரிடிஷ் மந்திரி சபையில் இருந்த காலத்தில், கடற்படை விமானங்களையும், ராயல் விமானச் சிறு படையையும் ஒன்றாகச் சேர்த்து அவரால் ராயல் விமானப் படையென்ற பெயர் கொடுக்கப்பட்டது. ஆயுதப் பரிசாணம் என்ற பெயரில் அதைக் கொஞ்ச நாள் குறைத்திருந்தாலும் இப்போது பயங்கரமான ஆயுதங்களுடனும், விமான ஊர்தலில் சிறந்தோரும் உடையதாகி பலப்படுத்தப்பட்டிருக்கிறது. 1940-ம் வருஷத்தில் பிரிடிஷ் ஆகாயங்களில் சண்டை நேர்ந்த காலத்தில் விரோதியின் விமானங்களில் 2,375 விமானங்களை சில வாரங்களில் கொன்றுவிட்டு, பிரிடன், சாம்ராஜ்யம்,



பூலோகம் ஆகியவற்றைக் காப்பாற்றினது. அது இப்பொழுது தோன்றுமிடமெல்லாம் தாமின்றி வேறில்லாததாய் விரோதியின் நகரப் பாதுகாப்புகளையும் இதர வல்லவங்களையும் சேதப்படுத்திவருகிறது. மேன்மை தங்கிய சீமை மன்னர் பிரான் சொன்னதுபோல் "ராயல் விமானப்படை என்ற பெயர் ஏற்பட்டு 25 வருஷங்களுக்குள் அழியாப்புகழ் பெற்றிருக்கிறது, பெற்றும் வருகிறது. படையெடுப்பதையும் நம்மை அழிப்பதையும் நோக்கமாகக்கொண்டு வந்த விமானத் திரள்களை அது சுருட்டித் திருப்பி அடித்திருக்கிறது. இப்போது ஆயுத பலத்துடன்கூடி அது நெடுகலும் பரவி விரோதியைத் தாக்குவதற்காகத் தயாராக இருக்கிறது.

"பெருங் கடல்களுக்கு அப்பால் ராயல் கப்பற்படையுடன் கூடினதாய் ஒத்தாசை செய்தும், நமது சேனைகளுக்கு பலமளித்து வெற்றி கொடுத்தும், தன் பாட்டில் செய்யவேண்டிய வேலைகள் இரவு பகலாய் விரோதிகளின் தளங்களிலும், வெடிமருந்து செய்யுமிடங்களிலும், அவர்களின் சேனைபலம் மிகுந்த இடங்களிலும் தாக்குவதிலும், அது வெகு சேவை புரிந்துவந்திருக்கிறது".

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் பிரதம மந்திரியும் விமானப் பதக்கமும்.** பழைய நாளில் ஹொரேஷஸ் செய்ததுபோல பாலத்தில் நின்று ராயல் விமானப் படைக்கு ஊக்கம் கொடுத்து பிரிடனுக்காக நடந்த யுத்தத்தில் அதனுடன் தானும் வெற்றிக்குக் காரணமாகவிருந்து, உலகில் நாகரீகம் அழியாமல் இருப்பதற்காகப் பாடுபட்ட மிஸ்டர் சர்ச்சிலுக்கு விமானப் பதக்கமொன்றை மேற்படி விழாவில் அளித்தது மிகவும் சந்தோஷமானவும் பொருத்தமானவுமான காரியம். "யுத்தக் குதிரைக் கிழம்" என்று பெயர் பெற்ற இந்த வயோதிகமான பிரிமியர் இந்த யுத்தத்திற்காக 30,000 மைல் பறந்து சென்று இருக்கிறார். இந்தப் பரிசளிப்பை ஏற்றுக்கொண்டு மிஸ்டர் சர்ச்சில் ராயல் விமானப் படைக்கு ஒரு மதிப்புள்ள பெருமையைக் காண்பித்தார்.

"ஆகாயத் தோழமையில் எனக்கு கௌரவமான இடம் கொடுத்ததில் பெருமையடைந்தேன். அது நமது தீவுக்கு உயர்நிலை; நமது விரோதிகளுக்குச் சாவோலை. அவர்கள் பறந்தாலும் சரி, பதுங்கினாலும் சரி.

"இந்த நிமிஷத்தில் நமது ராயல் விமானப் படைக்கு மேற்பட்டதில்லை. நமது பிறந்த தேசத்தில் ஒவ்வொரு நகரத்தையும் "துடைத்து" நமது பூமியைத் தன்னுடைய சேவையில் அடிமைப் படுத்திவிடுவதாக வீண் பெருமை படுத்திய கொடூர எதிரியின் செருக்கை குடல் தள்ள வைப்பதற்கான வேல் முனையாக அந்த ராயல் விமானப் படை இருந்துவருகிறது. யுத்தம் உலகில் பரவி ஆழ்ந்து நிற்கும் ராயல் விமானப் படையும் அதற்கு மேல் ஈடாக பிரகாசமாகவும் ஆவேசத்துடனும் வளர்ந்து வருகிறது".

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா.** இப்போது இளவேனிற் காலம் துவக்கம். ருஷ்யாவின் மாரிகால எதிர்ப்பின் பலனை நாம் கணக்கிடலாம். கிழக்குப் போர் முனையில் திரட்டி வைக்கப்பட்ட ஜெர்மன் படையின் முதுகை முறித்து, சென்ற வருஷத்தில் ஜெர்மனியின் வசமாகி இருந்த தேசங்களை எல்லாம் கிட்டத்தட்ட கைப்பற்றி ஸ்டாலின்கிராடு, டானெட்ஸ் பொஸ்டு காகஸஸ் இவைகளின் முன்னால் ஹிட்லருடைய வீர தீரப் பேச்சுக்களை முறியடித்துவிட்டது. வெண்ணையைக் கத்தி வெட்டுவதுபோல் ருஷ்யாவின் குறுக்கே தன்னுடைய படைக்கூட்டங்கள் போய்விடுமென்று தலைதூக்கிப்-பெருமையுடன் உரக்கக்கூவி சவால் தட்டமுடியாது.

மாரிகாலத்தில் ருஷ்யர்கள் பலத்த பலிகொடுத்துவிட்டுக் கொஞ்சம் ஜயமடைந்தார்களென்று ஜெர்மன் விமர்சக் கர்த்தாக்கள் வெட்கமில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வார இறுதிப் பேச்சில் ருஷ்யர்கள் எதிர்த்ததில் அவர்களுக்குப் பெரும் நஷ்டம் விளைந்ததென்று லார்டு ஹாஹா சொல்லுகிறான்.

ருஷ்யர்களுக்கு ஆட்களும், சாமான்களும் சேதமாயிருக்கலாம்; ஆனால் எதிரியைக் கீழே தள்ளியதும், தங்களுடைய நாட்டைத் திரும்பக் கைக்கொண்டதும், பெயரை நிலை நாட்டிக்கொண்டதும் பெரிய விஷயங்கள் அல்லவா? மேலும் இந்த நஷ்டங்களை நாஸிகள் எடுத்துரைப்பதைக் கேட்டு படிப்பவர்கள் உண்மையை அறியாமல் போகமாட்டார்கள். இது படுபொய்; ஜெர்மானியரின் நஷ்டத்தை மறைப்பதுடன், ருஷ்யர் நஷ்டத்தை பெரிது படுத்திக்காண்பிக்கிறது. பிப்ரவரி௴ 23உயில் ஸ்டாலின் சொல்லியிருப்பதிலிருந்தே 7,00,000 பேர்கள் மாண்டதாகவும், 3,00,000 பேர்கள் கைதிகளானதாகவும், 7,000 டாங்கிகளும் 4,000 விமானங்களும், 17,000 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன அல்லது அழிக்கப்பட்டனவென்று அறிகிறோம். ஆனாலும் வீரர் தினக் கொண்டாட்டத்தில் 5,42,000 பேர்களே இறந்ததாக ஹிட்லர் குறைவு படுத்திச் சொல்லியிருக்கிறான்! இந்த நஷ்டம் இந்த மாரிகாலத்தில் மட்டில் நேர்ந்ததல்லவென்றும், யுத்தம் ஆரம்பித்த முதல் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்குப் போர் முனைகள் எல்லாவற்றிலும், நேர்ந்தன. "ஜெர்மனியின் மொத்த யுத்த நஷ்டங்கள்" என்று ஹிட்லரே சொன்னான்.

இந்த அண்டப்புளுகை முறிப்பது முற்றிலும் எளிது. 10 லக்ஷம் வரை சேதம் என்று ஒரு வருஷத்துக்கு முன்பே பெர்லினில் சொன்னார்கள். அது முதல் ஸ்டாலின்கிராட்டிலும் காகஸஸிலும், டானெட்ஸிலும் ஜெர்மானியர்கள் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு பொய் சொன்னால் மற்றொரு பொய் நிஜமாகுமென்று நாஸியர் நினைக்கிறார்கள் போலும். ஜெர்மானியர்களுள் 5 லக்ஷமும், ருஷ்யர்களுள் 18 லக்ஷமும் சேதம் என்று ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள். அதாவது ஒரு ஜெர்மானியனுக்கு 36 ருஷ்யர்கள். இந்தக் கணக்கில் ருஷ்யர்களில் ஒருவர்கூட பாக்கி இருக்க முடியாது. அப்படியானால் போல்ஷிவிக் ருஷ்யாவென்று பயப்படுவானேன்!

பனி உறைந்து விட்டது, வஸந்தகாலம் வந்து விடுமென்றும் அதில் ஜெர்மானியர் முன்னேறுவார்களென்றும் சொல்லப்படும்; ஆனால் ஏன் அப்படி வஸந்தகாலம் வந்து குதித்தால் ஜெர்மானியரும் எகிறிக் குதிக்கவேண்டுமென்று தான் புரியவில்லை. ஹிட்லரின் பைத்தியகாரத்தனத்தாலும் வகையறியாத ஆவேசத்தாலும் தூண்டப்பட்டு ஜெர்மன் ராணுவங்கள் ராஸ்டாவ் ஸ்டாலின்கிராடு, காகஸஸ் பக்கம் சுண்டி எறியப்படலாமென்பது சம்பாவிதமே. ஆனால் அதிலென்ன லாபம்? சமீபத்தில் கிடைத்த வெற்றியால் மோகமடைந்து ருஷ்யர்கள் ஏன் ஜெர்மானியர் மீது எகிறிப் போகக்கூடாது? அதுவும் சம்பாவிதம் தானே. சென்ற வருஷம் ஜெர்மானியருக்குக் கொஞ்சம் வகையிருந்தது; இவ்வருஷம் நம்பிக்கைக்கு இடமேயில்லை. சென்ற வருஷம் எண்ணெய் கிடைப்பது அரிதாயிருந்தது; இவ்வருஷம் கிடைக்கவே கிடைக்காது. சென்ற வருஷம் அதற்கு ஆள் பலத்திற்குத் திண்டாட்டம் உண்டென்றால் இந்த வருஷம் அதற்கு வழியே இல்லை. பன்னிரண்டு மாதத்திற்கு முன் பசிக் கொடுமையால் ருஷ்யாவின் சோளமை நிலங்களை அது பிடித்துக்கொண்டதென்றால் இப்போது அந்தத் தினியம் கிடைக்காமல் முன்னை விடக் கொடும்பசியில் நிற்கிறது. சென்ற மாரிகாலத்தில் ருஷ்யரிடம் அடிப்பட்டுக் கீச்சிட்டால் இவ்வருஷம் அடிபட்டு ஊளையிட்டு பின்வாங்கி நிற்க வேண்டியதே. இதில் கெடுதலென்ன. மேன் மேலும் விளைந்ததென்றால் வட ஆபிரிக்காவில் அமெரிக்கரும் பிரிடிஷாரும் இறங்கியிருப்பதும் மாண்ட்காமரி தொடர்ந்தாற்போல் ஜயித்துவருவதும் இந்த வசந்தகாலம் முடிவதற்குள் ஆபிரிக்காவில் ஜெர்மன் பூண்டே இருக்காதென்றும், இதாலியையே படையெடுக்க நேரிடுமென்றும், ஐரோப்பாவிலுள்ள அச்சு நாடுகளைத் தொடர்ந்தாற்போல் விமானத் தாக்குதலுக்குள்ளாக்கி அச்சு நாட்டில் தொழிலும் போக்குவரத்தும் நடைபெறாமல் செய்ய நேரிடுமென்றும், ஏற்கனவே அச்சநாட்டு உபரி ரகங்கள் அடிபட்டுக் கிடப்பதால் வசந்தகாலம் வரும்போது ஹிட்லர் வேட்டையாடுவதற்குப் பதிலாக ஹிட்லரையே வேட்டை ஆடப்படலாமென்று அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். எவ்வாறாயினும் ஏற்கனவே பாய்ந்த ஜெர்மன் பூனை இனிப்பாயாது. பாய்ந்தாலும் காலொடிந்து நொண்டியாகிப் போய்விடும்.



ராணுவ விமர்சகர்த்தாக்களில் மிகவும் சீர்தூக்கிப் பேசுபவரான கியாப்டன் சிரில் பால்ஸ் என்பவர் வசந்த காலத்தைப்பற்றி பின்வருமாறு இருக்குமென்று சொல்லுகிறார். ருஷ்யப் போர்—"நடுப்பருவப்போர்" என்று அவரால் அழைக்கப்படுவது—மார்ச்சு முதல் தரை கெட்டிக்கும் வரையில்—எப்படியிருக்கும் என்று சொல்லுகிறார்.

"கியூபனில் ஆங்காங்கே சிறு போர்கள் நடக்கும். தெற்கே சிலகாலம் இப்போல் சும்மா விருப்பார்கள்; மாஸ்கோவுக்கு அருகே ருஷ்யர்கள் இடைவிடாது அதிகபலமில்லாமல் ஸ்மாலென்ஸ்க் பக்கம் அழுத்திக்கொண்டுபோவார்கள். லெனின்கிராட்டில் மற்றொரு பலத்த ஆனால் சிறிது கால அளவு மட்டில் நிற்கக்கூடிய முன்னேற்றம் நடைபெறும்."

வி வி வி வி வி வி வி

**டுனிஸியா.** வடமேற்கு ஆபிரிக்காவில் இறங்கின கொஞ்ச நாளில் ஜனரல் ஆண்டர்ஸனுடைய முதல் சேனை பிஸர்ட்டா, டுனிஸ் போய்விடுமென்று தோன்றினது. ஆனால் விதியின் துரோகத்தால் ஹிட்லர், ஜனரல் ஆர்னிமை இந்தப் பிரதேசத்திற்கு ஸிஸிலியை அடுத்த குறுக்கல் வழியாக அனுப்பி அங்கே சோறும் தண்ணியும் உதவியும் இல்லாமல் போனால், அதைவிட்டுப்போகாமல் இருக்கும்படி செய்ய நேரிட்டது. இதற்கிடையில் ரோமல் டுனிஸியாவிற்கு வாபஸ் வாங்கிக்கொண்டான்; டிரிபோலிடானியாவின் சேனைகளோடு கூடினதும் அச்சு பலம் 10 லக்ஷம் மனிதர்களுக்குச் சமானமானது.

இதனால்தான் மற்றபடி சுருக்காக முடியவேண்டிய போர் தாமதமாவது போல் தோன்றுகிறது. மாரெத் பாதுகாப்பைத் தாக்குவதற்கு மாண்ட்காமரி இவ்வளவு தயார் செய்து கொண்டதுபோல் தோன்றினது. அவர் போர் துவக்கினால் கண்டபடி செய்வதில்லை. எதிர்ச்சையாக நேர்ந்துவிட்டதென்ற பேச்சே இருக்காது. அவர் அடிக்கும்போது அடியோடு தொலைந்துபோகும். எல் அலமீனை விட்டு ஓடும்போது வெகுதூரம் ஆயிரம் மைல்கணக்காய் ஓடி வந்தது போல் ரோமல் மாரெத் பாதுகாப்பை விட்டு ஓடமுடியாது. எட்டிப் பார்த்தால் குறுக்கே சமுத்திரம் டுனிஸியா இருக்கிறது. கிராட் சொல்லுவதாவது "ரோமலுக்கு நான் நேர்த்தியான வாசஸ்தலம் வைத்திருக்கிறேன். என்னை அவர் நடத்தினதைவிட நான் அவரை நன்றாய் நடத்த வேண்டுமன்றோ?" ரோமலை மாரெத் பாதுகாப்பை விட்டு விரட்டினவுடனே ஜனரல் ரோமல் அவ்வளவு தான் என்றும் அவருடைய சேனை தப்பிக்கவழி இல்லையென்று ஜனரல் ஜிராட் நினைக்கிறான் போலிருக்கிறது. மிஸ்ட்டர் ஸ்டிம்ஸன் சொல்லுவதைப் பார்த்தால் "முடிவான வேலை நடந்தேறி வருகிறது."

தெற்கே இருந்து எட்டாம்படை தாக்கவும், மத்தியபாகத்தில் ஸெண்டிரல் ஸெக்டரில் அமெரிக்கர்கள் தாக்கவும், வடக்கே பிரிடிஷ் முதல் சேனை தாக்கவும் ஒரே காலத்தில் திருப்திகரமாகவே காரியங்கள் நடைபெறுகின்றன. மெட்லோவியா ஔடிரெப் ஆகிய இடங்கள் கேப்ஸுக்கு வடக்கே இருப்பவை என்பதோடும் கூட அவை எல் டெட்டார் காப்ஸா இவைகளுக்குப் போகும் மார்க்கத்தில் இருக்கின்றன. இந்த வழியாகத்தான் அமெரிக்கர்கள் போய்வருகிறார்கள். கேப்ஸுக்கு வெளியே பிரதான ரஸ்தா பிரிகிறது. ஒன்று காப்ஸாவுக்குப் போகிறது. மற்றொன்று ஸ்பாஸ்ஸுக்குப் போகிறது. வாடி அகரத் என்ற இடத்தில் ரோமல் எதிர்த்து நிற்கக்கூடும். இந்த இரண்டு ரோடுகளுக்கும் குறுக்கேதான் அந்த ஊர் இருக்கிறது.

அச்சுத் துருப்புகள் டுனிஸியாவைவிட்டு ஐந்துவாரங்களில் ஓடிப்போகுமென்று ஆஸ்திரேலியாவிலிருந்து நிபுணர்கள் ஆவலுடன் சொன்னபோதிலும், பிரிடிஷ் அதிகார பூர்வமான செய்தி எச்சரிக்கையுடனே பேசிவருகிறது. ஏனென்றால் பூமி எதிரியுடையது, அவன் ஏற்கனவே தயாரித்து வைத்த இடங்களில் தங்குகிறான். ரோமலும் முடிந்த வரையில் இழுத்துப்பிடித்து நிற்கும்படியாக உத்தரவு பிறந்து இருக்கிறது—இதற்குள் ஹிட்லர் ஐரோப்பாவில் அடிவயிற்றைக் கோட்டைகட்டிப் பாதுகாக்கவேண்டும்.

கடல் வழியாய் தப்பி ஓடிவிடலாமென்று ரோமலும் ஆர்னிமும் முயற்சித்தால் ராயல் கப்பற்படையினுல் அச்சுப்படைகளுக்கு டங்கர்க்கையும்விட பலமான சேதம் விளைவிக்கப்படும். ராயல் இந்தியக் கப்பற்படைக்கு மத்திய தரைக்கடலில் ஏற்கனவே அதிகபலம் உண்டு. இப்போது ஸிஸிலிக் கால்வாய்களுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் புதிய சண்டைக் கப்பல்களும், துப்பாக்கிகளும், ஆட்பலமும், டார்பிடோ குண்டு வீச்சுகள், மூழ்கி குண்டு வீசுபவை, பீரங்கிக் குண்டு வீசுபவை ஆகிய இயந்திர சாதனங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸிஸிலிக் கால்வாய்களைக் குறுகியவையென்று சொல்லுகிருர்களேயொழிய அது டங்கர்க் இங்கிலீஷ் கால்வாயைவிட ஐந்து மடங்கு பலமானவை. ஸ்டாலின் கிராட்டில் அனுபவித்தவர்கள் மறுபடியும் ஓரிடத்தில் டங்கர்க் வேலே நடத்த வேண்டாமென்ருல் ஹிட்லர் சொல்லுவதைப்போல் "செய் அல்லது சா" என்ற இரண்டில் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். இதோடு இந்த விபத்து முடியாது. இதாலியில் மீண்டும் தொடரும். (ஏப்ரல் 3) சனிக்கிழமை இதாலியர்களுக்கு ஆகாய ஒலி மார்க்கமாய் ஜெனரல் ஜிராட் சொன்னதாவது:—

"இதாலி விழித்துக்கொண்டது. இன்னும் சில மாதங்களுள், முடிவு காலம் கிட்டிவிடும். இதாலியைத்தாக்க ஆயிரக்கணக்கான வெடிகுண்டு வீழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. உங்கள் கைத்தொழில்கள், போக்குவரத்து சாதனங்கள், இதாலியர்களுக்கு உணவு அளிக்கும் ஒவ்வொன்றும் அழிக்கப்படும். சரித்திரத்தில் எந்த தேசத்திலும் கண்டறியாத அழிவை ஐயோ பாவம் இதாலி அனுபவிக்கப்போகிறது. ஆனுல் இன்னும் அவகாசம் இருக்கிறது. உங்கள் ஆயுதங்களைக் கீழே எறியுங்கள். இன்னும் சில வாரங்களில் அல்லது நாட்களில் தவறினுல் காலந்தப்பிப்போகும்."

ஜிராட் அவர்களின் வார்த்தை என்ன? அவர் விளையாட்டுக்குப் பேசுபவர் இல்லை. பயமுறுத்துதல், பிதற்றுதலும் அந்தச் சிபாய் செய்வதில்லை. மத்திய தரைக்கடலை காரிருள் மூடிக்கொண்டது. "நாம் ஆறு மாதங்களுக்கு முன் எதிர்பார்த்ததைவிட கூடிய சீக்கிரத்தில் சண்டை முடியலாம். ஜெர்மனியின் யுத்த இயந்திரம் நன்னியதான நூலில் தொங்கிக்கொண்டிருக்கிறது. கஷ்டமும், நெருக்கடியும் அதிகரித்து வந்தால், ஒரு பிளவு ஏற்பட்டால்போதும், பூரா இயந்திரமும் இருந்தவிடம் தெரியாது போகும்" என்று லார்டு ஹாலிபாக்ஸ் சொல்லி இருக்கிருர்.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லரின் செயலின்மை.** இப்போது ருஷ்யாவிலும் ஆபிரிக்காவிலும் அவன் தோல்வியடைந்து வருவதில் தெரிகிறது. செத்தவர் இருப்பிடமென்று நாம் நினைக்கும் நாட்டில் ஹிட்லருக்குக் கையாளும் பிறகு விரோதியுமான அட்மிரல் டார்லான் மேற்படி செய்திவை ஊர்ஜிதப்படுத்துகிருன். அவனைக் கொலை செய்ததற்கு சில நாட்களுக்கு முன் அமெரிக்கப் பத்திரிக்கை ஒன்றுக்கு அவன் விடுத்த செய்தியில் அவன் எழுதுவது "பிரான்ஸுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி ஹிட்லர் நிர்பந்திக்காவிட்டால் அவனுடைய துருப்புகள் உடன்காலத்தில் வடஆபிரிக்காவுக்கு வந்து அதைப் பிடிக்க ஆரம்பித்திருக்கும்."

வி வி வி வி வி வி வி

**தெய்வத்தின் சாபம்.** ஹாலந்திலுள்ள காதலிக் பிராட்டஸ்டாண்டு சர்ச்சுகள் சேர்ந்துகொண்டு ஹாலந்துயுவர்களை இப்படி ஆயிரக்கணக்கில் அடிமை வேட்டை ஆடுவது அடுக்குமாவென்று ஜெர்மனியைக் கேட்கிருர்கள். தேச பக்தர்களான ஜாக்களை வெட்டலாமா? தஞ்சம் புகுந்தவர்களையும் கொலை செய்யலாமா? மாதாக்கோவில் தொண்டர்களைக் கைது செய்யலாமாவென்று கேட்கிருர்கள். "தெய்வம் கேட்கும்" என்கிருர்கள்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனிக்குக் கல்வி போதிக்க.** ஜெர்மனியின் கல்விமுறையை மாற்றுவதில் யுத்தத்திற்குப் பிறகு ஒரு ஸ்தாபனத்தை ஜெர்மனியில் நியமிக்கவேண்டுமென்று லண்டன் இன்டர் நாஷனல்



அசெம்பளியும், அகில உலக மக்களுக்கு கல்வி கவுன்ஸிலும் சிபார்சு செய்கின்றன. இந்த நாஸி அட்டூழிய மரம் பாபப் படிப்புகளால் வளர்ந்ததென்று அவர்கள் சொல்லுகிருர்கள். ஜெர்மனியில் இறங்கும்படியான காலம்வரும், அப்போது ஐரோப்பா அமைதியாக இருக்கவேண்டுமானுல் அதன் கல்வி முறையை கெட்ட நாஸிக்கொள்கையிலிருந்து பிரித்து மாற்றவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**தென்மேற்கு பஸிபிக்** முனை அங்கே இப்போது நடக்கும் யுத்த முறையில் தனிப்பட்டது. அந்த இடத்தில் அநேக தீவுகளும் இடையிடையே கடல்களுமிருக்கின்றன. நியூ கினியா போன்றவை போல் புரியத்தக்க பெரியவை. மற்றவை விமான நிலயம் கட்டப்படுவதற்குக் கூடப்பெருத சிறியவை. பஸிபிக் யுத்த வரிசையோ பூ பாகம் சமவெளியும், மேடுபள்ளமும், மணல் பரங்கும் சதுப்பும் கலந்தவை. டச்சு டிமோரில் கிபங்கிலிருந்து ஸாலமன்ஸில் ஸான்கிரிஸ்டோபல்வரை, பூமி, கடல், காடு, மலை, நதி இவைகளை இடையிடையே உள்ளதாய் நீண்டதாய் ஒழுங்கில்லாததாய் இங்குமங்கும் போவதாய், ஒருபக்கமும் லக்ஷியத்திற்கு இலாயக்கில்லாததாய் இருக்கிறது. படைகளும், விமானங்களும், யுத்தக்கப்பல்களும் தாக்குகின்றன. 1941-ல் ஜப்பான் முன்வந்து சண்டைபோட்டதும், குடால்கனுர் கிழக்கு பாபுவாவை கையைவிட்டுப்போனது முதல் தென்கிழக்கு பஸிபிக்கில் நிலத்திலிருந்தும் கடலிலிருந்தும்தான் யுத்தம் நடக்கிறது. உதாரணமாக ராபலில் எதிரி 200 விமானங்களைச் சேர்த்த காலத்தில் ஆகாய மார்க்கமாய்த் தாக்கியதில் பாதி அழிந்தது. யுத்த பிரசாரங்களில் தினம் ஜப்பானியத் தளங்களை தாக்கினதாகத் திரும்பதிரும்ப வந்த செய்திக்கு இதுவே காரணம். நியூ பிரிடன், ரபால், காஸ்மாடா இவைகளில ஆகாயத்திலும், கேப், தேனிம்பர், அறு இந்தத் தீவுகளிலும் இப்போது ஆகாய மார்க்கத்தில் யுத்தம் நடைபெற்று வருகிறது.

வி வி வி வி வி வி வி

**பர்மா.** பாமா என்பவர் பிரெஞ்சு லவால், ஆசியாவில் பெர்லினுக்கு சமமாகவுள்ள டோக்கியோவிற்கு அவர் சென்றிருந்த சொந்த அலுவல், தேசபக்தியாலல்ல. பாமாவுக்கு வீட்டில் அநேக விரோதிகள் உண்டு. அவருடைய கட்டி வழுக்கிறது. அவர் "நெருங்கின ஒத்துழைப்பு வேலைக்காகப் போனவர்." தன்னுடைய கட்டியின் எண்ணையைத் துடைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்காகவே போயிருக்கவேண்டும். இந்தோ சைனுவிலிருந்து பார்மாவுக்கு ரயில் போடும் விஷயம் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

பர்மன் "சுயேச்சை" இப்போது வரையறுக்கப்பட்டது. ராஜீயமாகவும் பொருளாதார நிலைமையிலும் அது ஜப்பானுடன் "ஒன்ருதல்" என்று சொல்லப்படுகிறது. ஆனுல் ஜப்பான் பலத்தைக்கொண்டு "பர்மா" காப்பாற்றப்படும்.

வி வி வி வி வி வி வி

**அரக்கான் பிரதேசத்தில்.** ரேத் பாங்குக்கருகேஎதிரி கடந்து சென்று டான்பேக் என்னும் இடத்தில் தாக்கி வருவது உண்மையே. ஆனுல் அந்தப் போரில் நாம் கொண்ட நோக்கம் நிறைவேறி விட்டது. அக்யாப்பிலிருந்து இந்தியாவைத் தாக்க எண்ணம் கொண்டிருந்தது. அக்யாப் அழிந்ததோடு போயிற்று. ஜப்பானியர்களை வேறு நோக்கத்தில விட்டு இந்தியப் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன. எதிரியின் தந்திரங்களைப்பற்றி நெருக்கமான அறிவு கிடைத்தது. அவன் காட்டில் எதிர்ப்பதும் தன்னை மாய்த்துக்கொள்ளும் தற்காப்பும்.

வி வி வி வி வி வி வி

**யூ-படகுகளைப் பற்றி ஒரு வார்த்தை.** ஹிட்லரின் பாதாள ஆயுதம், ரேடியோ மூலம் இவற்றின இருப்பிடங்கள் அறிப்படுவதாக நேசதேசத்தில் சொல்லிக்கொண்டதற்கு தங்களுடைய பாக்குல்ப்களை நேசதேசத்துக்காவல் கப்பல்களைத்

தொடர்ந்து செல்லவிடுவதாகவும், அவை இந்தத் துணைக்காவல்களின் நிலைமை, வேகம், மார்க்கம் இவற்றை ஒலிபரப்பின் மூலம் தெரிவிப்பதாகவும், உடனே பெர்லினிலிருந்து அந்த வழியிலுள்ள எல்லா யூ படகுகளுக்கும் அந்தத் தகவல் ஒலிபரப்பப்படுவதாகவும் ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால் அவ்வார்த்தைகளைக் கண்டால் படுசேதம் நேரும்போல் தோன்றுகின்றனவே யொழிய காரியத்தில் ஒன்றுமில்லை. ஏனென்றால் வடஆபிரிக்காவில் இறங்கினது முதல் பத்து லக்ஷம் டன் பண்டகங்களும், ஐந்து லக்ஷம் மனிதர்களும் ஒரு கெடுதலுமில்லாமல் அவ்விடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எட்டாவது படை, முதல்படை, அமெரிக்கன் படை இவற்றிற்கு ஆகாரம் பூரணமாய் போய்ச்சேருகிறது. ருஷ்யாவிற்கும் ஆகாரம் குறைவுபட்டனுப்பவில்லை. முன்னம் இருந்ததைவிட புஷ்டியாய் அதிக கப்பல் கூட்டங்கள் ஐக்கிய தேசக் கொடிகளுடன் கடலில் இருக்கின்றனவென்று மிஸ்ட்டர் சர்ச்சில் மார்ச்சு 25உ தெரிவித்தார்.

---

# 1942-ம் வருஷத்திலிருந்த போர்முனையை அமைத்தல்.

## ருஷ்யாவில் ஜெர்மனியின் எதிர்ப்பு யுத்தம்.

(மேஜர் ஜெனரல் ஸர் சார்லஸ்க்வின்).

கார்காவ் நஷ்டமடைந்தது ருஷ்யர்களுக்குப் பெரிய ஏமாற்றமென்று தோன்றினாலும், ஸோவியத் துருப்புகளின் முக்கியமான பகுதியைச் சுற்று வளைத்துக்கொண்டு அதை நிர்மூலமாக்கி விடுவதுயென்று யோசித்து ஜெர்மானியர்கள் முயற்சி செய்ததை வீணாக்கவேண்டுவது முக்கியமான காரியமென்று ஸ்டாலின் தீர்மானித்தான். இந்தப் பிரயத்தனம் வீணாகிவிட்டது. நகரத்தைத் தற்காப்புச் செய்வதில் கடுமையாக் ருஷ்யர்கள் போர் புரிந்த போதிலும் யுத்த தந்திரத்தைப் புறக்கணித்து வீண் அகம்பாவத்தை நிறைவேற்றாமல் சாதுர்யமாக அவர்கள் பின்வாங்கி விட்டார்கள். கௌரவமான வெற்றிகளைப் பெறுவதற்காக ஜெர்மானியர்களும் கவசம் பூண்ட துருப்புகளை அந்நகரத்தைப் பிடிப்பதற்காக உபயோகப்படுத்தியிருக்கலாம். இந்தப் படைகளை ருஷ்யத் துருப்புகளை வளைத்துக் கொள்ளும் ஒத்திகையில் ஜெர்மானியர்கள் உபயோகமுள்ள வகையில் உபயோகப் படுத்தியிருக்கலாம். காலநிலை சரியாகயில்லாதபொழுது ருஷ்யர்கள் பின்வாங்கியதில் அவர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், பின்பற்றிவரும் எதிரித் துருப்புகளுக்கு ஏராளமான நஷ்டங்கள் விளைவித்து இருக்கிறார்கள். டான் நதியின் மத்தியப் பிரதேசத்தில் தீரத்துடன் நின்று யுத்தம் செய்ததால் சுற்றி வளைக்கப்படுவதிலிருந்தும் தப்பி விட்டார்கள். ஆகிலும் ஆபத்து நீங்கிவிடவில்லை. டானெட்ஸின் மத்தியப் பிரதேசத்தில் நதியைத் தாண்டுவதற்கும் பேயல் கிராட்டுக்குச்செல்ல வடக்கு மூலமாக நோக்கி முன்னேறவும் ஜெர்மானியர்கள் செய்துவரும் பிரயத்தனங்களும் இன்னும் நடைபெற்று வருகின்றன.

சேறு அதிகமாகயிருப்பதினால் ரஸ்தாக்கள் வழியாகவும் இருப்புப்பாதைகள் வழியாகவும் தான் முன்னேறவேண்டியிருக்கிறதென்று ஜெர்மானியர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அவர்கள் அதிகமாக முன்னேறினால் சிரமங்களும் அதிகரிக்கக் கூடும்.

இந்த பருவ காலத்தில் பலமாக முட்டுக்கட்டையாகயிருக்கக்கூடிய டானெட்ஸ் நதியின் அடிப்பக்கம் மத்தியபாகம் இரண்டிலும் யுத்த முனையை பலப்படுத்த ருஷ்யர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். திரும்பிப்பிடித்த இருப்புப் பாதைகளை மறுபடியும் அமைக்கும் வேகத்தைப்பொருத்து ருஷ்யாவின் முயற்சி ஈடேறும். இருப்புப்பாதைகள் நன்றாயிருந்தால்தான் ஒத்தாசைப் படைகள் சீக்கிரமாக வந்து சேருவதற்கும் பின்வாங்கும் துருப்புகளைத் திருத்தியமைப்பதற்கும் சௌகரியம் ஏற்படும்.

### பனி உருகும் நிலையானது நீங்கிவிடும்.

ருஷ்யத் துருப்புகளின் பெரும் பாகத்தை வளைத்துக்கொள்ளும் பிரயத்தனம் பலிக்காவிட்டால் என்ன செய்வது என்று ஜெர்மானியர்களின் நோக்கத்தைப்



பொருத்துத்தான் ஜெர்மானியர்களின் எதிர்ப்பு யுத்தம் எவ்வளவு காலம் நடைபெறும் என்று சொல்லக்கூடும். சென்ற மாரி காலத்திலிருந்த போர் முனையை, அதாவது ஓரலிலிருந்து டாகன்ராக்கு வரையில், மறுபடியும் அமைப்பதற்கு ஜெர்மானியர்கள் பிரயத்தனப்படலாம். சுற்றி வளைக்கப்படும் அபாயமிருந்த போதிலும் ஜெர்மானியர்கள் ஓரல் முன்னணிப்பகுதியில் நிலைபெற்றிருந்தார்களென்பதிலிருந்து மேற்சொல்லிய ஜெர்மனியின் உத்தேசம் வெளியாகுகிறது.

அந்த போர் முனையை ஏற்படுத்துவதென்றால் குர்ஸ்க்கையும் ஓரலுக்கும் கார்காவுக்குமிடையேயுள்ள இருப்புப்பாதையையும் ஜெர்மனி கைப்பற்றவேண்டும். இவைகள் கைப்பற்றப்பட்டால் சரியான தற்காப்பு கேந்திர ஸ்தானங்கள் ஜெர்மனிக்கு கிடைத்துவிடும். குர்ஸ்குக்கு மேற்கே ருஷ்யர்கள் செய்துவரும் முன்னேற்றம் நீங்கி ருஷ்யர்கள் பின்வாங்க நேரிடும். ருஷ்யர்களின் முன்னேற்றத்தினால் பிரியான்ஸூக்கும் கார்காவுக்குமுள்ள போக்குவரத்து மார்க்கங்கள் தடைப்பட்டுவிடும்.

பனி உருகிக்கொண்டிருக்கும்தருவாயில் இம்மாதிரியான மகத்தான நிகழ்ச்சிகள் செய்வது சாத்தியமா என்பது சந்தேகமாகயிருக்கிறது. இந்த மாரிகாலத்தில் உறைபனியின் கனம் சாதாரணமாகயிருக்கும் கனத்தில் மூன்றில் ஒரு பங்கு தானிருக்கிறது. ஆகையால் சகதி நிரம்பியிருக்கும் நிலைமையானது எப்பொழுதும்போல அவ்வளவு மோசமாயிராது அல்லது நீடித்துமிராது.

ஏராளமான ருஷ்யத் துருப்புக்களை வளைத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்க்குமென்றும், வருங்கால ஏற்பாடுகளுக்காகத் தேவையான கேந்திர ஸ்தானங்களை அடைந்துவிடுமென்று ஜெர்மானியர்கள் மதித்துப் பார்த்தாலொழிய, கஷ்டமான காலநிலைமையிலிருக்கும்பொழுது, இடைவிடாது எதிர்ப்பு யுத்தத்தை நடத்த அவர்களிடமுள்ள துருப்புகளை உபயோகப்படுத்துவது என்பது சம்பாவிதமில்லை. ஆகையால் யுத்த முனையில் நிகழ்ச்சிகள் சீக்கிரத்தில் நின்றுவிட்டால் அதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

மத்தியப் போர்முனையில் ஜெர்மானியர்கள் வியாஸ்மாவிலிருந்து தானாகவே பின்வாங்கிவிட்டாலும், ருஷ்யாவுக்குப் பெரிய லாபம் கிடைத்ததென்று சொல்லலாம். ஏனென்றால் மாஸ்கோவுக்கு ஏற்பட்டிருக்கும் பயம் அகன்றுவிட்டதோடு மட்டுமில்லாமல் ஸ்மாலென்ஸூக்கு வடக்கேயும், தெற்கேயுமுள்ள ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்களை எதிர்ப்பதற்கு ருஷ்யர்களுக்கு சந்தர்ப்பம் வாய்த்துவிடும்.

ஸ்மாலன்ஸ்க்கைப் பிடித்துவிடுகிறதென்ற பிரயத்தனம் சமீபகாலத்தில் செய்யப்படுமென்பதும் சம்பாவிதமில்லை. அது மிகவும் நன்றாய்ப் பாதுகாக்கப்பட்ட அரண். மேலும் அதைக் காப்பாற்றுவதற்கு ஒரு பெரிய ஜெர்மன்படை தயாராகயிருக்கிறது. பின்வாங்கும் ஜெர்மானியர்களை ருஷ்யர்கள் பலமாகத் தாக்கிவருகிறார்கள். ஜெர்மனின் தற்காப்பு யுத்தம் வலுவடையும்பொழுது ருஷ்யப் போர்முனையானது ஸ்மாலன்ஸ்க்குக் கிழக்கே கொஞ்ச தூரத்தில் சில காலத்துக்கு அமைக்கப்படும். இல்மென் ஏறிப்பகுதியில் ஸ்டாராயா ரூஸாவுக்கு அபாயம் ஏற்படும்படியாக ருஷ்யர்கள் செய்துவரும் யுத்தத்தை அவர்கள் நடத்திவரக்கூடும் இங்கேயும் வசந்த காலம் சீக்கிரம் வந்துவிட்டதால் அநேக கஷ்டங்களேற்பட்டுவிட்டன.

வேனிர் காலத்தில் ஜெர்மன் போர் திட்டத்தை ஒரு விஷயம் பாதிக்கக்கூடும். மாரிகாலத்தில் போக்குவரத்துக்காக ஏராளமான மோட்டார்களை ஜெர்மனி உபயோகிக்கவேண்டியிருந்ததால், அநேக வண்டிகள் நஷ்டமாகி விட்டன. அதிக உபயோகத்தினால் சில மோட்டார்கள் கெட்டுப்போய்விட்டன. ஆனால் ருஷ்யர்கள் போக்கு வரத்துகளுக்கு பனிக்கட்டியின் மீது வழுக்கிச் செல்லும் வண்டிகளை உபயோகித்ததால் வேனிர் காலத்தில் உபயோகப்படக்கூடிய வண்டிகள் அதிகமாக மாரி காலத்தில் உபயோகப்படவில்லை. இது சரியான அபிப்பிராயமென்று வைத்துக்கொண்டால் இதற்கு முன்னிருந்த வருஷங்களைவிட இந்த வேனிர் காலத்தில் சீக்கிரமாக நடமாடுவதற்கு ஜெர்மானியர்களுக்கு வசதிக்குறைவும் ருஷ்யர்களுக்கு வசதி ஜாஸ்தியும் ஏற்படும். வெகுதூரம் பரவியிருக்கும் இருப்புப்பாதைகள் மூலமாக போக்குவரத்துகளைச் சிரமமன்னி

யில் ஜெர்மானியர்கள் நடத்தமுடியுமாவென்பது நடப்பிலிருந்துதான் தெரியவரும். ஆகிலும் ஜெர்மனியின் யுத்த தந்திரங்களை போக்குவரத்து வசதிகள் விசேஷமாக பாதிக்கக்கூடும்.

### ஜெர்மானியர்கள் பின்வாங்கி விடுவார்கள்.

கார்காவை மறுபடியும் ஜெர்மானியர்கள் திரும்பிப் பிடித்ததற்கு முன் நீபர் நதிப்பிரதேசத்திற்குப் பின்வாங்கியும் லெனின்கிராட் முனையிலிருந்து பின்வாங்கியும் போர்முனைகளை ஜெர்மனி அதிகமாகக் குறுக்கிவிடப் போகிறார்களென்று சொல்லப்பட்டது.

வியாஸ்மா முன்னணி ஸ்தலத்தைத் தவிர மற்ற இடங்களிலிருந்து பின்வாங்கும் யோசனையை ஜெர்மானியர்கள் விட்டுவிட்டார்களா அல்லது தரை கெட்டியாகி நடமாட்டத்துக்கு வசதி ஏற்பட்டவுடனும் ருஷ்யர்களுக்கு மாரிகால யுத்தத்தினால் ஏற்பட்ட சிரமங்களுக்குப்பின் ஜெர்மானியர்கள் பின்வாங்குவதைத் தடுக்க அவர்களுக்குப் பலஹீனமாகயிருக்கும் பொழுதும் மகத்தான பின்வாங்குதல் செய்வதாக ஜெர்மனி உத்தேசித்திருக்கிறதா.

தெற்கு திக்கில் சென்ற மாரிகாலத்துக்கு முன்னிருந்த போர்முனையை மறுபடியும் அமைப்பதைவிட பின்வாங்குவதுதான் ஜெர்மனி செய்யக்கூடிய காரியம். இப்பொழுது ஜெர்மனி செய்த எதிர்ப்பு யுத்தமும், டானெட்ஸ் நதிப் பிரதேசத்திலிருந்து நீபர் நதிக்குப் பின்வாங்குவதற்கு வசதியேற்படுவதற்கும் வடக்கேயிருந்து விலாப்பக்கத்தில் ருஷ்யர்கள் தாக்குவதைத் தடுப்பதற்கும் முயன்ற ஏற்பாடுதான்.

கார்காவ் யுத்தத்துக்கு முன்னால் ஜெர்மனி பின்வாங்குவதென்பது சாத்தியமில்லை. ஏனென்றால் அப்பொழுது கிழக்கேயிருந்து ருஷ்யர்கள் பின்பற்றி வந்திருப்பார்கள். வடக்கேயிருந்து விலாப்பக்கத்தில் தாக்கியிருப்பார்கள். இப்பொழுது பத்திரமாக ஜெர்மனி பின்வாங்கிவிடலாம்.

---

## டுனிஸியப் படையெடுப்பின் தோற்றங்களில் சில.

வரப்போகும் வருஷங்களில் ராணுவ சிப்பந்திகள் கல்லூரிகளில் டுனிஸியப் படையெடுப்பைப் பிரியத்துடன் பாடமாக ஏற்றுக்கொள்ளுவார்கள். ஏனென்றால் நவீன யுத்த முறைகளுக்கும், போக்குக்கும் அது ஒரு உதாரணமாவிருக்கும். அதில் பிரயோகப்படுத்தப்படும் யுத்த தந்திரம் சிக்கலையானதென்றாலும், மனதைக் கவரக்கூடியது. எகிப்திலிருந்தும், அட்லாண்டிக்கிலிருந்தும் ஆபிரிக்காவின் குறுக்காகத் தெற்கு ஐரோப்பாவைத் தாக்குவதென்ற நேசதேச உத்தேசம் ஒருபுறம். ருஷ்ய முன்னணியில் பெரும் நெருக்கடி இருக்கும்போது ஐரோப்பாவைத் தாக்குதலுக்கு இடமாக்கக்கூடாதென்று அதைத் தாமதப் படுத்தி அதற்கு அணைகோலவேண்டும். இதற்காகத் தமது படையில் என்ன அழிவு நேரிட்டாலும் இடட்டுமென்று நேசதேசப் படைகளுக்கு இடையில் வேல் முனைபோல் சொருகி அந்தப் படைகளை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று ஜெர்மானியர் கொண்டுள்ள உத்தேசம் மற்றொரு புறம்.

ராணுவ இயந்திரத்தின் உறுப்பாக விமானப்படை வேலை செய்வதால் அதை எவ்வளவு தூரம் வளைத்து உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடும் என்பதைப் புதிய முறையில் நிரூபணம் செய்துகாட்டுகிறது இந்தப் போரே. லிபியாவில் போலவே மேற்குப் பாலைவன விமானப்படையானது ஜனரல் மாண்ட் காமரியின், காலாட் படையை நெருங்கித் தாங்கிக்கொண்டு பறந்துவரும் டாங்கிகளென்று உபயோகிக்கப்பட்டுவருகிறது. ஆகாயத்திலிருந்து அவைகள் வெடி குண்டுகளை வீசவல்லவையாகையால், பீரங்கிப் படைகளைப்போலவும் உதவுகின்றன. நிலத்திலும், கடலிலும் விரோதிகளுக்குப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக அவை இருக்கின்றன. ஆனால் விமானத்தில் வல்லமை காட்டுவதற்கு மிகவும் ருசிகரமானதும், முக்கியமானதுமான தருணம் இனித்தான் வரும். இன்றோ, நாளையோ என்றாகிலும் ரோமலின் படைகள் பின்னாலேயே சமுத்திரமும், மேற்கில் அல்ஜீரியாவிலிருந்தும், வடக்கில் மால்டாவிலிருந்தும், தெற்கில் பாலைவன விமானப்



படையிலிருந்தும் ஒரேகாலத்தில் மூன்று திக்கிலிருந்து ஆகாய வெடி குண்டு வீச்சுக்கு இரையாகும். குறுகின பிரதேசத்தில் எதிரியின் ராணுவ நிலயங்களும், தட்டுமுட்டுகளும், டிபோக்களும் போக்குவரவு சாதனங்களும் நெருக்கமாக இருக்கும். ஐரோப்பாவிற்கு கடல் மார்க்கமாகத் திரும்பலாமென்றாலோ முன்னும் எப்போதும் கண்டறியாத விஷயமாய், விமானங்களிலிருந்து அவற்றின் மீது தீ கக்கப்படும். ஆகாயத்தில் விமானப் பொறிகளுக்கு இடையே ஒரு சேனை அகப்பட்டுக்கொண்டால் அதன் கதி என்னவாகுமென்றும், அந்தப் பொறியை கலக்கி அடிப்பதற்காக, ஐரோப்பாவில் பாதுகாப்புக்காக 'வைத்துக்கொள்ளப் பட்ட பலத்தைக் குறைத்துக்கொள்ள எதிரி உருப்படுவாறுவென்பது போகப் போகத்தான் தெரியும்.

சர்ப்பாராவை எப்படி உருவமைத்து நடைபெறச் செய்வதென்பதுபற்றியும் இந்தப்போரில் யுத்த தந்திரப் பயிற்சியாளர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள் உண்டு. மூன்று ஸப்ளை ஸ்டோர்கள் இருக்கின்றன. அல்ஜீரியாவில் ஆங்கிலோ அமெரிக்கனுடையவும், எட்டாவது படையுடையதும், ஜெர்மானியருடையதும். மூன்றும் வெவ்வேறே என்றாலும் களத்தில் நடக்கும் சேஷ்டைகளின் ஜீவாதாரத்தில் அவைகளுக்குத் தகுந்த செலாவணி உண்டு. குறுகலாக நீண்டு கிடக்கும் கடலுக்கு அப்பாலுள்ள சேனையின் பாதுகாப்புக்குத் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் என்ன செய்யவேண்டுமென்பதை நிரூபித்துக் காண்பிப்பதால் ஜெர்மானியர்களுடைய ஸ்டோர்தான் போதனை அளிப்பதில் சிறந்ததாகும்.

யுத்தத்தையே தொழிலாகக்கொண்ட சிப்பாய் ஒருவனால் நன்கு சீர்தூக்கி ஆய்ந்தோய்ந்து பார்க்கக்கூடியவைகளில் சில சொல்லப்பட்டன. இந்தப்போரை ஒரு நாடகமாகக் கருதினால், இறுதித் திரைகளில் நாடக விஷயம் புலப்படுவது போல், யுத்தம் மேல் நடக்க நடக்க வெளிவரக்கூடிய நுண்ணிய விஷயங்கள் அசேஷ ஜனங்களுக்கும் புலப்படும். அப்படிப் புலப்படும் தோற்றங்களே அவற்றையும்விட பார்வைக்கு ரம்மியமான தோற்றங்களுக்குத் தோரணவாயிலாகும்.

---

## எட்டாம்படையின் தகவலறிவிப்பு சாதனங்கள் முன்னேறும் பொழுது நுட்பமான பாகங்களின் வேலை.

இப்பொழுது 8-ம் படையானது அதனுடைய மகத்தான சேவையில் இரண்டாவது பாகத்தை ஆரம்பித்துவிட்டது. ஆகையால் முதல் பிரயத்தனத்தில் தகவல் மார்க்கங்கள் எவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டு, ஒவ்வொரு நுட்பமான அம்சங்களும் ஒழுங்காக வேலை செய்தன என்பதை அறிவது ஸ்வாரஸ்யமான விஷயமென்று டைம்ஸ் பத்திரிகையின் ராணுவ நிருபர் எழுதுகிறார்.

தகவல் அறிவிப்பு ஏற்பாடுகளைப்பற்றி இதுவரையில் ஒன்றுமே விவரிக்கப்படவில்லை. முன்னேற்பாடுகளெல்லாம் சென்ற யுத்தத்தில் நடைபெற்றதற்கு ஒப்பிடக்கூடியவை. கெயிரோவிலிருந்து படைகளின் வரிசைக்கு 1,000 கெஜத்துக்குள்ளான ஒரு இடத்துக்கு தரைக்குள்ளாக கெயிரோவிலிருந்து தந்திக் கம்பிகள் அமைக்கப்பட்டன. ஆகாச மார்க்கத்திலும் மார்க்கங்கள் கற்பிக்கப்பட்டு அநேக குறி முள்ளுகளுடன் அமைக்கப்பட்டன. பீரங்கிகளைத் தயார் படுத்துவதில் உத்தரவிடுவதற்கு இவைகள் உபயோகப்பட்டன. முன்னேற்றம் ஆரம்பித்தபொழுது வெயர்லெஸ் மூலம் நம்முடைய நடவடிக்கைகள் வெளியாகி விடக்கூடுமென்று நினைத்து தந்திக்கம்பிகளும் போய்விட்டன. இதைச் செய்வதற்காக இஞ்ஜினியர்கள் வேலை செய்துவந்த பொழுது அவர்களுக்கு ஒத்தாசையாக தந்திக்கம்பிகளைப்போடவும் தகவலறிவிப்பு சாதனங்களை உபயோகப்படுத்த லாயக்கான உத்தியோகஸ்தர்களும் சென்றார்கள். தந்திக்கம்பிகள் அடிக்கடி அறுபட்டுப்போயின. அல்லது டாங்கிகளின் மார்க்கங்களில் அவைகள் எடுக்கப்பட்டன. ஆகிலும் கவசம்பூண்ட வண்டிகள் யுத்தத்தை நடத்துவதற்கு அவைகள் உபயோகப்பட்டன. அடுத்தபடியாக, யுத்த அமுலுக்கு வெயர்லெஸ்

உபயோகப்படுத்தப்பட்டது. அநேக கணங்கள் உபயோகப்படுத்தப்பட்டதால் வெயர்லெஸ் தகவல்களை அடிக்கடி மாற்றிமாற்றி உபயோகிக்க வேண்டியதாயிற்று. ஆனால் இது ஜாக்கிரதையாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது. இவைகளைத் தவிர டெலிபோனும் தந்தியும் உபயோகப்படுத்தப்பட்டன. இவ்விருமார்க்கங்களையும் வேகமாக அதிகப்படுத்துவதற்கு வேண்டிய சாமான்கள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. ஆகிலும் முதலெடுப்பில் முன்னேற்ற வேகத்தினாலும் மார்க்கங்களை எதிரி அழித்துவிட்டு ஓடினதாலும் முன்னணித் துருப்புகளிருக்கும் இடங்களுக்கு இந்த தந்தி மார்க்கங்களைக்கொண்டுபோக சாத்தியப்படவில்லை.

பிரிடிஷாரின் அபிப்பிராயப்படி எதிரிகள் ஏற்பாடு செய்திருந்த தந்தி மார்க்கங்கள் உபயோகமற்றவை. கம்பிகள் ஒன்றோடொன்று சரியாகப் பொருத்தியிருக்கவில்லை. தந்தி பேசும் சாதனங்களும் தந்திக்கம்பி சஞ்சாரமுள்ள பெட்டியை அமைத்து வேலைசெய்ய வேண்டுமானால், சேர்மானங்களையெல்லாம் திண்டாடி ஒரு மைலுக்குள்ளாக 160 கெஜ ஒட்டுகளைச் சேர்க்கவேண்டியிருந்தது.

டொப்ருக் வரையிலும் ரஸ்தாவை ஒட்டி ஒரு மார்க்கமும், இருப்புப் பாதையை ஒட்டி மற்றொரு மார்க்கமும் சென்றன.

### டிரிபோலியிலிருந்து பாக்டாட் வரையில் டெலிபோன் ஏற்பாடு.

டொப்ருக்கிலிருந்து அதற்கப்புறம் இருப்புப்பாதை கிடையாது. ஆகையால் ரஸ்தாவையொட்டி குறைந்தபக்ஷம் இரண்டு கம்பிகளுள்ள மார்க்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பிறகு அநேகம் கம்பி மார்க்கங்களும் போடப்பட்டன. ஜனவரி 30-ம் தேதியன்று எட்டாம் படையின் தகவலறிவிப்பு இலாகாவின் முக்கியமான உத்தியோகஸ்தர் டிரிபோலியிலிருந்து 2,500 மைல்கள் தூரத்திலுள்ள பாக்டாடுக்கு, அதாவது லண்டனுக்கும் மாஸ்கோவுக்குமுள்ள தூரத்தைவிட இரண்டு மடங்கு தூரமுள்ள இடத்துக்கு டெலிபோன் மூலம் தகவல் அறிவித்தார்.

கடல் மார்க்கமாக மெர்ஸா மாட்ரூ, டொப்ருக், பெங்காஸி, டிரிபோலி முதலிய துறைமுகங்கள் வழியாக சாமான்கள் வந்து சேர்ந்தன.

வேகமாக முன்னேறுவதால் தகவல் அறிவிப்பு மார்க்கங்கள் துரிதமாகப் போட முடியாதென்று தெரியவந்தது. ஆகையால் அதிக வேகம் பொருந்திய வெயர்லெஸ் கணங்கள் தலைமை காரியால ஆபீஸுடன்கூட கொண்டுவரப்பட்டு கெயிரோவுடன் தொடர்பு வைத்துக்கொள்ளப்பட்டது. ஆகையால் எதிரித் துருப்புகளைப் பின்பற்றிச் செல்லும் பொழுது வெயர்லெஸ் ஆப்ரேடர்கள் தான் முக்கியமான தகவல்களை அனுப்பி வந்தார்கள். அதேவிதமாகத்தான் படைகளுக்குள் தகவல் அனுப்புவதற்கும், நிர்வாக முறைகளுக்கும், யுத்த சம்பந்தமான உத்தரவுகள் சாதரா செய்வதற்கும் வெயர்லெஸ் உபயோகப்படுத்தப்பட்டது. வெயர்லெஸ் மூலமாக எதிரியின் பின்னணித் துருப்புகளைத் தாக்கும் நமது படைகள் உபயோகமுள்ள தகவல்களை அனுப்ப முடிந்தது. அநேக ஜீவன்களைக் காப்பாற்றுவதற்காகத் தேவையான சிகிச்சை சாமான்களை ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்ப சாதகம் ஏற்பட்டது. எட்டாம்படையின் வெயர்லெஸ் கணங்களைப் பரிபாலிப்பதற்காகவே வெயர்லெஸ் ஸப்ளைகள் அவசியமாகயிருந்தன. ஒவ்வொரு வெயர்லெஸ் பெட்டியிலும் மோட்டார் காரிலுள்ள பாட்டரிக்குச் சமானமான கனமும் பருமனுமுள்ள இரண்டு பாட்டரிகள் உபயோகப்படுத்தப்பட்டன. இவைகளுக்கு மறுபடியும் மின்சார சக்தி உண்டாக்கவேண்டும். திராவகமும், சுத்த ஜலமும் நிறப்பவேண்டும். வெயர்லஸ் கணங்களை மாற்றுவதற்கும் ரிபேர் செய்வதற்கும் யந்திரசாலைகளும், தளவாடங்களும், உபரி சாமான்களும் அவசியமாகயிருந்தன.

இந்தப் பிராணத்தை மேல் மேலும் ஆராய்ச்சி செய்தால் முதலெடுப்பில் இந்த ஏற்பாடுகள் சென்ற யுத்தத்தில் நடை பெற்றதுபோலிருந்தன என்று சொன்ன உபமானம் சரியாகவில்லையென்று தோன்றும். ஆகையால் இந்தத் தகவலறிவிப்பு விஷயம் மகத்தானது ரொம்பவும் கஷ்டமானது. ஆகிலும் நமது ஏற்பாடுகள் வெற்றிகரமாகவே நடைபெற்றன.



# விமானப்படையில் மூன்று முக்கியமான மாறுதல்கள்.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகை).

விமானப்படையில் மூன்று முக்கியமான மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றனவென்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வகையிலும் முக்கியமான மாறுதல்களும் முன்னேற்றமும் ஏற்படக்கூடும். அவையாவன:—

(1) பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படைகள் நீர்மூழ்கிகளைக் கண்டுபிடிப்பதற்காக ரோந்து செய்வதற்கு ஹெலிகாப்டர் விமானங்களை உபயோகிப்பது.

(2) வட ஆபிரிக்காவில் டாங்கு பஸ்டர் என்ற கவசம் பூண்ட ஹரிகேன் விமானப்படைகளை அமைப்பது.

(3) அமெரிக்காவில் சாமான்கள் ஏற்றிப் போகக்கூடிய விமானங்களைத் தயாரிப்பது.

ஹெலிகாப்டர் விமானங்கள் புதியவையல்ல. ஆகிலும் இவைகள் சம்பந்தமாக நான்கு வருஷங்களுக்கு முன் மிஸ்டர் இகார் ஸிகார்ஸ்கி என்பவர் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தவரையில் இவைகள் வெற்றிகரமாக வேலை செய்யவில்லை. வாட்—ஸிகார்ஸ்கி ஹெலிகாப்டர் விமானம் உயரவும், முன்னும், பக்கவாட்டிலும், பின்னும், வட்டமாகவும் அதன் வேகத்துக்குட்பட்டு ஜாக்கிரதையாகவும் பறந்து செல்லும். முன் பக்கமாக மணிக்கு 100 மைல்களும், மற்ற திக்குகளில் மணிக்கு 25 மைல்களும் பறந்து செல்லும். அது தரையிலும் சமுத்திர மட்டத்திலும் இறங்கிவிடும்.

இந்த ஹெலிகாப்டர் விமானத்தை சிலாக்கியமாகவும் அதிக வலுவுள்ளதாகவும் செய்து அமெரிக்கக் கடற்படைக்கு ஸப்ளை செய்வதென்ற திட்டம் ஏற்பாடாகியிருக்கிறது. இந்த விமானங்கள் பிரிடிஷ் கடற்படைக்கும் அனுப்பப்படும். ஹெலிகாப்டர் விமானத்தைத் திருத்தியமைப்பது இப்பொழுது ஆரம்ப நிலையிலிருந்து வருகிறது. இது சுமந்து செல்லக்கூடிய பளு குறைவாகத்தான் இருக்கும். இதன் பறக்கும் சக்தியும் மிதமானது. ஆனால் சாமான் கப்பலின் மேல் தட்டு போன்ற குறுகலான பிரதேசங்களிலிருந்து புறப்படவும் அங்கே இறங்கவும் இந்த விமானத்துக்குச் சௌகரியமுண்டு. வெகு தூரம் அதிவேகமாகச் செல்லக்கூடிய சாதாரண விமானங்களுக்குப் பதிலாக ஹெலிகாப்டர் விமானங்கள் உபயோகப்படாவிட்டாலும், சில முக்கியமான காரியங்களுக்கு அவைகள் உபயோகப்படக்கூடும்.

இரண்டாவது முக்கியமான ஏற்பாடு "டாங்க் பஸ்டிங்க்" ஹாகர் ஹரிகேன் விமானங்கள்—இவைகள் அழகான, சக்திவாய்ந்த ஹாகர் ஹரிகேனுடைய வேறுபாடான அமைப்புகள். இதில் இரக்கைகளுக்கு அடிபாகத்தில் பெரிய வாய் உள்ள பீரங்கி தொங்கவிட்டிருப்பதைத் தவிர அதில் அதிக கவசம் இல்லை. சண்டைபோடும் விமானங்களில் இதுவரையில் வைத்திருந்த பீரங்கிகள் 37 மிலிமீடர் (அதாவது $1\frac{1}{2}$ இஞ்சு) துவாரமுள்ளவை. இவைகளிலிருந்து 1.1 பவுண்டு உள்ள குண்டுகளைப் போடலாம். விமானத்திலிருந்து கனமான பீரங்கிகளை உபயோகிப்பதற்காகச் செய்யும் முயற்சியில் அதிக வேகமாகச் செல்லும் பொழுது அநேக குண்டுகளைப்போட சக்தியுள்ள பீரங்கியை அமைப்பதுதான் முக்கிய ஏற்பாடு. டாங்க் பஸ்டிங்க் ஹரிகேன் விமானங்கள் தரையிலுள்ள படைகளையும் சமுத்திரத்திலுள்ள கப்பல்களையும் தாக்குவதற்கு உபயோகமுள்ளதாகயிருக்கும்.

கடைசியாக ஆகாயத்தில் செல்லக்கூடிய சாமான் ஏற்றிப்போகும் விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் கர்டிஸ்—ரைட், காரவன் விமானங்கள் விமானப் போக்குவரத்துக்கு சாதகமானவை. இந்த விமானங்களில் இரண்டு மோட்டார்களிருக்கின்றன. ஒருவர் ஏறிச் செல்லலாம்.' முதலெடுப்பில் குறைந்த செலவிலும் சீக்கிரமாகவும் கட்டப்படும். கனமான சாமான்களை ஏற்றிச்செல்லக்கூடும். சாமான் வைக்கக்கூடிய பிரதேசம்

அதிகமாகவுமிருக்கும். இது ஆகாயத்தில் சாமான் கொண்டுபோகும் மோட்டார் போன்றது. வேகம் குறைக்கப்பட்டு விட்டதால் இந்த விமானங்கள் மெதுவாகச் செல்லும். ஆகிலும் இவைகள் மணிக்குச் சாதாரணமாக 140 மைல்கள் செல்லக் கூடும். நியூகினியாவிலிருப்பதுபோல் மலைப் பிரதேசங்களிலும், காடுகள் வழியாகவும் ஏராளமான சாமான்களைக் கொண்டுபோகிறதற்கு லாயக்கான சாதனங்களைவிட இந்த விமானங்கள் வேகம் பொருந்தியவை.

இப்பொழுது ஏற்பாடு செய்யப்படும் விமானப்படை மாறுதல்களில் இவை மூன்றும் முக்கியமானவைகள். பிரிடனிலும் அமெரிக்காவிலும் விமானப் படை அமைப்பில் விசேஷ மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. சென்ற 40 வருஷங்களாக விமானங்களில் பறந்து செல்லும் ஏற்பாட்டை ஆரம்பித்ததிலிருந்து இதுவரையிலில்லாத முன்னேற்றங்கள் வரப்போகும் பத்து வருடங்களில் ஏற்படப்போகின்றன.

---

## மாடம் சியாங் கை ஷேக்.

(டாரதி தாம்ஸன்.)

சைனு ஜெனரலிஸிமோ சியாங் கை ஷேக்கின் மனைவியாரான மாடம் சியாங் கை ஷேக் பெற்றுக்கொண்ட குதூகலமான வரவேற்பு எங்கள் தேசத்திற்கு வந்த மற்ற யாரும் பெறவில்லை. மாடம் சியாங் கை ஷேக் அமெரிக்காவை நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார். இங்கு வெல்லெஸ்லியாவில் படித்தவர். அவருக்கு அங்கு அநேகம் நண்பர்கள் இருக்கின்றனர்.

அமெரிக்காவின் இந்த நூற்றுண்டின் கொள்கைகள் அவரிடம் பதிந்திருக்கின்றன. அதிகமான வேலையினுல் அவர் சிறிது களைப்படைந்திருக்கிறார். சைனுவிற்குத் திரும்புவதற்குமுன்னுல் அவர் சிறிதுகாலம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். நான் இந்த வாரம் அவரைப் பார்த்தேன். அவரின் தாய் தந்தையர் அவருக்கு "மேலிங்" (Mayling) என்ற பெயரை சரியானபடி வைத்திருக்கின்றனர் என்று நினைத்தேன். "மேலிங்" (Mayling) என்பது "அழகான பெண்" என்று பொருள்படும். சைனு ஜெனரலிஸிமோவின் மனைவி மிகவும் அழகுள்ள ஸ்திரீ. அவர் ஒரு உத்தமமான சைனுதேசத்து தந்தத்தைப்போன்ற அழகுடையவர். அவரின் உடல் வெண்பட்டு பட்டுத்துணிபோன்ற நிறமுடையது. அவருடைய கண்கள் நல்ல கறுப்பாயும் பளபளப்பாயும் மிருதுவாயும் இருக்கின்றன.

அவர் பேசும்பொழுது, அதிக வேலையினுல் பரபரப்பான பத்திரிகை நிருபரையும் வசப்படுத்தக்கூடிய ஆவேசத்துடன் பேசுகிறார். ஒரு சிறிய அழகான ஆபரணம்போல் காணப்படும். இந்த மாது வீரியத்துடனும் ஆர்வத்துடனும், நிதானத்துடனும் காரியாகாரணங்களுடனும் பேசுகிறார். நம்நாட்டு பாஷையில் வருங்கால விஷயங்களைப்பற்றியும் பேசுகிறார்.

நாங்கள் ஸ்திரீகளைப்பற்றியும் வருங்கால உலகில் ஸ்திரீயின் வேலையைப் பற்றியும் பேசினேம். மாடம் சியாங் கை ஷேக் ஸ்திரீகளின் அபார சக்தியில் நம்பிக்கை வைத்திருக்கிறார். கடந்த 50 வருஷங்களாக உலகெங்கும் ஸ்திரீகளின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற பெரிய புரட்சியின் பலனை இனிமேல் காணலாம் என்று அவர் நம்புகிறார்.

அவர் இங்கிலாந்து தேசத்து ஸ்திரீகளால் தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் மற்றும் அநேக பெரிய இயக்கங்களிலும் செய்யப்பட்ட மகத்தான சேவைகளைப்பற்றி பேசினுர். அவர் அந்த ஸ்திரீகளைப்பற்றி மிகவும் பாராட்டி அவர்களிடம் அன்புடனும் பேசினுர். சீன ஸ்திரீகளின் வேலைத்திறமை, கஷ்டங்கள், தீரம் தைரியம் இவைகளைப்பற்றி பேசினுர். அவர் சொன்னதாவது:— 'ஸ்திரீகள் புருஷர்களைவிட தைரியசாலிகள் என்று நம்புகிறேன். தைரியம் என்றுல் நான் யுத்தகளத்திலுள்ள தைரியத்தைப்பற்றி பேசவில்லை. ஆனுல்



ராஜீய விவகாரங்களை வகிக்கக்கூடிய தைரியம். புருஷர்கள் எப்பொழுதும் தங்கள் வேலைகளிலும், உரிமைகளிலும் நினைவாயிருப்பதால்தான் இதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். அவர்கள் ஒரு புதிய இன்னும் மேன்மையான உலகத்தை உண்டாக்குவது மிகவும் கஷ்டமென்று நினைக்கிறுர்கள். தங்களுடைய உரிமைகள் எப்படி பாதிக்கப்படுமென்றும் அவர்கள் பயப்படுகிறுர்கள். ஆனுல் ஸ்திரீகள் ஏதாவது காரியம் செய்யவேண்டுமென்றுல் மிகவும் பிடிவாதத்துடன், செய்தே முடிக்கிறுர்கள்.

"என்னசெய்ய வேண்டுமென்றுல் இந்த யுத்தத்திற்குப் பிறகு, யுத்தமே ஏற்படாமலிருப்பதற்கு ஒரு புதிய உலகை அமைக்கவேண்டியதுதான். அதைச் செய்தாகவேண்டும். அதைச் செய்வதற்கு நீங்கள்தான் உரியவர்கள். ஏனென்றுல் எழுதப்படிக்கத்தெரிந்த நீங்கள் உங்கள் நாடுகளிலுள்ளவும் உலகிலுள்ளவும், ஸ்திரீகளுக்காக எழுதவும் பேசவும் வேண்டும். அதாவது இதைச் சாதிக்க வேண்டியதில் கஷ்டங்கள் தோன்றினுல் அவைகளை பொருட்படுத்தாதீர்கள். உங்களுடைய வார்த்தைகளைக் கேட்கும் எல்லா ஸ்திரீகளிடமும் பேசி அவர்களிடம் பின்வருமாறு சொல்லவேண்டும். சினுவில் குழந்தைகளுக்கும், ஸ்திரீகளுக்கும் ஏற்பட்டவும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறவுமான கஷ்டங்கள் மறுபடியும் ஏற்படாமலிருக்க புதிய உலக அமைப்பின் மூலம் உங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற ஒன்று சேரவேண்டும்."

அவருக்கு செல்வாக்கின் திறமையை அதிகம் கவனியுங்கள். அவர் யுத்தத்தை நிறுத்தி சமாதானம் நிலைநாட்டுவதற்கு எல்லா சர்வதேசச் சங்கம்தான் அதைச் சாதிக்கும் என்று நன்கு அறிந்திருக்கிறார். மேலும் யுத்தத்திற்குப்பிறகு நேசதேசங்கள், ஒன்றுபட்டு இதை தடுப்பதற்கு சக்தி இருக்கிறது என்றும் நம்புகிறார். ஒரு தேசம், பெரிதானுலும், சிறிதானுலும், ஆபத்தில்லாமல் சௌக்கியமாக தனிமையாக உலகில் நிற்கமுடியாது. அவர் சைனுவில் சிறந்த மாது. இன்னும் அதிகமாகச் சொல்லலாம். உலகிலேயே முதன்மையான மாதர்களில் ஒருவர். எல்லாதேசத்து ஸ்திரீகளிடத்திலும் மதஸ்தர்களிடத்திலும் தாராள நோக்கமும் மனப்பான்மையும் கொண்டவர்.

---

## பஸிபிக் யுத்த நிலைமையின் விமர்சனம்.

(A. D. ராத்மான்).

பஸிபிக் யுத்த நிலைமையைப் பூராவும் மதித்துப்பார்க்க அமெரிக்காவில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பிரிடிஷ் அயல் நாட்டு மந்திரியான மிஸ்டர் அந்தோணி ஈடனும், தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள நேசதேச விமானப்படை தளகர்த்தரான லெப்டினண்ட் ஜெனரல் கென்னடியும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததிலிருந்து நடைபெற்ற விவாதங்களின் விளைவுகள் இவை. இந்த விவாதங்களில் தென்மேற்குப் பஸிபிக்குப் போர்முனைக்கு மட்டுமில்லாமல், பஸிபிக் சமுத்திரத்திலுள்ள எல்லா கடற்படைக்கும் அதிக படைபலம் அனுப்பப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தப்படுகிறது. பஸிபிக் சமுத்திரத்தில் ஏராளமான படைபலத்தை உபயோகிக்காமலேயே ஜப்பானியர்களை இப்பொழுது தேக்கிவிடலாமென்று சொல்லும் கக்ஷிக்கு ஆதாரமாகச் சொல்லப்படும் வாதங்களில், அமெரிக்காவில் புதிதாகக் கட்டப்படும் கப்பல்களின் பெரும்பாகம் பஸிபிக் சமுத்திரப் போர்முனைகளுக்கு அனுப்பப்படுகிறதென்றும், ஜப்பானை முறியடிப்பதற்கு சாவதானமாகச் செய்துவரும் ஏற்பாடுகளில் இது ஒன்றென்றும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. எல்லாவற்றையும்விட கடற்படைதான் ஆஸ்திரேலியாவுக்கு முக்கியமான ரக்ஷணை செய்துவருகிறது.

இனிமேல் ஜப்பான் மகத்தான எதிர்ப்பு யுத்தத்தை நடத்தாது என்றும், ஹேஷ்யங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுவிடுமென்றும் நினைத்து, ஜெர்மனி யுத்தத்தை நிறுத்தியவுடன்

ஒன்றுபட்ட நேசநாடுகளின் தாக்குதல்களை ஜப்பான் தன்னந்தனியாக சமாளிப்பதற்குவேண்டிய திட்டங்களைச் செய்துவருகிறதென்றும் தோன்றுகிறது. இந்த முறைப்படிதான் ஜப்பானின் புதிய சாம்ராஜ்ய எல்லைச் சரகங்களில் படை பலம் அதிகப்படுத்தப்படுகிறதென்றும், அவ்விடங்களில் ஜப்பான் புதிய தளங்களை நிர்மாணிக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

இனிமேல் வேறு பக்கத்தில் ஜப்பான் யுத்தம் ஆரம்பிப்பதென்றால், அது ஆஸ்திரேலியாவிலில்லை. ஆஸ்திரேலியாவிடமிருந்து ஜப்பானுக்கு அபாயமுண்டாகுமென்று ஜப்பான் எதிர்பார்க்கவில்லை. மிட்வே தீவுகளிலோ அல்லது ஹவாய் தீவுகளிலோதான் ஜப்பான் யுத்தம் ஆரம்பிக்கும். இவைகளிலிருந்து தான் ஜப்பானியத் தீவுகளைத்தாக்க ஐக்கிய நாடுகள் செய்யப்போகும் யுத்தத்தின் கிடுக்கியின் ஒருமுனை ஆரம்பமாகும். கிடுக்கியின் மற்றொருமுனை பர்மாவிலிருந்தோ, சைனாவிலிருந்தோ புறப்படும்.

---

## சைனா முன்னேறித் தாக்குவதற்கு லாயக்கான தளம்.

(ஸ்ட்ரபால்கி பிரபு).

ஜப்பான் 100 டிவிஷன்களடங்கிய படைகளைத் தயாரித்திருக்கிறது. ஒரு ஜப்பானிய டிவிஷனில் 18,000 முதல் 20,000 வரை துருப்புகளுள்ளது. ஜெர்மன் பான்ஸர் படைகளைப்போல கவசங்களும் யந்திர சாதனங்களும் ஜப்பானியர் வசமில்லை. அல்லது பிரிடிஷ் அமெரிக்கப் படைகளிடமுள்ள பகுதிகள் போலவும் முஸ்தீப்புகளில்லை. ஜப்பானுடைய பெரிய டாங்கிப் படை என்பது ஒரு சிறிய படைவகுப்புத்தான். ஜப்பானில் கனமான யுத்த தளவாட உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் குறைவும் ஜப்பானியத் துருப்புகள் செய்துவரும் யுத்த முறைகளும்தான் இவைகளுக்குக் காரணம்.

ஐரோப்பிய நாட்டாரின் யுத்த முஸ்தீப்புகளோடு ஒப்பிட்டால் ஜப்பானியப் படைகளுக்கு அதிக முஸ்தீப்புகளில்லையென்று சொல்ல வேண்டும். ஆகிலும் சைனாவில் போர் புரிவதற்கும் மலேயா, பிலிபைன்ஸ் தீவுகள், தென் மேற்கு பஸிபிக்கிலுள்ள தீவுகள் போன்ற கடல் தாண்டி செய்யக்கூடிய யுத்தங்களுக்கும் அவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டிருக்கிறது.

ஜப்பானின் 100 டிவிஷன் துருப்புகளில் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் பத்து டிவிஷன்களை உள்நாட்டில் தேக்கிவைத்தும், பர்மா முதலிய இடங்களில் வெற்றி பெறுவதற்காக 25 டிவிஷன்களும் ருஷ்யாவின் ஸைபீரிய எல்லைச் சரகத்திலும் மங்கோலியாப் பிராந்தியத்தில் ருஷ்யாவின் ரக்ஷணைக் குட்பட்ட நாடுகளிலும் 33 டிவிஷன்கள் கொண்ட படைகளும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. சைனாவில் 32 டிவிஷன்கள் போர் புரிந்து வருகின்றன. ஜப்பானின் விமானப் படையில் 8-ல் ஒரு பாகம் சைனாவில் ஈடுபட்டிருக்கிறதென்று கணக்கிடப்படுகிறது. சைனா யுத்தத்தில் கலந்து கொண்டிருக்கும் தரைப் படைகளைத் தவிர போக்குவரத்தும் படைகளும் இன்னும் பல வகைப்பட்ட முக்கியமான பகுதிகளுமிருக்கின்றன. எல்லாம் சேர்ந்து சைனாவில் ஜப்பானின் ராணுவ பலமானது 10 லக்ஷம் ஜனங்களுள்ளதாகயிருக்கிறது.

### சைனாவின் நிலைமை.

சைனாவில் $5\frac{1}{2}$ வருஷங்கள் யுத்தம் நடந்த பிறகு ஜப்பானியர்களுக்கு 2 மிலியன்கள் ஜனங்கள் நஷ்டமாயிருக்கின்றன. யுத்த முனையில் அநேக முக்கியமான தோல்விகள் ஏற்பட்டிருக்கின்றன. கடற்கரை மாகாணங்களின் பெரும் பாகத்தையும் முக்கியமான நதிகளின் முகத்துவாரங்களையும் அவைகளைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் ஜப்பானியர் பிடித்துவிட்டார்கள். மங்கோலியாவின் பாதிபாகத்தையும் அவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள்.



பர்மா, தாய் நாடு, பிரெஞ்சு இந்தோ-சைனா முதலிய இடங்களை ஜப்பானியர்கள் ஆக்கிரமித்ததிலிருந்து சைனாவின் மத்திய, மேற்கு, வடக்கு மாகாணங்களில் யுத்தத்தை சமாளித்து வரும் தேசிய அரசாங்கத் துருப்புகளுக்கு முற்றுகை யேற்பட்டு விட்டது. வட இந்தியாவுடன் தரை மார்க்கமாகப் போக்குவரத்து நடத்த சைனாவுக்கு வசதியில்லை. பர்மாவின் முக்கியமாக இருப்புப் பாதையுள்ள லாஷியோவிலிருந்து, சைனாவின் தலை நகரமாகிய சுங்கிங்குக்கு ரொம்ப பிரயாஸையுடன் போடப்பட்ட பர்மா ரஸ்தா என்று சொல்லப்பட்ட போக்குவரவு மார்க்கத்துக்கு பதிலாக வட கிழக்கு இந்தியாவிலுள்ள மலைப் பிராந்தியங்களின் வழியாக மற்றொரு ரஸ்தாவை ஏற்பாடு செய்ய வேலை நடைபெற்று வருகிறது. பர்மாவின் வட கிழக்கிலும், இந்தோ சைனாவின் வடக்கு பக்கத்திலும் ஜப்பான் சமீபத்தில் செய்துவரும் நடவடிக்கைகளிலிருந்து, மேலே சொல்லிய புதிய ரஸ்தாவைத் துண்டித்துவிடவும் அதன் மூலமாக வட இந்தியாவிலிருந்து சுங்கிங்குக்குப் போகும் போக்குவரவு விமானங்களைத் தாக்குவதற்கும் ஜப்பான் பிரயத்தனம் செய்யக்கூடும். சைனாவுக்கும் மற்ற நேச நாடுகளுக்கும் விமானங்கள் மூலமார்கத்தான் இப்பொழுது முக்கியமாக நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

### அபாயகரமான விளைவுகள்.

சைனாவை ஜப்பானியர்கள் முறியடித்துவிட்டால் அங்கிருக்கும் 32 டிவிஷன்கள் கொண்ட படை பலத்தை அப்புறப்படுத்தி கிழக்கு ஸைபீரியாவையோ அல்லது இந்தியாவையோ தாக்க உபயோகப்படுத்தக்கூடும். ருஷ்யாவை ஜப்பான் தாக்கினால் ஐரோப்பாவிலுள்ள அச்சு நாட்டாரின் உதவிக்காக இரண்டாம் போர் முனையை ஏற்படுத்தியதுபோலாகும். ஆகையால் உடன் காலத்திலேயே சீனாவுக்கு உதவியனுப்ப வேண்டுமென்ற விஷயத்தை அமெரிக்காவும், பிரிடனும் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள்.

நேசநாடுகளுக்கு அனுப்பும் உதவிகளில் சைனாவுக்கு முதன்மையான இடம் அளிக்க வேண்டுமென்பதற்கு மற்றொரு காரணமுண்டு. இதே விஷயத்தைப்பற்றி கஸாபிளாங்கா மகா நாட்டிற்குப் பிறகு அமெரிக்காவுக்குத் திரும்பி வந்தவுடன் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு சொற்பொழிவில் பேசியிருக்கிறார். அவர் சொன்னதாவது "ஜப்பானை இறுதியில் முறியடிப்பதற்கு, பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள ஒவ்வொரு தீவாகப்பிடித்து மெதுவாக நாம் முன்னேறுவோமென்று எதிர் பார்க்காதீர்கள். சைனா பிரதேசத்திலிருந்து ஜப்பானைத் துரத்தியடிக்க மகத்தான தீவிரமான நடவடிக்கைகள் நடத்தப்படும். சைனாவிலுள்ள ஜப்பானியர்களையும் ஜப்பான் தேசத்தையும் வெடி விமானங்களால் தாக்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும், நேச தேசத்தார்கள் எடுத்துக்கொள்ளப் போகும் யுத்த முறைகளை இந்தச் சொற்பொழிவு நன்றாய் விளக்கிக் காட்டுகிறது. ஆசியா கண்டத்தின் பரப்பிலிருந்து ஜப்பானியர்களை விரட்டியடித்துவிட்டால் ஜப்பானியத் தீவுகளைத் தாக்குவதற்கு சைனா ஒரு முக்கிய தளமாக உபயோகப்படும்.

### முன்னேறித் தாக்குவதற்கு சைனா தளம்.

சைனாவின் துறைமுகங்களிலிருந்து கொண்டு ஜப்பானைச் சுற்றிலும் கடல் முற்றுகை செய்து விடலாம். கிழக்குச் சைனாவிலிருக்கும் விமான தளங்களிலிருந்து வெடி விமானங்கள் மூலமாக ஜப்பானுடைய பெரிய தொழிற்சாலைகளையும், கப்பல் கட்டும் நிலயங்களையும் தகர்த்து விடலாம். ஆனால் சைனாவின் தீரமும், ஊக்கமும் பயன்படாமல் போய் சைனா சரண்புகும்படியாக ஏற்பட்டால் மேலே சொல்லிய சாதகங்கள் பிரயோஜனமில்லாமல் போய்விடும்.

ஜெனரலிஸிமோ சியாங் கை ஷேக் 7 மிலியன் துருப்புகளைச் சேர்த்து பயிற்சியளித்திருக்கிறார். அவர்களிடம் லேசான ஆயுதங்கள் தானிருக்கின்றன. முக்கியமாக துப்பாக்கிகளும் யந்திர பீரங்கிகளும், சைனாவில் உண்டுபண்ணப்பட்ட லேசான சட்டி-பீரங்கிகளுமிருக்கின்றன. அவர்கள் தீரத்துடன் சண்டை போடக் கூடியவர்களென்று வெளிக்காட்டி அநேகம் தடவை ஜப்பானியர்களைத் தோற்கடித்திருக்கிறார்கள். போதுமான அளவு அவர்களுக்கு ஆயுதங்களும் முஸ்தீப்புகளும்

ஸப்ளை செய்தால் அவர்கள் ஜப்பானியர்களை சைனாவை விட்டுத் துறத்தியடித்து விடுவார்கள். வியாதியாலும் பசிப்பிணியாலும் முஸ்தீப்புகளில்லாமையாலும், மோட்டார் போக்குவரத்து ரோந்துப்படையின் குறைவினாலும் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த சிரமங்கள் அவர்களுக்குப் பெரிய இடையூறுகள். பர்மா ரஸ்தாவை மூடிவிட்டதிலிருந்தும் இதர ஸப்ளை மார்க்கங்களும் முற்றுகைக்குள்ளானதிலிருந்தும் போர்களத்திலிருக்கும் சீனத்துருப்புகளுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவது சிரமசாத்யமாயிருக்கிறது.

ஜப்பானியர்களிடமிருந்து பர்மாவை திரும்பப் பிடிப்பது என்பது வெகு காலம் கொண்ட முயற்சியாகும். பாபுவாவிலும், ஸாலமன்ஸ் தீவுகளிலும் நடைபெற்ற சம்பவங்களிலிருந்து நாம் அறிந்த பிரகாரம் தற்காப்பு தந்திரத்திலும் காடுகளில் யுத்தம் புரிவதிலும் ஜப்பானியர்கள் சாமர்த்தியசாலிகள்.

ஆகையால் சைனாவின் தற்காப்பைப் பலப்படுத்துவதற்கு அதிகமான ஒத்தாசை செய்யவேண்டுமானால் வட இந்தியாவிலிருந்து சைனாவுக்குப் போகும் போக்குவரத்து விமானங்களை அதிகப்படுத்துவதுதான் முக்கியம். இந்த பிரயத்தனத்தில் விமானங்கள் 17,000 அடிகள் உயரமுள்ள மலைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். நவீன முறையில் கட்டப்பட்ட போக்குவரவு விமானத்தில் பாபுவாவில் நடந்த யுத்த அனுபவத்தை யொட்டி (2) டன்கள் எடைமானமுள்ள பெரிய பீரங்கிகளையும், மோட்டார் லாரிகளையும், சிறிய டாங்கிகளையும், சண்டை விமானங்களையும், லேசான டாங்கிகளையும், நவீன யுத்தத்தில் உபயோகப்படக்கூடிய கனமில்லாத எல்லாவிதமான முஸ்தீப்புகளையும் ஏற்றிச் செல்லலாம்.

### ஜப்பானின் பலஹீனம்.

ஜப்பான் ஒரு தீவு. ஆகிலும் இதன் மூலம்தான் அதற்கு வலிமையும் பலஹீனமும் ஏற்பட்டிருக்கிறது. முக்கியமான உணவுப் பொருள்களும் தாதுப் பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கு அதற்குக் கடற்படை பலம் அவசியமாகும். ஜப்பானியக் கடற்படைக்கு சிரமங்கள் ஏற்பட்டு ஏராளமான நஷ்டங்களுமேற்பட்டிருக்கிறது. நேசநாடுகள் ஜப்பானை முறியடிக்க வேண்டுமானால், எப்பாடுபட்டும் சைனா யுத்தம் நடத்துவதற்கு அதற்கு வசதியேற்படுத்த வேண்டும். மேலும் சைனா ஜனங்களின் அக்கரைக்கும் இது லாபகரமானது.

சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களிலிருந்து ஜப்பான் சம்பந்தப்பட்டமட்டில் தற்காப்பு யுத்தம் நடத்துவது என்றும், தங்கள் வசமுள்ள எல்லா முஸ்தீப்புகளையும் ஐரோப்பிய அச்சு நாடுகளை முறியடிப்பதில் உபயோகிக்கவேண்டுமென்றும் நேசதேசத்தார்கள் போட்டிருந்த யுத்த திட்டங்களை அவர்கள் மாற்ற வேண்டியிருக்கும். இவ்விதமாக யுத்த தந்திரம் மாறுபாடு அடைந்தால், அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படும் போக்குவரத்து விமானங்களையும் யுத்த தளவாடங்களையும் சைனாவிலுள்ள தேசீயப் படைகளின் உதவிக்காக ஜாஸ்தியாக அனுப்ப வேண்டும்.

---

## சீனா ஜப்பான் போலி நட்பு.

(டெய்லி டெலிகிராப்).

ஜப்பானின் ஏதேச்சாதிகாரியான ஜெனரல் டோஜோவின் விசித்திரப்பேச்சுக்கள் வரவர அச்சு தேசங்களின் மறு கோடியாகிய அதனுக்குத்தான் அழகாயிருக்கின்றன. சென்ற கோடைகாலத்தில் தாம் அவர்களுடன் கைகோத்துக்கொண்டு பொது விரோதிகளை "ஒரே நொறுக்காய் நொறுக்கி விடுவதாக" வாக்களித்தார்.

இந்த வாக்குறுதி கொடுத்தவர் அடுத்தபடி வஸந்த காலத்தில் ஜெர்மானியருக்கும் இதாலியருக்கும் தெரிவித்ததென்ன? சோர்வுபடாத ஊக்கமும், ராணுவ பலமும் கொண்டு விரோதிகளின் எதிர்ப்பைத் தாங்கள் சமாளித்து எதிர்த்து வருவதாகவும் மேற்படியார்களுக்கும், ஜப்பானியர்களுக்குமுள்ள ஒத்துழைப்பு பலப்பட்டு வருவதாகவும் கூறினார். தங்களுடைய ஜாதிக்கேற்ற மரியாதையுடனும்,



பிறரைப்போல் பாவனை செய்வதிலுள்ள சாமர்த்தியத்துடனும், தன்னுடைய தேசத்தவர்களிடம் யுனைடெட் ஸ்டேட்டினும், பிரிடிஷ் ஏகாதிபத்தியமும் ஒருவரோடு ஒருவர் சண்டைபோட்டு வருகின்றனவென்றும் சேருவது தூரமென்றும் தம் நாட்டவர்களை நம்பச் செய்வதில் ஐரோப்பிய அச்சுநாட்டு பிரமுகர்களைப் போலவே தீவிர முயற்சி எடுத்து வருகிறார்.

வாய் வார்த்தை விஸ்வாசத்தைக் காட்டுமானால் ஹிட்லர் போல்ஷிவிக் பூதத்தைக்கொண்டு அஞ்சுவதைக்கண்டு டோஜோ கைதட்டிப் பேசுவதே அதற்குச் சான்றாகும். நடைமுறையில் செய்வதைப் பார்த்தால் ஜெர்மனியும் ஹிட்லரும் தனக்கொன்றும் செய்ய இயலாதென்றும், ஆகவே தாம் அவைகளுக்கு ஒன்றும் செய்ய மாட்டோமென்றும் அவர் தெளிவாகச் சொல்லுகிறார்.

ஜப்பானின் ராணுவத்தலைவர்கள் சைனாவில் இப்போது தம் கவனத்தைப் பூராவாகச் செலுத்தி வருகிறார்கள். ஏன், சென்ற $5\frac{1}{2}$ வருஷமாக, அதாவது டோஜோவுக்கு முன், இருந்தவர் நம்பிக்கை மிகுதியாலே "சைனாவைக் காலில் வந்து விழும் வரையில் உதைக்கவேண்டும" என்று சொன்னது முதல் அப்படியேதான் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் அந்த வீண் பேச்சை மறுபடியும் திருத்தி அமைத்து சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார். யுத்தம் இப்போதுதான் "ஆரம்பிக்கிறதென்றால்" இவ்வளவுதூரம் கொலையும் கொள்ளையும் பாழும் ஆக்கினதென்னவோ?

இப்போது ஜப்பான் தன்னுடைய கொள்கையை அடிப்படையாக மாற்றிக்கொண்டது. இப்போது "பிரிடனும், யுனைடெட் ஸ்டேட்ஸும் கூடி ஜப்பானையும், புது சீனாவையும் பிரிக்கமுடியா"தென்கிறார்.

ஒரு வருஷம் வீணில் போர்செய்த பிறகும் சீனாவில் தம்முடைய சேனையில் பதினாயிரம் பேர்கள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு அவைகளை ஜெனரல் டோஜோ பார்வையிட்டுவருகிறார். அங்கே எதுவும் அவருக்கு ஆறுதல் அளிக்கவில்லை. குரங்குப் படைகளால் ஜப்பானியச் சைனியங்கள் இருந்தவிடங்களிலிருந்து அவைகள் கலைக்கப்பட்டன. ஜப்பானியர் பிடித்த இடங்களெல்லாம் வெறும் பாலைவனமாகச் செய்யப்பட்டன.

இந்தப் படுசேற்றிலிருந்து தன்னுடைய சேனைகளின் கால்களை மீட்டுக்கொடுப்பதற்காக முன்புபோலவே "சீனா, ஜப்பான் ஒத்துழைப்பு" என்ற வெட்கப்பேச்சை டோஜோ கிளப்பிவிட்டிருக்கிறான். அந்தப் புது சீனா, டோக்கியோவைக் காட்டிக்கொடுக்காத சீனா எது; பிரஸிடெண்டு வாங்-சிங்-வே அவர்களின் கீழே பொம்மை ராஜ்யம் நடக்கிறதே அதுதான்.

ஜப்பானிய ஆயுதபலம் ஓங்கியிருந்த காலத்தில் வாங்குக்கும், அவனுடன் கூடின குவிஸ்லிங்குகளுக்கும் அதிகாரம் இல்லாதிருந்ததினாலே, இப்போது புது சீனாவை உத்தாரணம் செய்யும் சக்தி அவர்களுக்கு இருக்குமென்பது சந்தேகமே. தன்னுடைய உத்தேசத்தினால் சீனாவில் பிளவுகள் ஏற்பட்டு, உண்மையான சீனாவினால்—சியாங் கை ஷேக்கின் சீனாவால்—விடாமுயற்சியுடன் நடத்தப்படும் எதிர்ப்பை குலைக்கலாமென்று டோஜோ நினைத்திருக்கலாம். இப்படி புளித்துப்போன பழைய யுக்தியைக்கொண்டு, நல்லது ஏற்படுமென்று வீணில் எதிர்பார்க்கும் நிலைமையில் டோஜோ இருப்பதைப் பார்த்தால், அவர் சொன்னபடி அவர் எதிர்பார்க்கும் சிரமங்களின் அளவு ஒருவாறு புலப்படும். ஜப்பானியருடைய கோரமான கொடுமையை ஒழிப்பதில் சீனர்களுடைய பிரயத்தனத்தை நிறுத்தும்படி இந்தப் பாச்சாக்களால் பலிக்காது. தங்களுடைய விமான தளங்களை விட்டுக்கொடுத்துவிட்டு ஜப்பானியர்களுக்குத் தாராளமாக உட்புகுந்து வேலைசெய்ய இடங்கொடுக்கமாட்டார்கள். ஜப்பானியர்களுக்குக் கப்பல்களும் விமானங்களும் குறைந்துவருவது அவர்களுக்குத் தெரியும். டோஜோவுக்கும் அது தெரியும். அதனால் என்ன விளையுமோவென்று அவர் பயப்படுகிறார். ஜப்பானியர்களின் துராக்கிருதத்தைக் கண்டிக்கத் தேவையான முஸ்தீப்புகளும் சேனைகளும் சீனாவுக்கு நம்பிக்கையாய் கிடைக்கும்; சுவற்றில் எழுதப்பட்ட மாய வார்த்தைகளை டோக்கியோ யுத்த பிரமுகர்கள் வாசித்தறியவேண்டும்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 141. (6-வது பிரிவு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10- 4-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | 14- 4-43 | மலைக்குடிப்பட்டி ... | மாலை 7.00 |
| 11- 4-43 | கீழாநிலை ... | „ 7.00 | „ | தலையாஞர் ... | „ 7.30 |
| „ | கீழாநிலை புதுப்பட்டி | „ 7.30 | 15- 4-43 | மலம்பட்டி ... | „ 7.00 |
| 12- 4-43 | பெருமாநாடு ... | „ 7.00 | „ | பேராம்பூர் ... | „ 7.30 |
| „ | புல்வயல் ... | „ 7.30 | 16- 4-43 | ஆலவயல் ... | „ 7.00 |
| 13- 4-43 | சடையம்பட்டி ... | „ 7.00 | „ | அம்மன்குறிச்சி ... | „ 7.30 |
| „ | ஒலியமங்கலம் ... | „ 7.30 | | | |

### பிரஸங்கம் 142. (1-வது பிரிவு.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17- 4-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | 21- 4-43 | மிரட்டுநிலை ... | மாலை 7.00 |
| 18- 4-43 | பூவரசகுடி ... | „ 7.00 | „ | அரிமளம். ... | „ 7.30 |
| „ | வேங்கடகுளம் ... | „ 7.30 | 22- 4-43 | பூங்குடி ... | „ 7.00 |
| 19- 4-43 | பெருங்களூர் ... | „ 7.00 | „ | சத்தியமங்கலம் ... | „ 7.30 |
| „ | ஆதனக்கோட்டை... | „ 7.30 | 23- 4-43 | உடையாளிப்பட்டி | „ 7.00 |
| 20- 4-43 | கோளூர் ... | „ 7.00 | „ | கிள்ளுகோட்டை ... | „ 7.30 |
| „ | நாஞ்சூர் ... | „ 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 10— 4—43 | வெட்டம்வீடுதி. | 17— 4—43 | திருமயம். |
| 11— 4—43 | தீத்தான்விடுதி. | 18— 4—43 | மருதன்கோன்விடுதி. |
| 12— 4—43 | அரிமளம். | 19— 4—43 | முள்ளங்குறிச்சி. |
| 13— 4—43 | கோனுபட்டு. | 20— 4—43 | கோனுபட்டு. |
| 14— 4—43 | ராயவரம். | 21— 4—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 15— 4—43 | குழிபிறை. | 22— 4—43 | ஆலங்குடி. |
| 16— 4—43 | புதுக்கோட்டை. | 23— 4—43 | பாப்பாபட்டி. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—15-4-43.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஏப்ரல் மீ 17உ [நெ. 142


பிரஸங்கம் CXLII.

## டுனிஸுக்கு முன்னேறுங்கள்.

(ஜெனரல் மாண்ட் காமரியின் ஆக்ஞை).

மாரத் அரண் யுத்த ஆரம்பத்திற்கு முன் நீங்கள் மூன்று காரியங்கள் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு உத்தரவிட்டேன். முதலாவது, மாரத் அரணி லுள்ள எதிரியின் ஸ்தானங்களைத் தாக்கவேண்டும். இது மார்ச்சு 21உ, முதல் 28உ வரையில் நடைபெற்று 8,000 கைதிகள் பிடிபட்டார்கள். இரண்டாவதாக, கேப்ஸ் இடைவெளிவழியாக முன்னேறவேண்டும். ஏப்ரல் 6-ம் உ இது நடைபெற்றது. வாடி அகாரித் என்னுமிடத்தில் எதிரி முட்டாள்தனமாக நின்று நம்முடன் போர் புரிந்தான். நல்ல உதைபெற்றான். 7,000 கைதிகள் பிடிபட்டார்கள்.

மூன்றாவது, ஸ்பாக்ஸ், ஸௌஸி, டுனிஸுக்கு முன்னேறுவது. இவை நடைபெற்று வருகின்றன. இவ்விதமாக நாம் கைதிகள் பிடித்தால், எதிரிக்கு அவனுடைய கேந்திர ஸ்தானங்களைப் பாதுகாக்க மனித பலம் இல்லாமல் போய் விடும்.

எட்டாம் படையின் முன்னேற்றத்திற்கு இதுவரையில் ஒரு தங்கு தடையும் இல்லை. இனிமேலும் ஒன்றும் ஏற்பட முடியாது. உங்கள் தாய்நாட்டிலுள்ள உங்கள் குடும்பத்தாருக்கும், உலகம் பூராவிற்கும் நீங்கள் ஒவ்வொரு நாளும் திருப்திகரமான தகவல்களை அனுப்பி வருகிறீர்கள்.

நமது சாம்ராஜ்யத்தில் 8-ம் படையைப்போல அவ்வளவு தீரம் பொருந்திய படையிருந்திராதென்று நான் நினைக்கிறேன். எட்டாம் படையைப்பற்றி பேசாத ஒரு குடும்பமும் இவ்வுலகிலில்லை. இப்பொழுது யுத்த கோஷம் யாதெனில், எதிரியை சமுத்திரத்துக்குள் விரட்டியடிக்க டுனிஸுக்கு முன்னேறுங்கள்.

ஜெர்மானியர் மற்றொரு முதல்தரமான டங்கர்க் போல் பின்வாங்கும்படியாக நாம் செய்துவிடவேண்டும்.

---

## டுனிஸியா யுத்தம் உச்ச நிலையை அடைகிறது.

(டைம்ஸ் பத்திரிகை, ஏப்ரல் 10).

டுனிஸியா யுத்தத்தின் உச்ச நிலை சமீபித்துவிட்டது. சீக்கிரமாக பின்வாங்கும் எதிரி சமுத்திரக் கரைக்கு விரட்டப்பட்டுவிடுவான். சமுத்திரமார்க்கமாக ஓடவேண்டியதுதான். நெடுநாளாக எதிர்பார்த்துவந்த முடிவான தாக்குதல் ஏற்படும் தருணம் பிரிடிஷ் அமெரிக்கப் படைகளுக்கு சமீபித்துவிட்டது. இத்துடன் நேசநாடுகளின் ஒரு போர்முனை முடிந்துவிடும். மற்ற ஒரு இடத்தில் யுத்தம் துவக்க வசதி ஏற்படும்.

அச்சு நாடுகள் ஏராளமான முன்தீப்புகளை இங்கு கொண்டுவந்திருக்கிறார்கள். அவர்களின் மனிதபலம் மிகுதியாக இல்லாவிட்டாலும், டூனிஸியாவில் குறைந்த பக்ஷம் 2,50,000 மனிதர்கள் இருப்பார்கள்.

டூனிஸிய நடவடிக்கைகளை ருஷ்யர்கள் ஆழ்ந்த அக்கரையுடனும், சந்தோஷத்துடனும் கவனித்து வருகிறார்கள். இவைகள் மற்ற மகத்தான முயற்சிகளுக்கு முற்போக்கான நிகழ்ச்சிகள் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். ஐரோப்பா பூராவிலும் முறிபட்ட ஜனங்களுக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டுவருகிறது.

இப்பொழுது வெற்றிச் சின்னங்கள் வேகமாக தோன்றுகின்றன என்பது நிச்சயம். அச்சுநாட்டு வியாக்யானிகள் இதாலியக் கடற்படையின் வலிமையைப் பற்றி சிலாகிக்க ஆரம்பித்துவிட்டதிலிருந்து இது ஸ்பஷ்டமாகிவிட்டது.

---

## வெற்றி கிட்டிவிட்டது.

(மிஸ்ட்டர் ஆலிவர் லிட்டில்டன், ஏப்ரல் 10).

யுத்தத்திலிருந்து விடுதலை பெறும் வஸந்தகாலம் ஆரம்பித்துவிட்டது. கூடிய சீக்கிரத்தில் ராணுவ வெற்றியின் உன்னத ஸ்திதியை அடைந்துவிடுவோம்.

நமது ருஷ்யப் படைகளின் தீரமும், நமக்காக ருஷ்யர்கள் செய்திருக்கும் அரிய ஸேவையும் நமது துருப்புகளின் செய்கைகளை நோக்கும்பொழுது நம்மை பாதிக்கக்கூடாது. 8-ம் படையின் முன்னேற்றமும், பிரிடிஷ், அமெரிக்க விமான பலத்தை எதிர்க்க, ஜெர்மனியின் விமானப் படையின் பாதி பலம் உபயோகப்படுத்தப்படுவதும், யுத்தத்தை நடத்துவதற்காக சமுத்திரத்தில் நமது ஆதிக்கமும், ஸப்ளை ஸ்தாபனங்களின் மிகுதியும், ஜெர்மனியின் தொழிற்சாலைகளை நமது வெடி விமானங்கள் பலமாகவும் கடுமையாகவும் தாக்குவதும் இவையெல்லாம் மகத்தான சேவைகள். ஜெர்மன் தரைப் படைகளோடு போர்புரிந்துவரும் ருஷ்யர்களின் தீரச் செய்கைகளுடன் ஒப்பிட்டு இவைகளைக் குறைவுபடுத்திச் சொல்லக் கூடாது.

---

## வார யுத்தச் செய்திகள்.

10—4—43-லிருந்து 16—4—43-வரை.

**டூனிஸியா.**—எட்டாம்படை மறுபடியும் முன்னேறி வாடிஅகாரித், செரிகா, மகரெஸ், மெஸ்ஸானு, ஸ்பாக்ஸ், லாஹாக், பெயிடுகணவாய், ஸௌஸி முதலிய இடங்களைப் பிடித்து விட்டது. ஸ்பாக்ஸுக்குப் பின்புறம் சமவெளியாகயிருப்பதால், எதிரி பின்வாங்குவதை விட்டு தலைவீறி கோலமாக ஓட ஆரம்பித்து விட்டான். என்பிடாவில்லி அரணுக்குள் ஒளிந்துக்கொள்ள ரோமல் ஓடுகிறான்.

மத்திய டூனிஸியப் போர் முடிவடைந்து விட்டது. இங்கே மெஸ்ஸானு, பிச்சன், பாண்டுக், கணவாய் முதலிய இடங்கள் பிடிபட்டு விட்டன.

வடபகுதியில், பிரிடிஷ் முதல் படையானது கெயிர்வானைக் கைப்பற்றி விட்டது.

12-ம் தேதி ஸௌஸி ஆக்கிரமிக்கப்பட்டும், 11-ம் தேதி கெயிர்வானும் பிடிபட்டும் விட்டதால் எதிரி முற்றுகைக்குள்ளான ஒரு பிரதேசத்தில் அடைபட்டு விட்டான்.

**ருஷ்யா.**—கூபானிலும் டானெட்ஸ் நதி பிரதேசத்திலும் முக்கியமாக யுத்தம் நடைபெற்று வருகிறது. இஸியத்திலும் பாலகியாவிலும் ஜெர்மானியர் முன்னேறியபொழுது தடுக்கப்பட்டார்கள். வால்கா முனையில் ஜெர்மானியர்கள் ஐந்து தடவை தாக்குதல் செய்தும் பிரயத்னம் வீணாகிவிட்டது.

**பஸிபிக் யுத்தம்.**—கீழ்க்கண்ட இடங்களில் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றன.



கிஸ்கா, விலா, காகிலி, மாடாங், சாயிஸானஸ், ஸாண்டா, இஸபெல் தீவு, ரிகாடா விரிகுடா.

**சைனா.**—லிங்க்வோவுக்கும் ஸிஸினுக்கும் மத்தியிலும், பீபிங்-ஹாகாங்க் இருப்புப் பாதையிலும் ஜப்பானியர்கள் தாக்கினார்கள். பீஷியனுக்கு வடக்கிலும் ஸ்வாடோவுக்கு சமீபத்திலும் நடைபெற்ற ஜப்பானியத் தாக்குதல் தடுக்கப்பட்டது.

**பர்மா.**—டிஸ்வேக்குக் கிழக்கேயுள்ள மலைகளிலிருந்து ராதேடாங்குக்குச் சமீபத்திலுள்ள நேசநாட்டுத் துருப்புகளைச் சுற்றி வளைத்துக்கொள்ள எதிரி செய்த பிரயத்தனமும் பூதேடாங்-மாங்டா பிராந்தியத்தை நோக்கி எதிரி முன்னேறியதும் தடுக்கப்பட்டன. ஆகையால் டான்பாக்கை நாம் இழந்துவிடும்படி நேர்ந்து விட்டது. டாங்மாவில் எதிரி தன் ஸ்தானத்தை பலப்படுத்திக் கொண்டு, காடுகள் வழியாகவும், மலைகள் வழியாகவும் முன்னேறி இண்டினுக்குத் தெற்கே ரஸ்தாவை அடைத்துவிட்டான். சிலநாட்களுக்குமுன் நமது இரண்டு சிறிய கப்பல்களை ஜப்பானுடைய பத்து விமானங்கள் தாக்கிய பொழுது இரண்டு எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

சென்ற வாரத்தில் நேசதேச விமானப்படை பின்கண்ட இடங்களைத்தாக்கின.

**ஏப்ரல் 6.**—மிங்களத் விமான நிலயம், பாசண்டாங்க் பாலம், ரெங்கூனிலுள்ள மகிவாகன் இருப்புப்பாதை தளம்.

**ஏப்ரல் 7.**—யுவாடங்க், இருப்புப்பாதை தளங்கள், மாயூ நதியில் எதிரியின் படகுகள், ஷ்வீபோ, வங்தோ, பின்லபூ.

**ஏப்ரல் 8.**—மாக்யிசாங்க்.

**ஏப்ரல் 10.**—டாங்கப், ஐராவதி நதியில் எதிரிப்படகுகள்.

எதிரி விமானங்கள் பின்கண்ட ஸ்தலங்களைத்தாக்கின :—

**ஏப்ரல் 4.**—சிட்டகாங்க் பிரதேசம் (எதிரிக்கு ஒரு விமான நஷ்டம்).

**ஏப்ரல் 6.**—தென்கிழக்கு வங்காளத்தில் ஒரு விமான தளம் (சேதம் சொல்பம்; ஆள் சேதம் உண்டு)

**ஏப்ரல் 8.**—சிட்டகாங்க் பிரதேசம். (ஆள் சேதமில்லை; சொல்பச் சேதம்).

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**1—4—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—(3 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன ; 8 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை). பாரிஸுக் கருகில் பில்லன் கோர்ட்டில் (Billan Court) ரெனால்ட் யுத்த தளவாட தொழிற்சாலை. பிரெஞ்சுக் கடற்கரையின் மேல் விமானச் சண்டைகள் ; (8 சத்துரு விமானங்களும் ; 11 நேசதேச விமானங்களும் நஷ்டம்) ; காயினி (Caen) லுள்ள விமான நிலயம் ; ஸெயின்ட் ப்ருக் (St. Brieuc) கில் ரயில்வே இலக்குகள் ; ராட்டர்டாமில் (Rotterdam) உள்ள கப்பல் தளங்கள் ; டிப்போ (Dieppe) யிலுள்ள தளங்கள் ; அபிவில்லி (Abbeville) யிலுள்ள ரயில்வே தளங்கள் ; நார்வேக்கப்பால் கடற்கரை கப்பல் கூட்டங்கள்.

இரவில்.—கீலி (Kiel) லுள்ள கப்பல் தளம், கப்பல் கட்டும் தளங்கள், (12 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை). இதாலியில் நேபிள்ஸில் (Naples) உள்ள துறைமுகம், விமான நிலயமும்.

டூனிஸியா (Tunisia),
**மத்தியதரைக்கடல்** (Mediterranean).

சத்துருவின் இடங்களுக்குப் பின்னாலுள்ள சத்துரு விமான நிலயங்கள் ; வாடியாகாரித் (Wadiakarit) திலுள்ள சத்துருவின் இடங்கள்.

ஸிஸிலியில் ஸ்பாக்ஸ் (Sfax), ஸிராக்யூஸ் (Syracuse) ; கார்லோபார்டே (Carloforte), பாலெர்மோ (Palermo) இவ்விடங்களின் ரயில் பாதைகள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

லே (Lae)யிலும், ஸாலமூவா (Salamaua)விலும் உள்ள ஜப்பானிய இடங்கள்; காவேங் (Kawieng)குக்கு அப்பால் ஜப்பானியக் கப்பல் கூட்டங்கள்; அலூஷியன் தீவுகளில் கிஸ்காவில் (Kiska) ஜப்பானிய இடங்கள்; பர்மாவில் ஹிட்ஸ்வே(Htizwe)யில் ஜப்பானிய இடங்கள்; பர்மாவில் பின்லேபு (Pinlebu)வும், மின்பூயா (Minbya); அரக்கான்கரைக்கும் சின்டுவின் (Chindwin) நதி ஆரம்பத்திற்கும் அப்பால் போய்க்கொண்டிருந்த சாமான் படகுகள்; பர்மாவில் மெயிக்டிலா விமானம் தங்குமிடத்தில் விமானம் ஓடும் பாதை.

சிட்டகாங்கிற்கு (Chittagong) அருகில் உள்ள விமானம் தங்குமிடம்; பர்மாவில் பூதிடாங் (Buthedaung) பிரதேசம்; ரங்கூனுக்குத் தெற்கில் எண்ணெ சுத்திசெய்யும் யந்திரம்; பர்மாவில் மாய்யோவில் (Maymyo) ரயில் ரோடு ஸ்தாபனங்கள்; பர்மாவில் ப்யாப்வே (Pyawbwe)யில் உள்ள ரயில் தளங்கள்.

**5—4—43.** (திங்கட்கிழமை).

### ஐரோப்பா (Europe).

**பகல்.**—(4 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை). பெல்ஜியத்தில் ஆன்ட்வெர்பில் (Antwerp) இலக்குகள்; பிரெஸ்டில் (Brest) தளங்களும் கப்பல் கூட்டங்களும்.

**இரவு.**—லெடாகெட் (Letouquet) டுக்கருகில் சத்துரு யு-படகுகளும்; டியெப்பு(Dieppe)க்கப்பால் சத்துருவின் கப்பல்கள்; சத்துருவின் கடற்கரையில் சுரங்கவெடி பாவுதல்; இதாலியில் நேபிள்ஸ் (Naples).

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

வடக்கு டேனிஸியாவிலும், ஸிஸிலியிலும், சத்துரு விமான நிலயங்கள்; ஸிஸிலிக் கால்வாயில் சத்துருவின் ஒரு துணைக்கப்பல் (18 சத்துருவின் போக்குவரத்துக் கப்பல்களும், ஒரு சத்துரு நாசகாரியும்; 13 சத்துருவின் விமானஙகளும் நாசமாக்கப்பட்டன); டேனிஸில் (Tunis) தளங்களும் கப்பல்களும்; கேப்ஸுக்கு (Gabes) வடக்கே சத்துரு டாங்கிகளும் மற்ற வண்டிகளும்.

ஸிஸிலியில் போர்டோ எம்படோலில் (Porto Empedocle); பாலெர்மோ (Palermo), ட்ரபானி (Trapani) இங்குள்ள சத்துருவின் ஸ்தாபனங்கள்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானஙகளும், யுத்த அரங்கம் முழுவதிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸ் தீவுகளில் பூகா (Buka) விலுள்ள விமான நிலயம்; அலூஷன் தீவுகளில் கிஸ்காவில் (Kiska) ஜப்பானிய இடங்கள். பர்மாவில் ப்ரோமி (Prome) லும், மாண்டலே (Mandalay) யிலும் உள்ள ரயில்வே ஸ்தாபனஙகள்; பர்மாவில் ஷிங்பியங் (Shingbwiyangn)லுள்ள சத்துருவின் சேனைகள்.

**6—4—43.** (செவ்வாய்க்கிழமை).

### ஐரோப்பா (Europe).

**பகலில்.**—ஸெயின்ட் ஆபினு (St. Aubin)க்கருகில் கட்டடங்கள்; காயினில் (Caen) ஒரு சக்தியுண்டாக்கும் யந்திரம்.

**இரவு.**—பெல்ஜியத்தில் நீராவி யந்திர உற்பத்திசாலை; பிரான்ஸில் எஃகு தொழிற்சாலைகள்; டிப்பேயில் (Dieppe) உள்ள இலக்குகள்.

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

லாபாகன்னேரிலும் (Lafauconnerie) மற்ற இடங்களிலும் உள்ள இறங்கும் இடங்கள்; டேனிஸியாவில் வெவ்வேறு யுத்தப் பகுதிகளில் சத்துருத்துருப்புகளும், டாங்கிகளும், மோட்டார் போக்குவரத்துகளும்; ஸ்பாக்ஸ் (Safx); ஸௌஸி (Sousse) பாதையிலுள்ள சத்துருவின் வண்டிகள்; டேனிஸில் ரயில்வே தளங்கள்; ஸிஸிலிக் கால்வாயில் அச்சுநாட்டுக் கப்பல் கூட்டங்கள்; ஸிஸிலியில் மெஸ்ஸினு (Messina)வில் உள்ள துறைமுகம்; டிரபானி (Trapani)யிலும் தளங்கள்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும் யுத்த அரங்கம் முழுவதிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸாலமூவாவில் (Salamaua) உள்ள பண்டசாலைகள்; நியூகினியில் பின்ஸ்ஷேபனிலும் (Finschaffen) நியூபிரிடனில் காஸ்மாடாவிலும் விமான நிலயங்கள்.

கிளஸ்டர் முனையிலும், ஆரோதீவுகளிலும், ஸாலமன்ஸ் தீவுகளில் விலா (Vila) விலும் உள்ள ஜப்பானிய ஸ்தாபனங்கள்; டானிம்பார் (Tanimbar)தீவுகள்; ஷார்ட்லெண்ட் தீவுகளில் காஹிலி (Kahili); பர்மாவில் பாகோகு (Pakokku)விலுள்ள விமான நிலயம்; பர்மாவில் ரங்கூனுக்கருகில் ஒரு ரயில்பாலம்; பர்மாவில் திங்கானெட் (Thinganet); பர்மாவில் ரங்கூனிலுள்ள ரயில் தளங்கள்.



**—4—43.** (புதன்கிழமை).

### ஐரோப்பா (Europe).

**இரவு.**—சத்துருவின் கடற்கரையோரங்களில் சுரங்க வெடிகள் பாவுதல்.

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ஸ்பாக்ஸி (Sfax)லுள்ள சத்துரு போக்குவரத்து துருப்புகளும், போக்குவரத்து இடங்களும்; தென் டேனிஸியாவில் சத்துரு துருப்புகளும், வண்டிகளும், டேனிஸ் விமான நிலயம்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும் யுத்த அரங்கம் முழுவதிலும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஷார்ட்லண்ட் தீவுகளில் விலா (Vila), சாந்தா இஸபெல் தீவில் ரேகடா குடாக் கடல்; அலூஷியன் தீவுகளில் கிஸ்கா (Kiska)வில் ஜப்பானிய இடங்கள்; நியூபிரிடனில் ரபாலி (Rabaul)லுள்ள விமான நிலயம்; பர்மாவில் வ்யாடாங் (Ywataung)கில் உள்ள ரயில்வே தளங்கள்; பர்மாவில் ஷிங் ப்யாங் (Thing Bwiyang)கில் உள்ள சத்துருத் துருப்புகள்; பர்மாவில் ஷ்வீபோ (Shwebo)வில் சத்துரு விமான நிலயம்; வந்தோ (Wuntho)வில் ரயில்வே ஸ்டேஷனும், பாதை மாறும் இணைக்கம்பிகளும்; பர்மாவில் டௌங்கூவில் சத்துருவின் தலைமைக் காரியாலயம்.

நியூகினியில் மூபோ (Mubo), வெவாக் (Wewak), பின்ஸ்ஷேபன் (Finschaffen), லே (Lae), ஸாலமூவா (Salamaua) முதலிய இடங்களில் சத்துருவின் இடங்கள்; காவியங் (Kavieng)கில் ஒரு ஜப்பானிய துணைக்கப்பல்.

**8—4—43.** (வியாழக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

**பகல்.**—பிரான்ஸில் உஷாந்தில் (Ushant) ஒரு தந்தியில்லாக்கம்பி ஸ்டேஷன்; பிரான்ஸில் ட்ரிக்வில்லில் (Triquiville) ஒரு சத்துரு விமான நிலயம்.

**இரவு.**—மேற்கு ஜெர்மனியில் ரூரில் (Ruhr) தொழிற்சாலை இலக்குகள்.

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ஸ்பாக்ஸ் (Sfax) பகுதியிலும்; மெசௌனு (Mezzouna) பிரதேசத்திலும் சத்துரு டாங்கிகளும், வண்டிகளும், கவசங்கொண்ட மோட்டார்களும்; சத்துருவின் இடங்களுக்குப் பின்னால் விமான நிலயஙகள்; ஸ்பாக்ஸி (Sfax)ல் ரயில்வே தளங்கள்; ஸிஸிலியில் பாலெர்மோ (Palermo)வில் உள்ள துறைமுகம்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானஙகளும் யுத்த அரஙகம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

காகேனு (Kaakenau)க் கப்பால் படகுகள்; ஆரோத்தீவுகளுக்கப்பால் டிமிகா (Timika) விமான நிலயம்; நியூகினியில் பின்ஸ்ஷேபன் (Finschaffen); காவியங் (Kavieng); மெயிக்டிலா (Meiktila)வில் விமான நிலயம்; பர்மாவில் ஹீஹோ விமான நிலயம்; பர்மாவில் ஷ்வீபோவில் (Shwebo) உள்ள சில இடஙகள்; பூதிடாங் (Buthidaung) பிரதேசத்தில் ஜப்பானியத் துருப்புகள்.

**9—4—43.** (வெள்ளிக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

**பகல்.**—வடக்கு பிரான்ஸில் பல நீராவியந்திரங்களும், மற்ற இலக்குகளும், டோவர் ஜலசந்திக்குமேல் விமானச் சண்டைகள் (4 சத்துரு விமானங்கள் நாசமாக்கப்பட்டன); கொலோனு (Cologne)க் கருகில் தொழிற்சாலை இலக்குகள்; நார்வேக்கப்பால் கப்பல் கூட்டங்கள்.

**இரவு.**—ரூர் (Ruhr) பிரதேசத்தில் டுயிஸ்பர்க் (Duisburg) உள்பட தொழிற்சாலை இலக்குகள்.

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

டேனிஸியாவில் வடக்கு, மத்திய தெற்குப் பகுதிகளில் சத்துரு டாங்கிகளும், மோட்டார் வண்டிகளும், மற்ற வண்டிகளும்.

என்டெவில் (Endeville) பிரதேசத்தில் துருப்புகள்; ஸ்பாக்ஸில் விமான நிலயம்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

நியூகினியில் மாடாங (Madang)கில் உள்ள நகரமும்; துறைமுகப் பிரதேசமும்; நியூகினியில் வேவாக்; அலூஷியன் தீவுகளில் கிஸ்காவிலும், ஆரோத் தீவுகளிலும் ஜப்பானிய ஸ்தாபனஙகள்; பர்மாவில் ஆஙகுமா (Angumaw); மாஜியாசாங் (Magyichaung)கிலும் உள்ள கிராமங்கள்; பர்மாவில் டாங்கப் (Toungup) பிரதேசத்தில் போக்குவரத்துப் படகுகள்; மாயூ தீபகற்பத்தின்மேல் சுற்றுதல்.

**10—4—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் இங்கேயுள்ள போக்குவரத்து இலக்குகள்.

இரவில்.—கிழக்கு ப்ரஷியாவில் கோனெக்ஸ்பர்க் (Koenigsburg); தென்மேற்கு ஜெர்மனியில் தொழிற்சாலை ராணுவ இலக்குகள்; சத்துருவின் கடற்கரையோரத்தில் சுரங்க வெடி பாவுதல்; பிஸ்கே வளைகுடாவில் ஒரு ஸப்ளைக்கப்பல்; இதாலியில் நேபிள்ஸில் ஒரு கப்பல் தளம்.

டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ஸ்பாக்ஸ் பிரதேசத்தில் சத்துரு வண்டிகளும் டாங்கிகளும்; டுனிஸில் விமான நிலயம்; பிஸெர்ட்டா (Bizerta) வில் உள்ள தளங்கள்.

ருஷ்யா (Russia).

(3—4—43 முதல் 10—4—43 வரையிலுள்ள இந்த வாரத்தில் ருஷ்யாவின் நஷ்டம் 43 விமானங்கள்; சத்துவின் நஷ்டம் 112 விமானங்கள்).

தூரக்கிழக்கு (Far East).

நியூகினியில் வெவாக்கில் (Wewak) ஒரு ஜப்பானியக் கப்பல்; அலூஷியன் தீவுகளில் கிஸ்காவில் (Kiska) ஜப்பானிய இடங்கள்; பின்ஸ்ஷேபன் (Finschaffen) லே (Lae); ஸாலமுவா (Salamaua) முதலிய இடங்களில் விமான நிலயங்கள்; நியூகினியில் மாடாங்கில் (Mandang) இறங்குமிடம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**5—4—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia).

வாடிஅகாரித் (Wadiakarit)திற்கு முன்னால் 8-வது சேனையின் இருப்பிடம்.

ருஷ்யா (Russia).

இஸியம் (Izyum) பிரதேசம்.

**6—4—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் ஒரு இடத்திலும் விமானப் படையெடுப்பில்லை.

டுனிஸியா (Tunisia).

அல்ஜீரியக் கடற்கரைக்கப்பால் நேசதேசக் கப்பல்கள்.

ருஷ்யா (Russia).

இஸியம் (Izyum) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

தென்கிழக்கு வங்காளத்தில் ஒரு விமான நிலயம்.

**7—4—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

இங்கிலாந்தின் தென்கடற்கரை (2 சத்துரு விமானங்கள் நஷ்டமடைந்தன).

டுனிஸியா (Tunisia).

டுனிஸியாவில் விமானச்சண்டைகள் (14 சத்துரு விமானங்கள் நஷ்டமடைந்தன; ஒரு நேசதேச விமானம் திரும்பி வரவில்லை).

ருஷ்யா (Russia).

டானெட்ஸ் நதியில் மேல் பகுதி.

தூரக்கிழக்கு (Far East).

பர்மாவில் மாங்டா (Maungdaw)பிரதேசத்தில் நேசதேச இடங்கள்.

**8—4—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia).

பிரிடிஷ் முதல் சேனையின் முன்னேறித் தாக்கும் இடங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸ் தீவுகளில் குவாடல்கானிலு (Guadalcanar)ள்ள விமான நிலயம்.

**9—4—43** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடத்திலும் விமானப் படையெடுப்பு இல்லை.

டுனிஸியா (Tunisia).

அல்ஜீரியக் கடற்கரையில் விமானச் சண்டை (ஒரு சத்துரு விமான சுட்டு வீழ்த்தப்பட்டது).

ருஷ்யா (Russia).

பாலக்லேயா (Balakleya)வுக்கு தெற்கேயுள்ள பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவில் அஸ்ஸாமில் உள்ள ஒரு விமான நிலயம்.

**10—4—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia).

ஒரு சத்துரு விமானப் படையெடுப்பும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவில் தென்கிழக்கு வங்காளத்தில் ஒரு விமான நிலயம்.



# யுத்தக் குறிப்புகள்.

**மிஸ்டர் ஈடனின் தூது.** அமெரிக்காவிலும் கனடாவிலும் அநேக இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு பிரிடிஷ் அந்நிய இலாகா யுத்த மந்திரியான மிஸ்டர் ஈடன் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்துவிட்டார். சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது, தலைவர்களையும் ராஜதந்திரிகளையும் கண்டு பேசவும், அமெரிக்காவின் யுத்த தளவாட உற்பத்தி ஸ்தாபனங்களைப் பார்வையிடுவதற்கும் யுத்தத்தினால் அமெரிக்காவுக்கு உண்டாயிருக்கும் உணர்ச்சிகளை அறிவதற்கும் அவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. சென்ற செவ்வாய்க்கிழமை அன்று காமன்ஸ் சபையில் அவர் தன்னுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டார்.

வி வி வி வி வி வி வி

**புதிய உலகமும், அமெரிக்காவும்.** அமெரிக்காவின் தோற்றத்தை ஈடன் நேரில் கண்டபொழுது அவருக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாயிற்று. "அமெரிக்காவில் இருக்கும் துருப்புகளுடையவும் விமானிகளுடையவும் உயர்வான தளவாடங்கள்போல மற்றொருவரிடமிருக்கமுடியாது. அமெரிக்காவைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் யாதெனில், அங்குள்ள வாலிபர்கள் சுறுசுறுப்பாக, முழுமனதுடன் இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற நேசநாடுகளுடன் சேர்ந்து நின்று யுத்தம் செய்யவும் தீர்மானித்திருக்கிறார்கள்" என்றும் அவர் சொன்னார்.

அமெரிக்காவுக்கும் பிரிடனுக்குமுள்ள சம்பந்தம், பொதுவான பாஷாபிமானத்தினாலும் உற்பத்தியாலும் உண்டான அனுதாபத்தினால் ஏற்பட்டதில்லை. இருவருக்கும் பொதுவான அக்கரையும், பொதுவான க்ஷேமமும், வருங்காலத்தில் பொதுவான உலக அமைதியும்தான் இதற்குக் காரணங்கள்.

வி வி வி வி வி வி வி

**கனடா.** கனடாவைப்பற்றியும் மிஸ்டர் ஈடன் குதூகலமாகப் பேசினார். "கனடா ஜனங்கள் இந்த மகா யுத்தத்தில் திடமாகவும் ராஜவிசுவாசத்துடனும் சண்டை போடுகிறார்களென்றும், பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுடன் ஒன்றுபட்டு நிற்பதில் பெருமை பாராட்டுகிறார்களென்றும், நெருக்கடியான இந்த தருணத்தில் ராஜவிசுவாசிகளாகயிருப்பதில் பெருமை கொண்டவர்களென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்" என்று அவர் சொன்னார்.

வி வி வி வி வி வி வி

**தாத்காலிகமான முடிவுகள்.** வாஷிங்டனிலிருக்கும்பொழுது செய்யப்பட்ட ராணுவ யோசனைகளைப்பற்றி மிஸ்டர் ஈடன் மௌனம் சாதித்தது சகஜம்தான். ஆகிலும் அமெரிக்காவில் அயல்நாடு, ராஜீயம் இவைகளைப்பற்றிய பிரச்னைகளைப்பற்றிய பேச்சுகளைப்பற்றி மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் தகவல்கள் அறிவித்தார். நடைபெற்ற சம்பாஷணைகள் ஆராய்ச்சிக்காக ஏற்பட்டவை. தஸ்தாவேஜுகளில் பதிவு செய்யப்படவில்லை. ஆகிலும் அந்த சம்பாஷணைகள் அமெரிக்க ஸமஸ்தான காரியதரிசியான மிஸ்டர் கார்டல் ஹல் இங்கிலாந்துக்குப் பதில் மரியாதை முறையில் விஜயம் செய்யும்பொழுது மறுபடியும் நடைபெறும். விரிவாகச் சொன்னால், பின்கண்ட விஷயங்களைக் குறித்து தாத்காலிகமான முடிவுகள் செய்யப்பட்டன.

(1) அக்ரமமான யுத்தம் மறுபடியும் ஏற்படாதபடி செய்வதற்கு உபயோகமுள்ள ஒரு சங்கத்தை யுத்தத்துக்குப்பின் ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) எதிரி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளுக்கு ஸ்வதந்திரம் அளிப்பது.

(3) நடுநிலைமை வகித்துவரும் நாடுகளான ஸ்பெயின், போர்ச்சுகல், துருக்கி, இவைகள் சம்பந்தமாக ஒரேவிதமான நடவடிக்கை ஏற்பாடு செய்வது.

(4) பிரெஞ்சு தேச பிரச்னையைத் தீர்த்துவைப்பது. இதுவரையில் இங்கிலாந்தின் பூர்ண சம்மதத்தினுடன் அமெரிக்கர்கள் விஷி ஸர்க்காருடன்

நட்புவைத்திருந்தார்கள். ஐரோப்பிய நடவடிக்கைகளை கவனிக்க பிரான்ஸ் உப
யோகமுள்ளதாகயிருந்ததினுல்தான் நட்பு வைக்கப்பட்டது. வட ஆபிரிக்கப்
படையெடுப்புக்குச் சாதகம்செய்ய ஏஜெண்டுகளைத் தயார்செய்து நேசநாடுகளுக்
குப் பிரான்ஸ் சமீபத்தில் ஒத்தாசை செய்து இருக்கிறது. வருங்காலத்தில் எல்லா
விதமான பிரெஞ்சுக்காரர்களின் பூராவான ஒத்துழைப்பையும் பெற்று பொது
வான எதிரியுடன்போர்புரிய ஏற்பாடு செய்வதுதான் நமது நோக்கம்.

வி வி வி வி வி வி வி

**நடங்கல்.** பிரான்ஸின் அக்கரைக்கும், நேசநாடுகளின்
ஆதரவுக்கும் அவசியமான ஒற்றுமை
யானது பிரெஞ்சுக்காரர்களிடையே இன்னும் ஏற்படவில்லை. இரண்டு வாரங்
களுக்குமுன் கிராடிக்கும் டிகாலுக்கும் சமாதானம் ஏற்பட்டுவிடுமென்று
தோன்றிற்று. ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைத்தலைவரான ஜெனரல் காட்ரு அல்
ஜீயர்ஸில் நடத்திய சம்பாஷணைகளும் பயன்படும்போல் தோன்றின. நடுவில்
திடீரென்று ஒரு சம்பவம் குறுக்கிட்டுவிட்டது. வட ஆபிரிக்காவில் சேனாதிபதி
யாகவிருக்கும் ஜெனரல் ஈசன் ஹவர் வித்தியாசங்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள
அல்ஜீயர்ஸுக்கு டிகால் இச்சமயம்போகக்கூடாதென்று உத்தரவு செய்துவிட்டார்.
இருவருக்கும் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக கிராட் நிர்வாகத்தில்,
விஷி ஸர்க்காரைச் சேர்ந்த M. பாயிஸனும், ஜெனரல் நோக்ஸும் இருந்து
கொண்டு விஷமம் செய்துவருகிறார்களென்று தெரியவருகிறது. மிஸ்டர்
சர்ச்சில் இதை விவரித்துப் பேசுகையில், இது சரியான சந்தர்ப்பமில்லையென்றும்,
டூனிஸியா யுத்தத்தில் பூரா கவனத்தையும் செலுத்தவேண்டிய தருணத்தில்
ராஜீய அபிப்பிராய பேதங்களைப்பற்றி சண்டையிடுவதோ அல்லது நிர்வாகத்தின்
அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதோ தகுதியற்றதென்றும் சொல்லிவிட்டார்.

வி வி வி வி வி வி வி

**பிரான்ஸின் நிலைமை.** பிரெஞ்சு தலைநகரங்களிலிருந்து கிடைக்கும்
சிற்சில தகவல்களிலிருந்து பிரான்ஸின்
நிலைமை மோசமாகிவருகிறதென்று வெளியாகுகிறது. பிரான்ஸின் கஷ்ட தசையை
அறிவதற்கு பிடேன் ஏப்ரல் 4-ம் தேதியன்று ஒலிபரப்பியதை கவனித்தாலே
போதும். பிரான்ஸின் தற்போதிய கஷ்ட நிலைக்கு பிரான்ஸுக்கு வெளியே
யிருந்துவரும் பிரெஞ்சு தேசாபிமானிகள்தான் காரணமென்று அவர் குற்றம்
சாட்டுகிறார். ஜெர்மனிக்குக்கட்டாய சேவைக்கு பிரெஞ்சு வாலிபர்கள் அவசியம்
செல்லவேண்டுமென்றும் அவர் வற்புறுத்துகிறார்.

வி வி வி வி வி வி வி

**தப்பி ஓடுகிறார்கள்.** பிரான்ஸிலிருந்து அதன் முக்கியமான ஆண்
மக்கள் தப்பி ஓடுகிறார்கள். பிரான்ஸுக்
காக நடைபெற்ற யுத்தத்தில் 14-வது சேனைக்குத் தலைமை வகித்த லெப்டினண்ட்
ஜெனரல் பெயனட்டு லண்டனுக்கு ஓடிவந்து பிரெஞ்சு தேசிய கமிட்டியுடன்
வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார். பிரெஞ்சு வியாபார ஐக்கிய சங்கத்தின்
காரியதரிசியான M. ஆல்பர்ட் கியாகுவும் தப்பி ஓடி டிகாலியுடன் சேர்ந்து
பிரெஞ்சு தொழிலாளர்களின் சார்பாக ஒத்துழைப்பதாகவும் உறுதிகூறிவிட்டார்.
ஸ்வீடனிலுள்ள விஷி மந்திரியும், மாட்ரிட்டிலுள்ள விஷி தூதர்கள் காரியாலயத்
தின் உத்தியோகஸ்தர்களும், பார்ஸிலோனு, பில்போவா, வாலன்ஷியா, மலாகா
விலுள்ள விஷியின் அயல்நாட்டு மந்திரிகளும் ராஜீனுமா செய்துவிட்டார்கள்.

வி வி வி வி வி வி வி

**அயல் நாட்டுக்கு அனுப்புதல்.** அமெரிக்கர்கள் தந்திரமாக விடுதலை செய்து
விடுவார்களோவென்று பயந்து பிரான்ஸின்
பிரதமமந்திரிகளான M. டலாடியர், M. லியோன் ப்ளும், ஜெனரல் காமெலின்
முதலியவர்கள் ஜெர்மனிக்குக்கொண்டு போகப்படுகிறார்கள்.

**கட்டாயப்படை திரட்டு.** ஜெர்மானியர்களின் உத்தரவின்படி 18 வயது
முதல் 25 வரையிலுள்ள பிரெஞ்சு ஸ்திரீ
கள் ஜெர்மனியின் தொழிற்சாலைகளில் வேலை செய்ய கட்டாயத்தின் பேரில்
அனுப்பப்படுகிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**வேலையிலிருந்து நீக்கம்.** தேசத்தில் உண்டாகியிருக்கும் எதிர்ப்பைக்
கண்டுமனம் கலங்கி லவால் உத்தியோகஸ்
தர்களையெல்லாம் வேலையிலிருந்து நீக்கி அதிகாரப் பொறுப்பை தானேவகிக்க
முயற்சிக்கிறான். நியாய இலாகா, குடியேற்ற நாடுகள், கடற்படையிலுள்ள
மந்திரிகளெல்லாம் வேலையை இழந்தனர். மார்ஸெயில்ஸில் மட்டும் 500
போலீஸ்காரர்கள் பிடிக்கப்பட்டு, தப்பி ஓடும் பிரெஞ்சுக்காரர்களுக்கு அவர்கள்
ஒத்தாசை செய்தார்களென்று கண்டுபிடித்து ஜெர்மனிக்குக் கப்பலேற்றிக்
கொண்டு போகப்பட்டுவிட்டார்கள்.

வி வி வி வி வி வி வி

**டூனிஸிய வெற்றிகள்.** இவ்வாரத்தில் டூனிஸியாவின் வெற்றிகள்
திருப்திகரமாகயிருக்கின்றன. கேப்ஸ்
கணவாய் வழியாக எட்டாம் படை முன்னேறி எதிரியைத்துறத்தியடித்துக்
கொண்டு கடற்கரை வழியாகச் சென்று ஸ்பாக்ஸையும் ஸௌஸியையும் பிடித்து
விட்டது. மக்னுஸியிலிருந்து அமெரிக்கப் படைகளும் முன்னேறி கடற்கரை சம
வெளிகளை அடைந்து விட்டன. இங்கே கடுமையான எதிர்ப்பு ஏற்படக்கூடும்.
அதற்கு வடக்கு பாகத்தில் மற்றொரு அமெரிக்கா பிரெஞ்சுப்படை பிச்சானி
யிலுள்ள அச்சுத் துருப்புகளைத் துறத்தியடித்துவிட்டது. பிஸர்ட்டா—டூனிஸி
யிலுள்ள வளைவு பாகத்தில் அச்சுநாடுகளின் தற்காப்பு அரண்களை ஆண்டர்ஸ
னுடைய முதல் படை அணுகிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**நான்காவது இந்திய சேனை.** டூனிஸியப் போரில் நான்காவது இந்தியப்
படை விசேஷமான தைரியத்தினுலும்
தீரத்தினுலும் கியாதி பெற்றுவிட்டது. மாரத் அரணில் ரோமலின் ஸ்தானங்
களின் விலாப்பக்கத்தை அடைந்த நியூஸீலாந்து துருப்புகளுக்கு இந்தியத் துருப்
புகள் ரக்ஷணை செய்தன. குன்றுகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்கையும்
பக்கத்திலுள்ள இரண்டு மலைப்பிரதேசங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டு அவர்
களுக்கு ஸப்ளைகள் கொண்டு போனார்கள். இருட்டில் 1,500 அடி உயரத்தில்
சண்டை போட்டு 4000, எதிரிகளைக் கைது செய்தார்கள். மாட்மாடவுக்குப்
போகும்ரஸ்தாவை வெற்றிகரமாக அவர்கள் துறந்துவிட்டார்கள்.

வி வி வி வி வி வி வி

**வெற்றி பெற்ற எட்டாம் படை.** மார்ச்சு மாதம் 30-ம் தேதியன்று காமன்ஸ்
சபையில் மிஸ்டர் சர்ச்சில் பேசியது
போல், புத்திசாலிகளும் தீரர்களுமான தலைவர்களின் அமுலுக்குள்பட்டு நமது
படைகளும் கிலாக்கியமான மூஸ்தீப்புகளும் அடைந்திருக்கும் வெற்றிகளுக்காக
நாம் பெருமை பாராட்டுவதோடு திருப்தியுமடைகிறோம்.

வி வி வி வி வி வி வி

**மாரத் அரணின் மாண்டி.** மாரத் அரணின் 'மாண்டி என்று சொல்லும்
பொழுது மாண்ட் காமரியின் புகழ்
நமக்கு ஞாபகம் வருகிறது. பிரதம மந்திரியின் அபிப்பிராயப்படி "மாண்ட் காமரி
வெற்றிதாகமுள்ளவன்" என்பதில் சந்தேகமில்லை.

வி வி வி வி வி வி வி

**மாண்ட் காமரியின் யுத்த தந்திரம்.** மாண்ட்காமரி அவனுடைய எட்டாம் படை
இவ்விரண்டினுடைய சக்தி அபாரமானது.
எட்டாம்படை நல்ல பயிற்சி பெற்றது, நல்ல மூஸ்தீப்புகளுள்ளது, நல்ல
தளகர்த்தர்கள் தலைமையிலிருக்கிறது. ஆகினும் அதன் யுத்த தந்திரம் அழகானது.

சொந்த கற்பனையுள்ளது. எல் அலமீன் யுத்தத்தில் முதலில் தரைப்படை தாக்குதல் செய்து பின்பு டாங்கிகள் யுத்தம் நடைபெற்றது. வாடிஸெம்ஸெம் என்னுமிடத்தில் நேர்முகமாகவும் விலாப்பக்கத்திலும் தாக்குதல் செய்யப் பட்டது. எல் ஹம்மாவில் மாரத் அரணைச் சுற்றிவருவதும் கேபிஸ் கணவாயைக் கடந்து செல்லுவதும் ஒரே மூச்சில் செய்யப்பட்டன.

வி வி வி வி வி வி வி

**டூனிஸியா யுத்தம்.** மாரத் அரண் யுத்தம் இவ்விதமாக வெற்றிகரமாக முடிவடைந்தது. ஆகிலும் டூனிஸுக்காக நடைபெறவேண்டிய யுத்தம் பாக்கியிருக்கிறது. ஒரு குறுகலான மூலையில் தள்ளப்பட்டாலும் ரோமல் தன்னை விடுவித்துக்கொண்டுவிட்டான். அவன் அதிக தந்திரசாலி. அவனுடைய படை பலம் அதிகமாகக் குறைவுபட்டு விட்டாலும் இன்னும் சண்டை செய்ய ஊக்கமுள்ளது.

வி வி வி வி வி வி வி

**வெகு நாட்களாக கடன் பாக்கி.** நேசநாட்டுப்படைகள் எல்லாப் பக்கங்களிலும் நெருங்கிவருகின்றன. சீக்கிரத்தில் சமுத்திரக்கரையில் நின்றுகொண்டு ரோமல் யுத்தம் செய்யவேண்டிவரும். அவனுக்கு மூன்று பக்கங்களிலிருந்தும், அதாவது மேற்கே ஆல்ஜியர்ஸ், வடக்கே மால்டா, தெற்குப் பக்கத்தில் பாலைவனத்திலுள்ள விமானப்படைகள், வெடி குண்டுகளால் தாக்கப்படுவான். இவ்விடத்தில் முடிவான யுத்தம் நடைபெறப் போகிறது. இதுவரையில் ரோமல் வெகு காலமாக காலஹரணம் செய்துவந்தான். டூனிஸியாவில் ஸ்டாலின்கிராட்போல ஜெர்மானியர்கள் யுத்தம் செய்து உயிர் துறக்கவேண்டுமென்று ஹிட்லர் பிரியப்படுகிறான். ஆனால் ரோமல் மற்றொரு டங்கர்க் செய்யவேண்டுமென்று நினைக்கிறான். கிராட் சொன்ன பிரகாரம் மத்திய தரைக்கடலில் ஜெர்மானிய, இதாலிய பிரேதங்கள் ஏராளமாக மிதக்கும் கோரக் காக்ஷியை நாம் காணலாம்.

வி வி வி வி வி வி வி

**சின்னங்கள்.** ஸ்பானிஷ் மொராக்கோவில் அமெரிக்க ஜெனரலும், பிரஸீலியன் ஜெனரலும், ஸ்பானிஷ் மொராக்கோவின் உயர்தர கமிஷனரும் மகாநாடுகூடிப் பேசியதிலிருந்து வரப்போகும் நிகழ்ச்சிகளுக்கு சின்னங்கள் ஏற்பட்டுவிட்டன. கூடிய சீக்கிரமாக வட ஆபிரிக்கா பூராவும் நேசநாடுகள் கைவசமாகிவிடும். ஸ்பானிஷ் மொராக்கோ மட்டும்தான் நேசநாட்டார் வசமில்லாமலும் புதிய அமைப்பில் சேராததாகவும் பாக்கியிருக்கும். இதில் டான்ஜியரின் பிரச்னை மிகவும் சிக்கலானது. அது சர்வதேசத் துறைமுகமாகயிருந்தது. 1940-ம் வருஷத்தில் பிரான்ஸின் வீழ்ச்சிக்கு சில நாட்களுக்கு முன்னதாக அதை ஸ்பானிஷ் மொராக்கோ துருப்புகள் ஆக்கிரமித்தன. ஜிப்ரால்டர் ஜலசந்திக்கு மற்றொரு பக்கத்தில் இருப்பதால் டான்ஜியர் ஒரு முக்கியமான துறைமுகம்.

மகாநாட்டில் பிரஸீலியன் ஜெனரல் கலந்துகொண்டாரென்பதில் விசேஷம் இருக்கிறது. சரித்திர பூர்வமாக பிரஸீலுக்கும் ஸ்பெயினுக்கும் சம்பந்தங்கள் இருப்பதைத் தவிர, விமானப் போக்குவரத்து அதிகரிப்பின் மூலம் ஆபிரிக்காவின் மேற்குக் கரைப் பிரதேசமும் பிரஸீலின் கிழக்குப் பிரதேச விஸ்தரிப்பும் நெருங்கி வந்துவிட்டன.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா.** ருஷ்யாவில், மகத்தான மாரிகால யுத்தம் முடிவடைந்துவிட்டது. அநேகமாக அமைதி நிலவுகிறது. சில இடங்களில் ஆங்காங்கு சிறிய சச்சரவுகள் நடைபெறுகின்றன. இங்கு முக்கியமான சம்பவங்கள், டானெட்ஸ் நதியை ஜெர்மானியர்கள் கடந்து செல்லச்செய்த முயற்சி பலிக்கவில்லை. குபானில் ருஷ்யர்களின் முன்னேற்றமானது கிரிமியாவின் பாலமுனையை அணுகிவருகிறது.



**வஸந்த முன்னேற்ற யுத்தம் யார் முதலில் செய்வார்கள்?** வருங்கால யுத்தப் போக்கைப்பற்றி வியாக்யானிகள் பலவிதமான அபிப்பிராயங்கள் வெளியிடுகிறார்கள். வஸந்த காலத்தில் முன்னேற்ற யுத்தத்தை ஜெர்மனி அல்லது ருஷ்யா முதலில் துவக்குமா என்பதில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது. சிலர் தெற்கேயிருக்கும் ஜெர்மன் படைகள் திருத்தியமைக்கப்படுவதிலிருந்து ராஸ்டாவையோ அல்லது காகஸஸ் பிரதேசத்தையோ மறுபடி ஹிட்லர் தாக்குவானென்று நினைக்கிறார்கள். ஹிட்லருக்கு சமீப காலத்தில் சராமாரியாக ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களையும் அதன் மூலம் அவனுடைய முஸ்தீப்புகளுக்கு ஏற்பட்ட குறைவுகளையும், மேற்கு ஐரோப்பாவில் அதிகரித்து வரும் பிரிடிஷ் விமானப் படையின் நடவடிக்கைகளையும், வட ஆபிரிக்காவில் ஹிட்லருக்கு ஏற்படப்போகும் தோல்விகளையும், தெற்கு ஐரோப்பாவில், கஸாபிளாங்கா மகா நாட்டின் ஏற்பாட்டின்படி, நடக்கப் போகும் நடவடிக்கைகளையும் யோசித்துப் பார்த்தால், ஹிட்லர் முட்டாள் தனமாக மறுபடியும் ருஷ்யாவில் முன்னேற்ற யுத்தம் ஆரம்பித்து முன்னிரு தடவைகளில் தோல்வியுற்றதுபோல் மறுபடியும் இகழ்ச்சி பெறுவானா என்று தான் நிதானிக்கவேண்டி இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பேச்சு தடுமாற்றம்.** ஹிட்லரின் மனப்பான்மை மாறுதலடைந்து வருகிறது. இது முதல் முதலாக "வீரர்கள் தினக் கொண்ட விழா" வென்று வெளியாகிற்று. மிஸ்டர் பெர்னார்ட்ஷா சொல்லுகிறபடி ஹிட்லரின் வாழ்நாளில் ஹிட்லரின் சாதாரணப் பேச்சுக்கு முற்றிலும் எதிரிடையான சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. சமீப காலத்தில் ஜெர்மானியர்களின் பிரசாரமும் முன்னிருந்ததற்கு நேர்விரோதமாக மாறி விட்டது. நேசதேசத்தார்கள் இந்த யுத்தத்தில் வெற்றிபெற முடியாது என்று ஜெர்மனி சொல்லிக்கொள்ளவில்லை. அவர்களுக்கு வெற்றி நிச்சயம் கிடைத்து விடும் என்று நினைத்து, அவ்விதம் வெற்றி கிடைத்துவிட்டால் உலகத்துக்கே நாசம் வந்துவிடுமென்று ஜெர்மனி பிரசாரம் செய்துவருகிறது. இவ்விஷயத்தில் நாடுகளுக்கு உரித்த வகையில் பிரசாரம் வேறுபாடு செய்யப்படுகிறது. அமெரிக்காவுக்குப் பிரசாரம் செய்யும்பொழுது செல்வந்தர்களிலிருக்கும் நாடுகளில் போல்ஷிவிஸம் பரவி விடுமென்றும், பிரிடனுக்குப் பிரசாரம் செய்யும்பொழுது, அமெரிக்காவின் சாம்ராஜ்யக் கொள்கை உயர்ந்துவிடுமென்றும், துருக்கி சம்பந்தமாக, மத்தியக் கிழக்கு திசையில் ருஷ்யாவின் அதிக்கிரமம் ஏற்படுமென்றும், சொப்படி வித்தைக்காரனின் ஜாலவித்தை போல, ருஷ்யாவுக்கு ஒலிபரப்பும் பொழுது, செல்வந்தர்களான நாடுகள் ருஷ்யாவை வளைத்துக்கொள்ள முயற்சிக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. இம்மாதிரியான வீண் பேச்சுகள் எவ்வளவு சாதுர்யமாகவும் உருக்கமாகவும் நடைபெற்ற போதிலும் அவைகளைக்கண்டு ஒருவரும் ஏமாந்து விடமாட்டார்கள். ஏனென்றால் இவையெல்லாம் ஹிட்லரின் நம்பிக்கைக் குறைவை வெளிக்காட்டி விடுகின்றன. ருஷ்யப்படைகளை நிர்மூலமாக்கிவிடுவது என்ற பேச்சு ஓய்ந்துவிட்டது. ருஷ்யாவின் வலிமையைக் கண்டு நெஞ்சு படபடவென்று அடிக்கிறது.

வி வி வி வி வி வி வி

**திருட்டு.** ஹிட்லருக்கு ருஷ்யாவில் ஏற்பட்ட தோல்வியினின்றும் உண்டான பயத்துடன் அவனுடைய துக்கம் முடியவில்லை. மேற்குப் பக்கம் ஹிட்லர் திரும்பிப்பார்த்தால் பிரிடிஷ் விமானங்கள் இராக் காலங்களில் விளைவித்துவரும் நஷ்டங்களைப் பார்த்து நடுங்குகிறான். இங்கிலீஷ் கால்வாயில் ஆங்கிலேயர்கள் செய்துவரும் அபாரமான தற்காப்புகளைக் கண்டு பிரமிக்கிறான். கிழக்குப் பிரதேசத்திலா, மேற்கு திசையிலா, தெற்கு பிராந்தியத்திலா, தன்னை சமாளித்துக்கொள்ளுவது என்ற உபய சங்கடத்தில் கூடிய சீக்கிரம் அகப்பட்டுக்கொள்ளுவோமென்றும் ஹிட்லர் அஞ்சுகிறான். தனக்கு ஏற்படப்போகும் தண்டனையைக் குறித்தும் அவன் சிந்தனை செய்கிறான். இந்த வாரத்தில் வந்த செய்திகள் பிரகாரம் 17 தேசங்களிலுள்ள சட்ட நிபுணர்கள் லண்டன் மா நகரில் கூடி நியாய உலகத்தில் மிகப் பெரிய திருட்டுக் குற்றச்சாட்டைத் தயார்செய்துவருகிறார்கள். அச்சு

வல்லரசுகள் கலைகளையும் மற்ற உயர்தரமான ஐச்வர்யங்களையும் கொள்ளையிட ரகசியமான ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். யுத்தப் போக்கு அவர்களுக்குப் பாதகமாக மாறுவதால் கொள்ளை அதிகரித்து வருகிறது. குற்றச்சாட்டுக்கு வேண்டிய தகவல்களை சேகரிக்கும்படி சட்ட நிபுணர்களுக்கு ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறது. நேசதேசத்தார்கள் ஐரோப்பாவில் இறங்கியவுடன் நஷ்டங்களை ஈடுசெய்ய பொருமானமுள்ள சாமான்களை அச்சுநாடுகளிலிருந்து கைப்பற்றுவதோடு குற்றவாளிகளையும் தண்டனைக்குள்ளாக்குவார்கள்.

வி வி வி வி வி வி வி

**உண்மையும், கட்டுக்கதையும்.** ஏப்ரல் 6-ம் தேதி வெளிவந்த ஒரு ஸ்டேட்மெண்டில் அமெரிக்கக் கடற்படை காரியதரிசியான கர்னல் நாக்ஸ் என்பவர், பிப்ரவரி மாதத்தைவிட மார்ச்சு மாதத்தில் கப்பல் நஷ்டம் அதிகமென்றும், இதற்குக் காரணம் யூ படகுகளின் மிகுதியென்றும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் உண்டாகும் புயல் காற்றுகளின் மூலம் யூ படகு நடமாட்டத்திற்கு சாதகம் ஏற்படுகிறதென்றும் வெளியிட்டார்.

ஆகிலும் மார்ச்சு மாதத்தில் 8,51,500 டன்கள் எடைமானமுள்ள நேசதேசக் கப்பல்கள் நஷ்டமாகின என்று ஜெர்மனி சொல்லுவது மிகையானது. வாஷிங்டனிலுள்ள யுத்த அறிக்கை ஆபீஸின் டிரெக்டரான மிஸ்டர் எல்மர் டேவிஸ் சுட்டிக்காட்டியது போல், மார்ச்சு மாதத்தில் கப்பல் நஷ்டம் அதிகமான போதிலும் 1942-ம் வருஷத்தில் எந்த மாதத்திலும் ஏற்பட்ட நஷ்டத்துக்குக் குறைவாகத்தானிருக்கிறது. முக்கியமாக டுனிஸியாவில் ஏற்பட்ட தோல்விகளை மறைத்துக்காட்ட மார்ச்சு மாதத்தில் நமக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களை அதிகப்படுத்தி ஜெர்மனி பிரசாரம் செய்கிறான். ஹாஹா பிரபு புதிதான ஒரு வசனம் கண்டுபிடித்திருக்கிறான். நேசநாட்டுக் கப்பல்கள் இனிமேல் மீன் வெடிகளுள்ள மார்க்கமாகச் செல்லவேண்டுமாம். நீங்களறிந்த வண்ணம் ஹாஹா என்பவர் அச்சுநாட்டுப் பொய் பிரசாரகர்களின் முதல்தர பேர்வழி. சாதுர்யமாக, ஜெர்மானியர் சொல்லும் கணக்குகள் முற்றிலும் சரியானதென்றும் குறைத்தே கூறப்படுகிறதென்றும், அமெரிக்காவில் வெளிவரும் பிரசாரங்களில் கப்பல் நஷ்டம் மிலியன் டன்கள் எடைமானமென்று சொல்லும்பொழுது ஜெர்மானியர்கள் ஆயிரக்கணக்கில்தான் கணக்கிடுகிறார்களென்றும் ஹாஹா சொல்லுகிறான். ஹாஹாவின் வினோதி ஆச்சரியகரமாயிருக்கிறது. அமெரிக்கா கொடுக்கும் கணக்குகள் புள்ளிவிபரங்களுடன்கூடியது. ஜெர்மனி மொத்தமாக குரோஸில் கணக்குக் கொடுக்கிறது. அமெரிக்கா சொல்லும் 1 மிலியன் நஷ்டக் கணக்கு 7,00,000 குரோஸ் கணக்குக்குச் சமமானது.

வி வி வி வி வி வி வி

**டாடா நகர்த்தின்பேரில் குண்டு வீச்சு.** ஜெர்மனியின் பொய் பிரசாரத்திற்கு மற்றொரு உதாரணம் கிடைத்திருக்கிறது. இந்தியாவைப்பற்றி மார்ச்சு 26-ம் தேதியில் ஆங்கிலத்திலும், ஹிந்துஸ்தானியிலும் பெர்லின் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து பேசியபொழுது "ஜப்பானிய வெடி விமானம் ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா இரும்பு தொழிற்சாலையை கடுமையாகத் தாக்கி நாசம் விளைவித்தது" என்று சொல்லப்பட்டது. நாஸிகளின் இந்தக் கட்டுக்கதையை டாடா நகரவாசிகள் ஆனந்தத்துடன் வரவேற்பார்கள். இதைப்பற்றி வியாக்யானம் சொன்னபொழுது இந்த நான்கு வருஷமாக நடைபெறும் யுத்தத்தில் ஜெர்மன் அதிகார வர்க்கத்தார் வெளியிடும் தகவல்களை பிரிட்டனுடையவும் கடல் கடந்த நாடுகளிலுள்ளவும் நேயர்கள் பரிசீலனை செய்து உண்மையென்று கண்டுபிடித்திருக்கிறார்களென்றும் ஜெர்மனி சொல்லுகிறது. ஆம், நாமும் இப்பொழுது பரிசீலனை செய்து ஆச்சரியமடைகிறோம். டாடா நகரம் வெடிகுண்டால் தாக்கப்படவில்லை. வாயாடியான பால்ஸ்டாபும்கூட இம்மாதிரி சொல்லத் துணிந்திருக்கமாட்டான்.

வி வி வி வி வி வி வி

**அரகான்.** நம்முடைய படைகளைச் சுற்றி வளைக்கவும், மாயூ தீபகற்பத்தில் ஊடுருவிச் செல்லுவதற்கும் ஜப்பான் செய்த பிரயத்னம் வீணாகிவிட்டது. நாம் டான்பெயிக் பிரதேசத்தைக்காலி செய்துவிடும்படி நேர்ந்துவிட்டது. இந்தியாவுக்குச்சொந்தமான வட பகுதி நம்மிடம்தானிருக்கிறது. மார்ச்சு 29-ம் தேதியன்று சிட்டகாங்கிலிருந்து டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையின் ராணுவ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார். "அரகானில் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு அநேக சிக்கலான விஷயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்தத்துக்குப் போக்குவரத்துதான் முக்கிய சாதனம். இவ்விஷயத்தில் எதிரிக்கு சௌகரியமிருக்கிறது அரகான் மலைப்பிரதேசம். அங்கே நதிகளும் ஓடைகளும் ஏராளமாக ஓடுகின்றன. தரை மார்க்கமாகப் போக்குவரத்து மெதுவாகவும் அதிக கஷ்டத்துடனும் நடைபெற வேண்டியிருக்கிறது. நமது இந்திய ஸாப்பர்கள் ஆறு மாதங்களாக 300 மைல்கள் நீளம் ரஸ்தாக்கள் அமைத்தும், 200 பாலங்கள்கட்டியும் சிறந்த வேலை செய்திருக்கிறார்கள். ஆகிலும் இந்த மார்க்கங்கள் எல்லாக் காலங்களிலும் உபயோகப்படுத்தக்கூடியவையல்ல. இதை விடு ஏராளமான வண்டிகள் போவதால் பாதைகள் சீர்கேடு அடைகின்றன. வேகமாகப் போக்குவரவு செய்வதற்கு கடல் மார்க்கமாக கப்பல்கள்மூலம் உதவி பெறவேண்டும். துரதிருஷ்டவசமாக மற்ற போர்முனைகளில் நடவடிக்கைகள் நடைபெறுவதால் அரகான் யுத்தத்துக்கு குந்தகம் ஏற்படுகிறது. பர்மா யுத்தத்துக்குத் தேவையான கப்பற்படை நமக்குக் கிடைத்துவிட்டால் யுத்தம் மும்மரமாக இங்கு நடைபெறக்கூடும்."

மாயூ தீபகற்பம், காலடான் நதி, இவைகளின் முகத்துவாரங்களை ஜப்பான் வசப்படுத்திக்கொண்டுவிட்டதால் எதிரிக்கு விசேஷ சௌகரியமுண்டாகியிருக்கிறது. மார்ச்சு மாத ஆரம்பத்தில் ஜப்பானியர்கள் அக்யாப்பிலிருந்து கிளம்பி காலடான் நதிக்கரைவழியாக முன்னேறி நம்முடைய சிறிய படைகளையும் ரோந்துப் படைகளையும் பின்வாங்கும்படி செய்துவிட்டார்கள். அரகாயொமாவில் உள்ள உள்நாட்டு ரஸ்தாக்கள் எதிரியின் நடமாட்டத்துக்கும் போக்குவரத்துக்கும் சாதகமளிக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய யுத்த முறை.** அரக்கான் போர்முனையில் ஜப்பானியர்கள் செய்த தந்திரமும் கவனிக்கத்தக்கது. சுருக்கமாகச் சொல்லுமளவில் விலாப்பக்கத்தில் செல்லுவதும் ஊடுருவிச் செல்லுவதும், முக்கிய ஏற்பாடுகள். ஜப்பானியர் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. பகலில் கூடியவரையில் அவன் வெளி வருவதில்லை. அநேகமாக இராக்காலங்களில்தான் அவன் நடமாடுகிறான். அவனுடைய யுத்த தந்திரம் சுலபமானது. ஆகிலும் அது வெற்றிகரமாக நிறைவேறுவதற்குச் சிலாக்யமான திட்டங்களும் அதை சரியானபடி நடத்தும் முறைகளும் ஏற்பாடாக வேண்டும். அரகான் வனங்களில் ஜப்பானியப் படைகள் கூட்டம் கூட்டமாகச் செல்லுவதில்லை. ஊடுருவிச் செல்லுவதற்காக 20 முதல் 50 பேர்கள் கொண்ட துருப்புகள் இரவில் திருட்டுத்தனமாகச் சென்று நமது படை வரிசைகளுக்குப்பின் வந்துவிடுகிறார்கள். படைபலம் போதுமான அளவிற்கு அதிகரித்தபொழுது பின்பக்கத்திலும் விலாப்பக்கத்திலும் நம்மைத் தாக்குகிறார்கள். இதே சமயத்தில் முன்பக்கத்திலும் ஜப்பானியப் படைகள் தாக்குகின்றன. இந்த யுத்தங்கள் எல்லாம் சில்லரை நடவடிக்கைகள்தான். அரகான் போர்முனை நமது துருப்புகளுக்கு பயிற்சி தளமாகயிருந்தது. இப்பொழுது நாம் கற்றுக்கொண்ட அநேக படிப்பினைகளெல்லாம் யுத்த அரங்கம் விஸ்தரிக்கப்படும்பொழுது பிரயோஜனப்படும். அரகான் பர்மாவினுடைய ஒரு சிற்றண்டம் மட்டுமில்லை. மலேயா, டச்சுக் கிழக்குத் தீவுகள் போன்ற தேசங்களைப் பிடிப்பதற்கும் உபயோகப்படக்கூடிய ஸ்தலசந்நிவேச அனுபவம் இங்கு கிடைத்துவிட்டது.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவின் தற்காப்பு.** ஏப்ரல் மாதம் 6-ம் தேதியன்று பிரபுக்கள் சபையில் இந்தியாவின் ஸமஸ்தான உதவி காரியதரிசியான மன்ஸ்டர் பிரபு பேசும்பொழுது, ராஜீயக்கொள்கையின் பயனாக ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களிருந்தபோதிலும் இந்தியாவில் படை சேமிப்பு ஒரு மாதத்தில் 70,000 பேர்களுக்கு உன்னதி அடைந்ததென்றும் ஒருபொழுதும்

மாதாமாதம் சராசரி 60,000 பேர்களுக்குக் குறைவுபடவில்லையென்றும் சொன்னார். உலகத்திலே வாலண்டியர்கள் கொண்ட படைகளில் மிகப் பெரியதான இந்திய சேனையும், சாம்ராஜ்யத்திற்காக கடல்தாண்டி அனுப்பப்பட்ட துருப்புகளில் பெரும்பாகம் கொண்ட இந்தியப்படையும் சேர்த்து $1\frac{1}{2}$ மிலியன் ஜனங்கள் கணக்கிடப்படுகிறார்கள். அபிஸீனியாவிலிருந்து சண்டை செய்துகொண்டு ஸுபாக்ஸுக்குச் சென்றிருக்கும் இந்திய 4-வது படையும், 5-வது இந்தியப் படைபகுதியும் அழிவற்ற பெயரையும் புகழையும் பெற்றுவிட்டன. மகத்தான இஞ்சினியரிங் திட்டங்கள் முடிவடைந்துவிட்டன. ராணுவ ரஸ்தாக்களும் விமான தளங்களும் ஏற்பாடாகிவிட்டன. விமான தளங்களிலுள்ள ஓடு பாதைகள் மட்டும் பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு, அதாவது சுமார் 1,000 மைல்கள் நீளமுள்ள ஒரு கான்க்ரீட் ரஸ்தா அமைக்கப் போதுமானவை. இந்திய விமானப் படையும் இந்தியக் கடற்படையும் விருத்தியடைந்துவிட்டன. இந்தியக் கடற்படை முன்னிருந்ததைவிட பத்து மடங்கு அதிகரித்து எல்லாக் கடல் மார்க்கங்களிலும் சஞ்சரிக்கிறது. ஜாவாத் தீவுக்குச் சமீபத்தில் ஜம்னா என்ற கப்பலும், இந்து மகா சமுத்திரத்தில் பெங்கால் என்ற கப்பலும் காட்டிய தீரமானது சரித்திரத்தில் எழுதும்படியானது.

இந்தியாவின் யுத்த முயற்சியின் பூராச்செலவையும் அது பொருத்துக் கொள்ளவில்லை. இந்தியாவின் தற்காப்புக்குச் செலவாகும் செலவை மட்டும்தான் அது பொருத்துக்கொள்ளுகிறது. யுத்தம் நடைபெறும் இந்நாளில், கடன் வாங்கப் போகாமல், இந்தியாவானது பிரிடிஷ் பொக்கிஷத்திலிருந்து 400 மில்யன் பவுன்கள் கடன் வாப்ஸ் பெற்றிருக்கிறது. இந்தியாவின் தற்காப்பில் 350 மிலியன் பவுன்கள் செலவு செய்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**யுத்த சேவை கண்காக்ஷி.** இந்தக் கண்காக்ஷி சமீபகாலத்தில் டில்லியில் நடைபெற்று இனிது முடிந்தது. இந்த மாதக்கடைசியில் மறுபடியும் பம்பாயில் இது திறக்கப்படும். தென் இந்தியாவிலும் இந்தக் கண்காக்ஷி கோஷ்டி சுற்றுப்பிரயாணம் செய்வார்களென்றும், புதுக்கோட்டை ஸமஸ்தானத்துக்கும் இது வருமென்றும் நினைக்க நாம் சந்தோஷப்படுகிறோம். இந்தக் கண்காக்ஷி மூலம் வெற்றிபெருவதற்காக இந்தியர்கள் எவ்விதம் சேவைசெய்து பங்கு எடுத்துக்கொள்ளலாமென்பது வெளிக்காட்டப்படுகிறது. கண்காக்ஷியில் யுத்தத்தின் பலவிதமான அம்சங்களையும் எடுத்துக்காட்டுவார்கள். முக்கியமாக மூன்று விதமான சேவைகள் சம்பந்தமான நடவடிக்கைகளும் காண்பிக்கப்படும். டெக்னிகல் பயிற்சி சம்பந்தமாக தனிப்பட்ட ஒரு பகுதி அதில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, செஞ்சிலுவை, ரத்தம் சேமிப்பு பாங்கி, தேசீய யுத்த முன்னணி, ஸ்திரீகள் வாலண்டரிப் படையினர், ஸ்திரீகள் உதவிப்படை முதலியவர்களுக்கும் தனித்தனி பகுதியுண்டு. டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள், மற்றும் நவீன யுத்த முறையில் உபயோகப்படுத்தப்படும் ஆயுதங்களெல்லாம் கண்காக்ஷியில் வைக்கப்பட்டிருக்கும். இவைகளை தேர்ச்சிபெற்றவர்கள் உபயோகப்படுத்தி ஜனங்களுக்குக் காண்பிப்பார்கள். யுத்த காலத்தில் பயிற்சி பெற்றவர்கள் சமாதானகாலத்தில் தங்கள் பயிற்சிகளை எவ்விதம் உபயோகிக்கக்கூடுமென்பதையும், விளக்கிக்காட்டுவார்கள்.

---

## நேசதேசத்தார்களின் அலுவல்கள்.

*மாடம் சியாங் கை ஷேக் (லாஸ் ஏஞ்செல்ஸ், ஏப்ரல் 5).*

கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சீன மக்களுக்கு, அவர்களின் சங்கடங்களிலும், அவர்கள் தங்கள் தலைவர்களைப்பற்றி புகார் செய்யவில்லையென்றும், சீனப் பிராந்தியத்திலிருந்து எதிரியை விரட்டியடிக்கும் தீர்மானப்படி நடப்பதிலும் அவர்கள் பின்வாங்கமாட்டார்கள் என்றும் சொல்லும் புகழுரை பொருத்தமாகும்.

சீனர்கள் ஸ்வய காரியத்திற்குமட்டுமல்லாமல், ஜனநாயக நாடுகள் தற்காப்புகளை ஏற்பாடு செய்யத் தேவையான அவகாசமளிப்பதற்கும் எதிரியுடன் போர்



புரிகிறார்கள் என்று அமெரிக்காவும் மற்ற நேசநாடுகளும் தெரிந்துகொள்ளும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

வலிமையை எதிர்த்துப் போராடும் நியாயமான யுத்தத்தின் உண்மைகளையும், விளைவுகளையும் நன்கு உணர்ந்து அமெரிக்கா தேசம் பூராவும் ஜனநாயக நாடுகளின் ஆயுதசாலையாக ஏற்பாடு செய்திருக்கும் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் முன் யோசனையையும் ராஜ தந்திரத்தையும் பாராட்டாமல் இந்த தலைமுறையிலும் வரப்போகும் தலைமுறையிலுமுள்ள ஜனங்கள் இருக்கமுடியாது.

ஜனாதிபதியின் தீவ்ரமான முடிவுகளையும் அவைகளை நடத்துவதில் அவருக்குள்ள மனோ தைரியத்தையும் சரித்திரமும் பின் தலைமுறையும் துதி செய்யும்.

### சமாதான ஏற்பாடுகள்.

யுத்தத்துக்கு மிகவும் முக்கியமான தேவைகளைப்பற்றி நாம் கவலைப்படும் நாளிலும் கூட நியாயமானதும் சாச்வதமானதுமான அமைதி நிலவுவதற்கும் வரப்போகும் காலத்தில் உலக புனரமைப்புக்கும் நாம் இப்பொழுதே திட்டங்கள் போடுகிறோமென்பதில் நாம் பெருமை பாராட்டவேண்டியிருக்கிறது. நீங்களும் அதே விதமான ஏற்பாடுகள் செய்துவருகிறீர்கள். யுத்தத்தை நடத்தும் ஏற்பாட்டில் ஈடுபட்டிருப்பது போல, ஜனசமூகத்தை நூதனமான வகையிலும், நல்ல முறையிலும் சீர்திருத்தும் இபக்கத்திலும் நீங்களும் ஒரு பங்கு எடுத்துக் கொள்ள முன் வந்திருக்கிறீர்கள்.

நமக்கு வெற்றி கிடைக்கும் வரையில் நாம் சிரமப்பட்டுக் கடக்கவேண்டிய மார்க்கங்களை விட்டுவிடப்போவதில்லை. நீங்களும் மற்ற நேசநாடுகளும் செய்வது போல, நாங்களும், வெற்றி எவ்வளவு காலத்திற்குப் பிறகு கிடைத்தாலும், நான்கு ஸ்வதந்திரங்களும் நீதி முறைகளாகச் சொல்லப்பட்டன என்று ஹேளனம் செய்யாதபடி பார்த்துக்கொள்ளுவோம். நீதியுள்ள சமாதானம் ஏற்படவேண்டுமென்று சொல்லும் பேச்சைக்கேட்டு நாங்கள் ஏமாந்துவிடமாட்டோம்.

அக்கிரமான யுத்தத்தைத் தலைகாட்டும்படிக்கும் அதன் முதல் எல்லா ஜனங்களின் உயிர், ஸ்வதந்திரம், சந்தோஷமான வாழ்க்கை இவைகளுக்கு ஹானி ஏற்படும்படிக்கும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

---

## ஹிட்லருக்கு மனித பலப் பிரச்னை.

### உற்பத்திகள் குறைவு.

*(டெயிலி டெலகிராப் பத்திரிகை—லண்டன், மார்ச் 25).*

பெர்லினிலிருந்து சமீபத்தில் இங்கு வந்திருக்கும் இஞ்ஜினியரான ஒரு நிபுணரின் அபிப்பிராயப்படி, ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் மனிதபலம் அதிகப்படுத்துவதற்காக ஹிட்லர் செய்த படை சேமிப்பு ஏற்பாடுகளெல்லாம் வீணாய்ப்போய்விட்டன. சென்ற வருஷத்தில் பயிற்சியளிக்கும் விமானங்களைத் தவிர யுத்த விமானங்களின் உற்பத்தி 3,000-த்திலிருந்து 2,000-க்குக் குறைந்துவிட்டது. போர்முனையிலுள்ள சேனைகளுக்கு ஆள்கள் தேவையாயிருந்ததை முன்னிட்டு பயிற்சி பெற்ற ஜெர்மானியர்கள் போய்விட்டபடியால் அனுபவமில்லாதவர்கள்தான் யுத்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. அவர்களும் ராணுவப் பயிற்சியில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்களில்லை. இவர்களுக்கு 6 வாரங்கள்தான் சராசரி பயிற்சி அளிக்கப்படுகிறது.

ரூர் மாகாணத்தில் தினசரி நிலக்கரி உற்பத்தி 20 சதவிகிதம் குறைந்துவிட்டதென்றும், டஸெல்டார்ப், டூயிஸ்பர்க் தொழிற்சாலைகளின் எஃகு உற்பத்தி வருஷாவருஷம் 1,250,000 டன்கள் எடைமானம் குறைந்து விட்டதென்றும், பிரிடிஷ் விமான இலாகா காரியதரிசியான ஸர் ஆர்க்கிபால்ட் சிங்கிளேர் சமீபத்தில் வெளியிட்ட தகவலிலிருந்தும், வேறு விதமான சாமான்கள் செய்வதில் எஃகும், இரும்பும் உபயோகப்படக் கூடாதென்று ஜெர்மனி சமீபத்தில் போட்டிருக்கும் உத்தரவிலிருந்தும் ஜெர்மனியின் தொழிற்சாலைகளின் உற்பத்திகள்

எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று வெளியாகுகிறதென்று நிபுணர்கள் அறிவிக்கிறார்கள்.

எஃகும், இரும்பும் மிகுதியாகும்படியான இதர தொழில்முறைகளை நடத்துகிறவர்களுக்கு ஆதரவளிப்பதாகவும் நாஸி பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

150 மிலிமீடர் பீரங்கி குண்டுகள் செய்வதில் உபயோகப்படுத்தப்படும் எஃகு 163 பவுண்டிலிருந்து 125 பவுண்டுக்கும், 550 பவுண்டுள்ள வெடிகுண்டுகள் 450 பவுண்டு எடைமானத்துக்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன வென்றும் ஜெர்மன் பத்திரிகைகளில் சமீபத்தில் வெளிவந்தன.

இதாலிக்குச் சமீபத்தில் ரிப்பன்டிராப் விஜயம் செய்தபொழுது 1 மிலியன் தொழிலாளர்களையாவது, அல்லது துருப்புகளையாவது அனுப்பவேண்டுமென்று முஸோலினியை அவன் வேண்டிக்கொண்டான். பிரிடிஷ் விமானத் தாக்குதல்களின் மூலம் ஜெனிவா, டூரின் முதலிய இடங்களிலுள்ள இதாலிய யுத்தத் தளவாட உற்பத்திசாலைகள் பழுதுபட்டு விட்டபடியால் இதாலியிலிருந்து அனுப்பப்படும் மனிதர்களுக்கு முஸ்தீப்புகள் கொடுப்பதாகவும் ரிப்பன்டிராப் வாக்குறுதி செய்திருக்கிறார். ரிப்பன்டிராப் வேண்டுகோளுக்கு என்ன பதில் கிடைத்ததென்று விளங்கவில்லை. ஆகிலும் பெர்லினிலுள்ள ஸ்வீடிஷ் பத்திரிகை நிருபர்கள் ஜெர்மனிக்குக் கூடிய சீக்கிரம் தேர்ச்சி பெற்ற இதாலியத் தொழிலாளர்கள் வந்துவிடுவார்களென்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். நிபுணர்களின் மதிப்புப்பிரகாரம் ஜெர்மனியில் 185,000 இதாலியர்கள் வேலைசெய்து வருகிறார்களென்று சொல்லக்கூடும்.

---

## லெனின்கிராட்டிலிருந்து கருங்கடல் வரை.

### ருஷ்யப் போர்முனையின் தோற்றம்.

ருஷ்யாவில் வெளியிடப்போகும் தேசப்படத்தில் லெனின்கிராட்டிலிருந்து கருங்கடல் வரையிலும் தொடர்ச்சியாகவுள்ள போர்முனைகளின் விவரங்கள் காணப்படுமென்று டைம்ஸ் பத்திரிகையின் மாஸ்கோ நிருபர் எழுதுகிறார். செம்படையானது ஸ்டாராயா ருஸாவுக்கும் கோம்முக்கும் வெளிப்பக்கத்திலிருக்கிறதென்றும், லெனின்கிராட் முற்றுகையை நிவர்த்தி செய்ததில் 12-மைல் அகலமுள்ள பிளவு ஏற்பட்டிருக்கிறதென்றும், இவ்விதமாக லெனின்கிராட்டுக்கு மேற்கேயுள்ள சமுத்திரக்கரை ருஷ்யர் வசமிருக்கிறதென்றும் ருஷ்யாவிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த தேசப்படத்திலிருந்து வெலிகிலூகிக்கு மேற்கே ருஷ்யர்கள் நொவா லேரொகால்னிகிக்கு முன்னேறி, நெவெலிலிருந்து லெனின்கிராட்டுக்கு வடக்கு மூலமாகப்போகும் ரஸ்தாவை உபயோகமில்லாதபடி செய்துவிட்டார்களென்றும், சென்ற சில மாதங்களாக செம்படையானது வெலிஷ் . அரண்களுக்குப் பின்னால் இருந்து வருகிறதென்றும், வெலிஷ் அரண் வெண்மை ருஷ்யாவின் எல்லைச்சரகத்திற்கு 15-மைல்களுக்குள்ளாகயிருக்கிறதென்றும் தெரியவரும்.

ஓரலுக்கு வடக்கேயிருக்கும் மிஸன்ஸ்க் என்னுமிடம் ஜெர்மானியர் வசமிருக்கிறது. இந்த வருஷ ஆரம்பத்தில் பிடிபட்ட செவஸ்க், ஸூமி இரண்டும் எதிரி வசமாகிவிட்டன. டானெட்ஸ் நதிவரையில் ருஷ்யர் வசமிருக்கும் பெரிய பாலமுனையானது பாலக்லியாவுக்குத் தென்கிழக்கில் இஸியம் பக்கத்தில் பலமாயிருக்கிறது. வொரோஷிலாவ்கிராட்டை ருஷ்யர்கள் பலமாகக் காப்பாற்றி வருகிறார்கள்.

நவம்பர் மாதத்தில் ருஷ்யர்கள் மாரிகால முன்னேறித் தாக்குதல் செய்வதற்கு முன்னதாகவே டான் நதிப்பிரதேசத்தில் முக்கியமான நான்கு இடங்கள் ருஷ்யர் வசமிருந்தன. வாரனெஷ் பகுதியில் லிஸ்கிக்கு வடமேற்கு பக்கத்திலும், போகுஸாருக்கு வடக்கிலுமுள்ள இடங்களும் ஸெராபிமோவிச்சிக்கு மேற்கே 50-மைல்கள் கொண்ட பிரதேசமும், கிளெட்ஸ்காயாவுக்கு வடகிழக்கே உள்ள பிரதேசமும் ருஷ்யர் வசமிருந்தன. தெற்குப் பக்கத்தில் ரூஸ்ட்ராகானுக்கு



80-மைல்களுக்குள்ளாகவே ஜெர்மானியர்கள் வந்துவிட்டார்கள். மாஸ்டாக்குக்குக் கிழக்கே 30-மைல்கள் தூரமும் எதிரி சென்றுவிட்டான்.

தேசப்படத்தில், ஜெர்மனி ஸார் பிரதேசத்தை ஆக்கிரமணம் செய்தபிறகு, ஜெர்மன் ராஜ்யமிருந்த அளவுக்குமேற்பட்ட ஒரு பிரதேசத்தை ருஷ்ய சேனை எதிரி வசமிருந்து விடுவித்ததென்றும் வெளியிடப்பட்டிருக்கிறது. தேசப்படத்தில் காண்பித்திருக்கிறபடி போர்முனையானது லெனின்கிராட்டிலிருந்து டாகன்ராக்கு வரையில் சுமார் 1,500-மைல்கள் நீளம், பரவியிருக்கிறது. இந்தப் படத்தில் லெனின்கிராட் பகுதியில் சுவாரஸ்யமான அம்சம் யாதெனில், லெனின்கிராட்டுக்கு மேற்கேயுள்ள கரையில் ஜெர்மானியர் ஊடுருவிச் சென்றிருக்கும் ஸ்தலத்துக்கு அப்பால் பின்லாந்து வளைகுடாவின் தெற்குக்கரையில் சிலபாகம் ருஷ்யர் வசமிருக்கிறதென்று காணப்படுகிறது.

---

## இந்தியாவின் க்ஷேமம்.

(டாக்டர் கூ.—மதராஸ், ஏப்ரல் 5).

சைனாவின் யுத்த கால தலை நகரைவிட்டுப் புறப்பட்டு ஐந்து வாரங்களாகின. இந்தியாவிலுள்ள கல்வி ஸ்தாபனங்களைப் பார்வையிடுவதற்காக நாங்கள் வெகுதூரம் பிரயாணம் செய்து வடக்கேயிருந்து இந்தியாவின் தெற்கேயுள்ள மதராஸ் நகருக்குவந்திருக்கிறோம். நாங்கள் அழகான அநேக ஸ்தாபனங்களைப் பார்வையிட்டோம். எங்கள் மனதின் முன்னிற்பதெல்லாம் ஒரு தோற்றம் தான். எதிரியின் வெடி விமானங்களின் சேஷ்டைகளில் அடிக்கடி பாதிக்கப்படாமல், மாணவர்கள் தங்கள் கல்வியைக் கற்றுக்கொள்ளுவதற்கு வசதியுள்ள சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றென்று நாங்கள் கருதுகிறோம்.

நீங்கள் அறிந்த வண்ணம், சைனாவின் நிலைமை மாறுபாடானது. அங்கே மாணவர்கள் பயந்துகொண்டேதான் பாடங்கள் கற்கவேண்டும். யுத்தம் ஆரம்பித்த பிறகு தங்களுடைய முக்கிய லக்ஷியங்களாகக்கொண்ட கல்வி ஸ்தாபனங்களையும் உயர்தரக் கலாசாலைகளையும் தாக்குவதில் ஈடுபட்ட ஜப்பானிய வெடி விமானங்களினின்றும் அவர்களுக்கு அடிக்கடி பீதி ஏற்படுகிறது. இம்மாதிரியான அக்கிரமமான காரியங்களின் மூலம் எங்கள் வீடுகளையும், கிராமங்களையும் அழித்துவிடுவதோடு எங்கள் கல்வி அபிவிருத்தியையும் எங்கள் நாகரீகத்தையும் அழித்துவிடுவதாக ஜப்பானியர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். இந்த விஷயத்தை ஒவ்வொரு சீனரும் நன்கு உணர்ந்திருக்கிறான். இதன் காரணமாகத் தான், யுத்த நெருக்கடியிலும், சீன அரசாங்கம் ஜனங்களின் படிப்பு விஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள்.

---

## பர்மா நிகழ்ச்சிகளின் விமர்சனம்.

சென்ற வருஷம் டிஸம்பர் மாதத்தில் பர்மாவில் யுத்தத்தை நேசநாடுகள் துவக்கியபொழுது, இந்த யுத்தத்துக்கு அதிக முக்கியத்வம் அளிப்பது கூடாதென்றும், ஸ்தல சன்னிவேசத்தின் காரணமாக அதிகமான விளைவுகள் ஏற்படநியாயமில்லையென்றும் வர்புறுத்த எல்லா முறைகளும் கையாளப்பட்டன. பர்மா யுத்தத்தையும், யூனான் மாகாணத்தில் நடைபெறும் யுத்தத்தையும் ஒரு மகத்தான யுத்தம் என்று நாங்கள் கருதவில்லை. அவைகள் முற்போக்கான சிறிய நிகழ்ச்சிகள் என்றே நாம் நினைத்தோம். இந்திய மக்கள் அரகான் தற்காப்பு நிகழ்ச்சிகளின் லக்ஷியங்களையும், லாபங்களையும் தெளிவாக அறிந்திருக்கிறார்களென்று அவர்கள் வெளிக்காட்டியிருக்கிறார்களென்று சொல்லவேண்டியது அவசியம்தான்.

### போக்குவரத்து கஷ்டங்கள்.

பர்மாவில் பிரிடிஷார் யுத்தம் நடத்துவதிலுள்ள மகத்தான சிரமங்களை அவர்கள் ஒருபொழுதும் குறைத்துக் கூறவில்லை. சுருக்கமாகச் சொல்லும்பொழுது

தேச அமைப்பையும், போக்கு வரவும்தான் இரண்டு சிரமங்கள். உலகத்தில் உஷ்ணந்த ரேகைக்குட்பட்ட தேசங்களிலுள்ள மலைப்பிரதேசங்களில் இந்தியாவுக்கும், பர்மாவுக்குமிடையேயுள்ளவை மிகவும் கரடுமுரடானவை. இவ்விடத்தில் மனித சஞ்சாரத்துக்கும், யுத்த முஸ்தீப்புகளைக்கொண்டு போவதற்கும் இயற்கையான அநேக இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும். நியூ கினியாவைத் தவிர மற்ற பிராந்தியங்களில் இம்மாதிரியான சிரமம் ஏற்பட்டதில்லை. இவைகளை நிவர்த்திக்க கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் போக்குவரவுகள் செய்யலாம். எதிரியைப் பிரமிக்கும்படி செய்யக்கூடிய ஒரு பெரிய கடல் மார்க்கமான படையெடுப்பு வெற்றிகரமாகச் செய்வதற்கு, கடற்படை பலமும்கொண்டு திடீர் தாக்குதல் முறைகளையும் கையாளவேண்டும். இதற்கு ஏராளமான கப்பல்கள் வேண்டும். நேச நாடுகளில் விமானங்கள், கப்பல்கள் இவைகளின் உற்பத்தி மேன்மேலும் அதிகரித்துவரும்பொழுதும் கூட, ஒரு சமயத்தில் ஒரு பிராந்தியத்தில் படை பலத்தின் மேன்மையேற்படுவதற்கு அந்தப் பிரதேசத்துக்கு முதன்மையாகத் தளவாடங்கள் அனுப்பப்படவேண்டும்.

யுத்தமுனையைப் பார்வையிட்டுத் திரும்பிவந்து ஜனவரி மாதத்தில் பீல்டு மார்ஷல் வேவல் சொன்னதாவது: "அரகான் பிரதேசத்திலிருந்து எதிரியை விரட்டியடிப்பது உபயோகமுள்ளது. இது ஒரு முன்னேற்ற யுத்தம். நமது ஆபீஸர்களுக்கும், சேனைகளுக்கும் நல்ல பயிற்சியளிக்கக்கூடும். இது மிகவும் கரடுமுரடான பிரதேசம். நியூ கினியா போன்றது. இங்கே போக்குவரத்து ஏற்பாடுதான் முக்கியமான பிரச்னை. நாம் படகுகளையும், இதர சாதனங்களையும் போக்குவரத்துக்காக உபயோகிக்கவேண்டும்".

பர்மா யுத்தத்தை விமர்சனம் செய்தபொழுது பிப்ரவரி மாதத்தில் ஜெனரல் ஸர் ஆலன் ஹார்ட்லி பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "பர்மா யுத்த முனையில், முற்றிலும் சீர்திருத்தப்படாத வனாந்தர பிரதேசத்தில் போர்புரிவதும், ஸப்ளைகள் கொண்டுபோவதும் சிரமசாத்யமான காரியங்கள். எதிரி ஸ்தலத்தை ஆக்கிரமித்திருந்தாலும் அவனுக்கும் சமமான சிரமங்கள்தானிருக்கின்றன". இந்தக் கஷ்டங்களிருந்தபோதிலும், நேசநாட்டு கொரில்லாப் படைகள் எதிரி ஆக்கிரமித்திருக்கும் பிரதேசத்திற்குள் வெகுதூரம் ஊடுருவிவிட்டார்களென்றும் அவர் சொன்னார்.

ஸர் ஆலன் மேலும் சொன்னதாவது. "ஜப்பானியர்களைப்போலவே காடுகளில் யுத்தம் செய்வதில், தானும் தீரனென்றும் இந்திய சிப்பாய் காண்பித்திருக்கிறான். வெற்றிகரமாகவே எதிரியை விரட்டியடித்துவருகிறான். சுருக்கமாகச் சொன்னால் நாம் ஜாக்கிரதையாக முன்னேறுகிறோம். ஜப்பானிய யுத்த தந்திரங்களை நாம் பரிசிரமப்பட்டு கற்றுக்கொள்ளுகிறோம். அவர்களுடைய தற்காப்பு முறைகளை ஒழிப்பதற்குவேண்டிய முறைகளை நாம் பரிசீலனை செய்து வருகிறோம்".

## அக்யாபுக்குப் போகும் மார்க்கம்.

யுத்த ஆரம்பத்தில் மாங்டாவிலிருந்து பூதேடாங்குக்கும், பிறகு ராதேடாங்குக்கும் நேசதேசப் படைகள் முன்னேறியபொழுது, சுலபமான போக்குவரத்து சாதனங்களும் திடீர் முறைத்தாக்குதல்களும் நமது துருப்புகள் முன்னேறுவதற்குச் சாதகமாகயிருந்தன. இப்பொழுது ராதேடாங்க், டான்பெயிக் பிரதேசங்களில் எதிரி கடுமையாகத் தற்காப்பு யுத்தம் செய்கிறானென்பதற்கு, உள்நாட்டிலிருந்து படை பலத்தைத் திரட்டி இங்கு கொண்டுவரவும், முஸ்தீப்புகளை இங்கு அனுப்புவதற்கும் எதிரிக்கு அவகாசமிருந்ததும்தான் காரணங்கள். அத்துடன் ஸ்தல அமைப்பின் லாபங்களை எதிரி பூராவாகவும் உபயோகப்படுத்திக்கொண்டுவிட்டான். படகுகளும், லேசான கப்பல்களும் நமது வெடி விமானங்களுக்கு சுலபமான லக்ஷியங்களென்றாலும் அவைகளை வெகு சீக்கிரமாகக் கட்டிவிடலாம். மேலும் அமைதி காலத்திலுள்ள நதிப்போக்குவரத்து சாதனங்கள் ஜப்பானியர்கள் வசமிருக்கின்றன. ஆகையால்தான் டிஸம்பர் மாத முடிவில் அக்யாபுக்கு அதிகமான படை பலத்தை அனுப்புவதற்கு ஜப்பானியர்களுக்கு வசதி ஏற்பட்டது. மாங்டாங்—பூதேடாங்க் நிகழ்ச்சிகளிலிருந்து ஒரு முக்கியமான பிரயோஜனம் ஏற்பட்டிருக்கிறது. அக்யாப் நடுநிலைமை தேசமாக மாறிவிட்டது.



ராதேடாங்கைச் சுற்றி நடக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே நாம் பிடித்த கேந்திர ஸ்தானங்களைப் பலப்படுத்துவதற்கும், தற்காப்பு செய்வதற்கும் செய்யப்பட்டன. பின் சொல்லிய நிகழ்ச்சிகளில்தான் ஏராளமான துருப்புகளைக் காவு கொடுத்து, ஜப்பானியர்கள் நேச நாடுகளின் முன்னேற்றத்தை வெற்றிகரமாகத் தடுத்திருக்கிறார்கள்.

## கடுமையான வெடிகுண்டு தாக்குதல்.

பர்மாவிலுள்ள எதிரியின் ஸ்தானங்களை நமது வெடி விமானங்கள் பலமாகவே தாக்கிவருகின்றன. சென்ற டிஸம்பர் மாதத்தில் பிரிடிஷ் விமானப் படை பர்மாவை 29 தடவை பகலிலும், 10 தடவை இரவிலும் தாக்கியிருக்கின்றன. ஜனவரி மாதத்தில் அநேகமாக ஒவ்வொரு பகலிலும், 18 தடவை இரவிலும் அநேக லக்ஷியங்களைத் தாக்கியிருக்கின்றன. இந்தியாவிலுள்ள தளங்களிலிருந்து அமெரிக்காவின் 10-வது விமானப்படை ஜனவரி மாதத்தில் செய்திருக்கும் தாக்குதல்களும் வலுவானவைதான். தாழி, மாபா, மாண்டலேயிலுள்ள ரயில்வே தளங்களின்பேரில் 14 நாட்கள் வெடிகள் போடப்பட்டு அவைகள் அழிக்கப்பட்டன. பிரிடிஷ் விமானப்படையும் குறிப்பிட்ட லக்ஷியங்களின் பேரில் குண்டுகளைப் பொழிந்தன. நதியிலுள்ள படகுகளும், முக்கியமான ரயில்வே கட்டிடம் தொழிற்சாலைகளும், ஷ்வீபோ, ஹேஹோ, டாங்கூ, அக்யாப் இவைகளிலுள்ள விமானத் தளங்களும் சென்ற சில மாதங்களில் இடைவிடாது வெடிகுண்டுகளால் தகர்க்கப்பட்டன.

பிப்ரவரி மாதத்திலும், இந்தியத் தளங்களிலிருந்து நேசதேச விமானிகள் பலமாகவும், வெற்றிகரமாகவும் ஜப்பானியர்களைத் தாக்கிவந்தார்கள். எதிரியின் ஸ்தானங்களை ஒவ்வொரு பகலிலும், சில தினங்களில் இரவிலும் விமானங்கள் தாக்கின. வீசப்பட்ட வெடி குண்டுகளின் மொத்த எடைமானம் சென்ற பருவ காலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டேவருகிறது. பகலில் 26 தடவைகளிலும், இரவு நடவடிக்கைகளில் 19 தடவைகளிலும், நமக்கு 9 விமானங்களும், எதிரிக்கு 4 சண்டை விமானங்களும் நஷ்டமாயின. அமெரிக்க விமானப்படை இந்த மாதத்தில் மிடிங்கி பாலத்தை இடைவிடாது தாக்கியிருக்கிறது.

மார்ச்சு மாதம் முதல் பாதியில் ருசிகரமான சம்பவங்கள் நடைபெற்றன. விமானத் தாக்குதலின் வலுவும், நீடிப்பும் குறையவில்லை. நேச நாடுகளுக்கு 12 விமானங்கள் நஷ்டம்; எதிரிக்கு 13 விமானங்கள் நஷ்டமாயின. நேசதேச விமானங்களின் தாக்குதலின் வலிமையைக்கண்டு எதிரிகள் கலங்குகிறார்களென்று சொல்லுவதில் யாதொரு தவறுதலுமில்லை. நேசதேசத்தாரின் விமானத் தாக்குதலின் பலத்தைக் குலைப்பதில் எவ்வித தியாகத்தையும் செய்ய எதிரிகள் தயாராகயிருக்கிறார்கள்.

## பர்மாவின் முக்கியத்வம்.

பர்மாவைத் திரும்பிப் பிடிப்பதின்மூலம் நமக்கு ஏற்படும் லாபங்களைப்பற்றி நாம் குறைத்துக்கூறமுடியாது. சியாமையும், மலேயாவையும் நேராகத் தாக்குவதற்கு நமக்குத் தளங்கள் கிடைத்துவிடும். பர்மாவிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்கள் கிட்டிவிட்டால் நேச நாடுகளுக்கு விசேஷ லாபம் கிடைத்துவிடும். ஆகிலும் இவைகளை இழந்துவிட்டாலும், டச்சு எண்ணெய்ப் பிரதேசங்களிருக்கும் வரையில் ஜப்பானின் நிலைமையை இந்த நஷ்டம் பாதிக்காது. பர்மா ரஸ்தாவைத் திறந்துவிடுவோமாகில் சைனாவுக்கு ஸப்ளைகள் அனுப்ப அதிக வசதிகள் ஏற்பட்டுவிடும். சைனாவும் யுத்தத்தை மும்முரமாக நடத்த சக்திபெற்றுவிடும்.

பர்மா யுத்தத்தை ஆரம்பித்ததில் நேசநாட்டாருக்குக் குறிப்பிட்ட சில லக்ஷியங்கள் உண்டு. அதை அடைவதற்காகத்தான் முன்னேற்ற யுத்தம் நிறுவப்பட்டு நடத்தப்பட்டது. இந்தியாவின் தற்காப்பு முறைகளை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அஸ்ஸாமுக்குள் எதிரிகள் நுழைந்துவிடாதபடி தடுக்கவேண்டியதும் அவசியமாயிற்று. நேச நாட்டாரின் யுத்த தந்திரத்தில் ஜப்பானியத் துருப்புகளைக் கூடியவரையில் எதிர்க்கவேண்டுமென்பதும், அதன் மூலம் சைனாவுக்கு ஒத்தாசை செய்வதும், இதரப் போர்முனைகளில் சிரமத்தைக் குறைப்பதும் முக்கியமான அம்சங்கள். இந்த நோக்கங்கள் ஈடேறிவிட்டன.

எதிரிக்கு நாம் வேலை கொடுத்துவிட்டோம்; ஏராளமான நஷ்டமும் எதிரிக்கு ஏற்பட்டுவிட்டது.

சிறிய படை பலத்துடன் ஒரு சிறிய குறிப்பிட்ட ஸ்தானத்தைத் தற்காப்புச் செய்துகொண்டு, ஸ்தல சந்நிவேசத்தின் ஒத்தாசையுடன் படை பலங்களை மற்றொரு பக்கம் அனுப்பி, எதிரியைச் சுற்றி வளைத்துக்கொள்ளுவது என்ற எதிரியின் யுத்த தந்திரத்தையும் நாம் கண்டுபிடித்துவிட்டோம். இந்த யுத்த தந்திரத்தில் நமது படைகளும் பயிற்சிபெற்றுவிட்டன. முன்னிருந்ததைவிட இந்தியாவின் தற்காப்புகள் பலமாகயிருக்கின்றன. அஸ்ஸாமில் எதிரியின் படையெடுப்பு நடைபெறவில்லை. அக்யாப் நிலைமை ஸ்தலமாக ஆகிவிட்டது. பர்மா, இந்தோ சைனா இருப்புப்பாதையில் பாமுவுக்கும், டோஜோவுக்கும் நடந்த சம்பாஷணைகளிலிருந்து புலப்படுவதுபோல், மகத்தான ஒரு தாக்குதலைச் செய்யவேண்டுமானால் எதிரிக்கும் போக்குவரத்து பிரச்னைகள் சங்கடம் விளைவிக்குமென்று யோசித்துப்பார்த்தால், அரகான் போர்முனையின் முக்கியத்வத்தை நாம் அலக்ஷியம் செய்யமுடியாது.

### மகத்தான லக்ஷியம்.

இந்த நிகழ்ச்சிகளின் பிரயோஜனத்தை மதிக்கவேண்டுமானால், ஒரு வருஷத்துக்கு முன்னும் அல்லது சென்ற செப்டம்பர் மாதத்திலும் இருந்த இந்தியாவின் தற்காப்பு நிலைமையையும், இப்போதிருக்கும் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேணும். பர்மாவில் மகத்தான முன்னேற்ற யுத்தம் செய்ய வேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்தப்படுகிறது. அது இச்சமயம் சாத்தியமில்லை. ஆகிலும் பூராவாக நிலைமையில் நிச்சயமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றும் ஜனங்களிடம் திடமான நம்பிக்கை அதிகரித்து வருகிறதென்பதற்கு இது அத்தாக்ஷியாகும். சமீபத்தில் பீல்ட் மார்ஷல் வேவல் சொன்னபிரகாரம் இந்தியாவில் எவ்விதமான படையெடுப்பு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கவும் அதை நிவர்த்திக்கவும் இந்தியா சக்தியுள்ளதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

---

## பாடானின் வீரர்கள்.

### விடுதலைக்காக மாக் ஆர்தர் பிரார்த்தனை.

பாடான் விழுந்த வருஷாந்திர விழாவன்று, தென்மேற்கு பஸிபிக் யுத்த முனையின் நேசதேச உயர்தர கம்மாண்டரான ஜெனரல் மாக் ஆர்தர் பின்கண்ட பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்.

“ஒரு வருஷத்துக்கு முன் பாடானில் கதியற்ற ஒரு நம்பிக்கையானது கிளம்பி ஓய்ந்துபோய் விட்டது. பாடானிலுள்ளவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். சண்டையும் போட்டார்கள். பிரார்த்தனை செய்தவர்கள் பசிப்பிணி, தாகம் முதலியவற்றினால் வருந்தியவர்கள். அவர்கள் “எங்களுக்கு ஜீவனோபாயத்தைக் கற்பியுங்கள்” என்று பிரார்த்தித்தார்கள். வெளிச்சம் மறைந்தது. பாடானிலுள்ளவர்கள் பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டு பாடான் விழுந்தது.

நம்முடைய கொடி நொறுங்கி விட்டது. அதன் சேர்மானபாகங்கள் அவமதிக்கப்பட்டு குப்பையில் போடப்பட்டிருக்கின்றன. நமது ஆண் மக்களும், பெண்மக்களும் மெலிந்துபோய் கைதிகளாக ஜெயிலில் உழைத்துவருகிறார்கள். நமது நண்பர்களான 16 மிலியன் பிலிப்பியர்கள் அடிமைப்பட்டு பெருமூச்சு விடுகிறார்கள். இவர்களை அடக்கியாளும் ராணுவ அதிகாரியிடம் சேனைகளுக்குச் சகஜமாக ஸ்திரீகளிடமுள்ள தயை முதலிய குணங்கள் காணப்படவில்லை.

தோல்வியுற்ற வீரர்களின் தலைவனாக நானிருந்தேன். மிகுந்த வருத்தமடைந்த மனதுடன் நான் ஒரு பிரார்த்தனை செய்கிறேன். அடிமைப்பட்டிருப்பவர்களுக்கு சுபயோகமும் உண்டாகும்படி ஈசுவரன் சீக்கிரம் அருள்புரிய வேண்டும். அவர்கள் அழிந்துபோகும்முன் அவர்களுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கும்படிக்கும் நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.



## ஜப்பானுக்கு எதில் சனியன்.

(H. G. W. வுட்ஹெட்).

ஜப்பானுக்குக் கப்பல் குறைவே சனியனாகும். போர் துறைமுகத்தைத் துரோகமாய்த் தாக்கினது முதல் தென்கிழக்கு ஆசியாவில் விளைவு பொருள்கள் இயற்கையாகவே அதிகமுள்ள பிரதேசங்களைத் தன் வசமாக்கிக்கொண்டது. இந்த விளைபொருள்களைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுவதென்றால், அதற்கு 20,000,000 டன் கப்பல்கள் தேவையென்று ஜப்பானிய நிபுணர்களே சொல்லுகிறார்கள். இவ்வளவு அந்த தேசத்தினிடம் இல்லை.

ரப்பர், ஈயம், க்வைனு, சர்க்கரை முதலிய சரக்குகளில் பூலோகத்திற்கு வேண்டிய அளவு கைவசம் இருந்தால் போராது. அதைக்கொண்டுபோய் விற்பதற்குத் தேவையான கப்பல்களும், அதை விற்கக்கூடிய இடமும் தேவை. ஜாவாவிலும், பிலிப்பைன்ஸிலும் லக்ஷக்கணக்கான டன்கள் சர்க்கரை இருக்கின்றன; பர்மாவில் அரிசி இருக்கிறது; மலேயாவில் ரப்பர், ஈயம் இருக்கின்றன, என்றாலும் இவற்றை கப்பலில்லாமல் அகற்றமுடியாது. வரும் மாதங்களில் கப்பல் குறையுமே ஒழிய மிகுதியாகாது. “கிழக்கு ஆசியா பரஸ்பர செல்வாக்கு நிலயங்களின் விளைவு பொருள்களை ஜப்பானியருக்கு 2,00,00,000 டன் கப்பல் இருந்தாலொழிய அதை சொந்தப் பிரயோஜனப்படுத்த முடியாதென்றும், யுத்தத்தை ஜயிக்க முடியாதென்றும் ஜப்பானிய அதிகாரிகளால் திருப்பத்திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தநிலைமையில் இவ்வளவு சௌகரியமான நிலைமையை அடைய முடியுமோவென்று ஜப்பானியர்களுள் மிக நன்னோக்கம் கொண்டவர்களே நம்புவார்களாவென்று சொல்ல முடியவில்லை. ஜப்பான் யுத்தத்தில் சேர்ந்தபொழுது ஜப்பானியக் கப்பல்கள் 45,00,000 டன்கள் இருக்கலாமென்று நம்பத்தகுந்த இடங்களில் மதிப்பிடப்பட்டது. எந்த வருஷத்திலும் 4,00,000 டன்னுக்கு மேல் புதிதாகக் கப்பல் கட்டப்படவில்லை. யுத்த நிலைமையில் இதில் பாதி நடக்குமோவென்று சந்தேகம். சமீபத்தில் நேசதேசத்தோடு சேர்ந்தும் சேராததுமாகவிருந்த தேசங்களின் கப்பல்களைப் பிடித்ததிலோ அல்லது மூழ்கினவற்றை மீட்டுச் சீர்திருத்தினதிலோ 1942-ம் வருஷ ஆரம்பத்தில் கடலில் போகக் கூடியவையாக அந்த தேசத்திற்கு 50,00,000 டன் கப்பல்கள் இருந்திருக்கலாமென்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். இதில் சேனைகள் நகர்வதற்கும், சைனாவுக்கு அனுப்புவதற்கும் 10,00,000 டன் கப்பல்களும் தேவை. மற்ற முன் அணிகளுக்கு துருப்புகள் நகர்வதற்கும் சாமான்கள் அனுப்பப்படுவதற்கும் 25,00,000 டன்கள் தேவை. திரும்பிவரும் காலத்தில் பாரம் ஏற்றி வருவதற்கு இந்தக் கப்பல்களில் ஒரு பாகம் தான் தேவை. ஆகவே ஜப்பானில் ராணுவ நடமாட்டத்திற்கும் “பரஸ்பர செல்வாக்கு நிலயங்களுக்கும்” 15,00,000 டன்கள் தான் கைக்கெட்டும். ஜப்பான் யுத்தத்தில் இறங்குவதற்கு முன் 45,00,000 டன் கப்பல்கள்—பெரும்பாலும் பிரிடிஷ், டச்சு, ஜப்பானியக் கப்பல்கள்—இந்த “பரஸ்பர செல்வாக்கு நிலயங்களின் தேவைக்குப் பிரயோஜனப்படும்.”

யுத்தம் ஆரம்பித்தது முதல் ஜப்பானுக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டத்தையும் புதியதாகக் கட்டின கப்பல்கள் எண்ணிக்கையையும் மேலே கணக்கெடுத்துக்கொள்ளவில்லை. இரும்பு எஃகு சாமான்களும் இயந்திர தளவாட ஆயுதங்களும் இல்லாமல் இருப்பதை நோக்கினால் யுத்தத்துக்கு முன்னால் அதனால் எவ்வளவு தூரம் கப்பல் கட்டமுடியுமோ அதற்கு மேல் செய்யமுடியுமென்று நினைக்க இடமில்லை. தள்ளுபடி இரும்பு மிகவும் குறைவாகவே கிடைப்பதால் பருத்தி நூற்று நெசவு செய்யும் இயந்திரங்களில் பெரும்பாலானவையுள்பட இயந்திரங்களெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டனவென்று வதந்திகள் உலாவுகின்றன. மரக்கலங்கள் கட்டுவதாகவும் தெரிகிறது. ரப்பர் கப்பல்கள் கட்டுவதாகவும்மனம் போனபோக்கெல்லாம் கதை அளக்கிறார்கள். ஜப்பான் எவ்வளவுதான் முயன்றாலும் தன்னுடைய கப்பல் துறைகளிலும், தாங்கள் கைவசப்படுத்தி இருக்கும் தேசங்களின் துறைகளிலும் சேர்ந்து “பரஸ்பர செல்வாக்கு நிலயங்களுக்குத் தேவையான அளவு எடையுள்ள கப்பல்களைக் கட்டவோ, இப்போதுபோல் அவ்வளவு துரிதமாக மூழ்கடிக்கப்பட்டால் அல்லது அதிகமாக மூழ்கடிக்கப்பட்டால் கைவசம் உள்ள அளவு கப்பல்களின் அளவு நிலைத்துக்கொள்ளவோ கொஞ்சமும் முடியாது.

## ருஷ்ய-ஜப்பானிய மீன் பிடிக்கும் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

மற்றொரு வருஷத்திற்கு ருஷ்ய-ஜப்பானிய ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதைப்பற்றி எழுதும்பொழுது, மாஞ்செஸ்டர் கார்டியன் இந்த இரண்டு நாடுகளுக்குமுள்ள சம்பந்தத்திற்கு ஒரு உறை கல்லாகவே இந்த ஒப்பந்தம் இருந்துவருகிறது என்று எழுதுகிறது. இந்த ஒப்பந்தம் 1928-ம் வருஷத்தில் கையெழுத்திடப்பட்டது; 1936-ம் வருஷம் முடிவடைந்தது. அதற்குப் பிறகு மற்றொரு நீண்ட கால ஒப்பந்தத்தை செய்துகொள்ள அநேக முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் இரண்டு நாடுகளுக்குமுள்ள அவநம்பிக்கை வளர்ந்து வந்ததால் இது பயன்படவில்லை. ஆனால் அதற்குப் பிறகு ஒவ்வொரு வருஷமும் மனமின்றி ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு வந்தது.

ஸைபீரியாவுக்கப்பாலிலுள்ள கடல்களிலும், ஸகாலின் தீவிற்கும் காம்சட்கா என்ற பெரிய தீபகற்பத்திற்கும் நடுவிலுள்ள ஒக்ட்ஸ்க் சமுத்திரத்திலும், வட அமெரிக்காவுக்கும் அந்த தீபகற்பத்தின் மற்றொரு பக்கத்துக்கும் நடுவிலுள்ள பேரிங்கடலிலும் மீன் பிடிக்கும் பாத்தியதைகளைப்பற்றித்தான் தற்போதைய ஒப்பந்தம். 1905-ம் வருஷத்தில் ஏற்பட்ட போர்ட்ஸ்மத் சமாதான உடன்படிக்கையின் மூலம் மீன் பிடிக்கும் பாத்தியதைகள் ஜப்பானுக்குக் கிடைத்தன. ருஷ்யாவோடு ஜப்பான் செய்துவந்த யுத்தமும் வெற்றிகரமாக முடிவடைந்தது.

இந்தப் புதிய ஒப்பந்தத்தில் அதிக விசேஷமிருக்கிறதென்று நினைக்கக் கூடாது என்று அந்தப் பத்திரிகை எழுதுகிறது. நிமித்தங்கள் முன்னொரு காலத்தில் நம்பத்தக்கதாகயிருந்தபோதிலும், யுத்த சமயத்தில் அவ்வளவாக நம்பக்கூடியதாகயில்லை. ஜப்பான் ருஷ்யாவுடன் 1941-ம் வருஷத்தில் செய்து கொண்ட நடுநிலைமை ஒப்பந்தத்தின்படி இதுவரையில் அது நடந்து வந்தது. ஜெர்மனியுடன் ருஷ்யா கடுமையாகப் போராடிக்கொண்டிருந்த சமயத்தில் பின்னால் வந்து ஜப்பான் ருஷ்யாவை அடிக்கும் என்று அநேகம் பேர்கள் எதிர் பார்த்தார்கள். தூரக்கிழக்கிலிருந்து யுனைடெட் ஸ்டேட்ஸையும், பிரிடனையும் வேறு பக்கம் திருப்புவதற்காகவும், ஹிட்லரின் ஐரோப்பிய நிலைமையின் கஷ்டத்தைக் குறைப்பதற்காகவும், ஜப்பான் தனக்கு வெற்றிகளைப் பெறவும் ருஷ்யாவின் மீது பாயும் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் ஜப்பான் ருஷ்யாவுடன் சமாதானமாக இருக்கிறது. இதனுடைய நோக்கமானது வருங்காலத்தில் ருஷ்யா தன்னுடன் சமாதானமாக இருக்கும் என்பது தான்.

---

## "பலவந்தமாக தலையிட்டுத் தாக்கும் தந்திரம்."

### சத்துருவின் வெடி விமானங்கள் தங்கள் தளங்களிலேயே தாக்கப்படுகின்றன.

ஒரு புது மாதிரி தாக்குதலில், இரண்டு இஞ்ஜினிலுள்ள புகழ்பெற்ற போஸ்டன் குண்டு வீசும் விமான வகையைச் சேர்ந்த இரவில் தாக்கும் விமானங்களான அமெரிக்காவில் செய்யப்பட்ட "டக்ளஸ் ஹாவக்ஸ்" என்ற விமானங்களை ஓட்டிச்செல்லும் பிரிடிஷ் விமானிகள் இங்கிலாந்திலிருந்து ஐரோப்பாவுக்குத் திரும்பி வரும் நாஸி விமானங்களை அதிகமாக சுட்டு வீழ்த்துகிறார்கள்.

இந்த விமானங்கள் கருப்பாக வர்ணம் பூசப்பட்டிருக்கின்றன. விமானங்களை எதிர்க்கும் பீரங்கிகளின் வீச்சுக்கு மேலே சத்தமிட்டுக்கொண்டு ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவிலுள்ள ஜெர்மன் விமான நிலையங்களின் மேல் நேராக பறந்து நிற்கின்றன. நாஸி விமானங்கள் தங்கள் தளங்களுக்கு சாவதானமாக தங்களுக்கு நெருங்கியிருக்கும் ஆபத்தை கவனியாமல் வரும்பொழுது "ஹாவக்ஸ்" விமானங்கள் அவைகளின் மேல் வெடி குண்டுகளைப்போட்டு பழிக்குப் பழி வாங்குகின்றன.

அநேகமாக ஜெர்மானிய விமானிகள் தந்திரமான உபாயங்களைக் கையாள முடியவில்லை. ஏனென்றால் அவைகளுக்கு எண்ணெய் சமயத்தில் இல்லாமல் போவதுதான். அநேக விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுகின்றன; மற்றவைகள் திடீரென்று தாக்கப்படுவதால் கலங்கிப்போய் விமான தளத்தைத் தாண்டி வேறிடத்தில் இறங்குகின்றன. அந்தக் கலக்கத்தினால் சக்கரத்தை கீழே இறக்க மறந்து போகிறார்கள். அநேகம் தடவைகளில் ஜெர்மானியர்கள் ஒருவருக்கொருவரையே சுட்டுக் கொள்ளுகிறார்கள். ஜெர்மானிய தளங்களில் எரிந்துகொண்டிருக்கும் விளக்குகளை குண்டுகளால் அணைத்துவிடுவதினால் ஜெர்மன் விமானிகளுக்குக் குழப்பத்தை நம் விமானிகள் அதிகரிக்கிறார்கள். இந்த மாதிரி தாக்குவதற்கு "தலையிட்டுக்கொண்டு தாக்குவது" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், ஒரு பிரிடிஷ் விமானி சொல்லியபடி விருந்திற்கு அழைக்காமல் தலையிடுவது போல் ஜெர்மானிய விமான தளங்களை நமது விமானிகள் தாக்குகிறார்கள்.



---

## பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம்.

ஆக்கிரமிப்பு ஐரோப்பாவின் இருளை பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் அகற்றியிருக்கிறது. நாஸிக் கக்ஷியின் கொடுங்கோலை எதிர்க்க அநேக தேசங்கள் தைரியம் கொண்டுவிட்டன. பிரிடிஷ் பொதுஜனங்களுக்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் அது அரிய சேவை செய்திருக்கிறது. ஸ்வதந்திர மனிதர்களெல்லோரும் அதை மதித்துப் பேசுகிறார்கள். யதேச்சாதிகாரிகளான வல்லரசுகள் அதை திவேஷிக்கிறார்கள். நம்முடைய யுத்தத்திற்கு அது ஒரு முக்கிய ஐச்வர்யம். ஒலிபரப்பில் சொல்லப்பட்ட எந்த யுத்தச் செய்தியும் மூன்றுமணி நேரத்திற்குள்ளாக மேற்கு ஐரோப்பா பூராவும் பரவி விடுகிறது. ஜெர்மனியிலும், பிரிடிஷ் ஒலிபரப்பில் வெளிவந்த செய்திகள் ஒரு வாரத்திற்குள்ளாக பரவிவிடுகின்றன.

---

## பொழுது போக்குக்கு வசதி.

(ஸர் ராபர்ட் டெனிஸ்டன்—மதராஸ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து வெளியிடப்பட்டது).

நான் சிறுவனாகயிருந்தபொழுது, வருங்காலத்தில் நான் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தேன். அநேக சிறந்த குணங்கள் பெற்றிருந்தும் பொறுமையற்ற எனது தகப்பனார் என்னைப் புஸ்தகத்தை எடுத்துப்படிக்கும்படி கடுமையாகச் சொன்னார். ரொம்பவும் சங்கடப்பட்டுக்கொண்டு நிம்மதியாக இல்லாத குழந்தைக்கு இது பூராவும் பிரயோஜனப்படக்கூடியதில்லையென்றாலும் பின்வரும் வாழ்நாட்களில் சில சமயங்களில் புஸ்தகத்தைப் படிக்கவேண்டுமென்ற பழக்கத்தையும் ஆசையையும் உண்டுபண்ணிவிட்டது. புஸ்தகங்களேயில்லாமல் போனால் நாம் பொழுது போக்கு நேரங்களை எப்படிக்கடத்துவது என்பது விந்தையாகயிருக்கிறது. ஒரு பாலைவனத்தில் அகஸ்மாத்தாக தள்ளப்பட்டு ஒரே ஒரு புஸ்தகம் மட்டும் எடுத்துச்செல்ல நேரிட்டால் எதை ஏற்றுக்கொள்ளுகிறதென்ற பிரச்னை வெகு நாளாக என்மனதில் தோன்றிவந்திருக்கிறது. என் சம்பந்தப்பட்டமட்டில் விஸ்டன் எழுதிய கிரிக்கெட் பஞ்சாங்கத்தை நான் பொறுக்கியெடுப்பேன். புஸ்தகங்களேயில்லாமலும், பத்திரிகைகளேயில்லாமலுமிருக்கும் ஒரு உலகத்தை நீங்கள் மதித்துப் பாருங்கள். பத்திரிகைகள் இல்லாத உலகத்தில் யுத்தமே நடைபெறாது என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகிலும் இப்பொழுது நாம் ஒரு மகத்தான யுத்த மத்தியிலிருக்கிறோம். இதைப்பற்றித் தான் நான் இப்பொழுது பேச விரும்புகிறேன்.

ஒரு வருஷத்திற்கு முன் சுமார் 50,000 பேர்கள் கொண்ட மதராஸ் ஜனங்களிடையே, எதிரி படையெடுத்தால் நமது நாட்டிலுள்ள படைகள் அதைத் தடுக்க சக்திவாய்ந்ததாவென்பதைப்பற்றி சந்தேகம்ஜனித்திருந்தது. இப்பொழுது சந்தேகங்கள் அகன்று விட்டன. பயத்திற்குப் பதிலாக தற்காப்பில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஏராளமான துருப்புகளும், தளவாடங்களும் இந்தியாவுக்கு வந்திருப்பதினால் இந்த நம்பிக்கை உண்டாகியிருக்கிறது.

துருப்புகள் நம் எல்லோரையும் காப்பாற்ற வந்திருக்கிறதென்பது திருப்திகரமான விஷயம். ஆகையால் அவர்களை நாம் பாராட்டவேண்டியது அவசியம். அவர்கள் அதிக சௌகரியங்களில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் கஷ்டப்பட்டுக்கொண்டு தன்னந்தனியாக யிருந்துவரும் துருப்புகளுக்கு வசதிகள் அளிக்கவேண்டியது நம்முடைய பொறுப்பாகும். இவ்விஷயத்தில் நாம் ஏராளமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்குத் தேவையானது புஸ்தகங்கள்தான். இதை அனுசரித்து பிரதம சேனாதிபதியும் புஸ்தகங்கள் தேவையென்று அகில இந்தியாவுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதை நான் உங்கள் கவனத்துக்கு வற்புறுத்துகிறேன்.

வெகு தூரங்களில் வைக்கப்பட்டு, இந்தக் கோடை காலத்தில் கூடாரங்களிலும் குடிசைகளிலும், வசித்துவரும் துருப்புகளுக்கு புஸ்தகங்களைப் படிப்பதை விட வேறு ஒருபொழுது போக்கும் கிடையாது. சிலர்களுக்கு இந்தக்கோடைகால அனுபவம் இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கும். உஷ்ண பூமியிலே வசித்துவந்த நாம் மின்சார விசிறிகளடியில் உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுதும் கஷ்டப்படுகிறோமென்றால், விசிறியில்லாத துருப்புகளின் கதியென்ன ஆகும். ஆகையால் கடுமையான உஷ்ணமுள்ள நாளைப் போக்குவதற்குப் புஸ்தகங்கள்தான் அவசியம். சிகிச்சை பெற்றுவரும் துருப்புகளுக்கு இவை முக்கியமானவை. வைத்திய சாலையில் சென்று பார்த்தால், துருப்புகளை தாதிகள் அதிகாலையில் எழுப்பி காலை ஏழு மணிக்குள்ளாக ஒவ்வொருவரும் கால், கை சுத்தம்செய்துகொண்டு சிற்றுண்டி அருந்திவிடுவார்கள். அதிலிருந்து மறுபடியும் தூங்கும்வரையில் 14 மணி நேரம் கழிக்கவேண்டியிருக்கிறது. புஸ்தகங்கள்தான் இந்த நீடித்த காலத்தைக் கழிக்க உபயோகப்படும். வேலையில்லாத காலத்தில் விமான எதிர்ப்பு பீரங்கி வேலைக்காரர்களின் கஷ்டத்தை நீங்கள் கவனித்தீர்களா. வேலை செய்துகொண்டிருந்தால் சோம்பேறித்தனம் ஏற்படாது. ஆகிலும் உத்தரவு கொடுத்த மாத்திரத்தில் பீரங்கிகளைச் சுட வேலைக்காரர்கள் எப்பொழுதும் தயாராகயிருக்கவேண்டும். எதிரி விமானம் வந்துவிட்டால் அதை எதிர்க்க ஆள்கள் தயாராகயிருக்கவேண்டும். மற்ற நேரங்களில் இவர்களுக்கும் புஸ்தகங்கள்தான் தேவை.

### புஸ்தக ருசிகள்.

எவ்வகைப்பட்ட புஸ்தகங்கள் தேவை. பிரிடிஷ் துருப்புகளுக்கு, குற்றச் செய்கைகளுள்ள கதைகளும், மேல் நாட்டாரின் "இறந்த மனிதனின் புதையல்" போன்றவைகளும், காதல் கதைகளும் பிரியமானவை. மிஸ்டர் எட்கார்வாலஸ் எழுதியுள்ள கட்டுக்கதைகளைப் படிப்பதில் அவர்களுக்கு வெகு ஆசை. ஆகிலும் இப்பொழுது இருக்கும் சேனைகளில் எல்லாவிதமான மனிதர்களுமிருந்து வருகிறார்கள். எவ்வகைப்பட்ட புஸ்தகமும் வாசிக்க லாயக்குள்ளதாகவேயிருக்கும். சில மாதங்களுக்குமுன் என்னுடைய வீட்டிற்கு பிரிடிஷ் கடற்படையிலுள்ள 7, 8 நபர்கள் விருந்துக்கு வந்தார்கள். அதற்குப் பிறகும் அநேகர் வந்திருக்கிறார்கள். ஒரு சமயம் நான் சுருட்டுக் குடித்ததைப் பார்த்துவிட்டு, நான் கலியாணம் செய்துகொள்ளாதவனென்றும் அறிந்துகொண்டு ஒருவர் என்னிடம் சொன்னார். "மற்றொரு தடவை வரும்பொழுது உங்களுக்கு ஒரு சுரைக் குடுக்கையும் பெண்ணும் சம்பாதித்து வருகிறேன்" என்றார். இதுவரையில் இவ்விரண்டும் பூர்த்தியாகவில்லை. இந்த கோஷ்டியில் ஏராளமான மீசைகளுடன் ஒரு சிறுவன் இருந்தான். இவன் கடற்படையில் பாண்டு வாசிக்கிறவர்களில் ஒருவன். பேட்மான் என்பவர் விவரித்திருக்கும் மனிதனுக்குச் சமானமாக இவனைச் சொல்லலாம். எனக்கு மனிதர்களின் புராணங்கள் ருசிகரமானவை. என்னிடமுள்ள புஸ்தகங்களில் சிலவற்றை எடுத்துச்செல்ல அவர்கள் பொறுக்கிக் கொண்டிருந்தபொழுது, இந்தச் சிறிய மனிதன் மயிர்க்கூச்சலிடக்கூடிய கதைகளையாவது, காதல் கதைகளையாவது பொறுக்காமல் ஜான்புகானன் எழுதியுள்ள புஸ்தகமொன்றை எடுத்தான். அது நல்ல புத்தகம். ஆகிலும் ட்விட்ஸ்மூர் பிரபு எழுதியிருக்கும் ஹாஸ்ய ரசமோ அல்லது வீர ரசமோ பொருந்தியதில்லை. ஆகையால் படிப்பாளர்களின் ருசிகள் வேறுபடுகின்றன.



இதற்குமுன் புஸ்தகங்களுக்காக வேண்டுகோள் செய்யப்பட்டபொழுது பின்கண்ட பேபர்கள் ஜாயிண்டு யுத்த தர்ம நிலயத்திற்கு வந்து சேர்ந்தன. மாகாண போர்டு பத்திரிகைகள், அரசாங்க கெஜெட்டுகள், சிறு கதைகள், டெலிபோன் டிரக்டரிகள், ஒயிட்வே லெயிட்லா கம்பெனியின் அட்டவணைகள், சினிமாக்குறிப்புகள், மிஸஸ் பீடன் எழுதியிருக்கும் சமையல் புஸ்தகம். அரசாங்க பிரசாரங்களின் சந்தோஷமடையக்கூடிய விஷயம் ஏதேனுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. துருப்புகளுக்கு இதில் ருசியுண்டாகுமென்று புலப்படவில்லை. மதராஸிலுள்ள ஜனங்களின் டெலிபோன் விலாசங்களைக் கேட்டும் துருப்புகள் உற்சாகமடையுமென்றும் நான் நம்பவில்லை. மிஸஸ் பீடன் எழுதியிருக்கும் பக்குவங்கள் அபரிமிதமாகச் செலவு செய்யும் காலத்துக்குத் தகுதியானவை. சிக்கன முறையைக் கையாண்டுவரும் நாளிலும், துருப்புகள் தங்கள் ஆகாரங்களை டப்பிகளிலிருந்து எடுத்துச் சாப்பிட்டுவரும் நாளிலும் இப்புஸ்தகம் உபயோகமில்லை. இவ்விதமான புஸ்தகங்கள் துருப்புகளுக்கு அனுப்பப்படவில்லை. இவைகளை உபயோகமற்ற சரக்குகளுடன் போட்டுவிட்டார்கள். இவைகளைப் பொறுக்குவதைவிட ஜாயிண்டு யுத்த தர்ம நிலயத்துக்கு வேறு அலுவல்களிருக்கின்றன. ஆகிலும் புஸ்தகங்களிலுள்ள காகிதங்கள் பெறுமானமுள்ளவை. இதைச் சேமிப்பதற்கு சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நமக்கு வேண்டியது திருப்பித் திருப்பி ஓய்வு நேரங்களில் படிக்க லாயக்குள்ள புஸ்தகங்கள்தான்.

### தமிழ், தெலுங்கு புஸ்தகங்கள்.

தமிழிலும், தெலுங்கிலும் எழுதப்பட்ட புஸ்தகங்கள் அதிகமாகத் தேவை. ஜாயிண்டு யுத்த தர்ம நிலயம் ஏராளமான புஸ்தகங்களை வாங்கி அனுப்பியிருக்கிறார்கள். இவைகள் போதாது. கடல்தாண்டி இருந்துவரும் இந்தியத் துருப்புகளுக்கும், மற்ற மாகாணங்களிலிருந்து வரும் இந்தியத் துருப்புகளுக்கும் அவர்களுக்குச் சொந்தமான பாஷையில் எழுதப்பட்ட புஸ்தகங்கள் ருசிகரமானவை. துப்பறியும் கதைகளும், காதல் கதைகளும் இந்தியத் துருப்புகளுக்குச் சந்தோஷமளிக்கின்றன. பொம்மைப் புஸ்தகங்கள் பேரிலும் அவர்களுக்கு ஆசை அதிகம். பொம்மைப் புஸ்தகங்களைப் பார்வையிட்ட பிறகு அவைகளை என்ன செய்கிறீர்கள். அவைகளை ஆஸ்பத்திரிகளிலும் பல் வைத்தியர்களிருக்குமிடங்களுக்கும் அனுப்பினால் உபயோகப்படாது. நமது புஸ்தக கோசத்தில் நாம் இனிமேல் வாசிக்கக் கூடாத சில புஸ்தகங்களுமிருக்கின்றன. உதாரணமாக மயிர்க்கூச்சலிடும்படியான கதைகள். உலகத்தில் கலை ஞானத்தை விருத்தி செய்ய இவைகள் லாயக்கில்லை. ஆகையால் பொழுது போக்குக்கு லாயக்குள்ளவையானதால் நாம் அவைகளுக்குக் கொடுத்த விலை தகுதியானதாகும். இம்மாதிரியான புஸ்தகம் அநேக சிப்பாய்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்கிறது. ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கும் அனுப்பப்படுகிறது. நேற்றைய தினம் சிலர் நன்றாகப்படித்தவன் யாரென்பதை சர்ச்சை செய்தார்கள். அநேக புஸ்தகங்களைப் படித்தவன் சிலாக்கியமா அல்லது பொதுஜனங்களுக்கு ருசிகரமான எல்லா விஷயங்களையும் அறிந்தவன் மேலா என்ற பிரச்னை கிளம்பிற்று. இது எவ்விதமிருப்பினும் அதிகப் படிப்பாளியைவிட முக்கியமான பிரச்னை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அநேக சிப்பாய்கள் உபயோகப்படுத்தக்கூடிய புஸ்தகத்தைக் கொடுத்தவன் என்று சொல்லுவதில் அதிகப் பெருமையுண்டு. நம்மிடம் இருக்கும் புஸ்தக கோசத்திலிருந்து 6 புஸ்தகங்களைப் பொறுக்கி சிப்பாய்களுக்கு அனுப்பினால் அவர்கள் எவ்வளவு சந்தோஷப்படுவார்களென்று யோசித்துப் பாருங்கள். இவைகளை இழப்பதில் நமக்கு அசமாதானம் ஏற்பட்டால், நம்மிடமிருந்து நமது நண்பன் புஸ்தகத்தை வாங்கிக்கொண்டுபோய்த் திரும்பிக் கொடுக்கவில்லையென்று நினைத்துக் கொள்ளுங்கள். ஒப்புக்கொள்ளுவதென்பது ஆன்மாவுக்குத் திருப்தியளிக்கிறது. சில காலத்துக்கு முன் நான் அனுப்பிய புஸ்தகங்களில் நான் கடனாகப்பெற்ற ஒரு புஸ்தகத்தையும் அனுப்பிவிட்டேன். இந்தப் புஸ்தகம் ஒரு சீமாட்டியுடையது. அவள் விலாசம் அதில் எழுதப்பட்டிருக்கிறது. அவளே இப்புஸ்தகத்தை மறுபடியும் ஜாயிண்டு யுத்த தர்ம நிலயத்தில் பரிசீலனை செய்தாள். கோபமில்லாமல் வருத்தப்பட்டு அவள் என்னிடம் சொன்னதாவது: "என்னுடைய சொத்தை தாராளமாக நீங்கள் தானம் செய்துவிட்டீர்களே" யென்று சொன்னாள். இருந்தாலும் நான் செய்தது சரியென்று தோன்றுகிறது. போதுமான காலம் பார்வை

யிட்டபிறகு சங்கங்களிலிருந்து சிலர் படப்புஸ்தகங்களை விலைக்கு வாங்குகிறார்கள். இவைகளைப் படித்துவிட்டு மற்றொருவருக்கு அனுப்புங்கள். ரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது நாம் "பென் குவின்" ஸிரீஸ் கதைப் புஸ்தகங்களை வாங்குகிறோம். இவைகளையும் மற்றவர்களுக்குக் கொடுங்கள். இவ்வகை புஸ்தகங்கள் சிறியதாகவும் சட்டைப்பைகளில் போடக்கூடியதாகவு மிருப்பதால் ஜனங்கள் அவைகளை வாசிக்க ஆசைப்படுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், மதராஸிலிருந்து கல்கத்தாவுக்குப் பிரயாணம் செய்யும்பொழுது படிக்க ஒன்றுமில்லாமல் போனால் எவ்விதம் பொழுது போகும். ஆகையால் இதேமாதிரி கஷ்டப்படும் துருப்புகளின் கதியை நினைத்துப் பார்த்து உங்களால் இயன்றவைகளைச் செய்யுங்கள். கூடியவரையில் ஹாஸ்யரசமுள்ள கதைப் புஸ்தகங்களைப் படியுங்கள். அவகாசமிருந்தால் புஸ்தகங்களுக்கு துணியில் அட்டை போடுங்கள் 'பென்குவின் ஸிரீஸ்' புஸ்தகங்களுக்கு புதிய மூடுது அமையுங்கள். இப்புஸ்தகங்களை அநேகர்கள் கையாளுவார்கள். ஆகையால் கதையின் கடைசியில் போக்கிரிக்குத் தகுந்த சிக்ஷை ஏற்படும் கட்டம் அடங்கிய கடைசிப் பக்கங்கள் இல்லாமல்போனால் படிப்பவருக்கு வெறுப்பு ஏற்படும். ஆகையால் புஸ்தகம் நெடுநாளிருப்பதற்கு வேண்டிய ஜாக்ரதைகளைச் செய்து முடியுங்கள். நீங்கள் எல்லோரும் உங்களிடமிருக்கும் புஸ்தகங்களையும் படப்புஸ்தகங்களையும் மதராஸ் கவர்ன்மெண்ட் ஹவுஸிலிருக்கும் ஜாயிண்டு யுத்த தர்ம கைங்கரிய நிலயத்திற்கு அனுப்புவீர்களென்று நம்புகிறேன். இதற்கு அவசியமும் ஏற்பட்டிருக்கிறதென்று நான் மன்றாடுகிறேன்.

---

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

**பிரஸங்கம் 142. (1-வது பிரிவு.)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17- 4-43 | முனிஸிபல் ஆபீஸ்... மாலை | 6.00 | | 21- 4-43 | மிரட்டுநிலை ... மாலை | 7.00 |
| 18- 4-43 | பூவரசகுடி ... „ | 7.00 | | „ | அரிமளம் ... „ | 7.30 |
| „ | வேங்கடகுளம் ... „ | 7.30 | | 22- 4-43 | பூங்குடி ... „ | 7.00 |
| 19- 4-43 | பெருங்களூர் ... „ | 7.00 | | „ | சத்தியமங்கலம் ... „ | 7.30 |
| „ | ஆதனக்கோட்டை... „ | 7.30 | | 23- 4-43 | உடையாளிப்பட்டி „ | 7.00 |
| 20- 4-43 | கீரனூர் ... „ | 7.00 | | „ | கிள்ளுகோட்டை ... „ | 7.30 |
| „ | காஞ்சூர் ... „ | 7.30 | | | | |

**பிரஸங்கம் 143 (2-வது பிரிவு)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24- 4-43 | முனிஸிபல் ஆபீஸ்... மாலை | 6.00 | 28- 4-43 | கொடும்பாளூர் ... மாலை | 7.00 |
| 25- 4-43 | குடுமியாமலை ... „ | 7.00 | „ | விராலிமலை ... „ | 7.30 |
| | பரம்பூர் ... „ | 7.30 | 29- 4-43 | களமாவூர் ... „ | 7.00 |
| 26- 4-43 | வெங்களூர் ... „ | 7.00 | „ | கல்லூர் ... „ | 7.30 |
| „ | சோனுபட்டு ... „ | 7.30 | 30- 4-43 | பனையப்பட்டி ... „ | 7.00 |
| 27- 4-43 | நச்சாந்துபட்டி ... „ | 7.00 | „ | ராங்கியம் ... „ | 7.30 |
| „ | விராச்சிலை ... „ | 7.30 | | | |

**யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.**

| | | | |
|---|---|---|---|
| 21— 4—43 | கீழாநிலை புதுப்பட்டி. | 26— 4—43 | கொன்னையூர். |
| 22— 4—43 | ஆலங்குடி. | 27— 4—43 | ராமச்சந்திரபுரம். |
| 23— 4—43 | பாப்பாபட்டி. | 28— 4—43 | காரம்பக்குடி. |
| 24— 4—43 | பொன்னமராவதி. | 29— 4—43 | கீழாநிலை. |
| 25— 4—43 | ஏம்பல். | 30— 4—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—22-4-43.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஏப்ரல் மீ 24உ [ந. 143

பிரஸங்கம் CXLIII.

## டுனிஸியா யுத்தம்.

### ஜெனரல் ஈஸன்ஹோவர் விளக்கம்.

வட ஆபிரிக்காவில் நடைபெறும் டுனிஸிய யுத்தத்தைப்பற்றி ஜெனரல் ஈஸன்ஹோவர் பின்வருமாறு தெரிவித்தார்:—பல படைகளும் சேர்ந்து துணிவாகத் தாக்குவதாலும் முன்னணியில் விமான தளங்களைப் பெற்றதாலும் வெற்றி கிடைத்திருக்கிறது. எதிர்காலத்தில் பல கஷ்டங்களிருக்கின்றன. இதற்கு ஜெர்மன் சிப்பாய் பிடிவாதமாகப் போராடும் சுபாவமுள்ளவர்களாக இருப்பதும் அவர்கள் ஏராளமாகச் சுரங்க வெடிப் பிரதேசங்களை அமைத்திருப்பதும் காரணமர்கும்.

காப்ஸாவிலிருந்து முன்னேறிய 2-வது அமெரிக்கப்படை 4,680 கைதிகளையும், 683 எதிரி வண்டிகளையும், 150 பீரங்கிகளையும் பிடித்தது. அது 69 எதிரி டாங்கிகளை அழித்தது. அவை 45,000 சுரங்க வெடிகளை அப்புறப்படுத்தவோ அன்றி அழிக்கவோ வேண்டி வந்தது. இதில் அமெரிக்கரில் இறந்தும் காயம்பட்டும் காணாமலும் போனவர்களது தொகை 5,372-ஆகும். எகிப்திலிருந்து மேற்கே முன்னேறித் தாக்கத் திட்டம் போட்ட போதும் வடமேற்கு ஆபிரிக்காவில் படைகளை இறக்கிக் கிழக்கில் முன்னேறித் தாக்குவதென்று 2 கவர்ன்மெண்டுகள் முடிவு செய்த போதும் மத்தியதரைக்கடலுக்கும் டுனிஸியாவுக்கும் மிக்க முக்கிய மேற்படுமென்பது வெளிப்படையாகத் தெரிந்தது. வட ஆபிரிக்காவில் இறங்கிய படைகளுக்கு நாம் எத்தகைய ராணுவப் பிரச்னையைச் சமாளிக்க வேண்டியிருக்குமென்பதைப்பற்றிய ஞானமே கிடையாது.

#### முக்கியமான லக்ஷியங்கள்.

முதலில் கஸாபிளாங்கா, ஓரான், ஆல்ஜியர்ஸ் என்ற மிக்க உபயோகமான தளங்களைப் பிடிப்பதே முதல் வேலையாக இருந்தது. இவ்விடங்களைப் பிடித்த பிறகு கிழக்கு நோக்கி முன்னேறித்தாக்க ஆரம்பித்தோம். ஆரம்பத்திலிருந்த ஆயுத சாதனங்கள் நெடுந்தூரம் முன்னேறிச் செல்லுவதற்கும் மிக்க பலமான படைகளை எதிர்த்து நிற்பதற்கும் ஏற்றனவாக இல்லை. கிழக்கில் எவ்வளவு தூரத்தில் போர்முனை இருக்க முடியுமோ அவ்வளவு தூரத்தில் போர்முனை இருக்குமாறு செய்யவேண்டுமென விரும்பினோம். இதனால் ஜெனரல் ஆண்டர்ஸனின் முதலாவது பிரிடிஷ் படை டுனிஸியாவுக்கு விரைவாக அனுப்பப்பட்டது. அப்போது பிரிடிஷ் படைகள் தீரத்தினாலும் முன்யோசனையுடன் தயாரிக்கும் துணிகரமான திட்டத்தினாலும் என்ன பலன்களைப் பெற முடியுமென்பதற்கு உதாரணங் காட்டின. தீரத்தினாலும், உறுதியாலும் நமது படைகள் டுனிஸியா கிழக்குக் கரையில் விரோதிகளைத் தடுத்து நிறுத்தவும் நமக்கு அத்யாவசியமாக வேண்டியிருந்த முன்னணி விமானக் கூடங்களைப் பெறவும் முடிந்தது.

எகிப்திலிருந்து புறப்பட்ட படை விரோதிகளை மேற்கில் துரத்தி டிரிபோலியைச் சுற்றிலோ அன்றி அதற்குக் கிழக்கிலோ வந்து நின்று போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது விரும்பத் தகுந்ததாகக் கருதப்பட்டது. இவ்வாறு செய்வதற்கு எங்களுக்கு விமானக்கூடங்கள் அவசியமென்றும் இவற்றிற்கு ஸப்ளை குறைவில்லாமல் செய்யவேண்டுமென்றும் தெரிந்தது. விமானக்கூடங்களிருந்ததால் கடற்படைக் கப்பல்களைக் காக்கவும் முடிந்தது. காலநிலை சீர்பெற்றதும் விமானப்போரில் ஆச்சரியமான பலன் கிடைத்தது. ஏப்ரல் 10உ 63 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தினோம். ஒரு இதாலிய க்ரூயிஸர் மூழ்கடிக்கப்பட்டது. மற்றொரு க்ரூயிஸர் வேலைக்கு இலாயக்கற்றதாக்கப்பட்டது. நாம் 3 விமானங்களை இழந்தோம். ஜனவரியில் படைத்தலைவர் பதவியை ஒன்றுபடுத்துவதற்கான காலம் வந்துவிட்டதாகத் தீர்மானிக்கப்பட்டது. மாறுதல் செய்தது, முதல் படைகள் மிக்க அனுசரணையான முறையில் வேலைசெய்து வந்திருக்கின்றன.

### ஜெனரல் அலெக்ஸாண்டரின் திரம்.

ஜெனரல் அலெக்ஸாண்டர் பெருந் தாக்குதலைச் செய்யக்கூடிய நிலைமையில் இல்லாவிட்டாலும் 2-வது அமெரிக்கப் படையை காப்ஸா-பாண்டு போர்முனையில் நிறுத்திப் போர்புரியச் செய்தார். இதனால் 37,000 விரோதிப் படைகள் அந்தவிடத்திற்குப் போராட வந்தன. பக்கவாட்டில் எதிரிகளுக்கு ஓய்வே அளிக்கப்படவில்லை. மாண்ட்காமெரியின் அனுபவம் வாய்ந்த படைகள் ஜெர்மன் படை வரிசையைக் குலைத்து உள்புகுந்தபோது அவர்கள் வடக்கே சிதறி ஓடிவிட்டனர். வடக்கில் ஆண்டர்ஸன் சிறு படைகளைக்கொண்டு போராட வேண்டி வந்தது. அதற்கு அளிக்கவேண்டிய அளவு கௌரவம் அளிக்கப்படவில்லை. இதன் போராட்டத்தினால்தான் 8-வது படையை எதிர்த்த அச்சுப்படை பலஹீனப்பட்டது. மாண்ட்காமெரி தமது படையை ஏவியதும் அவர்கள் வெற்றியுடன் முன்னேறுகின்றனர். அச்சுக் கப்பல்களில் பாதி ஸிஸிலிக்குத் தெற்கிலுள்ள குறுகிய கடலில் மூழ்கியிருக்கின்றன, இது பிரதேச முழுவதும் தாக்கப் பயன்படும், விமானக்கூடங்களது முக்கியத்தை எடுத்துக்காட்டுகின்றது.

மார்ச்சு முதல் 470 அச்சு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. வேறு பல விமானங்கள் அழிக்கவோ அன்றிச் சேதப்படுத்தவோபட்டன. நேசநாட்டினர் 157 விமானங்களை இழந்தனர்.

### ஒத்துழைப்பு.

ஜெனரல் ஆண்டர்ஸன் தம்மால் சாதிக்கக்கூடியவற்றை மிக்க கவனமாக யோசித்து சாதித்திருக்கிறார். அவர் தமது படைகளை உபயோகிக்கும் முறை நேசதேசத்தினர் சேர்ந்து எடுக்கும் நடவடிக்கைகளுக்குச் சிறந்த உதாரணமாகும். தினம் ஒத்துழைப்பும், ஒற்றுமையாகவும் அனுசரணையாகவும் வேலை செய்வதும் அதிகரித்து வருகின்றன. டார்சால் பிரதேசத்தைப் பாதுகாத்த பிரெஞ்சுப் படையின் தீரத்தைப் போற்றுகிறேன். ஜெர்மனியரைக் கொல்லும் எந்த சிப்பாயிடமும் எனக்கு மிகுந்த பிரியமேற்படுகிறது. அவன் 2 ஜெர்மனியரைக் கொல்லுவதற்கான ஆயுத சாதனங்களை என்னால் அளிக்க முடியுமானால், அதனை நான் கொடுப்பேன்.

கடற்படை டுனிஸியக் கரையிலுள்ள பெரும்பான்மையான துறைமுகங்களைப் பிடித்து முதலாவது படை இறங்கி விமான தளங்களைப் பெற இயலும்படிச் செய்திராவிட்டால் இவ்வளவு காரியத்தை ஒரு போதும் சாதித்திருக்க முடியாது.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 17—4—43-லிருந்து 4—4—43-வரை.

**ருஷ்யா.**—கால நிலை சரியாகயில்லாததால் ருஷ்யப் போர்முனையில் அமைதி நீடித்து வருகிறது. போர்முனை பூராவிலும் துருப்பு நடமாட்டம் அதிகமாகயிருக்கிறது. சில இடங்களில் சிறிய சச்சரவுகளும் ஏற்படுகின்றன. லெனின்கிராட், பாலக்லியா, இஸியம், டாமன் தீபகற்பத்தில் முன்னேறுவதற்கு எதிரி செய்த பிரயத்தனம் வீணாகிவிட்டது.



ஜெர்மன் பிரதேசங்களை ருஷ்ய விமானப்படை பலமாகத் தாக்கியது. ஒரு வாரத்திற்குள்கை கோனிக்ஸ்பர்க் நான்கு தடவையும், டான்ஸிக் இரண்டு தடவையும் டில்ஸிட் ஒரு தடவையும் தாக்கப்பட்டன.

**டுனிஸியா.**—சமவெளியில் நடந்த டாங்கிகளின் யுத்தம் முடிவடைந்து, குன்றுகள் பிரதேசத்தில் யுத்தம் நடைபெறுகிறது. டுனிஸைச் சுற்றியுள்ள மலைப் பிராந்தியத்தில் எதிர்த்து நின்று, ரோமல் ஒளிந்துகொண்டிருக்கிறான். நேசதேசப் படைகள் முன்னேறுகின்றன. என் பிடாவில்லி அரணை எட்டாம் படை அணுகிவருகிறது. 1-ம் படையானது மெட்ஜஸ் எல்பாப்பிலிருந்து டெபர்பாவை நோக்கி முன்னேறுகிறது. பிரெஞ்சுப்படை பாண்டுபோஸ்ஸிலிருந்து தாக்க ஆரம்பித்து ஜெப்பல் ஜேஹின்ஸைப் பிடித்துவிட்டது. 18-ம் தேதியன்று ஆபிரிக்க விமானப்படை 100 எதிரி ஸப்ளை விமானங்களையும் துணைக்காவல் சண்டை விமானங்களையும் கேப்பானிலிருந்து ஸிஸிலிக்குப்போகும் மார்க்கத்தில் மத்தியதரைக்கடலில் எதிர்த்தது. அவைகள் வருகையைப் பிற்பகலில் கண்டுபிடித்து, சண்டை போட்டதில் 74 எதிரி விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. 30 விமானங்கள் பழுதடைந்தன. அமெரிக்கப்படைக்கு இது மகத்தான வெற்றியாகிலும், இதில் பிரிடிஷ் விமானப்படையும் கலந்து யுத்தம் செய்தது. இதைப்பற்றி வியாக்யானம் எழுதும்பொழுது ராய்ட்டரின் ராணுவ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

அச்சுநாடுகள் யுத்தத்தில் ஈடுபடாத யந்திரவேலை செய்கிறவர்களையும் மற்றவர்களையும் அப்புறப்படுத்திவிடுவதென்ற ஹேஷ்யங்கள் புலப்பட்டன. நிர்வாக இலாகா உத்தியோகஸ்தர்களும் இதில் சேர்ந்தவர்கள். இவைகள் நஷ்டமானதிலிருந்து ஜெர்மனிக்கு மிகுதியான நஷ்டமேற்பட்டிருக்கும். ஜூ 52 என்ற விமானத்தில் சராசரி 45 பேர்களும், நெருங்கி உட்கார்ந்தால் 50 பேர்களும் செல்லலாம். இவைகளில் 58 விமானம் நஷ்டமென்றால் 3,000 மனிதர்கள் இறந்துவிட்டார்கள். இத்துடன் 16 மெஸ்ஸர்ஸ்மிட்ஸிலுள்ள வேலைக்காரர்களும் மடிந்துவிட்டார்கள்.

**பஸிபிக் யுத்தம்.**—அலூஷியன் தீவுகளில் கிஸ்கா, அட்டுத்தீவுகளில் ஜப்பானியர்கள் படைபலத்தைக் குவித்துவருவதினால், அமெரிக்கக் கடற்படையும் விமானப்படையும் வட பஸிபிக்கில் பலமாகத் தாக்க ஆரம்பித்துவிட்டன. ஒரு மாதத்திற்குள்ளாக கிஸ்காவை ஒன்பது தடவை தாக்கி, 5 லக்ஷம் பவுண்டுகள் எடைமானமுள்ள 1,000 வெடி குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன அமெரிக்க விமானப்படையும் கடற்படையும் இரண்டு தடவை கிஸ்காவைத் தாக்கியிருக்கின்றன.

இவ்வாரத்திய விமானத் தாக்குதல்கள்.

(a) **நேசதேச விமானங்கள்.**

- **ஏப்ரல் 11.**—ரிகேடா விரிகுடா, ஸாலமன்ஸில் ஜப்பானிய தளங்கள். காகிலி, முண்டா, கிஸ்கா.
- **ஏப்ரல் 12.**—கோலம்பாங்காரா தீவிலுள்ள விலாவும், ரிங்கியும்.
- **ஏப்ரல் 14.**—முண்டா, பீரு (நியூஜார்ஜியா), கிஸ்கா.
- **ஏப்ரல் 15.**—முண்டா, விலா, ரிகேடா விரிகுடா.
- **ஏப்ரல் 16.**—காகிலி, பல்லாலி, அம்பாயினு, அட்டு, கிஸ்கா, பிஸ்மார்க்கடலில் ஜப்பானிய 5,000 டன் எடையுள்ள கப்பல் தாக்குண்டது.
- **ஏப்ரல் 18.**—காகிலி, (வேவாக் துறைமுகத்தில் 6 கப்பல்களுள்ள கப்பற்படை தாக்கப்பட்டு நான்கு மூழ்கின, 2 பழுதுபட்டன).

(b) **ஜப்பானிய விமானப்படையெடுப்பு.**

- **ஏப்ரல் 14.**—மில்னி விரிகுடா (எதிரியின் 80 விமானங்களில் 30 நஷ்டம்).
- **ஏப்ரல் 16.**—குடால்கனல். (நாசமும், நஷ்டமும் சொற்பம்).

**சைனா.**—ஹியாயூங்கிலும் இச்சாங்குக்கு கிழக்கிலும், காண்டனுக்கு வட கிழக்கிலும் நடைபெற்ற ஜப்பானியத் தாக்குதலும் கோதியைத் தாக்க முயன்ற ஜப்பானியப் பிரயத்தனமும் தடுக்கப்பட்டன. யாங்கிட்ஸி நதிக்கரையிலுள்ள வடக்கு ஹூபேயிலுள்ள சோஸியனையும் ஷாண்டங்க் தீபகற்பத்திலுள்ள செபூவையும் சீனர்கள் தாக்கினார்கள்.

பர்மா.—ரெங்கூன் துறைமுகத்தை இடைவிடாது ஒரு மாதகாலமாக நமது விமானங்கள் தாக்கிவருக்கின்றன. கப்பல் பழுதுபார்க்கும் ஸ்தாபனங்கள் பழுதுபட்டன. துறைமுகத்திலிருந்து 200 மைல்களுக்குள்பட்ட வெளியிலுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்படுகின்றன.

**இந்த வாரத்திய விமானப் படையெடுப்பு.**

(*a*) நேசதேசம்.

**ஏப்ரல் 12.**—யெக்யான் பின், அவாங்க் டெயிங்க், யேகாங்க், பாலட்வா, நாபா, அக்யாப்.

**ஏப்ரல் 13.**—மாயூ பிரதேசம், ஹாட்ஸப், நாஙியாஸேக், டிங்க்பேய், மாக்வி.

**ஏப்ரல் 14.**—மானிவெட், மிக்கினு, மானிவா (துருப்பேற்றிச் செல்லும் 6 ஜப்பானியப் படகுகள், ராம்ரிங்கு அப்பாலிலும், பிந்தாவுக்கு வடக்கிலும், காகாவுக்குச் சமீபத்திலும் சென்ற 3 ஸப்ளை லாரிகளும் நாசமாயின).

**ஏப்ரல் 15.**—யூவாவிலுள்ள ஜப்பானியத் தலைமைகாரியாலயம், தைலாவா எண்ணெய் சுத்தி செய்யும் தொழிற்சாலைகள்.

**ஏப்ரல் 16.**—மின்பாக்கருகிலிருக்கும் இருப்புப் பாலங்கள், மோகான், தாழி, மாலன், திங்க்ஸெட், அக்யாப் தீவிலுள்ள எதிரி வசமுள்ள பிரதேசம்.

**ஏப்ரல் 17.**—அக்யாப் தீவில் பொனல் முனையில் 6 ஜப்பானியக் கிராமங்கள், மாயூ தீபகற்பத்தில் எதிரியின் படைதிரட்டு, நாபா ரயில்வே ஜங்க்ஷன்.

ஏப்ரல் 14-ம் தேதியன்று சிண்டா பிரதேசத்தில் நுழைய எதிரி செய்த பிரயத்தினம் வீணுகிவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**11—4—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—பெல்ஜியத்தில் மாலேனிஸி(Malines)ல் உள்ள ரயில்வே யந்திர சாலைகள்.

ஹெஞ்ஜெலோ (Hengelo) வில் ஒரு தொழிற்சாலை (2 நேச தேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

இரவு.—இதாலியில் நேபிள்ஸில் (Naples) உள்ள துறைமுகம்.

**டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

என்பிடாவில்லி (Enfidaville)க்கு அருகில் சத்துருவின் இடங்களும், கவசங்கொண்ட மோட்டார் டாங்கிகளும், வண்டிகளும்.

கைருவன் (Kairwan) பிரதேசத்தில் சத்துரு வண்டிகள், டுனிஸி (Tunis) லும், ஸிஸிலியிலிருக்கிற லமாசல்லா (Lamarsalla)விலும் டிரபானி (Trapani)யிலும் இருக்கும் கப்பல்களும், தளங்களும்.

டுனிஸியாவில் முக்கியமாக ஸெயிண்ட் மேரிடுஸிட் (St. Marieduzid) டிலிலுள்ள சத்துருவின் விமான நிலயங்கள்.

பிஸெர்டா (Bizerta)விலுள்ள தளங்களும், கப்பல்களும்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும் யுத்த அரங்கம் முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்கா (Kiska).

ஸாலமன்ஸ் தீவுகளிலுள்ள முண்டா (Munda)வும், காஹிலியும் (Kahili).

பர்மாவில் காடா (Kata)வுக்கருகில் மியிட்கியினு (Myitkyina) ரயில் பாதை.

மாயூ தீபகற்பத்திலுள்ள கிராமம்.

பர்மாவில் அரக்கான் கரையில் இரண்டு இடங்கள்.

ரேகடாபே (Rekatabay).

**12—4—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

இரவு.—கிழக்கு ப்ரஷியாவில் கோனிக்ஸ்பர்க் (Koenigsberg) கிலுள்ள விமான நிலயம், ரயில்வே பாதைகள் கூடுமிடம், ராணுவ ஸ்டோர்.

இதாலியில் நேபிள்ஸில் (Naples) உள்ள துறைமுகம், கோசென்சா (Cosenza) கொட்ரோனி (Cotrone) பிஸ்ஸோ (Pizzo).



**டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

டுனிஸியாவில் என் பிடாவில்லி (Enfidaville) பிரதேசத்திலிலுள்ள சத்துரு டாங்கிகளும், மற்ற கவசங்கொண்ட வண்டிகளும்.

டுனிஸ் (Tunis) கருகில் விமான நிலயங்கள்; பிஸெர்டா (Bizerta)வில் உள்ள துறைமுகமும் கப்பல்களும்; ஸிஸிலியில் மிலோ (Milo) விலும் காஸ்டெல் வெட்ரானோ (Castel Vetrano) விலும் உள்ள விமான நிலயங்கள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும் யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

கொலம்பங்காரா (Kolambangara) த்தீவில் விலா (Vila); விலா (Vila)வுக் கருகில் ரிங்கி (Ringi); அலூஷியன் தீவுகளில் கிஸ்கா (Kiska) பர்மாவில் வாலபம் (Walabum); அக்யாப் தீவில் யெக்யான் பியின் (Yegyanbyin); அவாங்டாயிங் (Avongdaing) பர்மாவில் நாபா (Naba) ஜங்ஷன். பர்மாவில் பாலெட்வா (Paletwa); பர்மாவில் அக்யாப் (Akyab); பர்மாவில் மாக்வே (Magwe)யிலுள்ள விமானதளம்.

**13—4—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—நார்வேக் கப்பல் சத்துருவின் கப்பல்கள் பிரான்ஸிலும் காயினிலும், (Caen); அபிவில்லியிலும் (Abbeville) உள்ள ரயில்வே தளங்கள். (2 சத்துரு விமானங்களும், 3 நேசதேச விமானங்களும் நாசமாக்கப்பட்டன.)

இரவு.—இதாலியில் ஸ்பேஸியா (Spezia) வில் உள்ள கப்பல் தளம்.

**டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

டுனிஸியாவில் சண்டை செய்யும் பிரதேசங்களின் மேல் விமானப்பாய்தல்களும், வேவு பார்த்தலும், டுனிஸியாவில் சத்துரு விமான நிலயங்கள், டுனிஸியால் எல் அக்வினு (El Aquina).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

பர்மாவில் ஷாட்ஸப்பில் (Shadzup) ஒரு பாலம்.

பர்மாவில் நான்யசேக் (Nanyaseik).

டிங்க்பாய் (Tingpai)க்கருகில் ரயில்வே டிரக்குகள் அலூஷியன் தீவுகளில் கிஸ்கா (Kiska); நியூ ஜியார்ஜியாவில் (New-Georgia) முண்டா (Munda).

**14—4—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—வட மேற்கு ஜெர்மனியில் உள்ள இலக்குகள்; பிரிட்டனிக்கடற்கரைக்கப்பால் கப்பல்கள்; பிரான்ஸில் ரயில்வே தளங்கள்; பெல்ஜியத்தில் (Belgium), ரயில் வண்டிகளும், போக்குவரத்துகளும்.

இரவில்.—கோனிக்ஸ்பர்க் (Koenigsburg); டான்ஸிக் (Danzig); ஸ்டட்கார்ட் (Struttgart) டில் யுத்த தளவாட யந்திர தொழிற்சாலைகளும். (23 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

**டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

டுனிஸியாவில் சத்துருவின் இடங்களும், போக்குவரத்தும் டுனிஸியாவில் சத்துருவின் விமான நிலயங்கள்.

ஸார்டீனியாத் தீவிலுள்ள எல் மாஸ் (El-Mas)ம், மாண்டெரேடோ (Monderrato).

ஸார்டீனியாவில் டெஸிமோமான்னு (Decimomannu) விலும் ஸிஸிலியில் பான்டெல்லாரியா (Pantellaria) விலும் உள்ள விமான நிலயங்கள்; எம்பெடோஸில் (Empedocle) துறைமுகத்திலுள்ள கப்பல்கள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

அலூஷியன் தீவுகளில் கிஸ்கா (Kiska); கொலம்பங்காரா (Kolambangara), விலா (Vila); ஷார்ட்லண்டு தீவுகளில் காஹிலி (Kahili); பர்மாவில் டாங்குப் (Taungup)புக்கு வடக்கே ஒரு ஸப்ளை லாரி.

பர்மாவில் மாயூ நதியில் உள்ள படகுகள், காதா (Katha) வுக்கருகில் உருளும் வண்டிகள்.

**15—4—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகலில்.—(2 சத்துரு விமானங்களும், 3 நேசதேச விமானங்களும் நஷ்டம்).

டச்சுக் கடற்கரைக்கப்பால் மீன் பிடிக்கும் கப்பல்கள்; லேஹாவரு (Le Havre) க்கருகே சத்துரு விமான நிலயங்கள்; பிரான்ஸில் செர்பர்க்கில் (Cherbourg) கப்பல்களும் தளங்களும்; வட பிரான்ஸில் சாமான் ரயில் வண்டிகளும், ஒரு தொழிற்சாலையும், வண்டிப்போக்குவரத்துகளும்.

இரவில்.—வட மேற்கு ஜெர்மனியிலும், பெல்ஜியத்திலும், வட பிரான்ஸிலும் ஜெர்மனிய ரயில் பாதை போக்கு வரத்து சாதனங்களும்.

இதாலியில் நேபிள்ஸ் (Naples) மெஸ்ஸினு (Messina).

**டுனிஸியா (Tunisia),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

ஸிஸிலியில் பாலெர்மோ, கடானியா, டுனிஸியா, சண்டை செய்யும் இடங்களில் டாங்கிகளும், வண்டிகளும்; டுனிஸியாவில் விமான நிலையங்கள்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

வேவாக் (Wewak)குக்கப்பால் ஒரு ஜப்பானியத் துணைக்கப்பல்; நியூகினியில் வேவாக்கில் ஜப்பானிய விமான நிலையங்கள்; ரங்கூனுக்குத் தெற்கே தைலாவா எண்ணெய்த் தொழிற்சாலைகள்; பர்மாவில் வயாடாங் (Ywataung)கிலும், மாண்டலே (Mandalay)யிலும் ரயில் தளங்களும்.

பர்மாவில் நாபா (Naba)வில் ரயில் ஸ்தாபனங்கள்.

**16—4—43** (வெள்ளிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—பிரான்ஸில் லே ஹாவரில் (Le-Havre) கப்பல்கள்; பிரான்ஸில் ட்ரிக்வேலி (Tricqueville)யில் விமான நிலயம்; ஆஸ்டெண்டில் (Ostend) தொழிற்சாலை இலக்குகள்; பிரான்ஸில் லோரியானி (Lorient)லும், பிரெஸ்டிலும் (Brest) துறைமுகப்பிரதேசங்களும்; பெல்ஜியம் ஹாலந்தில் ஹார்லெமி (Haarlem)ல் ரயில்வே இலக்குகள்.—(55 நேசதேச விமானங்கள் திரும்பிவரவில்லை).

இரவு.-ஸெக்கோஸ்லாவோகியா (Czechoslovakia)வில்; பில்செனின் (Pilsen) ஸ்கோடா யுத்தத் தளவாட தொழிற்சாலைகள்; ஜெர்மனியில் மான்ஹீம் (Mannheim)லும் லுட்விக்ஷேபெனி (Ludwigshapen)லும் உள்ள தளவாட தொழிற்சாலைகள்.

**டுனிஸியா (Tunisia),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

என்பிடவில்லி (Enfidaville) பிரதேசத்தில் டாங்கிகளும் மற்ற வண்டிகளும்; டுனிஸுக்கருகில் ஒடா (Ouda)வில் விமான நிலயம்; டுனிஸியாவுக்கப்பால் வியாபாரக்கப்பல்கள்; ஸிஸிலியில் பாலெர்மோ (Palermo)வில் கப்பல்கள்; பிஸெர்டாவில் தளங்கள்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரையிலிருக்கும் விமானங்களும், யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஆட்டு (Attu) தீவுகள்; அலூஷியன் தீவுகளில் கிஸ்கா (Kiska); காஹிலியிலும் (Kahili); பல்லாலியிலும் (Ballale) கப்பல்கள்; பர்மாவில் பின்பா (Pinbau)வுக்கும் மோகாங் (Mogaung)கிக்கருகில் ரயில் பாலங்கள்.

பர்மாவில் தாஸில்(Thazi) ரயில்வே ஜங்ஷன்.

பர்மாவில் மாலனி (Mawlun)லும் ரயில்வே ஜங்ஷன்; அக்யாப் தீவுகளில் கிராமங்கள்.

**17—4—43.** (சனிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—பிரமனில் (Bremen) விமானத் தொழிற்சாலை பிரான்ஸில்; அபிவில்லியில் (Abbeville) ரயில்வே தளங்கள்; பிரான்ஸில் காயின் (Caen) ரயில்வே இடங்கள்; பெல்ஜியத்தில் ஸீபக்கோயில் (Zeebugge) உள்ள தொழிற்சாலை யந்திரம்; பிரிடனிக் கடற்கரைக்கப்பால் கப்பல்கள்; வட பிரான்ஸில் வண்டிகள்.

இரவு.—(3 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

சத்துருவின் கடற்கரையோரமாக சுரங்க வெடி பாவுதல்; ஹாலந்து, பிரான்ஸ், ஜெர்மனியில் சத்துரு போக்குவரத்துக்கள் பாரிஸுக்கும் (Paris) லெமான்ஸுக்கும் (Lemans) நடுவேயுள்ள ரயில்வே பவர் ஸ்டேஷன்கள்.

**டுனிஸியா (Tunisia),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

(29 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; 8 நேசதேச விமானங்கள் திரும்பி வரவில்லை).

ஸெயின்டமேரி ஸெபெல்லா (St. Marie, Sebella)விலும் எடிட்டிலும் (Edid) உள்ள சத்துரு விமான நிலயங்கள்; ஸிஸிலியில் பெர்ரிவில்லி (Ferryville), பாலெர்மோ (Palermo) விலும் உள்ள தளங்கள்.

ஸிஸிலியில் கடானியா (Catania) வில் உள்ள துறைமுகம்; ஸிஸிலியில் பிஸ்கேரிக் (Biscaric)கில் விமான நிலயம்; ஸிஸிலியில் ஸிராக்யூஸி (Syracuse)ல் தொழிற்சாலை; டுனிஸியாவில் சத்துரு போக்குவரத்துக் கம்பிகள்.

**ருஷ்யா (Russia).**

(10—4—43-லிருந்து 17—4—43 வரையில் உள்ள வாரத்தில் ருஷ்யர்களின் விமான நஷ்டம் 103 விமானங்கள்; சத்துருவின் நஷ்டம் 302 விமானங்கள்).

விமானச் சண்டைகளும் தரையிலிருக்கும் விமானங்களும் யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

அம்பாயினா (Amboina) வில் துறைமுகப் பிரதேசம்; அலூஷியன் திவுகளில் கிஸ்கா (Kiska); ஆட்டு (Attu) த்தீவுகள்; பர்மாவில் அக்யாப் பிரதேசத்தில் ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமம்.

மாயூ தீபகற்பத்தின் கீழ் பகுதியில் சத்துரு துருப்புக் கட்டடங்கள்.



## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**12—4—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

கிழக்கு ஆங்கிலியாவில் தென்கிழக்கு இங்கிலாந்திலும் உள்ள கடற்கரை மாகாணங்கள் ஒரு (சத்துரு விமானம் நாசமாக்கப்பட்டது).

**டுனிஸியா (Tunisia).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

வோல்கோவ் (Volkhov) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூகினியிலுள்ள நேசதேசக் கப்பல்கள் (23 சத்துரு விமானங்கள் நஷ்டமடைந்தன).

**13—4—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஓரிடத்திலும் விமான அபாயம் இல்லை.

**வட ஆபிரிக்கா (North Africa).**

அல்ஜீரியாக் கடற்கரைகளின் மீது விமானச் சண்டைகள் (3 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**ருஷ்யா (Russia).**

ஒரு தகவலும் இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம் (32 சத்துரு விமானஙகள் சுட்டுவீழ்த்தப்பட்டன).

**14—4—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டனில் ஒரு பிரதேசம்; தேம்ஸ் முகத்துவாரம்; (3 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**டுனிஸியா (Tunisia).**

சண்டை செய்யும் இடங்களின் மீது விமானச் சண்டைகள் (2 சத்துரு விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

நியூகினியில் மில்னி (Milne) குடா (30 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

**15—4—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**டுனிஸியா (Tunisia).**

பிரிடிஷ் முதல் சேனையின் முன்னேறித் தாக்குமிடங்கள்.

**ருஷ்யா (Russia).**

இஸியம் (Izyum) பிரதேசத்தில் ஒரு விமான நிலயம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸாலமன்ஸ் தீவுகளில் கூடல்கனூரில் (Guadalcanar) விமான நிலயம்.

**16—4—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு இடத்திலும் விமானப் படையெடுப்பில்லை.

**டுனிஸியா (Tunisia).**

8-வது சேனையின் முன்னேறித் தாக்கும் இடங்கள்.

**ருஷ்யா (Russia).**

டொனெட்ஸ் நதி மேல் பிரதேசத்தில் ருஷ்ய இடங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

கூடல்கனூரில் உள்ள விமான நிலயம்.

**17—4—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

கிழக்கு ஆங்கிலியாவும்; தென்கிழக்கு இங்கிலாந்தில் ஒரு இடமும்.

**டுனிஸியா (Tunisia).**

அல்ஜீயர்ஸ் பிரதேசம் (16 சந்நியாசி ஸ்திரீகள் கொல்லப்பட்டனர்).

**ருஷ்யா (Russia).**

டாமன் பிரதேசத்தின்மேல் விமானச் சண்டைகள்.

**தூரக்கிழக்கு (Far East).**

(6 சத்துரு விமானஙகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. காஹிலிப் பிரதேசத்திற்கும் ஷார்ட்லாந்து தீவுகளுக்கும் மேல் விமானச் சண்டைகள்.

**18—4—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் பிரதேசம்; தென்கிழக்கு இங்கிலாந்து.

**டுனிஸியா (Tunisia).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

பாலக்லியா (Balakleya) பிரதேசத்தில் வேவு பார்த்தல்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**புராணமும் சரித்திரமும்.** டுனிஸியா என்றால் அநேக விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. புராதனமான நாட்களும், நவீன நாட்களும், சரித்திரமும், புராணமும் ஞாபகத்துக்கு வருகின்றன. டிடோவின்காதல் நடைபெற்ற ஸ்தலம். டுனிஸிக்குச் சமீபத்தில் கார்தேஜ் இருந்தது. பினிஸியன் குடியேற்ற நாடுகளிருந்தன. உலகத்தின் கடல் மூலம் செய்யப்பட்ட வியாபாரத்தின் மத்திய ஸ்தலமிங்கிருந்தது. இங்கே ஹானிபாலின் ராணுவப் புகழ் ஓங்கி ஸிபியோ ஆப்ரிகானஸ்ஸினால் அழிவுற்றது. இங்கே பூனிக் சண்டைகள் நடைபெற்று கார்தேஜ் அழிவுற்றது. புராணிகர் சொல்லுகிறபடி 6 நாட்கள் பகலிரவாக கார்தேஜ் ஜனங்கள் அழிக்கப்பட்டார்கள். நகரம் தீக்கிரையாயிற்று. நகரம் நிர்மூலமாகிவிட்டது. இதற்குப் பிறகு ரோம் உன்னதியை அடைந்தது. முஸ்லீம்களின் ஆதிக்கம் அதன் பிறகு ஏற்பட்டது. 671-ம் வருஷத்தில் ஒக்பா இபன்நாபி என்பவர் தன்னுடைய பரிவாரங்களுடன் இங்கு வந்து, நபிநாயகத்தின் பெயரைச் சொல்லி பாம்புகளையும் காட்டு மிருகங்களையும் விரட்டிவிட்டு தரையில் ஈட்டியை ஊன்றி கெயிர்வான் அல்லது தங்குமிடம் என்று பெயரிட்டார். இதிலிருந்து மக்காவுக்கும், மெடினாவுக்கும் அடுத்தபடி முக்கியத்வம் வாய்ந்த கெயிர்வான் நகரம் உண்டாயிற்று. அதில் கோவில்களும் சித்திர வேலைகளுள்ள கட்டடங்களுமிருக்கின்றன.

நவீன காலத்தின் ஐரோப்பியர்களின் பழக்கவழக்கங்கள் இங்கு பரவிவிட்டன. பிரிடன் டுனிஸியாவில் இருப்புப் பாதையைப் போட்டது. பிரான்ஸ் ஒரு காப்பாற்றப்பட்ட நாட்டை ஏற்படுத்தியது. இதாலியர்களினின்றும் பயம் ஏற்படாமலிருப்பதற்கு பிஸர்ட்டா துறைமுகத்தைப் பலப்படுத்தியது.

வி வி வி வி வி வி வி

**மத்தியதரைக்கடலின் யுத்தரங்கம்.** இந்த சரித்திர பூர்வமான ஸ்தலத்தில், அச்சுப் படைகள் ஒவ்வொரு இடத்திலிருந்தும் துரத்தப்பட்டு எதிர்த்து நிற்கிறார்கள். எட்டாம் படையும் முதல் படையும் அமெரிக்க பிரெஞ்சுப் படைகளுடன் வெவ்வேறு பக்கங்களிலிருந்து வளைத்து வருகிறது. எதிரி மற்றொரு கார்தேஜ், ஸ்டாலின்கிராட் யுத்தத்தையோ அல்லது மற்றொரு டங்கர்க்கையோ செய்யவேண்டும். தரையில் அழிவுபடுவான் அல்லது ஓடும்பொழுது கடலில் அழிவுபடுவான்.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளின் பயம்.** ஸ்டாக்ஹோம் மூலம் கிடைத்திருக்கும் இதாலியத் தகவல்களிலிருந்து, ஹிட்லரின் உத்தரவுப்படி காலி செய்யவேண்டியதற்காக இதாலியக் கடற்படையை முஸோலினி தயார் செய்திருக்கிறார் என்று தெரியவருகிறது. மற்றொரு தகவலிலிருந்து கிரீக் கடலிலுள்ள இதாலியக் கடற்படை ஸிஸிலியின் சமுத்திரத்தை பாதுகாக்க கொண்டுவரப்பட்டிருக்கிறதாம். ஸூரிக்கிலிருந்து வந்த தகவல் மூலம் வட ஆபிரிக்காவிலுள்ள அச்சுப் படைகள் காலி செய்யப்பட்டு ஸிஸிலிக்கும், ஸார்டினியாவுக்கும், கிரீஸுக்கும் வந்து விட்டதாம், ஆனால் இது ஊர்ஜிதமாகவில்லை.

முஸோலினி ஒரு உத்தரவு போட்டிருக்கிறான். ஸிஸிலி, ஸார்டினியா, பாண்டெலேரியா, மெஸ்ஸினா ஜலசந்தியிலுள்ள தீவுகள் சண்டை ஸ்தலங்களென்றும் அந்தப் பிராந்தியத்தில் முஸோலினி தளகர்த்தர் என்றும் அறிவிக்கிறான். பிரெஞ்சுத் துறைமுகங்களையும் காலிசெய்து விடும்படி ஹிட்லர் உத்தரவிட்டிருக்கிறான்.

ரோமல் தன்னுடைய அதிகாரிகளுடன் கலந்துகொள்ள இதாலிக்கும் ஜெர்மனிக்கும் ஓடியிருக்கிறான். பிரென்னர் கணவாயில் ஹிட்லரும், முஸோலினியும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். ஹங்கேரிய மந்திரி ரோமுக்கு வந்து விட்டார். பல்கேரிய அரசரான போரிஸ் மன்னரும் ருமேனியாவின் ஜெனரல் அன்டோனஸ்குவும் ஹிட்லருடன் சந்தித்துப் பேசினார்கள். கொடுங்கோல் சர்வாதிகாரிகளும் அவர்களின் பரிவாரங்களும் கலக்கம் கொண்டிருக்கிறார்கள்.



**கூடிய சீக்கிரம் நிச்சயம்.** வட ஆபிரிக்காவிலிருந்து அச்சு நாட்டாரை விரட்டியடிப்பது நிச்சயம் என்றாலும் கொஞ்சம் தாமதத்தின்பேரில் ஏற்படக்கூடியது. ஈஸன்ஹோவர் சொல்லுகிறபடி ரோமல் சிறந்த தளகர்த்தர்தான். ஆகிலும் ஈச்வரனில்லை. அவனிடமுள்ள 1,50,000 ஜெர்மன் துருப்புகளும், 60,000 இதாலியர்களும் நேசப்படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். நேசநாடுகளின் முன்னேற்றம் இப்பொழுது கடினமான தேசத்தில் நடைபெறவேண்டியிருக்கிறது. என்பிடாவில்லியிலிருந்து ஹாம்மாமட்டுக்குப் போகும் கடற் கரை குறுகலானது, சதுசதுப்பானது. ஹாம்மாமட்டிலிருந்து டுனிஸிக்குப் போகும் ரஸ்தா மலைப்பிரதேசமுள்ளது. அதற்கு வடக்கே பிஸர்ட்டாவுக்குப் போகும் கடற்கரை பாதை கெட்டியில்லாத பாதைகள் வழியாகச் செல்லுகிறது. முன்னேறுவது சிரமசாத்யம். அச்சுப்படைகள் தீரமாக எதிர்த்து வருகின்றன.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியில் நடமாட்டம்.** கோனிக்ஸ்பர்க்கிலும் டான்ஸிக்கிலும் அடிக்கடி ருஷ்ய விமானப்படை குண்டுகளை வீசுவதிலிருந்து ஜெர்மனியை நேசநாடுகளும் ருஷ்யாவும் சேர்ந்து அடிக்கும் காலம் வந்துவிட்டது. இதற்குப் பிறகு அவர்கள் பங்கு போட்டுக்கொள்ளுவார்கள். பகலில் அமெரிக்க விமானங்களும், இரவில் பிரிடிஷ், ருஷ்ய விமானங்களும், மேற்கு ஐரோப்பாவில் பிரிடிஷ் விமானப்படையும் கிழக்குப் பிரதேசத்தில் ருஷ்ய விமானப் படையும் தாக்கும். குறுகலான பிரதேசங்களில் நேசதேச விமானப் படையின் விமான எதிர்ப்பும் அச்சு நாடுகளின் தற்காப்பு பலஹீனமும் ஏற்படும்.

வி வி வி வி வி வி வி

**குற்றமும் இழிவும்.** போலிஷ் கைதிகள் மாயமாய்ப்போன விஷயத்தைப்பற்றி ஜெர்மானியர்கள் செய்து வரும் பிரசாரத்தைப் பார்த்தால், நேசநாட்டாரை வேறுபடுத்த கோயபல்ஸ் எவ்வளவு இழிவான காரியங்களையும் செய்வானென்பது வெளியாகுகிறது. இப்பொழுது போலந்தையும், ருஷ்யாவையும் மித்ரபேதம் செய்யப் பிரயத்னம் செய்யப்படுகிறது. 1939-ம் வருஷத்தில் போலந்தை ருஷ்யர்களும், ஜெர்மானியர்களும் படையெடுத்தபொழுது ருஷ்யர்கள் 1,81,000 பேர்களைக் கைது செய்ததாகவும், அதில் 10,000 ஆபீஸர்களிருந்ததாகவும் சொல்லப்பட்டது. போலந்தும் ருஷ்யாவும் ஒப்பந்தம் செய்துகொண்டபின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ருஷ்யாவில் திறட்டப்பட்ட போலிஷ் சேனையில் அவர்கள் சேர்ந்துகொண்டார்கள். ஆனால் இந்தக் கைதிகளில் 8,300 ஆபீஸர்களும், 70,000 சிறிய உத்தியோகஸ்தர்களும், துருப்புகளும், இதர நபர்களும் மாயமாக மறைந்துவிட்டார்கள். காணமற் போனவர்களை ருஷ்யர்கள் 1940-ம் வருஷம் வசந்த காலத்தில் கொலைசெய்து ஸ்மாலென்ஸூக்குச் சமீபத்திலுள்ள காடுகளில்புதைத்துவிட்டார்களென்று ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள். ஸ்மாலென்ஸ்க்கை ஜெர்மானியர்கள் கைப்பற்றியபொழுது சவக்குழிகளை அவர்கள் கண்டுபிடித்தார்களாம். அடையாள அட்டைகளும் சவங்கள் பேரில் காணப்பட்டதாம். இந்தக் குற்றச் சாட்டை மறுதளித்து ருஷ்ய அரசாங்கம் ஜெர்மனியின்பேரில் குறை கூறுகிறது, ருஷ்யாவில் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

1941-ம் வருஷத்தில் ஸ்மாலென்ஸூக்கு மேற்கே வேலையில் ஈடுபட்டிருந்த போலிஷ் யுத்தக் கைதிகளும் அநேக ருஷ்ய ஜனங்களும், ஸ்மாலென்ஸ்க்கிலிருந்து ருஷ்யர்கள் பின்வாங்கிய பின் ஜெர்மன் கொலையாளிகள் வசம் அகப்பட்டுக்கொண்டார்களென்றும் அவர்கள் அழிவுற்றார்களென்றும் ஜெர்மனியின் விளம்பரத்திலிருந்து வெளியாகுகிறது.

டாக்டர் கோயபல்ஸ் செய்துவரும் இகழுரைகள் எல்லாம் ஹிட்லரின் கொடுமைச் செய்கைகளை மறைக்கச் செய்யப்படும் பொய்ப் பேச்சுகள் தான்.

ஸ்மாலென்ஸ்க்குக் கருகில் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படும் புதை குழிகளைப்பற்றி ஆபாசமான கற்பனையான புளுகுகளை வெளியிடும்பொழுது,

நெஸ்டோ வயா என்னும் கிராமத்திலுள்ளவைகளைப் பற்றி, ஜெர்மானியர்கள் பேசுகிறார்கள். ஆகிலும் நெஸ்டோ வயாவுக்குகில் நெஸ்டோவாயா புதை குழிப் பிரதேசத்தில் சரித்திர பூர்வமான சில குகைகளிருக்கின்றன என்பதை ஜெர்மானியர்கள் சொல்லவேயில்லை. புளுகுவதில் நிபுணர்களானதால்; பொய் தஸ்தாவேஜுகளும், பொய் பிரசாரமும் செய்து 1940-ம் வருஷ வஸந்த காலத்தில் ருஷ்யர்கள் படுகொலை செய்தார்களென்று இழிவாகப் பேசி, ஜெர்மானியர்கள் செய்த கொடுமைகளுக்கு பொறுப்பை பிறரிடம் சுமத்த முயன்று வருகிறார்கள்.

இம்மாதிரியான பரஸ்பர குற்றச் சாட்டுகளில் ஜெர்மானியருக்குப் பாதகமாக ஒரு விஷயம் வெளிப்படுகிறது. இரண்டு வருடங்களாக ஸ்மாலென்ஸ்க்கை ஆக்கிரமணம் செய்திருக்கும் ஜெர்மானியர்கள் இப்பொழுது தான் இந்த சவக்குழிகளைக் கண்டுபிடித்தார்களாம். ஏற்கனவே கண்டுபிடித்திருந்தால் அப்பொழுதே அதை வெளியிட்டிருக்கலாம்.

காணமற்போன போலிஷ் ஜனங்களுக்கு அனுதாபம் காட்டி போலிஷ் ஜனங்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்கு இதை விசாரணை செய்யவேண்டுகோள் செய்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மன் பிரசாரம்.** ஜெர்மன் பிரசாரம் கெடுதல் மார்க்கத்தை அடைந்துவிட்டதென்றும் வரவர ஆபாசமாகயிருக்கிறதென்றும் வெளியாகுகின்றன. அமெரிக்காவுக்கும், பிரிடனுக்கும் மனஸ்தாபம் உண்டுபண்ணுவதற்காக, அமெரிக்கா ஏராளமான கப்பல்களைக் கட்டி யுத்தத்துக்குப்பின் உலகத்திலுள்ள வியாபார ஸ்தலங்களிலிருந்து பிரிடனை விரட்டியடிப்பதாக உத்தேசித்துவிட்டது என்று வெளியிடப்படுகிறது. பிரிடிஷ் விமானப்படை தாக்குதலின் விளைவுகள் ராணுவ முறையில் பிரயோஜனமற்றவையென்றும் சொல்லப்படுகிறது. டுனிஸியாவில் ஏற்பட்ட தோல்விகள் குறைத்துச் சொல்லப்படுகின்றன. இதன் மூலம் வரப்போகும் தோல்விகளை ஏற்றுக்கொள்ள ஜெர்மானியர்கள் தயாரிக்கப்படுகிறார்கள். இடைவிடாமலும் விடாமுயிற்சியுடனும் யூ படகுகளினால் ஏற்படும் நஷ்டங்களை அதிகப்படுத்திச் சொல்லி, தோல்விகளை மறைக்கப்பார்க்கிறார்கள். மாறுதலேயில்லாமல் சில சமயங்களில் மணிகள் சப்திக்கப்பட்டு கப்பல் நஷ்டங்கள் வெளியிடப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**ராணியின் செய்தி.** அநேக நாட்கள் கடந்த பிறகு ராணியார் சாம்ராஜ்யத்திலுள்ள ஸ்திரீகளுக்கு ஞாயிற்றுக்கிழமையன்று சொற்பொழிவு செய்து அன்பும், நம்பிக்கையும் நிறம்பிய செய்தி விடுத்தார். துக்கம் மேலிட்டகுரலுடன், கொடுமையும் புகழும் நிறம்பிய வருஷங்களைப்பற்றிச்சொல்லி ஸ்திரீகள் என்னசெய்திருக்கவில்லை என்றுவினவினர். யுத்தத்தில் ஸ்திரீகள் செய்திருக்கும் சேவை மகத்தானது. ஆனால் பகிரங்கமாகச் செய்யப்படவில்லை. உள்நாட்டில் மனோதைரியத்தை நிலை நாட்டி போர்முனையிலுள்ள புருஷர்களுக்கும், பிள்ளைகளுக்கும் அவர்கள் ஊக்கமளித்திருக்கிறார்கள். நீங்களும் எதிரி வெடிகுண்டுகளைத் தாங்கியிருக்கிறீர்கள். காயம்பட்டவர்களை குணப்படுத்தியிருக்கிறீர்கள், நிலத்தை சாகுபடி செய்திருக்கிறீர்கள், ஆடை அணிந்தோ இல்லாமலோ, நீங்கள் சண்டைபோடும் படைகளுக்கு உதவியளித்திருக்கிறீர்கள். அவர்களுக்குத் தேவையான யுத்த தளவாடங்களை உண்டுபண்ணியிருக்கிறீர்கள் என்றும் அன்னார் சொன்னார். பிரிடனிலுள்ள நமது சகோதரிகள் அநேகம் செய்திருக்கிறார்கள். இந்திய ஸ்திரீகளும் இவ்வித புகழுரைக்குப் பாத்திரர்களாக வேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன். அமெரிக்க யுத்த அறிக்கை நிலயத்திலிருந்து பிரிடனுடைய தொழிற்சாலைகளில் 40 சதவிதம் ஸ்திரீகள் வேலை செய்து வருகிறார்களென்றும் அவர்கள் நெடுநேரமும் திறமையுடனும் விமான உற்பத்திசாலை, டாங்கி, யுத்த தளவாடசாலை, கப்பல் கட்டும் தளங்கள், இருப்புப்பாதைகள், தரை, தட்டுமுட்டு சாமான்கள் வைக்கப்படும் முகாம்கள் எல்லாவற்றிலும் வேலை செய்து வருகிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

**ஸ்திரீகளுக்கு சுவாபமான உணர்ச்சியுடன், ஸ்திரீகளின் யுத்த சேவைகள் பாராட்டத்தக்கதாகயிருந்தாலும், ஸ்திரீகள் தங்கள் குடும்பவாழ்க்கையில் அக்கறை**



யுள்ளவர்களென்றும், யுத்தத்துக்குப்பின் ஏற்படப்போகும் திட்டங்களில் ஸ்திரீகளும் விசேஷப் பங்கு எடுத்துக்கொள்வார்களென்றும் ராணியார் வெளியிட்டார். நாஸிகளின் அபிப்பிராயப்படி. ஸ்திரீகள் மெஷின்கள் இல்லை. மற்றொரு முக்கியமான எச்சரிக்கையும் அவர் விடுத்தார். குடும்பத்துக்கு ஸ்திரீ அவசியம் போல் மனுத வாழ்க்கைக்கு மதஸ்தாபனம் அவசியம்.

வி வி வி வி வி வி வி

**பிரிடனுடைய யுத்த வரவு செலவு திட்டம்.** ஏப்ரல் 12-ம் தேதி ஸர் கிங்ஸ்லிவுட் பார்லிமெண்டு சபையில் வரவு செலவு திட்டத்தை வெளியிட்டார். பிரிடிஷ் சரித்திரத்திலேயே இதுவரையில்லாத புள்ளி விவரங்கள் அதில் காணப்பட்டன. அவை பின்வருமாறு.

(1) வரவு செலவு திட்டம் 6,000 மிலியன் பவுன்கள்.
(2) ஒரு வருஷ யுத்தச் செலவு 13,000 மிலியன் பவுன்கள்.
(3) இதுவரையில் யுத்தச்செலவு, 15,600 மிலியன் பவுன்கள்.
(4) அமெரிக்காவிலிருந்து வந்த ஸப்ளைகள் 1,500 மிலியன் பவுன்கள்.
(5) ருஷ்யாவுக்கு பிரிடன் அனுப்பியுள்ள தளவாடங்கள் 170 மிலியன் பவுன்கள்.
(6) பிரிடனின் தினசரிச் செலவு 15 மிலியன் பவுன்கள்.
(7) யுத்தகாலத்தில் பிரிடன் கடன் பெற்றது 8,667 மிலியன் பவுன்கள்.
(8) டுனிஸியா, பர்மா யுத்தச்செலவு 400 முதல் 590 மிலியன் பவுன்கள்.
(9) வரி விகிதம் சென்ற வருஷத்தில் 2,483 மிலியன் பவுன்கள்.
(9a) வரிவிகிதம் இவ்வருஷத்தில் 2,907 மிலியன் பவுன்கள்.

இவ்வருஷத்திய அதிக வரிவிகிதம், பீர், புகையிலை, போதுபோக்குகள் அதிகச் செலவுகள் இவைகளுக்கு ஏற்படும். அதன்மூலம் சென்ற வருஷம்கிடைத்த 52 சதவிகித வருமானம் 56 சத விகிதத்துக்கு அதிகரித்துவிடும். பொக்கிஷ மெம்பரின் நூதன வரி பிரேரேபணையை மெம்பர்கள் கரகோஷத்துடன் வரவேற்றார்கள். இதிலிருந்து தேசம் பூராவும் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு எவ்வளவு தியாகம்செய்யத் தயாராகயிருக்கிறார்களென்றும் அச்சுநாட்டாரின் யுத்த வரவு செலவு திட்டத்தை பொதுஜனங்கள் வரவேற்கும் முறைகளுக்கு இது மாறுபாடாகயிருக்கிறதென்றும் வெளியாகுகிறது. சென்ற ஜனவரி மாதத்தில் இதாலிய நிர்வாக சபையில் வரவு செலவு திட்டம் விவாதிக்கப்பட்டபொழுது அதிகச் செலவைப்பற்றிய விவரங்கள் தெரியப்படுத்தப்படவில்லை. நாட்டில் அதிருப்தி உண்டாகும் என்று பயந்துதான் வெளியிடப்படவில்லை.

இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தமாக பிரிடிஷ் அரசாங்கத்துக்கு இந்தியா எவ்வளவு கடன்பட்டிருக்கிறதென்பதை மதித்துப்பாருங்கள். இந்தியாவின் தற்காப்பு அதன் எல்லைச்சரகங்களையும் தாண்டி ஏற்பாடாகிவிட்டது. இந்தியாவின் க்ஷேமத்துக்காக நடைபெறும் பர்மா யுத்தமும், பிரிடனுக்கு அதிகச் செலவுடன் நடைபெற்றுவருகிறது. இந்தியாவில் திட்டம்போட்டிருக்கும் 199 கோடி ரூபாய்கள், பிரிடனில் செலவிட உத்தேசித்திருக்கும் 7,800 கோடிக்கு ஒப்பிடவே முடியாது.

வி வி வி வி வி, வி வி

**கிராட்டின் பிரசுரம்.** டிகாலுடன் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு அடிப்படையான சில விஷயங்களை கிராட் வெளியிட்டிருக்கிறார். கடல் தாண்டியுள்ள ராஜ்யங்களின் சார்பாக கவர்னர்கள், ரெஸிடெண்டுகள், கமிஷனர்கள் அடங்கிய ஒரு பிரெஞ்சு சபையை ஏற்படுத்துவது முதல் திட்டம். இந்த சபையானது மற்ற வல்லரசுகளுடன் பேசவும் பொதுப்படையான நிர்வாகத்தில் செலவுக்குப் பொருள் திரட்டுவதற்கும் யுத்தத்தில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு சேனையை தயாரிப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது. பிரான்ஸுடனும் அது தொடர்பு வைத்துக்கொண்டு அதன் ஸ்வதந்திரத்துக்காக பாடுபடவேண்டும். யுத்தம் வெற்றிகரமாக முடிவு பெறும்பொழுது நேசநாடுகளின் கூட்டத்தில் பிரான்ஸின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும். கடைசியாக பிரான்ஸில் ஏற்படப்போகும் அரசாங்கத்தினிடம் தன்னுடைய அதிகாரத்தை அது ஒப்படைத்துவிடும்.

**பர்மா.** இந்த மாதத்தில் பர்மாவில் விமான நடவடிக்கை இடைவிடாது நடைபெற்றன. பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் மிட்கியினு விலிருந்து ரெங்கூன் வரையிலுள்ள பிரதேசங்களைத் தாக்கியிருக்கின்றன. எதிரி விமான தளங்கள், முக்கியமாக டாங்கூ, இராக்காலங்களில் 14 தடவை தாக்குண்டன. அக்யாப் எட்டுத்தடவை தாக்கப்பட்டது. எதிரி போக்குவரத்துக்கள் தகர்க்கப்பட்டன. மாண்டலேயிலுள்ள நிலயங்கள் மூன்றுதடவை தாக்கப்பட்டன. தாழி, காதா, நாபா முதலிய போக்குவரத்து ஸ்தாபனங்கள் தாக்கப்பட்டன. மாண்டலேக்கருகிலுள்ள மிடிங்கிபாலம் பழுதுபார்க்கப்பட்டபொழுது 9 தடவை விமானங்கள் தாக்கின. கோடேக் நதிப்பிரதேசம் 6 தடவைகளும், பாசுண்டாங்க் பாலம் 5 தடவைகளும் தாக்கப்பட்டன.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவும் குத்தகைக் கடன் திட்டமும்.** குத்தகைக்கடன் திட்டத்தின் தாத்பரியத்தை விளக்கிக்காட்டிய, குத்தகைக் கடன் திட்ட சபையின் சேர்மெனை மிஸ்டர் F. W. பெக்கர் அரிய சேவை செய்திருக்கிறார். அவர் சொன்னதாவது.

'இந்தியாவில் சில இடங்களில் குத்தகைக்கடன் திட்டமானது, அமெரிக்காவின் சாம்ராஜ்யக் கொள்கையையும் டாலர் தந்திரத்தையும் விளக்கிக் காட்ட செய்யப்படும் திட்டமென்று அபிப்பிராயம் உண்டாகியிருக்கிறது. இது மிகவும் தப்பு அபிப்பிராயம்.

குத்தகைக் கடன் திட்டம் யுத்த காலத்துக்கு ஏற்பட்டது, அச்சுநாட்டு ஒலிபரப்புகள் சொல்லுவதுபோல, தேசீய, வியாபார அக்கரைகளை விருத்தி செய்யச்செய்த ஏற்பாடு அல்ல. அமெரிக்க ஜனங்களும் அரசாங்கமும் செய்து வரும் தியாகத்தை இது குறிப்பிடுகிறது. மேலேசொன்ன திட்டப்படி மற்ற நாடுகளுக்கு அனுப்பும் ஆயுதங்களும், சாமான்களும், தொழிற்சாலை யந்திரங்களும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு அமெரிக்கா முஸ்தீப்புகளில்லாமலிருந்து வருகிறது.

"அமெரிக்காவுக்கு இது சம்பந்தமாக சந்தோஷம்தான். ஜப்பான், ஜெர்மனி இவைகளின் ஆதிக்கம் ஏற்பட்டால் அதினின்றும் ஏற்படக்கூடிய தீங்குகளை அமெரிக்கர்கள் நன்கு அறிவார்கள். தங்களுடைய சௌகரியங்களைக் குறைத்துக் கொண்டு இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் தற்காப்புக்குத் தேவையான ஆயுதங்களையும் தளவாடங்களையும், சாமான்களையும் அனுப்பி, யுத்த சேவையில் உபயோகமுள்ள வகையில் அவைகள் பங்கெடுத்துக்கொள்ளும் படிக்கும் சாதகம் செய்துவருகிறது.

குத்தகைக் கடன் சட்டப்படி அனுப்பப்படும் சாமான்கள் மற்ற நாடுகளுக்கு வியாபார முறையில் கொடுக்கப்பட்ட கடன்களில்லை. பொதுவாக நடைபெற்று வரும் யுதத முயற்சிக்காக அனுப்பப்படும் தளவாட இரவல்கள். இதற்கு பதிலாக மற்ற நேசநாடுகள் யுத்தத்துக்காக மனிதர்களும், சாமான்களும், யந்திரங்களும் அனுப்பி உதவுகிறார்கள். எங்களுக்கு உபயோகப்படும்படியாக ஆயுதங்களும் ஸப்ளைகளும் அனுப்பப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு இந்தியா செய்துவரும் உதவியை அமெரிக்கா நன்கு பாராட்டுகிறது. இந்த உதவியானது அச்சு நாடுகளை இறுதியில் நன்ருய் முறியடிக்கவேண்டியது என்ற பொதுப்படையான நோக்கத்துடனிருக்கும் நேசநாடுகளின் பரஸ்பர ஒத்தாசை, தியாகம் இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்ட குத்தகைக் கடன் திட்டத்தின் உண்மையான தத்துவத்தை வெளிக்காட்டுகிறது.

இந்தியாவுக்கு வரும் உதவிகள் இங்கிலாந்திலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நேர்முகமாக குத்தகைக் கடன் ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.



# ஸ்திரீகளும் இந்த யுத்தமும்.

*(சாம்ராஜ்ய ஸ்திரீகளுக்கு ராணியாரின் ஒலிபரப்புச் செய்தி).*

துக்கமும், பெருமையும், வருத்தமும், வெற்றியும் கலந்திருக்கும் இந்த யுத்த காலத்தில் நீங்கள் மானிட கோஷ்டியின் பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் அருகர்களாயிருக்கிறீர்கள். இதை எவராவது ஒருவர் எடுத்துச் சொல்லவேண்டும் அல்லவா?

"அட்லாண்டிக்கில் ஸப்மரீன் வேட்டையிலோ அல்லது ஆபிரிக்காவில் ரோமலை விரட்டுவதிலோ ஈடுபட்டிருக்கும் என் பிள்ளையைவிட நான் அதிகம் என்ன சாதித்து விட்டேன்? என நீங்கள் வினவலாம். உங்களுக்குரிய துறைகளில் நீங்கள் அவர்கள் போலவே உங்களாலியன்றதைச் செய்திருக்கிறீர்கள். அதே லக்ஷிய சித்திக்காக நீங்களும் முனைந்திருக்கிறீர்கள்.

நானும் மன்னரும் அடிக்கடி பிரயாணம் செய்வதால், எனக்கு உங்களது யுத்த முயற்சியைப் பற்றி அதிகம் அறிய முடிகிறது. பிரதி தினமும் இதே மாதிரி இதர சாம்ராஜ்ய நாடுகளிலும் குடியேற்ற நாடுகளிலும் யுத்த முயற்சி நடக்கிறது என்று நான் நினைக்க இடம் இருக்கிறது. கடினமானதும் அபாயகரமானதுமான வேலைகளைச் செய்பவர் பலருடன் நான் நெருங்கிப் பேசியிருக்கிறேன். அவர்களுக்கிருக்கும் நகைச் சுவையும் அபாரமானது. இதனுல் சாம்ராஜ்ய மக்கள் உத்சாகத்துடன் வாழ முடிகிறது. நீங்கள் செய்யும வேலையும் மிகவும் முக்கியமானது. பெரிய தீரர்கள் யுத்தகாலத்தில் எதிரியை எதிர்த்து யுத்தம் செய்யும் போர் வீரர்களும், மாலுமிகளும், விமானிகளும் செய்யும் தீரச் செயல்களுக்கு இதைச் சமமாக ஒப்பிடலாம்.

நீங்கள் மட்டும் எதிரியைச் சந்திக்க வில்லையா? நீங்கள் வெடிகுண்டு வீச்சைக் காணவில்லையா? அதை நீங்கள் சகித்துக்கொண்டிருக்கிறீர்கள். காயமடைந்தவர்களுக்கு நீங்கள் சிகிச்சை செய்தீர்கள். பூமிகளைப் பயிரிட்டீர்கள். யுத்த காலத்தில் சண்டை போடுபவர்களுக்கு அதி முக்கியமான வெடி மருந்துகளையும் தயாரித்துத் தந்தீர்கள். இம்மாதிரி நூற்றுக்கணக்கான வழிகளில் நாட்டை சண்டையிட விட்டுச் சென்ற புருஷர்களது ஸ்தானத்தை நீங்கள் மேற்கொண்டீர்கள்.

ஸ்திரீகளான நமக்கு குடும்ப வாழ்க்கையிலேயே அதிக விருப்பம். நமது வீடுகளைப்பற்றியும் குழந்தைகளைப்பற்றியுமே நாம் சிந்திக்கிறோம். கடல் கடந்த யுத்த வீரர்களுக்கும் இதே மாதிரி ஆசை இருப்பது நிச்சயம். அவர்கள் நமது உதவியையும் விசுவாசத்தையும் பெரிதாக எதிர்ப்பார்க்கின்றனர். நாம் அவர்கள் திருப்திபடும்படி நடப்போம். நாம் ஒற்றுமையுடன் இருந்து அவர்களுக்கு அவசியமான உதவிகளை செய்து கொண்டிருப்போம்.

நம் நாட்டிற்காகவும் சாம்ராஜ்யத்திற்காகவும் இதர தேசங்களுக்காகவும் நாம் தயாரிக்கும் திட்டத்தில் ஸ்திரீகளுக்குப் முக்கிய பங்குண்டு.

யுத்தம் முடிந்தவுடன் மறுபடியும் சந்துஷ்டியாக் குடும்ப வாழ்க்கை நிலவுவதையே நான் விரும்புகிறேன். நமது தேசிய வாழ்க்கையின் அபிவிருத்திக்கு ஆத்மீயத்தில் சிரத்தை அதிக அவசியமாகும்.

---

# இந்தியப்படைகளுக்கு பிரதம மந்திரியின் பாராட்டு.

மாரத்து அரண் யுத்தத்திலும் வாடி அகாரத்தில் ஏற்பட்ட வெற்றிப்போரிலும் 4-வது இந்தியப்படை தீரத்துடன் சண்டைசெய்ததை நாங்கள் பெருமையுடன் பாராட்டுகிறோம். இந்தியத் துருப்புகளின் பெரும் புகழும், கூர்கா துருப்புகளின் தீரமும் மத்தியக் கிழக்குப் போர்முனையில் நடைபெற்ற போர்களில் அவர்கள் காட்டிய திறமையிலிருந்து அதிகரித்துவிட்டன.

ஆபிரிக்காவிலும், தூரக்கிழக்கிலும், இந்தியாவிலும் இந்திய சேனை செய்திருக்கும் சேவையைப் பாராட்டி இந்தியாவிலுள்ள அரசர்களுக்கும், பொது மக்களுக்கும், முக்கியமாக நமது நண்பனுன மாக்ஷிமை தங்கிய நேபால் மகாராஜா அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அறிவிக்கிறேன்.

ரொம்பவும் சிரம சாத்யமான இந்த யுத்தத்தில் நமக்குயேற்பட்டிருக்கும் வெற்றிகளில் இந்தியர்கள் உத்சாகத்துடனும், தீரத்துடனும் பங்கு எடுத்துக் கொண்டார்கள் என்பதில் பெருமை கொள்கிறோம்.

---

# சமாதானமும் ஸ்வதந்திரமும்.

(ஜனதிபதி ரூஸ்வெல்ட்—எப்ரல் 13).

(வாஷிங்டனில் ஜெப்பர்ஸன் தேவாயதனத்தைத் திறந்து வைத்தபொழுது பேசியது).

ஸ்வதந்திரத்துக்காக யுத்தம் செய்யாதவர்கள் முறியடிக்கப்படுவார்களென்ற விஷயத்தை ஜெப்பர்ஸன் அறிந்தவன். நாமும் அதை அறிந்து விட்டோம்.

சமாதானம் வழங்கவேண்டுமென்று ஜெப்பர்ஸன் ஆசைகொண்டான். ஸ்வதந்திரதாகமும் அவனுக்குண்டு. ஆகிலும் அநேகம் தடவைகளில் சமாதானத்தைவிட்டு ஸ்வதந்திரத்தை அவலம்பிக்கும்படி அவனுக்கு நேரிட்டது. நாமும் அம்மாதிரியே செய்யவேண்டியதாக நேரிட்டது. நாம் நம்புவது போல, தாமஸ் ஜெப்பர்ஸனும், அரசாங்க நிர்வாகத்தை உள்நாட்டு ஜனங்களே வகிக்க முடியுமென்றும், தாங்கள் அரசாளுவது போல, கொடுங்கோல் மன்னரும் சர்வாதிகாரிகளும் நாட்டை ஆளமுடியாதென்றும் நம்பினன். ஒவ்வொருவருக்கும் ஸ்வதந்திரமான சில உரிமைகளுண்டென்றும் அவன் நம்பினன். இந்தக் கொள்கைகளுக்கும் ஸ்வதந்திரங்களுக்கும் ஆபத்து வந்துவிட்டதென்று அவன் கண்டு பிடித்தான். அவைகளை நிலை நாட்டுவதற்காக அவன் போர் புரிந்தான்.

எல்லா உலகத்தாருக்கும், உலகிலிருந்து வரும் கொடுமைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் மத்தியில் உலக நாயகர்களான அநேகர்கள் வருங்காலத்திற்கு ஸ்வதந்திரத்தின் தாத்பரியங்களை விளக்கிக்காட்டியிருக்கிறார்கள். தியாகத்தோடு கூடிய இந்தப் படிப்பினையை நமது தலைமுறையோர்கள் மறக்கவேமாட்டார்கள்.

ஞாபகார்த்தமாக நான் இன்று கூறும் உபசாரங்கள் ஜெப்பர்ஸனுடைய காம்பீர்யத்தையும் முக்கியமான அபிப்பிராயங்களையும் வெளியிடுகின்றன. அதை நாமும் அறிந்து அதில் கலந்து கொள்ளுவதில் நாம் பெருமை பாராட்டுகிறோம்.

"ஈச்வர ஸன்னதியில் மனிதனின் வாழ்க்கைக்கு ஹானியேற்படுத்தும் எவ்வகைப்பட்ட கொடுங்கோல் ஆட்சியையும் எதிர்ப்போம் என்று நான் பிரமாணம் செய்து விட்டேன்."

---

# ஐரோப்பாவில் ஜெர்மனி கொள்ளையடிக்கிறது.

(அப்ஸர்வர் பத்திரிகை).

யுத்தத்துக்குப் பின் நடைபெறும் ஏற்பாட்டில் ஜெர்மனியானது நஷ்ட ஈடு கொடுக்கும்படி செய்யப்படவேண்டியதென்பதைப்பற்றி நேசதேச அரசாங்கங்கள் இது வரையில் ஒரு விபரமும் வெளியிடவில்லை.

ஆகிலும் நாடுகளிலிருந்து கப்பம் வசூலிப்பதற்கு நாஸிகள் உபயோகமுள்ள தந்திர முறைகளை நிறுவி விட்டார்கள். கொள்ளையடிப்பு முறைகள் அநேக வகைப்பட்டவைகள். இவைகள் பகிரங்கமாகக் கொள்ளையடிப்பது. இம்முறை கிழக்கு ஐரோப்பாவில் கையாளப்படுகிறது. மற்றொன்று பயமுறுத்திக் கொள்ளையடிப்பது. இதன் மூலம் ஆக்கிரமிப்பு ஐரோப்பாவிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் ஜெர்மனியின் உதவிக்காக உற்பத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தாதுப்பொருள்களின் ஸப்ளை கிடைக்காது. மூன்றுவதாக பலவகைப்பட்ட பித்தலாட்டம் செய்யப்படுகிறது. விலைவாசிகளையும் எக்ஸ்சேஞ்ச் விகிதங்களையும் சமயோசிதம்போல் மாற்றுவது. ஜெர்மனி விற்பனை செய்யும் சாமான்களுக்கு அதிக விலை ஏற்படுத்துவது. ஜெர்மனி கொள்முதல் செய்யும் சாமான்களின் விலையைக் குறைத்துவிடுகிறது.



## கௌரவம்.

கொள்ளையடிப்பது கௌரவமாக நடைபெறுகிறதென்று வேஷம் போட குறிப்பிட்ட நாடுகளிலுள்ள ஐச்வர்ய திட்டத்தையே உபயோகிப்பதென்று ஜெர்மனி வெளிக்காட்டுகிறது. கடைசியாக நாம் ஆராய்ச்சி செய்ததில் ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள நாணயங்களை ஏராளமாக விருத்தி செய்து ஜெர்மனிக்கு உபயோகப்படும்படி செய்து வருகிறார்கள். தோல்வியுற்ற நாட்டுமக்களெல்லாம் ஜெர்மனிக்குச் சாமான்கள் விற்பனை செய்தால் அவர்களுக்குத் தங்கள் நாட்டு நாணயங்களிலேயே தொகை கொடுக்கப்படுமென்று சொல்லப்படுகிறது. வருவாய்க்கு மிகுதியாகவே ஜெர்மானியர்கள் பணம் கொடுக்கவேண்டுமென்று பயமுறுத்துகிறார்கள். உள்நாட்டிலுள்ள மத்திய பாங்கிகள் போட்ட காகிதங்கள் மூலம்தான் தொகை பட்டுவாடா செய்யப்படுகிறது.

ஐரோப்பா பூராவிலிருந்தும் சாமான்களை வாங்கிக்கொண்டு அவைகளுக்குப் பதிலாக ஒன்றும் அனுப்பாமலிருப்பதுதான் ஜெர்மனி செய்து வரும் சகஜமான தந்திரம். உதாரணமாக, பிரான்ஸிலுள்ள ஒரு வியாபாரி ஜெர்மனிக்கு ஜெர்மன் நாணயங்களைப் பெற்றுக்கொண்டு சாமான்கள் விற்பனை செய்கிறான். இந்த நாணயங்களை பிரான்ஸிலுள்ள ஒரு பாங்கியில் கொடுத்து பிரெஞ்சு நாணயங்களைப் பெற்றுக்கொள்ளுகிறான். இதன் முடிவு என்ன என்று பார்ப்போம். ஜெர்மனிக்கு சாமான்கள் வந்துவிட்டன. பிரெஞ்சு பாங்கியில் ஜெர்மானியர் தடைபடுத்தி வைத்திருக்கும் ஜெர்மன் நாணயங்கள்தானிருக்கின்றன. பிரெஞ்சு நாணயங்கள் அதிகப்பட்டுவிட்டன.

ஐரோப்பாவிலுள்ள மத்திய பாங்குகளில் 40 முதல் 80 சதவிகிதம் இம்மாதிரியான செலாவணியற்ற நாணயங்கள்தானிருக்கின்றன. இதற்கு பதிலாக அதிகமான உள்நாட்டு நாணயங்கள் செலாவணியிலிருந்து வருகின்றன. இம்மாதிரியான பாங்கிக்கணக்குள் ஏராளமாகயிருக்கின்றன. இவைகளை மாற்றுவதென்பது சிரமசாத்தியம். இவ்விதமாக ஜெர்மனி அடைந்திருக்கும் பொருள்நிலைமையானது நமது சாம்ராஜ்யத்திலிருந்து கடனுக்காகவும், கனடாவிலிருந்து நன்கொடையாகவும், அமெரிக்காவிலிருந்து குத்தகைக்கடன் மூலமாகவும் நமக்கு அளிக்கப்படும் உதவிக்கு சமானமாகச் சொல்லவேமுடியாது.

தோல்வியுற்ற நாடுகளில் கொள்ளையடிப்பதோடுமட்டும் ஜெர்மனி நின்றுவிடவில்லை. அவைகளிலுள்ள தொழிற்சாலை மூலதனங்களையும் கொள்ளையிட மேற்சொல்லிய முறைகள் கையாளப்படுகின்றன. பிரான்ஸில் ஆக்கிரமிப்பு சேனையின் செலவுத் தொகைக்கு உபரியாகவே பிரான்ஸிடமிருந்து தொகை வசூலிக்கப்படுகிறது. மீதப்படும் தொகையை பிரான்ஸிலுள்ள தொழிற்சாலைகளில் பங்கு முதல் வாங்குவதற்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

சர்வதேச அறிக்கை சங்கத்தார் சமீபத்தில் ஒரு துண்டுப்பிரசாரம் வெளியிட்டிருக்கிறார்கள். ஜெர்மன் மூலதனத்தை ஐரோப்பிய தொழில் முறைகளில் ஈடுபடுத்துவதில் எவ்வளவு தூரம் நடவடிக்கை செய்திருக்கிறார்களென்பதை இது விளக்கிக்காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆக்கிரப்பு நாடுகளிலுள்ள பாங்கிகளில் மேல்பார்வையை ஜெர்மன் பாங்குகள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். முக்கியமான ஐரோப்பிய தொழிற்சாலைகளெல்லாம் பாங்கிகளின் அமுலுக்குட்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணம்.

# ஹிட்லர் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள போக்குவரவுகள் சீக்கிரையாகின்றன.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் பிரிட்டனில் ஜெர்மன் விமானப்படை செய்த அக்கிரமங்கள்போல பொதுஜனங்களை வெருட்டவும் கொலை செய்யவும் பிரிடிஷ் விமானப்படைகளின் தாக்குதல்கள் நடைபெறவில்லை. ஜெர்மனிலும் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவிலுள்ள ராணுவ லக்ஷியங்களைக் குறித்துத்தான் வெடிகுண்டுகள் வீசப்படுகின்றன. முக்கியமான லக்ஷியம் ஜெர்மனியின் நிலமார்க்கமான போக்குவரத்து சாதனங்களை அழிப்பது, இருப்புப்பாதை நிலயங்களான ஹாம், ரூவன் முதலிய இடங்களை ஒன்றுபட்டு பலமாகத்தாக்குவது, மார்லேயிலுள்ள இருப்புப்பாதை மார்க்கத்தையும், ஔஸ்ட்ரகாமிலுள்ள மூடு பாதைகளையும், பாடர்பார்னிலிருக்கும் ரயில்வே இஞ்ஜின்கள் பழுதுபார்க்கும் தொழிற்சாலையையும் தாக்குவதும் ஒரே நோக்கத்துடன்தான் செய்யப்படுகின்றன. 1943-ம் வருஷம் ஆரம்பத்திலிருந்து பிரிடிஷ் விமானப்படை தினசரி மூன்று வீதம் ஹிட்லரின் ரயில்வே இஞ்ஜின்களை நாசம் செய்திருக்கிறது.

### நாஜிகளின் உயிர்நாடி.

பிரிடிஷ் யுத்த முயற்சிகள் அமெரிக்காவிலிருந்தும் கனடாவிலிருந்தும் அட்லாண்டிக் சமுத்திர மார்க்கமாக வரும் உயிர் நாடியைப் பொருத்திருப்பது போல், ஜெர்மனியின் யுத்த உயிர்நாடியும் இருப்புப்பாதை வசதியைப் பொருத்திருக்கிறது. இருப்புப்பாதை மூலம்தான் ஒவ்வொருநாளும் ரூர் பிரதேசத்திலிருந்து ரீயர் நதிப் பிரதேசத்திற்கு ஆயிரக்கணக்கான ஆயுதங்களும் வெடிமருந்து சாமான்களும், வடக்கு சமுத்திரத்திலிருக்கும் துறைமுகங்களிலிருந்தும் பால்டிக் நாடுகளிலிருந்தும், ரூர் பிரதேசத்திற்கும் மத்திய ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைகளுக்கும் வடக்கு ஸைலீஷியாவுக்கும், காப்பாற்றப்பட்ட நாடுகளான பொகீமியா—மொராவியாவிக்கும் தாதுப்பொருள்கள் கொண்டுபோகப்படுகின்றன. ஆகையால் ஐரோப்பாவிலுள்ள இருப்புப்பாதைகளுக்கு நாசம் ஏற்பட்டுவிட்டால் யுத்த முனைகளிலிருந்துவரும் ஜெர்மன் சேனைகளின் நிலைமை மோசமாகிவிடுமென்பது நிச்சயம். ஜெர்மன் ரயில்வே ஸ்டேஷன்கள், ரயில் வண்டிகள் தங்குமிடங்கள், சாமான் வண்டிகள், ரயில்வே இஞ்ஜின்கள் இவைகளை ஏற்பாடாக அழித்துவருவதால், போக்குவரவு சம்பந்தப்பட்டமட்டில் ஜெர்மன் சேனைகளுக்குப்பின் ஐரோப்பிய கடற்கரையிலிருக்கும் தேசங்களெல்லாம் பாழாகிவிடும். இந்த நடவடிக்கையின் முக்கியத்வம் பிரிடிஷ்-அமெரிக்கப் படைகள் மேற்கு ஐரோப்பாவில் படையெடுக்கும்பொழுது நன்கு வெளியாகும்.

### போக்குவரவு ஏற்பாடுகள்.

நேசதேச விமானப்படையின் தாக்குதல்களின் பயனை மதித்துப் பார்க்க வேண்டுமானால், இடைவிடாது பழுதுபட்டுவரும் ஜெர்மன் போக்குவரத்து ஏற்பாடுகளை நாம் பரிசீலனை செய்யவேண்டும். 1937-ம் வருஷம் இருந்ததைவிட ஐந்துமடங்கு நீளமுள்ள ஸ்தலங்களுக்கு ஜெர்மன் இருப்புப்பாதைகள் உபயோகப்படவேண்டும். எல்லா தேசங்களிலுமுள்ள இருப்புப் பாதைகளெல்லாம் சேர்ந்து ஆறுவருடங்களுக்கு முன்னிருந்ததைவிட 3½ மடங்குதான் அதிகமாகயிருக்கின்றன. ரயில்வே இஞ்ஜின்களின் சங்கியையும் சாமான் வண்டிகளின் சங்கியையும் போதுமான அளவு விருத்தியடையவில்லை. யுத்தத்துக்குமுன் சென்ற வருஷத்தில் அதிகாரவர்க்கத்தார்கள் வெளியிட்ட விவரங்கள் பிரகாரம் ஜெர்மனியில் 23,700 ரயில்வே இஞ்ஜின்கள் தானிருந்தன. அதாவது இருப்புப்பாதையின் மூன்று கிலோமீடருக்கு ஒரு இஞ்ஜின் வீதமிருந்தது. ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள இஞ்ஜின்கள் கைவசமானபிறகும் ஜெர்மன் ரயில்வேயில் 58,500 இஞ்ஜின்கள் தான் மொத்தமாகயிருந்தன. ஐரோப்பா பூராவும் இருப்புப்பாதைகளின் நீளம் அதிகரித்துவிட்டது. 61,586-லிருந்து, 2,16,000 கிலோமீடராக அதிகரித்துவிட்டது. அதாவது 4 கிலோமீடர் நீளத்திற்கு ஒரு இஞ்ஜின் உபயோகப்படவேண்டியிருந்தது. சாமான் வண்டிகளின் நிலைமை மாறுதலடையவில்லை.

யுத்தத்துக்குமுன் சென்ற வருஷத்திலேயே இஞ்ஜின்களையும் சாமான் வண்டிகளையும் பழுதுபார்க்கும் வேலை ஜெர்மனியில் சரிவர கவனிக்கப்படவில்லை. ஹிட்லர் அதிகாரத்துக்கு வருவதற்குமுன் பழுதுபார்க்கப்பட்ட இஞ்ஜின்கள்



சங்கியை 20 முதல் 23 சத விகிதமாகயிருந்தது. 1938-ல் அது 13 முதல் 15 சத விகிதத்துக்கும் 1942-ல் 8 அல்லது 9 சத விகிதத்துக்கும் குறைந்துவிட்டது. உத்தியோகமுறையில் அறிவிக்கப்பட்டபடி ஜெர்மனியில் 60,000 இஞ்ஜின்களும், 1,12,000 சாமான் வண்டிகளும் குறைவுபட்டிருக்கின்றன.

இச்சமயம் ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யா பூராவுக்கும் ஜெர்மனி இருப்புப் பாதை வசதிகள் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. ஜெர்மனியிலுள்ள சாமான் வண்டிகளும், ரயில்வே இஞ்ஜின்களும் திருத்தியமைக்காமல் ருஷ்ய இருப்புப் பாதைகளில் உபயோகிக்கமுடியாது. மேற்கு ஐரோப்பாவிலிருப்பதைவிட ருஷ்யாவில் அகலமான இருப்புப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன.

### விமானத் தாக்குதலின் விளைவுகள்.

டான்யூப் நதி போக்குவரத்தை விர, தென்கிழக்கு ஐரோப்பாவிலிருந்து ஜெர்மனிக்குப் போகும் போக்குவரத்துகள் கடல் மார்க்கமாக, கான்ஸ்டன்ஸா, ஸலோனிகா, பிரேயஸ் முதலிய இடங்களிலிருந்து புறப்பட்டு மத்தியதரைக் கடல் வழியாகவும் அட்லாண்டிக் வழியாகவும் சென்று ஆண்ட்வெர்ப், ராட்டர்டாம், பிரமென், ஹாம்பர்க் முதலிய இடங்களுக்குக்கொண்டு போகப்பட்டன. பிரிடன் செய்துவரும் கடல் முற்றுகை மூலம் இந்த மார்க்கம் அடைபட்டுவிட்டது. ஆகையால் போத்துவரத்துகள் தரைமார்க்கங்களுக்கு மாற்றப்பட்டு, மிகுதியாகயில்லாத ரஸ்தாக்கள் மூலமும் இருப்புப்பாதைகள் மூலமும் நடைபெற்று வருகின்றன. இதன் பலன்கள் வெளிப்படையானவை. இதற்குமுன் 6,000 டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல் கொண்டுபோன சாமான்களை பத்து நீண்ட சாமான்கள், ரயில்வண்டிகள் கொண்டுபோகின்றன. 1939-ம் வருஷத்திற்கு முன் ஒரு ஜெர்மானிய எண்ணெய்க் கப்பல் ருமேனியாவிலிருந்து மத்தியதரைக் கடல், இங்கிலீஷ் கால்வாய் மூலமாக பிரமன், ஹாம்பர்க் முதலிய இடங்களுக்கு எண்ணெய் ஸப்ளை செய்தது. இப்பொழுது அதே எண்ணெயை டாங்கிகளுள்ள 400 மோட்டார்கள் கொண்டுபோகின்றன. அதேவிதமாக ஜெர்மனியிலிருந்து இதாலிக்கு 1 மிலியன் டன்கள் எடைமானமுள்ள நிலக்கரியைக்கொண்டு போவதற்கு 27,000 சாமான் வண்டிகளும், 700 இஞ்ஜின்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. தரைமார்க்கமான போக்குவரத்துகளை பிரிடிஷ் விமானப்படை தகர்த்துவருவதால், இருப்புப்பாதைகளுக்கு ஏற்பட்டிருக்கும் அதிகபளுவை நிவர்த்திக்க சாமான்கள் கடற்கரையோரமாக கப்பல்கள் மூலம் கொண்டு போகப்படுகின்றன. வெடி விமானங்கள் குண்டுகளைப் போடுவதினாலும் கடற்கரை யோரங்களில் சுரங்க வெடிகள் பாவுவதாலும் வஸந்த காலங்களில் வடக்கு ஜெர்மன் துறைமுகங்களில் நெருக்கடியும் சங்கடமும் ஏற்பட்டுவிடுகின்றன. முக்கியமாக இது ஹாம்பர்க்கில் நடைபெறுகிறது. ஸ்வீடிஷ் துறைமுகங்களிலிருந்து வரும் இரும்பு தாவரப்பொருள்களை ராட்டர்டாமுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுசெய்யவேண்டியிருக்கிறது. இவைகளைக்கொண்டு போவதற்காக ஜெர்மானியர் உபயோகிக்கும் சொல்ப சாமான் கப்பல்களும், நமது விமானப்படையினால் பிரிஸியன் தீவுகளுக்கப்பால் தாக்கப்படுகின்றன.

### இப்பொழுது உள்ள நிலைமை.

யுத்தம் துவங்கியபொழுதும்கூட ஜெர்மனியின் போக்குவரத்து ஏற்பாடுகள் திருப்திகரமாகயில்லை. ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள சாதனங்களைச் சேர்த்துக் கொண்டும் நிலைமை அபிவிருத்தியடையவில்லை. ருஷ்யர்கள் தங்களுடைய ரயில்வே இஞ்ஜின்களையும் இருப்புப்பாதைகளையும் அப்புறப்படுத்தியும் நாசமும் செய்துவிட்டபடியால், ஜெர்மானியர்கள் இருப்புப்பாதை அகலத்தைச் சீர்திருத்தி 17,500 மைல்கள் நீளத்துக்கு தங்களுடைய இருப்புப்பாதைகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. 1937-ம் வருஷத்தில் ஜெர்மனியிலிருந்த இருப்புப்பாதைகளின் மொத்த நீளத்தில் இது பாதிபாகமாகும். இனிமேல் கடல் மார்க்கங்களை அபாயமன்னியில் ஜெர்மனி உபயோகிக்க முடியாது. ஆகையால் இருப்புப் பாதைகளுக்கும் இதர போக்குவரத்து வசதிகளுக்கும் அதிகச் சிரமம் ஏற்படும். இதிலிருந்து ஜெர்மன் போக்குவரத்து சாதனங்களை பிரிடிஷ்-அமெரிக்க விமானப்படை ஒன்றுபட்டு தாக்குதல் செய்வதின் பயன்கள் நன்கு புலப்படும். ஆகையால் வெளிப்படையாகயில்லாதபோதிலும் இவ்விதமாக ஒரு முக்கியமான சண்டையானது நடைபெற்று வருகிறது.

# படையெடுப்புக்கு அவசியமானவைகள்.

(லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

கஸாபிளாங்கா மகாநாட்டில் ஜெர்மனி ஆதிக்கத்துக்குட்பட்ட ஐரோப்பாவின் பேரில் படையெடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நிபுணர்களல்லாத அநேக யுத்த தந்திரிகள் படையெடுப்புக்குத் தேவையான சாதனங்களைப்பற்றி சர்ச்சை செய்து வருகிறார்கள்.

இவ்விஷயத்தில் ராணுவ அதிகாரிகளுக்கு மட்டும் தான் எல்லாவிஷயங்களும் புலப்படுமென்றும் அவர்கள் விடுக்கும் யோசனைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்குத்தான் சாமர்த்திய முண்டென்பதுமில்லை.

ஆகிலும் ஆலோசனை செய்துவருகிறவர்களின் கவனத்துக்காக, நாஸிகளின் அரசாங்கமுள்ள இடங்களின் பேரில் எப்பொழுது, எவ்விதமாகப் படையெடுப்பது என்ற விஷயத்தில் முடிவான அபிப்பிராயம் கொள்ளுவதற்கு முக்கியமான சில குறிப்புகளை நான் சொல்ல விரும்புகிறேன். அநேக விஷயங்களிருப்பினும் முக்கியமாக ஐந்து விஷயங்களைப்பற்றி மட்டும் பேச விரும்புகிறேன்.

(1) எதிரிப் படைகளுடன் யுத்தம் செய்து வெற்றிபெறுவதற்கு லாயக்கான போதுமான படை பலத்தை அனுப்புவது.

(2) ஒருவர் ஏறிச் செல்லக்கூடிய சண்டை விமானப்படையின் சக்தியை ஆதாரமாகக் கொண்டு, படைகள் இறங்குமிடத்தைப் பாதுகாப்பதற்குவேண்டிய விமானபலம்.

(3) படையெடுப்பு சேனையைக் கொண்டுபோவதற்குத் தேவையான கப்பற்படை. இது விஷயத்தில், இப்பொழுது நம்முடைய துணைக்காவல் கொண்ட சாமான் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்லவேண்டியிருக்கிறதென்றும், அதன் மூலம் ஏராளமான கப்பல்கள் இதர வேலையில் ஈடுபட்டிருக்கின்றன என்பதையும் கவனிக்கவேண்டும்.

(4) தரையில் படைகள் இறங்கிய உடன் அவைகளைப் பாதுகாக்க வேண்டும்

(5) இறங்கிய பிறகு முக்கியமான லக்ஷியத்தை அடைவது.

ஒவ்வொன்றாகச் சர்ச்சை செய்வோம்.

நமது படை பலத்தின் சங்கியையை வெளியிடக்கூடாது. ஆகிலும் சென்ற யுத்தத்தில் இருந்த கணக்குகள் நமக்கு அறிவூட்டுகின்றன. 1918-ம் வருஷத்தில் ஜெர்மானியர்கள் சமாதானத்துக்கு வந்த பொழுது பிரான்ஸிலும், பிளாண்டர்ஸிலும் நேசதேசப் படைகள் 207 டிவிஷன்களிருந்தன. பள்ளங்களிலிருந்து யுத்தம் செய்வதற்கு வேண்டியதுபோல, நவீன யுத்தத்தில் கவசங்கள் பூண்டு யுத்தம் செய்வதற்கு அதிகப் படைகள் தேவையில்லை. ஆகிலும் நான் துருப்புகளின் புள்ளி விவரங்களைச் சொல்லப்போவதில்லை, ஜோஸியமும் சொல்லப்போவதில்லை. ஆகிலும் படையெடுப்பு வெற்றிகரமாக முடிவதற்குத் தேவையான படைபலமும் மூஸ்தீப்புகளும் இருந்தாலொழிய ஐரோப்பா கண்டத்தைப் படையெடுப்பதென்பது முட்டாள்தனமென்று நான் சொல்லுகிறேன்.

### சண்டை விமானங்களின் கவசம்.

எதிர்ப்பு ஏற்படக்கூடிய ஒரு இடத்தில் சண்டை விமானங்களின் உதவியன்னியில் நமது படைகளை இறக்குவதென்பது தற்கொலை செய்துகொள்ளுவது போலாகும். ஒரு மனிதன் ஏறிக்கொண்டு விமானத்திலிருந்து புறப்படும் ஒரு சண்டை விமானம் 100 மைல்களுக்குக் குறைவான தூரம் சென்று சண்டைபோட முடியும். ஒரு வட்டம் போடும் கருவியை உபயோகித்து 100 மைல்கள் அளவிற்கு வட்டம் போட்டு எந்தந்த இடங்களில் படைகளிறங்கலாமென்று கண்டுபிடியுங்கள். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவனுக்கு இதன் பயன் ஆச்சரியமளிக்கும்.



ஆபிரிக்காவுக்கு நமது படைகளைக் கொண்டுபோவதற்கு 500 துருப்புக் கப்பல்களும் 350 யுத்தக் கப்பல்களும் தேவையாகயிருந்தன. ஐரோப்பா கண்டம் சமீபத்திலிருக்கிறது. வட ஆபிரிக்காவுக்குச் செல்லுவதைவிட அதிக தடவைகள் கப்பல்கள் ஐரோப்பாவுக்குச் செல்லக்கூடும். ஆகிலும் எகிப்துக்கும் கிழக்கு திசைக்கும் துணைக்காவல் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிப் போகவேண்டுமென்பதையும் வட ஆபிரிக்காவிலுள்ள துருப்புகளுக்கு சாமான்கள் கப்பல் மூலம் அனுப்பப்படவேண்டுமென்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். கப்பல்களை மீதப்படுத்தும் மார்க்கங்கள் காணப்படவில்லை. நாம் நம்முடைய முதலைச் செலவழித்து வருகிறோம்.

ஆகையால் நாம் வட ஆபிரிக்காவில் போட்டிருக்கும் மூலதனத்துக்கு ஸிஸிலிக்குச் சமீபத்திலுள்ள குறுகிய சமுத்திரத்தை துணைக்காவல் படை பத்திரமாகக் கடக்கும்பொழுது லாபம் ஏற்பட்டுவிடும்.

பிரான்ஸில் ஏதாவது ஒரு இடத்தில் இரண்டாம் போர்முனை துவக்கப்படும் என்று வைத்துக்கொண்டால், நமது சாமான் கப்பல்கள் வெகு தூரம் செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. 1939-ம் வருஷத்திலிருந்ததைவிட நமக்கு அதிகமான கப்பல்கள் தேவையாயிருக்கும். அப்பொழுது நமக்கு ஸப்ளைகள் பிரான்ஸ் தேசத்திலிருந்து கிடைத்தன. இப்பொழுது பிரான்ஸ் தேசத்தில் பஞ்சம் அதிகரித்திருக்கிறது. நமக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் நாமே கொண்டுபோகவேண்டும்.

'பெர்லினைப் பிடிப்பதுதான் நமது இறுதி நோக்கம் என்று அநேகர்கள் நினைக்கிறார்கள். இதற்கு அனுகூலமாக பிரிடிஷ் விமானப்படை பெர்லினை வெடிகுண்டுகளால் அழிக்க ஆரம்பித்துவிட்டது. தரைப்படைகள் அங்கு சென்று பாக்கி வேலையைப் பூர்த்திசெய்யவேண்டியதுதான்.

---

# ஜப்பான் முஸ்லீம்களின் மகாநாட்டைக் கூட்டுகிறது.

(தூரக்கிழக்கு நியூஸ் பத்திரிகை).

மலேயாவிலும் ஸுமத்ராவிலுமுள்ள 10 மிலியன் முஸ்லீம்களின் பிரதிநிதிகள் சிங்கப்பூரில் ஏப்ரல் 5, 6 தேதிகளில் மகாநாடு கூடுவார்களென்று ஜப்பான் ஏப்ரல் 1-ம் தேதியில் வெளியிட்டதிலிருந்து உலகப்போக்கை துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஜப்பானிய அதிகார வர்க்கத்தார் உத்தரவிட்டிருக்கிறார்களென்று தெரியவருகிறது. கிழக்கு ஆசியாவைத் திருத்தி அமைப்பதில் அவர்கள் விசேஷப்பங்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முஸ்லீம்கள் நினைக்கிறார்களாம். மகாநாட்டின் மூலம் ஆசியாவிலும் உலகம் பூராவுமுள்ள முஸ்லீம்கள் எவ்விதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதென்பது நிர்த்தாரணம் செய்யப்படும்.

முஸ்லீம்கள் பிடிவாதமுள்ளவர்களென்றும், சந்தேகப்பேர்வழிகளென்றும், சுலபமாக ஏமாற்றமடையமாட்டார்களென்றும், சிறிய அவமானங்களையும் பொறுத்துக்கொள்ள மாட்டார்களென்றும் ஜப்பானியர்கள் அறிவார்கள். சமக்ஷேம ஏற்பாட்டிலோ அல்லது சமரச ஏற்பாட்டிலோ முஸ்லீம்களை மாட்டிவிடுவதற்கு ஜப்பானியர்கள் வெகு ஜாக்கிரதையுடன் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். முஸ்லீம் மதத்தையும் நாகரீகத்தையும் புண்படுத்தக்கூடிய யாதொரு பேச்சையும் ஒலிபரப்பில் அவர்கள் வெளியிடுகிறதில்லை. முஸ்லீம் வாழ்க்கை சம்பந்தமாக நடத்திய நடவடிக்கைகளெல்லாம் ஜப்பான் இஸ்லாமின் ரக்ஷகர் என்று தற்புகழ்கி செய்துவரும் அபிப்பிராயத்தை ஒட்டித்தான் நடைபெறுகின்றன. ஷின்டோ மதத்தின்படி' சக்ரவர்த்தியை ஆராதிப்பதென்பதை

இஸ்லாம் மதம் எதிர்த்து நிற்கிற தென்பதையும் ஜப்பானியர்கள் அறிவார்கள். நெடுநாளாக இருந்துவரும் பழக்கவழக்கங்களுக்கு மாறுபாடாக தன்னுடைய ஸ்தலங்களை நிலைநாட்டிவரும் ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் நாகரீகங்களுக்குள் சண்டை இடைவிடாது நடைபெற்றுவரும் சமயத்தில் முஸ்லீம் கக்ஷிக்காரர்களின் பிரச்னை ரொம்பவும் சிரமமானது. அவர்களைப்போல் மதஸ்தாபனங்களையும் பழக்கவழக்கங்களையும் வேறு ஒருவரும் காப்பாற்றமாட்டார்கள். கிழக்கிலும் தென் ஆசியாவிலும் வேறுபட்ட நாகரீகங்களை ஒன்று படுத்துவது என்று ஜப்பானியர் செய்துவரும் ஏற்பாடுகள் எல்லாம், ஜப்பான் சம்பந்தமில்லாத மற்ற எல்லா ஸ்தாபனங்களிலும் ஜப்பானிய நாகரீகத்தை பரவச்செய்து அவைகளை அழித்துவிடுவதற்குச் செய்யும் மறைமுகமான யோசனைகள் இம்முறைகளில் வெற்றி பெற்றால்தான் ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் ஜப்பானின் குறைவளைப் பிடிப்பு வலுப்படும்.

முஸ்லீம் தேசங்களில் ஜப்பான் செய்துவரும் நடவடிக்கைகள் கபடமானவை, கெடுதலானவை. ஒலிபரப்பில் பிரசார மூலமாகவும் பிரசுரங்கள் மூலமாகவும் முஸ்லீம் நாகரீகத்தின் வேர்களைக் களைந்துவிட ஜப்பான் செய்துவரும் அக்ரமங்களை முஸ்லீம்களின் நோக்கத்திலிருந்து மறைத்துவிட முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆடம்பரமான அமைப்புகளுள்ள திட்டங்களைப்பார்க்கும்படிக்கும் அவர்களுக்கு வற்புறுத்தப்படுகிறது.

ஜப்பானியர்கள் உள்நாட்டு நாகரீக முறைகளை விருத்திசெய்ய பிரயத்தனம் செய்கிறதில்லை. அவைகளை அழித்துவிட்டு மிகப்பழமையான நோக்கங்களுள்ள தங்களுடைய நாகரீகத்தை உண்டுபண்ண ஜப்பானியர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த நடவடிக்கைகளைப்பற்றி அநேக உதாரணங்கள் சொல்லலாம். முஸ்லீம் பாஷைக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத ஜப்பானிய பாஷையை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஜப்பான் கட்டாயம்செய்துவருகிறது. ஐரோப்பிய கணக்குகளுக்கு ஆதாரமான அராபிய எண்ணிக்கைகளுக்கு பதிலாக ஜப்பானிய கணு யந்திரம் உபயோகத்துக்கு வந்துவிட்டது. சாந்த்ரமானமுள்ள கால அட்டவணையை உபயோகப்படுத்தும் உரிமையை முஸ்லீம்களுக்கு நாங்கள் கொடுத்துவிட்டோமென்று ஜப்பானியர்கள் வெளியிட்டபோதிலும், அநேகமாக ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் ஜப்பானியக்கால அட்டவணையும் டோக்கியோவிலுள்ள கால அளவும்தான் அமுலிலிருக்கின்றன. முஸ்லீம்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் முஸ்லீம் காலஅட்டவணையை உபயோகித்த அவர்களுக்கு ஸ்வதந்திரமில்லை.

முஸ்லீம் நாடுகளிலும், முஸ்லீம்கள் இல்லாத நாடுகளிலும் ஜப்பானுடைய மதத்தில் உண்டான விடுமுறை நாட்கள்தான் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஜப்பானியச் சிலைகள முன்னால் தண்டனிடுவதும், ஜப்பானியச் சக்ரவர்த்தியைத் தெய்வமென்று பூஜிப்பதும் முஸ்லீம் மதக்கொள்கைகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் முறண்பட்டது.

ஜப்பானியர்களின் ஆக்ஞைப்படி ஏற்பாடாகியிருக்கும் முஸ்லீம் சங்கங்களும், கல்வி இயக்கங்களும் புஸ்தகசாலைகளும், மகா நாடுகளும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் ஆதரவும் ஆதிக்கமும் பெற்றவைகள். முஸ்லீம்கள் இவைகளில் கலந்துகொள்ளுவதென்பது மனதார, உத்சாகத்துடன் செய்யப்பட்டவையல்ல. செய்தே தீரவேண்டும், வேறுகதியில்லை யென்பதை ஒட்டித்தான் அம்மாதிரி அவர்கள கலந்துகொள்ளுகிறார்கள்.

சுருக்கமாகச் செல்லும்பொழுது, ஜாதி, மதம், நாகரீகம், பாஷை, எல்லா விதமான பலிசவாழ்க்கை, இவைகளுக்கு மாறுபாடான கொள்கைகளுள்ள ராணுவ கொடுங்கோல் ஆக்ஷிக்காரர், மனப்பான்மையிலும் காரியாம்சையிலும் தோஷம பொருந்திய எண்ணத்துடன், தூரக்கிழக்கிலுள்ள முஸ்லீம் நாடுகளை அரசாண்டு அந்த நாடுகளையும் ஜனங்களையும் ஜப்பானியர் மயமாகச்செய்யும் நோக்கமும் கொண்டிருக்கிறது. கிருஸ்து, முகம்மதிய மதத்துக்கிடையே



நாகரீக விஷயத்திலும் பழக்கவழக்கங்களிலும் பொதுப்படையான தொடர்புகளிருக்கின்றன. சரித்திரத்தில் சிற்றறிவுள்ளவர்களறிவதற்கு அதிகமான சம்பந்தங்களுமிருக்கின்றன. ஆனால் ஜப்பானிய நாகரீகமும் எண்ணங்களும் முஸ்லீம் நாகரீகத்துக்கு நேர்விரோதமானவை. புத்திகூர்மையுள்ள முஸ்லீம்கள் இதை அறிவார்கள். சிலர் இந்த அபிப்பிராயத்தை ஜப்பானியர்களுக்கும் அறிவித்திருக்கிறார்கள்.

---

## சங்கட நிலையிலிருக்கிற சர்வாதிகாரி.

(தூரக்கிழக்கு நியூஸ் பத்திரிகை—ஏப்ரல் 8.)

மற்ற எல்லா பொம்மை சர்வாதிகாரிகளைக்காட்டிலும் மார்ஷல் பிபல் சோங்கிராம் மிகவும் பரிதாபமான நிலைமையிலிருக்கிறார். ஜப்பானியரால் புதிய திட்டம், என்று ஒன்று ஏற்பட்டதிலிருந்து, மிக வெளிப்படையாக இவருடைய கஷ்டமான நிலைமையை பற்றி தானே அறிவித்திருக்கிறார்.

ஸியாம் தேசமக்கள், கவர்மெண்டார் உத்தரவிட்டு வற்புறுத்தியும், சீனர்களுக்குச் சாதகமாகவே இருந்துகொண்டு பன்றிகளை வளர்த்து விற்பனை செய்யவும், அரிசியை விற்பனை செய்யவும் மறுக்கிறார்கள், என்று பாங்காக்கில் கல்வி சம்பந்தமான பயிற்சி பெற்று வரும் சில உத்தியோகஸ்தர்களுக்கு சென்றவாரக் கடைசியில் சொன்னார். தலையை அலங்காரம் செய்ய கற்றுக்கொடுக்கும் பயிற்சிசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் ஒருவரும் சேரவில்லை. கவர்ன்மெண்டார் நிலங்களைச் சாகுபடிசெய்து நெல்லை அதிகப்படுத்துவதற்காக குடியானவர்களைத் தூண்டி வருகிறார்கள். ஆனால் அவர்கள் கவர்ன்மெண்டாரைத் திட்டுகிறார்கள். அரசாங்கத்தார் எல்லா உதவியும் செய்துவருகிறார்கள். ஆனால் அது ஜனங்களால் பயன்படுத்திக்கொள்ளப்படவிலலை. இதுதான் உண்மையான நிலைமை என்று அவர் விளக்குகிறார்.

ஸியாம் தேசத்து பிரதம மந்திரி தானே கையொப்பமிட்டு சென்ற திங்கட்கிழமையன்று ஜனங்களுக்கு விடுத்திருக்கும் செய்தியில் மேலும் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்.

தான் அநேக காரியங்களில் அதிருப்திகொண்டு அநேக உத்தியோகஸ்தர்கள், பத்திரிகாசிரியர்கள் மற்றும் பல ஸியாம் தேசத்து மக்கள் தனமீது குற்றங்கள் கண்டுபிடித்து வருகிறார்கள் என்றும், ஆனால் தன்னால் ஒன்றும் செய்வதற்கு இயலவில்லை என்றும் அவர் ஒப்புக்கொள்ளுகிறார்.

ஆகையால் மிகவும் ரகசியமான செய்திகள் விரோதிக்கு எட்டிவிடுகின்றனவாகையால் நாம் ரகசியமாய் காரியங்களை நடத்தவேண்டும் என்று மேலும் சொல்லுகிறார். ஸியாம் மதத்தைத் தன்னுடைய நன்மைக்காகக் கைப்பற்றுகிறாரென்றும, தன்னுடைய வேலையில் சொந்தக்காரியங்களுக்காக இருந்து வருகிறாரென்றும் அவர் குற்றங் கண்டுபிடிக்கப்படுகிறார். இது, முற்றிலும். பொய் என்றும் அவர் தன்னுடைய சொந்த தேசத்தின் நன்மைக்காகத்தான் வேலையிலிருந்து வருகிறதாகவும் கூறுகிறார்.

"அநேக ஸியாம் நாட்டு மக்கள் நான் சில குறிப்பிட்ட மந்திரிகளை வேலையைவிட்டு தள்ளிவிடவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். நான் என்ன செய்யமுடியும்? நல்ல மந்திரிகளை வைசதுக்கொள்ளவேண்டுமென்றுதான் பார்க்கிறேன். எனக்கும் சௌகரியமாயிருக்கும். ஆனால் தகுந்தபேர்கள் கிடைக்கவில்லை அப்படி சிலர் இருந்தாலும் சில வெளியிட முடியாத காரணங்களால் அவர்களை மந்திரிகளாக வைத்துக்கொள்ளமுடியவில்லை. என்னுடைய அன்பார்ந்த சகோதர்களே, யுத்த சமயத்தில் உங்களுடைய தலைவரின் சொல்படி நடக்கவேண்டும். அப்படியில்லாமல் போனால் எப்படி பிரதேசங்கள் நம்மை மதிப்பார்கள்? எப்படி உங்களுடைய தலைவர் மற்ற பெரிய நாடுகளுடன்

ஓடக்கூடிய படகுகளும் அல்லது தண்ணீர் மூலம் சென்று பாய்ந்து அடிக்கும் முறைகளும் தேவையென்று நான் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக ஒன்று அல்லது இரண்டு பட கோட்டிகளுள்ள கலங்களும் தேவை. அவர்கள் எவ்வளவு மெதுவாக வேலை செய்தாலும் அவர்களுக்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியம்.

ஜப்பானியர்களும் படகுகளைத்தான் உபயோகிக்கிறார்கள். மாயூ தீபகற்பத்தின் கரைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் நதியின் முகத்வாரத்தை ஆக்கிரமித்திருப்பதினாலும் ஏராளமான மரச்சோலைகளுள்ள நதி மார்க்கங்களை அவன் உபயோகப்படுத்தினாலும் அவனுக்கு விசேஷ சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. அக்யாப்புக்கும் ராதேடாங்குக்குமுள்ள பிரதேசத்தில் ஏராளமான மாங்கிரவ் புதர்களாயிருக்கின்றன. ஆகையால் தான் இந்த நீர்ப்பாசன மார்க்கங்களில் மிதக்கும் கலங்களை நமது பிரிடிஷ் விமானப்படை மெஷின் பீரங்கிகள் மூலம் தாக்கி நொருக்கிவருகிறார்கள். அக்யாபுக்கு இவர்கள் செய்துவரும் தீங்கைப் பற்றி சொல்லவேண்டியதேயில்லை. 20, 30 மைல்களுக்கப்பால் இந்த வெடி குண்டு சப்தங்கள் கேட்கின்றன. இராக் காலங்களில் அக்னி ஜ்வாலையும் தெரிகிறது.

நமது இஞ்ஜினியர்களின் முயற்சிகளையும் விஞ, படகுகள் மூலமாகவும், கால் நடையாகவும் தான் இவ்விடத்தில் பிரயாணம் செய்யவேண்டும். ஸப்ளைகளும் வெடி மருந்துகளும் இப்படித்தான் கொண்டுபோகவேண்டும்.

### துணைகொண்ட சாமான் படகுகள்.

துணைக்காவலுடன் சாமான் படகுகள் பகலிலும், பனி பூண்ட இரவிலும் நதிகளில் செல்லுவதும், விநோதமான குறிப்புடன் கூலி வேலை செய்பவர்கள் ரஸ்தாக்களில் செல்லுவதும், அல்லது பாதைகள் இல்லாத மலைகளில் கஷ்டப்பட்டு முன்னேறுவதும் சாதாரணத் தோற்றங்கள். சில சமயம் இந்த ருசிகரமான தோற்றம் ஸ்வாரஸ்யமில்லாமல் போய்விடும். இம்மாதிரியாக ஒரு மைல் பிரயாணம் செய்வதென்பது சாதாரணமாகச் செய்யும் பிராயணத்தின் கால அளவும், பிரயோஜனமும் உள்ளதற்கும் ஐந்து மடங்கு உள்ளது என்று சொல்லலாம். ஆகையால் போக்குவரத்து சிரமங்களை நாம் மதிக்காமலிருக்கமுடியாது.

ஆகையால், சாமான் வண்டிகள், கழுதைகள், கூலி வேலைக்காரர்கள், நதியில் போகும் ஸ்டீமர், சிறிய படகுகள் இவைகளை ஒன்று சேர்த்து அனுப்பவேண்டியிருப்பதால், யுத்தம் நடைபெறும் இடத்திற்கு இவைகள் சேருவதற்கு தாமதம் ஏற்படுகிறது. ஆகிலும் ராதேடாங்கிலும், மாயூ தீபகற்பத்திலும் நடைபெற்று வரும் யுத்தத்தில் யாதொரு தளர்ச்சியும் ஏற்படவில்லை. எதிர்ப்பு யுத்தத்திலுள்ள தீரத்தை தற்காப்பு முறையிலும் ஜப்பான் காட்டியிருக்கிறது. அவனுக்கு நல்ல கேந்திர ஸ்தானங்களிருக்கின்றன. அவைகளை உயிர் துறக்கும் வரையில் காப்பாற்ற அவன் ஊக்கமுள்ளவன். அவைகளை விட்டு அவனை அழித்தாலொழிய அவன் போகமாட்டான்.

ஆகிலும் இந்த மாதிரியான தற்காப்பு ஏற்பாடுகள் மூலம் எதிரி காண்பித்து வரும் விடா முயற்சியும், புத்திசாலித்தனமும் நமது துருப்புகளுக்கு படிப்பினையாகிறது. வரப்போகும் பெரிய யுத்தங்களுக்கு நமது படைகளுக்கு நல்ல அனுபவமளிக்கின்றன.

ஒவ்வொரு நாளும் நமது படைகளின் தாக்குதல் அதிகரிக்கிறது. இந்தப் பிரதேசத்தில் ஜப்பானுடைய பிடிப்பை நமது துருப்புகள் ஒவ்வொரு நாளும் பலஹீனப்படுத்துகின்றன. எதிரி இறுதியில் அழிவுபடும் காலத்தை இவ்விடத்தில் நடைபெறும் ருசிகரமான சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் குறிப்பிடுகின்றன.



# இந்தியப்படை உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதில் புதிய முறைகள்.

மூன்று நாட்கள் நாட்டு வாசமும், சௌக்கியமான வாழ்க்கையும், சந்தோஷமுள்ள சிநேகிதர்களுடன், சல்லாபமும்—இவைகள்தான் இந்தியப்படை உத்தியோகஸ்தர்களுக்குப் புதிதாக ஏற்படுத்தியிருக்கும் பரீக்ஷார்த்தமான நடவடிக்கைகள்.

முன்போல தேர்ந்தெடுக்கும் சபையார்முன் ஆஜராகி, கேள்விகளுக்கு பதில் சொல்லுவது என்று இல்லாமல், பிரிடிஷ் நேசநாட்டுப் படைகளுக்கு ஏற்பட்டிருப்பதுபோல், இந்தியத் துருப்புகளின் உத்தியோகஸ்தர்கள் நாட்டு மக்களுடன் பழகுவதற்கும், தலைவர்களுக்குத் தேவையான குணங்களை வெளிக்காட்டவும் வசதியுள்ள முறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பரீக்ஷைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தேர்ந்தெடுக்கும் சபையாரிடமிருந்து, இந்திய ராணுவப் பள்ளிக்கூடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஒரு இடத்தில் மூன்று நாட்கள் வாசம் செய்யவேண்டுமென்று மாணுக்கர்களுக்கு அழைப்புப் பத்திரம் அனுப்பப்படும். டேராடூனுக்கு அவர்கள் வந்தவுடன் சங்கத்தின் மெம்பர்கள் அவர்களை வரவேற்பார்கள். ராணுவ அதிகாரிகளும், ஸிவில் அதிகாரிகளும் மாணுக்கர்கள் சந்தோஷமாகவும், சுகமாகவும் நாட்களைக் கழிக்க ஏற்பாடு செய்வார்கள்.

மாணுக்கன் லாயக்குள்ளவனு என்று தீர்மானம் செய்வது, குறுகிய எண்ணத்துடன் பார்க்கப்படுவதில்லை. பாரபக்ஷமில்லாமல் தீர்மானம் செய்வதற்காக மாணுக்கர்கள் தங்கள் பெயர், குலம், ஜாதி, மதம், பொருளாதார நிலைமை, தன்னுடைய செல்வாக்கு முதலியவற்றைச் சொல்லக்கூடாது. சங்கத்தின் மெம்பர்களுக்கு அவர்களுடைய நம்பர்தான் அடையாளம் காண்பிக்கும்.

அழகான ஆடைகளணிந்துகொள்ளுவதும், அதிகாரிகளின் கவனத்தைக் கவராது. டேராடூனிலிருக்கும்பொழுது மாணுக்கர்கள் நல்ல ஆடைகளை அணிந்து வரவேண்டுமென்றும் சிபார்சு செய்யப்படுகிறது.

### ராணுவ முக்கியமான குணங்கள்.

மாணுக்கர்கள் 40 பேர்கள்கொண்ட வகுப்பாகப் பிரிக்கப்படுவார்கள். அவர்களுக்கு ஏற்படுத்தப்படும் பரீக்ஷைகள் ஆராய்ச்சியின்பேரில் ஏற்பட்டவை. மாணுக்கனிடம் ராணுவ முக்கியமான குணங்களைக் கண்டுபிடிக்கக்கூடியவை. இவைகள் சுலபமானவை. சுலபமாக அறியக்கூடியவை. படிப்புக்கும் இவைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. பரீக்ஷைகளின் பெரும்பாகம் எழுத்து மூலமாக நடைபெறும் பரீக்ஷைகள் எவ்விதமிருப்பினும், ஸ்வாரஸ்யமானவை; அநேகமாக சந்தோஷகரமாகவேயிருக்கும்.

### முன்யோசனை, தைரியம், ஊக்கம்.

மாணுக்கர்கள் அதிகச் சிரமப்படவேண்டியதில்லை. அவர்கள் ஒரு சிறிய விளையாட்டில் கலந்துகொள்ளவேண்டும். இது விந்தையாக இருக்கும். இந்த விளையாட்டில் மாணுக்கனுடைய சாதுரியத்தை போர்டு மெம்பர்கள் கவனிக்கிறதில்லை. மாணுக்கனுடைய முன்யோசனை, தைரியம், ஊக்கம் முதலியவைகளை அவர்கள் பரிசீலனை செய்வார்கள்.

அங்கே வசிக்கும்பொழுது போர்டு மெம்பர்களுடன் சகஜமாகக் கலந்துகொள்ளுவார்கள். சேர்ந்து சாப்பிடுவார்கள். ஓய்வு நேரங்களிலும் மெம்பர்கள் மாணுக்கர்களுடன் சேர்ந்துகொண்டு உல்லாஸமாக வசித்துவருவார்கள்.

சாப்பாடு பாதி ராணுவ முறைப்படி நடைபெறும். அதிகமான சட்ட திட்டங்கள் கிடையாது. கிரமமான ரூல்கள் குறைவாகவேயிருக்கும். ஐரோப்பியர்களுக்கு உரித்தான சாப்பாடு வழங்கப்படும். ஆகிலும் உணவுப் பொருள்களில் மதம், ஜாதி இவைகளைப் பாதிக்கக்கூடிய ஒன்றும் சேர்க்கப்படமாட்டாது.

போர்டின் ஸிவில் உத்தியோகஸ்தர்களோடு கடற்படை, சேனை, விமானப் படையைச் சேர்ந்த ஆபீஸர்களும் கலந்துகொள்ளுவார்கள். மாணுக்கர்களின் யோக்கியதைக்குத் தகுந்தபடி அவர்களுக்கு உரித்தான படையில் அவர்கள் சேருவதற்குவேண்டிய வசதிகளும் அளிக்கப்படும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 143. (2-வது பிரிவு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24- 4-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 28- 4-43 | கொடும்பாளூர் ... | மாலை | 7.00 |
| 25- 4-43 | குடுமியாமலை ... | ,, | 7.00 | ,, | விராலிமலை ... | ,, | 7.30 |
| | பாம்பூர் ... | ,, | 7.30 | 29- 4-43 | களமாவூர் ... | ,, | 7.00 |
| 26- 4-43 | வெங்களூர் ... | ,, | 7.00 | ,, | நல்லூர் ... | ,, | 7.30 |
| ,, | கோனுபட்டு ... | ,, | 7.30 | 30- 4-43 | பனையப்பட்டி ... | ,, | 7.00 |
| 27- 4-43 | நச்சாந்துபட்டி ... | ,, | 7.00 | ,, | ராங்கியம் ... | ,, | 7.30 |
| ,, | விராச்சிலை ... | ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 144. (3-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1- 5-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை | 6.00 | 5- 5-43 | ராமச்சந்திரபுரம் ... | ,, | 7.00 |
| 2- 5-43 | கோட்டைக்காடு ... | ,, | 7.30 | ,, | ராயவரம் ... | ,, | 7.30 |
| 3- 5-43 | அன்னவாசல் ... | ,, | 7.00 | 6- 5-43 | வானரமாணிக்கம் ... | ,, | 7.00 |
| ,, | கிழக்குறிச்சி ... | ,, | 7.30 | ,, | எம்பல் ... | ,, | 7.30 |
| 4- 5-43 | குழிபிறை ... | ,, | 7.00 | 7- 5-43 | மழையூர் ... | ,, | 7.00 |
| ,, | செவலூர் ... | ,, | 7.30 | ,, | காரம்பக்குடி ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 24— 4—43 | பொன்னமராவதி. | 1— 5—43 | வெட்டன்விடுதி. |
| 25— 4—43 | எம்பல். | 2— 5—43 | கொடும்பாளூர். |
| 26— 4—43 | கொன்னையூர். | 3— 5—43 | கீரனூர். |
| 27— 4—43 | ராமச்சந்திரபுரம். | 4— 5—43 | குடுமியாமலை. |
| 28— 4—43 | காரம்பக்குடி. | 5— 5—43 | ராயவரம். |
| 29— 4—43 | கீழாநிலை. | 6— 5—43 | ஆலங்குடி. |
| 30— 4—43 | புதுக்கோட்டை. | 7— 5—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—28-4-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ மேௗ 1உ [ந. 144

பிரஸங்கம் CXLIV.

## ருஷ்ய மாரிகால யுத்தம்.

ருஷ்யத்தலைமை காரியாலயத்திலிருந்து ருஷ்ய மாரிகால எதிர்ப்பு யுத்தம் முடிவடைந்து விட்டதென்று வெளியிடப்பட்டது. ருஷ்யாவுக்குக் கிடைத்த பிரதேச லாபம் எதிரிக்கு விளைந்த மனித பல நஷ்டம், முஸ்தீப்பு நஷ்டம் பற்றியும் ஒரு விமர்சனம் செய்திருக்கிறார்கள். சிறந்த ஏற்பாட்டின் மூலமும் யுத்த தந்திரத்தின் மேன்மையாலும் இந்த வெற்றிகள் ஏற்பட்டனவென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. கிழக்குப் போர்முனை பூராவிலும் பனி உருக ஆரம்பித்துவிட்டது. எங்கு பார்த்தாலும் சகதியிருப்பதால் ருஷ்யச் சேனையும் ஜெர்மன் சேனையும் நடமாடமுடியவில்லை. இத்தருணத்தில் ஐந்தொகை போடுவது ஸாவதானமாகும். கிழக்குப் போர்முனையின் நிலைமை மாரிகால எதிர்ப்பு யுத்தத்திலிருந்து எவ்வாறு மாறுதலடைந்திருக்கிறதென்றும் நேசநாட்டாரின் இறுதி வெற்றிக்கு இந்த யுத்தம் எவ்வளவு தூரம் உதவியளித்திருக்கிறதென்பதையும் நாம் கவனிப்போம்.

ஜெர்மனிக்குள்ளாகியிருந்த பிரதேசங்களெல்லாம் நமது வசமாகி விட்டன. சென்ற வருஷம் வேனிர்காலத்தில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னிருந்த நிலைமையைவிட இப்பொழுது ஜெர்மனி மோசமான நிலைமையை அடைந்து விட்டது. ஸ்டாலின்கிராட்டுக்கும் காகஸஸுக்கும் ஜெர்மானியர்கள் முன்னேறியதையும் ருஷ்யர்கள் பின்வாங்கியதையும் சேர்த்துப்பார்த்தால், சென்ற ஒன்பது மாத யுத்தத்துக்குப் பின் ருஷ்யப் படைகளை விட அச்சுப்படைகள் பலஹீனமடைந்துவிட்டன என்று சொல்லலாம். ஜெர்மனிக்கு உதவி செய்த அயல் நாட்டுத் துருப்புகள் நிர்மூலமாகி விட்டன. உலகத்திலுள்ள மற்ற எல்லா தேசத் துருப்புகளையும்விட நவீன யுத்த முறைகளில் அதிகப்பயிற்சியும் அனுபவமுள்ள ஜெர்மன் துருப்புகளின் முக்கியமான பாகம் குறைவுபட்டுவிட்டது. சுருக்கமாகச் சொன்னால் 1942-ம் வருஷம் வேனிர்காலம் முதல் 1943-ம் வருஷம் வசந்தகாலம் வரையில் ஜெர்மனி செய்த யுத்த முயற்சி அதிக நஷ்டத்துடன் வீணாகப் போய் விட்டதென்று ஜெர்மனி பதிவு செய்து கொள்ளவேண்டியதுதான்.

இந்த விஷயமானது வருங்காலத்துக்கு முக்கியத்வமுள்ளது. அப்பொழுது ஒரு சங்கடமான காலமாயிருந்தது. ஜெர்மனியின் கால அட்டவணைப் பிரகாரம் செம்படையின் வலுபூராவும் குலைந்திருக்கவேண்டும் ஜெர்மன் படைகள் மேற்கிலும் வடக்குப்பக்கத்திலும் உண்டாகயிருக்கும் பிரிடிஷ் அமெரிக்கப்படையெடுப்பைத் தடுக்க இங்கிருந்து சென்றிருக்க வேண்டும். ஜெர்மனிக்கு இந்த ஒன்பது மாதங்கள் வீணாய்ப் போனதிலிருந்து யுத்தத்தின் போக்கு மாறிவிட்டதென்பதில் சந்தேகமில்லை.

## ருஷ்யாவின் நிலைமை.

ருஷ்யாவின் நிலைமையைப் பார்ப்போம். வடகாகஸஸிலும் டான் நதிப் பிரதேசத்திலுமுள்ள செழிப்பான தான்யம் விளையும் பிரதேசங்கள் ருஷ்யர் வசமாகிவிட்டன. வசந்த கால சாகுபடிக்கு லாயக்காகவுமிருக்கின்றன. வரும் மாரிகாலத்தில் ருஷ்யாவின் பொது மக்கள் பிழைத்திருக்கவேண்டுமானால் இந்த பிரதேசங்களை ருஷ்யர்கள் காப்பாற்ற வேண்டும். இரண்டாவதாக காகஸஸ் மலைப்பிரதேசத்திலுள்ள எண்ணெய் கிணறுகளை ருஷ்யர்கள் காப்பாற்றி விட்டார்கள். இந்த லாபமும் தற்காப்பு முறையில் கிடைத்தது தான். இந்த வேனிர் காலத்தில் ருஷ்யர்கள் யுத்தம் செய்ய வேண்டுமானால் எண்ணெய்ப் பிரதேசங்களையும் காப்பாற்றிவரவேண்டும். ஆகிலும் டானட்ஸ் நதிப்பிரதேசத்திலுள்ள நிலக்கரி, இரும்பு, பெரிய தொழிற்சாலைகளையும் மேற்கு யூக்ரேனிலுள்ள கோதுமை பிரதேசத்தையும் ருஷ்யர்கள் கைப்பற்றக்கூடவில்லை.

## கேந்திரஸ்தானங்களின் லாபம்.

ஐச்வரிய பிராப்தியைவிட யுத்த தந்திர லாபம் சம்பந்தமாக வேனிர் காலத்து நடவடிக்கைகளுக்கு ருஷ்யர்களுக்கு எவ்விதமான சௌகரியமேற்பட்டிருக்கிறது என்று பார்ப்போம். லெனின்கிராட்டின் முற்றுகை தளர்ச்சி பெற்றது. இதன் மூலம் மாஸ்கோவுக்குப் போகும் வலது பார்ச்வம் பலப்பட்டுவிட்டது. ஆகிலும் நகருக்குத் தெற்கேயுள்ள ஜெர்மன் முன்னணி ஸ்தலத்திலிருந்து ஜெர்மானியர்களை ருஷ்யர்கள் துரத்தியடிக்க முடியவில்லை. இவ்விடத்தில் ருஷ்யப் படை முன்னேறி வெற்றி பெற்றிருந்தால் பின்லாந்து வளைகுடாவுக்குச் செல்ல மார்க்கமேற்பட்டிருக்கும். கிரான்ஸ்டாட்டிலுள்ள ருஷ்யக் கடற்படையின் நடமாட்டத்துக்கு வசதி யேற்பட்டிருக்கும். இல்மென் ஏரிக்குத் தெற்கே டெமியான்ஸ்கிலிருந்த ஜெர்மன் முன்னணிப் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. ஆகிலும் ஸ்டாராயா, ரூஸா இன்னும் பிடிபடவில்லை. போன வருஷத்தில் இவ்விடத்திலுள்ள ஜெர்மன் படையை ருஷ்யர்கள் அநேகமாகச் சுற்றிவளைந்திருந்தார்கள். மாஸ்கோவுக்கு மேற்கே ர்ஷேவிலிருந்தும் வியாஸ்மாவிலிருந்தும் எதிரி பின்வாங்கிவிட்டான். அதன் மூலம் மாஸ்கோவைத் தாக்க வசதியானது ஜெர்மனிக்குக் குறைவுபட்டுவிட்டது. வெலிகிலூகியைக் கைப்பற்றியதினின்றும் அதற்கு 15 மைல்களுக்கு மேற்கேயுள்ள லெனின்கிராட்-கியவ் இருப்புப் பாதையைத்தாக்க பாய்ச்சல் ஸ்தலம் ருஷ்யாவுக்கு ஏற்பட்டுவிட்டது.

ஸ்மாலன்ஸ்க், பிரியான்ஸ்க், ஓரெல் என்னும் இடங்களை ஜெர்மானியர்கள் பலமாகக் காப்பாற்றிவருகிறார்கள். இவை மூன்றும் சேர்ந்து மாஸ்கோவுக்கு, தென்மேற்கே மிகவும் வலுவான அரண்களுள்ள ஸ்தலமாக யிருக்கின்றன. ருஷ்யர்கள் முக்கிய ஸப்ளை ஸ்தலமாகிய குர்ஸ்க் கைப் பிடித்துக்கொண்டு அதைக் காப்பாற்றிவருகிறார்கள். குர்ஸ்க்கையிழந்ததிலிருந்து மத்தியப்போர்முனையிலுள்ள ஜெர்மானியர்களுக்கும் கார்காவுக்கும் தெற்கு வெளிகளுக்கும் போகும் போக்குவரவுகள் தடைபட்டுவிட்டன.

## டானட்ஸ் பிரதேசம்.

கார்காவை ருஷ்யர்கள் இழந்ததிலிருந்து வால்காவுக்கு முன்னேற லாயக்கான பாய்ச்சல் ஸ்தலம் ருஷ்யாவுக்குப் போய்விட்டது. கார்காவின் லாபத்தினால் ஜெர்மானியர்கள் முன்னேறுவதற்கு கேந்திரஸ்தானம் ஏற்பட்டுவிட்டது. டானட்ஸ் நதியின் அடி பாகத்திலும் மத்தியபாகத்திலும் ருஷ்யர்களின் பலமான தற்காப்பு முறைகளும் இஸியம் போன்ற பாலமுனைகளை நதியின் மேற்குப் பக்கத்தில் ருஷ்யர்கள் கைவசப்படுத்தியிருப்பதும் சேர்ந்து ருஷ்யர்களுக்கு பலமான தற்காப்பு அரண்கள் ஏற்பட்டிருக்கின்றன. நதியைத்தாண்டி ஏராளமான படைபலத்தைக்கொண்டு ஜெர்மானியர்கள் முன்னேறியிருந்தால் ருஷ்யாவின் ஸ்தானங்களுக்குப் பின்னால் வடக்குபாகத்திலோ அல்லது தெற்குபாகத்திலோ முன்னேறுவதற்கு அவர்களுக்கு சௌகரியமேற்பட்டிருக்கும். ஜெர்மனி முதலில் யுத்தம் ஆரம்பித்தபொழுது இருந்ததைவிட இப்பொழுது ருஷ்யாவின் இருப்புப்பாதை சாதனங்கள் சிலாக்கியமாக யிருக்கின்றன. இப்பொழுது மாஸ்கோ



விலிருந்து வாரனேஷுக்கும் டானட்ஸ் வளைவிலுள்ள லிகாயாவுக்கும், ராஸ்டாவுக்கும், காகஸஸுக்கும் செல்லக்கூடிய இருப்பாதையும் ஸ்டாலின்கிராட்டிலிருந்து பலபாகங்களுக்குப் போகும் பாதைகளும் ஏற்பாடாகிவிட்டன. இந்த இருப்புப்பாதைகள் மறுபடியும் உபயோகத்திற்கு லாயக்காகச் செய்யப்படுவதற்கு கொஞ்சகாலம் பிடிக்கும்.

மொத்தமாகச்சொன்னால், ஒருவருஷத்துக்கு முன்னிருந்ததைவிட ருஷ்யாவின் நிலைமை யுத்த அரங்கம்முழுவதிலும் அதிகவலுவுள்ளதாக யிருக்கிறது. சென்ற வேனிர்காலத்தில் ஜெர்மனிக்குக்கிடைத்த லாபங்கள் நஷ்டமாகிவிட்டன. இதைத்தவிர ஜெர்மனியின் சிறந்த தற்காப்புகள் உள்ள சில ஸ்தானங்களை, முக்கியமாக வெலிகிலூகி, குர்ஸ்க் போன்றவைகளை ருஷ்யா கைப்பற்றிவிட்டது. ஆகிலும் ஸ்மாலன்ஸ்க், ஓரல், கார்காவ் போன்ற ஸ்தலங்களில் ஊன்றிக்கொண்டு மகத்தான தாக்குதலைச் செய்யக்கூடாதபடி ஜெர்மானியர்கள் தடைசெய்துவிட்டார்கள்.

## வேனிர்காலம் வந்துவிட்டது.

யூக்ரேன் பிரதேசத்தில் சூரியவெப்பம் உண்டாகிவிட்டது. சகதியிலிருந்து நீராவிகிளம்புகிறது. மே மாத ஆரம்பத்தில் தெற்குப்பகுதியில் பூமி காய்ந்து போய் யுத்த ஆயுதங்கள் நடமாடுவதற்கு வசதியுண்டாகிவிடும். இருதரப்பாரும் ஏராளமான படைகளைச் சேமித்துவருகிறார்களென்று தெரியவருகிறது. விடா முயற்சியுடன் அதிக நஷ்டத்துடனும் டானட்ஸின் மத்திய பிரதேசத்தில் ஜெர்மனி பலமுனைகளை ஏற்படுத்த முயற்சி செய்துவருவதிலிருந்து இந்தப்பகுதியில் முன்னேற்ற யுத்தம் துவக்க ஜெர்மனி உத்தேசித்திருக்கிறதென்று சொல்லக் கூடும். டாமன் தீபகற்பத்தில் ஜெர்மனி பலமாகத் தற்காப்பு யுத்தம் செய்து வருவதிலிருந்து காகஸஸ் பிரதேசத்தில் மறுபடியும் ஜெர்மனி யுத்தம் ஆரம்பிக்கும் என்றும் புலப்படுகிறது. ஆகிலும் ருஷ்யர்கள் கிரமியாவுக்கும், அஸாவ் கடற்கரைக்கும் வாராதபடி தடுப்பதற்காகத்தான் இந்தத் தற்காப்பு யுத்தம் நடைபெறுகிறதென்றே சொல்லவேண்டும்.

சென்ற வருஷத்தில் மாரிகாலத்தில் ஏற்பட்ட கால நஷ்டத்தை ஈடு செய்வதற்காக வேனிர் காலம் ஆரம்பித்து வெகுநாட்கள் வரையில் தங்கள் முன்னேற்ற யுத்தத்தை ஜெர்மானியர்கள் ஆரம்பிக்கவில்லை. இந்த வருஷம் அவ்விதமாகச் சும்மாவிருக்கமுடியாது. ஜெர்மனியானது செம்படையைச் சீக்கிரமாகத்தாக்க வேண்டும். மேற்குப்பக்கத்தில் நேசநாடுகளின் பயத்தை நிவர்த்திக்க டுனிஸியாவில் ரோமலின் உதவியையும் அட்லாண்டிக்கில் யூ படகுகளின் பூர்ண ஒத்தாசையையும் நம்பியிருக்கவேண்டும். இந்த விஷயங்களை பிரிடிஷ், அமெரிக்கத் தலைவர்கள் நன்றாய் அறிவார்கள். ஜெர்மனியின் புதிய கால அட்டவணையைச் சமாளிக்க அவர்களும் தயாராக இருக்கிறார்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

### 24—4—43-லிருந்து 30—4—43-வரை.

ருஷ்யா.—டானட்ஸ் பிரதேசத்திலும் குபான் பிரதேசத்திலும் ருஷ்யப் போர்முனையில் பலமான தாக்குதல்கள் நடைபெறவில்லை. ரோந்து வேலையும், வேவுபார்த்தலும், கொரில்லாச் சண்டைகளும்தான் நடைபெறுகின்றன. கூடிய சீக்கிரத்தில் சண்டை துவக்கம் செய்வதற்காக இருதரப்பாரும் முஸ்தீப்புகளைத் தயார் செய்துவருகிறார்கள். டாமன் தீபகற்பத்தின் தற்காப்புக்காக 10,000 துருப்புகளை ஹிட்லர் அனுப்பியிருக்கிறதாகத் தெரியவருகிறது. நோவாரோஸிஸ்க்குக்குள் நுழைவதற்காக ருஷ்யர்களும் ஏராளமான படைகளைச் சேமித்து வருகிறார்கள்.

இந்த வாரத்தில், ருஷ்யப் படைகள், மத்திய ஐரோப்பாவிலிருந்து ருஷ்யாவுக்குச் செல்லும் இருப்புப்பாதை மார்க்கத்தில் போலந்தில் உஸோகஸ் கணவாய் வழியாகப்போகும் முக்கியமான இருப்புப்பாதையை நாசம் செய்தார்கள்.

ருஷ்ய விமானப்படை ஏப்ரல் 20-ம் தேதி யன்று டில்ஸிட்டையும் ஏப்ரல் 23-ம் தேதியன்று இன்ஸ்டெர்பெர்க்கையும் தாக்கின. இவ்விரண்டு நாடுகளும் கிழக்கு ப்ரஷியாவிலிருக்கின்றன.

**டுனிஸியா.**—"திரப்பு வழிக்காக யுத்தம்" என்று பொருள்படும்படியாக டுனிஸிக்கும், பிஸர்ட்டாவுக்கும் போகும் மார்க்கங்களில் யுத்தம் நடைபெறுகிறது. முதல் வழியானது வடக்குக் கோடியிலிருக்கிறது. இங்கே அமெரிக்கர்கள் பலமான தற்காப்பு அரண்களுள்ள எதிரிகளுடன் போர்புரிகிறார்கள். இரண்டாவது வாசல்படி மெட்ஜஸ் எல்பாப் வழியாகச் செல்லுகிறது. இவ்விடத்தில் "லாங் ஸ்டாப்" குன்றைப் பிடிப்பதற்காக கடும்போர் நடைபெறுகிறது. மூன்றுவது பாதையானது பௌ அரடாவிலிருந்து பாண்டுபாஸுக்குச் செல்லுகிறது. இவ்விடத்தில் ஜெர்மானியர்கள் பலமான முஸ்தீப்புகளை வைத்திருக்கிறார்கள்.

ஏப்ரல் 21-ம் தேதி எட்டாம் படை என்பிடாவில்லியைப் பிடித்துவிட்டு இப்பொழுது டாக்ருனுவையும் ஜெபல் டெருனுவையும் பிடித்துவிட்டது.

இவ்வாரத்தில் கீழே கண்ட இடங்கள் பிடிபட்டன: ஜென்பல்லாட், ஸித்தி மெடியான், ஜப்பால்மன்சூர், ஆர்குப் எல் ஹெமில்லா, ஸாஹா ஆர்ஜூத், ஜெபல் கௌரினு. இன்னும் அநேக குன்றுகளும் பிடிபட்டன.

பௌ அராடாபகுதியில் நேசநாட்டுப் படைகள் அச்சு வரிசைகளைப் பிளந்து விட்டன. 8-ம் படையின் முன்னணித் துருப்புகள் பௌ பிச்சாவுக்குச் சமீபம் வந்துவிட்டன. வடக்குப்பகுதியில் ஜெபல்டான் கௌசா என்னுமிடம் தகர்க்கப் பட்டது. ஸித்தி நாஸர் பகுதியில் அச்சப்படைகள் பின்வாங்கின. ஜெபல்டான் கௌச்சாவில் அவைகள் முறியடிக்கப்பட்டன.

ஸ்பாக்ஸுக்குச் சமீபத்திலுள்ள கெர்னு தீவுகள் ஆக்கிரமிக்கப்பட்டன.

முடிவாக, நேசதேசத் துருப்புகள் அச்சுத் துருப்புகளின் வரிசைகளைப் பிளந்துவிட்டன. எதிரியின் பலமான எதிர்ப்பு இருந்தபோதிலும் நேசநாடுகள் சாவதானமாக முன்னேறுகிறார்கள்.

அச்சநாடுகளுக்கு நஷ்டம் ஏராளம். உத்தியோக முறையில் வெளியிட்டபடி ரோமலுக்கும் ஆர்னிமுக்கும் தங்கள் படைகளில் ஜனவரி 1-ல் தேதி முதல் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி வரையில் 66,000 மனிதர்கள் கொல்லப்பட்டோ காயம்பட்டோ, கைது செய்யப்பட்டோ, நஷ்டமாகிவிட்டதென்றும் இதைத் தவிர 250 டாங்கிகள், பிடிபட்டும் நாசமாகிவிட்டதென்றும், 34 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதென்றும், 108 கப்பல்கள் நாசமாகிவிட்டதென்றும், 3000 வண்டிகளும், 425 பீரங்கிகளும், 1,000 விமானங்கள் நாசமாகியும், பிடிபட்டும் போய் விட்டன, என்றும் தெரியவருகிறது.

**பஸிபிக் யுத்தம்.**—நியூ கினியாவில் வேவாக் என்னுமிடத்தில் ஜப்பானியர்கள் ஏராளமான பலமான துருப்புகளைக் குவித்துக்கொண்டு ரபாலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது தளம் ஏற்படுத்தி வருகிறார்கள். மூபோ பிரதேசத்தில் அடர்ந்த காடுகள் உள்ள பிரதேசத்தில் ஆஸ்திரேலியத் துருப்புகளுக்கும் ஜப்பானியப் படைகளுக்கும் சண்டை நடைபெற்று வருகிறது.

ஆஸ்திரேலியாவுக்குப் போகும் வழியிலுள்ள எல்லிஸ் தீவுகளில் ஒன்றான பூனு பூட்டித் தீவுகளை நேசநாட்டுத் துருப்புகள் ஆக்கிரமித்துவிட்டன.

சென்ற வாரத்தில் கீழ்க்கண்ட இடங்களில் விமானத் தாக்குதல்கள் ஏற்பட்டன.

**ஏப்ரல் 18.**—முண்டா (108-வது தடவை), கிஸ்கா (சென்ற இரண்டு மாதங்களில் 124-வது தடவை).
**ஏப்ரல் 19.**—கீடா, காகிலி, டாரேனுலி, கிஸ்கா.
**ஏப்ரல் 20.**—முண்டா, கிஸ்கா.
**ஏப்ரல் 21.**—அலெக்ஸாண்டர் முனை, போபாராங் தீவு, பூயின், காஹ்ன்.
**ஏப்ரல் 22.**—டிமிகா, சைமரு, டோடோ, டோகல், ஸம்மலாகி, லாகி, உபிலி, காஸ்மாடா, நாரு, கிஸ்கா, முண்டா, விலா, காகிலி, ரிகாடா விரிகுடா.



**ஏப்ரல் 23.**—நூபியா, கைரிங், வெயிலோடோ, டொடோ, நாஸாவிரி குடா.
**ஏப்ரல் 24.**—முண்டா, கிஸ்கா.
**ஏப்ரல் 25.**—முண்டா, கோலம்பாங்காராத் தீவுகள்; லுங்கா முனை.
**ஏப்ரல் 26.**—வேவாக், மாபிங், ஸைடார், பின்ஷ்ஷாபென், மூபா, டிமிகி, திராங்கன் தீவு. டொகால்.

**ஏப்ரல் 20**-ம் தேதியன்று ஜப்பானியர்கள் குடால்கனூர் தீவைத் தாக்கினார்கள்.

**சைனு.**—ஸினியாங்குக்குச் சமீபத்திலுள்ள ஜப்பானியத் தளங்களை சீனர்கள் தாக்கினார்கள். லங்க்ஷான், இச்சாங், போஷுங், சுவர்டேர் முதலிய இடங்களில் ஜப்பானின் தாக்குதலைத் தடுத்தார்கள். டியன்போஷனைக் கைப்பற்றினார்கள். கிலக்கரிப் பிரதேசமாகிய ஹோனனில் கடும் போர் நடைபெறுகிறது.

ஜப்பானியர்கள் ஸிங்ச்வானைப் படித்துக்கொண்டு ஸின்ஷியனுக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்கள்.

**பர்மா.**—டாங்க்மா, இண்டின், டிஸ்வீ, டான்பெக்கு முதலிய இடங்களிலிருந்து பின்வாங்கி, மாயூ நதிக்கு கிழக்குக்கரையில் மாயூ தீபகற்பத்தில் புதிதான ஸ்தானங்களை பிரிடிஷ், இந்தியத் துருப்புக்ள் கைப்பற்றிக்கொண்டன. எதிராளி கபடமாய் முன்னேறுவதைத் தடுப்பதற்கும் மழைகாலத்தில் பத்திரமான ஸ்தலங்களில் தங்குவதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. மாயூ நதியிலிருந்து கடற்கரைக்கு அடிக்கடி ரோந்துகள் போய்க்கொண்டு இருக்கின்றன. மாயூநதி பிரதேசத்துக்கு ஜப்பானியர்கள் அதிகத் துருப்புகள் கொண்டுவருவதை பர்மாவிலுள்ள கடற்படையும் இந்தியக் கடற்படையும் தடுத்துவருகிறார்கள். நதியில் பத்திரமாக நடமாடுவதற்காக எதிரி நதிக்கரைக்கு பீரங்கிகளைக்கொண்டு வந்து ஸ்தாபித்திருக்கிறான். சிண்ட்வின் நதியின் அடிபாகத்தில் ரோந்து செய்யும் நேசதேச ரோந்துப்படைகளும் ஸான்பிராபமிலுள்ள காசின் படைகளும் எதிரிக்கு ஏராளமான நஷ்டம் விளைவித்திருக்கின்றன.

சென்ற வாரத்தில் கீழ்க்கண்ட பிரதேசங்களை நேசதேச விமானப்படை தாக்கியது.

**ஏப்ரல் 19.**—மெயிக்டிலா.
**ஏப்ரல் 20.**—அக்யாப் ஜில்லாவில் ஸ்தலங்களும், கட்டடங்களும், டாங்கட், தாழி.
**ஏப்ரல் 21.**—பாங்காக், ரெங்கூன், ஸின்லாமாங், நாபா.
**ஏப்ரல் 22.**—மெயின்கியாங், ரெங்கூன், ஷாட்ஸப், மாண்டலேக்கருகிலுள்ள இருப்புப்பாதைகள்.

**ஏப்ரல் 20**-ம் தேதியன்று ஜப்பானியர்கள் இம்பால் பிரதேசத்தைத் தாக்கி, சொற்பச் சேதமும், சில ஆள் சேதமும் விளைவித்தார்கள். எதிரியின் ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது, அநேக விமானங்கள் பழுதுபட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**18—4—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

**பகல்.**—கப்பற்கட்டும் துறைகள்—டியப் (Dieppe).

இங்கிலீஷ் கால்வாய் (ஒரு விரோதி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

**விரோதி கப்பல்கள்.**—டச்சுக்கடற்கரை.

**விமான நிலயங்கள்** பிரான்ஸிலுள்ள பாய் (Poix), கோர்ட்ரை (Courtrai).

**இரவு.**—**ரயில்வே இலக்குகள்**—ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம்.

**நாசகாரிகள்.**—லோரியன்ட் (Lorient) (1 நாசகாரி மூழ்கிற்று).

**டுனிஸியா (Tunisia),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

**விமானச் சண்டைகள்.**—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian Channel).

(77 விரோதி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**விரோதி விமான நிலயங்கள்.**—டுனிஸியா (Tunisia).

**விமான ஸ்தலங்கள், விமான நிலயங்கள்.**—ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ (Palermo).

ஸிஸிலியிலுள்ள கடேனியா (Catania).

**விமான நிலயம்.**—ஸார்டினியா (Sardinia).

கப்பல்கள், துறைமுகப் படைகள்.—ஸார்டினியாவிலுள்ள போர்டோ டோர்ரிஸ் (Porto Torres).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள க்ளாஸ்டர்முனை (Cape Gloucester).

நகரம், விமான நிலயம்.—பின்ஸ்ஷாபென் (Finschhafen).

விமான நிலயம்.—டிமோரிலுள்ள கொபேங் (Koepang).

ஜப்பானிய ஸ்தானங்கள்.—ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

இருப்புபாதை பாலம்.—பர்மாவிலுள்ள பாசங்டாங் (Pazungdaung).

ரயில் வண்டி.—பர்மாவிலுள்ள தைபாகா (Taihpaga).

**19—4—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

போக்குவரத்து லக்ஷியங்கள், மின்சார, நிலயம்.—வடக்கு பிரான்ஸ்.

ராணுவ இலக்குகள்.—பெல்ஜியம் (Belgium) நேச நாடுகளுக்கு நஷ்டம் ஏதும் இல்லை).

இரவு.—போக்குவரத்து லக்ஷியங்கள்—பிரான்ஸ், வடமேற்கு ஜெர்மனி.

எதிரிக் கப்பல்கள்.-கால்வாய் (2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானச் சண்டைகள்.—டூனிஸியா கரை (20 விரோதி விமானங்கள் நாசமாக்கப் பட்டன).

விமான நிலயங்கள்.-டூனிஸியா (Tunisia).

கடற்றுறை—கப்பல்கள் டூனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியப்படைகள்.—பொகெய்ன்வில்லியிலுள்ள கிட்டா (Kieta), அலூஷியனிலுள்ள கிஸ்கா.

ஜப்பானிய விமான நிலயம்.—காஹிலி (Kahili).

கப்பல்கள். — பொகெய்ன்வில்லியிலுள்ள டோனெலெய் (Tonolei) துறைமுகம்.

ஜப்பானிய தளம்.-டிமோரிலுள்ள கொபாங் (Koepang).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—தென் மேற்கு பஸிபிக் (S. W. Pacific).

ஸப்ளை தளம்.—நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak).

ரயில்வே பாலங்கள்.—பர்மாவிலுள்ள மித்கினு (Myitkyina), நாம்டி (Namti).

ரங்கூன் (Rangoon).

**20—4—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.-ரயில்வே லக்ஷியங்கள்-பொலோன் (Boulogne).

கப்பல் கட்டும் துறைகள்.—பிரான்ஸிலுள்ள செர்பார்க் (Cherbourg).

தொழிற்சாலைகள்.—ஸீபாக் (Zeebrugge) (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

இரவு.—பேர்லின் (Berlin) (ஜெர்மனியின் தலைநகரம்).

பால்டிக் துறைமுகம்.—ஜெர்மனியிலுள்ள ஸ்டெட்டின் (Stettin).

ஹெயின்கேல் தொழிற்சாலை (Heinkel) ராஸ்டாக் (Rostock) (31 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

நீராவி யந்திரங்கள்—படகுகள்.—பிரான்ஸ் (France), லோ (Low), கௌன்ட்ரீஸ் Countries), வடமேற்கு ஜெர்மனி (North West Germany).

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விரோதி விமான நிலயங்கள், சைனியங்கள்.—டூனிஸியா (Tunisia).

விமானத் தாக்குதல்கள்.-முன்னேறித் தாக்கும் பிரதேசங்கள்.

விமானச் சண்டைகள்.—டூனிஸ் குடா (Gulf of Tunis) (2 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

எதிரி விமான நிலயங்கள்.—டூனிஸ் (Tunis).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda).

ஜப்பானிய தளம்—ஆஸ்திரேலியாவின் வடக்கிலுள்ள தீவுகள்.

ஜப்பானியப் படைகள்—பர்மாவிலுள்ள மாயு மலைகள் (Mayu hills) தாங்டட் (Thawngdut).



எதிரி போக்குவரத்து சாதனங்கள்—பர்மாவிலுள்ள அக்யாப் ஜில்லா (Akyab).

விமான நிலயம்—மெயக்டிலா (Meiktila) விற்கு அருகில்.

பர்மாவிலுள்ள இம்பால் (Imphal) பிரதேசம்.

இருப்புபாதை—பர்மாவிலுள்ள தாஸி (Thazi).

**21—4—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி சைனியங்கள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரி விமான நிலயங்கள்—டூனிஸியா (Tunisia).

கப்பல்கள், துறைமுக ஸ்தாபனங்கள்—ஸார்டினியாவிலுள்ள கார்லோ போர்ட் (Carlo Forte).

கப்பல் கட்டும் துறைகள்—டூனிஸ் (Tunis), பிஸெர்ட்டா (Bizerta).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்—டச்சு நியூ கினியாவிலுள்ள டிமிகா (Timika), கெய்ம்னு (Kaimna).

ஆரோதீவிலுள்ள டோடோ (Dodo).

கை தீவிலுள்ள டோகால் (Tocal).

டெனிம்பரிலுள்ள ஸாம்மாலகி (Sammalaki).

டிமோரிலுள்ள லாகி (Lagi).

விமான நிலயங்கள்—நியூ பிரிடனிலுள்ள யுபுலி (Ubili), காஸ்மாடா (Gasmata).

ஜப்பானியச் சைனியங்கள்-பொகெய்ன்வில்லி (Bougainville) பிரதேசம், அலெக்ஸாண்டர் முனைக்கருகில் (Cape Alexander). ஷார்ட் லண்ட்ஸ்லுள்ள போபோரங் தீவு (Poporang).

எதிரி கப்பல்-பூயின் பிரதேசம் (Buin).

நாரு (Naru) தீவு.

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), தாய்லாந்தின் தலைநகர் பாங்காக் (Bangkok).

எதிரி ஸ்தாபனங்கள்—பர்மாவிலுள்ள ரங்கூன் (Rangoon).

இருப்புப் பாதை—பர்மாவிலுள்ள மேமியோ (Maymyo)

எதிரி ஸ்டோர்கள், சேனைகள்-பர்மாவிலுள்ள கமாய்ங் (Kamaing) ப்ங்கின்ஸப் (Hpunginzup).

**22—4—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே இலக்குகள்—ஆக்கிரமிக்கப் பட்ட ஐரோப்பா.

இரவு.—சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

கிழக்கு ருஷ்யாவிலுள்ள, இன்ஸ்டர்பர்க் (Insterburg).

போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி நேபிள்ஸிற்கு அருகிலுள்ள போஸ்ஸௌலி (Pozzuoli).

டூனிஸியா (Tunisia).
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி போக்குவரத்துகள் விமான நிலயங்கள்.—டூனிஸியா (Tunisia).

எதிரி சைனியங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

போக்குவரத்துகள்.—டூனிஸியாவிலுள்ள மெட்டியூர் (Mateur) (8 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

2 மோட்டார் வண்டிகள்.—ஸிஸிலி (Sicily).

கடல் விமான தளம்.—ஸிஸிலியிலுள்ள ஸிராகுஸ் (Syracuse).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

பீரங்கி வைப்புகள்.—நியூ கினியாவிலுள் நுபியா (Nubia).

விமானச் சண்டைகள்.—நியூ ஐயர்லாந்திலுள்ள காவியங் (Kauieng) டெனிம்பர் தீவிலுள்ள வெய்லோடோ (Wailoetoe).

ஸப்ளை பிரதேசம்.—ஆரோதீவிலுள்ள டோபோ (Dobo).

நாருகுடாவிலுள்ள லாபாபியா (Labebia).

ஜப்பானியச் சைனியங்கள்.—ஸாலமன்ஸிலுள்ள முண்டா.

கோலம்பங்காரத்தீவிலுள்ள விலா (Vila), ஷார்ட்லெண்ட்ஸ் தீவிலுள்ள காஹிலி (Kahili).

விரோதி லக்ஷியங்கள்.—ரங்கூன் (Rangoon) பிரதேசம்.

பர்மாவிலுள்ள திலாவா (Thilawa) எண்ணெய்க் கிடங்கு.

ரயில் ரோட் தளம்.—மால்வோகன் (Mahlwagon).

பர்மாவிலுள்ள ஷாடுஷப் (Shaduzup).

சாமான் கிட்டங்கிகள், ரயில் பாதைகள்.—மாண்டலே (Mandalay).

**23—4—43.** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

எதிரி போக்குவரத்து சாதனங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவில் தரையிலும் கடலிலும், வடமேற்கு ஜெர்மனி.

E படகுகள்; பாதுகாக்கப்பட்ட வண்டிகள் ஹாலந்து (Holland).
இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

டுனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி தரை சைனியங்கள்.—யுத்த நடக்கும் பிரதேசங்கள்.
விமான நிலயங்கள்.—டுனிஸ் (Tunis) பிரதேசம்.
விமானத் தாக்குதல்கள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
கப்பல் கட்டும் துறைகள்.—பிஸெர்ட்டா (Bizerta).
எதிரி வண்டிகள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
விமான நிலயங்கள், முக்கியமான ஜங்ஷன்கள்.—ஜெர்மனி (Germany).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானி வியாபாரக் கப்பல்.—கேவியங் (Kavieng) (கப்பல் மூழ்கிற்று).
ஜப்பானியச் சைனியங்கள்.—ரெகடாகுடா (Rekata Bay).
அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
ஜப்பானுல் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்கள்.—பர்மாவிலுள்ள மேல சிண்ட்வின் (Upper Chindwin), பின்பான் (Pinbon).
ஒரு ஸ்டீமர்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe).
ஜப்பான் நதிப் போக்குவரத்து.—பர்மாவில்.

**24—4—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தொழிற்சாலைகள்—மேற்கு ஜெர்மனி (Germany).
இரவு.—கடற்படை தளம்—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).
தொழிற்சாலைகள்.—மேற்கு ஜெர்மனி.

டுனிஸியா (Tunisia),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி சைனியங்கள் மோட்டார் போக்குவரத்துகள்.—டுனிஸியா (Tunisia).
எதிரி விமான நிலயங்கள்.—டுனிஸியா (Tunisia).
கப்பல் கட்டும் துறைகள்.—பிஸெர்ட்டா (Bizerta).

ருஷ்யா (Russia).

(17—4—43 முதல் 24—4—43 வரை முடியும் வாரத்தில் ருஷ்யர்கள் விமான நஷ்டம் 134, எதிரிவிமான நஷ்டம் 381).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
ஜப்பான் ஆக்கிரமித்த தளம்.—ஸெலிபஸ் (Celebes) தீவு.
எதிரி தளங்கள், விமான நிலயம்.—ஆஸ்திரேலியாவின் வடக்கு.
விமான நிலயங்கள்.—பர்மாவிலுள்ள மெய்க்டிலா (Meiktila).
ரயில்வே ஜங்ஷன்கள்.—பர்மாவிலுள்ள வுந்தோ (Wuntho).
லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள மேல் சிண்ட்வின் (Chindwin), மாயுநதிப் பிரதேசம் (Mayu).
ஹேஹோ (Heho) விமான நிலயம்.
எண்ணெய்க் கிடங்குகள்.—பர்மாவிலுள்ள யெனங்யாங் (Yenangyaug).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**19—4—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கரை.

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜிரியாவிலுள்ள அல்ஜியர்ஸ் (Algiers).

ருஷ்யா (Russia).

லெனின்கிராட் (Leningrad).

தூரக்கிழக்கு (Far East).

விமானச்சண்டை.—ரூக் (Rooke) தீவுக்கருகில் (1 ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**20—4—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்—(சொற்ப சேதம்).

வட ஆபிரிக்கா (North Africa).

முன்னேறித்தாக்கும் பிரிடிஷ் 1-ம் படை—டுனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

லெனின்கிராட் (Leningrad).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடல்கனார் (Guadalcanar).

**21—4—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia).

பிரிடிஷ் 8-ம் படை.—என்பிடாவில்லி (Enfidaville) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

லெனின்கிராட் (Leningrad) பிரதேசம்.



தூக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள கூடல்கனார் (Guadalcanar).

**2—4—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia).

விரோதி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்.—அரண்களுக்குப் பின்னால்.

**3—4—43** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

தெற்கு தென் மேற்கு இங்கிலாந்து.
தெரிந்த இடங்கள்.—மேற்கு மிட்லாண்ட்ஸ் (Midlands).

டுனிஸியா (Tunisia).

விமானச் சண்டைகள்.—டுனிஸியக் கடற்கரை முழுதும்.

தூக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்.—மாயூ (Mayu) தீபகற்பம்.

**24—4—43** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென்கரையிலும், கிழக்கு கரையிலும்.
வடகிழக்கு கடற்கரை நகரம்.—ஸ்காட்லாந்து (Scotland).

டுனிஸியா (Tunisia).

விமானச் சண்டைகள்.—டுனிஸியாவின் கடற்கரை முழுதும்.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் போக்குவரத்துகள்.—ருஷ்ய அரணுக்கு பின்னால்.

**25—4—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain). ஒரு தகவலும் இல்லை.

டுனிஸியா (Tunisia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஹிட்லரின் 54-வது பிறந்த தினக் கொண்டாட்டம்.** ஏப்ரல் 20-ம் தேதியன்று ஹிட்லரின் 54-வது பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெற்றதில் விசேஷமொன்றுமில்லை. வரவேற்புகள் ஒன்றுமில்லை. வைபவங்களும் நடைபெறவில்லை. யதேச்சாதிகாரியின் கம்பீரமான பேச்சு நின்று போய்விட்டது. அவனுடைய சகாக்கள் அனுப்பிய பிறந்த நாள் செய்திகள் சந்தோஷத்தை அறிவிக்காமல் துக்கப்பிரசன்னம் செய்வது போலிருந்தன. கோயபல்ஸ் சொல்லுகிறார்: "இப்பொழுது மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருப்பதை ஹிட்லர் திடபுத்தியுடன் சமாளித்துவருகிறான். சந்தேகாஸ்பதமான மனப்பான்மையையும் சச்சரவுகளையும் ஒழிக்கவேண்டும். யுத்தத்தில் நம்பிக்கையான மனப்பான்மைதான் அவசிய சாதகம். இதில் குறைவு ஏற்பட்டால் யுத்த முடிவுக்கு ஆரம்பமாகிவிடும். யுத்தமானது நான்காவது வருஷத்தில் ரொம்பவும் கஷ்டமான நிலையை அடைந்துவிட்டது. இதன் பளுவையும் கஷ்டங்களையும் நிவர்த்திக்கவோ அல்லது தவிர்க்கவோ மார்க்கம் தோன்றவில்லை." கோயரிங்கின் பாட்டும் அதேமாதிரிதான். "வெற்றி பெறுவதா, அல்லது அழிவுபெறுவதா என்பதுதான் முக்கியமான பிரச்னை. ரொம்பவும் கஷ்டப்படவேண்டியதும், அதிக பிரயாசை எடுத்துக்கொண்டு யுத்தத்தை முடிவு பண்ண வேண்டியதுமான தருணம், நமது தேசத்துக்கும் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜெர்மானியருக்கும் வந்துவிட்டது."

வி வி வி வி வி வி வி

**நவீன பிராங்கென்ஸ்டீன்.** கொடுமை மிகுந்த வாழ்நாட்களுள்ள ஹிட்லரின் ஜீவசரித்திரத்தை நோக்கும்கால், கட்டுக்கதையில் நாம் அறிந்த பாஸ்டு போன்ற கோரமான ரூபங்களின் ஞாபகம் வருகிறது. முக்கியமாக மிஸஸ் ஷெல்லியின் அதிக கல்பனையின் உருவான பிரான்கென்ஸ்டீனின் ஞாபகம் வருகிறது. அவன் ஒரு பிசாசு போன்றவன். மாதாக்கோவில் புதைகுழிகளிலுள்ள சவங்களின் பாகங்களிலிருந்தும் ஆஸ்பத்திரியிலுள்ள பரிசோதனை அறைகளிலிருந்தும் எடுத்த பாகங்களைக்கொண்டும் ஒரு பூதத்தை உண்டாக்கி, ஜீவனில்லாத பிசாசுக்கு மின்சாரசக்தியைக்கொண்டு

ஜீவன் உண்டுபண்ணினுன். கடைசியில் அதுவிஷமப் பிசாசாக மாறி, சிருஷ்டி கர்த்தாவையே அழிப்பதற்குத் துணிந்ததாம். இவை கட்டுக்கதை. ஹிட்லரின் வாழ்நாட்களின் சரித்திரம் அதிவிசித்ரமாகயிருந்தாலும், உண்மையாகவிருக்கிறது. பிரான்கென்ஸ்டீனுடைய பிசாசைவிட ஹிட்லரின் நாஸிக்கொள்கை கோரமானது. அதில் கொலையின் துர்க்கந்தமும், பலவந்தப் புணர்ச்சியும் கொள்ளையிடுவதும் நிரம்பியிருக்கின்றன. இந்தக் குற்றங்களை பான்ஸர் டிவிஷன்களின் சக்தியையும் யூ படகுகளின் அட்டூழியங்களையும் லாபமாகக்கொண்டு நடத்திவருகிருன். பிரான்கென்ஸ்டீனுக்கு ஏற்பட்ட கதிதான் ஹிட்லருக்கும் கிடைக்கப் போகிறது. அவன் சிருஷ்டி செய்த பூதமே அவனை அழித்துவிடப்போகிறது. அவன் நாசம் செய்த உலகமே அவனை அழித்துவிடப்போகிறது. நான் கல்பனையாகச் சொல்லவில்லை. அல்லது மிகையாகவும் சொல்லவில்லை. ஹிட்லரைப்பற்றி வியாக்யானம் எழுதும்பொழுது ராஜ தந்திரியான மிஸ்டர் கார்டல் ஹல், ஹிட்லரை நீரோவுக்கும், காலிகுலாவுக்கும், ஆட்டிலாவுக்கும் ஒப்பிட்டு, அவனிடம் பிசாசுத்தனமும் கொடுமையும் ஒன்றுபட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிருர்.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லர் செய்த குற்றங்கள்.** ஹிட்லர் சமீபத்தில் செய்த அக்கிரமங்கள் மிகவும் கொடூரமானவை. இந்த வாரத்தில் யுத்தக் கைதிகளுக்கு விலங்கு போடவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். ருஷ்யாவில் நடைபெறப் போகும் யுத்தத்தில் விஷ வாயுப் பிரயோகம் செய்வதாக ஹிட்லர் உத்தேசித்து விட்டானென்று பிரிடனுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. பிறந்த தினக்கொண்டாட்ட விழாவன்று போலந்திலுள்ள ரகசியமான ஒலிபரப்பு நிலயமான "ஸ்விப்பார்" என்னும் இடத்திலிருந்து, வார்ஸாவில் பிடிபட்டவர்களில் பாக்கியிருந்த 35 யூதர்கள் கொலை செய்யப்பட்டதாகவும் வார்ஸா தெருக்களில் வேட்டுச் சத்தமும் கொலை செய்யப்படும், ஆண், பெண், குழந்தைகளின் கூக்குறலும் கேட்கின்றன.

ஹிட்லர் விளைவித்த கொடுமைகளில் யூதர்களுக்குச் செய்ததுதான் மிகவும் அக்கிரமமானது. யூதர்களில் பெரிய மேதாவிகளும், சாஸ்திர நிபுணர்களும், உலகத்திலேயே பெரிய சித்திரம் எழுதுகிறவர்களும் இருக்கிருர்கள். இவர்களுக்கு இக்கதி தகாதது. ஆக்கிரமிப்பு நாடுகளின் ஸ்திதியைப் பற்றித் தகவல்களைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நேசநாட்டுக் கமிட்டி இந்த வாரத்தில் வெளியிட்ட ரிபோர்ட்டிலிருந்து 1939-ம் வருஷம் முதல் 2 மிலியன் யூதர்கள் கொலை செய்யப்பட்டார்களென்றும் இன்னும் 5 மிலியன் யூதர்கள் கொலை செய்யப்படுவார்களென்றும் தெரியவருகிறது. வில்னு என்னும் நகரத்தில் 50,000 பேர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ரௌனுவில் 14,000மும் லௌவில் உள்ள ஜனங்களில் 50 சதவிகிதமும், போலந்தில் 1 மிலியன் ஜனங்களும் கொல்லப்பட்டார்கள். கணக்குகள் அபரிமிதமாகயிருக்கின்றன. கொடுமை முறைகள் கோரமானவை. சாஸ்திர முறைப்படி என்று சொல்லப்படுகிறது. மனிதர்களை ரெயில்வே சாமான் வண்டிகளில் அடைத்து நிற்கும்படி செய்து, வண்டிகளை மூடிப் பூட்டிவிடுகிறது. பாராவுடன் புதைகுழிகளிருக்கும் இடங்களுக்குக் கொண்டுபோகிறது. வாகனின் தரைபரப்பில் சுண்ணும்பும் குளோரினும் பரப்பிவைத்துவிடுகிறது. குளோரினுடைய விஷப் புகையினல் மூச்சடைத்துப் போன மரித்துப்போனவர்கள் கீழே விழாமல் நின்று கொண்டே இருந்தார்கள். சிலருக்கு பிராணண் போய்க்கொண்டும் சிலர் அவஸ்தைப்பட்டுக் கொண்டுமிருந்தார்கள். பிரயாண காலத்தில் உயிர் துறக்காதவர்கள் குறிப்பிட்ட இடம் போய்ச் சேர்ந்தவுடன் மின்சார சக்தி மூலமாய்க் கொல்லப்படுகிருர்கள். சவங்களை ஒரே குவியலாகப் புதைத்து விடுகிருர்கள். "புல்டோகர்ஸ்" என்று சொல்லக்கூடிய யந்திரங்களின் உதவியால் இந்த வேலை துரிதமாகச் செய்யப்படுகிறது.

ஏப்ரல் 24-ம் தேதி வெளி வந்த ரெட்ஸ்டார் பத்திரிகையில் ஸ்மாலென்ஸ்க்கில் விஷ வாயுள்ள மோட்டார் லாரிகளில் 1,500 யூதர்களை அடைத்துக் கொலை செய்யப்பட்டதென்று வெளியிடப்பட்டிருக்கிறது.



**ஜப்பானியப் பிசாசு.** இவ்விதமான கோரச் செய்கைகளில் ஜப்பான் தன்னுடைய ஐரோப்பாவிலுள்ள சகாக்களையும் மீறிவிட்டான். கொடுமைகளில் அதிக்கிரமிக்காவிட்டாலும் துரோகத்திலும் கபடமான செய்கைகளிலும் ஜப்பானின் திறமையைக் காட்டிவிட்டது. மஞ்சூரியாவிலும், கொரியாவிலும், பார்மோசாவிலும், சைனுவிலும், ஜப்பானியர்கள் செய்த அக்கிரமங்களைப்பற்றி நான் பேசவில்லை. இவைகள் வெகு நாட்களுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சிகள். சமீபகாலத்தில் டோகியோவைத் தாக்கியபொழுது ஜப்பானியரிடம் அகப்பட்ட விமானிகளுக்கு நேர்ந்த கதியைப்பற்றிச் சொல்லுகிறேன். அவர்கள் பேரில் முதலில் அவர்கள் மனதார பொது ஜனங்கள் பேரிலும், ராணுவ முக்கியத்வமில்லாத ஸ்தலங்கள் பேரிலும் வெடி குண்டுகளை வீசினுர்களென்ற குற்றம் சாட்டப்பட்டது. பிற்பாடு கொடுந்துன்பம் விளைவித்து குற்றங்களை ஒப்புக்கொள்ளும்படியாக அவர்கள் செய்யப்பட்டார்கள்.

ஜப்பானியர்களின் நடவடிக்கையை ஹிட்லர் ஆமோதித்து இது அவனுக்கு ஒரு படிப்பினை என்று சொன்னதும் பொருத்தமேயாகும்.

வி வி வி வி வி வி வி

**ரெங்கூனைத் தாக்கிய கொடுமை.** ரெங்கூனை ஜப்பானிய விமானிகள் தாக்கியதைப் பற்றி மேன்மை தங்கிய பர்மா கவர்னரான ஸர் ரெஜினல்ட் டார்மான் ஸ்மித் கீழ்க்கண்ட பிரசுரத்தை வெளியிட்டிருக்கிருர்.

"1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 23-ம் தேதியன்று ஜப்பானியர்கள் இறக்கமன்னியில் ரெங்கூனைத் தாக்கியதை நான் ஒரு பொழுதும் மறக்க மாட்டேன். அன்று ஜப்பானிய விமானிகள் மனதார 2,000 பொதுஜனங்களைக் கொலை செய்துவிட்டார்கள். அவர்களில் பெரும்பாலோர், இந்தியர்கள். இந்தியர்களின் அபிவிருத்தியை ஆதரிப்பதாக ஜப்பான் இப்பொழுது சொல்லி வருகிறது. ஜப்பானுக்கு மனிதர்களிடமுள்ள அன்புக்கு இறந்த 2,000 இந்தியர்களுக்கு ஏற்பட்ட ஹானியே சான்ருகும். ஜப்பானியர்கள் வெடிகுண்டு வீசுவதில் திறமையுள்ளவர்களென்று காண்பித்துவிட்டார்கள். குறிதப்பாமலும் அவர்கள் அடித்தார்கள். இதிலிருந்தே ரெங்கூனிலும், பர்மாவிலும் பொது மக்களின் பேரில் ஜப்பானியர்கள் குண்டு வீசியது மனதாரவும் அக்கிரமமாகவும் செய்யப்பட்டதென்று தான் சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட ஜப்பானியர்கள் தான் மற்றவர்களின் குற்றங்களைப் பரிசீலனை செய்யப்போகிருர்களாம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியர்கள் சிகிந்சைக்காக உபயோகப்படும் கப்பல்களைத் தாக்குகிருர்கள்.** ஜப்பானின் அக்ரமச் செய்கைகளுக்கு உதாரணங்கள் அநேகமிருக்கின்றன. கல்கத்தாவிலுள்ள அகில இந்தியா ஒலிபரப்பு நிலயத்திலிருந்து ஒரு ஆஸ்பத்திரிக் கப்பலின் காப்டனும், மாலுமிகளும் அவர்களுடைய கப்பலை ஜப்பானிய வெடி விமானங்கள் வெடி குண்டுகளால் தாக்கி நாசம் செய்துவிட்டன என்று வெளியிட்டார்கள். அந்தக் கப்பல் நங்கூரம் பாய்ச்சப்பட்டு சல்லடைக் கண்ணுகத் துளைக்கப்பட்டிருக்கிறது. மாரிகாலத்தில் மாங்க்டாவிலிருந்து சிட்டகாங்குக்கு இந்தக் கப்பலில் நோயாளிகள் சென்ருர்கள்.

அச்சுநாடுகள், கிழக்கு திசையிலும், மேற்கு திசையிலும் எல்லாவிதமான படகுகளையும் இறக்கமன்னியில் கொளுத்திவிட்டார்கள். அவர்கள் போக்கிரிகள், உலகப்ரஷ்டர்கள்.

வி வி வி வி வி வி வி

**மிஸ்டர் சர்ச்சிலின் செய்தி.** இந்தக் கொடுமைகளைக் கண்டு நேசநாட்டார்கள் நடுக்க மடையவில்லை. குற்றவாளிகளை ஒழித்துவிடவேண்டுமென்ற தீர்மானம் அதிகரித்துவிட்டது. அமெரிக்க விமானப்படை தலைவரான ஜெனரல் ஆர்னுல்டுக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு செய்தி விடுத்திருக்கிருர்.

'உங்களுடைய விமானிகளை இறக்கமன்னியில் ஜப்பானியர்கள் கொலை செய்துவிட்டதைக் கேட்டு எனக்குக் கோபம் உண்டாகியிருக்கிறது. கொடூரமானதும் அசம்பாவிதமானதுமான இந்தச் செய்கையை பார்க்கும்பொழுது ஆயுத உற்பத்திசாலைகளுக்கும் மற்ற ராணுவ முக்கியத்துவம் பொருந்திய லக்ஷியங்களுக்கும் வெடி குண்டுகளால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் கண்டு ஜப்பானியர்கள் திடுக்கிடுகிறார்களென்று நன்றாக வெளியாகுகிறது.

நான் தங்களுக்கு ஒரு செய்திவிடுக்கிறேன். டோக்கியோவையும் ஜப்பானுடைய இதர நகரங்களையும் வெடி விமானங்களால் தாக்கி, கொடுமையும் பேராசையும் நிறம்பிய ஜப்பானியர்கள் நாகரீகம் பொருந்திய நாடுகளைத் தொந்தரவு செய்யாமலிருக்கும்படி பலஹீனப்படுத்துவதில் அமெரிக்க விமானிகளோடும், பிரிடிஷ் விமானப்படையும் தோளோடுதோள் நின்று வேலை செய்யும் காலம் வந்துவிட்டது.

'இந்த வேலையில் பிரிடிஷ் விமானப்படை விசேஷப்பங்கு எடுத்துக் கொள்ளும். எவ்வளவுகாலம் பிடித்தாலும் அமெரிக்க பிரிடிஷ் விமானப்படைகள் ஏகோபித்து வேலையைப் பூர்ணமாகச் செய்துமுடித்துவிடும்.'

வி வி வி வி வி வி வி

**நேசநாடுகளின் எச்சரிக்கைகள்.** இதேசமயத்தில் ஜெர்மனிக்கு பிரிடிஷ் அரசாங்கம் ஒரு எச்சரிக்கைவிடுத்திருக்கிறது. ருஷ்யாவில் ஜெர்மனி விஷ வாயுப்பிரயோகம் செய்தால் பிரிடனும், ஜெர்மன் ஆயுதசாலைகள், துறைமுகங்கள், மற்ற ராணுவ முக்கியத்வம் வாய்ந்த லக்ஷியங்கள் பேரில் விஷ வாயு பிரயோகம் செய்யுமென்று சொல்லிவிட்டது. அமெரிக்க விமானிகளின் கொலைக்கு ஜப்பானிய அதிகாரிகள் ஜாவாப்தாரியாக வேண்டுமென்றும் அமெரிக்க நிர்வாகம் எச்சரித்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லரின் பிறந்த விழாதினத்தில் பிரிடிஷ் விமானப்படையின் விஜயம்.** ஹிட்லரின் பிறந்த தின விழா முடிவடையும் பொழுது பிரிடிஷ் விமானப்படை பெர்லினைத் தாக்கிற்று. அதே சமயத்தில் ஸ்டெட்டின் பேரில் 4,000 பவுண்டுகள் எடைமானமுள்ள 150 வெடிகுண்டுகளையும், ஆயிரக்கணக்கான எரிவெடிகளையும் நூற்றுக்கணக்கான இதர வெடிகுண்டுகளையும் விமானப்படை பொழிந்தது. விமானப்படை ராஸ்டாக்குக்கும் விஜயம் செய்தது. ஸ்டெட்டின் என்பது பால்டிக் சமுத்திரக்கரையிலுள்ள முக்கியமான ஜெர்மன் துறைமுகப்பட்டணம். இதிலிருந்துதான் வடருஷ்யாவிலுள்ள ஜெர்மன் துருப்புகளுக்கு ஸப்ளைகள் போகின்றன. ராஸ்டாக் என்பது ஹிங்கல் விமான உற்பத்திசாலை, நீர்மூழ்கிகள் கட்டும் தளம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய மந்திரிசபை மாறுதல்கள்.** ஜப்பானில் சமீபகாலத்தில் மந்திரி சபையில் மாறுதல்கள் நடைபெற்றன. முக்கியமாக பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் நண்பரான மிஸ்டர் ஸ்னிமிட்சு என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் நியமனத்திலிருந்து ஜப்பானியர்கள் சமாதானப்பேச்சு ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார்களென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஸ்பானிஷ் நிர்வாகமும் சமாதானப்பேச்சைத் துவக்க உத்தேசித்திருக்கிறதென்றும் சொல்லப்பட்டது. இது ஊர்ஜிதப்படவில்லை. ஆகிலும் கடைசிவரையில் யுத்தத்தை நடத்தியேதான் தீருவது என்ற நேசநாடுகளின் மனப்பான்மை குன்றிவிடவில்லை. அமெரிக்காவின் சார்பாக மிஸ்டர் கார்டர் ஹல் அச்சுநாடுகளும், அவனைச்சேர்ந்தவர்களும் நிபந்தனையற்ற சரணாகதி செய்தாலொழிய வேறு ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார். பிரிடிஷ் அரசாங்கத்தின் அபிப்பிராயமும் இதுதான் என்று மிஸ்டர் ஈடன் சொன்னபொழுது பலமான கரகோஷம் ஏற்பட்டது.



**ஒரே யுத்த தந்திரம், ஒரே முடிவு.** அமெரிக்காவில் காங்கிரஸ் கக்ஷியிடம் சமீப காலத்தில் அதிக பறபறப்பு ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானியர் செய்த அட்டூழியங்களைக் கண்டு அவர்கள் யுத்தத்தை பஸிபிக்கில் மும்மரமாக நடத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆகிலும் நேசநாட்டாரின் நிர்வாகங்கள் ஏற்கனவே அவர்கள் போட்ட திட்டத்தை மாற்றுவதாக உத்தேசிக்கவில்லை. அச்சுநாடுகள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்பதையும் அவர்கள் விடப்போவதில்லை. அச்சுநாடுகள் ஒன்றுபட்டிருப்பதுபோல் யுத்தமும் ஒன்றுப்பட்டதுதான். ஐரோப்பாவில் நேசநாடுகள் செய்யும் தாக்குதல்களின் விளைவுகள் கிழக்கிலும், ப்ரதிபலிக்கும். கர்னல் பிராங்க் நாக்ஸ் சொல்லுகிறபடி ஹிட்லரைத் தாக்கினால் டோஜோவிற்குத் அதிர்ச்சி உண்டாகும்.

வி வி வி வி வி வி வி

**டுனிஸியா யுத்தம்.** டுனிஸியா யுத்தத்தில் கடைசிநிலை வந்துவிட்டது. மகத்தான முடிவான யுத்தம் நடைபெற்று வருகிறது. மலைப்பிராந்தியங்களிலிருக்கும் அச்சுப் படைகளுக்கும் சாவதானமாகவும் பலமாகவும் முன்னேறி எதிரியை வளைத்துக்கொள்ள முயற்சி செய்துவரும் நேசப்படைகளுக்கும் தீவ்ரமான யுத்தம் நடைபெறுகிறது. இதில் விசேஷமாக பிரிடிஷ் துருப்புகள்தான் திறமையுடன் சண்டைசெய்து வருகின்றன. பிரிடிஷ் எட்டாம் படையும் 1-ம் படையும் அமெரிக்க—பிரெஞ்சு துருப்புகளின் ஒத்தாசைகொண்டு யுத்தம் செய்கிறார்கள். இந்திய 4-வது படை புகழக்கூடிய வகையில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. பலமாகவும், கோரமாகவும், விடாமுயற்சியுடனும், பயங்கரமாகவும் யுத்தம் நடைபெறுகிறதென்று ஜெர்மன் வியாக்யானிகள் சொல்லுகிறார்கள்.

மாரத் அரண் யுத்தத்திற்குப் பிறகு ரோமல் கக்ஷியில் 50,000 பேர்கள் உயிரிழந்து விட்டார்கள். நேசநாட்டாரின் விமான தளங்கள் அதிகரித்துவிட்டன. அச்சுநாட்டாரின் விமான தளங்கள் குறைந்துவிட்டன. அவைகளும் குறுகலான பிரதேசத்தில் தாக்குதலுக்குட்பட்டிருக்கின்றன. அச்சுநாடுகளின் தற்காப்பு கோணத்தில் 1,50,000 ஜெர்மானியர்களும், 60,000 இதாலியர்களும், இருக்கிறார்கள். இதாலியர்களில் பாதிபாகம் சண்டை போடலாயக்கில்லாதவர்கள். மற்றொரு தற்காப்பு ஸ்தலம் என்பிடாவில்லியிலிருந்து ஆரம்பித்து பாண்டு பாலைச் சுற்றிக்கொண்டு கான்பாலாத், மெட்ஜஸ்-எல்-பாப் வழியாகக் கடற்கரைக்குச் சென்று ஸெர்ராட் முனைக்குக் கிழக்கே போய்ச்சேருகிறது. இவ்விடத்தில் இரண்டு மலைத் தொடர்களிருக்கின்றன. ஒன்று கேப் பானிலிருந்து என்பிடாவிலுக்கும், மற்றொன்று மெட்ஜஸ் எல் பாபிலிருந்து வடக்கு முகமாக பிஸெர்ட்டாவுக்கும்' பரவியிருக்கிறது. இந்தியாவின் வடமேற்கு எல்லைச் சரகத்திலிருப்பது போல இந்தமலைத் தொடர்கள் செங்குத்தாயும் மலையருவிகளும் பள்ளத்தாக்குகளுமுள்ளதாக யிருக்கின்றன. எதிரியின் ஆயுதக் குறைவை இந்தப் பிரதேசத்தின் அமைப்பு ஒருவாறு நிவர்த்திசெய்யலாம். ஆகிலும் குறுகலான பிரதேசத்திலிருந்துவர வேண்டியிருப்பதால் விமானப்படையின் பலமான தாக்குதலுக்குட்படவேண்டியிருக்கும். பிஸெர்ட்டாவுக்காக நடைபெறும் இறுதி யுத்தத்தில் கடற்படையும் கலந்துகொள்ளும். ஆகையால் அச்சுநாடுகளின் அதோகதி நிச்சயம். இது முடிவடைவதற்கு காலதாமதமாகும்.

இறுதிப் போரை நடத்த சக்தியற்றது என்று நினைத்து இதாலியத் துருப்புகள் நாட்டைவிட்டு வெளியேறி விட்டனவென்றும், நரம்பு வியாதியால் ரோமலும் ஜெர்மனிக்கு ஓடிவிட்டானென்றும், வான் ஆர்னிம் தன்னுடைய தலைமைக் காரியாலயத்தை ஸிஸிலிக்கு மாற்றிவிட்டானென்றும், ஆபிரிக்கப் படைகளை எக்கேடுகெட்டுப்போனாலும் சரியென்று விட்டுவிட்டு வந்துவிட்டானென்றும், கூடுமான வரையில் பின்வாங்கவேண்டியதென்று செய்து விட்டானென்றும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனை:** ருஷ்யாவில் கேந்திர ஸ்தானங்களைப் பிடிப்பதற்காக நடக்கும் யுத்தம் நடைபெறுகிறது. அடுத்த முன்னேற்ற யுத்தத்துக்காக இருதரப்பாரும் தயார்செய்து

வருகிறார்கள். சென்ற வருஷத்திலிருந்ததைவிட இப்பொழுது ருஷ்யர்களின் தற்காப்பு வரிசை குர்ஸ்க், சுகியெவ், பாலக்னியா, இஸியம் போன்ற இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. அதேவிதமாக ஜெர்மானியர்களும் கருங்கடலிலுள்ள நோவாரோஸிஸ்க்கில், பலமாக தற்காப்பு செய்து வருகிறார்கள். ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும் ஒரே ஒரு இடத்தில்தான் சண்டை நடைபெறுகிறது. டாமன் தீபகற்பத்தில் மலைக்குன்றுகளிருக்கும் பிரதேசத்தில் ருஷ்யர்கள் அநேக முன்னணி பிரதேசங்களைப் பிடித்திருக்கிறார்கள். ஏப்ரல் 16 முதல் ஜெர்மானியர்கள் அவைகளை அடிக்கடி தாக்கியும் பலிக்கவில்லை. நோவாரோஸிஸ்க்குக்கு வெளிப்பக்கத்தில் பீரங்கி யுத்தம் நடைபெற்றுவருகிறது.

வி வி வி வி வி வி வி

**பஸிபிக் யுத்தப் போக்கு.** தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பான் கூடால்கனாலிலும், நியூ கினியாவிலும், மோர்ஸ்பி துறைமுகத்திலும், மில்னி விரிகுடாவிலும் சமீபத்தில் அதிகமாக நடமாட்டம் செய்வதிலிருந்து யுத்தப்போக்கைப்பற்றி யோசனைகள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள ஜப்பானியப் படையெடுப்பு ஏற்படுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். கடைசியாக வந்த செய்திகளில் ஜெனரல் ப்ளாமி என்பவர், டார்வின் துறைமுகத்துக்கு 315 மைலிலிருக்கும் அராபூராக் கடலிலுள்ள தீவுகளை ஜப்பான் ஆக்கிரமித்ததிலிருந்து, ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்து அதிகரித்து விட்டதென்று சொல்லுகிறார்.

சமீபத்தில் எதிரிக்கு ஏற்பட்ட லாபங்களெல்லாம் அதிக நஷ்டத்துடன் கிடைத்தவைகள். ஏப்ரல் 7-ம் தேதியன்று ஜப்பானிய விமானங்கள் மிகவும் பலமாகத் தாக்கியபொழுது, நேசநாடுகளுக்கு ஒரு நாசகாரியும், ஒரு எண்ணெய்க் கப்பலும், ஒரு நீர்மூழ்கி அடிக்கும் கப்பலும், ஒரு சிறிய படகும், ஏழு விமானங்களும் நஷ்டமாயின. எதிரிக்கு 92 விமானங்களில் 25 சண்டை விமானங்களும், 12 வெடிகுண்டு விமானங்களும், நஷ்டமாகின. நியூ கினியாவில் நேச நாடுகளின் கடற்படையைத் தாக்கியபொழுது பாதி விமானங்கள் நஷ்டமடைந்தன. மோர்ஸ்பி துறைமுகத்தைத் தாக்கியபொழுது 100 விமானங்களில் 37 விமானங்களும், மில்னி விரிகுடாவில் 80 விமானங்களில் 30 விமானங்களும் எதிரிக்கு நஷ்டமாயின. இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னும் எதிரியின் நிலைமை விசேஷ மாறுதலடையவில்லை. நியூகினியாவில் நேசதேசப்படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

வி வி வி வி வி வி . வி

**தற்காப்பு செய்யும் நேசத்தின் சங்கடம்.** தென்மேற்கு பஸிபிக் பிராந்தியத்தில் எதிரி ஆஸ்திரேலியா மீது படையெடுப்பு செய்வதற்காக தளவாடங்களைக் குவித்து வருகிறானென்பது சம்பாவிதமில்லை. ராணுவ பாஷையில் சொல்லப்படுவதுபோல் அவன் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான். ஏற்கனவே பிடித்த முக்கியமான பிரதேசங்களை விட்டு விடுவதா அல்லது அதிக நஷ்டத்துடன் அவைகளைக் காப்பாற்றுவதா என்ற யோசனையில் எதிரி ஆழ்ந்திருக்கிறான். டோக்கியோவில் அயல் நாட்டு மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்தவராகயிருந்த ஸீனர் ராமன் லாவெல்லி சொல்லுவது போல் டோகியோவில் கிலி பிடித்துவிட்டது. யுத்தம் பல வருஷம் நடைபெறும் என்று ஜப்பானிய ராஜ தந்திரிகள் சொல்லுகிறார்கள்.

ஆஸ்திரேலியா மீது ஜப்பான் படையெடுக்கும் என்பது உபயோகமற்ற பேச்சு என்று அமெரிக்கக் கடற்படை காரியதரிசியான கர்னல் நாக்ஸ் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். மனிதர்களையும், தளவாடங்களையும் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுபோகப் போதுமான கடற்படை ஜப்பானிடம் இல்லை. கடற்கரையோரமாகப் போக்குவரத்து நடத்துவதற்காக மரக் கலங்களை ஜப்பான் கட்டி வருகிறதென்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

எதிரிக்குக் கப்பல்கள் இருப்பதாக ஒப்புக்கொண்டாலும், தளங்களிலிருந்து புறப்பட்டுச் செல்லக்கூடிய விமான பலத்தின் உயர்வு நம்மிடமிருக்கும்பொழுது ஜப்பானுடைய கடல் விமானங்கள் பிரயோஜனப்படாது என்று ஜெனரல் மாக் ஆர்தர் அபிப்பிராயப்படுகிறார். விமானப் படையின் உயர்வை நாம் இழந்தால் தான் ஜப்பான் தன்னுடைய கடற்படையை அசைக்கமுடியும். ஆஸ்திரேலியாவில்



இறங்குவதற்கு துருப்புகளையும் கொண்டுவரக்கூடும். விமான பலத்துடன் தரையில் கேந்திர ஸ்தானங்களை எந்தக் கக்ஷி அடைகிறதோ அதுதான் வெற்றி பெறும். விமானபலம்தான் முக்கியமான சாதனம். ஆஸ்திரேலியாவும் அமெரிக்காவும் இதை நன்றாய் அறிந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள்.

ஆகையால் ப்ளாமியும், மாகினும், கர்டினும் சொல்லும் அபிப்பிராயங்களை நாம் சரியானபடி மதித்துப் பார்க்கவேண்டும். யுத்த நிலைமையைப் பற்றிய உண்மையான அபிப்பிராயமே ஒழிய, பயத்தையோ, கலக்கத்தையோ அவைகள் குறிப்பிடவில்லையென்பது நிச்சயம்.

வி வி வி வி வி வி வி

**நாங்கிங் ஏமாற்றம்.** சைனாவிலுள்ள குயிஸ்லிங்குகளின் ஆதரவைப் பெறுவதற்காக ஜப்பானியர்கள் அயல் நாட்டு எதிரிகளின், அதாவது, பிரிடன், அமெரிக்கா, சொத்துக்களை நாங்கிங் அரசாங்கத்தார் குறிப்பிடும் நபர்களுக்குத் தானம்செய்து விடுகிறதென்று சென்ற மாதத்தில் வெளியிட்டார்கள். இவைகளில் ஏராளமான தொழிற் ஸ்தாபனங்களும் சேர்ந்தவை. இந்த ஏற்பாட்டின் மூலம் ஷாங்கேயிலுள்ள ஆங்கிலேய அமெரிக்க சம்பந்தங்களையும் அகற்றிவிடுவதென்று உத்தேசம். துரதிருஷ்டவசமாக ஸீடங்க் என்னும் பத்திரிகையில் உண்மை வெளியிடப்பட்டிருக்கிறது. சொத்துக்கள் ஒப்பிப்பதில் ஒரு நிபந்தனை உண்டு. ஜப்பானியத் தொழிலாளிகளும், முதலாளிகளும் அவைகளில் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுவார்களாம். இது ஒரு தந்திரம். 1940-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வாங்க் சியாங் வையின் அமுல் ஸ்தாபிக்கப்பட்டபொழுது இதேமாதிரியாக சீனர்கள் ஏமாற்றப்பட்டார்கள். சீனர்களுக்கு ஜப்பானியப் படைகள் சொத்துக்களைக் கொடுப்பது போல் பாவனை செய்யப்பட்டது. பருத்தி யந்திர சாலைகள், மாவு மில்லுகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. ஆகிலும் ஒவ்வொரு தொழிலிலும் ஒரு ஜப்பானியர் ஒரு பங்கு எடுத்துக்கொண்டார். இவ்விதமாகத்தான் பொம்மை நாங்கிங் அரசாங்கம் பொதுஜன ஆதரவு பெற முடியவில்லை.

---

# தெய்வானுகூலம்.

(மிஸ்டர் சர்ச்சில்).

ஹிட்லர் 75 லக்ஷம் துருப்புகளை படகுகளில் ஏற்றி இங்கிலீஷ் கால்வாயின் குறுக்கே அனுப்பி இங்கிலாந்தில் இறக்கும்படி செய்து அவர்களில் முக்கால் பாகம் துருப்புகளை இழந்திருந்தால் என்ன நடைபெற்றிருக்குமென்று நான் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். நம்மிடம் அப்பொழுது ஆயுதங்களே இல்லை. ஆகையால் விபரீதங்கள் நேரிட்டிருக்கும். அப்பொழுது நம்மிடம் 50 டாங்கிகள் கூட இல்லை. இப்பொழுது நம்மிடம் 10,000 முதல் 12,000 வரை டாங்கிகளிருக்கின்றன. நம்மிடம் கண்காக்ஷியிலிருந்து கொண்டுவரப்பட்ட 400 பீரங்கிகள் தானிருந்தன.

டங்கர்க்கிலும் பிரான்ஸிலும் நாம் ஏராளமான முஸ்தீப்புகளை இழந்துவிட்டோம். நாம் பெரிய கஷ்டத்திலிருந்து விடுதலை பெற்றோம்.

## ஜப்பான் செய்த தவறு.

பிரிடனானது ஐரோப்பாவில் இதாலியுடனும், ஜெர்மனியுடனும் சண்டை செய்து வந்தபொழுது பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைத் தாக்காமல் அமெரிக்காவை பெர்ல் துறைமுகத்தில் ஜப்பான் தாக்கியது பெரிய தவறு. ஹிட்லர் இங்கிலாந்தைப் பிடிக்கப் பிரயத்தனம் செய்தான். பிரிடிஷ் விமானப்படை அதை முறியடித்துவிட்டது.

1940-ம் வருஷ சங்கடத்தில் மனித வர்க்கத்தின் ஸ்வதந்திரத்தை பிரிடன் காப்பாற்றிற்று. இதை நாம் கைவிடக்கூடாது. இது இனிது முடியும் வரையில் நாம் சிரமப்படவேண்டும். நாம் வெற்றிபெறுவோம்.

நமக்குத் தெய்வம் துணைபுரிந்துவருகிறது. நாம் நல்ல நோக்கத்துடன் சண்டை செய்வதால் இந்த அனுகூலம் ஏற்படுகிறது. இந்த நோக்கத்துடன் சண்டை நடத்துவோமாகில் நமக்குத் தெய்வம் கண்டிப்பாய் அனுகூலமளிக்கும்.

---

# வடபாகத்தின் சரித்திரம்.

## (ஸோவியத் அயல்நாட்டு தூதரான M. மெயிஸ்கி.)

ருஷ்யாவுக்கு ஆயுதங்களும், வெடி மருந்துகளும், ஸப்ளைகளும் பிரிடனிலிருந்தும், கனடாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் துணைக்காவல் மூலம் வடபக்கமார்க்கமாகப் போய்ச் சேர்ந்தன என்பது கடல் யுத்தத்தில் ஒரு முக்கியமான சம்பவம்.

அவைகள் சிறந்த செய்கைகள். உங்களுடைய சாமான் கப்பல்கள், கடற்படை உதவியுடன், கடுமையான இருளும், குளிரும் நிறம்பிய இரவிலும், பனிக்கட்டி, மூடுபனி, புயல் காற்றுகள் உள்ள ஆர்க்டிக் சமுத்திரத்திலும், நீர்மூழ்கிகளின் தாக்குதல்களிலும் கடற்கரையிலுள்ள பீரங்கிகளின் வெடிகுண்டு வீச்சுகளிலும், அபாயத்தையும், கஷ்டங்களையும், உயிர் நஷ்டத்தையும் பொருட்படுத்தாது கடல் கடந்திருக்கின்றன.

வடபக்கத்துக்குச் சென்ற கப்பல்களிலும், மனிதர்களிலும் சிலர்கள் திரும்பவில்லை. இந்தக் கதையானது ருஷ்யர்களின் மனதில் நன்முகப் பதிந்துவிடும். நேசநாடுகளுக்குள் உள்ள ஒத்துழைப்பு இதன் மூலம் வெளிக்காட்டப்படுகிறது. ஒத்துழைப்பு இல்லாவிட்டால் நமக்கு வெற்றி கிடைப்பது அறிது.

கிழக்கில் நடைபெற்ற வெற்றிகளுக்கு வடக்கு சமுத்திரமார்க்கமாகச் சென்ற துணைக்காவல் கப்பல்கள் தான் முக்கியமாக ஒத்தாசை செய்தன. ருஷ்ய அரசாங்கத்தாரின் சார்பிலும் செம்படை சார்பாகவும், ருஷ்ய மக்களின் சார்பாகவும் நான், உங்களுடைய மாலுமிகளின் தைரியத்துக்கும் தீரத்துக்கும் நன்றி செலுத்துகிறேன்.

வெற்றி பெறும் தருணம் கிட்டி விட்டது. ஜெர்மனியைச் சுற்றி போடப்படும் வளையம் நெருங்கி வருகிறது. ஹிட்லரும் அவன் பரிவாரங்களும் என்ன செய்தாலும் அவர்களுக்கு ஏற்படும் முடிவை அவர்கள் தடுத்து விட முடியாது.

---

# காசின்களும், சின்களும் கொரில்லாச் சண்டை செய்கிருர்கள்.

## ஜப்பானியர்களைக் கடுமையாக வெறுக்கிருர்கள்.

(டைம்ஸ் ஆப் இந்தியா யுத்த நிருபர், F. R. மொரேயிஸ்).

நான் விமானத்தில் விசேஷமாகச் சுற்றுப்பிரயாணம் செய்தேன். ஆகாயத்திலிருந்து பார்த்தால் வங்காளத்துக்கும் அஸ்ஸாமுக்குமுள்ள ஸ்தலத் தோற்றம் வித்தியாசமுள்ளது. கங்கையும் பிரம்மபுத்ராவும் சேர்ந்து பாயும் முகத்துவாரப் பிரதேசம் கொண்டது, கிழக்கு வங்காளப் பிரதேசம்.

பூமியின் தோற்றம் சமவெளிபோன்றது. வயல் பிரதேசங்களில் அருவிகள் மெதுவாக ஓடுகின்றன. நாட்டுப்புறங்கள் நிம்மதியாகயிருக்கின்றன. அஸ்ஸாம் சுறுசுறுப்பாகயிருக்கிறது. சமவெளிகளில்லாமல் கரடுமுரடான பிரதேசம் தோன்றுகிறது. இந்த மாறுதல் நம் கவனத்தைக் கவருகிறது. வங்காளக்



குடாக்கடலின்பேரில்பறந்து சென்றபொழுது பனி பெய்தது. விமான தளத்தில் இருந்து நாங்கள் இறங்கியபொழுது மழை பெய்தது. வடக்கே 70 மைல்களுக்கப்பால் சூரிய வெளிச்சமிருந்தது. நாங்கள் ஒரு மணி நேரம் கழித்து அஸ்ஸாம் எல்லையைத் தாண்டியபொழுது வானம் நீல வர்ணமாகயிருந்து எங்களுக்குச் சந்தோஷமளித்தது, அஸ்ஸாமுக்குள் விமானம் சாவதானமாக உயரச் சென்றது. வெகு உயரம் சென்றுவிட்டது. எங்களுக்குக் கீழே மலை உச்சிகளை அளாவி வெண்மையான மேகங்கள் சஞ்சரித்தன. மேகங்கள் வழியாக நாங்கள் உற்று நோக்கியபொழுது பெரிய பெரிய குன்றுகளும், சில இடங்களில் புதருகளும், காடுகளும், வயல்களும், பள்ளத்தாக்குகளுமுள்ள பூப்பிரதேசம் தோன்றிற்று.

அரக்கானிலிருந்து வடக்குப் போர்முனையின் ஸ்தல சந்நிவேசம் அநேக விதமாக வித்தியாசப்பட்டது. அரக்கானிலிருப்பதுபோல் இங்கே குன்றுகளும் நதிகளுமிருக்கின்றன. குன்றுகள் கரடுமுரடானவை. மலை உச்சிகள் நீளமாயும் விலாப்பக்கங்களில் அடர்ந்த காடுகளுமுள்ளதாகவுமிருக்கின்றன. கனமான மழை பெய்ததினுல் மலைகளிலுள்ள மண் கரைந்துவிட்டது. காடுகள் அடர்த்தியாகவும் மரங்கள் உயரமாகவுமிருக்கின்றன. கிப்ளிங் வரைந்திருக்கும் மௌரிக்னி என்பவன் சந்தோஷப்படும்படியான நெருக்கமான காடுகள் உள்ள பிரதேசம் இங்கு காணப்படுகிறது. கடல் மட்டத்துக்கு 2,000 அடிக்கு உயரத்திலுள்ள இம்பால் என்பது மணிபூர் ராஜ்யத்துக்குத் தலைநகரம். பர்மாவின் வடமேற்கு எல்லைச் சரகம், அஸ்ஸாமையும், மணிபூரையும் வங்காளத்தின் சில பாகங்களையும் ஒட்டியிருக்கிறது.

### கொரில்லா யுத்தம்.

இந்த எல்லைச் சரகத்தில் கொரில்லா யுத்தம் தான் மிகுதியாக நடைபெறுகிறது. அரகானிலிருப்பதைவிட இங்கு யுத்தம் நிலையுள்ளதாக இல்லை. ஆகிலும் இந்தக் காடு பிரதேசத்தில் அடிக்கடி ரோந்துப்படைகளுக்குள் கோரமான யுத்தம் நடைபெற்றுவருகிறது. இந்த யுத்தத்தில் காசின்களும், சின்களும் சாமர்த்தியசாலிகளென்று வெளிக்காட்டியிருக்கிருர்கள். இவ்விரு ஜாதியாரும் மலைவாசிகள். கட்டுக்கடங்காதவர்கள். பிராசீனர்களாகிலும், மூர்க்கத்தனமுள்ளவர்களாகிலும், அவர்கள் திடசரீரமுள்ளவர்கள். தைரியசாலிகள். அவர்கள் ஜீவனின் ஸ்திரத்வத்தை நம்பியவர்கள். குன்றுகளையும் மரங்களையும் ஆராதனை செய்புவர்கள். ஜப்பானியர்களை அதிகமாக வெறுக்கிறவர்கள்.

பர்மாவின் வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு பாகங்களிலிருக்கும் காசின் குன்றுகள் விசிறியின் நரம்புகள்போல மாறி மாறி உன்னதிலை அடைந்திருக்கின்றன. திபெத்திலுள்ள கோட்டைகளுக்குள் பரவுகின்றன. அஸ்ஸாமிலுள்ள டிக்பாய் எண்ணெய் பிரதேசம் சைனுவின் எல்லையிலிருந்து குறுக்கு வழியாக 200 மைல்களுக்கப்பாலிருக்கின்றன. அஸ்ஸாமில் அநேக பாஷைகள் பேசும் ஜனங்களிருக்கிருர்கள்.

இதுவரையில் காசின் துருப்புகள் 400 ஜப்பானியர்களைக் கொன்றுவிட்டார்கள். ஜனவரி மாதத்தில் சிண்ட்வின் நதிக்குச் சமமாக 50 மைல்களுக்கு ஓடும் டம்முவுக்கு எதிர்பக்கத்திலுள்ள காபா பள்ளத்தாக்கை நாம் பிடித்துக் கொண்டோம். நதிக்கு மேற்கே பத்து மைல்களுக்கப்பாலிருக்கிறது. இந்தப் பள்ளத்தாக்கில் மலேரியா ஜுரம் அதிகமாகயிருப்பதால் இங்கு மழை காலத்தில் தங்குவதா என்பது ஆலோசிக்கப்படவேண்டிய விஷயம். இந்த இரண்டு போர் முனைகளுக்கும் மத்தியில் அடர்த்தியான காடுகளுள்ள நாகா மலைகளிருக்கின்றன. அங்கிருக்கும் மலைவாசிகள் நமது படைகளுக்கு வழிகாட்டிகளாகவும் ரோந்துப் படையினராகவும் வேலை செய்கிருர்கள். நாகா ஜனங்களின் தலைவனை பாங்க் ஆப் வாங்க் என்பவர் சமீபத்தில் ஜப்பானுடன் யுத்தம் செய்யப்போவதாக வெளியிட்டார்.

சென்ற யுத்தத்தில் இம்பால் முக்கியமான யுத்த அரங்கமாகயிருந்தது. ஒரு நாள் சாயங்காலம் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது ஒரு சிறிய அழகான ஞாபகச் சின்னத்தைக் கண்டேன். சண்டையில் உயிர் துறந்த 4-வது அஸ்ஸாம் துருப்புகளின் ஞாபகார்த்தமாக இது ஏற்படுத்தப்பட்டது. ஒரு கல் சிலையில் இரண்டு பீச்வாக்களின் உருவங்கள் சிலுவை ரூபமாக அமைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது பீச்வாக்கள் மறுபடியும் அஸ்ஸாம் மலைகளில் உபயோகப்படுத்தப் படுகின்றன. போர்முனையிலுள்ள இந்திய சிப்பாய்கள் விளையாடும் "வாலிபந்து" என்ற விளையாட்டில் ஒரு சிறிய ஜவான் கோஷ்டி ஈடுபட்டிருப்பதைக் கண்டேன். அரக்கானில் இது போன்ற சிறந்த விளையாட்டுகளையும் நான் கவனித்தேன். அதற்கு அடுத்தாற்போல் ஒரு பொட்டலில் ஸீக்கியர்கள் ஹாக்கி விளையாட்டு நடத்தினார்கள். அரக்கானிலிருப்பதுபோல் அஸ்ஸாமில் அவ்வளவு சுறுசுறுப்பு இல்லை. ஆனால் அங்கு புதுமாதிரியான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அவை ரொம்பவும் ஸ்வாரஸ்யமானவை.

---

# ஸோவியத் அயல்நாட்டு தூதர் மெயிஸ்கி. நவீனக்கொள்கைகளுள்ள ராஜதந்திரி.

(பஹதூர் ஸிங்க்).

(பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து வெளிவந்த பேச்சின் சாராம்சம்).

பத்து வருஷங்களாக இவான் மிகலோவிச் மெயிஸ்கி என்பவர் பிரிடனில் ருஷ்யாவின் அயல்நாட்டு தூதராகயிருந்திருக்கிறார். அவர் தூதராக வேலை பார்த்தபொழுது சிரமசாத்தியமான வேலைகளை அவர் கவனிக்கவேண்டியதாக இருந்தது. ஆனால் ருஷ்யா சரியான தூதரைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. ராஜ தந்திரிகளுக்குள் ருஷ்ய தூதரான மெயிஸ்கியைப்போல மற்றெவரும் இச்சமயம் பிரிடிஷ் மக்களின் கவனத்தைக் கவரவில்லை.

மெயிஸ்கி 1884-ம் வருஷம் ஜனவரி மாதம் 19-ம் தேதி ஒரு சாஸ்திர நிபுணரின் குமாரராகப் பிறந்தார். ராஜதந்திர முறைகளில் அவருக்குப் பயிற்சி இல்லை. ஆகிலும் தான் வேலை பார்க்கவேண்டிய இடத்திலுள்ள ஜனங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுவதும் அவர்களுடைய மனப்பான்மையை அறிந்து கொள்ளுவதும்தான் முக்கியமென்று அவர் அறிந்துகொண்டார்.

ராஜதந்திரத்தின் ஜன்ம சத்துரு, சோம்பேறித்தனமும், புதிய கொள்கைகளை வெறுப்பதும் என்பது அவருடைய அபிப்பிராயம்.

## வாலிபப் பருவம்.

பத்திரிகைகள் வெளியீடு சம்பந்தமாக அவருக்கு மிகுந்த ஊக்கமும் உண்டு. அவருடைய வாலிபத்தில் அவர் ஒரு நிருபராகயிருந்தார். 1912-ம் வருஷத்திலேயே மெயிஸ்கி கட்டுப்பாடற்ற ஒரு பத்திரிகை நிருபராகயிருந்தாரென்பதை ஜனங்கள் அறியமாட்டார்கள். ஆங்கிலத்தில் அவருக்கு அரைகுறையான ஞானமிருந்தது. ஆகிலும் அவருடைய கட்டுரைகள் ருஷ்யருடைய பாணியில் எழுதப்பட்டிருந்தன. அர்த்த புஷ்டியும்; மிகுதியான விவரங்களும், புத்திசாலிகள் அறியக்கூடியதுமாகயிருந்ததோடு, விஷய சூசனை உள்ளதாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டன.

இதற்கு முன்னால் ஸாரின் ஆட்சியில் ருஷ்ய சீர்திருத்தக்காரர் கோஷ்டியில் அவர் ஈடுபட்டிருந்தார். துரோகச் செய்கைகளில் கலந்துகொள்ளுவதும்



தொந்தரவு செய்வதும், ஏழ்மைத்தனமும், ராஜீய அபிப்பிராயங்களுக்காக தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு சொந்த ஊர் ஆசைகொண்டு இருப்பதுமாக அவர் வாலிபத்தைக் கழித்தார். கலகம் ஏற்பட்ட பிறகு 1917-ம் வருஷத்தில் மெயிஸ்கி ருஷ்யாவுக்குத் திரும்பிவந்தார். அவருடைய வாழ்நாளில் பத்திரிகைக்கு லாயக்குள்ள சில ருசிகரமான விஷயங்களிருந்தன. அவர் லெனின்கிராட்டில் ஒரு பத்திரிகையை பிரசுரம் செய்தார். ஸாரின் அமுல் ஓய்ந்தபொழுது மெயிஸ்கி ருஷ்யாவில் கோவாபரேடிவ் இயக்கத்தை ஆரம்பித்து அதை நடத்திவந்தார். 1921-ம் வருஷத்தில் ஸைபீரியா ஸமஸ்தான சீர்திருத்த கமிட்டியில் தலைமை வகித்தார். அது முதற்கொண்டு ருஷ்யாவின் தொழிற்சாலைகள் அநேகமாக ஸைபீரியாவில்தானிருக்கின்றன.

1922-ம் வருஷத்தில் அவர் ருஷ்ய ராஜ்ய தந்திரிகள் இலாகாவில் அமர்ந்து மாஸ்கோவின் அயல்நாட்டுப் பிரசுர இலாகாவில் தலைமை வகித்துவந்தார். 1923 முதல் 1927 வரையில் லண்டனில் அந்நியநாட்டு தூது கோஷ்டியாருக்கு ஆலோசகராகயிருந்து பிரிடனில் நடைபெறும் பொருளாதார அபிவிருத்தியைப் பற்றிய தகவல்களை அயல்நாட்டு காரியாலயத்துக்குத் தெரியப்படுத்திவந்தார். அவருடன் இப்பொழுது வேலை செய்தவர்கள், மெயிஸ்கிக்கு, நியாய இலாகா தீர்ப்புகளிலும், ஸர்க்கார் பிரசுரங்களிலும், ஒலிபரப்பில் செய்யப்படும் வெளியீடுகளிலும், தஸ்தாவேஜுகளிலும் அபிருசியுண்டென்று இப்பொழுதும் சொல்லுகிறார்கள். 1927-ம் வருஷத்தில் அவர் லண்டனிலிருந்து ருஷ்யாவுக்கு வந்தார். ஐந்து வருடங்களுக்குப்பின் அவர் தூதராக மறுபடியும் லண்டனுக்கு வந்தார். மத்திய காலத்தில் தூதராக டோக்கியோவில் இரண்டு வருஷமும், பின்லாந்தில் மூன்று வருஷங்களும் வேலைபார்த்தார்.

## மனித வாழ்க்கையிலும், சாஸ்திரத்திலும் அபிலாஷை.

ராஜதந்திர முறையிலுள்ள அலுவல்களைக் கவனிப்பதோடு மனித வாழ்க்கையிலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் அவர் அதிக கவனம் செலுத்திவந்தார். அவர் சம்பந்தப்பட்டமட்டில் அசக்காசுூியும், சோம்பேறித்தனமும் அவரிடம் கிடையாது. அவருடைய சொற்பொழிவு விருவிருப்புள்ளது.

ஒன்றரை வருஷத்துக்கு முன்னால் சாவதானமாக சாஸ்திர ஆராய்ச்சி, உலக அமைப்பு இவைகளில் ஈடுபட்ட பிரிடிஷ் சங்கத்தின் மகா நாட்டின் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று அவர் கடுகடுப்பான முகத்துடன் நான் ஒரு அல்பமான தூதனென்றும், ஒன்றும் அறியாதவனென்றும் சொல்லிக் கொண்டார். ஹிட்லர் இந்த யுத்தத்தில் வெற்றிபெற்றால் ஸ்வதந்திரம், ஜனநாயகம், கலைஞானம், சாஸ்திரம், உலக அமைப்பு திட்டம் எல்லாம் போய்விடுமென்றும் சொன்னார். ஹிட்லர் ஆதிக்கம் ஏற்பட்டால் உலகம் பூராவும் ஒரே கொடுங்கோல் ஆட்சிதான் ஏற்படுமென்றும் எலும்புக் குவியல்கள்தான் மிஞ்சுமென்றும் அபிப்பிராயம் தெரிவித்தார். ஜெர்மனியின் கொடுங்கோலையும் கொடுமையையும் அனுபவித்த ஒரு தேசத்தின் பிரதிநிதியாக அவர் அபிப்பிராயம் சொல்லுவதாகவும், வெற்றி கிடைக்கும் என்பதில் அவருக்குத் தீவிரமான நிச்சயமும் நம்பிக்கையும் இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

## ருஷ்ய மக்களின் மனோதைரியத்தின் உருவம்.

தூது கோஷ்டியார்களுக்கு மெயிஸ்கியைக்கண்டு வியப்பும் அவருக்கு ராஜதந்திர முறைகளிலுள்ள புத்திகூர்மையைக்கண்டு சந்தோஷமும் உண்டாகுகின்றன. பிரிடிஷ் ராஜதந்திரிகளில் அநேகர் மெயிஸ்கியிக்கும் அவர் மனைவியாருக்கும் நெருங்கிய சிநேகிதர்கள்.

அவர் எப்பொழுதும் ஜனசமூகத்தில் கலந்துகொள்ளுகிறவர். அவர் பழமையான கொள்கைகளுள்ளவர் அல்ல. சோம்பேறித்தனத்தை வெறுக்கிறவர். ஆதலால், பழமையான ஆசாரத்தை விட்டுவிட்டு ராஜதந்திர முறைகளில் சிலாக்கியமானவைகளைக் கடைபிடிக்க அவர் பின்வாங்குகிறதில்லை.

மெயிஸ்கியின் நடையுடைபாவனையில் அகம்பாவமேயிராது. பின்ஸ்பரியில் லெனின் வசித்து வந்த இடத்தில் ஒரு பீடத்தைத் திறந்துவைக்கும்பொழுதும் பிரிடிஷ் விமானிகளுக்கு ருஷ்யப் பதக்கங்களை பரிசளிக்கும்பொழுதும், மெயிஸ்கியின் உருவமும் காம்பீர்யமும் பிரிடிஷ் மக்களின் மனதில் மதிப்பையும் பாராட்டையும் உண்டுபண்ணுகின்றன.

மெயிஸ்கி ருஷ்ய மக்களின் மனோதைரியத்தின் வடிவு என்றே சொல்லலாம். இதை மதித்து ருஷ்யாவின் மக்களுக்கு அளிக்கக்கூடிய கௌரவப்பட்டமான ஆர்டர் ஆப் லெனின் என்ற பட்டத்தை மெயிஸ்கிக்கு வழங்கியிருக்கிறார்கள்.

## உபயோகமற்ற பேச்சுகள்.

மகஸாரிலிருக்கும் ஜனங்களை ஜ்வரத்திலிருந்து காப்பாற்ற மகஸாரில் வைத்திய வசதிகளை ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் அதிகப்படுத்துகிறார்களாம்.

* * * *

ஏப்ரல் 6-ம் தேதியன்று ரெங்கூனில் பழைய நோட்டுகள் சிலாவணியிலிருந்து, எடுக்கப்பட்டு ஜப்பானிய நாணயங்களை உபயோகப்படுத்தக்கூடிய புதிய நோட்டுகள் அச்சிடப்பட்டு உபயோகத்துக்கு வருமென்று சொல்லப்பட்டது.

* * * *

ஜப்பானிலுள்ள சித்திரக்காரர்கள், யுத்தத்தில் ஈடுபட்டுவிட்டார்களாம். இவர்கள் ஒரு சங்கமாகக் கூடி பிரிடனையும் அமெரிக்காவையும் சித்திரங்கள் மூலமாகவே ஒழித்துவிடுவார்களாம்.

* * * *

மரக்கலங்கள் அவசரமாகக் கட்டுவதற்காக சர்ச்சை செய்ய போக்குவரவு மந்திரி இலாகா மகாநாடு கூடுகிறதென்றும் அதில் பார்மோஸா, கொரியா அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளுவார்களென்றும் தெரியவருகிறது என்று டோக்கியோவிலிருந்து வெளியாகுகிறது.

* * * *

ஏப்ரல் 6-ம் தேதி டோகியோவிலிருந்து ஒலிபரப்பியதில் இந்தோ சைனாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் ஜப்பானிய பாஷை கற்பிக்கப்படுகிறதென்று வெளியிடப்பட்டது. இரண்டு நாட்களுக்குப்பின் ஸைகான் ஒலிபரப்பில், உத்தியோக உயர்வுவேண்டுமானால் பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களெல்லாம் அனாமெட் பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டது.

* * * *

யுத்தத்தில் வெற்றியானது ஆள்பலம், மூஸ்தீப்பு பலத்தின் மிகுதியைப் பொருத்ததென்று ஜப்பானியர்கள் நம்பவில்லை. ஆனால் துருப்புகளின் தீரத்தையும் சண்டை போடும் லக்ஷியத்தின் நியாயத்தையும் பொருத்துத் தான் வெற்றி கிடைக்கும். (ஏப்ரல் 7-ம் தேதி சிங்கப்பூர் ஒலிபரப்பு நிலயம்).

* * * *

உமேயாமா என்ற ஜப்பானிய ஒலிபரப்பாளர் மனத்தாங்கலுடனிருக்கும் நகரவாசிகளுக்கும் நாட்டுப்புறத்தார்களுக்குமுள்ள வித்தியாசங்களைப்பற்றி சொல்லுகிறான். கிராமத்திலுள்ள ஸ்திரீகள், குழந்தைகள் விருத்தர்களெல்லாம் காலை 4 மணிக்கு வயல்களில் வேலைசெய்ய எழுந்திருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான தானியம் உற்பத்தி செய்து எல்லாவற்றையும் மீதம்பிடிக்கிறார்கள். அரிசி



மற்ற முக்கியமான இடங்களுக்குத் தேவையாகயிருப்பதால் அதற்குப்பதிலாக வேறு உணவுப் பொருள்களை அவர்கள் உட்கொள்ளுகிறார்கள்.

* * * *

கொச்சின் சைனாவில் விவாதம் நடந்தபொழுது வியபசாரத்தை ஒழித்து ஸ்திரீகளை சேனையில் தாதிகளாகவும் இதர வேலைக்கும் ஏன் உபயோகப்படுத்தக் கூடாதென்று பிரச்னை கிளம்பியபொழுது கவர்னர் பதிலுரைத்தார்.

* * * *

"ஒரு நாட்டிற்குச் சண்டை போடவரும் 50,000, அல்லது லக்ஷம் துருப்புகளுக்குத் தேவையான மாதுகள் இல்லாமல் அவர்கள் எப்படிப் போர் புரிவார்கள்" என்றார்.

## ஒருவன் செய்யும் யுத்தம்.

இவனுடைய எதிரி ஜெர்மானியர்களல்ல. பூச்சிகள் பாக்டாட்டிலிருந்து டிரிபோலிக்கு லேஸாண்டர் விமானத்தில் பறந்து செல்லும் ஒரு விமானி மிலியன்கள் கணக்கான ஜனங்களுக்குத் தீங்கிழைக்கும் ஒரு எதிரிக்குக் கொஞ்சம்கூட இடம் கொடுக்காமல் விரட்டியடிக்க இடைவிடாது யுத்தம் செய்துவருகிறான்.

அவன் மெஷின் பீரங்கியை உபயோகிக்கவில்லை. விமானத்தில் அடிபாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் குழாய் மூலமாக நாசமுண்டாகும் புகையைப் பரவச்செய்யும் சாதனம் அவனிடமிருக்கிறது.

அவனுடைய எதிரிகள் ஜெர்மானியரல்லர். ஆனால் கொசுப்பூச்சிகள். இந்த ஒருவன் செய்துவரும் யுத்தம் நடைபெறாவிட்டால் மத்தியக்கிழக்கிலுள்ள பிரிடிஷ், இந்தியத் துருப்புகளிடையே கொசுக்கள் மலேரியா ஜுரத்தைப் பரவச்செய்துவிடும்.

பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த மலேயா எதிர்ப்பு சங்கத்திலிருக்கும் சாஸ்திர நிபுணர்களால் ரசாயன சாலைத் தலைமை காரியாலயத்திலிருந்து அனுப்பப்பட்டு 29 வயதுள்ள விமானிகளின் அதிகாரியான பாஸ்டர் லீச் என்பவனுடைய அமுலின்கீழ் இச்சிறிய விமானப்படையானது பறந்து தூவும் சாதனத்துடன் இரண்டு வாரங்களில் 150 மனிதர்கள் கைகளின் சாதனத்தினால் செய்யக்கூடிய வேலையை பதினைந்து நிமிஷத்தில் செய்துவிடுகிறார்கள்.

## டிராக்ளாடைட்ஸ் ஜாதியார்கள்.

(டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை).

டுனிஸியாவிலுள்ள அநேக ஜாதியார்களில் இப்பொழுது பத்திரமாக வசிப்பவர்கள் தெற்கே மாட்மாடா குன்றுகளின் அடிவாரங்களில் வசிக்கும் மலைவாசிகளான டிராக்ளா டைட்ஸ் ஜாதியார். இவர்களுடைய வாசஸ்தலங்கள் பந்தோபஸ்தான விமான ஒளிகள் போன்றவை.

கிறிஸ்துக்கு முன்னால் ஐந்தாவது நூற்றாண்டில் ஹெரடோடஸ்ஸும் மற்ற கிரந்த கர்த்தாக்களும் விவரித்திருக்கும் வட ஆபிரிக்காவிலுள்ள டிராக்ளாடைட்ஸ் ஜாதியாரின் பறம்பரையைச் சேர்ந்தவர்கள் இவர்கள் என்று சொல்லுவதில் விசேஷமிருக்கிறது. புராதான ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் பிராசீனமாக கற்களால் செய்த ஆயுதங்களை உபயோகித்தவர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமுண்டென்றும் சொல்லுகிறார்.

### இவர்களுடைய வாசஸ்தலங்கள்.

கேப்ஸிலிருந்து போகும் ரஸ்தாமார்க்கமாக மோட்டாரில் சென்றால் அவர்களிருக்கும் பாதாள உலகத்திற்குச் செல்லலாம். தரைமட்டத்திலிருந்து அந்த கிராமத்தைக் கண்டுபிடிக்க முடியாது. நாம் காணக்கூடியதெல்லாம் பூமியில் ஏராளமான குழிகள் தோண்டியிருப்பது தான்.

ஒவ்வொரு குழியைச் சுற்றிலும் பூமிக்குள் ஆறு சுரங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் கிராமத்தார்களும் அவர்களுடைய சாமான்களும், கழுதைகளும், ஒட்டகங்களும், நாய்களும் இன்னும் அநேகருமிருக்கிறார்கள். வீட்டில் கூரைகள் விழுந்து விடாதபடி ஆர்ச்சு வடிவமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

### "ஆச்சிரிய சம்பவம்" என்று விமானி சொல்லுகிறான்.

---

## ஸ்பெயினில் விழுந்த வெடி விமானம் தீப்பிடித்து எரிந்த போதிலும் அதிலிருந்த விமானிகள் பத்திரமாய் இறங்கினார்கள்.

"பர்மாவை நான் 57 தடவை தாக்கினேன். விமானம் சுட்டு வீழ்தப்பட்டது. நானும் விழுந்தேன். ஆகிலும் நான் 58-வது தடவை தாக்குவேன்" என்று ஒரு ஆஸ்திரேலிய விமானி அவனும் அவனுடைய சகாக்களும் மாங்டாவுக்குத் தெற்கே சில மைல்களுக்கப்பால் எரிந்துகொண்டிருந்த பிளென்ஹீம் விமானத்திலிருந்து தப்பிக் குதித்த ஒன்று அல்லது இரண்டுமணி நேரத்திற்கெல்லாம் புன்னகையுடன் சொன்னான்.

அவன் வரலாறு பின்வருமாறு:

"விமானம் எந்த நிமிஷத்திலும் தவிடு பொடியாகிவிடுமென்று அறிந்து பிரங்கியாளையும், விமானம் ஒட்டியையும் குதித்துவிடும்படி சொன்னேன். விமானம் ஓட்டி முதலில் குதித்தான். ப்ரெட் என்பவன் உயர இருக்கும் கதவுவழியாக வெளியேற கஷ்டப்படுவதைப் பார்த்தேன்.

"நெருப்புப் பரவிக்கொண்டிருந்தது. வெடி குண்டுகள் வைக்குமிடம் தீப்பற்றியது. அக்னி ஜுவாலை அதிகரித்தது. பெட்ரோல் டாங்கும், இறக்கைகளும் நானிருந்த இடமும் தீபற்றிக்கொண்டன.

"நான் விமானத்தை 1,500 அடி உயரத்தில் மணிக்கு 110 மைல்கள் வீதம் ஓட்டிக்கொண்டிருந்தேன். திடிரென்று விமானம் சுழன்றது. நான் கதவு வழியாக வெளிவந்து தரையைநோக்கி விழுந்தேன். சுழன்ற விமானம் கதவுகளின் வழியாக வெளியேற சிரமப்பட்டுக்கொண்டிருந்த ப்ரெட்டை வெளியே தள்ளிவிட்டது. இது ஒரு ஆச்சரிய சம்பவம். எனவே நாங்கள் மூவரும் பத்திரமாக வந்துவிட்டோம். தீக்கிரையான ஒரு கிராமத்தில் விமானம் விழுந்தது. நான் அதற்கு 100 கஜ தூரத்தில் விழுந்தேன். பிரெட் 200 கஜ தூரத்தில் கிடந்தான். அவன் எழுந்திருந்து நடமாட ஆரம்பித்தபொழுது நான் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினேன்.

"விமானம் ஓட்டி கொஞ்ச தூரத்துக்கப்பாலுள்ள குன்றுகளில் விழுந்தான். அவனைத் தேடிபிடித்துக்கொண்டு வந்தார்கள். அவனும் சௌக்கியமாயிருக்கிறான்."



## புதிய ரப்பருக்குப் பதிலாக பழைய சாமான்கள்.

ஒவ்வொரு மாதமும் ஜப்பானுக்கும் இந்தோ சைனாவுக்கும் ஒரு புதிய ஒப்பந்தம் பேசப்படுவதாகவும், அல்லது முடிவடைந்துவிட்டதாகவும், அல்லது பழைய ஒப்பந்தம் திருத்தியமைக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. இந்த ஒப்பந்தங்களை நீங்கள் பொருட்படுத்தவேண்டாம். உனக்கு வேண்டுவதைத் தெரிவித்தால் அதற்குப் பிரதிப்பிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டு உனக்கு அது கிடைத்தும் பிரதிப்பிரயோஜனத்தின் மதிப்பைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் பணம் கொடுப்பவர் வேறொருவரல்லவா.

இந்த நடவடிக்கையை ஜப்பானியக் கட்டுக்கதை எழுதுகிறவரான டாட்ஸுஸா இஷிகாவா விவரித்திருக்கிறார். ஏப்ரல் 2-ம் தேதியில் இந்தக் கதை டோக்கியோவிலுள்ள ஒலிப்பரப்பிலிருந்து ஆங்கிலத்தில் ஒலிபரப்பப்பட்டது.

கோல்ப் விளையாடுகிறவர்களுள் உயரமான நரைமயிருள்ள ஒருவனுமிருந்தான். அவர் வந்தவுடன் என்னுடைய சிநேகிதனான மத்ஸுவோகாவோடு கை குலுக்கினார். அவர் இந்தோ—சைனாவில் கடற்படை தளபதியாகயிருந்தவர். எல்லோருமாக பீர் அருந்திக்கொண்டே சம்பாஷணை செய்தோம். தளபதி, மத்ஸுவோகாவிடம் "நான் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். இந்தோ-சைனாவில் கோல்ப்பந்துகளே இல்லை. நாங்கள் கோல்ப் விளையாடுகிறோம். ஜப்பானிலிருந்து நீங்கள் 50 டஜன் பந்துகளனுப்பியதிலிருந்து ஜப்பானில் ஏராளமான பந்துகளிலிருக்கின்றனவென்று நான் நினைக்கிறேன்" என்று சொன்னார். "ஆமாம், ஜப்பானில் அதிகமிருப்பது வாஸ்தவம்தான்" என்று ஒப்புக்கொண்டு "ஆனாலும் இந்தோ—சைனாவில் ஏராளமான ரப்பர் இருக்கிறதாமே" என்று மத்ஸுவோகா சொன்னார்.

தளபதி அண்ணாந்து பார்த்து புன்சிறிப்புடன் "அப்பொழுது நீங்கள்" என்று ஆரம்பித்தார். "ஆமாம்" என்று மத்ஸுவோகா சொன்னார். இந்த ஒப்பந்தம் முடிந்தவுடன் மறுபடியும் பீர் அருந்த ஆரம்பித்தோம்.

ஒலிபரப்பியவர் மேலும் சொன்னதாவது "இந்தோ—சைனாவிலுள்ள ஜனங்களின் வாழ்கை இவ்விதம்தான் நடைபெறுகிறது. சந்தோஷமாகவும் திருப்தியுடன் வசித்துவரும் ஜனங்கள் ஜப்பானுடன் ராஜ்ய, பொருளாதார, ராணுவ விஷயங்களில் மட்டுமில்லாமல் கோல்ப் விளையாட்டிலும் சந்தோஷமாக ஒத்துழைத்துவருகிறார்கள்."

---

## ரெயில்வே இஞ்ஜின் ஓட்டிகள்.

"இஞ்ஜின் ஓட்டும் சக்தி", என்பது இந்தியப்படையிலுள்ள ஒரு சிப்பாய்க்கு முக்கியமான பயிற்சி. அவன் சிறிய இருப்புப்பாதை முதல் ஐரோப்பாவில் ஓடும் பெரிய இருப்புப்பாதைகளில் ஓடும் ரெயில்வே இஞ்ஜின்களையும் ஓட்ட சக்தி வாய்ந்தவனாகயிருக்கவேண்டும்.

இது உயர்வான பயிற்சி. தென் இந்தியாவிலுள்ள ஒரு இருப்புப்பாதை தொழிற்சாலையில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கே இரண்டு சிறிய சக்தி வாய்ந்த இஞ்ஜின்களும், அநேக சிக்கலான இருப்புப்பாதைகளும், சாமான் வண்டிகளும், சாமான் ஏற்றும் சாலைகளும்தான் இஞ்ஜின் ஓட்டிக்குப் பாடம் கற்பிக்கின்றன.

பிஸ்டன்களைப் பற்றியும், நீராவியின் சக்தியையும், இருப்புப்பாதை அமைப்பையும், நீராவி இயந்திரத்தின் அமைப்பையும், தீ, உஷ்ணம், நீராவிப்போக்கு

முதலிய எல்லாவற்றையும்பற்றி பாடம் கற்றுக்கொள்ளுகிறான். கடைசியாக எஃகினால் செய்யப்பட்ட லீவரை உபயோகப்படுத்தி இஞ்ஜின் ஓட்டுவதற்கும் பயிற்சி பெறுகிறான்.

பயிற்சி பூர்த்தியாவதற்கு டிரைவர்கள் இந்தியாவிலுள்ள பெரிய இருப்புப் பாதைகளுக்கு அனுப்பப்பட்டு பெரிய இஞ்ஜின்களை ஓட்டவும், வண்டித் தொடர்களைப் பிணைக்கவும் பயிற்சி பெறுகிறார்கள்.

இவர்களுக்கு இருப்புப்பாதைகளின் அமைப்பு ஞானமும், தகவல் அனுப்பும் முறைகளும், போக்குவரத்து சம்பந்தமான அறிவும் நன்றாய் ஏற்பட்டுவிடும்.

பிறகு இவர்களை இஞ்ஜினியர்களிருக்கும் இடங்களுக்கு அனுப்பி விடுவார்கள். புதிதாகப் பிடிபட்ட இடங்களில் ரெயில்வே இஞ்ஜின்களை ஓட்ட இவர்கள்தான் லாயக்குள்ளவர்கள்.

---

## ஸாப்பர்ஸுகளுக்கு அளிக்கப்படும் ராணுவ, தொழில் முறை பயிற்சிகள்.

---

பயிற்சி பெற்ற ஸாப்பர் யுத்த சேவைக்கு மட்டும் யுத்தம் செய்யவும் நாசம் செய்யவும் லாயக்குள்ளவனல்ல. நல்ல பயிற்சி பெற்று கட்டடம் கட்டுவதிலும் இயந்திர வேலை செய்வதிலும், இயந்திரம் ஓட்டுவதிலும், தச்சு வேலை, கருமான் வேலை, வண்டி ஓட்டுதல் அல்லது இதர தொழில் முறைகளிலும் நிபுணத்வம் வாய்ந்தவன். யுத்தத்திற்குப்பின் ஏற்படும் புதிய அமைப்பில் ஒரு சிறந்த மனிதனாக வாழ்நாளைக் கடத்த சக்தி பெற்றவன். இந்த அனுபவமானது தென் இந்தியாவில் ராணுவப்பயிற்சி நிலயத்திலும் ஒர்க்ஷாப்பிலும் ஒரு ராணுவப் பகுதி ஒத்திகை செய்தபொழுது பத்திரிகைக்காரர்களுக்கு உண்டாகிற்று. ஸாப்பர் செய்த பயிற்சிகளைப் பத்திரிகைக்காரர்கள் கண்ணுற்றார்கள். இந்தப் பயிற்சிகள் தேகவலிமையை உண்டுபண்ணுவதோடு ஆபத்துக் காலத்தில் கலக்கமில்லாமல் தைரியமாக நின்று தன்னுடைய வேலையையும் பொறுப்பையும் அறிந்து தன்னுடைய வேலையைச் சரிவர நடத்துதற்கு ஊக்கமும் ஊட்டுகிறது.

லக்ஷியங்களைப் பார்த்துச் சுடுவது, சனியன்களைக்கொண்டு தாக்குதல், எதிரியின் குண்டு வீச்சுக்குட்பட்ட பிரதேசத்தைக் கடந்து செல்லுவது, எதிர்ப்பு யுத்தப்பயிற்சி, சுரங்கவெடி பாவுதல், சுரங்கவெடி கண்டுபிடித்தல், ஒர்க்ஷாப்பில் செய்யப்படும் வேலைகள் எல்லாம் நடத்திக் காட்டப்பட்டன. இவைகளையெல்லாம் 16 பிராயமுள்ள பையன்களும் முக்கியமாக சேனையிலுள்ள விருத்தர்களின் பிள்ளைகளும் செய்து காட்டினார்கள். லக்ஷியங்களைப் பார்த்துச் சுடுவதில் ஒரு பகுதியார் நான்கு தடவை வெற்றிகரமாக அடித்தார்கள். இவர்களுக்கு அளிக்கப்படும் சிலாக்கியமான பயிற்சியும் வெளிக்காட்டப்பட்டது. ஸாப்பர்கள் ஒரு பாலத்துக்குள் நுழைந்தார்கள், ஒரு பெரிய கிணற்றை கயிற்றின் உதவியால் தாண்டினார்கள். இரண்டு அருவிகளை அவைகள் கரையிலுள்ள ஒரு மரத்தில் கயிற்றைக் கட்டி, ஊஞ்சலாடித் தாவிவிட்டார்கள். முள்ளுக் கம்பிகள் அடைத்த பிரதேசங்களில் ஊர்ந்து சென்றார்கள். கரடுமுரடான குழியைத் தாண்டினார்கள். 11 அடி உயரமுள்ள ஒரு கட்டடத்தின்பேரில் ஏறினார்கள். அச்சமயம் நடைபெற்ற எதிரியின் குண்டு வீச்சுகளையும், லக்ஷியம் செய்யவில்லை. தாக்குவதற்காக படகுகளை எவ்வளவு சீக்கிரமாக ஸாப்பர்கள் அமைத்துவிடுவார்களென்றும், நதிகளைத்



ண்டி துருப்புகளும் பீரங்கிகளும் செல்ல பால வசதிகள் அமைப்பார்களென, எதிரிக்குத் தெரியாமல் குறிப்பிட்ட இடத்திற்கு படகுகளைக்கொண்டு ய்விடுவார்களென்றும், அங்கே தன்னுடைய அலுவல்களை நடத்திவிட்டுத் னுடைய ஸ்தானத்திற்கு பத்திரமாக வந்துவிடுவார்களென்றும் அவர்கள் ன்பித்தார்கள்.

ஒர்க்ஷாப்பில் நடைபெற்ற வேலைகளில் உயர்தர தொழிலாளர்களுக்குட் டு வேலை செய்யும் பையன்கள் டிரில் யந்திரங்களையும், கூர்மையான ஆயுதங்யும், கடைசல் யந்திரத்தையும் சக்தியால் ஓட்டப்படும் ரம்பங்களையும் இதர சார சாதனங்களையும் உபயோகிக்கும் முறைகளையும் காண்பித்தார்கள்.

---

## வெற்றிக்காகக் கொண்டாட்ட வாரம்.

---

வெற்றிக்காகக் கொண்டாடிய வாரத்தில்
லண்டன் மாநகரிலுள்ளவர்கள் 162,015,869 பவுன்கள்
நன்கொடை அளித்தார்கள்.
அதாவது
சுமாராக 215 கோடி ரூபாய்கள்.

ஒரு கனமான வெடி விமானத்தின் மதிப்பு ரூ. 2,07,000.
சாதாரணமாக ஒரு வெடி விமானம் 300 மணி நேரங்கள் பறக்கும்
அதாவது
ஜெர்மனிபேரில் 60 தடவை குண்டுகள் வீசப்போகலாம்.
ஆகையால்
லண்டன் மாநகரிலுள்ளவர்கள் போதுமான விமானங்களுக்கு
பொருளுதவியிருக்கிறார்கள்.

1943-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து 1945-ம் வருஷம் ஜனவரி
ம் வரையில் ஜெர்மனி பேரில் ஒரு நாளைக்கு 1,000 விமானம் வீதம்
கொண்டு போகலாம்

ஆனால்

1940-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 5-ம் தேதியன்று
பெர்லின் ஒலிபரப்பில் சொல்லப்பட்டதென்ன ?

ங்கிலாந்தில் "ஐச்வர்ய சக்தி அற்றுவிட்டது" என்று.

144705



## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 144. (3-வது பிரிவு.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1- 5-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | 5- 5-43 | ராமச்சந்திரபுரம் ... | மாலை 7.00 |
| 2- 5-43 | கோட்டைக்காடு ... | ,, 7.30 | ,, | ராயவரம் ... | ,, 7.30 |
| 3- 5-43 | அன்னவாசல் ... | ,, 7.00 | 6- 5-43 | வாளரமாணிக்கம் ... | ,, 7.00 |
| ,, | கீழக்குறிச்சி ... | ,, 7.30 | ,, | எம்பல் ... | ,, 7.30 |
| 4- 5-43 | குழிபிறை ... | ,, 7.00 | 7- 5-43 | மழையூர் ... | ,, 7.00 |
| ,, | செவலூர் ... | ,, 7.30 | ,, | காம்பக்குடி ... | ,, 7.30 |

### பிரஸங்கம் 145 (4-வது பிரிவு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8- 5-43 | முனிஸிபல் ஆபீஸ்... | மாலை 6.00 | 12- 5-43 | நார்த்தாமலை ... | மாலை 7.00 |
| 9- 5-43 | நீர்பழனி ... | ,, 7.00 | ,, | உப்பிலியக்குடி ... | ,, 7.30 |
| ,, | ஆலூர் ... | ,, 7.30 | 13- 5-43 | அண்டக்குளம் ... | ,, 7.00 |
| 10- 5-43 | காரையூர் ... | ,, 7.00 | ,, | கிள்ளனூர் ... | ,, 7.30 |
| ,, | இடையாத்தூர் ... | ,, 7.30 | 14- 5-43 | கொன்னையூர் ... | ,, 7.00 |
| 11- 3-43 | வடவாளம் ... | ,, 7.00 | ,, | மேலவேகுப்பட்டி. | ,, 7.30 |
| ,, | செம்மட்டிவீதி ... | ,, 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 1—5—43 | வெட்டம்வீதி. | 8—5—43 | பொன்னமராவதி |
| 2—5—43 | கொடும்பாளூர். | 9—5—43 | விராச்சிலை. |
| 3—5—43 | கீரனூர். | 10—5—43 | விராலிமலை. |
| 4—5—43 | குடுமியாமலை. | 11—5—43 | வடகாடு. |
| 5—5—43 | ராயவரம். | 12—5—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 6—5—43 | ஆலங்குடி. | 13—5—43 | குழிபிறை. |
| 7—5—43 | புதுக்கோட்டை. | | |


புதுக்கோட்டை யுத்த நிதிக்காக
(தேசிய யுத்த முன்னணி ஆலங்குடி கிளைச்சங்க ஆதரவில்)

ஸமஸ்தான உதவி நிர்வாகி
ஜனாப் கான்பஹதூர் P. கலிபுல்லா ஸாஹிப் பஹதூர்
ஆதரவிலும், முன்னிலையிலும்

புதுக்கோட்டை ஸ்ரீ பிரஹதம்பாள் கான சபையாரால்
(உத்தியோகஸ்தர்கள் சபை)

ஆலங்குடி கஸ்பாவில்
13—5—43 வியாழக்கிழமை இரவு 9-30 மணிக்கு
"பக்த மார்க்கண்டேயர்"
என்னும் சரித்திரம்
"யுத்த சேவை"
என்னும் ஹாஸ்யக் கதையுடன் நடத்தப்படும்.

டிக்கெட் விவரம் :—போஷகர் ரூ 5-0-0, சேர் ரூ 2-0-0, பெஞ்சு ரூ 1-0-0, முன்தரை ரூ 0-8-0, பின்தரை ரூ 0-4-0
ஸ்திரீகளுக்குப் பிரத்யேகமான இடமுண்டு.


Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—5-5-43.